3L
V, N0736
No9.10
161167

# ஜனாபிமானி.

| தபால் சார்ஜ் உள்பட | |
|---|---|
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE
JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன்
அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. — பிங்கள௵ மாசி௴, FEB.—MAR. 1918. — ஸஞ்சிகை 2. No. 2.


## EDITORIAL NOTES.
## பத்ராதிபர் குறிப்புகள்.

**வீட்டுப் புறக்கடை சாகுபடிக்குத் தீர்வை.**

சென்னை கவர்ன்மெண்டார் வீட்டுப் புறக்கடைகளுக்கு தீர்வை விதிப்பதற்காக உத்திரவு போட்டிருக்கிறார்கள். இதன்படி வீட்டைச் சேர்ந்ததும் சேராததுமான புறக்கடைகள் 25 ஸெண்டுக்கு மேற்படாதவைகளாக இருந்தால், (1) அவைகளை சாகுபடி செய்யாமலிருந்தாலும் (2) காய்கறி, பழம், புஷ்பம் இவைகளைச் சாகுபடி செய்தாலும், தீர்வை விதிக்கப்பட மாட்டாது. (3) காய்கறி, பழம், புஷ்பம் இவைகளைத் தவிர வேறு பயிர்கள் சாகுபடி செய்தால், சாகுபடியான விஸ்தீரணத்தின் மேல் க்ராமத்தில் உயர்ந்த புன்செய் விகிதப்படி ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தீர்வை விதிப்பார்கள். எந்தப் புறக்கடையாவது 25 ஸெண்டுக்கு மேற்பட்டிருந்தால், அதன் மொத்த விஸ்தீரணத்தில் 25 ஸெண்டுபோக பாக்கி நிலத்துக்கு உயர்ந்த புன்செய் தீர்வை விகிதப்படி ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தீர்வை விதிப்பார்கள்.

தென்னை, புளி, வாழை, மா, கருணைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி, மரவள்ளி வகையறுக்கள், காய்கறி, பழம் என்ற இனத்தில் அடங்கும். மிளகாய், கொத்தமல்லி, மஞ்சள், வெங்காயம், வெள்ளைப்பூண்டு ஆகிய இவைகள் சுவைப்படுத்தும் வாஸனைத்ரவ்யங்களாகும். இவைகளும் வீடுகளில் தினந்தோறும் உணவுப் பொருள்களாக உபயோகப்படுத்தக் கூடியதாக யிருப்பதால், இவைகளையும் பழம் காய்கறி என்ற இனத்தில் சேர்க்கலாம். இவைகளும் புஷ்பங்களும் தவிர இதரப் பயிர்களுக்குத் தீர்வை போடப்படும்.

**ஜில்லாக்களில் தீர்வை வேறுபாடுகள்.**

இது விஷயமாக ஸமீபத்தில் சென்னை சட்டஸபையில் நடந்த விவாதத்தில் ஆனரபில் ஸர். ஏ. ஜி. கார்ட்யூ புறக்கடைத் தீர்வை ஏற்கனவே பல ஜில்லாக்களில் விதிக்கப்பட்டு வருகிறதென்றும், தீர்வை விதிக்கும் முறையானது ஜில்லாவுக்கு ஜில்லா வித்யாஸப்படுகிறதென்றும், இவைகளையெல்லாம் ஒரே சீராக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இந்த உத்தரவு போடப்பட்டதென்றும் சொன்னார்.

சேலம் ஜில்லாவில் வீட்டுப் புறக்கடைகள் 12½ ஸெண்டுக்கு மேற்பட்டால் தீர்வை விதிக்கிறார்களாம். திருநெல்வேலியில் வீடு நிற்கும் இடத்தைப்போல் மூன்று மடங்கு விஸ்தீரணத்துக்குப் புறக்கடை யிருந்தால் தீர்வை விதிக்கிறார்களாம். திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் 5 ஸெண்டுக்கு மேற்பட்டால் தீர்வை உண்டு. தஞ்சாவூரில் இதுவரையில் வீட்டுப் புறக்கடைகளுக்குத் தீர்வை கிடையாது. கஞ்சம் ஜில்லாவில் 25 ஸெண்டுக்கு மேற்பட்ட புறக்கடைகளுக்கெல்லாம் தீர்வை உண்டு. விசாகப்பட்டணம் ஜில்லாவில் வீட்டை யொட்டியிராத புறக்கடைகளுக்கெல்லாம் தீர்வை உண்டு. க்ருஷ்ணாவிலும் அப்படியே. இப்போது கவர்ன்மெண்டார் சொல்லுவதென்னவென்றால், காய்கறி, பழம், பூ இவைகள் பயிரிட வீட்டுப் புறக்கடையில் 25 ஸெண்டுகள் போதும்; அதற்கு மேற்பட்டதற்கெல்லாம் தீர்வை போடுகிறோம் என்கிறார்கள்.

161167

**சில அஸௌகர்யங்கள்.**

இப்படித் தீர்வை போடுவதில் பல அஸௌகர்யங்கள் இருக்கின்றன. இந்த உத்தரவை அனுஸரித்துக் கொண்டால் எல்லா வீட்டுப் புறக்கடைகளையும் அளக்கப் போகிறார்கள். புறக்கடைகள் 25 ஸெண்டுக்குள் இருந்து காய்கறி, பழம், பூ இவைகள் தவிர இதர ஸாகுபடி செய்யாமலிருந்தால் போயிற்று. இல்லாவிட்டால் தீர்வை கொடுத்தாகவேண்டும். 25 ஸெண்டுக்குள்பட்ட புறக்கடையுள்ளவர்கள் ஏதாவது ஸ்வல்ப ஸெண்ட் விஸ்தீரணமுள்ள பாத்தியில் கம்பு, சோளம் போட்டால், அதனால் ஸ்வல்ப லாபம் வந்தாலுஞ்சரி அல்லது ஒன்றுமே வராவிட்டாலுஞ் சரி, ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தீர்வை கொடுத்தாக வேண்டும். ஆகவே வீட்டிலிருப்பவர்கள் தீர்வை கொடுக்காமலிருக்க எண்ணினால் காய்கறி, பழம், பூ இவைகளையே சாகுபடி செய்யவேண்டும். வேறு இதர ஸாகுபடி செய்வதாயிருந்தால், எவ்வளவு விஸ்தீரணம் சாகுபடி செய்தால் ச்ரமமில்லாமல் தீர்வை கொடுக்க முடியுமோ அவ்வளவு நிலத்தில் இதரப் பயிர்கள் சாகுபடி செய்ய வேண்டும். அல்லது ஒன்றுமே சாகுபடி செய்யாமலிருக்கலாம்.

நிற்க, 25 ஸெண்டுக்கு மேற்பட்ட புறக்கடைகளை கவனிப்போம். 25 ஸெண்டுக்குள் இருக்கும் புறக்கடைகளுக்கு எவனும் இஷ்டமிருந்தால் தீர்வை கொடுக்காமலே இருந்துவிடலாம். அதாவது அவன் காய்கறி, பழம், பூ முதலியவைகளை மட்டும் பயிரிட்டு வரலாம். 25 ஸெண்டுக்குமேல் இரண்டொரு ஸெண்டிருந்தாலும் அந்த இரண்டொரு ஸெண்டுக்குத் தீர்வை விதிக்கப்படும். அது சாகுபடியிலிருந்தாலும் தரிசாயிருந்தாலும் அக்கறையில்லை. அந்த இரண்டொரு ஸெண்டுக்கோ அல்லது ஆறேழு ஸெண்டுக்கோ ஏக்கருக்கு இவ்வளவு விதமாகவும் விதிக்கப்படமாட்டாது.

ஒரு ஜில்லாவில் உயர்ந்த புன்செய் ரேட்டு ஏக்கருக்கு ஆறு ரூபாய் தீர்வை என்று வைத்துக்கொள்வோம். இதன்படி அதிகப்படி புறக்கடை 6 ஸெண்டு இருந்தால் ஆறணாவாகிறதல்லவா? இரண்டு மூன்று ஸெண்டிருந்தால் இரண்டு மூன்றணாவாகிறதல்லவா? அந்தத் தீர்வை மாத்ரம் கொடுத்தால் போதாது. 25 ஸெண்டுக்குமேல் ஒரு ஸெண்டிருந்தாலும் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் கொடுத்தாக வேண்டும்.

**ஸுகாதாரம் கெடுதல்.**

இதனால் என்ன நேரிடும்? 31 ஸெண்டு புறக்கடை உள்ளவன் அந்த ஒரு ரூபாயைச் செலுத்துவதற்காக லாபம் வரக்கூடிய பயிர் ஏதாவது செய்து அதனால் பணம் செலுத்த வேண்டியிருக்கும். இதற்குப் பதினைந்து இருபது ஸெண்டாவது சாகுபடி செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால் வீடுகளின் ஸுகாதாரம் ரொம்பக் கெடுதலடையாதா? வீடுகளின் ஸுகாதாரத்தைக் கெடுத்துவிட்டு, பிறகு ஜன ஸுகாதாரம் கெட்டுவிட்டதென்றும், தொற்று வ்யாதிகளும் இதர வ்யாதிகளும் அதிகரித்துவிட்டனவென்றும், மரணவிகிதம் அதிகமாகிவிட்டதென்றும் சொல்லி வைத்ய இலாகாவை வ்ருத்தி செய்வதற்குப் பணம் இல்லையென்று சொல்லுவதைவிட, முன்னாலேயே இப்படி நேரிடாமல் பார்த்துக்கொள்வதுதான் ராஜாங்கத்துக்கு அழகாகும்.

**ஜலக் கஷ்டம்.**

நிற்க, அப்படிப்பட்ட வீடுகளுக்கு ஜலாதாரமில்லாமல் சாகுபடி செய்ய முடியாமலிருந்தால் அப்போதும் தீர்வை விதிக்கிறார்கள். ஜலமில்லாமல் சாகுபடி செய்வதெப்படி? இதை அதிகாரிகள் மறந்துவிடுகிறார்கள் இதற்காக ஒவ்வொரு சிறு வீட்டுக்குடையவனும் கிணறு வெட்டுவதா? அதற்கு என்ன செலவாகும்? பரம ஏழைகளாக இருக்கும் அநேக சிறு வீட்டாருக்கு இது முடியாதே. ஆகவே இது ஒரு வீட்டு வரி போலாகிறது. 25 ஸெண்டுக்கு மேற்பட்ட புறக்கடைகளுள்ள ஒவ்வொரு வீட்டாரும் சாகுபடி செய்ய முடிந்தாலுஞ்சரி, முடியாவிட்டாலுஞ் சரி, ஒரு ரூபாய்க்குக் குறையாமல் வீட்டு வரிபோல் தீர்வை செலுத்தவேண்டியதாகிறது.

**ஆக்ஷேபணையும் ஸமாதானமும்.**

ஆனால் அதிகாரிகள் ஒரு ஆக்ஷேபணை சொல்லக்கூடும். அநேக ஜில்லாக்களில் ஏற்கனவே வரி போட்டிருக்கிறோம். அங்குள்ளவர்களிடமிருந்தாவது இப்போது புதிதாக வரிபோடப் போவதாக உத்தேசித்திருக்கும் ஜில்லாக்களிலுள்ள ஜனங்களிடமிருந்தாவது யாதொரு ஆக்ஷேபணையும் முறைபாடும் வரவில்லையே என்னலாம். ஆக்ஷேபணை செய்யாததனாலேயே ஒரு கார்யம் சரியென்று சொல்லிவிடலாமா? எந்த விஷயத்தில் ஜனங்கள் ஆக்ஷேபித்ததற்கு அதிகாரிகள் ஒத்துப்போயிருக்கிறார்கள். என்ன ஆக்ஷேபித்தும் பயனில்லையென்று எண்ணியே அவர்கள் சும்மாயிருக்கிறார்கள் என்று சொல்லலாம். இல்லாவிட்டால் சாகுபடி செய்யாமலிருக்கும் புறக்கடைகளுக்கு எவன்தான் தீர்வை கொடுக்க ப்ரியப்படுவான். இப்படித் தீர்வை போடுவதில் இன்னும் பல ஆக்ஷேபணைகள் இருக்கின்றன. அவைகளைப்பற்றி இன்னொரு தடவை எழுதுவோம். இப்பொழுது சொல்லுவதெல்லாம் என்னவென்றால், தீர்வை விதிப்பதுதான் என்று ஏற்பட்டால், 25 ஸெண்டு நிலத்திலும் அதற்கு மேற்பட்டும் இதர ஸாகுபடி செய்தால் மாத்ரம் சாகுபடி விஸ்தீரணத்துக்குத் தக்கபடி தீர்வை விதிக்கும்படிக்கும், சாகுபடி செய்யாமலிருந்தால் தீர்வை விதிக்காமலிருக்கும்படிக்கும் கவர்ன்மெண்டார் உத்தரவு போடுவது நல்லது என்பதே.

**பஞ்சமர்களுக்கு வீடுகள்.**

பஞ்சமர்கள் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறார்களென்பதும் அவர்களுடைய நிலைமையை உயர்த்தவேண்டியது அவச்யமென்பதும் யாவரும் ஒப்புக்கொண்டிருக்கும் விஷயங்களாதலால், சென்னை கவர்ன்மெண்டார் அவர்களை உயர்த்த எண்ணங்கொண்டு முன்வந்திருப்பதைப்பற்றி யாவரும் ஸந்தோஷிக்கவேண்டியதே. ஆனால் பஞ்சமர்கள் மற்ற ஜாதிகளுடன் ஸம்பந்தமில்லாத ஒரு தனி வகுப்பாயிராமல், அவர்களுக்கும் மிராசுதாரர்களுக்கும் நெருங்கிய ஸம்பந்தமிருப்பதால், அவர்களை உயர்த்த எடுத்துக் கொள்ளும் எந்த முயற்சியிலும் பொது ஜனங்களுடைய ஆலோசனையையும் கூட்டுறவையும் ஏற்று நடந்தால் எண்ணிய கார்யம் எளி

தில் நிறைவேறுவது ஸாத்யமாகும். கவர்ன்மெண்டார் பஞ்சமர்களை உயர்த்த ஏற்ற வழியாகக் கொண்டிருப்பது அவர்களுக்கு ஸொந்தமாக வீடு கிடைக்கும்படி செய்வதே. இந்த நோக்கத்தை எப்படி நிறைவேற்றுவதென்பதைப் பரிசீலனம் செய்ய ஒரு டெபுடி கலெக்டரை ப்ரத்யேகமாக நியமித்ததில், அவர் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து ஒரு ரிபோர்ட் எழுதியிருக்கிறார். அவருடைய ப்ரேரணைகளில் சிலவற்றை அனுஸரித்து கவர்ன்மெண்டார் பின்வருமாறு செய்யப்போகிறார்கள்.

வீட்டுக்கு நிலம் கொடுக்கும் முறை.

எந்த ஊரில் பஞ்சமர்களுக்கு குடியிருக்க நிலம் வாங்கிக் கொடுக்க வேண்டுமோ அந்த ஊரில் அவர்கள் குடியிருக்கும் நிலங்களை அவைகளின் ஸொந்தக்காரர்களிடமிருந்து வாங்கி, வீடு வேண்டுமென்கிற பஞ்சமர்களுக்கு விற்பார்கள். ஒவ்வொரு மனுதாரனுக்கும் ஸாதாரணமாக 5-ஸெண்டுக்குக் குறையாமல் நிலம் கொடுக்கப்படும். ஆனால் யாராவது மூன்று அல்லது நான்கு ஸெண்ட் நிலம் போதுமென்றும், அதற்கு மேல்பட்ட நிலத்துக்கு பணம் கொடுக்க முடியாதென்றும் சொன்னால், அவன் கேட்ட விஸ்தீரணம் மாத்ரம் கொடுப்பார்கள். நிலம் வேண்டுபவன் நிலத்தின் க்ரயத்தில் ஐந்தில் ஒரு பாகத்தை முதலில் கொடுத்துவிடவேண்டும். பாக்கிப் பணத்தை 20-வர்ஷத்தில் ஒரு வர்ஷம் அல்லது 6 மாஸத்துக்கு ஒரு தொகையாகக் கொடுக்க வேண்டும். கடனாக நிற்கும் தொகைக்கு 100-க்கு வர்ஷத்துக்கு 7 ரூபாய் வீதம் வட்டி செலுத்தவேண்டும். ஒரு க்ராமத்தில் உள்ள மனுதார்களில் எல்லாரும் தனித்தனியாகவும் எல்லாரும் ஒன்று சேர்ந்தும் மொத்தத்தில் அந்த க்ராமத்துக் கவர்ன்மெண்டார் கொடுத்திருக்கும் தொகைக்கு ஜவாப்தாரியாவார்கள். அதாவது ஒருவன் பணம் கொடுக்கத் தவறினால் அதை மற்றவர்கள் கொடுக்க வேண்டும். நிலம் வாங்குகிறவன் அதை வாங்கினதுமுதல் 10 வர்ஷம் வரையில் யாதொரு பராதீனமும் செய்யக்கூடாது.

இந்த முயற்சியில் கவர்ன்மெண்டாருடைய நோக்கம் உயர்ந்ததென்றாலும், அவர்கள் அனுஸரிக்கும் வழி சரியல்லவென்று சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த முயற்சியால் மிராசுதார்களுக்கும், பண்ணையாள் முதலியவர்களுக்கும் நெடுநாளாக இருந்த ஸமாதானமான நிலைமை மாறி ஜில்லாவின் பொருளாதார நிலைமை ரொம்பவும் சீர்கேடடையும். கவர்ன்மெண்டார் மிராசுதார்களுடன் கலந்து எந்த வகுப்பாருக்கும் அதிக கெடுதி ஏற்படாமல் தாழ்ந்த வகுப்பாரை உயர்த்த முயன்றால் நன்றாயிருந்திருக்கும்.

மிராசுதார்களுக்குப் பண்ணையாள்கள் வேண்டியது அவச்யமாகையால், அவர்கள் அந்தப் பண்ணையாள்களுக்குக் குடியிருக்க நிலமும் வீடு கட்ட ஸாமான்களும், கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

பண்ணையாளாக இல்லாத வேறு வேலையாட்களுக்குக் கிடைக்கும் கூலியைவிடக் குறைவாகவே பண்ணையாளுக்குக் கூலி கிடைத்து வந்தாலும், எப்போதும் வேலையீகப்படுமென்ற நிச்சயம் அவர்களுக்கு இருந்துவருகிறது. அவர்கள் ஸௌக்யமாக இருக்கவேண்டியது அவர்களை வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கும் யஜமானர்களுடைய பொறுப்பாகையால், யஜமானர்கள் கூடியமட்டும் பண்ணையாள்களை சரிவரவே ஸம்ரக்ஷித்து வருகிறார்கள். அவர்கள் இதர ஸ்வயேச்சையான கூலியாட்களைவிடத் தாழ்ந்த நிலைமையில் இல்லை.

பஞ்சமர்களின் முக்ய குறைகள்.

அவர்கள் விஷயத்தில் பெருங்குறையாக இருப்பது என்னவென்றால், அவர்கள் தங்கள் யஜமானர்களிடம் கடன் வாங்கி அந்தக் கடன் அடையும் வரையில்



அந்த யஜமானர்களிடமே வேலை செய்வதாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். அவர்கள் பரம ஏழைகளாக இருப்பதால் அந்தக் கடனை பெரும்பாலும் அடைக்க முடிவதில்லை. ஆகவே யஜமானரை விட்டு விலகவும் முடிவதில்லை. அவர்களுக்கென்று குடியிருக்க வீடு இல்லாததால், ஒரு யஜமானரைவிட்டு விலகுவதென்றால், அது கஷ்டமாகிறது. ஏனென்றால், யஜமானர்கள் வீடுகளை விட்டு விடும்படி வற்புறுத்துகிறார்கள். ஆகவே பண்ணையாட்களுக்கு ஸ்வாதந்த்ரியம் என்பது இல்லாமல் போகிறது. தங்களுடைய நிலைமையை உயர்த்திக்கொள்ள ஒன்றும் செய்ய முடியாமலிருப்பதைக் கண்டு, தங்கள் நிலைமையைப்பற்றி அலக்ஷ்யமாயிருக்கிறார்கள். இது மிகவும் பரிதபிக்கக்கூடியதே.

ஆனால் மிராசுதார்கள் தங்களிடம் வரும் பண்ணையாட்களுக்கு வீடுகட்டிக் கொடுக்க வேண்டியிருப்பதால், தங்களிடம் வரும் ஒவ்வொரு பண்ணையாளுக்கும் இனமாக வீடு கட்டி அவன் தங்களை விட்டுப்போகும்போது அவனே அனுபவித்துக் கொள்ளட்டுமென்று சொல்லுவதென்பது முடியாது. மேலும் பண்ணையாள் குடியிருக்கும் நிலங்களை கவர்ன்மெண்டார் விலைக்கு வாங்கி அந்தப் பண்ணையாளுக்கே கொடுத்து, அவர்கள் சரிவர வேலை செய்யாவிட்டால், நிலஸ்வான்கள் வேறு பண்ணையாளைத் தேடவேண்டியிருக்கும். புதுப் பண்ணையாளுக்கு குடியிருக்க இடம் தேடிக் கொடுக்கவேண்டியிருக்கும். அப்படிக் குடியிருக்கக்கூடிய இடங்கள் அந்த மிராசுதார்களுக்கு இல்லாமலே இருக்கலாம். அப்போது அவர்கள் தங்களுடைய நிலத்தை சாகுபடி செய்வதற்கு என்ன செய்வார்கள்?

சில கெடுதிகள்.

பண்ணையாள்களுக்கு குடியிருக்க வீடு கிடைத்துவிட்டவுடன் அவர்கள் வெகுவாய் கீழ்ப்படியும் தன்மையை விட்டுவிட்டு ஸ்வயேச்சையாயிருக்க முயலுவார்கள். அப்படியிருக்கிறவர்களுக்கு நிலஸ்வான்கள் செய்த வேலைக்குத் தான் கூலி கொடுப்பார்களேயொழிய, வேலையில்லாத காலங்களிலும் படியளக்கமாட்டார்கள். வேலையுள்ள காலங்களில் அவர்களுக்கு அதிக கூலி கிடைக்கக்கூடுமென்றாலும், அவர்களுடைய ஸன்மார்க்க நிலைமையும் கல்வியும் இன்னும் தாழ்ந்திருப்பதால், வந்த வரும்படி கள்ளுக்கடைக்கும், அன்றாடக் காலக்ஷேபத்துக்குந்தான் சரியாகப் போகும். அவர்கள் எதுவும் மிகுத்து வைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதில் பயனில்லை. வேலையில்லாத காலங்களில் அவர்கள் திண்டாடவேண்டியதுதான். ஆகவே அவர்களுக்கு குடியிருக்க வீடு கொடுத்தால் மாத்ரம் பயன்படாது. அவர்களுடைய பொது நிலைமையை உயர்த்த முயலவேண்டும். அவர்களிடம் குடியின்மையும், ஸுகாதாரமும் கல்வியும் ஏற்படும்படி கவர்ன்மெண்டார் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். உண்மையில் கவர்ன்மெண்டாருக்குப் பஞ்சமர் முதலிய தாழ்ந்த வகுப்புகளை உயர்த்த எண்ணம் இருக்குமானால், அவர்கள் முக்யமாகக் குடியை நிறுத்த முயலவேண்டும். அப்காரி ரெவின்யூவை இழக்கத் தயாராகவேண்டும். அதாவது கள், சாராயக் கடைகளை குறைத்தும் நிறுத்தியும் வரவேண்டும். இல்லையேல், கவர்ன்மெண்டார் இப்போது செய்ய முன்வந்திருக்கும் முயற்சியானது தாழ்ந்த வகுப்பார்களுக்கு அதிக கூலி கிடைக்கப் பாடுபட்டு அந்த அதிகக்கூலியை அப்காரி டிபார்ட்மெண்ட் மூலமாக வஸூலிப்பதாகும்.

கவர்ன்மெண்ட் என்ன செய்யவேண்டும்.

இதுவிஷயத்தில் கவர்ன்மெண்டார் செய்ய வேண்டியது என்னவென்றால், முதலாவதாக மேலே சொன்னதுபோல் பஞ்சமர்களைப் பீடிக்கும் குடிவழக்கத்தை நிறுத்தி, கல்வியும் ஸுகாதாரமும் ஏற்

படும்படி செய்யவேண்டும். இதனால் அவர்களிடம் ஸன்மார்க்க குணங்கள் வ்ருத்தியாகி, அவர்கள் மேன்மேலும் உயர்வடைய முயலுவார்கள். காலக்ரமத்தில் தங்கள் கடன்களைத் தீர்த்துக்கொண்டு, மேற்கொண்டு பணம் சேர்க்க முடியும். இந்த ஸமயத்தில் கோவாபரேஷன் அவர்களுக்கு அதிக நன்மையை உண்டாக்கும். அவர்கள் காலக்ரமத்தில் பணம் சேர்த்து ஸொந்தத்தில் வீடும் நிலங்களும் வாங்கலாம்.

ஆனால் சில இடங்களில் தாழ்ந்த வகுப்பார்கள் குடியிருக்கும் இடம் ரொம்ப நெருக்கமாகவோ ஸுகாதாரக் குறைவாகவோ இருக்கக்கூடும். சில இடங்களில் நிலஸ்வான்களுடைய தொந்தரையாலோ, கல்வியறிவாலோ, பிறர் போதனையாலோ தன் மதிப்பும் ஸ்வயேச்சையாக இருக்கவேண்டுமென்ற எண்ணமும் பஞ்சமர்களுக்கு உண்டாகியிருக்கலாம். அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் கவர்ன்மெண்டார் தலைப்பட்டு புறம்போக்கு நிலங்களை அவர்களுக்குக் கொடுத்து உதவுவது நல்லது. நிலஸ்வான்களிடமுள்ள வீட்டுமனைகளை வாங்கி விற்பது கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போலாகும். தங்களிடம் வேலைக்கு வரும் வேலையாட்களுக்கு நிலஸ்வான்கள் குடியிருக்க வீடு கொடுக்கவேண்டியிருக்குமாதலால், நிலஸ்வான்களுக்கு இது விஷயத்தில் தொந்தரை உண்டாக்குவது அழகல்ல.

மதுபானத்தைக் குறைத்தல்.

அமெரிக்காவில் பல நாடுகளிலும், ஐரோப்பாவில் அநேக தேசங்களிலும் குடிவழக்கத்தைத் தடுக்கச் சட்டங்கள் ஏற்பட்டிருக்க, இந்தியாவில் மாத்ரம் கவர்ன்மெண்டார் குடிவழக்கத்தை நிறுத்த ஸம்மதப்படாதது விஸனிக்கத்தக்கதாயிருக்கிறது. ஸமீபத்தில் நடந்த இம்பீரியல் சட்ட ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் பி. என். சர்மா இது விஷயமாக ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அதாவது காலக்ரமத்தில் மதுபானத்தை ஒழித்துவிடுவதே தங்கள் நோக்கமென்றும், அதற்கு அநுஸரணையாக நடந்து வருவதாகவும் கவர்ன்மெண்டார் தீர்மானிக்கவேண்டுமென்பதே. இந்தத் தீர்மானத்தை இந்திய ப்ரதிநிதிகளெல்லாரும் ஆதரித்தார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி ஏற்றுக்கொள்ளாததற்கு அவர்கள் சொன்ன ந்யாயங்களும் வேடிக்கையாக இருக்கின்றன.

கவர்ன்மெண்டின் ஆக்ஷேபனைகள்.

குடிக்கக்கூடாதென்று சொன்னால், ஜனங்களுக்குக் குடித்துக் கெட்டுப்போவதற்கு உள்ள ஸ்வதந்த்ரம் போய்விடுமாம். மேல்நாடுகளில் பெரிய யுத்தத்தின் காரணமாக குடி நிறுத்தப்பட்டதேயொழிய, ஸமாதான காலங்களில் நிறுத்துவது முடியாததாம். அமெரிக்காவில் அநேக நாடுகளில் யுத்தத்துக்கு முன்பே குடி வழக்கம் நிறுத்தப்பட்டுப்போயிருப்பது கவர்ன்மெண்ட் அதிகாரிகளில் பலருக்குத் தெரியவில்லைபோலும்.

ஒரு கவர்ன்மெண்ட் மெம்பர் மதுபானத்தால் கெடுதலேற்படுமா ஏற்படாதா என்பதே இன்னும் நிச்சயமாகவில்லையென்றும் அதைப் பற்றி வைத்ய சாஸ்த்ர நிபுணர்கள் இன்னும் தர்க்கம் செய்துகொண்டேயிருக்கிறார்கள் என்றும் சொன்னார். ஆனால் உண்மையான காரணம் என்னவென்றால் மதுபானத்தை ஒழித்தால் கவர்ன்மெண்டின் அப்காரி வரும்படி போய்விடுமென்பதே. இதையும் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டார்கள். இன்னொரு காரணம் என்னவென்றால் மதுபானத்தை ஒழித்துவிட்டால், மிதமாக பானம் செய்கிறவர்களுக்குக் கெடுதலேற்படுமாகையால், அவ்விதம் தடுப்பது கெடுதலாம்.

மொத்தத்தில் பார்க்கப் போனால் கவர்ன்மெண்டார் தங்களுக்கு வரி குறைந்து போகுமென்ற பயத்தினால்தான் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொல்லலாம். இதர தேசங்களில் மதுபானத்தால் ஏற்படும் தீமைகளையுணர்ந்து வரி குறைந்தாலும் குறையட்டும், ஜனங்கள் க்ஷேமமாயிருந்தால் போதுமென்று அதை ஒழித்திருக்க, நமது தேசத்தில் மாத்ரம் கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய ஸௌகர்யத்தை கவனிக்காமல் வரியொன்றையே ப்ரதானமாகக் கொண்டு, மதுபானத்தை ஒழிக்க இஷ்டப்படாமலிருக்கிறார்கள். இந்த எண்ணம் கவர்ன்மெண்டுக்கு இருக்குமானால், மேற்குறிப்பில் சொன்னதுபோல் பஞ்சமர்கள் முதலிய தாழ்ந்த வகுப்புகளை உயர்த்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் சொல்லுவதை நிஜமென்று எண்ணுகிறதா? அல்லது பொய் வார்த்தையென்று எண்ணுகிறதா?



சென்னை ராஜதானியில் கீழ்தரக் கல்வி.

சென்னை கவர்ன்மெண்டார் நமது ராஜதானியில் புதிதாக எலிமெண்டரி ஸ்கூல்கள் ஸ்தாபிக்கவும், ஏற்கனவேயுள்ள ஸ்கூல்களை பலப்படுத்தவும், அவைகளில் உயர்ந்த வகுப்புகள் ஏற்படுத்தவும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு $4\frac{1}{2}$ லக்ஷம் ரூபாய் வர்ஷந்தோறும் கொடுக்க உத்தரவு செய்திருக்கிறார்கள்.

மொத்தம் 676 ஸ்கூல்கள் புதிதாக ஏற்படுத்தப்படும். இவற்றில் 97 ஸ்கூல்கள் முனிஸிபாலிடிகளிலும், 579 ஸ்கூல்கள் க்ராமாந்தரங்களிலும் ஸ்தாபிக்கப்படும். இந்த ஸ்கூல்களுக்கு முதலில் வேண்டியிருக்கும் உபகரணங்களுக்காக ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் 100 ரூபாய் கொடுக்கப்படும். மொத்தம் பாடசாலைகளில் பெண்களுக்கானவை 243. பையன்களுக்கானவை 433. பையன்களுக்கான பள்ளிக்கூடங்களில் மகம்மதியர்களுக்கு 47, பஞ்சமர்களுக்கு 42, இதர தாழ்ந்த வகுப்பார்களுக்கு 62, மற்ற வகுப்பார்களுக்கு 282. ஆகவே எல்லா வகுப்பாருக்கும் பாடசாலைகள் கிடைக்கின்றன.

இப்படிப் புதுப்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்க வர்ஷந்தோறும் 2,46,813 ரூ. செலவாகும்.

ஏற்கனவேயுள்ள பள்ளிக்கூடங்களில் 835ல் அதிகப்படியாக உபாத்யாயர்கள் நியமிக்க 1,24,392 ரூபாயாகுமாம். 288 பாடசாலைகளில் உயர்ந்த வகுப்புகள் ஏற்படுத்தப்போகிறார்கள். இதற்கு 78,384 ரூபாயாகுமாம்.

தேசத்தின் முற்போக்குக்கும் பொருளாதார அபிவ்ருத்திக்கும் ஜனங்களெல்லாரும் கீழ்தரப் படிப்பாவது பெற்றிருப்பது பெரிய ஸாதகமாகுமென்றாலும், இந்தியா போன்ற பெரிய கண்டத்தில் சிதறிக்கிடக்கும் ஜனங்களுக்கெல்லாம் ஒரே தடவையாகக் கல்வி கற்பிக்க உத்தேசிப்பது ஏராளமான பணச் செலவுள்ளதும் அஸாத்யமுமான கார்யம். ஆயினும் முடியாதென்று முற்றுமே விட்டுவிடாமல் வர்ஷத்துக்குக் கொஞ்சமாக மேற்கண்டவாறு பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி படிப்பை வ்ருத்திசெய்து வந்தால், சில தலைமுறைகளுக்குள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் தொகை த்ருப்திகரமான நிலைமைக்கு வந்துவிடும்.

உஸ்மானியா யூனிவர்ஸிட்டி.

ஹைதராபாத்து நிஜாம் அவர்கள் தமது ராஜ்யத்தில் ஒரு யூனிவர்ஸிட்டி ஸ்தாபிக்க உத்தரவிட்டிருக்கிறாரென்று அறிந்து ஸந்தோஷப்படுகிறோம்.

இந்த ஸர்வ கலாசாலையில் ஒரு முக்யமான விஷயமென்னவென்றால், கீழ்தரப் படிப்பையேயன்றி எல்லா உயர்தரப் படிப்பையும் இங்க்லீஷில் கற்றுக்கொடுக்காமல் உர்து பாஷையில் கற்றுக்கொடுப்பார்கள். ஆனால் இங்க்லீஷானது ஒரு கட்டாய பாஷைப் பாடமாக எல்லா மாணவர்களுக்கும் கற்றுக்கொடுக்கப்படும். உர்து பாஷையானது சாஸ

த்ர பதங்களை மொழி பெயர்ப்பதற்கு இடங் கொடுப்பதாலும், அந்த பாஷையே அந்த ஸமஸ்தானத்து கோர்ட்டு பாஷையாக இருப்பதாலும், அதையே முக்ய பாஷையாகவும், இதர பாடங்கள் கற்றுக்கொடுப்பதற்கான பாஷையாகவும் வைத்திருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ் இந்தியாவில் பல உத்யோகஸ்தர்கள் கவலைப்படுவதுபோல் உயர்தர வகுப்புகளுக்கு உர்து பாஷையில் புஸ்தகங்களில்லையென்று கவலைப்பட்டு சும்மா இராமல், அந்த ஸமஸ்தானத்துக்கு அதிகாரிகள் எல்லா சாஸ்த்ரங்களையும் கலைகளையும் உர்து பாஷையில் மொழிபெயர்க்க ஒரு டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். உர்து பாஷையில் தேர்ச்சி வாய்ந்த 8 பி. ஏ-க்கள் இதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் இருவர் பௌதிக்ஸ் என்னும் ப்ருக்ருதி சாஸ்த்ர நூல்களை மொழி பெயர்ப்பார்கள். மற்றவர்கள் கணிதம், தத்வசாஸ்திரம், ராஜாங்கநூல், அர்த்த சாஸ்த்ரம், தேச சரித்ரம், சட்டம் ஆகிய இவைகளைப்பற்றிய நூல்களை மொழி பெயர்ப்பார்கள்.

இந்த யூனிவர்ஸிட்டியின் இன்னொரு முக்ய நோக்கமென்னவென்றால், சாஸ்த்ர ஆராய்ச்சி விஷயத்தில் வேண்டிய ஸாதகங்கள் செய்து கொடுப்பதே. இவ்வளவு எல்லாம் செய்வதால், பூர்வ காலத்துக்கு கல்வியை உதாஸீனம் செய்வதாக எண்ணுவதற்கில்லை. தற்காலக் கல்வியின் முறைபாடுகளைச் சீர்திருத்தி, பூர்வகாலத்துக் கல்வியின் முக்ய அம்சங்களையும் சேர்த்துக்கொண்டு, தற்காலத்துக்கேற்றதான உயர்ந்த கல்வியையே கற்பிக்கவேண்டுமென்று நிஜாம் தமது உத்தரவில் வெளியிட்டிருக்கிறார்.

தமிழ் என்னும் சொல்லைப்பற்றி திருவனந்தபுரம் வி. என். அனந்த ராமய்ய சாஸ்த்ரி, எம். ஏ. பின்வருமாறு எழுதுகிறார்.

தமிழ்.

'தமிழ் என்னும் பதம் வடமொழியாகிய "திராவிடம்" என்பதன் சிதைவென்பாருளர். இவ்வபிப்ராயத்துக்குப் பொருத்தங் கூறப்புகுந்தவர் ராபர்ட்டு கால்ட்வெல், எல். எல். டி. யே. 'தமிழ்' என்னுஞ்சொல் இயற்கைச் சொல்லாயின் "தம்" என்பதோடு பொருந்தினதாகவேண்டும். "தமி" என்பதற்குத் "தனி" என்று பொருள்கொண்டு தம்மிடத்தில் மட்டும் "ழ" கரம் உடையது என்று ஒரு சாரார் கூறுவது வேடிக்கைக்காகுமே தவிர, யுக்திக்குப் பொருந்தாது. எங்கும் புகுவதினால் புகை என்பதுபோலவே எங்கும் புகுவதினால் புகழ் என்றும் சொல்கிறோம். புகைக்கும் புகழுக்கும் பொருள் வேறுபடினும் இரண்டும் "புகு" என்னும் வினையடியாற் பிறந்தன—என்பதான எனதபிப்ராயம் சரியெனத் தோற்றுமாயின், தமிழ் என்பது தமதெனப் பொருள் கொள்ளும். தமதென்றால் இங்கு தமது பாஷை. பாய்ச்சல் என்பதில் "அல்" விகுதி; எச்சில் என்பதில் "இல்" விகுதி: புகழ் என்பதில் "அழ்", தமிழ் என்பதில் "இழ்." இல், இழ், இவை அபூர்வமாய்க் காணும் விகுதிகள்.'


புதிதாக வந்த நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 201 | ஜடாவல்லவர் | ... | 1 | 8 | 0 |
| 361 | சுந்தரவல்லி | ... | 0 | 8 | 0 |
| 443 | ஜயலக்ஷ்மி | ... | 0 | 8 | 0 |
| 366 | பரதன் | ... | 0 | 5 | 0 |
| 134 | மதாலஸா | ... | 0 | 3 | 0 |
| 218 | பழமொழி நானூறு | ... | 2 | 0 | 0 |
| 469 | கலிங்கத்துப்பரணி | ... | 0 | 8 | 0 |
| 471 | அபிநவக்கதைகள் | ... | 0 | 6 | 0 |
| 470 | ராபின்ஸன் க்ரூஸோ | ... | 0 | 4 | 0 |
| 259 | திருவள்ளுவர் | ... | 0 | 8 | 0 |
| 502 | கண்ணகி | ... | 0 | 12 | 0 |

ஜீ. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன் மதறாஸ்.




# THE LATE SIR WILLIAM WEDDERBURN.

## காலஞ் சென்ற ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்.

இந்தியன் நாஷனல் காங்க்ரெஸை ஸ்தாபித்தவர்களில் ஒருவரும், இந்தியாவின்மேல் அதிக அபிமானம்வைத்து அதன் அபிவ்ருத்திக்காக தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தவருமான ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் சென்ற ஜனவரிமாஸம் காலகதியடைந்ததைக் கேட்டு விஸனிக்கிறோம்.



காலஞ்சென்ற ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் 1838-ம் வர்ஷம் மார்ச்சுமாஸம் 25௳ ஸ்காட்லண்ட் தேசத்திலுள்ள எடின்பர்க் பட்டணத்தில் ஜனனமானார். அவர் பம்பாய் ஸிவில் ஸர்விஸைச்சேர்ந்த ஸர் ஜான் வெட்டர்பர்னின் மூன்றாவது புத்ரர். அவருடைய மூத்த ஸகோதரரும் வங்காளத்து ஸிவில் ஸெர்விஸில் சேர்ந்திருந்தார். குடும்பத்தில் இரண்டு பேர்கள் இந்தியாவில் உத்யோகம் பார்த்ததால், ஸர் வில்லியம் வெட்டர்பர்னுக்கும் இந்தியன் ஸிவில் ஸெர்விஸில் சேரவேண்டுமென்று அவா உண்டாயிற்று. அவர் ஸிவில் ஸெர்விஸ் பரீக்ஷையில் மூன்றாவதாகத் தேறி 1860-ம் வர்ஷத்தில் பம்பாயில் உத்யோகம் வகிக்க ஆரம்பித்தார். 1887-ம் வர்ஷத்தில் அவர் வேலையிலிருந்து விலகிக்கொண்டார். அவர் இந்தியாவில் உத்யோகம் செய்துகொண்டிருந்தபோது, அவருடைய தகப்பனார், ஸகோதரர் ஆகிய இவர்களுடைய ஸ்நேகிதர்கள் உயர்ந்த பதவியில் இருந்ததால், ஸர் ஜான் வெட்டர்பர்னுக்கு மேல் மேலும் வ்ருத்தியடைவதற்கு வேண்டிய உதவிகள் செய்து வந்தார்கள். அவர் சிலகாலம் ஜட்ஜாக இருந்து, பிறகு கவர்ன்மெண்டின் அண்டர் ஸெக்ரடரியாகவும், ஹைகோர்ட் ரெஜிஸ்ட்ராராகவும், ஸிண்ட் மாகாணத்தில் நீதி பரிபாலன கமிஷனராகவும், நீதி பரிபாலனம், கல்வி முதலிய டிபார்ட்மெண்டுகளில் கவர்ன்மெண்டின் ஸெக்ரடரியாகவும், கடைசியில் பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜாகவும் இருந்தார். அதற்குப் பிறகு ஸ்வல்பகாலம் பம்பாய் நிர்வாகஸபையில் ஒரு மெம்பராகவும், இருந்தார். அவர் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தராக இருந்த காலத்தில் அவர் ஜனங்களுக்கு ஸாதகமாக செய்த கார்யங்களில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

### வெட்டர்பர்னும் ஸ்வதேச ஸமஸ்தானங்களும்.

ஸர் வில்லியம் வெட்டர்பர்னுக்கு இந்திய சிற்றரசர்களின் நிலைமையை பலப்படுத்தவே

ண்டுமென்று எண்ணமிருந்தது. நன்றாக ஆட்சி செய்யப்பட்ட ஸ்வதேச ஸமஸ்தானங்களில் உள்ள இந்தியர்கள் ரொம்ப ஸந்தோஷமாக வாழக்கூடுமென்று அவர் அபிப்ராயப்பட்டார். அந்த ஸமஸ்தானங்களில் அதிகாரிகள் ஜனங்களின் அபிப்ராயங்களை நன்றாய் அறிந்து அவைகளுக்கு இணங்க ராஜ்யத்தை நிர்வகித்து வரலாம். அந்தந்த ப்ரதேசத்து பொருளாதாரங்களை நன்றாய் அபிவ்ருத்தி செய்யலாம். ஏனென்றால் ப்ரிட்டிஷ் ப்ரதேசங்களில் எந்த அபிவ்ருத்திக்கும் மாகாண கவர்ன்மெண்டையும், இந்தியா கவர்ன்மெண்டையும் இந்தியா மந்த்ரியையும் எதிர் பார்த்திருப்பது போலில்லாமல், ஸ்வதேச ஸமஸ்தானங்களில் சிற்றரசர்கள் தாங்களாகவே ஜனங்களின் க்ஷேமாபிவ்ருத்திக்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம். ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் கவர்ன்மெண்டின் ஸெக்ரெடரியாக இருந்தபோது, இந்தத் தமது கொள்கையை அநுஸரித்து ஸ்வதேச ஸமஸ்தானங்களுக்காக உழைத்தார். சிற்றரசர்களுக்கு பால்யத்திலேயே தக்க கல்வி கொடுத்தால் அவர்களுடைய ஆட்சி நன்றாயிருக்குமென்று ராஜ்கோட்டில் ஒரு ராஜகுமார காலேஜ் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார். கத்தியவாரில் உள்ள ஸ்வதேச மன்னர்களுக்கும் அவர்களுக்குக் கீழ்பட்ட சிற்றரசர்களுக்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டு வந்தன. இந்தத் தகராறுகளால் அடிக்கடி கொள்ளை முதலிய அநீதமான செய்கைகளும் நடந்துவந்தன. தகராறுகளைத் தீர்ப்பதற்காக ஸ்வதேச மன்னர்கள் சேர்ந்த ஒரு கோர்ட்டு ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார்.

அவர் ஸ்வதேச ஸமஸ்தானங்கள் விஷயமாக இன்னொரு சீர்திருத்தமும் செய்தார். எந்த ஸமஸ்தானத்திலாவது பட்டத்துக்கு வரும் அரசர் மைனராக இருந்தால், அப்போது அந்த ஸமஸ்தானத்தை ஆள ஒரு ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தரை நியமிப்பது வழக்கம். ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தர் தமது இஷ்டப்படி ஆட்சி முறையைச் சீர்திருத்திவிடுவார். ஸமஸ்தானத்தின் பரம்பரையான வழக்கம் விட்டுப்போகும். வெட்டர்பர்ன் உத்தேசித்தது என்னவென்றால், அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் திவான் போன்ற ஸமஸ்தானத்து உத்யோகஸ்தரும் ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தருமாகச் சேர்ந்து ஆட்சி செய்யவேண்டுமென்பதே. இதனால் ப்ரிட்டிஷ் அரசாட்சியின் பொதுக்கொள்கைக்கு உள்பட்டு ஸமஸ்தானத்தின் ஆட்சி அதிக மாறுபாடுகளில்லாமல் நடந்துவரும். இந்த அபிப்ராயத்தை அநுஸரித்து நடக்க அவருக்கு ஒரு ஸந்தர்ப்பம் வாய்த்தது. பவநகரின் அரசர் பட்டத்துக்கு வந்தபோது அவர் மைனராக இருந்தார். அவருடைய ஸமஸ்தானத்தை அதன் ப்ரதான மந்த்ரியும் ஒரு ப்ரிட்டிஷ் உத்யோகஸ்தரும் சேர்ந்து ஆட்சி செய்துவரும்படி ஏற்பாடு செய்தார்.

### பொது ஜனங்களுக்காகப் பாடுபட்டது.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் உத்யோகத்திலிருந்தபோது ஜன ஸமூகத் தலைவர்களோடு கலந்து பேசி ஜனங்களின் நிலைமையைப்பற்றியும் அவர்களுடைய குறைகளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்துவந்தார். ஜனங்கள் பரம ஏழையாக இருப்பது அவருக்கு தெளிவாயிற்று. ஜனங்களை உயர்த்துவதற்கான வழிகள் விஷயத்தில் இந்தியர்களைப் போலவே அவரும் அபிப்ராயப்பட்டார். ஸர்க்கார் வரியை அதிகப்படுத்தக் கூடாதென்றும், விவஸாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடனாகப் பணம் கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும், ஜனங்கள் கோர்ட்டுகளுக்குப்போய் வ்யவஹாரங்கள் நடத்தி பணத்தை வீணாக்காமலிருக்க மத்யஸ்த கோர்ட்டுகள் ஏற்படுத்தவேண்டுமென்றும் அவர் எண்ணி அவைகளுக்காக முயற்சிகள் எடுத்துக்கொண்டார்.



### நிலத்தீர்வை.

அவர் நிலத்தீர்வையை மனு ஸ்ம்ருதியை அநுஸரித்து சாச்வதமாக்க முயன்றார். அதாவது வரிப்பணமாகக் கொடுப்பதற்குபதிலாக மொத்த மாஸூலில் ஒரு குறிப்பிட்ட பாகத்தை தான்யமாகவே கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று எண்ணினார். அந்த ஸமயம் 1878-ம் வர்ஷத்தில் உண்டான பஞ்சத்தைப்பற்றி விசாரிக்க ஏற்பட்ட கமிஷனில் மெம்பராயிருந்த ஸர் ஜேம்ஸ் கெய்ர்ட் என்பவர் சில தெரிந்தெடுக்கப்பட்ட க்ராமங்களில் பரீக்ஷார்த்தமாக இந்த முறைப்படி வரி வஸூல் செய்யவேண்டுமென்று சொல்லியிருந்தார். அதன்மேல் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் அகமதுநகரத்துக்குப் பக்கத்திலுள்ள ஒரு க்ராமத்தில் இந்த ஏற்பாட்டை பரீக்ஷித்துப் பார்க்கலானார். அந்த ஏற்பாட்டின் விவரம் வருமாறு:—குடிகள் மொத்த மாஸூலில் பதினாறில் ஒருபங்கை மாஸூலாகவே கொடுக்கவேண்டும். ஆனால் எந்தக் குடியாவது தன் நிலங்களில் தான்செய்த சீர்திருத்தங்களினால் மாஸூலாக வரிகொடுப்பதற்கு பதிலாக பணமாகக்கொடுக்க ப்ரியப்பட்டால் ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்துவிடலாம். இந்த ஏற்பாட்டுக்கு க்ராமவாஸிகள் ஸம்மதப்பட்டார்கள். ஜில்லா கலெக்டர் இதை அங்கீகரித்து கவர்ன்மெண்டாரை அநுமதி கேட்டார். இந்த ஏற்பாட்டால், குடிகள் லேவாதேவிக்காரர்களிடம் அகப்படாமல் தப்பலாம். கவர்ன்மெண்டுக்கும் வரும்படி அதிகமாகும். ஆனால் கவர்ன்மெண்டார் இந்த ஏற்பாட்டுக்கு ஸம்மதிக்கவில்லை. இதை கவர்ன்மெண்டுக்கு அநுப்பின கலெக்டரை, ஏற்கனவேயுள்ள ரெவின்யூ முறையில் தலையிட்டு மாறுபாடுகள் செய்ய முயன்றதற்காக, கண்டித்தார்கள். ஆகவே இந்த ஏற்பாடு ஆரம்பத்திலேயே தள்ளுபடியாயிற்று. சில காலத்துக்குப்பிறகு இது விஷயமாக மறுபடியும் முயற்சி செய்தும் பயன்படவில்லை.

### வ்யவஸாய பாங்கி.

பூனாவுக்குப் பக்கத்தில் ஸஸ்வாத் என்னுமிடத்தில் ஒரு வ்யவஸாய பாங்கி ஏற்படுத்துவதற்காக ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் ஒரு ஸ்கீம் தயார்செய்தார். இதன் நோக்கம் என்னவென்றால் விவஸாயிகளின் பழைய கடன்களை அடைக்க வழி ஏற்படுத்துவது; குடிகளுக்கும் லேவாதேவிக்காரர்களுக்கும் ஸ்நேகப்பான்மை உண்டாக்குவது; வ்யவஸாய பாங்கிக்கு அவ்விடத்து பணக்காரர்களைப் பணம் கடன் கொடுக்கச்செய்வது ஆகிய இவைகளே. இது விஷயமாய் தீர ஆலோசனைசெய்து அநேகந்தடவை மீட்டிங்குகள் கூடிப்பேசினதில், எல்லா வகுப்பாரும் பாங்கி ஏற்படுத்த ஸம்மதப்பட்டார்கள். கடைசியில் பூனாவில் பொது ஜனங்கள் கலெக்டரின்கீழ் மீட்டிங்கூடி வ்யவஸாய பாங்கி ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானித்து, அதற்காக ஒரு கமிட்டி நியமித்தார்கள். கமிட்டியார் கவர்னரை பேட்டி கண்டு வ்யவஸாய பாங்கியைப்பற்றிப் பேசினதில், கவர்னரும் அதற்கு ஒப்புக்கொண்டார். அவருடைய சிபார்சின்மேல் இந்தியா கவர்ன்மெண்டாரும் அதற்கு ஸம்மதித்தார்கள். அப்போது லார்ட் ரிப்பன் வைஸ்ராயாக இருந்தார். ஒரு குறிப்பிட்ட ப்ரதேசத்தில் ஜனங்களுடைய கடன்களையெல்லாம் தீர்த்துவிட இந்தியா கவர்ன்மெண்டார் 6½-லக்ஷம் ரூ. பண உதவி செய்வதாகவும், குடிகளுக்குக் கொடுத்த பணத்தை ரெவின்யூ அதிகாரிகள் மூலமாக கொஞ்சங்கொஞ்சமாக வஸூல் செய்யலாமென்றும் சொன்னார்கள். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் இதற்கு ஸம்மதித்தாலும் இந்தியா மந்த்ரி இதற்கு ஸம்மதிக்கவில்லை. ஆகவே ஜனோபகாரமான இந்த ஏற்பாட்டுக்கு இந்தியாவிலுள்ள அதிகாரிகள் ஸம்மதித்தும், அது ப்ரயோஜனமில்லாமல் போயிற்று.

### மத்யஸ்த கோர்ட்டுகள்.

ஜனங்கள் அற்ப வ்யவகாரங்களுக்கும் கோர்ட்டுகளுக்குப்போய் வழக்காடி தங்கள் ஸொத்தை வீணாக்கி வருவது யாவரும் அறிந்ததே. ஸர்வில்லியம் வெட்டர்பர்ன் ஜட்ஜாக இருந்தபோது அவருக்கு இவ்விஷயம் தெரிய வந்து அவர் மிகவும் வருத்தப்பட்டார். ஜனங்களுக்கு வழக்குகளால் நஷ்ட மேற்படாதபடி செய்ய ஒருபாயம் தேடலானார். மஹாராஷ்ட்ரர்களுடைய அரசாட்சி காலத்தில் ராம சாஸ்த்ரி, நாநா பர்னவிஸ் என்னும் மந்த்ரிகள் வ்யாஜ்யங்கள் விஷயமாய் ஒரு ஏற்பாடு செய்திருந்தார்கள். அதாவது எவ்வித மத்யஸ்தத்திலும் வ்யவகாரம் தீரவில்லையென்றால்தான், கக்ஷிக்காரர்கள் தங்கள் வழக்குகளை ஒரு ஜட்ஜ் முன் கொண்டு வரலாம். இந்த பழைய ஏற்பாட்டை புதுப்பிக்க ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் முயற்சிசெய்தார். 1876-ம் வர்ஷத்தில் அவருடைய தூண்டுதலின்மேல் பற்பல விடங்களில் மத்யஸ்த கோர்ட்டுகள் ஸ்தாபிக்கப்பட்டன. அநேக கக்ஷிக்காரர்கள் தங்கள் வழக்குகளை இந்தக் கோர்ட்டுகளுக்குக் கொண்டு போனார்கள். இவைகள் ஜனங்களுக்கு த்ருப்திகரமாகவே இருந்தன. பூனா கோர்ட்டில் மட்டும் 2-வர்ஷத்தில் 3000 வ்யாஜ்யங்கள் தீர்க்கப்பட்டன. இந்தக் கோர்ட்டுகள் ஜனங்களால் ஏற்படுத்தப்பட்டவைகள். இவைகளை சட்டபூர்வகமாக அமைத்து ஸர்க்கார் கோர்ட்டுகளில் ஒன்றாக ஏற்படுத்த, ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் முயற்சி எடுத்துக்கொண்டார். இதற்காக பூனா டௌன் ஹாலில் ஒரு பெரிய மீட்டிங் நடைபெற்றது. மத்யஸ்த கோர்ட்டுகள் ஸ்தாபிப்பது விஷயமாக ஒரு மசோதா தயாரிக்க ஒரு பலமான கமிட்டி நியமித்தார்கள். அந்தக் கமிட்டியில் 7-ஸப்ஜட்ஜுகள், 2-பென்ஷன் ஸப்ஜட்ஜுகள், 2-பென்ஷன் ரெவின்யூ உத்யோகஸ்தர்கள், 3-வக்கீல்கள், 2-லேவாதேவிக்காரர்கள், ஒரு பத்ராதிபர் ஆக 17-பேர்கள் இருந்தார்கள். இவர்கள் எல்லாரும் க்ராமவாஸிகளின் க்ஷேமாபிவ்ருத்தியில் ரொம்ப அக்கரைகொண்டவர்கள். அவர்கள் தயாரித்த மசோதாவில் என்ன ஏற்பாடு இருந்ததென்றால், எல்லா வ்யாஜ்யங்களையும் முதலில் ஒரு மத்யஸ்தக் கோர்ட்டில் கொண்டு வரவேண்டும். அந்தக் கோர்ட் தீர்ப்பில் எந்தக் கக்ஷிக்காரருக்காவது த்ருப்தி ஏற்படாவிட்டால், அந்தக்கேஸ் ஸப்ஜட்ஜ் கோர்ட்டுக்குப் போகவேண்டும். ஸப்ஜட்ஜ் கேஸை முதலில் விசாரித்த மத்யஸ்தர்களோடு சேர்ந்து விசாரித்து தீர்ப்பு சொல்லவேண்டும்.

ஸர்வஜன ஸம்மதமுள்ளதும், ஜனங்களுக்கு ஹிதமானதுமான இந்த ப்ரேரணையையாவது கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனால் கவர்ன்மெண்டார் அதை ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, ஜனங்கள் வழக்காடி நாசமாகட்டுமென்று சொல்லுவதுபோல, மத்யஸ்த கோர்ட்டுகளின் தீர்ப்புக்கு ஏற்பட்டிருந்த ஸ்டாம்ப் தீர்வையை அதிகமாக்கினார்கள். இந்த முயற்சியில் தலையிட்டுக்கொண்ட ஸப்ஜட்ஜுகளையும் கண்டித்தார்கள்.

மேலே விவரித்த மூன்று முயற்சிகளும் ப்ரயோஜனப்படாமல் போகவே, ஸர் வில்லியம் வெட்டர்பர்னுக்கு இந்தியா கவர்ன்மெண்டினிடம் இருந்த நம்பிக்கை போய்விட்டது. இந்தியர்களுக்கு ஏதாவது சீர்திருத்தம் வேண்டியிருந்தால், அவர்கள் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தினிடம் முறையிடுவதைத்தவிர வேறு வழியில்லையென்று கண்டு கொண்டார்.

### பெண்கல்வி.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் பெண்கல்வியின் அபிவ்ருத்திக்காக ரொம்ப உழைத்தார். அவர் ஸிந்து மாகாணத்தில் ஜுடிஷியல் கமிஷனராக இருந்ததன் ஞாபகார்த்தமாக அந்த மாகாண ஜனங்கள் 1880-ம் வர்ஷத்தில் கராச்சியில் அவர் பெயரால் ஒரு ஹிந்து பெண் பள்ளிக்கூடம் ஸ்தாபித்தார்கள்.



1884-ம் வர்ஷத்தில் எம். ஜி. ரானடேயுடன் சேர்ந்து பூனாவில் பெண்களுக்கு ஒரு ஹைஸ்கூல் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்தார். அவர் தக்ஷிணத்தில் ஸர்தார்களின் ஏஜெண்டாக இருந்தபோது ஸர்தார்களை பெண்கல்விக்கு உதவிசெய்யும்படி தூண்டினார். தமது தமையன் பெயரால் ஒரு ஸ்காலர்ஷிப் ஏற்படுத்த தமது ஸொந்தப் பணத்திலிருந்து 10,000 ரூபாய் கொடுத்தார்.

### இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ்.

இந்தியன் நாஷனல் காங்க்ரெஸை ஸ்தாபிப்பதற்கும் ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் முயற்சி எடுத்துக்கொண்டு உழைத்தார். அந்தக் காலத்தில் அதிகாரிகள் காங்க்ரெஸை நேரிடையாக ஆதரிக்காவிட்டாலும், காங்க்ரெஸ் முயற்சியைத் தடுக்காமலிருந்தார்கள். சில வர்ஷங்களுக்குப் பிறகு வைஸ்ராயாக இருந்த லார்ட் லாண்ட்ஸ்டௌன் காங்க்ரெஸ் முயற்சி முற்றிலும் ந்யாயமானதென்று ஒப்புக்கொண்டதோடு, கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் அதற்குத் தடையாக ஏதாவும் செய்யக்கூடாதென்று உத்தரவிட்டார். என்றாலும் பெரும்பான்மையான ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் ஜனங்களின் முன்னேற்றத்துக்காக உழைக்கும் காங்க்ரெஸின்மேல் வெறுப்பாகவே இருந்தார்கள்.

### இங்க்லண்டுக்குப் போனபிறகு இந்தியாவுக்காகப் பாடுபட்டது.

ஸர் வில்லியம் வெட்டர்பர்ன் வேலையிலிருந்து நீங்கிப் பென்ஷன் பெற்று இங்க்லண்டுக்குப் போனபிறகுகூட இந்தியாவின் க்ஷேமலாபங்களைப்பற்றி கவனித்து வந்தார்.

இந்தியாவிலுள்ள அதிகாரிகளால் ஜனங்களுக்கு நன்மை விசேஷமாக ஒன்றும் ஏற்படாதென்று அவருக்கு அனுபோகத்திலேயே ஏற்பட்டுவிட்டதென்று மேலே சொன்னோம். இந்தியா மந்த்ரி விஷயத்திலும் அப்படித்தான். ஆனால் அவரை நேரிடையாகக்கேட்டு ஸாதகமடைவது முடியாவிட்டாலும், அவரை காமன்ஸ் ஸபைமூலமாக வழிக்குக்கொண்டு வரலாமென்று அவருக்குத் தோன்றிற்று. இந்தியாமந்த்ரி இந்தியாவிஷயத்தில் ஸ்வயாதிபதியாக இருந்தாலும், அவரும் அவர் சேர்ந்திருக்கும் மந்த்ராலோசனை ஸபையும் இருப்பதும் போவதும் காமன்ஸ் ஸபையின் இஷ்டத்திலிருக்கிறது. அந்த ஸபையின் அபிப்ராயம் மந்த்ராலோசனை ஸபைக்கு விரோதமாக இருந்தால் ஸபையிலுள்ள மந்த்ரிகள் வேலையை விட்டுவிட வேண்டியது தான். காமன்ஸ் ஸபையோவென்றால் ப்ரிட்டிஷ் பொது ஜனங்களின் அபிப்ராயத்துக் கிணங்கத் தெரிந்தெடுக்கப்பட்டதாகும். ஆகையால் இந்தியா விஷயமாக ஏதாவது சீர்திருத்தம் செய்யவேண்டுமென்றால் இந்தியர்கள் ப்ரிட்டிஷ் ஜனங்களிடம் முறையிடுவது தான் நல்லதென்று வெட்டர்பர்ன் கண்டுகொண்டார். ஆகவே இந்தியாவிலும் இங்க்லண்டிலும் ஊக்கத்துடன் பாடுபட வேண்டுமென்று அபிப்ராயப்பட்டார். இந்தியாவில் இந்தியர்கள் நாஷனல் காங்க்ரெஸை வ்ருத்திசெய்து தக்க ப்ரமுகர்களைக்கொண்டு இன்னின்ன சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். காங்க்ரெஸில் தீர்மானம் செய்தவைகளை காங்க்ரெஸின் ப்ரிட்டிஷ் கமிட்டியாரும் இந்தியாவின் அபிவ்ருத்திக்கு ஸாதகமாக இருக்கும் இதர இங்க்லீஷ்காரர்களும் பார்லிமெண்ட் மூலமாகவும், ப்ரஸங்கங்கள் மூலமாகவும், பத்ரிகைகள் மூலமாகவும் ப்ரிட்டிஷ் ஜனங்களுக்குத் தெரியப்படுத்தி, அந்தச் சீர்திருத்தங்களைக் கொடுக்கும்படி வற்புறுத்த வேண்டும். இரண்டு வேலைகளிலும் வெட்டர்பர்ன் அதிக ஊக்கத்துடன் உழைத்து வந்தார்.

### காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தது.

வெட்டர்பர்ன் இந்தியாவில் இருந்தபோது அவரிடம் ஜனங்கள் அதிக மதிப்பு வைத்

திருந்ததாலும், அவர் இந்தியாவின் க்ஷேமத்துக்காக அதிகம் உழைத்து வந்ததாலும், இந்தியத் தலைவர்கள் அவரை இரண்டு தடவை காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுத்தார்கள். முதல் தடவை அவர் பம்பாயில் நடந்த 5-வது காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். மறுபடியும் 1910-ம் வர்ஷத்தில் அலகபாத்தில் நடந்த காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். இதுவேயன்றி அவர் 1904-ம் வர்ஷத்தில் ஸர் ஹென்ரி காட்டன் காங்க்ரெஸ் ப்ரெஸிடெண்டாக இந்தியாவுக்கு வந்தபோது அவருடன் கூட இந்தியாவுக்கு வந்தார்.

### பார்லிமெண்டில் மெம்பரானது.

1893-ம் வர்ஷத்தில் வெட்டர்பர்ன் பார்லிமெண்டில் மெம்பராகச் சேர்ந்தார். 1900-ம் வர்ஷம்வரையில் அதில் இருந்தார். பிறகு அதிலிருந்து விலகிக்கொண்டார். பார்லிமெண்டில் இருந்தபோது இந்திய விஷயங்களில் அக்கறை பாராட்டும் அநேக மெம்பர்களைச் சேர்த்து இந்தியன் பார்லிமெண்டரி கமிட்டியென்று ஒரு கமிட்டி ஏற்படுத்தினார். அந்தக் கமிட்டிக்கு அவரே சேர்மனாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். கமிட்டியார் இந்தியாவைப் பற்றின விஷயங்களை கவனித்து இந்தியர்களுக்கு ந்யாயம் கிடைக்கும்படி பார்த்து வந்தார்கள்.

1895-ம் வர்ஷத்தில் பார்லிமெண்டில் மெம்பராயிருந்த மிஸ்டர் தாதாபாய் நௌரோஜி இந்தியன் பார்லிமெண்டரிக் கமிட்டியின் உதவியின்மேல், இந்தியாவின் வரவு செலவைப் பற்றியும் இந்தியாவுக்கும் ப்ரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கும் பண விஷயமாக உள்ள ஸம்பந்தத்தைப்பற்றியும் பரிசீலனை செய்ய ஒரு ராயல் கமிஷன் நியமிக்க ஏற்பாடு செய்தார். அந்தக் கமிஷனில் வெட்டர்பர்ன், தாதாபாய் நௌரோஜி, மிஸ்டர் டபள்யூ எஸ். கெய்ன் ஆகிய மூன்று இந்திய நண்பர்கள் மெம்பர்களாக இருந்தார்கள். அவர்கள் இந்தியர்களுக்கு ஸாதகமாக அபிப்ராயங்கொண்டிருந்ததால், மூவரும் சேர்ந்து மைனாரிடியாக ஒரு தனி ரிபோர்ட் எழுதினார்கள்.

வெட்டர்பர்ன் பார்லிமெண்டில் இருந்தவரையில் இந்தியாவுக்காக ரொம்பவும் பாடுபட்டார். இங்க்லண்டிலுள்ளவர்களுக்கு இந்தியாவைப்பற்றிய விஷயங்களை பத்ரிகைகளின் மூலமாகத் தெரிவிக்கவேண்டுமென்று, காங்க்ரெஸின் ப்ரிட்டிஷ் கமிட்டியார் 'இந்தியா' என்ற ஒரு பத்ரிகையை ஸ்தாபித்தார்கள். சில காலத்துக்குப் பிறகு அந்தப் பத்ரிகையை ஒரு லிமிடெட் கம்பெனியாக்கி, அதற்கு வெட்டர்பர்னை சேர்மனாக நியமித்தார்கள். இந்தியர்கள் தங்களுடைய குறைகளை ப்ரிட்டிஷாரிடம் நேரில் சொல்லுவதே மேலானது என்று அவர் அபிப்ராயப்பட்டு வந்ததால், அவர் இந்தியத் தலைவர்களை இங்க்லண்டுக்கு வந்து ப்ரஸங்கம் செய்யும்படி வற்புறுத்தி வந்தார். அதோடு விருந்துகள் முதலியவைகளில் நடக்கும் ஸம்பாஷணைகளிலும், இந்தியர்கள் தங்கள் நிலைமையைப்பற்றி விருந்துக்கு வந்திருக்கும் ப்ரிட்டிஷ் ப்ரமுகர்களிடம் தெரிவிக்க ஏற்பாடு செய்தார். இவ்விதம் அநேக இந்தியத்தலைவர்கள் தக்க ஸமயங்களில் இங்க்லண்டுக்குப் போய்ப் பேசிவந்தார்கள்.

வெட்டர்பர்ன் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் ஒற்றுமையடையும் விஷயத்தில் ரொம்ப ச்ரத்தை யெடுத்துக்கொண்டார். 1910-ம் வர்ஷத்தில் அலகபாத் காங்க்ரெஸுக்கு அவர் ப்ரெஸிடெண்டாக இந்தியாவுக்கு வந்தபோது இவ்விஷயத்தில் அதிக ஊக்கத்துடன் உழைத்தார்.

### இந்தியா கவர்ன்மெண்டைப்பற்றி அவரது கொள்கை.

கவர்ன்மெண்டைப்பற்றி வெட்டர்பர்ன் கொண்டிருந்த கொள்கைகள் பின்வருமாறு:

இந்தியா ரொம்ப தரித்ரமான ஸ்திதியிலிருப்பதற்குக் காரணம் இந்தியாவின் ஆட்சிமுறை கெட்டிருப்பதே. இந்தியா கவர்ன்மெண்டானது உத்யோகஸ்தர்களின் ஸௌகர்யத்துக்காக அவர்களாலேயே நடத்தப்பட்டு வரும் ஆட்சியாகும். ஆகையால் அந்த ஆட்சி பொது ஜனங்களின் நன்மைக்கு விரோதமாக நடத்தப்பட்டு வருகிறது. ஸிவில் ஸெர்விஸ் உத்யோகஸ்தர்கள் ஒருபோதும் நிர்வாக ஸபையின் மெம்பர்களாக இருக்கக்கூடாது. ஜனங்களுக்கு தேச நிர்வாகத்தில் செல்வாக்கு இருக்கவேண்டும். 1858-ம் வர்ஷத்தில் இந்தியாவின் ஆட்சி கம்பெனி கையிலிருந்து அரசரிடம் போனபிறகு, இந்தியாவின் நிர்வாகத்தைப்பற்றி பார்லிமெண்ட் விசாரணை நடக்கவேயில்லை. இதனால் இந்தியா கவர்ன்மெண்டின்மேல் யாதொரு கட்டுப்பாடும் இல்லாமல் போய்விட்டது. ஆகையால் 20 வர்ஷங்களுக்கு ஒருதடவை இந்தியாவின் ஆட்சியைப்பற்றி ஒரு விசாரணை நடக்க சட்டம் ஏற்படுத்தவேண்டும்.

இப்படிப்பட்ட கொள்கைகளையுடைய வெட்டர்பர்ன், அவருடைய அபிப்ராயத்துக்கிணங்க இந்தியாவுக்குப் பொறுப்புள்ள ஆட்சி கொடுக்க ப்ரயத்தனங்கள் நடந்துவரும் இந்த ஸந்தர்ப்பத்தில் இறந்துபோனது இந்தியா செய்த துரத்ருஷ்டமேயாகும்.



## AGRICULTURAL POSSIBILITIES IN MADRAS.

## சென்னையில் வ்யவஸாய விஷயமாய் செய்யக்கூடிய சீர் திருத்தங்கள்.

சென்ற டிஸம்பர் மாஸத்தில் சென்னையில் நடந்த வ்யவஸாயக் கைத்தொழில் காட்சியை வைஸ்ராய் லார்ட் செம்ஸ்போர்ட் திறந்துவைத்தபோது செய்த ப்ரஸங்கத்தில் சென்னை ராஜதானியில் வ்யவஸாய விஷயமாக ஏற்படக்கூடிய அபிவ்ருத்திகளைப்பற்றி ப்ரஸ்தாபித்தார். அவர் நீலி, பருத்தி, வேர்க்கடலை ஆகிய இவைகளைப்பற்றிப் பேசியதின் ஸாராம்சத்தை இங்கு எழுதுகிறோம்.

### அவுரி.

இந்தியாவிலுள்ள மற்றெல்லா மாகாணங்களையும்விட சென்னை ராஜதானியில் தான் அதிகமாக அவுரி பயிராகிறது. ஆனால் இந்த ராஜதானியில் நீலித் தொழில் சாச்வதமாக நிலைத்து நிற்கவேண்டுமென்றால், நான்கு காரியங்கள் நிறைவேறவேண்டும். முதலாவது, தற்போது உபயோகப்பட்டு வரும் ஸுமாட்ரா அவுரிக்குப் பதிலாக ஜாவா அவுரியை உபயோகிக்கவேண்டும். இரண்டாவது, நீலி தயார் செய்யும் முறையை சீர்திருத்தவேண்டும். மூன்றாவது அதை விற்கும் ஏற்பாட்டை ஒழுங்குபடுத்தவேண்டும். நான்காவது, தற்போதுள்ள கலப்படம் செய்யும் கெட்ட வழக்கத்தை நிறுத்திவிடவேண்டும்.

ஜாவா அவுரியைப் பயிரிட்டால் மாஸுல் அதிகமாகக் கிடைப்பதோடு, அதன் விதைக்கு பேஹாரில் நல்ல க்ராக்கி இருக்கிறது. சென்னை ராஜதானியின் அவுரி சாகுபடியைப்பற்றிப் பரிசீலனை செய்ய கவர்ன்மெண்டார் டாக்டர் மார்ஸ்டனை அவுரி நிபுணராக நியமித்திருக்கிறார்கள். அவரது ஆராய்ச்சியால் நீலி செய்பவர்களுக்கு ஸாதக மேற்படலாம். ஆனால் நீலிக்கு நல்ல விலை கிடைக்க வேண்டுமானால், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் விற்பனைக்காகத் தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். பேஹார் தோட்டக்கார ஸங்கத்தார் நீலியை விற்பதற்காக இங்க்லண்டில் ஒரு கம்பெனி ஏற்படுத்தியிருக்கிறார்கள். சென்னையிலிருந்து நீலி ஏற்றுமதி செய்யும் வ்யாபாரிகள் தங்களுடைய நீலியை விற்க இந்தக் கம்பெனியின் உதவியை நாடலாம்.

பருத்தி.

இந்த ராஜதானியில் இரா முக்யமான கைத்தொழில் பயிர்கள் பருத்தியும் வேர்க்கடலையுமாகும். இந்த இரண்டு விளை பொருள்களினும் வ்யாபாரம் வ்ருத்தியடைந்து வருகிறது. இனிமேலும் நல்ல நிலைமையை அடையும். ஆனால் அவைகளுக்கு வெளியூர்களில் நல்ல பேர் இருக்க வேண்டுமானால், அவைகளைத் தயார் செய்வதிலும், விற்பதிலும் அநேக சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது அவச்யம். இதற்கு வ்யவஸாயிகளுக்குள் ஒற்றுமை இருக்கவேண்டும். விவஸாயிகளும் வ்யாபாரிகளும் ஒற்றுமையாக முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்,



லார்ட் செம்ஸ்போர்ட், இந்தியாவின் வைஸ்ராய்.

வ்யவஸாய டிபார்ட்மெண்டார் தங்களுடைய ஆராய்ச்சிப் பண்ணைகளில் செய்த பரீக்ஷைகளால் உயர்ந்த தினுஸு பருத்தியை உற்பத்தி செய்திருக்கிறார்கள். அந்தப் பருத்தியை விதைத்து அதன் மாஸுலைக் கலப்படம் செய்யாமல் விற்றால், மற்றவகைப் பருத்தியைவிட நல்ல விலை கிடைக்கிறது ஆனால் மாஸுலின் தன்மை கெடாமலிருக்கவும்,



இடையிலுள்ள தரகர்களின் மூலமாக விற்காமல் மொத்தமாக வ்யாபாரிகளுக்கு விற்கவும் வேண்டுமானால், வ்யவஸாயிகளுக்குள் கோவாபரேஷன் இருக்கவேண்டியது அவச்யமாகும். தற்போது ஜனங்கள் அவ்வித கோவாபரேஷன் வேண்டுமென்பதை உணர்ந்து வருகிறார்கள். திருநெல்வேலியில் வ்யவஸாயிகளுக்கு கலப்படமில்லாத பருத்தி விதை விற்பதற்காக விதை யூனியன்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த யூனியன்களால் பருத்தியிலிருந்து மொத்தத்தில் கொட்டை எடுப்பதற்கும் விற்பதற்கும் ஸௌகர்யமேற்பட்டிருக்கிறது. பருத்தி விஷயத்தில் வ்பவஸாயிகள் கவனிக்க வேண்டியவை என்னவென்றால், கலப்படமில்லாமல் ஒரே தினுஸு பருத்தி விதைப்பதும், அதை வ்யாபாரிகளுக்கு நேராக விற்பதுமே. இவற்றிற்கு கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுவது அவ்வச்யமாகும்.

வேர்க்கடலை.

நமது ராஜதானியில் வர்ஷவாரியில் கிடைக்கும் வேர்க்கடலையின் பெறுமானம் 7 கோடி ரூபாயாகும். வேர்க்கடலையை விற்பது விஷயத்தில் கோவாபரேஷன் இருந்தால் வ்யவஸாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்குமென்பதில் ஸந்தேகமில்லை. சென்னை வேர்க்கடலையில் எண்ணெய் ஸத்து குறைவல்லவென்றாலும், வெளிநாடுகளில் இதற்குக் குறைவாகவே விலை கிடைத்துவருகிறது. காரணம் என்னவென்றால், இங்கே கடலையிலிருந்து பருப்பு எடுக்க நம்மவர்கள் அநுஸரிக்கும் முறை குறைபாடுள்ளதாக இருப்பதே. முதலில் வேர்க்கடலையில் ஜலந்தெளித்து நனைத்து பிறகு தோலுரிப்பதால் பருப்புக் கெட்டுப் போய் அதிலிருந்து நல்ல எண்ணெய் கிடைப்பதில்லை. யந்த்ரத்தைக்கொண்டு தோலியை உரித்தால் இந்தத் தொந்தரவு ஏற்படமாட்டாது. யந்த்ரம் வாங்கி உபயோகிக்க வ்யவஸாயிகள் பலர் சேர்ந்துகொள்ள வேண்டியது அவச்யமாகும்.

ஆகவே சென்னையில் வ்யவஸாய மாஸுலில் அபிவ்ருத்தி ஏற்படவேண்டுமென்றால், இரண்டு விஷயங்களைக் கவனிக்க வேண்டியது அவச்யமாகும். முதலாவது பொருள்களைக் கலப்படம் செய்யும் வழக்கத்தை விட்டுவிட வேண்டும். இரண்டாவது மாஸுலை சரியாக விற்று நல்ல லாபமடைய கோவாபரேஷன் முறையை அநுஸரிக்கவேண்டும்,

## SOCIAL SERVICE.

### ஜன ஸமூக ஊழியம்.

சென்ற டிஸம்பர் மாஸத்தில் கல்கத்தாவில் நடந்த ஜனாசார சீர்திருத்த கான்பரென்ஸில் ப்ரெஸிடெண்டாக இருந்த மிஸ்டர் எம். கே. காந்தி ஜன ஸமூக ஊழியத்தைப்பற்றிப் பேசினார். அவர் பேசினவைகளை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

எவ்விதம் உழைக்கவேண்டும்.

ஜனஸமூக ஊழியத்தால் பலன் ஏற்படவேண்டுமென்றால், அது படாடோபமில்லாமல் நடக்கவேண்டும். வலதுகை செய்வதை இடதுகை யறியாதென்னும்படி வீண் விளம்பரம் செய்யாமல் உழைத்தால்தான், [illegible] உழைத்ததாகும். தன் வேலையைப்பற்றி படாடோபம் செய்யாமல் ஜனஸமூகத்துக்குப்பாடுபடுபவர்களுக்கு ஒருவித ஸௌகர்யமுண்டு. பிறருக்குத் தெரியாததால், அவர்களை ஸ்தோத்ரம் செய்பவர்கள் கிடையாது. அதனால் அவர்கள் மமதையடைந்து கெட்டுப்போவதில்லை;

குறைகூறுபவர்களுமில்லையாகையால், வேலை செய்பவர்கள் ஊக்கந் தளருவதுமில்லை. நமது ஸமூக ஊழியம் முழுவதும் இப்படியே இருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்.

தேச பாஷைகள்.

நாம் தற்காலம் இங்க்லீஷ் பாஷையைக் கற்றுக்கொள்வதைப்பற்றி ஒருவித மூடபக்தியில் ஆழ்ந்திருக்கிறோம். அந்த மூட பக்தியிலிருந்து நாம் மீண்டுகொண்டு நம்மைச் சேர்ந்தவர்களையும் மீளச்செய்வதே நாம் ஜனஸமூகத்துக்குச் செய்யக்கூடிய பெரிய கைங்கர்யமாகும். நமது பள்ளிக்கூடங்களிலும், காலேஜுகளிலும் தற்காலம் இங்க்லீஷ் பாஷையின் மூலமாகவே இதர பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள். அந்த பாஷைதான் தற்காலம் நமது நாட்டில் யாவருக்கும் பொதுவான பாஷையாக ஆகிக்கொண்டு வருகிறது. நமது உயர்ந்த எண்ணங்கள் எல்லாம் அந்த பாஷையின் மூலமாகவே தெரிவிக்கப்படுகின்றன. இங்க்லீஷ் பாஷையானது சீக்ரத்தில் உயர்ந்த வகுப்பு ஜனங்களின் தாய் பாஷையாக ஏற்பட்டு விடுமென்று வைஸ்ராய் லார்ட் செம்ஸ்போர்ட் எண்ணுகிறார். இங்க்லீஷ் தெரிந்திருக்க வேண்டியது அவச்யமென்று நாம் எண்ணிவருவதால்தான், நாம் அதற்கு அடிமையாகப்போயிருக்கிறோம். அந்தபாஷைப்பைத்யத்தால் நாம் உண்மையான ஜனஸமூக ஊழியத்துக்கு லாயக்கில்லாமலிருக்கிறோம். இங்க்லீஷ் பாஷை மூலமாக இதர பாடங்களையெல்லாம் சொல்லிக்கொடுத்து வருவதால், நமது அறிவானது தனித்து நின்றுபோய், நாம் பாமர ஜனங்களிலிருந்து விலகிவிட்டோம். நாம் அடைந்த அறிவைப் பிறருக்குக் கொடுக்க முடியாமல் நமது அறிவு கூட்டிலடைபட்டதுபோலாய்விட்டது. நாம் அடைந்த புது எண்ணங்களை பொது ஜனங்கள் நம்மிடமிருந்து அடைய முடியாமலிருக்கிறார்கள். சென்ற 60-வர்ஷ காலமாக நாம் புது வார்த்தைகளையும் அவைகளின் உச்சரிப்பையும் உருப்போடுவதிலேயே காலங்கழித்து வந்திருக்கிறோமேயல்லாமல், விஷயங்களை க்ரகித்துக்கொள்ளவில்லை. நாம் நமது பெற்றோர்களிடமிருந்து அடைந்த அறிவை அஸ்திவாரமாகக்கொண்டு அதன்மேல் அதற்கு அநுகுணமாகக் கல்விகற்காமல், அந்த அறிவை அநேகமாய் மறந்துவிட்டோம். இந்த மாதிரி வேறு எந்த தேசத்திலும் நடந்ததில்லை. இது ஒரு பெரிய தேசிய விபத்தாகும். நாம் முதல்முதலில் செய்யக்கூடிய பெரிய தேச ஊழியம் என்னவென்றால் நாம் மறுபடியும் தேச பாஷைகளைக் கவனிப்பதே.



எம். கே. காந்தி.



ஹிந்தி பாஷையை தேசப் பொதுபாஷையாக ஏற்படுத்தவேண்டும். மாகாண நடவடிக்கைகளையெல்லாம் அந்தந்த மாகாணத்து தேச பாஷைகளிலும் தேசப் பொது நடவடிக்கைகளையெல்லாம் ஹிந்தியிலும் நடத்தவேண்டும். நமது பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் தேசபாஷைகள் மூலமாகப் பாடங்கள் கற்பிக்கும்படி செய்கிறவரையில் நாம் நமது முயற்சியைக் கைவிடக்கூடாது. இங்க்லீஷ்காரர்களுடன் பேசவேண்டுமென்பதற்காகக் கூட நாம் இங்க்லீஷில் பேசக்கூடாது. இங்க்லீஷ்காரர்கள் தங்களுடைய வேலைகளுக்கு உபயோகமாக தேசபாஷைகளை வாசிப்பார்கள்.

நமது சட்டஸபைகளிலும் தேசிய வ்யவஹாரங்களை தேசபாஷைகளிலோ ஹிந்தி பாஷையிலோ நடத்தவேண்டிய காலம் சீக்ரம் வரவேண்டும். இதுவரையில் சட்டஸபையின் நடவடிக்கைகள் பொது ஜனங்களுக்குத் தெரியாமலே இருந்துவருகின்றன. இந்தத் தீங்கை சற்றுக்குறைக்க தேசபாஷைப் பத்ரிகைகள் முயன்று வருகின்றன. ஆனால் அது அவைகளால் ஆகாத வேலையாக இருக்கிறது. தேர்ந்த அறிவாளிகள் உள்ள பழமையான நமது நாட்டில் இங்குமங்கும் ஒரு டகூரும், ஒரு போஸும் ஒரு ராயும் இருப்பது நமக்கு ஆச்சர்யத்தை விளைவிக்கவேண்டியதில்லை. அப்படிப்பட்டவர்கள் ஸ்வல்பமாக இருக்கிறார்கள் என்பதுதான் வருத்தத்துக்கிடமாக இருக்கிறது. நமது கல்வி முறையில் உள்ள இந்த முக்யமான குறையால்தான் நமது தேசிய முயற்சிகளுக்கெல்லாம் குறை ஏற்படுகிறதென்பது எனது நம்பிக்கை.

ஸுகாதாரமும் ஸமூக ஊழியமும்.

1914-ம் வர்ஷத்தில் காலரா, ஜ்வரங்கள், ப்ளேக் ஆகிய இவைகளால் 46,39,663 பேர்கள் இறந்துபோனார்கள். இதர தேசங்களில் சீர்திருத்தக்காரர்கள் இந்தத் தொற்று வ்யாதிகளைப் பரவாமல் அடக்கி வந்திருக்கிறார்கள். இங்கே இங்க்லீஷ்காரர்கள் வ்யாதிகளைத் தடுக்க முயன்றும் பயன்படவில்லை. அவர்கள் மேல்நாட்டு முறைப்படி ஆலோசித்து, இந்தியாவுக்கும் இங்கிலண்டுக்கும் சீதோஷ்ணஸ்திதி ஸம்பந்தமாகவும் இதர விஷயங்கள் ஸம்பந்தமாகவும் உள்ள வித்யாஸங்களை மறந்துவிட்டார்கள். முதன்மையான இந்திய வைத்யர்களில் ஆறேழுபேர்கள் இந்தமூன்று வ்யாதிகளை ஒழிப்பதாகக் கங்கணங்கட்டிக்கொண்டு உழைத்தால், இங்க்லீஷ்காரர்களால் முடியாத இந்தக் கார்யத்தைச்செய்து முடிப்பார்களென்று நான் தைர்யமாகச் சொல்வேன். வ்யாதியை ஒழிக்க வழி அதன் காரணத்தைக்கண்டு பிடிப்பது மாத்ரமல்ல; அதைத்தடுக்க முறைகள் கண்டு பிடிப்பதும் அந்த முறைகளை உபயோகிப்பதுமே.

மூன்றாவது வகுப்பு ரெயில்வே ப்ரயாணிகள்.

மூன்றாவது வகுப்பு ப்ரயாணிகள் படும் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதுபோல் உழைப்பதற்கு ஸௌகர்யங்கள் இருக்கும் கைங்கர்யம் வேறு ஒன்றுமில்லை. இந்த 3-வது வகுப்பு ரெயில்வே தொந்தரவால் லக்ஷக்கணக்கான மத்யதர வகுப்பாரும், ஏழை வகுப்பாரும் தான் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். இவ்விதம் நமது ஜனங்கள் எவ்வித அஸௌகர்யத்தையும் அவமானத்தையும் வேறு வழியில்லையேயென்று பொறுத்துக்கொண்டிருப்பதானது, தாழ்ந்த வகுப்பார் என்னப்படும் ஜனங்களை நாம் கொடுமையாக நடத்துவதால் அவர்கள் தேக சுசியையும் தன் மதிப்பையும் இழந்து தாழ்வடைந்திருப்பதுபோல, ஜனங்களைச் சீர்குலைத்து வருகிறது. ரொம்ப சிறிய ரெயில் வண்டியின் அறையில் உட்காருவதற்கு, பைத்யங்கொண்ட ப்ராணிகளைப்போல் ஜனங்கள் அவஸரப்பட்டு ஓடவேண்டியிருக்கிறது. ப்ரயாணம் முழுவதும் தூசி தும்பில் காலங் கழிக்கவேண்டியிருக்கிறது. இடந்தேடி உட்

காருவதற்காக ஒருவர்க்கொருவர் சண்டை சச்சரவு செய்யவேண்டியிருக்கிறது. அவர்கள் நாய்கள்போல் யாதொரு ஸௌகர்யமுமின்றி உட்கார்ந்து சாப்பிடவேண்டியிருக்கிறது. ஒரு அறையில் பல பேர்கள் இருப்பதால் உட்கார்ந்துகொண்டே தூங்கவேண்டியிருக்கிறது. இப்படியெல்லாம் அவஸ்தையை ஸகித்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒரே அடியாக சீர்குலைவு நேரிடுவதற்குக் கேட்பானேன்.

ரெயில்வே ஸிப்பந்திகள் அவர்களைக் கண்டபடி திட்டி ஏமாற்றுகிறார்கள். அதிகப்படி வண்டிகள் உபயோகிக்கவேண்டும் என்னும் சீர்திருத்தத்தை தவிர, இதர அஸௌகர்யங்களையெல்லாம் உடனே நிவர்த்தி செய்யவேண்டும்; நாம் இத்தனை நாளாக இவற்றைப் பொறுத்துக் கொண்டிருக்கவில்லையா, இப்போது கவனிப்பானேன் என்று சொல்லக் கூடாது. வெகுநாள் நடந்து வந்ததனால் குற்றம் ந்யாயமாகிவிடாது.

### தாழ்ந்த வகுப்பார்கள்.

ஹிந்து ஸமூக ஏற்பாட்டால் தாழ்ந்த வகுப்பார்கள் அடைந்திருக்கும் நிலைமையிலிருந்து அவர்களை உயர்த்தினால், அது ஹிந்து மதத்தின் ஒரு பெரிய குறையைப் போக்கினதாகும். அவர்கள் இந்தியாவின் மொத்த ஜனத்தொகையில் ஐந்தில் ஒருபாகம் இருக்கிறார்கள். அவர்களைத் தற்போது ஜனங்கள் நடத்திவரும் விதமானது மதக் கொள்கைகளுக்கும் மானுஷீகத் தன்மைக்கும் விரோதமான ஒரு பெரும் பாவமாக இருந்துவருகிறது. அவர்களுடைய நிலைமையை உயர்த்துவது ஒரு மகத்தான ஊழியமாகும். அவர்களுக்குப் பள்ளிக்கூடங்கள் மாத்ரம் ஏற்படுத்துவதால், அவர்களுடையஸ்திதி உயர்வடைந்து விடாது. பொது ஜனங்களும் வைதீகர்களும் அவர்களிடம் தாங்கள் கொண்டுள்ள அபிப்ராயத்தை மாற்றவேண்டும். தற்போது நாம் இரு வகையாரையும் விட்டு விலகியிருக்கிறோம். அதனால் அவர்களை நமது அபிப்ராயத்துக்கு இணங்கச்செய்ய முடியவில்லை. நாம் நமது பாஷையில் பேசினால்தான் அவர்களை இணங்கச் செய்யக்கூடும். நடையுடை பாவனைகளில் வெள்ளைக்காரர்கள்போல் இருக்கும் இந்தியர்கள் அவர்களுடன் பேசிக் கார்யத்தை ஸாதித்துக்கொள்வதென்பது முடியாது. நமக்கு ஹிந்து மதத்தில் நம்பிக்கையிருப்பது உண்மையானால், நாம் ஹிந்து தோரணையில் தான் அவர்களை யணுகவேண்டும். நாம் தவம் செய்து நமது ஹிந்து மதத்தை பரிசுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும். பரிசுத்தமானதும், மேலான நோக்கங்களுள்ளதுமான வைதீகக் கொள்கைகளைக் கைக்கொண்டு மூட நம்பிக்கையும் அறிவின்மையும் கொண்ட வைதீகக் கொள்கைகளைத் தொலைக்க வழி தேட வேண்டும்.

### ஸன்மார்க்கமும் தெய்வபக்தியும் இல்லாமை.

எல்லாத் தீமைகளும் வ்யாதிகளைப்போல் ஒரே தீமையின் அறிகுறிகளாகும். அவைகள் காலதேச வர்த்தமானத்தால் வெவ்வேறு விதங்களாகக் காணப்படுகின்றன. எல்லாத் தீமைகளுக்கும் முக்ய காரணம் இந்தியர்கள் ஸன்மார்க்கத்தையும் தெய்வ பக்தியையும் இழந்ததே. ஸத்யம் அஹிம்ஸை, (அன்பு) ப்ரும்மசார்யம் (தன் அடக்கம்) ஆகிய இவற்றில் மேலான பலன் உண்டென்று நம்முன்னோர்கள் நம்பிவந்ததை நாம் அலக்ஷ்யம் செய்துவிட்டோம். பூர்விகத்தில் இருந்த ஸன்மார்க்கமும் தெய்வபக்தியும் நமக்கு இப்போது ஏற்படும்படி நம்மை உயர்த்துபவர் உயர்ந்த ஊழியம் செய்தவராவர். நாம் ரொம்ப ஸாமான்யமானதினால், நமக்கு நேர்ந்துள்ள கஷ்டத்தை யறிந்துகொண்டு, நம்மால் கூடியவரையில் சீர்திருத்திக்கொள்ள முயல வேண்டும்.

### ஸ்த்ரீகளின் நிலைமை.

ஹிந்து மகம்மதிய ஸ்த்ரீகளின் நிலைமையை



உயர்த்தவேண்டியது ரொம்ப முக்யமானது. நமது தேச முன்னேற்றத்தில் அவர்களும் தங்கள் கணவன்மாருடன் உழைக்கவேண்டும். அவர்களுக்கு புருஷர்களைப் போலவே ஸர்வ ஸ்வதந்த்ரமும் கொடுக்கவேண்டியது. அவர்களை இனிமேல் பொம்மையைப் போலாவது அடிமைகளைப் போலாவது நடத்துவது கூடாது. ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்தரியம் கொடுக்க வழி அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதல்ல. அவர்கள் விஷயத்தில் ஜனங்கள் கொண்டிருக்கும் கொள்கைகளைமாற்றி அதற்கேற்றாற்போல நடந்து கொள்வதுதான். கல்வி அவச்யந்தான். ஆனால் அது ஸ்வயேச்சைக்கு அடுத்தபடிதான். இலக்கிய கல்வி கற்பித்த பிறகுதான் ஸ்த்ரீகளுக்கு ஸ்வாதந்திரியம் கொடுக்கிறதென்று காத்திருக்க வேண்டியதில்லை. இலக்கியக் கல்வி யில்லாமலே நமது நாட்டு ஸ்த்ரீகள் மற்ற தேசத்து ஸ்த்ரீகளைப் போல தேர்ச்சியடைந் திருக்கிறார்கள். நமது ஸ்த்ரீகள் உயர்வடைவது பெரும்பாலும் கணவர்களைப் பொறுத்திருக்கிறது.

## IMITATION COFFEES.
## போலிக் காப்பிகள்.

நமது நாட்டில் காப்பி குடிக்கும் வழக்கம் நாளுக்குநாள் வ்ருத்தியடைந்து வருகிறது. அதனால் கெடுதலேற்படும் என்று அறிந்தும், அதைக்குடிப்பது கௌரவமென்று எண்ணிச் சிலர் குடிக்கிறார்கள். சிலர் அதை மிதமாகக் குடித்தால் யாதொரு கெடுதலும் இல்லையென்று நினைத்துக் குடிக்கிறார்கள். பால்யத்தில் பெற்றோர்கள் காப்பி குடிக்கப் பழக்கிவிட்டதால், பெரியவர்களான பிறகும் அவ்வழக்கத்தை விடமுடியாமல் தவிப்பவர்களும் உண்டு. சிலர் காப்பியால் கெடுதல் நேரிடுமென்று அதை விட்டுவிட்டு, காப்பி குடிக்கும் ஸமயத்தில் ஏதாவது குடித்தாக வேண்டுமென்ற எண்ணத்தால் கொத்தமல்லி விதை, வறுத்த கோதுமையின்மா, பருத்திக்கொட்டையின் பருப்பு, ஆவாரம்பூ, முதலியவைகளின் கஷாயங்களைக்குடித்து, காப்பி குடிப்பதால் வரும் தீமைகளில்லாமல் ஸௌகர்யங்களை மாத்ரம் அடைவதாக எண்ணிக்கொள்வதுண்டு.

காப்பி ஹோட்டல்காரர்கள் காப்பித்தூளோடு ஏலக்காய்த்தூள், சுக்குப்பொடி முதலியவைகளைக் கலந்து காப்பி போட்டு விற்பதுண்டு. இவ்வழக்கம் மேல்நாட்டு காப்பிக் கடைகளில் அதிகம். அங்கே சிக்கரியும் வேறு பல பொருள்களும் காப்பியில் கலப்படம் செய்யப்படுகின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

சிக்கரி:—இந்தச் செடியின் வெண்மையான கிழங்குகளைக் காயவைத்து வறுத்துத் தூளாக்கிக் காப்பிப் பொடியுடன் கலந்து காப்பிக் கலவை என்றும், தனியாக சிக்கரியென்றும் விற்கிறார்கள். இதன் கஷாயத்துக்கு காப்பி வாஸனை கிடையாது. நிறம் மாத்ரம் காப்பியின் நிறத்தைப்போலிருக்கும். ஐரோப்பாவில் அநேக ஏழை ஜனங்கள் காப்பி குடிப்பதற்கு செலவு அதிகமாகிறதென்று தனிச் சிக்கரியையும், காப்பிப்பொடியோடு கலந்த சிக்கரியையும் உபயோகிக்கிறார்கள். அநேகர் காப்பிக் கொட்டையை வாங்கி வறுத்துத் தூள்செய்து உபயோகிப்பது ச்ரமமென்று, வறுத்த பொடியை கடைகளில் வாங்கி உபயோகிப்பதுண்டு. அயோக்ய வ்யாபாரிகள் காப்பிப் பொடியுடன் சிக்கரியை கலந்து விற்பதுண்டு. வேறு சிலர்

காப்பி மிக்சர் அதாவது காப்பிக் கலவை யென்று காப்பிப் பொடியோடு சிக்கரி முதலிய வேறு பொருள்களைக் கலந்து கலவை யென்றே சொல்லி விற்கிறார்கள்.



சிக்கரிச் செடி.

காப்பிப் பொடியில் சிக்கரிப் பொடி கலந்திருக்கிறதா இல்லையா என்பதை ஸுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். ஒரு சிட்டிகைப் பொடியை ஜலத்தில் மெதுவாய்ப் போட்டால், ஸ்வயக் காப்பிப் பொடியானால் சற்று நேரம் மிதக்கும். ஜலம் சீக்ரம் நிறமடைவதில்லை. சிக்கரியானால், சீக்ரம் ஜலத்தில் ஊறி, ஜலத்தை பழுப்பான மஞ்சள் நிறமாகமாற்றி அமிழ்ந்துவிடும். மேல்நாடுகளில் இந்தச் சிக்கரிக்கு அதிக க்ராக்கி யிருப்பதால், இதுவும் சுத்தமாகக் கிடைப்பது கஷ்டம். தான்யங்கள், காரட் கிழங்கு, பீட் கிழங்கின்தோல், ஓக் மரத்தின் விதைகள் முதலிய அநேக பொருள்களைக் காயவைத்து வறுத்துப் பொடியாக்கிச் சிக்கரியுடன் கலந்துவிடுகிறார்கள்.

முளைத்த தான்யங்கள்:—பார்லி முதலிய தான்யங்களை ஜலத்தில் இரண்டு மூன்று நாள்கள் ஊற வைத்துப் பிறகு ஜலத்தை வடியவிட்டு ஒரு அறையில் குவியலாகப் போட்டிருந்தால் தான்யங்கள் முளைத்துவிடும். முளைவிட்டதும், அவைகளைப் பக்வமாக வறுத்து தூள் செய்துவிட்டால், பழுப்பு நிறமாக இருக்கும். வாஸனையும் காப்பியின் வாஸனையைப்போலிருக்குமாம். இதைக் கஷாயமாக உபயோகித்தால் பலவ்ருத்தி காரியாகவும், ஜீர்ணகாரியாகவும் வேலை செய்யும். காப்பியைப்போல் நரம்புகளை அனாவச்யமாக உத்ஸாகப்படுத்தித் தூண்டுவதில்லை. இதை உபயோகிப்பதில் செலவு மட்டு. இதனால் இது அதிகமாக உபயோகப்பட்டுவருகிறது.

முளைக்காத தான்யங்கள்.—முளைக்காத தான்யங்களையும் பக்வமாக வறுத்துப் பொடி செய்து காப்பி, சிக்கரி, ஆகிய இவைகளில் கலந்து மோசம்செய்வதுண்டு. சிலர் காப்பியின் ருசியைக் குறைக்கவென்றே இதைக் கலப்பதுமுண்டு.

ஓக் மரத்தின் விதைகள் :—ஐரோப்பாவில் ஓக் என்று ஒருவகை மரம் இருக்கிறது. அதன் விதைகளுக்கு அகார்ன் என்று பெயர். இந்த விதைகளில் கசப்பில்லாதவைகளாக எடுத்து வறுத்துப் பொடி செய்து போலிக் காப்பியாக விற்பதுண்டு. இதன் கஷாயம் அவ்வளவு நன்றாயிராவிட்டாலும், இதற்கு சற்று போஷணசக்தி உண்டு. கசப்பு ஓக் விதைகளையும் தக்கபடி பக்வம்செய்து கசப்பைப்போக்கி, நல்ல ஓக் விதைப் பொடியாக விற்றும் வருகிறார்களாம்.

தோட்டக் காப்பி:— காப்பி லூபைன் என்றும் தோட்டக்காப்பி என்றும் சொல்லப்படும் ஒருவகைச் செடி ப்ரான்ஸின் வடமேற்குப்ரதேசத்தில் ஏராளமாகப் பயிராகிறது. அதைப் பயிரிடுகிற ஜனங்களில் பலர் அதை ஸ்வயக் காப்பிச் செடியென்று எண்ணி வருகிறார்கள். அந்தச் செடி ஒரு வர்ஷத்துப் பயிர். அதன் விதை சற்று உருண்டையாக இருக்கும். அதன் கஷாயம் கசப்பாகவும், பழுப்பு நிறமாகவும், சற்று காப்பி வாஸனையாகவும் இருக்கும்.



அந்த ப்ரதேசத்தில் காப்பியோடு விஸ்கி சாராயம் கலந்து குடிப்பது வழக்கமாதலால், அந்தப் போலிக் காப்பியின் வாஸ்தவத்தை அவர்கள் அறிவதில்லை.



கடலைச் செடி.

கடலை:—ஐரோப்பாவில் சிலர் கொத்துக் கடலையை அதன் ஸ்வபாவ ருசி போகும்படி நன்றாக வறுத்துப் பொடிசெய்து காப்பியைப் போல் உபயோகிக்கிறார்கள்.

நீக்ரோ காப்பி:—இது ஒரு கோதுப் பயிராகும். இது அமெரிக்காவிலும் ஆப்ரிக்காவிலும் விளைகிறது. அங்குள்ள நீக்ரோக்கள் இதன் விதையை வறுத்துப் பொடி செய்து காப்பியாக உபயோகிக்கிறார்கள். இதன் வாஸனை காப்பியின் வாஸனையைப்போலவே இருக்கிறதாம். இதற்கு நரம்புகளுக்கு உத்ஸாகம் கொடுக்கும் குணம் கிடையாது.



நீக்ரோ காப்பி.



வெண்டைச் செடி.

வெண்டைக்காய் :—இதன் காய்ந்த விதையை வெடிப்பு அடங்கும் வரையில் வறுத்து, பிறகு அம்மியில் போட்டு ஆற வைத்துப் பொடி செய்து காப்பிக்குப் பதிலாக உபயோகிப்பதுண்டு. இதன் வாஸனை காப்பியினது போலிருக்குமாம். அநேகர் இதை காப்பிக்குப் பதிலாக விரும்புகிறார்களாம்.

அத்தி:—அத்திப் பழத்தைக் காயவைத்து வறுத்து காப்பிக்கு பதிலாக உபயோகிக்கும் வழக்கம் ஸுமார் 50 வர்ஷங்களுக்கு முன்னால் ஆஸ்ட்ரியா ஹங்கேரியில் ஆரம்பமாயிற்று. பிறகு ஜெர்மனிக்கும் பால்கன் நாடுகளுக்கும் இந்த வழக்கம் பரவிற்று. சென்ற 10 வர்ஷங்களாக ப்ரான்ஸிலும் அத்திக் காப்பி உபயோகிக்கப்பட்டு வருகிறது. ஆஸ்ட்ரியா, ஹங்கேரி, ஆல்ஜீரியா, ப்ரான்ஸின் தெற்குப் பாகம் முதலிய இடங்களில் அத்திப் பழத்திலிருந்து போலிக் காப்பி செய்து வருகிறார்கள். அத்திக் காப்பி கிட்டத்தட்ட நிஜக் காப்பியைப்போலவே இருக்கிறதாம்.

இதைத் தனியாகவும் ஸ்வயக் காப்பியோடு கலந்தும் குடிப்பது வழக்கம். இதற்கு காப்பியின் கெட்ட குணங்கள் இல்லையாகையாலும், காப்பியைப்போல் ருசியும் வாஸனையும்

உள்ளதாகையாலும், ஆகார குணங்கள் உள்ளதாலும், இதைக் குழந்தைகளுக்கு உபயோகித்துவருகிறார்கள்.

காப்பியைத் தவிர வேறு பானங்கள் குடிக்க விரும்புகிறவர்கள் மேலே சொன்ன பொருள்களுள் ஊறவைத்த தான்யங்கள், வெண்டைவிதை, அத்தி முதலியவைகளை பக்வம் செய்து பானமாக உபயோகித்துப் பார்க்கலாம்.

## NAKKIRAR.

## நக்கீரர்.

சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் நக்கீரர் ஈசுவரன் முன் வாதாடியதைப்பற்றியும், அவர் குஷ்டரோகம் அடைந்ததைப்பற்றியும் சொன்னோம். ஈச்வரன் இட்ட சாபத்தால் நக்கீரர் தேகத்தில் உஷ்ணம் அதிகமாகத் தாக்கிற்று. அந்த உஷ்ணத்தை அவர் ஸகிக்கமுடியவில்லை. அதைத் தணித்துக் கொள்ள அவர் மதுரையிலுள்ள பொன் தாமரைத் தடாகத்துக்குப் போய் அதில் முழுகி வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்.

தமிழ் வித்வான்கள் கூடிய ஸங்கத்திலிருந்து நக்கீரர் போனபிறகு, அந்த ஸபை சந்த்ரனில்லாத இரவுபோலவும், தாமரை இல்லாத குளம்போலவும் அழகில்லாமலிருந்தது. நக்கீரனைக் காட்டிலும் ஈச்வரனிடத்தில் பிழை செய்தவன் ராவணன். அவன் கைலாஸ மலையைப் பெயர்த்தெடுத்தபோது, ஈச்வரன் அவனைக்கோபித்து மலையின்கீழ் நசுங்கிப் போகும்படி அவனை அழுத்திவிட்டார். ஈச்வரன் ஸந்தோஷங் கொள்ளும்படி ஸாமகானத்தைப் பாடினபோது அவனைப் பரமேச்வரன் காப்பாற்றி அநுக்ரஹம் செய்யவில்லையா? அப்படியே ராவணனைக் காட்டிலும் அதிக பிசகு செய்யாத நக்கீரர் விஷயமாய் எல்லாரும் போய் ஈச்வரனை வேண்டிக்கொண்டால், அவர் மனமிரங்குவார் என்று நிச்சயித்துக்கொண்டு, ஸங்கத்திலிருந்த மீதி நாற்பத்தேழு வித்வான்களும், மதுரை ஸோமஸுந்தரேசுவரரின் ஆலயத்துக்குப்போய் பரவானை ஸ்தோத்ரம் செய்து வேண்டிக்கொண்டார்கள். "எங்களுள் ஒருவராகிய நக்கீரர் தங்களுடைய பெருமையை அறியாமல், தங்களுக்கு அபராதம் செய்தார். அதற்காக அவருக்குத் தக்கதண்டனை விதித்தீர்கள்! அவர் உடம்பு எரிந்துகொண்டு பொற்றாமரைத் தடாகத்தில் வருத்தத்துடன் முழுகிக் கிடக்கிறார். எங்களுக்காக அவருக்கு மன்னிப்பு கொடுக்க வேண்டு"மென்று எல்லாப் புலவர்களும் ஈச்வரனை வணங்கி ஸ்தோத்ரம் செய்தார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கிப் பரமேச்வரர் பார்வதி தேவியோடு, பொன் தாமரைத் தடாகத்தில் வித்வான்கள் மத்தியில் தோன்றினார். முன்னால், ஈச்வரன் நக்கீரரை நெருப்புக் கண்ணால் பார்த்ததுபோலில்லாமல் இப்போது அருள் கண்ணால் பார்த்தார். நக்கீரருகில்போய், அவர் செய்த பிழையைப் பொறுத்துக் கையைப் பிடித்துக் கரையேற்றினார். நக்கீரரும் ஈசுவரன் பெருமைகளைச் சொல்லிப் பலவிதமாய் ஸ்தோத்ரம் செய்து பணிந்தார். வித்வான்களும் ஈசுவரனைப் பலவிதமாய் ஸ்தோத்ரம் செய்தார்கள். நக்கீரர் கரை யேறினது முதல் பொற்றாமரைத் தடாகத்தில் தினந்தோறும் நியமப்படி ஸ்நானம் செய்து ஈசுவரனை பக்தியுடன் வழிபட்டு வந்தார். இவர் பக்தியைக் கண்டு ஸந்தோஷித்த பரமசிவன் நக்கீரருக்குத் தமிழ்ப் பாஷையின் லக்ஷணத்தை உபதேசிக்க வேண்டுமென்று க்ருபைகொண்டார். "இவன் பாஷையின் லக்ஷணம் தெரியாமலே நமது கோபத்திற்கு பாத்ரமானான், இதற்கென் செய்வது என்று யோசித்தார். அப்போது பார்வதி தேவி ஈச்வரனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னாள் :—"முன்னொரு ஸமயம் தாங்கள் என்னைக் கைலாஸ கிரியில் பாணிக்ரகணம் செய்துகொண்டபோது மஹாவிஷ்ணு, இந்த்ரன், ஸனகர், ஸனந்தனர் முதலிய மகரிஷிகள், பூலோகத்தவர்கள் முதலிய எல்லோரும் கைலாஸ கிரியில் வந்து சேர்ந்திருந்தார்கள். அப்போது பூமி பாரந்தாங்காமல் வடக்கெல்லை தாழ்ந்தது. தென்னெல்லை உயர்ந்தது. அப்போது தேவர்கள் பூலோகத்தவர்கள் முதலியவர்கள் பயப்பட்டு நடுங்கினார்கள். அந்த பயத்தை நிவ்ருத்திப்பதற்காகத் தாங்கள் அகஸ்திய முனிவரை அழைத்து தெற்கு திசைக்கு அனுப்ப உத்தேசம் செய்தீர்கள். அப்போது அகஸ்தியர், 'தென்தேசத்தில் தமிழர்கள் தமிழ் பாஷையை நன்றாகத் தெரிந்தவர்களா யிருப்பார்கள்; ஆதலால், எனக்கு தமிழின் லக்ஷணம் தெரிந்தாலல்லாமல், நான் அந்தத் தமிழ் தேசத்துக்குப் போகமுடியா'தென்று சொன்னதும், அவருக்குத் தாங்கள் தமிழின் லக்ஷணத்தை உபதேசித்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆகவே அகஸ்திய மஹரிஷியை அழைத்து, கீரனுக்கு உபதேசிக்கச் செய்யலா"மென்று உமாதேவி சொன்னாள். அப்போது பரமேசுவரன் அகஸ்திய முனியை மனஸில் நினைத்தார். அவரும் ஈச்வரன் நினைத்த மாத்ரத்தில் அவ்விடத்தில் தமது பத்னியுடன் வந்து ஈச்வரனை வணங்க, அவரும், தாம் முன்னால் அவருக்குபதேசித்த தமிழ் இலக்கணத்தை நக்கீரனுக்கு உபதேசிக்க உத்தரவு செய்தார். அகஸ்திய முனியும், தன்னைப்பணிந்த நக்கீர தேவருக்குத் தமிழ் நூல் இலக்கணத்தை நன்றாக உபதேசித்துவிட்டுப் பிறகு ஈச்வரனுத்தரவு பெற்று தமது இருப்பிடத்துக்குப் போய்ச்சேர்ந்தார். நக்கீரரும் தமிழ் இலக்கணத்தில் நல்ல பயிற்சியடைந்துதான் முன்பு ஈச்வரனுக்குச் செய்த அபசாரத்தை எண்ணி வருத்தமடைந்தார்.

சில காலத்துக்கெல்லாம் பஞ்சம்போய், மழைபெய்து நாட்டில் வளப்பமுண்டாயிற்று. நக்கீரதேவருக்குக் குஷ்டநோய் இருந்ததால், அவர் ஸங்கப் புலவர்களாகிய தம் ஸ்நேகிதர்களுடன் வஸிக்க முடியவில்லை. உடனே தம் நோயை நீக்கிக்கொள்ளவேண்டி, சிவபெருமான் சொன்னபடி கைலாஸகிரியைப்போய்த் தரிசிக்கவேண்டி, மதுரையினின்றும் ப்ரயாணப்படுவதற்கு முன்பு தம் நண்பர்களாகிய சங்கப்புலவர்களிடமிருந்து அநுமதிபெற்றார்.

"என்றினி மதுரைகாண்பேம்!
எப்பகல் சவுந்தரேசன்
தன் திருவடிகள் காண்பேம்! தாயை
என்ஞான்று காண்பேம்!
வென்றிவேல் தரும வேந்தர் வேந்தனை
எந்நாள் காண்பேம்!
ஒன்றுயிர்த் துணையாம் சங்கத்து உறவை
யெப்பொழுது காண்பேம்!"

மதுரையையும் ஸோமஸுந்தரக் கடவுளையும், மீனாக்ஷியம்மையையும், இனி எப்பொழுது காணப்போகிறோம், பாண்டியனையும், நாற்பத்தேழு புலவரையும் மீண்டு எப்பொழுது திரும்பி வந்து காணப்போகிறோம் என்ற ஏக்கத்தால் வருத்தப்பட்டுக்கொண்டு கைலாஸகிரி தர்சனத்தை அபேக்ஷித்து மதுரையை விட்டுப் ப்ரயாணப்பட்டார். சோழநாடு, தொண்டைநாடு, மகதநாடு முதலிய நாடுகளிலுள்ள ஸ்தலங்களையும், பருப்பதம், விரூபாக்ஷம், கல்யாணபுரம், காசி, திருக்கேதாரம் முதலிய க்ஷேத்ரங்களையும் நக்கீரர் தரிசித்துக்கொண்டு, ஒருதினம் இருந்த ஊரில் மற்றொரு தினம் தங்காமல், விரைவாகப்போய் ஹிமாலய பர்வதத்தைச் சேர்ந்தார். குஷ்டரோகமோ நக்கீரரைப் பிடித்து மிகவும் துன்பப்படுத்திற்று. அவர் கைலாஸகிரியைப் பார்ப்பதற்காக நெடுந்தூரம் நடந்து வந்ததனால்,

உள்ளங் கால்கள் எலும்பு புறப்பட்டுபோகு ம்படி தேய்ந்து போய்விட்டன. அவர் அப்படி நடந்துபோகும்போது ஒரு பெரிய தடாகத்தைக் கண்டார். அதில் அவர் இறங்கி ஸ்நானம் பண்ணி தம் நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அந்தத் தடாகக்கரையிலே விசாலமாகத் தழைத்து வளர்ந்திருந்த ஆலமரத்தினடியில் உட்கார்ந்து ஜபம் செய்துகொண்டிருந்தார். அந்த ஸமயத்தில் ஆலமரத்திலிருந்து ஓரிலை பாதி ஜலத்திலும் பாதி தரையிலுமாக விழுந்தது. ஜலத்திலுள்ள பாதி இலை மீனாக மாறியது. கரையிலுள்ள பாதியிலை பறவையாக மாறிற்று. பறவை ஆகாயத்திலும், மீன் ஜலத்திலும் இழுத்துக்கொண்டு நின்றன. இதைக்கண்டு நக்கீரதேவர் ஆச்சரியப்பட்டு ஜபத்தினின்றும், ஈச்வர த்யானத்திலிருந்தும் விலகி, அந்தப் புதுமையைப் பார்த்துக்கொண்டிருந்தார். அந்த ஸமயத்தில் ஒரு பெரிய கரிய பூதம் அவ்விடத்தில் வந்து அவரைத் தூக்கிக்கொண்டுபோய் ஒரு இருட்டான குகையில் அடைத்தது. அந்தக் குகையில் ஏற்கனவே சிவபூசை முதலிய நல்ல மார்க்கங்களிலிருந்து தவறினவர்களாகிய 999-பேர்களை அந்தப்பூதம் அடைத்து வைத்திருந்தது. அவரை அந்தப்பூதம் குகைக்குள்விட்டுவிட்டு ஸ்நானம் செய்யக் குளத்துக்குப் போயிற்று. அப்போது குகையினுள்ளிருந்த 999-பேரும், நக்கீர தேவரைப் பார்த்து இதுவரையில் நாங்கள் உண்பது உடுப்பது முதலியவைகளை யடைந்து ஸுகமாகக் காலம் கழித்துவந்தோம்; தாங்கள் வந்ததும் ஆயிரக்கணக்கு ஆகிவிட்டது. இனி அந்தப்பூதம் நம் எல்லாரையும் கொன்றுவிடப்போகிறது. ஆகவே தாங்கள் இந்த பூதத்தினிடமிருந்து தப்பித்துக்கொள்ள வழி தேடவேண்டும்" என்று சொன்னார்கள்.

அது கேட்ட நக்கீரர் "எல்லாரும் துக்கத்தை அடைவதும், ஸுகத்தை அடைவதும் ஸகஜம். என்றாலும், நான் வரும் துன்பத்தை நீக்க என்னாலியன்ற அளவு முயற்சி செய்வேன். சிவபிரான் திருக்குமாரனாகிய ஸுப்ரமண்யக்கடவுளின் சரவணபவ என்னும் ஷடாக்ஷரத்தை உச்சரித்து அவரை ஸ்தோத்ரம் செய்கிறேன். அவர் வரும் துக்கத்தை நிவர்த்திக்க வல்லவராகலாம்" என்று சொல்லி திருமுருகாற்றுப்படை என்னும் சிறந்த நூலை அவர்மேல் உள்ளங் கரைந்து பாடினார். அந்தச் சிறந்த பாமாலையைப் பெற்ற ஸுப்ரமண்யக்கடவுள் ரொம்ப சந்தோஷமடைந்து தன்னுடைய பக்தனை ரக்ஷிக்க வேண்டி, மயில் வாகனத்தின்மேலேறி வந்து அவரைக் கொல்லவந்த பூதத்தைக் கதாயுதத்தினால் மோதி, அதனுடைய தலையை வெட்டிச் சாய்த்து ஆயிரம்பேரையும் ரக்ஷித்து, நக்கீரர்க்கு தம் திருக்கோலத்தைக் காட்டி நின்றார். அவரை நக்கீரர் ஸ்தோத்ரம் செய்து நமஸ்கரித்தார். பின்பு, தான்வித்யா கர்வமடைந்து, ஈச்வரன் வாக்குக்குக் குறுக்கு சொன்னதையும், அவர் அந்த கர்வத்தை யடக்கக் குஷ்டநோய் பெறச் சாபம் தந்ததையும், தான் மறுபடியும் வேண்டிக்கொள்ள குஷ்டநோய் நிவாரணமாகக் கைலாஸ தர்சனம் செய்யவேண்டுமென்று கூறினதையும் அதற்காக தான் இமயமலைச்சாரலுக்கு வந்ததையும் எடுத்துச்சொல்லித்தனக்குக் கைலாஸத்துக்கு வழியைக்காட்டவேண்டு மென்று ஷண்முகரைக் கேட்டுக்கொண்டார். ஷண்முகமூர்த்தியும் அதன்மேல் ஆலோசித்து, ஈச்வரன் கைலாஸம் பார்க்கவேண்டுமென்று கூறினாரே யொழிய, இன்ன இடத்திலுள்ள கைலாஸந்தான் என்று சொல்லவில்லை, என்று சொல்லி, "நீ கைலாஸத்தைப் பார்க்கவேண்டி இந்தத் தடாகத்தில் ஸ்நானம் செய்" என்று ஒரு தடாகத்தைக் காட்டினார். நக்கீரரும் அந்தக் குளத்தில் மூழ்க, அவர் காளஹஸ்தி க்ஷேத்ரத்திலுள்ள ஸ்வர்ணமுகி நதியிலிருந்து எழு



ந்து தக்ஷிண கைலாஸமென வழங்கும் ஸ்ரீ ஞானப்ரஸூநாம்பா ஸமேத ஸ்ரீ காளஹஸ்தீச்வரரின் கோபுரத்தைக் கண்டு கைலைபாதி காளத்திபாதி என்னும் நூறு பாட்டுக்களால் காளஹஸ்தீச்வரரை ஸ்தோத்ரம் பண்ணினார். அவர் ஸ்வர்ணமுகி யாற்றினின்று வெளியே வரும்போது குஷ்டநோய் நீங்கிவிட்டது. திவ்யமான சரீரம் ஏற்பட்டுவிட்டது. அந்த வெண்பா அந்தாதி மாலையை அலங்காரமாக ஏற்ற ஸ்ரீ காளஹஸ்திநாதர் அதிக ஸந்தோஷப்பட்டு நக்கீரதேவர் முன்பு தோன்றி "உனக்கு வரம் வேண்டியதென்ன", என்றார். நக்கீரரும், "தாங்கள் க்ருபையுடன் தேகத்திலுள்ள குஷ்டமாகிய நோயை முற்றிலும் ஒழித்ததுபோல், என் மனத்திலுள்ள ஆணவம் (அகங்காரம்) என்னும் நோயையும் அகற்றி தங்கள் திருவடி நிழலில் சேர்த்துக்கொள்ள வேண்டு"மென்று கேட்டுக்கொண்டார். ஸ்ரீ பரமேச்வரனும் பக்தன் விரும்பியவாறு அவரைப் பக்வப்படுத்தித் தம் திருவடி நிழலில் சேர்த்துக்கொண்டார்.

## DIARRHŒA AMONG CATTLE.

## கால்நடைகளுக்கு வரும் கழிச்சல்.

ஆடுமாடுகளின் குடல்களில் தீனி ஸம்பந்தமான கோளாறுகளால் எரிச்சலேற்படுவதாலும், இரைப்பையிலும் குடல்களிலும் புழுக்கள் இருப்பதாலும் அந்த ம்ருகங்களுக்குக் கழிச்சலேற்படுவதுண்டு. இந்த வ்யாதியில் இரண்டு விதம் உண்டு. தேகக்கோளாறுகள் ஒன்றுமில்லாமல் கழிச்சல் மாத்ரம் ஏற்படுவது ஒன்றாகும். மற்றதில் இரைப்பை, குடல்கள் ஆகிய இவற்றின் உள்புறம் வீக்கம் அடைந்து அதனால் கழிச்சல் ஏற்படும். இது நாள்பட்ட வ்யாதியாக மாறக்கூடும்.

கோமாரி, க்ஷயம் முதலிய தொற்று வ்யாதிகளாலும் கழிச்சல் ஏற்படலாம்.

இது வயிற்றுக்கடுப்போடும் ஸம்பந்தப்படலாம். அல்லது கழிச்சலுக்குப்பிறகு உடனே வயிற்றுக்கடுப்பு உண்டாகலாம். அப்படி உண்டானால் மரணமேற்படுவது ஸகஜம்.

ஆடுகளுக்கு வரும் நாள்பட்ட கழிச்சல் ஸாதாரணமாகக் குடலிலும், இரைப்பையிலும் நாளிலும் க்ருமிகள் இருப்பதால் ஏற்படும். கன்றுக்குட்டிகளின் தொப்புளில் உள்ளகாயம் ஆறுவதற்குமுன் அதில் அழுக்கு சேருவதாலும், ரொம்ப ஏடுள்ள பாலைக் குடிப்பதாலும் கன்றுக்குட்டிகளுக்கு கழிச்சல் ஏற்படும்.

### கழிச்சலின் குறிகள்.

ஸாதாரண கழிச்சலில் வேறு ஒரு தேகக் கோளாறும் இருக்காது. மாடு அடிக்கடி கழியும். சாணம் ரொம்ப த்ரவமாகவும் கெட்ட நாற்றம் வீசுவதாகவும் இருக்கும். குடலிலும் இரைப்பையிலும் வீக்கம் இருந்தால், மாட்டுக்கு தீனியெடுக்க ப்ரியம் குறையும். ஜ்வரமிருக்கும். அழுவதுபோல சத்தமிடும். பிறகு மாடு ரொம்ப சக்தியற்றுப்போகும். சாணத்துக்கு பதிலாக சீதம் மாத்ரம் கழியும். சில ஸமயம் சீதத்துடன் ரத்தம் கலந்திருப்பதுண்டு. ரத்தம் அதிகமாக வெளிப்பட்டால், மாடு வலியினாலும் களைப்பினாலும் சீக்ரம் இறந்துபோகும்.

நாள்பட்டு இருக்கும் கழிச்சலில் மாடு இளைத்து இருக்கும். மாட்டுக்கு தாகம் அதிகமாயிருக்கும். பசி ஒரு நிதானமாக இராது. மாடு ரொம்ப மெலிந்து காணப்படும். நீர்க்கோர்வையும் வீக்கமும் ஏற்படுவதும் உண்டு. க்ருமிகளால் நேரும் கழிச்சல் வ்யாதிகளில்

கன்றுக்குட்டிகள், வெள்ளாடு, செம்மறியாடு ஆகிய இவைகளின் தொண்டை நீர்க்கோத்துக்கொண்டு வீங்கிப்போவதுண்டு.

சிகித்ஸை.

ஆகாரக் கோளாறுகளால் ஏற்படும் ஸாதாரண கழிச்சலில் ஆரம்ப காலத்தில் பின்வரும் பேதி மருந்தைக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| லின்ஸீட் ஆயில் (அதாவது ஆழி விதை யெண்ணெய்) அல்லது ஆமணக்கெண்ணெய் | ... 10 ஔன்ஸ் |
| நல்லெண்ணெய் | ... 10 ஔன்ஸ் |
| க்ரோட்டன் ஆயில் என்னும் எண்ணெய் | ... 20 துளிகள் |

இவைகளைக் கலந்து உள்ளுக்குச் செலுத்த வேண்டும். செம்மறியாடுகளுக்கு இந்த மருந்தைக் கொடுக்கும்போது க்ரோட்டன் ஆயில் எண்ணெயைச் சேர்க்கக்கூடாது.

ம்ருகம் ரொம்ப பலஹீனமாக இருந்தால் மருந்து கொடுப்பதில் ஜாக்ரதையாக இருக்க வேண்டும். ம்ருகத்துக்குப் போடும் தீனியை மாற்றவேண்டும். ஸுலபமாக ஜீர்ணமாகக் கூடிய உணவைக் கொடுக்கவேண்டும். கஞ்சியை யதேஷ்டமாகக் குடிக்கக் கொடுக்க வேண்டும்.

மேலே சொன்ன பேதி மருந்துக்குப் பிறகு பின்வரும் மருந்தை உள்ளுக்குக் கொடுக்க வேண்டும்.

| | |
|---|---|
| பொடி செய்த சீமைச் சுண்ணும்பு | 1 ஔன்ஸ் |
| பொடி செய்த கத்தக்காம்பு | ½ ,, |
| பொடி செய்த ஓமம் | ½ ,, |

இவைகளைக் கால்படி கஞ்சியில் கலந்து தினம் இரண்டுமுறை கொடுக்கவும்.

ம்ருகத்தை சுத்தமானதும் நல்ல காற்றோட்டமுள்ளதுமான கொட்டிலில் கட்டி வைக்கவேண்டும். அதன் உடம்பு சூடாயிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். வலியுடன் அமிதமான கழிச்சல் உண்டாகுமானால் பின்வரும் மருந்தைக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| பொடிசெய்த அபின் அல்லது பொடி செய்த கஞ்சா இலை | ... 3 ட்ராம் |
| பொடிசெய்த பெருங்காயம் | ... 3 ,, |
| பொடிசெய்த சுக்கு | ... ½ ஔன்ஸ் |
| நாட்டுச் சாராயம் | ... 4 ,, |

இவற்றைக் கலந்து காலேயரைக்கால் படி கஞ்சியில் சேர்த்துக் கொடுக்கவும்.

நாள்பட்ட கழிச்சலில் பின்வரும் பலவ்ருத்தி மருந்து, க்ருமி நாசகாரி இவைகளில் ஏதாவது ஒன்று கொடுக்கவும்.

பலவ்ருத்தி மருந்து.

| | |
|---|---|
| பொடிசெய்த அன்னபேதி | ... ½ ஔன்ஸ் |
| பொடிசெய்த எட்டிவிதை | ... 1 ட்ராம் |
| பொடிசெய்த நிலவேம்பு | ... 1 ஔன்ஸ் |

இவைகளைக்கலந்து தீனியோடாவது காலேயரைக்கால்படி கஞ்சியோடாவது சேர்த்துக் கொடுக்கவும்.

க்ருமிநாசகாரிகள்.

(1) பொடிசெய்த மயில் துத்தம் 1 ட்ராம்
ஜலம் காலேயரைக்கால்படி
மாடுகளுக்கானால் காலேயரைக்கால்படியும், ஆடுகளுக்கானால் 1-முதல் 4 ஔன்ஸுமும் கொடுக்கவும்.

| | |
|---|---|
| (2) பொடிசெய்த பெருங்காயம் | ½ ஔன்ஸ் |
| பொடிசெய்த கந்தகம் | 1 ,, |
| பொடிசெய்த பலாசவிதைகள் | 1 ,, |

இவைகளைக் கலந்து காலேயரைக்கால்படி கஞ்சியில் சேர்த்துக் கொடுக்கவும்.

அஜீர்ணத்தால் கன்றுகளுக்கு ஏற்படும் கழிச்சலில் 2 முதல் 4 ஔன்ஸ் வரையில் ஆமணக்கெண்ணெயை உள்ளுக்குக் கொடுக்கவும். பாலில் ஜலங்கலந்து குடிக்கக் கொடுக்கவும். ப்பால் ஊட்டும் கன்றுகளானால், தாய் மாட்டின் தீனியை மாற்றுவது அவச்யம்.

வ்யாதி வராமல் தடுத்தல்.

அநேக ம்ருகங்களுக்கு நாள்பட்ட கழிச்சலிருந்தால், மாட்டின் தேகத்தில் புழுக்கள் இருப்பதாக எண்ண இடமுண்டு. ஒரு இறந்துபோன மாட்டின் தேகத்தை அறுத்து சோதிப்பதால், புழு இருப்பதையும் இன்ன புழு இருக்கிறதென்பதையும் நிச்சயித்து விடலாம். வெள்ளாடு செம்மறியாடு ஆகிய இவைகளின் 4-வது இரைப்பையில் சிறிய நூல்போன்ற புழுக்கள் இருப்பதால், அந்த ம்ருகங்களுக்கு நாள்பட்ட கழிச்சல் ஏற்படுவதுண்டு. புழுக்களால் கழிச்சல் ஏற்படுவதாகத் தெரிந்தால், அந்தப் புழுக்களின் முட்டைகள் உள்ள மேய்ச்சல் தரைகளை மேய்ச்சலுக்கு உபயோகிக்காமலிருக்கவேண்டும். அந்த மேய்ச்சல் தரைகளை உழுது ஜலத்தை வடியவிடவேண்டும்.



வ்யாதிகண்ட மாடுகள் சாணத்தின் மூலமாக வ்யாதியைப் பரவச்செய்யும். ஆகையால் அந்த மாடுகளைத் தனியாகக் கட்டி வைக்கவேண்டும். அவைகளின் சாணத்தை ஜாக்ரதையாக அப்புறப்படுத்திக் கொளுத்தி விட வேண்டும். இறந்துபோன ம்ருகங்களின் பிணங்களை சுட்டெரித்துவிட வேண்டும்.

பிறந்து நாளாகாத கன்றுக்குட்டிகளின் தொப்புளில் அசுத்தம் முதலியவை சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காயமாயிருக்கும் தொப்புளுக்குப் பின்வரும் மருந்தை வைத்துக்கட்டவேண்டும்.

பொடி செய்த வெண்காரம்.
,, ,, கரி
,, ,, படிக்காரம்
,, ,, மயில் துத்தம்

இவைகளை ஸம பாகமாக எடுத்துக் கலந்து உபயோகிக்கவும்.

## CHARADES.

BY. S. NARASIMHA CHARI, B.A., B.L.

### விநோத விடுகதைகள்.

விடுகதைகளில் அநேக விதங்கள் இருக்கின்றன. கீழே அச்சிட்டிருக்கும் பாடல்கள், நூதன வகை விடுகதைகளாகும். ஒவ்வொரு பாடலிலும், ஒரு ஊரின் பெயரைப்பற்றி விவரம் சொல்லியிருக்கிறோம். ஊரின் பெயரை சரியாய், எழுத்துப்பிழை இல்லாமல், ஒரு காகிதத்தில் எழுதி, அப்பெயரில் உள்ள எழுத்துக்களை எண்ணிக்கொண்டு, அவ்வெழுத்துக்களில் இரண்டையேனும், மூன்றையேனும், இதற்குமேற்பட்ட எண்களையேனும், சொல்லிய வரிசைப்படி எழுதினால், வெவ்வேறு பொருள்கள் கொண்ட பல சொற்கள் ஏற்படும். இப்படி, எழுத்துக்களைப் பிரித்து பலவிதமாகச் சேர்ப்பதால், உண்டாகும் சொற்கள், பின்வரும் பாடல்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்தச் சொற்களின் உதவியைக்கொண்டு, ஊரின் பெயரைக்கண்டு பிடியுங்கள். இவ்விளையாட்டின் ஸாமர்த்யம்,

உதாரணம்:—

'கள்ளிக்கோட்டை' என்னும் ஊர்ப்பெயரை கவனியுங்கள். இந்தச் சொல்லில் 7 எழுத்துக்கள் இருக்கின்றன. முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் கூட்டினால், 'கடை' என்னும் சொல் பிறக்கிறது. இதன் அர்த்தம், ஸாமான்களை விலைக்கு வாங்கும் இடம்; அல்லது, இறுதி (= கோடி.) ஐந்தாம் எழுத்தையும் ஏழாம் எழுத்தையும் சேர்த்தால், 'கோடை' என்னும் சொல் உண்டாகிறது. இதன் பொருள், வெயில் காலம்.

முதல் எழுத்தையும், ஆறும் எழுத்தையும் ஏழாம் எழுத்தையும் கூட்டினால், 'கட்டை' (= விறகு) என்னும் சொல் தோன்றுகிறது.

1, 3—ம் எழுத்துக்களைச் சேர்த்தால், களி (= ஸந்தோஷம்) என்னும் சொல் உண்டாகின்றது. இவ்விதமே, இன்னும் பல சொற்களையும் உண்டாக்கலாம்.

இன்னொரு உதாரணம் வேண்டுவோர் சென்ற தைமாஸத்திய ஸஞ்சிகையில் 8-வது பக்கத்தில், பத்திரிகை என்னும் சொல்லைப் பற்றி எழுதி இருப்பதைப் படித்துக்கொள்க.)

1. பதினைந்துசீர் ஆசிரிய விருத்தம்.

('தம்மையே புகழ்ந்திச்சை' என்ற தேவாரச் செய்யுளைப் போலப் படிக்கவும்.)

புண்ணியந்தனைத் தன்னிலேபடி பாவியர்க்(கு) அருள் [செய்திடும்
புனிதநல்நதிப் பொன்கரைஉள புரியின்நல்வளம் புக ழுவேன் ;
எண்ணி, நீவிர் இலக்கம் இட்டிடில், எழுத்தும் ஐந்த [தில் காணுவீர் ;
ஏற்றநாலுடன் ஒன்றுதன்னை இணைக்கில் ஆகும் இல [க்குமி ;
மண்ணில் ஆர் அமர் வென்றவன் பெறும், மூன்(று) [இரண்டுடன் ஐந்தினை ;
மாதவம் புரிவோன் அடைந்திடும், மூன்று நாலுடன் [ஐந்தினை ;
நண்ணும் இந்நகர் நாமம்தன்னினை நவிலுவீர் என [வேண்டுதும்,
நாடுபோற்று ஜனாபிமானியை நாடு நண்பரை நாம் [அரோ.

2. பன்னிரண்டுசீர் ஆசிரிய விருத்தம்.

('அங்கிங்கெனாதபடி' என்ற தாயுமானவர் பாடலின் படியே படிக்க.)

ஆ(று)எழுத்தால் ஆய பெயர் உள்ள நகர் சென்னை
அகம்உள்ள(து) ; அப்பெயரில் ஆர்
ஆதிமூன்(று) அக்ஷரம் அடுக்கினால் பாரதத்(து)
அரிவைதன் பெயர் ஆகுமே;
கூறும் ஐந்தாம் எழுத்(து) ஆறுடன்கூட்டிடில்,
குழிந்தகிண(று) ஆவ(து) அறிவீர்;
கோலம் இல்பேடியைக் காணுவீர், ஒன்றுடன்
குலவுமூன்றைக் கூட்டிடில்;
சீறுவோன் பகைவனைச் செயும் எளனம் வரும்,
சேர்க்கில் ஐந்(து)ஒடு மூன்றினை;
சிற்றிடைச் செங்கைமார் நச்சும் ஆபரணம் ஆம்,
சிறந்த முதலொடு கடைஉறில்;
வீறுதிகழ் சென்னையில் வைத்யராமன் வரையும்
வண்மைஉறு நல் ஜனாபி
மானிபெறு நண்பர் இம்மாநகர்ப் பெயரினை
மகிழ்வொ(டு) உரை செய்வர் மாதோ.

எஸ். நரஸிம்மாசாரி.

குறிப்பு:—இவ்விரண்டு விடுகதைகளுக்கும் உத்தரம் அடுத்த ஸஞ்சிகையில் வெளிவரும்.

## BOOKS OF THE MONTH.

## நூதன புஸ்தகங்கள்.

கம்பராமாயணச் சுருக்கம்—பாலகாண்டம்.

தமிழில் உள்ள செய்யுள் நூல்கள் சொற்சுவை பொருட் சுவை நிரம்பியிருந்தாலும், அவைகளை ஸாமான்ய அறிவுடையோர் வாசித்துப் பயனடைவது ஸாத்யமில்லாமலிருக்கிறது. இதற்கு முக்யகாரணம் அது அவர்களுக்கு ஏற்றவிதமாக பதிப்பிக்கப்பட்டிராததேயாகும். செய்யுள்நூல்கள் வெகுவாய் சீரும்பதமும் பிரிக்காமல், ஒரே தொடர்ச்சியாகவோ அல்லது சீர்மாத்ரம் பிரித்து பதம் பிரிக்காமலோ அச்சிடப்படுகின்றன, அவைகளை வாசித்து இன்பமடைய தமிழ்ப் பண்டிதர்களின் உதவி வேண்டியிருக்கிறது. தமிழ்க் கல்வியில் ஸ்வல்ப தேர்ச்சியுள்ளவர்கள் அவைகளை பிறர் உதவியில்லாமல் வாசிக்க முடிவதில்லை. மேலும் சீரும் சந்தியும் பிரிக்காமலிருப்பதால் கடினமான வார்த்தைகளும் ஸுலபமான வார்த்தைகளும் இன்னவென்று தெரியாமல், அகராதியை உபயோகிக்கவும் தெரியாமலிருக்கிறார்கள்.

தமிழ் நூல்களை ஸாமான்ய அறிவாளிகள் வாசிக்கத் தடையாயிருப்பதற்கு மற்றொரு



காரணம் அவைகளின் பரிமாணமே. அநேகமாக பெரிய நூல்களெல்லாம் ஆயிரக்கணக்கான செய்யுள்களாக நீண்டிருக்கின்றன. கம்பராமாயணம் பதினாயிரம் விருத்தத்துக்கு மேல் கொண்டது. வில்லிபாரதத்தில் மூவாயிரம் செய்யுள்கள் இருக்கின்றன; கந்தப்புராணம், திருவிளையாடல் புராணம், பெருங்காப்பியங்கள் முதலியன ஆயிரக்கணக்கான செய்யுள்கள் கொண்டன. இவைபோலவே மற்றவையும். அவைகளை எடுக்கும்போதே படிப்போருக்கு மலைப்பு உண்டாகிறது.

இந்தக் குறைகள் நீங்கத் தற்காலம் தமிழ்ச் செய்யுள் நூல்களில் சில புதுமுறையில் பதிப்பிக்கப்பட்டு வருகின்றன. முதல் குறையை தமிழ் வித்வான்களே அறிந்திருக்கின்றனர் என்று தோன்றுகிறது. நாலாயிப்பிரபந்தம் சந்தி பிரித்தே அச்சிடப்பட்டிருக்கிறது. புன்கத்தூர் கந்தஸாமிமுதலியார் கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தையும் ஆரண்ய காண்டத்தையும் பதம்பிரித்தே அச்சிட்டிருக்கிறார். பண்டித ஸ்வாமிநாதய்யர் தாம் பதிப்பித்துள்ள நூல்களில் சீர்பிரித்திருக்கிறார்.

இன்னும் சில நூல்கள் சீர்பிரித்தும் பதம் பிரித்தும் அச்சிட்டு வெளியாகியிருக்கின்றன. இவை முதல் குறையைமாத்ரம் நீக்குவனவாகின்றன. பதம்பிரித்தும் சீர் பிரித்துமிருந்தாலும், தற்காலத்திய ஜனங்கள் பல வேலைகளுடையவர்களாகி, பெரிய நூல்களை தொடர்ந்து படிக்க முடியாதவர்களாயிருக்கிறார்கள். அந்த நூல்களில் உள்ள சொற்சுவை பொருள் சுவைகளை உணர்ந்து அவைகளில் ப்ரியம் ஏற்பட்டபின், வாசிப்பவர்கள் அவைகளை இடைவிடாமல் படிக்கக்கூடுமென்றாலும், முதலெடுப்பிலேயே ஜனங்கள் ஆகிருதியைக்கண்டு பயமடைகிறதால், அவைகளைக் கொஞ்சமும் வாசிக்க முயலுவதில்லை. தமிழ் ஜனங்களுக்குத் தமிழ் நூல்களில் ப்ரியமேற்பட்டு அதனால் நமது நாட்டில் தமிழ்ப் பயிற்சி பரவவேண்டுமென்றால், பழைய வழக்கத்தைவிட்டு ஜனங்களுக்கு முதலிலேயே தமிழ் இலக்கியத்தில் ருசிகாட்டி விடவேண்டும். இல்லாவிட்டால் கம்பராமாயணம், பாரதம் முதலிய தமிழ்க் காப்பியங்களைப் படிப்பவர்களின் தொகை நாளடைவில் குறைந்துபோகும். இப்படியாகாமலிருக்கவும், கம்பராமாயணப் படிப்பைப் பரவச்செய்யவும்வேண்டி புதுச்சேரி மிஸ்டர் வி. வி. ஸுப்ரமண்ய அய்யர் முன் வந்திருப்பது புகழத்தக்கது.

அவர் புதுமுறையாகப் பதிப்பித்தவரும் ராமாயணத்தில் பாலகாண்டம் இப்போது வெளியாகியிருக்கிறது. மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் அந்தக் காண்டத்திலுள்ள உபாக்யானங்களில் பலவற்றையும் வர்ணனைப் பெருக்கங்களில் பெரும்பாகத்தையும் வெட்டிவிட்டு கம்பனுடைய வாக்கிலேயே கதை தொடர்ச்சியாக வரும்படி பதிப்பித்திருக்கிறார். இந்தச் சுருக்கத்தில் 540 செய்யுள்களே இருப்பதால் (முழுப்பதிப்பில் 1399 - செய்யுள்கள் உள்ளன.) படிப்போருக்கு இது மலைப்பாகத் தோன்றாது. பதிப்பாசிரியர் பதச் சேதம் செய்திருப்பதும் வாசிப்பவருக்கு ரொம்ப ஸாதகமாக இருக்கிறது. இன்னும் அவர் செய்யுள்களின் பொருளை யறிவதில் ஸந்தேகம் ஏற்படாதபடி முற்றுப்புள்ளி, காமா முதலிய நிறுத்துக் குறிகளை தாராளமாக உபயோகித்திருக்கிறார். நூலின் கடைசியில் சேர்க்கப்பட்டுள்ள பாடபேதங்களும், அரும்பொருள் விளக்கமும், இலக்கணக் குறிப்புகளும், அருஞ்சொல் அகராதியும் வாசிப்பவர்களுக்கு மிகவும் பயன்படுமென்பதில் ஸந்தேகமில்லை.

மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர் இந்தக் காண்டத்துக்கு எழுதியிருக்கும் முகவுரையில் கம்பனுடைய ஜீவ்ய சரித்ரத்தைப்பற்றிப் சில விஷயங்கள் தெரிவித்திருக்கிறார். தற்போது வெளிவந்திருக்கும் ஆதாரங்களின்மேல் அவர் கம்பன் சாலிவாகன சகாப்தம் 8-வது நூற்

றாண்டின் பிற்பகுதியிலும் 9-வது நூற்றாண்டின் முற்பகுதியிலும் விளங்கினான் என்றும், சகம் 807-ல் தன் காவியத்தை அரங்கேற்றினான் என்றும் விஸ்தாரம் செய்திருக்கிறார். கம்பனைப்பற்றி கர்ணபரம்பரையாக வழங்கி வரும் கதைகளில் பலவற்றை மிஸ்டர் அய்யர் ஆராய்ந்து உண்மையின்னதென்று எடுத்துக் காட்டியிருக்கிறார். தமிழ் வாசிக்க விருப்பமுள்ள யாவரும் இந்த நூலை வாங்கி வாசித்துப்பயனடையலாம். இந்தப் புஸ்தகம் வேண்டுவோர் சென்னை ஜி.எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு (3-4, கொண்டித்தெரு) எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 2.

ஸந்தான ரத்னம்.

இப்பெயர்கொண்ட நூலின் ப்ரதியொன்று வரப்பெற்றோம். மலையாள பாஷையில் ஸதாநந்த ஸ்வாமிகள் இயற்றியுள்ள இப்பெயர் கொண்டநூலின் தமிழ்மொழி பெயர்ப்பாகும். மொழிபெயர்த்தவர் காளையார்கோயில் ருக்வேத பாடசாலை உபாத்யாயர் மிஸ்டர் டி. கே. ராமபத்ர சர்மா. இந்த நூலில் ஸந்தானமில்லாமைக்குக் காரணம், மலட்டு ரோகத்தின் விவரம், கர்ப்போற்பத்திக்குத் தடையான இதாவ்யாதிகள், அவைகளை நீக்கும்வழிகள், ஸற்குண ஸம்பத்து உள்ள குழந்தைகளைப்பெறும் வழிகள் முதலிய பல உபயோகமுள்ள விஷயங்கள், மந்த்ரம், ஔஷதம் முதலிய விவரங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன. மேலும் இதில் உபநிஷத், வைத்ய சாஸ்த்ரம் ஆகிய இவைகளிலிருந்து தக்க மேற்கோள்கள் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. இந்தநூல் யாவருக்கும் ஸுலபமாய் பொருள்விளங்கும்படி தெளிவான நடையில் எழுதப்பட்டிருக்கிறது. ஸந்தான பாக்யத்தை விரும்பும் எல்லாரும் இந்த நூலைவாங்கி வாசித்துப் பயனடையலாம். இதன்விலை அணா 14. வேண்டுவோர் இதை மொழி பெயர்த்தவருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

கமலாஸனி.

இது ஒ. ஸம்பத் ஐயங்கார் இயற்றிய ஒரு நூதன தமிழ் நாவலாகும். இதன் கதைப் போக்கு மனதைக்கவரும் வண்ணம் அமைந்திருப்பதோடு, கதையை எழுதியுள்ள மாதிரியும் நடையும் நேர்த்தியாயிருக்கிறது. இதன் விலை ரூ. 1. வேண்டுவோர் சென்னை, கொண்டி செட்டித் தெருவில் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

கதாரஸ மஞ்சரி.

இது சிறுவர்க்கான கதைகள் எழுதிவரும் எஸ். யஞ்ஞஸாமி அய்யரும், எம். எம். நாராயணஸாமி அய்யரும், எழுதியதாகும். இதில் புராணங்களில் வந்துள்ள பலநீதிக்கதைகள் அடங்கியுள்ளன. கதைகளின் நடை ஸுலபமாகவும் தெளிவாகவும், சிறுவர்களுக்கு ஏற்றதாவும் இருக்கிறது. இது சிறுவர்களுக்கு ஏற்ற புஸ்தகமாகும். இதன்விலை அணா 4½. வேண்டுவோர் சென்னை ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

---

### புதிதாக வந்த நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 201 | ஜடாவல்லவர் | ... | 1 | 8 | 0 |
| 361 | சுந்தரவல்லி | ... | 0 | 8 | 0 |
| 443 | ஜபலக்ஷ்மி | ... | 0 | 8 | 0 |
| 366 | பரதன் | ... | 0 | 5 | 0 |
| 134 | மதாலஸா | ... | 0 | 3 | 0 |
| 218 | பழமொழி நானூறு | ... | 2 | 0 | 0 |
| 469 | கலிங்கத்துப்பரணி | ... | 0 | 8 | 0 |
| 471 | அபிநவக்கதைகள் | ... | 0 | 6 | 0 |
| 470 | ராபின்ஸன் க்ரூஸோ | ... | 0 | 4 | 0 |
| 259 | திருவள்ளுவர் | ... | 0 | 8 | 0 |
| 502 | கண்ணகி | ... | 0 | 12 | 0 |

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# ஜனாபிமானி.

தபால் சார்ஜ் உள்பட
வர்ஷ சந்தா ரூபா
உள்நாடு 4.
வெளிநாடு 6.

THE
JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன்
அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } பிங்களஹு பங்குனிமீ, MAR.—APRIL, 1918. { ஸஞ்சிகை 3. No. 3.

17 MAY 18

## EDITORIAL NOTES.
## பத்ராதிபர் குறிப்புகள்.

**கவர்ன்மெண்டும் கைத்தொழில் அபிவ்ருத்தியும்.**

சென்ற டிஸம்பர் மாஸத்தில் சென்னையில் நடந்த கைத்தொழில் காட்சியை வைஸ்ராய் லார்ட் செம்ஸ்போர்ட் திறந்து வைத்துப் பேசினபோது அவர், இனி கவர்ன்மெண்டார் கைத்தொழில் விஷயங்களில் பராமுகமாக இருந்தது போலிராமல் அதிக ஊக்கம் காட்டுவார்கள் என்று தெரிவித்தார். கவர்ன்மெண்டார் இவ்விதம் இந்தியக் கைத்தொழில்கள் விஷயத்தில் அனுதாபம் காட்டி முன் வந்திருப்பதைப் பற்றி இந்தியர்கள் எல்லாரும் ஸந்தோஷப்படுவார்கள். ஆனால் கவர்ன்மெண்டார் வெறும் பேச்சோடு மாத்ரம் நிற்பதில் ப்ரயோஜனமில்லை. முதலாவது வேண்டும்போது இந்தியத் தொழில்சாலைகளுக்கு கவர்ன்மெண்டார் உதவி செய்யவேண்டும். அப்படி உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை ஜனங்களுக்கு ஏற்படவேண்டும். ஆனால் இப்போதுள்ள நிலைமையில் கவர்ன்மெண்டார் இந்தியர்களுக்கு ஸொந்தமான தொழில் கம்பெனிகளை அலக்ஷியம் செய்து இங்கே வந்து தொழில் நடத்தும் ஐரோப்பிய கம்பெனிகளுக்கு மாத்ரம் உதவி செய்கிறார்கள் என்ற ஸந்தேகம் ஜனங்களுக்கு உண்டாகக்கூடியதாக இருக்கிறது. இதற்குமுன் கவர்ன்மெண்டார் இந்தியர்கள் நடத்திவரும் கைத்தொழில் கம்பெனிகளிடம் நடந்துவந்த விதமானது இந்த ஸந்தேகத்தைப் போக்கக்கூடியதாகவும் இல்லை.

**ராணுவ ஸாமான்களும் இந்தியக் கம்பெனிகளும்.**

பம்பாயில் ப்ரபல கைத்தொழில் கம்பெனிக்காரராகிய மிஸ்டர் கரீம்பாய் எ. பீர்பாய் கைத்தொழில் கமிஷனில் ஸாக்ஷியம் சொன்னபோது கவர்ன்மெண்ட் டிபார்ட்மெண்டுகளில் பல பாரபக்ஷமாக நடந்து வருவதாகத் தெரிவித்தார். தற்போது யுத்தத்துக்கு கூடாரங்களும் பூட்ஸுகளும் இதர ராணுவ ஸாமான்களும் ஏராளமாக வேண்டியிருக்கின்றன. இந்த ஸாமான்களைச் செய்ய நமது தேசத்தில் இந்தியர்களுக்கு ஸொந்தமான தொழில்சாலைகளும் ஐரோப்பியர்களுக்கு ஸொந்தமான கைத்தொழில் சாலைகளும் பல இருக்கின்றன.

கவர்ன்மெண்டார் இந்தியர்கள் விஷயத்தில் ந்யாயமாக நடந்துவந்தால், ராணுவத்துக்கு வேண்டிய ஸாமான்களை இந்தியக் கம்பெனிகளிடமிருந்தும் ஐரோப்பியக் கம்பெனிகளிடமிருந்தும் வாங்கி வரலாம். ஆனால் மிஸ்டர் பீர்பாய், கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் ஐரோப்பியக் கம்பெனிகளை மாத்ரம் அதிகமாக ஆதரித்து வந்ததாகவும், இந்தியக் கம்பெனிகளிடமிருந்து ஸ்வல்பமாக ஸாமான்கள் வாங்கினதாகவும் குறைகூறினார். மேலும் ஐரோப்பியக் கம்பெனிகளிடம் வாங்கின ஸாமான்களுக்கு விலையும் அதிகமாகக் கொடுத்தார்களாம். ஐரோப்பியக் கம்பெனிகளின் ஸாமான்கள் சற்று மட்டமாயிருந்தாலுங்கூட விலையை அதிகமாகவே கொடுத்தார்களாம். இப்படிச் செய்ததனால் ஐரோப்பியக் கம்பெனிகளின் வ்யாபாரம் யுத்தத்துக்கு முன்பு இருந்ததைவிட பன்னிரண்டு மடங்காக ஆகியிருக்கிறது. இந்தியக் கம்பெனிகளோ ரொம்பத் திறமையாக நடந்து வந்ததுங்கூட, அவைகளை கவர்ன்மெண்டார் சற்றும் ஆதரிக்காததனால் அவைகள் சரிவர அபிவ்ருத்தியடையவில்லை. இந்தப் பாரபக்ஷம் யுத்தத்துக்கு முன்னும் இருந்ததாம். மிஸ்டர் கரீம்பாய் எடுத்துக் காட்டிய குறைகளால் கவர்ன்மெண்டின்மேல் உள்ள ஸந்தேகம் ஊர்ஜிதப்பட்டுப்போயிற்று என்னலாம்.

ஆனால் இவையெல்லாம் ஒரு பக்கத்து வாதமேயாகும், கவர்ன்மெண்ட் அதிகாரிகள் இவைகளுக்குச் சொல்லக்கூடிய ஆக்ஷேபணைகளைக் கேட்டால்தான் கவர்ன்மெண்டின் உண்மையான செய்கை வெளிவரக் கூடுமென்று சிலர் சொல்லலாம். ஆனால் மிஸ்டர் கரீம்பாய் தாம் சொல்லுவதெல்லாம் உண்மையென்றும், வேண்டுமானால் கவர்ன்மெண்டார் தாம் சொன்னவைகளை மறுக்கட்டுமென்றும் சொன்னார். கவர்ன்மெண்ட் அதிகாரிகள் ந்யாயமாகவே நடந்து வந்தார்களென்றால் கைத்தொழில் கமிஷனில் ப்ரெஸிடெண்டாக இருந்த ஸர் தாமஸ் ஹாலண்ட் ராணுவ தளவாட போர்டுக்கு ப்ரெஸிடெண்டாக இருப்பதால், தமது மேற்பார்வையில் நடந்ததாகச் சொல்லப்படும் அநீதங்களைப்பற்றிப் பூரா விசாரணைசெய்து உண்மையை வெளியிட்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படி ஒன்றும் செய்யாமல், மிஸ்டர் கரீம்பாய் சொன்ன ஸாக்ஷ்யங்களை பஹிரங்கமாகாதபடி மறைக்க முயன்றதோடு, அவைகளை வெளிப்படுத்தக் கூடாதென்று பத்ரிகைகளையும் பயமுறுத்தினார். அவர் இப்படி செய்ததனால் ஜனங்களுக்கு கவர்ன்மெண்டார் பாரபக்ஷமாயிருக்கிறார்கள் என்னும் எண்ணம் இன்னும் ஸ்திரமாக ஏற்பட்டிருக்கும் என்று சொல்லலாம்.

**இந்திய பாங்கிகளும், கவர்ன்மெண்ட் அதிகாரிகளும்.**

கவர்ன்மெண்ட் அதிகாரிகள் இந்தியர்கள் நடத்தும் பாங்கிகள் விஷயத்திலும் பாரபக்ஷமாக நடந்து வந்ததாகத் தெரிகிறது. பஞ்சாப் மாகாணத்தில் லாலா ஹரிக்ருஷ்ணலால் கைத்தொழில் கமிஷனில் ஸாக்ஷ்யம் சொன்னபோது இவ்விஷயத்தைப்பற்றி ப்ரஸ்தாபித்தார். முன்பு பஞ்சாபில் இந்திய பாங்கிகள் முறிந்தபோது, அதிகாரிகளும் ஆங்க்லோ இந்திய பாங்கிகளும் ஒன்று சேர்ந்து இந்திய பாங்கிகளைத் தலையெடுக்கவொட்டாமல் அடிக்க முயன்றார்களாம். ஆங்க்லோ இந்திய பாங்கிகளுக்குமுன் இந்திய பாங்கிகள் வ்ருத்தியடைவது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஜாதி த்வேஷமே இதற்குக் காரணம். ஆங்க்லோ இந்திய பாங்கிக்காரர்களுக்கும் ஐரோப்பிய உத்யோகஸ்தர்களுக்கும் இந்த த்வேஷம் அதிகமாக இருந்ததாம். ஜனங்கள் பீதியடைந்து இந்திய பாங்கிகளில் போட்டிருந்த பணத்தை ஏகோபித்து திரும்ப



வாங்கவந்தபோது, ஆங்க்லோ இந்திய பாங்கிகள் சற்று உதவிசெய்திருந்தால் இந்திய பாங்கிகள் முறிந்துபோயிருக்கமாட்டா. ஆனால் ஆங்க்லோ இந்திய பாங்கிகள் ஜாதி த்வேஷத்தால் இந்திய பாங்கிகள் வாழ்வதைப் பார்க்க இஷ்டப்படாமல், அவைகளுக்கு உதவிசெய்யாமலிருப்பது ஸகஜமே. இந்தியர்களுடைய க்ஷேமத்தில் அக்கரை கொண்டிருப்பதாக பேச்சுப்பேசும் கவர்ன்மெண்டாவது உதவி செய்யலாமல்லவா. அவர்கள் ப்ரெஸிடென்ஸி பாங்கிகளில் ஏராளமாகப் பணம் போட்டிருப்பதால் அந்த பாங்கிகளை உதவிசெய்யச் சொல்லியிருக்கலாம். ஆனால் கவர்ன்மெண்டார் அப்படியொன்றும் உதவி செய்யவில்லை. இதனால் இந்திய பாங்கிகள் முறிந்துபோயின. இப்படி லாலா ஹரிக்ருஷ்ணலால் எடுத்துக் காட்டின குற்றங்கள் உண்மையானவையென்றால், இந்தியாவில் இந்தியர்களுக்கு ஸொந்தமான பாங்கிகள் வ்ருத்தியடையுமென்றாவது, அல்லது அவைகளால் இந்தியக் கைத்தொழில்களுக்கு ஸாதகமேற்படுமென்றாவது எதிர் பார்ப்பது வீண் என்று சொல்லலாம். மேற்குறித்த இரண்டு குறைகளும் வாஸ்தவமல்லவென்று இது வரையில் கவர்ன்மெண்டார் சொல்லவில்லை. கவர்ன்மெண்டாரும், கவர்ன்மெண்ட் அதிகாரிகளும் மேலுக்கு மாத்ரம் இந்தியக் கைத்தொழில்களை வ்ருத்தி செய்வதாகப் பேசிவிட்டு, ரகஸ்யமாக அவைகளுக்கு பாதகமாக நடந்து வருவதோடு, இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்களுக்கு ஸாதகம் செய்கிறார்கள் என்று ஜனங்கள் எண்ண இடமேற்படுகிறது.

**கவர்ன்மெண்டின் கடமை.**

ஆகவே கவர்ன்மெண்டார் தாங்கள் கூறும் உறுதிமொழிகள் வீண் பேச்சுகளல்ல, உண்மையான நோக்கத்துடன் கூடியவையென்று ஜனங்களுக்கு மெய்ப்பிக்க இஷ்டமிருக்கும் பக்ஷத்தில், மிஸ்டர் கரீம்பாயும் லாலா ஹரிக்ருஷ்ணலாலும் அநீதமென்று சொன்னவைகளைப்பற்றி கைத்தொழில் கமிட்டியார் ஏற்கனவே ஆராய்ச்சி செய்திராவிட்டால், அந்தக் குறைகளைப்பற்றித் தீர விசாரித்து உண்மையைக் கண்டுபிடித்து, ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் தகாத விதமாக நடந்துகொண்டிருந்தால் அவர்களைத் தகுந்தபடி சிக்ஷித்தோ, அல்லது மேற்சொன்னவைகள் தவறென்றோ பஹிரங்கப்படுத்த வேண்டும். இப்படிச் செய்தால்தான் கவர்ன்மெண்டுக்குள்ள கௌரவம் குறையாமலிருக்கும்.

**ஒரு புது கவர்ன்மெண்ட் ஸோப் தொழில்சாலை.**

கள்ளிக்கோட்டையில் கவர்ன்மெண்டார் ஒரு ஸோப் தொழில்சாலை ஏற்படுத்தியிருப்பது பலருக்கும் தெரிந்த விஷயம். அங்கே உயர்ந்த ஸோப்புகள் செய்யப்பட்டு நமது நாட்டில் பற்பல விடங்களில் விற்கப்படுகின்றன. இப்போது கவர்ன்மெண்டார் புதிதாக ஒரு பெரிய ஆராய்ச்சி ஸோப்பு தொழில்சாலை ஸ்தாபிக்க 2 லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்களென்று கேட்டு ஸந்தோஷிக்கிறோம். மேற்குக்கரை ப்ரதேசத்தில் ஏற்கனவே சில நல்ல ஸோப்பு தொழில் சாலைகள் நடந்து வருகின்றன. புதிதாக ஒரு பெரிய ப்ரைவேட் ஸோப் தொழில்சாலையும் ஸ்தாபிக்கப்படப்போவதாக தெரிகிறது. இப்படியிருக்க கவர்ன்மெண்டார் புதிதாக ஒரு பெரிய தொழில்சாலை ஸ்தாபிப்பது அவர்களுடன் போட்டியாக ஏற்படுமென்று சிலர் எண்ணியிருந்ததாகத் தெரிகிறது. ஸமீபத்தில் நடந்த சென்னை சட்ட ஸபையில் மேற்குக்கரை ஜில்லா ப்ரதிநிதியாகிய மிஸ்டர் சதாசிவ பட் புது ஸோப் தொழில்சாலை ஏற்படுத்தக்கூடாதென்று ஒரு தீர்மானங்கொண்டு வந்தார். கவர்ன்மெண்டின் பதிலைக்கேட்டு

அவர் தீர்மானத்தை வற்புறுத்த வில்லை. கவர்ன்மெண்டார் சொன்ன தென்னவென்றால், புதிதாக ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கும் ப்ரைவேட் கம்பெனியால் சிறு ஸோப் கம்பெனிகள் தலையெடுக்க முடியாமல் போய்விடும். ஆகையால் சிறு கம்பெனிகளுக்கு உதவியாக கவர்ன்மெண்டார் ஒரு மாதிரி ஸோப் தொழில்சாலை ஏற்படுத்த வேண்டியது அவச்யமென்பதே. கவர்ன்மெண்டார் ஸ்தாபிக்கும் தொழில்சாலையில் லாபம் வருகிறதென்று தெரிந்தால், ஸ்வல்ப முதலுள்ளவர்கள் பெரிய கம்பெனி இருப்பதைக்கண்டு பயப்படாமல், இந்தத் தொழிலில் ப்ரவேசிப்பது ஸாத்யமாகும். கவர்ன்மெண்டாருடைய தொழில்சாலையானது ஒரு ரூபணத்தொழில் சாலையாகவும், ஆராய்ச்சி சாலையாகவும், இருக்கும்.

கவர்ன்மெண்டும் மாதிரித் தொழில் சாலைகளும்.

இது ஸம்பந்தமாக ஒரு பெரிய கேள்வி உண்டாகிறது. எத்தனை காலம் வரையில் கவர்ன்மெண்டார் மாதிரித் தொழில் சாலைகளை வைத்து நடத்திவருவது? கைத்தொழில் ஆராய்ச்சிக் கமிஷனில் ஸாக்ஷ்யம் சொன்னவர்களில் பலர் கவர்ன்மெண்டார் மாதிரித் தொழில்சாலைகளை சிலகாலம் வைத்து நடத்தி அவை லாபகரமாக நடந்து வராவிட்டால், நிறுத்திவிட வேண்டுமென்றும், லாபகரமாக நடந்து வந்தால் அவைகளை ஸொந்தத்தில் வைத்துக் கொள்ளாமல் ப்ரைவேட் கம்பெனிகளிடம் விட்டு விடவேண்டும் என்றும் அபிப்ராயம் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி பார்த்தால், கவர்ன்மெண்டார் ஏற்கனவே ஸ்தாபித்துள்ள ஸோப் தொழில்சாலை இதுவரையில் லாபம் காட்டியிருக்கிறதென்று தெரிய வருவதால், இன்னும் இரண்டொரு வர்ஷம் நடந்தபிறகு ப்ரைவேட் கம்பெனியிடம் விட்டுவிட வேண்டும். ஆனால் வெகுகாலம் வரையில் கவர்ன்மெண்டார் மாதிரிக் கைத்தொழில்களை விட்டுவிடாமல் ஸொந்தத்தில் நடத்தவேண்டுமென்று மீன் டிபார்ட்மெண்ட் டிரெக்டர் ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸன் சொல்லுகிறார். அதற்கு தக்க காரணங்களும் அவர் தமது டிபார்ட்மெண்டின் ரிபோர்ட்டில் சொல்லியிருக்கிறார். அவை வருமாறு.

ஸர் ப்ரெடரிக் நிக்கல்ஸனின் அபிப்ராயம்.

அநேகம் பேர்கள் தொழில்களில் பணம் போட இஷ்டமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தொழில்களின் கஷ்டங்கள் தெரிவதில்லை. கடிதங்கள் மூலமாக எல்லாவற்றையும் அறிந்துகொள்ள முடியுமென்றெண்ணியிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஸாதகமாக ஒரு கவர்ன்மெண்ட் தொழில் சாலை இருப்பது ரொம்பவும் நல்லது. பணம் போட இஷ்டப்படுகிறவர்கள் ஸர்க்கார் தொழில்சாலைகளில் வந்து தொழில் முறைகளை நன்றாய் அறிந்துகொண்டு போகலாம். அவர்கள் ப்ரைவேட் தொழில்சாலைகளில் தொழில் முறைகளையும் தொழில் நுட்பங்களையும் அறிந்துகொள்வது கஷ்டமாயிருக்கலாம்.

ஒரு குறிப்பிட்டதொழிலில் பெரியதொழில் சாலை ஸ்தாபிதமாகிவிட்டாலுங்கூட கவர்ன்மெண்ட் மாதிரித் தொழில்சாலை இருக்க வேண்டியது அவச்யமே. பெரிய தொழில் சாலையார் தொழில் முழுவதையும் தங்களுக்கே உரிமையாக்கிக்கொள்ளாமல் தடுக்கவும், தொழில் செய்ய விரும்பும் ஸ்வல்ப மூலதனமுள்ளவர்களுக்கு யுக்தியும் ஆலோசனையும் சொல்லி அவர்களுக்கு உதவிசெய்யவும்; தொழிலாளிகளைப் பழக்கவும் கவர்ன்மெண்ட் தொழில்சாலையே ச்லாக்யமானது.



மாணவர்களை தொழில்களில் பயிற்றுவித்தல்.

மேற்சொன்ன ந்யாயங்கள் ஸோப்பு தொழில்சாலைக்கு மாத்ரமல்ல, நமது தேசத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டிய மற்றெல்லா தொழில்சாலைகளுக்கும் ஏற்கும். சென்ற வர்ஷத்தில் அநேகம் பேர்கள் கவர்ன்மெண்ட் ஸோப் தொழில் சாலையில் ஸோப் செய்யும் முறைகளை கற்றுக் கொள்ளுவதற்கு தங்களை மாணவர்களாக சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று மனுப் போட்டார்களாம். ஆனால் ஸோப் தொழில் சாலையானது ஆயாய்ச்சி செய்யும் நிலைமையிலிருப்பதாலும் கல்வி கற்பிக்க வஸதிகளில்லாமலிருப்பதாலும் மனுதாரர்களை மாணவர்களாக ஏற்றுக்கொள்ள முடியாமல் போயிற்றும். கூடிய சீக்ரத்தில் கவர்ன்மெண்டார் ஷை தொழில்சாலையில் தொழில் முறைகளைக் கற்பிக்க வஸதிகள் ஏற்படுத்திக் கொடுப்பார்களென்று நம்புகிறோம். இப்படி மாணவர்களைப் பழக்க கவர்ன்மெண்ட் தொழில்சாலைகள் வெகுகாலம் நடந்து வரவேண்டியது அவச்யமாகிறது.

கவர்ன்மெண்டாரும் கம்பெனிகளும்.

சென்ற வர்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் யுத்தக்கடன் வாங்க ஏற்பாடு செய்தபோது அந்த வர்ஷத்தில் குறைந்தது 15 கோடி ரூபாய் இந்தியாவிலிருந்து கடனாகக் கிடைக்குமென்று எண்ணினார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு 3½ மடங்குக்கு அதிகமாக கடன் கிடைத்தது. இந்தியர்கள் யுத்த விஷயத்தில் கவர்ன்மெண்டார் எதிர்பார்த்ததற்கு மேலாகவே கடன் கொடுத்திருக்கிறார்கள்.

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு இந்தியா கவர்ன்மெண்டார் கொடுக்கத் தீர்மானித்திருக்கும் தொகை 150 கோடி ரூபாயாதலால், அதில் ஏற்கனவே கொடுபட்டுள்ள ஸுமார் 54 கோடி ரூபாய் போக பாக்கியில் ஒரு பாகத்தை இந்த வர்ஷம் இந்தியாவில் கடனாகி வாங்கி ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்கள்.

சென்ற வர்ஷத்தில் நமது தேசத்திலிருந்து 54 கோடி ரூபாய்க்குமேல் கடன் வாங்கி விட்டதால், இந்த வர்ஷம் முன்போல அதிகமாகக் கடன் கிடைக்காதென்று எண்ணியிருக்கிறார்கள். ஆகவே, இந்த வர்ஷம் ஸுமார் 30 கோடி ரூபாய் கிடைக்குமென்று எண்ணியிருக்கிறார்கள். இந்தத் தொகை கஷ்டமில்லாமல் கிடைப்பதற்காக ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள். தாங்கள் கடன் வாங்கும்போது தங்களுக்குப் போட்டியாக பணம் கடன் கேட்பவர் இல்லாமல் செய்வதே இந்தச் சட்டத்தின் நோக்கமாகும்.

மூலதனத்தைக் கட்டுப்படுத்தும் சட்டம்.

இந்தச் சட்டத்துக்கு மூலதனத்தைக் கட்டுப்படுத்தும்சட்டம் என்று பெயர். இந்தச் சட்டத்தின்படி புதிதாக பொதுக் கம்பெனிகள் ஸ்தாபிக்கக் கூடாது. ஏற்கனவேயுள்ள கம்பெனிகள் தங்களுடைய மூலதனத்தை அதிகமாக்கவும் கூடாது. அநேகமாய் கம்பெனிகளில் பங்குகளின் மதிப்பில் ஒரு பாகத்தை மாத்ரம் முதலில் வஸூலித்திருப்பார்கள். பாக்கி பாகத்தை கம்பெனியின் அபிவ்ருத்திக்கு எப்போது வேண்டியிருக்குமோ அப்போது தான் வஸூலித்துக்கொள்வது வழக்கம். இனி அப்படிச் செய்வதும் கூடாது. கம்பெனிகள் கடன் வாங்குவதும் கூடாது. இந்த நிபந்தனைகள் யுத்தம் நடக்கும் வரையிலும் அதற்குப் பிறகு ஆறு மாஸமும் அமுலிலிருந்து வரும்.

ஆனால் எந்தத் தொழிலாவது ரொம்ப அவஸரமும் தேச நன்மைக்கு ரொம்ப அவச்யமுமானதாயிருந்தால், அதற்கு மாத்ரம் கவர்னர் ஜெனரல் தமக்கு இஷ்டமான

நிபந்தனைகளின் மேல் மூலதனம் சேர்க்க அனுமதி கொடுப்பார். கவர்ன்மெண்டார் இவ்விதம் செய்ததால் அவர்களுக்கு ஸாதாரண நிலைமையில் கிடைப்பதைவிட அதிகப் பணம் கடனாகக் கிடைக்குமா என்பது ஸந்தேகம். கைத்தொழிலில் பணம் போடுவோர் அதிக லாபம் கிடைக்குமென்றெண்ணிப் போடுகிறார்களேயொழிய, 100-க்கு 6-வட்டி கிடைத்தால் போதுமென்று போடவில்லை. கவர்ன்மெண்டார் கொடுக்கும் வட்டி 100-க்கு 5½-க்கு மேலில்லையாகையால் அதிக வட்டியைவிரும்பி, தொழில்துறைகளில்பணம் போட விரும்புகிறவர்கள் நல்ல லாபம் கிடைக்கும் கம்பெனிகளில் பங்குகள் வாங்கவே முயலுவார்கள். ஏற்கனவேயுள்ள நல்ல வரும்படி யுள்ள கம்பெனிகளின் பங்குகளுக்கு விலை அதிகமாகி, அந்தக் கம்பெனிகளின் பங்குகளை வாங்குவதில் வீண் போட்டிதான் ஏற்படும்.

**கைத்தொழில்களுக்கு கெடுதிகள்.**

இந்தச் சட்டத்தால் நமது தேசத்துக் கைத்தொழில்களுக்கு ஆபத்து நேர்ந்துவிட்டதாகச்சொல்லலாம். ஆனால் புதிதாய் ஏற்படுத்த எண்ணும் தொழில்களுக்கு வேண்டிய யந்த்ரம் முதலிய தளவாடங்கள் கிடைப்ப தரிதாகையாலும் சட்டத்தை அமுல் நடத்துவதில் லக்ஷ ரூபாய் மூலதனத்துக்குக் குறைந்த கம்பெனிகளை நிர்ப்பந்திப்பதாக எண்ணமில்லாததாலும், சிறு கைத்தொழில்கள் ஸ்தாபிப்பதற்கு அதிக பாதகம் ஏற்படாதென்று நமக்குத் தோன்றுகிறது. என்றாலும் இப்போதுதான் நமது தேசத்தில் கைத்தொழில்விஷயத்தில் ஜனங்கள் ஊக்கங்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த யுத்த ஸந்தர்ப்பத்தில் அன்யதேச வ்யாபாரிகளின் போட்டி குறைவாக இருக்கிறதால் கைத்தொழிலபிவ்ருத்தி ஏற்படுவது ஸௌகர்யமாயிருக்கிறது. அநேக புதுத்தொழில்கள் ஸ்தாபிப்பதற்கு இந்த ஸமயத்தைவிட ச்லாக்யமான ஸமயம் வேறு கிடைப்பது துர்லபம். இப்படியிருக்க, கவர்ன்மெண்டார் மேற்சொன்னபடி தடை ஏற்படுத்தி யிருப்பது நமது தேசம் கைத்தொழில் விஷயத்தில் முன்னுக்கு வருவதற்கு பெரிய தடையென்றே சொல்லலாம்.

ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டுள்ள கம்பெனிகளும் வ்ருத்தியடைவதற்கும் இதுதான் தக்க ஸமயம். ஆனால் தொழிலை அதிகப்படுத்துவதென்றால், அதற்கு அதிக மூலதனம் வேண்டும். கவர்ன்மெண்டோ ஏற்கனவேயுள்ள கம்பெனிகள் தங்கள் மூலதனத்தை அதிகப்படுத்தக் கூடாதென்றும், தங்கள் பங்குகளில் செலுத்தப்படாத பாகத்தை வஸூலிக்கப்படாதென்றும், கடன் வாங்கக்கூடாதென்றும் தடுத்திருக்கிறார்கள். அப்படியானால் அந்தக் கம்பெனிகள் முன்னுக்கு வருவதெப்படி ?

இன்னொரு கெடுதலும் ஏற்படலாம். தட்டுத் தடுமாறிக்கொண்டிருக்கும் கம்பெனிகளுக்கு இந்த ஸமயத்தில் பணவுதவியிருந்தால், அவைகள் தலையெடுத்துவிடக் கூடும். ஆனால் அவைகளுக்குப் பணம் கிடைக்காதபடி செய்துவிட்டதால் அவைகளில் பல நாசமடைந்துவிடக்கூடும். இந்தியாவில் கைத்தொழில்களை அபிவ்ருத்தி செய்யப்போவதாக ஆர்ப்பாடம் செய்துவிட்டு, கவர்ன்மெண்டார் இப்படி சட்டம் செய்திருப்பது மிகவும் விஸனிக்கத்தக்கது. யுத்தம் முடியும் வரையில் நாம் தலையெடுப்பதற்கில்லை. யுத்தம் முடிந்த பிறகோ அன்யர்களுடைய போட்டி வந்துவிடும். அப்போது அவர்களுடைய போட்டிக்குமுன் நாம் வ்ருத்தியடைவதென்பது முடியாத கார்யம்.



**லைஸென்ஸ் ஏற்பாடும் அதன் பலாபலன்களும்.**

ஆனால் கவர்ன்மெண்டார் சில முக்யமான தொழில்களுக்கு மாத்ரம் லைஸென்ஸ் கொடுப்பார்களென்றும், அதற்காகக் கல்கத்தாவிலும் பம்பாயிலும் லைஸென்ஸ் போர்டுகள் ஸ்தாபிப்பார்களென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த லைஸென்ஸ் கமிட்டியால் இந்தியர்களுக்கு ஸொந்தமான கைத்தொழில்களுக்கு அதிக நன்மை ஏற்பட்டு விடுமென்பதற்கில்லை. தேச நன்மைக்கு முக்யமான தொழில்களுக்கு மாத்ரம் அதிக மூலதனம்போட உத்தரவு கொடுப்பார்கள். ஆனால் 'தேச நன்மைக்கு அவச்யமானது' என்பதை நிர்ணயிக்கும்போதுதான் கஷ்டமெல்லாம் உண்டாகிறது. நமக்கு எது தேச நன்மைக்கு அவச்யமானது என்று படுகிறதோ அதை கவர்ன்மெண்ட் அதிகாரிகள் ஒப்புக்கொள்ள வேண்டுமே. உதாரணமாக, அயல் நாடுகளிலிருந்து ஸாமான்கள் தருவிப்பது விஷயமாக ப்ரையாரிட்டி கமிட்டி என்று ஒரு கமிட்டி நியமித்திருக்கிறார்கள். சில கைத்தொழில் சாலையார் யந்த்ரங்கள் வரவழைக்க அனுமதி கேட்டபோது, யந்த்ரங்கள் தேச நன்மைக்கு அவச்யமானவை யல்லவென்று கமிட்டியார் சொல்லிவிட்டார்களாம். யந்த்ரங்கள் தொழில்களுக்கு ரொம்ப முக்யமாயிருந்தும் அதிகாரிகள் அவைகளைத் தருவிக்க அனுமதி கொடுக்காமலிருந்ததைப் பார்த்தால், இந்த மூலதன விஷயமான சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் லைஸென்ஸ் கமிட்டிகள் இந்தியாவின் கைத்தொழிலபிவ்ருத்திக்கு ஸாதகமாயிருக்குமென்று நம்ப இடமில்லாமலிருக்கிறது.

**சென்னை மாகாண வரவு செலவு திட்டம்.**

மார்ச்சுமாஸம் 13-ந் தேதியன்று கூடிய சென்னை சட்ட ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் கார்ட்யூ 1918-19-ம் வர்ஷத்திய வரவு செலவு திட்டத்தை வெளியிட்டார். அந்த வர்ஷத்தின் ஆரம்பத்தில் அதாவது ஏப்ரல் மாஸம் 1-ந்தேதியில் கவர்ன்மெண்டாருக்குக் கையிருப்பாக 193·57 லக்ஷம் ரூபாய் இருக்குமென்றும், அந்தவர்ஷம் 845·44 லக்ஷம் ரூபாய் வரும்படி கிடைக்குமென்றும், செலவு 842·10 லக்ஷம் ரூபாயாகுமென்றும், செலவுபோக மிச்சம் 3·34 லக்ஷம் ரூபாயிருக்கு மென்றும், ஆகவே வர்ஷக்கடைசியில் 196·91 லக்ஷம் ரூபாய் கையிருப்பாக இருக்குமென்றும் அவர் தெரிவித்தார். இந்தக் கணக்கு உத்தேச மதிப்பே ஒழிய வரும்படியும் செலவும் இவ்வளவுதான் என்று சொல்லுவதற்கில்லை. 1917-18-ம் வர்ஷத்திய வரவு செலவுகளை மதிப்புப்போட்டபோது, வரவை ரொம்பக்குறைவாக மதிப்புப்போட்டுவிட்டார்கள். செலவு இனத்திலும் எல்லாத் தொகையையும் செலவழிக்காமலிருந்து விட்டார்கள். வரவில் மதிப்புக்குமேல் 21·36 லக்ஷம் ரூபாய் கிடைத்தது. செலவினத்திலும் 6·85 லக்ஷம் ரூபாய் செலவழியாமல் நின்றுவிட்டது. 1917-18-ம் வர்ஷத்திய வர்ஷக்கடைசியில் கையிருப்பாக 140·85 லக்ஷம் ரூபாயிருக்குமென்று மதிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இப்போது தெரிந்தமட்டில் 152·38 லக்ஷம் ரூபாய் இருக்கும் என்று தெரிகிறது. ஆகவே வர்ஷக் கடைசியில் கையிருப்பும் 21·53 லக்ஷம் ரூபாய் குறைவாக போட்டுக்கொண்டார்கள். இதனால், கையிருப்பில் அதிகமாக இருப்பது, வரவினத்தில் அதிகமாக வந்தது, செலவினத்தில் செலவழியாமல் நின்றது. ஆகிய இந்த மூன்றையும் சேர்த்தால் அதிகப்படியாக நின்றுபோன தொகை 49·74 லக்ஷம் ரூபாயாகும். சரியாக வரவு செலவை மதிப்புப் போட்டிருந்தால் வரவு இன்னும் சற்றுத் தெளிவாகத் தெரியும். அதற்குத் தகுந்தாற்போல் எந்தெந்த சீர்திருத்தங்களுக்கு பணம் வேண்டியிருக்குமோ அவைகள் விஷயத்தில் அதிக தாராளங்காட்டலாம். இந்த 1917-18-ம் வர்ஷக் கடைசியில் அதாவது 1918-ம் வர்ஷம் மார்ச்சுமாஸம் 31-தேதியன்று 193·57 லக்ஷம் ரூபாய் மிச்சமாயிருக்கு மென்று மதிப்புப் போட்டிருக்கிறார்கள். இந்தக் கையிருப்புப் பணத்திலிருந்து ஏதாவது செலவு செய்யலா

மென்றாலோ, இந்தியா கவர்ன்மெண்டார் தங்களுக்கு முன்போட்டுப் பின்புரட்ட பணம் வேண்டியிருப்பதால் ரொம்ப அவஸரமான கார்யங்களுக்கின்றி இதர செலவுகளுக்கு கையிருப்பு மிச்சப் பணத்திலிருந்து எடுக்கக்கூடாதென்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறார்கள். நமது ராஜதானியில் எத்தனையோ வகைகளில் அபிவ்ருத்தி ஏற்பட வேண்டியிருந்தும் அவைகளைப்பற்றி ஆலோசிக்காமலிருந்தோ, அல்லது அவைகள் ரொம்ப முக்யமானவையென்று மாகாண கவர்ன்மெண்ட் எண்ணாததாலோ யாதொரு பெரிய செலவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

**இதர மாகாணங்களின் நிலைமை.**

ஆனால் வங்காளம், பேஹார், ஒரிஸா, பர்மா, மத்ய மாகாணங்கள் ஆகிய இவைகளில் மாத்ரம் 1918-19-ம் வர்ஷத்தில் வரவுக்குமேல் செலவு செய்யப்போகிறார்கள். அதிகமாகவேண்டியிருக்கும் பணத்துக்கு கையிருப்புப் பணத்திலிருந்து எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வங்காள கவர்ன்மெண்டார் ஸுகாதாரம் முதலிய சில இனங்களுக்கு முந்தின வர்ஷங்களின் செலவைக்கொண்டு தற்போது செலவு ஏற்படுத்த முடியவில்லை யென்றும், ஸுகாதாரச் செலவு அதிகமாகத்தானாகுமென்றும், இது போல வேறு சில இனங்களிலும் அதிக செலவாகுமென்றும் அவைகள் அவஸரமும் அவச்யமுமான செலவினங்களென்றும் சொல்லி, இந்தியா கவர்ன்மெண்டின் அனுமதியின்மேல் கையிருப்புப் பணத்திலிருந்து 20 லக்ஷம் ரூபாய் எடுத்துக் செலவழிக்கப் போகிறார்கள். இது போலவே பேஹார் கவர்ன்மெண்டாரும் கையிருப்பிலிருந்து 20 லக்ஷம் ரூபாய் அதிகப்படியாக செலவழிக்கப் போகிறார்கள். பர்மா கவர்ன்மெண்டாரும் மத்யமாகாணங்களின் கவர்ன்மெண்டாரும் முறையே 2 லக்ஷம் ரூபாயும் 4·8 லக்ஷம் ரூபாயும் வரவுக்குமேல் செலவழிக்கப் போகிறார்கள். மேற்சொன்ன மாகாண கவர்ன்மெண்டுகளெல்லாம் தக்ககாரணங்கள் சொல்லி அதிகச் செலவுசெய்ய உத்தேசித்திருக்க நமது மாகாண கவர்ன்மெண்டார் மாத்ரம் செல்வைப்பற்றி முன்யோசனை செய்யாமல் முக்யமான அம்சங்களுக்குப் பணமில்லை யென குறைவாகச் செலவு செய்வது விஸனிக்கத்தக்கது.

**கல்விக்காகும் செலவு.**

அடுத்தவர்ஷத்திய செலவினங்களில் இரண்டொன்றை இங்கு குறிப்பிடுகிறோம். கல்வி விஷயமாக கவர்ன்மெண்டார் 1918-19-ம் வர்ஷத்தில் 112·92 லக்ஷம் ரூபாய் செலவிடுவார்கள். அதாவது 1917-18-வர்ஷத்திய செலவிற்குமேல் 20·66 லக்ஷம் ரூபாய் செலவழிக்கப்போகிறார்கள். இதில் 5½ லக்ஷம் ரூபாய் இந்தியா கவர்ன்மெண்டார் ப்ரைமெரிக் கல்வியின் அபிவ்ருத்திக்காகக் கொடுப்பதாகும். அந்தத் தொகையை எவ்விதம் செலவழிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் இன்னும் தெரிவிக்கவில்லை. பாக்கித் தொகையில் 5·20 லக்ஷம்ரூபாய் எலிமெண்டரிக் கல்வியின் அபிவ்ருத்திக்காக செலவிடுவார்கள். 2·09 லக்ஷம் ரூபாய் புது போர்டு ஹைஸ்கூல்களும் புது மிடில் ஸ்கூல்களும் ஸ்தாபிக்க செலவிடப்படும். மகம்மதியகல்விக்காக 30 ஆயிரம் ரூ. பெண்கல்விக்காக 53 ஆயிரம் ரூபாய். எலிமெண்டரிப் பள்ளிக்கூடங்கள் ஒழிந்த இதர ஸ்கூல்களுக்கு க்ராண்டுகள் 73 ஆயிரம் ரூபாய், இதர செலவுகளுக்கு 94 ஆயிரம் ரூபாய்.

**இதர முக்ய செலவுகள்.**

அடுத்த வர்ஷத்தில் இதர இனங்களில் முக்யமான செலவுகள் என்னவென்றால் ஹெட் க்வார்ட்டர் ஆஸ்பத்ரிகளை கவர்ன்மெண்டார் தமது ஆதீனத்தில் எடுத்துக்கொள்ள 2½ லக்ஷம் ரூபாய், பல்லாரியில் ஒரு மெடிகல் ஸ்கூல் ஸ்தாபித்தல், விவஸாய இலாகாவில் 2 அஸிஸ்டெண்ட் டிரெக்டர்கள் நியமித்தல், வட ஆற்காட்டில் ஒரு வ்யவஸாயப் பண்ணை ஏற்படுத்தல், புதிதாக ஒரு கால் நடைப்பண்ணை ஏற்படுத்துதல், கோயம்புத்தூரில் ஒரு கம்போடியா பருத்திப் பண்ணை ஏற்படுத்துதல், ஒருபெரிய ஸோப் பாக்டரி ஏற்படுத்துதல், எண்ணெய், ஸோப் இவைகளைப்பற்றிப் பரிசீலனைசெய்ய ஒரு நிபுணரும் ஒரு நெசவு நிபுணரும் நியமித்தல், காக்கிநாடாவில் ஒரு மெகானிகல் இஞ்ஜினியரிங் ஸ்கூல் ஏற்படுத்துதல் ஆகிய இவைகளாகும்.



# ADULTERATION OF MERCHANDISE.

By S. S. KRISHNASWAMI, B. A.,
*Headmaster, Municipal High School, Karur.*

## வ்யாபாரப் பொருள்களில் கலப்பு மோசம்.

ஸமீபத்தில் சென்னையில் ஏற்பட்ட இந்திய கைத்தொழில் பொருள்காட்சி தொடங்கிய பொழுது நமது மாட்சிமைதங்கிய வைஸ்ராய் அவர்கள் அக்ராஸனம் வஹித்து, இந்திய கைத்தொழில்கள் அபிவ்ருத்தி விஷயத்தில் அதிக அனுதாபத்தைக் காட்டி அவை வ்ருத்தியாவதற்குவேண்டிய வழிகளைப்பற்றித் தெளிவாய்ச் சொன்னார். அந்த ஸந்தர்ப்பத்தில் அவர் நமது இந்திய விளைபொருள்களுக்கு வெளிதேசங்களில் சரியான விலை கிடைக்காததற்கு முக்யமான காரணத்தைத் தெரிவித்தார். அதென்னவென்றால் ஸ்வயமான சரக்குகளை ஏற்றுமதி செய்யாமல் நமது வ்யாபாரிகள் மோசத்திற்காக அவற்றை கலப்புசெய்து அனுப்புகிறார்கள். உதாரணமாக நமது அவுரிச்சாயம் அல்லது நீலத்திற்கு ஐரோப்பா முதலிய வெளி ப்ரதேசங்களில் சரியானபடி மதிப்பு இல்லாமல் வ்யாபாரம் தடைபடுகிறது. அதற்குக்காரணம் மேற்கண்டபடி கலப்பு செய்கிற மோசந்தான். இந்தப் பொருள் மட்டிலுமல்ல, மற்ற விளைப்பொருள்களின் ஏற்றுமதி விஷயத்திலும் நாம் மோசம் செய்வதை நிறுத்தி, ஸ்வயமான பொருள்களை வெளியிலனுப்பி, இதர நாடுகளில் நல்ல பெயர் ஸம்பாதித்து வ்யாபாரத்தை வ்ருத்திசெய்ய வேண்டுமென்று வைஸ்ராய் சொன்னார்.

இந்தக் கெட்ட கார்யத்தை நிறுத்தி நமது ஏற்றுமதி வ்யாபாரத்தை வ்ருத்திசெய்வது நமது கடமை. இதே மாதிரி நமது இறக்குமதி வ்யாபாரத்திலும் அயல் தேசத்து வ்யாபாரிகளினாலோ அல்லது கப்பலோட்டிகளாலோ நாம் மோசம் செய்யப்பட்டு நமது தேசத்தவர் நஷ்டமடையாதபடி ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவேண்டும்.

ஏனென்றால் மோசம் என்பது பூலோகத்தில் எல்லா இடங்களிலும் எல்லா ஜாதியாருக்குள்ளும் உண்டு. சில தேசத்தார் தாங்கள் மற்றவர்களைவிட நாகரீகத்தில் மேம்பட்டவர்களென்று பெருமைபேச ந்யாயமிருந்தபோதிலும், அவர்களுக்குள்ளும் பிறரை ஏமாற்றுவதையே ஜீவனமாயும் தனம் குவிக்கும் வழியாயும்கொண்ட கீழ்மக்கள் பலர் இருக்கிறார்கள். திருடர்கள், முடிச்சவிழ்க்கிகள் முதலியவர்களுக்கு இவர்களை ஒப்பிடலாமோ என்றால், இந்த துஷ்டர்கள் அவர்களைவிட அதிக தந்த்ரசாலிகள் என்றும், வஞ்சிக்கும் வழிகள் பலவற்றை அப்யாஸம்செய்து தேர்ந்தவர்கள் என்றும் சொல்லவேண்டும். உதாரணமாக அரரூட் மாவோடு உருளைக்கிழங்கு மாவைக் கலந்தும், சீமை எண்ணெயில் தண்ணீரைக் கலந்தும், ஸிமெண்டு பீப்பாய்களில் சுண்ணாம்பு நீறையோ அல்லது மணலையோ கலந்தும் வெளியிலனுப்பும் மோசக்காரர்கள் இவர்கள்தான். கொழுப்பினாலான சோப்புகளை எண்ணெயினாலானவை என்று சொல்லி சந்தன ஸோப் என்றும் ரோஸ் ஸோப் என்றும் பெயரிட்டு அநேகர் விற்கிறார்கள். இதே மாதிரி பெயிண்டுகளென்ன, [illegible]ளென்ன, சீமைப் பால் புட்டி[illegible] [illegible]பில் முதலிய பழ ஜாம்களென்ன, இவைகளில் மோசங்கள் உண்டு.

எப்படி வெளிநாட்டிலிருந்து நாம் வாங்குகிற சா[illegible] திருட்டுத்தனம் நடக்கிறதோ அ[illegible] உள்நாட்டு ஸ்வதேச பதார்த்தங்

களிலும் வஞ்சனைகள் பல நடக்கின்றன என்பது விஸனிக்கத்தக்க விஷயம். வரவர காலங் கெட்டுப்போய் நம் பட்டணங்களிலுங்கூட குடிப்பதற்கு பால் வேண்டுமென்றால் ஸ்வயமான பால் அகப்படுவது அஸாத்யமாயிருக்கிறது. நெய் என்று கொழுப்பை அன்னத்தோடு கலந்து சாப்பிடவேண்டியதாயிற்று. செக்குக்கு பக்கத்திலேயே இருந்துகொண்டு எள்ளை ஆட்டிக்கொண்டு வந்தாலொழிய நல்லெண்ணெய் என்பது பேரேயொழிய அநேகம் கடைகளில் அகப்படாது. பருப்பு வாங்குகிறவர்கள் அதோடு தாராளமாய்க் கலந்த சரிநிறமான கற்களையும், கடுகு வாங்குவோர் அத்துடன் கருமண்ணையும் காசுகொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. கொத்தமல்லி விதை வ்யவஸாயம் செய்பவன் மூட்டைகளை கொள்ளிடத்திலேயோ, அல்லது காவேரியிலேயோ, முழுகவைத்து பிறகு மார்க்கட்டுக்காரனுக்கு அதிக நிறைகாட்டி விற்பான். புது அரிசி கலவாத பழை அரிசி கஷ்டப்பட்டு வாங்கவேண்டும். இப்படிப் பலவிதமாய் நம்தேசத்திலும் மோசங்கள் ஜாஸ்தியாகி ஸம்ஸாரிகள் குடும்பம் நடத்துவது வரவர கஷ்டமாய்க் கொண்டு வருகிறது.

இவற்றையெல்லாம் தடுப்பதற்கு பழைய காலத்தில் இந்து ராஜாக்கள் நாளிலும், மொகலாய சக்ரவர்த்திகள் ஆளும்போதும் ஏற்பாடுகளும் தனி உத்யோகஸ்தர்களும் இருந்ததாகத் தெரியவருகிறது. மோசக்காரர்களுக்கு சரியான தண்டனையும் இருந்தது. ஆனால் இந்தக் காலத்தில் மேற்கண்ட குற்றங்கள் இந்தியன் பினல் கோடு ஸெக்ஷன்களுக்குள் அகப்படா. ஆகையால் மோசக்காரர்கள் பயமில்லாமல் ஜனங்களை வஞ்சித்து காலக்ஷேபம் செய்கிறார்கள்.

இங்கிலண்ட் தேசத்தில் கவர்ன்மெண்டார் இவ்விதமான வஞ்சனைகளை நிறுத்துவதற்கென்றே ஒரு டிபார்ட்மெண்டு உத்யோகஸ்தர்களை நியமித்திருக்கிறார்கள். அவர்களில் அநேகர் "கெமிஸ்ட்ரி" என்று சொல்லப்பட்ட ரஸாயன சாஸ்த்ரம் கற்றவர்கள். இவர்கள் தங்கள் சாஸ்த்ர முறைகளைக்கொண்டும் கருவிகளைக் கொண்டும் பலவிதமான மோசங்களை வெகு சுளுவாய்க் கண்டுபிடித்து மோசக்காரனையே மோசம் ஒப்புக்கொள்ளும்படி செய்து தக்க தண்டனைக் குள்ளாக்குகிறார்கள்.

ஒரு உதாரணம்: பாலில் ஆடையெடுத்துவிட்டு ஜலங்கலந்து விற்பது மிகவும் ஸாதாரணம். அநேக வஞ்சகர்கள் ஜலங்கலந்த பால் தெளிவாய்க் காணப்படுவதை மறைக்கும் பொருட்டு நிறங்கொடுத்துத் தடிப்பாகச்செய்யும் ஒருவிதமாவைக் கலந்துவிடுவார்கள். இந்த மோசத்தைக் கண்ணினால் கண்டு பிடிப்பதாவது அல்லது ரூபிப்பதாவது அஸாத்யம். ஆனால் ரஸாயன சாஸ்த்ரிகளுக்கு இவ்வளவு ஆடை அணுக்களிருக்க வேண்டுமென்று தெரியும். அவர்கள் பரிசோதிக்கையில் ஆடை குறைந்தால் பால் விற்பவரை ப்ராஸிகியூஷன் செய்கிறார்கள். ஸ்வயமான பாலில் 100-க்கு 3-பங்கு முதல் 4-பங்குவரையில் ஆடையிருக்க வேண்டும். அதேமாதிரி மாவு முதலிய பதார்த்தங்கள் கலந்தால், சாஸ்த்ரிகள் அந்த கலப்பை மைக்ராஸ்கோப் என்ற பூதக்கண்ணாடியால் ஒரு நொடியில் கண்டு பிடிக்கிறார்கள். இப்படியே வெண்ணெயில் ஜலத்தை அல்லது கொழுப்பை கலக்கிறவர்களையும், வெண்ணெய் என்ற பெயர் மாத்ரம்கொண்ட இமிடேஷன் அதாவது போலி வெண்ணெயையும் கண்டு பிடிக்கிறார்கள். இந்த இமிடேஷன் வெண்ணெய்க்கு "மார்கரின்" என்று பெயர். இது ம்ருகங்களின் கொழுப்புகளை ஒருவிதமாய் கலவை பண்ணி ஆகிறது. தற்காலத்தில் யுத்தத்தினால் உண்டான வறுமையால் ஜெர்மானிய துருப்புகளுக்கு இந்த வெண்ணெய்தான் கிடைத்துவருகிறது.



அரரூட் மாவு விற்பவன் அதோடு சோள மாவோ, அல்லது அரிசிமாவோ, உருளைக் கிழங்கு மாவோ கலந்துவிற்பான். ஏனெனில் பின் சொல்லப்பட்டவை விலை குறைவு. இந்தக்கலப்பில் ஒரு சிமிட்டா எடுத்து மைக்ராஸ்கோப்கொண்டு பரிசோதனை செய்தால் அரிசிமாவு அணுவின் பிம்பம் ஒருவிதமாயும், அரரூட்மாவு அணுவின் பிம்பம் ஒருவிதமாயும் காணும். சாஸ்த்ரிகளுடைய பார்த்துப் பழகிய கண்களுக்கு இந்த மாவு கலந்திருக்கிறதென்று உடனே தெரியும்.

இப்படி உணவுப்பொருள்கள், பானங்கள், ஆகிய இவற்றை பரிசோதிப்பதுடன் கவர்ன்மெண்டுக்கு ஸப்ளையாகும் எண்ணெய்கள், வர்ணங்கள், சிமெண்டு, ரப்பர், எழுதும் மைகள், ஸோப், இரும்பு, உருக்கு தளவாடங்கள் இவற்றைக்கூட பரிசோதிப்பது அந்த ரஸாயன டிபார்ட்மெண்டின் கடமை. இந்தப் பதார்த்தங்களின் மாதிரிகளை அப்போதைக்கப்போது ரஸாயன பரிசோதனைச் சாலைகளுக்கு அனுப்பி பரீக்ஷைசெய்து பார்க்கிறார்கள். இந்தியா முதலிய ப்ரதேசங்களிலிருந்து இங்கிலண்டுக்குப்போகும் தேயிலைப்பெட்டிகள், காப்பி மூட்டைகள் முதலியவை துறைமுகச் சுங்க வஸூல் ஆபீஸிலேயே பரிசோதிக்கப்பட்டு அதிருப்திகரமானவை சீமைக்குள் போகாமல் திருப்பி அனுப்பப்படுகின்றன. உதாரணமாக "1910-ம் வருஷத்தில் லண்டன் கஸ்டம் ஹவுஸில் இறக்குமதியான தேயிலையில் 10,000 மாதிரிகளை பரிசோதனை செய்ததில் 700 மாதிரிகள் வரைக்கும் ஸ்வயமாயில்லாமல் கலப்பு சேர்ந்திருந்ததால், அந்த மாதிரித்தேயிலை எவற்றினின்று எடுக்கப்பட்டதோ அந்தப் பெட்டிகளிலுள்ள 120,000 ராத்தல் தேயிலையை சுங்க ஆபீஸர்கள் தள்ளிவிட்டார்கள்.

ஆகையால் எப்படி இங்கிலண்டில் வ்யாபாரப் பொருள்களின் பரிசோதனையின் பொருட்டு ரஸாயன சாஸ்த்ர தேர்ச்சி பெற்றவர்களை தலைமையாகக்கொண்ட ஒரு டிபார்டுமெண்டு கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறதோ அதேமாதிரி நமது தேசத்திலும் ஒரு டிபார்டுமெண்டு நமது வ்யாபாரத்தின் அபிவ்ருத்திக்காகவும் குடிகளின் க்ஷேமஸௌகர்யங்களுக்காகவும் ஸர்க்காரால் ஏற்படவேண்டியது அத்யாவச்யம். நமது துறைமுகங்களில் வர்ஷந்தோறும் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வஸ்துக்களில் அடிக்கடி மாதிரிகளை எடுத்து சுங்க ஆபீஸிலேயோ அல்லது ஸெண்டரல் ரஸாயன ஆபீஸிலோ பரிசோதித்து மோசமானவற்றை விலக்கி நமது தேசத்தார் நஷ்டமடையாமல் பார்த்துக்கொள்வது ஸர்க்கார் கடமை. நமது தேசத்தினின்று ஏற்றுமதியாகும் இயற்கைப் பொருள்கள், கைத்தொழில் சரக்குகள், இவற்றிலும் மோசமில்லாமல் பார்த்து நமது தேசத்து வியாபாரப் பொருள்களுக்கு அபகீர்த்தி வராமல் பாதுகாக்கவேண்டியதும் ஸர்க்காரின் கடமையே.

இப்படியே நமது உள்நாட்டுப் பொருள்களிலும் நம்முள் ஒருவரை ஒருவர் மோசம் செய்து ஜனஸமூகத்திற்கே துன்பத்தை உண்டாக்குவதை உடனே நிறுத்த முனிஸிபாலிட்டிகள், ரயில்வே ஸ்டேஷன்கள், தேர்க்கடை திருநாட் கடைகள், க்ராம யூனியன்கள் இவற்றிலெல்லாம் விற்கப்படும் தின்பண்டங்கள், ஆடையாபரணங்கள், எண்ணெய் வகையறுக்கள், மாம்ஸவர்க்கங்கள், இவற்றையெல்லாம் சாஸ்த்ர ரீதியாயும், அனுபோக முறைகளாலும் செவ்வையாய்ப் பரிசோதித்து மோசங்களை வெளிப்படுத்தி வஞ்சகர்களை தண்டனைக்குள்ளாக்க உத்யோகஸ்தர்களையும், ரஸாயன சாஸ்த்ரிகளையும், நமது கவர்ன்மெண்டார் நியமிப்பது அவச்யம். இதற்குவேண்டிய சட்டங்களை முதலில் ஏற்படுத்துவதற்காக நமது சட்டசபை மெம்பர்கள் கூடி சீக்கிரம் முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம்.

எஸ். எஸ். க்ருஷ்ணஸ்வாமி, பி. ஏ.

# INSECTS THAT DECEIVE.

## ஏமாற்றும் ப்ராணிகள்.

இந்த உலகத்தில் கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட கோடானுகோடி ப்ராணிகளில் அனேகம் சிறியவையாயும் தேசத்துக்கும் காலத்துக்கும் தக்கபடி நிறத்திலும் உருவத்திலும் மாறுபட்டும் காணப்படுகின்றன. இந்த சிறிய ப்ராணிகளைக் காணும்போது 'இவைகள் என்னத்துக்கு ச்ருஷ்டிக்கப்பட்டன, எப்படிப் பிழைக்கின்றன, எங்கே இருக்கின்றன, எப்படி இரை தின்னுகின்றன, என்று யாரும் ஆச்சர்யத்துடன் ஆலோசிக்காமலிருக்க முடியாது. ப்ரக்ருதி சாஸ்த்ரத்தில் ஊக்கமுள்ளவர்களுக்கு இந்த ப்ராணிகள் அளவில்லாத ஸந்தோஷத்தை யுண்டாக்கு மென்பதில் ஸந்தேகமில்லை. இவைகளின் ஸ்வபாவத்தைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால்தான் ச்ருஷ்டிகர்த்தாவின் உன்னத விவேகமும், இவைகள் ச்ருஷ்டிக்கப்படவேண்டிய அவச்யமும் நன்கு விளங்கும். இந்த ப்ராணிகளில் சில எதிராளிகளுடன் சண்டையிடும் சக்தியுள்ளவைகளல்ல. இவைகள் இரைக்காகத் திரியும்போது எதிராளிகளிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே இவைகளின் நிறம் வெவ்வேறு விதமாகவும் இயற்கையாய் கிடக்கும் வேறு பொருள்களைப்போலும் இருக்கின்றன.

ஒரு வண்ணாத்திப் பூச்சியோ பட்டுப் பூச்சியோ பறக்கும்போது, அதன் சிறகுகள் பல வர்ணமுள்ளவைகளாய் பார்ப்பதற்கு அழகாயிருக்கின்றன. சிறுவர்கள் இதைப் பார்த்துப் பிடிப்பதற்காக யத்தனப்படுவதுண்டு. ஆனால் ஏமாந்து போகிறார்கள். எப்படி யென்றால், பறந்துகொண்டிருக்கும்போது பலவர்ணமுள்ளதாயிருந்தாலும் சிறகுகளின் உட்புறமானது புள்ளிகளும் கோடுகளும் செதில்களுமுள்ள மரப்பட்டைபோல் இருப்பதனால், அது எதாவது மரத்தின் மேலோ செடியின்மேலோ தொத்திக்கொள்ளும்போது, சிறகுகளைச்சேர்த்துக் கொள்ளுகிறதனால் பல வர்ணமுள்ள சிறகின் பக்கம் மறைந்து அது இருக்கிற இடம் தெரியாமல் போகிறது. எவ்வளவு கஷ்டப்பட்டாலும் சிறுவர்கள் அதைப் பிடிப்பது ஸுலபமல்ல வென்பதை நாம் அறிந்திருக்கிறோமல்லவா?



கும்பிடும் சிள்வண்டு.

இங்க்லீஷ் பெயர். ப்ரேயிங் மாண்டிஸ்; தென்னமெரிக்காவிலுள்ளது.

'ப்ரேயிங் க்ரிகெட்' அதாவது 'கும்பிடும் சிள்வண்டு' என்று சொல்லப்படும் ப்ராணி விசித்ரமானது. இது ஐரோப்பா கண்டத்தில் இட்டலி, ப்ரான்ஸ், ஆஸ்ட்ரியா, ஜெர்மெனி முதலான தேசங்களில் அதிகமாய்க் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதன் தலை குதிரைத் தலையைப் போலவும், பெரிய கண்களோடும் இருப்பதால், இதைப் பார்த்தவர்கள்



ஆச்சர்யப்படாமலிருக்கமாட்டார்கள். நாம் தலையை அசைப்பதைப் பார்க்கிலும் வெகு ஸுலபமாய் இது தன் தலையை எந்தப் பக்கமாகவும் திருப்பக்கூடும். இதன் கைகள் (அதாவது முன்னங்கால்கள்) கும்பிடுவதுபோலத் தூக்கியிருப்பதனாலும், த்யானம் பண்ணுவதுபோல அசையாமல் கம்பீரமாய் இது நிற்பதனாலுமே இதற்கு 'ப்ரேயிங் க்ரிகெட், (praying cricket) கும்பிடும் சிள்வண்டு என்னும் பெயர் வழங்குகிறது. ஐரோப்பியர்கள் இதை "வைதீக வண்டு" என்றும் சொல்வதுண்டு. பூர்வீக ஐரோப்பியர்கள் இந்த ப்ராணியின் நடமாட்டத்தைச் சகுனக் குறிகளாக பாவித்தார்களாம். வழிப்போக்கர்கள் இதன் கை எந்தப் பக்கமாய்த் திரும்பியிருக்கிறதோ அந்தப் பக்கமே தாங்கள்போக வேண்டிய வழியென்று சகுனங் காட்டுவதாக எண்ணி அந்த வழியாகவே போவார்களாம். வேறு சிலர் கும்பிடும் சிள்வண்டு இருக்கும் ப்ரதேசத்தில் பஞ்சம் உண்டாகும் என்று சொல்வதுண்டு. ஆனால், கூட்டங்கூட்டமாய் பயிர்களை அழிக்கும் வெட்டுக்கிளி யென்று ஸந்தேகப்பட்டு அப்படிச் சொன்னார்களே யல்லாமல் வாஸ்தவத்தில் இந்த ப்ராணியினால் பஞ்சம் உண்டாகிறதில்லை. வெட்டுக்கிளிக்கும் கும்பிடும் சிள் வண்டுக்கும் வித்யாஸமுண்டு.

கும்பிடும் சிள்வண்டு பார்வைக்கு சாந்தமாயும் பெயரினால் மேம்பட்டதாயும் இருந்தபோதிலும் வாஸ்தவத்தில் அது போலி ஸன்யாஸிகளைப்போல் காரியத்தில் கண்ணாய் வஞ்சகமுள்ளதாகும். வெட்டுக் கிளியைப்போல் இது பயிர்களைத் தின்பதில்லை. ஜீவஜந்துக்களைப் பிடித்துத் தின்கிறது. இதன் கைகள் கும்பிடுவதுபோல உயரத் தூக்கி யிருந்தாலும் அதன் கிட்டவரும் எந்தப் பூச்சியையும் பிடிப்பதற்குத் தக்க கருவியாயிருக்கின்றன. இக் கைகள் கத்தியின் அலகுபோல் இருப்பதுடன், அவைகளில் கூர்மையான முட்களும் இருக்கின்றன. ஆகவே இது மனிதன்மேல் படும்பக்ஷத்தில் மிகுந்த நோவை உண்டாக்கும். பச்சைப் புல்லின் இடையிலும், மரம் செடிகளின்மேலும், புதர்களிலுமே இது ஸாதாரணமாய் வசிப்பதால், இதற்கும் புல் தாளுக்கும் கொஞ்சமும் பேதம் தெரியாது. இதைப் புல்லாம் பூச்சி யென்றும் சொல்வதுண்டு. உட்கார்ந்திருக்கும்போது அதைக் கண்டு பிடிப்பது கஷ்டம். துள்ளிக் குதிக்கும்போதுதான் கண்ணுக்குத்தெரியும். பிற்பாடு புல்லிலோ செடியிலோ உட்கார்ந்து விட்டால், அதைத் தேடிக் காணுவது ஸாத்யமல்ல. ஈயாவது வண்டாவது வேறெந்தப் பூச்சியாவது பக்கத்தில் இருக்கவாகிலும் வரவாகிலும் கண்டால், இந்த வண்டு பூனை எலி பிடிக்கக் காத்திருப்பதுபோல், அசையாமல் உட்கார்ந்திருந்து மெதுவாய் நகர்ந்து அந்த ஜந்துவின்மேல் பாய்ந்து ஒரு கையின் முள்ளுகளால் அதை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, மற்றொரு கையால் வெகு ஆத்ரத்துடன் தன் வாய்க்குள் போட்டுக்கொள்ளும். இது ஏன் கையை உயர நீட்டிக்கொண்டிருக்கிறதென்பதும் உடலை அசைக்காமல் இருக்கிறதென்பதும் இப்போது நன்றாய்த் தெரிகிறதல்லவா? கும்பிடுவதுபோலிருந்த கைகள் இரை பிடிப்பதற்காகவே முடிவில் உபயோகப்பட்டன. என்ன மாறுதல் பாருங்கள்! அசையாமல் இருந்த தலை இரை யகப்படக்கூடிய எந்தப் பக்கம் வேணுமானாலும் திரும்பும்படி சுழுந்தும் நீளுவதனால் இதன் வெளித் தோற்றமும் உள் வஞ்சனையும் வெளிப்படையாய்த் தெரிந்துவிட்டது. சிள் வண்டில் பெண் இனங்கள் உடல் பருத்திருப்பதனால் பறக்கக்கூடாமல் நிலத்திலேயே கிடக்கின்றன.

இந்த ப்ராணி மற்ற ஜீவஜந்துக்களைப்

கொல்லுவதில் அதிக விருப்பமுள்ளது. வேண்டியமட்டில் தனக்கு இரை இருந்தாலுங்கூட, அகப்பட்டால் இதர ப்ராணிகளை, கொல்லப் பின்வாங்குகிறதில்லை. பெண் வண்டு ஆண் வண்டுகளையும் கொன்று தின்னும். உஷ்ண ப்ரதேசங்களில் உள்ள கும்பிடும் சிள் வண்டுகள் அவைகளைக் காட்டிலும் பலமும் பெரிய உடலும் உள்ள பட்சிகளையும் பூச்சிகளையும் கூடத் தாக்குகின்றன. ஆனால் பக்ஷிகளைக் கொல்ல முடியாதென்றாலும் பெரிய பூச்சிகளைக் கொன்றுவிடுகின்றன. எப்படியென்றால் அவைகளின் எதிரில் தங்களுடைய பெரிய கண்களால் உருட்டி உருட்டிப் பார்ப்பதனாலும், ஓரேபாய்ச்சலாய்ப் பாய்ந்து அவன்றின்மேல் விழுந்துவிடுவதுபோல பயமுறுத்துவதனாலும், தன்சிறகுகளை விரித்து முதுகின் பக்கமாய் உராய்ந்து 'ஜிர்' என்றுசத்தம் செய்வதனாலும், இதைக்கண்ட ஜந்துதான் தப்பித்துக்கொண்டு போகவகைதெரியாமல் பயத்தினால் ஸ்தம்பித்துப்போகிறது. அந்தசமயத்தில் கும்பிடும் சிள்வண்டு அதன்மேல் பாய்ந்து அதன் கழுத்தைப் பிடித்து நெறுக்கி அதன் பலத்தைக் குறைத்துப்பிற்பாடு அதை



குச்சிபோலிருக்கும் பூச்சி.
இங்க்லீஷ் பெயர்; வாக்கிங் ஸ்டிக்.

வயிறாரத் தின்கிறது. பெண் வண்டு பறக்காவிட்டாலும் உட்கார்ந்த இடத்திலேயே சிறகுகளை விரித்துக்கொண்டு எதிரிகளைப் பயமுறுத்தித் தனக்கு இரைதேடிக்கொள்ளும்.

இன்னும் சிலதேசங்களில் ப்ராணிகள் மரங்களிலிருந்து உதிர்ந்து விழுந்த இலை, குச்சி, சருகு, மிலாறு முதலியவைகளைப் போல் பழுப்பு, மங்கல் அல்லது கருப்பு நிறமாயிருப்பதுமல்லாமல், அந்தவஸ்துக்களுக்கும் ப்ராணிகளுக்கும் சிறிதும் வித்யாஸம் கண்டுபிடிக்கக் கூடாதபடியும் இருக்கின்றன. பறக்கும்போது மாத்ரம் அந்த ப்ராணிகளின் இறகிலுள்ள ப்ரகாசமான வர்ணம் நமது கண்ணுக்குப் புலப்படும். எங்கேயாவது அது உட்கார்ந்து கொண்டால் அப்போது சிறகுகள் நெருங்கிவிடுவதனால், நிறம் வெகுவாய் மாறிவிடும்.

இலைக்கிளி யென்று சொல்லப்படும் ஒரு வகை ப்ராணி உண்டு. அதன் சிறகுகளும் உடலும் இலையைப்போலும் இலையிலுள்ள தண்டு, காம்பு, நரம்பு, கோடு முதலியவைகளைப்போலுமிருக்கும். அது முற்றிலும் இலையைப்போல் காணப்படும். இது இடுகிற முட்டையுங்கூட செடி விதைபோலவே இருக்கும். இலைக்கிளி, எலுமிச்சை இலையைப் போல, பார்ப்பதற்கு அதிசயமாயிருப்பதனால், சிலர் இதை வெகு ஜாக்ரதையாய்ப் பிடித்து விற்பனை செய்கிறதாகவும் சொல்லப்படுகிறது. கிறிஸ்து பிறக்க 79 வருஷங்களுக்கு முன் இருந்த ப்ளினியஸ் என்னும் புராணிகர் மரத்திலிருந்து உதிர்ந்த இலைகள் மறுபடியும் வேரூன்றி செடியாகின்றனவென்று எழுதியிருக்கிறார். 1658-ம் ௵த்தில் இந்தியத் தீவுகளின் சரித்ரமெழுதிய பிஸோ என்பவர் இவை முதலில் ப்ராணிகளாக இருந்து தங்கள் கால்களை நிலத்தில் ஊன்றி நிற்பதனால் ஈரத்தின் உதவியினால் வேர்விட்டு நல்ல செடிகளாக மாறிவிடுகின்றனவென்று எழுதியிருக்



கிறார். மரங்களிலிருந்து இலைகள் உதிர்ந்து விழும்போது அவை இலைக் கிளியாய் மாறிவிடுகின்றனவென்று அமெரிக்காவில் உள்ள பூர்வீக ஜனங்கள் இப்போதும் சொல்லிக்கொள்ளுகிறார்களாம்.



இலைக் கிளி.
இங்க்லீஷ் பெயர். வாக்கிங் லீப் : பெண்பூச்சி.

இரை வேண்டும்போது ஓடியாடித் திரிவது தவிர மற்ற ஸமயங்களில் உலர்ந்த சருகுபோலவும், மிலாறுபோலவும் மரப்பட்டை போலவும், அனேக ப்ராணிகள் நமது கண்ணுக்ககப்படாமல் வாஸஞ்செய்கின்றன. இவைகள் மரஞ்செடிகளின் இலைகளைத் தின்று வாழுகின்றன.

நமது தேசத்தில் மேற்சொன்ன ப்ராணிகளுக்கு ஒப்பாய்ச் சொல்லக் கூடியது நாம் ப்ரதிதினமும் வேலிகளில் காணும் பச்சை ஓந்தியே. இதன் ஸ்வபாவத்தை யாவரும் அறிந்திருப்பார்கள். தனக்கு ஏதாவது ஆபத்து நேரிடும்போலிருந்தால் தன் உடலின் நிறத்தை மஞ்சள், கறுப்பு, நீலம், பச்சை முதலிய பல நிறமாக மாற்றிக்கொள்ளும்.

இவையெல்லாம் இவைகளைப் படைத்த கடவுளின் மகத்வத்தையே விளக்கிக் காட்டுகின்றன.

## IRISH CHARMS AND INCANTATIONS FOR CURING DISEASES.

By K. N. SUBRAMANIA AIYAR.

## அயர்லாண்ட் தேசத்து ரோக நிவாரண ரக்ஷாபந்தனங்களும் மந்த்ரங்களும்.

இங்கிலண்டைச் சேர்ந்த அயர்லண்ட் தேசத்தில் அனேக வர்ஷங்களாகத் திறமான ஆஸ்பத்ரிகள் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் மூலமாய் ஏழைகளுக்கு இனமாக மருந்துகள் கிடைத்துவருகின்றன. ஆகிலும், சில நாகரீகமற்ற நாட்டுப்புறத்து ஜனங்கள் இன்னமும் தேக உபாதிகளைத் தீர்த்துக் கொள்ள ரக்ஷாபந்தனங்களையும் மூடச் சடங்குகளையுமே நம்பியிருக்கிறார்கள்.

அந்த தேசத்தில் கல்வி அபிவ்ருத்தியாகி யிருக்கிறது. பாதிரிகள் அப்போதைக்கப்போது சகுனங்கள், ரக்ஷாபந்தனங்கள், மந்த்ரங்கள் ஆகிய இவைகளில் ஜனங்கள் கொண்டிருக்கும் மூட நம்பிக்கையை ஒழிக்க முயன்று வருகிறார்கள். என்றாலும், மாமூல் பலத்தினால் எண்ணிறந்த தலைமுறைகளாகத் தங்களுடைய முன்னோர்கள் நோய் தீர்க்க அனுஷ்டித்த வழிகளை விட்டுவிட ஜனங்களுக்கு மனமில்லை. மோஹினிகள் லோக வ்யவகாரங்களில் தலையிடுகின்றனவென்றும், அவை

களை மந்த்ரவாதிகள் கைவசப்படுத்தி அவைகளின் உதவியால் இயற்கைக்கு மீறின காரியங்களைச் செய்து முடிக்கச் சக்தி பெற்றிருக்கிறார்கள் என்றும் அனேகர் எண்ணியிருக்கிறார்கள்.

வைத்யப்பயிற்சியில்லாத போலி வைத்யர்களுடைய சிகித்ஸையில் ஜனங்களுக்கு நம்பிக்கையிருப்பதற்கு இதுவே காரணமாகும். பாடசாலைகளில் கற்ற டாக்டர்கள் ஸாதாரண நோய்களை மாத்ரம் தீர்க்க வல்லவர்களென்றும், நாட்டுவைத்யர்களோ அரிய மூலிகைகளால் நாள்பட்ட தீரா வ்யாதிகளையும் தீர்க்க சக்தி வாய்ந்தவர்களென்றும் ஜனங்கள் நம்புகிறார்கள். ரக்ஷாபந்தனங்களாலும் மந்த்ரங்களாலுமே நோயாளியை ஸ்வஸ்தப்படுத்தக் கூடுமென்று சொல்லுபவர்கள் சிலர். மூலிகையையும் தேவபக்தியையும் கலந்து ப்ரயோகிப்பவர் சிலர். இவ்விரண்டுமில்லாமல் சாஸ்த்ர ஸம்பந்தமுமின்றி அநுபவ வழிகளையே அநுஸரிப்பவர் பலர்.

இந்தக் கடைசி வகுப்பைச் சேர்ந்த ஒரு குடும்பத்தார் க்ளேர் என்னும் ஜில்லாவில் கில்ரஷ் என்னுமிடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் இருந்தார்களாம். அந்தக் குடும்பத்தின் பெயர் லையான்ஸ் என்பது. அவர்களிடம் பல தலைமுறைகளாக பிளவைகளையும் கட்டிகளையும் ஆற்றுவதற்கு ரகஸ்யமான சிகித்ஸை ஒன்று இருந்து வருகிறது. அக்குடும்பத்தலைவன் நல்ல ஸ்திதியிலுள்ள ஒரு குடியானவன். ரொம்ப நாணயமும் மர்யாதையுமுள்ளவன். ஞாயிற்றுக் கிழமையில்தான் அவன் நோயாளிகளைப் பார்ப்பான். நோயாளிகளின் உபாதிகளைப் பற்றி அவர்களோடுகலந்து பேசி, மேலேபூசும்படி அவர்களுக்குத் தைலங்கள் கொடுப்பான். அவனுடைய மருந்துகள் முழுவதும் மூலிகைகளிலிருந்தே செய்யப்படுகின்றனவாம். இம் மூலிகைகளை ஒன்றுசேர்க்க அவன் குடும்பத்தில் வெகுகாலமாக ஒரு ரகஸ்ய முறை உண்டு. அந்த முறை முதல் முதல் அக்குடும்பத்தாருக்கு ஒரு பழைய வைத்ய புஸ்தகத்திலிருந்து கிடைத்தது. வ்யாதி ஸ்வஸ்தம் செய்ய அவன் கேட்கும் கூலி நோயாளியின் அந்தஸ்துக்கும் வ்யாதியின் பலத்துக்கும் தகுந்தபடியிருக்கும். டாக்டர்களால் கைவிடப்பட்ட நூற்றுக்கணக்கான பிளவைகளையும் கட்டிகளையுங்கூட ஸ்வஸ்தப்படுத்தியிருக்கிறானாம். இதனால் அவனுக்கு நல்ல வரும்படி கிடைத்திருக்கிறதாம். அவனிடம் வரும் நோயாளிகளில் பெரும்பாலார் பழைய நாளைய வழக்கங்களில் நம்பிக்கை கொண்டிருப்பவர்களும், ஒன்றுந்தெரியாத நாட்டுப்புறத்தார்களுமாவார்கள்.

லையான்ஸ் குடும்பத்தாரைப்போன்ற "மூலிகை வைத்யர்கள்" அயர்லண்டில் அநேகம்பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சந்தைகளிலும் கடைத்தெருக்களிலும் அலைந்து திரியும் போலி வைத்யர்களுக்கும் வித்யாஸம் உண்டு. லையான்ஸ் குடும்பத்தாரைப் போன்றவர்கள் கண்ட பேர்களுக்கெல்லாம் சிகித்ஸை செய்வது கிடையாது. தங்கள் வைத்யத்தைப்பற்றி விளம்பரம் செய்வதும் கிடையாது. அவர்கள் நோயாளிகளை நேரில் கண்டு பேசியே மருந்து கொடுப்பார்கள். தங்கள் கீர்த்தியைப்பற்றி தங்களிடம் வைத்யம் செய்து கொண்டவர் பிறரிடம் சொல்லுவதால், நோயாளிகள் தம்மைத் தேடி வருவார்களென்று எண்ணியிருக்கிறார்கள்.

ப்ரொபஸர், டாக்டர் என்று பட்டப்பெயர்கள் வைத்துக்கொண்டு ஊரூராய்த் திரியும் பண்டிதர்களின் தொகை இதினுமதிகம். அவர்கள் சந்தைகளில் அழகிய புல் தரையிலும் கடைத்தெருவில் தற்காலத்துக்கென்றேற்படுத்திய மேடைகளின்பேரிலும் உட்கார்ந்துகொண்டு தாங்கள் செய்திருக்கும்



தாதுபுஷ்டி மருந்துகள், தைலங்கள், குளிகைகள் முதலியவை சொட்டைத்தலை முதல் பருக்கள்வரை மனித சரீரத்திலுள்ள எல்லா ரோகங்களையும் மாயமாய்ப் பறக்கடிக்குமென்று சொல்லி நம்பச்செய்கிறார்கள்.

இவர்களில் ரொம்ப ப்ரஸித்திபெற்ற ஒருவன் "டாக்டர் கான்ராய்" என்பவன். அவனுடைய உல்லாஸ குணத்தாலும் வாக் சாதுர்யத்தாலும் சென்றவிடமெல்லாம் அவனை ஜனங்கள் விரும்புகிறார்கள். அசுத்த ரத்தம் ஒன்றே ஸகல வ்யாதிகளுக்கும் காரணமென்றும் எல்லாம் குளிகை அல்லது பானமாகிய ஒரே மருந்தால் தீருமென்றும் பாசாங்கு செய்து, ஜனங்களை வஞ்சிக்கின்ற அயோக்யப் போலியர்களைக் கண்டால் தனக்குப் பிடிப்பதில்லையென்றும், தன்னிடத்தில் ஒவ்வொரு வ்யாதிக்கும் தனித்தனி மருந்து உண்டென்றும் வற்புறுத்துவான். சிற்சில அல்ப ரஸாயன வித்தைகளைச் செய்து காட்டி ஜனக் கூட்டத்தை மயக்கி அவர்களுக்கு முன் ப்ரஸங்கம் செய்வான். தான் வைத்யம் செய்வது மனிதரின் பேரிலுண்டான அபிமானத்தின்பொருட்டேயன்றி பணம் ஸம்பாதிப்பதற்கல்லவென்றும், தன்னிடமுள்ள அற்புத மருந்துகளுக்கு விலை மிகக் குறைந்ததென்றும் சொல்லுவான். தான் பலதடவை வனாந்தரங்களுக்குச் சென்றும் மனுஷ்ய ஸஞ்சாரமில்லாத ஆப்ரிக்கா கண்டத்துக் காடுகளில் நுழைந்து அருமையான மூலிகைகளைத்தேடியும், இந்தியாவிலிருந்தும் அரேபியாவிலிருந்தும் அற்புதமான பண்டங்களை விலைக்கு வாங்கியும், தங்க நாணயங்களும் ரத்னங்களும் கொடுத்து போர்னியோத் தீவின் காட்டு மனிதரிடமிருந்து அபூர்வமான வீர்யமுள்ள பார்லிப்புல் த்ராவகத்தை வாங்கியும், ஆறாயிரம் மயில் பாதசாரியாய் ப்ரயாணம் செய்து ரூபார்ப் என்னும் சரக்கை ஸம்பாதித்தும் வந்திருப்பதாகவும் இவ்விதமாகத் தான் பட்ட கஷ்டத்துக்குக் கணக்கில்லையென்றும் ப்ரஸங்கிப்பான்.

இவனுடைய ப்ரதாபத்தைக்கேட்ட ஜனங்கள் இவன் சொன்ன பணத்தைக் கொடுத்து மருந்தை வாங்கிக்கொள்வார்கள். இந்த டாக்டருக்குப் போட்டியாக வேறு டாக்டர்கள் வந்து, தாங்கள் இங்க்லண்டிலும் ஜெர்மனியிலும் வைத்யங் கற்றதாகச் சொல்லி ஜனங்களைத் தன் பக்கம் திருப்ப முயன்றால், டாக்டர் கான்ராய் ஜர்மனி இங்க்லண்ட் முதலிய இடங்களிலிருந்து வரும் பரதேசிகளைப் பிசாசை வெறுக்கும் மாதிரி வெறுக்கவேண்டுமென்று சொல்லுவான். "அப்படிப்பட்ட போலிகள் பணம் பறிக்கவே இங்கு வருகிறார்கள். அவர்களில்லாவிட்டால் ஜர்மன் சின்னம்மையும் இங்க்லீஷ் வாந்திபேதியும் ஒருகாலும் இங்கு வந்திருக்காது. இதைக் கருத்தில் வையுங்கள்" என்று டாக்டர் வற்புறுத்தி எச்சரிப்பான். ஜர்மன் இங்க்லீஷ் கலாசாலைகளில் கற்றவனையுங்கூட நடுங்கச்செய்ய இதுவே போதுமானது. போட்டியாக வந்த வைத்யன் முற்றிலும் தோற்றுப்போய் எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டு சந்தையில் வேறு இடத்துக்குப் போய்விடுவான். இப்போது டாக்டர் ராஜா தான்.

அயர்லாந்து முழுவதிலும் வெறிநாய் கடி நோய்க்கு அனேக அதிமானுஷ மாயா சிகித்ஸைகளிருக்கின்றன. க்ளேர் ஜில்லாவில் நல்ல அந்தஸ்திலிருந்து சில வருஷங்களுக்கு முன் இறந்துபோன ஆட்ஜஸ் என்று பெயர் கொண்ட இரண்டு ஸகோதரிகளிடம் ஒரு மோகினி ரக்ஷை இருந்தது. வெறிநாய் கடித்த மனுஷன் ஒருவன் நோய் தீர்த்துக் கொள்ள அந்த ஸ்த்ரீகளிடம் போனால், அவர்கள் அவனை ஒரு மந்த்ரம் போட்ட கண்ணாடியை பார்க்கச் சொல்லுவதுண்டாம்,

அவன் அதில் நாயின் உருவத்தைக்கண்டால் வ்யாதி நிவ்ருத்தியாகாதாம். தன்னுடைய முகம் அதில் தெரிந்தால், செய்யும் சிகித்ஸைகளால் நிச்சயமாய் குணமாகுமாம். இந்த சிகித்ஸையை ஆட்ஜஸ் ஸகோதரிகள் மரணகாலத்தில் ஒரு ஸ்த்ரீக்குக்கொடுக்க அம்முறை அவளிடத்தில் இப்போது இருக்கிறது. ஆனால் வெறிநாய் கடிநோய்க்கு அயர்லாந்தினுள்ள எல்லா ரக்ஷைகளைக்காட்டிலும் பேர்பெற்றது மெக்கவர்ன் என்னும் பெயருள்ள குடும்பத்தாரிடம் இருக்கிறது. இந்த ரக்ஷையின் வரலாற்றின்படி, பதினேழாம் நூற்றாண்டின் கடைசியில் அந்தக் குடும்பத்தில் ஒரு பையனுக்கு நாய் கடித்து நோயுண்டாகி அவன் மரணத்தருவாயிலிருந்தான். பையனுடைய தகப்பன் மிகவும் வருத்தமடைந்து அவனுடைய படுக்கைக்கு ஸமீபத்தில் முழந்தாளிட்டு தன் மகனைக் காப்பாற்றும்படி கடவுளை வேண்டிக்கொண்டான். திடீரென்று அவனுக்கு தூக்கம் உண்டாயிற்று. ஸ்வப்னத்தில் ஒரு தேவதூதன் வந்து வ்யாதியை ஸ்வஸ்தப்படுத்த மருந்து சொன்னாராம். அதோடு தேவதூதன் மெக்கவர்னை அவனும் அவன் ஸந்ததியாரும் அந்த அற்புதமான விஷநிவாரணியை வ்யாதியால் வருந்தும் எல்லா ஏழை ஜனங்களுக்கும் இனாமாகக் கொடுத்துதவுவதாக ப்ரதிஞ்ஞை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். அது முதல் அந்தக்குடும்பத்தார் இந்த மருந்தை ப்ரயோகித்து வருகிறார்கள். மருந்துக்குச் சேர்க்கும் மூலிகைகளின் ரகஸ்யத்தை வெகு ஜாக்ரதையாகப் பாதுகாத்துவருகிறார்கள், அதைத் தகப்பன் சாகுந்தருவாயில் பெரிய மகனுக்கு மாத்ரம் சொல்லுகிறான். நாய்கடி நோயால் இழுப்புக்கண்டிருக்கும் மனிதருக்கும் ப்ராணிகளுக்குங்கூட ஆறு அல்லது ஒன்பதுநாள் ப்ரயோகத்தில் குணமாய் விடுகிறதென்று சொல்லப்படுகிறது. மெக்கவர்ன் குடும்பத்தாரிடமிருந்து இந்த மருந்தின் ரகஸ்யத்தை வெளியிடச்செய்ய அனேகர் பணம் கொடுப்பதாய் சொன்னார்களாம், ஆனால் அவர்கள் அதை வெளியிடவில்லை. அந்த விஷவாரிணி அந்தக்குடும்பத்தைவிட்டுப்போனால் அதின் அத்புதசக்தி போய்விடுமென்று சொல்லுகிறார்களாம். இதேமாதிரி வேறு சில வ்யாதிகளுக்கும் தலைமுறை தலைமுறையாகத் தகப்பன்மாரிடமிருந்து மக்களுக்குவந்த ரகஸ்ய சிகித்ஸைகளனேகமுண்டு. இப்படிப்பட்ட ரகஸ்யங்களில் சில ஆணிடத்திலிருந்து பெண்ணுக்கும், பெண்ணிடத்திலிருந்து ஆணுக்கும் மாறி மாறி வரவேண்டியது. தவறினால், அதின் குணம் நீங்கிவிடுமாம்.

டல்ஹாலோவில் ஒரு சிறுவன் இருந்தான். அவன் ஒரு எளிய குடியானவனுடைய மகன், விசேஷபுத்தியில்லை. ஆனால் அவன் ஒரு விசேஷ தினத்தில் பிறந்தால் மூடபக்தியுள்ள நாட்டுப்புற ஜனங்கள் அவனுக்கு வ்யாதி தீர்க்கும் சக்தி ஏற்பட்டிருப்பதாக நம்பி வந்தார்கள். அவன் செய்யும் சிகித்ஸையோ தன் எச்சிலைக் கையில் உமிழ்ந்துகொண்டு, அதை நோயாளியின்பேரில் வ்யாதி இருக்குமிடத்தில் பூசுவதும் அதின்பேரில் மூன்று தரம் ஊதுவதுந்தவிர வேறொன்றுமில்லை.

ஏழாவதாகப் பிறக்கும் மகன் வைத்யத்தில் அற்புத சக்திவாய்ந்தவனென்று எண்ணப்படுகிறது. அதாவது, இடையில் ஸகோதரிகள் பிறவாமல் ஸகோதரவரிசையில் ஏழாவது மகனாகப் பிறந்திருக்கவேண்டும். அதிலும் அவன் பெற்றோர்களை யிழந்தவனாகவும் தகப்பனை ஒருபோதும் பார்க்காதவனாயுமிருந்தால் அவனுடைய சக்தி விசேஷமாம்.

ஒரு தூயவெள்ளைக் குதிரை ஒருவனிடமிருந்தால் அவனை விசேஷ வைத்யனாக மதிக்கிறார்கள். ஆனால் அவன் அந்தக்குதிரையின் பேரிலாவது அல்லது அதை வண்டியில் கட்டியாவது சவாரி செய்துகொண்டு போகும்போதுதான் அந்த வைத்யத்துக்குப் பலனுண்டு. சுக்குவாயிருமல். அவன் செய்யும் சிகித்ஸையால் குணமாகுமாம்.



## THE CARE OF THE COW.
## பசுவின் பராமரிப்பு.

சென்ற டிஸம்பர்மாஸம் கல்கத்தாவில் பசுவைப்பற்றிய கான்பரென்ஸ் நடந்தபோது, கல்கத்தா ஹைக்கோர்ட்டில் ஜட்ஜாக இருக்கும் ஸர் ஜான் வுட்ராப் இந்தியாவில் பசு ஸம்பந்தமாக உண்டாயிருக்கும் ப்ரச்னைகளைப்பற்றிப் பேசினார். அவர் பேசியதன் ஸாராம்சத்தை இங்கு எழுதுகிறோம்.

இந்தியாவிலுள்ள எல்லா வகுப்பாரும், அவர்கள் ஹிந்துவாயிருந்தாலுஞ்சரி, மகம்மதியர்களாயிருந்தாலுஞ்சரி, கிறிஸ்தவர்களாயிருந்தாலும் சரி, பசு மாட்டைப்பற்றிய விஷயங்களில் கவனம் செலுத்தவேண்டியவர்களே. சிலருக்கு மாட்டிறைச்சி ஆகாரமாகிறது. எல்லாருக்கும் வேண்டியிருக்கும் பால், வெண்ணெய், நெய் ஆகிய இவைகளுக்கு பசு ஆதாரமாக இருக்கிறது. நமது தேசத்தில் குழந்தைகளுக்குப் பாலே முக்ய உணவாகும். பெரியவர்களில் பலர் பால், வெண்ணெய், நெய் ஆகிய இவைகளை உபயோகிக்கிறார்கள். காப்பி டி குடிப்பதற்கும் பால் வேண்டியிருக்கிறது, காப்பி, தேயிலை குடிக்கும் வழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. நமது தேசத்தில் விசேஷமாக உபயோகப்பட்டுவரும் மிட்டாய் முதலிய பக்ஷணவகைகளில் பால் அதிகமாக உபயோகப்படுகிறது. இந்த தேசத்தில் விவஸாயிகள் எல்லாரும் உழவுக்கு மாட்டையே உபயோகிக்கிறார்கள். ஜனங்கள் ஸௌக்யமாயிருப்பதற்கு ஆகாரம் முக்யமாதலால் மற்றவைகளைவிட நாம் முக்யமாக கவனிக்கவேண்டியது மனிதர்களுக்கு ஆகாரமாகி ஆரோக்யமும் பலமும் கொடுக்கும் பாலும் பாலிலிருந்து உண்டாகும் பொருள்களுமே.

ஜனங்களுக்கு அதிகம் பால் கிடையாததற்கு முக்யமாக இரண்டு காரணங்கள் உண்டு. முதலாவது பசுக்களின் தொகை குறைவாயிருப்பது. இரண்டாவது பசுக்கள் பால் அதிகம் கறக்காதது. இந்த இரண்டு நிலைமைகளுக்கும் காரணங்களாயிருப்பவைகள் கால்நடைகளை சரியான முறையில் வ்ருத்தி செய்யாமை, போதுமான தீனியில்லாமை, சரிவர பாதுகாக்காமை, வ்யாதிகள், அகாலமரணம், நல்ல நிலைமையிலுள்ள பசுக்களையும் கன்றுக்குட்டிகளையும் இறைச்சிக்காகக் கொல்லுதல் ஆகிய இவைகளாகும்.

### போலி காளைகள்.

மாடுகளின் வ்ருத்தி விஷயமாக நாம் முதலில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், இனிமேல் பிறக்கும் கன்றுகள் நன்றாயிருப்பதற்காக அந்தக் கன்றுகளின் தாய்தந்தை மாடுகளைப்பற்றிக் கவனிப்பதே. இதற்கு நல்ல பொலி காளைகளை வ்ருத்தி செய்யவேண்டும். பொலிகாளைகளை அதிக பால் கறக்கும் குணமுள்ள மாடுகளிலிருந்து தெரிந்தெடுத்து வ்ருத்தி செய்யவேண்டும். பசுக்களை நல்லவைகளாகப் பார்த்துப் பொறுக்கவேண்டும். இந்த சீர்திருத்தங்கள் நிறைவேறுவதற்காக கவர்ன்மெண்டார் கால்நடைகள் வளர்க்கும் பண்ணைகள் ஏற்படுத்தவேண்டும்.

### கால் நடைகளுக்குத் தீனிபோடுதல்.

கால் நடைகளுக்குத் தீனிபோடுவது விஷயமாக நாம் கவனிக்கவேண்டியது மேய்ச்சல் தரைகள், தீவனப்பயிர்கள் சாகுபடி செய்வது ஆகிய இவைகளாகும். தற்காலம் கால் நடை அபிவ்ருத்திக்குத் தடையாக இருப்பது மேய்ச்சல்தரை குறைவாக இருப்பதே. முற்காலத்தில் ரிஷிகள் ஒவ்வொரு ஊரிலும் ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணமுள்ள பூமியை மேய்ச்சல் தரையாக விடவேண்டுமென்று ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால் தற்காலத்தில் மேய்ச்சல் தரைகளில் ஜனங்கள் ஆக்ரமித்து வருகிறார்கள். பொருளாதார ஸம்பந்தமான காரணங்களால்தான் ஜனங்கள் இவ்விதம் செய்வதாகச் சொல்லப்படுகிறது.

இருந்தாலும் மாட்டுத்தீவன விஷயமாக ஏதாவது சீர்திருத்தம்செய்துதானாகவேண்டும். மேய்ச்சல் தரைகளை ஆக்ரமித்தவர்களிடமிருந்து திரும்பப் பெறுவதென்றாவது, அல்லது அவைகளை விலைக்கு வாங்குவதென்றாவது தீர்மானித்தால், ஒவ்வொரு க்ராமத்திலும், அதன் சாகுபடி விஸ்தீரணத்தில் பத்தில் ஒருபாகமும் அதோடு ஒரு குளமும் கால் நடைகளுக்கென்று விட்டு வைக்கவேண்டும்.

இது ஸம்பந்தமாக இன்னொன்றும் செய்யலாம். பொது நிலங்களை வைத்துக்கொண்டிருக்கிறவர்களிடம் நல்ல வார்த்தைசொல்லி, அவைகளைக் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளாக விடும்படி கேட்டுக்கொள்ளலாம். இதனால் ஜனஸமூகத்துக்கு ஏற்படும் நன்மைகளை எடுத்துச் சொன்னால், அவர்கள் நிலங்களை விட்டுவிட இணங்கக்கூடும்.

### கால் நடைகளுக்கு வரும் வ்யாதிகள்.

கால் நடைகள் வ்யாதியாயும் வ்யாதியில்லாமலும் இருக்கும்போது, அவைகளை ஜனங்கள் சரிவர கவனிப்பதில்லை. சீர்திருத்தவழி, பள்ளிக்கூடங்களிலும் காலேஜுகளிலும் வ்யவஸாய ஞானத்தை வ்ருத்தி செய்யவேண்டும். காலேஜுகளில் வ்யவஸாய போதகர்கள் ஏற்படுத்துவதோடு, ஊர் ஊராகப் போய் ப்ரஸங்கம் செய்ய வ்யவஸாய ப்ரஸங்கிகளை நியமிக்கவேண்டும். தேசபாஷைகளில் வ்யவஸாய புஸ்தகங்களை எழுதி வெளியிட்டும் வ்யவஸாயக் கல்வியைப் பரவச்செய்யலாம். ஸர்க்கார் கால்நடை ஸர்ஜன்களின் தொகையை வ்ருத்தி செய்வதில் பயனில்லை. உத்யோகஸ்தர்களல்லாத கால்நடை வைத்யர்களின் ஸங்க்யையை அதிகப்படுத்தவேண்டும். இந்திய முறையிலும், ஐரோப்பிய முறையிலும் கால் நடை வ்யாதிகளை ஸ்வஸ்தப்படுத்தக் கூடியவர்களின் பெயரையும் விலாஸத்தையும் அந்தந்த மாகாணங்களில் வெளியிடவேண்டும்.

### கால் நடைகளின் அகால மரணம்.

கால் நடைகளின் அகால மரணத்துக்குப்பல காரணங்கள் இருக்கின்றன. கால் நடைகளை நல்ல தினுஸுகளாக வ்ருத்தி செய்யாமை, அதாவது பலஹீனமான மாடுகளை உண்டு பண்ணுதல்; கால் நடைகளை சரிவரப் பராமரிக்காமை, பொதுவாய்க் கால்நடைகளுக்கு அதிலும் முக்யமாக சினையாக இருக்கும் மாடுகளுக்கு கொடுக்கும் தீனி போதுமான அளவு இல்லாதது; தீனி மாடுகளுக்கு ஏற்றதாயிராது; பட்டணங்களில் உள்ள மாடுகளும் கன்றுக்குட்டிகளும் ஓடியாடி வரமுடியாமை ஆகிய இவைகளாகும். இந்தக் காரணங்களைப் போக்கவேண்டியது அவச்யமாகும்.

### பசுக்களையும் கடாரிக்கன்றுகளையும் கொல்லுதல்.

பட்டணங்களில் நல்ல நிலைமையிலுள்ள பசுக்களும் கன்றுகளும் மாம்ஸத்துக்காகக் கொல்லப்படுகின்றன. அதாவது அதிக கன்றுகள் போடாத மாடுகளும், கறவை குறைந்த மாடுகளும், பெரிய ஈனுக் கடாரிகளும் மாம்ஸத்தின் பொருட்டுக் கொல்லப்படுகின்றன. கல்கத்தா முனிஸிபாலிடியார் இந்தக்



கெடுதியைக் குறைப்பதற்காக கசாப்பு கடைவரியை உயர்த்த முயன்றார்கள். ஆனால் கசாப்புக்கடைக்காரர்கள் ஒரே பெருங்கூச்சலிடவே முனிஸிபாலிடியார் ஒன்றும் செய்யமுடியாமல் போயிற்று. எப்போதும் ஜனங்கள் தங்களுடைய உரிமைகளுக்கு ஹானி வரும்போது பெருங்கூச்சலிடுவது வழக்கந்தான். ஆனால் ஜனஸமூகத்தார் பொதுஜன நன்மைக்கான விஷயங்களில் யாரென்னதடை செய்தபோதிலும் பின் வாங்கக் கூடாது.

இந்த விஷயம் ரொம்ப முக்யமானது. க்ராமாந்தரங்களில் உள்ள அதிக பால்கொடுக்கும் மாடுகள் பட்டணத்துக்கு வந்து சில காலமானபின் அவைகளின் பால் குறைந்துவிட்டால், அவைகளைக் கொன்றுவிடுவது ஸகஜமாயிருக்கிறது. இதனால் நல்ல பசுக்களின் தொகை குறைந்துபோகிறது. மாட்டிறைச்சியை இந்தியாவிலுள்ள ஐரோப்பியர்களும், இந்திய ஸைன்யத்திலுள்ள ஐரோப்பிய வீரர்களும் தவிர இதர ஜனங்கள் தின்பதில்லை. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இறைச்சிக்காக வென்று மாடுகளை வளர்ப்பதுபோல் இந்தியாவில் இதுவரையில் எவரும் அந்த நோக்கத்துடன் மாடுகளை வளர்க்கவில்லை. ஆனால் மேற்சொன்ன இரண்டு வகுப்புக்கும் மாட்டிறைச்சி வேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டார் மேற்சொன்ன வகுப்பார்க்கு வேண்டிய இறைச்சியை இதர தேசங்களிலிருந்து வரவழைத்தால், மாடுகள் கொல்லப்படுவது நின்றுவிடும். ஆனால் கவர்ன்மெண்டார் இதற்கு ஸம்மதப்படவில்லையென்று தெரிகிறது. மாடுகளை கொல்லுவதை நிறுத்த மூன்றுவழிகள் இருக்கின்றன. முதலாவது கவர்ன்மெண்டார் ஐரோப்பிய துருப்புகளுக்குவேண்டிய இறைச்சியை அன்ய நாடுகளிலிருந்து தருவித்தல். இதனால் இந்தியாவிலுள்ள இதர ஐரோப்பியர்களுக்குத்தான் மாட்டிறைச்சி வேண்டியிருக்கும். இரண்டாவது மாடுகளைக் கொல்லும்போது அவைகளுக்கு இன்ன வயஸாகியிருக்கவேண்டுமென்று ஏற்படுத்துவது. இந்த வயஸை மாடுகளின் பால்குறையும் காலத்தையனுஸரித்து ஏற்படுத்தவேண்டும். மூன்றாவது என்னவென்றால், இறைச்சி தின்னும் வகுப்பார் இறைச்சிக்காக மாடு வளர்க்கும் தொழிலை ஏற்படுத்தும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவேண்டும். அல்லது யாராவது அவ்விதம் செய்ய முன்வந்தால் அவர்களை ஆதரிக்கவேண்டும். இதனால் கறவை மாடுகளைக் கொல்ல அவச்யம் ஏற்படாது.

இந்தியாவிலிருந்து மாடுகள் அன்யதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதை கவர்ன்மெண்டார் நிறுத்தவாவது வேண்டும் அல்லது ஒழுங்குக்குக் கொண்டுவரவேண்டும்.

### பால் பண்ணைகள்.

பெரிய பட்டணங்களில் பால் அதிகம் கிடைக்கும்படி செய்ய பால் தயிர் பண்ணைகள் ஏற்படுத்தவேண்டியது அவச்யம். ஜனங்கள் ஏழையாக இருப்பதால், அவர்கள் பண்ணைகள் ஸ்தாபிக்கப் பணம்போடுவது அரிது. ஆகையால் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் ரொம்ப உதவி செய்யவேண்டியது அவச்யம்.

---


### நூதன தமிழ் நாடகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 958. | லீலாதரன் ... | 0 | 12 | 0 |
| 855. | நந்தனார் ... | 0 | 12 | 0 |
| 951. | ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் ... | 0 | 12 | 0 |
| 838. | சுக்ரீவர் ஆஜ்ஞை ... | 0 | 10 | 0 |
| 573. | ஜானகி ... | 0 | 12 | 0 |
| 503. | சிந்தாமணி ... | 0 | 12 | 0 |
| 536. | மர்யாதைராமன் அல்லது பால நியாயாதிபதி ... | 0 | 6 | 0 |
| 247. | பாண்டவர் வனமேகுதல் ... | 0 | 8 | 0 |
| 136. | வாஸந்திகை ... | 0 | 8 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# VILLPUTHURAR.

BY NAIVELI KRISHNAMA CHARIAR.

## வில்லிபுத்தூராழ்வார்.

ஸுமார் 500 வர்ஷங்களுக்கு முன்னே நடுநாடென்று சொல்லப்படுகிற திருமுனைப்பாடி நாட்டில் சனியூரிலே ப்ராம்மணஜாதியிலே வில்லிப்புத்தூராழ்வார் பிறந்தார். அவர் தகப்பனார் பெயர் வீரராகவாச்சாரியார் என்பது. அவர் நல்ல ஸ்ரீ வைஷ்ணவகுலத்தைச் சேர்ந்தவர். அவர்க்கு வில்லிபுத்தூரென்றும், வில்லிபுத்தூராழ்வாரென்றும் நாமதேயங்கள் உண்டு. அப்படி வழங்கி வருவதற்குக்காரணம் என்ன? பாண்டிய நாட்டில் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ப்ரஸித்த வைஷ்ணவ ஸ்தலமாகிய ஸ்ரீ வில்லிபுத்தூரில், பிறந்து வளர்ந்தவரா? என்று விசாரிக்கும் பக்ஷத்தில் அப்படி ஒன்றுமில்லை எனத் தெரியவருகிறது. வைஷ்ணவ பக்தர்களாகிய பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரும், பட்டர் பிரானென்றும், விஷ்ணு சித்தரென்றும் வேறு பெயர்களை யுடையவருமாகிய பெரியாழ்வார் ஸ்ரீ வில்லிபுத்தூரில் பிறந்தார். வில்லிப்புத்தூராருடைய தாய் தந்தையார் பெரியாழ்வாரது பக்தர்களானதாலும், அந்த ஆழ்வாரது அருளினால் புத்ரன் பிறந்ததினாலும் அவருக்கு அவ்வாழ்வார் பிறந்த ஊரின் பெயரையே பெயராக இட்டார்கள்.

### இளமையும் கல்விப்பயிற்சியும்.

'இளமையிற் கல்' என்பதற்கேற்ப வில்லிப்புத்தூரார் இளமையிலேயே நல்ல ஆசிரியரை அடுத்து இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் நன்றாகக் கற்றுத்தேர்ந்தார். தேவபாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்திலும் அதிக தேர்ச்சியடைந்து பாண்டித்யமுள்ளவரானார். அவருடைய கல்விப்பெருமை நாடெங்கும் பரவிற்று. தமிழ் நாட்டு வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் அவரது கல்விப் ப்ரதாபத்தைக் கேள்வியுற்று, அவரைத் தங்கள் ஸமஸ்தானங்களுக்கு அழைப்பித்து, அவரது கல்வித் திறத்தைக் காதாறக் கேட்டு, அளவிலாத ஸந்தோஷமடைந்து, அவர்களது அபிமானத்தைக்காட்ட அவருக்கு தக்க சிறந்த பல பெரும் பரிசுகளைத் தந்து அவரைக் கௌரவித்தார்கள்.

இப்படியிருக்க, முன்பு கூறிய திருமுனைப்பாடி நாட்டிலே வக்கபாகை என்கிற ஒரு பட்டணம் உண்டு. அதன் அரசன் 'வரபாதியாட்கொண்டான்' என்னும் பெயரை உடையவர். அவர் கொங்கர் குலத்தில் தோன்றியவர்; கல்வி, அறிவு, ஒழுக்கங்களால் மேன்மைப்பட்டவர் ; தமிழ் பாஷையில் மிகவும் ஊக்கமுடையவர். தலை, இடை, கடையென்னும் மூன்றுவகை ஸங்கத்திலே வளர்ந்துவந்த தமிழ் பிற்காலத்தில் அழிந்து போகாதபடி நான்காவதொரு ஸங்கம்போல அதைப் பாதுகாத்து, மேன்மையுற்ற பண்டித சிகாமணிகளை பலவாறு அன்புடன் ஆதரித்து வந்த மன்னர் சிகாமணி அவர்.

வில்லிபுத்தூராரது ப்ரதாபத்தையும், கல்வி கேள்வித்திறமைகளையும், வாய்மை, அன்பு, அருள், அடக்கம், ஒழுக்கம் முதலிய நற்குணங்களையும் பலவாறு கேள்வியுற்று, ஆச்சரியமடைந்து, அவரை தமது ஸமஸ்தானத்திற்கு வரவழைத்து, தக்க மர்யாதைகளையும் பரிசுகளையும் அளித்து அவரை தமதுஸமஸ்தான பண்டிதராக நியமித்தார்.

### பாரதம் பாடிய வரலாறு.

அவர் பாரதம் பாடியதைப்பற்றி அனேக வரலாறுகள் உண்டு. அவைகளில் சிலவற்றைக் கூறுவோம்.



1. ஒருநாள் வரபாதியாட்கொண்டானும் வில்லிபுத்தூராரும் உல்லாஸமாக இருக்கும்பொழுது, அரசர் பண்டிதரை நோக்கி 'ஐயா பண்டிதரே! நீரோ வடமொழியிலும் தமிழிலும் மிகவும் தேர்ச்சி பெற்றிருக்கிறீர். உமது பெயரும் அடியேனது ஸமஸ்தானத்தின் பெயரும் என்றும் அழியாது உலகமுள்ளளவும் பெருங்கீர்த்தி உண்டாகி நிலைபெறும்படி வடமொழியில் ஸ்ரீ வேதவ்யாஸ பகவான் அருளிச்செய்துள்ள மகாபாரதச் சரித்ரத்தைத் தமிழில் பற்றுடைய எல்லோரும் படித்து ஆனந்திக்கும்படி செந்தமிழில் விருத்தப்பாடல்களினால் பெருங்காவ்யம் ஒன்று செய்தருளவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள, அவரும் "அப்படியே ஆகட்டும் என்று சொல்லி பாரதத்தைப் பாடினார்.

2. வில்லிபுத்தூராருக்கு இளைய ஸஹோதரர் ஒருவர் இருந்தார். அவர்கள் இருவருக்கும் பித்ரார்ஜ்ஜித ஸொத்தைப்பற்றி, வழக்கு உண்டாக, அவர்கள் அந்த வழக்கை வரபாதியாட்கொண்டானிடம் தெரிவித்துக்கொண்டார்கள். அரசர் அவர்களது கல்வித்திறத்தைப் பற்றி பலமுறை கேட்டும் அறிந்துமிருந்ததனால், அவர்களது வழக்கைக்கேட்டு மனவருத்தமடைந்து 'இவ்வளவு படித்தவர்களுக்கும் நல்ல அறிவு உண்டாகவில்லையே. இவர்களுக்கு நல்ல அறிவு உண்டாக்கும்படி செய்ய தக்கவழி பங்காளி வழக்கினால் துரியோதனாதியர் அழிவுண்டு நாசமடைந்ததைக் கூறும்படியான மகாபாரதத்தில் இவர்களைப் பழகச் செய்வதே'' என்று தீர்மானித்து, மூத்தவராகிய வில்லிபுத்தூராரைக் கூப்பிட்டு "உங்களது வழக்கை இப்பொழுது தீர்க்கமுடியாது. மகாபாரதத்தைத் தமிழில் நீர் பாடின பின்புதான் உங்களது வழக்கைக் கவனிக்கமுடியும்" என்று கட்டளையிட்டான். அவரும் அப்படியே கௌரவ பாண்டவர்களது சரித்ரமாகிய பாரதத்தைப்பாடி முடித்து அந்த நூலிலுள்ள உத்தமமான நீதியின் கருத்தை தீர்க்கமாக ஆலோசனைசெய்து உணர்ந்தவராய், தாமாகவே அந்த பங்காளி வழக்கில் வெறுப்புற்று தமது பாகத்தையும் தம்பிக்கே கொடுத்துவிட்டார்.

3. தன்னுடன் வாதஞ்செய்து தோல்வியடைந்த பண்டிதர்களது காதுகளைத் துறட்டினால் மாட்டிப்பிடித்து இழுத்துக் காதை ஒட்ட அறுத்து அவர்களது வித்யா கர்வத்தையடக்குவது வில்லிபுத்தூரார் வழக்கம். இப்படிப் பல புலவர்களை ஜயித்து வரும்பொழுது, ஒரு ஸமயம் திருவண்ணாமலைக்குப் போயிருந்தார். அங்குள்ள வித்வான்கள் அவரது வருகையைக் கேள்விப்பட்டு பயமடைந்து தங்களது தலைவரும், திருப்புகழ் பாடியவருமாகிய அருணகிரி நாதரிடம்போய் வில்லிப்புத்தூரார் வந்திருப்பதைத் தெரிவித்தார்கள். அருணகிரி நாதர் அதைக்கேட்டு வில்லிப்புத்தூரரது கர்வத்தை யடக்க எண்ணி, ஒருநாள் அவரை வரவழைத்து "ஐயா, பெரியவரே! அடியேன் இப்பொழுது புதிதாக ஒரு நூல் பாடப் போகிறேன். பாடிக்கொண்டு வரும்பொழுதே, அந்த நூலுக்கு பொருள் சொல்வீரானால், உமது கல்வித்திறம் சிறந்து விளங்கும்" என்று ஒருவாறு அலக்ஷ்யமாய்ச் சொல்ல, வில்லிப்புத்தூரார் வெகு கோபங்கொண்டு தன்னை எதிர்க்கிற அவரைத் தோற்கடித்து தனது ஜயக்கொடியை நிலைநிறுத்த எண்ணி அருணகிரி நாதரைப் பார்த்து 'அப்படியே ஆகட்டும்' என்று ஒப்புக்கொள்ள, நாதர் முருகக் கடவுள் விஷயமாக 'கந்தரந்தாதி' என்னும் யமகவந்தாதியை ஆசு கவியாக 100 பாட்டில் பாடத்தொடங்கிப் பாடிவர, வில்லிபுத்தூராரும் பின்வாங்காமல் உடனுக்குடனே ஒவ்வொரு செய்யுளுக்கும் பொருள் கூறி வந்தார்.

அப்படி அர்த்தம் சொல்லி வரும்போது அந்த நூலில் 54-ம் பாட்டாகிய பின்வரும் பாட்டை அருணகிரிநாதர் பாடினார்.

திதத்தத்தத் தித்தத்திதி தாதை தாதுத்தித் தத்திதா
திதத்தத்தத் தித்தத்தி தித்தித்த தேதுத்து தித்தித்த [தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாதத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே.

இந்தப் பாட்டின் அர்த்தம் பின்வருமாறு :

திதத்தத் தத்தித்த=திதத்தத்தத் தித்த என்னும் தாளமானங்களை, திதி=திருநடத்தால் காக்கின்ற, தாதை=பரமசிவனும், தாத=ப்ரம்மனும், துத்தி=புள்ளிகளுடைய, தத்தி பாம்பினுடைய, தா = இடத்தையும், தித=நிலைபெற்ற, தத்து=ததும்புகின்ற, அந்தி=ஸமுத்ரத்தையும் பாயலாகக்கொண்டு, ததி=தயிரானது; தித்தித்ததே = தித்திக்கிறதென்று, து=உண்ட கண்ணனும், துதித்து=ஸ்துதி செய்து வணங்குகின்ற, இதத்து=பேரின்ப ஸ்வரூபியாகிய, ஆதி=முதல்வனே, தத்தத்து=தந்தத்தையுடைய, அத்தி=ஐராவதத்தால் வளர்க்கப்பெற்ற, தத்தை=கிளிபோன்ற தெய்வயானைக்கு, தாத=தொண்டனே, திதே=தீமையே துதைதி நெருங்கிய, தாது=ஸப்த தாதுக்களால் நிறைந்ததும், அகத்து=மரணத்தோடும், உதி=ஜனனத்தோடும், தத்து=பல தத்துக்களோடும், அத்து=இசைவுற்றதுமான, அத்தி=எலும்புகளை மூடிய, தித்த=பையாகிய இந்தவுடல், தீ=தீயினால், தீ=தகிக்கப்படுகிற, திதி=அந்நாளிலே, துதி=உன்னைத்துதிக்கும், தீ=புத்தி, தொத்தது=உனக்கே அடிமையாக வேண்டும்.

கருத்து:—திதத்தத்தத்தித்த எனும் தாளத்தால் நடிக்கும் பரமசிவனும் ப்ரும்மாவும், தயிரை உண்டு பாற்கடலையும் ஆதிசேஷனையும் படுக்கையாகக் கொண்ட விஷ்ணுவும் வணங்குகிற முதல்வனே, தெய்வயானை தாஸனே, ஜனனமரணத்துக்கிடமாய் எலும்பு முதலிய தாதுக்கள் நிறைந்த பொல்லாத இந்த உடல் பை தீயில் வேகும்போது உன்னைத் துதிக்கும் என் புத்தியை உனது அடியிணைக்கு ஆள் படுத்த வேண்டும்.

இந்தப் பாட்டிற்கு அர்த்தம் சொல்லமுடியாமல் போனதால், தோல்வியடைந்து, தமது துறட்டுக்கோலை எறிந்துவிட்டு அவ்வூரிலிருந்து புறப்பட்டுப்போனார்.

போகும்வழியில் ஒரு சிவாலயமிருக்க அந்தச் சிவாலயத்தைத் தன் கண்ணால் பார்க்காதபடி போக எண்ணி, தன்னுடன் வந்தவர்களைப் பார்த்து தன்னைச் சுற்றி திரையிடும்படி திட்டம்செய்து சிவநிந்தனை செய்தாராம். இதைக் கேள்வியுற்ற அருணகிரிநாதர், கோபாவேசங்கொண்டவராய் "அவர் கண்களை இழக்கக்கடவது" என்று சபிக்க, அப்படியே அவர் குருடரானாராம். அந்தச் சாபம் எப்படி நீங்குவது என்று அருணகிரி நாதரையே கேட்க அவர், "பரமசிவன் விஷயமாக ஏதாவது ஒருநூல் செய்யும் பக்ஷத்தில் அந்தச் சாபம் நீங்கும்" என்று சொன்னார். வில்லிபுத்தூரார் வைஷ்ணவராதலால் தன் வைஷ்ணவமதக் கோட்பாட்டிற்கு குறைவுவராமலும், சிவஸ்துதி சிற்சிலவிடத்தில் வரும்படியாயும் பாரதத்தைப்பாடி தம் கண்களைப்பெற்றாராம். அவர் வைஷ்ணவராயிருந்தும் சிவத்வேஷியல்ல. அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்திலும், தவநிலைச் சருக்கத்திலும், பதின்மூன்றாம் போர்ச் சருக்கத்திலும் சைவ ஸம்ப்ரதாயத்துக்கு யாதொரு குறைவும் வாராதபடி பரமசிவனைப் புகழ்ந்துகூறியிருப்பதனால் அவர் சிவத்வேஷியல்லரென்பது நன்குவிளங்கும்.

(இன்னும் வரும்.)

நெ. கிருஷ்ணமாச்சாரி.



## THE LINGAM ON THE BEACH.

By S. NARASIMHACHARRY, B.A., B.L.

## கடல் கரை லிங்கம்.

உலகத்தில் காணப்படும் ம்ருகங்களில் அநேக ஜாதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு ஜாதிக்கும் மற்ற ஜாதிக்கில்லாத, தனிக்குணங்கள் சில உண்டு. உதாரணம்:—முன் ஆடு போனவழியே பின் ஆடும் போகும். மந்தையாக வரும் ஆடுகளில், முதல் ஆட்டின் வழிக்குக் குறுக்கே, நாம் ஒரு நீண்டகோலை நீட்டினால், அந்த ஆடு ஒரு குதிகுதித்து, அந்தக் கோலைத்தாண்டி, அப்புறம்போவது ஸஹஜமே. பிறகு, அந்தக்கோலை அவ்விடத்திலிருந்து எடுத்து விடுவோமானால், இரண்டாவதான ஆட்டின் வழியில் தடை ஒன்றும் இல்லையல்லவா? ஆனாலும், இரண்டாவது ஆடும், அவ்விடம் வரும்போது, முதல் ஆடு செய்ததைப்போலவே, தானும் உயரக்குதித்தே அப்பால்போகும். அந்த மந்தையில் ஆயிரம் ஆடுகள் இருந்தாலும், அந்த ஆயிரத்தில் ஒவ்வொன்றும், அப்படியே குதித்துச் செல்லுமேயொழிய, நேராக நடக்காது.

ஆட்டுக்குள்ள இந்தத் தனி குணத்தை யோசிக்கும்போதெல்லாம், நமக்கு நகைப்பு வருகிறது. இவ்வளவு முட்டாள்தனம் உள்ள ம்ருகங்கள் இருக்கின்றனவே, என்று நாம் அதிசயிக்கிறோம். ஆனால், ஆழ ஆலோசிப்போமானால், இவ்வளவு கேவலமான முட்டாள்தனம், மனிதர்களிடத்திலும் உண்டு என்பது ஸ்பஷ்டமாய்த் தெரியவரும். இந்த முட்டாள்தனத்தில், ஆடுகளுக்கும் மனிதருக்கும் உள்ள வித்யாஸம் கொஞ்சமே. இதைப்பற்றி, ஒரு சிறு கதை உண்டு.

வட பெண்ணையாற்றின் கரையில் உள்ள ஒரு சிறிய க்ராமத்தில், ஒரு ஏழை ப்ராம்மணர் இருந்தார். அவர் சிறு வயதிலேயே கல்வி கற்க ஆரம்பித்து, நாளடைவில் பெரிய வித்வான் என்றும், சிறந்த வைதீகர் என்றும், பெயர் வாங்கி எல்லாரும் கௌரவிக்கும்படியான ஞானமும் சீலமும் உடையவராக இருந்தார். தேச யாத்ரை செய்து, புண்ய தீர்த்தங்களில் ஒன்றையும் விடாது ஸ்நாநம்செய்து, பரிசுத்த ஆலயங்களில் உள்ள மூர்த்திகளை தர்சித்தால், மறுபிறப்பு இல்லாமல் மோக்ஷம் பெறலாம், என்று வேதங்களும் இதிஹாஸ புராணங்களும் முறையிடுகிறபடியால், தாமும் அவ்வாறே செய்யநினைத்து, அந்த ப்ராம்மணர் ராமேச்வர யாத்ரை செய்யவேண்டி, தன் ஊரினின்று புறப்பட்டார். தாம் எண்ணிய வ்ரதப்படியே, ஆலயங்களை ஒன்றும் விடாமல் தர்சித்து, கடைசியாக ராமேச்வரக் கரைக்கு வந்துசேர்ந்தார்.

ஸமுத்ரத்தின் அழகைப் பார்க்கப் பார்க்க, ப்ராம்மணருக்கு ஆநந்தம் மேலிட்டது. 'வாயு புத்ரரான ஆஞ்சனேயர் ஆகாசமார்க்கமாய்த் தாண்டின கடல் அல்லவா, இது! ஸுக்ரீவ மஹாராஜனுடைய கணக்கில்லாத வானரஸைந்யங்கள், மலைகளைப்பிடுங்கி, அணைகட்டின இடமல்லவா, இது! என்ன அத்புதமான காக்ஷி!' என்று எண்ணி எண்ணி, உள்ளம்பூரித்தார். இவ்வளவு பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, மனதை ஒரு வழிப்படுத்தி, இரண்டு மூன்று மணி நேரம் ஜபம்செய்துவிட்டு, பிறகு கோயிலுக்குப்போய் ராமலிங்க ஸ்வாமியைத் தர்சிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டார்.

நமது நாட்டில் உள்ள ஆலயங்களில் உத்ஸவாதிகள் நடக்குங்காலத்தில், ஆயிரக்கணக்காக ஜனங்கள் வருகிறார்கள் அல்லவா? இ

தக்கூட்டத்தில் ஸ்வாமியைத் தர்சனம் பண்ணவருபவர் பலர்; 'ஏமாந்திருப்பவர்களுடைய நகையைக் கத்தரிக்க வருபவர் சிலர். நகையைக் கத்தரித்துக்கொண்டு ஒருவர் கையிலும் அகப்படாமல் தப்பிப்போவதற்கு, மிகுந்த ஸாமர்த்யமும் பழக்கமும் அவச்யமாகையால், இந்த வித்தையில் அதிக அநுபோகம் இல்லாத கற்றுக்குட்டிகள், சில்லரைத் திருட்டுச் செய்வதுண்டு. அதாவது, குடை, செருப்பு, சிறிய பாத்ரம், தேங்காய், பழம், குழந்தைகள் கையில் இருக்கும் மிட்டாய், முதலிய சில்லரை வஸ்துக்களைத் திருடுவதே இந்தக் கற்றுக்குட்டிகளின் தொழில். செருப்பு ஒன்றுக்கு குறைந்தது காலணா ஆகிலும் பழைய விலை கிடைக்குமாகையால், இவர்கள் தினம் ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்குக் குறையாமல் ஸம்பாதிப்பது ஸுலபமே. கோயில்களில் திருடர் இருக்கிறார்கள் என்று தெரிந்து, குடை, செருப்பு முதலியவைகளைக் கொண்டுபோகாமல், வெறுங்கையாய் சிலர் போவதுண்டு. இந்த ஸூக்ஷ்மம் தெரியாத சிலர், குடை, செருப்பு, தலைப்பாகையுடன் கோவிலுக்குப் போவார்.

இப்படிப் போகிறவர்கள், ஆலயத்துக்கருகே போனவுடன், செருப்பை எங்கேவிட்டு விட்டுப்போகிறது என்று யோசிக்கவேண்டி வருகிறது. குடையைப்பற்றி அவ்வளவு கஷ்டமில்லை; அதைக் கையில் பிடித்துக்கொள்ளலாம். ஆனால், கண்ட இடத்திலும் நடந்து, அசுத்தமான, செருப்புடன் கோயிலுக்குள் நுழைவது தகாதாகையால், இவர்கள், மறைவாய் இருக்கும் ஓரிடம் தேடி, சுற்றுமுற்றும் பார்த்து, ஒருவரும் தம்மைப் பார்க்காதிருக்கும் ஸமயத்தில், செருப்பை ஓரிடத்தில் ஒளித்துவைத்து, ஒன்றும் அறியாதவர்களைப் போல நடப்பார்கள். தூண்டில்காரனுக்கு முன் மேலேயே கண் இருக்கும் ஆகையால், செருப்புத் திருட வந்திருப்பவனுக்குக் கண் இவர்கள் மேலேயே இருக்கும். இவர்கள் செருப்பை ஒளிப்பதைக் கடைக்கண்ணால் கவனமாய்ப் பார்த்துக்கொண்டே, பாராதவன் போல் இருந்துவிடுகிறான். செருப்புக்குச் சொந்தக்காரன் கோயிலுக்குள் நுழைந்தவுடன், இவன் செருப்பு ஸஹிதம் கம்பி நீட்டிவிடுகிறான்.

செருப்பைவெளியேவிட்டுக் கோயிலுக்குள் சென்றவன் மன நிலையைச்சற்று ஆராய்வோம். ஸ்வாமி தர்சனம் செய்துகொண்டே இருக்கையில், திடீரென்று செருப்பு ஞாபகம் வந்துவிடுகிறது. அதிக விலைகொடுத்து வாங்கின செருப்பை யாராவது திருடிக்கொண்டுபோய்விடுவார்களோ, என்னவோ, என்று சங்கைகொள்கிறான். அந்த நிமிஷம்முதல் இவன், தன்மனதில் த்யானம்செய்வது, தன் கண்முன் இருக்கும் ஸ்வாமியைப்பற்றி அல்ல; கவலையை உண்டாக்கின செருப்பைப்பற்றியே த்யானம். பாமரர்கள் கடவுளை வணங்கும் அழகு இப்படிப்பட்டது.

ஆனால், நமது ப்ராம்மணர் அநேக நூல்களைப்படித்து, உலக ரீதியைச் செவ்வையாக அறிந்தவர் ஆகையால், தாம்கொண்டு வந்திருந்த பொருள்களின் கவலை இல்லாதபடி, கடவுளையே முழுமனதோடு த்யானம் செய்வதெப்படி என்று சிந்திக்கலானார். ஐந்து நிமிஷ காலம் தீர்க்காலோசனைசெய்து, பிறகு ஒருவாறு தீர்மானித்து, சுற்றுமுற்றும் பார்த்தார். பொழுதோ, இன்னும் ஸரியாக விடியவில்லை. அங்கே, கண்ணுக்கெட்டிய வரையும் ஒருவரும் தென்படவில்லை. உடனே, ப்ராம்மணன் கீழே உட்கார்ந்து, மணலில் ஒருமுழ ஆழம் பள்ளம்தோண்டி, தனது வேஷ்டி, செம்பு, சில்லரை முதலியவைகள் வைத்திருந்த மடிஸஞ்சியை அந்தப் பள்ளத்தில் வைத்து, மேலே மணலை முன்போல் தள்ளிவிட்டு, அந்த இடம் பிறகு தனக்கு ஸுலப



மாய்த் தெரியும்படி, அதன்மேல் இரண்டொரு எழுத்து எழுதிவிட்டு, ஜலக்கரையைநோக்கி நடந்தார். பத்தடிதூரம் செல்வதற்குள்ளே, வேறொரு ஸந்தேஹம் உண்டாயிற்று. 'ஸூர்யோதயம் ஆனவுடன் திரள்திரளாக ஜனங்கள் வருவார்களே; நான் எழுதிய இடத்தை அவர்கள் மிதித்தால், எழுத்து மறைந்துவிடுமே; பிறகு, இந்த இடத்தைக் கண்டுபிடிப்பது கஷ்டமல்லவா,' என்று ஆலோசனை செய்தார். வேறொரு யுக்தி தோன்றிற்று. அப்படியே செய்ய எண்ணி, மறுபடியும் அந்த இடத்திற்கு வந்து தாம் எழுதிய எழுத்துக்களை அழித்து, அதே இடத்தில், இரண்டடிஉயரம் உள்ளதாகும்படி, ஒருமணல் லிங்கத்தைப் பிடித்துவைத்து, ஸ்நாநம் செய்ய நடந்தார்.



ப்ராம்மணர் ஒரு மணல் லிங்கத்தைப் பிடித்துவைத்தார்.

ஸமுத்ரத்தில் பலமுறையும் ஸ்நாநம்செய்து, கரையிலே உட்கார்ந்துகொண்டு, காயத்ரி முதலிய ஜபங்களைச்செய்ய ஆரம்பித்தார். தமது பாவங்கள் அனைத்தும் தொலையவேண்டும் என்று ஒரே மனதுடன் அநேக மஹாஜபங்கள் செய்தபடியால், நாழிகை ஆனதையும் அவர் கவனிக்கவில்லை; தம்மைச் சுற்றிலும் கூட்டங்கூட்டமாக ஜனங்கள் ஸ்நாநம் செய்வதையும் அவர் கண்விழித்துப் பார்க்கவில்லை. இந்தப்படியே, மணி ஸுமார் பன்னிரண்டாயிற்று.

இவ்விதம், ப்ராம்மணர் மந்த்ரங்களை ஜபித்து, தமது வ்ரதத்தைப்பூர்த்திசெய்துகொண்டிருக்கையில், அந்த மணல்வெளியில் ஒருவிநோதம் நடந்துகொண்டிருந்தது. ஸ்நாநத்திற்கு முன், ப்ராம்மணர் லிங்கம்பிடித்து வைத்தபோது, வெகு தூரத்தில் ஒரு ப்ரயாணி தன் மனைவியுடன் வந்துகொண்டிருந்தான். வெளிச்சம் குறைவாக இருந்தபடியால், ப்ராம்மணர் அவனைப் பார்க்கக்கூடவில்லை. அவனும், ப்ராம்மணர் ஏதோசெய்கிறார் என்பதைக்கண்டானேயல்லது, இன்னவேலை செய்கிறான், என்பதைப் பார்க்க முடியவில்லை. செய்த வேலையாது என்பதைத் தெரிந்து கொள்ளும்படி, அவன் அவ்விடத்தை நோக்கி நடந்தான். ஆனால், அந்த இடத்துக்கு வருவதற்கு முன்னமே, ப்ராம்மணர் தமதுலிங்கத்தை முடித்துவிட்டு, ஸ்நாநம் செய்யப் போய்விட்டார். அங்கே வந்தவன் லிங்கம் இருப்பதையும், அதைப்பிடித்து வைத்தவர் ஸ்நாநஞ்செய்யப் போனதையும் கண்டு 'ஸேதுவில் ஸ்நாநம் செய்வதற்குமுன், ஒரு லிங்கம்பிடித்து வைத்துப் போனால், மிகுந்த புண்யம் கிடைக்கும்போலும்' என்று நினைத்து அந்த லிங்கத்துக்குக் கொஞ்சதூரத்தில் தானும் மற்றொரு லிங்கத்தைப் பிடித்துவைக்க ஆரம்பித்தான். ஆனால், லிங்கம் சீக்ரத்தில் பிடிபடவில்லை. அடிக்கடி

உடைந்துபோய்க் கொண்டிருந்தது. ஒரு நாழிகை பர்யந்தம், விடாமுயற்சியோடு வேலை செய்து, முடிவில் லிங்கத்தைப் பூர்த்திசெய்தான்.

இவன் இப்படி வேலை செய்கையில், பொழுதும் நன்றாய்விடிந்தது. ஸ்நாநம் செய்வதற்காக அங்கே அனேகர் வந்து சேர்ந்தார்கள். அவர்கள் இவன் அருகேவந்து, "ஐயா! என்ன செய்கிறீர்?" என்று கேட்டார்கள்.

"சிவலிங்கம் பிடிக்கிறேன்."

"ஏதற்காக, ஐயா?"

"பரிசுத்த பூமியான ஸேதுக்கரையில், லிங்கம் பிடித்துவைத்து, பிறகு ஸ்நாநம் செய்தால், மிகுந்த புண்யம் கிடைக்கும் என்பது, தெரியாதா, உங்களுக்கு?"

"ஆமாம், ஐயா; நீர் சொல்வது சரிதான்," என்று சொல்லி, அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு சிவலிங்கம் பிடிக்கத் தொடங்கினார்.

இந்த விதமே, அங்கு வந்த ஒவ்வொருவரும் ஒரு லிங்கம் பிடித்துவைக்கவே, மணல்வெளி முழுவதும், ஆயிரம் ஆயிரமாக சிவலிங்கங்கள் கிளம்பின.

நிற்க, ஸ்நாநம் செய்யப்போன ப்ராம்மணர், ஜபத்தைமுடித்து, பாவம் என்னும் பெருஞ்சுமை தன்னை விட்டு நீங்கிவிட்டதென்று ஸந்தோஷித்து, ஸமுத்ர ராஜனுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, தன் மடிஸஞ்சியில் உள்ள சுத்த வஸ்த்ரத்தை எடுத்து உடுத்திக்கொள்வதற்காக, தமது லிங்கத்தை நாடிப் புறப்பட்டார்.

மணல்வெளி முழுவதும், கண்ணுக்கெட்டிய தூரம்வரையும், முழத்துக் கொருலிங்கம் முளைத்தெழும்பி இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு, 'ஐயோ! இதென்ன விபரீதம்! இது யார் செய்த கூத்து! நான் கனாக் காண்கிறேனா, அல்லது விழித்துக்கொண்டிருக்கிறேனா?' என்று ஆச்சர்யமும், வ்யஸனமும் அடைந்து, அசைவற்று நின்றார். தனக்கெதிரில் பலரும் லிங்கம் பிடித்துவைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, ஸூக்ஷ்ம புத்தியுடையவர் ஆகையால், நடந்த விஷயம் இன்னது என்று ஒருநொடியில் அறிந்தார்.



மணல் வெளி முழுவதும் முழத்துக்கொரு லிங்கம் முளைத்தெழும்பி யிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்.

ஐயோ, பாவம்! இத்தனை லிங்கங்களின் மத்தியில், தன் லிங்கத்தை எப்படிக் கண்டு பிடிப்பார்? எதைப் பார்த்தாலும் தான்பிடித்த லிங்கம் போலவே இருந்தது. என்ன செய்வது என்று தெரியாமல், ப்ரமித்து, அங்கிருந்த ஒரு லிங்கத்தின் கிழே தோண்டிப்பார்த்தார். எவ்வளவு ஆழம் தோண்டினாலும் மடிஸஞ்சி அகப்படவில்லை. பிறகு, மற்றொரு லிங்கத்தின் கிழே தோண்டினர். அங்கும் ஒன்றும் தென்படவில்லை. மணியும் ஏறக்குறையப் பன்னிரண்டானபடியாலும், பூமி மணலான



படியாலும், வெயிலின் உஷ்ணத்தினால் மணல் காலைப் பொரித்தது. ஏழை ப்ராம்மணர் தலைமேல் கையை வைத்துக்கொண்டு புலம்பினார்:

"ஐயோ! இந்த உலகத்தில் இருக்கும் மனுஷ்யர்களுடைய மதியீனத்தை நான் என்னென்று சொல்லுவேன். மந்தையாய்ப்போகும் ஆடுகளுக்கு எவ்வளவு ஸ்வயபுத்தி உண்டோ, அவ்வளவு புத்திதான் உண்டு மனிதருக்கும். இவர்களுடைய புத்தியீனத்தாலே, எனது மடிஸஞ்சியையும் அதனுள்ளிருந்த வஸ்துக்களையும் நான் இழந்துபோக நேரிட்டதே! ஹே, ஜகதீச்வரா! இவர்களுக்கு நல்ல புத்தியைக் கொடுக்கமாட்டாயா?" என்று ப்ரலாபித்து, அவ்விடத்தைவிட்டு நடந்தார்.

—◆—

வெண்பா.

*மூன் ஆடுபோம்வழியே, மூந்நூறும் பின்தொடரும்;
அன்னாரே ஆவர், அகிலத்தோர்;—என்னே!
மனிதர் மதியீனம்! மாமணலில் அந்தோ!
புனிதப்பை† சிக்கியதேபோய்!

எஸ். நரஸிம்மாசாரி.

* இவ்வெண்பா, இந்தக் கதை எழுதியவர் தாமே இயற்றியது.

† புனிதப்பை=புனிதம் + பை=மடி + ஸஞ்சி=மடி ஸஞ்சி=மடிப்பை.

—◆—

## THE CULTIVATION OF THE ORANGE.

### கிச்சிலி சாகுபடி.

சென்ற தை மாஸத்திய 'ஜனாபிமானி'யில் கிச்சிலி சாகுபடிக்கு ஏற்ற நிலம், அதை வ்ருத்தி செய்யும் முறை, நடுதல், எருவிடுதல் முதலிய வைகளைப்பற்றி எழுதினோம். இனி கிச்சிலிக்கு கவாத்து செய்தல், மாஸூல் முதலிய வைகளைப்பற்றி எழுதுகிறோம்.

கவாத்து செய்தல்.

ஆரம்பம் முதல்கொண்டே கிச்சிலிக்கு கவாத்து செய்யவேண்டியது அவச்யம். கன்றுகளை நட்டபிறகு அடித்தண்டைச் சுற்றிலும் சிறு சிறு கிளைகள் உண்டாகும். அவைகளை அப்போதைக்கப்போது நறுக்கிவிட வேண்டும். பெரிய மரமான பிறகு பக்கவாட்டில் உள்ள கிளைகளுள் தரையோரமாயுள்ளவைகளையும் வெட்டி விடவேண்டும். ஆனால் ஒரே தடவையில் அநேக கிளைகளை வெட்டிவிடக்கூடாது. பெரிய மரங்களில் இருக்கக்கூடிய உலர்ந்த கிளைகளையும் ஒரே சாய் வளராத கிளைகளையும் வெட்டிவிட்டு, வெட்டின இடத்தில் தாரையோ, பசுஞ்சாணத்தையும் களிமண்ணையும் கலந்து அதையோ தடவி விடவேண்டும்.

வேர்களைக் கவாத்து செய்தல்.

இந்தியாவிலுள்ள கிச்சிலித் தோட்டக்காரர்கள் கிச்சிலி மரத்தின் வேர்களைக் கவாத்து செய்வது வழக்கம். மே மாஸக் கடைசியில், மழை பெய்வதற்கு 15 அல்லது 20 நாட்களுக்குமுன்பு, எந்த மரங்களுக்கு வேர் கவாத்துச் செய்யவேண்டுமோ, அவைகளின் அடியின் மரத்தைச் சுற்றிலும் கிடங்கு வெட்டுவார்கள். மரத்தைச் சுற்றிலும் இரண்டடி குறுக்களவுள்ளதாக ஒரு வட்டமான பாகத்தை விட்டுவிட்டு, அதற்கப்புறம் [illegible] ஒரு அடி ஆழமும் இரண்டடி அகலமும் உள்ளதாக ஒரு வட்டமான கிடங்கு வெட்டுவார்கள். [illegible] வேர் கவாத்து செய்வது [illegible] கிடங்கு வெட்டும்போது பெரிய [illegible]

அகப்பட்டால் அவைகளை வெட்டிவிடக் கூடாது. மெல்லிய சல்லிவேர்களைத் தான் நறுக்கிவிடவேண்டும். வேர்களை நறுக்குவதால் மரத்துக்கு உணவு போவது குறைந்து போய், இலைகளெல்லாம் வாடி உதிர்ந்து போகும். பிறகு, புது மண்ணோடு மூன்றுமடங்கு எருவைக் கலந்து கிடங்கில் போட்டு மூடவேண்டும். ஸாதாரணமாய் சாணத்தையாவது உலர்ந்த சரகலையாவது எருவாகப் போடுவது வழக்கம். சில தோட்டக்காரர்கள் சுண்ணாம்புக் காள்வாயின் சாம்பல் முதலியவைகளையும், பழைய காரையையும், சாம்பலையும் போடுவதுமுண்டு. மண் போட்டு மூடினதும் மழை பெய்யாவிட்டால் நான்கு நாளுக்கு ஒரு தடவை யதேஷ்டமாக ஜலம் பாய்ச்சவேண்டும். பிறகு மழை வந்தால் ஜலம் பாய்ச்சுவதை நிறுத்திவிட்டு, மரத்தடியில் ஜலம் தேங்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இரண்டு வாரத்துக்குள் மரத்தில் இலையும் பூவும் உண்டாகும். பிஞ்சுகள் காயாகிப் பழுக்க 9 மாஸம் செல்லும். இதே மாதிரி மார்கழி மாஸத்திலும் வேர்களை கபாத்து செய்யவேண்டும். வர்ஷத்துக்கு இரண்டு தடவை பழங் கொடுக்க விடுவது சரியல்ல. ஏனென்றால் மரங்கள் சீக்ரம் பலன் குறைந்து பட்டுப் போகும்.

மரங்கள் கட்டை பாய்ந்துகொண்டு வந்தால் ஆணி வேரை 15 அங்குலத்துக்குக் கீழே வெட்டிவிடவேண்டும்.

மாஸூல்.

கிச்சிலி மரங்கள் என்ன மாஸூல் கொடுக்குமென்பது நிலத்தின் வளமை, சீதோஷ்ண ஸ்திதி, சாகுபடி முறை ஆகிய இவைகளைப் பொறுத்திருக்கிறது. ஆகவே ஒவ்வொரு தேசத்திலும் மாஸூல் வித்யாஸப்படும். அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் ஒரு மரத்தில் 400 முதல் 600 வரை பழங்கள் கிடைக்கின்றன. அஸோர்ஸ் தீவிலும் ப்ளோரிடா நாட்டிலும் இதைவிட அதிகமாகவே மாஸூல் கிடைக்கிறது. மேற்கு இந்தியத் தீவுகளில் ஒரு மரத்தில் 3,000 முதல் 8,000 வரை பழங்கள் கிடைப்பதுமுண்டு. டாமினிகா தீவில் ஒரு மரத்தில் 14,000 பழங்கள் கூட கிடைத்திருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அங்கே ஸாதாரணமாக சராசரியில் மரத்துக்கு 8000 வீதம் மாஸூல் கிடைக்குமாம். நமது ராஜதானியில் மாஸூல் ரொம்ப குறைவாகத்தான் கிடைக்கிறது. ரொம்ப நல்ல மரங்களில் 400 அல்லது 500 பழங்களுக்குமேல் கிடைக்காது.

சென்னை ராஜதானியில் கிச்சிலி பயிராகும் இடங்கள்.

குடகில் நல்ல பழங்கள் கிடைக்கின்றன. சாத்துக்குடி என்னும் க்ராமத்தில் நல்ல பழங்களும் உண்டாகின்றன. சாத்துக்குடிப் பழங்கள் இப்போது வேறு பல இடங்களிலும் கிடைக்கின்றன. நெல்லூர் ஜில்லா ஸ்ரீ ஹரிக்கோட்டையில் நல்ல சாத்துக்குடிப் பழங்கள் உண்டாகின்றன. சேலத்துப் பழங்கள் ரொம்ப புளிப்பு. கோதாவரி ஜில்லாவில் பத்தாய்க் கமலா என்னும் உயர்ந்த கிச்சிலிப் பழங்கள் கிடைக்கின்றன. புத்தூர் ரெயில்வே ஸ்டேஷனுக்கு ஸமீபத்தில் ஒரு சிறு பள்ளத்தாக்கில் ரொம்ப உயர்ந்த பழங்கள் கிடைக்கின்றன. இவைகள் குடகுக் கமலாவளவு பெரியதாயிருக்கு மென்றாலும், தோல் சுளையோடு ஒட்டிக்கொண்டிருக்கும். குடகுப் பழத்தில் தோல் சுளையோடு ஒட்டிக்கொண்டிருப்பதில்லை. புத்தூர் பழத்துக்குச் சீனி யென்று பெயர். கர்நூல் ஜில்லாவிலும் நல்ல பழங்கள் உற்பத்தியாகின்றன.



## JEWEL MANIA.

## நகைப் பைத்யம்.

நகைகள் ஸ்த்ரீகளுக்கு அழகு உண்டாக்குகின்றன வென்றாலும், நகைகள் விஷயத்தில் ஸ்த்ரீகள் பைத்யமென்று சொல்லும்படி விசேஷ ப்ரியம் கொண்டுவிட்டால், குடும்பங்களில் பலவித கலகங்களும் மனஸ்தாபங்களும் உண்டாகின்றன.

உலகத்தில் ஸாதாரணமாகப் புருஷர்கள் தங்கள் மனைவி மக்களை அழகுபடுத்தும் பொருட்டு நகை செய்து போடுவது இயல்பு. பணக்காரக் குடும்பங்களில் நகைகள் செய்து போடுவது ச்ரமமா யிராதாகையால், அங்கே மனஸ்தாபங்கள் மற்ற விடங்களில் விடக் குறைவாகும். ஆனால் அங்கேயும் பெண்கள் தங்கள் சக்திக்கு மீறி ரொம்ப உயர்ந்த நகைகளை விரும்பினால், அப்போது கலகமும் மனஸ்தாபமும் நேரிடுவதுண்டு. பொதுவாய் ஏழைக் குடும்பங்களில் தான் நகை விஷயமான கலகங்களும் மனஸ்தாபங்களும் உண்டாகின்றன. ஏழை ஸ்த்ரீகள் பணக்காரப் பெண்களைப் பார்த்து, அவர்களுடைய நகைகளைப்போல் உயர்ந்தவைகளையே போட்டுக்கொள்ள இஷ்டப்படுகிறார்கள்.

கணவன் ஏழையாயிருந்தாலும் மனைவி அவனைக் கடன் வாங்கியாவது நகைசெய்து போடச் சொல்லி சிறிதுகாலம் ஸந்தோஷமடையலாம். ஆனால் வாங்கின கடனைத்தீர்க்க வகையில்லாமல் புருஷன் கஷ்டப்பட நேரிடுகிறது. புருஷன் கடன் தொந்தரவால் மனம் சலிக்கும்போது, மனைவி மாத்ரம் நகைபோட்டுக்கொண்டு ஆனந்தமடைவது அழகல்ல. கடன் நாளாவர்த்தியில் வட்டிசேர்ந்து பெருகிவிடுகிறது. கடனைத் தீர்க்க முடியாமையால் கடன்கொடுத்தவன் கோர்ட்மூலமாக அதை வஸூல் செய்கிறான். அப்போது கடன் தொகையோடு கோர்ட்டு செலவும் சேருகிறது. கோர்ட்டு மூலமாகக் கேட்டால் எப்படியும் கொடுத்தாக வேண்டுமாகையால், கடன் வாங்கிச்செய்த நகையோடு இதர நகைகளையும் விற்று, கடனை ஒழிக்கவேண்டியிருக்கிறது. புது வெள்ளம் பழைய வெள்ளத்தையும் அடித்துக்கொண்டு போகிறது.

ஏற்கனவே ஏதாவது நகைசெய்து போட்டுக்கொண்டிருப்பவர்களும் நகைப் பைத்யத்தால் பொருள் நஷ்டமும், மனஸ்தாபமும் அடைகிறார்கள். பக்கத்துவீட்டு ஸ்த்ரீகள் ஏதாவது புது நகை போட்டிருப்பதைப் பார்த்துவிட்டால், அந்த மாதிரி நகை தமக்கு வேண்டுமென்று சொல்லிப் புருஷனைத் தொந்தரவு செய்து, இருவர்க்குமுள்ள அன்யோன்யத்துக்கு இடையூறு தேடிக்கொள்வதுமுண்டு. மனைவியின் தொந்தரையை ஸகிக்காமல் புருஷன் நகைகளை அழித்துச் செய்ய ஸம்மதிக்க வேண்டியிருக்கிறது. அடிக்கடி அழித்துச் செய்வதால் கூலியும் சேதாரமும் அதிகமாகி, நகையின் பெறுமானம் குறைகிறது.

பெண்கள் பெரும்பாலும் பிறர் பார்த்து ச்லாகிக்கவேண்டியே நகை போட்டுக்கொள்ளுகிறதால், கோவில் முதலிய இடங்களுக்குப் போகும்போது அவைகளைப் போட்டுக் கொள்ளுகிறார்கள். அந்த விடங்களில் கூட்டம் அதிகமாகையால் திருட்டும் அதிகம். அநேக ஸ்த்ரீகள் உத்ஸவம் முதலிய [illegible] களில் நகைகளை பிழைக்க [illegible]

வேறு சில ஸ்த்ரீகள் தங்களுக்கு [illegible] தத்தில் நகையில்லாவிட்டாலும் [illegible] ளுக்கும் கல்யாண[illegible] போவது சரிய[illegible] என்[illegible] விடு[illegible]

போட்டுக்கொண்டு போவதுண்டு. போன விடத்தில் நகைகள் காணாமல் போனால், பொருள் நஷ்டத்தோடு இரவல் கொடுத்தவர்களிடம் மனஸ்தாபமும் நேரிடுகிறது.

பண்டைக்காலத்து ஸ்த்ரீகள் பலவகைப் பட்ட நகைகளைப் போட்டுக்கொண்டது போ லில்லாமல், தற்காலத்து ஸ்த்ரீகள் சில நகைகளை போட்டுக்கொள்ளுகிறார்கள். ஆனால் நகைகளின் தொகை ஸ்வல்பமாயிருந்தாலும் அவைகளின் விலை மாத்ரம் ரொம்ப அதிகமாயிருக்கிறது.

கல்யாணத்தில் நகைகள் செய்துபோட வேண்டுமென்ற வழக்கத்தால், பெண்ணைப் பெற்றோர்கள் அந்த ஸமயங்களில் அவஸரப் பட்டு பெண்ணின் அபிப்ராயத்தைக் கேட்காமல் மாமூல் நகைகளைச் செய்து போடுவதுண்டு. அவஸரப்படுவதால் தட்டானுக்குக் கூலி அதிகம் கொடுக்கவேண்டி யிருக்கிறது. அவன் அதிக மோசம் செய்வதற்கும் இட மேற்படுகிறது. போட்ட நகைகள் பெண்ணுக் கிஷ்டமானவையா யிராவிட்டால், சீக்ரத்தில் அவள் அவைகளை அழித்து, அந்தந்தக்காலத் துக்கேற்ற நகைகளைச் செய்துகொள்ளுகிறாள். இதனால் தட்டான்கூலியும், சேதாரமும் ஏற்படுகின்றன. எல்லா நகைகளையும் கல்யாணத்தில் செய்வதென்று வைத்துக்கொள்ளா விட்டால், இந்தக் கஷ்டங்கள் ஏற்படா. நகைகளை ஸாவதானமாய்ச் செய்வதானால், பெண்ணின் விருப்பத்தையும், அவச்யமானால், மாப்பிள்ளையின் விருப்பத்தையும் கேட்டுக் கொள்ளலாம். மாமூல் நகைகளைச் செய்யாமல் காலத்துக்கேற்ற நகைகளைச் செய்து போடலாம். அவஸரமில்லாததால் கல்வி ழைத்த நகைகளுக்கு வேண்டிய கற்களை நன்றாய்ப் பார்த்து வாங்கலாம்.

நகை செய்துபோடுவது ஸ்த்ரீகளுக்கு அழகு கொடுப்பதோடு நகைகள் அவர்களுக்கு ஆஸ்தியுமாகின்றனவாதலால், பெண்கள் நகைகள் போட்டுக்கொள்வது கூடவே கூடாதென்று சொல்லுவதற்குமில்லை. சக்திக்கு மீறி நகைகள் விஷயத்தில் பணம் செலவழிக்காமலும், அடிக்கடி நகைகளை அழிக்காமலும், கடன் வாங்கியாவது நகைகளைப் போட்டுக்கொள்ள வேண்டுமென்றிராமலும், கூட்டமான இடங்களில் நகைகளைப் போட்டுக்கொண்டு அவைகளைப் போக்கடிக்க இடமேற்படுத்திக் கொள்ளாமலுமிருந்தால், நகை போட்டுக்கொள்ள விரும்புவது நகைப் பைத்யமாக மாட்டாது.

---

## தமிழ் நாவல்கள்.

607. கிருஷ்ணவேணி ... 0 12
இது மாயவரம் வக்கீல் எ. நடேசபிள்ளை இயற்றிய ஒரு நாவல்.

271. மனோன்மணி ... 0 12
மூ. கோவிந்தஸாமி அய்யர் இயற்றியது.

727. சங்கநிதி அல்லது செல்வராஜன் ... 0 12
ஆரணி - குப்புஸாமி முதலியார் இயற்றிய ஒரு துப்பறியும் நாவல்.

745. கமல லோசனி ... 0 12
கே. எஸ். வைத்யநாதய்யர் இயற்றிய ஒரு துப்பறியும் தமிழ் நாவல். சித்ரப்படங்கள் உள்ளது.

211. வனரோஜா ... 0 12
எம். எ. சடகோபாசார்யர் எழுதிய நாவல்.

214. சந்தனுவதி ... 0 12
எம். எ. சடகோபாசார்யர் எழுதிய நாவல்.

217. கோகிலாம்பாள் ... 0 12
பண்டித மாணிக்கவாசகம் பிள்ளை எழுதிய நாவல்.

213. தனஞ்ஜெயன் ... 0 12
எம். எ. சடகோபாசார்யர் இயற்றிய நாவல்.

312. தனபாலன் 1-ம் பாகம் ... 0 12

313. ஷை 2-ம் பாகம் ... 0 12
நாகை - வி. கோபாலக்ருஷ்ணன் இயற்றிய நாவல்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# ஜனாபிமானி.

தபால் சார்ஜ் உள்பட
வர்ஷ சந்தா ரூபா
உள்நாடு 4.
வெளிநாடு 6.

THE
JANABHIMANI.

ஜி. எ. வைத்யராமன்
அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி௵ சித்திரை௴, APRIL—MAY, 1918. { ஸஞ்சிகை 4. No. 4.

## EDITORIAL NOTES.
## பத்ராதிபர் குறிப்புகள்.

**சென்னையில் கோவாபரேஷன்.**

1917-ம் வர்ஷம் ஜூன்மாஸத்தோடு முடிந்த வர்ஷத்தில் சென்னையில் கோவாபரேஷன் சற்று அபிவ்ருத்தி யடைந்ததென்று தெரிகிறது.

சென்னை ஸென்ட்ரல் அர்பன் பாங்கியானது ப்ரொவின்ஷ்யல் பாங்கியாகமாறி நடந்துவருகிறது. மூன்று ஸென்ட்ரல் பாங்கிகள் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன. ஸங்கங்களின் தொகையும் 1800-லிருந்து 2216-க்கு உயர்ந்தது. அவைகளினுடைய மூலதனம் 169 லக்ஷம் ரூபாயிலிருந்து 205 லக்ஷம் ரூபாய்க்கு உயர்ந்தது. இதற்கேற்றாற்போல ரிஸர்வ் பண்டும், செலுத்தப்பட்ட பங்கு மூலதனமும் அதிகரித்தன. ஸ்தல யூனியன்களுடைய தொகை 31-லிருந்து 57-க்கு உயர்ந்தது. அவைகளில் சேர்ந்துள்ள ஸங்கங்களின் தொகையும் 604-லிருந்து 1294-க்கு உயர்ந்திருக்கிறது. இவைகளில் சேராதவைகளில், 464-ஸங்கங்களை மேற்பார்வைசெய்ய ஸென்ட்ரல் பாங்கிகளும் ஜில்லா யூனியன்களும் தக்க ஏற்பாடுகள் செய்திருக்கின்றன.

ஆகவே 387 ஸங்கங்கள்தான் மேற்பார்வைக்கு உள்படாமல் இருக்கின்றன. மொத்த ஸங்கங்களின் தொகையில் இது 100-க்கு 18-வீதமாகிறது. மெம்பர்கள் கொடுக்கவேண்டிய கடன் அஸல் வட்டித் தொகையை வஸூலிப்பது விஷயத்தில் இன்னும் சீர்திருத்தம் ஏற்படவேண்டியிருக்கிறது. ஸென்ட்ரல் பாங்கிகள் விஷயத்தில் இந்தக்குறை அதிகமாக இல்லை. வ்யவஸாயிகளுக்கான ஸங்கங்கள் விஷயத்தில் தான் வஸூலாகவேண்டிய தொகையில் பெரும்பாகம் நிலுவையாக இருப்பதாகத் தெரிகிறது. முக்யமாக தென்னாற்காடு, மதுரை, ராமநாதபுரம் ஆகிய இந்த ஜில்லாக்களில் தான் இந்தக் குறை ரொம்ப அதிகம். இந்தக் குறை நீரும்வரையில் ஜனங்களிடம் கோவாபரேஷனின் [illegible] அதிகமாகப் பரவி அவர்களிடம் கோவாபரேஷனின் [illegible], பணத்தை திருப்பிக் கொடுப்பதில் ஒழுங்கு முதலிய [illegible] ஓங்கியிருப்பதாக [illegible] இடமேற்படாது. மேலே சொன்னபடி மேற்பார்வை யூனியன்கள் [illegible]

ஏற்பட்டிருப்பதால் இந்தக் குறை சீக்ரத்தில் நிவர்த்தியாகிவிடலாம். இது விஷயத்தில் கவர்ன்மெண்டாரேயன்றி கோவாபரேடர்களும் அதிக ஊக்கமெடுத்துக்கொண்டு உழைக்கவேண்டியது அவச்யமாகும். இந்தக் குறையைப்பற்றி கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார் தனி ரிபோர்ட் ஒன்று எழுதி வருவதாகத் தெரிகிறது.

நாணய ஸங்கங்கள் ஒழிந்த இதர ஸங்கங்கள்.

நமது ராஜதானியில் கடன்கொடுக்கும் ஸங்கங்களல்லாத இதர ஸங்கங்களின் தொகை அதிகமில்லை. அவைகளின் தொகை அதிகரிப்பதைக் கொண்டுதான் நமதுதேசத்தில் கோவாபரேஷன் பரவியிருக்கிறதா என்று பார்க்கவேண்டுமாகையால், அவைகளை அதிகப்படுத்துவதில் யாவரும் முயலவேண்டும். சென்ற வர்ஷத்தில் வ்யவஸாயிகளுக்குள் இவ்வகை ஸங்கங்கள் 14 இருந்தன. இவற்றில் 12, வாங்கி விற்கும் ஸங்கங்கள். 2, பொருள்செய்துவிற்கும் ஸங்கங்கள். கவர்ன்மெண்டார் சென்ற வர்ஷக் கடைசியில் வ்யவஸாயிகளுக்கான நாணய ஸங்கங்கள், கோவாபரேஷன் முறையில் வாங்குதல், விற்றல் முதலிய வேலைகள் செய்யலாமென்று அனுமதி கொடுத்தார்கள். தாமஸித்து உத்தரவு கொடுத்ததால், வ்யவஸாயிகளுக்குள் இந்த முறை பரவ ஸாவகாசம் இல்லை. இந்த வர்ஷத்தில் எத்தனை ஸங்கங்கள் இந்த ஏற்பாட்டால் பயனடைந்தனவென்பதைப் பார்த்தால் கோவாபரேஷனின் உண்மையான அபிவ்ருத்தி இவ்வளவு என்பது தெரியவரும்.

வ்யவஸாயிகளுக்கான நாணயமல்லாத ஸங்கங்கள் ஐந்தில் வ்யவஸாயிகள் விதை எருக்களை மொத்தத்தில் வாங்கி மெம்பர்களுக்கு விற்றார்கள். ஒரு ஸங்கத்தில் இவைகளோடு கலப்பைகளும் வாங்கினார்கள். மூன்று ஸங்கங்களில் மொத்த விற்பனை நடந்தது. அவைகளுள் க்ருஷ்ணாவிலுள்ள குண்டு கோலனு ஸங்கத்தார் மெம்பர்களைச் சேர்ந்த 100 மூட்டை நெல்லை ஏலூருக்குக்கொண்டுபோய் 100-க்கு 3 விதம் அதிக விலைக்கு விற்றுக் கொடுத்தார்கள். ஹிந்துபூர் நாணய ஸங்கத்தார் மெம்பர்களின் நெல்லை ஏலத்தில் விற்றுக் கொடுத்தார்கள். இதனால் 100-க்கு 11 விதம் லாபமென்று தெரிகிறது. கேட்டி யூனியன் ப்ரெஸிடெண்ட் அந்த யூனியனைச் சேர்ந்த ஸங்கங்களிலுள்ள சில மெம்பர்களின் உருளைக்கிழங்கு மாஸுலை 15,000 ரூபாய்க்கு மொத்தத்தில் விற்றுக்கொடுத்தார். 100-க்கு 3 விதம் லாபம் கிடைத்தது. இவற்றால் தெரிவதென்னவென்றால் தக்க முன்யோசனையும் ஊக்கமும் இருந்தால் மொத்தத்தில் விற்பனை செய்வதாலும், வாங்குவதாலும் நல்ல பலன் உண்டென்று தெரிகிறது.

இவைகளைத் தவிர 2-ஸங்கங்கள் விலையுயர்ந்த கருவிகளை வாங்கி பொதுவில் உபயோகித்துக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கின்றன. நீடாமங்கலத்தில் ஒரு கோவாபரேடிவ் எரு ஸங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸங்கத்தார் எலும்பு உரங்களையும் பாஸ்பாடிக் எருக்களையும் தயார்செய்து மெம்பர்களுக்குக் குறைந்த விலைக்கு விற்பதோடு, இதர எருக்களை வாங்கி விற்றும் வருகிறார்கள்.

கோதாவரி ஜில்லாவிலுள்ள தல்லவேரு கோவாபரேடிவ் ஸங்கத்தார் 160 ஏக்கரா விஸ்தீரணமுள்ள தரிசு நிலத்தை 11-வர்ஷத்துக்குக் குத்தகை எடுத்திருக்கிறார்கள். அந்த நிலத்தைப் பண்படுத்தி கோவாபரேஷன் முறையில் சாகுபடி செய்ய உத்தேசித்திருக்கிறார்கள்.

இனி விவஸாயிகளல்லாதார் நடத்தும் நாணய ஸங்கங்கள் ஒழிந்த இதர ஸங்கங்களைப்பற்றிச் சொல்லுவோம்.



பொருள்கள் வாங்குவது, செய்வது, விற்பது ஆகிய இந்தத் தொழில்களைச் செய்து வரும் ஸங்கங்கள் 14-லிருந்து, 17-ஆக உயர்ந்தன. புது ஸங்கங்களில் 2, ஸ்டோர்களாகும். மற்றது பாஹம்பூரில் நெசவுக்காரர்கள் ஸங்கமாகும். இந்த நெசவுக்கார ஸங்கத்தைப் பற்றி சென்ற வர்ஷம் ஐப்பசி மாஸத்து பத்ரிகையில் விரிவாக எழுதியிருக்கிறோம். இந்த நெசவுக்கார ஸங்கத்தைத் தவிர காஞ்சீபுரத்திலும் ஒரு ஸங்கம் சில காலமாக நடந்துவருகிறது.

ஸ்டோர்ஸ் ஸங்கங்களில் திருவல்லிக்கேணி ஸ்டோரைத் தவிர மற்றவைகளெல்லாம் திருப்தியாக நடக்கவில்லையென்று தெரிகிறது. அவற்றுள் குடிவாடா ஸ்டோர்ஸ் மூடப்பட்டுப் போயிற்று. ஸ்டோர்கள் த்ருப்தியாக நடந்துவராததற்கு முக்யமாக இரண்டு காரணங்கள் சொல்லப் படுகின்றன. (1) மானேஜர்கள் ஸாமான்களை நல்லவைகளாகவும் சரியான காலத்திலும் இடத்திலும் வாங்கத் தெரியாமை. (2) மெம்பர்கள் ஸ்டோர்களிலேயே தங்களுக்கு வேண்டிய ஸாமான்களை வாங்காமல் இதர இடங்களிலும் வாங்குவதல், ஆகிய இவைகளாகும்.

இரண்டு கட்டிட ஸங்கங்கள் புதிதாக ஏற்பட்டன. ஏற்கனவேயுள்ள கட்டிட ஸங்கங்களில் கும்பகோணம், கோயம்புத்தூர் ஆகிய இவற்றிலுள்ளவைகளில்தான் அதிக வேலை நடந்தன. மற்றவைகளில் அதிகமில்லை.

தென் கன்னடத்தில் ஒரு கோவாபரேடிவ் அச்சாபீஸ் ஏற்பட்டிருக்கிறது. அதில் சேர்ந்துள்ள ஸங்கங்களுக்கு வேண்டிய அச்சுவேலையைச் செய்து கொடுப்பதே அதன் நோக்கமாகும்.

சென்னை கவர்ன்மெண்டும் நாட்டு வைத்யமும்.

ஏப்ரல் மாஸம் 3-ந்தேதி நடந்த சென்னை சட்ட ஸபையில் ஆனரபிள் மிஸ்டர் கா. ஸுப. க்ருஷ்ணராவ் சென்னை [illegible] பதிவு [illegible]த்தைத் திருத்த ஒரு மசோதா கொண்டுவந்தார். அதன் நோக்கமென்னவென்றால், மேல்நாட்டு வைத்தியத்தில் பயிற்சியடைந்து தக்க வைத்யர் என ரெஜிஸ்டர் செய்யப்பட்ட டாக்டர்கள் ஆயுர்வேத யூனானி வைத்யர்களுடன் கலந்து கொள்ளலாமென்றும், அதனால் ரெஜிஸ்டரான வைத்யர்களுக்கு யாதொரு நிர்ப்பந்தமும் ஏற்படக் கூடாதென்பதுமே. முதல் முதலில் சென்னை வைத்ய ரெஜிஸ்ட்ரேஷன் மசோதா ஆலோசனைக்கு வந்தபோது, அந்த மசோதாவால் நாட்டு வைத்ய முறைகளுக்குக் கெடுதலேற்படுமென்று பலர் பயப்பட்டார்கள். அதற்கேற்றாற்போலவே டாக்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யர் விஷயத்தில் நேர்ந்தது. அவர் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு ஆயுர்வேத தர்ம ஆஸ்பத்ரியில் ஒரு நிர்வாகஸ்தராக இருந்தார். வைத்ய ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்டின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள வைத்ய கௌன்ஸிலார், டாக்டர் க்ருஷ்ணஸாமி அய்யர் ஆயுர்வேத முறைப்படி வைத்யம் செய்பவர்களோடு கலந்து கொண்டது மேல்நாட்டு வைத்யத்தொழிலின் ஸம்ப்ரதாயத்துக்கு விரோதமானது என்று அபிப்ராயப்பட்டு, அவரது பெயரை ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்யர்களின் ஜாப்தாவிலிருந்து எடுத்து விடுவதாக பயமுறுத்தினார்கள். அப்போது பொது ஜனங்கள் வைத்யச் சட்டத்தாலும் வைத்ய கௌன்ஸிலாலும் அதிக பாதக மேற்பட்டதென்று கண்டுகொண்டு, அந்தச் சட்டத்தின் கடுமையைக் குறைக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டார்கள். கவர்ன்மெண்டின் அனுமதியின்பேரில் டாக்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யர் [illegible] [illegible] கவர்ன்மெண்டார் [illegible] [illegible] [illegible] அந்தச் [illegible] [illegible]

பட்ட வைத்யர்கள் ஆயுர்வேத வைத்யர்களுடன் கலந்து கொள்ளுவதென்றால் பயப்படவேண்டியிருக்கிறது. வைத்ய கௌன்ஸிலார் என்ன சொல்லுகிறார்களோ என்ற பயம் ஸதா இருந்து கொண்டிருக்கிறது. இதனால் ஆயுர்வேத வைத்யத்துக்கு மேல்நாட்டு வைத்யர்களுடைய அநுபோகம் கிடைப்பதற்கில்லை.

இந்தக் குறையை நீக்கவே மிஸ்டர் க்ருஷ்ணராவ் மேற்சொன்ன சட்டத்தைக் கொண்டுவந்தார். ஆனால் கவர்ன்மெண்டார் அதற்கு ஸம்மதிக்கவில்லை. இதனால் அது தள்ளுபடியாகிவிட்டது. வைத்ய ரெஜிஸ்ட்ரேஷன் சட்டத்தால் ஆயுர்வேத யுனானிவைத்ய முறைகளுக்கு யாதொரு கெடுதலும் மேற்படாதென்றே அவர்கள் இன்னும் சொல்லி வருகிறார்கள். டாக்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யர் கேஸுக்குப் பிறகு கவர்ன்மெண்டார் சொல்லும் இந்த ஸமாதானத்தில் நாம் த்ருப்தியடைய முடியவில்லை.

கவர்ன்மெண்டாருடைய இப்படி அபிப்ராயம் இருக்கும் வரையில், ஆயுர்வேத யுனானி வைத்யமுறைகளுக்கு அபிவ்ருத்தி ஏற்படுவது முடியாது. இதனால் ஜனங்களுக்கும் ஒருவிதத்தில் கெடுதலாக ஏற்படுகிறது. நாட்டு வைத்யர்களாகட்டும், மேல்நாட்டு வைத்யர்களாகட்டும், நோயாளிகளுக்கு வைத்யம் செய்யும்போது, ஒருவரோடொருவர் கலந்து ஆலோசித்து வைத்யம் செய்யமுடியாது. அவர்கள் தங்களுக்குத் தோன்றினபடி தான் செய்ய வேண்டும். ரணவைத்யத்தில் பயிற்சி இல்லாத நாட்டு வைத்யன் அது ஒழிந்த மற்ற வைத்ய முறைகளைத்தான் அநுஷ்டிக்க வேண்டுமென்றாகிறது, அது தெரிந்த மேல்நாட்டு வைத்யர்களை உதவிக்குக் கூப்பிடுவதற்கில்லை. மேல்நாட்டு வைத்யர்களின் நிலைமையும் இப்படியே. இப்படிப்பட்ட நிலைமையில் ஜனங்களின் கதி பரிதபிக்கத் தக்கதாகிறதென்பதில் ஸந்தேகமென்ன?

**நமது கடமை.**

இப்படிப்பட்ட நிலைமையில் நமது கடமையென்ன? உண்மையில் நமக்கு நாட்டு முறையில் நம்பிக்கையிருந்து, அவைகளால் நமது தேசத்தார்க்கு அதிக நன்மை ஏற்படுமென்று நாம் எண்ணினால், நாம் கவர்ன்மெண்டின் உதவியை மட்டும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. ஆயுர்வேத யூனானி முறைகளைப் பரிசீலனை செய்ய கவர்ன்மெண்டார் ஒரு உத்யோகஸ்தரை நியமிக்கப்போவதாக ஏற்கனவே சொல்லியும், இன்னும் ஒருவரையும் அந்த வேலைக்கு நியமிக்கக்காணோம். எப்போது நியமிப்பார்களோ தெரியவில்லை. அந்த உத்யோகஸ்தர் இந்தியராக இருந்தால் நலமாயிருக்கும்.

இதோடு பணம் படைத்த பொதுஜனங்களை இவ்வித ஆராய்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடு செய்து, ஏற்கனவேயுள்ள நாட்டு வைத்ய பாடசாலைகளை பலப்படுத்தினால் எவ்வளவோ ஸாதகமுண்டு. அதிக சம்பளம் கொடுத்தால் மேல்நாட்டு வைத்யம் கற்ற இந்திய வைத்யர்கள், மெடிகல் ரெஜிஸ்ட்ரேஷன் சட்டத்துக்கு பயப்படாமல், அதாவது அந்தச் சட்டத்தால் ஏற்படும் ஸாதகங்களை இழக்க தைர்யங்கொண்டு, ஆயுர்வேத யுனானி வைத்யர்களோடு கலந்துகொள்ள முன்வரலாம். இவ்விஷயத்தில் நாமே நமக்கு உதவி செய்து கொள்ளாமல், கவர்ன்மெண்டையே உதவிக்கு எதிர் பார்ப்பது அதிக பலன் கொடுக்காதென்று தோன்றுகிறது.

**ஆகாரப் பொருள்களில் கலப்பு மோசம் செய்வதைத் தடுத்தல்.**

ஆகாரப்பொருள்களில் கலப்பு மோசம் செய்வதைத் தடுப்பதற்காக கவர்ன்மெண்டார் ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறதைப்பற்றி நாம் ஸந்தோஷிக்கிறோம். நெய், எண்ணெய், பால் முதலிய ஆகாரப் பொருள்



கள் சுத்தமானவைகளாகக் கிடைப்பது இப்போது அரிதாகிவிட்டது. அவைகளை உபயோகிக்காமலிருக்க எவருக்கும் முடிவதில்லையாகையால், வ்யாபாரிகள் தாங்கள் எதைவிற்றாலும் ஜனங்கள் வாங்கித்தான் தீரவேண்டுமென்ற தைர்யத்தால், தகாதவிதமாகக் கலப்படம் செய்து விடுகிறார்கள். இப்போதுள்ள சட்டங்களில் இப்படிப்பட்ட மோசங்களைத் தடுக்கவும், மோசம் செய்பவர்களைத் தண்டிக்கவும் போதுமான ஸௌகர்யங்கள் இல்லை. தற்போது கலப்படம் செய்யும் வழக்கம் ரொம்ப அதிகமாக இருப்பதை உத்தேசித்து இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தில் கலப்படம் செய்யும் வழக்கத்தைத் தடுக்கும் அதிகாரம் ஸ்தல அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களாவன, முனிஸிபாலிடிகளில் கமிஷனர், சேர்மன், ப்ரெஸிடென்ட், முனிஸிபாலிடி இல்லாத ப்ரதேசங்களில் கவர்ன்மெண்டால் நியமிக்கப்படும் உத்யோகஸ்தர்கள் அல்லது அவர்கள் அதிகாரம் பெற்ற இதர உத்யோகஸ்தர்கள் ஆகிய இவர்களாகும்.

ஆகாரம் முதலியவைகளை கலப்படம் ஆனவையென்று சொல்லுவதற்கு முன்னால் அவைகளை சோதிக்க வேண்டுமாகையால், ஆகார வஸ்துக்களை சோதிக்க பப்ளிக் அனலிஸ்ட் என்னும் வஸ்து பரீக்ஷகர்கள் வேண்டுமிடங்களில் நியமிக்கப்படுவார்கள்.

இந்த சட்டத்தின்படி வஸ்து பரீக்ஷகர் நியமிக்கவும், இதர உபகரணங்களை அமைக்கவும் காலதாமஸ மேற்படுமாகையால் கவர்ன்மெண்டார் இந்தச் சட்டத்தை எல்லா இடங்களுக்கும் உடனே உபயோகப்படுத்தாமல், எந்தெந்த இடங்களில் எப்போது அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமோ அப்போது அமுலுக்குக் கொண்டுவருவார்கள்.

உதாரணமாக க்ராமாந்தரங்களில் இந்தச் சட்டம் அவ்வளவு தேவையாயிராது. ஆனால் அங்கே நடக்கும் சந்தை, திருவிழா முதலிய ஸமயங்களில் மாத்ரம் வேண்டியிருக்கும். அப்போது மாத்ரம் இந்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவார்கள்.

**குற்றமான கலப்படங்களும் குற்றமில்லாதவைகளும்.**

இந்தச் சட்டத்தின்படி (1) யாதொரு நபர் அல்லது வ்யாபாரி க்ரயத்துக்கு வாங்குபவர் கேட்கும் வஸ்துவின் தன்மை, அம்சம், கலப்பு அல்லது லக்ஷணம் பெற்றிராத எந்த ஆகாரத்தையாகிலும் விற்றாலும்,

(2) யாதொரு தன்மை, அம்சம், கலப்பு அல்லது லக்ஷணம் பெற்றிருப்பதாக பொருள்படுகிற அல்லது சொல்லப்படுகிற யாதொரு ஆகாரம் அந்தப்படி யிராவிட்டால் அந்த ஆகாரத்தை விற்பனைக்காகச் செய்தாலும், விற்பதாகச் சொன்னாலும், விலை கூறிக் கொண்டு திரிந்தாலும், விற்றாலும்,

(3) யாதொரு ஆகாரத்தின் தன்மை, அம்சம், கலப்பு அல்லது லக்ஷணத்தைத் தீங்கு உண்டாக்கும்படி பாதிக்கும் விதமாக அதிலிருந்து அதன் யாதொரு பாகத்தைப் பிரித்தெடுத்து மாற்றியிருக்கும் ஸ்திதியில், அப்படி மாற்றியிருப்பதைப்பற்றித் தெரிவிக்காமலே அதை விற்கவேண்டுமென்னும் எண்ணத்துடன், அந்தப்படி பிரித்தெடுத்தாலும், அப்படி மாற்றப்பட்ட யாதொரு வஸ்துவை மாற்றியிருக்கும் விஷயத்தை வெளியிடாமலே விற்றாலும்,

(4) ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு சுத்தமாயிராத பால், பாலேடு, வெண்ணெய், நெய் அல்லது பால்கட்டியை விற்றாலும்,

அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்துக்கும், முதல் குற்றத்துக்காக நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும், பிந்திய ஒவ்வொரு குற்றத்

M24,N09 JD
N09. W
800 00
161167

துக்காகவும் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும் விதிக்கப்படும்.

ஆனால் ஒரு பொருளின் அளவையும் நிறையையும் அதிகமாக்கவேண்டுமென்ற நோக்கங் கொள்ளாமல், பொருள் கெடாமலிருக்கவும், அதை ஸௌலபமாகக் கொண்டுபோகவும் வேண்டி தீங்கு உண்டாக்காத ஏதாவது ஒரு வஸ்துவை ஆகார பொருளில் கலந்தால், அது குற்றமாகாது. ஒரு பொருள் குறிப்பிட்ட அளவு சுத்தமில்லை யென்றாவது, அல்லது ஆகாரப்பொருளில் கெடுதல் உண்டாக்காத இன்னின்ன பொருள் கலந்திருக்கிறதென்றாவது ஒரு சீட்டு எழுதி, ஆகாரம் முதலிய பொருள்கள் வைத்துள்ள பாத்ரத்தில் ஒட்டியிருந்து அதன் விஷயத்தை வாங்குபவருக்குத் தெரிவித்தால் அப்போது குற்றமில்லை.

விற்பனைக்கு ஆகாரவகைகள் செய்பவன் ஒரு குறிப்பிட்ட ஆகாரப்பொருளை ஆக்ஷேபனைக் கிடமானதாகச் செய்துவைத்திருந்து, அதிகாரிகள் கேட்கும்போது, அது விற்பனைக்காக இல்லையென்று சொன்னால் அவனை விட்டு விடமாட்டார்கள். அவன் கலப்பு மோசம் செய்தவனே. கடைக்காரர்கள் வெளியூரிலிருந்து உபயோகமற்ற நெய் முதலியவைகளை வாங்கி வைத்துக்கொண்டு, உபயோகமற்ற நெய் என்பது தெரியாதென்று சொல்வதற்குமில்லை. அவர்கள் வாங்கும்போதே பார்த்துத் தான் வாங்கவேண்டும். ஆகாரக் கடைகள், ஸோடா முதலிய பானவகை செய்யும் சாலை முதலியவைகளில் முதலாளிகள் தங்களிடம் வேலைசெய்யும் விப்பந்திகள் கலப்பட மோசம் செய்யாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் அவர்களும் குற்றவாளியாக வேண்டும். தாங்கள் ரொம்ப ஜாக்ரதையாய் இருந்ததாக ரூபிக்கும் பக்ஷத்தில், அவர்களிடம் உள்ள விப்பந்திகளில் குற்றம் செய்தவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்.

ஸ்தல அதிகாரிகள் ஆகாரம் பானம் முதலியவைகள் செய்யப்படும் இடங்களுக்கு எப்போது வேண்டுமென்றாலும் போய், அவைகளைப் பார்வையிடலாம். அப்படிப் போவதைத் தடுக்கக்கூடாது. தடுத்தால் 50 ரூபாய் வரையில் அபராதம் உண்டு. பார்வையிட்ட ஸாமான்களில் ஏதாவது கலப்படமாக இருப்பதாய்த் தெரிந்தால், அந்த பொருளை வஸ்து பரீக்ஷகருக்கு அனுப்பி சோதிக்கச் செய்யலாம். பொது ஜனங்களும்கூட தாங்கள் வாங்கும் ஆகாரஸாமான்களை, வஸ்து பரீக்ஷகருக்குப் பணம் கொடுத்து சோதிக்கச்செய்யலாம். எந்த ஆகாரப் பொருளாவது கலப்படம் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதனால் அது மனிதர் சாப்பாடுவதற்கு ஏற்றதல்லவென்றும் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குத் தெரிந்தால், அந்த ஸாமான்களை நாசம் செய்துவிட அவர்கள் உத்தரவிடலாம்.

இந்தச் சட்டத்தினால் பொது ஜனங்களுக்கு அதிக ஸாதகமேற்படுமாகையால், இது சட்டமானவுடன் முக்யமான பட்டணங்களிலும் மற்ற முக்யமான ஸ்தலங்களிலும் இந்த சட்டத்தை அமுலுக்குக்கொண்டுவர கவர்ன்மெண்டாரும் ஸ்தலஸ்தாபனங்களும் சீக்ரம் முயற்சி செய்யவேண்டியது அவச்யமாகும்.

சென்னையும் குடியும்.

சென்ற வர்ஷம் சென்னை கவர்ன்மெண்டுக்கு மதுபான வரியால் ஏராளமான வரும்படி கிடைத்திருக்கிறது. சென்ற வர்ஷத்து முதல் திட்டம் போட்டபோது, அவ்வர்ஷத்தில் முந்தின வர்ஷத்தைவிட 4 லக்ஷம் ரூபாய் அதிகமாகக் கிடைக்குமென்று எண்ணியிருந்தார்கள். ஆனால் அதைவிட 13·10 லக்ஷம் ரூபாய் அதிகமாகக் கிடைத்திருக்கிறது. இந்த அதிக வரும்படியைப் பற்றி கவர்ன்மெண்டார் சொல்லுவதென்னவென்றால், குடி வரும்படி அதிகம் [illegible]தைக்கொண்டு குடி வழக்கம் அதிகரித்து



விட்டதென்று எண்ணக்கூடாது; உண்மையில் மொத்தத்தில் செலவழிந்த மதுபானங்களின் அளவு குறைந்து போயிருக்கிறது; வரியை அதிகமாக்கியிருப்பதால் குறைந்த அளவு மதுபானத்திலேயே அதிகவரி கிடைத்திருக்கிறது என்பதே. இப்படிச் சொன்னதற்கு ஆதாரமாக கவர்ன்மெண்டார் சில கணக்குகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவைகளை இங்கு எழுதுகிறோம்.

| வர்ஷம். | அன்யநாட்டு. ஓய்ன். காலன். | அன்யநாட்டு. சாராயம் கள். காலன். | அன்யநாட்டு. பீர். காலன். | நாட்டு சாராயங்கள். காலன். | கள். காலன். | மொத்தம் வரும்படி. ரூபாய். |
|---|---|---|---|---|---|---|
| 1912—1913 ... | 85,817 | 87,492 | 581,465 | 1,773,679 | 111,787,131 | 3,31,86,831 |
| 1913—1914 ... | 29,520 | 162,164 | 662,785 | 1,782,032 | 112,845,489 | 3,65,11,075 |
| 1914—1915 ... | 49,354 | 228,095 | 1,140,630 | 1,646,649 | 107,280,884 | 3,66,18,734 |
| 1915—1916 ... | 24,924 | 173,781 | 845,051 | 1,491,470 | 103,932,557 | 3,51,18,758 |
| 1916—1917 ... | 28,340 | 145,083 | 792,413 | 1,644,466 | 105,936,414 | 3,72,02,608 |
| 1917—1918* ... | | விவரம் தெரியவில்லை. | | 1,662,800 | 106,712,000 | 4,04,21,000 |

* இந்த வர்ஷத்திய கணக்குகள் உத்தேசமானவை.

குடியின் அளவு குறையவில்லை.

கவர்ன்மெண்டார் தெரிவித்துள்ள கணக்குகளின்படி பார்த்தாலும், குடி அதிகம் குறைந்துவிடவில்லை யென்றே தெரிகிறது. சீமை மதுபானங்கள் அதிகம் வராததற்குக் காரணம் யுத்தத்தால் அவைகள் வருவதற்கு அஸௌகர்யங்கள் ஏற்பட்டிருப்பதேயென்று தோன்றுகிறது. இருந்தாலும் 1912-13-ம் வர்ஷத்திய கணக்கை ஆதாரமாக வைத்துப்பார்த்தால் பீர் சாராயத்தின் அளவு சண்டை நடக்கும் இந்த ஸமயத்தில் கூட நூற்றுக்கு 30 வீதம் அதிகமாகியிருக்கிறது. யுத்தம் ஆரம்பித்த வர்ஷத்தில் கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாயிருந்தது. இதர சாராயவகைகளும் அதிகமா[illegible] உபயோகப்பட்டுவருகின்றன. 1912-13-ம் வர்ஷத்தில் இதர சாராயவகைகள் 87 ஆயிரம் காலன் உபயோகப்பட்டிருக்க, 1916-17-ம் வர்ஷத்தில் 1,45,083 காலன் செலவாகியிருக்கிறது. 1914-15-ம் வர்ஷத்தில் 2,28,095 காலன் செலவாயிற்று. ஓய்ன் ஒன்றுதான் குறைவாகக் காட்டுகிறது. நாட்டு மதுபானங்களில் கள்ளின் அளவு குறைந்ததைப் பற்றி ஸந்தோஷிக்கலாமென்றாலும், நாட்டு சாராயங்களின் அளவு வெகுவாய்க் குறையவில்லை. நடுவில் 1915-16-ம் வர்ஷத்தில்தான் சற்றுக்குறைவாயிருந்தது. அது முதல் அதிகரித்துக்கொண்டே வருகிறது. ஆகவே கவர்ன்மெண்டார் குடியதிகரிக்கவில்லையென்று சொல்லி திருப்தியாயிருப்பது சரியல்ல.

குடி ஸம்பந்தமான சில சீர்திருத்தங்கள்.

நாட்டு மதுபானங்கள் விற்பது [illegible] கவர்ன்மெண்டார் [illegible] சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளில் [illegible]முதலாவது:—சாராயக் கடைகளில் காலை 9½-மணியிலிருந்து மாலை [illegible] தான் சாராயம் விற்

லாம். தொழில்சாலைகளுக்குப் பக்கத்திலும் வேலையாட்கள் அதிகமாகக் குடியிருக்கும் இடங்களுக்குப் பக்கத்திலும் உள்ள சாராயக் கடைகளை மூடிவிட கலெக்டர்களுக்கு அதிகாரம் உண்டு. இது முடியாத ஸந்தர்ப்பங்களில் கூலியாட்களுக்கு சம்பளம் கொடுக்கும் நாட்களில் பிற்பகலில் கடைகளை மூடச் சொல்லலாம். மேலும் சந்தைகள், திருவிழாக்கள் முதலிய நாட்களில் கடைகளை மூடும்படி உத்தரவுசெய்ய கவர்ன்மெண்டார் கலெக்டருக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். கலெக்டர்களுக்கு உண்மையில் குடியை நிறுத்த இஷ்டம் இருக்கும்பக்ஷத்தில், இந்த சீர்திருத்தங்கள் உபயோகமானவையே. கலெக்டர்களுக்கு குடி வருமானம் குறைந்தாலும் குறையட்டும், ஜனங்கள் திருந்தினால் போதுமென்ற எண்ணம் ஏற்படுமோ என்பது தான் ஸந்தேகம்.

சென்ற காளயுக்தி வர்ஷம்.

இப்போதைக்கு 60-வர்ஷத்துக்கு முந்தி வந்த காளயுக்தி வர்ஷத்திய ஸம்பவங்களில் சிலவற்றை அப்போது பார்த்திருந்த ஒருவர் நமக்கு எழுதியிருக்கிறார். அவர் அப்போது கும்பகோணத்தில் 8-வது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தாராம்.

அந்த வர்ஷம் கும்பகோணத்தில் அநேக ஜனங்கள் வீடுகளிலும் நெல்மண்டிகளிலும் புகுந்து கொள்ளையிட்டார்கள். அந்தக் காலத்தில் போலீஸார் கிடையாதாம். தாலூக்கா ஆபீஸ் ப்யூன்கள்தான் போலீஸுக்கு பதிலாக இருந்தார்கள்.

கொள்ளைக்குப் பிறகு ஒருவாரம் விடாமல் மழை பெய்ததாம். மழையால் ஒரு பெரிய வெள்ளம் வந்து அநேக வீடுகளை நாசம் செய்ததோடு, மனிதர்களையும் ஆடுமாடுகளையும் அடித்துக்கொண்டு போய்விட்டது.

அந்தக் காலத்தில் தஞ்சாவூர் ஜில்லா என்பது கிடையாது. தஞ்சாவூர் ப்ரதேசம் கும்பகோணம் ஜில்லாவாக இருந்தது. அப்போது அந்த ஜில்லாவில் ஜட்ஜாக இருந்த மிஸ்டர் பூச்சாம்ப் என்பவர் கொள்ளையடித்தவர்களில் பலருக்கு 7-வர்ஷம் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

சென்ற காளயுக்திக்கு முந்தின பரிதாபி வர்ஷம் பங்குனி மாஸத்தில் ஒரு பெரும்புயல் காற்று அடித்ததாம். இதற்கு முன்னால் கலம் 8 அணாவாக விற்ற நெல் இந்த வர்ஷத்தில் ரூ. 2—8—0 வாக விற்கலாயிற்று. நெல்லைப் போலவே இதர ஆகாரப்பொருள்களும் விலையேறி விற்கலாயின.

ஆவாரம் பூப்பொடி:—பரமக்குடியைச் சேர்ந்த வெங்கடன்குரிச்சி வைத்யர் வி. எ. ஆர். ஸ்வாமி தயார்செய்து விற்கும் ஆவாரம்பூப் பொடியின் மாதிரி வரப்பெற்றோம். இந்தப் பொடி காப்பிக்கு பதிலாக உபயோகப்படுவது. இது கோக்கோவின் வாஸனையுள்ளது. இதைப் பலர் உபயோகித்து வருகிறதாகவும் சொல்லப்படுகிறது. காப்பியில் ப்ரியமில்லாதவர்கள் இதை உபயோகித்துப் பார்ப்பது நல்லது. ஒரு டின் விலை அணா 8.

---

## ஜனோபிமானி.

| | | | |
|---|---|---|---|
| 1914-15-ம் வர்ஷத்திய வால்யூம் பைண்டில்லாமல் | 5 | 0 | 0 |
| பைண்ட் செய்தது | 6 | 0 | 0 |
| 1916, 1917,—ம் வர்ஷத்திய வால்யூம்கள் தனித்தனியே பைண்டில்லாமல் | 4 | 0 | 0 |
| பைண்ட் செய்தது | 5 | 0 | 0 |

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.



# HINDU LADY SAVANTS OF THE PAST.

## பூர்வகாலத்து ஹிந்து ஸ்த்ரீ வித்பன்னர்கள்.

பூர்வகாலத்தில் நமது நாட்டில் ஸ்த்ரீகளில் பலர் கல்வியில் தேர்ச்சியுள்ளவர்களாக இருந்ததாகத் தெரிகிறது. ஔவை, காரைக்காலம்மை முதலியவர்களைப்பற்றி யாவரும் கேள்விப்பட்டிருக்கிறார்கள். தமிழ்ச் சங்க நூல்களில் பல ஸ்த்ரீ வித்பன்னர்களைப்பற்றி ப்ரஸ்தாபங்கள் வந்திருக்கின்றன. தமிழ் நாடுகளில் போலவே வட இந்தியாவிலும் அநேக ஸ்த்ரீகள் கல்வி யறிவில் தேர்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள்.

மத்ய காலத்தில் தான் ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்க ஸௌகர்யங்கள் இல்லாமலிருந்தனவே யொழிய, பூர்வகாலத்தில் ஸ்த்ரீகள் கல்விகற்கவும், புருஷர்களுக்கு ஸமதையாக வாதங்களில் கலந்து கொள்ளவும் வேண்டிய வஸதிகள் இருந்தனவென்று தெரிகிறது. வேதகாலம் என்று சொல்லப்படும் புராதன காலங்களில் இருந்ததாகச் சொல்லப்படும் ஸ்த்ரீ வித்பன்னர்களுடைய கல்வியறிவையும், அவர்களுடைய உயர்ந்த குணங்களையும், தற்காலத்தில் பெரும்பான்மையான ஸ்த்ரீகளின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நமது நாடு இவ்வளவு தௌர்ப்பாக்ய தசைக்கு வந்துவிட்டதே என்று துக்கிக்கவேண்டியிருக்கும். வேத காலத்துக்குமுன் இருந்த ஸ்த்ரீகளின் நிலைமை நமக்குத் தெரியாததலால், வேதகாலத்திலிருந்த ஸ்த்ரீகளைப்பற்றி இங்கு எழுதுகிறோம்.

அந்தக் காலத்தில் ஸ்த்ரீகள் அறிவில் சிறந்தவர்களாக இருந்ததோடு, வேத மந்த்ரங்களை கவனம் செய்யும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருந்தார்கள். ஒவ்வொரு மந்த்ரத்திற்கும் அதை கவனம் செய்த ரிஷியின் பெயரும், அதன் சந்தஸும், அதன் தேவதையும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதைக் கொண்டு எந்த மந்த்ரத்தை யார் செய்தார் என்று கண்டுபிடித்து விடலாம்.

ரிக்வேதத்தில் 5-வது அத்யாயத்தில் 28-வது மந்த்ரத்தைச் செய்தவர் விச்வவரா என்னும் ஸ்த்ரீயாகும். அவர் அத்ரி மகர்ஷியின் புதல்வியாவர். அந்த மந்த்ரத்தின் அதிதேவதை அக்னியாகும்.

ரிக்வேதத்தில் 179-வது ரிக்கைச் செய்தவர் லோபாமுத்ரை யென்னும் ஸ்த்ரீயாகும். அவர் அகஸ்தியரின் பத்னியாவர். அவர் உத்தம ஸ்த்ரீகளில் முதன்மை பெற்றவர் என்று புராணங்கள் முழங்குகின்றன. அவருடைய சரித்ர வரலாற்றை காசி காண்டத்தில் விஸ்தாரமாகக் காணலாம். ஒரு ஸமயம் நைமிசாரண்ய மென்னும் காட்டில் அநேக ரிஷிகள் கூடியிருந்தகாலத்தில் அகஸ்தியரும், அவரது பத்னி லோபாமுத்ரையும் வந்தபோது, எல்லாரும் மரியாதையாக எழுந்து வந்தனம் செய்து லோபாமுத்ரையைப்பற்றி வெகு வாய்ப் புகழ்ந்து பேசினார்கள். அருந்ததி, ஸாவித்ரி, அனஸூயை, ரதி, லக்ஷ்மி, ஸுநீதி, ஸ்வாஹா முதலிய பெண்மணிகள் உத்தம குணங்கள் நிறைந்து கீர்த்தி பெற்றிருந்தபோதிலும், ஸ்த்ரீகளுக்கு இருக்கவேண்டிய நற்குணங்களெல்லாம் அமைந்து, மற்றவர்களுக்கு ஒரு உதாரணமாக எடுத்துச் சொல்லக் கூடிய லோபாமுத்ரைக்கு ஸமானமாக மாட்டார்களென யாவரும் புகழ்ந்து பேசினார்கள். லோபாமுத்ரை ஒப்பற்ற கல்விமானாக இருந்தும், தனது புருஷனிடத்தில் அத்யந்த பக்தியுள்ளவராக இருந்தார்.

ரிக்வேதத்தில் 10-வது அத்யாயத்தில் 125-வது ரிக்கைச் செய்தவர் வாக் என்ற பெயர்

கொண்ட ஒரு ஸ்திரீ. அவர் அம்ப்ரீ என்பவருடைய புத்ரி. அவ்ர் செய்த மந்த்ரம் ரொம்ப உயர்ந்ததாக மதிக்கப்படுகிறது. பிற்காலத்தில் உண்டான வேதாந்த சாஸ்த்ரத்தின் கொள்கைகள் இந்த ரிக்கிலே காணப்படுவதாக பல ஹிந்து பாஷ்யக்காரர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

காலம் செல்லச் செல்ல ஹிந்துக்களின் நாகரிகம் வ்ருத்தியடையலாயிற்று. அதை அனுஸரித்து ஹிந்து ஸ்த்ரீகளினுடைய பெருமையும் வ்ருத்தியடையலாயிற்று. ஆண்களைப் போலவே ஸ்த்ரீகளும் கல்வி யறிவில் மேம்பாடு அடைந்து வந்தார்கள். உபநிஷத் காலத்தில் ரொம்ப ப்ரக்யாதியடைந்தவர்களுள் மைத்ரேயி என்னும் ஸ்த்ரீ ஒருவர். அவருடைய வரலாறு ப்ருஹதாரண்யக உபநிஷத்தில் காணப்படுகிறது. அவர் மித்ரனுடைய புத்ரி. மித்ரனும் ஒரு பெரிய பண்டிதர். அவர் தமது புத்ரிக்கு பால்ய முதல்கொண்டே கல்வி கற்பித்து வந்தார். பிறகு அவர் அவளை யாஜ்ஞவல்கியர் என்னும் ரிஷிக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார். மைத்ரேயி எவ்வளவு நுண்ணறிவு வாய்ந்தவரென்பதைப் பற்றி மேற்சொன்ன உபநிஷத்தில் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. அவள் அடிக்கடி தமது புருஷனிடம் ஆத்ம ஞான விஷயமாக பேசுவதுண்டாம்.

கொஞ்ச காலத்துக்குப் பிறகு யாஜ்ஞவல்கியர் க்ருஹஸ்தாச்ரமத்தைவிட்டுத் துறவி ஆக எண்ணினார். அவருக்கு மைத்ரேயியைத் தவிர வேறொரு மனைவி உண்டு. அவர் தமது சொத்துக்களை இரண்டு பாகமாகச் செய்து பேருக்கு ஒருபாகமாக தமது மனைவிகள் இருவரையும் எடுத்துக்கொள்ளச் சொன்னார். மைத்ரேயி மாத்ரம் இதற்கு ஸம்மதிக்கவில்லை. மற்ற மனைவி தனது பாகத்தைப் பெற்றுக் கொண்டாள், மைத்ரேயியோ, அந்த செல்வத்தால் யாதொரு ப்ரயோஜனமும் இல்லை யென்று சொல்லி புருஷனிடம் தர்க்கம் பேசி, அவருடன்கூட இருந்து பணிவிடை செய்வதே மேலானதென்று சொல்லி அவருடன் கூடச் சென்றாள்.

அக்காலத்தில் மித்ரன் என்னும் அரசனால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு பாடசாலை இருந்தது. அதில் மைத்ரேயி ஒரு உபாத்யாயனியாக இருந்தாள்.

கார்க்கி மைத்ரேயியைவிட கல்வி கேள்விகளில் உயர்ந்தவள். அவள் மைத்ரேயின் தாய்க்கு உடன் பிறந்தவள். யாஜ்ஞவல்கியர் இதர வித்வான்களை ஸ்வ்வாதங்களில் தோற்கடித்திருந்தபோதிலும், கார்க்கியால் தோற்கடிக்கப்பட்டுப்போனார்.

பெரிய ஆத்மஞானியும் ஜீவன் முக்தருமான ஜனக மகாராஜா தமக்கு எப்போதாவது தத்வசாஸ்த்ரத்திலாவது இதர விஷயங்களிலாவது ஸந்தேகங்கள் தோன்றினால், பற்பல நாடுகளிலிருந்து வித்வான்களை வரவழைத்து ஸபை கூட்டி தமது ஸந்தேகங்களைத் தெரிவித்துத் தீர்க்கச் சொல்வது வழக்கம். அந்த ஸபைகளில் புருஷர்களேயன்றி ஸ்த்ரீகளும் வந்து வாதங்களில் கலந்து கொள்வதுண்டு. ஒரு ஸமயம் ஜனக மஹாராஜா ஒரு யாகம் செய்தார். அதற்கு பற்பல தேசங்களிலிருந்து அநேக வித்வான்களை வரவழைத்திருந்தார். யாக முடிவில் ஆயிரம் உயர்ந்த பசுக்களைக் கொண்டு வந்து, அவைகளின் கொம்புகளில் தலைக்கு 10 தங்கநாணயங்கள் விதம் கட்டி, ஸபைக்குப் பக்கத்தில் நிறுத்தி, ஸபையோரைப்பார்த்து, "உங்களில் யார் தத்வ சாஸ்த்ரத்தில் மஹா ஸாமர்த்யவானோ அவர் இந்தப் பசுக்களையும், அவைகளின் கொம்புகளில் கட்டியிருக்கும் தங்க நாணயங்களையும் எடுத்துக்கொண்டு போகலாம்" என்றார். ஆயிரத்துக்கு மேலான பண்டிதர்கள் அந்த



ஸபையில் கூடியிருந்தும், ஒருவராவது பசுக்களையடைய முன்வரவில்லை. ஸபையோர்கள் இப்படி பயந்திருப்பதைப் பார்த்த யாஜ்ஞவல்க்யர் எழுந்து, பசுக்களை ஓட்டிக்கொண்டு போகும்படி தமது சிஷ்யர்களுக்கு உத்தரவு கொடுத்தார். அவர் அவ்விதம் சொன்னதைப் பற்றி ஸபையிலிருந்தோர் சற்று ஆச்சர்யமடைந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்களென்றாலும், ஒருவராவது அவரை எதிர்க்கத் துணியவில்லை. ஏனென்றால் அவருடைய ப்ரதாபத்தை யாவரும் அறிந்திருந்தார்கள்.

ஆனால் ஸபையில் இருந்த ஒரு ஸ்த்ரீ மாத்ரம இதைக்கண்டு மனம் பொறாமல் யாஜ்ஞவல்க்யருடைய செய்கையை ஆக்ஷேபிக்க எழுந்தாள்.

அவர் யாஜ்ஞவல்க்யரைப் பார்த்து, "நீர்தானா இந்த ஸபையிலுள்ளோரைக் காட்டிலும் பெரியவர்? நீர் மற்றவர்களைக் காட்டிலும் வித்தையில் உயர்ந்தவரா?" என்று கேட்டாள். ரிஷி 'ஆம்' என்று சொல்ல, அந்த ஸ்த்ரீ "உமது திறமையைப் பரீக்ஷிக்கவேண்டும்" என்றாள். அந்த ஸ்த்ரீதான் கார்க்கி. அதன்மேல் கார்க்கிக்கும் யாஜ்ஞவல்க்யருக்கும் ஒரு பெரிய தர்க்கம் நடந்தது. அரசரும் ஸபையோர்களும் வியப்புடன் இந்த வாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். வெகு நேரம் தர்க்கம் நடந்த பிறகு யாஜ்ஞவல்க்யர் தோற்றுப் போனதாக ஒப்புக்கொண்டார். யாவரும் கார்க்கியைப் புகழ்ந்தார்கள்.

தேவஹூதி யென்பவள் மனுக்களில் ஒருவருடைய புத்ரி. அவள் பால்ய முதல் கொண்டே கல்வி கற்றுத் தேர்ச்சியடைந்திருந்தாள். அவள் ஒரு பெரிய அரசனின் புத்ரியாக இருந்தும், தனது படிப்பை விடக் கூடாதென்றும், படிக்க வேண்டுமென்றால், பணக்கார இடத்தில் வாழ்க்கைப்படக் கூடாதென்றும் எண்ணி, ஒரு ஏழையான ரிஷியைக் கல்யாணம் செய்துகொண்டார். அந்த ரிஷியின் பெயர் கர்த்தமர் என்பது. அவருக்கு குடும்ப வாழ்க்கையில் ப்ரியமில்லை யென்றாலும், தேவஹூதி படிப்பின்மேல் ப்ரியம் கொண்டிருப்பதை உத்தேசித்தும், அவள் தம்மை நேசித்து வருவதை உத்தேசித்தும் க்ருஹஸ்தாச்ரமத்தைக் கைக்கொள்ள ஸம்மதித்தார். அதன்மேல் தேவஹூதி கல்யாணமான பிறகு, சீரும் செல்வமு முள்ள தனது பிறந்தகத்தைவிட்டு காட்டில் தனது புருஷனுடன் வஸித்துக்கொண்டு, அவரிடம் கற்கவேண்டியவை அனைத்தையும் கற்றுக்கொண்டாள். அவளுடைய புத்ரன்தான் கபிலர் என்னும் மகர்ஷி. ஆறு சாஸ்த்ரங்களில் ஒன்றாகிய ஸாங்க்ய சாஸ்த்ரத்தை ஏற்படுத்தின கபிலர் இவரே. அவர்தான் முதல் முதல் ஆத்ம விசாரணை செய்தவர். தத்வசாஸ்த்ரம் தழைத்தோங்கக் காரணமாயிருந்தவர் அவரே. ஆனால் அவருக்குப் பாலூட்டிவளர்த்து, அவரது பால்ய மனஸை ஆத்மவிசாரத்தில் திருப்பியவர் யார்? தேவஹூதியல்லவா? தேவஹூதிதான் கபிலருக்குக் கல்விகற்பித்தவர்.

பௌத்தமதக் காலத்தில் ஸ்த்ரீகளின் ப்ரதாபம் இன்னும் வ்ருத்தி யடையலாயிற்று. பௌத்த மத குருக்கள் ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பிப்பதில் ரொம்பவும் உதவியாயிருந்தார்கள். ஸ்த்ரீகளுக்குள் பௌத்த மதத்தைப் பரவச்செய்ய ஆண்களுக்கு ஸௌகர்யப்படுவதில்லை யென்று கண்டு அவர்கள், சில ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பித்துப் பிறகு அவர்களை வெளிதேசங்களுக்கு அனுப்பி. அங்குள்ள ஸ்த்ரீகளுக்குள் பௌத்த மதத்தைப் பரவச் செய்தார்கள். அநேக பௌத்த ஸ்த்ரீகள் இவ்விதம் கல்வி கற்று மேம்பாடு அடைந்தார்கள். அசோகராஜனுடைய ஸகோதரி ஸங்கமிதா என்பவள் லங்கைக்குப் போய் அங்கே பௌத்தமதத்தை ஸ்தாபித்தது சரித்ரம் வாசித்த யாவருக்கும் தெரிந்த விஷயமே.

# MAGIC SQUARE.

By S. NARASIMHA CHARY, B. A., B. L.,
*High Court Vakil, Madras.*

## இந்த்ர ஜாலச் சதுரம்.

இந்தியாவிலுள்ள ஸம்ஸ்க்ருத பண்டிதருடைய ஞாபகசக்தி உலகப்ரஸித்திபெற்றது. கணக்கில்லாத ச்லோகங்களையுடைய இதிகாஸ புராணங்களையுங்கூட, அவர்கள் மனப்பாடம் செய்துவிடுகிறார்கள். ஆனாலும், இவர்களைக் காட்டிலும் ஞாபகசக்தி யுள்ளவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் அஷ்டாவதானிகளும் சதாவதானிகளுமாவர். அவர்களுடைய அத்யாச்சர்யமான ஞாபக சக்தியைப்பற்றி, இங்கே விஸ்தரித்துச் சொல்வது அனாவச்யமே. நம்மில் பலரும் அஷ்டாவதானத்தை ப்ரத்யக்ஷத்தில் பார்த்து ஆநந்தப்பட்டிருக்கிறோம்.

ஆனால், இவ்வளவு ஞாபகசக்தி இவர்களுக்கு எப்படிக் கிடைத்தது, என்று நம்மில் பலருக்கும் சங்கையுண்டாயிருக்கலாம். இதெல்லாம் மந்த்ர சக்தியே யென்று பலர் எண்ணியிருக்கிறார்கள். ஆனால், தீரவிசாரித்து ஆலோசிக்கும் பக்ஷத்தில், இது கேவலம் மந்த்ர சக்தியேயல்ல என்பதும், விடா முயற்சியாலும் அப்யாஸத்தாலுமே, அவதானிகள் வியக்கத்தக்க வேடிக்கைகளைச் செய்கிறார்கள் என்பதும், ஸ்பஷ்டமாய்த் தெரியவரும்.

அவதானங்களுள் ஒன்றான இந்த்ர ஜாலச் சதுரத்தைப்பற்றியும், அதன் மர்மத்தைப் பற்றியும், கொஞ்சம் பழக்கம் உள்ளவனுக்கு அது மிகவும் ஸுலபமானதே என்பதையும், இங்கு தெரிவிக்கிறோம்.

நீளமும் அகலமும் சரி ஸமானமாய் உள்ள பொருளுக்குச் சதுரம் என்று பெயர். நாலங்குல நீளமும், நாலங்குல அகலமும் உள்ளதாகும்படி ஒரு சதுரத்தைப் பலகையில் எழுதிக் கொள்ளுங்கள். அதன் நீளத்தையும் அகலத்தையும் நான்கு ஸமபாகங்களாகப் பிரித்து, கீழே காட்டிய படத்தின்படியே, நீளத்திலும் அகலத்திலும் கோடிட்டுக் கொள்ளுங்கள். படத்தில் இப்போது பதினாறு அறைகள் இருக்கின்றன அல்லவா? அவைகளில் நாம்

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

(I-வது சதுரம்.)

விரும்பிய அறை இன்னதென்று ஸுலபமாய்த் தெரிந்துகொள்ளும்படி அவற்றில் முறையே 1, 2, 3, 4, முதலாகிய 16 எண்களையும் (படத்தில் கண்டபடி) வரிசையாக எழுதுங்கள்.

இப்போது நாம் செய்யவேண்டிய கார்யம் என்னவென்பதைச் சொல்லுகிறோம். உங்களுக்கு இஷ்டப்பட்ட ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளுங்கள். உதாரணம், 76. இப்போது நாம் செய்யவேண்டியது என்னவென்றால், சதுரத்திலுள்ள பதினாறு அறைகளிலும் வெவ்வேறு எண்களை எழுதி, அவைகளை வலப்புறத்திலிருந்து இடப்புறமாகக் கூட்டினாலும், அல்லது மேலேயிருந்து அடிப்பக்கமாகக் கூட்டினாலும், அல்லது மூலைக்கு மூலையாகக் கூட்டினாலும், மொத்தத்தொகை எழுபத்தாறே வரும்படி, எண்களைத் தெரிந்தெடுத்து, அறைகளில் பதிக்கவேண்டும். அதாவது 1, 2, 3, 4-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினால்,



மொத்தத் தொகை எழுபத்தாறாக வரவேண்டும். அப்படியே 5, 6, 7, 8 அல்லது 9, 10, 11, 12, அல்லது 13, 14, 15, 16-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினாலும், அதே மொத்தத் தொகை வரவேண்டும். மேலும், 1,5, 9, 13, அல்லது 2, 6, 10, 14, அல்லது 3, 7, 11, 15, அல்லது 4, 8, 12, 16-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினாலும் எழுபத்தாறே மொத்தத் தொகை ஆகவேண்டும். அன்றியும், 1, 6, 11, 16-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினாலும் சரி, 4, 7, 10, 13-ம் அறைகளிலுள்ள தொகைகளைக் கூட்டினாலும் ஸரி, மேலே சொன்ன மொத்தத் தொகையே வரவேண்டும். கீழேபோட்டிருக்கும் சதுரத்தில் உள்ள எண்களை, மேலே விஸ்தரித்துச் சொன்ன முறைப்படி கூட்டி, எப்படிக் கூட்டினாலும் மொத்தத்தில் எழுபத்தாறே வருவதை நமது நண்பர்கள் காண்பார்களாக:—

| | | | |
|---|---|---|---|
| 24 | 3 | 19 | 30 |
| 33 | 16 | 12 | 15 |
| 6 | 21 | 27 | 22 |
| 13 | 36 | 18 | 9 |

(II-வது சதுரம்.)

மேலே சொல்லியபடியே நீளத்திலும் அகலத்திலும் நேர் நேராகக் கூட்டினால், மொத்தத்தில் எழுபத்தாறு ஆவதைக் காணலாம். மூலைக்குமூலை கூட்டினாலும் அதே தொகை வரும். மேலே சொல்லியிராத இன்னொரு வரிசையில் கூட்டினாலும் அதே மொத்தத் தொகை வருவதைக் காண்பீர்கள். அதாவது 1, 2, 6, 5 என்னும் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினாலும் ஸரி, 3, 4, 8, 7-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினாலும், மொத்தத்தில் எழுபத்தாறே வருகிறது. அப்படியே 9, 10, 14, 13 அல்லது 11, 12, 16, 15-ம் அறைகளிலுள்ள எண்களையுங் கூட்டிப் பார்க்கலாம். இதோடுமில்லாது, 5, 6, 10, 9 அல்லது, 7, 8, 12, 11-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினாலும் மொத்தத் தொகை எழுபத்தாறே.

உதாரணத்துக்காக 76 என்ற தொகையை எடுத்துக்கொண்டோம். இதற்குப் பதிலாக வேறெந்தத்தொகையை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம். 39,867 என்ற மொத்தத் தொகைவேண்டுமானாலும், அதன்படியே எண்களைப் பொறுக்கியெடுக்கலாம். 9,54,69,387 என்ற மிகப்பெரிய தொகை வரவேண்டும் என்றாலும், ஐந்து நிமிஷத்திற்குள் தகுந்த எண்களைக் கண்டுபிடிக்கலாம். அது எப்படி?

முதலில் நாம் உதாரணமாக எடுத்துக் கொண்ட எழுபத்தாறையே, மறுபடியும் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். மொத்தத் தொகை எழுபத்தாறாக வருவதற்கு வேண்டிய எண்களைத் தெரிந்தெடுக்கும் மார்க்கத்தை இனி சொல்லுகிறோம்.

ஆனால் இப்படிப்பட்ட ஜாலச் சதுரம் செய்ய விரும்புவோர், நாலுவரிகளே உள்ள ஒரு சிறிய வெண்பாவை நெட்டுருப்பண்ணுவது அவசியம். அதாவது:—

வெண்பா.*

எட்(டு); ஒன்று; சூன்யம்; எழில் ஆர் பத்துப் பதி
னொன்(று),
இட்ட சுழி; நான்(கு) ஐந்(து) இரண்(டு) உடனே—
ஒட்டிவரும்
ஏ(ழு); ஒன்ப(து) இல்லை; இல்லை; ஏற்ற பன்னி
ரண்டு; ஆறு: மூன்(று);
ஆழிதனில், வைப்பாய், அறி.

இந்த வெண்பாவின் பொருள், கீழே இருக்கும் சதுரத்தைப் பார்த்தால் தெரியவரும்.

*இது இந்த வ்யாஸம் எழுதியவர் தாமே இயற்றியது.

| | | | |
|---|---|---|---|
| 8 (1) | 1 (2) | 0 (3) | 10 (4) |
| 11 (5) | 0 (6) | 4 (7) | 5 (8) |
| 2 (9) | 7 (10) | 9 (11) | 0 (12) |
| 0 (13) | 12 (14) | 6 (15) | 3 (16) |

(III-வது சதுரம்.)

இந்த வெண்பாவில் சொல்லியிருக்கிற எண்களை, வரிசையாக, மேலேயிருக்கும் சதுரத்தில் எழுதியிருக்கிறோம்.

எட்டு=8

ஒன்று=1.

சூன்யம்=பூஜ்யம்=0.

எழில் ஆர்=அழகு பொருந்திய (வெண்பா சரியாக வருவதற்காக, இந்த வார்த்தைகளை இடையில் நிறுத்தியிருக்கிறது).

பத்து=10.

பதினொன்று=11.

இட்ட சுழி=எழுதியிருக்கிற பூஜ்யம்=0.

நான்கு=4.

ஐந்து=5.

இரண்டு=2.

உடனே ஒட்டிவரும்=கூடவே தொடர்ந்து வருகிற - (இந்த வார்த்தைகளை வெண்பாவில் வைத்தது, பாட்டின் சந்தம் குறையாமலிருப்பதற்கென்றே.)

ஏழு=7.

ஒன்பது=9.

இல்லை=பூஜ்யம்=சூன்யம் 0.

இல்லை= ஷை= 0.

ஏற்ற=தக்க (இதுவும் சந்தத்திற்காக வைத்ததே).

பன்னிரண்டு=12.

அறு=ஆறு=6 ('ஆறு' என்னும் சொல் குறுக்கல் விகாரங்கொண்டு, 'அறு' என்று நின்றது.)

மூன்று=3.

ஆழி=சக்ரம். (இந்த்ர ஜாலச் சதுரத்திற்கு, இந்த்ர ஜாலச் சக்ரம் என்றும், மற்றொரு பெயர் உண்டு).

'ஆழிதனில் வைப்பாய் அறி,' என்ற சொற்களுக்கு, மேற்சொல்லிய எண்களை, (முதல் சதுரத்தில் சொல்லிய முறைப்படியே), சக்ரத்தில் (அதாவது) சதுரத்தில் எழுதுவாயாக, என்று பொருள்.

அதாவது முதல் சதுரத்தில் 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16-ம் ஆகிய அறைகளில், இந்த வெண்பாவில் சொல்லியிருக்கிற 8, 1, 0, 10, 11, 0, 4, 5, 2, 7, 9, 0, 0, 12, 6, 3, ஆகிய எண்களை முறையே, வைப்பாயாக, என்றுபொருள்.

ஆகவே, 76 என்னும் மொத்தத்தொகை வேண்டுமானால், முதலாவது அறையில் 8-ம், இரண்டாவது அறையில் 1-ம், நான்காம் அறையில் 10-ம் எழுதவேண்டும். இம்மூன்று எணகளையும் கூட்டினால், 8+1+10=19 ஆகிறது. நமக்கு வேண்டிய தொகை 76. ஆகையால் இன்னும் குறையாக இருப்பது 76—19=57. இதை மூன்றும் அறையில் எழுதவேண்டும். இப்படிப் புதிதாகக் கண்டுபிடிக்கப்போகிற எண்ணை எழுதும் அறையைக் குறிப்பதற்காகவே, மூன்றும் அறையில் 0 என்னும் எண் எழுதியிருக்கிறது. அவ்வாறே, இரண்டாம் வரிசையில் உள்ள 5, 6, 7, 8-ம் அறைகளிலுள்ள எண்களைக் கூட்டினால் 11+0+4+5=20 வருகிறது. நமக்கு இன்னும் வேண்டியது 76-20=56. இந்த 56-ஐ, இந்த வரியில் 0 இருக்கிற இரண்டாவது அறையில் எழுதுகிறோம். இப்படியே மூன்றும் வரிசையில் உள்ள எண்களைக் கூட்டினால் 2+7+9=18 வருகிறது. இன்னும் வேண்டியது, 79-18=58. இதை, இந்த வரியின் கடைசி அறையில் (அதாவது பூஜ்யம் போட்டுள்ள அறையில்), எழுதிவிடுகிறோம்.



அப்படியே நாலாம் வரியைக் கூட்டினால் 12+6+3=21 வருகிறது. 76—21=55. இதை, நாலாம் வரியில், முதல் அறையில், (அதாவது பூஜ்யம் உள்ள அறையில்), எழுதிவிடுகிறோம். இப்போது சதுரம் *அடியில் கண்டபடி எண்களைக் கொண்டிருக்கிறது :—

| | | | | |
|---|---|---|---|---|
| (76) | | | | (76) |
| 8 | 1 | 57 | 10 | (7 6) |
| 11 | 56 | 4 | 5 | (76) |
| 2 | 7 | 9 | 58 | (76) |
| 55 | 12 | 6 | 3 | (~ 6) |
| (76) | (76) | (76) | (76) | |

(IV-வது சதுரம்).

ஆனால், நமது நண்பர்களுக்கு இப்போது ஒரு ஸந்தேகம் உண்டாகலாம். மூன்றாவது சதுரத்தில் உள்ள எண்களின் தொகை 76. இந்தச் சதுரத்திலுள்ள எண்களின் மொத்தமும் 76. அப்படியிருக்க, இந்த இரண்டு சதுரங்களில் உள்ள எண்கள் வெவ்வேறாக இருப்பானேன், என்று கேட்கலாம். இதற்குப்பதில் :—நமக்கு வேண்டிய மொத்தத் தொகை எதுவாக இருந்தாலும், வெண்பாவில் சொல்லியிருக்கிற "8, 1, 0 முதலான எண்கள் எல்லாச் சதுரத்துக்கும் பொதுவாக உள்ள எண்களல்லவா? பூஜ்யம் எழுதியிருக்கும் அறைகளில் உள்ள எண்களே, மொத்தத் தொகை மாறும்போதெல்லாம், மாறுகின்றவை. ஆகையால், அஷ்டாவதானம் செய்யும் ஸமர்த்தன், தன் ஸூக்ஷ்மத்தைப் பிறர் கண்டுபிடிக்காதபடி, எல்லா மொத்தத்தொகைகளுக்கும் பொதுவான 8, 1, 0 முதலான பதினாறு எண்களை மறைப்பதற்கு, மார்க்கம் தேடுகிறான். ஏனென்றால், நாலு வெவ்வேறு ஸபையில் இந்த்ர ஜாலச் சதுரத்தைப் பூர்த்தி செய்வானாகில், அந்த நாலு சதுரங்களில் ஒவ்வொன்றிலும், 8, 1, 10 முதலான எண்கள் திரும்பித் திரும்பி வருவதைப் பார்த்தால், இதன் ஸூக்ஷ்மம் வெளிவந்து விடுமல்லவா? ஆகவே, அவதானி, 8, 1, 0, 10 முதலான எண்களை, தன் இஷ்டப்படி இரண்டினாலாகிலும், மூன்றினாலாகிலும், நாலினாலாகிலும், இதற்குமேல்பட்ட எண்ணினாலாகிலும், பெருக்கி விடுகிறான். உதாரணமாக இரண்டாம் சதுரத்தையும் நாலாம் சதுரத்தையும் மறுபடியும் ஏககாலத்தில் ஒத்திட்டுப் பாருங்கள். முதல் வரியில் முதல் அறையில் இருப்பது 24. அதாவது $8\times3$. இரண்டாம் அறையில் இருப்பது, 3; அதாவது $1\times3$. மூன்றும் அறையில் இருப்பது 30; அதாவது $10\times3$. இம்மூன்றையும் கூட்டினால் 24+3+30=57 ஆகிறது. இன்னும் வேண்டியது 76-57=19. இதை, 0 இருக்க வேண்டியதான மூன்றும் அறையில் எழுதிவிடுகிறோம். அதாவது நாலாம் சதுரத்தில் உள்ள (பூஜ்யம் நீங்கலான மற்ற) எண்களையெல்லாம் மூன்றால் பெருக்கினால், இரண்டாம் சதுரத்திலுள்ள எண்கள் வந்து விடுகின்றன. ஒவ்வொரு வரியிலும் உள்ள மூன்று எண்களையும் கூட்டி, அந்தத் தொகையை எழுபத்தாறிலிருந்து கழித்து வரும் எண்ணை, பூஜ்யம் இருந்த அறையில், எழுதிவிடுகிறோம். இப்படியே சதுரம் பூர்த்தியாகிறது. 8, 1, 0, 10 முதலிய எண்கள், ஒவ்வொரு சதுரத்துக்கும் பொதுவாயிருக்கின்றன, என்னும் விஷயத்தை, அவதானம் செய்பவன் நீங்கலாக, மற்றெவரும் தெரிந்துகொள்வது அஸாத்யமாகிறது.

இந்த ஸூக்ஷ்மம் நமக்குத் தெரியாதவரையிலும், அவதானம் செய்வோனுடைய ஸாமர்த்யம் நமக்கு ஆச்சர்யமாகவே இருக்கிறது. ஏனென்றால், அவதானி, ஸபையோரிடம் சொல்வதாவது: "நீங்கள் சதுரத்தின் படத்தை எழுதிக்கொள்ளுங்கள். ' அந்தப் படத்

தைப் பாராமலே நான் எண்களைச் சொல்லிக் கொண்டு வருகிறேன்" என்கிறான். மேலும் அவன் சொல்வதாவது "அறைகளில் உள்ள எண்களை, வரிசையாக வேண்டுமானாலும் சொல்லுகிறேன். அல்லது, உங்களுக்கு எந்த அறையில் உள்ள எண் வேண்டுமானாலும் ஸரி, நொடிப்பொழுதில் சொல்லிவிடுகிறேன்" என்கிறான். ஸபையில் உள்ள ஒருவன், அவதானியைப்பார்த்து, எட்டாம் அறையில் உள்ள எண் எது?" என்று கேட்கிறான். உடனே அவதானி, வெண்பாவைத் தன் மனதில் சொல்லிக்கொள்கிறான். அதில் வரிசை எப்படியென்றால் 'எட்டு, ஒன்று, சூன்யம், (எழிலார்) பத்து, பதினொன்று, (இட்ட) சுழி, நான்கு, ஐந்து...' என்பதே. ஆகையால் எட்டாம் அறையில் உள்ள எண், ஐந்து ×3 =15, என்று நொடிப்பொழுதில் சொல்லிவிடுகிறான். மற்ற அறைகளில் உள்ள எண்களுக்கும் இந்த விதமே.

ஆனால் மொத்தத்தொகை பெரிதாக இருக்குமானால், வெண்பாவில் குறித்துள்ள 8, 1, 0, 10 முதலிய எண்களை மனஸிலேயே பெருக்குவதும், ஒவ்வொரு வரியிலும் உள்ள எண்களைக் கூட்டி மொத்தத் தொகையிலிருந்து கழித்து, பூஜ்யம் உள்ள அறையில் வைக்கவேண்டிய எண்ணைக் கண்டுபிடிப்பதும் கொஞ்சம் கஷ்டமான காரியமென்றே சொல்லவேண்டும். ஆனாலும், இதிலும் கொஞ்சம் ஸூக்ஷ்மத்தை உபயோகப்படுத்தினால், மூன்று எண்களைக் கூட்டும் ச்ரமம் குறையும், எப்படியென்றால், மொத்தத்தொகை எழுபத்தாறு பெறவேண்டிய அவதானி, பூஜ்யம் உள்ள அறையில் வைக்கவேண்டிய எண்ணைக் கண்டுபிடிப்பதற்காக, 24, 3, 30 ஆகிய மூன்று எண்களைக் கூட்டுவது, அனாவச்யம். ஏனென்றால், வெண்பாவில் சொல்லியபடி, 8, 1, 0, 10 இந்த நாலையும் கூட்டி, இந்தக் கூட்டுத் தொகையான (8+1+10=19,) பத்தொன்பதை மூன்றால் பெருக்கினால், (24+3+30=57) 24, 3, 30 என்னும் பெரிய எண்களைக் கூட்டுவதால் வரும் தொகையே, ஸுலபமாக வந்துவிடுகிறது. இப்படியே, இன்னும் சில ஸூக்ஷ்மங்களும் உண்டு.

மேலே சொல்லியிருக்கிற விஷயங்களை, இரண்டொருதரம் ஊக்கத்தோடு படித்து, அதன்படியே, சில தினங்கள் அப்யாஸம் செய்தால், இப்படிப்பட்ட சதுரங்களில் பெரிய தொகைகளும் வரும்படி, காகிதம், பென்ஸில் முதலியவைகளின் உதவியில்லாமலே, மனஸிலேயே கணக்குப்போடலாம். இதை அப்யஸிப்பதால், ஞாபக சக்தி அதிகமாவது நிச்சயம்.

மற்றைய அவதானங்களுக்கும், இப்படிப்பட்ட ஸூக்ஷ்மங்கள் உண்டென்றும், அந்த ஸூக்ஷ்மங்களைத் தெரிந்துகொண்டவனுக்கு, அஷ்டாவதானம், சதாவதானம் முதலியவை, நமக்குத் தோன்றுகிற அவ்வளவு கஷ்டஸாத்யமான காரியம் அல்லவென்றும், அவதானிகள் சொல்லுகிறார்கள்.

இப்படிப்பட்ட, ஞாபக சக்தியின் ஆச்சர்யமான செய்கைகள், நமது தேசமொன்றில் தவிர, மற்றெந்த தேசத்திலும் இருப்பதாகக் காணப்படவில்லை. இந்தியா தேசத்துப் பண்டிதர்களுடைய அற்புத ஸாமர்த்யங்களில், இது சிறந்ததென்றே சொல்லவேண்டும்.

எஸ். நரஸிம்மாசாரி. பி. ஏ., பி. எல்.

திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் சரித்ரம்.

இது கோயமுத்தூர் சி. கு. நாராயணஸாமி முதலியார் இயற்றியது. இதில் அருணகிரிநாதருடைய பிறப்பு வளர்ப்பு வரலாறும், அவருக்கு ஸுப்ரமண்யக் கடவுளின் அருள்கிடைத்த விவரமும் இதர விஷயங்களும் விரிவாய் அடங்கியுள்ளன. விலை அணா 6.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.



# A FEW HOME-MADE REMEDIES FOR PLANT PESTS.

By. T. V. RAMAKRISHNA AIYAR,
*Acting Government Entomologist, Coimbatore.*

## செடிகளை நாசம் பண்ணும் பூச்சிகளை கொல்வதற்கு வீட்டில் செய்யக்கூடிய ஔஷதங்கள்.

சென்னை ராஜதானியில் பற்பல விடங்களிலிருந்து, காய்கறித் தோட்டங்களிலும் பூ, பழ வகைத் தோட்டங்களிலும் சேதத்தை உண்டு பண்ணும் ஸாதாரண பூச்சிகளை போக்கடிக்கும் பரிகார முறைகளை தெரிவிக்கும்படி அடிக்கடி நமக்கு கடிதங்கள் வருவதுண்டு.

ஆகையால், பின்வரும் சில முறைகள் இப்பேர்ப்பட்ட தொந்தரவு செய்கிற பூச்சிகளை அப்புறப்படுத்துவதற்கு கொஞ்சம் ஹேதுவாயிருக்குமென்பதற்கு ஸந்தேகமில்லை.

தொந்தரவு செய்யக்கூடிய பூச்சிகளில் ஸாதாரணமானவைகள் பின்வருவன:—

(i) செடிப்பேன் அல்லது அசுவுணி.—இவை இயற்கையாய் எல்லாவித மரம், செடிகளிலும் இருப்பவை. ஸாதாரணமாய் செடியின் துளிர்களிலும், கொம்புகளிலும், கொழுந்து இலைகளிலும், மொக்கு, பூ முதலானவற்றிலும் கூட்டம் கூட்டமாய்க் காணலாம். அவைகள் உறிஞ்சும் பூச்சிகள். ஆனதினால் ம்ருதுவான இடங்களிலிருந்து செடியின் ஸாரத்தை உறிஞ்சுகின்றன. செடியில் அதிகமாய் இந்தப் பூச்சிகள் இருந்தால், இலைத் துளிர்களும், மொக்குகளும் அதிக நஷ்டமாய்விடும். இலைகளும் சுருங்கி, துளிர்விடுவதும் நின்று பூச்சியினால் பீடிக்கப்பட்ட பாகங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் காய்ந்து, கடைசியில் செடியே பட்டுப்போகிறது.

சற்றுநேரம் இந்தச் செடிப்பேனை உற்றுப் பார்ப்போமாகில், அதற்கு 6 கால்களும், 2 மீசைகளும், தலையின் அடிப்பாகத்தில் ஊசி போன்ற ஒரு ஆயுதமும் இருப்பதைக் காணலாம். இவைகளைத் தவிர அதன் உடலின் பின்பாகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் ஊசி போன்ற சிறு குழாய்களுண்டு. இவைகளுக்கு தேன் த்வாரங்களென்று பெயர். பூச்சியானது இந்த த்வாரங்களிலிருந்து தேன் போன்ற மதுரமான சாற்றை வெளியாக்குகிறது. இதனால் எறும்புகள் அவ்விடங்களை அதிகமாய் நாடிவரும். எறும்புகள், விளையும் பயிர்களுக்கு கெடுதி விளைவிப்பது ரொம்ப அபூர்வம். எறும்புகள் அதிகமாய் செடிகளின்பேரில் காணப்படும்போது அவைகள் செடிப்பேன் அல்லது அசுவுணியைத் தேடித் திரிகின்றனவென்று நிதானிக்கலாம். செடிப்பேன் கூட்டத்தில் பெரும்பான்மை ஜந்துக்களுக்கு இறகுகள் கிடையா. ஆனால் மெதுவாய் ஊரும் சக்தியுடையவை.

மொச்சைச்செடி ஸாதாரணமாய் இப்பேனால் அதிகமாய் பீடிக்கப்படும் செடிகளிலொன்று. ஆயிரக்கணக்கான பேன்கள் இளஞ்செடிகளையும், துளிர்களையும், பூக்களையும் முற்றிலும் மூடியிருப்பதை அடிக்கடி காணலாம். இப்பூச்சியினால் ஸாதாரணமாய் பீடிக்கப்படக்கூடிய செடிகளாவன:—

பருத்தி, புகையிலை, கத்தரி, முட்டைகோஸ், முள்ளங்கி, அகத்தி முதலானவை.

(ii) மாப்போன்ற பூச்சி.—செடிப்பேனைப் போல இவைகளும் செடியின் ஸாரத்தை உறிஞ்சும் பூச்சிகள். ஆனால் அவைகள் வடிவத்தில் வித்யாஸமானவை. இவைகள் ம்ருதுவான தேகத்தோடு கூடியனவாய் ஒருவித பட்டுபோன்ற தூளினால் மூடப்பட்டிருக்கும். சில ப்ராணிகளில் இப்பட்டுடை மிகுதியாயும் இன்னம் சிலவற்றில் குறைவாயும் இருக்கும்.

மற்றவைகளில் அந்த ஜந்துவின் உடம்பிலிருந்து கிளம்பும் அநேகமான முளைகளாய்க் காணப்படும்படியாயும் அப்பட்டுடையினால் மூடப்பட்டுள்ளது.

இதனால் இப்பூச்சிக்கு மாப்பூச்சி என்று பெயர். இந்தப் பூச்சியின் ஒருமாதிரி, ஸாதாரணமாய் பூச்செடிகள், ரோஜா, இன்னும் மற்ற தோட்டத்தின் செடிகளிலும் வெள்ளை வெள்ளையாய் புலப்படும். அநேக ரகங்கள் நிறைந்துள்ள இப்பூச்சிகளை பருத்தி, கத்தரி, மா, கரும்பு, அன்னாசி, தக்காளி முதலியவற்றில் அதிகமாய்க் காணலாம்.

(iii) செதில் பூச்சி.—பழக்க வழக்கங்களில் இப்பூச்சிகள் மேற்கூறிய இரண்டு பூச்சி இனங்களைப்போல உறிஞ்சுகிறவைகளே யாயினும், பார்வையில் அவைகள் ஜீவனில்லாதவைப்போலத் தோன்றும். இப்பூச்சிகள் தங்கள் ப்ராயத்தில் செடிகளில் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை சிலாம்புபோலக் காணப்பட்டு செடியின்மேல் மூடப்பட்டிருக்கும். அவைகள் இளந்தளிர்களையும், மரக்கிளைகளையும், நடு மரத்தையும் நாசம்பண்ணும். இவ்விதப் பூச்சியினால், பழவ்ருக்ஷங்களும், காப்பி, தேயிலை போன்ற பயிர்களும் அதிகமாய் சேதமடைவதுண்டு. இப்பூச்சி இனத்தில் அதிகமாய் அறியப்பட்டவை காப்பிச் செடியில்விழும் தவிட்டு நிறமுள்ள பூச்சியும், பச்சைவர்ணமுள்ள பூச்சிகளுமே. இன்னம்மற்றவை கொய்யா, வேம்பு, கருவேல், மா, மற்றும் பல ஸாதாரண மரங்களிலுங் காணப்படும். இந்தப் பூச்சிகளெல்லாம் ஏராளமாயும் அதிசீக்ரமாயும் பெருகக்கூடிய சக்தியுடையவை. ஆனதுபற்றி அவைகளை முதலிலேயே, பெருகவிடாமல் தடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவைகள் ஏராளமாய் நஷ்டத்தை விளைவிக்கக்கூடும். அந்த நஷ்டத்தை தடுப்பதற்கு பின்வரும் எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஒளஷத முறைகள் அதிக அநுகூலமானவை:—

சீமை எண்ணெய் ஒளஷதம்.—இதைச் செய்யும் முறை—1 அல்லது 1½ பவுன் ஸாதாரண மட்ட சவுக்காரத்தை 2½படி (பட்டணம் படி) தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றி, நன்றாய் கொதி வந்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்து விட்டு கொஞ்சம் கொஞ்சமாய் 5 படி சீமை எண்ணெயை அதில் விட்டுக்கொண்டே ஒரு குச்சியினால் முழுவதும் வெள்ளையாகும் வரையிலும் கலக்கவேண்டியது. இப்படிச்செய்த இந்த மருந்தை, உறிஞ்சும் பூச்சிகளை நாசம் பண்ணசெடிகளில் ப்ரயோகிக்கும்போது 150 படி தண்ணீர் கலக்கி உபயோகிக்கவேண்டியது. மருந்தை, கொஞ்சம் ஜலம்விட்டோ, அல்லது அதிகம் ஜலம்விட்டோ, ஸந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் உபயோகிக்கலாம். உப்பு ஜலமாயிருந்தால் சவுக்காரம் எளிதில் கரையாது. அதிக சவுக்காரம் தேவையாயிருக்கும். இந்த மருந்து அசுவுணி, செடிப்பேன் முதலிய ம்ருதுவான தேகத்தோடுகூடிய பூச்சிகளை நாசம்பண்ண 150 அல்லது 175 படி தண்ணீரில் கலக்கி நல்ல பலன் உண்டாகும்படி உபயோகிக்கலாம். கெட்டியான தேகமுடைய பூச்சிகளுக்கும் இலைகளில் உள்ள சிறுதத்துப்பூச்சிகளுக்கும் அதிக காரமாக இம்மருந்தை உபயோகிக்கவேண்டும். அதாவது 75 அல்லது 100 படி தண்ணீர் மாத்ரமே விட்டுக் கலக்கவேண்டியது. இந்தமருந்தை எலிப் புழுவுக்கும் கால்நடைகளின் சிரங்கு முதலான பூச்சி ஸம்பந்தமான வ்யாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

புகையிலை மருந்து.—இதைச்செய்யும் முறை பின்வருமாறு 1 பவுன் புகையிலையை (கவைக்குதவாத புகையிலைத்தூளும் தண்டும் போதுமானது) 2½ படி தண்ணீர் போட்டு அரைமணி நேரம் காய்ச்சி இறக்கி வைத்துக்கொள்ளலாம்.



அல்லது காய்ச்சாமல் ஒருநாள் முழுவதும் புகையிலையை ஊறவைத்து சாற்றை எடுத்து வைத்துக்கொள்ளலாம். இதில் கால் பவுன் சவுக்காரத்தைப் போட்டுக் கரைக்கவும். இப்படி செய்த மருந்தை செடிகளின்பேரில் ப்ரயோகம் செய்யுமுன் 6 அல்லது 7 மடங்கு தண்ணீரில் கலக்கவும். இந்த மருந்து சீமை எண்ணெய் நாற்றம் பிடியாதபடி, அசுவுணி, மாப்பூச்சி இவைகளை போக்கடிக்கவேண்டிய தருணங்களில் அதிக உபயோகமானது. அதாவது கீரை முதலிய இலைகளில் சீமை எண்ணெயை உபயோகித்தால் சாப்பிடமுடியாது. அவ்வித தருணங்களில் இந்தமருந்தை உபயோகப்படுத்தலாம். புகையிலைச் செடி செடிப்பேனினால் பீடிக்கப்படும்போதும் இதை உபயோகிக்கலாம்.

கெடுதல் செய்யும் பூச்சிகளில் சாகாமல் தப்பினவைகளைத் துரத்துவதற்கு செடியின் பக்கத்திலுள்ள மண்ணில் உலர்ந்த புகையிலைத் தூளை உபயோகிக்கலாம்.

கீரை, முட்டைகோஸ் முதலிய உணவுக்குரிய இலைக்கறி செடிகளில் சீமை எண்ணெய் அல்லது புகையிலை ஒளஷதத்தை உபயோகப்படுத்தினால் துர்நாற்றம் அநேகநாள் இருக்கக்கூடும். ஆதலால் அப்பேர்ப்பட்ட செடிகளுக்கு உபயோகப்படுத்த பின்வரும் பரிகார முறைகள் ச்லாக்யமானவை. ஆனால் அவைகள் அநேக நாள் தாங்கமாட்டா.

சவுக்கார மருந்து.—கால் பவுன் மருந்தை 2½ பட்டணம் படி தண்ணீரில் கரைத்து, ஒரு வாரத்தில் அல்லது 3 தடவை உபயோகப்படுத்தலாம்.

நாப்தலீன்.—செடிப்பேனுக்கு நாப்தலீன் மருந்தைப் பொடித்து இரண்டு பங்கு சாம்பலுடன் கலந்து பேன் விழுந்த விடங்களில் தெளிக்கலாம். இந்தமருந்தை விடியற்காலம் இலைகள் பனியினால் நனைந்திருக்கும்போது உபயோகப்படுத்தவேண்டியது. அல்லது குளிர்ந்த ஜலத்தை முதலில் தெளித்து, அதன் பிறகு மருந்தை ப்ரயோகிக்கவேண்டியது. அப்படி செய்தால்தான் மருந்து பூச்சியின்பேரில் ஒட்டி, அதிக குணம்செய்யும். நாப்தலீன் மருந்தின் அனுகூலமென்னவென்றால், அது தீங்கற்றது, பூச்சிகளை கொல்வதில் திறமுடையது, 24 மணிநேரத்தில் செடியின்மேல் பட்ட விடங்களில் வாஸனைகூட இல்லாமல் ஆவியாய் மாறிவிடக்கூடியது. சில செடிப்பேன்களுக்கு மேல்தோல் தடித்திருக்கும். ஆனது பற்றி சீமை எண்ணெய் மருந்து உபயோகமில்லை. அதற்கு பதிலாக ரோசன மருந்தை உபயோகிக்கலாம்.

ரோசன மருந்து செய்யும் முறை.—ஒரு பாத்ரத்தை அடுப்பிலேற்றி அதில் 2 பவுன் ரோசனமும் 1 பவுன் ஸோடா உப்பும் பொடித்துப்போட்டு, அதை மூடும்படியாக தண்ணீர் விட்டு அவை முழுவதும் கரையும்வரைக்கும் கொதிக்கவைத்து, கொதிக்கும் பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் 7½ பட்டணம் படியாகும்படி குளிர்ந்தஜலம்விட்டு, மருந்தானது சுத்தமாகவும், இலேசாயும், பாகு நிறமாயும் ஆகும் வரைக்கும் காய்ச்சி இறக்கிவைக்கவும். அப்படி இறக்கி வைத்த மருந்தில் ஒன்றுக்கு 7 மடங்கு தண்ணீர் விட்டு ப்ரயோகம்செய்ய வேண்டியது. மருந்து இன்னம் கெட்டியாக வேண்டியபொழுது, ஜலத்தை கொஞ்சமாகவும் விட்டு உபயோகப்படுத்தலாம். இந்த மருந்தை செடிப் பேன் விழுந்த விடங்களில் ப்ரயோகம் செய்யும்பொழுது, பூச்சியின்பேரில் நுரைபோல்போய் மூடி, கொஞ்சம் உலர்ந்தவுடன் பூச்சியின்மேலுள்ள மூச்சுத்வாரங்களை முழுவதும் மூடிக்கொள்வதனால் அவைகளைச் சாகச்செய்யும். மற்றும் இப்பூச்சிகளை கொல்வதற்கு தயார்செய்து விற்பனை செய்யப்படும் ஒளஷதங்கள் பல, அதிக மருந்து வேண்டியு

காலத்தில் அவைகளை வாங்கி உபயோகிக்கலாம். அவைகளில் முதன்மையானது குரூடாயில் எமல்ஷன் என்பதும் (Crude oil emulsión) மீன் எண்ணெய் ஸோப்புமே (fish oil soap). சீமை எண்ணெய் மருந்து முதலான, பூச்சிகளைக்கொல்லும் இந்தமருந்துகளை அதிகமாய் அளவுக்குமேல் ப்ரயோகிப்பதால் செடியிலுள்ள இலைகளை கருக்கி நாசப்படுத்துவதால், ஔஷதமானது வ்யாதியைப் பார்க்க அதிகம் கெடுதிசெய்யும் என்பதை மறக்கக்கூடாது. கூடியவரையில் மேற்கூறிய முறைப்படியே மருந்துகளை கலக்கி உபயோகப்படுத்த வேண்டியது. ஆனால் பூச்சிகள் ம்ருதுவாயிருக்கும்பொழுது அதிகம் தண்ணீர்விட்டு கலக்கி, லேசாயும், கெட்டியான தோலினால் அவை மூடப்பட்டிருக்கும்பொழுது, கொஞ்சம் தண்ணீர்விட்டு கலக்கி கெட்டியாகவும் உபயோகப்படுத்தலாம். இந்த மருந்துகளை எப்பொழுதும் விடியற்காலங்களில், ஸூர்யனுடைய வெப்பம் அதிகரிக்குமுன்னமே ப்ரயோகம்செய்வது நலம்.

பூச்சிகள் அதிகமாய்க் காணும்பொழுதும், அதிக நாள் விடாமல் காணும்பொழுதும், மருந்தை ஒருதரம் மாத்ரமேயல்ல, மூன்று அல்லது நான்குமுறை 15 நாளுக்கு ஒருமுறையாக விடாமல் உபயோகப்படுத்தவேண்டியது.

மருந்து ப்ரயோகம் செய்யுமுன் முழுவதும் செடிப்பேனினால் பிடிக்கப்பட்ட கிளைகளையும் அல்லது உலர்ந்து பட்டுப்போன செடிகளையும் அப்புறப்படுத்தி கொளுத்தி விடுவது நல்லது. இல்லாவிடின் இவைகள் பூச்சிகள் வந்து தங்குவதற்கு நல்ல குடியிருப்பாகிவிடும்.

## AN EGYPTIAN HEAVEN.

By R. HARI ROW.

### ஈஜிப்ட் தேசத்தாருடைய ஸ்வர்க்கம்.

ஈஜிப்ட் மிகப் பழைமையான தேசங்களில் ஒன்றாகும். அந்த தேசத்திலிருந்த பூர்வீக ஜனங்கள் கல்வி யறிவில் மேம்பட்டிருந்தார்கள். அதிக நாகரிகம் படைத்திருந்தார்கள். அவர்கள் ஸ்வர்க்கத்தைப்பற்றிக் கொண்டிருந்த கொள்கைகள் மிகவும் விசித்ரமானவை. அவைகளில் சிலவற்றை இங்கு எழுதுகிறோம்.

நிர்மலமான ஆகாயத்தை அவர்கள் ஓர் பெரிய இரும்புத்தகடு என்று நினைத்தார்கள். அதை விழாமல் நான்கு திக்குக்களிலும் நான்கு பர்வதங்கள் தாங்கிக்கொண்டிருந்தனவாம். நக்ஷத்ரங்களோ, இந்தத்தகட்டினின்றும் தொங்கும் சிறு விளக்குகள். ஸூர்யன் தனது படகில், தினமும், பகலில், இந்த பூமியைச் சுற்றி, நீர் வற்றாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஓர் ஆற்றில், வெளிச்சம் கொடுத்துக்கொண்டே போவான். இரவில் சந்த்ரனும் அப்படியே. ஆனால் ஒரு வித்யாஸம் உண்டு. ஒவ்வொரு மாஸத்தின் முதல் பதினைந்து நாட்களிலும் சந்த்ரன் நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வருவான். பிறகு, அதன் பகைவனொருவன், ஒரு முள்ளம்பன்றி ரூபமாய் வந்து, சந்த்ரனுடன் போர் செய்து, அவனை வென்று, ஆற்றில் தள்ளிவிடுவான். சந்த்ரன் அந்த ஆற்றில் மற்ற பதினைந்து நாட்களிலும் தனது அங்கம் குறைந்துகொண்டே வருவான். இதுதான் நாம் சொல்லும் வளர்பிறை, தேய்பிறைபோலும்!



மேலுலகம், ஸ்வர்க்கம் இவைகளைப்பற்றி பல பேர் பல விதமாய் எண்ணலானார்கள். அவைகளில் ஒன்றிரண்டு மாத்ரம் எடுத்துக் கூறுவோம்.

“நீரில் குமிழி இளமை, நிறைசெல்வம் நீரில் சுருட்டும் நெடுந் திரைகள்,” என்றபடி இந்த வாழ்வு சாச்வதம் அல்லவென்று அவர்கள் எண்ணினார்கள். நரகத்திற்கு அஞ்சி பாபம் செய்ய பயந்தார்கள். இந்த பூலோகத்தில் வாழ்வு கொஞ்ச வர்ஷங்களேயாதலாலும், அந்த வாழ்விலுள்ள ஸுகங்கள் யாவும் இரவில் கண்ட கனாக்கள்போல் அநித்யமாயிருப்பவைகளாதாலும், இந்த வாழ்வை அவர்கள் அதிகமாய் இச்சிக்கவில்லை. ஆகையால்தான் வீடுகள் யாவும், அரசர் முதற்கொண்டு, ஆண்டி வரையிலும, மிகவும் விலையற்றபொருள்களால் கட்டப்பட்டன. ஆனால், அவர்கள் இறந்தவர்களைப் புதைக்கும் இடங்களோ என்றும் நிலையாய் நிற்கும்படி, விலையுயர்ந்தனவாயும், அழியாதனவாயும் கட்டப்பட்டுள்ள ஸமாதிகளாகும். அவைகளை நாம் இப்பொழுதும் ஈஜிப்டில் காணலாம். ‘நைல்’ ஆற்றங்கரையில், அநேக அடி உயரமுள்ளவைகளாயும், உள்ளே அநேகம் பேர் ஸஞ்சரிக்கக்கூடிய விஸ்தீரணம் உள்ளவைகளாயும், அநேக அறைகளுடன்கூடிய ஸமாதிகள் நிற்கக் காணலாம். அவைகளுக்குத்தான் பிரமிட் என்று பெயர்.

ஒருவன் இறந்துபோனால், அவன் நல்லவனாயிருக்கும் பக்ஷத்தில், ஆகாயத்தில், என்றும் அழியாததாயும், ஸூர்ய சந்த்ராதிகள் எவ்வளவு வர்ஷங்கள் அழியாமலிருக்குமோ, அவ்வளவு காலம் வரையில் நக்ஷத்ர ரூபத்துடன் ப்ரகாசித்துக்கொண்டிருப்பார்கள் என்று சிலர் எண்ணினார்கள். மற்றும் சிலர் ஸூர்ய சந்த்ராதிகளுடன் பூப்ரதக்ஷணம் செய்வார்கள் என்று நினைக்கலானார்கள். இது ஆதிக் கொள்கை.

பல நூற்றாண்டுகளுக்குப் பின்னால் (ஆனால் நமக்கு அநேக வர்ஷங்களுக்கு முன்னே) ஈஜிப்ட் தேசத்தை ‘ஆஸரிஸ்’ (Osoris) என்ற செங்கோல் மன்னன் ஆண்டுவந்தான். அவன் மிகவும் நல்லவன்; நல்ல கொடையாளி; ப்ரஜைகளுக்குத் தகப்பன் போன்றவன். அவனுக்கு ‘ஸெட்’ (Set) என்றோர் தம்பியுண்டு. அவன் வஞ்சகன். சூது, வாது இவற்றில் மிகவும் கைதேர்ந்தவன். அவன் ‘ஆஸரிஸ்’ ஆண்டு வந்த ராஜ்யத்தை அபகரிக்க எண்ணங்கொண்டான்.

ஒரு நாள், ‘ஸெட்’ தனது ஸகோதரனைச் சாப்பாட்டிற்கு அழைத்தான். அப்போது ஒரு அழகிய பெட்டியைக் காண்பித்து, இதில் யார் நுழைந்தால், அவர்களுக்குச் சரியாயிருக்கிறதோ அவர்களுக்கு இது இனாம், என்றான். ‘ஸெட்’டின் கெட்ட ஸிநேகிதர்கள் அந்தப் பெட்டியில் நுழைந்து பார்த்தார்கள். சரியாயிருந்த பாடில்லை. ‘ஆஸரிஸ்’ நுழைந்தான்; நுழைந்தானோ இல்லையோ, ‘ஸெட்’ மேல் மூடியை மூடி, நன்றாய்ப் பூட்டி, ‘நைல்’ ஆற்றில் அந்தப்பெட்டியை எறிந்துவிட்டான்.

அரண்மனையிலிருந்து ஸெட் வீட்டுக்குப் போன ‘ஆஸரிஸ்’ திரும்பி வாராததைக்கண்டு அவன் மனைவி ‘ஐஸிஸ்’ (Isis) மனக்கலக்கமடைந்து, வருத்தம் தாங்கமுடியாமல், இங்குமங்கும் தேட ஆரம்பித்தாள். ‘ஸெட்’ இம்மாதிரி செய்திருப்பான் என்று அவள் கனவிலும் நினைக்கவில்லை. கடைசியில் ‘நைல்’ ஆற்றங்கரையில் வந்து சேர்ந்தாள். அலைகளால் மோதப்பட்டு, கரையோரமாய் வந்த ஒரு பெட்டியைக் கண்டு, அதில் என்ன இருக்கலாம் என்ற ஆச்சரியத்துடன் அதைத்திறந்து பார்த்தாள். ஆராத துக்கமும் ஆச்சரியமும் உண்டாயிற்று. ‘ஆஸரிஸ்’ இறந்துபோய்விட்டான்; அவன் ப்ரேதத்தின்மேல் சாய்ந்து, கண்ணீர் பெருக, உடல் சோர, கோவென்று

கதற ஆரம்பித்தாள். பாதகனன்றோ 'ஸெட்'? அப்பாவி அங்கேயும் வந்து, 'ஐஸிஸ்' கையிலிருந்து, அந்த ப்ரேதத்தைப் பிடுங்கி, துண்டு துண்டாய் வெட்டி, எறிந்துவிட்டான். அதன்மேல் 'ஐஸிஸ்' எழுந்து, வழியில் கண்ட கணவனது எலும்பு முதலியவைகளை அங்கங்கே மண் தோண்டி, புதைத்து, மூடிவிட்டு, வீடு போய்ச் சேர்ந்தாள்.

சில வர்ஷங்கள் கழிந்தன. 'ஹோரஸ்' (Horus) என்ற 'ஆஸரி'ஸின் புத்ரன் பெரியவனானவுடன், தன் தகப்பன் இறந்த விதத்தைக் கேட்டு, கோபந்தாங்காமல் 'ஸெட்'டை சண்டைக் கிழுத்து, சண்டையில் வென்று, அவனைத் தோற்கடித்துவிட்டான். தேவர்கள் இதைக் கண்டு பூமாரி பொழிந்தார்கள். ஹோரஸின் தீரச்செயலை மெச்சினார்கள். "'ஆஸரிஸ்' குற்றமற்றவன்; அவன் தம்பிதான் கொலை பாதகன்;" என்று சொல்லி, 'ஆஸரிஸை'ப் பிழைப்பித்து, மேலுலகத்தில் ஒரு மாளிகையில் இருக்கச் செய்து அன்று முதல் இறந்தவர்களின் செயல்களை ந்யாய விசாரணை செய்யும்படி நியமித்தார்கள்.

பூமியில் இறந்தவனுடைய ஆத்மா, காடு, மலை, ஆறு முதலியவைகளைக் கடந்து, ஆஸரிஸினுடைய மேலுலகத்திலுள்ள மாளிகையில் வந்து சேரும். மாளிகையின் பெரிய கதவுகள் தாளிட்டிருக்கும். உள்ளே போக வேண்டுமானால் சில மந்த்ரங்களை உச்சரிக்க வேண்டும். அப்போதுதான், அந்த மாளிகையின் கதவுகள் திறந்துகொள்ளும். உள்ளே பெரியதொரு மண்டபம் இருக்கும். அதன் நடுவில் தராசு ஒன்று இருக்கும். அருகில் ஒரு பூதம் நின்றுகொண்டிருக்கும். சுற்றிலும் அநேக பூதகணங்கள் உட்கார்ந்துகொண்டிருக்கும். அவைகளில் ஒவ்வொன்றுக்கும், மனிதன் செய்த ஒவ்வொரு பாபச் செயலையும் சரியாய் தண்டிக்க அதிகாரமுண்டு. வந்த ஆத்மாவின் ஹ்ருதயத்தை தராசின் ஒரு தட்டில் வைத்து, மற்றொரு தட்டில், ஸத்யத்திற்கு அடையாளமாயுள்ள இறகு ஒன்றை வைத்து நிறுப்பார்கள். நிறை சரியாயிருந்தால் வந்த ஆத்மாவை இந்த பூத கணங்கள் ஒன்றும் செய்யமாட்டா. நிறை குறைந்தால், உடனே ஹ்ருதயத்தை யெடுத்து, பசியோடு காத்துக்கொண்டிருக்கும் ஒரு பூதத்திற்கு ஆகாரமாய் எறிந்துவிடுவார்கள். நிறை குறையவில்லை என்றுதெரிந்தால், உடனே, 'ஹோரஸ்' அவ்விடத்திற்கு வந்து, ஆத்மாவை, கைகொடுத்து, தனது தகப்பனிடம் அழைத்துக்கொண்டு செல்வான். அதுதான் ஸ்வர்க்கம். அங்கே ஆத்மாக்கள் சிந்தையின்றி வாழ்ந்துகொண்டிருக்கலாம். இந்த விதமாய் எண்ணினவர் பலர். இவர்கள் 'ஆஸரி'ஸை பூஜை செய்தார்கள். ஏனெனின், அப்படி செய்தால்தான் அவன் தயவை ஸம்பாதிக்கலாகும் என்று நினைத்தார்கள்.

இன்னும், சிலர் எண்ணின மாதிரியை விரிவாய் எழுதாமல் சுருக்குவோம்:

ஸ்வர்க்கம் என்பது என்ன? மேற்கு திக்கில், வெகுதூரத்திற்கு அப்பால் ஒரு தேசமுண்டு. அங்கே வெயில் என்பதே கிடையாது; குளிர் இல்லை; பனி பெய்வது இல்லை; தென்றல் மந்தமாய் வீசிக்கொண்டிருக்கும். அந்தக் காற்றில் புஷ்பங்களின் வாஸனை நிறைந்திருக்கும்.

உழுது பயிர்செய்து, கதிர்களை எடுத்து, தான்ய மணிகளைச் சேர்த்து, ஸுகமாய் வாழலாம். நீரோடைகளில், பாட்டுப் பாடிக்கொண்டு, தோணிகளில் ஏறிப்போகலாம். காய் கனிகளின் பாரம் தாங்காமல் கீழே சாயும் மரங்களின் பரவிய நிழலிலே விளையாடலாம். பாபம் என்பதின் சாயலைக்கூட இங்கே கனவிலும் காண முடியாது. இப்படி ஒரு ஸ்வர்க்கம் இருப்பதாக சிலர் எண்ணினார்கள்.



சரி, இவ்வுலகத்தில் கஷ்டப்பட்டு உழைத்து ஸம்பாதிக்கும் 'அன்றாடங் காச்சி'க்கு இது ஒரு நல்ல ஸ்வர்க்கந்தான். அவனுக்கு வேலை செய்வதென்றால் ஸகஜம். ஆனால் இங்கே மண்வெட்டிகூட தொடாதவனுக்கு, அங்கே உழுது, பயிர் செய்யவேண்டுமென்றால் அவனால் முடியுமா? அவனுக்கு இது நரகமாகவல்லவா தோன்றும்?

இறக்க வேண்டியது நிச்சயம். ஆனால் அங்கே போய் வேலை செய்யவேண்டுமே? செய்யாமலிருக்க உபாயம் ஒன்று தேடவேண்டுமே. என்ன உபாயம்? இங்கே நாமா எல்லா வேலையும் செய்கிறோம்? வேலைக்காரர்களைக் கொண்டு செய்விக்கவில்லையா? அதேமாதிரி அங்கேயும் செய்யச் சொல்லுவோம் என்றார்கள். சரி, அவர்களை எப்படி அழைத்துக்கொண்டு செல்வது? கொன்றுவிட்டால் யஜமானனோடு வந்துவிடுவார்கள் என்ற யுக்தி தோன்றியது. ஆகையால் பணக்காரனொருவன் இறந்தால், ஐயோ பாவம்! அவன் புதைக்கப்படும்போது, அவனது வேலைக்காரர்களில் சிலரைக்கொன்று அவனோடு புதைப்பார்கள்.

இந்த வழக்கம் வெகுநாள் நடந்துவந்தது. இதன் கொடுமையைக் கண்டு, நிவர்த்திக்கும் பொருட்டு, மண்ணினால் பொம்மைகளைச் செய்து, ஒன்றின் கையில் மண்வெட்டி, இன்னொன்றின் கையில் கடப்பாறை முதலியவைகளைக்கொடுத்து இறந்தவனோடு புதைத்துவிட்டார்கள். இவர்கள்தான் யஜமானனுக்குப் பதிலாக வேலைசெய்து, அவனுடைய வேலையின், கொடுமையை நீக்குபவர்கள்!

ஆர். ஹரி ராவ்.

## THE SEA COW.

### கடல் பசு.

முற்காலத்தில் கப்பல் யாத்ரைசெய்த வர்த்தகர்களும் பிறரும் ஸமுத்ர ஜலத்திலேயே வாழும் மனிதர்களைக் கண்டதாகச் சொல்லி வந்தார்கள். இப்படிப்பட்ட கடல் மனிதர்கள் தரை மனிதர்களோடு சேர்ந்து கல்யாணம் முதலிய ஸம்பந்தங்கள் வைத்துக்கொண்டதாகவும் பண்டைக்காலத்தில் கதைகள் வழங்கிவந்தன. கடல் மனிதர்கள் இடுப்புக்கு மேல் நரரூபமாகவும் இடுப்புக்குக்கீழ் மீன்ரூபமாகவும் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. இவர்களில் ஆணும் பெண்ணும் உண்டாம். பெண்ணின் முகம் அதிக லக்ஷணமுள்ளதாகவிருக்கும். இந்த விஷயத்தைப் பலர் ஆக்ஷேபித்தும் வந்தார்கள். ஆனால் பூகோள ஆராய்ச்சி வ்ருத்தியடையவே அதன் உண்மை வெளிவரலாயிற்று. கொலம்பஸ் அமெரிக்காவுக்குப் போயிருந்தபோது மூன்று கடல் ஸ்த்ரீகளைப் பார்த்ததாகவும், ஆனால் அவர்கள், எல்லாரும் சொல்லி வந்ததுபோல், அழகு வாய்ந்தவர்கள் அல்லரென்றும் தெரிவித்தார். அவருக்குப் பிறகு மேற்கு இந்தியத் தீவுகளுக்கும் அமெரிக்காவிலுள்ள ப்ளோரிடா நாட்டுக்கும் தேச ஆராய்ச்சியின் பொருட்டுப் போனவர்களும் இதே மாதிரி சொல்லிவந்தார்கள்.

உண்மை யென்னவென்றால், கிட்டத்தட்ட மனித முகமும் கைகளும், இடுப்பின்கீழ் மீன் ஸ்வரூபமும் உள்ள ஒருவகை ப்ராணியையே இவர்கள் பார்த்தார்கள். பண்டைக் காலத்தவர்களும் இவ்விதமே ஏமாந்தார்களென்றும் சொல்லலாம். அந்த ப்ராணி இப்போதும் அமெரிக்காவிலும் வேறு சில தேசங்களிலும் காணப்படுகிறது. அதற்கு மானட்டீ யென்றும், ஸீகௌ (அதாவது கடல் பசு) என்றும், டுகொங் என்றும் பெயர்கள் வழங்குகின்றன.

கடல் பசு ஒரு சாந்தமுள்ள ப்ராணி. அதன் உருவம் ஸீல் என்னும் மீனினுடைய உருவத்தைப் போலிருக்கும். முகம் கிட்டத்தட்ட மனிதமுகத்தைப் போலிருக்குமாதலால்தான் இதைப்பற்றிக் கதைகள் கிளம்பின. இது 15 அடிமுதல் 18 அடிவரை நீளமுள்ளது. இதன் முன்னங்கால்கள் கைகள்போல உபயோகப்படுகின்றன. அது தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும்போது, குட்டியைத் தன் கையால் ஏந்தி ஜலத்துக்கு மேலே பிடித்திருக்கும். அப்போது ஒரு ஸ்த்ரீ தன் இரண்டு கைகளாலும் தன் குழந்தையை ஜலத்துக்கு மேலே தூக்கிக்கொண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படிக் காணப்படும். இந்த ப்ராணிக்குப் பின்னங்கால்கள் கிடையா. அவைகளுக்கு பதிலாக ஒரு அகன்ற உருண்டையான வால் தானிருக்கிறது. ஜலத்தில் நீந்துவதற்கு வால் உபயோகப்படும்.



கடல் பசு.

இது ஜலத்தைவிட்டுத் தரைக்கு வருவதில்லை. அதை யாராவது எதிர்த்தால் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள மார்க்கம் கிடையாது. ஆகவே அதிக ஆழமான இடத்துக்குப் போகாமல் ஸ்வல்ப ஆழமுள்ள இடத்திலேயே இருக்கும். வெள்ளைக்காரர்கள் அமெரிக்காவுக்கு வருவதற்கு முன்னால் ப்ளோரிடா ப்ரதேசத்தில் உள்ள நதிகளிலும் கடல்களிலும் கடல் பசுக்கள் ஏராளமாக இருந்தன. ஆனால் இப்போது இரண்டொரு இடங்களில் தான் காணப்படுகின்றன. மற்றவிடங்களிலெல்லாம் கொல்லப்பட்டுப்போயின.

கடல் பசு ஜலத்தில் வளரும் புற்களைத் தின்று ஜீவிக்கிறது. இதன் மாம்ஸம் ரொம்ப நேர்த்தியானதென்று சொல்லுகிறார்கள். இதைப் பழக்கி வளர்க்கவும் கூடும். இதை அமிதமாக அழித்து விடாதபடி பார்த்து வந்தால், மந்தை மந்தையாக வ்ருத்திசெய்து, உணவுக்கு உபயோகித்துக் கொள்ளலாமாம்.

இதன் மாம்ஸமேயன்றி இதன் எலும்புகளும் தந்தம்போல் உபயோகப்படுமாம். இதன் உடலிலிருந்து காட்லிவர் எண்ணெயைப்போன்ற ஒரு எண்ணெய் கிடைக்கிறது. ப்ளோரிடா நாட்டில் இந்த ப்ராணி நாசமடையாமலிருப்பதற்காக இதைக் கொல்பவர்களுக்கு 1,500 ரூபாய் அபராதம் போடப்படுமென்று சட்டம் செய்திருக்கிறார்கள். இதை பழக்கிவளர்த்து வ்ருத்திசெய்யவும் உத்தேசித்திருக்கிறார்கள்.

---

## THE MINT.

BY A. SANJEEVI ROW.

## பொதினா.

பொதினாச்செடியை புதினாவென்றும் சொல்கிறார்கள். பொதினா உற்பத்தியாகும் விதம் ஆச்சர்யமானது. இதன் இலை மிகவும் உபயோகமுள்ளதென்று எல்லோராலும் கொண்டாடப்படுகிறது. ஐரோப்பியரும் மகம்மதியரும் உணவோடு சேர்த்து உண்கிறார்கள். இதன் குணத்தைப் பரிசோதித்தறிந்த ஹிந்துக்களும் இதை உட்கொள்ளுகிறார்கள்.



ஜலம் அதிகமாக இருந்து பாதுகாப்பும் இருந்தால் பொதினாச்செடி எல்லாவிடத்திலும் எக்காலத்திலும் செழித்துவளரும்.

செடியின் உற்பத்தி :—இந்தச் செடியின் உற்பத்தியைப்பற்றி பலர் பலவிதமாகச் சொல்கிறார்கள். சிலர் இதற்கு விதை இல்லை என்கிறார்கள். சிலர் விதை இருக்கிறதென்றும், அது உற்பத்தியாக்க விதைக்கப் படுவதில்லையென்றும், அப்படி விதைத்தாலும் முளை கிளம்புகிறதில்லையென்றும் சொல்கிறார்கள். வேறு சிலர் விதைகளினின்று செடிகள் உண்டாகின்றனவென்றும், எப்போது செடி என்னும் பெயருடன் பூமியில் ஒன்று உண்டாயிற்றோ அப்பொழுதே அதற்குப் பூவும் விதையும் இருக்கின்றனவென்றும் சொல்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்த விதைகளை பூமியிலிட்டுப்பார்த்த அனுபவத்தைச் சொல்லவில்லை.

வாழைச்சரகிலாவது வைக்கோல் புரியிலாவது வெல்லத்தை நன்றாகக் கரைத்துத் தடவி வஸ்த்ரம் உலர்த்துவதற்கு கட்டுங் கொடிபோல் கட்டிவைத்தால், வெல்லத்தின் இனிப்புக்காக ஈக்கள் அந்தக் கொடிகளில் மொய்க்கின்றன. ஈக்கள் மொய்த்து சில நாட்கள் சென்றபிறகு எரு அல்லது உரம் கலந்து பக்வப்படுத்தப்பட்ட புழுதியுள்ள பூமியில் ஈக்கள் மொய்த்த கயிற்றைப் போட்டு மேலே மண்ணினால் மூடி தண்ணீர் தெளித்துவர பொதினாச்செடி முளை கிளம்பும்.

பதரில்லாத வைக்கோலில் கொஞ்சம் எடுத்து வட்டம்போற்செய்து, அதில் அரிசியிலிருந்து வடித்த கஞ்சியை காலை தொட்டு இரண்டு நாழிகைக் கொருதரமாக நாள்முழுவதுமாவது அல்லது அந்நாளில் 4, 5 தடவையாவது தெளித்துக் கொண்டிருக்க, இயற்கையிலேயே மொய்க்கும் குணமுள்ள ஈக்கள் வைக்கோலின்மீது மொய்க்கும். அந்த வைக்கோலை அதற்கென்றே தோண்டப்பட்ட பழைய எருக்கலந்த ஆழமுள்ள பள்ளத்தில் அன்று ஸாயந்த்ரம்வைத்து மூடி, இரண்டு மூன்று ஜலம் தெளிக்க 21 நாட்களில் பொதினாச்செடிகள் கிளம்புகின்றன. இப்படிப் பயிரிட்ட செடிகள் $1\frac{1}{2}$ அடி உயரம் கிளம்புகின்றனவாம். புதுவையிலுள்ள ஸெய்ண்ட் லோன் தோட்டத்திலும் மற்ற தோட்டங்களிலும் விசாரித்ததில், பொதினாச்செடி ஈயின் எச்சத்தினால் உண்டாகிறதென்றும், வெல்லக் கட்டி வர்த்த சாக்கை கவனம் செலுத்தாமல் ஆறு மாஸகாலம் வரையில் ஒரு மூலையில் வைத்தால், கடைசியில் அந்த சாக்கானது மண் ஸ்வரூபமான தூள்களாகிறதாகவும் பின்பு தக்க எருவுடன்சேர்த்து ஒரு சதுரப் பாத்தியில் அந்தத் தூளைத்தூவி மண்ணைக் கிளறி தண்ணீர்தெளிக்க முளை கிளம்பி வருகிறதாகவும், இது அனுபவத்திற் கண்டதாகவும் சொல்கிறார்கள்.

இதற்க, சிலர் பொதினாச் செடியின் மூலகாரணம் வௌவால் புழுக்கையென்று சொல்கிறார்கள். இது எதுவரையில் உண்மையோ தெரியவில்லை.

இந்தச் செடி பூமியின் மட்டத்திலிருந்து சில அங்குலம் உயரம் வளர்ந்தபிறகு, செடிகள் உற்பத்தி செய்யவேண்டி இதன் கிளைக்கிளைக்கிள்ளி பொன்னாங்கண்ணி, சொச்சிமுதலிய செடிகளைப்போல் நடுகிறார்கள். அவைகள் துளிர்க்கின்றன. இந்தச்செடிகள் பூத்துக் காய்க்கின்றன. விதை எடுத்து விதைத்தால் முளைக்கிறதாகவும் சொல்கிறார்கள்.

மணம்:—இப்பொதினா இலை இனிமையான வாஸனையுடையது. சிலர் அந்த வாஸனையை விரும்புகிறார்கள். சிலர் அதை வெறுக்கிறார்கள்.

உபயோகம் :—இந்த இலையை அதிகமாக கொண்டாடுகிறவர்கள் மகம்மதியர்களே. நாள்தோறும் அவர்கள் தங்கள் உணவுடன்

சேர்த்து உட்கொள்கிறார்கள். மகமதியர் கிச்சிலிச்சோறு பக்வம் செய்யும்பொழுது இதன் இலையை அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

இதை உண்பதால் ஜனங்கள் அடையும் நன்மைகள் பல. இது தேக ஆரோக்யத்துக்கு இன்றியமையாதது. வைத்யத்தில் இது ச்ரேஷ்டமாக கொண்டாடப் படுகின்றது. வாயரோகிகம், காய்ச்சல், பித்த அரோசிகம் முதலியவைகளுக்கு பொதினா சிறந்த மருந்தாக உபயோகப்படுகிறது. இதன் இலையை உபயோகிப்பதனால் ரத்த வ்ருத்தியும் பித்த சாந்தியும் ஜீரணசக்தி முதலான குணங்களும் உண்டாகின்றன. ஆகையால் ஐரோப்பியர்கள் இதை அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஸுலபத்தில் ஜீரணமாகாத மாம்ஸம் முதலிய உணவுகளை இந்த இலை அதி சீக்ரத்தில் ஜீர்ணிக்கச் செய்கிறது.

ஹிந்துக்கள் இந்த இலையை நெய்யில் வதக்கி உப்பு, புளி, இஞ்சி, மிளகாய், கருவேப்பிலை முதலியவைகளைச் சேர்த்து அரைத்து பித்த சாந்தியும் ஜீரணசக்தியும் உண்டாவதற்கு உணவுடன் கலந்து சாப்பிடுகிறார்கள். வைத்யர்கள் இந்த இலையைப் பிழிந்து சாறெடுத்து வைத்ய முறைக்கேற்ற சில சரக்குகளைச் சேர்த்து க்ருதம் (நெய்) செய்கிறார்கள். இந்த நெய் வ்யாதிஸ்தர்களுக்கு மிகவும் உபயோகிக்கப்படுகிறது. இதைச் சாப்பிடுகிறவர்கள் மனஸ் ஸந்துஷ்டியுள்ளவர்களாயும் திடகாத்ரர்களாயும் ஆரோக்யமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்.

ஐரோப்பியர் இதன் சாற்றை உபயோகித்து பெப்பர்மெண்டு (Peppermint) என்னும் மிட்டாய் செய்து ஜனங்களுக்கு பயன்படும்படி விற்கிறார்கள். இந்த இலையின் சாற்றை ஜலரூபமான பெப்பர்மிண்ட் மிக்சர் ஆகச்செய்து பித்தசாந்திக்கும் மற்ற வ்யாதிகளுக்கும் உபயோகிக்க வைத்ய சாலையில் வைத்திருக்கிறார்கள்.

எ. ஸஞ்சீவி ராவ்.

# VILLIPUTHURAR.

By NAIVELI KRISHNAMA CHARIAR.

## வில்லிபுத்தூரர்.

சென்ற மாஸத்திய ஜனோபிமானியில் வில்லிபுத்தூராருடைய இளமை, கல்விப்பயிற்சி, இவர் பாரதம் பாடிய வரலாறுகளில் மூன்று ஆகிய இவைகளை எழுதியிருந்தோம். அவர் பாரதம் பாடியதைப்பற்றி இன்னொரு வரலாற்றையும், அவரைப்பற்றிய இதர விஷயங்களையும் இங்கு எழுதுகிறோம்.

சில வர்ஷங்களுக்கு முன்பாக இருந்த முருகதாஸர் செய்துள்ள 'புலவர் புராணம்' என்கிற நூலில் வில்லிபுத்தூரார் சரித்ரத்தைப்பற்றி கூறியிருக்கிறது. அதின் ஸாராம்ஸம் பின்வருமாறு :—வில்லிபுத்தூரார் பெண்ணை நாட்டில் சனியூர் என்னும் க்ராமத்தில் ப்ராம்மணகுலத்தில் பிறந்தார். அவருக்கு ஒரு தம்பி உண்டு. அவர்கள் இளம் வயதிலேயே கல்வியில் தேர்ச்சியடைந்து பண்டித சிகாமணிகளாக விளங்கினார்கள். கல்விப் பொருளோடு செல்வப்பொருளும் அவர்களுக்கு அபரிமிதமாயிருந்தது. அவர்கள் ஒருவர்மேல் ஒருவர் அன்புடையவர்களாயிருந்ததால் அவர்கள் பாண்டிய நாட்டிலுள்ள ஸ்ரீ வில்லிபுத்தூரையடைந்து அங்கு தங்கள் தங்களது மனைவி மாருடனே ஒரே குடும்பமாய் ஒத்து இல்லற வாழ்க்கையை நடத்திவந்தார்கள்.

இப்படியிருக்க, கொங்கு நாட்டரசனான ஆண்டான்பிள்ளை என்பவன் மிகவும் தமிழபி



மானி. வடமொழியிலுள்ள மகாபாரதத்தைத் தமிழ் செய்யுள்களால் செய்விக்க எண்ணி, அம்மாதிரி செய்ய ஸாமர்த்தியமுள்ளவர்கள் எவர் என்று அவன் விசாரிக்கையில், அக்கார்யத்தைச் செய்வதற்கு தகுந்தவர்கள் வில்லிபுத்தூராரும் அவர் ஸகோதரருமே யென்றும், ஆனால் அவர்கள் தனவந்தர்களானதால் யாரையும் லக்ஷ்யம் செய்யமாட்டார்கள் என்றும் கேள்விப்பட்டு "இந்தக் கார்யத்தை முடிக்க நாம் ஒருதந்த்ரம் செய்ய வேண்டும். அதாவது ஒற்றுமையாயிருக்கும் இந்த இரண்டு ஸகோதரர்களுக்கும் சிறிது மனவருத்தம் உண்டாகச் செய்யவேண்டும். இவர்கள் மனஸ்தாபமாயிருக்கும்பொழுது தான் நமது கார்யத்தை முடித்துக்கொள்ள வேண்டும்" என்று தானகவே யோசனைசெய்தான். பிறகு ஒரு கிழ ப்ராம்மண விதவையை அழைப்பித்து "ஒய் பாட்டியம்மா! உமக்கு வேண்டிய பணம் தருகிறேன். நான் சொல்கிற கார்யத்தை மாத்ரம் பூர்த்தி செய்துவை. அதாவது நீர் அவர்கள் வீட்டுக்குச்சென்று தமையன் தம்பி இருவர்க்கும் கலகத்தை உண்டாக்கி மனவருத்தம் ஏற்படும்படி செய்யவேண்டும்" என்று சொல்லி அவளுக்கு வேண்டிய பணம் கொடுத்தனுப்பிவிட்டு, பிறகு மதுரைக்குப்போய், பாண்டிய அரசனைக் கண்டு ரகஸ்யமாக எல்லா விஷயங்களையும்சொல்லி "அவர்களது வழக்கு உம்மிடத்தில் வந்தால், அந்த வழக்கை என்னிடத்தில் தயவுசெய்து அனுப்பவேண்டும்" என்று வேண்டிக்கொள்ள பாண்டிய அரசனும், அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான்.

இப்படியிருக்க, அரசனது உத்தரவுப்படியே அந்தக் கிழவி வில்லிபுத்தூரார் வீட்டுக்குப்போய் அவர் மனைவியிடத்தும் அவர் தம்பி மனைவியிடத்தும் ஸ்நேகிதம்கொண்டு அவர்களிருவரிடத்திலும் நல்லவளென்று பேர் வாங்கிக்கொண்டாள். இப்படி சில நாட்கள் சென்ற பிறகு, அவர்களுக்குள் ஒருத்திமேல் ஒருத்தியிடம் பலகோள் சொற்களைச்சொல்லி, பொறாமையை மூட்டிவிட்டு, பகைமையை விளைவித்து, ஒருவரோடொருவர் எதிர்த்துப்பேசி சண்டை போடும்படியாயும் செய்தாள். மேலும் அவளவள் தன்தன் கணவனைத்தன் வசமாக்கி தன் இஷ்டப்ரகாரம் நடக்கவும் தூண்டிவிட்டாள். இதனால் இதுவரையில் ஒருமித்து வாழ்ந்திருந்த ஸகோதரர்களுக்கு மனவருத்தம் உண்டாகி, அவர்களது ஆஸ்தியைப் பாகஞ்செய்து தரும்படி தங்கள் அரசனை பாண்டியனிடம்வர, பாண்டியன், முன் கூறியபடி அந்த வழக்கைத் தீர்த்துக்கொள்ள் கொங்கு நாட்டரசனிடம் அவர்களை அனுப்பினான். அப்படியே சென்ற அவர்களைக்கொங்க நாட்டரசன் கண்டு அளவிலா ஸந்தோஷமடைந்து, அவர்களுக்கு தக்க மரியாதைசெய்து, வடமொழி பாரதத்தை இரு பாகமாகப் பிரித்து அவ்விருவரிடமும் கொடுத்து "நீங்கள் பாரத காவ்யத்தை தமிழில் பாடலாகச் செய்த பின்னரே, உங்களது செல்வத்தை பாகித்துக் கொடுக்கமுடியும்" என்று சொன்னான். அப்படியே அவர்கள் அந்தக்கட்டளையை மேற்கொண்டு சிலநாள் அந்த ஸமஸ்தானத்திலேயே தங்கியிருந்து 6000 கவிகளால் பாரதத்தைப்பாடி முடித்தார்கள்.

இதைக்கண்ட கொங்கராஜன் அதிக ஸந்தோஷமடைந்து, தான் பார்ப்பனக்கிழவியை ஏவியது, அதனால் குடும்பக்கலகம் விளைந்தது முதலியவைகளை விவரமாக அவர்களுக்குக்கூறி "நீங்கள் எனது மனோபீஷ்டத்தை பூர்த்தி செய்வித்ததால், நீங்கள் என்ன கேட்பினும் கொடுக்கத் தயாராயிருக்கிறேன்" என்றான்.

வில்லிபுத்தூரார் "என்னோடு சர்ச்சை பாடத் தொடங்கி தப்பினவர்களுடைய காதுகளை அறுக்கும்படி எனக்கு ஒரு துறடு கொடுக்க

வும். இதுதவிர வேறே ஒன்றும்வேண்டாம்” என்று கேட்க, அரசனும் அப்படியே உத்திர விட்டான். தம்பியார் தனக்கு ஒன்றும் வேண்டாமென்று கூறிவிடவே, அவர்களிருவரும் ஊர்போய்ச் சேர்ந்தார்கள். முன்பு விரோதத்தை உண்டாக்கிய பாட்டியும் பின்பு அவர்களுடைய மனைவிகளிடம்போய் நல்ல வார்த்தைகளைச்சொல்லி அவர்களுடைய விரோதத்தைப்போக்கி அவர்களை பழையபடி உறவாடும்படி செய்வித்தாள்.

அதனால்தான் ‘முன்பு தலைவிரி கோலங்கொண்ட ஒருத்தியால் முடிந்த மகாபாரதத்தைக்குறித்து இப்பொழுது ‘மொட்டைச்சியொருத்தியால் முடிந்தது’ என்று பலர் சொல்லுகிறார்கள்.

### வில்லிபுத்தூராரது வித்யா ஸாமர்த்யம்.

வில்லிப்புத்தூரார் வடமொழியிலும் தென்மொழியிலும் கைதேர்ந்த சிறந்த பண்டிதர். இவர் காலத்தில் கல்வியில் முழுத்தேர்ச்சியடையாதவரும் சிற்றறிவுடையோரும் பேரறிவுடையோர் போலவே பண்டிதர், மகாபண்டிதர், கவிராயர், வித்வான், வித்வத் சிரோமணி என்பவை முதலாக கண்டது கண்டபடி அவர்கள் இஷ்ட ப்ரகாரம் பட்டப் பெயர்களை வைத்துக்கொண்டு ஆரவாரம் செய்தும் ஆடம்பரம் செய்தும் வந்தார்கள். இந்தப் பட்டப் பெயர்களை கல்வியில் தேர்ந்த சிகாமணிகள் கொடுக்காமலே ஸொந்தத்தில் வைத்துக்கொண்டு தான்தோன்றிகளாய் திரிபவர்களது இந்த துர்வழக்கத்தை நிறுத்தி, அவர்களது கல்வி கர்வத்தை அடக்குவதற்காகவும், உண்மையான கல்வியைப் பரவச் செய்வதற்காகவும், வில்லிபுத்தூரார் பல புலவர்களுடன் வாதுசெய்து, அவர்களது கர்வத்தை யடக்கி, அந்த வெற்றிற்கு அடையாளமாக தோல்வியடைந்த புலவர்களின் காதுகளைத் தமது கையிலே எப்பொழுதும் ஆயுதமாக வைத்துக்கொண்டுள்ள துறட்டுக் கோலால் மாட்டி இழுத்து அறுத்து வந்தார். இந்த மாதிரி வழக்கம் நடந்து வந்ததை விளக்க ஒரு தனிப் பாடல் வழங்கி வருகிறது. அது பின்வருமாறு.

“குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை
குறும்பியின வர்க்காதைக் குடைந்து தோண்டி
யெட்டினமட் டறுப்பதற்கோ வில்லியில்லை
யிரண்டொன்று முடிந்து தலையிறங்கப்போட்டு
வெட்டுதற்கோ கவியொட்டக் கூத்தனில்லை
விளையாட்டாக் கவிதைதனை விரைந்துப்பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகளுண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே”

பிள்ளைப் பாண்டியனென்னும் அரசன் தனது ஸமஸ்தானத்திற்கு வரும் புலவர்கள் பாடும் பாட்டில் ஏதாவது குற்றங்களிருக்கக் கண்டால், உடனே அவர்களது தலையில் நறுக்கென்று குட்டுவது வழக்கமாம் அப்படி குட்டுப்பட்ட வித்வான்களும் மனம் சலியாமலே நமக்கு பரிசு வராவிடினும் போகட்டும், குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப் பட்டோம்” என்று நினைத்துக்கொண்டு வந்த வழியே திரும்பிப்போய் தங்களது கல்வி யறிவை வ்ருத்திசெய்வது வழக்கமாயிருந்தது. ஒட்டக்கூத்தர் தன்னிடத்தில் கவிபாட வருபவர்களை யெல்லாம் வென்று அவர்களைப் பிடித்து சிறையில் வைத்து நவராத்ரி உத்ஸவ ஸமயத்தில் தேவி கொலுவிருக்குப்பொழுது, தோல்வியடைந்த அந்தப் பண்டிதர்களை சிறையிலிருந்து கொண்டுவந்து இருவரிருவராக குடுமியோடு குடுமி முடிபோட்டு, அம்மனுக்கு முன்பாக நிறுத்தி, பிடாரிக்கு இரட்டைக்கடா வெட்டுவதுபோல கொஞ்சமும் இரக்கமில்லாமல், அவர்கள் தலைகளைத் துடிக்கத் துடிக்க வெட்டி பலிகொடுக்கும் வழக்கத்தை அநுஸரித்து வந்தாராம்.



அவர்களைப் போலவே வில்லிபுத்தூராரும் தம்முடன் வாதுசெய்து தோல்வியடைந்த புலவர்களின் காதுகளைத் துறட்டுக்கோலால் மாட்டி பிடித்திழுத்து, காதை அறுத்து அவர்களது கல்விக் கொர்வத்தை அடக்கிவந்தார்.

இவர் பாடியிருக்கும் பாடல்களில் உவமை, உருவகம், வேற்றுப் பொருள் வைப்பு, தற்குறிப்பேற்றம், எடுத்துக் காட்டுவமை முதலிய பொருளணிகளையும், ப்ராஸம், மடக்கு முதலிய சொல்லணிகளையும், இவரது செய்யுள் நடை பல இடங்களில் முடுகுடையதாதலையும், பலவகைச் சந்தங்களையும், சந்தப் போலிகளையும், காணலாம்.

மேலும் இவர் வடமொழியில் சிறந்த பண்டிதராதலால், பெரும்பாலும் தமது பாடல்களில் வடமொழிச் சொற்களை தனிமொழியாகவும் தொடர்மொழியாகவும் தென்மொழியில் வெகு ஸாமர்த்யமாக மொழிபெயர்த்து உபயோகித்திருக்கிறார். இப்படி மொழிபெயர்த்த தனி மொழிகளும் தொடர் மொழிகளும் இன்னமொழியின் ஸம்பந்தமான தென்று எளிதில் தெரியவொண்ணாதபடி திரித்தும் மொழி பெயர்த்தும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தொடர்மொழியாக ப்ரயோகத்தித்தற்கு சில உதாரணங்கள்.

(1) “பரதநாதவேத பரத்துவாசன்”

(2) மாதவ யாதவ வாசவகேசவ”

மொழி பெயர்த்ததற்கு உதாரணம். நீரின் உற்பத்திற்கு இடமானவனென்னும் பொருள் கொண்ட க்ருமீடயோநீ என்னும் வடசொல்லை மொழிபெயர்த்து “அம்மனை” [அம்=நீர், மனை=இடம்] என்று உபயோகத்திருக்கிறார்.

மேலும் சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல், நன்மொழி புணர்த்தல், ஆழமுடைத்தாதல், நவின்றோர்க்கினிமை, ஓசையுடைமை முதலிய நூலின் அழகுகளெல்லாம் இவர் நூலில் நன்கு அமைந்திருக்கின்றன.

வில்லி புத்தூராழ்வாரும் கம்பரைப்போல முழுபாரதமும் பாடவில்லை. இவர் பாடியது முதல் பத்துப் பருவமே. மற்றைய எட்டுப் பருவங்களையும் இவர் பாடவில்லை. அதற்குக் காரணம் இரண்டாயிருக்கலாம். (1) பாரதத்தைப்பாடி முடிப்பதற்கு முன் இவர் காலஞ்சென்றிருக்கலாம் அல்லது நூல் முழுவதையும் பாடினால் பாண்டவர்கள் கிருஷ்ண பகவான் ஆகிய இந்த மகா புருஷர்களது மரண சரித்ரத்தை தம் வாயாற் சொல்லவேண்டுமே என்று கருதி ‘பாண்டவர்கள் ராஜ்யம் ஆண்டு வாழ்வாராயினர்’ என்பதனோடு முடித்துவிட்டதாகக் கூறலாம். கம்பர் உத்தரகாண்டம் பாடாமல் விட்டதும் ராமர் முதலியவர்களது கஷ்டநிஷ்டூரங்களையும் மரணத்தையும் தம் வாயால் சொல்லவேண்டுமே என்று கருதியேபோலும்!

கம்பன் தனது ராமாயணத்தில் பாடல்களுக்கு இடை இடையே தனது போஷகரான சடையப்ப முதலியாரைப் பற்றி புகழ்ச்சியாக கூறுவதுபோலவே, வில்லிபுத்தூராரும் தாம் பாடிய பாரதப் பாடல்களுக்கு இடையிடையே தனக்குப் பலசெல்வமும் கொடுத்து ஆதரித்துவந்த போஷகரான வரபதியாட்கொண்டான் என்னும் அரசனைப் பலதடவை புகழ்ச்சியாகக் கூறுகிறார்.

### இவருடைய காலம்.

இவருடைய காலம் இன்னதென்பது தெளிவாகத் தெரியவில்லை. இவரது சரித்ரத்தைச் சுருக்கமாக செய்யுள் நடையிலே எழுதி வைத்த இவர் புத்ரரும் இவர் காலத்தைக் குறித்து ஒன்றும் எழுதி வைக்கவில்லை. ஆனால் தமிழ்ப் புலவர்களில் பலர் இப்பொழுதைக்குச் சற்றேறக் குறைய ஐந்நூறு வருஷங்களுக்கு முன் இருந்தவரென கர்ணபரம்பரையாகக்

கூறிவருவதையே யாவரும் நம்பவேண்டியதாயிருக்கிறது. மேலும் பாயிரத்தில் "நான்காஞ் சங்கமென முச்சங்கத் தண்டமிழ்நூல் கலங்காமல் தலை கண்டானே" என்று இவர் காலத்தில் இருந்த வரபதியாட்கொண்டான் என்னும் அரசனைக்கூறி யிருத்தலால், இவர் ஜீவித்திருந்த காலம் கடைச் சங்கத்துக்குப் பிந்திய காலமென்று தெளிவாகத் தெரியவருகிறது.

நே. க்ருஷ்ணமாச்சாரி.

## BOOKS OF THE MONTH.

### நூதன புஸ்தகங்கள்.

**யுக்தி போதினி.***

நம்மில் பெரும்பாலார் அற்ப தொந்தரைகள் நேரும்போது அவைகளை நீக்கிக்கொள்ள முடியாமல் தவிக்கிறோம். துணியில் எழுதும் மை விழுந்துவிடுகிறது. ஜலத்தை விட்டு அலம்புகிறோம். ஆனால் கறை முழுவதும் போவதில்லை. இங்கிக் கறைகளைப் போக்க பல அனுபவ முறைகளைப் பத்ரிகைகளில் படித்திருக்கலாம். ஆனால் அவைகள் வேளுவாய் நமது ஞாபகத்து வருவதில்லை. வீட்டில் அப்போது எலுமிச்சம் பழம் இருந்திருக்கலாம், அதை உபயோகித்தால் கறைபோகும் என்பது நமது ஞாபகத்துக்கு வருவதில்லை. இதே மாதிரி வேறு உதாரணங்களும் சொல்லலாம். ஸீஸாக்களில் கார்க்கு விழுந்துவிடுகிறது. அதை எடுக்க ரொம்ப ச்ரமமாயிருக்கிறது. சில ஸமயம் காகி இங்கிப் பெட்டிகளில் கரப்புகள் புகுந்துகொண்டு வெளியில் வருவதில்லை. கரப்புகளைத் துரத்துவதெப்படி? பத்ரிகைகளில் வாசித்துள்ள யுக்திகள் ஞாபகத்துக்கு வருவதில்லை. வெண்காரத்தைத் தவிர மற்றவைகளெல்லாம் ஞாபகத்துக்கு வருவதுண்டு (வெண்காரத்தூள் கரப்புகளை துரத்தும்.) இவைகளைப்போலவே இன்னும் எத்தனையோ ஸந்தர்ப்பங்களில் நாம் இன்னது செய்வதென்று தெரியாமல் தவிக்கிறோம்.

மேலே குறிப்பிட்ட புஸ்தகம் இப்படிப் பட்ட ஸந்தர்ப்பங்களில் மிகவும் பயன்படக் கூடியது. அதில் வஸ்த்ரங்கள், உலோகங்கள், உலோகஸாமான்கள், கண்ணாடிகள், கண்ணாடி ஸாமான்கள் முதலிய பலவகைப்பட்ட ஸாமான்களைச் சுத்தம் செய்வதைப்பற்றியும், பலவகைப்பட்ட கறைகளைப்போக்குவதைப் பற்றியும், வைரம், பால், முட்டை முதலியவைகளைப் பரீக்ஷித்தல், கடியாரம், ஜோடுகள், மேஜோடுகள், விளக்குகள், பீங்கான் பாத்ரங்கள், கண்ணாடிப் பாத்ரங்கள், ஸீஸாக்கள், முதலியவைகளின் பராமரிப்பைப்பற்றியும், எலி, கரப்பு, எறும்பு, கரையான், ஈ, கொசு, வெளவால் முதலிய உபத்ரவம் செய்யும் ப்ராணிகளைத் தொலைப்பதைப்பற்றியும், தொழில் ஸம்பந்தமான செய்முறைகளைப்பற்றியும் அநேக யுக்திகளும் முறைகளும் அடங்கியிருக்கின்றன.

இதில் ஒரு பெரிய விஷய அகராதியும் இருக்கிறது. இந்தப் புஸ்தகம் யாவருக்கும் பயன்படக்கூடு மென்பதில் ஸந்தேகமில்லை. இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ், என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

**ப்ரத்திய பிஞ்ஞா இருதயம்.***

உத்தர சைவமென்றும் அத்வைத சைவமென்றும் சொல்லப்படுவதும் வடநாட்டில் வழங்கிவருவதுமான ஒருவகைச் சைவ சம்ப்ரதாயத்தின் கோட்பாடுகளை விளக்கும் ஓர் தமிழ் மொழிபெயர்ப்பு நூலாகும். இந்த உத்தர சைவத்துக்கும் நமது தென்னாட்டிலுள்ள சைவத்துக்கும் வித்யாஸமுண்டு. ப்ரத்திய பிஞ்ஞையென்பது சிவத்துடன் ஒன்றுபட்டு சிவோஹம் என்று பூர்ணஸமாவேச வடிவமாக உண்டாகும் ஸாக்ஷாத்கார அநுபவ ஞானமாம். இந்த நூல் காச்மீரத்திலிருந்த க்ஷேமராஜாசாரியரால் இயற்றப்பட்டு அவராலேயே வியாக்யானமும் செய்யப்பட்டது. நமது பார்வைக்கு வந்திருக்கும் தமிழ் மொழி பெயர்ப்பில் நூலும் வ்யாக்யானமும் இருப்பதோடு, கடினபதங்களுக்கு அர்த்தமும் கடைசியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆத்மவிசாரம் செய்யும் யாவருக்கும் இது பயன்படும். இதன்விலை அணா 6½.

**கோபாலன். ***

இது கே. ஜி. ராமஸாமி அய்யர் இயற்றிய ஒரு துப்பறியும் நாவலாகும். இதன் கதையமைப்பு நேர்த்தியாயிருப்பதோடு கதை சொல்லும்விதமும் நன்றாயிருக்கிறது. இதன் விலை அணா 8.

**ஸுந்தரி அல்லது அந்தரப் பிழைப்பு. ***

இது வி. ராமஸ்வாமி ஐயங்கார் இயற்றிய ஒரு தமிழ் நாவலாகும். இதில் க்ராம வாழ்க்கையின் குணதோஷங்களும், ஜனங்களுடைய இயல்பும், பால்ய விவாகத்தின் கொடுமையும், விதவா விவாகத்தின் அவச்யமும், பல நீதிகளும் விரிவாய்க் கூறப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ. 1—0—0.

**பாலர் பெரிய தமிழ் அரிச்சுவடி 3-பாகங்கள்:**

இவை பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட அரிச்சுவடியாகும். பழைய முறைப்படி அமைந்துள்ளது. ஒவ்வொரு பாகத்தின் விலை 2- அணாவாகும். வேண்டுவோர் கே. செல்வரங்கம் அண்ட் கம்பெனி, 29, வைத்யநாத முதலி தெரு, மதராஸ். என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

**தர்ம சாஸ்திரச் சுருக்கம்.**

ஹிந்துக்களின் தர்மங்களை விவரிக்கும் நூல்கள் ஸம்ஸ்க்ருதத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. தர்ம சாஸ்த்ரங்களில் அநேகம் இருப்பதால், அவைகளை எல்லாம் ஒருவர் வாசித்து அறிந்துகொள்வது கஷ்டமான தார்யம். மநு நூல்களைப் படிப்பதற்கு அதிக அவகாசம் இல்லாத யாவரும் படித்துத் தெரிந்துகொள்ளும்படி நமது முன்னோர்களில் சிலர் தர்ம சாஸ்த்ரங்களிலும் புராண இதிஹாஸங்களிலும் காணப்படும் தர்மங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து அநேக நிபந்தன க்ரந்தங்கள் எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். அவைகளில் ஒன்று 'ஸ்ம்ருதி முக்தாபலம்' என்பது. அது ஸுமார் 200 வர்ஷங்களுக்குமுன் கண்டரமாணிக்கம் என்னும் க்ராமத்தில் வஸித்து வந்த ப்ரும்மஸ்ரீ வைத்யநாத தீக்ஷிதர் அவர்களால் இயற்றப்பட்டது. அதில் வர்ணாச்ரமம், ஆன்ஹிகம், ஆசௌசம், ச்ராத்தம், திதிநிர்ணயம், ப்ராயச்சித்தம் என ஆறு காண்டங்கள் உண்டு. ஸம்ஸ்க்ருதத்தில் அதிகப் பயிற்சி இல்லாதவர்களும் அந்த நூலால் பயனடையும்படி சில வர்ஷங்களுக்குமுன்னிருந்த நடுக்காவேரி ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் அந்த நூலுக்கு தமிழ் அர்த்தம் எழுதி வெளியிட்டார். இப்போது அந்த நூலில் சில காண்டங்களே கிடைக்கின்றன. கிடைக்கும் பாகங்களுக்கும் விலை அதிகம். ஆகவே இப்போதைய ஜனங்களுக்கு தர்ம சாஸ்த்ரத்தில் பயிற்சி ஏற்படுவது கஷ்டமாயிருக்கிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் மேற்சொன்ன ஸ்ம்ருதி முக்தாபலத்தை அநுஸரித்து ஸங்க்ரஹமாய்த் தமிழில் எல்லா முக்ய விஷயங்களும் உள்ளதாக தர்ம சாஸ்த்ரச் சுருக்கமென்று ஒரு புஸ்தகம் வெளிவந்திருப்பது ச்லாகிக்கத்தக்கது. இதை இயற்றியவர் மிஸ்டர் ஆர். முத்துஸாமி அய்யர் ஆவர். இதில் 4-பாகங்களிருக்கின்றன. அவையாவன: வர்ணாச்ரமகாண்டம், ஆன்ஹிக காண்டம், ஆசௌசகாண்டம், ச்ராத்தகாண்டம். இது ஆஸ்திக புத்தியுடையவருக்கும் உபயோகமான பற்பல விஷயங்களும் இருப்பதாலும், வைதீகர் இல்லாத ஸமயத்தில் ஏற்படக்கூடிய ஸந்தேகங்களை நிவர்த்தித்துக்கொள்ள உபயோகமாக இருப்பதாலும், இதை எல்லாரும் வாங்கிப் பயனடையலாம். ஆசௌசத்தின்

* இந்தக்குறியிட்ட புஸ்தகங்கள் ஜி. எ. வைத்யராமன் அண்ட்கம்பெனி (3-4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ்) யில் கிடைக்கும்.

விஷயத்தில் ஸந்தேகம் சேரிடும்போது வாத்யாருக்காகக் காத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. எல்லாம் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. சுபாசுபங்களில் குறைந்த பக்ஷம் இவ்வளவு செலவழிக்க வேண்டுமென்பதும் இனவாரியாக விவரமாக எழுதப்பட்டிருக்கிறது. இவைபோல வேறு அநேக முக்ய விஷயங்களும் இருக்கின்றன. இதன் விலை ரூ. 1. வேண்டுவோர் கே. எம். நாகராஜன், கீழவிடயல், திருச்சிறை போஸ்டு என்று எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

தென்னிந்திய விவஸாயக் கைத்தொழில் (சுகாதாரம்.)

சென்ற மூன்று வர்ஷங்களாக நின்றிருந்த தென்னிந்தியா விவஸாயம் என்னும் பத்ரிகை சித்திரைமாஸம் முதல் மேற்கண்ட பெயருடன் வெளிவருகிறது. இந்தப்படிப் பெயர் மாறியிருப்பதற்கேற்ப இந்தப் பத்ரிகையில் வ்யவஸாயத்தோடு,வ்யவஸாயக் கைத்தொழில்களும், ஸுகாதார விஷயங்களும் குடும்பவிஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது முன்போலவே நன்றாக நடைபெற்று வருமென்று எண்ணுகிறோம். இதன் சந்தா வர்ஷம் 1-க்கு ரூ. 3. வேண்டுவோர் ஜி. ராஜகோபால், பத்ராதிபர், ராக்கியப்ப முதலி தெரு, மைலாப்பூர், சென்னை என்று எழுதித் தருவித்துக்கொள்ளவும்.

## ARTIFICIAL MILK.

### செயற்கைப் பால்.

பாலின் விலை நாளுக்குநாள் ஏறி வருகிறது. பால் கஷ்டம் நமது தேசத்தில் மாத்ரம் அல்ல, இதர தேசங்களிலும் உண்டு. இங்க்லண்டில் ஒருவர், பால் விலை ரொம்ப அதிகமாகிவிட்டால் என்ன செய்கிறதென்று யோசித்து, வாதுமையிலிருந்து பால்செய்யும் முறை ஒன்று கண்டு பிடித்திருக்கிறார்.

இந்தச் செயற்கைப் பால் செய்ய ரஸாயன சாஸ்த்ரம் கற்கவேண்டியதில்லை. வாதுமையை சுத்தம் ஜலம்விட்டு அரைத்துப் பால்பிழிந்தால், அதுவே செயற்கைப் பாலாகும். இதற்கு உபயோகிக்கும் ஜலம் ஆவி நீராக இருக்கவேண்டும். அதாவது நீராவியைக் குளிரச் செய்து கிடைத்த ஜலமாக இருக்கவேண்டும். வாதுமை கசப்பில்லாமல் தித்திப்பு ஜாதியாக இருக்கவேண்டும்.

வாதுமைப் பாலில் நல்ல பாலேடும் கிடைக்கும். அதை அப்படியே சிறிது காலம் வைத்திருந்தால் ஸாதாரணப் பால் போலப் புளித்தும் போகுமாம். அந்தச் செயற்கைப் பாலை பசும்பாலைப்போலவே காப்பிக்கும் தேயிலைக்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

பால்செய்யும் விதம்.

நல்ல வாதாம்பருப்பாக அரை ராத்தல் எடுத்துக்கொள்ளவும். பருப்புகளை கொதிக்கும் ஜலத்தில்போட்டால் அவைகளின் மேலுள்ள மெல்லிய தோல்களை ஸுலபமாக எடுத்துவிடலாம். பிறகு பருப்புகளை ரொம்ப ஸன்னமானதுளாக நறுக்கவேண்டும். பிறகு அந்தத் தூளை ஒரு சிறு கலுவத்தில் போட்டு 2 ஔன்ஸ் ஆவி நீர் விட்டு நன்றாய் அரைக்கவும். இப்படியே மொத்தத்தில் 12 ஔன்ஸ் ஜலம் சேரும்வரையில் கொஞ்சங்கொஞ்சமாக ஜலம் விட்டு அரைக்கவேண்டும். பிறகு ஒரு கெட்டித்துணியில் அரைத்த வாதுமையைக் கொட்டிப் பிழியவும். வாதுமைச் சக்கையெல்லாம் துணியில் நின்றுவிடும். பால்மாத்ரம் தனியாகக் கிடைக்கும். துணியில் கண்கள் பெரியனவாக இருக்கக்கூடாது. இல்லாவிட்டால் வாதுமைச் சக்கையின் தூள்கள் த்வாரங்கள் வழியாகப் பாலோடு வந்துவிடும்.

பாலை அப்படியே இரண்டு மூன்று மணி நேரம் வைத்திருந்தால் பாலில் ஏடுகட்டும். அதை அப்படியே எடுத்துப் பாலேடு உபயோகிப்பதுபோல் உபயோகிக்கலாம். வாதுமைப் பாலில் வாதுமையின் வாஸனை கொஞ்சம் இருக்கும். ஆனால் அதைக் காப்பியில் கலந்துவிட்டால் வாஸனை கொஞ்சம்கூடத் தெரிவதில்லை. யாம்.

அரைராத்தல் பருப்பிலிருந்து பட்டணம் படியால் முக்காலே மூணுவீசம்படி பால், அதாவது 7½-ஆழாக்குப் பால் கிடைக்கும்.

# ஜநாபிமானி.

| | |
|---|---|
| தபால் சார்ஜ் உள்பட | |
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE
JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி௵ வைகாசி௴, MAY—JUNE, 1918. { ஸஞ்சிகை 5. No. 5.


## EDITORIAL NOTES.

## பத்ராதிபர் குறிப்புகள்.

பயிரில்காணும் வ்யாதி, பூச்சிகள் முதலியவைகளைப் பற்றிய மசோதா.

சென்னை கவர்ன்மெண்டார் பயிரில் காணும் வ்யாதிகளையும், பூச்சிகளையும், கெடுதலான களைப் பூண்டுகளையும் பரவவிடாமல் தடுக்கவும் அவைகளை அழிக்கவும் ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள். இந்தச் சட்டத்தின் முக்ய அம்சங்கள் என்னவென்றால், கவர்ன்மெண்டார் இன்ன பூச்சிகள், நோய்கள், களைப் பூண்டுகள் கெடுதலானவை யென்றும், அவைகளை அழிக்கவும் பரவவிடாமல் தடுக்கவும் இன்னின்ன உபாயங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் விளம்பரம் செய்யலாம். அப்படி விளம்பரம் செய்யப்பட்டுள்ள ப்ரதேசத்தில் இருக்கும் நிலஸ்வான், நிலத்தை உபயோகிப்பவர், ஜலாதாரங்களை யுடையவர் முதலியவர்கள், தங்கள் ஆதீனத்திலுள்ள நிலங்களிலும் ஜலாதாரங்களிலும் உள்ள களைகள், பயிர்நோய், பூச்சிகளை அழிக்கவோ அப்புறப்படுத்தவோ வேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் இந்தச் சட்டத்தின்படி பயிர்களிலுள்ள நோய், களைகள் முதலியவற்றைப் பார்வையிடும் உத்யோகஸ்தர் அப்படிச் செய்யும்படி நிலத்தையுடையவருக்கு ஒரு நோட்டீஸ் அனுப்புவார். நோட்டீஸ் வந்தபிறகும் நிலத்தையுடையவர் சும்மாயிருந்தால், பார்வையிடும் உத்தியோகஸ்தரே அவ்வேலைகளைச்செய்து, அதற்காகும் செலவை நிலமுடையவரிடமிருந்து நிலவரியைப்போல வஸூல்செய்வார். இது மாத்ரமல்ல, நிலமுடையவர் தமக்கு நோட்டீஸ் வந்தவுடன், அதில் குறிப்பிட்டுள்ள காலத்துக்குள் களை, பூச்சி, நோய் ஆகிய இவற்றை அப்புறப்படுத்தாமலோ அழிக்காமலோ இருந்துவிட்டால், இந்தச் சட்டத்தின்படி அவர் குற்றவாளியாவர். அவருக்கு இந்தக் குற்றத்துக்காக 50 ரூபாய் வரையில் அபராதம் போடலாம். அபராதம் கட்டாவிட்டால் 10 நாள்களுக்கு மேற்படாமல் காவலி லிருக்கவேண்டும்.

ஒரு ஆக்ஷேபம்.

இந்தச் சட்டத்தில் இந்தமாதிரி தண்டிக்கலாமென்றிருப்பது ஒரு பெருங்குறையாகும். [illegible] கார் உத்யோகஸ்தர்களே களை முதலியவைகளை அப்புறப்படுத்தினாலும்

அவைகளை அழித்தாலும் அதற்காகும் செலவு அதிகமாகும். குறைந்த செலவில் ஜனங்களே செய்துகொள்ள முடியும். ஆகவே எவரும் ஸ்வல்ப செலவில் அவ்வேலைகளைச் செய்து கொள்ளாமல், ஸர்க்காரைச் செய்யவிட்டு அதனால் ஏற்படும் அதிகச் செலவைக் கொடுக்கும்படி சும்மாயிருக்கமாட்டார். அப்படி யாராவது சும்மாயிருந்தால், அதற்குக் காரணம் அவ்வேலைக்கு வேண்டியபணம் அவரிடம் இல்லாமையோ அல்லது வேறு அஸௌகர்யமோ என்று ஏற்படுகிறது. நமது தேசத்து ஜனங்களில் பெரும்பாலார் ஏழைகளாக இருப்பதால், கவர்ன்மெண்டார் செய்யச் சொல்லுகிறபடி களை முதலியவைகளை அழிக்க அசக்தர்களாக யிருப்பார்கள். அப்படிப்பட்ட ஏழைகளுக்கு அபராதம் போடுவதும், அபராதம் கொடுக்கமுடியாதவர்களை ஜெயிலுக்கு அனுப்புவதும் சரியென்று நமக்குத் தோன்றவில்லை. ஆகையால் கவர்ன்மெண்டாரே அவ்வேலைகளைச் செய்து அவற்றிற்கு ஆகும் செலவை வாய்தாவைப்போல் வஸூலிப்பதே சரியான முறையாகும்.

இந்தச் சட்டத்தில் நோயாலும் பூச்சிகளாலும் பிடிக்கப்படும் மரங்களையும் பயிர்களையும் கவர்ன்மெண்டார் அழிப்பதற்கு இடமேற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சில ஸந்தர்ப்பங்களில் அழித்த பயிர் அல்லது மரங்களுக்கு நஷ்ட ஈடு செய்வதாகவும் சொல்லியிருக்கிறது.

**ஸ்தல ஸ்வய ஆட்சி.**

இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சியைப்பற்றி ஒரு தீர்மானம் வெளியிட்டிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தின் நோக்கம் இந்தியர்களை ராஜரீக விஷயங்களில் பழக்குவதே. முன்பு 1915-ம் வர்ஷம் இது விஷயமாக ஒரு தீர்மானம் வெளியிட்டார்கள். மறுபடியும் ஸ்தல ஸ்வய ஆட்சி விஷயமாக சில சீர்திருத்தங்கள் செய்யக் காரணம், ஸ்தல ஸ்வய ஆட்சி விஷயத்தில் அதிக சீக்ரம் அபிவ்ருத்தி ஏற்படும்படி செய்வதும், ஜனங்களுக்கு இவ்விஷயங்களில் அதிகப் பொறுப்பும் அனுபவமும் உண்டாக வஸதிகள் ஏற்படுத்துவதுமே.

1915-ம் வர்ஷத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்தல ஸ்வய ஆட்சி விஷயமாகச் செய்துள்ள ப்ரேரணைகளைப்பற்றி அந்த வர்ஷத்திய 'ஜனோபிமானி'யில் மே-ஜூன் மாஸத்திய ஸஞ்சிகைகளில் விரிவாக எழுதியிருக்கிறோம். இப்போது கவர்ன்மெண்டார் எந்தெந்த விஷயங்களில் சீர்திருத்தங்கள் செய்திருக்கிறார்களென்பதை சுருக்கமாய்ச் சொல்லுகிறோம்.

**ஸ்தல ஸ்தாபனங்களில் மெம்பர்கள்.**

தற்போது முனிஸிபல் கௌன்ஸில்களில் அரைவாசிக்கு மேற்பட்ட மெம்பர்கள் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். ஜில்லா போர்டுகள், தாலூகா போர்டுகள் ஆகிய இவைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் தொகை பாதிக்குக் குறைவாக இருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டார் இப்போது இருவகை ஸபைகளிலும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் தொகை பாதிக்குமேலிருக்கவேண்டுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அநேக வகுப்பார்கள் முக்யமாயிருந்தும், தொகைக் குறைவால், அவர்களைச் சேர்ந்தவர்கள் இந்த ஸபைகளில் மெம்பர்களாவது முடியாமல் போகும். இதற்காக, வேண்டுமான போது, அந்த வகுப்பிலிருந்து மெம்பர்களைத் தெரிந்து கவர்ன்மெண்டார் நியமிக்கலாம். இந்த ஸ்தல ஸ்தாபனங்களில் வகுப்பு வாரியாக ப்ரதிநிதிகள் இருக்க வேண்டுமென்று சிலர் சொல்லுவது சரியல்லவென்றும், அவ்விதம் தெரிந்தெடுத்தல் கூடாதென்றும் இந்



தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஸபைகளுக்கு உத்யோக மெம்பர்களின் ஆலோசனை கிடைப்பதற்காக உத்யோகஸ்தர்களையும் கவர்ன்மெண்டார் மெம்பர்களாக நியமிக்கலாம். ஆனால் கவர்ன்மெண்ட் மெம்பர்கள் ஸபையில் ப்ரஸங்கம் செய்து ஆலோசனை சொல்லலாமேயொழிய, அவர்கள் வோட் கொடுக்கக்கூடாது. ஸாதாரணமாக ஒரு ஸபையில் கவர்ன்மெண்ட் மெம்பர்களைத் தவிர மற்ற மெம்பர்களில் முக்கால்வாசிப் பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்கலாம். வோட் கொடுப்பவர்களின் தொகையை அதிக மாக்கவேண்டும். அப்போது தான் பெரும்பான்மையான ஜனங்களின் அபிப்ராயத்துக்கு இணங்க ப்ரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். தற்காலம் இந்தியாவில் 100-ல் 6-பேர் விதந்தான் வோட் கொடுக்கிறார்கள். மேல்நாடுகளில் மொத்த ஜனத்தொகையில் நூற்றில் 16-வீதம் ஜனங்களுக்கு வோட் கொடுக்கும் ஸ்வதந்தரம் உண்டு. ஆனால் இந்தியாவில் இந்த விகிதம் திடீரென்று ஏற்பட முடியாது. கால க்ரமத்தில் தான் அதிகமாக வேண்டும். ஆனால் இப்போது முதலோ அல்லது கூடிய சீக்ரத்திலோ வோட் கொடுப்பவர்களின் தொகையை அதிகரிக்கச் செய்ய வேண்டும். இப்போதுள்ள வரைபறையை விடக் கொஞ்சம் குறைந்த வரி செலுத்துகிறவர்களையும் குறைந்த பூஸ்திதி முதலியவை உள்ளவர்களையுங்கூட வோட் கொடுக்க விட வேண்டும்.

**ஸ்தல ஸ்தாபனங்களுக்கு சேர்மன்.**

முனிஸிபாலிடிகளின் சேர்மன்கள் ஸாதாரணமாக தெரிந்தெடுக்கப்பட்ட, உத்யோகஸ்தர்களல்லாதவர்களாக இருக்கவேண்டும். ஆனால் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு, யுக்தமென்று எண்ணினால், உத்யோகஸ்தர்களல்லாதவர்களையும் உத்யோகஸ்தர்களையும் நியமிக்க அதிகாரம் இருக்கவேண்டும். முனிஸிபல் கௌன்ஸில்கள் இஷ்டப்பட்டால் உத்யோகஸ்தர்களையும் சேர்மன்களாகத் தெரிந்தெடுக்கலாம். அப்படி உத்யோகஸ்தர்களைத் தெரிந்தெடுக்கும்போது உத்யோகஸ்தர்களான மெம்பர்கள் வோட் கொடுக்கக்கூடாது. ஜில்லா போர்டுகளிலும், தாலூகா போர்டுகளிலும் கூடுமானவரையில் தெரிந்தெடுக்கப்பட்ட சேர்மன்களே இருக்கும்படி மாகாண கவர்ன்மெண்டுகள் முயலவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிச் செய்ய முடியாத இடங்களில் உத்யோகஸ்தரல்லாதவர்களை சேர்மன்களாக நியமிக்கலாம். உத்யோகஸ்தரல்லாதவர்கள் ப்ரெஸிடெண்டுகளாக இருந்தால், ஸாதாரண ஆபீஸ் வேலைகளைச் செய்ய ஒரு தனி நிர்வாக அதிகாரியை நியமித்துக் கொள்ளவேண்டும். எந்த போர்டாவது உத்யோகஸ்தர்களை ப்ரெஸிடெண்டாக நியமிக்க விரும்பினால் அது அப்படியே செய்யலாம். ஆனால் அவர்களைத் தெரிந்தெடுக்கும் மெம்பர்கள் உத்யோகஸ்தரல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

**வரிபோடும் அதிகாரம்.**

முனிஸிபாலிடிகளாகட்டும், லோகல் போர்டுகளாகட்டும் அவைகளுக்கென்று ஏற்பட்டுள்ள சட்டங்களில வரி ஸம்பந்தமாகக் கூறப்பட்டுள்ள வரையறைக்குமேல் போகாமல் யுக்தம்போல் அதிகமாகவோ குறைவாகவோ வரி போட்டுக்கொள்ளலாம். ஆனால் குறிப்பிட்ட வரையறைக்கு மேல் பட்டு அதிக வரி போடவேண்டுமென்றால் கவர்ன்மெண்டின் அனுமதிவேண்டும். உயர்ந்தது இவ்வளவுதான் வரி போடலாமென்ற வரையறையில்லாத இடங்களில் ஸ்தல ஸ்தாபனங்கள் வரிகளை உயர்த்தவேண்டுமானாலும், கடன் வாங்கியுள்ள முனிஸிபாலிடிகள் வரும்

படியைக் குறைக்கும்படி வரிகளைக் மாற்ற வேண்டு மென்றாலும், கவர்ன்மெண்டாருடைய அனுமதிவேண்டும்.

**க்ராமப் பஞ்சாயத்துகள்.**

க்ராமப் பஞ்சாயத்துகள் விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ப்ரேரணைகள் என்னவென்றால், ஸாதாரணமாக ஒரு க்ராமத்துக்கு ஒரு பஞ்சாயத்து வீதம் ஸ்தாபிக்கவேண்டும். க்ராம அதிகாரிகள் பஞ்சாயத்தில் மெம்பர்களாக இருக்கவேண்டும். இதர மெம்பர்களை க்ராமத்தார் தெரிந்தெடுக்க வேண்டும். க்ராம முன்ஸிபே பஞ்சாயத்தின் ப்ரெஸிடெண்டாக இருக்கவேண்டு மென்பதில்லை. க்ராமத்தார் தங்களுக்கு இஷ்டமானவர்களை ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். க்ராம ஸுகாதாரம், கல்வி, அல்ப, ஸிவில் க்ரிமினல் வ்யவஹாரங்கள் ஆகிய இவைகளை பஞ்சாயத்துகள் கவனிக்கலாம். இவைகளுக்காக பஞ்சாயத்துகளுக்கு லாண்ட் ஸெஸ்ஸிலிருந்து ஒரு பாகத்தைக் கொடுக்க மாகாண கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். இதைத் தவிர வேறு ஏதாவது க்ராமவேலைகளுக்குப் பணம் வேண்டுமென்றால், க்ராமப் பஞ்சாயத்துகள் இஷ்டப்பட்டால் வரிபோட்டுக் கொள்ளலாம். ஆனால் அப்படி வரிபோட்டுக் கிடைத்த பணத்தை எந்தக் காரியத்துக்காக வரிபோடப்பட்டதோ அதற்கே உபயோகிக்கவேண்டும்.

**திருவாங்கூரில் ஆயுர்வேத வைத்யம்.**

சென்ற மாஸம் ஆயுர்வேத யுனானி முறைகளைப்பற்றி சென்னை கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் அபிப்ராயங்களைத் தெரிவித்தோம். இப்போது திருவாங்கூர் கவர்ன்மெண்டார் மேல்நாட்டு வைத்ய முறைக்குக் கெடுதலில்லாமல் திருவாங்கூரில் ஆயுர்வேத முறையை வ்ருத்தி செய்ய தக்க ஏற்பாடு செய்ய முன் வந்திருக்கிறார்கள். திருவனந்தபுரத்தில் ஏற்கனவே ஒரு ஸர்க்கார் ஆயுர்வேத பாடசாலை நடந்து வருகிறது. அதை வ்ருத்தி செய்து அதன் மூலமாக ஆயுர்வேத முறையை முன்னுக்குக் கொண்டுவர சில ஏற்பாடுகள் செய்யப் போகிறார்கள். முதலாவது 8-அல்லது 10-ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு தோட்டத்தில் மருந்துச் செடிகள் பயிரிட ஏற்பாடு செய்யப் போகிறார்கள். இது ஆயுர்வேத பாடசாலையை ஒட்டி ஸ்தாபிக்கப்படும். பாடசாலை மாணவர்களுக்கு இதனால் மருந்துச் செடிகளின் குணாகுணங்கள் நன்றாய்த் தெரியவரும்.

ஆயுர்வேத முறைப்படி மருந்துகள் செய்வதற்கு ஒருமருந்துச் சாலை ஏற்படுத்தப்படும். பாடசாலையை ஒட்டி ஒரு ஆஸ்பத்ரி ஸ்தாபிக்கப்படும். ஆயுர்வேத வைத்யர்களுக்கு தற்காலத்துக்கேற்ப சரீர சாஸ்த்ரம் கற்றுக் கொடுப்பதற்காக ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன் பதவியிலுள்ள மேல் நாட்டுமுறை வைத்யர்கள் நியமிக்கப்படுவார்கள். பாடசாலையை ஒட்டி ஒரு சிறு புஸ்தகசாலையும் ஏற்படுத்தப்படும்.

இவ்விதம் திருவாங்கூர் கவர்ன்மெண்டார் செய்திருக்க, நமது கவர்ன்மெண்டாரோ மேல் நாட்டுமுறையில் பயின்ற வைத்யர்கள் ஆயுர்வேத வைத்யர்களோடு சேர்ந்து கொள்ளுதலும் கூடாதென்கிறார்கள்.

**இந்தியாவில் கோவாபரேஷனின் அபிவ்ருத்தி.**

இந்தியாவில் சென்ற 1916-17-ம் வர்ஷத்திய கோவாபரேஷனுடைய நிலைமையைப் பற்றிய கணக்குகள் ஸமீபத்தில் வெளியாகியிருக்கின்றன. இந்தக் கணக்குகளில் வடமேற்கு எல்லைமாகாணங்கள், டில்லி, பலூசிஸ்தானம் ஆகிய இவைகளின் கணக்குகள் சேரவில்லை. அவ்விடங்களில் கோவாபரேஷன் அதிகம் பரவாததே அதற்குக் காரணம். பரோடாவிலும்,



மைஸூர் ராஜ்யத்திலும் கோவாபரேஷன் அதிகமாகப் பரவியிருப்பதால், அவற்றின் கணக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கணக்குகளிலிருந்து ஒவ்வொரு வகையிலும் இந்தியா முழுவதுக்கும் எவ்வளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிற தென்பதையும், மற்றமாகாணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சென்னை ராஜதானி ஒவ்வொரு அம்சத்திலும் எத்தனாவதாக இருக்கிற தென்பதையும் குறிப்பிடுகிறோம்.

சென்ற 1915-16-ம் வர்ஷத்தில் இந்தியா முழுவதுக்கும் எல்லாவகை ஸங்கங்களும் சேர்ந்து 19,675 ஸங்கங்கள் இருந்தன. 1916-17-ம் வர்ஷத்தில் 23,036-ஸங்கங்கள் இருந்தன.

1916-17-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானியில் 2,216 ஸங்கங்கள் இருந்தன. வங்காளம், ஐக்யமாகாணங்கள், பஞ்சாப், பர்மா, மத்யமாகாணங்கள் ஆகிய இவை ஒவ்வொன்றிலும் இதற்கு அதிகமாகவே ஸங்கங்கள் இருந்தன.

இந்தியா முழுவதுக்கும் மெம்பர்களின் தொகை 1915-16-ம் வர்ஷத்தில் 9,18,436 ஆகும். 1916-17-ம் வர்ஷத்தில் 10,45,425 ஆகும். மெம்பர்கள் விஷயத்தில் சென்னை ராஜதானி தான் முதன்மையாக நிற்கிறது. அதில் சென்ற 1916-17-ம் வர்ஷத்தில் 1,65,606 மெம்பர்கள் இருந்தார்கள். மற்ற மாகாணங்களில் மெம்பர்களின் தொகை குறைவுதான்.

**ஸெண்ட்ரல் பாங்கிகள்.**

இந்தியா முழுவதிலும் இருந்த ப்ரொவின்ஷ்யல் பாங்கிகள், ஸெண்ட்ரல் பாங்கிகள் யூனியன்கள் ஆகிய இவைகளின் மொத்தத் தொகை 262-ஆகும். (1915-16-ம் வர்ஷத் தில் 244-தானிருந்தன.) இவைகளில் உள்ள மெம்பர்களின் தொகை (1915-16-ல்) 47,776-லிருந்து (1916-17-ல்) 76,195 ஆக உயர்ந்தது. நடை முதல் பணமும் 400 லக்ஷம் ரூபாயிலிருந்து 480 லக்ஷமாக உயர்ந்தது. இவைகளின் நிகரான லாபம் 7,09,650 ரூபாயிலிருந்து 8,98,705 ரூபாயாக உயர்ந்தது.

ஸெண்ட்ரல் பாங்கிகள் விஷயத்தில் சென்னை ராஜதானி 6-வதாக இருக்கிறது. இங்கே 13 ஸெண்ட்ரல் பாங்கிகள் தான் இருக்கின்றன. வங்காளத்தில், 47-ம், பேஹார் ஒரிஸாவில் 21-ம், ஐக்யமாகாணங்களில் 58-ம் பஞ்சாபில் 41-ம், மத்யமாகாணங்களில் 31-ம் இருக்கின்றன.

**ப்ரைமரி ஸங்கங்கள்.**

வ்யவஸாயிகளுக்கான ஸங்கங்கள், இதரர்களுக்கான ஸங்கங்கள் ஆகிய இவைகளைப்பற்றிய சுருக்கமான கணக்குகள் பின்வருமாறு.

| ஸங்கங்கள். | வர்ஷம். | ஸங்கங்களின் தொகை. | மெம்பர்கள். | மூலதனம் லக்ஷம் ரூபா. | லாபம் லக்ஷம் ரூ. |
|---|---|---|---|---|---|
| வ்யவஸாயிகளுக்கானவை. | 1915-16... | 17,729 | 7,16,858 | 515 | 19-88 |
| | 1916-17... | 20,725 | 7,84,252 | 596 | 17-75 |
| இதரர்களுக்கானவை. | 1915-16... | 1,019 | 1,48,195 | 116 | 5-18 |
| | 1916-17... | 1,209 | 1,76,798 | 147 | 6-56 |

வ்யவஸாயிகளுக்கான ஸங்கங்கள் விஷயத்தில் சென்னை ராஜதானியானது 6-வது ஆக இருக்கிறது. சென்னை ராஜதானியில் 1921-ம், வங்காளத்திலும் 2857-ம், ஐக்யமாகாணங்களில் 3003-ம், பஞ்சாபில் 3417-ம், பர்மாவில் 1985-ம் மத்யமாகாணங்களில் 3303-ம் இருக்கின்றன. ஸங்கங்களிலுள்ள மெம்பர்கள் விஷயத்திலோ என்றால், இரண்டாவதாக இருக்கிறது. சென்னை ராஜதானியில் 1,18,939 மெம்பர்களும், பஞ்சாபில் 1,29,544 மெம்பர்களும் இருந்தார்கள். மற்ற மாகாணங்களில் மெம்பர்களின் தொகை சென்னை ராஜதானியிலுள்ளதைவிடக் குறைவு. வ்யவஸாயிகளல்லாத இதரர்களுக்கான ஸங்கங்களில் சென்னை ராஜதானி முதன்மையாக இருக்கிறது. இங்கே 224 ஸங்கங்கள் இருக்கின்றன. மற்ற மாகாணங்களின் தொகை இதற்குக் குறைந்தது.

சென்ற வர்ஷத்தில் (1916-17.) ஸூபர்வைஸிங் (மேற்பார்வை செய்யும்) யூனியன் 495 இருந்தன. (அதற்கு முந்தினவர்ஷத்தில் 361.) சென்ற வர்ஷத்தில் சென்னை ராஜதானியில் 57 யூனியன்களும் அவைகளின் கீழ் 63 மேற்பார்வை ஸிப்பந்திகளும் இருந்தார்கள். இந்த யூனியன்களில் 1388 ஸங்கங்கள் மெம்பர்களாக இருந்தன. கால்நடை இன்ஷூரன்ஸ் ஸங்கங்கள் பர்மாவில் தான் அதிகம். அங்கே இப்படிப்பட்ட ஸங்கங்கள் 324 இருந்தன. குடகில் 10 இருந்தன. ஐக்யமாகாணத்தில் 5 இருந்தன. வங்காளத்தில் 1. பம்பாயில் அந்தவர்ஷத்தில் 4 ஸங்கங்கள் ஏற்பட்டு மூலதனம் சேர்த்துக் கொண்டிருந்தன. சென்னை ராஜதானியில் இப்படிப்பட்ட ஸங்கங்கள் ஒன்றுமே கிடையாது.

## WAR PRICES AND HOUSE RENTS.

### யுத்த காலத்திய விலை வாசிகளும் வீட்டு வாடகைகளும்.

இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்த கணக்கு விவரங்கள் வெளியிடும் டிபார்ட்மெண்டார் சென்ற டிஸம்பர் மாஸத்திய விலை வாசிகளும் வாடகைகளும் யுத்தத்துக்கு முன்னிருந்தவைகளைவிட எவ்வளவு உயர்ந்திருக்கின்றன என்பதை விளக்க சில கணக்கு விவரங்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்தக் கணக்குகளிலிருந்து சில பொது விஷயங்களை எடுத்து எழுதுகிறோம்.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து, 1914-ம் வர்ஷம் ஜூலை மாஸத்திய விலைவாசியை உத்தேசிக்கையில், சென்ற டிஸம்பர் மாஸத்தில் ஸாமான்களின் மொத்தவிலை சென்னையில் 100-க்கு 111 வீதமும், பம்பாயில் 100-க்கு 109 வீதமும், கராச்சியில் 94 வீதமும், கல்கத்தாவில் 68 வீதமும், ரங்கூனில் 43-வீதமும் அதிகரித்தன.

மொத்த விலையைக் கவனியாமல் சில்லரையாக விற்பதை கவனித்தால், சில்லரை விலையானது, முக்யமாக ஆகாரப்பொருள்களின் விலை, கராச்சியில் 100-க்கு 35 வீதமும், பம்பாயில் 29 வீதமும், கல்கத்தாவில் 21-வீதமும், ரங்கூனில் 17-வீதமும், சென்னையில் 13-வீதமும் அதிகரித்தது.

1914-ம் வர்ஷத்தைவிட 1917-ம் வர்ஷம் டிஸம்பர் மாஸத்தில் மொத்தவிலை ரொம்பவும் அதிகரித்திருக்கிற ஸாமான்களைக் கீழே குறிப்பிடுகிறோம்.



| ஸாமான் | | நூற்றுக்கு இவ்வளவு வீதம் உயர்ந்திருக்கிறதென்பது. |
|---|---|---|
| **கல்கத்தா.** | | |
| உப்பு | ... | 498 |
| அரக்கு | ... | 202 |
| மஞ்சள் | ... | 199 |
| உலோகங்கள் | ... | 188 |
| பருத்தித் துணி முதலியவை | ... | 173 |
| நிலக்கரி | ... | 160 |
| பருத்தி பஞ்சு | ... | 149 |
| **பம்பாய்.** | | |
| உலோகங்கள் | ... | 393 |
| மஞ்சள் | ... | 193 |
| பருத்திப்பஞ்சு | ... | 145 |
| பருத்தித் துணி முதலியவை | ... | 140 |
| உப்பு | ... | 121 |
| நிலக்கரி | ... | 117 |
| **கராச்சி.** | | |
| உலோகங்கள் | ... | 466 |
| உப்பு | ... | 179 |
| பருத்திப்பஞ்சு | ... | 137 |
| பருத்தித் துணி முதலியவை | ... | 130 |
| சர்க்கரை | ... | 106 |
| நிலக்கரி | ... | 56 |
| **சென்னை.** | | |
| உலோகங்கள் | ... | 468 |
| மஞ்சள் | ... | 212 |
| பருத்தித் துணி முதலியவைகள் | ... | 175 |
| நிலக்கரி | ... | 154 |
| பருத்திப் பஞ்சு | ... | 102 |
| உப்பு | ... | 100 |
| **ரங்கூன்.** | | |
| உலோகங்கள் | ... | 140 |
| உப்பு | ... | 112 |
| நிலக்கரி | ... | 103 |
| தான்யங்கள், பருப்பு வகைகள் | ... | 100 |
| சர்க்கரை | ... | 98 |
| பருத்தித் துணி வகையரா | ... | 91 |

### சில்லரை விலை.

சில்லரை விலை ரொம்ப அதிகமாக இருந்த ஸாமான்களின் விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| **கல்கத்தா.** | | |
| உப்பு | ... | 200 |
| சர்க்கரை | ... | 82 |
| பாலடைக்கட்டி | ... | 81 |
| வெங்காயம் | ... | 64 |
| நெய் | ... | 50 |
| கெரோஸின் எண்ணெய் | ... | 44 |
| **பம்பாய்.** | | |
| உப்பு | ... | 84 |
| சர்க்கரை | ... | 72 |
| பால் | ... | 50 |
| கெரோஸின் எண்ணெய் | ... | 47 |
| வெங்காயம் | ... | 42 |
| உருளைக்கிழங்கு | ... | 34 |
| **கராச்சி.** | | |
| சர்க்கரை | ... | 100 |
| உப்பு | ... | 94 |
| வெங்காயம் | ... | 64 |
| முட்டைகள் | ... | 60 |
| கெரோஸின் எண்ணெய் | ... | 46 |
| உருளைக்கிழங்கு | ... | 44 |
| **சென்னை.** | | |
| உப்பு | ... | 77 |
| **ரங்கூன்.** | | |
| பீஸ் துணிகள் | ... | 115 |
| துவரம்பருப்பு | ... | 41 |
| புட்டிப்பால் | ... | 36 |
| மஞ்சள் | ... | 33 |
| உப்பு | ... | 25 |
| கெரோஸின் எண்ணெய் | ... | 23 |

சுருக்கமாய்ச் சொல்லுமிடத்து சென்ற டிஸம்பர் மாஸத்தில் கல்கத்தாவில் உப்பு நெய் ஆகிய இவைகளின் சில்லரை விலையும், பம்பாயில் பால், தேயிலை, இறைச்சி ஆகிய இவைகளின் சில்லரை விலையும், கராச்சியில் சர்க்கரை, கோதுமை மா, முட்டை, உருளைக்கிழங்கு, தான்யங்கள் ஆகிய இவைகளின் விலையும், ரங்கூனில் பருப்புகளின் விலையும் ரொம்பவும் அதிகரித்திருந்தன. சாப்பிடுவதற்கு உதவும் எண்ணெய்களின் விலை மேற்சொன்ன எல்லாத் துறைமுகங்களிலும் குறைந்து போய்விட்டது.

1914-ம் வர்ஷத்திய சில்லரை விலையையும், 1918-ம் வர்ஷம் மார்ச்சுமாஸக் கடைசியிலிருந்த சில்லரை விலையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், மார்ச்சு மாஸ விலை யுத்தத்துக்கு முன் இருந்த விலையைவிட கராச்சியில் 100-க்கு 39 வீதமும், பம்பாயில் நூற்றுக்கு 30 வீதமும், கல்கத்தாவில் 13 வீதமும், ரங்கூனில் 8 வீதமும், சென்னையில் 6 வீதமும் உயர்ந்திருக்கிறது. சென்ற டிஸம்பர் மாஸத்திய விலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆகாரப் பொருள்களின் விலை சென்ற மார்ச்சு மாஸத்தில் கல்கத்தாவிலும் சென்னையிலும் குறைந்து போயிற்று. கராச்சி, பம்பாய், ரங்கூன் ஆகிய இவ்விடங்களில் உயர்ந்தன.

### வெளி நாடுகளில் விலைவாசியின் ஏற்றம்.

வெளி நாடுகளில் ஸாமான்களின் விலை 1914-ம் வர்ஷம் ஜூலை மாஸத்திலிருந்ததை விட இப்போது எவ்வளவு உயர்ந்திருக்கிறதென்பதைக் கீழே காணலாம்.

| | 100-க்கு இவ்வளவு அதிகம். | |
|---|---|---|
| வீயன்ன (ஆஸ்ட்ரியா) | ... 173·2 | (ஆகஸ்ட் 1917) |
| நார்வே | ... 130 | (நவம்பர் 1917) |
| பெர்லின் (ஜெர்மனி) | 110·5 | (நவம்பர் 1916) |
| யுனைடட்கிங்டம் | ... 107 | (மார்ச்சு 1918) |
| ஸ்வீடன் | ... 99·6 | (நவம்பர் 1917) |
| ஸ்விட்ஸர்லண்ட் | ... 90 | (1 - 12 - 1917) |
| (1914-ம் வர்ஷம் ஜூன்மீ 1-தேதி விலை 100-ஆக வைத்துக்கொண்டால்.) | | |
| பாரிஸ் (ப்ரான்ஸ்) | 84 | (அக்டோபர் 1917) |
| இட்டலி | ... 71·6 | (ஜூலை 1917) |
| டென்மார்க் | ... 66·3 | (ஜூலை 1917) |
| லிஸ்பன் (போர்த்துகல்) | ... 65 | (ஜூன் 1917) |
| (1913-ம் வர்ஷத்திய விலை—100.) | | |
| கனடா | ... 65 | (டிஸம்பர் 1917) |
| ஐக்யநாடுகள் | ... 51 | (நவம்பர் 15,1917) |
| ஹாலண்ட் | ... 41·4 | (ஸெப்டம்பர் 1917) |
| (1913-ம் ௵த்திய விலை—100.) | | |
| ந்யூஸிலண்ட் | ... 30·5 | (நவம்பர் 1917) |
| ஆஸ்ட்ரேலியா | ... 29·4 | (ஸெப்டம்பர் 1917) |

### வீட்டு வாடகை.

1913-ம் வர்ஷத்திய வீட்டு வாடகையை வைத்துக்கொண்டு கணக்குப் பார்த்தால், 1917-ம் வர்ஷக் கடைசியில் வீட்டுவாடகை விகிதம் கராச்சியில் நூற்றுக்கு 41 வீதமும், சென்னையில் 22 வீதமும் பம்பாயில் 18 வீதமும், கல்கத்தாவில் 9 வீதமும் அதிகரித்திருக்கிறது.

விலைவாசி ஸ்வபாந்தமாக நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டியதென்னவென்றால், இந்தியா மட்டிலுமல்ல உலகமெங்கும் விலைவாசி அதிகரித்திருக்கிறதென்பதே.

---

### இலைச் சருகுகளிலிருந்து செயற்கை மரம்.

மேல்நாட்டில் ஒருவர் காய்ந்து உதிர்ந்த இலைகளிலிருந்து செயற்கை மரம் செய்ய ஒரு வழி கண்டுபிடித்திருக்கிறார். எல்லா வகை இலைகளும் இதற்கு உபயோகப் படுமென்றாலும் இரண்டொரு வகைகள் மற்றவகைகளை விட ச்லாக்யமாக இருக்கின்றன.

முதலில் இலைகளைப் பொடியாக்கவேண்டுமாம். பிறகு ஸோடாக்காரம் (ஸோடாலை) கலந்த ஜலத்தில் போட்டுக் காய்ச்சவேண்டும். காய்ச்சினபிறகு வஜ்ரம் முதலிய பசைகளில் ஏதாவதுகலந்து பலகைகளாக அழுத்தி எடுப்பார்கள். காய்ந்த இலையிலேயே ஒருவகைப் பசை இருக்கிறதாம். அந்தப் பசையை இலையிலிருந்து எடுத்தும் உபயோகிக்கலாமாம். செயற்கை மரத்தை எந்த வர்ணத்தில் வேண்டுமென்றாலும் தயார் செய்யலாமாம்.



# DISCIPLINE IN SCHOOLS.

By K. T. SUNDARA RAJA ACHARIAR, B.A., L.T.

## பள்ளிக்கூடங்களில் ஒழுங்கு.

ஒழுங்கு என்று பொருள்படும் 'டிஸிப்ளின்' ('Discipline') என்னும் ஆங்கிலப் பதத்தில் அநேக ஸங்கதிகள் அடங்கியிருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் சப்தமில்லாமல் அமைதியாயிருப்பதும்; பிள்ளைகள் காலாகாலங்களில் அப்போதைக்கப்போது ஏற்பட்ட வேலைகளைச் செய்வதும், பையன்கள் குற்றங்களை செய்யாமலிருப்பதும் ஒழுங்கின் தன்மையாலேதான். ஒழுங்கு இல்லாவிட்டால் பள்ளிக்கூடங்கள் நல்ல ஸ்திதிக்கு ஒரு பொழுதும் வரமாட்டா. இந்த ஒழுங்கானது வயஸுக்குத் தகுந்தபடியும், காலத்திற்குத் தகுந்தபடியும், தேசத்திற்கு தகுந்தபடியாயுமிருக்கிறது. தமிழில் இந்த ஒழுங்கைக்குறித்து அநேக பழமொழிகள் இருக்கின்றன. "அடியாத மாடு படியாது," "அடி உதவுகிறமாதிரி அண்ணன் தம்பி உதவமாட்டான" முதலியவைகள். அதாவது ஒருவனை ஒருவன் கீழ்ப்படுத்தி நடத்தவேண்டுமானால் அடித்தால் ஒழிய வேறுவழியில் முடியாதென்று ஏற்படுகிறது. இங்க்லண்டில் ஸுமார் 200 அல்லது 300 வர்ஷங்களுக்கு முன் உபாத்யாயர்கள் பிள்ளைகளையெல்லாம் கொஞ்சகாலத்திற்கு ஒருதடவை ஒரேவரிசையாய் நிறுத்தி நன்றாய்ப் பிரம்பால் அடிப்பது வழக்கம். மேலும் உபாத்யாயர்கள் கெட்டிக்காரர்களென்று பெயர் வாங்கவேண்டுமானால், கொஞ்சங்கூட தயவு என்பதே இல்லாதவர்களாய் ரத்தம் ஆறாய்ப் பெருகும்படி அடிக்கவேண்டும். இப்படி நடந்தால்தான் நல்ல உபாத்யாயர்களென்ற பெயர் அவர்களுக்கு ஏற்படும். அதே மாதிரி இப்பொழுது யாராவது எந்த தேசத்திலாவது செய்வார்களானால் அவர்களை பைத்யம் பிடித்தவர்களென்றும், உபாத்யாயர் வேலைக்கு யோக்யதை இல்லாதவர்களென்றும் தள்ளிவிடுவார்கள். ஆகவே பையன்களை அடிக்கலாமா, அடிக்கக்கூடாதாவென்று இங்கு கவனித்துப் பார்ப்போம்.

குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குபோகும் ஸமயத்தில் இது நல்லது, இது கெட்டது என்ற பகுத்தறியும் சக்தி அதிகமாய் ஏற்பட்டிராது. ஆதலால் அவர்கள் நல்லவழியில் திரும்புவதும், கெட்டவழியில் திரும்புவதும் உபாத்யாயர்களைப் பொறுத்திருக்கிறது. குழந்தைகளைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு தாய்மார்கள் நெருப்பண்டை ஸகல வேலைகளையும் செய்கிறார்கள். குழந்தைகள் நெருப்பின் ஸமீபத்தில் போனால் தூக்கித் தள்ளிக்கொண்டுபோய் விடுகிறார்கள். மறுபடியும் பக்கத்தில் போகும் ஸமயத்தில் மறுபடியும் தள்ளிக்கொண்டுபோய் விடுகிறார்கள். இப்படி திரும்பத்திரும்ப செய்வதனால் தீயின் பக்கத்தில் போகக் கூடாதென்ற எண்ணம் குழந்தைகளுக்கு தானாகவே உண்டாகிறது. அதேமாதிரி பையன்கள் கெடுதலான கார்யத்தைச்செய்யும் ஸமயத்தில் உபாத்யாயர்கள் அவர்களை அந்தக் கெடுதலிலிருந்து திருப்பி நல்ல வழிக்குக் கொண்டுவரவேண்டும். முதல் முதலில் இது மிகவும் ச்ரமமாய்த் தோன்றும். ஆனால் பழகப்பழக ச்ரமம் தோன்றாமல் இயற்கையாய்ப் போய்விடும். அப்படிச் செய்யாமல் சில பெற்றோர்களும் உபாத்யாயர்களும் ஒருதரம் சொல்லிவிட்டு, மறுதடவை பிள்ளைகள் தவறிவிட்டால் அவர்களை அடிக்க ஆரம்பிக்கிறார்கள். அது பிசகு. ஏனென்றால் நடக்க நடக்க வழி ஏற்படும் என்பதுபோல, பலமுறை சொல்லச்சொல்ல வழி நன்றாய் ஏற்பட்டு, கெடுதலான கார்யங்களில் புத்தி செல்

லாமல் நல்ல வழியில் செல்லும். பள்ளிக்கூடங்களில் ஒழுங்கை விருத்திசெய்ய அநேக முறைகளிருக்கின்றன. அவைகளை ஒன்றன்பின் ஒன்ருய்க் கூறுவோம்.

1. பையன்களுக்கு உபாத்யாயரிடத்தில் பூர்ணமான நம்பிக்கை ஏற்படவேண்டும். உபாத்யாயர் மிகவும் நல்லவர்; அவர் அனுவச்யமாக தண்டிக்கமாட்டார்; அவர் செய்வதெல்லாம் நம்முடைய நன்மைக்காகவே செய்கிருர்; என்ற நம்பிக்கையைப் பிள்ளைகளிடம் உண்டுபண்ணும்படி உபாத்யாயர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

2. சில பையன்களை உபாத்யாயர்கள் பெஞ்சியின்மீது ஏறும்படி சொன்னுல், அவர்கள் உடனே ஏறுவதில்லை. சற்று பொறுத்தோ, அல்லது சிறிதுநேரம் உபாத்யாயருடன் வாதாடிவிட்டோ ஏறுகிருர்கள். இது ஒரு மிகவும் பிசகானகார்யம். அப்படிச் செய்யும்படி பையன்களை ஒருபொழுதும் உபாத்யாயர்கள் பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. அவர் சொன்னதும் உடனே கேட்கவேண்டும்.

3. சில உபாத்யாயர்கள் வகுப்பில் ஒரு கணக்கைக்கொடுத்துவிட்டு தாங்களே வேறெருவரிடம் பேசிக்கொண்டிருப்பதுண்டு. இது மிகவும் பிசகு. இப்படிச் செய்வதினுல் பையன்களுக்கு அவரிடத்தில் மர்யாதை குறைந்துபோய், அவர்களும் ஒருவரோடொருவர் பேசத்தொடங்குவார்கள்.

4. பையன்களையெல்லாம் தினந்தோறும் ஸ்நாநம்செய்து, நெற்றிக்கு இட்டுக்கொண்டுவரவேண்டும் என்று உபாத்யாயர் சொன்னுல் பையன்கள் அப்படியே செய்வார்கள். ஆனுல் உபாத்யாயர்களும் அப்படியே செய்யவேண்டும். உபாத்யாயர்களைப் பார்த்து பையன்கள் தங்கள் நடத்தைகளை திருத்திக்கொள்வார்கள். தெரியாதவர்களான சிறு பையன்களுக்கு தெரிந்தவர்களான உபாத்யாயர்கள் தாங்களே நடந்து காட்டவேண்டும்.

5. கீழ்ப்படிதல் என்பது ஒரு மிகவும் உத்தமமான குணம். அது கொஞ்சம் கொஞ்சமாக ஏற்படவேண்டியது. கடைசியாய் அது பையன்களுக்கு ஒரு ஸ்வபாவமாகவே ஆகிவிடும்.

6. இப்படி எல்லாப் பையன்களுக்கும் கீழ்ப்படிதல் என்பது ஏற்பட்டுவிட்டால் வகுப்பில் எல்லாருக்கும் இது நல்லது, இது கெடுதல் என்பது நன்ருய் தெரிந்துவிடும். அப்படித் தெரிந்துவிட்டால், பிறகு அதிக கஷ்டமில்லாமல் உபாத்யாயர்களில்லாத ஸமயத்தில்கூட வகுப்பில் பையன்கள் ஒழுங்காக இருப்பார்கள்.

7. சில வகுப்புகளில் உபாத்யாயர்களிருக்கும் ஸமயத்தில் சப்தம் என்பதே இருக்கமாட்டாது. உபாத்யாயர்கள் சற்றுநேரம் வெளியில் போய்விட்டால் பெருங்கூச்சல் ஏற்பட்டுவிடும். இது ஒழுங்கிற்கு அழகில்லை. உபாத்யாயர்கள் இல்லாத ஸமயத்தில்கூட பையன்கள் சப்தம் செய்யக்கூடாது. பெஞ்சிகளையும் மேஜைகளையும் உடைக்கக்கூடாது. மைப்புட்டிகளைத் தரையில் உருட்டிவிடக்கூடாது. சுவர்களில் கண்டபடி எழுதக்கூடாது. இப்படி யெல்லாம் பையன்கள் செய்யாதபடி இருந்தால், அந்தப் பள்ளிக்கூடத்தைப்பற்றி எல்லாருக்கும் ஒரு நல்ல எண்ணம் உண்டாகும். இப்படிப்பட்ட ஒழுங்கைப் பள்ளிக்கூடத்தில் ஏற்படுத்த எல்லா உபாத்யாயர்களும் ஒன்றுசேர்ந்து உழைக்க வேண்டும். இது ஒருவரால் மட்டும் செய்யக்கூடியதல்ல. எல்லாருமாய்ச் சேர்ந்து செய்யவேண்டும்.

8. பையன்களுக்கு உபாத்யாயர்கள் இன்னதை அபேக்ஷிக்கிருர்களென்றும், இன்னபடி செய்தால் உபாத்யாயர்கள் ஸந்தோஷப்படுவார்களென்றும், இன்னபடிசெய்தால் தங்களை தண்டிப்பார்களென்றும் தெரியவேண்டும்.



9. உபாத்யாயர்கள் எல்லாப் பையன்களையும் ஸமமாகப் பாவிக்கவேண்டும். சிலரை ப்ரீதியுடனும் சிலரை அப்ரீதியுடனும் பாவிக்கக்கூடாது. மேலும் பையன்களிடத்தில் ஒரே விதமான ப்ரீதியுடனும் நல்லெண்ணத்துடனும், எல்லாரும் நம்முடைய பையன்கள்; எல்லாரும் முன்னுக்கு வரவேண்டுமென்ற எண்ணத்துடனும், உபாத்யாயர்கள் நடந்துகொள்ளவேண்டும்.

10. பாடசாலை ஒழுங்காக இருப்பதற்கு பையன்கள் எவ்விதம் நடந்துகொள்ளவேண்டுமென்பதற்கு சில ரூல்களை தெளிவாய் எழுதி எல்லாருக்கும் தெரியக்கூடிய இடத்தில் தொங்கவிடவேண்டும். அந்த ரூல்கள் மிகவும் பொதுவானவைகளாயும், எல்லாருக்கும் நன்ருய் விளங்கக்கூடியவைகளாயும், எல்லாரும் பின்பற்றக் கூடியவைகளாயு மிருக்கவேண்டும்.

11. ரூல்கள் எவ்வளவு அவச்யமோ அவ்வளவுக்குமேல் ஒன்றுகூட இருக்கக்கூடாது. ஏற்பட்ட ரூல்களை பையன்கள் நன்ருய் பின்பற்றி நடக்கும்படி செய்யவேண்டியது.

12. எந்தெந்த ரூல்களை பையன்கள் அனுஷ்டிக்கும்படி செய்யமுடியாதோ, அவைகளை உபாத்யாயர்கள் ஒருபொழுதும் ஏற்படுத்த முயலக்கூடாது.

13. ஒவ்வொன்றையும் அனுஷ்டானத்திற்கு கொண்டுவருவதற்குமுன், அது இன்னதென்றும், அதன் லாப நஷ்டம் இன்னதென்றும் பையன்களுக்கு எடுத்துக்காட்டவேண்டும். அதில் ஏற்பட்ட குற்றங்களை முதல் முதலில் பையன்கள் செய்யும்பொழுது அவைகளை எடுத்துக்காட்டி, முதல் இரண்டொரு தடவைகளில் அவ்விதக்குற்றங்களை மன்னிக்க வேண்டும். அப்படிச் செய்வதால்தான் ரூல்கள் பையன்களுக்கு நன்ருய்ப் பிடிபடும்.

14. ரூல்கள் ஏற்படுத்துவது பெரிதல்ல. அவைகளைப் பையன்கள் சரியானபடி அநுஷ்டித்து வருகிருர்களா என்று மிகவும் ஆவலுடன் கவனிக்கவேண்டும். குற்றம் செய்தவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத்தகுந்த தண்டனையை விதிக்கவேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பையன்களுக்கு ஒருவித இறுமாப்பு ஏற்பட்டுவிடும்.

15. யார் குற்றம் செய்யப்போகிருர்கள் என்று கவனித்துக்கொண்டு அதே வேலையாய் எப்போதும் திரியக்கூடாது. அப்படிச்செய்வதால் பையன்களுக்கு உண்டான நல்ல நடத்தைக்குக் கெடுதல் ஏற்படும்.

16. பழகப்பழகப் பாலும் புளிக்கும் என்பதுபோல், பையன்களிடத்தில் மிகவும் நெருங்கி அவர்களுடன் சேரக்கூடாது. மிகவும் தூரத்திலும் அவர்களைத் தள்ளிவிடக்கூடாது. உபாத்யாயர்களின் மரியாதை கெட்டுப்போகாதபடி அவர்களை நடத்திவரவேண்டியது.

17. திருட்டுச்செய்கைகள் செய்யும் பையன்களை மிகவும் ஜாக்ரதையாகப்பார்த்து வரவேண்டும். அவர்கள் செய்யும் பிசகுகளை அவர்களுக்கு அப்போதைக்கப்போது எடுத்துக் காட்டவேண்டும். அப்படிச் செய்வதால் அவர்களைத் திருத்தும்படி செய்யலாம்.

18. வகுப்பில் மிகவும் நல்ல நடத்தையுடன் கூடினவர்களை சட்டம்பிள்ளைகளாக (Monitors) ஏற்படுத்தி அவர்களைக்கொண்டும் ஒழுங்கை விருத்திசெய்யலாம். கெட்ட பையன்கள் அவர்களுக்குக் கெடுதல் செய்யாதபடி அவர்களை உபாத்யாயர்கள் பாதுகாத்து வரவேண்டும்.

19. பையன்களுடைய நடத்தை முன்னுக்கு வந்தால் உபாத்யாயர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சௌகரியம் உண்டு. ஆதலால் பெற்

றோர்களிடத்தில் அவரவர்கள் பையன்களின் குற்றங்களைச்சொல்லி, அவர்கள் உதவியைக் கொண்டும் வகுப்பில் ஒழுங்கு ஏற்படுத்த வேண்டியது.

இப்படிக்கெல்லாம் வகுப்பில் ஒழுங்கைக் கவனித்துவந்தால், பையன்கள் நாளுக்கு நாள் முன்னுக்கு வந்து, மிகவும் நல்ல பதவியையடைந்து படித்த பள்ளிக்கூடத்திற்கும், கற்பித்தவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் ஆனந்தத்தையும் கௌரவத்தையும் உண்டாக்குவார்கள் என்பதற்கு ஸந்தேகமில்லை.

கே. டி. சுந்தரராஜாசாரியார்.

## DESTRUCTION OF RATS AND MICE.

## எலிகளையும் சுண்டெலிகளையும் நாசம் செய்தல்.

எலிகளும் சுண்டெலிகளும் வீடுகளிலும் வயல்களிலும் செய்துவரும் தொந்தரவு அதிகமாயிருக்கிறது. அவைகள் வர்ஷத்துக்கு ஐந்தாறு தடவை குட்டிபோடுவதாலும், ஒவ்வொருதடவையிலும் அநேக குட்டிகள் பிறப்பதாலும், குட்டிகளும் மூன்று நான்கு மாஸத்திலேயே குட்டிபோட ஆரம்பிப்பதாலும், அவைகளை ஒழிக்க நாம் எடுத்துக் கொள்ளும் ஸாமான்ய உபாயங்கள் விசேஷமாகக் கைகூடுவதில்லை.

எலிகளால் ஸாமான்கள் கெட்டுப்போவதேயன்றி, அவைகள் மனிதர்களுடைய ஸுகாதாரத்துக்குக் கெடுதலாகவும் இருக்கின்றன. ப்ளேக் முதலிய தொற்று வ்யாதிகளை மனிதர்களுக்குள் பரவச்செய்ய அவைகளே முக்ய காரணங்களாக இருக்கின்றன. ஆகவே அவைகளை ஒழிக்க விசேஷமுயற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது அவச்யமாகிறது. எலிகளை ஒழிப்பதில் நாம் முக்யமாக கவனிக்கவேண்டிய விஷயங்கள் சில இருக்கின்றன. முதலாவது ஊரில் எல்லாருமே இதில் அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டும். தற்காலம் வீடுகட்டும் முறையில் எலிகள் ஒரு வீட்டிலிருந்து பக்கத்து வீடுகளுக்கு வளை தோண்டிக் கொண்டுபோவது ஸுலபமாக இருக்கிறது. ஆகையால், ஒரு வீட்டார் எலியை ஒழிக்க எவ்வளவு ச்ரமம் எடுத்துக்கொண்ட போதிலும், பக்கத்து வீடுகளிலிருந்து எலிகள் அவர் வீட்டுக்கு வர எத்தனையோ வழிகள் இருக்கும். ஊரில் பல பேர்கள் சேர்ந்து கொண்டு முயன்றால், இது விஷயத்தில் அதிக கஷ்ட மேற்படாது.

இன்னொரு முக்யமான விஷயமென்னவென்றால், எலிப்பொறிகளில் வைக்கப்படும் ஆகாரத்தைத் தவிர வேறு ஆகாரப்பொருள் எதையும் எலிக்கு எட்டும்படியான இடத்தில் திறந்து வைக்கக்கூடாது. அப்படி நாம் அஜாக்ரதையாக வைத்திருந்தால் எலிகள் ஸௌக்யமாக அவற்றை சாப்பிட்டுவிட்டு வ்ருத்தியாகிக் கொண்டிருக்கும். அதோடு பக்கத்து வீடுகளிலுள்ள எலிகளும் இங்குவரக் கூடும். இதனால் எலிகளை அழிக்க நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் விசேஷமாகக் ப்ரயோஜனப்படமாட்டா. ஆகாரப்பொருள்களை நன்றாய் மூடிவைத்திருந்தால், எலிகளை ஒழிப்பது ஸுலபம்.

### வீடுகள் கட்டுவதில் சீர்திருத்தம்.

வீடுகள் கட்டுவதில் ஒரு முக்ய சீர்திருத்தம் கவனிக்க வேண்டியிருக்கிறது. எலிகள் வரக்கூடாத விதமாக ஸிமெண்ட் முதலியவைகளை உபயோகித்து தரை, சுவர் முதலியவைகளைக் கட்டவேண்டும். ஆனால் இந்தியர்களில் பலர் அதிக ஏழையாக இருப்பதால் இது அவர்களுக்கு முடியாத கார்யமாயிருக்கும். பணக்காரர்களாவது தங்கள் வீடுகளை இவ்விதம் கட்டலாம். சாக்கடைவழியாக பக்கத்து வீடுகளிலிருந்து எலிகள் வரக்கூடுமாதலால், அவைகளுக்கு கம்பிகள் போட்டு எலி நுழையாதபடி செய்யவேண்டும். ஏற்கனவேயுள்ள எலி வளைகளை ஸிமெண்ட், மணல், உடைந்த கண்ணாடி ஆகிய இவைகளைக் கொண்டு அடைத்துவிடலாம்.



### எலிப் பொறிகள்.

எலிகளையும் சுண்டெலிகளையும் ஒழிக்க அநேக வழிகள் இருக்கின்றன. முதலாவது எலிப்பொறி வைத்தல் ஆகும்.

எலிகள் தந்த்ரமுள்ளவைகளாகையால் எலிப்பொறியில் அவைகள் சீக்ரம் விழுவதில்லை. வீடுகளில் ஆகாரங்களை ஸுலபமாய் அகப்படும்படியாக வைத்திருந்தால், எலிகள் ஸந்தேகத்துக்கு இடமான எலிப்பொறியில் உள்ள உணவைத் தின்ன முன்வருவது கிடையாது. ஆகையால் எலிப்பொறி வைக்கும் போது வேறு ஆகாரப்பொருள்களைத் திறந்து வைக்கக்கூடாது. வயஸான எலிகள் இது விஷயத்தில் அதிக ஜாக்ரதையுடன் இருக்கும். இருந்தாலும் விடாமல் எலிப் பொறியை உபயோகித்து வந்தால், எலிகளை காலக்ரமத்தில் ஒழித்துவிடக்கூடும். எலிப் பொறிகளில் பல வகை உண்டு. இங்கு மூன்று வகைகளுக்கு படங்கள் கொடுத்திருக்கிறோம். முதலாவது கில்லட்டின் பொறி என்று சொல்லப்படும். இதில் வைத்திருக்கும் உணவை எலி தின்னப் போய் அதைத்தொட்டதும், மேலேயிருக்கும் கம்பி விசையுடன் வந்து கழுத்தில் அடித்து எலியை அப்படியே அமுக்கிவிடுகிறது.

வீடுகளில் எலி அதிகமாக இருக்கும்போது ஒரு பொறி மாத்ரம் உபயோகிப்பது போதாது. அநேகம் பொறிகளை ஏககாலத்தில் உபயோகிக்கவேண்டும். கெட்டிக்கம்பி [illegible] செய்த எலிக்கூடுகள் இன்னொருவகை உபாயமாகும். அதை இங்கு படத்தில் காட்டவில்லை. இதை உபயோகிப்பதில் நாம் கவனிக்கவேண்டிய தென்னவென்றால், முதலில்



கில்லட்டின் பொறி.

சில நாள்கள் வரையில் கூட்டில் ஆகாரம் வைத்து எலிகள் உள்ளே போகவும் மறுபடியும் வெளியே வரவும் ஸௌகர்யமாயிருக்கும்படி கூட்டின் வழிகளைத் திறந்து வைக்கவேண்டும். இதனால் எலிகள் பயமில்லாமல் உள்ளே போய்வரும். பிறகு கதவுகளை சரிவர அமைத்துவிட்டால் பல எலிகள் ஏககாலத்தில் விழுந்து அகப்பட்டுக்கொள்ளும். இந்தவகைப் பொறியால் ஒரு ஸமயம் ஒரே தடவையில் [illegible] எலிகள் அகப்பட்டனவாம். இதற்கு [illegible] பெரியதாக இருப்பதோடு, [illegible] கம்பிகளை வளைக்காதபடி [illegible] வும் இருக்கவேண்டும். இந்தப் பொறியை எலி [illegible] [illegible]

படி வைத்தால், எலிகள் வளையை விட்டுவந்து கூட்டில் புகுந்து, அகப்பட்டுக்கொள்ளும்.

### பீப்பாய் பொறி.

இந்தப் பொறியை உபயோகித்தால் ஏராளமாக எலி பிடிக்கலாமென்று சொல்லப்படுகிறது. இதில் இரண்டு விதம் உண்டு. இரண்டையும் படத்தில் காட்டியுள்ளோம். இடது கைப்புறம் காணப்படும் பீப்பாயின்மேல் கெட்டியான பழுப்புக் கடுதாசியைச் சுற்றிக் கட்டியிருக்கிறது. முதலில் இந்தக் கடுதாசியில் த்வாரமொன்றும் இராது. அதன்மேல்



தின்பண்டங்களைப் போட்டால் எலிகள் தாராளமாக வந்து அவைகளைத் தின்றுவிட்டுப்போகும். இப்படி ஐந்தாறு நாள் தீனி போட்டால் எலிகள் பயமில்லாமல் பீப்பாயின் மேல் ஓடும். பிறகு கடுதாசியின் நடுவில் குறுக்கும் நெடுக்குமாக படத்தில் காட்டியபடி அறுத்துவிடவும். கடுதாசி கிழிந்திருந்தாலும், கிழிந்த பாகங்கள் கிட்டத்தட்ட சேர்ந்தாற்போல இருக்கும். முன்போல தீனிபோட்டிருந்தால், எலிகளெல்லாம் அவைகளைத் தின்னவந்து, கடுதாசி கிழிந்திருப்பதால் நடுப்பக்கம் வளையவே; பீப்பாய்க்குள் விழுந்துவிடும்.

படத்தில் காட்டியுள்ள இரண்டாவது பீப்பாய்ப் பொறி வேறு முறையில் அமைந்துள்ளது. அதன்மேல் ஒரு மரமூடி இருக்கும். அந்த மூடி பீப்பாயின்வாயில் குறுக்கே போட்டிருக்கும் கம்பியில் சுழலும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. சிலநாள் வரையில் மூடியைச் சுழலாதபடி அமைத்து, அதன்மேல் தின்பண்டங்களை வைத்திருந்தால், எலிகள் தாராளமாக வந்து போய்க்கொண்டிருக்கும். பிற்பாடு சுழலும்படி விட்டுவிட்டால், பீப்பாயில் ஏறும் எலிகளெல்லாம் அதற்குள் விழுந்துவிடும். இது ஒரு ஸுலபமான முறையென்றும், இதனால் எலிகள் ஏராளமாகப் பிடிபடுகின்றனவென்றும் சொல்லப்படுகிறது.

### குழிப் பொறி.



இது பீப்பாய்ப்பொறியின் ஒரு மாறுபாடாகும். ரொம்ப கெட்டியானதும் அகலமில்லாததுமான ஒரு பெட்டியை பூமியில் புதைக்கவேண்டும். பெட்டியின் மேல்பாகம் தரைக்கு ஸமமாக இருக்கவேண்டும். பெட்டியின் மூடி சரிஸமமான இரண்டுபாகம் கொண்டது. ஒவ்வொரு பாகத்தையும் படத்தில் காட்டியுள்ளபடி பெட்டியில் ஆடும்படி அமைக்கவேண்டும். இவை முடுக்கும்போது ஒவ்வொரு மூடியிலும் சரிபாதியில் முடுக்காமல், பெட்டியின் ஓரமாக முடுக்கினால், மூடியின் நீண்டபாகம் பெட்டிக்குள் விழுந்துவிடும். அது அப்படிப் பெட்டிக்குள் விழுந்துவிடாதபடி, குட்டையான பாகத்தில் பாரம் வைக்கவேண்டும். ஆனால் அதிகபாரம் இருக்கக்கூடாது. இரண்டு மூடிகளும் இடைவெளி விடாமல் ஒன்றை



ஒன்று தொட்டாற்போலிருக்க வேண்டும். ஆனால் இரண்டும் தாராளமாகச் ஆடவேண்டும். எலி பெட்டியின் மேலேறி நடுவுக்குப் போகையில் மூடி கீழே சாய்ந்து எலியைத் தள்ளிவிடும். எலி விழுந்ததும், பாரம் கட்டியிருப்பதனால் மறுபடியும் சரியான நிலைமைக்கு வந்துவிடும். இந்தப்பொறி எலிகளையேயன்றி இதர ப்ராணிகளையும் பிடிக்க உதவும்.

### இதர முறைகள்.

விஷம் வைத்துக் கொல்லல் நல்ல முறையென்றாலும், அது வீட்டிலுள்ளார்க்குக் கெடுதலாக ஏற்படலாமாகையாலும், விஷம் தின்ற எலிகள் வளைக்குள் போய் இறந்து அழுகி நாறக் கூடுமாகையாலும், அது விசேஷமாய் ப்ரயோஜனப்படுவதில்லை. புகையிட்டுக் கொல்வது நமது தேசத்தில் விசேஷமாய்க் கிடையாது. அவைகள் ஸாமான்ய ஜனங்களுக்கு ஏற்றவையல்ல.

எலிகளை அழிக்க ஊரிலுள்ளோரெல்லாம் சேர்ந்து முயற்சி செய்தாலொழிய, ஒருவர் இருவர் தம் வீட்டு எலிகளை ஒழிக்க எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பயன்படுவது துர்லபம். ஆகையால் க்ராமத்தார் எல்லாரும் சேர்ந்து உழைக்கவேண்டும். இரண்டு மூன்று வர்ஷம் தொடர்ந்து எலிகளை அழித்து வந்தால், எலி யுபத்ரவம் ரொம்பவும் குறைந்துவிடும்.

## CULTIVATION OF THE MANGO.

## மர்மரம் பயிர் செய்தல்.

மாம்பழம் யாவராலும் உபயோகிக்கப்படும் பழமாயிருந்தும், அதன் சாகுபடி விஷயமாக விவஸாயிகளில் பெரும்பாலார் அதிக ச்ரத்தை எடுத்துக்கொள்வது கிடையாது. ஸாதாரணமாக வ்யவஸாயிகள் தாழ்ந்த நிலத்திலேயே மாங்கன்றுகளை நடுகிறார்கள். நடும்போது போடும் எருவைத் தவிர மறுபடியும் எரு போடுவதில்லை. நட்ட இரண்டொரு வர்ஷத்துக்குமேல் ஜலம் பாய்ச்சுவதுங் கிடையாது. இப்படிச் செய்வதனால், மாமரங்கள் ஆறு வர்ஷத்துக்குப் பிறகுகூடக் காய்க்க ஆரம்பிப்பதில்லை. நன்றாகப் பயிரிட்டால் நான்காவது வர்ஷமே பலன்கொடுக்க ஆரம்பிக்கும். மாந்தோப்புகளில் புல், பூண்டு, செடிகளை வளரவிடுகிறார்கள். அவைகள் பூஸாரத்தை க்ரகித்துக்கொண்டு, மாமரங்களுக்கு உணவு கிடைக்காமல் செய்வதோடு, பெய்யும் மழையையும் இந்தக் களைச் செடிகளே அதிகமாக அடைகின்றன. பெய்யும் மழை பூமிக்குள் சுவறும்படி நிலத்தை உழுவதும் கிடையாது. மாமரங்களில் புல்லுருவிகள் முளைத்து பலனைக் குறைப்பதுமுண்டு. இப்படியெல்லாம் அச்ரத்தையாக இருப்பதால், மாந்தோப்புகளால் அதிகபலன் கிடைக்காமல் போகிறது. சிறிது ச்ரத்தை எடுத்துக்கொண்டால், தக்கப்ரதி ப்ரயோஜனம் கிடைக்கும் என்பதில் ஸந்தேகமில்லை.

முக்யமாக தோட்டத்தில் களைபூண்டு முதலியவை இல்லாமல் செய்யவேண்டும். மழைகால ஆரம்பத்தில் நிலத்தை ஆழ உழவேண்டும். இதனால் மழை ஜலம் பூமிக்குள் சுவறி மரத்துக்குப் பயன்படும். இரண்டு வர்ஷத்துக்கு ஒரு தடவை எருவிடவேண்டும். இல்லாவிட்டால் பசுந்தாள் பயிர் சாகுபடி செய்து மடக்கி உழவேண்டும். மரத்திலுள்ள காய்ந்த கிளைகளையும் புல்லுருவிகளையும் அப்புறப்படுத்தவேண்டும். இந்த ஸாமான்ய வேலைகளைச் செய்துவந்தால் மாஸூல் ரொம்பவும்

அதிகரிக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. நல்ல நிலத்தில் உள்ள மரங்களுக்கு ஜலம் பாய்ச்ச வேண்டியது அவச்யமில்லை. ஆனால் ஜலத்தை க்ரஹித்து வைத்துக் கொள்ளக்கூடாத நிலமாக இருந்து, ஜலமட்டம் பூமியின் அடியில் ரொம்பத் தாழ்ந்துமிருந்தால், டிஸம்பர் மாஸம் முதல் மாதத்துக்கு இரண்டு தடவை ஜலம் பாய்ச்சவேண்டியது அவச்யம். பழம் பழுக்கும் வரையில் ஜலம் பாய்ச்சவேண்டியது அவச்யம். ஆனால் நிலத்தை அடிக்கடி கொத்திவிட்டு வைத்திருந்தால் மழையே போதுமானது.

### நிலத்தைப் பண்படுத்தல்.

இனி புதிதாய்க் கன்றுகள் நடுவதைப்பற்றி கவனிப்போம். ஒட்டு மாங்கன்றுகளை நல்லவைகளாகத்தெரிந்து வாங்கவேண்டும். நாணயமுள்ள மாங்கன்று வ்யாபாரிகளிடமிருந்து வாங்கவேண்டும். இளமரங்களிலிருந்து ஒட்டுக்கட்டிப் பயிர்செய்த கன்றுகள் நல்லவையல்ல. கன்றுகளை முப்பதடிக்கு ஒன்றாக நடவேண்டும். கன்றுகளை நட மூன்றடி ஆழமுள்ள குழிகள் வெட்டவேண்டும். மேல் மண்ணோடு கரி, மட்கின எரு, உடைத்த எலும்பு இவைகளைக்கலந்து, மறுபடி குழியில் போட்டு மூடவேண்டும். கன்றுகளை நடும் குழிகளை முந்தின வர்ஷத்திலேயே வெட்டிவைத்திருந்தால், மண்ணில் காற்றோட்டம் ஏற்படுவதோடு, கெடுதலுண்டுபண்ணும் பூச்சிகளும் க்ருமிகளும் களைகளின் வேர்களும் அழிந்துபோகும். மண் மணல்பாங்காக இருந்தால், குழிகள் அகலமாக இருக்கவேண்டும். எருவோடு செம்மண்ணும், வண்டலும் கலந்து செடிகளுக்கு வைக்கவேண்டும். களிப்பான நிலங்களில் குழியை ஆழமாகத் தோண்டவேண்டும். குழியிலிருந்து எடுத்த மண்ணோடு ஒரு கூடை எருவும், கொஞ்சம் எலும்புத்தூளும், சுண்ணாம்புத்தூளும், கொஞ்சம் கரியும் சேர்த்து குழியில் போட்டு மூடவேண்டும். இரண்டொரு கூடைமணலையும் கலந்துகொள்ளலாம். குழிகளில் எருப்போட்டு நிரப்பும் இந்த வேலையை மழைக்கு முன்னால் கன்றுகளை நட இரண்டொரு வாரத்துக்கு முந்தி செய்யவேண்டும். கன்றுகளை நடுவதற்குமுன் குழியிலுள்ள மண்ணை இரண்டொரு தடவை கிளறிவிடவேண்டும். இதனால் நட்டபிறகு மண் ஒரே ஸமனாகப்படியும்.

### நடுதல்.

வானம் மப்பாக இருக்கும் போது கன்றுகளை நடவேண்டும். கன்றுகள் உள்ள தொட்டிகளை குழிகளண்டை வைத்துக்கொண்டு, குழியின் நடுவில் தொட்டிமண் கொள்ளும்படியாக ஒரு சிறு பள்ளம் தோண்டவேண்டும். பிறகு தொட்டியை மெதுவாக உடைத்து எடுத்துவிட்டு, கன்றை மண்ணுடன் மெதுவாக பள்ளத்தில் வைத்து, பள்ளத்தில் இன்னும் கொஞ்சம் மண்போட்டுக் கெட்டியாக மிதிக்கவேண்டும். கன்றில் ஒட்டுக்கட்டின இடம் மண்ணில் புதையாதபடி பார்த்துக்கொள்ளவும். ஒட்டுக்கட்டின பாகம் நிலத்துக்குமேல் 9 அங்குல உயரத்தில் இருக்கவேண்டும். செடிசாயாமலிருக்க ஒரு குச்சியை நிறுத்தி, குழியில் யதேஷ்டமாக ஜலம் விடவேண்டும். மறுநாள் மண் அமிழ்ந்திருந்தால் இன்னும் கொஞ்சம் மண்போட்டு சரிப்படுத்தவேண்டும்.

கன்றுகளை நட்டபிறகு மழை பெய்யாவிட்டால், கன்றுகளுக்கு அடிக்கடி ஜலம் விடவேண்டும். வெயில் உக்ரமாயிருந்தால் செடியை மறைக்க ஏதாவது ஒரு மறைப்பு இருக்கவேண்டும். கன்றுகள் பத்து பன்னிரண்டு அடி உயரம் வளர்ந்து காய்க்க ஆரம்பிக்கும் வரையில் இடைப்பயிர் சாகுபடி செய்யலாம். இடைப் பயிருக்குச் செய்யும் சாகுபடி வேலைகள் மாங்கன்றுகளுக்கும் பயன்படும். காய்க்க





ஆரம்பித்துவிட்டால், பூஸாரம் மாங்கன்றுகளுக்கே பயன்படும்படி, இடைப்பயிர் சாகுபடியை நிறுத்திவிட வேண்டும்.

புதிதாக நட்ட செடிகளுக்கு வளர்ச்சியில் தடை ஏற்படக்கூடாது. இதை உத்தேசித்துத்தான் கன்றுகளை நடுமுன் குழியில் எருப்போடுகிறோம். மரம் பெரியதாகும் வரையில், மழைகாலத்தின் ஆரம்பத்திலும் கடைசியிலும் எருப்போடவேண்டியது அவச்யம். இப்படி எருவிட்டும் மரம் செழித்தோங்கி வளராவிட்டால், பொடிசெய்த பிண்ணாக்கை ஜலத்தில் கரைத்து இரண்டு வாரத்துக்கு ஒரு முறை விதம் மரம் சரியாக வளர ஆரம்பிக்கும் வரையில் போட்டு வரவேண்டும்.

மரம் பெரியதான பிறகு எருப்போடுவதா, வேண்டாமா என்பதைப்பற்றி பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிறார்கள். ஆனால் எருப்போடுவதால் பலன் அதிகரிக்கிறதாக ஒரு அனுபோகஸ்தர் சொல்லுகிறார். பத்து முதல் 20 கூடை தொழுவத்தெருவாவது, 5 முதல் 10 கூடை நரகல் எருவை இரண்டொரு கூடை சாம்பலுடன் கலந்து அதையாவது அக்டோபர் மாஸத்தில் மழை நிற்பதற்கு முன் போடுவதால் மரங்களுக்கு விசேஷ நன்மை உண்டானதாக அவர் சொல்லுகிறார். அடிமரத்தைச் சுற்றிலும் ஐந்தடிவிட்டு மரத்தின் கிளைகள் பரவியிருக்கும் விஸ்தீரணத்துக்கு இரண்டு மூன்று அடி அப்பால் வரையில் எருவைக்கொட்டிப் பரப்பி, ஒரு இரும்புக் கலப்பையால் உழுது எருவை மண்ணோடு கலந்து விடவேண்டும். நிலத்தைக் கொத்தியும் உழுதும் விடுவதால் சிறு சல்லிவேர்களை குபாத்து செய்த மாதிரியாகிறது. இதனால் மரம் புதிதாகத் தளிர்விடும்.

### ஜலம் பாய்ச்சுதல்.

மரங்கள் பெரியவையானபிறகு அவைகளுக்கு ஜலம் பாய்ச்சுதலைப்பற்றியும் அபிப்ராயம் வித்யாஸப்படுகிறது. ஆனால் ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது. ஜலமட்டம் உயர இருக்கும் பூமிகளில் அதாவது ஸ்வல்ப ஆழத்தில் ஜலம் கிடைக்கும் பூமிகளில் வளரும் மரங்கள் திடமாக இருக்கின்றனவே ஒழிய ஜலமட்டம் தாழ்ந்திருக்கும் பூமிகளில் அதாவது அதிக ஆழத்தில் ஜலம் கிடைக்கும் பூமிகளில் வளரும் மரங்கள் நன்றாக இருப்பதில்லை. மேலும் ஈரந்தாங்கக்கூடிய இடங்களில் வளரும் மரங்கள் நன்றாய் இருக்கின்றன. மணல்பாங்கான நிலங்களில் ஈரம் நிற்பதில்லை. அவ்விடங்களில் மரங்கள் செழித்து வளருவதில்லை. இவ்விஷயங்களால் கோடைகாலத்தில் பெரிய மரங்களுக்கு ஜலம் அதிகம் வேண்டுமென்று ஏற்படுகிறது. அதோடு பூக்க ஆரம்பித்தபிறகு பழுக்கும் வரையில் மாஸத்துக்கு இரண்டு தடவை யதேஷ்டமாக ஜலம் பாய்ச்சுதலும் நல்லது.

ஆனால் இப்படிச் செய்வது சிறு தோட்டங்களில்தான் ஸாத்யமாகும். பெரிய தோட்டங்களுக்கு இது முடியாதாகையால், மழைக்காலம் ஆரம்பிக்குமுன்னால் நிலத்தை ஆழ உழுது வைத்தால், தோட்டத்தில் பெய்யும் மழையெல்லாம் பூமிக்குள் சுவறி அடி மண்ணில் தங்கியிருக்கும். மழைக்குப் பிறகு நிலத்தை உழுது வைத்திருந்தால், அடிமண்ணில் உள்ள ஜலம் ஆவியாகப் போகாமலிருந்து மரங்களுக்கு உதவும்.

# SPOILED BY THE CROOK AND THE COOK.

By S. NARASIMHA CHARY, B.A., B.L.,
*High Court Vakil, Madras.*

## இடையன் கெடுத்தது பாதி; மடையன் கெடுத்தது பாதி.

துர்யோதனன் செய்த வஞ்சனையினால், பஞ்ச பாண்டவர்கள் சூதாடி, தமது நாடு நகரம் முதலிய யாவற்றையும் இழந்து, பன்னிரண்டு வர்ஷம் வனவாஸம் செய்து, பதின்மூன்றாவது வர்ஷத்தை, முன்பு தாங்கள் செய்து கொண்ட உடன்படிக்கைப்படியே, ஒருவரும் தங்கள் இருப்பிடத்தை அறியாதபடி, அஜ்ஞாதவாஸத்தில் கழிக்க எண்ணி, விராட நகரத்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஐவரில் மூத்தவரான யுதிஷ்ட்ரர், கிழ ப்ராமணர் போல வேஷம் பூண்டு, அந்தப் பட்டணத்தை ஆண்ட விராடராஜன் ஸபையிலே, அந்த அரசனுக்கு, இங்கித மொழியோடு ஆலோசனை சொல்லும் ஸ்நேகிதராய் அமர்ந்தார். பீமஸேனன், அந்த அரசனுடைய ப்ரதான சமையல்காரனாக அமர்ந்தான். அர்ஜுனன், முன் ஒருகால் ஊர்வசி தனக்குக் கொடுத்த சாபத்தின் உதவியால், பேடியாகி, அரண்மனையிலிருந்த ராஜஸ்த்ரீகள் பலர்க்கும் ஆடல்பாடல் கற்பிக்கும் தொழிலை ஏற்றுக்கொண்டான். அரசனுடைய கணக்கில்லாத குதிரைகளை காப்பாற்றும் வேலையில் நகுலனும், ஆடுமாடுகளைப் போஷித்துக் காக்கும் வேலையில் ஸகாதேவனும் முறையே அமர்ந்திருந்தார்கள். தர்மதேவதையினுடைய பெருங்கருணையினாலும், இவர்களுடைய ஸாமர்த்யத்தாலும், இவர்கள் இன்னார் என்பது ஒருவருக்கும் தெரியாமல் போயிற்று.

அஜ்ஞாதவாஸ வர்ஷம் முடிவதற்கு முன்னேயே, அவர்களைக் கண்டு பிடித்துவிட்டால், மறுபடியும் அவர்களைக் காட்டுக்கு அனுப்பிவிடலாம் என்ற பேராசை கொண்ட துர்யோதனன், தனது ஸபையிலுள்ள வேவுகாரர்களை அழைத்து, பாண்டவர்கள் இருக்கும் இடத்தைக்கண்டு பிடிப்பவனுக்கு விசேஷ வெகுமதி தருவதாக வாக்களித்து, அந்த வேவுகாரர்களைப் பல நகரங்களுக்கு அனுப்பினான். அவர்களும் தங்களுடைய முழுஸாமர்த்யத்தையும் உபயோகித்தும், பாண்டவருடைய இருப்பிடத்தைக் கண்டுபிடிக்க முடியாமல் வருந்தி, தம்மூருக்குத் திரும்பினார்கள். மற்றவர்களைக் காட்டிலும் மிகுந்த ஸூக்ஷ்ம புத்தியுடைய இரண்டு பேர்கள் மாத்ரம், பாண்டவர்களைக் கண்டுபிடிக்காமல் திரும்புவதில்லை என்று தீர்மானித்து, பற்பல இடங்களில் தேடி, பாண்டவரைக் காணாமல், கடைசியில் விராடனுடைய பட்டணத்துக்குப் பக்கத்தில் வந்து சேர்ந்தார்கள்.

ஸூர்ய உதயம் ஆக இன்னும் அரை நாழிகைப் பொழுதிருந்தது. கங்கபட்டர் என்று பெயர் கொண்டிருந்த யுதிஷ்ட்ரர், தினந்தோறும் காலைக்கடன் முடிக்க, நகரத்துக்கு அருகே ஓடும் ஒரு சிற்றாற்றுக்குப் போவது வழக்கம். அன்று காலையும் அவர், வழக்கப்படியே ஸ்நானம் செய்து, அந்த ஆற்றின் கரையேறினார். சிறிது தூரத்தில் இருவர் பேசும் சப்தம், அவர் காதில் விழுந்தது.

அவர்களில் ஒருவன், (சுற்றிப்பார்த்து);—"தம்பி! (ரகஸ்யமாய்) நம்முடைய முட்டாள்தனத்துக்குக் கணக்கேயில்லை. 'பகலில் பக்கம் பார்,' என்ற பழமொழியை அறிந்திருந்தும், நம்முடைய ஆத்ரத்தை அடக்கமாட்டாமல், வாயில் வந்தபடியெல்லாம், உரக்கப்பேசிவிட்டோமே! அதோ, ஒரு கிழப்ப்ராம்மணர் உட்கார்ந்துகொண்டு, ஸூர்யனைப் பார்த்துக்கொண்டே, 'முணுமுணு' என்று, மந்த்ரம் சொல்லுகிறார், பார்த்தாயா? நாம் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தைகள் எல்லாம், அவருக்கு நன்றாய்க் கேட்டிருக்கும்."

மற்றவன், (ரகஸ்யமாய்):—"அண்ணே! நீ சொல்வது வாஸ்தவமே. ஆனால் நீ பயப்படவேண்டாம். இந்த ப்ராம்மணர்கள், மந்த்ரம் சொல்ல ஆரம்பித்தால், இடி இடித்தாலும் இவர்கள் காதில் ஒன்றும் விழுவதில்லை. இந்த ப்ராம்மணரைக் கேட்டால், பட்டணத்துக்கு வழி சொல்லுவார்."

பிறகு இருவரும் மெல்ல நடந்து, யுதிஷ்ட்ரரின் அருகில் வந்தார்கள். த்யானம் செய்பவர் போலக் கண்களை மூடிக்கொண்டு அவர்களுடைய ஸம்பாஷணையை முற்றும் கேட்டுக் கொண்டிருந்த யுதிஷ்ட்ரர், அவர்கள், தன் அருகே வருவதை அறிந்து, கண்ணைத் திறந்தார்.

யுதிஷ்டிரர்:—"நீங்கள் யார்? வழிப்போக்கர்கள்போலக் காணுகிறீர்கள்."

1-வது வேவுகாரன்.—"ஐயா! நாங்கள் வெகு தூரத்திலிருந்து வருகிறோம். ஸமீபத்தில் விராடநகரம் இருக்கிறது, என்று சொல்லக்கேட்டு வந்தோம். இங்கே வழி தெரியவில்லை. தங்களைக்கேட்டுத் தெரிந்துகொள்ளலாம், என்று வந்தோம்."

தர்மபுத்ரர் இவர்களை உற்றுப்பார்த்தார். நெடுந்தூரம் செய்த ப்ரயாணத்தால், அவர்களுடைய சரீரம் வாடியிருந்தது. தர்மமார்க்கத்திலிருந்து, இம்மியளவும் பிசகாமல் நடக்கும் பெருமானாகையால், கருணைமிகுந்து, "அப்பா! உங்கள் இருவரையும், நான், விராடநகரத்துக்கு அழைத்துப்போகிறேன். வாருங்கள்," என்றார்.

"ஸ்வாமி! உங்களுக்கு நாங்கள் என்ன பதில் செய்யப்போகிறோம். நாங்கள் சாப்பிட்டு மூன்றுநாள் ஆகிறது."

"பயப்படவேண்டாம். என்னோடு வந்தால், உங்களுக்குவேண்டிய ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கிறேன்."

"ஸ்வாமி! தங்கள் சித்தப்படியே செய்கிறோம்." உடனே இருவரும் தர்மபுத்ரர் பின்னே நடந்துபோனார்கள். அவரும் நகரத்துள் புகுந்து, பீமஸேனன் இருக்கும் பாகசாலைக்குப்போனார்.

ஒருநாளும் இல்லாமல், திடீரென்று தன்னிடம் வந்த தமையனைக் கண்டு ஆச்சர்யம் அடைந்த பீமன், எழுந்து கைகூப்பினான்.

தர்:—"ஐயா! இந்த இருவரும் நெடுந்தூரத்திலிருந்து வந்த ப்ரயாணிகள். இவர்கள் சாப்பிட்டு மூன்று நாள் ஆகிறதாம். தயை செய்து, இவர்கள் இவ்வூரில் இருக்கும் வரையிலும், இவர்களுக்குப் போதுமான உணவு போடுவீரானால், ஜகதீசன் உமக்குக் கருணை செய்வார்."

பீம:—"அப்படியே செய்கிறேன். இதைப் பற்றி, இனி நீங்கள் கவலைப்படவேண்டாம்."

தர்மபுத்ரர் அவ்விடம் விட்டு அப்பால் போனார். சிறிது நேரம் ஆனபின், பீமன், பிறரால் அசைக்கவும் முடியாத இரண்டு செப்புத் தோண்டிகளை, இரண்டு விளையாட்டுக் கருவி போல அலக்ஷ்யமாய் எடுத்துக்கொண்டு, வேவுகாரர்களைப்பார்த்து, நீங்கள் இவ்விடமே இருங்கள்; நான் ஓடைக்குப்போய் ஸ்நானம் செய்து வருகிறேன்," என்றான். இவனுடைய உருவத்தையும் பேச்சையும் பலத்தையும் கண்டு ஆச்சர்யம் அடைந்த வேவுகாரர்கள், இவனைப் பார்த்து, "ஐயா! நாங்கள் ஸ்நானம் செய்து, நாலு நாள் ஆகிறது. தயைசெய்து, எங்களையும் ஓடைக்கு அழைத்துப் போவீர்களா?" என்று கேட்டுக்கொண்டார்கள்.

பீமஸேனன், "ஸந்தோஷம் வாருங்கள்." என்றுசொல்லி, தன் கால்கள் பூமியின்மேல் மிதிக்கும்போதெல்லாம், உலக்கையால் குத்துண்ட உரல் ஒலிப்பதுபோல, 'திம்! திம்!'

என்று சப்தம் உண்டாக விரைவாய் நடந்தான். வேவுகாரரும் பின்னே நடந்தார்கள். ஓடையும் ஸமீபித்தது. அதன் இருகரையிலும் வ்ருக்ஷங்கள் செழித்து, குளிர்ந்த நிழலைத்தந்தன. பக்கங்களில் இருந்த வயல்களில், எள் செடிகள் செழித்து ஓங்கி, வளர்ந்திருந்தன.

அப்போது வேவுகாரர்களில் பெரியவன், "இதென்ன செடி? எங்கள் ஊரில் காணாத செடியாகத் தோன்றுகிறது," என்று பீமனைக்கேட்டான்.

பீம.—"நீர், எந்த ஊர்?"

"நான் இருப்பது ஹஸ்தினாபுரம்."

"நீர் இவ்வளவுதூரம் ப்ரயாணம்செய்து வருவதற்குக்காரணம் என்ன?"

"ஒன்றுமில்லை—நாங்கள்—"

இவன் தயங்கித் தயங்கிப் பேசும் விதத்தை யோசிக்கும் போதெல்லாம், பீமஸேனனுக்கு ஸந்தேகம் பிறந்தது. ஆகிலும், தன்மனதில் உள்ளதை வெளிப்படுத்தாமல், "ஓய்! இதென்ன செடி, என்று கேட்டீரே; சொல்லுகிறேன், கேளும். நீர் எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்து எத்தனை நாளாகிறது?"

"ஐயா! ஆறு மாஸத்துக்குமேல் ஆகிறது"

"அடே, அப்பா! ஆறு மாஸமாகவா ப்ரயாணம் செய்கிறீர்? அது கிடக்கட்டும். இப்போது எண்ணெய் தேய்த்துக்கொள்ள இஷ்டந்தானா?"

"இஷ்டமா! கிடைத்தால் போதாதா? ஆசைப்பட்டு என்ன ப்ரயோசனம். இங்கே, எண்ணெய் ஏது, பிண்ணாக்கு ஏது?"

"ஓய்! அதைப்பற்றி, உமக்கேன் விசாரம்? உட்காரும், எண்ணெய்தேய்த்து விடுகிறேன்," என்று சொல்லி, பக்கத்து வயலில் இருந்த எள் காய்களில் சிலவற்றைப்பறித்து, அவற்றின் உள்ளே இருந்த எள்ளைத் தன்கையில் உதிர்த்துக்கொண்டு, இருவரையும் உட்காரவைத்து, இருவர் தலைக்குமேலும் தன் கையிலிருந்த எள்ளைப்பிசைந்தான். அதிலிருந்து எண்ணெய் சரசரவென்று கொட்டிற்று.

கல்லைக்காட்டிலும் உறுதியுடைய தன்னுடைய கைகளால், பீமன் தேய்க்கும்போது, அவர்களுக்கு உண்டான போகந்தத்திற்கு அளவில்லை. இந்த ஸமயத்தில், பீமஸேனன், சொல்லுவான்:—

"ஓய் ப்ரயாணிகளே! நான் சொல்வதைக் கவனியுங்கள். 'நீங்கள் எந்த காரணத்துக்காக ப்ரயாணம்செய்கிறீர்கள்,' என்று நான் கேட்டதற்கு, சரியான பதில் சொல்லவில்லை. உள்ளதைச் சொல்லிவிடுங்கள். பசு மரத்தின் அடியில் உட்கார்ந்துபொய் சொல்லக்கூடாது, என்று பெரியோர் சொல்லும் நீதிவாக்யம், உங்களுக்குத் தெரியும் அல்லவா," என்றான்.

1-வது வேவு:—'பொய்சொன்னால், இவன் என்ன செய்வானோ, தெரியவில்லை. இவனுக்கிருக்கிற பலத்தைப்பார்த்தால், சுண்டுவிரலால் நம்மைத்தூக்கி, ஆற்றில் எறிந்துவிட்டாலும் எறிந்துவிடலாம். மேலும், நாம் சொன்னது பொய் என்பதை, எப்படியோ தெரிந்துகொண்டான்,' என்று நினைத்து, "ஐயா! நிஜத்தைச் சொல்லுகிறேன். பஞ்சபாண்டவர்கள் மறைந்திருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கவந்த வேவுகாரர்கள், நாங்கள்," என்றான்.

பீமஸேனனுக்கு பொறுக்கமுடியாத கோபம் கிளம்பிற்று. அவ்விருவரையும் ஒரே நசுக்காக நசுக்கிப்போடலாமா, என்று நினைத்துப் பற்களைக்கடித்தான். மறுக்ஷணத்தில், தன் தமையனுடைய உத்தரவை நினைத்துக்கொண்டு, மேலெழுந்த கோபத்தை அடக்கி, அவர்களைப்பார்த்து, எண்ணெய் தேய்த்தது போதுமா, என்றுகேட்டான்.

1-வது, வேவு; "போதும், போதும். இன்னும் ஒருவிநாடி நேரமாகிலும் நீங்கள் தேய்ப்பீரானால், எங்கள் தலைச்சதை போய்விடும். ஐயா! தயவுசெய்து நிறுத்துங்கள்."



2-வது வேவு; "இந்த எண்ணெய் போகும்படி சீயக்காய் தேய்த்துக்கொள்ளவேண்டுமே! சீயக்காய்க்கு எங்கேபோவது?"

பீமஸேனன், அவர்களைக் கொஞ்சம் பொறுத்திருக்கச் சொல்லி, அந்த ஓடையின் கரைமேல் வளர்ந்திருந்த இலுப்பைமரம் ஒன்றைத் தன்கையால் அசைக்க அநேக இலுப்பைப் பழங்கள் உதிர்ந்தன. அவைகளை எடுத்துத் தன்கையில் பிசைந்தவுடன், பழத்தின் தசையும், கொட்டையிலுள்ள எண்ணெயும் கீழே விழுந்தன; இலுப்பப் பிண்ணாக்கு மாத்ரமே, கையில் தங்கிற்று. அதை அங்கிருந்த ஒரு பாறையின்மேல்வைத்து, அதன்மேல் கொஞ்சம் ஜலம் வார்த்துத் தேய்த்தான். அந்தப் பிண்ணாக்கு, மெதுவான துவையல்போல் ஆயிற்று. அதை எடுத்து, இருவர் தலைமேலும் அப்பி, தன் இரண்டு கைகளிலும் இரண்டு தோண்டிகளையும் ஏக காலத்தில் எடுத்துக்கொண்டு, ஜலத்தை மொண்டு, கைபோகும் வரையும் உயரத்தூக்கி, ஜலத்தை அவர்கள் தலையில் கொட்டினான். ஆகாச கங்கைபோல் விழும் ஜலத்தின் வேகத்தினால், எண்ணெய்ப் பிசுக்கு இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது.

உடனே அவர்கள், அங்கிருந்து புறப்பட்டு அதிவேகமாக மடைப்பள்ளிக்கு வந்துசேர்ந்தார்கள். பீமஸேனன், அரை நாழிகைக்குள் சமையல்செய்து, இருவரும், 'போதும், போதும்' என்னும் வரையிலும், அவர்களுக்குச் சாப்பாடு போட்டான். காய்ந்த மாடு கம்பில் விழுந்தாற்போல, இருவரும் சாப்பிட்டு த்ருப்தியடைந்தார்கள்.

கை கழுவியவுடன், இருவரும் படுத்துக்கொண்டு, மெய்ம்மறந்து தூங்கினார்கள். பொழுதுபோக ஜாமப்பொழுதிருக்கும்பொழுது, கண்களை விழித்துப்பார்த்து, பொழுது போனதைக்கண்டு, பீமஸேனனிடம் வந்து, "ஐயா! தெண்டம்! போய்வருகிறோம். ஞாபகம் இருக்கவேண்டும்," என்றார்கள்.

1-வது வேவு:—"ஐயா! உங்களை நான் ஒன்று கேட்டுக்கொள்ளலாமா? பஞ்சபாண்டவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள்? உமக்குத் தெரியுமானாலும், அல்லது, பிறர் யாராகிலும் உம்மிடம் சொல்லக்கேட்டிருந்தாலும், தயவுசெய்து சொல்லுங்கள்," என்றான்.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், பீமனுக்கு, ஸகிக்கமுடியாத கோபம் உண்டாயிற்று. 'இவர்கள் இவ்வூரில் இருக்குமளவும் போஜனம் போடும்படி, தமையன் சொன்னது வாஸ்தவமே. ஆயினும், இவர்கள் இந்த ஊரைவிட்டுப் போவதாகச் சொல்லிவிட்டார்கள். ஆகையால், இனிமேல், என் இஷ்டப்படி நடந்து கொள்வதற்கு, யாதொரு தடையும் இல்லை," என்று, ஆலோசனைசெய்து, அவர்களைப்பார்த்து, "என்னுடைய ஞாபகம் இருக்கவேண்டும் என்றீர்களே. அப்படியே, உங்களுக்கு என் நினைவும், எனக்கு உங்கள் நினைவும் இருக்கக்கூடிய மார்க்கம் செய்கிறேன்," என்றுசொல்லி, இருவர் தலையையும் தன் இருகைகளாலும் சடீரென்றமுத்தி, அவர்கள் முதுகில் ஆளுக்கொரு குத்துக்குத்தினான்.

வேவுகாரர், 'ஐயையோ!' என்று கூவிக்கொண்டே, கூன் வளைந்த முதுகோடு, அவ்விடத்திலிருந்து வெளியேவந்து, அந்த நகர வாசலைக்கடந்து, தம் ஊரைநோக்கி நடந்தார்கள்.

விராடநகரத்துக்கு இரண்டு மைல்தூரத்தில், நகுலனும், ஸகாதேவனும், தமது காவலில் உள்ள குதிரைகளையும் ஆமோக்களையும், மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அருகே வேவுகாரரும் வந்தார்கள்.

நகுலன்:—“ஓ! ப்ரயாணிகளே! நீங்கள் உள்ளூரார் அல்லவே! நீங்கள் எந்த ஊரார்.”

1-வது வேவு:—“ஐயா! எங்கள் துரத்ருஷ்டத்தை ஏன் கேட்கிறீர்? நாங்கள் இருக்கும் இடம் ஹஸ்தினபுரி.”

ஸகாதேவன்:—“துரத்ருஷ்டம் என்கிறீரே, அது என்ன, ஐயா?”

2-வது வேவு:—“ஐயா! ஆறு மாஸமாகப் பாண்டவரைத்தேடி வருகிறோம். எங்கும் காணவில்லை. விராட நகரத்துக்கு வழியும் தெரியவில்லை. கடைசியாக, ஒரு கிழப்ராமணர் உதவியால், நகரத்துக்குப் போனோம். எங்களுக்குச் சாப்பாடுபோடும்படி, அவர், ராஜாவினுடைய சமையல்காரனிடம் சொன்னார். அந்த மனுஷ்யனுக்குப் பித்தம் தலைக்கேறியிருக்கிறது, ஐயா! எங்களுக்கு நன்றாய், தட்டித்தட்டி எண்ணெய் தேய்த்து, வயிறு நிறையச் சாப்பாடு போட்டான். ஆனால் நாங்கள் புறப்படும் ஸமயத்தில், நிஷ்காரணமாய் எங்களை முதுகில் குத்திக் கூனாக்கிவிட்டான், ஐயா! மகாபாவி! நாசமாய்ப்போவான்.”

இந்த வார்த்தைகள் நாராசம்போல, அவர்கள் காதில் விழுந்தன. உலைபோலப்பொங்கும் கோபம்மூண்ட ஸகாதேவன், தன் தமையன் கையிலிருந்த துறட்டை வெடுக்கென்று பிடுங்கி, நொடிப்பொழுதிற்குள் அவர்கள் கழுத்தில் மாட்டி, அவர்கள் தலையைத் தோள்வரையிலும் திருப்பிவிட்டான். அந்த நோவு பொறுக்கமாட்டாமல், வேவுகாரர், ‘குய்யோ, முறையோ,’ என்று அலறிக்கொண்டே, ஓட்டமாய் ஓடி, பலநாளும் நடந்து, ஹஸ்தினபுரியை அடைந்து, துர்யோதனன் ஸபைக்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

துர்யோதனன்:—“என்னடா, இது விசித்ரமாக இருக்கிறது? உங்களுக்குக் கூன் எப்படி வந்தது? கழுத்து, ஏன், ஒருபுறமாய்த் திரும்பி இருக்கிறது? பாண்டவர்கள் இருக்கும் இடத்தைக்கண்டு பிடித்தீர்களா?”

1-வது வேவு:—“ராஜாவே! எங்களுடைய அலைச்சலைச்சொல்ல ஆரம்பித்தால், எழுந்த நிலா விழுந்துவிடும். அந்த த்ரோகிப் பாண்டவர்களை நாங்கள் தேடாத இடமில்லை. அவர்கள் எங்கேயோ, மாயமாய் மறைந்திருக்கிறார்கள். கடைசியாக விராடநகரம் என்னும் பெயருள்ள ஒரு பைத்யக்காரப் பட்டணத்துக்குப் போனோம். அங்கே, சமையல்செய்யும் ஒரு மடையனை (அதாவது, மடைப்பள்ளியில் இருப்பவனைச்) கண்டோம். அவன் வெகு நல்லவன்போலத் தோன்றினான். நல்ல சாப்பாடுபோட்டான். ஆனால் கடைசியாய், இடிபோலக் குத்தினான். அதனால் எங்கள் முதுகு கூனாய்விட்டது. இந்தத்தொல்லை தீர்வது எப்படி என்று, நாங்கள் க்லேசப்பட்டுக்கொண்டே, அந்தப் பட்டணத்துக்கு வெளியே வருகையில், அங்கே இரண்டுபேர்கள் மந்தை மந்தையாக, ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் எங்களைக்கூப்பிட்டு, எங்களுடைய வரலாறு என்ன என்று விசாரித்தார்கள். அவர்கள் நல்லவர்கள் என்றே நினைத்தேன். திடீரென்று, அவர்களில் ஒருவன், மற்றவன் வைத்திருந்த துறட்டை வாங்கி, எங்கள் கழுத்தைத் திருப்பிவிட்டான். பஞ்சபாண்டவர்களை நாங்கள் தேடினதும் போதும்; அனுபவித்த அவஸ்தையும் போதும். இனிவேண்டாம், எங்களுக்கு இந்தத் தொழில்.”

அறுசீர் ஆசிரியவிருத்தம்.

*விடம் ஆர்நாகக் கொடியாய்! வேந்தர்
வேந்தே! உன்தன்
அடியார் இருவேம்பட்ட அவஸ்தை, மற்(று)
ஆர் பட்டார்?
இடி எ(று) அன்ன திண்டோள் இறைவன்
விராடன் நகரில்,
இடையன் கெடுத்தான் பாதி; மடையன்
கெடுத்தான் பாதி;

எஸ். நரஸிம்மாசாரி.

*இந்த விருத்தம் இந்தக்கதை எழுதியவர் தாமே இயற்றியது.



# SKIN DISEASES OF CATTLE.

## கால்நடைகளுக்கு வரும் சொறி.

கால்நடைகளுக்கும் ஆடுகளுக்கும் பற்பல காரணங்களால் சொறியும் தோல் ஸம்பந்தமான இதர வ்யாதிகளும் வருவதுண்டு. கடிக்கும் ஈக்களாலும் இதர பூச்சிகளாலும் கால்நடைகளுக்கு தோலில் காயங்களும் இதர தொந்தரவுகளும் உண்டாவது முண்டு.

ரத்தத்தைக் குடிக்கும் ஈக்கள் பலவகைப்படும். அவைகளில் சில பலமான வீக்கத்தையும், சிரங்கையும் உண்டுபண்ணுவதுண்டு. வேறு சில தொற்று வ்யாதிகளைப் பரவச் செய்யக்கூடியவை. சில ஈக்கள் கால்நடைகளின் தோலிலும் தோலிலுள்ள காயங்களிலும் முட்டையிடுகின்றன. அந்த முட்டைகள் குஞ்சு பொரிக்க, அவைகளிலிருந்து வரும் சிறு புழுக்கள் தோலின் சதைப் பாகங்களுக்குக் கெடுதி செய்கின்றன. தேனீக்கள், வண்டுகள், குளவிகள் ஆகிய இவைகளும் ஆடுமாடுகளுக்குத் தொந்தரவு கொடுக்கின்றன.

பேன்கள் ஆடுகளில் விசேஷமாகக் காணப்படும். அவைகள் எருமை மாடுகளிலும் காணப்படுவதுண்டு. உண்ணிகள் ஆடுமாடுகளில் உண்டாவது ஸகஜம். இவைகளால் ஒரு வகை வ்யாதி உண்டாகிறது.

கண்ணுக்குத்தெரியாத ஒருவகைப் பூச்சிகள் தோலில் புகுந்துகொண்டு சொரியை உண்டாக்கின்றன. ஒரு வகைப் பூஞ்சணக்ருமியால் ஆடுமாடுகளில் படைநோய் உண்டாகிறது. இவைகளைத் தவிரவேறு சில தோல் ஸம்பந்தமான தொந்தரைகளும் உண்டு.

### வ்யாதியின் குறிகள்.

ஈக்களை ஸுலபமாய்க் கண்டுபிடித்து விடலாம். ஆனால் அவைகளால் மாடுகளுக்கு ஏற்படும் பாதகங்கள் ஸுலபமாகத் தெரிவதில்லை. ஆடுகளைத் தொந்தரை செய்யும் ஒருவித ஈக்கு சிறகு கிடையாது. அது ஆட்டு ரோமத்தில் தங்கியிருந்து ரத்தத்தை உறிஞ்சிக் குடித்து ஜீவிக்கும். இந்த ஈயால் ஆட்டுக்கு ரொம்ப சொறி சிரங்குகள் உண்டாகின்றன.

வேறு சில ஈக்கள் ஆடு மாடுகளின் காது மூக்கு முதலிய இயற்கையான த்வாரங்களிலும் காயங்களிலும் முட்டையிடுகின்றன. முட்டைகள் பொரித்துப் புழுவாகின்றன. இந்தப் புழுக்களால் ம்ருகங்களுக்கு ரொம்ப எரிச்சலும் தேக இளைப்பும் உண்டாகின்றன. ஆடுகள் இந்த வகை ஈக்களால் அடிக்கடி கஷ்டமடைகின்றன. சில ஸமயங்களில் இந்தக் காரணத்தாலேயே ஆடுகள் இறந்து போவதுமுண்டு.

ஒரு வகை ஈ செம்மறியாட்டின் மூக்கில் முட்டையிடும். முட்டை பொரித்துப் புழு வெளிவந்ததும், அது மூக்கோட்டையின் உள்ளே ஊர்ந்து போகும். இதனால் ஆடு தும்மும். மூக்கிலிருந்து ஜலமும் சளியும் ஒழுகும். சில ஸமயம் புழுவானது உள்ளே போய் மூச்சு விடுவதற்குத் தடை செய்வதோடு, ஆட்டை இளைத்துப் போகும்படியும் செய்யும். சில ஈக்கள் மாடுகளின் தோலில் ஒருவகைத் தடிப்புகளை உண்டாக்குகின்றன. இந்தத் தடிப்புகளின் உள்ளே ஈக்களின் புழுக்கள் இருக்கும். இவைகள் பெரியவையானதும் தடிப்பைவிட்டு வெளியே வந்து பூமியில் விழுந்துவிடும். இவ்வித தடிப்புகள் உள்ள மாடுகளின் தோல்களில் சிறு த்வாரங்கள் இருக்கும். ஆதலால் இந்தத் தோல்களுக்கு அதிக விலை கிடைப்பதில்லை. பேன்களால் மாடுகளின் தோலில் எரிச்சலுண்டாகும். இதனால் மாடு எரிச்சல் உண்டான இடங்களை நக்கியும்

கல் முதலியவைகளில் தேய்த்தும் வரும். சில ஸமயங்களில் தோலின் அந்த பாகங்களில் மயிர் உதிர்ந்துபோகும்.

உண்ணிகள் விசேஷமாக தொடைகளுக்கு இடையில் காணப்படும். இவைகளை ஸுலபமாகக் கண்டுபிடித்து விடலாம். பெண் இனத்து உண்ணிகள் மாடுகளின் ரத்தத்தை யதேஷ்டமாகக் குடித்துவிட்டு பூமியில் விழுந்து முட்டையிடும். ஆண் உண்ணிகள் ரத்தத்தை உரிஞ்சுவதில்லை. சொறிகளை உண்டாக்கும் க்ருமிகளைக் கண்டுபிடிப்பது கஷ்டம். அவைகள் ஆடுமாடுகளின் தேகத்திலேயே தங்கி ஜீவிக்கின்றன. அவைகள் தோலில் அதிக எரிச்சலை உண்டாக்கும். அவைகள் சிறு பருக்களையும், கொப்புளங்களையும் உண்டாக்குவதோடு, மயிர் உதிரும் படியும் செய்யும். தோலில் அவை பரவினால் சிரங்குகள் உண்டாவதோடு, தோலும் கெட்டியாகப் போய்விடும். ஒரு மாட்டின் தேகத்தில் பெரும்பாகத்தில் இப்படிச் சொறி கண்டிருந்தால், மாடு சீக்ரம் இளைத்துப்போகும்.

படைகள் தோன்றும் பாகங்கள் ஸாதாரணமாக தலை, கழுத்து, அங்கங்களின் கோடிகள் ஆகிய இவைகளாகும். படைகள் காசளவாக வட்டமாக இருக்கும். அவைகள் உள்ள இடங்களில் மயிர் இருக்காது.

### சிகித்ஸை.

ஈக்களின் உபத்ரவத்தை முற்றிலும் போக்கடிப்பது கஷ்டம். ஈக்களை ஓட்ட மாடுகளுக்கு இயற்கையாகவே சில ஸாதனங்கள் அமைந்திருக்கின்றன. உதாரணம் வால். அந்த ஸாதனங்களை இல்லாமல் செய்வது பெருந் தோஷமாகும். மாடுகளின் தோலில் கெட்ட வாஸனையுள்ள எண்ணெய்களையும் தாரையும் தடவி வைத்தால் ஈக்களின் உபத்ரவம் குறையும். மற்றப்படி வேறு வழி ஒன்றும் இல்லை.

மாட்டுக்கொட்டில்களுக்கு சிறு கண்களுள்ள இரும்பு வலைகளால் செய்த கதவுகளும் ஜன்னல்களும் போட்டால், ஈக்கள் அண்ட மாட்டா. தோலில் உண்டாகும் காயங்களிலுள்ள புழுக்களை ஜாக்ரதையாக எடுத்தெறிந்து, காயங்களுக்குத் தக்க சிகித்ஸை செய்ய வேண்டும். காயங்களில் ஆழத்தில் போய்த் தங்கியிருக்கும் புழுக்களை எடுக்க சுத்தமான டர்ப்பண்டைனை ஊற்றவும். புழுக்கள் வெளியே வந்துவிடும். ம்ருகங்களின்மேல் பேன் இருந்தால், அவைகளின் மயிரைக் கத்தரித்து விடவேண்டும். கத்தரித்த மயிரை நெருப்பிட்டுக் கொளுத்திவிட வேண்டும். ஒரு பங்கு புகையிலையை 10-பங்கு ஜலத்தில் போட்டு ½-மணி நேரம் காய்ச்சி, ஜலத்தை வடிகட்டி தேகம் முழுவதும் தடவவும்.

உண்ணிகளை ஒழிப்பது ச்ரமமான வேலை. சிற்சில மருந்துகளைக்கொண்டு ம்ருகங்களின் தேகத்தை நனைப்பதால் அவைகள் இறந்து போகுமென்று சொல்லப்படுகிறது. இந்த வகை மருந்துகள் சில கம்பெனிகளால் தயார் செய்து விற்கப்படுகின்றன. ஒருபங்கு பினைலுக்கு 100 பங்கு ஜலம் கலந்து தேகம் முழுவதும் தடவினாலும் உண்ணிகள் இறந்துபோகும்.

சொறியைப் போக்குவது ச்ரமமானது. மற்றெல்லா மருந்தையும்விட கந்தகப் பூச்சு மேலானது. 4 ஔன்ஸ் பொடிசெய்த கந்தகத்தை பட்டணம் படியால் காலேவீசம்படி கடுகெண்ணெயில் கலந்து ஒரு ப்ரஷ்ஷினால் தேகம் முழுவதும் தடவவும். படை நோய்க்கும் இவ்விதமே செய்யவும்.

பேன், சொறி, படை ஆகிய இவற்றால் பீடிக்கப்படும் ம்ருகங்களைத் தனியாகக் கட்டி வைப்பதோடு, அவைகளின்மேல் பட்ட துணிகளையும் இதர ஸாமான்களையும் க்ருமிஹர மருந்தைப்போட்டு சுத்தம் செய்யவேண்டும்.



அதிக விலையில்லாதவைகளை எரித்துவிட வேண்டும்.

மாட்டுக்கொட்டில்களை க்ருமிஹரமருந்து போட்டு சுத்தம் செய்யவேண்டும். தோல் ஸம்பந்தமான வ்யாதிகளால் பாதிக்கப்பட்ட ம்ருகங்களுக்கு தாராளமாகத் தீனி போட வேண்டும். கன்றுக்குட்டிகளுக்கு படை வந்தால் இவ்விதம் நல்ல தீனி போடுவதால், அநேகமாக வ்யாதி குணமாகிவிடுவதுண்டு.

## TRAVELLING LIBRARIES.

By A. S. NAGARATNAM.

## ஸஞ்சரிக்கும் புஸ்தக சாலைகள்.

நமது நாட்டில் பொதுப் புஸ்தகசாலைகள் பெரிய பட்டணங்களில் மாத்ரந்தான் இருக்கின்றன. இதர இடங்களில் உள்ள புஸ்தக சாலைகள் ஸ்கூல்கள், காலேஜுகள், ஸங்கங்கள் முதலியவற்றிற்கு ஸொந்தமாக அவைகளைச் சேர்ந்தவர்களுக்கு மாத்ரம் விசேஷமாகப் பயன்பட்டு வருகின்றன. க்ராமாந்தரங்களிலோ புஸ்தகசாலை யென்பதே கிடையாது. ஜனங்கள் ஏழைகளாதலால் அவர்கள் விலை கொடுத்துப் புஸ்தகங்கள் வாங்கிவைத்துப் புஸ்தகசாலைகள் ஏற்படுத்துவது முடியாத கார்யம். ஆனால் ஜனங்களுக்குப் படிப்பில் பழக்கமிருக்க வேண்டியது அவச்யமாகையால், அதற்கு ஏற்றாற்போல ஸஞ்சரிக்கும் புஸ்தகசாலை யென்ற ஏற்பாடு கிளம்பியிருக்கிறது. பெரிய பட்டணங்களில் ஸ்திரமாகவும் பெரியனவாகவும் ஏற்பட்டுள்ள புஸ்தகசாலைகளிலிருந்து சில புஸ்தகங்களை பெட்டிகளில் அடக்கம்செய்து க்ராமாந்தரங்களுக்கு அனுப்புவார்கள். ஒவ்வொரு க்ராமத்திலும் ஒரு குறிப்பிட்டகாலம் புஸ்தகங்களை வைத்திருந்து ஜனங்களுக்கு வாசிக்கக் கொடுத்துப், பிறகு மற்ற க்ராமத்துக்கு அனுப்புவார்கள். இந்தமாதிரி ஊரூராய்ப் போகும் சிறு புஸ்தகப் பெட்டிகளுக்குத்தான் ஸஞ்சரிக்கும் புஸ்தகசாலையென்று பெயர். இந்த ஏற்பாடு முதல் முதலில் பரோடாவில் ஆரம்பமாயிற்று.

இந்த ஸமஸ்தானத்தைப் பரிபாலித்துவரும் கெய்க்வார், ஐரோப்பா, அமெரிக்கா முதலிய இடங்களுக்குப் போய் அங்கே புத்தகசாலைகள், ஜனங்களுக்குள் கல்வியை பரவச்செய்யும் மார்க்கம் ஆகிய இவைகளை விவரமாய் அறிந்துகொண்டுவந்து தமது ஸமஸ்தானத்திலும் அம்மாதிரி நடத்த கல்வி அத்யாவச்யமென்பதை உணர்ந்து ஸமஸ்தான முழுவதும் சிறுவர்களுக்கு கட்டாயப்படுத்தி இலவசமாகக் கல்வி கற்பிக்க ஆரம்பக் கல்விச் சாலைகளை ஏற்படுத்தினார். இதன் பலனாய் ஸமஸ்தானத்தின் எல்லா ப்ரஜைகளும், கல்வி கற்கத் தொடங்கி மேன்மேலும் வ்ருத்தியடைந்து வருகிறார்கள். இதன் மத்தியில் ஸமஸ்தானத்தின் ப்ரதான நகரத்தில் பெரிய புஸ்தகசாலை யொன்றை ஏற்படுத்தி அதனாலும் கல்வியை வ்ருத்தி செய்து வருகிறார். இப்புத்தகசாலை நாளுக்கு நாள் வ்ருத்தியாகிக் கொண்டே வருகிறது. ப்ரதான நகரத்தில் புத்தகசாலைகள் ஏற்பட்டால் க்ராமாந்திரங்களிலுள்ளவர்களுக்கு ப்ரயோஜனமுண்டாகாதென்பதை உணர்ந்த அரசர் ஸஞ்சரிக்கும் புஸ்தகசாலைகளை ஏற்படுத்தி நடத்தி வருகிறார்.

இந்த ஏற்பாடு முதன்முதல் 1911-ம் வருஷத்தில், ஆரம்பமாயிற்று. முதலில் சிறியதாக விருந்தபோதிலும் ஏழு வர்ஷங்களுக்குள்

ளாக ரொம்ப வ்ருத்தி யடைந்திருக்கிறது. பெரிய புஸ்தகசாலையிலிருந்து, ஷை சாலையில்லாத க்ராமங்களுக்கும், வரையறைக் குட்படுத்தப்பட்டிருக்கும் புஸ்தகசாலைகளுக்கும், அதிக விலையுள்ள புஸ்தகங்களை வாங்கச் சக்தியில்லாத விடங்களுக்கும், பாடங்களைத் தவிர உப பாடங்களாய்ப் படிக்கப் பள்ளிக்கூடங்களுக்கும், வ்யாபார, கைத்தொழில் சாலைகளில் வேலைசெய்கிற கூலிகள் படிக்கவும், வைத்ய சாலைகளுக்கும், இளமையில் குற்றம் செய்து தண்டனைக்குட்பட்டிருக்கும் சிறுவர்களைத் திருத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் "ரிபர்மேட்டரி" ஸ்கூல்களுக்கும், புஸ்தகங்கள் பெட்டிகளில் அடக்கம் செய்யப்பட்டு கொண்டுபோகப்படுகின்றன. ஒவ்வொரு பெட்டிக்கும் 40 புஸ்தகங்கள் வீதம் 10 அல்லது 12 பெட்டிகள் ஒருதடவையில் கொண்டுபோகப்படும். ஒவ்வொரு ஊரிலும் இந்தப் புஸ்தகசாலைகள் மூன்றுமாஸம் தங்கியிருக்கும். இந்தப் புஸ்தகங்கள் வந்ததும், பழைய ஸஞ்சரிக்கும் புஸ்தகப் பெட்டிகளைத் திருப்பிவிடவேண்டும். திரும்ப வாங்கப்பட்ட புஸ்தகங்களை, மற்றொரு ஊருக்குக் கொண்டு போகுமுன் தலைமை நகரத்திலுள்ள பெரிய புஸ்தகசாலைக்கு, ஆஜர்பார்ப்பதற்கும், கிழிந்த புஸ்தகங்களை செம்மைப் படுத்துவதற்கும் கொண்டுபோவார்கள். இம்மாதிரி, புஸ்தகங்களைப் பெட்டிகளில் கொண்டுபோய் ஊர் ஊராய்க் கொடுத்து வரவும், திரும்பப் பெற்றுக்கொள்ளவும் ப்ரத்யேகமாய் உத்யோகஸ்தர்களேற்பட்டிருந்தபோதிலும், உபாத்யாயர்களும், மாணவர்களும் இது விஷயமாக அதிக ச்ரத்தையுடன் உழைத்து வருகிறார்கள்.

இம்மாதிரி சாலைகளேற்படுத்தி செவ்வனே நடத்த சராசரியில் ஒருவர்ஷத்திற்கு ரூ. 3000 ஆகிறது. ஏற்பட்ட வர்ஷமுதல் இது வரையில் இது ஸம்பந்தமாய் செலவு செய்தது ரூ. 16,568-4-1 ஆகும். இதில் புஸ்தகங்களுக்காக ரூ. 11,413-7-4-ம், பெட்டிகள் செய்ய ரூ. 2,463-12-9-ம் போகவரச் செலவுக்காக ரூ. 2,691-ம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஏற்பாடு ஆரம்பத்திலிருந்து எவ்விதம் வ்ருத்தி யடைந்திருக்கிறதென்பதை அடியிற் காணும் குறிப்பினால் நிரூபிக்கலாம்.

| வருஷம். | பெட்டிகள். | இடங்கள். | மொத்தபுத்தகங்கள். | படித்தவர்களின் மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 & 2 | 90 | 49 | 7000 | 2754 |
| 3 & 4 | 354 | 302 | 13,950 | 7556 |
| 5 & 6 | 414 | 365 | 15,303 | ,, |

இம்மாதிரியான புஸ்தக சாலைகளை ஏற்படுத்தி நடத்துவதின் நோக்கத்தை கீழே குறிப்பிடுகிறோம்.

1. இந்தப் புஸ்தகசாலைகள், தேசத்தின் தூரக்ராமங்களுக்கு, சீக்ரமாகவும், எளிதாகவும், அதிக செலவில்லாமலும் கல்வியைப் புகட்ட ஸாதனமாயிருக்கின்றன.

2. க்ராம ஜனங்களுக்கு நாளடைவில் ஸொந்தத்தில் புஸ்தகசாலைகள் ஏற்படுத்திக் கொள்ள அவா ஏற்படும்.

எ. எஸ். நாகரத்தினம்.


## தமிழ்ப் புஸ்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| யுக்தி போதினி ... தினந்தோறும் ஏற்படும் தொந்தரவுகளைப் போக்க ஏற்ற யுக்திகளும் முறைகளும் அடங்கியது. | 0 | 10 | 0 |
| ஹாஸ்ய மஞ்சரி ... வேடிக்கைக் கதைகளும் சம்பாஷணைகளும் அடங்கியது. | 0 | 6 | 0 |
| மனோஹர ராமசரிதம் ... மூன்று பாகங்களும் கொண்டது. | 3 | 12 | 0 |
| ரத்னப்பிரபை ... இது ஓர் அற்புதநாவல். | 0 | 14 | 0 |

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, தொண்டி செட்டித்தெரு, மதராஸ்.




## PAPER.
## கடுதாசி.

ஆதிகாலத்திலிருந்த ஜனங்கள் தங்களுடைய பேச்சுகளை எழுத்து மூலமாகத் தெரிவிக்க ஆரம்பித்தபோது முதல் முதலில் எதில் எழுதினார்களென்பது தெரியவில்லை. இப்போது தெரிந்தவரையில் காகிதம் என்று நாம் உபயோகிக்கும் பொருள் செய்யப்படுவதற்குமுன் அநேக தேசத்தார்கள் மரங்களின் பட்டைகளையும் இலைகளையும் எழுதுவதற்கு உபயோகித்து வந்ததாகத் தெரிகிறது. சில தேசத்தார் களிமண்ணில் வேண்டிய எழுத்துக்களைப் பள்ளமாக எழுதி, பிறகு அதைக் காயவைத்தும் சுட்டும் பத்ரப்படுத்தி வந்தார்கள். ஈஜிப்டில் பாபிரஸ் என்று ஒரு வகை நாணல் விளைந்துவந்தது. அதிலிருந்து ஒருவகைத் தகடு போன்ற பொருள் தயார் செய்து அதில் அந்த நாட்டார் எழுதி வந்ததாகத் தெரிகிறது. வேறு சில தேசங்களில் தோல்களைத் தக்க விதமாகப் பதனிட்டுத் தயாரித்து அதில் எழுதி வந்தார்கள்.

நமது தேசத்தில் பனையோலைகளையும், சீதாள ஏடுகளையும் பூர்வகாலம் தொடங்கி நாளதுவரை ஜனங்கள் உபயோகித்து வருகிறார்கள். பனையோலையில் எழுதிய கையெழுத்து ப்ரதிகள் வெகுநாள் கெடாமலிருக்கின்றன. 9-வது நூற்றாண்டில் எழுதப்பட்ட கையெழுத்து ப்ரதிகளும் தற்காலத்தில் நேபாள தேசத்தில் இருக்கின்றன.

நேபாள தேசத்திலும் மத்ய ஆசியாவிலும் ஆதிகாலம் முதல்கொண்டு பூஜபத்ரம் என்னும் ஒருவகை மரத்தின் பட்டையை ஓலைபோல் தயார்செய்து அதில் எழுதி வந்திருக்கிறார்கள். அந்தப் பட்டைகள் இப்போதும் உபயோகப்பட்டு வருகின்றன. அந்தப் பட்டைகள் இந்தியாவின் ஸமவெளிகளில் கெட்டுப் போகக்கூடும். ஆனால் குளிர்ந்த தேசமாகிய ஹிமாலய ப்ரதேசங்களிலும் மத்ய ஆசியாவிலும் அவைகள் சீக்ரம் கெடுவதில்லை. சீன துருக்கி ஸ்தானத்தில் 3, அல்லது 4-வது நூற்றாண்டில் பூஜபத்ர ஏடுகளில் எழுதிய கையெழுத்து ப்ரதிகள்கூட இருக்கின்றனவாம். இந்தியாவிலுள்ளவைகளோ முன்னூறு வர்ஷங்களுக்கு மேற்பட்டவைகளல்ல.

அஸ்ஸாமிலுள்ள ஜனங்கள் ஸச்சி என்று பெயர்கொண்ட ஒரு வகை மரத்தின் பட்டையை எழுதுவதற்கு ஏற்றவிதமாகத் தயார் செய்து அதில் எழுதி வருகிறார்கள். சீனாவில் ஆதிகாலத்தில் மூங்கிலிலிருந்து ஓலைபோன்ற மெல்லிய பட்டைகள் தயாரித்து அவைகளில் அந்த தேசத்தின் ஆதிகாலச் சரித்ரத்தை எழுதிவந்தார்கள் என்றும், அவைகள் பிற்காலத்தில் யுத்தத்தில் நாசம் செய்யப்பட்டனவென்றும் சொல்லப்படுகிறது.

கி. பி. 105-ம் வர்ஷத்தில் சீனாவில்தான் முதல்முதல் கடுதாசி செய்யப்பட்டது. அங்கிருந்து காகிதம் செய்யும் தொழில் அந்த தேசத்துக்குக் கீழ்ப்பட்ட தேசங்களில் பரவலாயிற்று. கிழக்குத் துருக்கி ஸ்தானத்தில் உள்ள கோட்டான் என்னும் ஊரில் 8-வது நூற்றாண்டில் எழுதப்பட்ட கடிதங்கள் கிடைத்திருப்பதால், அந்தக்காலத்தில் அந்த தேசத்திலும் திபேத்திலும் கடுதாசி செய்யும்முறை ஜனங்களுக்குத் தெரிந்திருந்ததென்று நம்ப இடமிருக்கிறது. அங்கிருந்து அந்தத் தொழில் காச்மீர தேசத்துக்குப் பரவிற்று. ஆனால் காச்மீரத்திலாகட்டும், இந்தியாவின் மற்ற ப்ரதேசங்களிலாகட்டும் எப்போது காகிதம் செய்யும்தொழில் பரவிற்று என்பது தெளிவாகத் தெரியவில்லை. 15-வது நூற்றாண்டில் இந்தி

யாவில் ப்ரயாணம் செய்த நிகலோ காண்டி என்பவர் காம்பே என்னுமிடத்தில் மாத்ரம் ஜனங்கள் கடுதாசியை எழுத உபயோகிக்கிறார்கள் என்றும், மற்ற விடங்களில் ஜனங்கள் ஓலைகளில் எழுதுகிறார்களென்றும் எழுதியிருக்கிறார். அவருக்குப்பின் 1442-ம் வர்ஷத்தில் இந்தியாவுக்குவந்த அப்தர் ரஸ்ஸக் என்பவர் முன்பு ப்ரபலமாயிருந்த விஜயநகர ஸமஸ்தானத்துக்கு வந்திருந்தபோது, கடுதாசி அந்த ராஜ்யத்தில் உபயோகத்திலிருந்ததாக எழுதவில்லை. ஓலைகளில் ஜனங்கள் எழுதி வந்ததாக எழுதியிருக்கிறார்.

ஸாதாரணமாய் அக்பர் காலத்தில்தான் கடுதாசி செய்யும் தொழில் காச்மீரத்திலிருந்து ஹிந்துஸ்தானத்துக்குப் பரவிற்று என்று சொல்வது வழக்கம். அக்காலத்தில் காச்மீரத்தில் நேர்த்தியான கடுதாசி செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. காச்மீர வாஸிகள் அந்தத் தொழிலை ஸாமார்க்கண்ட் என்னும் ஊரிலிருந்து தெரிந்து கொண்டார்களாம். (ஸாமார்க்கண்ட் என்பது காச்மீரத்துக்கு வடமேற்கிலுள்ள ஒரு பட்டணம். துருக்கிஸ்தானத்தைச் சேர்ந்தது.)

8-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஸாமார்க்கண்டை அரேபியர்கள் கைவசப்படுத்திக் கொண்டார்கள். 751-ம் வர்ஷத்தில் சீனர்கள் அந்தப் பட்டணத்தைப் பிடிக்க முயன்றார்கள். ஆனால் அரேபியர்கள் சீனர்களைத் துரத்திவிட்டதோடு, காகிதத் தொழில் தெரிந்த சில சீனர்களை யுத்தத்தில் கைது செய்து, அவர்கள் மூலமாகக் காகிதம் செய்யும் தொழிலைக் கற்றுக்கொண்டார்கள். அரேபியர்கள் உலகத்தில் சென்ற விடமெல்லாம் காகிதத் தொழிலையும் பரவச் செய்தார்கள். அக்காலத்தில் அரேபியர்களுக்குள் கல்விப்பயிற்சி அதிகமாக இருந்ததால், கடுதாசியானது அவர்களுடைய நூல்களை எழுதிவைப்பதற்கு ரொம்பவும் உபயோகப்பட்டு வந்தது. அரபிக் பாஷையில் எழுதப்பட்ட அக்காலத்திய கையெழுத்து ப்ரதிகளில் சில இப்போது பற்பல புஸ்தகசாலைகளில் பத்ரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. 865-ம் வர்ஷத்தில் எழுதப்பட்ட கையெழுத்து ப்ரதி யொன்று ஜெர்மனியிலுள்ள லீடன் பட்டணத்து யூனிவர்ஸிட்டி லைப்ரரியில் இருக்கிறது. ப்ரிட்டிஷ் ம்யூஸியத்தில் உள்ள ஒரு கையெழுத்து ப்ரதி 960-ம் வர்ஷத்தில் எழுதப்பட்டது. அது வைத்ய ஸம்பந்தமான அரபிக் நூலாகும்.

இன்னும் ஐரோப்பிய பட்டணங்களில் பலவற்றில் அநேக பூர்வீக அரபிக் நூல்களின் காகித ப்ரதிகள் இருக்கின்றன.

750-800-ம் வர்ஷங்களுக்கிடையில் அரேபியர்கள் ஸ்பெய்னில் காகிதம் செய்யும் தொழிலைப் பரவச் செய்தார்கள். அதன்மேல் நாளாவர்த்தியில் ஐரோப்பாவெங்கும் அந்தத் தொழில் பரவலாயிற்று.

1189-ம் வர்ஷத்தில் ப்ரான்ஸில் ஹெரால்ட் ஜில்லாவில் காகிதம் செய்யும் தொழில் ஸ்தாபித்தார்கள்.

1276-ம் வர்ஷத்தில் இட்டாலியில் பாப்ரியானோ என்னுமிடத்தில் காகிதம் செய்ய ஆரம்பித்தார்கள்.

1465-ம் வர்ஷத்தில் ஜெர்மனியிலுள்ள நூரம்பர்க்கில் காகிதச் சாலை ஸ்தாபிக்கப்பட்டது.

சில காகிதத்தை வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தால் வெண்மையான எழுத்தில் சில எழுத்துக்கள் எழுதியிருப்பதாகத் தெரியும். ஸாதாரணமாகப் பார்த்தால் நன்றாய்த் தெரியாது. காகிதக் கூழை சிறு த்வாரங்களுள்ள சல்லடைபோன்ற தட்டுகளில் எடுத்து ஜலத்தை வடியவிட்டு சல்லடைமேல் நிற்கும் மெல்லிய படைபோன்ற கூழை தக்கவிதம் தயாரித்து கடுதாசியாகச் செய்வார்கள். கடுதாசி செய்பவர்கள் தங்களுடைய பெயரும் வ்யாபாரக் குறியும் இருக்கும்படி சல்லடையிலேயே உள்ள உலோகக் கம்பிகளால் அவைகளை அமைத்து விடுவது வழக்கம். இதனால் கடுதாசியில் யாதொரு கெடுதலும் ஏற்படாதபடிக்கும், வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தால்மட்டும் தெரியும்படிக்கும், பெயரும் வ்யாபாரக்குறியும் அமைந்திருக்கும். அநேக கடுதாசிகளை வெளிச்சத்தில் பிடித்துப் பார்த்தால் அவைகளை நன்றாய்ப் பார்க்கலாம். இப்படி கடுதாசியில் குறிபோடுவதற்கு வாட்டர் மார்க்கு போடுவது என்று பெயர். இந்த வழக்கம் எப்போது ஆரம்பித்ததென்பது தெரியவில்லை. இது வரையில் தெரிந்தமட்டில் 1282-ம் வர்ஷத்திலேயே வாட்டர் மார்க்கு போடும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் முதலில் காகிதம் செய்பவர்கள் தங்கள் பெயர்களைச் சேர்க்கவில்லை. பின்னாடிதான் சேர்த்தார்கள்.

இதுவரை தெரிந்தமட்டில் 1307-ம் வர்ஷத்தில் இட்டலியைச் சேர்ந்த பாப்ரியானோயில் செய்யப்பட்ட கடுதாசியில்தான் காகிதம் செய்தவருடைய பெயர் முதல் முதல் போடப்பட்டது.

ப்ளாட்டிங் பேபர் என்னும் மையொற்றும் காகிதம் எப்போது உண்டாயிற்று என்றும் தெரியவில்லை. ஆனால் 1465-ம் வர்ஷத்திலேயே அது உபயோகத்தில் இருந்ததாகத் தெரிகிறது.

இனி கடுதாசி செய்வது ஸம்பந்தமான சில முக்யமான விஷயங்களையும் அவைகளின் தேதிகளையும் குறிப்பிடுகிறோம்.

1495-ம் வர்ஷம் இங்க்லண்டில் ஜான் டேட் என்பவர் ஒரு கடுதாசி தொழில்சாலை ஸ்தாபித்தார். இதுதான் நமக்குத் தெரிந்தமட்டில் முதல் முதலில் ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

1545-ம் வர்ஷம் வாட்டர் மார்க்கில் கடுதாசி செய்ததின் தேதி குறிப்பிடப்பட்டது. (தெரிந்த வரையில் இதுதான் முதலானது.)

1570-ம் வர்ஷம் ப்ரௌன் பேபர் என்னும் சாணிக் கடுதாசியைப்பற்றி ப்ரஸ்தாபிக்கப்படுகிறது. இதைப்பற்றி இதற்கு முன்னால் எங்கும் ப்ரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

1690-ம்வர்ஷம் அமெரிக்காவில் முதல் முதலில் காகிதத் தொழில்சாலை ஸ்தாபிக்கப்பட்டது.

1756-ம் வர்ஷம் ஜெர்மனியில் வைக்கோலிலிருந்து கடுதாசி செய்யப்பட்டது.

1797-ம் வர்ஷம் ப்ரான்ஸில் கடுதாசி செய்யும் யந்த்ரம் கண்டுபிடிக்கப்பட்டது.

1840-ம் வர்ஷம் ஜெர்மனியில் காட்ப்ரீட் கெல்லர் என்பவர் மரக்கூழிலிருந்து கடுதாசி செய்யும் விதத்தைக் கண்டுபிடித்தார்.

1841-ம் வர்ஷம் இண்டியா பேபர் என்னும் மெல்லிய கடுதாசி இந்தியாவிலிருந்து இங்க்லண்டுக்கு வந்தது.

1842-ம் வர்ஷம் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிட்டி ப்ரெஸில் இந்த்யா பேபரில் பைபிள் (கிறிஸ்தவ வேத புஸ்தகம்) அச்சடிக்கப்பட்டது.

1861-ம் வர்ஷம் எஸ்பார்ட்டோ என்னும் புல்லிலிருந்து காகிதம் செய்யப்பட்டது.

1897-ம் வர்ஷம் அமெரிக்காவில் முதல் முதலில் மரக்கூழிலிருந்து காகிதம் செய்யப்பட்டது.

1875-ம் வர்ஷம் ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிட்டி ப்ரெஸின் காகிதச் சாலையில் முதல் முதலில் இண்டியா பேபர் என்னும் மெல்லிய காகிதம் தயார் செய்யப்பட்டது.

## TIPPU SULTAN.

### திப்பு ஸுல்தான்.

முற்காலத்தில் இந்த தேசத்தில் அரசாட்சி செய்து வந்த மகம்மதிய அரசர்கள் ஹிந்துக்களையும் அவர்களுடைய மதத்தையும் கேவலமாக எண்ணி தூஷித்து வந்தார்கள். அவர்கள் மதத்வேஷம் கொண்டு ஹிந்துக்களை ஹிம்ஸிப்பதும், அவர்களுடைய கோவில்களை இடித்துத் தள்ளுவதும், விக்ரகங்களை உடைப்பதுமாக இருந்தார்கள். அது போதாதென்று ஹிந்துக்களைத் துலுக்கர்களாகும்படி கட்டாயப்படுத்தி, அப்படி ஆகாதவர்களை உபத்ரவப் படுத்தியும் வந்தார்கள். ஆகவே துலுக்கர்களுக்கும் ஹிந்துக்களுக்கும ஜன்ம விரோதம் உண்டாய்விட்டது.

ஹைதர் அலியின் குமாரனை திப்பு ஸுல்தான் 1782ஞு முதல் 1799ஞு வரையில் மைஸூர் ராஜ்யத்தை ஆண்டு வநதான். அவனும் மகம்மதிய மதத்தைச் சேர்ந்தவனுதலால், ஹிந்துக்களை குரூரமாக நடத்தியிருப்பான் என்று ஜனங்கள் இதுவரையில் எண்ணியிருந்தார்கள். இந்து தேச சரித்ர ஆசிரியர்களும் அவன் ஹிந்துக்கள் விஷயத்தில் கொடுமையுள்ளவன் என்றே எழுதி வைத்திருக்கிறார்கள். ஆனல் திப்பு ஸுல்தான் ச்ருங்கேரி மடத்துக்கு எழுதியுள்ள சில கடிதங்களைக் கொண்டு பார்த்தால், திப்புவின் உண்மையான குணாதிசயங்கள் வெளியாகின்றன. திப்புவைப்பற்றி ஜனங்களும் சரித்ர நூலாசிரியர்களும் கொண்டிருந்த அபிப்ராயம் தவறனதென்று இப்பொழுது நன்ருக ஏற்படுகிறது. ஸுல்தானுடைய உண்மையான குணங்களைத் தெரிந்துகொண்டால் நாம் அவனை நிந்தித்துப் பேசக் கொஞ்சமும் இடம் இராது.

திப்பு மகம்மதிய மதஸ்தனுக இருந்தும் ஹிந்துமதத்தில் நம்பிக்கை உள்ளவனுக இருந்தான். ஹிந்துக்களிடத்திலும் அவர்களுடைய தெய்வங்களிடத்திலும் அவனுக்கு விசேஷ பக்தி உண்டு. தேசத்தின் க்ஷேமத்தை நாடி அவன் ஹிந்துக்களின் தெய்வங்களுக்குப் பூஜைகளையும் ஜபங்களையும் ப்ராம்மணர்களைக்கொண்டு நடத்திவந்தான். அவன் ப்ராம்மணர்களிடம் அதிக விச்வாஸம்கொண்டு அவர்களுக்கு பண உதவி செய்துவந்தான்.

### ச்ருங்கேரி மடம்.

ச்ருங்கேரி மடத்திலுள்ள ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமியை ஸுல்தான் தன் குருவைப்போலவே மதித்து அவரோடு ஸ்நேகம் கொண்டிருந்தான். மடத்துக்கு சொந்தமான சொத்துக்களை யாராவது அபகரித்துக் கொண்டால் அவர்களைத் தண்டிக்க ஸுல்தான் அதிக முயற்சி எடுத்துக்கொள்வான். அவன் மடத்திற்கும் இதர ஹிந்து ஆலயங்களுக்கும் பல்லக்கு, சாமரம் முதலியவைகள் வாங்கிக் கொடுத்தான். ஜகத்குரு செய்யும் ஜபங்களினலும ப்ரார்த்தனைகளாலும் தேசம் க்ஷேமமாக இருக்குமென்று திப்பு எண்ணியிருந்தபடியால், அவன் அவைகளுக்கு அதிக உதவிசெய்து அவரை அடிக்கடி மர்யாதையுடன் தர்சித்து வருவான்.

திப்பு ஸுல்தான் காலத்தில் பூர்ணய்யா என்பவர் திவானுக இருந்தார். அவர் மத்வ மதஸ்தர். அவரும் ஸுல்தானைப் போலவே மத த்வேஷமில்லாதவர்; ஜகத்குரு விடம் அதிக பக்தி உடையவர். அவர் ச்ருங்கேரி மடத்தின் நன்மைக்காக முயற்சி எடுத்துக் கொண்டு அதிக பாடுபட்டு வந்தார்.

### 1803ஞுத்தில் கொடிய பஞ்சம்.

1803-ம் வர்ஷத்தில் தேசத்தில் ஒரு



கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அந்த பஞ்சம் நீங்குவதற்காக ப்ராம்மணர்களைக் கொண்டு கோவில்களில் ஜபம் செய்யவேண்டுமென்று திப்புவும் பூர்ணய்யாவும் ஜகத்குருவுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள். அந்தச் சடங்குகளைச் செய்து முடிப்பதற்காக அரண்மனையிலிருந்து ஸுமார் 400 வராகன் அனுப்பினர்கள். ஸுல்தானும் திவானும் அப்பொழுது ஜகத்குருவுக்கு எழுதிய கடிதத்தில் உள்ள சில விஷயங்கள் மிகவும் கவனிக்கத் தக்கவை. அதில் "ப்ராம்மணர்கள் அக்ரகாரங்களையும் மான்யங்களையும் அனுபவித்து வருகிறார்கள். ராஜ்யத்தில் பஞ்சம் முதலிய கஷ்டங்கள் நேரிடும்போது ப்ராம்மணர்கள் ஒன்றுகூடி க்ஷேமமுண்டாவதற்காக ஜபம், அபிஷேகம் முதலியவைகள் செய்வதற்காகவே ராஜாக்கள் அவர்களுக்கு மான்யங்கள் விட்டிருக்கிறார்கள். ப்ராம்மணர்களைத் திருடர்களும் துஷ்டர்களும் ஹிம்ஸிக்காதபடி ரக்ஷிப்பது ராஜாக்களுடைய கடமை. அவர்கள் அப்படிச் செய்யாவிட்டால் நிந்தனைக்கு உள்ளாவார்கள். ப்ராம்மணர்கள் ஜபம் முதலியவைகள் செய்து பஞ்சத்தைப் போக்காவிட்டால் அவர்களும் அபவாதத்திற்கு உள்ளாவார்கள். அப்படி யாரேனும் செய்யாமலிருந்தால் அவர்களுக்கு விட்டிருக்கும் மான்யங்களைப் பிடுங்கி, அவைகளில் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு மடத்து விக்ரஹங்களுக்கு ஆபரணங்கள் செய்யலாம்" என்று எழுதி இருக்கிறது.

### 100-க்கு 12 வட்டி.

வ்யாபாரிகள் அதிக வட்டி வாங்கி வந்ததால் கடன் வாங்கும் குடியானவர்கள் ஏழைகளானர்கள். அதைக் கண்ட பூர்ணய்யா ஏழைகளின் விஷயத்தில் பரிதாபமுற்று 100 வராகனுக்கு மாஸம் ஒன்றுக்கு ஒரு வராகனுக்கு மேல் வட்டி வாங்கக்கூடாதென்றும், அப்படி வாங்குகிறவர்களுடைய சொத்து பறிமுதல் செய்யப்படுமென்றும் உத்தரவு செய்துவிட்டார்.

திப்பு ஸுல்தானும் பூர்ணய்யாவும் இப்படிப்பட்ட குணாதிசய முள்ளவர்களென்று அவர்கள் வெகுநாளைக்கு முன் எழுதிவைத்துப்போன கடிதங்களால் ஏற்படுகிறது. ஆகவே திப்புவைப்பற்றி ஜனங்கள் முன்னே கொண்டிருந்த கெட்ட அபிப்ராயங்கள் சரியல்லவென்று தெரிகிறது.

---

## BOOKS OF THE MONTH.

### நூதன புஸ்தகங்கள்.

கோகலேயின் வரவு செலவு திட்ட ப்ரஸங்கம்.

காலஞ்சென்ற மிஸ்டர் கோபால க்ருஷ்ண கோகலே வைஸ்ராய் சட்ட ஸபையில் மெம்பராக இருந்தபோது, அவர் செய்த ப்ரஸங்கங்கள் மிகவும் அருமையானவை என்றும், ராஜீயவிஷயங்களை யறிவதற்கு அவை மிகவும் உபயோகமானவை யென்றும் பலர் அபிப்ராயப் படுகிறார்கள். அவை இங்க்லீஷில் இருப்பதால், ராஜீய விஷயங்களில் ஊக்கமுள்ள இங்க்லீஷ் தெரியாத ஜனங்கள் கோகலேயின் வாதங்களை யறியமுடிவதில்லை. இந்தக் குறையை நீக்கவேண்டி திருவாரூர் மிஸ்டர் கே. எஸ். க்ருஷ்ணமூர்த்தி அய்யர் மிஸ்டர் கோகலேயின் ப்ரஸங்கங்களை மொழி பெயர்த்துவருகிறார். தற்போது அவர் 1902-ம் வர்ஷத்து வரவு செலவு மதிப்புத் திட்டத்தைப் பற்றி மிஸ்டர் கோகலே செய்த ப்ரஸங்கத்தைத் தமிழில் மொழிபெயர்த்து ஒரு சிறு

புஸ்தகமாக வெளியிட்டிருக்கிறார். மொழி பெயர்ப்பு ஸுலபமான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை அணா 4. வேண்டுவோர் திருவாரூர், ஜவுளிக்காரத் தெருவிலுள்ள மிஸ்டர் கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**இருக்குவேத சங்கிதை.**

வேதங்கள் ஸம்ஸ்க்ருதத்திலிருப்பதால் ஸாமான்ய ஜனங்கள் வாசித்துப் பயனடைவது முடிவதில்லை. இங்க்லீஷில் அவை மொழி பெயர்க்கப் பட்டிருப்பது இங்க்லீஷ் படித்தவர்களுக்கு ஸாதகமாயிருக்கிறது. தமிழ் மட்டும் தெரிந்தவர்கள் வேதத்தை யறிய முடியாமலிருக்கும் குறையை நீக்கவேண்டி குன்னூர் ஆனந்தாச்ரமத்திலுள்ள சிவத்தியானந்த மகரிஷியென்பார் இப்போது ரிக்வேதத்தை தமிழில் செய்யுள் ரூபமாக மொழி பெயர்த்து வெளியிட்டு வருகிறார். செய்யுளில் தேர்ச்சியில்லாதவர் அதை வாசிப்பதில் ச்ரமம் அடையாதபடி வசன நடையில் செய்யுளுக்குப் பொருளும் எழுதியிருக்கிறார். தமிழில் வேதம் வாசிக்கவிரும்புகிறவர்களுக்கு இந்தப்புஸ்தகம் பயன்படும். இது மாஸம் ஒரு பாகமாக 36 மாஸங்களில் பூர்த்தியாகுமாம். வர்ஷசந்தா ரூ. 6. வேண்டுவோர் மானேஜர், வேதப்பூரோ, ஆனந்தாச்ரமம், குன்னூர் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**ஸாக்ரடீஸின் சரித்ரம்.***

இது க்ரீஸ் தேசத்தில் ஸுமார் 2400 வர்ஷங்களுக்கு முன்னிருந்த தத்வஞானியாகிய ஸாக்ரடீஸ் என்பவருடைய சரித்ரமாகும். இதில் அவருடைய பிறப்பு வளர்ப்பு வரலாறும், அவரது தத்வஞானக் கொள்கைகளும், அவருக்கும் அக்காலத்தில் இருந்த வித்வான்களுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபங்களும், அவரது குணாதிசயங்களும் அடங்கியுள்ளன. இது யாவரும் படிக்கும்படி ஸுலபமான நடையில் அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் மதனப்பள்ளி காலேஜைச் சேர்ந்த ஆர். ரெங்காசாரியாராகும். இதன் விலை அணா 12.

**கொசுக்களும் மலேரியாவும்.***

இது சென்னையில் ஸானிடரி இன்ஸ்பெக்டர் வேலைபார்க்கும் மிஸ்டர் எ. சொக்கலிங்கம் பிள்ளையும் மிஸ்டர் எ. எம். வையாபுரி முதலியாரும் எழுதியதாகும். இதில் கொசுக்களின் லக்ஷணமும், பிறப்பு வளர்ப்பும், வகைகளும், அவைகள் மாலேரியாக் காய்ச்சலைப் பரவச் செய்யும் விதமும், அந்தக் காய்ச்சலைப் போக்கவும் தடுக்கவும் எடுத்துக்கொள்ள வேண்டிய முறைகளும் விரிவாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இதில் விஷயங்களை விளக்க பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இது யாவரும் வாசிக்கவேண்டிய ஒரு உபயோகமான புஸ்தகமாகும். இதன் விலை அணா 6.

**குகப் பெருமாள்.***

இது வேலூர் வூர்ஹிஸ் காலேஜ் தமிழ்பண்டிதர் பு. க. ஸ்ரீனிவாஸாச் சாரியார் இயற்றியது. கம்பராமாயணத்தில் அயோத்தியா காண்டத்தில் உள்ள கங்கைப் படலம், குகப் படலம் என்னும் பாகங்களில் விவரித்துள்ளபடி குகனுடைய சரித்திரத்தைக் கூறுவதாகும். இது இனிய தமிழ் நடையில் அமைந்துள்ளது. இதன் விலை அணா 3.

---

* இந்தக் குறியிட்ட புஸ்தகங்களை சென்னை ஹைகோர்ட்டுக்கு எதிரிலுள்ள கொண்டிசெட்டித்தெருவில் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.


# ஜனாபிமானி.

| தபால் சார்ஜ் உள்பட | |
|---|---|
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE
JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன்
அண்டு கம்பெனி,
கொண்டிசெட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி ௵ ஆனி ௴, JUNE,—JULY 1918. { ஸஞ்சிகை 6. No. 6.


## EDITORIAL NOTES.

## பத்ராதிபர் குறிப்புகள்.

**இந்தியாவில் ரெயில்வே ஸாமான்கள் செய்தல்.**

தற்காலம் இந்திய ரெயில்வேக்களுக்கு வேண்டிய ஸாமான்களில் பெரும் பாகம் இங்க்லண்டிலிருந்தும் இதர மேல்நாடுகளிலிருந்தும் வந்துகொண்டிருக்கின்றன. யுத்தத்தால், மேல் நாடுகளில் கைத்தொழில்கள் தடைபட்டிருப்பதாலும், கப்பல் போக்குவரவு வஸதிகள் குறைவாக இருப்பதாலும், நமது தேசத்தில் ரெயில்வேக்களுக்கு அதிக கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. நமது தேசத்திலேயே ரெயில்வே ஸாமான்கள் செய்யப்பட்டால், இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் கஷ்டம் ஏற்படாது. இந்திய ரெயில்வேக்களுக்கு வேண்டிய ஸாமான்களுக்கு அயல் நாடுகளை எதிர் பார்த்திராமல், இந்தியாவிலேயே செய்துகொள்ளும்படி வஸதிகள் உண்டுபண்ணிக் கொடுப்பது விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டார் சில காலமாக ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள். தற்போது ரெயில் வண்டிகளை இந்தியாவிலேயே செய்வது விஷயமாக தங்களுடைய நோக்கத்தை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் யாராவது ரெயில் வண்டிகள் செய்யும் தொழிலை ஸ்தாபிக்க முன் வந்தால், அவர்கள் தங்களுடைய ஸாமான்களை விற்கக் கஷ்டப்படாமலிருக்க வேண்டி, கவர்ன்மெண்டார் பத்து வர்ஷம் வரையில் வர்ஷந்தோறும் 2,500 ப்ராட் கேஜ் வண்டிகளும் 500 மீட்டர் கேஜ் வண்டிகளும் வாங்கிக்கொள்வதாக உத்தரவாதம் செய்கிறார்கள். ஆனால் இந்தியாவில் செய்யப்படும் வண்டிகளின் விலை அயல் நாட்டு வண்டிகளின் விலையைவிட அதிகமாயிருக்கக் கூடாது. வண்டி செய்ய உபயோகிக்கப்படும் ஸாமான்களும் வேலைப்பாடும் நன்றாயிருக்க வேண்டும். கவர்ன்மெண்டாருடைய நோக்கம் என்னவென்றால், இந்தியாவில் வண்டி செய்யும் தொழிலையும், அந்தத் தொழிலுக்கு வேண்டிய ஸாமான்களைச் செய்யும் தொழில்களையும் ஏற்படுத்தி அவைகளை நல்ல நிலைமையில் வைப்பதே.

கவர்ன்மெண்டார் தற்காலம் அதிக வண்டி

கள் வாங்குவதாக உத்தரவாதம் செய்ய முடியாதென்றும், ஆனால் இப்போது கொடுத்திருக்கும் உத்தரவாதம் அந்தத் தொழிலை ஸ்தாபிக்கப் போதுமானதென்றும், அந்தத் தொழில் நிலைபெற்று விட்டால், இன்னும் அதிகமாக வண்டிகள் வாங்குவார்கள் என்றும் சொல்லுகிறார்கள். கவர்ன்மெண்டார் இவ்விதம் அந்தத் தொழிலுக்கு உதவிசெய்ய முன் வந்ததைப்பற்றி ஸந்தோஷிக்கிறோம். இந்த ஸமயத்தில் இந்திய முதலாளிகள் இந்தத் தொழிலை ஸ்தாபிக்க முன் வராவிட்டால் ஐரோப்பியர்கள் இந்தியாவிலேயே ஸ்தாபித்துவிடக்கூடும். அப்போது அது நமக்குக் கெடுதலாக முடியும். பிற்பாடு கவர்ன்மெண்டின்மேல் குறை சொல்லுவதில் பயனில்லை.

**ஸெகண்டரிக் கல்வி.**

தற்போதுள்ள ஸெகண்டரி ஸ்கூல்களில் அதிக பையன்கள் வாசிக்க முடியாமலிருப்பதை உத்தேசித்தும், ஹை ஸ்கூல் கல்வியை வ்ருத்தி செய்யவேண்டியதை உத்தேசித்தும், கவர்ன்மெண்டார் புதிதாக 18 ஹை ஸ்கூல்களும் 48 மிடில் ஸ்கூல்களும் ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே லோகல் போர்டுகளின் ஆதீனத்தில் உள்ள பூர்த்தியாயில்லாத 15 ஸெகண்டரி ஸ்கூல்களையும் முனிஸிபாலிடிகளின் ஆதீனத்திலுள்ள 2 ஸெகண்டரி ஸ்கூல்களையும் ஹை ஸ்கூல்களாக உயர்த்தப்போகிறார்கள். மதனபள்ளியில் இருக்கும் தியஸாபிகல் எடுகேஷன் ட்ரஸ்டைச் சேர்ந்த ஹை ஸ்கூலுக்கு கவர்ன்மெண்ட் அங்கீகாரம் நின்றுபோனதால், அந்த ஊரில் ஒரு புது ஹை ஸ்கூல் ஸ்தாபிப்பார்கள். அது சித்தூர் ஜில்லா போர்டின் ஆதீனத்தில் இருக்கும். புதிதாய் ஏற்படுத்தப்படும் மிடில் ஸ்கூல்களில் ஒன்று முனிஸிபாலிடியின் கீழிருக்கும். மற்றவை லோகல் போர்டுகளின் கீழிருக்கும். இவ்விதம் புதுப் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்த ஆகும் செலவு இந்த வர்ஷத்துக்கு ரூ. 1,17,792 ஆகும்.

**சேலமும் மதுபானமும்.**

சேலம் முனிஸிபாலிடியார் மதுபானத்தைக் குறைப்பதற்கு ப்ரேரித்திருந்த சில ஏற்பாடுகளை கவர்ன்மெண்டார் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முனிஸிபாலிடியார் ஏற்கனவே சாராய வகைகள் விற்பது விஷயமாக சில நிர்பந்தங்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இப்போது கள் விற்பது விஷயமாகவும் சில நிபந்தனைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். 18-வயஸுக்குள்பட்ட எவனுக்கும் எந்த வகை மதுபானங்களும் விற்கக்கூடாது. சேலம் பட்டணத்தில் முன்பு 12 கள்ளுக்கடைகள் இருந்தன. இனி 6 கடைகளுக்குமேல் இருக்காது. அந்தக் கடைகளும் பட்டணத்துக்கு வெளியில்தான் இருக்கும். பட்டணத்துக்குள்ளும் அதைச் சுற்றியுள்ள க்ராமங்களிலும் எவரும் ½ காலன் சாராயத்துக்குமேல் வைத்துக்கொண்டிருக்கக் கூடாது.

செவ்வாய்க்கிழமையிலும், பெரிய திருவிழா நாள்களிலும் கள் விற்கக் கூடாதென்ற நிபந்தனையின்மேல் தான் கள்ளுக் கடைகள் ஏலத்தில் விடப்படும். இந்த நிபந்தனைகளால் ஜனங்களிடம் மதுபானம் குறையு மென்னலாம். சேலம் முனிஸிபாலிடியைப்போல இதர முனிஸிபாலிடிகளும் இவ்விதம் செய்தால் நன்றாயிருக்கும்.

**துவரை முளைக் கட்டல்.**

துவரையை முளைக் கட்டுவதைப் பற்றி மைஸூர் வ்யவஸாய டிரெக்டர் பின்வருமாறு எழுதுகிறார். துவரையை ஒரு இரவு முழுவதும் ஜலத்தில் ஊறவைத்து, மறுநாள், ஊறின துவரையை, ஜலத்தில் குழம்பு போல் கறைத்த செம்மண்ணுடன் கலந்து குவியலாகக் குவித்து வைக்கவேண்டும். குவித்



குமுன் குவியலின் அடியில் மத்தியில் ஒரு நீண்ட கழியைப்போட்டு வைக்கவேண்டும். குவியலை அப்படியே விட்டுவைத்திருந்தால், ஜலமெல்லாம் வடிந்திருக்கும். மறுநாள் காலையில் கழியை குவியலில் நாலாபக்கமும் அசைப்பதால், துவரை ஒன்றோடொன்று சேராமல் தனித்தனியாகப் பிரிந்துவிடும். இன்னும் ஏதாவது துவரை ஒன்றோடொன்று சேர்ந்திருந்தால், கையால் கிளறிவிடவேண்டும். பிறகு வெயிலின் கடுமைக்குத் தக்கபடி 3 நாள் முதல் 6 நாள் வரையில் வெயிலில் காயவைக்கவேண்டும். துவரை நன்றாய்க் காய்ந்த பிறகு சல்லடையில் போட்டு சலித்தால், செம்மண்ணெல்லாம் தனியாக வந்துவிடும். பிறகு யந்த்ரத்தில் போட்டு உடைத்து பருப்பையும் பொட்டையும் வேறாகப் பிரிக்க வேண்டும்.

துவரை முளைக்கட்டுவதில் கவனிக்கவேண்டியவைகளாவன.

(1) துவரையை ஊறப்போட உப்புக் கரிக்கும் ஜலத்தை உபயோகிக்கக் கூடாது.

(2) முளைக்கட்ட செம்மண்ணே ச்லாக்யமானது. அது அகப்படாவிட்டால் வேறு மண்ணையும் உபயோகிக்கலாம். ஆனால் அந்த மண்ணில் உவர் ஸம்பந்த மிருக்கக்கூடாது.

(3) துவரையை நல்ல வெயில் அடிக்கும் காலத்தில் முளைக்கட்ட வேண்டும். முளைக்கட்டியபின் வெயில் அடிக்காமல் மழைபெய்து கொண்டிருந்தாலும், வானம் மப்பாக இருந்தாலும், துவரை பூஞ்சணம் பூத்துப் போகும். பருப்பு நன்றாய் வேகாது.

(4) வீட்டு உபயோகத்துக்கு முளைக்கட்டுகிறவர்கள் அப்போதைக் கப்போது துவரையை உடைத்து உபயோகித்துக் கொள்வது நல்லது. உடைத்து நாளான பருப்பைவிட, புதிதாய் உடைத்த பருப்பு அதிக ருசியுள்ளது.

**இந்தியப் போர் வீரர்களின் பிள்ளைகளுக்குக்கல்வி.**

ராணுவத்தில் சேர்ந்துள்ள இந்திய வீரர்களில் 1914-ம் வர்ஷம் ஆகஸ்ட் மாஸம் 4-ந் தேதிக்குப் பிறகு ராணுவத்தில் வேலைபார்த்து இறந்து போனவர்கள், காயங்களாலும் வ்யாதிகளாலும் சாச்வதமாக் வேலைக்கு லாயக்கில்லாமல் போனவர்கள் ஆகிய இவர்களுடைய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் இலவசமாகக் கல்வி கற்பிக்க இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

கலெக்டர்கள் தங்கள் ஜில்லாக்களில் மேற்சொன்ன இந்திய வீரர்களின் பிள்ளை பெண்களில் 16 வயஸுக்கு கீழ்பட்டவர்களுக்கு ஒரு ஸெர்டிபிகேட்டு கொடுப்பார். அந்த ஸெர்ட்டிபிகேட் பெற்ற சிறுவர்களும் சிறுமிகளும் ஸர்க்கார் பள்ளிக்கூடங்களிலும் ஸர்க்கார் உதவி பெறும் பள்ளிக்கூடங்களிலும் போய் இனாமாக வாசிக்கலாம். சம்பளம் இனாமாவதோடு, அவர்களுக்கு புஸ்தகங்கள் முதலியவை வாங்கவும் வர்ஷந்தோறும் பணம் கொடுக்கப்படும். ப்ரைமரி ஸ்கூலானால் வர்ஷத்துக்கு 12 ரூபாயும், மிடில் ஸ்கூலானால் அதாவது 1-வது பாரம் முதல் 3-வது பாரம் வரையிலானால் 14 ரூபாயும், ஹைஸ்கூலானால் (4-வது பாரம் முதல் 6-வது பாரம்வரையில்) 30 ரூபாயும் கொடுக்கப்படும். ஆனால் எந்தப் பையனாவது பெண்ணாவது பத்து வயஸு வரையில் எந்தப் பள்ளிக்கூடத்திலும் வாசிக்கவில்லை யென்றால், அவர்களுக்கு இந்த ஸகாயங்கள் கிடையா. வகுப்புக்குத் தகுதியாயில்லாமலிருந்தாலும், சரியாக வாசிக்காவிட்டாலும், நடத்தை திருப்திகரமாக இல்லாவிட்டாலும் சம்பள இனாமும், பண உதவியும் நிறுத்தப்படும்.

கம்போடியா பருத்தி முக்யமாகக் கோயம்புத்தூர் ஜில்லாவில் அதிகம். ஆனால் அது

சேலம், திருச்சிராப்பள்ளி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இந்த ஜில்லாக்களிலும் பயிரிடப்படுகிறது.

கம்போடியா பருத்திப் பண்ணை.

இந்த வர்ஷம் 2,02,500 பேல் கம்போடியா பருத்தி கிடைக்குமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். தற்போது விற்கிற விலைப்படி பார்த்தால், அது 10 கோடி ரூபாய்க்கு விலைபோகும். இதுவரையில் வ்யவஸாய டிபார்ட்மெண்டார் கம்போடியாப் பருத்தி விஷயமாக செய்துள்ள ஆராய்ச்சிகளால், அந்தப் பருத்தியில் நல்ல ஜாதியாகத் தெரிந்து விதையெடுத்து உபயோகித்தால் அதிகலாபம் உண்டாகுமென்று தெரிகிறது. இதில் செய்யவேண்டிய திருத்தங்கள் என்னவென்றால், அதிகப்பருத்தி கிடைக்கும்படி செய்வது, பருத்தியின் இழை நீளமாக இருக்கும்படி செய்வது, செடியின் தண்டு உறுதியாயும் நேராயும் இருக்கும்படி செய்வது ஆகிய இவைகளாகும். தற்போதுள்ள ஜாதிச் செடியின் தண்டானது ரொம்ப மெலிந்திருப்பதால், அது பருத்திக் காய்களைத் தாங்கமுடியாமல் வளைந்துபோகிறது. இதனால் பருத்திச் சுளைகள் பூமியில் பட்டு, அழுக்கடைந்து போகின்றன. மேற்சொன்னபடி கம்போடியாப் பருத்தியில் சீர்திருத்தங்கள் செய்ய வ்யவஸாய டிபார்ட்மெண்டார் போத்தனூருக்குப் பக்கத்தில் ஒரு கம்போடியா பருத்திப்பண்ணை ஸ்தாபிக்கப்போகிறார்கள். இந்தப் பண்ணை ஏற்படுத்த 40,750 ரூபாய் செலவாகுமென்று தெரிகிறது.

வட ஆற்காட்டில் ஒரு நிருபணப் பண்ணை.

வ்யவஸாய டிபார்ட்மெண்டார் வட ஆற்காடு ஜில்லாவில் குடியாத்தத்துக்குப் பக்கத்தில் மேல்அலத்தூரில் ஒரு வ்யவஸாய நிருபணப் பண்ணை ஸ்தாபிக்கப்போகிறார்கள். அந்தப் பண்ணையில் நெல், கரும்பு, தென்னை, கம்போடியாப் பருத்தி ஆகிய இந்தப் பயிர்களின் சாகுபடி முறைகளிலும், தொழுவத்தெரு சேகரித்துப் பாதுகாக்கும் முறைகளிலும் கவனிக்கவேண்டிய சீர்திருத்தங்களை நிரூபித்துக் காட்டுவார்கள்.

---

## GOLD MOHURS.

### தங்க மோஹராக்கள்.

கவர்ன்மெண்டார் பதினைந்து ரூபாய் மதிப்புள்ள தங்க மோஹராக்கள் வெளியிடப்போகிறதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த மோஹராக்கள் நிறை, நயம், உருவம், அளவு ஆகிய இவை எல்லாவற்றிலும் ஸவரன் (பவுன்) போலவே இருக்கும். நமது தேசத்தில் வழங்கும் பவுன்கள் இங்கிலண்டிலும் ஆஸ்ட்ரேலியாவிலும் அச்சடிக்கப் படுகின்றன. நமது தேசத்திலும் அதை அடிக்க லண்டன் ராயல் தங்கசாலையின் கிளையொன்றை பம்பாயில் ஸ்தாபித்திருக்கிறார்கள். ஆனால் ஸவரன் அடிக்கவேண்டிய கருவிகளில் சில சீமையிலிருந்து வர தாமஸமாகும் போலிருப்பதாலும், இன்னும் சில காரணங்களாலும், பம்பாய் கிளைத் தங்கசாலையில் ஸவரன் அடிக்க நாளாகுமென்று தெரிகிறது.

கவர்ன்மெண்டார் கரன்ஸி நோட்டுகள் போட்டு வெளியிடும்போது, ஒவ்வொரு நோட்டுக்கும் அது எவ்வளவு தொகைக்குச் செலாவணியாகுமென்று சொல்லப்படுகிறதோ அவ்வளவு தொகையை தனியாக எடுத்து வைத்து விடுவார்கள். ஏனென்றால், ஜனங்கள் கரன்ஸி



நோட்டுகளை மாற்ற எண்ணினால், உடனே பணம் கொடுக்க வேண்டுமாகையால் கவர்ன்மெண்டாரிடம், எப்போதும் வேண்டிய பணம் ரொக்கமாகக் கையிருப்பில் இருக்க வேண்டும். ஆனால் கரன்ஸி நோட்டுகளை எல்லாருமே மாற்ற முன் வரமாட்டார்கள். ஆகையால் ஸாதாரண காலத்தில் நோட்டுகளுக்கு ரூபாய் கொடுப்பதற்காக எத்தனை ரூபாய் வேண்டுமென்பதை உத்தேசமாக மதிப்புப் போட்டு, அதற்கு வேண்டிய ரூபாய் மட்டும் கையிருப்பில் வைத்துக்கொண்டு பாக்கியை தக்க இடத்தில் வட்டிக்கு விடுவதுண்டு. அதோடு, சில தொகைகளை ரூபாயாக வைத்திருக்காமல் தங்க நாணயங்களாகவோ, வெள்ளி, தங்கக் கட்டிகளாகவோ வைத்திருப்பார்கள். தற்காலம் நமது தேசத்தில் வெள்ளி அதிக குறைவாக இருக்கிறது. வெள்ளி நாணயங்கள் அடிப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டார் அமெரிக்காவில் 60 கோடி ரூபாய் பெறுமானமுள்ள வெள்ளியை வாங்கி யிருக்கிறார்கள். அந்த வெள்ளி கொஞ்சங் கொஞ்சமாக இங்கு வந்துகொண்டிருக்கிறது. அங்கிருந்து வரும் வெள்ளி முழுவதையும் ரூபாயாக மாற்றுவதற்குக் காலம் செல்லும். இதன் மத்தியில் கவர்ன்மெண்டாருக்கு வட இந்தியாவில் கோதுமை வாங்குவதற்கும் இதர செலவுகளுக்கும் நாணயங்கள் வேண்டியிருக்கிறது. அவைகளுக்கு கையிருப்பிலுள்ள வெள்ளி நாணயங்கள் போதாதாகையால், அவர்கள் கரன்ஸி நோட்டுகளுக்காக வென்று தனியாக வைத்திருக்கும் தங்கத்தையும் அன்ய தேசத் தங்க நாணயங்களையும் உருக்கி மோஹரா என்ற 15 ரூபாய் நாணயத்தை வெளியிடப் போகிறார்கள்.

நமது தேசத்தில் தங்க நாணய ஏற்பாட்டை அனுஷ்டிக்க ஆரம்பித்ததைப்பற்றி நாம் ஸந்தோஷிக்கிறோம். உலகமெங்கும் தங்கமே செலாவணிக்கேற்ற பொருளாக இருக்க, நமது கவர்ன்மெண்டார் மாத்ரம் நீர்வாக ஏற்பாட்டினால் வெள்ளி நாணய ஏற்பாட்டை அமுலுக்குக் கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் நமது தேசத்திலிருந்து போகும் ஏற்றுமதியின் மதிப்பு நமது தேசத்திற்கு வரும் இறக்குமதியைவிட எப்போதும் அதிகமாக இருப்பதால், ஒரு நாளில்லா விட்டால் ஒருநாள் இந்த வெள்ளி நாணய ஏற்பாடு கஷ்டமாக முடியவேண்டியதுதான். நமது தேசத்துக்குத் தங்கம் வரக்கூடாதென்று எண்ணங்கொண்டு, பற்பல சாக்குப் போக்குகள் சொல்லி தங்கத்தை இதுவரையில் இங்கிலண்டிலேயே வைத்துக்கொள்ள முயன்றார்கள். ஆனால் இந்த உபாயங்கள் இனிமேல் ப்ரயோஜனப்படுமென்று சொல்லுவதற்கில்லை. ஏனென்றால் யுத்தம் முடிந்த பிறகு கைத்தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் இந்தியாவிலிருந்து முன்னைவிட அதிகமாக வெளி தேசங்களுக்குப் போகும். அப்போது அன்ய தேசங்களிலிருந்து அதிகமாகத் தங்கம் இந்தியாவுக்கு வரவேண்டும். அதை வராமல் கவர்ன்மெண்டார் தடுக்க எண்ணினால், தற்போதைய நாணய ஏற்பாட்டில் இன்னும் கஷ்டம் ஏற்படும். கவர்ன்மெண்டார் இந்தக் கஷ்டங்கள் ஏற்படாதபடி தங்க நாணயங்கள் போடத் தீர்மானித்திருப்பது ச்லாகிக்கத்தக்கது. தற்போது போடும் தங்க நாணயங்களை ஜனங்கள் வாங்கிக்கொண்டால் சிலசில வெளியில் விடத் [illegible]டார்கள். ஆனால் சில காலம் கவர்ன்மெண்டார் அதை லக்ஷ்யம் செய்யாமல் இருந்து, புது நாணயங்கள் போட்டுக்கொண்டே போனால், சில காலத்துக்கெல்லாம் ஜனங்களுக்கு வேண்டிய தங்கம் கிடைத்துவிடும். பிறகு கரன்ஸி நோட்டுகளை தாராளமாகக் கையாளுவார்கள்; தங்கம் எப்போதும் [illegible]

யான விலையில் கிடைக்கும் என்ற தைர்ய மேற்படுமோகையால், பணத்தை தங்கமாகச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டுமென்ற அவச்யம் ஜனங்களுக்குக் குறையும்.

## HIGH PRICE OF CLOTH.

### துணிகளின் விலையில் ஏற்றம்.

துணிகளின் விலை ஏறியிருப்பதால் மத்ய தர வகுப்பாரும் ஏழைகளும் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அநேக இடங்களில் ஜனங்கள் துணிக்கடைகளை கொள்ளையிட்டு விட்டதாகத் தெரிகிறது. சில இடங்களில் இந்தக் கஷ்டம் அதிகமாகப் போனதில் ஜனங்கள் கட்டியிருக்கும் துணிகளைக்கூடப் பிடுங்கிக் கொண்டார்களாம். சில ஸ்த்ரீகள் துணியில்லாக் கஷ்டத்தால் மானத்துக்கு பயந்து உயிரை மாய்த்துக் கொண்டார்களாம். நமது தேசத்திலிருந்து ஏராளமாகப் பருத்தி ஏற்றுமதியாகியும் நாம் துணிக்குக் கஷ்டப்படுவது ஆச்சர்யமாயிருக்கலாம். ஆனால் பருத்தியானது உலகமெங்கும் உபயோகமாகும் பொருளாகும். உலகத்தில் பருத்தி விளையும் பற்பல தேசங்களில் மாஸூலின் அளவு வித்யாஸப் படுவதனால் அதிகமா யுள்ள தேசங்களிலிருந்து குறைவாயுள்ள தேசங்களுக்கு ஏற்றுமதி யாவதாலும், பற்பல வேலைகளில் அது அதிகமாகவோ குறைவாகவோ உபயோகப்படுவதாலும், இதர காரணங்களாலும், அதன் விலையானது மாறிமாறி வருகிறது. இந்தக் காரணங்களை வைத்துக் கொண்டு பார்த்தால் பருத்தி விலையும், துணியின் விலையும் ஏறியிருப்பது ஆச்சர்யமாகப் படாது. முதலாவது யுத்தத்திலுள்ள ஸைன்யங்களுக்கு ஏராளமாகத் துணிகள் வேண்டியிருக்கிறது. அவர்கள் உடுத்திக்கொள்ளும் துணிகள் சீக்ரம் கிழிந்தும், வேறு விதத்தில் லாயக்கில்லாமலும் போகக்கூடும். ஆகவே அவர்களுக்கு அடிக்கடி துணிகள் கொடுத்தாகவேண்டும். கவர்ன்மெண்டார் தங்களுக்கு வேண்டிய பருத்தித் துணிகளை இந்திய மில்லுகளிலிருந்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். யுத்தக் கருவிகளிலும் பருத்தி ஏராளமாகச் செலவழிகிறது. வெடிமருந்து செய்வதில் அது உபயோகப்படுகிறது. ஒரு பன்னிரண்டு அங்குல பீரங்கி ஒரு தடவை வெடி தீர்த்தால் அரை பேல் பருத்தி செலவழிந்து போகிறது. ஒரு மெஷீன் பீரங்கி 3 நிமிஷம் வெடி தீர்த்துக்கொண்டிருந்தால் ஒரு பேல் பருத்தி செலவழிகிறது. காயம்பட்ட வீரர்களுக்குச் சிகித்ஸை செய்யும்போது வேண்டியிருக்கும் பருத்தி ஒரு வர்ஷத்துக்கு 20,000 பேலாகும். தற்போது யுத்தத்தில் சேர்ந்துள்ள எல்லா வீரர்களுடைய உடுப்புகளையும் ஒரு தடவை மாற்றவேண்டுமென்றால் அதற்குத் துணி செய்ய பத்து லக்ஷம் பேல் பருத்தி வேண்டியிருக்கும். அமெரிக்காவில் புதிதாக ஏரோப்ளேன்கள் செய்யப் போகிறார்கள். அந்த ஏரோப்ளேன்களுக்கு சிறகுகள் கட்டும்போது சணல் துணிகளுக்கு பதிலாக பருத்தியை உபயோகிக்கலாமாவென்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்விதம் செய்வதானால் ஒரு லக்ஷம் பேல் பருத்தி வேண்டும்.

அமெரிக்காவில் மாத்ரம் வர்ஷந்தோறும் 10 லக்ஷம் பேல் பருத்தியை வெடி மருந்துகள் செய்வதில் உபயோகிக்கிறார்கள். இவைகளையெல்லாம் யோசித்தால், நான்கு வர்ஷம் யுத்தம் நடந்த பிறகும் அதிக விலை கொடுத்தாவது ஏதோ துணி கிடைக்கிறதே என்று



ஸந்தோஷப்படவேண்டியிருக்கிறது. அதிக விலைக்கு விற்கலாமென்று சிலர் சரக்குகளைப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறார்களென்பது வாஸ்தவமே. ஆனால் அதனால் மாத்ரம் துணியின் விலை இவ்வளவு ஏற ந்யாயமில்லை. கவர்ன்மெண்டார் பருத்தி சாகுபடியை வ்ருத்தி செய்ய ஏற்பாடு செய்தாலொழிய, பருத்தித் துணிகளின் விலை குறையுமென்பதற்கில்லை.

## INTEREST RATES TO FARMERS IN U. S. A.

### அமெரிக்க ஐக்ய நாடுகளில் வ்யவஸாயிகளுக்குக் கொடுக்கும் கடன்களுக்கு வட்டி விகிதம்.

அமெரிக்க ஐக்ய நாடுகளில் வ்யவஸாயிகளுக்கு சாகுபடி காலங்களில் கடன் கொடுப்பதற்கு, அந்தந்த இடங்களில் சிறிய பாங்கிகளும் பெரிய பாங்கிகளின் கிளைகளும், இருக்கின்றன. வ்யவஸாயிகள் மாஸூல் அறுவடையான சிறிது காலத்துக்கெல்லாம் கடனை அடைத்துவிடுவார்கள். இந்த ஸ்வல்ப தவணைக் கடன்களுக்கு வ்யவஸாயிகள் கொடுக்கும் வட்டி, இடத்துக்கு இடம் வித்யாஸப்படுகிறது. அங்கே ஒரு நாட்டில் நபர் ஜாமீன் பேரில் வாங்கும் ஸ்வல்ப காலத் தவணைக் கடன்களுக்கு சராசரியில் வட்டியும் இதர செலவுகளும் உள்பட 100-க்கு 6½ முதல் 100-க்கு 10 அல்லது 15 விகிதமாக இருக்கிறது. தெற்கிலும் ராக்கி மலையைச் சார்ந்த ப்ரதேசங்களிலும் வட்டி விகிதம் இன்னும் அதிகமாக இருக்கிறது.

#### வட்டி விகிதங்களின் வித்யாஸத்திற்குக் காரணம்.

ஒரு தேசத்தின் ஒரு பாகத்தில் இருப்பதைவிட, இன்னொரு பாகத்தில் வட்டி விகிதம் அதிகமாகவோ குறைவாகவோ இருப்பதற்குச் சில முக்யமான காரணங்களுண்டு. அவை யாவன. (1) சீதோஷ்ண ஸ்திதியும் பூமியின் வளப்பமும் வித்யாஸப்படுதல் (2) பயிரிடும் மாதிரியும் வ்யவஸாயிகளின் ஜனத்தொகையும் வித்யாஸப்படுதல் (3) பணம் கிடைக்கக் கூடிய இடங்களிலிருந்து வ்யவஸாயிகள் இருக்குமிடத்திற்குள்ள தூரம் (4) கடன் கொடுப்பதற்குள்ள ஸாதனங்களின் தன்மை.

#### சீதோஷ்ணஸ்திதியும் பூமியின் வளப்பமும்.

வேண்டிய அளவு மழை பெய்வதாயும் நிலம் வளப்பமுள்ளதாயும் இருக்கும் இடங்களில் குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கலாம், அங்குள்ள வ்யவஸாயிகள் கொடுக்கும் வட்டி அதிகமானதல்ல. வளப்பக் குறைவான ப்ரதேசங்களில் அதிக வட்டி கொடுத்தால் தான் கடன் கிடைக்கும்.

#### பயிரிடும் மாதிரியும் வ்யவஸாயிகளின் ஜனத்தொகையும்.

மற்றெல்லாக் காரணங்களையும் விடப் பயிரிடும் மாதிரியும் வ்யவஸாயிகளின் நாணயமுந்தான் வட்டி விகிதத்தில் அதிக ஏற்றத்தாழ்வை உண்டு பண்ணுகின்றன. குறித்த தவணையில் க்ரமமாகக் கடனைக்கொடுத்து விடும் வ்யவஸாயிகளுக்கு வெகு ஸுலபத்தில் கடன் கிடைக்கும். அதாவது, எந்த ப்ரதேசத்தில் நாணயமுள்ள வ்யவஸாயிகளும் வர்ஷம்தப்பாமல் மாஸூலும் உண்டோ அந்த ப்ரதேசத்திலுள்ளவர்களுக்குக் கடன் கொடுக்க எவரும் பின் வாங்கமாட்டார்கள். வெகு காலம் ஒரு ப்ரதேசத்தில் நிலைத்திராமல் அடிக்கடி இடம் மாறும் வ்யவஸாயிகளைவிட ஒரே ப்ரதேசத்தில் ஸ்திரமாக

இருக்கும் வ்யவஸாயிகளுக்குக் கடன் வாங்க ஸௌகர்யம் அதிகம். ஏனென்றால், ஒரே இடத்தில் நிலையாயிருப்பவர்களோடு வெகு காலம் பழகுவதால், அவர்களுடைய குணாகுணங்களும் யோக்யதையும் இவர்களுக்கு நன்றாய்த் தெரியும். ஒரே விதமான வ்யவஸாயப் பொருளைப் பயிர் செய்பவர்களைவிட பலவிதமான வ்யவஸாயப் பொருள்களைப் பயிர் செய்பவர்களுக்கு வெகு எளிதில் கடன் கொடுப்பார்கள். ஈடு காட்டிக் கடன் வாங்குவதற்கானாலும் சரி, ஜாமீன்பேரில் கடன் வாங்குவதற்கானாலும் சரி, வ்யவஸாயிகளுக்கு நாணயமும் நல்ல மாஸூலில் கிடைக்கக்கூடிய புதிய வ்யவஸாய முறைகளும் மிகவும் அவசியமானவை. பணம் கிடைக்கக்கூடிய இடங்களின் தூரம்.

இதனாலும் வட்டி விகிதத்தில் ஏற்றத்தாழ்வு உண்டாகிறது. கடன் கொடுக்கும் பாங்கிகள் அல்லது ஸங்கங்களுக்கு ஸமீபத்தில் இருப்பவர்களுக்கு ஸ்வல்ப வட்டிக்குக் கடன் கிடைக்கிறது. இடங்களின் தூரத்துக்குத் தகுந்தாற்போல் வட்டி விகிதமும் ஏறிக்கொண்டே வரும்.

பாங்கிகளின் தன்மை.

வட்டி விகிதமானது யார் கடன் கொடுக்கிறார்கள் என்பதையும் பொருத்திருக்கிறது. ஸர்க்கார், ஸேவிங்க்ஸ் பாங்கிகள், பெரிய கம்பெனிகள் ஆகிய இவர்களிடமிருந்து வாங்குவதானால் வட்டி குறைவாக இருக்கும். மற்ற இடங்களில் வட்டி அதிகம்.

---

முனிஸிபாலிடிகளின் கல்விச்சேலவு.

சென்னை ராஜதானியிலுள்ள முனிஸிபாலிடிகளுக்கு 1907-08-ம் வர்ஷத்தில் மொத்த வரும்படி 62·88 லக்ஷம் ரூபாய். அவைகளின் கல்விச் செலவு 4·51 லக்ஷம் ரூபாய். அதாவது மொத்த வரும்படியில் நூற்றுக்கு 7·2 விதமாகும். அதற்கு அடுத்த இரண்டு வர்ஷங்களில் கல்விச் செலவு முறையே நூற்றுக்கு 8·8 விதமும், நூற்றுக்கு 7· விதமுமாகும். அதற்குப் பிறகு 4-வர்ஷங்கள் வரையில் கல்விச் செலவு ரொம்பக் குறைந்துவிட்டது. 1912-13-ல் நூற்றுக்கு 5·4-விதமாக இருந்தது. 1914-15-முதல் மூன்று வர்ஷங்களின் கணக்குகள் வருமாறு.

| வர்ஷம். | வரும்படி. | கல்விச் செலவு. | விகிதம் நூற்றுக்கு. |
|---|---|---|---|
| 1914-15 | 100·31 | 10·90 | 10·8 |
| 1915-16 | 103·05 | 11·29 | 10·9 |
| 1916-17 | 107·84 | 9·54 | 8·8 |

ஸ்தல ஸ்தாபனங்களின் கல்விச் சேலவு.

சென்னை ராஜதானியிலுள்ள ஜில்லாபோர்டுகளுக்கு 1907-08-ம் வர்ஷத்தில் 150·70-லக்ஷம் ரூபாய் வரும்படி கிடைத்தது. இதில் 19·89 லக்ஷம் ரூபாய் கல்விக்காக செலவழிக்கப்பட்டது. இந்தக் கல்விச்செல்வு மொத்த வரும்படியில் 100-க்கு 13 விதமாகும். சென்ற மூன்று வர்ஷங்களின் கணக்கு விவரம் வருமாறு.

| வர்ஷம். | வரும்படி லக்ஷம் ரூ. | கல்விச்செலவு லக்ஷம் ரூ. | கல்விச் செலவு 100-க்கு இவ்வளவு. |
|---|---|---|---|
| 1914-15 | 209·95 | 32·90 | 10·9 |
| 1915-16 | 190·95 | 34·20 | 17·8 |
| 1916-17 | 191·64 | 32·97 | 17· |

சென்ற இரண்டு வர்ஷமாகத்தான் ஜில்லா போர்டுகளின் கல்விச் செலவு அதிகம். அதற்கு முந்திய வர்ஷங்களில் கல்விச் செலவு மொத்த வரும்படியில் 100-க்கு 8·9 முதல் 100-க்கு 12·ஆக இருந்தது.



## CO-OPERATION AND INDUSTRIAL DEVELOPMENT.

## கோவாபரேஷனும் கைத்தொழில் அபிவ்ருத்தியும்.

தற்காலம் நமது தேசத்தில் நாணய ஸங்கங்கள் அதிகமாயிருக்கின்றனவே யொழிய, வ்யவஸாயம், கைத்தொழில் ஆகிய இவைகளின் அபிவ்ருத்திக்கான கோவாபரேடிவ் ஸங்கங்கள் அதிகம் இல்லை. இந்த ஸங்கங்கள் பலவகைப்படும். வ்யவஸாயிகளுக்கு விதைகளும் எருக்களும் வாங்கிக்கொடுக்கும் ஸங்கங்கள், வ்யவஸாயிகளின் மாஸூலை விற்றுக்கொடுக்கும் ஸங்கங்கள், பட்டணங்களில் உள்ளவர்களுக்கு வேண்டிய ஸாமான்கள் ஸப்ளை செய்யும் ஸ்டோர்கள், தொழிலாளிகளுடைய ஸங்கங்கள் எனப் பலவகைப்படும். தொழிலாளிகளின் ஸங்கங்கள் இரண்டு வகைப்படும். தொழிலாளிகள் தனித்தனியாகத் தங்கள் வீடுகளிலேயே வேலை செய்துகொண்டு, தங்களுடைய தொழிலுக்கு வேண்டிய மூலப் பொருள்களை வாங்கிக்கொள்வதற்கும், செய்த ஸாமான்களை விற்பதற்கும் மாத்ரம் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்திக்கொள்வது முதல் வகையாகும். இரண்டாவது வகையில் தொழிலாளிகள் ஒன்று சேர்ந்து ஒரு சிறு தொழில்சாலை ஏற்படுத்திக்கொண்டு சேர்ந்து வேலை செய்து லாபத்தைப் பங்கிட்டுக் கொள்வார்கள்.

எந்தத் தொழிலில் பெரிய தொழில்சாலைகளின் போட்டியால் நஷ்டம் ஏற்படாதோ, எந்தத் தொழில்களை ஜனங்கள் தங்களுடைய ஒழிவு நேரங்களில் செய்யக்கூடுமோ, அந்தத் தொழில்களில் தான் முதல் வகைக் கோவாபரேடிவ் ஸங்கம் ப்ரயோஜனப்படும். ஸ்விட்ஸர்லண்ட், ஜெர்மனி ஆகிய இந்த தேசங்களிலுள்ள வ்யவஸாயிகள் தங்களுடைய ஒழிவு நேரங்களில் பொம்மைகளும், மரங்களில் சித்ர வேலைகளும் செய்கிறார்கள். இந்த ஸாமான்கள் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்களை வரவழைக்கவும், செய்த ஸாமான்களை விற்கவும் கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுத் துணிகளில் ஜனங்களுக்கு ப்ரியம் குறையாமலிருந்து, நெசவுகாரர்கள் தற்கால முறைகளை அநுஸரித்தால், கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இந்த வகை ஸங்கம் ரொம்ப உதவியாயிருந்து, இந்தத் தொழில் அழிந்து போகாதபடி பாதுகாக்கும். வடக்கே பேஹாரிலுள்ள ராஞ்சியென்னும் பட்டணத்தில் இந்த வகை ஸங்கம் ஒன்று ஏற்பட்டிருக்கிறது.

இரண்டாவது வகை ஸங்கம், அதாவது தொழிலாளிகளே சேர்ந்து சிறு தொழில்சாலை நடத்துவது இந்தியாவில் ஸாத்யமல்ல. அப்படிப்பட்ட ஸங்கம் ஏற்பட, தொழிலாளிகளுக்கு, பெரிய தொழில்சாலைகளில் வேலை செய்வதுபோல், ஸங்கத்திய தொழில்சாலையில் ஒழுங்காக வேலை செய்யத் தெரிந்திருக்க வேண்டும். அதோடு, வ்யாபார ஞானமும், கல்வியும் இருக்கவேண்டும். இந்த அம்சங்கள் தற்போது இந்தியாவில் இல்லை.

தற்காலம் நமது தேசத்தில் இரண்டொரு இடங்களில் ஸ்டோர்கள் என்னும் ஸங்கங்கள் நடந்துவருகின்றன. அவைகள் மெம்பர்களுக்கு வேண்டியிருக்கும் ஸாமான்களை வாங்கி விற்கின்றன. இந்த ஸங்கங்களின் கொள்கை என்னவென்றால், பண்டங்கள் உற்பத்தியாகுமிடத்திலிருந்து வாங்குபவரிடம் வரும் வரையில் ஏஜெண்டுகள், வ்யாபாரிகள் ஆகிய இவர்கள் கை மாறுவதால் ஏற்படும் கமிஷன் நஷ்டம் உண்டாகாமல் தடுப்பதும், வாங்குபவருக்கு விலை குறைவாக [illegible]

ஸாமான் விற்பதுமே. ஸ்காட்லண்டில் ஒரு ஸங்கம் இதோடு நில்லாமல் ஜனங்களுக்கு வேண்டிய ஸாமான்களைச் செய்தும் விற்கிறது.

ஆனால் இப்படிப்பட்ட ஸங்கங்கள் எல்லா ஸாமான்களையும் செய்வது முடியாது. வ்யாபாரத்தில் எந்த ஸாமானில் அதிக லாபம் உண்டோ, அந்த ஸாமான்களை மாத்ரம் தான் செய்து விற்கமுடியும். மேலும் இப்படி ஸாமான் செய்யும் ஸங்கங்கள், தொழில்சாலைகளில் வேலை செய்யும் வேலையாட்கள் அதிகமாயுள்ள நாடுகளில் தான் நன்றாய் நடக்கக்கூடும். நமது தேசத்தில் தொழில்சாலை வேலைக்காரர்களினுடைய தொகை அதிகமாயில்லையாதலால், ஸாமான்கள் செய்து விற்கும் ஸ்டோர்கள் இங்கே அதிகம் ப்ரயோஜனப்படா. மேலும் நமது தேசத்தில் ஸாதாரண ஸ்டோர்களே இன்னும் சரியாக நடக்கவில்லை. ஆகையால் ஸாமான்கள் செய்யும் ஸ்டோர்கள் ஏற்படுவதற்கு இன்னும் காலம் ஆகவேண்டும்.

வ்யவஸாய ஸம்பந்தமான கைத்தொழில்களுக்குத்தான் கோவாபரேஷன் ரொம்பவும் ப்ரயோஜனப்படும். தற்போது நமது தேசத்தில் விதைகள், எருக்கள், வ்யவஸாயக் கருவிகள் ஆகிய இவைகளை வாங்கி விற்க பல கோவாபரெடிவ் ஸங்கங்கள் இருக்கின்றன. சில மேல்நாடுகளில்போல, இந்த ஸங்கங்கள் வ்யவஸாயத்துக்கு வேண்டியிருக்கும் ஸாமான்களையேயன்றி வ்யவஸாயிகளுக்கு வேண்டியிருக்கும் ஸாமான்யமான வீட்டு ஸாமான்களையும் விற்று வரலாம். தேசத்தில் கல்வியும், வ்யவஸாயமும் வ்ருத்தியாக ஆக, நல்ல விதைகளும் உரங்களும் சீர்திருந்திய வ்யவஸாயக் கருவிகளும் ரொம்பவும் அதிகமாக வேண்டியிருக்கும். அப்போது இந்த வ்யவஸாய ஸங்கங்கள் ஒன்று சேர்ந்து வ்யவஸாயக் கருவிகள் உரங்கள் முதலியவைகளைத் தாங்களே செய்து விற்க வேண்டிவரும். அப்படி ஒன்று சேர்ந்து செய்தால்தான், இந்த ஸாமான்களை விலை குறைவாக விற்கலாம். இவைகளேயன்றி க்ராம ஜனங்களுக்குத் தேவையாயிருக்கும் துணிகள், எண்ணெய், சர்க்கரை முதலியவைகளையும் தயார் செய்து விற்கலாம். இந்தவகையில்தான் கோவாபரேஷனால் இந்தியாவின் கைத்தொழில் அபிவ்ருத்திக்கு அதிக ஸாதகம் ஏற்படக் கூடும்.

வ்யவஸாயத்தில் கிடைக்கும் பண்டங்களை மொத்தமாக விற்க ஸங்கங்கள் ஏற்பட்டால், அதனாலும் சில கைத்தொழில்கள் ஏற்படலாம். உதாரணமாக கோவாபரெடிவ் பாற்சாலையைச் சொல்லலாம். ஜெர்மனியிலும் ப்ரான்ஸிலும் வ்யவஸாயிகள் தாங்கள் பயிரிடும் உருளைக்கிழங்கை அப்படியே விற்றுவிடாமல், அதை சாராயமாகவோ, ஸ்டார்ச் என்னும் மா ஸத்தாகவோ செய்து விற்கிறார்கள். சாராயத்துக்கும், மா ஸத்துக்கும், உருளைக் கிழங்கின் விலையே கிடைக்கிறதென்றாலும், சாராயம் செய்யும்போது கிடைக்கும் உப பொருள்கள் மாடுகளுக்குத் தீவனமாகின்றனவாதலால், அது லாபகரமாகவே இருக்கிறது. இந்தியாவிலும் நமது வ்யவஸாயிகள் எண்ணெய் விதைகளை ஆட்டி எண்ணெய் எடுக்க கோவாபரெடிவ் ஸங்கங்கள் ஏற்படுத்தலாம். இதனால் பிண்ணாக்கு நமது தேசத்திலேயே நின்று எருவாகவும், கால்நடைகளுக்கு உணவாகவும் உபயோகப்படும்,



## CARE OF WATCHES.

## கைக்கடியாரங்களின் பாதுகாப்பு.

இஞ்ஜினியர்கள், ராணுவத்தைச் சேர்ந்தவர்கள், கப்பலோட்டிகள் முதலிய சிலரே கைக்கடியாரங்களின் பாதுகாப்பு விஷயத்தில் அதிக ஜாக்ரதை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மற்றவர்கள் அவைகள் விஷயத்தில் கொஞ்சமும் கவலை எடுத்துக்கொள்வதில்லை. ஸாதாரண உபயோகத்திலிருக்கும் யந்த்ர வகைகளில் கைக்கடியாரத்தைவிட அதிக ஸூக்ஷ்மமானது வேறு ஒன்றும் இல்லை. நல்ல மாதிரி கைக்கடியாரத்தில் 200-க்கு மேற்பட்ட பாகங்கள் உண்டு. அவைகளில் பலவற்றை ஸுலபத்தில் நாம் பார்ப்பது முடியாது. அந்த 200 பாகங்களையும் தயார்செய்ய 3500 தினுஸு வேலைகள் நடந்தாகவேண்டும்,

கடியாரம் சரியாக மணி காட்டவேண்டுமானால், நாம் சில முக்யமான விஷயங்களை கவனிக்கவேண்டும். தினந்தோறும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் சாவி கொடுக்கவேண்டும். அதை எடுக்கும்போதும் வைக்கும்போதும் ஜாக்ரதையாகக் கையாடவேண்டும். அடிக்கடி சரியான கடியாரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து தப்பாக இருந்தால், திருப்பி வைத்துக்கொள்ளவேண்டும். சென்னையில் குண்டு போடும்போது கடியாரத்தை சரிதப்புப் பார்க்கலாம். மற்ற இடங்களில் ரெயில்வே ஸ்டேஷன்களில் ஒப்பிட்டுப் பார்க்கலாம். அப்படிப் பார்த்து சரிப்படுத்தும்போதெல்லாம் சாவி கொடுப்பதை வழக்கமாக வைத்துக்கொள்ளவேண்டும். இதனால் கடியாரம் மெதுவாயோ வேகமாயோ ஓடுவது குறையும். தினந்தோறும் இரண்டு தடவை சாவி கொடுப்பது நல்லது. ஆனால் காலந் தவறாமல் இரண்டு தடவை சாவி கொடுக்க முடியுமென்ற நிச்சயமிருந்தாலொழிய, இரண்டு தடவை சாவி கொடுக்க முயலுவது சரியல்ல. சிலர் கையில் கடியாரத்தை வைத்துக்கொண்டு ஏதோ ஞாபகமாய் வேண்டாத ஸமயத்திலும் சாவியைச் சற்று திருப்புவதுண்டு. இது கூடாது. சாவி கொடுப்பதிலும் சில விஷயங்களை கவனிக்கவேண்டும். சாவி கொடுக்கும்போது கடியாரத்தைக் குலுக்கக் கூடாது. கடியாரம் சற்றும் அசையக் கூடாது. சிலர் சாவியைத் திருப்பும்போது கடியாரத்தையும் சுற்றுவதுண்டு. நிதானமாய்ச்சாவி கொடுக்கவேண்டும். கடைசி இரண்டு மூன்று சுற்றுகளை மெதுவாய்ச் சுற்றவேண்டும்.

நாம் கைக்கடியாரங்களைச் சட்டைப்பையில் வைத்துக் கொள்ளுகிறோம்; எந்தப் பக்கத்துப் பையில் வைக்கிறோமென்பதை யொட்டி கடியாரம் சரியாகவோ தப்பாகவோ ஓடும். வெஸ்ட் கோட்டுகளில் மேல்பக்கத்துப் பை உஷ்ணம் குறைந்திருக்குமாகையால், கடியாரத்திலுள்ள ஹேர் ஸ்ப்ரிங் என்னும் கம்பியின் நீளத்தில் வித்யாஸம் ஏற்பட்டு கடியாரம் சரியாகப்போகாது. மேலும் இந்த இடத்திலுள்ள பையில் கடியாரம் சரியான நிலைமையில் இராது. அதனாலும் கடியாரம் சரியாய் ஓடாமல் போகும். பை பெரியதாகவும், கடியாரம் வைப்பதற்கு ஏற்ற விதமாய் அமையாமலும் இருந்தால், கடியாரம் விற்பவர்கள் கடியாரத்தை வைத்துக்கொள்ளக் கொடுக்கும் ஷாமாய் பையிலாவது மற்ற பையிலாவது வைத்து, அந்தப் பையுடனேயே சட்டைப் பையில் வைத்துக்கொள்ளவேண்டும். கடியாரப் பையும் சட்டைப் பையின் துணியும் கெட்டியாய்ப் பொருந்தியிருக்குமாகையால், கடியாரம் வைத்த நிலைமையை விட்டு அதிகம் மாறாது. கடியாரம் சாயாமல் நேராய் இருப்பதே அதற்கு சரியான நிலைமையாகும். வீட்டிற்குப் போனா

வுடன் கடியாரத்தை சட்டைப்பையிலிருந்து எடுத்து வெளியில் வைக்கக்கூடாது. சட்டைப் பையில் இருந்தால், வீட்டின் சீதோஷ்ண பேதங்களால் அதற்குக் கெடுதல் ஒன்றும் நேராது.

கடியாரத்தின் பின்புறத்தில் உள்ள பாகங்களில் தூசி சேராதபடி ஜாக்ரதையாக இருக்க வேண்டும். கடியாரம் வைக்கும் சட்டைப் பையின் உள் புறத்தை அடிக்கடி திருப்பிவிட்டுத் தூசி இருந்தால் உதறிவிடவும். கடியாரத்தை தவறி விழாதபடியும், குலுங்காதபடியும் பார்த்துக் கொள்ளவேண்டும். விழுந்தாலும் குலுங்கினாலும் உள்ளிருக்கும் ஆணிகளில் மிகச் சிறியவை வளைந்துபோகும். அல்லது கடியாரத்தில் உள்ள வைரம் முதலிய கற்கள் ஒடிந்துபோகும்.

கடியாரத்தின் பின்பாகத்தை அடிக்கடி திறந்து பார்ப்பதால், தூசி தும்புகள் உள்ளே போய் தங்கி அதற்குக் கெடுதல் செய்யும். ஜனங்கள் இவ்விதம் செய்யாமலிருக்கத் தான் சில கடியாரங்களின் பின் மூடிகள் லேசில் திறக்க முடியாதபடி அமைக்கப்பட்டிருக்கின்றது. திறந்துள்ள கடியாரங்களில் மூச்சுவிட்டால், மூச்சிலுள்ள நீராவி கடியாரத்தின் இரும்புப் பாகங்களில் தங்கி அவைகளைத் துருப்பிடிக்கச் செய்யும். சுருட்டுப் பிடிக்குமிடத்தில் திறந்தால், சுருட்டின் சாம்பல் பறந்து வந்து கடியாரத்தின் உள்பாகத்தில் தங்கக்கூடும். ஆகவே கடியாரத்தை அடிக்கடி திறப்பது நல்லதல்ல.

மின்ஸார யந்த்ரங்களுக்குப் பக்கத்தில் கடியாரங்களைக் கொண்டுபோவதும் உசிதமல்ல. அப்படிக் கொண்டுபோவதால் கடியாரங்களுக்குக் கெடுதலேற்படலாம்.

கொஞ்ச காலத்துக்கு ஒரு தடவை கடியாரத்தை நல்ல கடியார ரிபேர்க்காரனிடம் கொடுத்து, எண்ணெய் போட்டு சுத்தம் செய்யச் சொல்லவேண்டும். க்ரமமாக அதை சுத்தம் செய்து வந்தால் கடியாரம் அதிக காலம் சரியாகப்போகு

## THE ARKA PLANT.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## எருக்கன் செடி.

ஸாதாரண எருக்கு, வெள்ளெருக்கு என எருக்கன் செடியில் இரண்டு வகைகள் உண்டு. இச்செடி வஞ்சையர்கள் வீடுகளிருந்து பாழ்த்துப்போன நத்தவாய் நிலங்களிலும் கடலோரமான மணல் வெளிகளிலும், ஆற்றுவண்டல் அதிகம்படிந்துள்ள மணல் சாரியான இடங்களிலும், வைத்து ஆதரித்துத் தண்ணீர் ஊற்றிப் பாதுகாப்போரில்லாமல் காட்டுத்தனமாய்க் கொழுத்து ஏராளமாய் வளர்ந்திருக்கக் காணலாம்.

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே,
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே,
மன்றோரம் சொன்னார் மனை.

ந்யாய ஸபையில் அஸத்யம் பேசியவர் வீட்டில் வெள்ளெருக்குப் பூக்கட்டும் என்று சொல்லியதிலிருந்து எருக்கன் செடி வீட்டில் முளைப்பது கெடுதல் என்று ஏற்படுகிறது. 'நீங்கள் எக்கேடென்றாலும் கெட்டு எருக்கு முளைத்துப் போங்கள்' என்றும், "உன் மூஞ்சியில் எருக்கை வெட்டி அடிக்க" என்றும் சொல்வதிலிருந்து எருக்கன் செடியை ஜனங்கள் மிகவும் அவமதித்திருக்கிறார்களென்று தெரிகிறது. இப்படி ஜனங்களால் கருதப்படும் அமங்கலப் பொருளுக்குக் கௌரவம் கொடுக்கக் கருதித்தான்போலும் ஸ்ரீ பார்வதீநாதன் இதை சிரஸில் தரித்துக் கொள்கிறார்.



எருக்கன் செடிகள் கொள்ளிடக் கரையோரத்தில் எங்கு பார்த்தாலும் காட்டுத்தனமாய்ச் செழித்துக் கொழுத்து ஏராளமாய் வளர்ந்திருக்கின்றன.

ஸாதாரண எருக்கு எங்கு பார்த்தாலும் ஏராளமாய் உண்டாவதுபோல், வெள்ளெருக்கு உண்டாகாமல் அங்குமிங்குமாய் அபூர்வமாய் உண்டாகிறது. எருக்கு ஏராளமாய் உண்டாகும் பூமியிலுள்ளவர்களில் சிலர் இதன் அருமை தெரிந்து, இதைப் பலவிதத்திலும் உபயோகிக்க ப்ரயத்தனப்படுகிறார்கள். எருக்கன் கிளைகளில் நன்றாக முதிர்ந்தவற்றை வெட்டி எடுத்துப்போய் பட்டைகளை உரித்து அதிலிருந்து வெள்ளை நிறமான அழுத்தமான நார் எடுக்கிறார்கள். இந்நாரால், ஜலத்தில் மீன் பிடிக்கத் தேவையான மீன் வலைகளைப் பின்னி உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். இந்த நாரால் பின்னப்பட்ட மீன் வலைகள் மிகவும் உறுதியானவை. இவை நெடுநேரம் நீரில் கிடந்தாலும் மட்குவதேயில்லை. பெரிய மீன்கள் வலையில் சிக்கினாலும், வலைக் கயிறு லேசில் அறுந்துவிடுவதில்லை. இந்த நூல் பட்டு நூலைவிட நயமும் உறுதியுமானதுமாம். இன்னும் ஸாதாரண கயிற்றின் விலையைவிட எருக்கன் கயிறு இரண்டு பங்கு அதிக விலை கொண்டது. வலைஞர்களாயும், மீன் பிடிப்பவர்களாயும் காலம் தள்ளுபவர்கள் இந்த நாரை எடுத்து பத்ரமாய் வைத்துக்கொண்டு உபயோகிக்கிறார்கள்.

இன்னும் இந்த நாரை எடுத்து முறுக்கிக் குழந்தைகளின் இடுப்பில் அரைநாணாகக் கட்டி வைக்கிறார்கள். இவ்வரைநாண் கட்டியிருக்கும் குழந்தைகளருகில் துர்த்தேவதைகள் வர பயப்படும் என்பது ஹிந்துக்களின் நம்பிக்கை. ஆகவே தான் மந்த்ரவாதிகள் இந்த எருக்கன் நாரை ரொம்பவும் கொண்டாடுகிறார்கள். ஸாதாரண எருக்கன் நார் இப்படிப்பட்ட கார்யத்திற்கு உபயோகமானாலும், வெள்ளெருக்கன் நாரே மேற்கூறிய கார்யங்களுக்கு விசேஷமாக உபயோகப்பட்டு ச்ரேஷ்டமென்று கொண்டாடப்படுகிறது. இந்த நார் பட்டுக்கும் மேலாகக் கருதப்படுவதால், தர்ப்பைகளால் ஆஸனங்கள் செய்து கொள்ளும் வைதீக ச்ரேஷ்டர்கள், அவ்விஷயத்தில் இந்த நாரை உபயோகப்படுத்துகிறார்கள்.

வெகு அபூர்வமாகக் கிடைக்கும் வெள்ளெருக்கின் இலை அர்க்க பத்ரம் என்றும், அதன் பூ அர்க்க புஷ்பமென்றும் சொல்லப்பட்டு ஈச்வர பூஜைக்கு உபயோகப்படுகிறது.

எருக்கன் செடியில் அடிமுதல் நுனித்தளிர் வரையில் எங்கு கிள்ளினாலும் தடிப்பான பால் வடியும். இந்தப்பால், ஆடுமாடுகளின் பாலைவிட அதிகத் தடிப்பாயிருக்கும். ஒரு கிளையிலுள்ள இலையையோ அல்லது காம்பையோ ஒடிக்க, அக்கிளையிலுள்ள எல்லாப் பாலும் அதன் வழியாய் வடிந்து விடுமாகையால், அப்படி அக்கிளையில் ஒரு பக்கத்தில் வடித்துக் கொண்டு பிறகு மற்ற பக்கங்களில் உள்ள இலையை அல்லது காம்பை ஒடித்துப் பார்த்தாலும் பால் வரமாட்டாது. அதிலிருந்து ஒரு கிளையிலுள்ள காம்புகளுக்கும் இலைகளுக்கும் நேரான ஸம்பந்தமிருக்கிறதென்று அறிய வேண்டியிருக்கிறது.

### வெள்ளெருக்குக் கிளைகள்.

வெள்ளெருக்குச் செடிகளில், நன்றாகக் கொழுத்து வளர்ந்த அடிக் கட்டைகளை வெட்டிக் கொண்டுபோய் சில்பிகள், பார்வதி பதமேச்வரன், விக்நேச்வரன், ஸுப்ரமண்யன் போன்ற விக்ரஹங்களைச் செய்து ஆராதனைக்குரியதாக்குகிறார்கள். இந்த வெள்ளெருக்கன்

கட்டையினால் செய்த விக்ரகங்களை மந்த்ர பூர்வமாய் ப்ரதிஷ்டை செய்து ஆராதிக்க, இவை மிருந்த ஸௌகர்யத்தைச் செய்யக் கூடியனவா யிருப்பதாகத் தெரிகிறது. இந்த பிம்பங்களுக்கு அபிஷேகம் முதலியவைகளை மர்யாதை பூர்வமாய்த்தான் செய்யவேண்டும்.

ஸுமார் 25 வர்ஷகாலங்களுக்கு முன்னால், நாடக மேடைகளில் அரிச்சந்த்ர நாடகங்கள் போன்றவைகளை, பொம்மைகள் மூலமாய் நடித்துக் காட்ட பலரும் பார்த்திருக்கலாம். இந்த பொம்மைகளை ஆட்டுவதில் ப்ரம்மஸ்ரீ நாணுவையங்கார் என்பவர் ப்ரக்யாதிபெற்றிருந்தார். அவர் கும்பகோணத்திற் கடுத்த சிக்க நாயக்கன் பேட்டையைச் சேர்ந்தவர். அவர் அரிச்சந்த்ர நாடகத்தில் ஆட்டின சந்த்ரமதி பொம்மை வெள்ளெருக்கன் கட்டையினால் செய்யப்பட்டது. இந்த பொம்மை ஸர்வ லக்ஷணமும் கொண்டு விளங்கி வருவதை நாம் கண்ணால் கண்டிருக்கிறோம். இதற்கு ஸுமார் 500 ரூபாய் வரையில் ஆடையாபரணங்கள் போட்டிருந்தார். இதை நாடக மேடையில் அவரே கொண்டுவந்து ஆட்டுவார். இன்றும் அந்த பொம்மையை அவரது வம்சத்தோர் பூஜையில் வைத்துப் போற்றிக் கொண்டாடி வருகிறார்கள். இந்த வெள்ளெருக்குப் பொம்மையே அவர் நாடகத்தில் சிறப்புப் பெற்றதற்கும் பிறவற்றிற்கும் காரணமென்று பலர் சொல்லுவதுண்டு.

### எருக்கு மலர்கள்.

வெள்ளை, கறுப்பு, மஞ்சள் முதலிய வர்ண பேதங்களுடன் எருக்கன் செடிகளில் புஷ்பங்கள் கொத்துக் கொத்தாய்ப் பூத்திருப்பது பார்க்க அழகான காட்சியாகும். கொத்தொன்றுக்கு 25-க்குக் குறையாமல் மொக்கு கட்டிப் பூத்திருக்கும். இப்படிப்பட்ட எருக்கன் மொக்குகளைப் பார்க்கும்போதெல்லாம், அதனருகேபோய் அவற்றை அமுக்கிச் சத்தப் படச்செய்து போவது பெரியோர்களின் ஸம்ப்ரதாயம். அதற்குக் காரணம் இன்னதென்று விளங்கவில்லை. எருக்கன் காய்களும் குலை ஒன்றிற்கு 15-க்குக் குறையாமல் காய்த்துத் தொங்கும். இவை முற்றி வெயிலில் வெடிக்க இவற்றினுள்ள மெத்தென்ற பஞ்சுகள் எட்டுக் கால் பூச்சி போன்ற உருவத்துடன் காற்றில் வெகு வேகமாய்ப் பறக்கும். இந்தப் பஞ்சு நமது தேசத்தில் சில இடங்களில் மெத்தை தலையணைகளுக்கு அடைக்கவும், மீன் பிடிக்கும் வலைகளுக்கு நூல் நூற்கவும் உபயோகப்படுகிறது.

பண்டித. வீ. ஸுப்ரமணிய அய்யர்.

## BIRD TRAPS.

## பறவைகளைப் பிடிக்க உபாயங்கள்.

பயிர்களுக்கு காக்கை முதலிய பறவைகளால் ஏற்படும் சேதம் அதிகம். இந்தப் பறவைகளைப் பிடித்து அழிக்க ப்ரான்ஸ் தேசத்திய வ்யவஸாயிகள் சில முறைகளைக் கையாடி வருகிறார்கள். அவைகளில் சிலவற்றை இங்கு விவரிக்கிறோம்.

காக்கைகள், முக்யமாக, வயல்களில் விதைத்துள்ள சோளம் முதலிய தான்யங்களைக் கிளறியெடுத்துத் தின்பதில் ப்ரியமுடையவை. அவைகளைச் சுட்டுக் கொல்லலாமென்றாலோ, அவை அதிக முன்ஜாக்ரதையுள்ளவை. ஆயுதமெடுத்துக்கொண்டு அவைகள் இருக்குமிடம் யாராவது வந்தால், அதை அந்தப் பறவைகள் எப்படியோ தெரிந்துகொண்டு ஓடிவிடுகின்றன. ஆகையால் அவைகளைச் சுட்டுக் கொல்லுவது அநேகமாய் ஸாத்யப்படுவதில்லை.

காகங்களுக்கு ஆந்தைகள் ஜன்ம சத்ருக்களாகும். ஏதாவது ஒரு ஆந்தை தப்பித்தவறி பகலில் வெளிப்பட்டு விட்டால், காக்கைகளெல்லாம் கூடி அதன்மேல் பாய்ந்து தங்களுடைய அலகால் கொத்தி உபத்ரவப்படுத்தும். ஆந்தைக்குப் பகலில் கண் நன்றாய்த் தெரியாதாகையால், அது காக்கைகளிடமிருந்து தப்புவது கஷ்டம்.

காக்கைகளின் இந்த குணத்தை அனுஸரித்து ஒரு ப்ரெஞ்சுக்காரர் காக்கைகளைக் கொல்லப் பின்வருமாறு சொல்லுகிறார்.

வயல்களில் ஒருவருக்கும் தெரியாமல் மறைவாயிருக்க ஒரு இடம் ஏற்படுத்திக் கொண்டு, அங்கே துப்பாக்கியும் கையுமாக இருந்துகொண்டு அந்த இடத்துக்குப் பக்கத்தில் பறவைகள் உட்காரக்கூடிய ஒரு மரக்கிளை அல்லது கழியில் ஒரு உயிருள்ள ஆந்தையையோ, அல்லது செத்த ஆந்தையின் உள்புறத்தில் பஞ்சு முதலியவைகளை அடைத்து அதையோ உட்காரவைத்து விடவேண்டும். காக்கைகள் ஆந்தையைக் கண்டு கூட்டமாக வந்து அதைக் கொத்தும். அப்போது துப்பாக்கியால் சுட அநேக காக்கைகள் இறந்துபோகும். இந்த முறை ஆயுதச் சட்ட நிர்ப்பந்தங்கள் இல்லாத தேசங்களுக்கே ஏற்றது. மேலும் யாவருக்குமே துப்பாக்கியை உபயோகிக்க இஷ்டமிராது. அவர்களுக்கு ஏற்றதாக ஒரு முறை இருக்கிறது.

கடுதாசியால் கோமாளிக் குல்லாய்போல் அதாவது சர்க்கரைப் பொட்டலத்துக்கு சுருட்டுவதுபோல் சுருட்டவேண்டும். வாயை மூடக்கூடாது. அதன் உள்புறத்தில் நல்ல பசையைத் தடவவேண்டும். லின்ஸீட் எண்ணெய் அதாவது ஆழி விதை எண்ணெயை வெகுநேரம் காய்ச்சினால் அது பசையாகி விடும். அதை நமது தேசத்தார் உபயோகிக்கலாம்.

இந்தக் கடுதாசிக் குழாய்களை வயல்களில் போட்டு, அவைகளின் உள்ளே தான்யங்களையாவது பருப்பு வகைகளையாவது போட்டு வைத்தால், காக்கைகள் தான்யங்களைக் கொத்துவதற்காக தங்கள் அலகுகளை கடுதாசியின் உள்புறத்தில் விடும். உள்புறம் பசையாக இருப்பதால், கடுதாசி அலகில் ஒட்டிக் கொள்ளும். ஒட்டிக்கொண்டதும் காக்கைகள் பயமடைந்து உடனே உயரப் பறக்கும். கடுதாசி கண்ணை மூடியிருப்பதால், காக்கைகளுக்குக் கண்தெரியாது. ரொம்ப உயரப் பறந்ததும், ச்ரமத்தால் மறுபடியும் கீழே விழுந்துவிடும். பிறகு அவைகளை ஸுலபமாய்ப் பிடித்துக் கொன்று விடலாம்.

ஸ்ப்ரிங் வைத்த பொறிகளை உபயோகித்துக் காக்கைகளைப் பிடிப்பதுமுண்டு. அந்தப் பொறிகளில் செத்த ம்ருகங்களையாவது பறவையையாவது உணவாக வைக்கவேண்டும். மனிதர்கள் தொட்ட வாஸனை கொஞ்சம் இருந்தால் கூட பொறியில் காக்கை விழுவது கஷ்டமாம். ஆகையால் அதிக வாஸனையுள்ள தழைகளை பொறியின்மேல் போட்டு இழுத்தால், தழையின் வாஸனையே அதிகமாக இருக்கும். பொறியைக் கையால் எடுத்து வைக்கக்கூடாது. குறட்டால் தான் எடுத்துவைக்க வேண்டும். பொறிகளுக்கு பச்சை வர்ணம் பூசினால், காக்கைகளை ஏமாற்றுவது ஸுலபம்.

யுக்தி போதினி.

இதில் எலி, கரப்பு, எறும்பு, கறையான், வௌவால், ஈ, கொசு, மூட்டுப்பூச்சி முதலிய உபத்ரவஞ் செய்யும் ப்ராணிகளைத் தொலைக்க வழிகளும், வஸ்த்ரம் முதலியவைகளை சுத்தம் செய்தல், கறைகளைப் போக்குதல்; பொருள்களைப் பாதுகாத்தல், கண்ணாடி, பீங்கான், ஜோடுகள், கடியாரங்கள் முதலியவைகளைப் பராமரித்தல் முதலிய அநேக யுக்திகள் அடங்கியிருக்கின்றன. விலை அணா 10.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3. 4. கொண்டிசெட்டித் தெரு, ஜார்ஜ்டவுன்,
மதராஸ்.

## NEW METHODS IN BREAD MAKING.

### ரொட்டி செய்வதில் புதுமுறைகள்.

ப்ரான்ஸில் கோதுமை குறைந்து போகவே, கவர்ன்மெண்டார் தங்களுடைய ஸைன்யங்களுக்கு ரொட்டி செய்வதில் உயர்ந்த கோதுமை மாவை மாத்ரம் உபயோகிப்பது போதாதென்று, மட்டமான மாவையும் உபயோகிக்கலானார்கள். முன்பு கோதுமையின் உள்ளேயிருக்கும் உயர்ந்த மாவையே உபயோகித்து வந்தார்கள். மற்ற பாகங்களை விலக்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார் கோதுமையின் வெளிப்புறத்திலுள்ள பழுப்பு நிறமான பாகத்தையும் சேர்த்துக் கொள்ளலாமென்று சொன்னார்கள். இதனால் ரொட்டியானது மட்டமாயும், பழுப்பாயும் இருந்ததோடு, சீக்ரம் புளித்துக் கெட்டுப்போயும் வந்தது. ருசியும் நன்றாயில்லை. அநேகருக்கு இது சரிவர ஜீர்ணமாவதில்லை.

ராணுவ ரொட்டிச் சாலையில் செய்யப்படும் ரொட்டி, கிடங்குகளிலுள்ள ஸோல்ஜர்களுக்குப் போவதற்கு மூன்று நான்கு நாள் செல்லும். இதற்குள் ரொட்டி பூஞ்சணம் பிடித்தும் புளித்தும் போய் தின்ன யோக்யமாயிருப்பதில்லை. இதனால் கவர்ன்மெண்டார் இந்தப் புது ரொட்டி கெடாமலிருக்க என்ன செய்யலாமென்று பரீக்ஷைகள் செய்ய ஏற்பாடுகள் செய்தார்கள். ரொட்டிக்கு மாவைப்பிசையும் போது, சிறிது சுண்ணாம்பு ஜலத்தைக் கலந்தால், புளிக்கும் தன்மை போய்விடுமென்று இந்தப் பரீக்ஷைகளால் தெரியவந்தது.

இந்தப் புது ரொட்டி ஸுகாதாரத்துக்கு ஏற்றதாயிருப்பதோடு, ருசியும் முந்திய ரொட்டியைவிட நேர்த்தியாய் இருக்கிறதாம். இரண்டு வித ரொட்டிக்கும் செய்முறை ஒன்றுதான். ஆனால் புளிப்புச் சேர்க்கும்போது ஜலத்துக்கு பதிலாக சுண்ணாம்பு ஜலத்தைச் சேர்க்கிறார்கள். இந்த சுண்ணாம்பு ஜலம் செய்ய, சுண்ணாம்புக் கல்லில் சிறிதளவு ஜலம் விட்டு அதைத் தாளிக்கவேண்டும். சுண்ணாம்பு பொடியான பிறகு அதை ஜலத்தில் கரைத்து, தெளிவு ஜலத்தை மாத்ரம் எடுத்துக்கொள்ளவேண்டும்.

இந்த முறையால் செய்யப்படும் ரொட்டியில், கோதுமையில் நூற்றுக்கு 85 பாகம் மா சேர்க்கப்படுகிறது. கோதுமையில் இவ்வளவு பாகம் சேர்க்கப்படுவதால், அதிலுள்ள அநேக ஸத்துக்கள் உணவில் சேருகின்றன. ஸாதாரண வெள்ளை மா ரொட்டியில் உள்ள ஸத்தைவிட இந்த ரொட்டியில் அதிக ஸத்து இருக்கிறது. அதோடு இந்த ரொட்டி அதிக நாள் புளிக்காமலும் இருக்கிறது.

### ரொட்டி செய்வதில் கடல் ஜலத்தின் உபயோகம்.

ரொட்டி கெடாமலிருக்க வேண்டுமானால் உப்பு சேர்க்கவேண்டியது அவச்யமாகும். ஸாதாரணமாக 100 ராத்தல் ரொட்டிக்கு 1 ராத்தல் உப்பு சேர்க்கவேண்டும். இப்போது ப்ரான்ஸில் சிலர் ரொட்டி செய்யும்போது ஸாதாரண ஜலத்துக்குப் பதிலாக கடல் ஜலத்தை உபயோகிப்பது நல்லது என்றும், கடலோரமாக உள்ள ஊர்களில் இருக்கும் ரொட்டிக்காரர்கள் கடல் ஜலத்தை உபயோகித்து ரொட்டி செய்யலாமென்றும் சொல்லுகிறார்கள்.

ரொட்டி செய்வதில் கடல் ஜலம் உபயோகிப்பது புதிதல்ல. 1870-ம் வர்ஷத்தில் ப்ரான்ஸைச் சேர்ந்த ஹாவர் பட்டணத்திலிருந்து அமெரிக்காவிலுள்ள ஸான்ப்ரான்ஸிஸ்கோ பட்டணத்துக்குப் போன ஒரு கப்பலில் ப்ரயாணம் முழுவதும் இந்த ரொட்டிதான் உபயோகிக்கப்பட்டது. அந்தக் கப்பல் ப்ரயாணம் 5-மாஸம் பிடித்தது. கப்பலில் 41-பேர்கள் இருந்தார்கள். அவர்களுள் எவரும் வ்யாதி அடையவில்லை. ப்ரான்ஸில் ஷெர்பூர் பட்டணத்தில் மாத்ரம் ரொட்டி செய்ய கடல் ஜலம் உபயோகிக்கலாமென்று கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அந்த ஊருக்குப் போயிருந்தவர்கள் எல்லாரும், அங்கே செய்யப்படும் ரொட்டி நேர்த்தியாயிருப்பதாகச் சொல்லுகிறார்கள்.

கடல் ஜலம் சேர்ந்த ரொட்டி அநேக விஷயங்களில் மேலானது. அது எட்டு நாள் வரையில் கெடுவதில்லை. கடல் ஜலத்திலுள்ள தாதுப் பொருள்கள் தேகத்துக்கு போஷணையை உண்டாக்குகின்றன. அந்த ரொட்டி குழந்தைகளுக்கும் வ்யாதி குணமடைந்து வருகிறவர்களுக்கும் மிகவும் நல்லது. அது-குன்மம், க்ஷயம், கண்டமாலை ஆகிய இந்த நோய்களால் வருந்துகிறவர்களுக்கு ஏற்ற உணவென்று வைத்யர்கள் சொல்லுகிறார்கள்.



## KALAMEGAM.

By S. NARASIMHACHARIAR, B. A., B. L.,
*High Court Vakil, Madras.*

### காளமேகப் புலவர்.

தமிழ் பாஷையில் அற்புதமான பாடல்கள் பாடி, அழியாக் கீர்த்தி பெற்ற பாவலர்களில் காளமேகப் புலவர் ஒருவர். மற்ற கவிகளுக்கும் இவருக்கும் ஒரு பெரிய வித்யாஸம் உண்டு. அதாவது, கம்பர், புகழேந்தி, நாயன்மார், வில்லிப்புத்தூரார் முதலியோர் இதிகாஸங்களையாகிலும், காவ்யங்களையாகிலும், அல்லது மற்ற ப்ரபந்தங்களையாகிலும் பாடி, பாவலர் என்னும் பெயர் பெற்றார்கள். ஆனால் காளமேகமோ, அப்படிப்பட்ட இதிகாஸம், காவ்யம், ப்ரபந்தம் முதலிய நூல்களினால் கீர்த்தி பெறாமல், அந்தந்த ஸந்தர்ப்பங்களில் ஸமயோசிதமாகப் பாடிய தனிப் பாடல்களினாலேயே என்றும் அழியாத கீர்த்தி பெற்றுள்ளார்.

கடவுள் கடாக்ஷம் மிகுந்து, பிறக்கும் போதே புலவர் என்று யாவரும் புகழும்படி கவித்வம் பெற்றவர், சில புலவர். ஆனால், காளமேகம் அப்படிப்பட்ட அத்ருஷ்டம் பெற்றவர் அல்லர். தம்முடைய ஆயுவில் பாதியும் கழிந்த பின்புதான் இவர் ஸரஸ்வதி கடாக்ஷம் பெற்றுப் புலவரானார்.

இவர் ஜாதியில் வடம ப்ராம்மணர். இவர் பிறந்த இடம், காவேரிக் கரையிலுள்ள புண்ய க்ஷேத்ரமான கும்பகோணம். ஆனால், இவர் தமது ஊரிலே தங்கியிராமல், ஸ்ரீரங்கத்துக்குப் போய் அங்கே, ரங்கநாத ஸ்வாமியினுடைய ஆலயத்தில், சமையல்காரனாக அமர்ந்திருந்தார். இப்படி சிலகாலம் கழிந்த பிறகு, விதிவசத்தாலோ, அல்லது பூர்வ ஜன்ம புண்யபலத்தாலோ, ஸ்ரீரங்கத்துக்கு ஸமீபத்திலுள்ள ஜம்புகேச்வரர் கோயிலில் மிராசுள்ள மோகனாங்கி என்னும் பெயர் கொண்ட தாஸியை நெருங்கி, அவள்மேல் தாம் கொண்ட மோகத்தால், ரங்கநாத ஸ்வாமி கோயில் வேலையை விட்டு, ஜம்புகேச்வரர் கோயிலிலே பரிசாரகராய் அமர்ந்துகொண்டார்.

இருவரும் ரொம்ப அந்யோந்யமாய் இருந்தார்கள். ஒவ்வொரு நாளும், மடைப்பள்ளி வேலை முடிந்த பிறகு, மோகனாங்கிக்காகக்

காத்திருந்து, அவளையும் அழைத்துக்கொண்டு போவது இவருடைய வழக்கம். இப்படியிருக்கையில், ஒருநாள் இரவில், மோகனாங்கிக்குக் கோயிலில் பணிவிடை அதிகமாய் இருந்தபடியால், இவர், தம்முடைய வேலையை முடித்துவிட்டு, நெடுநேரம் காத்திருந்தும், அவள் வரவில்லை. அன்று வேலை அதிகமாக இருந்ததனால், இவர் ஒரு மண்டபத்தில்படுத்து அயர்ந்து நித்ரை போனார். தாஸியும், தன்னுடைய வேலை முடிந்தவுடன், இவரைக் கோயிலெங்கும் தேடியும் காணாமல், தான் மாத்ரமே வீடுபோய்ச் சேர்ந்தாள்.

நிற்க, வித்தையிலாகிலும் செல்வத்திலாகிலும் யோகத்திலாகிலும் அபிவ்ருத்தியை அடைய விரும்புவோர், ஸரஸ்வதியையாவது லக்ஷ்மியையாவது, பரமசிவனையாவது, (அல்லது தாம் பூஜிக்கும் கடவுளையாவது) உபாஸிப்பது வழக்கம். அப்படியே, அவ்வூரில் வஸித்த ப்ராம்மணன் ஒருவன், ஸகல கலைகளையும் தெரிந்துகொள்ள அபேக்ஷைகொண்டு, அதற்காக, ஸரஸ்வதி தேவியை நெடுநாளாக உபாஸித்து வந்தான். அன்றிராத்ரி, ஸரஸ்வதி, அவனுக்குப் ப்ரத்யக்ஷமாக எண்ணங்கொண்டு, அழகு மிகுந்த ஒரு சிறு பெண்ணின் உருவங்கொண்டு, அந்த ப்ராம்மணன் அருகில் போய், "என் வாய்த் தம்பலத்தை உமிழ்கிறேன், உன் வாயைத் திறந்துகொள்" என்று ஆக்ஞாபித்தாள். தன் உபாஸனையைக் கெடுத்துவிடுவதற்காக, பல சோதனைகளும் நேரும் என்று எதிர்பார்த்து, அவற்றிற்கு இடங்கொடாதபடி திடசித்தமாயிருந்த அந்த ஏழை ப்ராம்மணன், தன் எதிரே நிற்கும் பெண்ணின் நிஜரூபத்தை அறிந்துகொள்ளாமல், அது தன் உபாஸனையைக் கெடுக்க வந்த உருவம், என்று தப்பான எண்ணங்கொண்டு, தேவியைப் பார்த்து, "ச்சீ! உன் மாயத்தில் சிக்குபவன் நானல்ல. என் எதிரே நில்லாமல் ஓடிப்போ," என்று கோபத்தோடு பதில் சொன்னான். உடனே ஸரஸ்வதியும், அவனை வெறுத்துவிட்டு, அவ்விடத்திலிருந்து வருகையில், அப்போதுதான் நித்ரையிலிருந்து விழித்த காளமேகத்தைப் பார்த்து, வாயைத் திறக்கும்படி அவனுக்கு உத்தரவு செய்தாள். நித்ரை மயக்கம் தெளியாத சமையல்காரன்; தன் எதிரே இருப்பவள் மோகனாங்கியே என்று நினைத்து, அவளிஷ்டப்படி நடக்காவிட்டால் அவளுக்குக் கோபம் வந்துவிடுமே, என்று பயந்து, தன் வாயைத் திறந்தார். ஸரஸ்வதியும், தம்பலத்தை அவர் வாயில் உமிழ்ந்துவிட்டு, நொடிப்பொழுதில் மறைந்துபோனாள். அந்த நிமிஷம் முதல், கலைவாணியின் கருணையினால், பரிசாரகன் பெருங் கவிஞன் ஆனான். உடனே, நல் உணர்வு வந்து, தன் கண்ணெதிரில் தோன்றிய தேவி, இன்னார் என்று அறிந்து, அப்போதே அவளை ஸ்தோத்ரம் செய்து, பிறகு, பல நாடுகளுக்குப் போய் அங்கங்கே யுள்ள புண்ய க்ஷேத்ரங்களில் கோயில் கொண்டுள்ள கடவுளைத் தர்சிக்க உத்தேசித்து, மறுதினமே ஜம்புகேச்வரத்தினின்றும் புறப்பட்டார்.

கருத்த மேகமானது, எப்படி மழையைச் சடசடவென்று கொட்டுகிறதோ, அந்த விதமே, கணக்கில்லாத பாடல்களைப் பாடும் வல்லமையை, ஸரஸ்வதி இவருக்கு அருள் செய்தபடியால், இவருக்குக் 'காளமேகம்' என்னும் காரணப் பெயர்கிடைத்தது. ('காளமேகம்' என்னும் சொல்லுக்குக் 'கருத்த மேகம்' என்று பொருள்). தாம் சென்று தர்சித்த ஸ்வாமிகளையெல்லாம் இவர் பாடியிருக்கிறார். ஆனால், மற்ற புலவர்கள் பாடிய ஸ்தோத்ரப் பாடல்களுக்கும் இவருடைய பாடல்களுக்கும் ஒரு பெரிய வித்யாஸம் உண்டு. நாற்பது அடி உயரமுள்ள கோயில் மதிலை, 'ஆகாயம் முட்டிய மதில்' என்றும்,



ஒரு மனுஷ்யனுடைய கழுத்தளவு ஆழங்கூட இல்லாத கிணற்றை, 'ஆதிசேஷனுக்கு இருப்பிடமான பாதாள லோகம் வரையிலும் ஆழமுள்ள கிணறு' என்றும், வாய் போனபடி பிதற்றும் பிற்காலத்திய போலிப் புலவர்கள் போலப் பொய் சொல்லாமல், தாம் பார்த்த விஷயங்களை, உள்ளது உள்ளபடி சிறந்தபாடல்களில் வர்ணித்து, கேட்போர் மனம் ஆநந்தம் அடையும்படி செய்யக்கூடியவர். மேலும் 'நிந்தாஸ்துதி' பாடுவதில் இவருக்கு ஸமானம் இவரே யென்று சொல்லவேண்டும்.

'நிந்தாஸ்துதி' யென்றால், 'இகழ்ச்சிபோன்ற ஸ்தோத்ரம்' என்று அர்த்தம். அதாவது பாடலைப் பார்த்தால், அதில் பிறரை இகழ்ந்து, சொல்லியிருப்பதுபோலத் தோன்றும். ஆனால், அதன் உள் கருத்தை உற்றுப்பார்த்தால், அது புகழ்ச்சிப் பாடலே யென்றும், அதில் பரிகாஸம் ஒன்றும் இல்லையென்றும் தோன்றும். இதற்கு ஒரு உதாரணம் சொல்வோம்.

கொங்(கு) உலவும் தென் தில்லைக் கோவிந்தக்கோன் இருக்க,
கங்குல் பகல் அண்டர் பலர் காத்திருக்க,—செங்கையிலே
ஓ(டு) எடுத்த அம்பலவா! ஓங்குதில்லை உள்புகுந்தே,
ஆ(டு) எடுத்த(து), என்ன உபாயம்!

இந்தப் பாடல், சிதம்பரத்தில் உள்ள நடராஜஸ்வாமியின் மேல் பாடியது. இதன் வெளிப்படையான பொருள் :—

அழகிய கையிலே (மண்டை) ஓட்டை எடுத்துக் கொண்டிருக்கிற ஸபாபதியே! வாஸனை பொருந்திய தில்லை கோவிந்தன் என்னும் இடையன் அருகே யிருக்கவும், ராப்பகல் (கண் மூடாமல்) அநேக இடையர்கள் காத்துக்கொண்டிருக்கவும், (அவர்களையும் ஏமாற்றி விட்டு,) உயர்ந்த தில்லைவனத்தினுள்ளே புகுந்து, ஆடு திருடிவிட்டாயே, உன்னுடைய ஸாமர்த்யந்தான் எவ்வளவு ஆச்சர்யமானது!".

இந்த அர்த்தத்தை யோசிக்கும்போது, இந்தப் பாடலால், கவியானவர், நடராஜர் ஆடு திருடினார் என்று இகழ்ந்து சொல்லியிருக்கிறதாகவல்லவா, தோன்றுகிறது? ஆனால், இதன் உள்பொருள் வேறுண்டு. அது, ஸ்வாமியிடம் பக்தி பாராட்டி, அவரை ஸ்தோத்ரம் செய்வதேயாகும். அந்த அர்த்தம் என்னவென்றால் :—

வாஸனை வீசும் தில்லை கோவிந்தராஜப் பெருமாள் பக்கத்திலே இருக்க, உன்னுடைய நடனத்தின் அழகைக்கண்டு களிப்படைய ஆயிரம் ஆயிரமாக தேவர்கள் காத்துக்கொண்டிருக்க, உயர்ந்து வளர்ந்த தில்லை மரங்கள் நிறைந்த வனமான சிதம்பரத்தில், திருவடிகளை உயர்த்தி, நீ நடனம் செய்ததின் கருத்தென்ன, என்பதே.

'கோன்' என்னும் சொல்லுக்கு 'இடையன்' என்றும், 'அரசன்' என்றும் இரண்டர்த்தம் உண்டு. முன் சொன்ன பொருளில் 'கோவிந்தக்கோனிருக்க' என்பதற்கு, கோவிந்தனாகிய இடையனிருக்க என்று அர்த்தமாகும். அதாவது, 'ஆட்டுக்கு உடையவனான இடையன் பக்கத்தில் இருக்கையிலே; நீ ஆட்டைத் திருடிக்கொண்டு வந்துவிட்டாய். உன் திருட்டுத்தனம் மிகவும் அதிசயிக்கத் தக்கது,' என்று பொருள்படும். இரண்டாம் அர்த்தத்தில், 'கோன்' என்னும் சொல்லுக்கு, 'ராஜன்' என்று பொருள். அதாவது, கோவிந்தராஜன் பக்கத்தில் இருக்கையில் என்று அர்த்தம். சிதம்பரத்துக்குப் போய் ஸ்வாமி தர்சனம் செய்வோர், நடராஜர் கோயிலுக்குப் பக்கத்தில், கோவிந்தராஜப் பெருமாள் ஸந்நிதியிருப்பதைக் காணலாம். சிதம்பரத்துக்கு, தில்லை வனம் என்றும் பெயருண்டு. ஏனென்றால், முன்னொரு காலத்தில், அந்த ஊர் காடாயிருந்ததென்றும், அக்காட்டில் தில்லை மரங்கள் நிறைந்திருந்தன என்றும் பெரியோர்

சொல்வதுண்டு. ‘அண்டர்’ என்னும் சொல்லுக்கு ‘இடையர்’ என்றும், ‘தேவர்கள்’ என்றும் இரண்டர்த்தம் உண்டு. முதலில் சொன்ன அர்த்தப்படி, ‘கங்குல் பகல் அண்டர் பலர் காத்திருக்க’ என்பதற்கு, ‘இராப்பகல் தூங்காமல், பல இடையர்களும் (ஆட்டைக்) காப்பாற்றிக் கொண்டிருக்கையில’ என்று அர்த்தமுண்டாகும். இரண்டாவது சொன்ன அர்த்தத்தின்படி, ‘கங்குல் பகல் அண்டர் பலர் காத்திருக்க’ என்பதற்கு, ‘(உன்னுடைய நடனத்தைப் பார்ப்பதற்காக) பல தேவர்கள் (உன் கோயிலில்) காத்துக்கொண்டிருக்க’, என்று அர்த்தமுண்டாகும். நடராஜருடைய ஆநந்தக் கூத்தைப் பார்ப்பதற்காக தேவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று புராணங்கள் சொல்லுகின்றன.

தன்னோடு நடனம் செய்து, தன்னை ஜயிப்பதாகச் சபதம் செய்த தில்லை நாயகியைத் தோற்கடிப்பதற்கென்றே, ஸபாபதி, தம் திருவடிகளை உயரத்தூக்கி, ‘ஊர்த்வ நடனம்’ செய்தார் என்று புராணங்களில் சொல்லியிருக்கிற ஸூக்ஷ்மப் பொருள் த்வனிக்கும்படி, ‘ஆடு எடுத்தது என்ன உபாயம்?’ என்று காளமேகம் பாடியிருக்கிறார்.

இந்தப் பாடல் நிந்தாஸ்துதிக்கு நல்ல உதாரணமென்று முன்னே சொல்லியிருக்கிறோம். ‘இரண்டு அர்த்தம் உண்டாதல்’ என்ற அர்த்தமுடைய ‘ச்லேஷை’ என்னும் அலங்காரத்துக்கும் இந்தப் பாடலையே உதாரணமாகச் சொல்லலாம்.

நிந்தாஸ்துதி பாடுவது மாத்ரமல்ல; ச்லேஷை பாடுவதிலும் காளமேகம் மிகுந்த ஸமர்த்தர். இவர் பாடியுள்ள சில ச்லேஷை வெண்பாக்களை பின்னால் எழுதுவோமாகையால் நிந்தாஸ்துதிகளைப்பற்றி மட்டுமே, இங்கே எழுதுகிறோம்.

சிதம்பர க்ஷேத்ரத்தில் நடராஜ மூர்த்தியைத் தொழுத பிறகு, இவர் சிவகாமியம்மையை தர்சித்தார். அப்போது இவர் பாடிய நிந்தாஸ்துதி:—

மாட்டுக்கோன் தங்கை, மதுரைவிட்டு, தில்லைவனத்து
ஆட்டுக்கோனுக்குப் பெண்(டு) ஆயினள்—கேட்டிலை
குட்டிமறிக்க, ஒரு கோட்டானையும் பெற்றாள்,[யோ?
கட்டு மணிச் சிற்றிடைச்சி காண்!

இதன் பொருள்:—(நீங்கள்) கேட்டதில்லையா? மாட்டிடையன் தங்கையான பார்வதி, (தன்பிறந்த வீடான) மதுரையிலிருந்து வந்து, ஆட்டிடையனுக்கு மனைவியானாள். (இது மாத்ரமா?) ஆடுமாடுகளின் கழுத்திலே கட்டுவதற்காக மணியைக் கையில் கொண்ட இந்த இடைச்சி, (தொழுவத்திலிருந்து வெளியே ஓடும்) குட்டிகளை மடக்கிக்கொண்டு வந்து, (பட்டியில்) அடைப்பதற்காக, ஒரு (பொதியான) பிள்ளையையும் பெற்றுவிட்டாள். இந்த விநோதத்தைப் பாருங்கள். (இது நிந்தையான பொருள்).

இதன் உள் பொருள்:—

மாடுகள் மேய்க்கும் இடையனாக அவதாரம் செய்த அழகர் தங்கையான பார்வதி தேவி, தன் தகப்பன் வீடான மதுரையை விட்டு, சிதம்பரத்தில் நடனம் செய்யும் நடராஜனைக் கல்யாணம் செய்துகொண்டாள். அன்றியும், தன்னை வணங்குவோர்கள், தமது தலையைக் கைகளால் குட்டிக்கொள்ளும்படி செய்யும் விநாயக மூர்த்தியையும் (பிள்ளையாகப்)பெற்றுவிட்டாள்.

குறிப்பு:—கள்ளழகர், மதுரை மீனாக்ஷியின் அண்ணன் என்று, புராணங்களில் சொல்லியிருக்கிறது. மகாவிஷ்ணு, க்ருஷ்ணாவதாரம் செய்து, மாடுகளை மேய்த்தார் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். விக்நேச்வரர் கோயிலுக்குப்போய் அங்கே ஸ்வாமியை தர்சிப்பவர்கள், தமது கைகளால் தலையில் முதலில் நேரே குட்டிக்கொண்டு, பிறகு கைகளைக் குறுக்காக மாற்றிக் குட்டிக் கொள்வது ஸம்ப்ரதாயம். ‘ஒரு கோட்டான்’ என்றது, பிள்ளையாரை. இதன் பொருள்:—ஒரு கொம்பினையுடைய யானை (=ஒரு+கோடு+ஆன்). விநாயகர் தம்முடைய இரண்டு கொம்புகளில் ஒன்றை ஒடித்து, அதை எழுத்தாணியாகக் கொண்டு பாரதத்தை மகாமேரு பர்வதத்தின் மேல் எழுதினார் என்பது புராணவரலாறு. ‘கட்டுமணிச் சிற்றிடைச்சி’ என்பதற்கு, ‘மணிமேகலையை (அதாவது, ஒட்டியாணத்தை)க் கட்டின மெல்லிய இடுப்பை உடையவள்’ என்று அர்த்தம்.



இவர் திருவாரூருக்குப் போய், அங்கே வீற்றிருக்கிற த்யாகராஜ ஸ்வாமியை ஸேவிக்கையில் பாடியது:—

பார்ஊர் அறிய பலிக்(கு) உழன்றீர்!
பற்றிப் பார்க்கில் உமக்(கு)
ஓர் ஊரும் இல்லை, இருக்க என்றால்;
உள்ள ஊரும் ஒற்றி;
பேர்ஊர் அறியா தியாகர் என்றே,
பெரும்பேரும் பெற்றீர்;
ஆர்ஊரிலே இருப்பீர், இனி?
போய்விடும், அம்பலத்தே.

இதன் பொருள்:—

(சிவபெருமானே!) இந்த உலகத்திலுள்ள எல்லா ஊராரும் அறியும்படி, பிச்சையெடுத்துத் திரிகின்றீர்! (உமது வரலாற்றைப்) பற்றி விசாரிப்போம் என்றால், உமக்கு ஸ்திரமான ஊர் ஒன்றுமில்லை என்றும் (நீர் நாடோடியாய்த் திரிபவர் என்றும்) தெரிகிறது; உமக்கு ஸொந்தமாக இருந்த ஊரும் (பிறிடம்) ஒற்றியாய் இருக்கிறது; உம்முடைய ஊரும் பேரும் இன்னதென்று ஒருவருக்குந் தெரியாதபடி அவ்வளவு ஏழையாயிருந்தும், த்யாகராஜன் என்று மாத்ரம் பெரிய பேரைப்படைத்துவிட்டீர்! இனிமேல் நீர் ஆர் ஊரில் இருப்பீர்? (அதாவது, யாரூரில் இருக்கப்போகிறீர் உமக்கு ஸொந்தமான வீடு வாசல் ஒன்றும் இல்லாதபடியால்), பொதுவிடத்துக்குப் போய்விடும். (அங்கே, ஏனென்று, உம்மை ஒருவரும் கேட்க மாட்டார்கள்).

குறிப்பு:—சிவபெருமான் பிக்ஷாடனர் ஆகையால், ‘பலிக்கு உழன்றீர்,’ என்றார். ‘உமக்கு ஓரூரும் இல்லை’ என்றதன் பொருள்: சிவபெருமான் ஸர்வத்திலும் வ்யாபித்திருப்பதால், அவர் இந்த ஊரில்தான் வஸித்திருக்கிறார் என்று ஒருவராலும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. “உள்ள ஊர், ஒற்றி” என்றதன் அர்த்தம்: சிவபெருமான் ஒற்றியூரில் (அதாவது திருவொற்றியூரில்) கோயில் கொண்டிருக்கிறார். “பேர் ஊர் அறியா” என்றதனால், முழுமுதல் கடவுளாகிய பரமசிவனுக்குப் பேர் இன்னதென்றும், ஊர் இன்னதென்றும், ஒருவராலும் திட்டமாகச் சொல்ல முடியாது என்ற அர்த்தம் விளங்குகிறது. தியாகர்: திருவாரூரில் வீற்றிருக்கும் கடவுளுக்கு, த்யாகராஜ ஸ்வாமி என்று, பெயர். ‘ஆரூரிலே குடியிருப்பீர்’: ஆரூர்=திருவாரூர்; அதாவது ‘நீர், திருவாரூரில் குடியிருக்கிறீர்.’ ‘அம்பலத்தே போய்விடும்’ என்பதன் கருத்து, சிவபெருமான் ‘திருச்சிற்றம்பலம்’ என்னும் பெயர் உள்ள சிதம்பரத்தில் நடன ஸபாபதியாக வீற்றிருக்கிறார்.

பின்பு ஒருகால், திருக்கழுக்குன்றத்துக்குப் போய், அங்குள்ள லிங்க மூர்த்தியை ஸேவிக்கும்பொழுது பாடியது:—

சொல்லில் பெரிய கழுக்குன்றரே!
தொல்லை நாள் முதலாய்
அல்லல் பிழைப்பே பிழைத்து விட்டீர்!
முப்புரத்(து) அவரை
வில்லைப் பிடித்(து) எய்யமாட்டாமல் நீர்
அந்த வேளையிலே,
பல்லைத் திறந்து விட்டீர்! இது, காண்!
நம்படைத் திறமே.

இதன் அர்த்தம்:—

கீர்த்தி மிகுந்த திருக்கழுக்குன்றத்தில் கோயில் கொண்ட மூர்த்தியே! பழைய நாள் தொடங்கி நீர் பிழைத்தது அல்லல் பிழைப்பே. (உதாரணமாக), நீர், த்ரிபுரத்தில் வஸித்த கொடிய அஸுரர்களை (ஜெயிக்க உத்தேசித்து, அவர்களோடு யுத்தம் செய்த போது,) உம்முடைய வில்லை வளைக்கவும் ஸாமர்த்யம் இல்லாமல், பல்லைக் காட்டினீர்! இது தானா, உம்முடைய வீரத்தன்மை?

குறிப்பு:—த்ரிபுரத்திலுள்ளவர்களை ஜயிப்பதற்காகப் பரமசிவன், மகாமேரு மலையை வில்லாக எடுத்துக்கொண்டுபோய், அவர்களிருப்பிடத்தை அடைந்து, கோபச் சிரிப்பால் தமது நெற்றிக் கண்ணைத் திறந்து, அக்னிமயமான அந்தக் கண்ணிலிருந்து கிளம்பின தீயினால் முப்புரத்தையும் எரித்திட்டார். வளையாத மலையே வில்லாயிருந்ததுபற்றி, அதை வளைத்து அம்பு விடாமலிருந்தீர் என்னும் கருத்துத் தோன்றும்படி, 'வில்லைப் பிடித்து எய்யமாட்டாமல்' என்றார்.

இப்படியே, பல ஊர்களுக்கும் போய், ஆங்காங்கு வீற்றிருக்கிற சிவபெருமானையும், மகாவிஷ்ணுவையும், விக்னேச்வரரையும், ஸுப்ரமண்யரையும் நிந்தாஸ்துதியாகவும், இயற்கை ஸ்துதியாகவும், சிறந்த பாடல் பாடித் தொழுதுகொண்டு வருகையில், மதுரைக்குப் போய்ச் சேர்ந்தார்.

அந்தப் பட்டணத்தில், அப்போது, திருமலைராயன் என்ற அரசன் ராஜ்யபாரம் செய்து வந்தான். அவனுடைய ஸபையில், அநேக புலவர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் தலைவன், அதிமதுரம் என்னும் பெயருள்ள அகங்காரம் படைத்த புலவன். அவனைச்சுற்றி அறுபத்து நான்கு புலவர்கள் இருந்தார்கள்.

காளமேகம், மதுரையில் போகும்பொழுது, தெருவில் பல பல்லக்குக்களில், இந்தப் புலவர்கள் போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது, அங்கிருந்த கட்டியங் கூறுபவன், அவ்வூருக்குப் புதிதாக வந்த காளமேகப் புலவரைப் பார்த்து, "அதிமதுர சிங்கம் பராக்! என்று எங்கள் புலவருடைய பெருமையைச் சொல்," என்றான். வழியிலே போகிறவர்களையும் மடக்கித் தொந்தரவு செய்த இவனைப் பார்த்துக் கோபம் மூண்ட காளமேகம், அதிமதுர சிங்கத்தின் காதுக்கெட்டும்படி,

அதிமதுரம் என்றே, அகிலம் அறிய,
துதி மதுரமாய் எடுத்துச்சொல்லும்—புதினம் என்?
காட்டுச்சரக்கு; உலகில், காரம் இல்லாச் சரக்கு;
கூட்டுச் சரக்(கு) அதனைக் கூறு.

என்று பதில் சொன்னார்.

இதன் அர்த்தம்:—

'அதிமதுரம்!' 'அதிமதுரம்!' என்று உலகத்தில் உள்ளவர் யாவரும் அறியும்படியாக, இனிய ஸ்தோத்ரம் செய்கிறீர்களே! (அவ்வளவு ஸ்தோத்ரம் செய்வதற்குத் தக்க) புதுமை இவனிடத்தில் என்ன இருக்கிறது, (ஒன்றுமில்லை). [இவனைப் புகழ்வதைக் காட்டிலும், அதிமதுரம் என்ற மருந்துச் சரக்கை ஸ்தோத்ரம் செய்து], '(அது) காட்டுச் சரக்கு! உலகத்தில் காரம் இல்லாத சரக்கு! தனியாக உபயோகிக்கப்படாமல் பிற சரக்குக்களோடு உபயோகிக்கப்படும் சரக்கு! என்று அதை ஸ்தோத்ரம் செய்வது தகுதியுடையது. நீ அதைப்பற்றிச் சொல்வாயாக.

குறிப்பு:—மலைக்குன்றிமணி வேருக்கு, அதிமதுரம் என்னும் பெயர் உண்டு.

இப்படி இவர் பரிகாஸம் செய்ததைக் கேட்ட அதிமதுர கவி, அதிக கோபங்கொண்டார். ஆயினும் அப்போது ஒன்றும் சொல்லாமல், ராஜஸபைக்குப் போய்ச் சேர்ந்து ஒரு வேலைக்காரனை அனுப்பி, காளமேகத்தின் ஊர் பெயர் முதலிய விவரங்களைக் கேட்டுத் தெரிந்துவரச் சொன்னான். அவனும்,



காளமேகத்தினிடம் வந்து, தன் எஜமானன் சொல்லியதைச் சொல்ல, புலவர் திலகரும், ஒரு ஓலையை எடுத்து, அதில் ஒரு சீட்டுக்கவியை எழுதி, அதை அவனிடம் கொடுத்தனுப்பினார். அதன் பின்பாகம் வருமாறு:

சீட்டுக்கவி.

சீதம்செ(ய்)யும் திங்கள் மரபினன், நீடுபுகழ்
செய்ய திருமலைராயன் முன்,
சீறுமாறாகவே தாறு மாறுகள் சொல்
திருட்டுக் கவிப் புலவரை,
கா(து)அங்(கு) அறுத்து, சவுக்(கு)இட்(டு) அடித்து,
கதுப்பில் புடைத்து, வெற்றிக்
கல்லணையினொடு கொடிய கடிவாளம் இட்(டு) ஏறு
கவிகாள மேகம், நானே!

இதன் அர்த்தம்:—

(உலகத்துக்குக்) குளிர்ச்சியை உண்டாக்கும் சந்த்ரனுடைய வம்சத்தரசனான, கீர்த்தி மிகுந்த சிறந்த திருமலைராயன் ஸபையில், சீறுமாறாகவும் தாறுமாறாகவும் பொய் பலபேசி, (வரும் பெரியோரை நிந்தித்து வருகிற) திருட்டுப் புலவர்க(ளின் கர்வத்தை அடக்குவதற்காக, அவர்க)ளுடைய காதை அறுத்து, சவுக்கால் அடித்து, கன்னத்தில் மோதி, (அவர்கள் மேலேறி ஸவாரி செய்ய) ஆஸனத்தை அவர்கள் முதுகில் இட்டு, அவர்கள் வாயில் கொடிய கடிவாளத்தையும் போட்டு, அவர்கள் மேலேறி நடத்தப் போகிற கவிஞன் காளமேகம் நான்.

சீட்டைப் பெற்ற ஸேவகன், அதிவேகமாக நடந்து, அரசன் ஸபைக்குப் போய், அதை அதிமதுர கவியினிடம் கொடுத்தான். சீட்டுக் கவியைப் படித்த மாத்ரத்தில், அந்தப் புலவர்கள் எல்லாருக்கும் கோபாவேசம் பொங்கிற்று. காளமேகத்தை எப்படியாவது அவமானப் படுத்தவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இவர்களுக்கு உடந்தையாக இருந்த திருமலைராயனும், அப்படியே செய்ய உடன்பட்டான். உடனே, ராயன் தன் ஸேவகர்களை அனுப்பி, காளமேகத்தைக் கையோடு அழைத்து வரும்படி உத்தரவு செய்தான். அரசனுடைய ஆக்ஞையை சிரஸால் வகித்த வேலைக்காரர்கள் காளமேகத்தினிடம் வந்து, "எங்கள் அரசன், உம்மை அழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கிறார். நீர் தடை செய்யாமல் எங்களுடன் வரவேண்டும். இல்லாவிட்டால், பலாத்காரம் செய்து உம்மை அழைத்துப் போவோம்," என்றார்கள். இந்த மூர்க்கர்களிடம் எதிர்த்துப் பேசுவதில் பயனில்லை என்று நினைத்து, காளமேகமும், 'வருகிறேன்' என்று அவர்களிடம் சொல்லி, அவர்களுடனே நடந்து ஸபைக்குப் போனார்.

காளமேகத்துக்கு மானபங்கம் செய்யாமல் விடுவதில்லை, என்று கங்கணம் கட்டியிருந்த அரசனும், அதிமதுரகவி முதலான புலவர்களும், தமக்குள் சூழ்ச்சி செய்து, காளமேகம் ஸபைக்குள் வரும்போது, அவர் ராஜ ஸிம்மாஸனத்தின் ஸமீபத்தில் போகவிடாதபடி தடுத்து, அவமர்யாதை பண்ண எண்ணி, கொஞ்சமும் வழியில்லாதபடி தமது ஆஸனங்களை நெருக்கிப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ஸூக்ஷ்ம சக்தி மிகுந்த காளமேகம், ஸபைக்கு வந்தவுடன் தமக்கு வழி தராமல் அவர்கள் உட்கார்ந்திருப்பதையும் தம்மை அங்கு யாரும் உபசரிக்காமலிருப்பதையும் பார்த்து, அவர்களுடைய உள்ளக் கருத்தை ஊகித்தறிந்து, ஒரு நிமிஷகாலம் யோசனைசெய்து, அரசனைக் காண்பதற்காகக் கொண்டுவந்திருந்த எலுமிச்சம் பழத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, மங்கள ச்லோகம் ஒன்று சொல்லி, அரசனை ஆசீர்வதித்து, பழத்தை நீட்டினார். அரசனுக்கென்று உத்தேசித்த வெகுமதியைப் பிறர் வாங்குவது தகாது என்ற வழக்கம் இருப்பதாலும், தன்னை ஆசீர்வதித்துக் கொடுத்த வஸ்துவை வாங்கிக்கொண்

னாமல் மறுப்பது ராஜநீதிக்கு விரோதமாகையாலும், அரசனும் கைநீட்டினான்; புலவரும் வழிவிட்டார்கள். புலவர் பெருமானும் ஸிம்மாஸனத்தருகில் போய், பழத்தை அரசன் கையில் தந்தார். ராயனும் பழத்தைப் பெற்றுக்கொண்டானே யொழிய, புலவருக்கு ஆஸனந்தரவுமில்லை; உட்காரச் சொல்லி உபசரிக்கவுமில்லை. ஆயினும், அஞ்சா நெஞ்சுபடைத்த காளமேகம் அந்த க்ஷணமே, ஸரஸ்வதியை த்யானித்து, தம்முடைய பெருமை ஸபையோருக்குத் தெரியும்படி, ஒரு பாடல் சொன்னார்.

வெள்ளைக்கலை உடுத்து, வெள்ளைப் பணிபூண்டு,
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரி ஆஸனத்தில், அரசனோ(டு) என்னை,
சரி ஆஸனத்து வைத்த தாய்.*

இதன் பொருள்:—

வெள்ளை நிறமுள்ள பட்டாடை உடுத்தி, வெள்ளை நிறமுள்ள ஆபரணங்களும் தரித்து, வெண் தாமரைப் பூவில் வீற்றிருக்கும் ஸரஸ்வதி தேவி, (வைரக் கற்கள் இழைக்கப்பெற்று) வெண்ணிறமான ஸிம்மாஸனத்தில், அரசனுக்கு ஸமானமாக என்னையும் இருத்துவாள்.

இந்தப் பாடலின் மகிமையினாலும், ஸகல கலாவல்லியின் கடாக்ஷத்தினாலும், ஸிம்மாஸனம் விரிந்து இடங்கொடுத்தது. பாவலரும் அதன்மேல் ஏறி அமர்ந்தார்.

எஸ். நரஸிம்மாசாரியார்.

* காளமேகப் புலவர், அப்பொழுது ஸரஸ்வதி மாலை என்னும் பெயருள்ள ஒரு ப்ரபந்தத்தைப் பாடினார் என்றும், அதில் முப்பது வெண்பாக்கள் உள்ளனவென்றும், அதில் இது முதல் பாடல் என்றும் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால், அந்த ப்ரபந்தம் இப்போது கிடைக்கிறதாகத் தெரியவில்லை. இந்த ஒரு பாடல் மாத்திரமே, கர்ண பரம்பரையாக வந்திருக்கிறது.

(இன்னும் வரும்,)

## WOUNDS AND INJURIES OF CATTLE.

### கால் நடைகளுக்கு உண்டாகும் காயங்கள்.

ஆடு மாடுகள் மந்தையாக இருக்கும்போது கொம்புகளால் ஒன்றோடொன்று முட்டிக்கொள்வதால், அவைகளுக்குக் காயங்கள் நேரிடுவதுண்டு. வேலை செய்யும் எருதுகளுக்கு கால்களில் காயம் முதலியவைகள் உண்டாவதுண்டு. கன்றுக் குட்டிகள் ஒன்றோடொன்று சண்டை போடும்போது, அவைகளின் கொம்புகள் ஒடிந்துபோகும்.

மாடுகளின் கால் எலும்புகள் ஒடிந்து போவதுமுண்டு. அப்படி ஒடிந்துபோனால், காயம், வலி இவைகளை குணப்படுத்தினாலும், பின்னால், மாடுகள் எப்போதும் நொண்டியாகவே இருக்கின்றன. காலெலும்புகள் ஒடிந்திருப்பதை ஸுலபமாய்க் கண்டுபிடிக்க முடியாது. அநுபவமுள்ள கால்நடை வைத்யர்களுக்குத் தான் நன்றாய்த் தெரியவரும்.

காயங்கள் முக்யமாய் மூன்று வகைப்படும். கத்தியால் வெட்டினாற்போலிருப்பது ஒரு வகை. கிழிந்திருப்பது இன்னொரு வகை. ஊசி அல்லது, கூர்மையான பொருளால் குத்தினாற்போலிருப்பது மூன்றாவது வகை. இந்தக் காயங்களேயன்றி மேல் தோலும் உள்ளிருக்கும் சதையும் நசுங்கிப்போய், தோல் மாத்ரம் கிழிந்து காணப்படுவதுமுண்டு.

#### சிகித்ஸை.

காயங்களுக்கும், தோலும் சதையும் நசுங்கிப் போயிருப்பதற்கும் சிகித்ஸை செய்கையில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின்வருமாறு.



முதலாவது ரத்தம் வருவதை நிறுத்த வேண்டும். காயத்தில் அழுக்கும் அன்ய வஸ்துக்களும் இல்லாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ரண வைத்யர்கள் ஒப்புக்கொள்ளக் கூடியவிதமாக காயங்களை சுத்தம் செய்ய வேண்டும். காயங்களிலிருந்து வரும் கெட்ட த்ரவம், சீ முதலியவைகளை வடிய விட்டு, நோய் க்ருமிகள் காயங்களில் சேராதபடி செய்து, பிறகு காயங்கள் உள்ள இடங்களுக்கு யாதொரு ச்ரமமும் ஏற்படாதபடி செய்ய வேண்டும். காயங்களின் தோல், சதை முதலிய பாகங்களை, கெட்ட நீர் வடியத் தடை ஏற்படாதபடி, ஒன்றோடொன்று பொருத்தி வைக்கமுடியுமானால், காயம் சீக்ரம் ஆறக் கூடும்.

எலும்புகள் ஒடிந்து போயிருந்தால், ஒடிந்த பாகங்களை இருக்கவேண்டிய இடத்தில் சரியாக அமைத்து, அசையாமலிருக்க சிம்பு வைத்துக்கட்டவேண்டும். ஆனால் தெரிந்தவர்கள் தான் இந்த வேலையைச் சரியாகச் செய்ய முடியும். ரத்தம் வருவதைத் தடுக்க குளிர்ந்த ஜலம் விடுவதும், வரும் இடத்தைக் கையால் அமுக்குவதும் நல்லது. ஜலம் ரொம்ப குளிர்ந்ததாகவும், சுத்தமாயும் இருக்கவேண்டும். வெது வெதுப்பான ஜலம் கொஞ்சமும் ப்ரயோஜனமில்லை.

லினன் துணிகளை மடித்து அட்டைபோல் செய்த கம்ப்ரெஸ் என்னும் பொருளை காயத்தில் வைத்துக் கையால் அமுக்கிப் பிடித்துக் கொண்டிருப்பதனாலும், கம்ப்ரெஸ் நழுவாதபடி கட்டுக் கட்டி விடுவதாலும், ரத்தம் வராமல் நின்று போகும். இந்த இரண்டு முறைகளிலும் ரத்தம் வருவது நிற்காவிட்டால், கயிற்றால் கட்டுவதாலும், காய்ந்த இரும்பால் சுடுவதாலும், மருந்துகள் போடுவதாலும் ரத்தம் வருவதைத் தடுக்கலாம். ஆனால் இவ்வேலைகளை தெரிந்தவர்களைக் கொண்டுதான் செய்யவேண்டும்.

ரத்தம் வருவது நின்றபிறகு, காயங்களிலுள்ள அழுக்கையும் அன்ய வஸ்துக்களையும் துடைத்துவிட வேண்டும், அல்லது சிறு குறடு கொண்டு எடுத்து விடவேண்டும். சதையில் தனியாகத் தொங்கும் பாகங்களைக் கத்தரித்து விடலாம். ஆனால் மறுபடி ரத்தம் வரும்போலிருந்தால், பின்னால் கத்தரித்துக் கொள்வது நல்லது. காயத்துக்குப் பக்கத்திலுள்ள மயிரை எடுத்துவிடவேண்டும்.

காயமானது ரணவைத்யர்கள் ஒப்புக்கொள்ளும்படி சுத்தமாயிருக்கவேண்டுமென்றால், 100-பங்கு ஜலத்தில் 1-பங்கு பினைல் மருந்தைக் கலந்து அதைக்கொண்டு சுத்தம் செய்யவும். கூடுமானால் ஸிரிஞ்சை உபயோகிக்கவும்.

காயத்தைத் தொடும் எல்லா ஸாமான்களையும் கைகளையும், தொடுவதற்கு முன்னும் பின்னும் பினைல் கலந்த ஜலத்தில் நனைத்து சுத்தம் செய்யவேண்டும். அதிக ஆழம் வெட்டு ஏற்படாத காயங்களை தைத்துவிடுவது நல்லது. ஆனால் வெட்டு அதிக ஆழம் போயிருக்கும் காயங்களையும், கிழிக்கப்பட்டுள்ள காயங்களையும், த்வாரம் உள்ள காயங்களையும் அப்படித் தைக்கக்கூடாது. மேற்சொன்னபடி பினைல் மருந்து போட்டுக் காயத்தை சுத்தம் செய்த பிறகு, பின்வரும் பொடியை காயத்தின்மேல் கனமாகத் தூவவேண்டும்.

பொடி செய்த வெண்காரம்
பொடி செய்த அடுப்புக்கரி
பொடி செய்த படிக்காரம்
பொடி செய்த மயில் துத்தம்.

ஒவ்வொன்றிலும் ஸமபாகம், எடுத்துக் கலந்து அப்படியே தூளாக உபயோகிக்கவும்.

நல்லெண்ணெய் 4-பாகமும் கற்பூரம் 1-பாக

மும் கலந்து காயங்களைச் சுற்றித் தடவி வைத்திருந்தால், ஈக்கள் வந்து மொய்க்காமலிருக்கும். இந்த சிகித்ஸை ஸாதாரண காயங்களுக்குப் போதுமானதாயிருக்கும். சிக்கலான கேஸுகளில் கால்நடை வைத்யர்களைக் கூப்பிடவேண்டும்.

ஸாதாரணமாக காயங்களில் ஈரம் படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். த்வாரங்கள் உள்ள காயங்களிலும் வேறு சிலவற்றிலும், காயங்கள் உண்டான இடத்தில் ஒற்றடம் கொடுத்துப் பிறகு மருந்து போடவேண்டியிருக்கும். வேறு வ்யாதி க்ருமிகள் சேராமலிருக்க வேண்டுமானால், மருந்துக்கு மேல் துணியைப் போட்டுக் கட்டுவதுதான் நல்லது. ஆனால் இது எப்போதும் ஸாத்யப்படுவதில்லை. காயங்களில் ஈக்கள் மொய்க்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், அவைகளின் புழுக்கள் காயங்களில் புகுந்து தொந்தரை உண்டாக்கும். அதிக ஆழம் இல்லாத காயங்களுக்கும், நசுங்கின தோலுக்கும், மேலே ஈ வாராமல் தடுப்பதற்கு சொன்ன மருந்தும், பின்வரும் மருந்தும் தடவலாம்.

வெனீஸ் டர்ப்பண்டைன் 1 பாகம்
நல்லெண்ணெய் 8 பாகம்

இரண்டையும் கலந்து காய்ச்சி வடிகட்டி எடுத்துத் தடவவும்.

தோலும் சதையும் நசுங்கியிருந்தாலும், உராய்வதனால் ஏற்பட்டிருந்தாலும் பின்வரும் மருந்தை உபயோகிக்கலாம்.

பொடிசெய்த மயில் துத்தம் 1 ட்ராம்
,, ,, அன்னபேதி 1 ,,
,, ,, படிக்காரம் ½ ஔன்ஸ்
சுடுஜலம் 1 பைண்ட்

மருந்துகளை ஜலத்தில் கரைத்து ஆறின பிறகு தடவவும். இது ரத்தம் வருவதை நிறுத்தவும் உபயோகப்படும். ஆடுகளின் குளம்புகள் அழுகி வரும் நோயில் இந்த மருந்து ஜலத்தால் கழுவி, பிறகு மேலே காயங்களில் தூவ உபயோகிக்கச் சொன்ன பொடியை உபயோகிப்பது நல்லது.

அநேகமாய் காயங்களை தினம் இரண்டு தடவை கட்டவிழ்த்து சோதித்து மருந்து போட்டுக் கட்டுவது நல்லது. இவைகளில் கோளாறுகள் ஏற்படக்கூடுமாகையால், முடியுமானால் கால்நடை வைத்யர்களின் உதவியைத் தேடுவது நல்லது.

## FEMALE EDUCATION.

By M. S. RAJAGOPALAN.

### பெண் கல்வி.

தாயார்:—"அடி, கமலம், வீட்டுவேலையெல்லாம் அநேகமாய் ஆய்விட்டது. இனி, நீ இங்குவா. சற்று வாசிக்கலாம்."

கமலம்:—"அம்மா, கொஞ்சங்கூட ஓய்வு ஒழிவு இல்லாமல் ஸதா ஸர்வகாலமும் ஏதாவது செய்யச் சொல்லிக் கொண்டேயிருக்கிறாயே. இத்தனை நாழிகை வீட்டு வேலைகளையெல்லாம் செய்ததால் என் உடம்பு கடுமையாய் வலிக்கிறது. சற்று தூங்கிவிட்டு வருகிறேன்."

தாயார்:—"ரொம்ப நன்றாயிருக்கிறது. நான் சொல்கிறது, சொல்லிமுடிவதற்கு முன்னால் நீ மறுக்கிறது. இதுதான் நல்ல பெண்களுக்கழகோ? இன்று நீ என்னவேலை செய்துவிட்டாய் பெரிய மலையைப் புரட்டி விட்டாற்போல், களைத்துப் போய் விட்டேனென்கிறாயே."

கமலம்:—"சும்மா, வாசிக்கணும் வாசிக்கணும் என்கிறாயே. நான், என்ன வாசித்து பி. ஏ. பாஸ் பண்ணி கலெக்டர் உத்யோகம் செய்யப்போகிறேனோ. அடுப்பங்கரையை விட்டால், வேறு கதிதான் எனக்கென்ன?"

தாயார்:—"அதென்ன, அப்படிச் சொல்கிறாய்? புருஷர்களிலேயும், உத்யோகத்திற்காக வாசிப்பவர்கள் பலரிருந்தபோதிலும், சிலரேனும், புத்தியை அபிவ்ருத்தி செய்வதற்காகப் படிக்கிறார்கள். ஆனால் முன் காலத்தில் அப்படியில்லை. இப்பொழுது, உலகமெல்லாம் தலைகீழாய்ச் சுற்றுகிறது.

அறிவுள்ளவனுக்கும் அறிவில்லாதவனுக்கும் வித்யாஸம் என்ன? மனிதனுக்கும் மாட்டுக்குமுள்ள வித்யாஸந்தான். ஓர் அறிவுள்ள பெண் செய்கிற வீட்டுவேலைக்கும், அறிவில்லாத பெண் செய்கிற வேலைக்கும் வித்யாஸம் கொஞ்சம் யோசிப்பவர்களுக்கு நன்றாய்ப் புலப்படும். ஆரம்பத்தில், அறிவு எல்லாருக்கும் ஒரே அளவுதான் இருக்கும். அதை 'மார்தற்குக் கற்றனைத் தூறுமறிவு' என்பதுபோல் வ்ருத்திபண்ணிக் கொண்டாலல்லவோ அழகு. உலகத்தோர் 'பெண் புத்தி பின் புத்தி' என்று சொல்கிறது; நாம் கேட்டுக்கொண்டு மானம், ரோஸமில்லாமல் அறிவை அதிகப்படுத்திக் கொள்ளாமலா இருப்பது? அது போகட்டும்.

புருஷர்களுக்கு எவ்வளவோ வேலை. படிப்பதற்கு நேரம் ரொம்ப கொஞ்சம். ஆனால் பெண்களுக்கோ அப்படியில்லை. ஏனெனில் வீட்டுவேலை போகக் காலம் ரொம்ப இருக்கிறது. மேலும், பெண்களுடைய வேலையெல்லாம் வீட்டில் தான். புருஷர்களைப்போல் வெளியில் இல்லை. ஆகையினால் ச்ரமமாயிருந்தபொழுதெல்லாம் படிக்கலாம்."

கமலம்:—"அம்மா. நீ இத்தனை சொன்னதிலேயிருந்து, பெண்கள் படிக்கவேண்டிய தவச்யமென்றும், அப்படிச் செய்வதற்கு அவர்களுக்கு ஸாதனங்களனேகமென்றுந் தெரிந்துகொண்டேன். ஆனால்; அவர்கள் படிப்பதினால் ப்ரயோஜனங்களென்ன? புருஷர்களுக்குத் தான் ஸம்பாதிப்பு (Earning) என்பது கருத்தாயிருக்கிறது. நமக்கோ கணவர்கள் ஸம்பாதித்துப் போடுகிறார்கள். வேறுதான் எங்களுக்குக் கவலையென்ன?"

தாயார்:—"பெண் கல்வியினாலாகும் ப்ரயோஜனங்களையா, கேட்கிறாய்? எல்லாம் சொல்லி முடியாது. ஆனாலும் எனக்குத் தெரிந்தமட்டும் சொல்கிறேன், கேள்.

முதல் முதலில், இல்வாழ்க்கையான வண்டியைக் கணவனும், மனைவியுமாகிய இரண்டு மாடுகள் தர்மம் என்னும் பாரத்தை யேற்றிக் கொண்டு செவ்வனே இழுக்கவேண்டும். அப்படிச் செய்கையில், இருவரும் ஒரே மனஸாய்த்தான் செல்லவேண்டும். செல்வதற்கு இருவரும் ஒற்றுமையாயிருக்கவேண்டும். கணவன் படித்தவனாயும், மனைவி படிக்காதவளாயும் இருந்தால், ஒரு வண்டியை ஒரு மாடு கிழக்கேயும் ஒரு மாடு மேற்கேயும் திரும்பிக் கொண்டு இழுக்கிறாற்போல் தான். ஆகையினால் கல்வியும் கல்வியினாலாகிய பகுத்தறிவும் இருந்தால், செவ்வனே இல்வாழ்க்கையை நடத்தலாம்.

2. ஓர் படித்த கணவனுக்கு, ஆயுள் முழுவதும் வாழ்க்கைத் துணையாய் இருக்கும் அவன் மனைவி அவனை மகிழ்வித்தற்குக் கல்வி கற்பது அவச்யம். அவனுக்குத் துன்பம் நேர்ந்த ஸமயத்தில், அவனுக்குத் தேறுதல் சொல்பவள் அவன் மனைவியே. அவனுக்குத் தகுந்த புத்திமதி கூறுபவளும் அவளே. இங்கிலண்ட் தேசத்தில், மனைவிகள் கணவர்களுடைய உத்யோக வேலைகளைக்கூட, சில ஸமயத்தில் செய்து கொடுக்கிறார்கள். சிற்சில ஸமயங்களில் கணவனுக்கு ஊக்கத்தைக்கூட ஊட்டுவிப்பாள்.

3. பொருளை செட்டாய்ச் செலவழிப்பாள்.

4. ஸாதாரண பெண்களைப்போல் நகைகளை விரும்பாள். தன் கணவனது நகையே போதுமென்பாள்.

5. கணவன்தான் தெய்வம் என்று நன்றாய் அறிவாள். கணவனுக்கு எப்பொழுதும் சுசுரூஷை செய்துகொண்டும், அவனைத் தன்னுடைய இனிய வார்த்தைகளினால் மகிழ்வித்துக்கொண்டும் இருப்பாள். வேறொரு தெய்வத்தை வணங்கவே மாட்டாள். இதனாலன்றோ திருவள்ளுவரும் "தெய்வந் தொழாள் ; கொழுநற் றொழுதெழுவாள் ; பெய்யெனப் பெய்யும் மழை !" என்றார்.

6. குழந்தைகளை ஆரம்பம் முதற்கொண்டே நல்வழியிற் செலுத்தி தனக்கு ஒழிந்த வேளைகளில் புத்தி புகட்டியும் பாடங்கள் கற்பித்தும் பாதுகாப்பாள்.

7. பெண்கள் படித்தால் கற்பு இல்லாதாம். எப்படியோ ! தெரியவில்லை. சிறிது யோசித்தால், கல்வி யிருந்தால்தான் கற்புடைமகளிராயிருப்பார்களென்பது நமக்கு நன்றாய்ப் புலப்படும். தமயந்தி, ஔவை, நளாயணி, ஸகுந்தலை முதலியோர்கள் கற்பில்லாதவர்களோ? பதிவ்ரதா சிரோன்மணிகளாயிருந்தது மல்லாமல், உலகத்தில் தங்கள் கல்வியினால் சிறந்து விளங்கினார்கள். அப்படியே யிருக்கட்டும். பெண்கள் வாசித்தால் கற்பு இல்லாது. புருஷர்கள் வாசித்தால் மாத்ரம் என்னமாய் நிற்குமோ? தெரியவில்லை.

படித்த பெண்களாயிருந்தால் புருஷர்களுக்கு நிச்சயம் கீழ்ப்படிவார்களென்பதற்கு ஸந்தேகமுமுண்டோ.

ஆகையால், கமலம் வா சீக்ரம் புஸ்தகத்தை யெடுத்துவா."

கமலம் :—" அம்மா. இப்பொழுதுதான், எனக்குப் புரிந்தது. இனிமேல் நான் செவ்வையாய் வாசிப்பேன். கடவுள் என்னை இந்தத் தீர்மானத்தில் முற்றும் உதவி செய்வாராக."

எம். எஸ். ராஜகோபாலன்.

## MULES.

## கோவேறு கழுதைகள்.

ஆண் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறக்கும் ம்ருகத்துக்குக் கோவேறு கழுதை யென்று பெயர். இந்த கலப்பு ஜாதி ம்ருகத்துக்கு குதிரை கழுதைகளுடைய சில ச்லாக்யமான குணங்கள் இருப்பதால், அதை அநேகர் வ்ருத்திசெய்து வருகிறார்கள். கோவேறு கழுதைகள் முதலில் ஈஜிப்ட் தேசத்தில் கல்லும் பாலைவனமும் உள்ள ப்ரதேசத்தில் வஸிக்கும் ஒருவகைக் காட்டுக் கழுதைக்கும் பெண் குதிரைக்கும் பிறந்தன.

அந்தக் காட்டுக் கழுதைக்கு பசி தாங்கும் சக்தியும் கடும் வெயிலை ஸகிக்கும் சக்தியும் உண்டு. இந்த இரண்டு ஸ்வபாவங்களும் கோவேறு கழுதைகளுக்கு ஏற்பட்டிருக்கின்றன.

கோவேறு கழுதைகள் குதிரைகளைவிட அதிக காலம் ஜீவித்திருக்கின்றன. அதிக வர்ஷம் நன்றாய் உழைக்கும். அவை அதிக பலமுள்ளவை. குதிரைகளைப்போல அவைகளுக்கு அடிக்கடி வ்யாதி வருவதில்லை. அவைகளுக்கு மட்டமானதும், அதிக செலவு இல்லாததுமான தீனி போட்டால் போதும். ரொம்ப வெயிலை அவை ஸகிக்கக்கூடும். ரொம்ப குளிரிலும் அவை ச்ரமமடையா.

அவைகளின் குளம்புகள் சிறியவையாயும் குறுகலாயுமிருப்பதால், அவைகள் அடி சறுக்காமல் போகக்கூடும்; மலைகளின்மேலும், செங்குத்தான ப்ாறைகளின்மேலும் அவை தைர்யமாயும் நிதானமாயும் போகக்கூடும்.



ஆனால் கோவேறு கழுதைகள் குதிரையைப்போல் வேகமாகப் போகா. ரொம்ப பாரமான வண்டிகளை இழுப்பதில் அவைகள் குதிரைகளுக்கு அடுத்தபடிதான். ஆனால் ஆகாரம் குறைவாயுள்ள ப்ரதேசங்களில் வெகுதூரம் போவதற்கு குதிரைகளைவிட கோவேறு கழுதைகளே சிறந்தவை.

ஐரோப்பாவில் இரண்டு ஜாதிக் கோவேறு கழுதைகளிருக்கின்றன. ஒரு ஜாதி ப்ரான்ஸில் வளர்க்கப்படுகிறது. இந்த ஜாதி பார வண்டிகள் இழுக்க ஏற்றது. இதன் உயரம் 5-அடியாகும். மற்றது ஸ்பெய்னில் அதிகம். அமெரிக்காவிலுள்ள நல்ல கோவேறு கழுதைகள் ஸ்பெய்ன்ஜாதியிலிருந்து பிறந்தவை. அமெரிக்காவில் கோவேறு கழுதைகள் ரொம்ப அதிகம். தற்போது அமெரிக்காவின் மேற்கு நாடுகளில் மாத்ரம் வர்ஷந்தோறும் 2,00,000 கோவேறு கழுதைகள் பிறக்கின்றனவாம்.

அவைகள் அங்கே அநேக வேலைகளுக்கு உபயோகப்படுகின்றன. துறைமுகங்களிலும் ரெயில்வே வேலைகளிலும், , வயல்களிலும், தோட்டங்களிலும் உழுதல் முதலிய வேலைகளிலும், சுரங்கங்களிலும் அவை மிகவும் பயன்படுகின்றன. சரியானபடி பாரம் ஏற்றி வைத்தால், 200 ராத்தல் நிறையுள்ள மூட்டைகளை கரடு முரடான பாதைகளிலும் சுமந்து செல்லும்.

இரண்டு குதிரைக்கு வேண்டிய தீனி மூன்று கோவேறு கழுதைகளுக்குப் போதுமென்று பலர் சொல்லுகிறார்கள். கோவேறு கழுதைகளுக்கு கழுதைகளைக் கண்டால் பிடிக்காதாம். அவைகள் குதிரைகளால் வளர்க்கப்படுவதால், குதிரைகளிடமே ப்ரியம் அதிகமாம். ஆகையால் கூட்டமாக வேலை செய்யும்போது கோவேறு கழுதைகளோடு பெண் குதிரை ஒன்றும் இருந்தால், அவைகள் நன்றாக வேலை செய்யும். கோவேறு கழுதைகள் பிடிவாத குணமுள்ளவைகள் என்று சொல்வது சரியல்ல வென்று தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். அவைகளை சரியாக நடத்தத் தெரியாமல் ஹிம்ஸிப்பதால் தான் அவைகள் பிடிவாதமும் முரட்டுத்தனமும் கொள்ளுகின்றன. அவைகளைப் பக்ஷமாக நடத்திவந்தால் அவைகள் சரியாக வேலை செய்யுமாம்.

## GENERAL NOTES.

## பொதுக் குறிப்புகள்.

### நக்ஷத்ரங்களின் தூரம்.

நக்ஷத்ரங்கள் பூமியிலிருந்து வெகு தூரத்திலிருக்கின்றன. ரொம்ப ஸமீபத்திலுள்ள நக்ஷத்ரம், பூமிக்கும் ஸூர்யனுக்கும் எவ்வளவு தூரமோ அதைப்போல் 2,50,000 மடங்கு தூரத்திலுள்ளது. ஸூர்யனுக்கும் பூமிக்கும் 9 கோடியே 30 லக்ஷம் மைல் தூரமாகும். ஆகவே மேற்சொன்ன ஸமீபமான நக்ஷத்ரமின்று 2325 ஆயிரம் கோடிமைல் தூரத்திலிருக்கிறது. 20 நக்ஷத்ரங்கள் 1,00,00,000 கோடிமைல் தூரத்திலிருக்கின்றன. அதாவது கோடி கோடி மைல். ஆயிரத்துக்கு மேல்பட்ட நக்ஷத்ரங்கள் 5,00,00,000 கோடி மைல் தூரத்துக்குள் இருக்கின்றன. அநேக நக்ஷத்ரங்களின் தூரம் இன்னும் கணக்கிடப் படவில்லை. இவைகளுக்கு மேல்பட்ட தூரத்தில் இன்னும் எத்தனையோ நக்ஷத்ரங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றன. மேல்

சொன்ன தூரத்தைவிட மூன்று நான்கு மடங்கு அதிக தூரத்திலும் பல நக்ஷத்ரங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். வேறு பல நக்ஷத்ரங்கள் ஸூர்யனுடைய தூரத்தைப் போல் 700 கோடி மடங்கு தூரத்திலிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வளவு தூரத்தை ஸாதாரணமாக எழுதி வாசிப்பதே கடினம். அவைகளை மனஸால் க்ரகிப்பதோ முடியாத கார்யம். இந்த நக்ஷத்ர தூரங்களைச் சொல்ல வான சாஸ்த்ரிகள் வேறு ஒரு ஸுலபமான முறையைக் கையாடி வருகிறார்கள். வெளிச்சம் ஒரு ஸெகண்ட் நேரத்தில் 1,80,000 மைல் போகும். இதை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு நக்ஷத்ரத்திலிருந்து வெளிச்சம் நமது பூமிக்கு எவ்வளவு காலத்தில் வருமென்று கண்டுபிடித்து இவ்வளவு கால தூரமென்று சொல்லுகிறார்கள். இதன்படி பார்த்தால் ஸூர்ய வெளிச்சம் 8-நிமிஷம் 36½ ஸெக்கண்டில் நமது பூமிக்கு வருகிறது. ஆனால் ரொம்ப ஸமீபத்திலுள்ள நக்ஷத்ரத்திலிருந்து வரும் வெளிச்சமோ நமது பூமிக்குவர 4 வர்ஷத்துக்கு மேலாகிறது.

## வெள்ளாட்டுப் பால்.

தற்காலம் பாலின் விலை நாளுக்கு நாள் அதிகமாகி வருவதை உத்தேசித்து இங்கிலண்டில் சிலர் வெள்ளாட்டுப் பாலை ஜனங்கள் உபயோகிப்பது ச்லாக்யமென்றும், அதை நாடெங்கும் பரவச் செய்யவேண்டும் என்றும் எண்ணி அதற்கான முயற்சிகள் செய்து வருகிறார்கள். வெள்ளாட்டுப்பால் பசும் பாலைவிட உயர்ந்ததாக இருப்பதோடு, முலைப் பாலுக்கு ப்ரதியாக உபயோகப் படுத்த அது ரொம்ப ச்லாக்யமானது. வெள்ளாட்டுப் பாலின் ஸௌகர்யங்கள் பின் வருமாறு.

(1) வெள்ளாடு கறவைப் பசு தின்னும் தீனியில் ஆறில் ஒரு பாகந்தான் தின்கிறது. (2) ஒன்பது பத்துமாஸம் வரையில் அது தினந்தோறும் 1½-படிமுதல் 2¾-படி வரையில் பால் கொடுக்கிறது. இந்தப் பாலைக் காய்ச்சாமலே குடிக்கலாம். (3) வெள்ளாடுகளுக்கு ட்யூபர்குலாஸிஸ் என்னும் க்ஷய ரோகம் உண்டாவது அரிது. லியான்ஸ் என்னும் இடத்தில் ஒரு ஸமயம் 3,000 ஆடுகளை சோதித்ததில் 5-க்குத்தான் இந்த வ்யாதி இருந்ததாம். (4) பாலில் உள்ள கொழுப்புப் பொருள் சிறு அணுக்களாக இருப்பதால் சீக்ரம் ஜீர்ணமாகிவிடுகிறது.

வெள்ளாடு சினையாயிருக்கும் காலம் ஸுமார் 5-மாஸமாகும். பால் கொடுக்கும் காலம் 9-மாஸமாகும். ஐரோப்பாவில் தினம் ஒரு வெள்ளாடு பட்டணம் படியால் ஒரு படி பால் கொடுக்குமாம். நல்ல ஆடுகள் 1½ படியும் கொடுக்குமாம்.

## எலுமிச்சை மரமும் காற்றும்.

எலுமிச்சை மரங்களின்மேல் அதிக காற்று அடித்தால், மரங்கள் செழிப்பாக வளரமாட்டா. மரங்கள் குட்டையாக இருக்கும். அவைகளின் இலைகளும் கெட்டியாகிவிடும். நல்ல பலன் கொடுக்கவேண்டுமென்றால், இலைகள் ம்ருதுவாக இருக்கவேண்டும். இதற்கு ஆகாயத்தில் நீராவி அதிகமாக இருக்கவேண்டும். காற்றோட்டம் அதிகமாக இருந்தால், நீராவி சிதறிப்போய் மரங்களுக்குக் கிடைக்கமாட்டாது.

எலுமிச்சை மரங்களின் வளர்ச்சியைக் குறைப்பதற்கு இன்னொருகாரணம் என்னவென்றால், தோட்டம் திறந்த வெளியாயிருந்தால், மேல் மண்ணின் ஈரம் ஆவியாகப் போய் விடுவதே. எலுமிச்சையின் வேர்கள் விசேஷமாக மேல் மண்ணில் தான் அதிகம். மேல் மண் காய்ந்துவிட்டால் அங்குள்ள வேர்கள் அழிந்துபோகும். ஆகவே திறந்த வெளியாய் காற்று அதிகம் அடிக்கும் இடங்களில் எலுமிச்சை சாகுபடி செய்யக்கூடாது. அவ்விடங்



களில் சாகுபடி செய்வதாயிருந்தால், காற்றடிக்காமல் மறைப்புவைக்கவேண்டும்.

## பப்பாளி மரத்தின் பால்.

பப்பாளி மரத்தின் பால் மருந்து வகைகளில் மிகவும் உபயோகப்படுகிறது. தக்க ஸௌகர்யங்களிருந்து பப்பாளிமரத்திலிருந்து பால் எடுத்து விற்றால் நல்ல லாபம் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. பப்பாளிப் பாலை எடுத்து உலர்த்தி விற்கிறார்கள். காய்ந்த பால் ஒரு ராத்தல் 7½ ரூபாய் விதம் விலைபோகும். அதிகாலையில் நல்ல மரத்தில் ஒன்றுக்கொன்று ½ அங்குலம் முதல் ¾ அங்குலம் வரை தூரம் இருக்கும் படிக்கும், அதிக ஆழமில்லாமலும் 12 இடத்தில் நீளப்போக்கில் கீறிவிட்டால், அவைகளிலிருந்து கிடைக்கும் பாலிலிருந்து ½ ஔன்ஸ் காய்ந்த பாப்பாய்ன் அதாவது பப்பாளிப் பாலின் ஸத்து கிடைக்கும். காய்களிலிருந்தும் இரண்டு நாளைக்கொருதடவை பால் எடுக்கலாம். காய்களிலிருந்து மொத்தத்தில் 5-அல்லது 7-தடவைக்குமேல் பாலெடுக்கக் கூடாது. காய்கள் மஞ்சள் நிறமானதும் பால் குறைந்துவிடும். பால் எடுப்பதால் காய் கெட்டுப் போவதற்கு பதிலாக, அதன் ருசி அதிகரிக்கிறது. ஏனென்றால் காய்க்கு ஸ்வபாவமாகவே சற்று கசப்பு உண்டு. பாலெடுப்பதால் இந்த கசப்பு குணம் போய் விடுகிறதாம்.

## சப்பாத்துக்கள்ளி கடுதாசிக் கூழுக்கு உதவும்.

மைஸூரில் டெபுடி கன்ஸர்வேடர் அப் பாரஸ்ட் உத்யோகம் செய்யும் மிஸ்டர் சாமராவ் என்பவர் சப்பாத்துக்கள்ளி விஷயமாக பரீக்ஷை செய்ததில் அது காகிதக்கூழ் செய்ய உதவுமென்று தெரிகிறதாகச் சொல்லுகிறார். அவர் சதையெல்லாம் போன சப்பாத்துக் கள்ளியின் நார்ப்பாகத்தை ஜலம் விட்டுக் கொதிக்கவைத்து அதை அரைத்து மறுபடியும் ஸோடாபோட்டு காய்ச்சி ஒரு கடுதாசியில் கூழைப் பரப்பினாராம். பிறகு அதை நிழலில் உலர்த்தினதில் நல்லகூழ் அட்டை கிடைத்தது. இந்தக் கூழில் நார்கள் சற்றுக் குட்டையாக இருப்பதால், நீளநார் உள்ள வேறு கூழ் ஏதாவது கலந்துகொள்ள வேண்டுமாம். சப்பாத்தியின் முள்ளையும் சதைப் பாகத்தையும் போக்க ஏதாவது ஒரு ஸுலபமான வழிகண்டு பிடித்துவிட்டால், சப்பாத்துக்கள்ளியால் காகிதத்தொழிலுக்கு ரொம்ப ஸாதகம் ஏற்படுமென்று அவர் சொல்லுகிறார்.

## தேசங்களின் உயரம்.

ஐரோப்பாவிலுள்ள தேசங்களில் ஒவ்வொன்றும் சராசரியில் ஸமுத்ர மட்டத்துக்கு மேல் எவ்வளவு உயரமுள்ள தென்பதைப் பற்றி சில கணக்குகள் வெளியாகியிருக்கின்றன. ஹாலண்டு தான் ரொம்பத் தாழ்ந்த ப்ரதேசமாகும். ஸ்விட்ஸர்லண்ட் தான் ரொம்ப உயர்ந்த ப்ரதேசமாகும். ஒவ்வொரு தேசத்தின் உயரம் அடிக்கணக்கில் பின்வருமாறு.

ஹாலண்ட், 159; பெல்ஜியம் 535; ரஷ்யா, 550; ஜெர்மனி, 607; க்ரேட் ப்ரிட்டன், 712; ருமேனியா 922; டென்மார்க் (ஐஸ்லண்ட் உள்பட), 1155; ப்ரான்ஸ், 1290; ஸ்காண்டிநேவியா (நார்வே, ஸ்வீடன் சேர்ந்தது) 1404; இட்டலி, 1664; ஆஸ்ட்ரியா, 1698; பால்கன் தீபகல்பம் 1900; ஸ்பெய்னும் போர்த்துகலும், 2296; ஸ்விட்ஸர்லண்ட், 4263.

## மாட்டெரு.

ஒரு பசுமாடு ஒரு வர்ஷத்தில் 15-டன் எரு கொடுக்கக்கூடுமென்று பரீக்ஷைகளால் தெரியவருகிறது. ஆனால் மாடுகள் வேலைக்கும், மேயவும் வெளியில் போவதால், இந்த எருவில் பெரும்பாகம் நமக்குக் கிடைப்பதில்லை. மேலும் எருவை வெகுகாலம் திறந்த

வெளியில் போட்டு வைப்பதாலும் சேதம் ஏற்படுகிறது. எருவை 5-மாஸம் திறந்த வெளியில் கொட்டி வைத்திருந்தால், அதில் பாதி ஸத்து வீணாகிவிடுகிறது. எரு வீணாகாமல் இருக்க வேண்டுமானால், அதை சீக்ரம் வயலுக்குக் கொண்டுபோய், பரப்பிவிடவேண்டும்.

பருத்திக்கொட்டையின் உபயோகங்கள்.

பருத்திக்கொட்டை 124 வேலைகளுக்கு உபயோகப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதன் எண்ணெய் ஆகார வகைகளில் அதிகமாக உபயோகப்படுகிறது. பருத்திக்கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கும்போது கிடைக்கும் உபபொருள்கள் ஸோப்பு செய்வதற்கும், சுத்தம் செய்யும் பொடிகள் செய்வதற்கும், லப்பம், மெழுகுவர்த்தி, வர்ணம், செயற்கைத் தோல் முதலியவை செய்வதற்கும் உபயோகப்படுகின்றன. பருத்திக்கொட்டை எண்ணெயிலிருந்து தாவரக் கொழுப்பு செய்கிறார்கள். பருத்திக்கொட்டையின் ஓட்டிலிருந்து ஸெல்யுலோஸ் என்னும் நார்ப்பொருள் செய்யப்படுகிறது. இதிலிருந்து ஸெல்யுலாய்ட் என்னும் போலி தந்தமும், வார்னிஷ்களும், செயற்கைப்பட்டும், அசையும் படங்களுக்கு வேண்டிய கண்ணாடி போன்ற தகடுகளும் இன்னும் அநேக ஸாமான்களும் செய்யப்படுகின்றன. ஸெல்யுலோஸ் உயர்ந்த வெடிமருந்து செய்வதிலும் ப்ரயோஜனப்படுகிறது.

---

## BOOKS OF THE MONTH.

## நூதன புஸ்தகங்கள்.

**சித்தார்த்தன்.***

இது அ. மாதவையா இயற்றியது. பௌத்த மதத்தின் ஸ்தாபகராகிய கௌதம புத்தருடைய ஜீவ்ய சரித்ரமாகும். இந்த நூல் நல்ல தமிழ் நடையில் தற்காலத்து நாவல்போல யாவரும் விரும்பி வாசிக்கும்படி எழுதப்பட்டுள்ளது. புஸ்தகத்தின் கடைசியில் ஸர் எட்வின் ஆர்னல்ட் என்னும் ஆங்கில கவி எழுதியுள்ள 'லைட் அப் ஏஷியா' என்னும் நூலைத்தழுவி செய்யுள் நடையில் எழுதிய ஒரு ஜீவ்ய சரித்ரமும் சேர்க்கப் பட்டிருக்கிறது. இதன் விலை அணா 12.

**பஞ்சாயத்து.**

திருச்சியில் வெளியாகும் இப்பெயர் கொண்ட மாதப் பத்ரிகையின் முதல் ஸஞ்சிகை வரப்பெற்றோம். அதில் பெயருக்கேற்ப க்ராம பஞ்சாயத்துகளைப் பற்றிய விஷயங்களும், க்ராம அபிவ்ருத்திக்குரிய விஷயங்களும் நன்றாய் எழுதப்பட்டுள்ளன. க்ராமங்களின் ஸுகாதார நிலைமை, க்ராமங்களில் கல்வி, குடியானவர்களின் நிலைமையை சீர்திருத்தல் முதலிய சில நல்ல வ்யாஸங்கள் இந்த ஸஞ்சிகையில் வெளிவந்திருக்கின்றன. இதன் வர்ஷ சந்தா ரூ 3. வேண்டுவோர் மானேஜர், "பஞ்சாயத்து ஆபீஸ்" தென்னூர், திருச்சினாப்பள்ளி என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

**உட்டாணி.***

இது மாயவரம் எஸ். எ. ராமஸாமி அய்யர் இயற்றிய ஒரு இனிய தமிழ் நாவல். இது ஆசிரியருடைய மற்ற கதைகளைப் போலவே தெளிவான நடையில் நல்ல கதைப்போக்குடன் அமைந்துள்ளது. ஜம்புநாதன் தன் காதலியைத் தேடிச்செல்கையில் படும் கஷ்டங்களும், கதாநாயகியான மாதவி பாதகர்கள் வசம் சிக்கிக் கஷ்டப்படுவதும் சோகரஸத்துடன் எழுதப்பட்டிருக்கின்றன. கதைப் போக்கு துப்பறியும் கதைபோல் அமைந்துள்ளது. விலை அணா 6.

**புத்த அவதாரம்.***

இது நாடகங்கள் எழுதுவதில் பேர்போன ப. ஸம்பந்தமுதலியார் எழுதியது. இதில் ஆசிரியர் கௌதம புத்தரின் ஜீவ்ய சரித்ரத்தை மிகவும் சேர்த்தியாய் நாடகமாக எழுதியுள்ளார். வசனநடை தெளிவாகவும் ஸுலபமாகவும் அமைந்துள்ளது. இதன் விலை ரூ.—1.

---

* இங்குக் குறிப்பிட்டவை சென்னை, கொண்டிசெட்டித் தெரு, ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனியில் கிடைக்கும்.

# ஜனாபிமானி.

| தபால் சார்ஜ் உள்பட | |
|---|---|
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE
JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன்
அண்டு கம்பெனி,
கொண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி௵ ஆடி௴, JULY—AUGUST, 1918. { ஸஞ்சிகை 7. No. 7.

## THE INDIAN CONSTITUTIONAL REFORMS.
## இந்திய ராஜாங்க சீர்திருத்தம்.

இந்தியாவுக்கு பொறுப்புள்ள ஆட்சி கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு அதன் அமைப்பில் தற்போது என்னென்ன சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்பதைப்பற்றி ஆலோசனை செய்ய இந்தியாவுக்கு வந்திருந்த இந்தியா மந்த்ரியாகிய மிஸ்டர் மாண்டேகுவும், லார்ட் செம்ஸ்பொர்டும் தாங்கள் செய்திருக்கும் திருத்த ப்ரேரணைகளை இப்போது வெளியிட்டிருக்கிறார்கள். இந்தியர்களை அதிகமாக ராஜாங்க நிர்வாகத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதும், ஸ்வய ஆட்சி ஸ்தாபனங்களை படிப்படியாக அபிவ்ருத்தி செய்யவேண்டுமென்பதும், இவைகளின் நோக்கம் இந்தியாவில் கால க்ரமத்தில் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படுத்துவது என்பதும் ஆகிய இவைகள் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் கொள்கையாகுமென்று சென்ற வர்ஷம் ஆகஸ்ட் 20-தேதி ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தெரிவித்ததால் இப்போது மாண்டேகுவும் லார்ட் செய்ஸ்பொர்டும் செய்திருக்கும் ப்ரேரணைகள் எம்மட்டில் அந்தக் கொள்கைக்கு ஸாதகமாகவோ பாதகமாகவோ இருக்கின்றனவென்பதைப் பார்ப்போம். மேலும் அவைகள் நமக்கு ஏற்கனவேயுள்ள உரிமைகளுக்கு பாதகமாயிருக்கின்றனவா என்றும் பார்ப்போம்.

### சீர்திருத்தங்களின் மூலாதாரக் கொள்கைகள்.

மிஸ்டர் மாண்டேகுவும் லார்ட் செம்ஸ்போர்டும், தாங்கள் செய்திருக்கும் ப்ரேரணைகளுக்கு ஆதாரமாகவுள்ள கொள்கைகள் இன்னவென்பதைத் தெரிவித்திருக்கிறார்கள்.

முதலாவது ஸ்தல ஸ்தாபனங்கள் கூடுமான வரையில் ஜனங்களுடைய அதிகாரத்துக்கு உள்பட்டிருக்கவேண்டும். கூடுமான வரையில் (மாகாண கவர்ன்மெண்டுகள் போன்ற) வெளி அதிகாரத்திலிருந்து விடுபடவேண்டும்.

இரண்டாவது கொள்கை என்னவென்றால், மாகாண கவர்ன்மெண்டில் முடிவில் பொறுப்புள்ள ஆட்சி ஏற்படுத்துவதற்காக தற்போது சிறிதளவு பொறுப்புள்ள ஆட்சி கொடுக்க வேண்டும். பூராப் பொறுப்புள்ள ஆட்சி கொடுப்பதற்கேற்ற நிலைமை வந்தவுடன் அது கொடுக்கப்படவேண்டுமென்பதே நோக்கம்,

அதற்காக இப்போது முதற்கொண்டே மாகாணங்களுக்கு சட்டம் செய்தல், ராஜ்ய நிர்வாகம், பண விஷயம் ஆகிய இவைகளில் அதிகமாக ஸ்வாதந்தர்யம் கொடுக்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்டுக்கு உள்ள பொறுப்புக்கு பாதகம் ஏற்படாதபடி மாகாணங்களுக்கு எவ்வளவு ஸ்வாதந்தர்யம் கொடுக்கலாமோ அவ்வளவும் கொடுத்துவிட வேண்டும்.

மூன்ருவது கொள்கை பின்வருமாறு:—

இந்தியா கவர்ன்மெண்டானது (எப்போதும் போலவே) பார்லிமெண்டுக்கு முற்றிலும் உத்தரவாதியா யிருக்கவேண்டும். அந்த உத்தரவாதத்தைத் தவிர முக்யமான விஷயங்களிலெல்லாம், அதன் அதிகாரமே செல்லவேண்டியது. இந்திய லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலைப் பெரியதாக்கி, அதில் ஜனங்களின் ப்ரதிநிதிகள் அதிகமாக இருக்கும்படி செய்யவேண்டும். அவர்கள் தங்கள் அபிப்ராயங்களைத் தெரிவித்து, அவைகளுக் கேற்ருற்போல் ராஜாங்கத்தை நடத்தும்படி தூண்டவேண்டும்.

இனிக் கடைசிக் கொள்கை வருமாறு :—

மேலே சொன்ன மாறுபாடுகள் எவ்வளவு தூரம் அனுஷ்டானத்துக்கு வருகின்றனவோ அதற்குத் தக்கபடி பார்லிமெண்டும், இந்தியா ஸெக்ரடரியும் இந்தியா கவர்ன்மெண்டின் மேலும், மாகாண கவர்ன்மெண்டுகளின் மேலும் செலுத்தும் அதிகாரம் குறையவேண்டும்.

முதலாவதாகிய ஸ்தல ஸ்வய ஆட்சியில் பூரா ஸ்வாதந்தர்யம் கொடுக்கத் தீர்மானித்திருப்பது ச்லாகிக்கத்தக்கது.

இரண்டாவதாகிய மாகாண கவர்ன்மெண்டிலோ சிறிதளவு தான் பொறுப்புள்ள ஆட்சி கொடுக்கப்படும். மாகாண கவர்ன்மெண்டாருக்கு உள்பட்ட விஷயங்களை இரண்டு பிரிவுகளாகப் பிரிப்பார்கள். தேச ஆட்சியின் ஒழுங்கு, நீதி பரிபாலனம் ஆகிய இவைகளைப் பற்றிய விஷயங்களும் எல்லா ஜனங்களுக்கும் பொதுவான நிலவரி, குடிகளின் உரிமை முதலிய விஷயங்களும் இன்னும் சில முக்யமான விஷயங்களும் ஒரு பிரிவாகும். இவைகள் ரிஸர்வ் அம்சங்கள் என்று சொல்லப்படும். ஜன ஸமூக ஊழியத்துக்கேற்றவையும், அந்தந்த இடத்து ஜனங்கள் நன்ருய் அறிந்து நடத்தக்கூடியவையுமான விஷயங்கள் இன்னொரு பிரிவாகும். இவைகள் கொடுக்கப்பட்ட அம்சங்கள், என்று சொல்லப்படும். இந்த கொடுக்கப்பட்ட அம்சங்கள் விஷயத்தில்தான் பொறுப்புள்ள ஆட்சி கொடுக்கப்படும்.

இந்த ஸ்வல்ப பொறுப்புள்ள ஆட்சியையும் பூராவும் கொடுப்பதாக உத்தேசமில்லை. இது விஷயத்தில் என்ன நிபந்தனைகள் ஏற்படுத்தவேண்டுமென்பதை ஒரு கமிட்டியார் ஆலோசிப்பார்கள். மற்ற ரிஸர்வ் அம்சங்களோ ஏறக்குறைய வழக்கம்போல முற்றிலும் மாகாண கவர்ன்மெண்டார் வசமிருக்கும்.

### மாகாண கவர்ன்மெண்டுகள்.

இனி திருத்த ப்ரேரணைகளின் விவரங்களைப்பற்றி கவனிப்போம். மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு கவர்னர் தலைவராக இருப்பார். அவருடன் இரண்டு நிர்வாக ஸபை மெம்பர்களும், ஒன்று அல்லது சில மந்த்ரிகளும் இருப்பார்கள். பொதுவாய் இவர்கள் எல்லாரும் சேர்ந்து ராஜ்ய நிர்வாகத்தை கவனிப்பார்கள். லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் உள்ள தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களிலிருந்து கவர்னர் மந்த்ரிகளைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அந்த மந்த்ரிகள் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராக இருக்கும் வரையில் தான் மந்த்ரிவேலை பார்க்கலாம். மந்த்ரிகள் கொடுக்கப்பட்ட அம்சங்களை கவனிப்பார்கள்.

நிர்வாக ஸபை மெம்பர்களில் ஒருவர் இந்தியராக இருக்கவேண்டும். இந்த நிர்வாக ஸபையும் கவர்னரும் சேர்ந்து "ரிஸர்வ்ட் அம்சங்களை" கவனிப்பார்கள். சில ஸமயங்களில் கவர்னருக்கு உத்யோகஸ்தர்களுடைய அபிப்ராயங்களை அறிந்து கொள்ளவேண்டியிருக்கும். அப்போது கவர்னர் உத்யோகஸ்தர்களில் ஸீனியர்களை அதிகப்படி மெம்பர்களாக நியமிக்கலாம். ஆனல் அவர்கள் ஆலோசனை சொல்லலாமே ஒழிய, எந்த விஷயத்தைப் பற்றியாவது முடிவு செய்யும்போது வோட் கொடுக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கக் கூடாது.

கவர்னர், நிர்வாக ஸபை, மந்த்ரி அல்லது மந்த்ரிகள் ஆகிய இவர்கள் சேர்ந்த கவர்ன்மெண்டார், சேர்ந்து ஆலோசித்தே பொதுவாய் எதையும் தீர்மானிக்கவேண்டும். ஆனல் கவர்னர் இஷ்டப்பட்டால் நிர்வாக ஸபையோடாவது மந்த்ரிகளோடாவது தனியாக ஆலோசனை செய்து முடிவுக்கு வரலாம். ரிஸர்வ்ட் அம்சங்களைப்பற்றிய கேள்விகளிலும், வரவு செலவு திட்டத்தில் ரிஸர்வ்ட் அம்சங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமென்பதை நிர்ணயிப்பதிலும் கவர்னருக்கும் நிர்வாக ஸபைக்கும் பூரா அதிகாரம் உண்டு. கொடுக்கப்பட்ட அம்சங்களைப்பற்றிய எல்லா விஷயங்களும் அவைகளுக்கு எவ்வளவு பணம் வேண்டுமென்பதை நிர்ணயிப்பதுமாகிய இவைகள் மந்த்ரிகளுடைய பொறுப்பாகும். ஆனல் மந்த்ரிகள் செய்யும் தீர்மானங்கள் தேச அமைதிக்கு ரொம்ப பாதகமென்றும், அனுபவக்குறைவால் செய்யப்பட்டனவென்றும் கவர்னர் எண்ணினல், கவர்னர் அவைகளை அங்கிகரிக்காமலிருக்கலாம். ஆனல் இந்த இரண்டு காரணங்களையும் வைத்துக்கொண்டு, மந்த்ரிசெய்யும் ப்ரேரணைகளையெல்லாம் கவர்னர் கண்டபடி மறுத்துவிடாதபடி, அவர் கவர்னர் வேலைக்கு நியமிக்கப்பட்டவுடன், மந்த்ரிகள் விஷயத்திலும், இதர விஷயங்களிலும் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதைக் குறித்துக்காட்டி ஒரு தஸ்தாவேஜு (ஆலோசனைப் பத்ரம்) அவருக்குக் கொடுக்கப்படும். அவர் அதை அனுஸரித்து, மந்த்ரிகள் செய்யும் ப்ரேரணைகளை அங்கீகரிக்கவோ, மறுக்கவோ செய்யலாம்.

பார்லிமெண்டில் அண்டர்-ஸெக்ரெடரிகளிருப்பதுபோல, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களிலிருந்து சிலரை நிர்வாக மெம்பர்களுக்கு உதவியாக அதாவது அண்டர் ஸெக்ரடரிகளாக நியமிக்கலாம். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களாயிருக்கவேண்டுமென்ற அவச்யமில்லை. அவர்கள் கவர்ன்மெண்டுமெம்பர்களின் வேலைகளில் உதவிசெய்வதோடு கவர்ன்மெண்ட்மெம்பர்கள் லெஜிஸ்லெடிவ்கௌன்ஸிலுக்கு வ்ராத ஸமயங்களில், அவர்களுடைய ப்ரதிநிதிகளாக இருந்து பேசுவார்கள்.

இதுவரை சொல்லியவற்றிலிருந்து, கொடுக்கப்பட்ட அம்சங்களில் முக்காலே மூணுவீசம் வாசி பொறுப்புள்ள ஆட்சி கிடைத்திருக்கிறதென்றும், பூரா பொறுப்புள்ள ஆட்சி கொடுக்கப்படவில்லையென்றும் ஏற்படுகிறது.

### மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்கள்.

மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில், மெம்பர்களின் ஸங்க்யையை மாகாணத்தின் பெரிது, சிறிதுக்குத் தகுந்தபடி அதிகமாக்கவேண்டும். அவைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் தொகை மற்ற மெம்பர்களின் ஸங்க்யையைவிட ரொம்ப அதிகமாக இருக்கவேண்டும். மகம்மதியர்களும், ஸிக்கியர்களும் தங்களுக்கென்று தனி ப்ரதிநிதிகளைத் தெரிந்தெடுத்துக்கொள்ள இடமேற்படவேண்டும். இதர சிறு வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் கௌன்ஸிலில் சேர்ந்து கொள்வதற்காக, அந்த வகுப்புகளிலிருந்து சிலரை கவர்ன்

மெண்டார் தெரிந்தெடுத்து நியமனம் செய்ய வேண்டும். கவர்ன்மெண்டார் உத்யோகஸ்தர்களையும் மெம்பர்களாக நியமிப்பார்கள். கவர்ன்மெண்டின் நிர்வாக மெம்பர்களும் கௌன்ஸிலில் மெம்பர்களாக இருப்பார்கள். லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு கவர்னரே ப்ரெஸிடெண்டாக இநப்பார். அவர் கௌன்ஸிலுக்கு வரக்கூடாத ஸந்தர்ப்பங்களில் கௌன்ஸிலை நடத்த அவர் ஒரு வைஸ்-ப்ரெஸிடெண்டை நியமித்துக்கொள்ள அதிகாரம் இருக்கவேண்டும்.

கவர்னர் இஷ்டப்பட்டால் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலைக் கலைத்துவிடலாம். வரவு செலவு திட்டத்தைத் தவிர (இதைப்பற்றிப் பின்னால் பார்க்கவும்) இதர விஷயங்களைப் பற்றி உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் கொண்டுவரும் தீர்மானங்கள் கௌன்ஸிலில் அங்கீகரிக்கப்பட்டால், அந்தத் தீர்மானங்கள் கவர்ன்மெண்டைக் கட்டுப்படுத்தா. அவைகள் சிபார்சு செய்வனவாகவே இருக்க வேண்டும். கவர்ன்மெண்டார் இஷ்டப்பட்டால்தான் அந்தத் தீர்மானங்களின்படி நடப்பார்கள்.

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலுள்ள உத்யோக-மெம்பர்களுக்கு ஸாதாரணமாக தங்கள் ஸொந்த அபிப்ராயத்துக்கேற்ப பேசவும், வோட் கொடுக்கவும் அதிகாரம் ஏற்படவேண்டும். ஆனால் கவர்ன்மெண்டார் எந்த விவாதத்திலாவது தங்கள் பக்கம்வோட் கொடுக்க வேண்டுமென்றால், அந்த மெம்பர்கள் கவர்ன்மெண்ட் பக்ஷமே சேரவேண்டும். தற்போது கவர்ன்மெண்டைக் கேள்வி கேட்கும் மெம்பர்கள் முதலில் ஸபைகூடுவதற்கு முன்னாலேயே கேள்விகளை அனுப்புகிறார்கள். கவர்ன்மெண்டார் ஸபை கூடினதும் பதில் சொல்லுகிறார்கள். அப்போது கேள்வி கேட்டவர் மாத்ரம் கேட்ட விஷயங்களைப்பற்றி அதிகப்படியாகக் கேள்விகள் கேட்கலாம். பிறர் கேட்கக்கூடாது. ஆனால் இப்போது ப்ரேரித்திருப்பது என்னவென்றால் இதர மெம்பர்களும் அதிகப்படி கேள்விகள் கேட்கலாம்.

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலைப்பற்றி இப்போது அனுஷ்டானத்திலுள்ள ரூல்கள் இனிமேலும் இருந்து வரவேண்டும். ஆனால் கவர்னரின் அனுமதியின்மேல் அந்த ரூல்களை மாற்ற கௌன்ஸிலுக்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு டிபார்ட்மெண்டுக்கும் அல்லது சில டிபார்ட்மெண்டுகளின் தொகுதிக்கும் தனித்தனியே ஸ்டாண்டிங் கமிட்டி ஒன்று இருக்கவேண்டும். இந்தக் கமிட்டியில் கௌன்ஸில் மெம்பர்களிலிருந்து கௌன்ஸிலாலேயே தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களும், டிபார்ட்மெண்டுகளின் தலைவர்களும், அந்தந்த டிபார்ட்மெண்டை கவனித்துவரும் நிர்வாக ஸபை மெம்பர் அல்லது மந்த்ரியும் மெம்பர்களாக இருப்பார்கள். இந்தக் கமிட்டிக்கு அந்தந்த டிபார்ட்மென்டை கவனித்து வரும் மந்த்ரியோ நிர்வாக ஸபை மெம்பரோ ப்ரெஸிடெண்டாக இருப்பார். கமிட்டி எந்த டிபார்ட்மெண்டைச் சேர்ந்ததோ அது ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி ஆலோசித்து அபிப்ராயம் சொல்லும். ஆனால் அந்த அபிப்ராயங்கள் கவர்ன்மெண்டைக் கட்டுப்படுத்தா.

## சட்ட நிருபணம்.

ஸாதாரணமாக எல்லா கொடுக்கப்பட்ட விஷயங்களைப் பற்றிய சட்ட நிருபணமும் கவர்ன்மெண்டார் ஆக்ஷேபிக்காத 'ரிஸர்வ்ட்' அம்சங்களைப்பற்றிய சட்டநிருபணமும் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் தீர்மானப்படியே இருக்கும். ஆனால் சில ரிஸர்வ்ட் விஷயங்களில் மாத்ரம் சிற்சில நிபந்தனைகள் உண்டு. அவைகளின் விவரம் வருமாறு:—



ரிஸர்வ்ட் அம்சங்களைப் பற்றிய ஒரு மசோதாவை கவர்ன்மெண்டார் கௌன்ஸிலில் கொண்டுவர எண்ணினால், அதற்குப் பின்வருமாறு செய்வார்கள்.

கவர்னருக்கு தாம் மாகாணத்தை சரிவர ஆளுவதற்கும் 'ரிஸர்வ்ட் அம்சங்'களைச் சேர்ந்த வ்யவகாரங்களை சரிவர நடத்துவதற்கும் அந்த மசோதா அவச்யமென்று ஒரு ஸர்ட்டிபிகேட் கொடுக்க அதிகாரம் இருக்கவேண்டும். அப்படி ஸர்ட்டிபிகேட் கொடுத்தால், அந்த மசோதாவையும் ஸர்ட்டிபிகேட்டையும் கெஜட்டில் ப்ரசுரம் செய்யவேண்டும். அதன் பிறகு அந்த மசோதாவை சட்ட ஸபையில் கொண்டுவந்து வாசிக்கவேண்டும். ஸபையார் அந்த மசோதாவின் பொதுக்கொள்கைகளைப்பற்றி வாதம் செய்யலாம். அதன்மேல் அந்த மசோதாவை ஒரு க்ராண்ட் கமிட்டியின் ஆலோசனைக்கு அனுப்புவார்கள். ஆனால் சட்ட ஸபையார் இஷ்டப்பட்டால், அந்த மசோதா 'ரிஸர்வ்ட் அம்சத்தைப்' பற்றியதென்று கவர்னர் சொன்னது சரிதானாவென்று இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்க வேண்டும். இந்தியா கவர்ன்மெண்டார் இது விஷயமாகச் செய்யும் தீர்மானம் முடிவானது. ஆனால் கவர்னர், ஒரு மசோதா சட்ட ஸபையின் அபிப்ராயத்தின்படி தீர்மானமாவதில் கெடுதலில்லையென்று எண்ணினால், மேற்சொன்னபடி ஸெர்ட்டிபிகேட் கொடுக்க வேண்டியதில்லை.

மேற்சொன்ன க்ராண்ட் கமிட்டி ஒவ்வொரு மசோதாவுக்கும் ப்ரத்யேகமாக ஏற்படுத்தப்படும். லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அதில் நூற்றுக்கு 40 முதல் 50 பேர்கள் வரை இந்த க்ராண்ட் கமிட்டியில் இருக்கவேண்டும். அதில் ஒரு பாகம் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலால் தெரிந்தெடுக்கப்படவேண்டும். மற்ற பாகத்தை கவர்னரே நியமிப்பார், கவர்னரால் நியமனம் செய்யப்பட்ட மெம்பர்களின் தொகை தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்களின் தொகையைவிட சற்று அதிகமாக இருக்கும். நியமனம் செய்யப்பட்ட மெம்பர்களில் மூன்றில் இரண்டுக்கு மேற்படாமல் உத்யோகஸ்தர்கள் மெம்பர்களாக இருக்கலாம். கவர்னர் ஸர்ட்டிபை செய்த மசோதாவை க்ராண்ட் கமிட்டியார் ஆலோசனைசெய்து, ஏதாவது திருத்தங்கள் செய்யவேண்டியிருந்தால், அவைகளைச் செய்து, வேண்டுமானால், ஒரு ஸெலக்ட் கமிட்டியினிடம் ஆலோசனைக்கு விடுவார்கள். ஸெலக்ட் கமிட்டியார் மசோதாவைப்பற்றிப் பரிசீலனைசெய்து, செய்யவேண்டிய திருத்தங்களைச்செய்து க்ராண்ட் கமிட்டியினிடம் விடுவார்கள். க்ராண்ட் கமிட்டியார் மசோதாவைப்பற்றி மறுபடியும் ஆலோசித்து, செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து, பிறகு, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு அனுப்புவார்கள். கௌன்ஸிலார் அந்த மசோதாவைப்பற்றி அபிப்ராயங்கள் சொல்லலாமே யொழிய, அதைத் தள்ளிவிடவாவது, அதில் திருத்தங்கள் செய்யவாவது கூடாது. பிறகு அது சட்டமாகிவிடும். ஆனால் ஒரு நிர்வாக ஸபை மெம்பர் இஷ்டப்பட்டால், அவருடைய ப்ரேரணையின்மேல், கௌன்ஸிலார் திருத்தம் செய்யலாம்.

மசோதாவின் கொள்கைகளைப் பற்றியாவது, அதன் அம்சவிவரங்களைப் பற்றியாவது ஏதாவது ஆக்ஷேபம் தோன்றினால் கௌன்ஸிலார் அந்த ஆக்ஷேபங்களை எழுத்து மூலமாக தாக்கல் செய்யலாம். அந்த மசோதாவை கவர்னர் ஜெனராலுக்கும் இந்தியா மந்த்ரிக்கும் அங்கீகாரத்துக்கு அனுப்பும்போது, கௌன்ஸிலின் ஆக்ஷேபணையும் அனுப்பப்படும்.

ஸெர்ட்டிபை செய்யப்பட்ட மசோதாக்களைத் தவிர இதர மசோதாக்கள், லெஜிஸ்

லெடிவ் கௌன்ஸிலாலேயே, அதன் அபிப்ராயப்படி தீர்மானிக்கப்படும். ஆனால் அப்படி லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு விடப்படும் எந்த மசோதாவாவது, அதன் பாகமாவது 'ரிஸர்வ்ட் அம்சங்களை' பாதிக்குமென்று நிர்வாக ஸபை மெம்பரில் யாராவது ஆக்ஷேபணை செய்தால், அவ்விஷயம் கவர்னருடைய தீர்மானத்துக்கு விடப்படும். அந்த மசோதா 'ரிஸர்வ்ட் அம்சங்களை' பாதிக்கவில்லையென்று கவர்னர் அபிப்ராயப்பட்டால், அந்த மசோதாவை கௌன்ஸிலாரே முடிவு செய்வார்கள். 'ரிஸர்வ்ட் அம்சங்களை' பாதிக்குமென்று அபிப்ராயப்பட்டால் அப்படியே ஸெர்ட்டிபை செய்யலாம். அதன்மேல் அவர் இஷ்டப்பட்டால், அந்த மசோதாவை கௌன்ஸிலார் கவனிக்கக்கூடாதென்னலாம். அப்போது அது நின்றுபோய்விடும். அல்லது, வேண்டியபடி மசோதாவைத் திருத்தம்செய்து, கௌன்ஸிலின் ஆலோசனைக்கு விடலாம். அல்லது கௌன்ஸிலாரின் வேண்டுகோளின்மேல் அதை க்ராண்ட் கமிட்டியின் ஆலோசனைக்கு விடலாம்.

கவர்னருடைய இந்த தீர்மானத்தை கௌன்ஸிலார் ஆக்ஷேபித்தால், இந்தத் தீர்மானம் சரியா என்பதை நிர்ணயிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்கவேண்டும். இந்தியா கவர்ன்மெண்ட் செய்யும் தீர்ப்பு முடிவானது.

மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் செய்யப்படும் எல்லா சட்டங்களுக்கும் கவர்னர், கவர்னர் ஜெனரல் இவர்கள் இருவரும் ஸம்மதப்பட்டால் தான், சட்டம் அநுஷ்டானத்துக்கு வரும். இஷ்டப்படாவிட்டால் சட்டம் அமுலுக்கு வரக்கூடாதென்றுசொல்ல அரசருக்கும் அதிகாரம் இருக்கும்.

### பண விஷயம்.

தற்போது வரிகளில் சிலவற்றை இந்தியா கவர்ன்மெண்டார் முழுவதும் அநுபவிக்கிறார்கள். சில வரிகளில் பாதிபாகம் இந்தியா கவர்ன்மெண்டுக்குப் போகிறது. மற்ற பாதி மாகாண கவர்ன்மெண்டுகளுக்குப் போகிறது. இனிமேல் இன்னின்னவரிகள் இந்தியா கவர்ன்மெண்டுக்கு என்றும், இன்னின்ன வரிகள் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கு என்றும் பிரித்துவிடுவார்கள். இப்படிப் பிரிப்பதில் இந்தியா கவர்ன்மெண்டுக்குப் பணம் போதுமான அளவு கிடைக்காமல் போகுமாகையால், அதற்காக மாகாண கவர்ன்மெண்டுகள் ஒரு குறிப்பிட்ட தொகை இந்தியா கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டும். மாகாண கவர்ன்மெண்டுகள் இந்தத் தொகையைக் கொடுக்க ஏற்பாடு செய்துகொண்டபிறகு தான் இதர செலவுகளை கவனிக்கவேண்டும். அந்த இதரச் செலவுகளில் ரிஸர்வ்ட் அம்சங்களின் செலவுக்கு வேண்டிய பணத்தை முதலில் எடுத்து வைத்துவிடவேண்டும். பாக்கிப் பணம் கொடுக்கப்பட்ட அம்சங்களுக்காகும். கொடுக்கப்பட்ட அம்சங்களுக்குப் பணம் போதாவிட்டால் புதுவரி போடுவதா என்று ஆலோசிக்கப்படும். இதன் பிறகு வரவு செலவு திட்டம் முழுவதும் தயார்செய்து சட்ட ஸபைக்கு வரும். கௌன்ஸிலார் எந்த அம்சங்களில் செலவைக் குறைக்கலாம், அதிகப்படுத்தலாம் என்பதை நிர்ணயிப்பார்கள். ஆனால் குறிப்பிட்ட ரிஸர்வ்ட் அம்சங்களுக்கு ஏற்பட்ட பணத்தைக் குறைக்கக்கூடாதென்று கவர்னர் ஸர்ட்டிபை செய்துவிட்டால், கௌன்ஸிலார் அந்தச் செலவு இனங்களை மாற்றக்கூடாது. மற்ற இனங்களை மாத்ரம், இஷ்டப்பட்டால் மாற்றலாம். இந்த இதர இனங்களை அதிகமாக்கவோ, குறைக்கவோ வேண்டி கௌன்ஸிலில் செய்யப்படும் தீர்மானங்களின்படி வரவு செலவு திட்டம் மாற்றப்படும்.

மேற்கூறிய விவரங்களால் ஜன ப்ரதிநிதிகளுக்கு கொடுக்கப்பட்ட அம்சங்களில்தான்



சிறிதளவு ஸ்வய ஆட்சி இருக்கிறதென்று ஏற்படுகிறது. அதுவும் ஆராயப்போனால் உண்மையான ஸ்வய ஆட்சி என்று ஏற்படாது. ஏனென்றால், கொடுக்கப்பட்ட அம்சங்களை கவனிக்கும் மந்த்ரி லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலால் தெரிந்தெடுக்கப்படுவதில்லை. கவர்னரே தெரிந்தெடுக்கப்பட்ட கௌன்ஸில் மெம்பர்களிலிருந்து பொறுக்கி எடுத்துக்கொள்ளுகிறார். அவர் வேலையை ஒப்புக்கொண்ட பிறகு அவரை ஒருவரும் அசைப்பதற்கில்லை. லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் காலம் முடியும்போதுதான் அவர் வேலையின் காலமும் முடிவடைகிறது. ஆகவே அது வரையில் அவரிட்டதே சட்டமாகிறது. ஜனங்களுடைய வெறுப்பு விருப்பங்களுக்கு இசைய ராஜாங்கத்தை நடத்தவேண்டுமென்றால் அவர் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு அதாவது ஜனங்களுக்குக் கீழ்ப்படவேண்டும். அதாவது இவர்களுக்கு விரோதமாக நடந்தால், அவர் வேலையை விட்டுவிட வேண்டியதே. ஆனால், அவர் கவர்னரால் தெரிந்தெடுக்கப்படுகிறார். அவர் சில ஸந்தர்ப்பங்களில் கவர்னருடைய அபிப்ராயத்தை அநுஸரித்துத்தான் நடக்க வேண்டியிருக்கிறது. கவர்னருடைய அபிப்ராயம் ஜனங்களுடைய அபிப்ராயத்துக்கு விரோதமாக இருந்தால், மந்த்ரி என்ன செய்கிறது? லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் காலம் முடியும் வரையில் அவர் ஜன ஸம்மதமில்லாதவராகவே நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் அவருக்கு ஜனங்களிடம் பொல்லாப்புதான் ஏற்படுமே ஒழிய வேறு லாபம் ஒன்றுமில்லை. அடுத்த ஸமயம் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலுக்கு அவர் மெம்பராகவர ப்ரயத்தனப்பட்டால், அது அவருக்குக் கிடைப்பது கஷ்டமாகலாம். இது உண்மையில் பொறுப்புள்ள ஆட்சியாகாது. ஆகையால் இது விஷயமாகச் செய்யவேண்டிய சீர்திருத்தம் என்னவென்றால், 'ரிஸர்வ்ட்' அம்சங்களில் பொறுப்புள்ள ஆட்சி கொடுக்க முடியவில்லையென்றால், கொடுக்கப்பட்ட அம்சங்களிலாவது பூரா பொறுப்புள்ள ஆட்சி கொடுக்கவேண்டும். மந்த்ரிகள் தங்களுக்கு யுக்தமென்று தோன்றுகிறபடி சட்டஸபையின் அபிப்ராயத்தை அநுஸரித்து அந்த கொடுக்கப்பட்ட அம்சங்களை நிர்வகிக்க வேண்டும். அவர் செய்யும் கார்யங்களை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் அங்கீகாரம் இருக்கும் வரையில் அவர் மந்த்ரி வேலை பார்க்கவேண்டும். அவரிடம் கௌன்ஸிலுக்கு நம்பிக்கை குறைந்துவிட்டால் அவர் வேலையை விட்டுவிட வேண்டும். இதனால் பொறுப்புள்ள ஆட்சி வ்ருத்தியாக இடமுண்டு. மந்த்ரி கூடியமட்டில் மெம்பர்களின் கருத்துகளுக்கு இணங்கிப்போக முயலுவார். மெம்பர்களும், அல்ப விஷயங்களுக்கெல்லாம் பிடிவாதமாயிருக்கமாட்டார்கள். ஏனென்றால், மந்த்ரி அந்த நிர்ப்பந்தத்தைப் பொறுக்காமல் வேலையை ராஜிநாமா செய்ய முன் வரலாம்.

ரிபோர்ட்டில் குறிப்பிட்டுள்ளபடி கொடுக்கப்பட்ட அம்சங்கள் வெகுவாய் ஸாமான்ய விஷயங்களேயாகும். அவற்றில் தேர்ச்சியடைவது மாத்ரம் போதாது. இதர முக்யமான விஷயங்களிலும் ஜனப்ரதிநிதிகளுக்கு தேர்ச்சியும் பொறுப்பும் ஏற்படும்படி சில முக்யமான விஷயங்களையும் ஜனங்களின் பொறுப்பில் விடவேண்டும். அதாவது கொடுக்கப்பட்ட அம்சங்களில் முக்யமான விஷயங்களும் அடங்கியிருக்கவேண்டும். போலீஸ் சட்டம், நீதி பரிபாலனம் ஆகிய இந்த விஷயங்களை 'ரிஸர்வ்ட் அம்சங்களாக' வைத்துவிடலாம். மற்றவைகளை எல்லாம் கொடுக்கப்பட்ட அம்சங்களில் சேர்த்துவிடவேண்டும். இந்த ரிஸர்வ்ட் அம்சங்களிலும், மாகாண கவர்ன்மெண்டார் ஜனங்களின் அபிப்ராயத்தை அநு

ஸரித்து நடக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஆனால் இப்போது செய்திருக்கும் திருத்த ப்ரேரணைகளில் ஜனங்களுடைய அபிப்ராயத்தின்படி, அதாவது ஜனப்ரதிநிதிகளுடைய அபிப்ராயத்தின்படி கவர்ன்மெண்டார் நடக்கவேண்டுமென்ற கட்டாயமில்லை. 'ரிஸர்வ்ட் அம்சங்' களில் கவர்ன்மெண்டாருக்குப் பூரா அதிகாரமிருக்கிறது. கவர்னர் இஷ்டப்பட்டால், 'ரிஸர்வ்ட் அம்சங்' களைப்பற்றிய விஷயங்களை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலின் தீர்மானத்துக்கு விடாமலேயிருந்து விடலாம். க்ராண்ட் கமிட்டி யென்ற கமிட்டியின் ஆலோசனைக்கு விடவேண்டு மென்றிருக்கிறது. அந்தக் கமிட்டியில் கவர்ன்மெண்ட் கக்ஷியைச் சேர்ந்த மெம்பர்கள்தான் அதிகம். கவர்ன்மெண்ட் கக்ஷியைச்சேர்ந்த மெம்பர்களில் மூன்றில் இரண்டு பாகம் பேர்கள்தான் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களென்றாலும், கவர்னர் நியமிக்கும் இதர மூன்றில் ஒரு பாகம் மெம்பர்கள் உண்மையான ஜன ப்ரதிநிதிகளாக இருப்பார்கள் என்ற நிச்சயமில்லை. அப்படியே அவர்கள் ஜனங்களுடைய அபிப்ராயத்துக்கு இணங்க நடந்தாலும், கவர்னர் சட்ட ஸபையை எப்போது வேண்டுமென்றாலும் கலைத்து விடலாமென்றிருப்பதால், க்ராண்ட் கமிட்டியில் கவர்ன்மெண்டுக்கு விரோதமாகப் போகுமென்று தோன்றினால் உடனே லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலைக் கலைத்துவிட்டு, புது கௌன்ஸில் ஏற்படும்படி செய்து அதில் கவர்ன்மெண்டுக்கு அநுஸரணையாக இருக்கும் உத்யோகஸ்தர் அல்லாத இந்தியர்களை கவர்னர் நியமனம் செய்யலாம். அப்போது கவர்ன்மெண்டார் செய்யும் கார்யங்களுக்கு இந்தப் புது மெம்பர்கள் அநுஸரணையாக இருப்பார்கள். ஆகையால் க்ராண்ட் கமிட்டியில் அதில் இருகக்ஷியாரும் ஸம பலமாயிருக்கவேண்டும். முக்யமான விஷயங்களைப் பற்றிய வாதங்களில் கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் எப்போதும் தங்கள் சொந்த அபிப்ராயப்படி வோட் கொடுக்க இடமேற்படவேண்டும். அப்போது கவர்ன்மெண்டார் செய்யும் கார்யங்கள் உண்மையில் நல்லவையல்லவென்றால், கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்களில் சிலர் ஜனக்கக்ஷியோடு சேரக்கூடும். கவர்ன்மெண்ட் ப்ரேரிக்கும் சட்டங்கள் நல்லவையென்றால், ஜனக்கக்ஷியிலிருந்து சிலர் கவர்ன்மெண்ட் கக்ஷியில் சேருவார்கள். அப்போது ராஜ்ய நிர்வாகம் உண்மையில் ஜன ஸம்மதமாக நடக்கும்.

இந்த ஏற்பாட்டினால் கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் குறையுமென்று ஆக்ஷேபம் சொல்லலாம். ஆனால் இப்போதிருப்பதைவிட அதிகம் குறைந்துவிடாது. ஏனெனில் இப்போது மாகாண லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களில் உத்யோகஸ்தர் அல்லாதவர்களின் தொகை, உத்யோகஸ்தர்களைவிட சற்று அதிகம். அநுஷ்டானத்தில் இது ஜன ப்ரதிநிதிகளுக்கு அதிக ஸாதகமா யிராவிட்டாலும், இரண்டொரு ஸந்தர்ப்பங்களில் இந்த ஏற்பாடு ஜன ப்ரதிநிதிகளுக்கு அநுகூலமா யிருந்திருக்கிறது. திருத்த ப்ரேரணைகளில் இந்த ஸ்வதந்தரத்தை எடுத்துவிட உத்தேசிப்பது சரியல்ல. இந்த ஸ்வதந்தரத்தை அதிகப்படுத்தலாமே யொழிய குறைக்கக்கூடாது. ஆனால் கவர்ன்மெண்டார் ராஜ்ய நிர்வாகத்துக்கு அவச்யமான சட்டம் செய்ய நினைத்து, அதற்கு சட்டஸபையின் ஸம்மதத்தைப் பெறாமல் போனால் அதற்கென்ன செய்கிறதென்னலாம். அப்போது கவர்னர் தற்கால ஏற்பாடாக ஆர்டினன்ஸ் என்னும் சட்டங்கள் செய்துகொள்ளலாம். அவச்யமானால், இந்தியா கவர்ன்மெண்டை வேண்டிய சட்டத்தைச் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். இப்படி மாகாண கவர்ன்மெண்டுக்கும் மாகாண ஜன ப்ரதிநிதிகளுக்கும் ஏற்படும் தகராறுகளில் இந்தியா கவர்ன்மெண்டார் மத்யஸ்தம் செய்துவைக்கவேண்டும். இவ்வளவு தூரம் சொன்னதிலிருந்து, சட்ட ஸபையைக் கலைக்க கவர்னருக்கு அதிகாரம் இருக்கவேண்டியதில்லையென்று தானாகவே ஏற்படுகிறது.

(இன்னும் வரும்.)



[library stamp]

# BOYS' AND GIRLS' AGRICULTURAL CLUBS IN U. S. A.

## அமெரிக்க ஐக்ய நாடுகளிலுள்ள சிறுவர் சிறுமிகளின் வ்யவஸாய ஸங்கங்கள்.

இவைகள் அநேக வர்ஷங்களாக அங்கே இருக்கின்றன. இவைகளை நல்ல நோக்கங்களுடன் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவைகள் வர வர அதிக வேலை செய்து வருகின்றன. இந்த ஸங்கங்கள் க்ராமாந்தரங்களில் வஸிப்பவர்களுக்குப் பயிர்த் தொழிலில் ஆசை யூட்டி, பட்டணங்களுக்குப் போகவேண்டு மென்ற ஆசையை ஒழித்து, வ்யவஸாயத்தில் லாபமுள்ள நூதன முறைகளைப் பரவச் செய்கின்றன. இவைகள் விளையாடும் பருவத்தையுடைய குழந்தைகளுக்கு அவர்களுடைய உழைப்பின் பலனை விளக்கமுறக் காட்டுகின்றன.

### இவைகளின் நோக்கமும் ஏற்பாடும்.

சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் வ்யவஸாய முறைகளையும் குடும்பச் சிக்கனத்தையும் நன்றாகக் கற்பித்து, அவைகளை அப்யாஸத்திற்குக் கொண்டு வரும்படி பழக்கிப் புதிதாகச் செய்துள்ள ஆராய்ச்சிகளின் பலனை அவர்களை அநுபவிக்கச் செய்வதே இந்த ஸங்கங்களின் நோக்கமாகும். 1915ஹு கடைசியில் இந்த ஸங்கங்களின் அங்கத்தினர் 25,0000 பேர் இருந்தார்களென்று தெரிகிறது. முதலில் இவைகள் தான்ய ஸங்கங்களாக இருந்தபடியால், இவைகள் சோளத்தைப் பயிர் செய்வதையே தொழிலாகக் கொண்டிருந்தன. ஆனால் அவைகள் இப்பொழுது சோளம், உருளைக் கிழங்கு, கரும்பு, பீட்ரூட் என்னும் ஒருவகைக் கிழங்கு, சில புல் தினுஸுகள் முதலியவைகளைப் பயிர் செய்கின்றன; வாத்து கோழி முதலியவைகளை வளர்க்கின்றன; காய்கறிகளையும் பழ தினுஸுகளையும் சேகரித்து வைக்கின்றன; வீட்டில் செய்யக்கூடிய கைத்தொழில்களையும், குடும்பச் சிக்கன விஷயங்களையும் கற்பிக்கின்றன.

அமெரிக்காவின் ஒவ்வொரு நாட்டிலுமுள்ள வ்யவஸாயக் கலாசாலையாரோடும் ராஜாங்கத்தார் கலந்து வேலை செய்கிறார்கள். அந்த ஸங்கங்களுக்குத் தலைவர்களை நியமிக்கவேண்டுமென்றும், அவர்களுடைய சம்பளத்திற்காக அவைகளுள்ள மாகாணத்தார் பாதிப் பணமும் ப்ரதான ராஜாங்கத்தார் பாதிப்பணமும் கொடுக்கவேண்டு மென்றும் ஏற்பாடு செய்ய முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஏற்படுத்தப்படும் ஒவ்வொரு தலைவனும் ஜில்லாவிலுள்ள ஏஜண்டுகளோடும், பள்ளிக்கூடங்களின் மேல்பார்வை உத்யோகஸ்தர்களோடும், உபாத்யாயர்களோடும் கலந்து யோசித்துப் புதிய இடங்களில் ஸங்கங்களை ஸ்தாபிக்கவேண்டும். ஒவ்வொரு மாகாணத்திலும் அதைச் சேர்ந்த ஜில்லாக்களிலுமுள்ள தலைவர்கள் வர்ஷா வர்ஷம் ஒன்றுகூடி அந்த வர்ஷம் செய்ய வேண்டியவைகளைத் தீர்மானிப்பார்கள். இவர்களின் உதவியோடு ஸங்கத்தின் அங்கத்தினர்களுக்கு வ்யவஸாயக் கலாசாலைகளிலிருந்தும் ராஜாங்கத்திலிருந்தும் உதவி கிடைக்கிறது.

### மூன்று வகை ஸங்கங்கள்.

இந்த ஸங்கங்கள் மூன்று வகைப்படும் (1) தான்யங்கள் கரும்பு முதலியவைகள் பயிராக்கும் ஸங்கங்கள். (2) பன்றிகளை வளர்க்கும் ஸங்கங்கள். (3) வாத்து கோழி முதலியவைகளை வளர்க்கும் ஸங்கங்கள்.

### தான்ய ஸங்கங்கள்.

இந்த ஸங்கங்களில் சோளத்தைப் பயிர் செய்கிறார்கள். பெண்களின் ஸங்கங்கள் தான்யங்களைச் சேகரித்து வைக்கின்றன.

வ்யவஸாயக் கலாசாலையாரும் ராஜாங்கத்தாரும் இந்த ஸங்கங்களின் அங்கத்தினருக்கு நிலத்தைச் செழிப்புள்ளதாகச் செய்யும் முறையையும் விதைகளை விதைக்கும் விதத்தையும் கற்பிக்கிறார்கள். பண்டகசாலை ஸங்கங்களிலுள்ள பெண்களுக்குத் தக்காளி முதலிய காய் வர்க்கங்களைப் பயிர் செய்யும் விதமும் அவைகளைச் சேகரித்து வைக்கும் வழியும் கற்பிக்கப்படுகின்றன. பெண்கள் தாங்கள் செய்யும் வேலைகளைப்பற்றி அப்போதைக்கப்போது ஸங்கத் தலைவருக்குத் தெரிவிப்பார்கள். எல்லாம் நன்றாக விளைந்திருக்கும் ஸமயத்தில் எல்லாப் பொருள்களையும் ஒரு காட்சி சாலையில் வைப்பார்கள். அவைகளில் நன்றாக விளைந்துள்ள பொருள்களுக்காவது அவைகளைப்பற்றியுள்ள வ்யாஸங்களுக்காவது வெகுமதி கொடுக்கப்படும். குறைந்த செலவில் அதிக சோளம் பயிராக்கும் சிறுவன் ஸங்கத்தின் வீரனாகிறான். அவன் மற்ற ஸங்க வீரர்களோடு போட்டி போட்டு வென்று மாகாணத்திற்குள் முதலான வீரனாக வேண்டுமென்று ப்ரயத்னப்படுகிறான். அப்படி ஆகிறவர்களுக்குக் கலாசாலையாரும் அன்யரும் வெகுமதிகள் கொடுக்கிறார்கள். வ்யவஸாயக் கார்யதர்சி அவர்களுக்கு யோக்யதா பத்ரங்கள் கொடுக்கிறார்.

### பன்றிகள் வளர்க்கும் ஸங்கங்கள்.

இந்த ஸங்கங்கள் 13 மாகாணங்களில் இருக்கின்றன. அவைகளில் 9,000 அங்கத்தினர் இருக்கிறார்கள். ப்ரதான ராஜாங்கத்தாரும் மாகாணத்திலுள்ள கலாசாலையாரும் இந்த ஸங்கங்களுக்காக ஒத்து வேலை செய்கிறார்கள். ஒவ்வொரு ஸங்கத்திற்கும் ஒரு தலைவனை நியமிக்கிறார்கள். ஸங்கத் தலைவன் ஸங்கங்களின் ஏற்பாட்டைப் பற்றியும் அவைகள் செய்யும் வேலைகளைப்பற்றியும் தெரிவித்துக்கொண்டு வருவான். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள அங்கத்தினர் செய்யும் வேலைகளை அங்குள்ள தலைவன் மேற்பார்வை செய்து வருவான். வ்யவஸாய ஸங்கத்தார் பன்றிகளைக் கொன்று இறைச்சியைத் தயார் செய்யும் வகையை மாகாணத் தலைவன் மூலமாக அங்கத்தினருக்குக் கற்பிக்கிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் குறைந்தது ஒரு பன்றியையாவது வளர்க்கவேண்டும். நல்ல ஜாதிப் பெண் பன்றிகளை வளர்த்துப் பன்றிக் குட்டிகளை வ்ருத்தி பண்ணும்படி சிறுவர்களைத் தூண்டுகிறார்கள்.

### வாத்து, கோழி முதலியவைகளை வளர்க்கும் ஸங்கங்கள்.

இந்த ஸங்கங்களும் மேற்சொல்லியபடியே நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளுக்கும் ஒரு மாகாணத் தலைவனுண்டு. அவன் மாகாணம் முழுவதும் ப்ரயாணஞ் செய்து, வாத்து கோழி முதலியவைகளை வளர்க்கும் விதத்தை அங்கத்தினருக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் எடுத்துச் சொல்லுவான். ஒவ்வொரு இடத்திலுமுள்ள உபாத்யாயரே ஸங்கத் தலைவராகி ஸங்கத்தின் வேலைகளை மேற்பார்வை செய்து வருவார். ஒவ்வொரு அங்கத்தினரும் முட்டைகளை வாங்கி அவைகள் குஞ்சு பொறித்த பிறகு குஞ்சுகளை ஜாக்ரதையாக வளர்த்து வரவேண்டும். இந்த வேலையை பால்யர்கள் மிகவும் அக்கரையாகச் செய்து வருகிறார்கள். சிறுவர் சிறுமிகளைப் பார்த்து வயஸானவர்களும் இந்தத் தொழிலில் ப்ரவேசித்திருக்கிறார்கள்.

### ஸங்கங்களின் வ்ருத்தி.

சிறுவர் சிறுமிகள் மேற்கூறிய ஸங்கங்களில் நன்றாக வேலை செய்வதைப் பார்த்துப் பலவிடங்களில் சிறுவர்களின் தோட்ட ஸங்கங்களை ஸ்தாபித்திருக்கிறார்கள். வ்யவஸாய முறைகளையும், பன்றி கோழி முதலியவைகளை வளர்க்கும் விதத்தையும் முன்னமே அறிந்துள்ள சிறுவர்களுக்கு இந்த ஸங்கங்களில் இந்தப் பயிருக்குப் பிறகு இன்னது பயிர் செய்ய வேண்டுமென்பதையும், நிலங்களைச் செழிப்புள்ளதாகச் செய்யும் வழியையும் கால்நடைகளை வ்ருத்திபண்ணும் விதத்தையும் கற்பிக்கிறார்கள்.



---

# KALAMEGAM.

By S. NARASIMHACHARIAR, B. A., B. L.
*High Court Vakil, Madras.*

## காளமேகப் புலவர்.

(சென்றமாஸத்திய ஸஞ்சிகையில் 184-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்த அத்புதக் காட்சியைக் கண்டுங்கூட புலவர்கள் அவருடைய பெருமையை மெச்சி அவரை உபசரிக்காமல், சும்மா இருந்தார்கள். அவர்களைப் பார்த்து காளமேகம், "நீங்கள் யார்? சொல்லுங்கள்," என்று கம்பீரமாய்க் கேட்டார். கர்வமும் பொறாமையும் நிறைந்த அந்தப் புலவர்கள், "நாங்கள் கவிராயர்கள்" என்று பதில் சொன்னார்கள்.

உடனே, காளமேகம், அவர்கள் வாயிலிருந்து வந்த வார்த்தையைக் கொண்டே அவர்களைப் பரிகாஸம் செய்ய நினைத்து, 'கவிராயர்' என்னும் சொல்லுக்கு, 'குரங்கு ராஜர்' என்று அர்த்தம் பண்ணி,*

வால் எங்கே? நீண்(டு) எழுந்த வல்லுகிர்எங்கே? நாலு
கால் எங்கே? ஊன்வடிந்த கண் எங்கே?—சாலப்
புவிராயர் போற்றும் புலவீர்கள்! நீங்கள்
கவிராயர் என்(று) இருந்தக்கால்.

என்ற பாடலைச் சொன்னார்.

இதன் பொருள் :—

அரசர்கள் புகழும் புலவர்களே! நீங்கள் கவிராயர் (அதாவது குரங்கு ராஜர்கள்) ஆகும் பக்ஷத்தில், உங்களுக்கு வாலிருக்கவேண்டுமே, அது எங்கே? வலிமை மிகுந்த நகத்தைக் காணோமே? (இவ்விரண்டும் இல்லாத ஒருவகைக் குரங்கென்று எண்ணலாம் என்றாலும்), நாலு காலெங்கே? ஊளை வடிந்துகொண்டேயிருக்கும் கண்களெங்கே? இவைகள் இல்லாதபடியால், நீங்கள் கவிராயரும் அல்ல, என்பது கருத்து. அதாவது நீங்கள் குரங்குகளினும் தாழ்ந்தவர் என்பதே கருத்துப்போலும். 'புவிராயர் போற்றும் புலவீர்காள்' என்பது வஞ்சப் புகழ்ச்சி.

இதைக் கேட்டு அடங்காத கோபங்கொண்ட அதிமதுரகவி, தன்னுடைய ப்ரபாவத்தைச் சொல்லி, காளமேகத்தைப் பயப்படுத்த நினைத்து, "என்னுடைய ஸாமர்த்யம் உனக்குத் தெரியுமா? தெரிந்த பக்ஷத்தில், உன் கொட்டம் யாவும் ஒடுங்கிவிடும். சொல்லுகிறேன் கேள்.

வெண்பா.

மூச்சுவிடு(ம்) முன்னே, முந்நூற(ம்) நானூற(ம்),
ஆச்(சு) என்றால், ஐந்நூறம் ஆகாதா?—பேச்(சு)என்
வெள்ளைக்கவி காளமேகமே! உன்னுடைய [கவி
கள்ளக் கவிக் கடையைக் கட்டு."

என்றான்.

இதன் பொருள் :—

வெண்பாப் பாடுவதில் மிகுந்த ஸாமர்த்யம் உள்ள(வன் என்று தற்புகழ்ச்சி கொண்ட) காளமேகமே! (உன்னைக் காட்டிலும் நான் ஸமர்த்தன் என்று இப்போதாயினும் அறிந்து

*'கபி' என்னும் ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு, 'குரங்கு' என்று, அர்த்தம். 'கபி' என்னும் சொல், தமிழில் 'கவி' என்று வழங்கும். ராஜர்=ராயர்.

கொள்). மூச்சு விடுவதற்குள்ளே முந்நூறு நானூறு பாடல்களை (ஸுலபமாகப்) பாடுவேன். 'ஆய்விட்டதா,' என்று கேட்பதற்குள்ளே, ஐந்நூறு பாடல்களைப் பாடி முடிப்பேன். நீ ஏன் வீணாக (வீர வாதம்) பேசுகிறாய். உன்னுடைய பொய்க் கவித்வத்தைப் பற்றி வீணாகப் பேசாதே. உன் கடையை அம்மட்டோடு கட்டுவாயாக.

இதைக் கேட்ட பாவலர் பெருமான், தன் திறமை அவன் திறமையைக் காட்டிலும் மிகச் சிறந்தது என்று ஸபையோர் தெரிந்துகொள்ளும்படி

'இம்'என்னு(ம்)முன்னே எழுநூறும் எண்ணூறும்,
'அம்'என்றால் ஆயிரம் பாட்(டு)ஆகாதா?—சும்மா
இருந்தால் இருப்பேன்; எழுந்தேனோ ஆகில்,
பெருந் தாரைமேகம் பி(ள்)ளாய் !

என்னும் பாடலைச் சொன்னார்.

இதன் அர்த்தம் :—

('மூச்சு விடுவதற்குள் முந்நூறு பாடல் பாடுவேன்' என்று வீரவாதம் சொன்னாயே. எனக்கு அவ்வளவு நேரம் வேண்டாம்). இம்' என்று சொல்வதற்குள்ளாக, நான் எழுநூறு எண்ணூறு பாடல்களைச் சொல்ல வல்லவன். 'அம்' என்பதற்குள் ஆயிரம் பாடல் பாடுவேன். ஏதோ சும்மா இருக்கிறேன் என்று எண்ணாதே. பாட ஆரம்பிப்பேனாகில், சோனை மாரி போலப் பாடல்களைக் கொட்டுவேன். (என் பெயர் 'காளமேகம்' என்பதையும் அறிந்துகொள்). பிள்ளாய் !

அப்போதும், அதிமதுர கவி, பயப்படாதவனாய், "ஏன் சும்மா, பிதற்றுகிறாய். நீ கற்றுணர்ந்தவனாகில், அரிகண்டம் பாடுவையா." என்று கேட்டான். அதற்குக் காளமேகம், "அரிகண்டம் என்றால் என்ன" என்று கேட்டார்.

அப்போது, அதிமதுரம், 'அரிகண்டம்' என்ற பரீக்ஷையின் வரலாற்றைச் சொல்லலானான் :—

"புலவன் கழுத்தில் ஒரு கத்தியைக் கட்டி, அதன் இருமுனைகளிலும் சங்கிலி கோத்து, அந்தச் சங்கிலிகளை, எதிரி தன் கையில் பிடித்துக்கொண்டு, தான் சொல்லும் விஷயங்களைப் பற்றியும், தான் சொல்லும் நிபந்தனைகளைத் தழுவியும் பாடல் பாடும்படி சொல்லுவான். அப்படியே, புலவனும் க்ஷண நேரத்துக்குள் பாடி முடிக்கவேண்டும். அப்படிப் பாடத்தவறினாலும் சரி, உடனுக்குடனே பாடாவிட்டாலும் சரி, எதிரி சங்கிலியை இழுத்துவிடுவான். புலவன் தலை அறுந்து போய்விடும். இதுதான் அரிகண்டம்" என்றான்.

இதைக் கேட்ட காளமேகம் கொல்லென்று சிரித்து, "ஏதோ, அஸாத்யமான விஷயமொன்றைச் சொல்லப் போகிறீர்கள், என்று எண்ணினேன். இதுதானே! இப்படிக் குழந்தையும் பாடலாமே! நீங்கள் யமகண்டம் பாடுவீர்களா?" என்றார்.

அதிமதுரகவி: "எமகண்டத்தைப்பற்றி, நாங்கள் இதுவரையிலும் கேள்விப்பட்டதில்லை. அது என்ன? விவரமாய்ச்சொல்" என்றான்.

அப்போது காளமேகம், எமகண்டத்தை விவரித்துச் சொல்வார்:—

"பதினாறடி நீளம், அகலம், ஆழமுள்ள ஒரு பள்ளம் தோண்டி, அந்தப் பள்ளத்தின் நான்கு மூலையிலும் ஸ்தம்பங்கள் நிறுத்தி, அவற்றின்மேல் இருப்புச் சட்டம் போட்டு, அந்தச் சட்டத்தின் மத்தியில் ஒரு உறியைத் தொங்க விடவேண்டும். அந்த உறியின் கீழே, பெரிய கொப்பறையை வைத்து, அதன் கீழே நெருப்பு மூட்டி, அந்தக் கொப்பறையில் எண்ணெய் வார்த்து நிரப்பி, அதைக் கொதிக்கச் செய்யவேண்டும். நான்கு ஸ்தம்பங்களுக்கு அருகிலும் நான்கு மதயானைகளை நிறுத்தி, அவற்றின்மேல் பாகர் ஏறிக்கொண்



டிருக்க வேண்டும். யமகண்டம் பாடத் துணிவுள்ள புலவன், அந்த உறியில் உட்கார்ந்திருக்க வேண்டும். அவன் கழுத்திலும் இடுப்பிலும் கத்திகளைக் கட்டி, அவற்றில் கோத்துள்ள சங்கிலிகளை யானைப் பாகர் கையில் கொடுத்து விடவேண்டும். பிறகு, அந்தப் புலவன் ஸாமர்த்யத்தைப் பரீக்ஷை பண்ண விரும்புவோர், தங்களுக்கு இஷ்டமானபடியெல்லாம் கேள்வி கேட்டு, அதன்படிப் பாடச் சொல்லுவார்கள். அந்தப் புலவனும் அப்படியே பாடவேண்டும். பாடுவதில் கொஞ்சம் பிசகிருந்தாலுங்கூட, பரீக்ஷகர்கள், யானைப் பாகருக்கு சைகை செய்வார்கள். பாகரும் யானையை ஓட்டுவார்கள். கத்திகளால் புலவன் தலையும் உடலும் அறுபட்டு, கொப்பறையில் விழுந்துபோம். இதுதான் யமகண்டம் என்பது. யமதண்டனைக்கும் மேற்பட்ட பயங்கரமுள்ள இந்த யமகண்டத்தை நீங்கள் பாடுவீர்களா?" என்றார். இதைக் கேட்டுத் திகிலடைந்த அதிமதுரகவி, இப்படிப் பாடுவது தன்னால் ஸாத்யமில்லையென்று கண்டு கொண்டு, உபாயத்தினால் காளமேகத்தைத் தோற்கச் செய்ய வேண்டுமென்று எண்ணி, கவிச் சிங்கத்தைப் பார்த்து, "'யமகண்டம் பாடுவீர்களா?' என்று கௌரவமாகக் கேட்டுவிட்டாயே. நீ யமகண்டம் பாடுவாயா?" என்றான்.

உயிரை வெல்லமாக எண்ணி, பிறரையே பரீக்ஷை செய்ய எண்ணிய கோழைகளைப் பற்றி கேவலமாக நினைத்த காளமேகம், தம்முடைய பெருமையும் அஞ்சா நெஞ்சு படைத்த தீரமும் உலக முழுவதும் அறியும்படி, "ஆஹா! அப்படியே செய்கிறேன்;" என்றார்.

உடனே பள்ளம் வெட்டுதல் முதலிய கார்யங்களைச் செய்து, யமகண்டத்துக்கு வேண்டியவைகளை ஸித்தம் செய்தார்கள்.

(இன்னும் வரும்.)

எஸ். நரஸிம்மாச்சார்யர்.

## THE ARKA PLANT.

By PANDIT, V. SUBRAMANIA AIYAR.

## எருக்கன் செடி.

சென்ற மாஸத்து ஸஞ்சிகையில் எருக்கின் வகைகளைப்பற்றியும் அதன் உபயோகங்களில் சிலவற்றைப் பற்றியும் எழுதினோம். அதைப் பற்றிய மற்ற விவரங்களை இங்கெழுதுகிறோம்.

### எருக்கிலைகள்.

உத்தராயண புண்யகாலமாகிய தை மாஸத்து ரத ஸப்தமி தினத்தில் ஹிந்துக்கள் எருக்கிலைகளை ஸ்நான காலத்தில் உபயோகிக்கிறார்கள். ஹிந்துக்கள் எவரும் அன்றைய தினம் அவற்றை சிரஸு முதல் எல்லா அங்கங்களிலும் வைத்துக்கொண்டு, அவற்றில் சாணியால் செய்த விக்னேச்வரர், அக்ஷதை, எள் முதலியவைகளை வைத்துக்கொண்டு நதிகள் முதலானவற்றில் ஸ்நானம் செய்து புண்ய காலத்தைக் கொண்டாடுகிறார்கள்.

நான்கு வேதங்களிலும் சிறந்ததென்று சொல்லப்படுகிற ஸாம வேதத்திய த்ராஹ்யாயன மஹரிஷி போன்றவர்கள் எருக்கன் இலைகளுக்கும் புஷ்பங்களுக்கும் மிகக் கௌரவம் கொடுத்துப் போற்றிக் கொண்டாடுகிறார்கள். ச்ராவண மாஸத்தில் அவர்கள் தமது ஆவணியாவிட்டம் என்னும் வைதிக கார்யத்தைச் செய்துகொள்ளும் காலத்தில், இந்தப் புஷ்பமும், இலையும் இல்லாமல் அவர்களுக்குக்

காரியம் நடவாது. அந்தக் காலத்தில் அவர்கள் ஏராளமாக எருக்கிலைகளையும் புஷ்பங்களையும் கொண்டுவந்து வரிசையாகவைத்து முதல்வரிசையில் ஒவ்வொரு இலையிலும் விச்வாமித்ரன் முதலான 13 ராஜரிஷிகளை முறையே ஆவாகனம் செய்கிறார்கள். இரண்டாவது வரிசையில் சடி முதலிய 10 ரிஷிகளையும், மூன்றாவது வரிசையில் கங்கை முதலான நவ நதிகளையும், நாலாவது வரிசையில் வம்சோத்தானர் முதலிய 8 ரிஷிகளையும், 5-வது வரிசையில் விச்வேதேவர்களையும், 6-வது வரிசையில் த்வாதசாதித்யர்களாகிய 12 பேர்களையும், 7-வது வரிசையில் தெற்குப் பாகத்தில் 3 பித்ருக்களையும் முறையே ஒவ்வொரு இலையிலும் ஆவாஹனம் செய்து அர்க்க பத்ரங்களால் பூசித்துக் கொண்டாடுகிறார்கள். இப்படி இந்தச் செடியின் இலைகளும் பூக்களும் வைதிகமாகவும் விசேஷமாகக் கொண்டாடப் படுகின்றன.

எருக்கிலை தடிப்பானதும் ஸுலபமாய் தண்ணீரில் கரையக் கூடியதும் காரமுள்ளதுமாம். ஆகவே, இது ஏராளமாய் உண்டாகியிருக்கும் பாகங்களிலுள்ள குடியானவர்கள் இந்தத் தழைகளை வெட்டிக் கொண்டு வந்து சேற்றிலிட்டு மிதிக்க சேற்றோடு சேறாய் இது சேர்ந்து விடுகிறது. இந்தத் தழைகளை எருவாகக்கொண்ட நிலம் அதிகம் பலன் கொடுப்பது அநுபவஸித்தமாயிருக்கிறது.

### எருக்கன் பால்.

எருக்கன் பால் மிக ஸத்தும் காரமும் ஏறியதானதால், இதை ஸாதாரணமாய் வெறும் பாத்ரத்தில் கறந்தால் கெட்டுப்போய் நீராக மாறிவிடும். ஆதலால் இந்தப் பாலைக் கறக்க வேண்டியவர்கள், கறக்கும் பாத்ரத்தில் 10 சொட்டைப் போட்டுக்கொண்டு, கையில் நல்லெண்ணெயைத் தடவிக் கொண்டு கறக்க ஆரம்பிக்கவேண்டும். இப்படிச் செய்தால் பால் கெடாமல் சுத்தமாயிருக்கும். பால் அதிக உஷ்ணமானதால், கறக்கும்போது பால் பட்ட இடம் எரிந்து புண்ணாகும். நல்லெண்ணெய் உபயோகித்த கையில் அந்தப் பாலின் கடுமை ஏறாதாகையால், அப்படிச் செய்துகொண்டு பால் கறப்பதுதான் உத்தமம்.

இந்தப் பாலின் அருகிலிருந்து அதைக் கறப்பவனுக்கு பாலின் வேகத்தினால் உஷ்ணம் மிகுதியுமுண்டாகும். ஆகவே, பாலைக் கறந்த பின், அவன் குளிர்ச்சித் தரத்தக்க விளக்கெண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்வதே மேலானது.

### பாலின் உபயோகம்.

வைத்ய முறையில் எருக்கன்பால் ச்ரேஷ்டமாகக் கொண்டாடப்படுகிறது. மனிதர்கள், கை கால்களில் வாயு உபத்ரவம் கண்டு வலியினால் வீக்கங்கண்டு அவதிப்படும்போது, வீக்கம் கண்ட இடத்தில் இப்பாலைக் கறந்துப் பற்றுப்போட, வீக்கம் தணிந்து வலியும் குணமாகும். உஷ்ணத்தினால் ரத்தக் கட்டிகள் புறப்பட்டவிடத்தில் இந்தப் பாலைக் கொண்டு வந்து கட்டியின் வாய் நீங்கலாக மற்றவிடங்களில் பற்றுப்போட, கட்டி உடையாமல் கரைந்து இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விடுகிறது. தேகம் அதிக உஷ்ணப்பட்டுச் சொறி சிரங்குகளால் அவஸ்தைப்படுவோர் இந்தப் பாலை சேகரித்து பாலுக்கு ஸமபாகம் அதில் நல்லெண்ணெய் சேர்த்துக் கலக்கி சிரங்குகளுக்குத் தடவுவதுண்டு. தடவும்போது எரிச்சலாயிருக்கும். அந்த ச்ரமத்தை சிறிது நேரம் பொறுத்திருந்து அரைப்புச் சுட்டு அறைத்து குழப்பிக் கழுவ, சிரங்குகள் ஒரே வேளையில் இந்த மருந்தினால் குணப்பட்டு விடும். வயல் முதலிய இடங்களில் நடக்கும் காலங்களில் கால்களில் முட்கள் தைக்கின்றன. அவை கால்களில் ஆழப் புதைந்து



எடுப்பதற்கு அஸாத்யமாய்ப் போய்விடுகின்றன. அல்லது மட்கின முள்ளானால் எடுக்கும்போது பாதி வெளியில் வந்து பாதி காலுக்குள்ளேயே தங்கி அவஸ்தை கொடுக்கின்றன. அப்போது அந்த முள்ளிருக்கும் பாகத்தை சிறிதுத் திறந்து அதன் வாயில் இந்தப் பாலைப் போட்டால், பால் முள்ளிருக்கும் பக்கத்து சதையை எளிதில் தின்றுவிடும். அப்போது ச்ரமமேயில்லாமல் ஆழப்புதைந்திருக்கிற முள் எளிதில் வந்துவிடும். கல்நார் பஸ்மம் செய்கையில், கல்நார் தூளை மெதுப்படுத்துவதற்கு அதை எருக்கன்பாலில் ஊறப்போட்டுப் பதப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

### எருக்கின் மற்ற உபயோகங்கள்.

வயிற்று வலியினால் உபத்ரவப்படும் மாடுகளுக்கு எருக்கன் பழுப்புகளைக் கொண்டு வந்து உப்பு சேர்த்து மடித்து உள்ளுக்குக் கொடுக்க, மாடுகளின் வயிற்றிலுள்ள, தொந்திரவு கொடுத்து வந்த க்ருமிகள் செத்துப் போய் வெளிவந்து மாடுகள் ச்வஸ்தமடையும்.

வயிற்றுவலியினால் இளமையான பசுங் கன்றுகள் அவதிப்படும்போது, உள்ளுக்கு மருந்து காரமாய்க் கொடுக்க யோசிப்பார்கள். அப்போது எருக்கன் கழிகளைக் கொண்டு வந்து அவற்றின்மேல் வைக்கோல் போட்டுக் கொளுத்தி, அந்த கழிகளினால் கன்றுக் குட்டியின் தொப்புளில் அடிக்க வயிற்றிலுள்ள புழு செத்துப் போய் வெளிவந்து கன்றுக்குட்டி குணமடையுமாம்.

படுவன் என்னும் கொடிய சிரங்கு குதிகாலில் தோன்றி அவதிப்படுபவர்கள், செங்கல்களை அடுப்பிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி அவற்றின்மேல் எருக்கன் இலை பழுப்புகள் ஏழெட்டுபோட்டு குதிகாலை வைக்க அந்த ரோகம் உடனே நிவாரணமாகி ச்வஸ்தமடைதல் அநுபவத்தில் கண்டது.

இந்தத் தழைகளை ஆடுகள், ஏராளமாய்த் தின்னும்.

அடைப்பான் நோய் பிடித்து வருந்தும் மாடுகளுக்கு எருக்கன் வேர்ப் பட்டைகளுடன் ஓமழிஞ்சி, சங்கம் பட்டை முதலியவற்றையும் இன்னும் சில கடைச் சரக்குகளையும் சேர்த்துக் கொடுத்து வ்யாதியை ச்வஸ்தம் செய்து கொள்ளுவார்கள்.

எருக்கன் தழையின்மீது வெண்ணெய் போன்ற ஒரு பாசி வெண்மையாய்ப் படர்ந்திருக்கும். இந்தப் பாசியை எடுத்து ஸமபாகம் அதனுடன் பசுவின் வெண்ணெய் சேர்த்துப் பிசைந்து மேக ரோகத்தினால் சீழும், நீரும் வடிந்து தொந்தரவு கொடுக்கிற புண்களில் போட, அந்த ரோகம் குணமாகிவிடும்.

எருக்கன் தழைகளிலுள்ள வெண்ணெயை எடுத்து வந்து வெட்டுக் காயங்கள் ஏற்பட்டவுடனே வைத்துக்கட்ட, காயம் ஆறிவிடும். இந்தக் கட்டு கட்டினபிறகு மறுகட்டு கட்டவேண்டியதே யில்லை. இந்தக் கட்டுக் கட்டினால் காயத்தில் ஜலம் கொள்ளாது. ஆகவே, வெட்டுக்காயம் படக்கூடிய தச்சர் முதலானவர்கள் இவ்வெண்ணெயைப் பத்ரப்படுத்தி வைத்துக் கொள்ளுதல் நல்லது.

எருக்கிலை நக்கும் புல்லு நுனியைக் கொண்டு வந்து பால் குறைந்த மாட்டிற்குப் பசும்பாலில் அரைத்துக் கொடுக்க, பால் தாராளமாய்க் கறந்துதவும்.

பண்டித வீ. ஸுப்ரமண்ய ஐயர்.


### யுக்தி போதினி.

இது தினப்படி நேரும் தொந்தரைகளை நீக்க ஸுலபமான யுக்திகளும் முறைகளும் கொண்டது. பொருள்களை சுத்தம் செய்தல், கறைகளைப் போக்குதல், பொருள்களைப் பரீக்ஷித்தல் முதலிய பல முறைகள் அடங்கியிருக்கின்றன.

விலை அணா 10

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
3&4, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ்.

## POVERTY OF INDIA.
## இந்தியாவின் வறுமை.

இந்தியர்கள் மிகவும் ஏழைகள் என்பது யாவரும் ஒப்புக்கொள்ளும் விஷயம். அதற்குக் காரணங்கள் இன்னவென்பதைப் பற்றி ஒருவர் 'மாடர்ன் ரெவ்யூ' பத்ரிகையில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அந்தக் காரணங்களையும், இந்தியர்களின் வறுமையைப்போக்க இன்னின்ன செய்யவேண்டு மென்பதையும் சுருக்கமாய் எழுதுகிறோம்.

### வறுமையின் காரணங்கள்.

(1) வ்யவஸாயிகள் தங்கள் வ்யவஸாயத் தொழிலில் தற்கால சாஸ்த்ரீய முறைகளை உபயோகிக்காமலும், நூதனமானவும் சீர்திருத்தியவுமான கருவிகளை உபயோகிக்காமலுமிருக்கிறார்கள்.

(2) வ்யவஸாயிகள் பொதுவாய் கல்வியறிவில்லாதவர்களாயும், அதனால் சாஸ்த்ரீய வ்யவஸாயம் தெரியாதவர்களாயுமிருக்கிறார்கள்.

(3) சிறு கைத்தொழிலாளிகள் தங்கள் தொழிலுக்கு வேண்டியவையான புதுமாதிரியான ஸாதனங்களை யறிந்து உபயோகிக்காமலிருக்கிறார்கள்.

(4) தற்காலம் மலிவான அயல் நாட்டு ஸாமான்கள் இந்தியாவில் விற்பதால், தொழிலாளிகள் செய்யும் ஸாமான்களில் அதிக வ்யாபாரம் நடக்கவில்லை. இதனால் தொழிலாளிகள் தங்கள் ஸாமான்களை விற்கக் கஷ்டப்படுகிறார்கள்.

(5) அன்ய நாடுகளில் வீட்டுத்தொழில்களாக நடந்து வரும் கைத்தொழில்களோடு போட்டி போட அந்த மாதிரிக் கைத்தொழில்களை நாம் இன்னும் ஸ்தாபிக்கவில்லை.

(6) அன்ய தேசக் கைத்தொழில்களின் போட்டி இல்லாத புதுக் கைத்தொழில்களை நாம் இன்னும் ஸ்தாபிக்கவில்லை.

(7) நமது தேசத்தில் கைத்தொழில் கல்வி யில்லாததால், ஒரு தொழிலிலும் தேர்ந்த தொழிலாளிகள் இல்லை.

(8) அதற்கு பதிலாக தேர்ச்சி பெறாத வேலையாட்கள் தான் அதிகமாயிருக்கிறார்கள். வேலையாட்களில் பெரும்பாலார் கல்வி யறிவில்லாத கூலியாட்களும், சிறு குடிஸ்தாக்களுமாவார்கள்.

(9) ஜனத்தொகை அதிகரிப்பதற் கேற்ப, புதுக் கைத்தொழில்களும், வ்யாபாரங்களும் ஏற்படவில்லை. அதனால் ஜனங்களில் பலர் வ்யவஸாயத்தில் ப்ரவேசித்து வருகிறார்கள். ஆனால் ஏற்கனவே வ்யவஸாயத்தைக் கைக்கொண்டிருக்கும் ஜனங்களின் தொகை மிதமிஞ்சினதாயிருக்கிறது.

(10) தற்காலம் ஜனங்களுக்கு வ்யாபாரக் கல்வியும், வ்யாபார வழக்கமும் இல்லை. வ்யாபார முயிற்சிகளுக்கு வேண்டிய வஸதிகளும் இல்லை.

(11) ஜனங்களுக்கு போதமான பொதுக் கல்வியில்லாம லிருப்பதால், அவர்கள் முன்னேற்ற மடைவது முடியாமலிருக்கிறது.

(12) க்ராமங்கள் ஸுகாதாரக் குறைவாக இருப்பதாலும், க்ராமங்களில் வைத்ய உதவிக்குத் தக்க ஏற்பாடுகள் இல்லாம லிருப்பதாலும், மலேரியா முதலிய வ்யாதிகள் வ்ருத்தியாகி பலசாலிகளான அநேக ஜனங்களை வேலைக்கு லாயக்கில்லாமல் செய்துவிடுகின்றன.

### வறுமையை நீக்க வழி.

நமது பொருளாதார நிலைமையைக் கெடுத்துவரும் காரணங்களுள் இவைகளே முக்யமானவை, நமது நிலைமையை வ்ருத்தி செய்ய பின் வரும் முயற்சிகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

(1) வ்யவஸாயிகளுக்கு வ்யவஸாயக் கல்வி கற்பிப்பதோடு, அவர்கள் தற்கால வ்யவஸாய முறைகளை அநுஷ்டிக்க அவர்களுக்குப் பணம் கடன் கொடுத்து உதவுவது.

(2) தொழிலாளிகளுக்கும் பொது ஜனங்களுக்கும் தொழில் கல்வி கற்பித்தல்; தொழில் கல்வி கற்றவர்கள் கற்ற தொழிலை அப்பியஸிக்க அவர்களுக்குப் பணம் கடன் கொடுத்து உதவுவது.

(3) நாட்டில் செய்யப்படும் ஸாமான்களை விற்பதற்கும், அவைகளைச் செய்வதற்கும் கம்பெனிகள் ஸ்தாபிப்பதை ஆதரித்தல்; ஸ்தாபிக்கப்பட்டுள்ள கம்பெனிகளுக்குப் பண உதவி செய்தல்.

(4) தேசத்திலுள்ள இயற்கைப் பொருளாதாரங்களை உபயோகித்து ஸாமான்கள் செய்ய இந்தியர்களுடைய மூலதனத்தைக் கொண்டு கம்பெனிகள் ஸ்தாபித்தால் அவைகளுக்குப் பண உதவிசெய்தல்.

(5) வீட்டுக் கைத்தொழில்கள் ஏற்படுத்துதல்.

(6) ஜனங்களுக்கு வ்யாபாரக் கல்வி கற்பித்தல்.

(7) கட்டாயப்படுத்தி இலவசமாக ப்ரைமரிக் கல்வி கற்பித்தல்.

(8) ஸுகாதாரமும், வைத்ய உதவியும் ஏற்படும்படி செய்தல்.

---



## LIBRARIES IN U. S. A.
## அமெரிக்க ஐக்ய நாடுகளில் புஸ்தகசாலைகள்.

அமெரிக்காவில் லைப்ரரி (புஸ்தக சாலை) ஏற்பாடு ரொம்பவும் அபிவ்ருத்தி யடைந்து வருகிறது. இன்னும் சில வர்ஷங்கள் போனால், அமெரிக்காவிலுள்ள எவரும் வாசிக்கப் புஸ்தகமில்லையே என்று கவலைப்பட வேண்டாமாம். ஒருவர் பொது லைப்ரரிகளுக்கு எவ்வளவு தூரத்திலிருந்தாலுஞ்சரி, அவைகளிலுள்ள எந்த புஸ்தகத்தையும் சீக்ரம் தருவித்து வாசித்துத் திருப்பிவிடலாம். சில அபூர்வமான புஸ்தகங்களை மாத்ரம் வெளியில் அனுப்புவது முடியாமலிருக்கும். அப்படிப்பட்ட புஸ்தகங்களை முழுவதுக்குமோ, அல்லது அதில் வேண்டிய பக்கங்களுக்கோ போட்டோ முறையில் நகல் எடுக்கச் சொல்லிப் பெறலாம்.

புஸ்தகங்கள் யாவருக்கும் கிடைக்கும்படி செய்ய அமெரிக்கர்கள் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிறோம்.

(1) நமது தேசத்தில் லைப்ரரிகளில் வாசிக்க வருபவர்கள் தங்களுக்கு வேண்டிய புஸ்தகங்களுக்கு ஒரு சீட்டு எழுதி லைப்ரரி விப்பந்திகளிடம் கொடுக்க அவர்கள் புஸ்தகங்களை தேடி எடுத்துக் கொடுக்கிறார்கள். இரண்டொரு பக்கம் புரட்டினதும், அந்தப் புஸ்தகம் அவர்களுக்கு ஏற்றதல்லவென்று தெரிந்தால், மறுபடி வேறு புஸ்தகம் கேட்க வேண்டியிருக்கிறது. அமெரிக்காவில் அநேக லைப்ரரிகளில் இந்த ஏற்பாடு கிடையாது. அங்கே வாசிக்க வருபவர்கள் இஷ்டப்பட்ட புஸ்தகங்களை நேரே பீரோக்களிலிருந்து பொறுக்கி எடுத்துக் கொள்ளலாம்.

(2) ஒரு ஊரில் உள்ள லைப்ரரியில் நமக்கு வேண்டிய புஸ்தக மில்லாவிட்டால், அது

தள்ள வேறு லைப்ரரியிலிருந்து அதை உடன் வாங்கிக் கொடுக்க லைப்ரரி அதிகாரிகள் ஏற்பாடு செய்வார்கள்.

(3) போட்டோ முறையில் நகல் எடுத்தல், இந்த முறை அபூர்வமான புஸ்தகங்களுக்கு மாத்ரமல்ல. புஸ்தகத்தை தருவிப்பதற்கு ஆகும் செலவானது, புஸ்தகத்தில் வாசிக்க வேண்டிய பக்கங்களை போட்டோ நகல் எடுக்க ஆகும் செலவைவிட, அதிகமாயிருந்தால், போட்டோ நகல் எடுத்து அனுப்புகிறார்கள்.

(4) ஒரு ஊரில் இருப்பவர்கள், தங்கள் ஊர் லைப்ரரியில் இல்லாத புஸ்தகங்களை வாசிக்க அவைகளை வரவழைக்க விரும்பினால், அவைகள் எந்தெந்த ஊரில் இருக்கின்றன என்பது முதலில் தெரியவேண்டும். இதற்காக வெவ்வேறு லைப்ரரிகளிலுள்ள புஸ்தக ஜாப்தாக்களை ஒவ்வொரு லைப்ரரியிலும் வைத்திருக்கவேண்டும். அந்த தேசத்தின் வித்யா இலாகாவில் இது ஸம்பந்தமாக ஒரு புஸ்தகம் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் இன்னின்ன ஊரிலுள்ள லைப்ரரிகளில் இன்னின்ன விஷயங்களைப்பற்றிய புஸ்தகங்கள் அதிகமென்பது விவரிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் காங்க்ரெஸுக்கு (பார்லிமெண்ட்) சொந்தமான லைப்ரரியின் அதிகாரிகள், அந்த லைப்ரரியிலும், அநேகமாக இந்த வேலை செய்யும் இதர லைப்ரரிகளிலும் உள்ள 7-லக்ஷம் புஸ்தகங்களுக்கு ஜாப்தாக்கள் தயாரித்து 48 ஊர்களில் வைத்திருக்கிறார்கள், வாஷிங்டனிலுள்ள [illegible] லைச் சேர்ந்த லைப்ரரிக்கு வெளியிட்டிருக்கும் கட்டளைகளில், புஸ்தகங்களின் விவரங்களேயன்றி, வைத்ய பத்ரிகைகளில் உள்ள வ்யாஸங்களுக்கும், அவைகளை எழுதினவர்களுக்கும் அகராதியும் இருக்கிறது.

(5) ப்ரான்ச் (கிளை) லைப்ரரிகள், சஞ்சாரி யும் லைப்ரரிகள் முதலிய ஸாதனங்கள் லைப்ரரியிருக்கும் இடங்களுக்கு வந்து வாசிக்க முடியாத ஜனங்களுக்குப் புஸ்தகங்கள் கிடைக்கும்படி செய்கிறார்கள்.

(6) எவ்வளவு தூரத்திலிருந்தாலும், எவரும் ஸ்வல்ப செலவில் புஸ்தகங்களை வீட்டுக்கு வரவழைத்து வாசித்துப் பிறகு திருப்பி விட ஸௌகர்யங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

## POISONING OF CATTLE.

### கால்நடைகளுக்கு விஷம் வைத்தல்

இந்தியாவில் வர்ஷந்தோறும் அநேக கால் நடைகள் விஷம் தின்று இறந்து போகின்றன. சில தாழ்ந்த ஜாதி ஜனங்கள் இறந்த மாடுகளை அப்புறப்படுத்தினால், அவைகளின் தோல்களை அவர்களே எடுத்துக் கொள்ளலாமென்ற வழக்கம் சில க்ராமங்களில் இருந்து வருகிறது. தோலுக்கு க்ராக்கி ஏற்பட்ட காலங்களில் அந்தத் தாழ்ந்த ஜாதி ஜனங்கள் தோலுக்காக மாடுகளை விஷம் வைத்துக் கொல்ல முயலுவதுண்டு. இதே காரணத்தை உத்தேசித்து சில ஸமயங்களில் வெக்கை முதலிய வ்யாதிகளை மாடுகளில் பரவச் செய்வதும் உண்டு. ஒரு இடத்தில் அநேக மாடுகள் விஷம் தின்று இறந்து போயிருந்தால், யாரோ விஷம் வைத்திருக்கிறார்கள் என்று நிச்சயிக்க வேண்டும். போக்கிரிகள் மற்ற மாடுகளுக்கும் விஷம் வைக்காதபடி நாம் ஜாக்ரதை எடுத்துக்கொள்ளவேண்டும். சில தொற்று வ்யாதிகள் வந்தபோதும், போக்கிரிகள் வ்யாதியைப் பரவச் செய்திருக்கக் கூடுமென்று எண்ண இடம் உண்டு.

சில பயிர்கள் அவைகளின் வளர்ச்சியின்



ஒரு குறிப்பிட்ட காலத்தில் விஷமுள்ளவைகளாக இருப்பதுண்டு. (உதாரணமாக சோளத் தட்டைச் சொல்லலாம்.) இவற்றையும் விஷமுள்ள வேறு செடிகளையும் மாடுகள் தின்றால், அவைகளுக்கு உபத்ரவமும் மரணமும் ஏற்படும்.

பாஷாணம் மலிவாயிருப்பதாலும், ஸுலபமாகக் கிடைக்கக் கூடியதாகையாலும், மாடுகளைக் கொல்ல எண்ணுகிறவர்கள் அதை விசேஷமாக உபயோகிப்பதுண்டு.

### விஷம் வைத்ததின் அறிகுறிகள்.

விஷம் தின்ற மாடுகளுக்கு ஏற்படும் கோளாறுகள் விஷத்தின் வகைக்குத் தக்கபடி வித்யாஸப்படும். மாடுகள் திடீரென்று வ்யாதிக்காளாவது, அடிவயிற்றில் கடுமையான வலி ஏற்படுவது, பெருந்தாகம், வாயில் நுரை தள்ளுவது, தசைநார்கள் இழுத்துப் பிடித்துக் கொள்வது, அதிஸாரம், சீதம் மரணம் ஆகிய இந்தக் கோளாறுகள் இருந்தால், விஷம் வைக்கப்பட்டிருப்பதாக எண்ணலாம்.

### சிகித்ஸை.

விஷம் வைக்கப்பட்ட எல்லா மாடுகளுக்கும் பின்வரும் பேதி மருந்தை உள்ளுக்குக் கொடுப்பது நல்லது.

| | | |
|---|---|---|
| எப்ஸம் ஸால்ட் (பேதி உப்பு) | ... | 1 ராத்தல் |
| பொடி செய்த சுக்கு | ... | ½ ஒளன்ஸ் |
| பொடி செய்த கந்தகம் | ... | 2 ஒளன்ஸ் |
| தேன்பாகு | ... | 8 ஒளன்ஸ் |

இவைகளைக் கலந்து, அரையே அரைக்கால் படி சுடு ஜலத்தில் கரைத்து, ஆறினபின் உள்ளுக்குக் கொடுக்கவும். அரிசிக் கஞ்சியாவது ஆளிவிதை (லின்ஸீட்) கஞ்சியாவது தயார் செய்து யதேஷ்டமாகக் குடிக்கக் கொடுக்கவேண்டும். தூக்கம் உண்டு பண்ணும் விஷத்தை தின்றிருந்து, அதனால் மாடு மந்தமாயும் தூக்கக் கலக்கமாயும் இருந்தால், பின்வரும் மருந்தைக் கொடுக்கவும்.

| | | |
|---|---|---|
| நாட்டு சாராயம் | ... | 4 ஒளன்ஸ் |
| பொடி செய்த சுக்கு | ... | ½ [illegible] |
| பொடி செய்த மிளகு | ... | 2 ட்ராம். |

இவைகளைக் கலந்து ஸலேஷிகப்படி கஞ்சியில் சேர்த்து 4 மணிக்கு ஒரு தடவை கொடுக்கவும்.

## THRIFT.

By C. S. SIVARAMAKRISHNA SARMA.

### சிக்கன வழக்கம்.

சிக்கனத்தைப்பற்றி, சிலர் "அது முடியாது" என்று சொல்லுகிறார்கள்: இது சரியல்ல. ஒவ்வொருவனும் கொஞ்சமேனும் சிக்கனம் செய்யக்கூடியவனே. "முடியாது" என்ற கொள்கைதான் அனேகம் பேர்களையும் அநேக ஜாதிகளையும் கெடுத்து விட்டிருக்கிறது. இந்தக்கொள்கையைவிட அதிக தப்பானது ஒன்றுமில்லை. ஒரு உதாரணம் கூறுவோம். ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு கோப்பை சாராயத்தை நீக்கிவந்தால் இது வர்ஷத்தில் 34 ரூ. மீதியாக்குகிறது. இந்தத் தொகையைக் கொண்டு ஒரு இன்ஷூரன்ஸ் கம்பெனியில் தனக்குப் பின் தன் குடும்பத்தாருக்கு 1650 ரூ. கொடுக்கும்படி தன் ஆயுளை உத்தரவாதம் செய்யலாம். அல்லது இந்தத் தொகையை ஒரு க்ஷேமநிதியில் போட்டுவந்தால், இது 20 வர்ஷத்தில் ரூ. 1500 ஆகிறது. அநேகர் தினம் 6 கோப்பை சாராயம் குடிக்கிறார்கள். இந்த

ஆறு கோப்பை சாராயத்தை நீக்கி அதில் செலவாகும் பணத்தை மிச்சம் பிடித்து வந்தால், இது 20 வர்ஷத்தில் 9000 ரூ. ஆகிறது. தினம் ஒன்றுக்கு 9 அணா சாராயம் குடிப்பவன் 50 வர்ஷத்தில் ஸுமார் 30,000 ரூ. வீணாக்குகிறான்.

மனச்சாக்ஷியின்படி நடப்பவன் எவனும் தன்னையும் தன் குடும்பத்தையும் பிறர் உதவியின்றி காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான். உண்மையில் தன்முயற்சியுள்ள ஒவ்வொருவனும் தன் கௌரவத்தை காப்பாற்ற வேண்டும். தன் குடும்பமே அவனுக்கு ஒரு சிறு ப்ரபஞ்சம். அந்தச் சிறு ப்ரபஞ்சத்துக்கு அவனே எஜமான். தன்னுடைய ப்ரேமைகளும் ஆசைகளும் அநுபோகங்களும், எண்ணங்களும், கவலைகளும் பிறருக்கு அல்பமாகத் தோற்றியபோதிலும், தனக்கு எவ்வளவு பெரிதாகத் தோன்றுகின்றன? ஆகையால் தன்னைப்பற்றிய எல்லாக் காரியங்களிலும் விசேஷ அக்கறையுள்ளவனாக இருக்காமல் முடியாது.

ந்யாயத்துக்கு பயந்தவன் தன்னைப்பற்றி அக்கறை எடுத்துக் கொள்வதுடன் தான் பிறருக்கு செய்யவேண்டிய கடமைகளைப் பற்றியும் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். தன்னைப்பற்றி தான் எப்பொழுதும் இழிவாக நினைக்கக்கூடாது. மனிதன் தேவர்களுக்குக் கொஞ்சம் குறைவாக ச்ருஷ்டிக்கப்பட்டவன் என்று எண்ணவேண்டும். தான் அடையவேண்டிய மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப்பற்றியும், ப்ரக்ருதியின் அத்புதத்தைப்பற்றியும் ஈச்வரன் மகிமையைப்பற்றியும், பகவான் அளித்திருக்கும் புத்தியைப் பற்றியும், அன்பின் பெருமையைப்பற்றியும் தான் பூமியில் ஜனனம் எடுத்ததின் ப்ரயோஜனத்தைப்பற்றியும், விசாரிக்கும் போது தன்னை தான் இழிவாக நினைக்கவே மாட்டான். மகா எளியவனும் ஈச்வராம்சத்தை அடைந்தவனே. தேகம் தேவாலயம் என்றும், அதில் வஸிக்கும் ஆத்மா ஈச்வரன் என்றும் எல்லா வேதங்களும் கூறுகின்றன. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் தன் தேகத்தையும், தன் மனஸையும், தன் மனச்சாக்ஷியையும் கௌரவப்படுத்தவேண்டும்.

ஒவ்வொருவனும் தன் கௌரவத்துக்கு ஆசைப்படவேண்டும். இந்த ஆசையால் தன்னைத் தானே கௌரவப் படுத்திக்கொள்கிறான். இது தான் அபிவ்ருத்திக்கு முதல் படியாகிறது. இது தான், மனிதன் முற்படுவதற்கும், அவன் உயர்ந்த பதவியை அடைய முயற்சிப்பதற்கும், தன் புத்தியை உயர்த்துவதற்கும், தன் நிலைமையை மேம்படுத்துவதற்கும், தூண்டுகோலாக இருக்கிறது. தன் மனச்சாக்ஷியை கௌரவப்படுத்துவதே பல நற்குணங்களுக்கு மூலாதாரமாக இருக்கிறது; அதாவது, பரிசுத்தம், கற்பு, தயை, மரியாதை, ஸத்யம் முதலான நற்குணங்களை வெளியாக்குகிறது. ஒருவன் தன்னைப்பற்றி இழிவாக நினைப்பதாலேயே கெட்டுப் போகிறான். ப்ரதி மனிதனும் கூடிய வரையில் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளக்கூடும். மனிதன் வெள்ளத்தில் அடித்துக் கொண்டுபோகும் வைக்கோல் துரும்பு போலல்ல. மனிதனுக்கு ஸ்வயமாக காரியம் செய்ய ஸ்வதந்த்ரமும், அலைகளை எதிர்த்து மேல் கிளம்பி தன் மனம் நாடும் வழியில் செல்ல சக்தியும் இருக்கிறது. நாம் எல்லோரும் நன்னெறியில் உயர்ந்த பதவியை அடையக்கூடும். நாம் நல்ல எண்ணங்களைக் கைக்கொள்ளலாம். நல்ல காரியங்களைச் செய்யலாம். நாம் மிதமாயும் சிக்கனமாயும் ஜீவிக்கலாம். கெட்ட காலத்தில் உதவ முந்தியே சேர்த்து வைக்கலாம். நல்ல புஸ்தகங்களைப் பார்க்கலாம். நல்ல உபாத்திமார்கள் சொல்வதை கேட்கலாம். இந்த பூமியிலேயே,



மோக்ஷ ஹேதுவான மகா பரிசுத்த வாஸனைகளை அநுபவிக்கலாம். நாம் எதற்காக இந்த ஜன்மம் எடுத்தோமோ அந்த உயர்ந்த நோக்கத்துடன் ஜீவிக்கலாம்.

தன்னை மேன்மைப் படுத்திக்கொள்பவன் உலகத்தாரையும் மேன்மைப் படுத்துகிறான். ஜனஸமூகத்தில் மெய்யர்கள் கூட்டத்துக்கு இன்னும் ஒரு மனிதனை சேர்க்கிறான். ஜனஸமூகம் என்பது ஒவ்வொரு மனிதனும் சேர்ந்த மொத்த ஸமுதாயம் ஆனதால், ப்ரதி மனிதனும் தன்னை மேம்படுத்திக் கொண்டால், அவனிருக்கும் ஜனஸமூகம் மேன்மைப் படும். ப்ரதி மனிதனும் தன்னை சீராக்கிக் கொண்டால், அந்த ஜாதியே சீராகும். ப்ரதி மனிதனும் பரிசுத்தமாயிருந்தாலொழிய, அந்த ஜன ஸமூகம் மொத்தத்தில் பரிசுத்தமாகாது. ஒரு ஜனஸமூகத்தின் யோக்யதாம்சமானது, அந்த ஸமூகத்தில் அடங்கிய ப்ரதி மனிதனின் யோக்யதாம்சத்தின் ப்ரதி பிம்பம் தான். இந்த ஸங்கதி எல்லாருக்கும் தெரிந்த விஷயமாயிருந்தாலும், இதை பூர்ணமாய் உணருவதற்காக அடிக்கடி கூறவேண்டியதாயிற்று.

மேலும், ஒரு மனிதன் தன்னை சீராக்கிக்கொண்டால் தன்னுடன் பழகுவோர்களையும் சீராக்க வல்லமை உடையவனாவான். தன்னிடம் அதிக சக்தி இருக்கிறது; அதிக விவேகம் இருக்கிறது; பிறருடைய தோஷங்களை செவ்வையாக அறிந்து அவைகளை நீக்க உபாயங்களையும் தெரிந்து கொள்கிறான்; அவர்களை முற்படுத்துவதில் தான் அதிக உதவி செய்யக்கூடும். தன் கடமைகளை தான் சரிவர நடத்திவருவதால், பிறரையும் அவரவர் கடமைகளை சரிவர செய்யும்படிக்கு தைர்யமாய் வற்புறுத்தக் கூடியவனாகிறான். அற்பமான விஷய ஸுகங்களில் உழன்று கொண்டிருப்பவன், தான் வஸிக்கும் ஜன ஸமூகத்தை எப்படி மேன்மைப்படுத்தக் கூடும்? தானே குடியனாக இருந்தால் பிறருக்கு மதுவிலக்கை எப்படி போதிப்பான்? தானே அசுத்தமாயிருந்தால் பிறருக்கு சுத்தத்தை எப்படி கற்பிப்பான்? அப்படி அவன் போதிப்பதாயிருந்தால், அவன் அயலார்கள் அவனுக்கு என்ன பதில் சொல்வார்கள் என்றால், "வைத்யரே! தங்களை தாங்கள் முதலில் ஸ்வஸ்தம் செய்து கொள்ளுங்கள். பிறகு எங்களுக்கு வைத்யம் செய்யலாம்," என்பது தான். சுருக்கமாய், நாம் சொல்வதின் கருத்தெல்லாம் கூடி இதுதான். தம்முடைய ஜனஸமூகத்தில் சேர்ந்த ஒவ்வொருவரும் சீராகவேண்டும் என்ற கருத்து நமக்கிருந்தால், அந்த சீர்திருத்தத்தை முதல்முதல் நாமே ஆரம்பிக்கவேண்டும். நமது போதனைகளை நமது நடவடிக்கையிலேயே காட்டவேண்டும். சொல்வது எவருக்கும் எளிது. சொல்லியவண்ணம் செய்வது அரிது. வாசா வேதாந்தம் ப்ரயோஜனப்படாது. பிறரை உயர்த்துவதற்குமுன் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும். முதல்முதல் தன் மனச்சாக்ஷிக்கு மர்யாதை செய்யத் துவக்கவேண்டும்.

மேலும் மானிட தேகம் அநித்யமாயிருக்கிறது. பிற்காலத்துக்கு உதவும்படி, முன்னமே தேடி வைத்துக் கொள்வதற்கு இதுவே பெரும் காரணமாக இருக்கிறது. இவ்விதம் செய்ய நாம் கடமைப் பட்டிருப்பதுடன், ஜன ஸமூக தர்மத்தாலும், நமது மத தர்மத்தாலும் கடமைப் பட்டிருக்கிறோம். தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் தேடிவைக்காதவன், தன் மதத்தையே விட்டவன் என்றும், நாஸ்திகனைவிடக் கேடுகெட்டவன் என்றும் வேதத்தில் கூறியிருக்கிறது. மகாபலசாலியும் மகா ஆரோக்யமுள்ளவனுங்கூட தற்செயலாலோ, நோயாலோ, க்ஷணப்பொழு

தில் இறந்து போகிறான். மனிதன் இறப்பது நிச்சயம். பிறப்புள்ளதற்கு இறப்பு நிச்சயம். ஆனால் எப்பொழுது இறப்பான் என்பதை நிச்சயிக்கமுடியாது. யமன் எப்பொழுதும் நமது அருகில் இருக்கிறான். ஆனால் எப்பொழுது நம்மை பிடித்துக்கொள்வானோ அறியோம்.

ஸென்ஸஸ் (கானிஷுமாரி) கணக்குகளை கொஞ்சம் பார்ப்போம். இங்க்லண்ட் தேசத்தில் பிறந்த லக்ஷம் ஜனங்களில் கால் பாகத்தார் ஐந்து வயஸுக்கு முன்னே இறந்து விடுகிறார்கள்; லக்ஷத்தில் பாதி பாகத்தார் 50 வயஸுக்கு முன் இறந்து போகிறார்கள். லக்ஷத்தில், 1,100 ஜனங்கள் மட்டில் 90 வயஸு இருக்கிறார்கள்; 16 பேர்கள் 100 வயஸு இருக்கிறார்கள்; 2 பேர் மட்டில் 105 வயஸு இருக்கிறார்கள்.

இதனால் மனிதன் ஜீவதசை நிலையற்றதென்றும், ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு ஜீவதசை நீடித்திருக்கிறதென்றும், ஏற்படுகிறது. மேலும் இத்தேசத்தில் பிறந்தவர்கள் எல்லாருடைய ஜீவதசையையும் கூட்டி கணக்கிட்டால், நபர் ஒன்றுக்கு சராசரி ஜீவதசை 45 வயஸு ஏற்படுகிறது. அநேக ஜனன மரணக் கணக்குகளைப் பார்த்து இந்த சராசரி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

ஜனஸமூகத்தில் ப்ரதி வர்ஷமும் ஒவ்வொரு வயக்ரமத்திலும் இத்தனை பேர்கள் இறப்பார்கள் என்று ஒரு கணக்கு ஏற்பட்டிருக்கிறது. இது அநேக காலத்துக் கணக்குகளைக்கொண்டு ஏற்படுத்தப் பட்டிருப்பதால், இதை ஒரு விதியாகவே எண்ணவேண்டும். ஜீவோத்தரவாத ஸங்கத்தார் இந்த விதியை அநுஸரித்துத்தான் ஸங்கத்தில் சேர்ந்தவர்களின் ஜீவதசையை நிர்ணயிக்கிறார்கள்.

ஆகையால் உலகத்தில் தற்செயல் என்பது ஒன்றும் காணோம். நமக்கு காரணம் தெரியாத வரையில் தற்செயல் என்று சொல்வது வழக்கம். ப்ரபஞ்சத்தில் ஒவ்வொரு கார்யமும் ஒரு விதிப்படி தான் நடக்கிறது. மனிதன் இருப்பதும் இறப்பதும் ஒரு விதியை ஒட்டித்தான் நடக்கிறது. ஆகையால் ப்ரதி மனிதனும் ஆரோக்யத்தின் விதிகளை அறிந்து நடக்கவேண்டும். ஆரோக்யம் தவறும் காலத்தில், அதாவது, வ்யாதியாவது, எதிர்பாராத ஆபத்தாவது, அகால மரணமாவது நேரிடும் காலத்தில் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் உதவும்படி முன்னமே பொருள் தேடிக்கொள்ள வேண்டும். நாம் ப்ரக்ருதியின் விதிகளை மீறி நடந்தால் அதனால் விளையும் பயனை அநுபவிக்கத் தான் வேண்டும். நாம் நல்ல எண்ணத்துடன் செய்திருக்கலாம். ஆனால் என்ன? நமது அஞ்ஞானத்துக்குத் தக்கபடி ஈசுவரன் தமது விதிகளை மாற்றிக்கொண்டிருப்பாரா? அந்த விதிகளை அறிந்து அந்தமாதிரி நடக்க அவர் நமக்கு விவேகம் கொடுத்திருக்க வில்லையா? இப்படி ஈசுவரன் கொடுத்த விவேகத்தை நாம் உபயோகப்படுத்தாமல், விதிகளை மீறி நடந்தால், அதனால் விளையும் துன்பத்தையும் கஷ்டத்தையும் கட்டாயம் அநுபவிக்க வேண்டியதே.

கஷ்டப்படும் ஜனங்கள் "எனக்கு எவரும் உதவி செய்யமாட்டார்களா?" என்று அடிக்கடி கதறுவதை நாம் கேட்டிருக்கிறோம், ஆனால் இக்கதறல் வீண் கதறலே. இப்படிக் கதறுபவர்கள் அநேகமாய் தன்னை யடக்கி, குடியை வெறுத்து, சிக்கனமாக ஜீவனம் செய்து வந்திருந்தால், இவர்கள் பிறர் உதவியைத் தேடாமல், தங்களை தாங்களே சுலுவாய் உதவி செய்து கொள்ளும்படியான நிலைமையில் இருப்பார்கள்? முன் யோசனை யற்று, ஸம்பாதித்த பொருளையெல்லாம் வீண் செலவிட்டு, கஷ்டம் வருங்காலத்தில் பிறர் உத



வியைத் தேடுவது எவ்வளவு இழிவான கார்யம்?

அவனவனுக்கு புண்யமும், ஞானமும், ஸ்வதந்த்ரமும், ஸம்பத்தும் வருவதற்கு அவனவனே காரணம் என்பதை அநேகர் இன்னும் அறிந்து கொள்ளவில்லை. சட்ட நிரூபணத்தால் அவர்களுக்கு எவ்வித நன்மையும் உண்டாகமாட்டாது. சட்ட நிரூபணத்தால் அவர்களை குடியில்லாமலும், விவேகிகளாகவும், நல்லொழுக்க முள்ளவர்களாகவும் மாற்ற முடியுமா? பெரும் பான்மையில், ஜனங்கள் படும் கஷ்டங்கள், சட்ட நிரூபணக் குறைவால் ஏற்பட்டவையல்ல.

ஊதாரியாயிருப்பவன், சட்ட நிரூபணத்தை இகழ்ச்சி செய்கிறான்; குடியன் சட்டத்தை உடைக்கிறான்; முன் யோசனையற்றும், தன் அடக்கமற்றும் தான் நடக்க தனக்கு பாத்யமிருப்பதாக கொண்டாடுகிறான். கடைசியில் கஷ்டம் வரும் காலத்தில், தன் தப்பை பிறர் மேல் சாத்துகிறான்.

மனிதர்கள் தங்கள் ஸௌக்யத்துக்கு வேண்டிய மூலாதார தத்வங்களை அறிந்து கொள்ளாததினால் கஷ்டகாலத்தில் பிறர் உதவிக்காகக் கதறவேண்டியிருக்கிறது. தனக்குத் தான் உதவி செய்துகொள்ளும் சக்தி ஒவ்வொரு மனிதனிடத்திலும் அவன் உள்ளத்தில் அமைந்திருக்கிறது. தனக்குத்தானே உதவி செய்து கொள்ளவும், மேன்மைப் படுத்திக் கொள்ளவும் மனிதன் பிறந்திருக்கிறான். ஒவ்வொருவனும் தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த வேலையை இவன் தான் செய்யவேண்டும். இவனுக்காக பிறர் செய்யக்கூடிய வேலையாக இல்லை.

வி. எஸ். சிவராமக்ருஷ்ண சர்மா.

## DAIRY INDUSTRY FOR POOR WOMEN.

BY T. P. SUBBARAYA AIYAR.

### ஏழை ஸ்த்ரீகளுக்கு பால் தயிர் வ்யாபாரம்.

இந்தியாவின் பெரிய பட்டணங்கள், சிறு பட்டணங்கள், பெரிய க்ராமங்கள் ஆகிய இவைகளில், மேல்நாட்டு நாகரீகம் வந்து, காபி, டீ முதலிய பானங்களைத் தோட்டிமுதல் பெரிய ஆபீஸர்கள் வரை ஸ்த்ரீகள், குழந்தைகள் ஸஹிதம் குடிக்கத் தலைப்பட்டுவிட்டார்கள். அதோடு ஆகாரங்களுக்கு உபயோகமாகும் நெய், பால், தயிர், மோர் வகையராவும் வேண்டும். தவிர, சிற்றுண்டிக் கடைகளும் தினே தினே மேற் சொல்லிய விடங்களில் அதிகம் வ்யாபித்து வருகின்றன. அவைகளுக்கும் நெய் வேண்டும்.

இத்யாதி காரணங்களுக்குத் தக்கபடி மாடுகளை வ்ருத்திசெய்வதில் இந்தியர்களான மந்த புத்திகள் முன்வராமல் தூங்குகிறார்கள். இதனால் வெளியிடங்களிலிருந்து கட்டிப்பால் புட்டிகளும், பருத்தி விதை நெய்யும், இன்னும் நெய்போன்ற நெய்களும் வந்திறங்கிய வண்ணமாயிருக்கின்றன.

இதனால் இந்தியாவி லிப்போது பால், நெய் முதலியன ஏராளமாக வேண்டியிருக்கிறது என்பது வ்யக்தமாக ஏற்படுகிறது.

ஆகையால் ஸ்வல்ப முதல் உள்ள ஏழை ஸ்த்ரீகள் பால் தயிர் வ்யாபாரத்தைக் கைக்கொண்டால் லாபம் அடைந்து ஜீவிக்க ஹேதுவாகும். ஒரு ஸ்த்ரீயிடம் ரூ 100 இருக்கிறதென்றால் அவள் பின் வருமாறு செய்யலாம்

100 ரூபாய்க்கு, 2 எருமை மாடுகள் வாங்கலாம். அவைகள் ஒவ்வொன்றும் தினம் 1-க்கு பக்காப்படி ஒருபடி விதம் வேளை 2-க்குப் 4-ப்படி கறக்கும். இந்த அப்பட்டமான பாலின் க்ரயம் இப்போதைய அவசியத்தினாலும், க்ராக்கியினாலும், ரூ 1-க்கு பக்காபடி 3-க்கு மேலில்லை. (பெரிய பட்டணங்களில் இதிலும் குறைவு.) இதனால் மேற்கண்ட விலைப்படி 4-படி பாலின் விலை ரூ 1-5-4 கிடைக்கும். அவ்விதம் பாலாக விற்காமல் காய்ச்சித் தோய்த்து தயிர், வெண்ணெய், நெய், மோர், இவைகளாகச்செய்து விற்றால், தினம் 1-க்கு தயிர் பக்காப்படி 1-க்கு அணு 2 விதம்படி 4-க்கு 8-அணுவும், ஷை பாலிலிருந்து எடுக்கப்பட்ட ஆடையைக்கடைந்து எடுத்த வெண்ணெய்க்கு 6-அணு முதல் எட்டு அணு வரையும் ஷை வெண்ணெய் நெய்யாக ஆக்கப்பட்டால் ரூ. 0-8-0 முதல் 0-10-0 அணு வரையும் கிடைக்கும். மீதமாகும் மோரின் க்ரயம் அணு 1. ஆக ரூ. 1-3-0 கிடைக்கும்.

பாலாக விற்கும் பக்ஷத்தில் மாதம் 1-க்குக் கூடுதல் ரூ. 40-0-0. தயிர், வெண்ணெய், நெய், மோர் இவைகளாகச் செய்துவிற்றால் ரூ. 35-10-0 தான் கிடைக்கிறது.

சேலவு விவரம்.

மாடுகளின் தீனியான வைக்கோல் தினம் 1-க்கு அணு 4-விதம் 1 மாஸத்திற்கு ரூ. 7-8-0; தினம் 1-க்குப் பருத்தி விதை வீசை 2-விதம் ரூ. 7-8-0; எள்ளுப் பிண்ணாக்கு வீசை 1-விதம் ரூ. 3-12-0-; தவிடு ரூ. 0-1-0 விதம் ரூ. 1-14-0; மாடு மேய்ப்பவர் வேண்டிய க்ராமாந்தரங்களாக இருந்தால் அவன் சம்பளம் மாதம் 1-க்கு ரூ. 0-4-0. ஆகச்செலவு ரூ. 20-14-0. வரவு ரூ. 40-0-0-க்கு ரூ. 20-14-0 போக பாக்கி ரூ. 19-2-0; 35-10-0-ல் 10-14-0 போக பாக்கி ரூ. 14-8-0. வட்டி ரூ. 100-க்கு மீ 1-க்கு ரூ. 1. விதம் ரூ. 1-0-0 போக பாக்கி ரூ. 18-2-0, அல்லது 13-8-0. வைக்கோலை மொத்தமாய் ஒரு வர்ஷத்திற்காவது, ஆறுமாஸத்திற்காவது வாங்கிவைத்துக் கொண்டால் செலவு குறையும். பருத்திக்கொட்டை, பிண்ணாக்குகளையும் மூட்டைக் கணக்காய் மாஸ மொத்தத்திற்கும் வாங்கி வைத்துக் கொண்டால் அதிலும் செலவு குறையும். நெல் குத்தும் யந்த்ரசாலைகளிலிருந்து அரிசி தீட்டிய தவிடுகளையும், குத்துமித் தவிடுகளையும் மொத்தமாய் வாங்கிவைத்துக் கொண்டாலும் லாபம்தான்.

இன்னும், ஷை மாடுகளின் எருவினால் ஷை ஸ்த்ரீயின் சமையலுக்கு எருமுட்டை கிடைத்துவிடும். ஷை எருமைகள் புல்லுள்ள தரைகளில் மேய்ந்து வந்தால், முன் சொன்ன பக்கா ஒருபடிக்கு அதிகமாகவும் பால் தரும். தீட்டரிசித் தவிடு உபயோகித்து வந்தால், வெண்ணெய் நாம் சொன்ன கணக்கிற்கு மேல் கிடைக்கும். பின்னும், ஷை மாடுகளின் கன்றுகள் கிடாரியாயிருந்தால் அடுத்த வருஷத்தில் கன்று ஒன்று குறைந்தது 5-7 ரூ. கொடுக்கும். கிடாவாக இருந்தால் குறைந்தது ரூ. 3-4-க்கு விற்கும்.

இவைகளால் ஒரு ஸ்திரீ ரூ. 100 முதல் வைத்துக்கொண்டு முன் சொன்னபடி எருமைகள் இரண்டை வாங்கிவைத்து போஷித்து நாம் சொன்னபடி தீனி வகையராக்களை குறைக்காமல் கொடுத்து வந்தால் தீனி வகையரா ஸாமான்களின் விலையதிகமானாலும், அவைகளையும் முன்சொல்லிய ஆதாயத்தில் கழித்துப் பார்த்தால் கட்டாயம் ரூ. 10-0-0 கிடைப்பதில் ஆக்ஷேபமில்லை.

ஷை மாடுகள் ஒரு வருஷம் கறக்கும் கணக்கை வைத்து இந்தக் கணக்கு எழுதினோம். ஷை மாடுகள் பால் மறத்துவிட்டால் ஷை மாடுகளின் புஷ்டியால் விலை குறையாமலே விற்கும். அந்தப் பணத்தைக்கொண்டு பின்னும் மாடுகளை வாங்கி முன்சொல்லி வந்தபடியே செய்து லாபமடையலாம்.

டி. பி. ஸுப்பராய ஐயர்.



# CARE OF THE EYES.

## கண்களின் பராமரிப்பு.

கடவுள் நம்முடைய முகத்தைச் செய்து அதில் கண்களை வைத்தபோது ஞாபகமறதியா யிருந்திருக்கலாமென்று தோன்றும். ஏனென்றால் நமது கண்கள் ஆபத்துக்கிடமான இடத்திலும், அதிக பாதுகாப்பில்லாமலும் அமைக்கப்பட் டிருக்கின்றனவென்று தோன்றும் பாம்புகூட இது விஷயத்தில் நன்றாய் ரக்ஷிக்கப்பட்டிருக்கிறது ; அதன் இமைகள் ஒளியூடுருவத்தக்கதாயும் அதன் விழிகளுக்கு மேல் ஒரு கண்ணாடிக்கூடு போட்டதுபோல ஒன்றுசேர்க்கப்பட்டு மிருக்கின்றன. பக்ஷிகளுக்கு மூன்று இமைகள் இருக்கின்றன, நமக்கோ இரண்டு தான். கழுகுக்கு ஸூர்யனை கூச்சமில்லாமல் உற்று நோக்கும் சக்தி இருப்பதில் ஆச்சர்யம் ஒன்றுமே யில்லை. அது ஸூர்யனைப் பார்க்கவேண்டியிருந்தால் உடனே மூன்றாவது இமையானது கண்மேல் ஒரு மங்கலான கண்ணாடி மூடி போட்டது போல் அமைந்து விடுகிறது. நமக்கு அத்தகைய மூன்றாவது இமை இல்லாததால், ஸூர்ய க்ரகண ஸமயத்தில் ஸூர்யனைப் பார்க்க புகையேறிய கண்ணாடியை உபயோகிக்கிறோம்.

வெளிப்பார்வைக்கு நமது கண் பாதுகாப்பில்லாமல் இருப்பதாகத் தோன்றினாலும், வாஸ்தவத்தில் நமது கண்கள் ரொம்ப பத்ரமாகவே இருக்கின்றன. நம்முடைய மேல் இமைகளும் அவைகளின் அடியில் மண்டையோட்டிலிருந்து நீண்டிருக்கும் எலும்பும் சேர்ந்து கண்களுக்குமேல் ஒரு கூரை போலிருக்கின்றன. பக்கங்களிலும் கீழிலுமுள்ள கன்ன எலும்புகளும் மூக்கெலும்பின் உள்பாகமும் சேர்ந்து கண்களைச் சுற்றி ஒரு எலும்பு வளையமாய் அமைக்கப்பட் டிருக்கின்றன. இதனால், முகத்தின் பேரில் ஒரு அடி கொடுத்தால், அது இந்த எலும்புக் காவல்களையெல்லாம் உடைத்த பிறகே கண்ணுக்குக் கெடுதி செய்யக்கூடும். உண்மையில் கூர்மையான ஆயுதங்களாலும், குச்சியின் நுனியாலும், அம்பினாலும், அல்லது பக்ஷிகளின் அலகினாலும், தற்செயலாய் படக்கூடிய சிறிய பொருள்களாலுந்தான் கண்களுக்கு அபாயம் நேரிடலாம். மேற் சொல்லிய பொருள்களில் ஏதாவது ஒன்று இந்த எலும்புக்காவல்களைக் கடந்து ஊக்கத்துடன் கார்க்கப் பட்டிருக்கும் விழியைக் கீறி காயப்படுத்தி விட்டால், அனேகமாய் வாஸ்தவமான அபாயம் காயமல்ல ; பின்னிட்டு அந்தக் காயத்திற்குள் வந்து சேரும் தொற்று வ்யாதி க்ருமிகளே என்று சொல்லவேண்டும். சில ஸமயங்களில் நாமே நமக்குப் பெருத்த சத்ருக்களாயிருக்கிறோம். கண்ணில் இருக்கும் ஏதோ ஒரு வஸ்துவை நீக்க நாம் செய்யும் கார்யங்கள் அந்த வஸ்துவைவிட பல மடங்கு அபாயகரமா யிருக்கின்றன. உதாரணமாக கண் வலிக்கும் போதும் எரியும்போதும் கண்ணைத் தேய்ப்பது மிகவும் கெடுதி.

கண் விழிக்குள் விழும் கரித்துண்டு, கீறும் குச்சி முதலியவைகள் தொற்று வ்யாதி ஸம்பந்தமுள்ளவைகளாக இருப்பது அரிது. ஆனால் நம்முடைய கைகளிலும் விரல் நகங்களிலும் எத்தனை க்ருமிகள் இருக்கின்றனவோ அது கடவுளுக்குத்தான் தெரியும். நம்முடைய கைகளின் கெட்டித் தோலை ஒன்றும் செய்யக்கூடாத இந்த க்ருமிகள் ஈரமான மெல்லிய கருவிழியின் மேல் தோலில் சேர்ந்தவுடன் வேகமாய் வ்ருத்தியாகின்றன.

ஏதாவதொரு வஸ்து கண்ணில் விழுந்து

விட்டால், அப்போது செய்யவேண்டியதென்ன வென்றால், சுத்தமான விரல்களால் மேலிமை மயிர்களைப் பிடித்துக்கொண்டு இமையை வெளியே இழுத்துத் திருப்பி இருபது முப்பது ஸெகண்டுகள் அப்படியே பிடித்துக்கொண்டிருந்தால், கண்ணிலிருந்து இயற்கையாய்ப் பெருகும் தண்ணீரே அந்த தூசியைக் கழுவிக்கொண்டு போய்விடும். அல்லது தூசி கண் விழியின் பேரிலிருப்பது நன்றாய்த் தெரிந்தால் அதி சுத்தமான கைக்குட்டையின் நுனியால் மெதுவாய் துடைத்தெடுக்க ப்ரயத்னம் செய்யவேண்டும். இந்த வழிகள் தவறினால், கூடிய சீக்ரத்தில் வைத்யரைத் தருவிக்க வேண்டும்.

அபாயங்களைத் தடுக்கும் விஷயத்திலும் கண்கள் தக்கவாறு அமைக்கப் பட்டிருக்கின்றன. கண்ணில் தாக்கக்கூடிய சிறு பொருள்களிலிருந்து காத்துக்கொள்ள இமைகளுக்கு அதிக ஸாமர்த்யம் உண்டு. ஆபத்து வருமென்று தெரிந்ததும் கண்ணிமைகள் உடனே மூடிக்கொள்ளுகின்றன. இதற்கு ஒரு ஸெகண்டில் 40-ல் ஒரு பங்கு நேரம் போதும். இந்த வேலையில் நாம் செய்யவேண்டியது ஒன்றுமேயில்லை. இதற்கும் மனிதனுடைய இச்சைக்கும் ஸம்பந்தமே கிடையாது. எச்சரிக்கும் வெளிச்சம் கண்ணின் நரம்பு ஸ்தானத்தில் பட்டவுடன் மூடிகள் ஒரு நொடியில் மூடிக்கொள்கின்றன. ஆகையால் தான் சில அடி தூரத்துக் கப்பாலுண்டாகும் வெடிமருந்து வெடிப்பில்கூட ஜ்வாலை முகத்தில் படு முன்னமே கண்ணிமைகள் வழக்கமாய் மூடிக்கொள்கின்றன.

கண்ணின் முன்பக்கத்திற்கு வேறு அபாயங்களுமுண்டு. அவை நீர்க்கோவை (Catarrhs) என்று சொல்லப்படும் அற்பத் தொற்று வ்யாதிகளே. தேகத்திலுண்டாகும் ஜலதோஷம், நீர்க்கொள்ளுவான், சின்னம்மை முதலிய வ்யாதிகள் வரும்போது அவைகள் கண்களுக்கும் பரவுகின்றன. அதனால் அந்த ஸமயம் கண்கள் வீங்கி சிவந்து உபத்ரவம் செய்தபோதிலும், யாதொரு விசேஷக்கெடுதி ஏற்படாமலே அவைகளை ச்வஸ்தப்படுத்தி விடலாம். இதற்கு மாம்ஸம் அழுகாமல் காக்கும் மருந்துகளைக்கொண்டு அலம்புவது நல்லது. ஆனால் இதில் முக்யமாய் கவனிக்கவேண்டியது என்னவென்றால், இந்த வ்யாதிகளை நீடித்தகாலம் நிவர்த்திக்காமல் வைத்திருக்கக் கூடாதென்பதே. முக்யமாய் நீர்க்கொள்ளுவான், சின்னம்மை ஆகிய இவை வந்தபிற்பாடு அப்படி அச்ரத்தையா யிருந்தால் கண்ணில் புண் புறப்படும். குழந்தை மெலிந்து இருந்தால் இவ்விதப் புண்கள் கொடிய தொந்தரவு கொடுப்பதோடுகூட வாரங்கள், மாஸங்கள் கணக்காக வெளிச்சத்தைப் பார்க்கமுடியாமலும் செய்து விடும்.

இந்தமாதிரி இமைகளிலும் கண்ணின் முன்பக்கத்திலும் புறப்படும் புண்களால் விழிக்கு ரொம்ப அபாய முண்டாவதின் காரணம் என்னவென்றால், கருவிழியின் மேலுள்ள தோலானது நன்றாய் ஒளி ஊடுருவிச் செல்லும் பொருட்டு யாதொரு ரத்தக்குழாய்களுமில்லாமல் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தோலைச் சுற்றிலும் உள்ள ரத்தக் குழாய்களிலிருந்து தான் அதற்கு வேண்டிய உணவை க்ரகித்துக் கொள்ளுகிறது. விழியின் மத்ய பாகம் மேற் சொன்ன ரத்த குழாய்களிலிருந்து தூரத்திலிருப்பதால், புண்கள் ஏற்படாமல் தடுக்க சக்தியற்றதா யிருக்கிறது. கருவிழிமேல் உள்ள தோலுக்குண்டான இவ்வித அசக்தியால் பெரியம்மை யானது கண்களுக்கு அபாயம் உண்டாக்கக்கூடியதா யிருக்கிறது. பெரியம்மை வந்தால் கருவிழியின்மேல் தோல் முழுவதும் ஒரு பெரும் புண்ணாகமாறி, அப்புண்ணின் தோலுரிந்து விழும். அந்த இடத்



தில் ஒரு வெள்ளைத்திரை போன்ற தழும்பு நிற்கும். அதினால் பெரியம்மை வந்தவன் முழுக்குருடனாகிறான்.

கண்கட்டி அல்லது கிறுக்கட்டி என்பது இமைகளில் வெடிக்கும் கொப்புளங்களாகும். மற்ற கொப்புளங்களைப் போலவே இவைகளிலும் மயிர்க்கால்களைச் சுற்றி சீ கட்டிக் கொள்ளுகிறது. வீக்கத்துக்கிடங் கொடுக்கும் மயிர்கள் இமை மயிர்களானதால் தக்க ஸமயத்தில் அத்தகைய இமை மயிரைப் பிடுங்கி விட்டால் சீவடிந்து வீக்கம் தணியும். ஆனால் சரியான மயிரையே எடுக்கவேண்டும்.

சீயுள்ள மற்ற கொப்புளங்களைப் போலவே கிறுக்கட்டியிலும் தொற்று வ்யாதி க்ருமிகள் பரவக்கூடும். கிறுக்கட்டியின் சீயானது வழிந்து கண்ணிற்குள் விழுந்து, இமையின் உள் பக்கத்து மடிப்பில் சேர்ந்து விடக்கூடும். அப்போது கண்ணின் உள் பாகமும் கெடுதலடையக்கூடும். அல்லது வ்யாதி க்ருமிகளுள்ள விரல்களால் கண்களைத் தேய்ப்பதினாலேயே உண்டாகும். சின்னம்மை வ்யாதியிலும் இப்படி. நேருவதுண்டு. இந்த வ்யாதி கண்டபிற்பாடு இமைகள் தடிப்பதையும் புண்கள் இமைகளின் உள் பக்கம் வரையில் தொடருவதையும் முக்யமாய் பார்க்கலாம். இது ஆறுவதற்குப் பல மாஸங்கள் பிடிக்கும்.

கண்வலியும் அநேகமாய்த் தொற்று வ்யாதியே. ஆகையால் யாவரும் கண்வலி வந்தவருடன் நெருங்குவது கூடாது. முக்யமாய்க் குழந்தைகளை நெருங்கவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். கண் உபத்ரவங்களில் ஸர்தாரணமானவை, கண்ணின் உறுப்புகள் வ்யாதி யடையாமலிருந்தும், அவை தமது வேலையை சரியாகச் செய்ய முடியாமலிருப்பதே. கண்ணில் வீக்கமோ கெடுதியோ இருப்பதில்லை. இமைகள் ச்வஸ்தமாயிருக்கின்றன. நன்றாய் நகருகின்றன. கண் விழிகள் தெளிவாயும் ப்ரகாசமாயு மிருக்கின்றன. ஆகிலும் பார்வை தெளிவாய் இருப்பதில்லை. இவைகளில் சாளேச்வரம், ஸமீபத்ருஷ்டி முதலிய சிலவகைகள் உண்டு.

இவ்வித உபத்ரவங்கள் உண்டாவது ஸர்வ ஸாதாரணமா யிருக்கிறதென்று சொல்லலாம். ஆதியில் மனிதன் ச்ருஷ்டிக்கப் பட்டபோது, அவனது கண்கள், வேடன், மாலுமி, போர்வீரன், வ்யவஸாயி ஆகிய இந்தத் தொழிலாளர்களுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டன. தற்காலம் நாம் படிப்பு, எழுத்து வேலை முதலியவைகளுக்கு நமது கண்களை உபயோகிக்க வேண்டியிருப்பதால், நமது கண்கள் கெடுதலடைகின்றன. இதற்காக கண்களுக்கு உதவியாக நாம் கண்ணாடிகள் போட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த மாதிரி உபத்ரவங்கள் வயது ஏறுவதாலும் நாளாவதாலும் ச்வஸ்தமாவதென்பது கிடையாது. உபத்ரவம் குறைவதற்கு பதிலாக பெரும்பாலும் அதிகரிக்கும். ஆகையால் குழந்தைகளுக்கு கண்ணாடி வேண்டுமென்று தெரிந்தால் அதை வாங்கத் தாமஸிப்பது கூடாது. எவ்வளவுக்கெவ்வளவு தாமஸிக்கிறோமோ அவ்வளவுக்கு அதிக சக்தியுள்ள கண்ணாடி வேண்டியிருக்கும். அதற்குள்ளாக பையனும் அவ்வளவுக்கவ்வளவு கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பான்.

சாளேச்வரம், ஸமீபத்ருஷ்டி முதலியவைகளை மருந்துகளாலேயே ச்வஸ்தப்படுத்துவதென்பது முடியாத கார்யம். அப்படி யாராவது சொன்னால், அது முழுப்பித்தலாட்டமென்று எண்ணவேண்டும்.

## THE ABORIGINES OF AUSTRALIA.
## ஆஸ்ட்ரேலியா தேசத்துப் பூர்வீகர்கள்.

ஆஸ்ட்ரேலியா கண்டத்துப் பூர்வீக ஜாதியர்கள் மிகவும் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்களென்றும், அவர்களுடைய தொகை நாளுக்கு நாள் குறைந்து வருகிறதென்றும், அவர்கள் தற்கால நாகரிகத்தை அனுஸரிக்க ப்ரியப்படுவதில்லையென்றும், அவர்கள் ஆதிகாலத்தில் கொண்டிருந்த பழக்க வழக்கங்களையே இன்னும் கொண்டிருக்கிறார்களென்றும், வெள்ளைக்காரர்களோடு பழக இஷ்டப்படுவதில்லை யென்றும் சொல்லப்படுகிறது.

ஆஸ்ட்ரேலியாவில் ஸுமார் 65-வர்ஷமாக வஸித்து வரும் ஒரு கனவான் அந்த ப்ரதேசத்திலுள்ள பூர்வீகக் குடிகளைப்பற்றி ஒரு பத்ரிகைக்கு எழுதியிருக்கும் ஒரு கடிதத்தில், அந்த ஜனங்களைப்பற்றி சிறிது ச்லாகித்து எழுதியிருக்கிறார். அந்த ஜனங்களைப் பற்றி அநேகர் எழுதும்போது, அவர்களுக்கு உயர்ந்த அறிவு கிடையாதென்றும், காலப்போக்கை அனுஸரித்து தங்களுடைய வாழ்க்கை நிலைமையை மாற்றத் தெரியாதவர்களென்றும் எழுதுவது சரியல்லவென்று மேற்சொன்ன கனவான் தெரிவித்திருக்கிறார். அவர் எழுதியுள்ளதை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

எல்லாரும் சொல்லுகிறபடி ஆஸ்ட்ரேலியாவின் பூர்வீகக் குடிகள் அறிவில் தாழ்ந்தவர்களல்லர். அறிவில் உயர்ந்த பல ஜாதிகளுக்கு அவர்களை ஸமமாகச் சொல்லலாம். ஆனால் அநேக நூலாசிரியர்கள் இந்தப் பூர்வீகர்களைப்பற்றித் தாழ்த்திச் சொல்லக் காரணமென்னவென்றால், இந்த நூலாசிரியர்கள், பட்டணங்களில் காணப்படுகிறவும், குடி, அபின் தின்னல் முதலிய தீய வழக்கங்களை உடையவுமான பூர்வீகர்களைப் பார்த்து, இந்தத் தீய வழக்கங்களால் அறிவு கெட்டிருக்கும் நிலைமை எல்லாப் பூர்வீகர்களுக்குமே ஸகஜமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். உண்மையை விசாரித்தால், பட்டணத்திலுள்ளவர்களைவிட ஸ்வயேச்சையாய் உள்ள பூர்வீகர்களுடைய வாழ்க்கை நிலைமை உயர்ந்ததாக இருக்கிறதென்று தெரியவரும்.

மேலும் ஒரு தொழிலில் பழக்கம் ஏற்படுவதற்கு வேண்டிய வஸதிகள் ஒன்றும் இல்லாமலிருக்க, அந்தத் தொழில் அவர்களுக்குத் தெரியாததைக்கொண்டு, அவர்கள் தாழ்ந்த நிலைமையிலுள்ளவர்கள் என்று தீர்மானிப்பதும் ஸகஜமாயிருக்கிறது. உதாரணமாக ஆஸ்ட்ரேலியாவில் பயிரிட்டு சாப்பிடுவதற்கு யோக்யமான காய்கறி, தான்யம், பழவகைகள் முதலியவை ஒன்றுமில்லை. பழக்கப்படுத்தி வ்ருத்தி செய்யக்கூடிய ம்ருகங்களும் இல்லை. அப்படியிருக்க அந்தப் பூர்வீகர்களுக்கு வ்யவஸாயமும், ம்ருகங்களை பழக்கி வளர்க்கும் தொழிலும் தெரியாவென்று சொல்லி, அதைக்கொண்டு அவர்களைத் தாழ்ந்த வகுப்பார் என்று தீர்மானிப்பது வழக்கமாக இருக்கிறது.

ஆஸ்ட்ரேலியப் பூர்வீகர்கள் கற் கால மனிதர்கள் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்கள். வெள்ளைக்காரர்கள் ஆஸ்ட்ரேலியாவுக்குப் போகுமுன் அவர்கள் கல், மரம், எலும்பு ஆகிய இவைகளாலான ஆயுதங்களையே உபயோகித்து வந்தார்கள். அவைகளில் சில சாமர்த்யோக்தமாய் அமைந்தவை. அவர்கள் உபயோகிக்கும் பூமராங் என்னும் ஆயுதம் மற்றவைகளைவிடச் சிறந்தது. அந்த ஆயுதம் எப்படி உதவுமென்பதை நன்றாயறிய வேண்டுமானால், அந்தப் பூர்வீகர்கள் அதை உபயோகிக்கும்போது பார்த்தால் தான் தெரியும். அந்த ஆயுதத்தை ஒரு ம்ருகத்தின் பேரிலோ மனிதன் பேரிலோ எறிந்தால், அதுபோய் எதிரில் அகப்படுவதை அடித்துவிட்டு மறுபடியும் ப்ரயோகித்தவனிடமே திரும்பிவிடும். அவர்களுக்கு அறிவு கூர்மையாயிராவிட்டால், இப்படிப்பட்ட ஆயுதம் செய்வது ஸாத்யமாகுமா? ஆயுதம் எதிரியை அடித்தாலும் சரி அடிக்காவிட்டாலும் சரி எறிந்தவரிடம் திரும்பிவிடுமாகையால், ஒரே ஆயுதம் வெகுகாலம் உபயோகமாகிறது. வெள்ளைக்காரர்கள் வெகுவாய் இந்த ஆயுதத்தை உபயோகிக்க முடிவதில்லை.



அந்தப் பூர்வீகர்கள் வேட்டையாடுவதில் மிகவும் ஸமர்த்தர்கள். உயர்ந்த மரங்களில் ஏறுவதற்கு மரத்தில் சிறுபடிகள் அமைத்துக் கொள்ளுகிறார்கள். ஸாதாரணமாக மணலிலும், மண்ணிலும் உள்ள காலடிச் சுவடுகளைக்கொண்டு நடந்தவர்கள் எங்கு போனார்கள் என்று கண்டுபிடிக்கிறோம். ஆஸ்ட்ரேலியப் பூர்வீகர்களோ, கற்பாறையில் நடந்தவர்களையும் எந்தப்பக்கம் போனார்கள் என்று வெகு சீக்ரத்தில் கண்டுபிடித்து விடுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் மூளை நன்றாயிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. இந்த வேலைகளில் எந்த வெள்ளைக்காரரும் ரொம்ப ஸாமான்யப் பூர்வீகர்களைப்போல்கூடத் தேர்ச்சியடைய முடியவில்லை. வெள்ளைக்காரர்கள் வருவதற்கு முன்னால், அவர்களைப்போல் உயர்ந்த ஸன்மார்க்கமுள்ள கறுப்பு மனிதர்கள் வேறு எவரும் கிடையாதென்னலாம். அவர்களுள் ஸ்த்ரீகள் கல்யாணத்துக்கு முன்னாவது பின்னாவது கற்பிழப்பது பெரும் பாவமாக எண்ணி, அவர்கள் அப்படி நடத்தை தவறினவர்களைக் கொலை செய்து வந்தார்கள். மேலும் பலஹீனமானவர்களுக்குக் குழந்தைகள் பிறக்காதபடியும் அவர்கள் முன் ஜாக்ரதை எடுத்து வந்தார்கள்.

அவர்களில் பலர் வேலையாட்களாக அமர்ந்து திறமையாகத் தங்கள் கடமைகளைச் செய்து வருகிறார்கள். அநேகர் இங்க்லீஷ் பள்ளிக்கூடங்களில் போய் வாசித்து வருகிறார்கள். இரண்டு பேர் யூனிவர்ஸிட்டியில் சேர்ந்து வாசித்து எம். ஏ. பட்டம் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் பலருக்கு நல்ல இங்க்லீஷ் பேசத்தெரியும். வேறு பலர் கால்நடைப் பண்ணைகளில் மானேஜர்களாக இருக்கிறார்கள்.

இந்தப் பூர்வீகர்களில் பலர் குடித்தும் அபின் தின்றும் கெட்டுப்போவதால் தான் அவர்கள் தாழ்ந்த நிலைமையடைந்து வருகிறார்கள்.

## GENERAL NOTES.
## பொதுக் குறிப்புகள்.

**இந்தியாவை அன்னியர் வென்றதேன்?**

இந்திய சரித்ரத்தை வாசிப்போருக்கு, இந்தியா பிறரால் எவ்வளவு தடவை அடுத்தடுத்துப் படையெடுக்கப்பட்டதென்கிற விஷயமும், ஒவ்வொரு தடவையும், சத்ருவின் சின்னச்சேனை, இந்தியரின் பெரிய சேனையை எளிதில் தோற்கடித்திருக்கிறதென்கிற விஷயமும் எளிதில் புலப்படுகின்றன. ஆதியில் ஆர்யர்கள், ஆர்யர்களல்லாதவரையும், மத்யகாலங்களில் மகம்மதியர்கள் ஹிந்துக்களையும் சிறுஸைன்யங்களைக் கொண்டு வென்றிருக்கிறார்கள். எப்

படி இவ்வாறு நடந்திருக்கக் கூடுமென்பது, இந்திய ராணுவ சரித்ரத்தில் விசாரிக்கவேண்டிய விஷயம். தைர்யம், வீரத்தனம் இவைகளைப் பூர்ணமாய்க் கொண்ட ரஜபுத்ரர் முதலிய க்ஷத்ரிய ஜாதிகள் சத்ருக்களின் சிறிய சைன்யங்களினால் தோற்கடிக்கப் பட்டார்கள் என்றால் என்ன ஆச்சர்யம்!

இதன் காரணத்தைச் சற்று தீர விசாரிப்போமானால், தைர்யமிருந்தும், வீரத்தனமிருந்தும், இந்தியர்கள் ராணுவதத்வங்களை யறியவில்லை யென்றும், சத்ருக்களுக்கு அவைகளை யறிந்திருந்ததே ஒரு பெரிய பலமாயிருந்ததென்றும் தெரியவருகிறது. அநேகம் சிறிய படைகளை ஒன்று சேர்த்து, சேர்ந்து சண்டை செய்வதென்பது இந்தியர்களுக்கு நன்றாய்த் தெரியாது. சத்ருக்கள் இந்த விஷயத்தை நன்றாய் அறிந்திருந்தார்கள். இந்தியர்கள் அவரவர்களின் சரீர பராக்ரமத்தை அதிகப்படுத்தினார்கள். சத்ருக்கள் ஒன்று சேர்த்த சைன்யத்தின் பலத்தை அபிவ்ருத்தி செய்தார்கள். இந்தியர்கள் தங்கள் சைன்யத்தை ஒரேவரிசையாய் நிறுத்தி எதிரி நெருங்கினவுடன் ஒவ்வொரு இந்தியனும், தன், தன், ஸாமர்த்யத்தைக் காட்டி, ஒவ்வொரு சத்ருவைப் பிடித்துக் கொண்டு அவனுடன் சண்டை செய்தான். சத்ருக்கள் சைன்யமோ, பல சிறுபடைகளடங்கியிருந்ததால், ஒன்று சேர்ந்து இந்தியர் மீது தாக்கி இந்தியரை வென்றது.

**தந்தத்தின் உபயோகங்கள்.**

தந்தம் முக்யமாய் பியானோக் "கட்டை"களில் உபயோகப் படுத்தப்படுகிறது. ஆப்பிரிக்காவிலிருந்து ஏராளமான தந்தம் இதற்காகவே அமெரிக்காவில் இறக்குமதியாகிறது. அடுத்தபடியாக பில்யர்ட் பந்து, கத்திப்பிடி, ப்ரஷ் பிடி, சீப்பு, கண்ணாடிகள், ஸோப் பெட்டிகள் முதலியவைகளில் உபயோகிக்கப் படுகிறது. இன்னும், சிறு ஆபரணங்கள், சிறுபதுமைகள், விளையாட்டுக் கருவிகள், சதுரங்கக் காய்கள் முதலியவைகள் செய்யவும் உபயோகப்படுகிறது. ஒரு சிறு தந்தத்திலிருந்து மூன்று நல்ல பில்யர்ட்பந்து செய்யலாம். தந்தத்தில் செய்யப்பட்டு வந்த பல சிறு ஸாமான்கள், தற்காலம் "ஸெல்லூலாய்ட்", கொம்பு, ஆகிய இவைகளினால் செய்யப்பட்டு வருகின்றன. ஒரு காலத்தில், கத்திப் பிடிபோடுவதற்காக மட்டும், 100 முதல் 200 டன் வரையில் தந்தம், இங்கிலாந்திலுள்ள ஷெப்பீல்ட் நகரத்தில் செலவாயிற்று. இப்பொழுது 40 அல்லது 50 டன் கூட செலவாகிறதில்லை. முன்போல் அவ்வளவில்லாவிட்டாலும், இப்பொழுதும், தந்த வேலைகள் நடந்துவருகின்றன. தந்த வேலையில் வீண் என்பது கிடையாது. சீமையில் பில்யர்ட் பந்துசெய்த பிறகுள்ள வட்டமான தந்தங்களைக்கொண்டு, இந்தியாவில், காப்பு, விளையாட்டுக் கருவிகள் முதலியவைகளைச் செய்கிறார்கள். தந்தத் தூளை மெருகு கொடுக்கவும், "இந்தியன் இங்க்" செய்யவும், உபயோகப்படுத்து கிறார்கள். ஒரு விதமான தந்த அல்வா கூட செய்யப்படுகிறதாம். காண்டா ம்ருகத்தின் தந்தம் விலையுயர்ந்தது. நீர் யானையின் தந்தம் யானைத் தந்தம் போலவேயிருக்கும், அவைகளின் வித்யாஸம் தந்த நிபுணர்களுக்குத்தான் தெரியும். ஒரு காலத்தில் நீர் யானைத் தந்தத்தினால் பொய்ப்பல் கட்டிவந்தார்கள்.

**ந்யுமோனியா.**

"ந்யுமோனியா" என்னும் ச்வாஸாசயத்தைப் பற்றிய வ்யாதி, அணுப்ரமாணமான க்ருமிகளாலுண்டாகிற ஒரு தொத்து வ்யாதி. ச்வாஸத்துடன் மூக்கு தொண்டைகளுக்குள், இந்த க்ருமிகள் சென்றுவிட்டால், அரோகத்ருட காத்ரவானாயிருந்தால், ஜல தோஷத்தோடு போகலாம். பலஹீனமாய் சரீர ஸௌக்யம் குறைச்சலாயுள்ள வர்களாயிருந்தால், ஜலதோஷம் கொடிய "ந்யுமோனியா"வாக முற்றிவிடலாம். ஜலதோஷம், "ந்யுமோனியா" ஆகிய இவைகளுண்டாவதற்கு அநேகம் காரணங்கள் இருக்கின்றன. அவைகளுக்குள், கெட்டகாற்றை உட்கொள்ளுவதே முக்யமானது.

வெட்ட வெளியில் அதிகமாய் வஸித்து, மழை காலங்களில் ஜன்னல்களைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்குகிறவர்களுக்கு ஜலதோஷம் வரமாட்டாது. வந்தாலும் ஸ்வல்பமாயிருக்கும்; "ந்யுமோனியா" வாக முற்றுகிறதில்லை. ஜலதோஷமிருக்கிற வர்களிடத்தில் பலஹீனர்கள் போகக்கூடாது. ஏனென்றால், பலவானுக்குக் கொஞ்சம் ஜலதோஷத்தோடு போகக்கூடிய வ்யாதி, குழந்தைகளுக்கும், வயஸானவர்களுக்கும் ந்யுமோனியாவாக முடியலாம்.

**அரிசியின் குணங்கள்.**

உருளைக்கிழங்கைக் காட்டிலும் அரிசியில் ஸத்து ஜாஸ்தி. உருளைக்கிழங்கில் முக்கால் பாகம் தண்ணீர்தான். அரிசியில் நீரே இல்லை யென்று சொல்லலாம். உடம்பிற்கு உஷ்ணத்தையும் பலத்தையும் தரக்கூடிய பதார்த்தமாகிய மாஸத்து, அரிசியில் முக்கால் பாகத்துக்குமேலும், உருளைக்கிழங்கில் ஐந்திலொரு பங்கும் இருக்கிறது. சதையிடக்கூடிய மஸ்துள்ள ஸாமான் அரிசியில் தான் அதிகம். ஆகவே உருளைக்கிழங்கு வாங்கும் பணத்திற்கு அரிசி வாங்கினால் நான்கு மடங்கு அதிகம் ஆகார ஸத்துக் கிடைக்கும். அரிசியுடன், தயிர், வெண்ணெய், பால்கட்டி, நவதான்யங்கள் முதலியவைகள் சேர்த்துச் சாப்பிட்டால் உடம்பிற்குவேண்டிய எல்லா ஆகாரமும் ஏற்பட்டுவிடும்.



**பேன் உபத்ரவம் நீங்கவழி.**

கந்தகம் வெட்டி எடுக்குமிடத்தில் வேலை செய்கிறவர்களுக்கு கொசுக்கடியால் உண்டாகும் மலேரியாக் காய்ச்சல் வருகிறதில்லை யென்றும், மூட்டுப்பூச்சி, கொசு, பேன் முதலிய ஜந்துக்கள் அவர்களை உபத்ரவம் செய்கிறதில்லை யென்றும் அநுபவத்தில் தெரிகிறது. இதற்குக் காரணம், கந்தகம் கொஞ்சங் கொஞ்சமாய் சரீரத்திற்குள் சென்று, "ஹைட்ரோஜன் ஸல்பைட்" என்றும் வாயுரூபமாக மாறி, மயிர்க்கால்களின் வழியாய் வெளிவருவது தான். பேன் முதலிவைகளுக்கு இந்தவாயு வெறுப்பாயிருப்பதால் அவைகள், கந்தகச் சுரங்கங்களில் வேலை செய்பவர்களை அணுகுகிறதில்லை.

முக்யமாய் பேன், மூட்டுப்பூச்சி, தெள், (தெள்ளுப்பூச்சி) ஆகிய இவைகளைப் போக்க, கம்பளித்துணியில் கந்தகப்பொடியை நன்றாய்த் தேய்த்து, தேய்த்த பக்கம் உடம்பில் படும்படி தரித்துக்கொண்டால், வேர்வை முதலியவைகள், கந்தகத்தோடு சேர்ந்து, பேன், மூட்டுப்பூச்சி முதலியவைகளை கிட்ட வரவொட்டாமல் தடுக்கும்.

**மூட்டுப்பூச்சியை அழிக்கவழி.**

கந்தகப் புகை மூட்டுப்பூச்சியையும் அதன் முட்டையும் நாசமாக்கிவிடும். கடுதாசி, துணி, உலோகஸாமான்கள் முதலியன கந்தகப்புகையால் கெட்டுப்போகுமாகையால் அவைகளை அப்புறப்படுத்தி விட்டு, அறையை ஈரமில்லாமல் செய்து, அறையின் மத்தியில் கந்தகத்தைக் கொளுத்தி ஜன்னல் கதவு முதலியவைகளை அடைத்து விடவேண்டும். கந்தகத்தை ஒரு தட்டில் கொளுத்தி, தட்டை ஒரு பெரிய பாத்ரத்தில் வைத்தால், தற்செயலாய் நெருப்புப் பிடிப்பதுகூட ஏற்படாது. 2000 கன அடியுள்ள அறைக்கு இரண்டு பவுண்டு (ராத்தல்) கந்தகம் தேவை

யாயிருக்கும். கந்தகம் சொளுத்தின பிறகு 5 அல்லது 6 மணி நேரமாவது அறையை மூடிவைத்திருக்கவேண்டும். ஒருநாள் முழுவதும் மூடியிருந்தாலும் உத்தமம். பிறகு அறையை நன்றாய்க் காற்றுடவிடவேண்டும்.

### சுத்தமான வெண்ணெய்.

ஒரு டெஸ்ட் ட்யூபில் அதாவது சோதனைக் குழாயில் கொஞ்சம் வெண்ணெயைப் போட்டு, வெண்ணெயை உருக்கப் போதுமான சூடுள்ள நீரில் அமிழ்த்தினால் வெண்ணெய் உருகும். அரைமணி நேரம் உருகின ஸ்திதியிலேயே வைத்திருந்து பார்த்தால், சுத்தமான வெண்ணெயாயிருந்தால் தெளிவாயும், அசுத்தமாயும் வேறு கொழுப்பு ஸம்பந்தமுள்ளதாயுமிருந்தால் கலங்கலாயும் காணப்படும். கலப்பில்லாத வெண்ணெயென்று மற்றொரு சோதனையினாலும் அறியலாம். ஒரு சுண்டைக்காயளவு வெண்ணெயை ஒரு ஸ்பூனில் வைத்து விளக்குக்குமேல் பிடித்தால், சுத்தமான கலப்பில்லாத வெண்ணெய் சத்தமில்லாமல் உருகிக் கொதிக்கும். கலப்புள்ளதோ, சத்தம் செய்து, பச்சையிலையை நெருப்பில் காட்டினால் வெடிப்பதுபோல் வெடித்து நாலா பக்கத்திலும் தெறிக்கும்.

### புஷ்பங்களை வாடாமல் வைத்தல்.

புஷ்பங்களை பறித்து நேரமாகிவிட்டால் அவைகள் வாடிப்போய்விடுகின்றன. வாடாமல் வைத்திருக்க வேண்டுமானால், அவைகளை கொஞ்சம் அம்மோனியம் க்ளோரைட் என்று சொல்லப்படும் நவச்சாரத்தைத் தண்ணீரில் கரைத்து அதில் போட்டுவைக்கவும். பறித்தவுடன், காம்பு கருகி வாடாமலிருக்கும் பொழுதே, போடவேண்டும். இல்லாவிட்டால் தண்ணீர் இழுத்துக்கொள்ள மாட்டாமல் புஷ்பங்கள் வாடிப்போகும். காம்புகளைத் தண்ணீருக்குள்ளேயே கிள்ளுதல் உத்தமம். அப்படிச் செய்தால் காற்றடிபட்டு காம்பு காய இடமிராது. காம்பின் வழியாய் தண்ணீர் இழுக்கும் சக்தியிருந்தால் தான் புஷ்பங்கள் கொஞ்சம் அதிகமான காலம் வாடாமலிருக்கும்.

### சற்களின் காந்தி.

சிவப்பு முதலிய கற்களின் காந்தியை யதிகப்படுத்த இரண்டு வழிகள் உண்டு. கற்களின் அடியில் வர்ணத்தகடுகள் கொடுத்தும், அடிப்புறத்தில், தக்கபடி வர்ணத்தைத் தடவியும், இரண்டு விதமாகச் செய்யலாம். செம்பு அல்லது தகரத்தகட்டை (சாதாரணமாய் செம்புத்தகடு) மெல்லியதாய் சுமார் நாலங்குலச் சதுரம் எடுத்து, தேய்க்கல்லினால் நன்றாய்த் தேய்த்து ப்ரகாசப்படுத்தினால், தகடு வர்ணத்தை ஏற்றுக்கொள்ளும். வர்ணங்களை, எண்ணெய், கஞ்சி, வார்னிஷ் அல்லது கோந்துநீருடன் கலந்துகொண்டு தகட்டில் தடவலாம். கனமாய்த் தடவினால் ஆழ்ந்த வர்ணமும், லேசாகத்தடவினால் குளிர்ந்த வர்ணமும் உண்டாகும்.

### வெற்றிலை போடுதல்.

வெற்றிலை போடுவதால், பல் கறுத்து விடுகிறது. பல்லை மூடிக்கொண்டிருக்கும் கடினமானதும் வழவழப்பானதுமான, எனாமெல் என்று சொல்லப்படும் கண்ணாடி போன்ற, வெள்ளைப்பொருள் அழிந்துபோய் விடுகிறது. ஆகவே வெற்றிலை போடுகிறவர்கள் இருபது அல்லது முப்பது வயதிலேயே பற்களில்லாமல் ஆகிவிடுகிறார்கள். நாக்கு மதத்துப்போய் ருசி பார்க்கும் தன்மையை இழந்து விடுகிறது. இரைப்பையிலும், குடலிலும் ஜீர்ண சக்திக்கு ஹேதுவான ரஸத்தை உண்டாக்குகிற அநேகம் சிறுபைகள் இருக்கின்றன. ஓயாமல் வெற்றிலையை மென்று வந்தால், மேற்கூறிய பைகள் நாசமாய்ப்போய், ஜீர்ணசக்தி குறைந்து, மலச்சிக்கல், அஜீர்ணம், தூக்கமின்மை, ஞாபகசக்தி குறைதல் முதலிய அநேக வ்யாதிகள் தொடரும்.


# ஜனாபிமானி.

| | | |
|---|---|---|
| தபால் சார்ஜ் உள்பட | THE | ஜி. ஏ. வைத்யராமன் |
| வர்ஷ சந்தா ரூபா | JANABHIMANI. | அண்டு கம்பெனி, |
| உள்நாடு 4. | | கொண்டி செட்டித்தெரு, |
| வெளிநாடு 6. | | மதராஸ். |

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்திஸ்ரீ ஆவணிமீ, AUG.—SEPT., 1918. { ஸஞ்சிகை 8. No. 8.


## INDIAN CONSTITUTIONAL REFORMS.

## இந்திய ராஜாங்க சீர்திருத்தங்கள்.

சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் இந்திய ராஜாங்கத்தைச் சீர்திருத்துவதற்காக மிஸ்டர் மாண்டேகுவும், லார்ட் செம்ஸ்போர்டும் செய்திருக்கும் ப்ரேரணைகளில் மாகாண கவர்ன்மெண்டுகளைப் பற்றிய பாகத்தை விவரித்தோம். இனி இந்தியா கவர்ன்மெண்ட் விஷயமாகச் செய்திருக்கும் ப்ரேரணைகளையும், இதர ப்ரேரணைகளையும் இங்கு விவரிக்கிறோம்.

### இந்தியா கவர்ன்மெண்ட்.

கவர்னர் ஜெனரலின் நிர்வாக ஸபையில் ஏற்கனவே ஒரு இந்திய மெம்பர் இருக்கிறார். இன்னொரு இந்தியரை மெம்பராக நியமிக்க வேண்டுமென்று ப்ரேரிக்கப்பட்டிருக்கிறது. மாகாண கவர்ன்மெண்ட் விஷயமாக ப்ரேரித்ததுபோலவே, இந்தியா கவர்ன்மெண்டிலும் பார்லிமெண்டரி 'அண்டர்-ஸெக்ரடரிகளை'ப் போன்ற உத்யோகஸ்தர்கள் இருக்க இடமேற்படும். இந்த உத்யோகஸ்தர்கள் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களிலிருந்து நியமிக்கப்படுகின்றனர்;

இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்ததாக இரண்டு சட்ட ஸபைகள் இருக்கும். ஒன்றுக்கு லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி என்று பெயர். இதில் 100 மெம்பர்கள் இருப்பார்கள். அந்தத் தொகையில் மூன்றில் இரண்டு பாகம் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள். மற்ற பாகம் கவர்னர் ஜெனரலால் நியமனம் செய்யப்பட வேண்டும். நியமனம் செய்யப்பட்ட மெம்பர்களில் மூன்றில் இரண்டு பாகத்தார் உத்யோகஸ்தர்களாக இருக்கவேண்டும். இந்த ஸபையின் ப்ரெஸிடெண்ட் கவர்னர் ஜெனரலால் நியமனம் செய்யப்படவேண்டும்.

இரண்டாவது சட்ட ஸபையின் பெயர் கௌன்ஸில் அப் ஸ்டேட் என்பது. இதில் கவர்னர் ஜெனரலைத்தவிர 50 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களுள் 21 பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள். 4 பேர்கள் உத்யோகஸ்தர்களல்லாத நியமனம் செய்யப்பட்ட மெம்பர்கள். 25 பேர்கள் உத்யோகஸ்தர்கள். இந்த கௌன்ஸில் 5-வர்ஷத்துக்கு ஒரு தடவை மாறும். இதற்கு கவர்

னர் ஜெனரலே ப்ரெஸிடெண்டாக இருப்பார். அதற்கு ஒரு வைஸ் ப்ரெஸிடெண்ட் நியமிக்க அவருக்கு அதிகாரம் இருக்கும். லெஜிஸ்லெடிவ் ஸபையின் உத்யோகஸ்தர் மெம்பர்கள் கௌன்ஸில் அப் ஸ்டேட் ஸபையில் மெம்பராக நியமனம் பெறலாம்.

இந்த இரண்டு ஸபைகளையும் கவர்னர் ஜெனரல் எப்போது வேண்டுமென்றாலும் கலைத்து விடலாம்.

### சட்ட நிர்மாணத்தின் முறை.

கவர்ன்மெண்டார் ஏதாவது சட்டம் செய்ய விரும்பினால் ஸாதாரணமாக அதன் மசோதாவை முதலில் அஸெம்ப்ளியில் கொண்டு வர வேண்டும். அங்கே ஒப்புக்கொள்ளப்பட்ட பிறகு கௌன்ஸில் அப் ஸ்டேட்டுக்குப் போகும். அங்கே மசோதாவின் அம்சங்களில் செய்யப்படும் திருத்தங்கள் அஸெம்ப்ளிக்கு ஸம்மதமாயிராவிட்டால், இரண்டு ஸபையையும் சேர்த்து நடத்தி, அதில் ஆலோசனை செய்து முடிவு செய்யப்படும். ஆனால் கௌன்ஸில் அப் ஸ்டேட்டில் செய்யப்பட்ட திருத்தங்கள் கவர்னர் ஜெனரலுக்கு ஸம்மதமாயிருந்து, அவர், தேசத்தின் ஸமாதானத்துக்கும், ஒழுங்குக்கும், ராஜாங்கம் நன்றாய் நடப்பதற்கும் அந்தத் திருத்தங்கள் அவச்யமென்று ஸெர்ட்டிபை செய்தால், கௌன்ஸில் அப் ஸ்டேட்டில் செய்யப்பட்ட சீர்திருத்தங்களை அனுஸரித்து மசோதா சட்டமாகிவிடும்.

ஆனால் கவர்ன்மெண்டார் கொண்டுவர எண்ணும் ஒரு மசோதாவை, அஸெம்ப்ளி கொண்டு வராமல் தடுத்துவிட்டாலும், அல்லது கொண்டுவந்தபின் தள்ளிவிட்டாலும், கவர்ன்மெண்டுக்கு அந்த மசோதா அவச்யமென்று பட்டு அவ்விதம் ஸெர்ட்டிபை செய்து விட்டால், பிறகு கவர்ன்மெண்டார் அந்த மசோதாவை கௌன்ஸில் அப் ஸ்டேட்டுக்கு அனுப்பி அதன் அபிப்ராயப்படி சட்டமாக்கி விடலாம். மறுபடி அஸெம்ப்ளிக்கு வரவேண்டியதில்லை.

கவர்ன்மெண்டார் அவஸரமாக சட்டம் செய்யவேண்டியிருந்தால், அப்போது அவஸரமான சட்டமென்று ஸர்ட்டிபை செய்துவிட்டு, கௌன்ஸில் அப் ஸ்டேட்டுக்கு அனுப்பி சட்டமாக்கிக் கொள்ளலாம். சட்டமான விஷயத்தை அஸெம்ப்ளிக்குத் தெரிவித்தால் போதும். இவை கவர்ன்மெண்ட் மசோதாக்களைப் பற்றிய ப்ரேரணைகள்.

மெம்பர்கள் கொண்டுவரும் மசோதாக்களைப்பற்றிய ப்ரேரணைகள் வருமாறு.

மசோதா கொண்டுவரும் மெம்பர் எந்த ஸபையைச் சேர்ந்தவரோ, அந்த ஸபையில் மசோதாவைக் கொண்டுவந்து அதில் அங்கீகாரமானதும், மற்ற ஸபையில் ஆலோசிக்கப்படும். இரண்டு ஸபைகளின் அபிப்ராயமும் வித்யாஸப்பட்டால், இரண்டு ஸபையும் சேர்ந்த மீட்டிங்கில் ஆலோசிக்கப்பட்டு முடிவாகும். ஆனால் அஸெம்ப்ளியில் தீர்மானிக்கப்பட்ட ஒரு மசோதா நல்ல அரசாட்சிக்கு பாதகமானதென்று சொல்லி அதை கவர்ன்மெண்டார் ஆக்ஷேபித்தால், அந்த விதமாக அதை ஸெர்ட்டிபைசெய்து, கௌன்ஸில் அப் ஸ்டேட்டுக்கு அனுப்பலாம். கௌன்ஸிலில் செய்த திருத்தங்களை அனுஸரித்து அது சட்டமாகச் செய்யப்படும்.

சட்ட ஸபையில் செய்யப்படும் தீர்மானங்கள் கவர்ன்மெண்டைக் கட்டுப்படுத்த மாட்டா. எந்த சட்டத்தையும் கவர்னர் ஜெனரலும், அரசரும் அங்கீகரிக்கவோ மறுக்கவோ அதிகாரமுண்டு. கவர்னர் ஜெனரலுக்கு இப்போது போலவே, ஆர்டினென்ஸ், ரெகுலேஷன்கள் என்னும் அவஸரச் சட்டங்கள் செய்ய அதிகாரம் இருக்கும்.

"எந்த வகை சட்ட ஸபையிலுமுள்ள உத்யோக மெம்பர்கள், கவர்ன்மெண்ட் கூடா



தென்று சொன்னாலொழிய, தங்கள் ஸொந்த அபிப்ராயத்தின்படி பேசவும் வோட் கொடுக்கவும் கூடும். கேள்வி கேட்கும் மெம்பர்களுக்கு பதில் சொல்லும்போது இதர மெம்பர்களும் அதிகப்படி கேள்விகள் கேட்கலாம். கவர்ன்மெண்டின் பற்பல டிபார்ட்மெண்டுகளை ஒட்டி ஜாயிண்ட் ஸ்டாண்டிங் கமிட்டிகள் ஏற்படுத்தப்படும். இவைகளில் இருவகை சட்ட ஸபைகளிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் மூன்றில் இரண்டு பாகமும், கவர்ன்மெண்டால் நியமிக்கப்பட்ட மெம்பர்கள் மூன்றில் ஒரு பாகமும் இருக்கவேண்டும்.

எந்தெந்த டிபார்ட்மெண்டுகளுக்கு ஸ்டாண்டிங் கமிட்டிகள் இருக்கவேண்டுமென்பதை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னரும், எந்தெந்த விஷயங்களை கமிட்டியின் ஆலோசனைக்கு விடலாமென்பதை டிபார்ட்மெண்டின் தலைவரும் நிச்சயிப்பார்கள்.

மேற்கூறிய ப்ரேரணைகளில் பின்வரும் மாறுபாடுகள் செய்வது அவச்யம். (1) சட்ட ஸபைகளில் மசோதாக்கள் கொண்டுவரும்போது கவர்னர் ஸெர்ட்டிபை செய்வதைப் பற்றி மேலே சொன்னோம். தேசத்தின் ஸமாதானத்துக்கும் ஒழுங்குக்கும் அவச்யமான சட்டங்களைச் செய்யவேண்டிய போதும், அவைகளை பாதிக்கும் சட்டங்களைத் தடுக்கவேண்டியபோதுந்தான் கவர்னர் ஜெனரல் ஸெர்ட்டிபை செய்யவேண்டும். (2) ஏற்றுமதி, இறக்குமதி வரி விதித்தல், இந்தியா கவர்ன்மெண்டின் சட்ட ஸபையைச் சேர்ந்ததாக இருக்கவேண்டும். (3) ராணுவம், கப்பல்படை ஆகி இவைகளின் செலவும், ஏற்கனவேயுள்ள உத்யோகஸ்தர்களின் சம்பளம் முதலிய உரிமைகளை பாதிக்கும் விஷயங்களையும் தவிர இதர செலவுகளையெல்லாம் சட்ட ஸபைகளின் அபிப்ராயத்தின்படி செய்யவேண்டியது.

(4) இந்தியா கவர்ன்மெண்டில் இந்திய மெம்பர்களின் தொகையை இன்னும் அதிகமாக்க வேண்டும்.

### இதர விஷயங்கள்.

இன்னும் சில திருத்த ப்ரேரணைகள் வருமாறு. (1) இந்தியா மந்த்ரியின் சம்பளம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டின் வரும்படியிலிருந்து கொடுக்கப்படும். (2) இந்திய விஷயங்களை கவனிக்க பார்லிமெண்டில் (காமன்ஸ் ஸபையில்) ஒரு ஸெலக்ட் கமிட்டி நியமிக்கப்படும். (3) இந்தியா மந்த்ரி ஆபீஸின் நிலைமையைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்படும். (4) இந்தியாவில் ஒரு ப்ரிவி கௌன்ஸில் ஏற்படுத்தப்படும். (5) திருத்த ப்ரேரணைகளின்படி புது கௌன்ஸில்கள் ஏற்பட்ட 5-வது வர்ஷத்தில் மாகாண கவர்ன்மெண்டின் சீர்திருத்தத்தைப்பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசிப்பார்கள். ரிஸர்வ்ட் அம்சங்களையும் மாற்றப்பட்ட அம்சங்களையும் குறைக்கவோ அதிகமாக்கவோ இந்தியா கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் இப்படி மாற்றுவதற்கு இந்தியா மந்த்ரியின் அனுமதி வேண்டும். பத்து வர்ஷத்துக்குப்பிறகு மாகாண கவர்ன்மெண்டுகள், இந்தியா கவர்ன்மெண்ட் ஆகிய இவைகளின் அமைப்பைப்பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிஷன் ஏற்படுத்தப்படும்.

431. பக்தமாலா வசனம் ... 3 8

இது வடதேசத்து பக்த ச்ரேஷ்டர்களுடைய ஜீவ்ய சரித்ரங்களாகும். சில தென்னாட்டு பக்தர்களின் ஜீவ்ய சரித்ரங்களும் இதில் அடங்கியிருக்கின்றன. ஹைதராபாத் வே. பாலக்ருஷ்ண முதலியாரால் இயற்றப்பட்டது.

834. பக்தவிஜயம் ... 3 0

கோபில் தால தேவராஜ ஸ்வாமிகள் எழுதியது. வடதேசத்து பக்த ச்ரேஷ்டர்களின் சரித்ரங்கள்.

ஜீ. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்,

# HEAT AND ITS EFFECTS.

By S. G. SUBRAMANYAM, M. A., L. T.

(All Rights Reserved.)

## உஷ்ணமும் அதன் பயனும்.

க்ராமாந்தரங்களில் இருப்போர் நெய்யை சேராலோ அல்லது படியாலோ அளந்து வாங்குவது வழக்கம். நெய் வ்யாபாரிகள் விழுது நெய்யாக அளக்கமாட்டார்கள். நெய்யை நெருப்பில் உருக வைத்து கொஞ்சம் ஜாஸ்தி சூடேறின பிறகு தான் அளந்து கொடுப்பதற்கு ஸம்மதிப்பார்கள். ஆனால் வாங்குகிறவர்களோ நெய் ஆறட்டும், ஆறட்டும் என்று தாமஸிப்பார்கள். அவ்வளவு தாமஸமானால் நெய் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டு சில ஸமயங்களில் நெய்க்காரர்கள் போய் விடுவது வழக்கம். ஏன்? சூடு ஏற ஏற நெய்யின் அளவு ஜாஸ்தியாகி வரும், சூடு குறையக்குறைய அளவு கம்மியாகுமல்லவா? ஆம்.

பட்டணங்களில் நெய் அநேகமாய் நிறுத்தே வாங்குவார்கள். வாங்குகிறவர்கள் நெய் விழுதாயிருந்தால் ஜாஸ்தி காணும், உருகியிருந்தால் கம்மியாகும் என்று நினைப்பதில்லை. நெய் நன்றாயிருக்கிறதா என்று பார்ப்பார்களே யன்றி, அது விழுதாயிருந்தாலும் உருகியிருந்தாலும் கவனிப்பதில்லை. ஏனென்றால் ஒரு வீசை விழுது நெய்யை உருக வைத்து, பாத்ரத்திலுள்ள கரியை துடைத்துவிட்டு பிற்பாடு நிறுத்துப் பார்த்தால், அதன் எடையும் ஒரு வீசை தானிருக்கும். விழுது நெய் சூடு படுவதனால் உருகுகிறது. உருகின நெய் சூடு தணிந்தால் விழுது ஆகிறது.

உஷ்ணத்தால் பதார்த்தங்கள் விரிவடைகின்றனவே யல்லாமல், எடையில் மாறுபடுவதில்லை. ஆதலால் உஷ்ணம் என்பது ஒரு பதார்த்தம் அல்ல. அதை ஒருவித சக்தி என்றே சொல்லவேண்டும்.

வெண்ணெய், விழுது நெய், பனிக்கட்டி, வெல்லம் ஆகிய இவைகள் கெட்டி பதார்த்தங்கள். சூடு ஏற ஏற இவை முதல் முதலில் த்ரவப்பொருள்கள் ஆகின்றன. பிற்பாடு த்ரவப் பொருளின் பரிமாணம் வரவர ஜாஸ்தியாவதை நாம் பார்க்கலாம். த்ரவப் பொருள்களை நன்றாகக் காய்ச்சினால் கடைசியில் வாயுப் பொருள்களாகிவிடும். ஆகையால் உஷ்ணத்தினுடைய குணங்களில் இப்போது நமக்கு இரண்டு தெரிகின்றன. முதலாவது பதார்த்தங்களின் நிலைமை மாறும். இரண்டாவது அவைகளின் பரிமாணம் ஜாஸ்தியாகும். வீட்டில் வெந்நீர் அண்டாக்களும், வேறு அடுப்பிலிட்டு உபயோகப் படுத்தப்படும் பாத்ரங்களும், தினம் தினம் நெருப்பு படும்போது விரிவடைந்து ஆறினதும் பழைய பரிமாணத்தை யடைகின்றனவோ என்று கேட்கலாம். ஆம். அப்படியானால் வெந்நீர் அண்டாவில் விளும்பு வரையில் ஜலமிருந்தால் சூடு ஏற ஏற பாத்ரம் விரிவதால் நீர் உள்ளடங்கவேண்டியிருக்க, வெளியில் வழிகிறதே யென்று ஆக்ஷேபம் சொல்லலாம். வாஸ்தவந்தான். முதலில் சூடு பாத்ரத்தில் தாக்கி பாத்ரத்தை கொஞ்சம் விரிவாக்குகிறது. அப்புறம் பாத்திரத்திலுள்ள சூடு ஜலத்தில் தாக்கி ஜலத்தின் பரிமாணத்தை அதிகமாக்குகிறது. ஆனால் ஜலமும் ஜலம்போன்ற த்ரவப்பொருள்களும், பாத்ரம் போன்ற கெட்டிப் பொருள்களைக் காட்டிலும் ஸுமார் 20 அல்லது 25 மடங்கு பரிமாணம் அதிகமாக உஷ்ணத்தினால் விரிவடையும். அதனால் உஷ்ணத்தினால் த்ரவப் பொருள் விரிவடைவது மாத்ரம் நமக்கு ஸஹஜமாய் தெரிகிறது. இவைகளைக் காட்டிலும் வாயுவோ, உஷ்ணத்தினால் ரொம்பவும் ஜாஸ்தியாக விரிவடைகிறது.

ஒரு கொக்கியுள்ள ஒரு இரும்பு குண்டை ஒரு சங்கிலியில் கோத்து, வைத்துக் கொள்வோம். அந்த குண்டு ஸரியானபடி நுழைவதற்கு மாத்ரம் போதுமான சுற்றளவுள்ள ஒரு வளையஞ்செய்து, அதற்கு ஒரு பிடி போட்டு ஒரு ஸ்தம்பத்தில் கட்டி விடுவோம். பிற்பாடு சங்கிலியின் நுனியைப் பிடித்துக் கொண்டு, குண்டை கரி ஏறாத விளக்கில் (ஸ்பிரிட் விளக்கில்) நன்றாகக் காய்ச்சி வளையத்தில் நுழைக்கப்பார்த்தால், குண்டு வளையத்தில் செல்லாது. சூடு ஆறின பிறகு தான் செல்லும். காரணம் என்ன? சூட்டினால் குண்டு பெரியதாகிறதால், வளையத்துக்குள் செல்லமுடிகிறதில்லை. (1-ம் படத்தைப் பார்க்க.)



படம் 1.

சூடு விரிக்குந் தன்மையுடையது, குளிர்ச்சி சுருக்கும் தன்மையுடையது என்ற உண்மையை அநேகம் தொழில் வகைகளில் கையாளுகிறார்கள். வண்டிச் சக்கரங்களுக்கு கட்டு (பட்டா) போடும்போது, இரும்புக் கட்டை வேண்டுமென்றே சுற்றளவில் கொஞ்சம் சிறிதாகச் செய்வது வழக்கம். அப்படி செய்த கட்டை நன்றாகக் காய்ச்சி, சூடு ஆறுவதற்கு முன் சக்கரங்களுக்குப் போடுவதை நாம் பார்க்கிறோம். இதன் காரணம் என்ன? கட்டு ஆறினதும் சுருங்கி மரச்சக்கரத்தில் கெட்டியாக பிடித்துக்கொள்ளும். சில ஸமயங்களில் ஜட்கா வண்டிக்காரர்கள் கடும் வெயிலில் சக்கரங்களுக்கு சுருங்குவதற்காக கொஞ்சம் ஜலம் ஊற்றுவது வழக்கம்.

மேலும், வண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது கட்டு கழன்று ஒருபுறம் ஓட, வண்டி ஒருபுறம் ஓட அபாயங்கள் ஏற்படுவதுமுண்டு. இதற்கு காரணமென்ன? வண்டிகள் வெயிலில் ஓடும்போது உஷ்ணத்தினால் உலோக பாகங்கள் விரிவடைகின்றன. மரப்பாகங்கள் அப்படியில்லை. ஆகையால் கட்டு தளர்ந்துவிடும். ஜலம் ஊற்றுவதால் இரும்பு சுருங்கி மரத்தைக் கவ்விப் பிடித்துக்கொள்ளும். இன்னும் ரயில் தண்டவாளங்கள் போடும்போது, அவைகளை ஒன்றோடொன்று நெருங்கச் சேர்த்து வைக்காமல் கொஞ்சம் இடைவெளிவைத்தே போடுகிறார்கள். ஏனென்றால் கோடை காலங்களில் உஷ்ணத்தினால் அவைகள் நீண்டு ஒன்றோடொன்று மோதிக்கொண்டு வளையாமல் இருப்பதற்குத்தான்.

மழை காலங்களில் வீட்டுக் கதவுகளையும் ஜன்னல் கதவுகளையும் மூடித்திறப்பது சில ஸமயங்களில் கஷ்டமாயிருப்பதை பலர் கவனித்திருக்கலாம். மேலும் கோடை நாள்களில் காணப்படும் கதவுப்பலகைகளின் இடுக்குகள் மழை நாளில் காணப்படுவதில்லை. இதற்குக்காரணமென்ன? உலகத்திலுள்ள பதார்த்தங்களில் அநேகமாய் எல்லாம் சூட்டினால் விரிவடைகிறதென்றே சொல்லலாம். இருந்தாலும் இரண்டொரு வஸ்துக்கள் இந்த விதிக்கு மாறுபாடாகக் காணப்படுகின்றன. அவைகளில் முக்யமானது மரமாகும். மரம் குளிரால் விரிந்து, உஷ்ணத்தால் ஒடுங்கும். மரத்தின் அணுக்கள் மழைகாலத்தில் அவைகளை சுற்றியிருக்கும் ஆகாயத்திலுள்ள ஜல அணுக்களை உறிஞ்சிக்கொள்ளுவதால் மரம் பருமனாகும். இதனால் தான் கோடைகாலத்தில் மர

வேலைகளில் காணும் இடுக்குகள் மழை காலத்தில் காணப்படுவதில்லை. மழை காலத்தில் கதவுகள் சற்றுப் பருமனுவதால், அவைகளைச் சாத்துவதும் கடினமாக இருக்கிறது. மரத்தைப் போலவே பிஸ்மத் என்ற உலோகமும், வார்ப்பு இரும்பும் குளிர்ச்சியால் சற்று பெரியன வாகின்றன.

### த்ரவ பதார்த்தங்கள் உஷ்ணத்தால் விசாலித்தல்.

ஒரு கண்ணுடிக் குப்பியை எடுத்து அதை ஒரு பிகுவான கார்க்கால் மூடுவோம். பிறகு கார்க்கை வெளியிலெடுத்து அதன் நடுவில் ஒரு த்வாரஞ்செய்து அதன் வழியாய் ஸுமார் ஒருஅடி நீளமுள்ள ஒரு சிறுகண்ணுடிக் குழாயை செலுத்துவோம். கார்க்கானது குழாயை இறுகப் பிடிக்கவேண்டும். பிற்பாடு குப்பி நிறைய வர்ணங் கலந்த ஜலத்தை ஊற்றி அந்தக் கார்க்கால் மூடினுல் கொஞ்சம் கொஞ்சம் ஜலம் வழியும். பிறகு குழாயின் மேல்புறத்தின் வழியாய் கொஞ்சம் ஜலம் விட்டால் கார்க்குக்குமேல் குழாயில் ஜலம் தங்கி நிற்கும்.



படம் 2.

இப்படி தயார்செய்த குப்பியை கொதிக்கிற ஜலத்தில் கழுத்துவரையில் அழுத்தினுல், குழாயிலுள்ள ஜலம் ஒரு க்ஷணிகம் கொஞ்சம் கீழிறங்கும். பிற்பாடு உடனே மேலே எழ ஆரம்பிக்கும். ஏனென்றுல் குப்பி முதல் முதலில் சூடடைந்து விசாலிக்கிறது. இதனுல் ஜலம் கொஞ்சம் கீழிறங்குகிறது. பிறகு உள்ளடங்கிய ஜலம் சூடடைந்து விரியவே மேலே உயர்ந்து விடுகிறது. ஆகவே ஏககாலத்தில் கனபதார்த்தங்களையும் த்ரவபதார்த்தங்களையும் உஷ்ணப்படுத்தினுல் த்ரவபதார்த்தங்கள் ஜாஸ்தி விரிவடைகின்றன. (2 - ம் படத்தைப் பார்க்க)

### வாயு பதார்த்தங்கள் உஷ்ணத்தால் விசாலித்தல்.

நீண்டு பக்கவாட்டில் வளைந்த ஒருகண்ணுடி பாத்ரத்தை (இதற்கு ரிடார்ட் என்று பெயர்.) எடுத்து, அதனுடைய வாயின் நுனியை ஒரு ஜலபாத்ரத்தில் ஜலத்திற் குள்ளடங்கி யிருக்கும்படி செய்வோம். ரிடார்டை 3-ம் படத்தில்



படம் 3.

காட்டியபடி நிற்கச்செய்து அதன் அடி பாகத்தை கொஞ்சம் சூடாக்கினுல் நீர்க் குமிழிகள் கிளம்பும். கண்ணுடிப் பாத்ரத்திலுள்ள வாயு உஷ்ணத்தால் விசாலித்து கொஞ்சம் வெளியே வருகிறது. சூடு ஜாஸ்தி படவே ஜாஸ்தி



விசாலிக்கிறது. குளிர வைத்ததும், ஜலம் ரிடார்ட்டின் கழுத்துக்குள் செல்லும். ரிடார்ட்டிற் குள்ளிருந்த வாயுவில் ஒருபாகம் சூட்டினுல் ஜலத்தின் வழியாக கொப்பளித்து வெளியே போய்விட்டது. சூடு இருந்தவரையில் வாயு விசாலமடைந்து ரிடார்ட் முழுவதும் நிறைந்திருந்தது. சூடு தணிந்ததும், வாயு ஒடுங்கிவிட்டதால், ரிட்டார்ட்டில் ஒரு பாகம் காலியாகி விடுகிறது. இந்தக் காலியான பாகத்தை நிரப்பத்தான் ஜலம் ரிட்டார்ட்டில் ஏறுகிறது.

எஸ். கணபதி ஸுப்ரமண்ய ஐயர்.

## SOME CURIOUS ROOTS.
## சில விநோத வேர்கள்.

எல்லா வேர்களும் பூமிக்குள்ளேயே இருப்பதில்லை. ஆல், தாழை, சோளம் ஆகிய இவைகளில், பூமிக்குள் வேர் இருப்பதோடு தண்டுகளிலும் வேர்கள் உண்டாகி சிலகாலம் பூமிக்கு வெளியிலேயே இருக்கின்றன. அவைகள் வளர்ந்து நீண்ட பிறகு பூமிக்குள் புகுந்து, பிறகு மற்ற வேர்களைப்போலவே பூமியில் நாலா பக்கங்களிலும் செல்லுகின்றன.

ஆலங் கன்றுகளின் வேர்களுக்கு ஒரு விசேஷ குணம் உண்டு. பூமியில் முளைக்காமல் பனைபோன்ற வேறு மரங்களில் முளைத்தால், அதன் வேர்கள், அந்த மரங்களில் பட்டுப் போயிருக்கும் பாகங்களிலிருந்தும் ஆகாயத்திலிருந்தும் உணவை க்ரகித்துக்கொண்டு வளர்ந்து, காலக்ரமத்தில் வேர்களை பூமிக்கு அனுப்பி, மற்ற மரங்களைப்போல் வளரும். இப்படி வளரும் ஆலங்கன்றுகள் புல்லுருவிகளாகமாட்டா. புல்லுருவிகள் அவைகள் ஒட்டிக்கொண்டிருக்கும் மரங்களின் ஸாரத்தை க்ரகித்துக்கொண்டு வளரும். ஆலங் கன்றுகளோ அவை ஒட்டிக்கொண்டிருக்கும் மரங்களின் பட்டுப்போன பாகங்களிலிருந்து உணவை க்ரகித்துக்கொள்ளும்.

சில கொடிகள் தாம் சுற்றிப் படரும் மரங்களைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொள்வதற்காக, கொடிகளின் கணுக்களில் வேர்கள் விடுவதுண்டு. உதாரணமாக வெற்றிலைக் கொடியில் இவ்வித வேர்கள் உண்டாவதைப் பார்க்கலாம்.

சில செடிகளின் வேர்கள் பூமிக்குள் போவதேயில்லை. வேறு மரங்களில் தொத்திக்கொண்டிருக்கும். ஆனுல் அந்த மரங்களிலிருந்து ஆகாரம் பெறுவதுமில்லை. ஆகாயத்தில் இருக்கும் நீராவியையும் உப்புக்களையும் க்ரகித்துக்கொண்டு வளருகின்றன. இவைகளின் வேர்கள் காற்றிலிருந்து உணவை க்ரகித்துக்கொள்ளுவதற் கேற்ப அமைந்திருக்கும்.

லெகுமினஸீயி என்னும் வகையைச் சேர்ந்த கோதுப் பயிர்களின் வேர்களுக்கு ஆகாயத்திலிருந்து நைட்ரோஜினை க்ரகிக்கும் சக்தி உண்டு. இப்படி க்ரகிப்பதற்காக வேர்களில் சில முடிச்சுகள் உண்டாகும். இந்த முடிச்சுகளே இவ் வேலையைச் செய்கின்றன.

வேர்கள் காற்றில்லாவிட்டால் நன்றுய் வேலை செய்யா. அதற்காக பூமியில் கொஞ்சம் காற்று இருக்கவேண்டியது அவசியம். ஆனுல் கடலோரத்திலுள்ள சதுப்பான நிலங்களில் வளரும் சில மரங்களில் வேர்களுக்குக் காற்றுக்கிடைப்பது கஷ்டமாகும். இதற்காக அம்மரங்களின் வேர்களிலிருந்து நீண்ட கொம்புகள் போன்ற வேர்கள் பூமிக்குள்

லிருந்து வளர்ந்து வெளியில் தெரியும். இந்தக் கொம்புகள் த்வாரமுடையவை, த்வாரங்களின் வழியாகக் காற்று உள்ளேபோய், பூமியிலுள்ள வேர்களுக்குப்போய்ச் சேருகிறது. இந்த த்வாரமுள்ள கொம்புகள் ச்வாஸ வேர்கள் என்னப்படும்.

ஏனென்றால், பூமிக்குள்ளிருக்கும், வேர்கள் காற்றை இழுத்துக்கொள்ள இவைகள் ஸாதனங்களாக இருக்கின்றன. அவிஸென்னியா என்னும் மரத்தில் இப்படிப்பட்ட வேர்கள் உண்டாவது ஸகஜம்.

சில மரங்களில் புல்லுருவி வளருவதுண்டு. புல்லுருவியின் வேர்கள் பூமிக்குள் போவதில்லை, வெளியில் தெரியா. அது ஒட்டிக்கொண்டிருக்கும் கிளையைத் துளைத்து, உள்ளேபோய் மரப்பாகத்தோடுசேர்ந்து, அதற்கு வேண்டிய ஆகாரத்தை க்ரகித்துக்கொள்ளும். வேறு சில புல்லுருவிகள் அவைகளின் வேர்களை வேறு மரஞ்செடிகளின் கிளைகளில் செலுத்தாமல், அவைகளின் வேர்களில் ஒட்டிக்கொண்டு வளருகின்றன. பல்லிப்பூண்டு என்னும் செடியும், சந்தனமரமும் இவ்விதம் இதர மரஞ்செடிகளின் வேர்களில் பற்றிக்கொண்டு வளருகின்றன.

### செடியின் தண்டுகளும் செடியுணவும்.

செடிகளின் தண்டுகள் மூன்றுவித வேலைகளைச் செய்கின்றன. முதலாவது இலைகளைத் தாங்கி, அவைகளுக்குப் போதுமான அளவு வெளிச்சமும் காற்றும் கிடைக்கும்படி அந்த இலைகளைப் பரவலாய் வைத்துக்கொள்வது. இரண்டாவது, இலைகளுக்கு வேண்டிய ஜலத்தையும் பூமியிலிருந்து கிடைக்கும் உணவுப் பொருள்களையும் கொடுப்பது. மூன்றாவது, இலைகள் தயார் செய்த உணவை க்ரகித்து செடியின் இதர பாகங்களுக்கு அனுப்புவது.

ஒரு சிறு செடியின் தண்டைக் குறுக்காக வெட்டிப்பார்த்தால் அதில் மூன்று பாகங்கள் இருப்பது தெரியும். மேலே பட்டை இருக்கிறது. இதை ஸுலபமாக உரித்துவிடலாம். இரண்டாவது, அதை ஒட்டினாற்போல் கெட்டியாக இருக்கும் மரப்பாகம். அதற்கு மத்தியில் வெண்மையாயும் நெட்டிபோல் ம்ருதுவாயும் இருப்பது சோற்றி என்னும் மூன்றாவது பாகம். இந்த மூன்று பாகங்களுள் கெட்டியான மரப்பாகத்தின் வழியாகத்தான் வேரிலிருந்து வரும் ஜலம் இலைகளுக்குப் போகிறது. தண்டு அல்லது கிளையின் பட்டையை உரித்துவிட்டாலும் இலைகளுக்கு வேண்டிய ஜலம் மரப்பாகத்தின் வழியாகப் போவதால், இலைகள் வாடுவதில்லை. தண்டு அல்லது கிளையின் பட்டைகள் இலை தயார் செய்த உணவை செடியின் மற்ற பாகங்களுக்குக் கொண்டுபோவதில் ப்ரயோஜனப்படுகின்றன. இந்தப் பட்டையின் காய்ந்துபோன மேற்புறத்தின் வழியாக செடியுணவு போவதில்லை. அதற்கு அடியில் ம்ருதுவாயிருக்கும் பாகத்தின் மூலமாகத்தான் இலை தயார் செய்யும் உணவு போகிறது.

ஒரு கிளையில் இலை தயார் செய்யும் உணவு பட்டையின் மூலமாக செடியின் மற்ற பாகங்களுக்குப் போகாதபடி, இலைகளுக்கு அடியில் கயிற்றால் பலமாக கிளையைக் கட்டிவிட்டால், அந்தக் கிளையின் இலைகள் தயார் செய்யும் உணவு அந்தக் கிளையிலேயே தங்கிவிடும். அதனால் அந்தக் கிளை ரொம்ப செழிப்பாக வளரும். சில தோட்டக்காரர்கள் காய்த்திருக்கும் கிளைகளை, இலைகளுக்கு அடியில் பலமாகக் கயிற்றால் கட்டிவிடுவதுண்டு. அப்போது அந்தக் கிளையில் வளர்ச்சி அதிகமாகி, காய்கள் பருமனாகவும் நேர்த்தியாகவும் காய்க்கும்.



# AVARAI PLANT.

BY PANDIT V. SUBRAMANIA AIYAR.

## ஆவாரைச் செடி.

ஆவாரைச் செடிகள் ஸாதாரண ஆவாரை, சூரத்து ஆவாரை, நில ஆவாரை என மூன்று வகைப்படும். இவை மூன்றும் வைத்ய சாஸ்த்ரத்தில் இவைகளின் குணத்திற்காக மிகவும் கொண்டாடப் படுகின்றன.

### நில ஆவாரை.

நில ஆவாரை பூமியில் குத்துக் குத்தாய் வளரும் ஒரு செடி. அது ஒரு அடி உயரத்திற்கு மேல் வளராது. இன்னும் இந்தச் செடி பூமியில் படர்ந்தாற்போல் வளரும் குணமுடையது. நில ஆவாரையின் இலை ஸாதாரண ஆவாரையின் இலையைக் காட்டிலும் சிறிதளவு பெரிதாயிருக்கும். இன்னும் அந்த இலையைக் காட்டிலும் நில ஆவாரை இலை தடித்துமிருக்கும். இந்தச் செடிகள் கொள்ளிடத்திற்கு வடக்கே ஸுமார் பத்து மைல் தூரத்திலுள்ள உடையார் பாளையம் தாலுகாவிலும் க்ருஷ்ணவரம் முதலிய இடங்களிலும், குடிக்காடு, பாளையங்கோட்டை, ஸ்ரீ முஷ்ணம் முதலிய இடங்களிலும் காட்டுத்தனமாய் எங்கு பார்த்தாலும் முளைத்துக் கிடக்கும். இதன் இலைகளைத் தைமாஸ காலங்களில் பறித்துக் காயப்போட்டுக் கடைக்காரர்கள் வைத்யச் சரக்குகளில் சேர்த்து விற்பனை செய்வார்கள். இது மூலிகைகளில் சிறந்ததாக வைத்ய நூல்களில் கூறப்பட்டிருக்கிறது.

### சூரத்து ஆவாரை.

சூரத்து ஆவாரை தினுஸு ஸூரத்தில் முதன்முதலில் உண்டாகி இந்த ப்ரதேசங்களுக்குக் கொண்டுவரப்பட்டது. அதனாலேயே இம்மூலிகை சூரத்து ஆவாரை என்னும்பெயர் பெற்றது. இதன் இலை ஸாதாரண ஆவாரை இலையைக் காட்டிலும் நீளமாயிருக்கும். இந்த இலையும் இப்போது தென்னிந்தியாவிலுள்ள சில ப்ரதேசங்களில் ஏராளமாக உண்டாகி, சேகரிக்கப்பட்டு வ்யாபாரப் பொருளாக்கப்பட்டு ஊருக்கு ஊர் கொண்டுபோய் வ்யாபாரம் செய்யப்படுகிறது. இதுவும் விசேஷ மருந்துச் சரக்காகும். விரேசன மருந்தாகப் பெரிதும் இது உபயோகிக்கப்படுகிறது. இந்த இலையைப் பாத்ரத்திலிட்டு ஜலத்தைச் சேர்த்துக் காய்ச்சிக் கஷாயத்தை உட்கொள்ள அருவருப்பான கசப்பாயிருந்தாலும், உட்கொண்ட மாத்ரத்தினால், ஸுகபேதியுண்டாகி தேகத்திலுள்ள பித்தம் வாயுமுதலியவைகளைப் போக்கி ஸுகம் கொடுக்கும். இதன் அபூர்வமான குணத்தைக்கண்டே மேனாட்டு வைத்ய சாலையார், இவ்விலையைச் சேகரித்துச் சுத்தமாக்கி வெண்மையான தூளாக்கி விரேசன மருந்தாகக் கொடுத்து வருகிறார்கள். இந்த இலைக்கு இங்க்லீஷ் பெயர் (Senna Leaves) ஸென்னா லீவ்ஸ் என்று பெயர்.

### ஸாதாரண ஆவாரை.

ஸாதாரண ஆவாரை, பூலாச் செடியின் இலைபோன்ற மாதிரியில் சற்றுப் பெரிதாயிருக்கும். மணல் கலந்த களிமண் பூமியில் இந்தச்செடி விசேஷமாய் தளிர்த்துக் கொழுத்துப் பயிராகும். சுத்தக்களி மண்ணில் இந்த ஆவாரம் செடி நன்றாகக்கொழுத்து வளருவதில்லை. ஆகவே தான் இது கொள்ளிடத்தின் இரு கரைகளிலும் களிமண்ணும் மணலும் கலந்த சாரிகளில் ஏராளமாய் உண்டாகியிருக்கிறது. இதற்கு விதைகள் விதைத்துப் பயிரிடுவாரே கிடையாது. உலகத்துள்ள பல செடிகள்போல், இவை காய்த்துப் பழுக்கும் காலங்

களில் தாமாகவே கொட்டுண்ட விதைகள் மறுபடியும் வண்டலின் மகிமையினால் முளைத்துத் தளிர்த்துக் கப்பும் கிளையுமாய் ஸுமார் ஆறடி உயரம் வரையில் நான்கு விரல் பருமனுள்ளதாய்க் கண்ட கண்ட யிடங்களில் காட்டுத்தனமாய் வளருகின்றன. பூலா இலையைக் காட்டிலும், ஆவாரையின் இலை அழுத்தமாயுள்ளது. ஆவாரைச் செடிகள் தை மாசி மாஸ காலங்களில் பூக்க ஆரம்பித்து, அழகான மஞ்சள் நிறமான பூக்களைக்கொண்டு ரமணீயமாய் விளங்குகின்றன. பங்குனி, சித்திரை மாஸங்களில் காய்க்க ஆரம்பிக்கின்றன. இதன் காய்கள் சீயக்காய்போல விருக்கையில் சிறிது மெல்லியதா யிருக்கின்றன. வைகாசி, ஆனி மாஸங்களில் காய்கள் முற்றிப் பழுத்துக் காய்ந்து ஆங்காங்கு கொட்டுண்டு பின்பு செடிகள் முளைக்க ஹேதுவாகின்றன.

### புஷ்பத்தின் உபயோகம்.

இதன் புஷ்பத்தைப் பறித்து ப்ரயோஜனப்படுத்த விரும்புகிறவர்கள் தைமாஸங்களிலிருந்து இவற்றைச் சேகரித்துக் கொள்ள ஆரம்பிக்கவேண்டும். இப்படிப் பறித்தவர்கள் இவற்றை வெயிலில் காயப்போட்டு காற்று உள்புகாத கல்மூடிபோட்ட கண்ணாடிக் குப்பிகளிலோ அல்லது தகர டப்பிகளிலோ சேர்த்து வைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த புஷ்பத்தை டப்பிகளிலோ பிறவற்றிலோ அடைத்துக் கொள்ளுவதற்கு முன் நன்றாக மாவுபோல் பொடித்து மெல்லிய வஸ்த்ரத்தினால் நன்றாய் வஸ்த்ர காயம் செய்து கொள்ளுவார்கள். தினந்தோறும் காப்பி சாப்பிடுவதற்காக டிகாக்ஷன் செய்யும் முறையில் வெந்நீரைக் கொதிக்கவைத்து, அதில் சிறிதளவு இப்பொடியை எடுத்துப் போட்டுச் செய்த கஷாயத்தில், காய்ச்சின பசும்பாலைவிட்டுச் சர்க்கரை போட்டுக் காலை வேளைகளில் காப்பி சாப்பிடுவதுபோல சாப்பிட, காப்பி சாப்பிடுதலினால் ஏற்படக்கூடும் குணங்களைக் காட்டிலும், தேகத்திற்கு இக்கஷாயம் ஏராளமான நற்குணங்களை உண்டுபண்ணும். இந்தக் காப்பிக்கஷாயம், ஓட்டோமோஹினி வாஸனைப் பொருள் போன்ற வாஸனையுடையது. இந்தக்கஷாயம் தேகத்திலுள்ள பித்தவாயு, வெட்டைச் சூடு, மேக ரோகம் முதலியவைகளைத் தீர்த்துக் குணமுண்டுபண்ணுவதாக அநுபவத்தில் தெரிந்திருக்கிறது.

வெட்டைச் சூட்டினால்வருத்தப்படுபவர்கள் காலை வேளைகளில் ஆவாரம் பூவை அப்படியே பச்சையாய்ப் பறித்துத் தின்னும் வழக்கத்தைப் பல நாள்கள் அநுஸரித்துவர, அவர்கள் அம்மாதிரியான தேக உபாதையினின்றும் நீங்கிக் குணமடைந்திருப்பதை அநுபவ பூர்வமாய் அறிவோம்.

### இலையின் உபயோகம்.

வெயில் வேளைகளில் வெகுதூரம் வழிப்ரயாணம் போகிறவர்கள் இதன் இலைகளை ஏராளமாய்ப் பறித்துத் தலைமறைய வைத்துக்கொண்டு, அதன்மேல், மேல் வஸ்த்ரத்தைப் போர்த்திக்கொண்டு ப்ரயாணம் செய்வார்கள். அப்படிச் செய்வதனால் குடை தேவையில்லாமல் போகிறது. தவிர, இப்படிச் செய்து போவதனால் மண்டை மிகுந்த குளிர்ச்சியடைந்து, கண்களும் சிலிர்ப்பையடைந்து நேத்ரங்களுக்குப் பின்னும் நல்ல பார்வையுண்டாவதோடு கண்ணைப்பற்றிய எவ்வித வ்யாதியும் நீங்குகிறதென்பது அநுபவத்தில் கண்டறிந்தது.

இந்த ஆவாரஞ்செடி அதிகமாயுள்ள இடங்களில் ஜனங்கள் இதன் இலைகளைப் பறித்துச் சேர்த்து வெயிலில் நன்றாகக் காயவைத்துக் கொண்டு, இலுப்பைப் பிண்ணாக்கைப் புழுக்கிக் காயவைத்து அரைத்து, யந்த்ரத்திலிட்டுப் பொடி செய்துகொள்ளும்போது, அதனுடன் இந்த இலையையும் கலந்து அரைத்துக் கொள்ளுகிறார்கள். இந்த அரைப்பு, பொடியை, எண்ணெய் தேய்த்து ஸ்நாநம் செய்யும் காலத்தில், உபயோகிக்க மண்டைக்கும் கண்களுக்கும் விசேஷ ஸுகமும் குளிர்ச்சியு முண்டாவதோடு, தேகத்தில் இந்தப் பொடியை யுபயோகிக்க அரிப்பு, சொரி சிரங்குகள் முதலியவை யெல்லாம் நீங்குகிறது. இவ்விலை கலந்த அரைப்பு தேய்த்துக்கொள்ள, பலபடர் வ்யாதிகள் தொலைந்துபோய் தேகத்திற்கு ஒருவித காந்தியு முண்டாகிறதாகச் சொல்லப்படுகிறது. இவ்விலைகளை அரைப்புடன் சேர்ப்பதனால் அதிகமான அரைப்புப்பொடி காணுகிறதனாலும் இப்படிச் செய்வதில் ஜனங்களுக்கு ப்ரியமதிக மிருந்து வருகிறது.

ஸாதாரணமாய் நம் நாட்டு ஸ்த்ரீகள் கஸ்தூரி மஞ்சள், கோரைக்கிழங்கு, விளாமிச்சை வேர், கசகசா, பச்சைப்பருப்பு, கடலைப்பருப்பு முதலிய சரக்குகள் சேர்த்து வாஸனைப் பொடி என்ற ஒரு தினுஸான உடம்புப் பொடி செய்து தினம் ஸ்நாநம் செய்கையில் தேய்த்துக் குளிப்பதுண்டு. அப்படிச் செய்வதனால் தேகத்தில் ஒருவித நல்ல வாஸனை உண்டாவதோடு தேகத்திலுள்ள தோலைப்பற்றின வ்யாதிகள் அடியோடு தொலைந்து போகவும், முளைத்துக் கிளம்பாதிருக்கவும் வழியுண்டு. அந்தப் பொடியிலும் இந்த ஆவார இலையைச் சேர்த்துப் பொடித்து உபயோகிக்கலாம்.

மாட்டுப்பொங்கல் காலத்தில் மாட்டுக்காரர்கள் ஆவாரம் பூவைக் கொத்துக்கொத்தாய் மாலையாகத் தொடுத்து மாட்டின் கழுத்துகளிலும் கொம்புகளிலும் மாலையாகப் போடுவதுண்டு.

### ஆவாரம் பட்டையின் உபயோகம்.

சில இடங்களில் இந்த ஆவாரஞ் செடிகள் மண்ணின் பெருமையினாலும் ஜலவஸதியினாலும் நன்றாகப் பெருத்திருக்கும். அடி பருத்த செடிகளின் பட்டைகளைச் சேகரித்துத் தோல் பதனிடுவதில் உபயோகிப்பதுண்டு. இந்தப்பட்டைகளை நசுக்கி ஜலத்தில் ஊறவைத்து அதில் தோல்களையும் ஊறவைத்துப் பதம் செய்துகொள்ளுகிறார்கள். இதில் ஊறப்போடப்பட்டதோல் உறுதியாயும் வழவழப்பாயும் ஆகும். இன்னும் பதனிடப்பட்டதோல் நல்ல சிவப்பு நிறத்தையுமடையும். ஆகவே இதன்பட்டை தோல் பதனிடும் தொழிற்காரர்களால் ச்லாகிக்கப்படுகிறது.

பண்டித வீ. ஸுப்ரமண்ய ஐயர்.

## THE STUPENDOUS SMALLNES OF THE EARTH.

### ப்ரபஞ்சத்தில் பூமி எம்மாத்ரம்?

ஐந்தடி உயரமுள்ள ஒரு மனிதன் ஐந்து மைல் உயரமுள்ள ஒரு பர்வதத்தினடியில் நின்று பார்த்தால், ஆகாய மளாவி நிற்கும் அம்மலை அவனுக்கு மிகப் பெரிதாகத் தோற்றும். ஆனால், அதே மனிதன் ஐந்து லக்ஷம் மைல் உயரமுள்ளவனாக இருந்தால் அவனுக்கு அந்த மலை யிருப்பதே தெரியாது. இந்த பூமியும் ஒரு சிறு பந்துபோல் தோற்றும். ஆகவே, மனிதன் சிறியவனாயிருப்பதாலும், அவனுக்கேற்றது போலுள்ள சிறிய அளவால் அளந்து பூமி சுற்றளவில் ஸுமார் 25000 மைல்களென்றும், கன அளவில் ஸுமார் 26-கோடி மைல்களென்றும் அவன் நினைப்பதாலும், பூமி அவனுக்குப் பெரிதாகத் தோற்றுகிறது.

இந்த இருபதாவது நூற்றாண்டில் விரைவில் செல்லக்கூடிய 'வாகனங்கள் பல கண்டுபிடிக்கப் பட்டிருந்தும், பூமியை ஒருதரம் ப்ரதக்ஷிணம் பண்ண மனிதனுக்கு எவ்வளவு ப்ரயாஸமும் காலமுமாகின்றன! இந்தக் காரணத்தாலும், மனிதன் "அம்மம்ம! பூமி எவ்வளவு பெரிது" என்று நினைக்கிறான். மனிதன் பெரியவனாக வளர்ந்தோ மற்றெவ்விதத்தாலோ இப்பூமியை நொடியில் சுற்றிவரக் கூடுமானால் "பூமி மிகச் சிறிது" என்றே சொல்லுவானென நினைக்கிறோம்.

பூமி பெரிதாக நமக்குத் தோன்றினாலும், இப்பூமியைப்போல அநேக க்ரகங்களுடனும் மற்றும் பல நக்ஷத்ரங்களுடனும் கூடிய பெரிய ப்ரபஞ்சத்துடன் அதை ஒத்துப்பார்த்தால், ப்ரபஞ்ச மென்கிற ஸமுத்ரத்தில் பூமி என்பது ஒரு கப்பலோ வென்று சொல்லுவதும்கூட சுத்தமாய்த்தகாது. நம்மைச் சுற்றியிருக்கும் காற்று என்னும் ஸமுத்ரத்தில் பறக்கிற தூசிக்கு ஸமானமென்று ஒருகால் சொல்லலாம்! ஸுமார் 197,000,000 சதுரமைல் பரவியிருக்கும் வாயு மண்டலத்தில் ஒரு தூசி எம்மாத்ரம்! நம்மால் அறியவும் அளவிடவும் கூடாதது. பூமியிற் பிறந்து பூமியில் வளர்ந்து பூமியைப்பற்றிய விஷயங்களை மட்டும் படித்து பூமியிலேயே சாகிற மனிதன், தன்னால் மிகப் பெரிதாகவும் அரிதாகவும் கருதப்படுகிற, பூமி, வாஸ்தவத்தில் எத்தகைய பரிமாணமுள்ளதென்று தெரிந்து கொள்ளவும் அதைப்பற்றி நினைக்கவும் விரும்புவது நல்லது.

வெண்ணிறத்துடன் ப்ரகாசித்து விளங்கும் சந்த்ரன், மற்ற க்ரகங்களைக்காட்டிலும் பூமிக்கு ஸமீபத்தில் இருக்கிறது. பூமிக்கும் இதற்கும் ஸுமார் 239,000 மைல் தூரம் இருக்கிறது. அதாவது இவையிரண்டிற்கும் நடுவில் ஸுமார் முப்பது பூமிகளை வரிசையாக அடுத்தடுத்துப் பரத்தலாம். ஸூர்யனுக்கும் பூமிக்கும் உள்ள தூரத்தை அடைக்க ஸுமார் 11,700 பூமிகள் வேண்டும். அந்த ஸூர்யனுடைய பரிமாணத்தைக் கவனித்தாலோ, பூமியைவிட ஸூர்யன் பதினாயிரமல்ல, நூறாயிரமல்ல, பத்து லக்ஷத்து முன்னூறாயிரம் மடங்கு பெரிது! இந்த ஸூர்யன் பெரிய நக்ஷத்ரத்தில் சேர்ந்தது மல்ல; இதைக்காட்டிலும் ஆயிரக்கணக்கான மடங்குகள் பெரிதாயுள்ள நக்ஷத்ரங்கள் ப்ரபஞ்சத்தில் பல இருக்கின்றன. நம்முடைய ஸூர்யன் மற்ற நக்ஷத்ரங்களைக் காட்டிலும் பூமிக்கு வெகு ஸமீபத்திலிருக்கிறது. இதற்கடுத்தபடி தூரத்திலிருக்கிற நக்ஷத்ரத்துக்குப் பெயர் "ஆல்பா ஸென்ட்யூரி." அது பூமிக்கு 26,000,000,000,000 மைல்களுக்கப்பாலிருக்கிறது! அதற்கும் பூமிக்கு மிடையில் சுமார் 3,30-கோடி பூமிகளை தொடர்ச்சியாய் அடுக்கலாம்! இந்த நக்ஷத்ரமும் பார்க்கப்போனால் ரொம்ப ஸமீபத்திலிருக்கிறதென்றே சொல்லவேண்டும். அதற்கப்பாலும் அநேகம் நக்ஷத்ரங்களிருக்கின்றன.

வெளிச்சம் ஸெகண்டுக்கு 186,330 மைல் வீதம் செல்லுகிறது. அதாவது இங்கு ஒரு வெளிச்சம் உண்டானால், 186,830 மைல்களுக்கப்பாலுள்ள ஒருவனுக்கு—வெளிச்சம் உண்டானவுடன் தெரியாமல் ஒரு ஸெகண்ட் நேரம் கழித்துத்தான் தெரியும். ஸூர்யனிடத்திலிருந்து புறப்படும் வெளிச்சம் 929 லக்ஷம் மைல்களுக்கப்பாலிருக்கிற இந்த பூமிக்கு வந்து சேர 8 நிமிஷங்களாகின்றன; "ஆல்பா ஸென்டூரி" யிலிருந்து வெளிச்சம் நமக்கு வர நான்கு வர்ஷங்களும் நான்கு மாஸங்களுமாகின்றன. சில நக்ஷத்ரங்களிலிருந்து 500 அல்லது 1000 வர்ஷங்களுக்குப் பிறகுதான் பூமிக்கு வெளிச்சம் வருகிறதென்றால் ப்ரபஞ்சம் எவ்வளவு விஸ்தாரமானதென்றும் பூமி எவ்வளவு சிறிதென்றும் ஊகித்தறியலாம்.



ப்ரபஞ்சத்தோடு ஒத்துப்பார்த்தால் 25,000 மைல் சுற்றளவுள்ளதும் நம்மால் மிகப் பெரிதென்று மதிக்கப்படுகிறதுமான இந்த பூமி—வெறும் பூஜ்யம், ஒன்றுமில்லை யென்றே சொல்லவேண்டும். இவ்வல்பமாகிய உலகில், எத்தனையோ வகை ஜீவராசியில் ஒன்றாகிய மனுஷ்ய வர்க்கத்தில் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு மத்தியில் ஒரு மனிதன் அணுவிலும் அணு, பரமாணுவிலும் பரமாணு என்னலாம்.

---

## DETECTING COUNTERFEIT COINS.

### கள்ள நாணயங்களைக் கண்டுபிடித்தல்.

இந்தியாவில் இரண்டு வித கள்ள நாணயங்கள் வழங்குகின்றன. உருக்கி வார்த்த நாணயங்கள், அடித்துச் செய்த நாணயங்கள்.

ஒரு நாணயம் கள்ள நாணயமா அல்லவா என்று அறிய பின்வருமாறு சோதனை செய்யவேண்டும்.

1. சிறியதைப் பெரிதாகக் காட்டுகிற 'மாக்னிபையிங் க்ளாஸ்' என்னும் கருவியினால் பார்த்தால், கள்ள நாணயத்தில் பித்தளை அல்லது ஈய ஸம்பந்தமான நிறம் லேசாய்த் தெரியும்.

2. அதே கருவியினால் கள்ள நாணயத்தின் மேற்புறத்தைப் பார்த்தால், பல சிறிய புடைப்புகள் தோன்றும், அவைகள் வார்க்கும் அச்சுக்கள் சரியாக இராததனால் உண்டானவை.

3. கள்ள நாணயத்தை நிறுத்துப் பார்த்தால், அதே வர்ஷத்தில் போடப்பட்ட ஸர்க்கார் நாணயத்தின் நிறையைவிடக் குறைச்சலாக இருப்பது ஸகஜம்.

4. நாணயத்தின் ஓரத்தில் பல்லுப் பல்லாய் அரும்பு கட்டியிருப்பது நேராக யில்லாமல் சற்றுக் கோணலாகயிருந்தாலும், ஒரு அரும்பிற்கும் மற்றொன்றுக்குமுள்ள இடைவெளி ஒரே சீராகயில்லாமல் இருந்தாலும் கள்ள நாணயமென்று ஸந்தேகிக்கலாம்.

5. பாறாங் கல்லில் தட்டிப் பார்த்ததில் சத்தக் கட்டையாயிருந்தால், கள்ள நாணயமென்று ஸந்தேகிக்கலாம்.

6. சரியான ரூபாயின் எடை அதன் அளவு தண்ணீரின் கனத்தைப்போல பத்து மடங்குக்குக் குறையாமல் இருக்கவேண்டும். அதற்குக் குறைந்தால் கள்ள நாணயம் என்று ஸந்தேகிக்க வேண்டும். $9\frac{1}{2}$ மடங்குக்குக் குறைவாயிருந்தாலோ நிச்சயமாய் கள்ள நாணயமென்று சொல்லிவிடலாம்.

7. 1904௵ முதல் ஒரு நாணயத்தின் ஓரத்திலுள்ள அரும்புகள் 150 இருக்கவேண்டுமென்று ஸர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கிறது. கள்ள நாணயங்களில் இந்த அரும்புகளின் எண்ணிக்கை தப்பாயிருக்கலாம். இரண்டு நல்ல நாணயங்களுக்கு மத்தியில் ஸந்தேகித்த நாணயத்தை வைத்து மூன்று நாணயங்களின் ஓரங்கள் மட்டமாயிருக்கும்படி சேர்த்து வைத்துப் பார்த்தால், அரும்புகளின் எண்ணிக்கை வித்யாஸப்படுவது தெரியும்.

8. வார்த்த கள்ள நாணயத்தில் உருவங்களும் எழுத்துக்களும் சுத்தமாயில்லாமல் களங்கமுள்ளனவாய்க் காணப்படும்.

9. எழுத்துக்களும் உருவங்களும் சரியான இடத்தில் இருக்காமலிருந்தால் அவை கள்ள நாணயங்கள். நல்ல நாணயத்துடன் ஒத்துப் பார்த்தால் இது விளங்கும்.

10. கள்ள நாணயத்தின் ஓரம் கத்தியினால் அறுத்ததுபோல் சொற சொறவென்று இருக்கலாம்.

11. சில கள்ள நாணயங்களில் வேடிக்கையான தப்பிதங்கள் இருக்கும். அதாவது 1837௵ முதல் 1876 ௵வரையில் "விக்டோரியா க்வீன்" என்றும், 1876 முதல் 1903 வரையில் "விக்டோரியா எம்ப்ரெஸ்" என்றும், 1903 முதல் 1910 வரையில் "எட்வார்ட் ஸெவன்த் கிங் அண்ட் எம்பரர்" என்றும் இருக்கவேண்டியிருக்க, இது தெரியாமல் கள்ள நாணயம் செய்பவர்களில் சிலர் ஒன்றிருக்க வேண்டிய வர்ஷத்தில் மற்றொன்றைப் போட்டு விடுவதுண்டு.

12. ஓரம் ஒத்தாற் போல் இல்லாமல் ஒரு இடத்தில் தடிப்பாயும் மற்றொரு இடத்தில் லேசாயுமிருந்தால், கள்ள நாணயம் என்று ஸந்தேகிக்க வேண்டியது.

கள்ள நாணயம் செய்கிறவர்கள் தங்கள் நாணயத்தைப் பரவச்செய்ய அநேக உபாயங்களைக் கற்றிருக்கிறார்கள். அவர்களுக்கு உடந்தையாயிருக்கும் சிலர், சில்லரை வ்யாபாரி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு நிஜமான ஸாமான் விற்பவனைப் போல பாசாங்கு செய்து கள்ள நாணயங்களை பரவச் செய்வார்கள். சில ஸமயங்களில், ரயில், ஸ்டீமர் ஸ்டேஷன்களிலிருக்கும் டிக்கட் கொடுக்கும் க்ளார்க்குகளைக் கையில் போட்டுக்கொண்டு அவர்கள் மூலமாகவும் கள்ள நாணயங்களை வெளியிலனுப்பி விடுவார்கள். இவர்கள் ப்ரயாணிகளிடம் ஸுலபமாய் கள்ள நாணயங்களை கட்டிவிடலாம். போஸ்ட்மன்களும், போஸ்ட்டல் க்ளார்க்குகளும் சில ஸமயங்களில் உடந்தையாயிருப்பதுமுண்டு. ஆனால் எல்லாவற்றிலும் சிறந்தவழி, கஜானா ஸிப்பந்திகள் மூலந்தான். அவர்களுக்கிஷ்டமிருந்தால், கள்ள நாணயக்காரர்களுக்கு வேண்டுமென்கிற அளவு ஒத்தாசை செய்யலாம். இம்மாதிரி கள்ள நாணயம் பரவச் செய்கிறவர்களுக்கு ரூபாய்க்கு நான்கு அணா கம்மிஷன் உண்டு என்று தெரிகிறது.

## ASSIMILATION OF FOOD BY RICE PLANT.
### நெற்பயிர் உணவுகளை உட்கொள்ளுதல்.

நெற்பயிரின் வேர், தண்டு இலைகள் ஆகிய இவைகள் வளரும்போது ஒவ்வொரு காலத்திலும் உணவுப் பொருள்களை எந்த அளவில் பூமியிலிருந்து க்ரஹித்துக் கொள்கின்றன என்பதைச் சோதனை செய்து கண்டு பிடித்திருக்கிறார்கள். இம்மாதிரி கண்டு பிடிப்பதற்காக (1) மிகவும் சிறிய முளைகளையும், (2) பெயர்த்து நடும் பருவத்தில் இருக்கும் நாற்றுகளையும், (3) கதிர் விடாத பெரிய பயிர்களையும், (4) கதிர்விட ஆரம்பித்த பயிர்களையும், (5) பால் போன்ற நிலைமையிலுள்ள முற்றாத தான்யத்தையும், (6) அறுவடைக்குத் தயாராக இருக்கும் பயிர்களையும், (7) நன்றாக முதிர்ந்து பழுத்த தான்யங்களையுடைய பயிர்களையும் அந்தந்தப் பர்வத்தில் எடுத்துப் பரீக்ஷை செய்திருக்கிறார்கள். அந்தப் பரீக்ஷைகளால் தெரியவந்த விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

வேரில் நைட்ரோஜின் ஸத்து.

மிகவும் இளம் முளைகளின் வேர்களில் 100-க்கு 2 வீதம் நைட்ரோஜின் அடங்கி இருக்கும். நாற்றுகள் நடும் பருவத்தில் இருக்கும்போது நைட்ரோஜின் 100-க்கு 1 வீதமும், கதிர் விடாத பயிர்களில் 100-க்கு ·74 வீதமும், தான்யம் மணியாகாமல் பால் போல் இருக்கும்போது 100-க்கு ·52 வீதமும் ஆகி, பயிர் நன்றாக முதிரும் வரையில் அதே அளவில் நிற்கிறது.

தாள்களில் நைட்ரோஜின்.

பயிரின் மேல் பாகத்தில் உள்ள நைட்ரோஜினும் பயிர் வளர வளர வேரில் உள்ளது குறைவதுபோலவே குறைந்து கொண்டே வருகிறது. பயிர் மிகச் சிறிய முளைகளாக இருக்கும்போது பயிரின் மேல்பாகத்தில் நைட்ரோஜின் 100-க்கு 3·48 அளவாக இருந்து, அறுவடை ஸமயத்தில் 100-க்கு ·8 அளவாகக் குறைந்து விடுகிறது. சிறிய முளைகள் நடும் நாற்றுகளாக வளரும் பர்வத்தில் தான் நைட்ரோஜின் மிகவும் அதிகமாகக் குறைந்து போகிறது. அப்பொழுது 100-க்கு 3·48 ஆக இருந்தது 1·34 ஆகக் குறைந்து விடுகிறது. நாற்றுப்பருவத்திலும் கதிர்விடாத பருவத்திலும் நைட்ரோஜின் தாள்களில் இருப்பதைக்காட்டிலும் அதிகமாக இலைகளில் இருக்கும். நாற்றுப் பர்வத்தில் இலைகளில் 100-க்கு 2·11 ஆகவும் தாள்களில் ·77 ஆகவும், கதிர் விடாத பர்வத்தில் இலைகளில் 100-க்கு 1·44 ஆகவும் தாள்களில் ·79 ஆகவும் இருக்கும். கதிர்விட்டதும், இலைகளிலும் தாள்களிலும் நைட்ரோஜின் இருப்பதில்லை. தான்யத்தில் தான் நைட்ரோஜின் அதிகமாக இருக்கும். அதாவது 100-க்கு 1·6. பயிரின் மற்றெல்லா பாகங்களிலும் 100-க்கு ·5 தான் இருக்கும்.

வேரில் பாஸ்பாரிக் ஆஸிட்.

வேரில் உள்ள பாஸ்பாரிக் ஆஸிட், பயிர் வளர வளரக் குறைந்து கொண்டே வரும். முளைகளாக இருக்கும்போது 100-க்கு ·37 வீதமாக இருந்து, முதிர்ந்த பயிராகும்போது 100-க்கு ·15 ஆகக் குறைந்து விடுகிறது. பயிரின் மேல் பாகத்தில், முளையாக இருக்கும் பர்வத்தில் 100-க்கு ·4 ஆக இருந்து கதிர் விடும் ஸமயத்தில் 100-க்கு ·22 ஆகக் குறைந்து போகிறது. ஆனால் தான்யமணிகள் பிடிக்கும் போது 100-க்கு ·38 ஆக அதிகரித்து அறுவடை ஸமயத்தில் 100-க்கு ·26 ஆகக் குறைந்து விடுகிறது. கதிர் விடும் பர்வத்துக்கு முன்னே, வேரிலும் பயிரின்மேல் பாகத்திலும் ஸமமான அளவில் அதிக பாஸ்பாரிக் ஆஸிட் இருக்கும். கதிர் விட்டதும், வேரில் இருப்பதைக் காட்டிலும் தாளிலும் இலைகளிலும் பாஸ்பாரிக் ஆஸிட் அதிகமாகச் சேர்ந்திருக்கும்.

தான்யம் முற்றியவுடன் பாஸ்பாரிக் ஆஸிட் தான்யத்தில் அதிகமாக வந்து சேருகிறது. அப்பொழுது பயிரின் மற்ற பாகங்களில் உள்ள பாஸ்பாரிக் ஆஸிட் குறைந்து கொண்டே வந்து கடைசியில் 100-க்கு ·15 வீதம் ஆக இருக்கிறது.

பொடாஷ்.

பயிரின் முளை பர்வத்திலும் நாற்று பர்வத்திலும் வேரில் உள்ள பொடாஷ் அநேகமாய் ஒரே அளவாக இருக்கும். முளைப் பர்வத்தில் 100-க்கு 1·85 ஆகவும், நாற்று பர்வத்தில் 100-க்கு 1·91 ஆகவும் இருக்கும். பிறகு அது மெதுவாகக் குறைந்து கொண்டே வந்து அறுவடை ஸமயத்தில் 100-க்கு ·66 ஆக நிற்கிறது. இலைகளிலும், தாளிலும் உள்ள பொடாஷ் கதிர் விடுவதற்குமுன் 100-க்கு 3·13 ஆக இருக்கிறது.

ஒரு ஏகரில் 900 ராத்தல் எடையுள்ள தான்யம் விளைகிறதென்று வைத்துக் கொண்டால், தாள்களும் வேர்களும் இழுத்துக் கொண்டது நீங்கலாக, அந்த விளைச்சலால் 29·33 ராத்தல் நைட்ரோஜினும், 9·64 ராத்தல் பாஸ்பாரிக் ஆஸிடும் 49·69 ராத்தல் பொடாஷும் நிலத்தி

லிருந்து எடுபட்டுப் போகிறது. இந்தக் கணக்கைக் கவனிப்பதால் நெற்பயிருக்கு எவ்வளவு எரு வேண்டுமென்பது நன்றாக ஏற்படும்.

எல்லா நைட்ரோஜின், பாஸ்பாரிக் ஆஸிட், பொடாஷ் ஸத்துகளையும், நெற்பயிர் இளம் பயிராக இருக்கும்போதே க்ரஹித்துக் கொள்ளுகிறபடியால், தக்க காலத்தில் எருவிட வேண்டுவது அவச்யமாகும். நாற்றுகளைப் பிடுங்கி நட்ட பிறகு எருப் போட்டால் கொஞ்சம் பலன் உண்டாகும், தான்யம் பிடிக்க ஆரம்பித்த பிறகு எருப் போடுதல் அதிகம் பயன்படாது. ஏனென்றால் அப்போது உணவு க்ரஹிக்கும் வேலை நின்றுபோய், உணவை தக்கபடி ஜீர்ணம் செய்து தான்ய மணிகளில் சேர்க்கும் வேலை ஆரம்பமாகிறது. கடைசியாக உணவின் ஸாரம் தான்யத்தில் வந்து சேர்ந்து விடுகிறது. ஆகையால் நாற்றங்காலுக்கும், வயலில் நடுவதற்கு முன்னும் எருப்போடுவதே நல்லது.

## DIRT.

### அசுத்தம்.

அசுத்தமா யிருப்பதினால், தேக ஸௌக்யம் கெட்டுப்போய் வ்யாதிகள் உண்டாகும் ஆகவே சுத்தமாயிருப்பது முக்யம். அசுத்தம் நான்கு வழிகளில் நம்மை யடையக்கூடும். (1) செய்யும் தொழில் (2) சரீரம், உடுக்கும் உடை (3) சாப்பிடும் ஆகாரம், அருந்தும் பானம் (4) வசிக்கும் வீடு, அதைச் சுற்றிலுமுள்ள இடம்.

#### செய்யும் தொழில்.

அசுத்தமாயும், வ்யாதிக்குக் காரணமாயுமிருக்கும் தொழில்களில், தோல் பதனிடுதல், பருத்தி யந்த்ரசாலையில் வேலை செய்தல் இரண்டும் முக்யமாய் கவனிக்கத் தக்கவை. தோல் பதனிடும் பொழுது நாற்றம் உண்டாவதுடன் ரஸ ஸம்பந்தமான பாஷாணமும், 'ஆர்ஸனிக்' என்னும் பாஷாணமும் தேகத்தில் சேரக்கூடும். இவைகள் கெடுதலுண்டாக்குவதுடன் 'ஆன்த்ராக்ஸ்' என்னும் ரத்தக் கட்டியையும் உண்டாக்கும்.

பருத்தி யந்த்ரசாலையில் வேலை செய்கிறவர்களுடைய மூக்கு, தொண்டைகளுக்குள் சிறிய பருத்தி அணுக்கள் ச்வாஸத்தோடு ப்ரவேசித்துவிடுகின்றன. அதனால் மூக்கு எரிதல் முதலியவை உண்டாவதுடன், க்ஷயரோகத்திலும் கொண்டுவந்து விட்டுவிடும்.

#### தேக அசுத்தம்.

இரண்டாவது சரீரத்தையும் உடைகளையும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். வேர்வையில் நன்றாய் நனைந்த உடுப்பு உலர்ந்த பிற்பாடு க்ருமிகள் தங்கி வ்ருத்தியாக நல்ல இடமாகும். அந்த உடுப்பையே மறுபடி அணிவதால், வ்யாதி க்ருமிகள் சேர்ந்து தோலைப் பற்றின அநேக வ்யாதிகள் உண்டாகின்றன. தவிரவும் வியர்வை நாற்றம் பிறருக்கு அருவருப்பை உண்டாக்குகிறது. ஆகவே உடைகளை அப்போதைக்கப்போது சுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்.

நகத்திடுக்குகளையும் வாயையும் சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். அழுக்காயும் க்ருமியடைந்துமிருக்கிற நகத்தால் காயம் ஏற்பட்டால், அந்தக் காயம் லேசில் ஆறாத சிறங்காகிறது. இதிலிருந்து அழுக்குள்ள நகம் எவ்வளவு கெடுதலென்று தெரிகிறது. வாயும் ரொம்ப சுத்தமாய் இருக்கவேண்டும். க்ருமிகள் உண்டாவதற்கு அங்கு ஏற்ற வஸதிகள்



இருப்பதால், அதை ரொம்ப ஜாக்ரதையுடன் சுத்தப்படுத்தி வரவேண்டும்.

#### உணவு.

மூன்றாவது நாம் உண்ணும் உணவைச் சமைத்துச் சாப்பிடுவதால் அநேகம் க்ருமிகளும் அசுத்தங்களும் வெந்துபோய் கெடுதல் செய்ய சக்தியற்றவைகளாகி விடுகின்றன. என்றாலும், சமைத்த பதார்த்தத்தில், ஈ எறும்பு மொய்ப்பதினாலும், அவைகளை திறந்து வைத்திருப்பதாலும் அது சாப்பிட யோக்யமில்லாமல் போய்விடும். அழுகின பழங்களைச் சாப்பிடுவதால், குடல் ஸம்பந்தமான வ்யாதிகள் உண்டாகின்றன. ஏனென்றால் அழுகின பழங்களில் க்ருமிகள் தங்கியிருக்கும். கடைகளில் திறந்தது வைத்திருக்கும் பக்ஷணங்கள் சாப்பிட யோக்யமில்லை. ஒரே இலையில் இரண்டு மூன்று குழந்தைகளைச் சாப்பிடவிடுவதால் ஒரு குழந்தைக்குள்ள இருமல், கக்குவான் முதலிய வ்யாதிகள் மற்றவர்களுக்குப் பரவும். பச்சைப் பாலில் க்ருமிகள் அடையக் கூடுமாதலால் எப்போதும் காய்ச்சியே சாப்பிடவேண்டும். காய்ச்சின பிறகு ஈ முதலியவை கிட்டவரவொட்டாமல் பத்ரமாய் வைத்திருக்க வேண்டும். தண்ணீரிலுள்ள அசுத்தமும், க்ருமிகளும், பெருவாரி முதலிய வ்யாதிகளுக்குக் காரணமாயிருக்கின்றன. அது விஷயத்தில் நாம் ரொம்ப ஜாக்ரதையா யிருக்கவேண்டும்.

#### குடி யிருக்குமிடம்.

அசுத்தமான காற்று நிறைந்ததும், சதுப்பு நிலமாயும் இருக்குமிடத்தில் குடியிருப்பது வ்யாதிக் கிடமாகும். சரியான காற்றோட்டமும் வெளிச்சமு மில்லாத வீட்டில் குடியிருப்பதால் காய்ச்சல், ச்வாஸாசயத்தைப் பற்றின வ்யாதிகள் முதலியவை உண்டாகும். படுக்கை யறைகளில் ஜன்னல் கதவைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்குவதால், ஜலதோஷம் பிடிக்கும் என்று நினைப்பது தப்பு. சுத்தமான காற்று மனிதனுக்கு அவச்யம். க்ராமாந்த்ரங்களில் கீழ் ஜாதிகள் அசுத்தமான இடங்களில் குடியிருப்பதாலும், அசுத்தமான வாயு, உணவு இவைகளை உட்கொள்ளுவதாலுமே காலரா முதலிய வ்யாதிகளால் பீடிக்கப்பட்டு அநேகம் ஜனங்கள் மடிகிறார்கள். அவர்களின் அசுத்தமான நிலைமையை மாற்றுவது, படித்த இந்தியர்களின் முதல் வேலையா யிருக்கவேண்டும்.

## KALAMEGAM.

BY S. NARASIMHACHARIAR, B. A., B. L.,
*High Court Vakil, Madras.*

### காளமேகப் புலவர்.

(சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் 205-ம் பக்கத் தொடர்ச்சி.)

காளமேகம் உறியில் உட்கார்ந்து, ஸரஸ்வதியை த்யானித்துக் கொண்டு, கொஞ்சமும் பயப்படாமல் இருந்தார். அவருடைய இடுப்பிலும் கழுத்திலும் கத்திகட்டி அவற்றிலுள்ள சங்கிலிகளை யானைப் பாகர் கையில் கொடுத்திருந்தார்கள். ஸபைப் புலவர்களுக்குத் தலைவனான அதிமதுரம், காளமேகத்தைப் பார்த்து, மகா விஷ்ணுவானவர் எடுத்த பத்து அவதாரங்களையும் ஒரு வெண்பாவுக்குள்ளே அடக்கிப் பாடும்படி சொன்னான். அதற்கு அவர், 'ஒரு வெண்பா வேண்டுவதில்லை; அரை வெண்பாவே போதும்,' என்று சொல்லி

மெச்சு புகழ் வேங்கடவா! வெண்பாவில்
[பாதியில், என்,

இச்சையில் உன் ஜன்மம் இயம்பவா—மச்சா! கூர்மா! கோலா! சிங்கா! வாமா! ராமா! ராமா! ராமா! கோபாலா! மா வா, வா.

என்ற வெண்பாவைப் பாடினார்.

இதன் அர்த்தம்:—

யாவரும் ஸ்தோத்ரம் செய்கிற வெங்கடாசலபதியே! பாதி வெண்பாவுக்குள், நான் விரும்பியபடி உன்னுடைய அவதாரத்தைச் சொல்லும்படி நீ வருவாயாக. மத்ஸ்யா! (மீன்). கூர்மா! (ஆமை). கோலா! (வராகம், அல்லது, பன்றி). சிங்கா! (நரஸிம்மம்). வாமா! (வாமன அவதாரம்). ராமா! (பரசுராமன்). ராமா! (தசரத ராமன்). ராமா! (பலராமன்). கோபாலா! (க்ருஷ்ணன்). மா! (குதிரை). என்று (நான் உன் பத்து அவதாரங்களையும் அழைக்கும்படி எழுந்தருளி) வருவாயாக.

வெண்பாவே சிறியபாடல். அதிலும் ஒரு பாதியையே எடுத்துக்கொண்டு, அதற்குள் தசாவதாரத்தையும் அடக்கிப் பாடியது, ஆச்சர்யத்திலும் ஆச்சர்யமே!

மற்றொரு புலவர், திருப்பால் கடலின் நடுவில் சிவந்த தூளி கிளம்பினதாக ஒரு பாட்டுப் பாடச் சொன்னார். அதற்குக் காளமேகம் பாடியது:—

சுத்த பாற்கடலின் நடுவினில்,
  தூளி தோன்றிய அதிசயம் அது கேள்;
மத்தகக் கரியை உரித்தவன் மீது,
  மதன் பொரு(து), அழிந்திடு(ம்) மாற்றம்,
வித்தகக் கமலை செவி உறக் கேட்டாள்;
  விழுந்து, நொந்து, அயர்(ந்து), அழு(து), ஏங்கி,
கைத்தல(ம்) மலரால், மார்(பு) உறப்
  புடைத்தாள்; எழுந்தது, கலவையின் செந்தூள்.

இதன் பொருள்:—

களங்கம் இல்லாத திருப்பால் கடலில் சிவந்த தூசு கிளம்பின ஆச்சர்யத்தைச் சொல்லுகிறேன்; அதைக் கேளும்; மஸ்தகத்தையுடைய யானையின் தோலை உரித்து (அதைத் தனக்குப் போர்வையாகக் கொண்ட) சிவபெருமான் மீது, மன்மதன் யுத்தம் செய்து (பஞ்சபாணங்களைப்ப்ரயோகம் செய்து, அவருடைய நெற்றிக் கண்ணிலிருந்து கிளம்பிய நெருப்பினால் உடல் வெந்து) அழிந்து போன ஸமாசாரத்தை, நன்மை மிகுந்த மகாலக்ஷ்மி கேள்விப்பட்டாள்; (உடனே, தன் புத்ரன் மாண்டானே என்ற துக்கத்தைப் பொறுக்கமாட்டாமல்,) விழுந்து (புரண்டு), (மனம்) நொந்து, (புத்தி) தளர்ந்து, ப்ரலாபித்து, ஏக்கம் பிடித்து, தன்னுடைய, மலர் போன்ற கைகளால், தன் மார்பில் அடித்துக் கொண்டாள். (அந்த மார்பில் அணிந்திருந்த) கலவைச் சந்தனத்தின் சிவந்த தூள் எழும்பிற்று.

குறிப்பு:—மன்மதன் மகா விஷ்ணுவின் புத்ரன், என்று புராணங்களில் சொல்லியிருக்கிறது.

மற்றொரு புலவர், முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை, என்ற எட்டு எண்களும் வரும்படி, காஞ்சீபுரத்தில் வீற்றிருக்கிற ஏகாம்பரேச்வரர் மேல் பாடும்படி சொன்னார். அதற்கு காளமேகம் பாடியது:—

முக்காலுக்(கு) ஏகாமுன், முன்னரையில் வீழாமுன்,
அக்காலரைக் கால் கண்(டு) அஞ்சாமுன்—விக்கி,
இருமாமுன், மாகாணிக்(கு) ஏகாமுன், கச்சி,
ஒருமாவின் கீழரை, இன்(று) ஓது.

[முன்னரை=முன்+நரை.]

இதன் பொருள்.—

(இயற்கையிலே நமக்குள்ள இரண்டு கால்களோடு, ஊன்றும் தடியாகிற) மூன்றாவது கால் வந்து சேர்வதற்கு முன்னும், தலைமயிர் நரைத்துப் போவதற்கு முன்னும், யமதூதர்களைக் கண்டு, ப்ராணன் நடுங்குவதற்கு முன்னும், விக்கல் மேலிட்டு இருமல் மிகுவதற்கு முன்னும், பெரிய பூமியான சுடுகாட்டுக்குக் கொண்டுபோகப் படுவதற்கு முன்னும், கச்சியில் ஒப்பற்ற ஒரு மாமரத்தின் கீழ் வீற்றிருக்கும் பரமசிவனைத் தொழுவாயாக.

குறிப்பு:—இறவனுவதற்கு முன்னமேயே கடவுளைத் தொழு, என்பது இப்பாடலின் கருத்து. 'ஆம்ரம்' என்னும் ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு, 'மா(மாம்)' என்று அர்த்தம். காஞ்சீபுரத்தில் வீற்றிருக்கும் லிங்கமூர்த்தி, ஒரு மாமரத்தின் கீழிருத்தலால், அவருக்கு ஏகாம்ப்ரேச்வரர் என்று பெயர். காஞ்சீபுரத்துக்கு, கச்சி என்றும் பெயர் உண்டு. கால்=காற்று=ஸ்வாஸப்=ப்ராணன். மாகாணி =மா+காணி=பெரிய பூமி=ஸ்மசானம். கீழர்= கீழேயிருப்பவர். 'மா' என்னும் சொல், இந்தப் பாடலில் மாமரத்தைக் குறித்தது.

அரை, கால், முதலிய எண்களை அடக்கி, தம்முடைய புலமையினால் அவற்றைக் கொண்டே ஸ்வாமியை ஸ்தோத்ரம் செய்த நயம் அதிசயிக்கத் தக்கது.

இன்னும் ஒரு புலவர், வாணியன், வண்ணான் முதலான ஒன்பது தொழிலாளிகளின் பெயர் வரும்படி, சிவபெருமான் ஊர்வலம் வருவதை வர்ணித்து, ஒரு பாடல் பாடும்படி சொல்ல, இவர் பாடியது:—

வாணியன் வாழ்த்திட, வண்ணான் சுமக்க,
  வடுகன், செட்டி,
சேணியன் போற்ற, திரைப் பள்ளி
  கைதொழ, தீங்கரும்பின்
கோணியன் தாழ, கருமான்
  துகிலினைக் கொண்(டு) உடுத்து,
வேணிய(ன்) ஆகிய தட்டான்
  புறப்பட்ட வேடிக்கையே.

வாணி = ஸரஸ்வதி. ஆகவே, வாணியன்=ப்ருமமா; வண்ணான்=வண்மை+ஆன், அல்லது, வண்+ஆன். வண் என்னும் சொல்லுக்கு மிகுதி என்று பொருள். ஆன்=ரிஷபம். வடுகன்=பைரவமூர்த்தி, இவர் சிவனுடைய குமாரரில் ஒருவர். செட்டி=ஸுப்ரமண்யர், சேணி=வித்யாதர லோகம். ஆகவே சேணியன் அதற்கு அரசனான இந்த்ரன். 'வளைதல்' என்ற அர்த்தமுள்ள 'கோணுதல்' என்னும் சொல்லின் பகுதியான 'கோண்' என்ற வினைச் சொல்லிலிருந்து, 'கோணியன்' என்னும் சொல் பிறந்தது. 'கோணியன்' =வளைந்த பொருளை உடையவன்; அதாவது, வில்லை உடையவன். கரும்பே, மன்மதனுக்கு வில்லாகும், என்று நூல்களில் சொல்லியிருக்கிறது. [ஸாதாரணமாக, 'கோணியன்' என்னும் வார்த்தைக்கு, கோணிப் பையை உடையவன், என்று அர்த்தம் உண்டு.] கருமான்= கருமை+ஆன்=கறுத்த ம்ருகம்; ஆதாவது யானை. சிவபெருமான் யானைத் தோலைப் போர்த்தார் என்று புராணங்கள் சொல்லும். 'வேணி'=ஜடை. சிவபெருமானுக்கு ஜடை இருத்தலால், அவருக்கு 'வேணியன்' என்று பெயர் தந்தார்.

இதன் பொருள்:—

ஸரஸ்வதியின் புருஷனான ப்ரும்மதேவன் ஸ்தோத்ரம் செய்யவும், ரிஷப வாகனம் சுமக்கவும், பைரவரும் ஸுப்ரமண்யரும், வித்யாதரர் உலகுக்கு ராஜாவான இந்த்ரனும் போற்றி செய்யவும், அலைகளையுடைய திருப்பாற்கடலிலே பள்ளி கொள்ளும் மகா விஷ்ணு அஞ்சலி செய்யவும், இனிமையான கரும்பை வில்லாக உடைய மன்மதன் தாழ்ந்து நமஸ்கரிக்கவும், கறுத்த நிறமுடைய யானையின் தோலை உடுத்துப் போர்த்தவனும், ஜடை உடையவனும், அடியார்களுக்கு தடை செய்யாது கைலாஸ பதவியைத் தருபவனுமான சிவபெருமான் வீதியில் புறப்பட்டு வரும் அழகு என்ன விநோதமான காட்சி!

இந்தப் பாடலில் வரும் 'வாணியன்', 'வண்

ணன்' முதலிய சொற்களுக்கு வேறு வகையாகப் பொருள் தந்து பாடிய காளமேகப் புலவருடைய கவித்வம் அதிசயமானதே.

மற்றொரு புலவர், ஐந்து 'டு'கரம் ஒரு பாடலில் அடுக்கி வரும்படி, கும்பகோணத்தில் எழுந்தருளியிருக்கிற கும்பேச்வரர் மேல் பாடச் சொல்ல, காளமேகம் பாடியது.

ஓ, கா, மா, வீ, தோ, டு, டு, டு, டு, டு, நேர் ஒக்க,
நா(கு) ஆர் குடந்தை நகர்க்(கு) இறைவர்,—வாகாய்,
எடுப்பர் ; நடம் புரிவர் ; ஏறுவர் ; அன்பர்க்குக்
கொடுப்பர் ; அணிவர், குழைக்கு.

இதன் அர்த்தம் :—

ஓ, கா, மா, வீ, தோ என்னும் ஐந்து எழுத்துக்களோடும், ஐந்து 'டு' கரங்களையும் தனித்தனி சேர்த்தால் உண்டாகும் வஸ்துக்களை (அதாவது, ஓடு, காடு, மாடு, வீடு, தோடு என்ற பொருள்களை), இளமரங்கள் நெருங்கிய (சோலைகள் சூழ்ந்த) குடந்தை என்னும் கும்பகோணத்தில் வீற்றிருக்கும் ஸ்வாமியானவர், அழகு பெறும்படி, (முதலாவதை) எடுப்பர் ; (அதாவது, மண்டை ஓட்டைக் கையில் எடுப்பார்); (இரண்டாவதில்) நடனம் செய்வார் அதாவது சுடு காட்டில் நடிப்பார்); (மூன்றாவதான மாட்டின் மேல்) ஏறுவர் ; (அதாவது ரிஷப வாகனத்தில் ஏறிக் கொள்வார்); நான்காவதான வீடு, அதாவது மோக்ஷத்தை) பக்தர்களுக்குக் கொடுப்பர் ; (ஐந்தாவதான தோடு, அதாவது குண்டலத்தைத்) தமது காதுக்கு ஆபரணமாக அணிந்துகொள்வார்.

மற்றொரு புலவர், 'பொன்னாவரையிலை காய் பூ' என்னும் தொடர், கடைசி அடியாக வரும்படி, மகா விஷ்ணு விஷயமாக ஒரு பாடல் பாடச்சொல்ல, இவர் பாடியது :—

உடுத்ததுவு(ம்), மேய்த்ததுவும்,
உம்பர்கோன் தன்னால்,
எடுத்ததுவும், பள்ளிக்(கு)
இசைய,—படுத்ததுவும்,
அந்நாள் எறிந்ததுவும்,
அன்பின் இரந்ததுவும்,
'பொன்னா வரையிலை
காய் பூ.'

இதன் அர்த்தம் :—

['பொன்னாவரையிலை காய் பூ' என்னும் கடைசி அடியை, வார்த்தை வார்த்தையாகப் பிரித்து, 'பொன்', 'ஆ', 'வரை', 'இலை', 'காய்', 'பூ' என்று எடுத்துக்கொண்டு, இவற்றை வரிசையாக, 'உடுத்ததுவும்' 'மேய்த்ததுவும்' முதலான சொற்களோடு கூட்டினால், இந்தப் பாடலுக்கு அர்த்தம் உண்டாகும்.]

தேவர்களுக்கு இறைவனான மகா விஷ்ணுவானவர், உடுத்துக்கொள்வது, பொன் ; மேய்த்தது, ஆ (பசுக்கள்); அவர் ஏந்தியது வரை (கோவர்த்தன மலை); தம்முடைய படுக்கையாகக் கொண்டது, ஆலிலை ; (ஆயர் பாடியில்) அன்று ஒருநாள் (கன்றை எடுத்து) விட்டெறிந்தது (விளங்)காய் ; அன்போடு யாசித்தது, (மூன்றடி) மண்.

குறிப்பு :— பொன் = பீதாம்பரம். மகா விஷ்ணுவின் உடை பீதாம்பரம். ஆ=பசு. வரை=மலை ; இங்கு, கோவர்த்தன பர்வதம். இலை=ஆலிலை. ப்ரளயகாலத்தில், மகா விஷ்ணுவானவர் உலகத்தையெல்லாம், தன் வயிற்றில் அடக்கி, ஆலிலையில் உறங்குகிறார், என்பது புராணங்களின் கொள்கை. இந்த்ரன் ஏவிய மேகங்கள் சோனை மழை பொழிந்த போது, மாடுகள் துன்பம் அடையாதபடி, க்ருஷ்ணபகவான், கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்தார், என்று பாகவதத்தில் சொல்லியிருக்கிறது. கன்று ரூபமாக வந்த அஸுரனை, க்ருஷ்ணமூர்த்தி, தமது கைகளால் பிடித்து, விளாமரத்திலிருந்து காய்கள் விழும்படி அதன்மேல் எறிந்து அவனைக் கொன்றார் என்று, பாகவதத்தில் சொல்லியிருக்கிறது. பூ=பூமி. மகாபலிச் சக்ரவர்த்தி யாகம் செய்கையில், ஸ்ரீமந் நாராயணன் அங்கே போய்த் தனக்கு மூன்றடிமண் தரும்படி அந்தச் சக்ரவர்த்தியினிடம் யாசித்தார். என்ற புராண கதையை, 'இரந்ததுவும், பூ' என்றதனால் குறிப்பிட்டார்.



### யமகண்டத்தில் பாடிய ச்லேஷைகள்.

* 'ச்லேஷை' என்றால் 'இரண்டு பொருள் கொண்டது', என்று முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ச்லேஷையாகப் பாடல் பாடுவதில் காளமேகம் மிகுந்த ஸமர்த்தர். அவருடைய கவித்திறத்தைக் கீழே சொல்லியிருக்கிற சில ச்லேஷைப் பாடல்களைப் படித்துத் தெரிந்து கொள்க.

தேங்காய்க்கும் நாய்க்கும் ச்லேஷையாகப் பாடும்படி ஒரு புலவர் சொன்னார். அதற்கு, காளமேகம் பாடியது :—

வெண்பா.

ஓடு மிருக்குமத னுள்வாய் வெளுத்திருக்கும்
நாடுங்குலைதனக்கு நாணாது—சேடியே !
தீங்காய தில்லாத் திருமலை ராயன் வரையில்,
தேங்காயு நாயுந் தெரி.

இந்த ஒரே பாடலை, இரண்டு விதமாகப் பதம் பிரித்து தனித்தனி தேங்காய்க்கும் நாய்க்கும் பொருள் பொருந்தும்படி செய்ய வேண்டி யிருக்கிறபடியால், முதலில், வெண்பாவை ஸந்தி பிரிக்காமல் எழுதி, பிறகு, தேங்காய்க்குப் பொருந்தும்படி ஸந்தி பிரித்தும், மறுபடியும் நாய்க்குப் பொருந்தும்படி ஸந்திபிரித்தும் எழுதியிருக்கிறோம்.

தேங்காயைப்பற்றி.

ஓடும் இருக்கும் ; அதன் உள்வாய் வெளுத்(து) இருக்கும் ;
நாடும் குலைதனக்கு நாணாது ;—

தேங்காயில் (நார் முதலியன இருப்பதோடு) ஓடும் இருக்கும் : தேங்காயின் உள்புறம் வெளுத்த நிறமாயிருக்கும் ; (ஒவ்வொரு குலையிலும் அநேக காய்கள் இருக்குமே யல்லது, மெல்லியதான குலை தாங்குமோ, தாங்காதோ, என்று), பயப்பட்டு, சில காய்கள் மாத்ரமே இரா ; (அதாவது, ஒவ்வொரு குலையிலும் பல காய்கள் இருக்கும்); (ஆகையாலும்,)

நாயைப்பற்றி.

ஓடும்; இருக்கும்; அதன் உள்வாய் வெளுத்(து) இருக்கும் ;
நாடும் ; குலைதனக்கு நாணாது ;—சேடியே !
தீங்காய(து) இல்லா, திருமலை ராயன் வரையில்,
தேங்காயும் நாயும் தெரி.

இதன் பொருள் :—

நாய் (கொஞ்சநேரம் இங்கும் அங்கும்) ஓடும் ; மற்றும் (கொஞ்சநேரம் அசையாமல், ஓரிடத்திலேயே) இருக்கும் ; நாய் வாயின் உள்பக்கம் வெளுத்திருக்கும்; (தான் இதுவரையிலும் பார்த்திராத யாராகிலும் ஒருவர் புதிதாக வந்தால், அவரை) உற்றுப்பார்க்கும் ; (பிறகு அவரைக் கண்டு), கொஞ்சமும் வெட்கமில்லாமல் (ஊரெங்கும் கேட்கும்படி உரக்கக்) குலைக்கும். (ஆகையாலும்,) ஏ பெண்ணே ! தீமை கொஞ்சமும் இல்லாத திருமலை ராயனுடைய மலை பொருந்திய நாட்டில், தேங்காயும் நாயும் ஒன்றே என்று தெரிந்துகொள். (அதாவது, 'அவ்விரண்டையும் ஒரே பாடலில் ச்லேஷையாகப் பாடியிருக்கிறேன்.')

குறிப்பு :—தனக்கு எதிரே யுள்ள பெண்ணையாகிலும், மற்ற யாரையாகிலும் பார்த்துச் சொல்வதுபோலப் பாடல் பாடுவது தமிழர் வழக்கம். ஆகவே, 'சேடியே !' என்றார்.

### பாம்புக்கும் எள்ளுக்கும் ச்லேஷை.

ஆடிக்குடத்தடையு மாடும்போ தேயிரையும்
மூடித்திறக்கின் முகங்காட்டும்—ஓடுமண்டை
பற்றிப் பரபரெனும் பாரிற் பிண்ணாக்கு முண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.

இனி, இந்தப்பாடலை ஸந்திபிரித்து, எழுதுகிறோம்.

* 'ச்லேஷை' என்னும் ஸம்ஸ்க்ருதச் சொல், தமிழில் சிலேடை என்று வழங்கிவருகிறது.

பாம்பைப்பற்றி.

ஆடி, குடத்(து) அடையும் ; ஆடும்போதே, இரையும் ;
மூடித் திறக்கில், முகம் காட்டும் ;—ஓடும் ; மண்டை
பற்றிப் பரபரெனும் ; பாரில் பிளர் நாக்கும் உண்டாம் ;

இதன் அர்த்தம் :—

பாம்பு (தன் படத்தை விரித்துக்கொண்டு) ஆடி, (பிறகு) குடத்துக்குள் போய்ச் சேரும் ; அப்படி ஆடும்போது, ('புஸ்' என்று) சீறும்; (குடத்தின்) மூடியைத் திறந்தால் தன் தலையை உயர்த்திக் காட்டும் ; (வேகமாக) ஓடும் ; (அதன் பல்லிலுள்ள விஷம் நமது உடம்பில் படும் பக்ஷத்தில்), பரபரென்று (விஷம்) தலைக் கேறிவிடும் ; பூமியிலே (பாம்புக்கு) பிளந்த நாக்கு உண்டு; (ஆகையாலும்,)

எள்ளைப்பற்றி.

ஆடி, குடத்(து) அடையும் ; ஆடும்போதே, இரையும்;
மூடித்திறக்கில் முகம் காட்டும் ;—ஓடு மண்டை
பற்றி, பரபரெனும் ; பாரில் பிண்ணாக்கும் உண்டாம் ;
உற்றிடுபாம்பு (எ)ள்ளெனவே ஓது.

இதன் பொருள் :—

(எள்ளைச் செக்கில் இட்டு) ஆட்டியபின்பு, (அதனுள் இருக்கும் எண்ணெய்) குடத்தில் வார்த்துவைக்கப்படும் ; (எள்ளைச் செக்கில் இட்டு) ஆட்டும்போது, சப்தம் உண்டாகும் ; (எண்ணெய்ப் பாத்ரத்தின்) மூடியைத் திறந்தால், (எண்ணெயில்) நம்முடைய முகம் தெரியும் ; (எண்ணெயைத் தலையிலே தேய்த்துக் கொண்டால், அது,) ஓடுள்ள மண்டையில் ஊறுகையில், பரபரென்று ஊறல் உண்டாகும்; பூமியில், (எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்த பிறகு) பிண்ணாக்கு உண்டாகும். (ஆகையாலும்,) பாம்புக்கும் எள்ளுக்கும் ஸமத்வம் உண்டென்று சொல்வாயாக.

பாம்புக்கும் வாழைப் பழத்துக்கும் ச்லேஷை.

நஞ்சிருக்கும் ; தோல் உரிக்கும் ; நாதர்
முடிமேல் இருக்கும் ;
வெஞ்சினத்தில் பல் பட்டால்
மீளாதே—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலை ராயன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்.

இரண்டாமடியின் கடைசியாகிய 'விஞ்சு மலர்' என்பதிலிருந்து பாடல் முடிவு வரையில் உள்ள பாகத்துக்கு ஒரே அர்த்தமாகையால், அதற்குமாத்ரம் முதலில் தனியாக பொருள் எழுதுகிறோம். அதன் பொருளாவது :—மிகுதியாகிய பூந்தேன் பெருகிப் பாய்கின்ற சோலைகள் சூழ்ந்த திருமலைராயனது மலையில் பாம்பானது வாழைப்பழத்துக்கு ஸமானமாகும். (என்ன காரணத்தால் என்றால்—)

பாம்பைப்பற்றி.

(பாம்பின் பல்லில்) விஷம் (அதாவது நஞ்சு இருக்கும் ; அது தன் தோலை (ப்பர்வந்தோறும்) உரித்துவிடும் ; பரமசிவனுடைய சிரவின்மேல் (ஆபரணமாக) இருக்கும் ; கொடிய கோபத்தினால் (அதனுடைய) பல் (நம்முடைய உடலில்) பட்டால், (செத்துப் போன' ப்ராணன்) மறுபடியும் திரும்பாது.

வாழைப் பழத்தைப்பற்றி.

(வாழைப்பழம் கைக்கு மெதுவாய்) நைந்திருக்கும் ; (தின்ன வேண்டும்போது அதன்) தோல் உரிக்கப்படும் ; (பஞ்சாம்ருதத்தில் ஒன்றாக இருந்து, அபிஷேக காலங்களில்) பரமசிவன் முடிமேல் இருக்கும் ; வ்யஞ்சனமாகச் செய்து தின்பவர்களுடைய பல் (அதிலே) பட்டால், அதை மறுபடியும் உமிழமாட்டார்கள். (அதாவது, அவ்வளவு ருசியுள்ள பதார்த்தம்.)

[குறிப்பு :—'நைந்திருக்கும்' என்ற சொல், உலக வழக்கத்தின்படி 'நஞ்சிருக்கும்' என்று மருவி நின்றது. வெஞ்சினம் = வ்யஞ்சனம் = கறி.]

(இன்னும் வரும்.)

எஸ். நரசிம்மாசாரியார்.



# TYMPANITIS.

## கால் நடைகளுக்குக் காணும் வாயு.

கால் நடைகளுக்கு வாயு என்று ஒரு வ்யாதி வருகிறதுண்டு. கால்நடைகளில் ருமன் என்னும் முதல் இரைப்பையில் வாயு சேர்ந்தால், அது உப்பிப்போகும். இப்படி உப்பிப்போவதுதான் வாயு என்று சொல்லப்படும் வ்யாதியாகும். இந்த வ்யாதி கால் நடைகளுக்கு வருவது ஸாதாரணம். இந்த வ்யாதி தீவ்ரமான நிலைமையையடைந்தால், கால் நடைகள் மூச்சுவிட முடியாமல் இறந்துபோகும். உணவுக் கோளாறுகளாலும், உணவு போகும் மார்க்கங்களில் ஏதாவது அடைத்துக்கொள்வதாலும் இந்த வ்யாதி உண்டாகிறது. உணவுக் கோளாறுகளில் ஸாதாரணமாக நேரக்கூடியது என்னவென்றால், கால் நடைகள் தின்று பழக்கப்படாத தீனிகளை யதேஷ்டமாகத் தின்பதே. கோடை காலங்களில் மாடுகளுக்கு அதிக தீனி அகப்படாது. மழை பெய்த பிறகு. புல் பூண்டுகள் யதேஷ்டமாக உண்டாகும். மாடுகள் ஸமயம் வாய்த்தால் அகப்பட்ட பயிர்களை யதேஷ்டமாகத் தின்னும். கோதுப் பயிர்களும், இரைப்பையில் சேர்ந்தபின் புளித்துப் போகக்கூடிய தீவனமும் இந்த வ்யாதியை உண்டாக்குகின்றன. சில ஸமயங்களில் விஷமுள்ள செடிகளைத் தின்பதாலும் உண்டாவதுண்டு. சரியான தீவனமில்லாமையாலும், இரைப்பையில் அன்ய வஸ்துக்கள் சேருவதாலும் வாயு உண்டாவதுண்டு.

நாள்பட்ட வாயுவானது அஜீர்ணத்தாலுண்டாகிற உப்புஸத்தாலும் இதர காரணங்களாலும் நேரிடுகிறது. இதை அந்தந்தக் காரணங்களை அநுஸரித்து ச்வஸ்தம் செய்ய வேண்டும்.

### வ்யாதிக் குறிகள்.

இந்த வ்யாதியில் முக்யமான லக்ஷணமென்னவென்றால், அடி வயிற்றின் இடதுபுற மேல்பாகம் பெருத்திருப்பதே. அங்குள்ள ருமன் என்னும் முதல் இரைப்பை உப்பிக்கொள்வதால் அடி வயிறு இப்படிப் பருத்துப்போகிறது. அதை விரலால் தட்டிப்பார்த்தால், மத்தளத்தைப் தட்டினாற் போல் ஓசை கேட்கும். மாடு மூச்சுவிடக் கஷ்டப்படும். உறுமும். அமைதியாயிராது. அசை போடுவது நின்றுவிடும். வ்யாதி தீவ்ரமாயிருந்தால், கண்கள் சிவந்துபோகும். வெறித்த பார்வையாயிருக்கும். சீக்ரம் மூச்சடைப்பு ஏற்படும். சீக்ரம் ச்வஸ்தம் செய்யாவிட்டால், சில மணிகளுக்குள்ளாக மாடு இறந்துபோகும். வயற்றுப்புஸம் குறைவாயிருந்தாலும், சிகித்ஸை நடந்து வந்தாலும் வ்யாதி சீக்ரம் கொல்லாமல், நீடித்திருக்கும்.

### சிகித்ஸை.

தீவ்ரமான நிலைமையில் இரைப்பையிலுள்ள வாயுவைப் போக்க முயலுவதே முக்யமான விஷயம். உப்பல் இருக்கும் இடது பக்கத்தை விடாமல் பிடித்து விடுவதால், உபத்ரவம் குறையும். எனிமாவை உபயோகிப்பது அதாவது ஆஸனத்வாரத்தின் வழியாக ஜலம் ஏற்றி மலத்தை கழற்றுதலும் நல்லது.

இவைகளைச் செய்தும் குணம் ஏற்படாமலிருந்து, மாட்டின் நிலை அபாயகரமாயிருந்தால், ருமன் என்னும் முதல் இரைப்பையைக் கீறிவிடவேண்டும். கால் நடை வைத்யர்கள், இதற்கென்றேற்பட்ட ஒரு ஆயுதத்தால் ருமனைக் கீறி விடுவார்கள். அவஸரமான ஸமயங்களில் கால் நடையின் ஸொந்தக்காரர்களே பின்வருமாறு கீறிவிடலாம். ஆனால் இதில் ஆபத்து நேரிட்டாலும் நேரிடலாம்.

மாட்டின் இடது விலாப் பக்கத்தில்,

கடைசி விலா எலும்புக்கும், இடுப்பு எலும்பின் நுனிக்கும், அடி முதுகெலும்புக்கும் ஸமதூரமான இடத்தில் இரைப்பையை நோக்கி ஒரு கூர்மையான பேனாக்கத்தியால் குத்தவும். அதனால் ஏற்படும் துவாரமானது, சுண்டுவிரல் பருமனுள்ளதும் ஆறங்குல நீளமுள்ளதுமான ஒரு மூங்கில் குழாய் போகக்கூடியவளவு பெரியதாக இருக்கவேண்டும். அந்த த்வாரத்தில் மூங்கில் குழாயைச் சொருகி, உள்ளே நழுவவிடாதபடி கட்டிவிடவேண்டும். இரைப்பையிலுள்ள வாயு குழாய் மூலமாக வெளிவந்துவிடும். குழாயை வேண்டுமானவரை அப்படியே வைத்திருக்கலாம்.

பின்வரும் மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| டர்ப்பன்டைன் எண்ணெய் | 1 ஔன்ஸ் |
| லின்ஸீட் எண்ணெய் | 1 பைண்ட். |

இரண்டையும் கலந்து கொடுக்கவும். இதன் பிறகு பின்வரும் விரேசன மருந்தைக் கொடுப்பதும் நல்லது.

| | |
|---|---|
| எப்ஸம் ஸால்ட் என்னும் பேதி உப்பு | 1 ராத்தல். |
| பொடிசெய்த சுக்கு | ½ ஔன்ஸ். |
| பொடிசெய்த கந்தகம் | 2 ஔன்ஸ். |
| தேன்பாகு | 8 ஔன்ஸ். |

இவைகளைக் கலந்து பட்டணம் படியால் அரையே அரைக்கால்படி வெந்நீரில் கலக்கி, குளிர்ந்தபிறகு உள்ளுக்குக் கொடுக்கவும்.

சில நாளுக்குப் பிறகு பின்வரும் மருந்தைக் கொடுக்கவும்.

| | |
|---|---|
| பொடிசெய்த பொட்லுப்பு | ½ ஔன்ஸ். |
| பொடிசெய்த கந்தகம் | 1 ஔன்ஸ். |
| பொடிசெய்த ஓமம் | ½ ஔன்ஸ். |
| பொடிசெய்த எட்டிவிதை | 1 ட்ராம். |

இவைகளை பட்டணம் படியால் காலே வீசம் படி கஞ்சியில் கலந்து உள்ளுக்குக் கொடுக்கவும்.

வ்யாதி ச்வஸ்தமான பிறகு சில நாள்கள் வரையில் பலமான தீனி கொடுக்கக்கூடாது.

## A CONSTIPATION CURE.

### மலச்சிக்கலுக்கு ஒரு சிகித்ஸை.

மலச்சிக்கலுக்கு பல காரணங்களுண்டு. ஆண்களைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்குத்தான் இது அதிகமாக ஏற்படுகிறது. இது வ்யாதிக்கு அறிகுறியேயொழிய தனியாக ஒரு வ்யாதி யல்லவாதலால், ஒவ்வொருவருடைய தேக ஸ்திதியையும் ஆராய்ந்து, அவரவர்களின் நிலைமைக்குத் தகுந்தபடி சிகித்ஸை செய்ய வேண்டும். மலபந்தத்துக்கு ஸாதாரண காரணங்களாவன:—குடலில் வாயு ஏற்படுவது, குடலில் முறுக்குகள் ஏற்படுவது, குறைவாய் ஜலம் குடிப்பது, தேகத்தின் உள்புறத்து அங்கங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்வது முதலியவைகளாகும்.

இப்படி மலபந்தத்துக்குப் பல காரணங்களிருந்தாலும், எல்லாவற்றிற்கும் பொதுவாய் ஒரு சிகித்ஸையிருக்கிறது. அதாவது ஜீர்ணக் கருவிகளை கையால் நன்றாய்ப் பிடித்துக் கொடுப்பதே. ஆனால் இதை ரொம்ப ஜாக்ரதையாகவும் மெதுவாகவும் செய்யவேண்டும். பிறரைக் கொண்டு பிடித்துவிடச் சொன்னால் சரியாகப் பிடித்துவிடமாட்டார்கள். இதற்கு ஸுலபமான வழியொன்றை மேல்நாட்டு டாக்டர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறார். இந்த முறையில் விசேஷ மென்னவென்றால், நாம் கையால் ஒன்றும் செய்யாமல் மூச்சு வாங்கி விடுவதனாலேயே, ஜீர்ணக் கருவிகளைப் பிடித்து விட்டதுபோலாகிறது. ச்வாஸிக்கும் போது அடிவயிற்றிலுள்ள தசைநார்களும், வயிற்றையும் மார்பையும் பிரிக்கும் டையாப்ரம் என்னும் சுவரும் குடலை ஒழுங்காக அழுத்தி எழும்புகின்றன. ரொம்ப பலமாக மூச்சுவிட்டால் குடலை அழுத்திப் பிடித்து விடுவதுபோன்ற வேலை நன்றாய் நடைபெறு



கிறது. இதற்கு நோயாளி செய்யவேண்டியது என்னவென்றால், ஒரு கட்டில் அல்லது பெஞ்சியின்மேல் விரித்த படுக்கையின் குறுக்காக குப்புறப் படுத்துக்கொள்ளவேண்டும் முழங்காலை மாத்ரம் படுக்கையிலிருந்து தொங்கவிட் டிருக்கவேண்டும். மலச்சிக்கலுள்ளவர் மெலிந்ததேகமுள்ளவராயிருந்தால், படுக்கையின்மேல் வயிற்றுக்கடியில் ஒருதலையணையை வைத்துக்கொள்ளவேண்டும். ஸ்தூலசரீரியாயிருந்தால் தலையணை வேண்டியதில்லை. இந்த நிலைமையில் 15 முதல் 20 நிமிஷங்கள் வரையில் இருக்கவேண்டும். இவ்விதம் படுத்துக்கொண்டு நிமிஷத்துக்கு 5 முதல் 7 தடவை விதம் அதிக பலமாக மூச்சு விட்டு வாங்க வேண்டும். இதற்குப் பிறகு காலையும் கையும் மெதுவாய் தூக்கிப்போட்டு அவைகளுக்குப் பயிற்சி கொடுக்கவேண்டும்.



## THE MORAL AND MATERIAL CONDITION OF THE LABOURERS.

BY C. S. SIVARAMAKRISHNA SARMA.

### கூலியாட்களின் பொருளாதார நிலைமையும், ஸன்மார்க்க நிலைமையும்.

நமது தேசத்தில் நல்ல சம்பளம் பெறும் வேலையாட்கள் அதிகரித்து வருகிறார்கள். இவர்கள் சுலுவாய் பொருளை சேகரித்து வைத்துக்கொண்டு, தங்கள் ஒழுக்கத்தையும், மதிப்பையும், ஸ்வாதந்தர்யத்தையும், அந்தஸ்த்தையும் மேம்படுத்திக் கொள்ளலாம். ஆனால் அனுபோகத்தில் இவ்வண்ணம் நடக்கவில்லை. இவர்கள் முன் ஜாக்ரதையில்லாமல் ஊதாரிகளாக ஜீவனம் செய்துகொண்டு, தங்கள் ஸௌக்யத்தையும் தங்கள் குடும்பத்தார் ஸௌக்யத்தையும் கெடுப்பதுமன்றி, தாங்கள் வஸிக்கும் ஜனஸமூகத்தையும் கெடுக்கிறார்கள்.

நல்ல காலத்தில் இவர்கள், தங்கள் ஸம்பாதனைகளை வீண் செலவிடுகிறார்கள். கெட்ட காலம் கிட்டும்போது திடீரென்று கஷ்டத்தில் முழுகிப்போகிறார்கள். வேலையாட்கள், முன் ஜாக்ரதையாக தங்கள் மூப்பு காலத்துக்கும், வ்ருத்தியாகிவரும் தங்கள் குடும்பத்துக்கும் தேவையான பொருளை க்ஷேமித்துக் கொள்வதில்லை. அநேகமாய் குடியிலும், வ்யபசாரத்திலும், பாபச் செயல்களிலும் பணத்தை ஒழிக்கிறார்கள். இது உத்ப்ரேக்ஷையாக சொன்னதல்ல. ஆலைகள் வேலை செய்யும் இடங்களில் போய் அவர்கள் ஸம்பாத்யத்தில் எவ்வளவு செலவிடுகிறார்கள், எவ்வளவு மிச்சம் பிடிக்கிறார்கள் என்பதை விசாரித்தால், இதன் உண்மை விளங்கும். இவர்கள் ஸம்பாதனையில் பெரும்பான்மைத் தொகை சாராயக் கடைக்குப் போகிறது ; மிக ஸ்வல்

பத்தொகை தான் க்ஷேமநிதிகளுக்கு போகிறது.

நல்ல காலம் என்பது உண்மையில் நல்ல காலமாக இல்லை. இது மகா கெட்ட காலமாக முடிகிறது, நல்ல காலத்தில் ஆலைகள் பூரா காலமும் வேலை செய்கின்றன. ஆண்களுக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஜாஸ்தி கூலி கொடுக்கிறார்கள். கிடங்குகளில் சரக்குகளை நிரப்பிக்கொண்டும் வாரிக்கொண்டும் இருக்கிறார்கள். சரக்குகள் உற்பத்தியாகிக் கொண்டும் ஏற்றுமதியாகிக் கொண்டும் இருக்கின்றன. ஸாமான் நிறைந்த வண்டிகள் தெருக்களில் சாய்ந்துகொண்டிருக்கின்றன; சரக்குகள் நிறைந்த ரெயில் வண்டிகள் இடைவிடாமல் ஓடுகின்றன; நம் தேசத்தில் செய்த சரக்குகளை நிறைய ஏற்றிக்கொண்டு கப்பல்கள் அநேகம் அன்ய தேசங்களுக்கு போகின்றன. இவைகளைப் பார்த்தால் எல்லோருக்கும் பணமும் பாக்யமும் நாளுக்கு நாள் பெருகுவதுபோல் தோன்றுகிறது. இத்தோற்றம் உண்மையா? அல்லது தோற்றம் தானா? சற்று ஊன்றி விசாரிப்போம். இப்படிப்பட்ட நல்ல காலத்தில் இவர்கள் விவேகத்தில் நாளுக்கு நாள் பெருகிவருகிறார்களா? வரவர நல்லொழுக்கத்தில் மேம்பட்டு வருகிறார்களா? தன் அடக்கத்தை மேன்மேலும் கையாண்டு வருகிறார்களா? தினம் தினம் ஈச்வர பக்தியில் உயர்ந்து வருகிறார்களா? நாளாவட்டத்தில் கேவலம் விஷய ஸுகத்தை வெறுத்து வருகிறார்களா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் த்ருப்தியானவிடை கிடைக்கமாட்டாது. ஏனென்றால் இப்படிக்கு ஒன்றும் நடக்கவில்லை.

நல்ல காலத்தில் வேலைக்காரர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை தீர விசாரிக்கையில், நல்ல காலத்தில் ஏராளமாக செலவு செய்கிறார்கள். இன்னும் ஜாஸ்தி சம்பளத்துக்கு சண்டை போடுகிறார்கள். ஜாஸ்தி சம்பளம் கிடைத்தவுடன் சம்பளத்தையெல்லாம் உடனே செலவிடுகிறார்கள் கெட்ட வழக்கங்களில் பழகுகிறார்கள். பழகின வழக்கங்கள் தொடர்ந்து வருகின்றன. அதிக சம்பளம் கிடைப்பதை க்ஷேமித்து வைக்காமல் அநேகமாய் குடியிலும், டம்பத்திலும், வ்யபசாரத்திலும் செலவழிக்கிறார்கள். நல்ல காலத்தில் இவர்கள் நிலைமை இதுதான்.

ஆகையால் ஜனங்களுக்கு விவேகமும் முன் ஜாக்ரதையும் இல்லாமலிருக்கும்போது அவர்களுக்கு எவ்வளவு செல்வம் கிடைத்தாலும் ப்ரயோசனப்படாது. நல்ல காலத்தில் வயிறு வெடிக்க சாப்பிடுவதும், கெட்டகாலத்தில் வயிறு ஒட்ட பட்டினி கிடப்பதுமாக இருப்பார்கள். வ்யாபாரம் படுத்துக்கொண்டபோது நல்ல காலத்தில் க்ஷேமித்து வைக்காமல் போனோமே என்று நினைப்பதில் ஆறுதல் உண்டாகுமோ?

மனிதன் என்ன கார்யத்துக்காக பூமியில் ஜனனம் எடுத்திருக்கிறான்? துணி, பட்டு, விளையாட்டு ஸாமான், பீங்கான் பாத்ரம் முதலியவைகளை செய்வதற்காகவா? அல்லது மலிவான இடத்தில் சரக்கு வாங்கி பிரியமான இடத்தில் விற்பதற்காகவா? பூமியை சாகுபடி செய்வதற்காகவா? தான்யங்களை பயிரிடுவதற்காகவா? மாடுகளை மேய்ப்பதற்காகவா? அல்லது பணத்தை சேர்த்து வைப்பதற்காகவா? அல்லது பணத்தை செலவழிப்பதற்காகவா? மேல்கண்ட கார்யங்களுக்காக மனிதன் ஜெனனம் எடுத்திருக்கும் பக்ஷத்தில், நம் தேசத்து ஐச்வரியத்தைப்பற்றி நாம் ஸந்தோஷப்படலாம்.

ஆனால் மனித ஜன்மத்தின் நோக்கம் இது ஒன்றுமல்ல. மனிதனுக்கு சதையுள்ள அவயவங்கள் இருப்பதுபோல், அவனுக்கு புத்தியும் அன்பும் இரக்கமும் இல்லையா? அவன் தன் மனதுக்கும் ஹ்ருதயத்துக்கும் செய்ய வேண்டிய கடமைகள் இல்லையா? அவனுக்கு வயிறு இருப்பதுபோல், அவனுக்கு ஆத்மாவும் இருக்கவில்லையா? ஆகையால் ஜனங்களின் ஒழுக்கமும் விவேகமும் மேன்மையடைந்தாலொழிய, எந்தத் தேசத்தாரையும் ஐச்வர்யத்தில் இருப்பதாக சொல்லக்கூடாது. சதையும் எலும்பும் சீராயிருந்தால் மாத்ரம் போதாது. ராவணனிடத்தில் எல்லா ஐச்வர்யங்களும் நிறைந்திருந்தும் அவன் ஏன் அழிந்துபோனான்? தயை, ஸத்யம், சுத்தம் இந்தகுணங்களில்லாததால்தான்.

செல்வம் ஒன்றே ஐச்வர்யத்துக்கு அறிகுறியாகாது. செல்வமிருந்தும் மனிதன் ஸ்வபாவம் சீராகாமல் அப்படியே இருக்கலாம்; மேலும், முன்னிருந்ததைவிட இன்னும் கெட்டும் போகலாம். ஜனங்களின் குணம் வரவர மேன்மைப்பட்டு வந்தாலொழிய, அவர்களுடைய பணப்பெருக்கானது கேவலம் விஷய போகங்களுக்குத்தான் ஸாதகமாகும். குணப்பெருக்கும் பணப்பெருக்கும் ஸமமாக கைகோத்துச் செல்லவேண்டும். நல்ல காலத்தில், படிப்பில்லாமல் அதிக உழைப்புள்ள வேலைக்காரனுக்கு சம்பளத்தை இரண்டு மடங்காக்கினால், அவன் அதை என்ன செய்வான், பாருங்கள்? அவன் ஸம்ப்ரமமாய் சாப்பிடுவதற்கும் குடிப்பதற்குந் தான் இது ஸாதகமாகிறது. ஜனங்களுக்கு குணப்பெருக்கைக் கொடுக்காமல் பணப் பெருக்கை மாத்ரம் கொடுக்கும் ஐச்வர்யத்தால் அதிக கேடு விளையுமேயொழிய நன்மை விளையாது. ஞானமும் குணமுந்தான் மனிதனுக்கு கௌரவத்தை உண்டாக்கக்கூடியவை. இந்த குணப்பெருக்குதான் ஒரு தேசத்தாரின் உண்மையான ஐச்வர்யத்துக்கு அடையாளமாகும். ஏராளமாய் சீட்டித் துணிகளையும், விளையாட்டு ஸாமான்களையும், இரும்பு ஸாமான்களையும், பீங்கான் பாத்ரங்களையும் செய்வதனாலேயே ஒரு தேசத்தை ஐச்வரியம் நிறைந்ததாக சொல்லக்கூடாது. "ஆத்மலாபத்தைக் காட்டிலும் மேன்மையான லாபம் உலகத்தில் எங்குமில்லை" யென்று நமது வேதத்திலும், "உலகம் பூராவும் உனக்கு கிடைப்பதாயிருந்தாலும் உன் ஆத்மாவை நீ இழப்பதாயிருந்தால், அதனால் உனக்கு என்ன லாபம்?" என்று க்றிஸ்தவ வேதத்திலும் கூறப்பட்டிருக்கிறது; மேலும் இன்னொரு இடத்தில் ஜீஸஸ் க்ரைஸ்ட் ப்ரபு சொன்னதாவது. "பணக்காரன் ஸ்வர்க்கவாசலில் நுழைவதைக் காட்டிலும் அதிக சுளுவாய் ஒட்டகம் ஊசிக்காதில் நுழைந்து செல்லும்." வெரும் பணக்காரன் கதி இதுதான். வெறும் பணக்காரன் என்பவன் தான் பூஜிக்கும் இரும்புப் பெட்டி போலிருப்பான்; இரும்புப்பெட்டிக்கு எவ்வளவு அறிவும் குணமும் உண்டோ அவ்வளவு அறிவும் குணமும் உடையவன். ஆனால் இரும்பு பெட்டியை ஒருபடி மேலானதாகச் சொல்லவேண்டும்; ஏனென்றால் இரும்பு பெட்டியிடம் தீக்குணமும் தீச்செய்கையுமில்லை; வெறும் பணக்காரனுக்கோ இது கையிருப்பு; பணம்தான் ப்ராணன்.

[illegible] இங்கிலாந்திலிருக்கும் ஒரு பாதிரியார் அடியில் கண்டவாறு எழுதியிருக்கிறார்: "வ்யவஸாயக் கூலிக்காரர்கள் முன்னிருந்ததைவிட இப்போது அதிக கூலி ஸம்பாதித்து வருகிறார்கள். இந்த விஷயம் ஸந்தோஷகரமாயிருந்தாலும், இதன் பயன் வ்யஸனகரமாக இருக்கிறது. தற்காலம் இவர்களுக்கு அதிக கூலி கிடைப்பதால், ஏராளமாய் சாராயம் குடித்து வருகிறார்கள். செல்வத்தை இவ்விதம் துர்விநியோகப்படுத்தி வந்தால், இதை ஐச்வர்யமாக எண்ணலாமா? இதற்காக நாம் கடவுளுக்கு வந்தனம் அளிக்கக்கூடுமோ? ஒரு

தேசத்தின் உண்மையான ஐச்வர்யமானது முக்யமாய் அந்த தேசத்தின் குணப்பெருக்கே யொழிய பணப்பெருக்குமட்டுமல்ல. பணமும் ஐச்வர்யத்துக்கு ஒரு முக்யமான லக்ஷணம்தான்; ஆனால் அது ஒன்றுமட்டுமே ஐச்வர்யமாகாது. பொதுவாய் எல்லா ஸுகத்தையும் ஸந்தோஷத்தையும் இகலோகப் பொருள்களையும் ஜனங்கள் கூடியவரையில் ஸமபாகமாகவே அனுபவிக்கவேண்டும்."

இவ்வண்ணம் கூறிவருவதால் நான் ஜனங்களுக்கு லோப குணத்தை போதிப்பதாக எண்ணக்கூடாது. நானும் லோபியை வெறுப்பவன்தான். நான் வற்புறுத்துவதெல்லாம் கூடி என்னவென்றால், எல்லோரும், வருங் காலத்துக்கு தேவையான பொருளை இளமை ப்ராயத்திலேயே க்ஷேமித்து வைக்கவேண்டும் என்பதுவே. கெட்டகாலம் கட்டாயம் கிட்டும். பகல் காலத்துக்குப்பின் இராக்காலம் கட்டாயம் வருவதுபோல், நல்ல காலத்துக்குப்பின் கெட்ட காலம் வரும். கெட்ட காலத்துக்குத் தேவையான பொருளை நல்ல காலத்திலேயே சேர்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவனும் முதுமைப் பருவத்தில் கௌரவமாகவும் ஸௌக்யமாகவும் காலம் கழிப்பதற்கு இளமைப் பருவத்திலேயே கொஞ்சம் கொஞ்சமாக க்ஷேமித்து போதுமான த்ரவ்யத்தை உருவாக்கி வைக்கவேண்டும். தன் முயற்சியால் எல்லாவற்றையும் வெல்லலாம். சிக்கனமாயிருப்பவனை பணத்தாசை கொண்டவனாகவாவது, தன்னயத்தை தேடுகிறவனாகவாவது எண்ணக்கூடாது. சிக்கனமென்பது மேல் கண்ட குணத்துக்கெல்லாம் வேறுபட்டது. சிக்கனமென்பது ஸ்வாதந்தர்யத்தை அடையச் செய்யும் குணம். சிக்கனமென்பது ஸம்பாத்யத்தை துர்விநியோகப்படுத்தாமல் ஸத்விநியோகப்படுத்த வேண்டுமென்றும், ந்யாயமாய் பொருள் ஸம்பாதித்து க்ரமமாய் பொருளை செலவிடவேண்டுமென்றும் போதிக்கிறது. பணம் ஸம்பாதிப்பது புதைத்து வைப்பதற்கல்ல. பணம் ஸம்பாதிப்பது பெரும் பரிவாரங்களை வைத்துக்கொள்வதற்கல்ல. பணம் ஸம்பாதிப்பது என்னத்துக்கென்றால், தான் ஸ்வாதந்தர்யமாய் ஜீவிக்கும்படியான பெரும்பதவியை அடைவதற்குத்தான்.

ஸி. எஸ். சிவராமக்ருஷ்ண சர்மா.

## BOOKS OF THE MONTH.
## நூதன புஸ்தகங்கள்.

### எல்லாம் நானே.*

கா. சு. சேஷகிரி ஐயர் எழுதிய "எல்லாம் நானே" என்னும் சிறு புஸ்தகம் ஒன்று வரப்பெற்றோம்.

இதில் ஆசிரியர் வேதாந்த விஷயமாகிற "ப்ரஹ்மைவாகம்" என்னும் உயர்ந்த கருத்தை, யாவருமறியும்படி மிகுந்த சொற்சாதுர்யத்துடன் விரித்துரைத்திருக்கிறார். இது ஒரு சிறிய அரிய புத்தகம் விலை அணா 2.

### புரந்தரன்: அற்புதக் கணையாழி.

இது பங்கிம் சந்த்ர சட்டர்ஜி என்னும் வங்காள நாவல் ஆசிரியர் இயற்றிய ஒரு சிறு நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு. இதை மொழிபெயர்த்தவர் மதுரை பாண்டியநேசன் பத்ராதிபர் சிதம்பர புன்னைவனநாத முதலியார் ஆவர். இதன் நடை இனிமையாய் அமைந்திருப்பதோடு, கதையில் இடையிடையே சில நல்ல செய்யுள்கள் ஸமயோசிதமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



### மாதரைப் பழியேல்.*

இது மிஸ்டர் த. தாமஸ் பிள்ளை இயற்றிய ஒரு சிறு நூல். பெண்பாலரை நிந்திக்கும் ஜனங்களைக் கண்டிக்கும் நோக்கத்துடன் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. பெரியோர் இயற்றிய நூல்களிலிருந்து எடுத்த மேற்கோள்களைக் கொண்டும் உலகானுபவத்தைக் கொண்டும் பெண்பாலரின் உயர்வையும், அவர்களால் உலகத்துக்கு ஏற்படும் நன்மைகளையும் ஆசிரியர் நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். இந்த நூலின் கடைசியில் பெண்களுக்கு இருக்கவேண்டிய நற்குணங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை அணா 3.

### கனகமாலை.*

இது சேம்பூர் வித்வான் வி. ஆறுமுகம் சேர்வை இயற்றிய ஒரு நாவல். இதன் கதைப் போக்கு நேர்த்தியாயும், நடை ஸுலபமாயும் இருட்பதோடு, இதில் ஸமயோசிதமான பல நீதிகளும் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூ. 1—4—0.

### திருவண்ணாமலை ஸ்ரீ ராமானந்த நிலையத்தின் 4-ம் வர்ஷத்திய அறிக்கைப் பத்ரம்.

ராமானந்த நிலயமென்னும் இந்த ஸபை ஆனந்த வர்ஷம் ஆவணி மாஸத்தில் திருவண்ணாமலையில் ஸ்தாபிக்கப்பட்டது. வேதாந்த ஸித்தாந்த சாஸ்த்ர விசாரணை; ஸமரஸ ஸன்மார்க்காபிமானம், பொதுநல ஊழியம் முதலியவைகளே இந்த ஸபையின் நோக்கமாகும். சென்ற வர்ஷத்தில் இந்த நோக்கத்துக்கேற்ப பல ப்ரஸங்கங்கள் நடைபெற்றனவென்று ரிபோர்ட்டால் தெரியவருகிறது.

### ஸ்ரீ ரமண மகரிஷிகள் திருத் தசாங்கம்.

இது செந்தமிழ்க் கவி கே. வி. ராமச்சந்திர ஐயர் இயற்றியது. பேருக்கேற்ப பத்து வெண்பாக்கள் கொண்டது. திருவண்ணாமலையில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ ரமண மகரிஷியின் மேல் பாடப்பட்டது. இனிய நடையில் அமைந்துள்ளது. இதில் ரமண மகரிஷியின் படம் ஒன்றும் அடங்கியுள்ளது.

* இந்தக் குறிப்பிட்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் சென்னை, கொண்டி செட்டித் தெரு, ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

## GENERAL NOTES.
## பொதுக் குறிப்புகள்.

### கோவாபரேடிவ் பால்சாலைகள்.

நமது தேசத்தில் சென்ற 1916-17-ம் வருஷத்தில் 12 பால்சாலைகள் இருந்தன. இவற்றில் 9 பால்சாலைகள் பம்பாய் ராஜதானியில் இருக்கின்றன. ஐக்ய மாகாணங்களில் இரண்டும் மத்யமாகாணங்களில் இரண்டும் இருக்கின்றன. பம்பாய் ராஜதானியின் கோவாபரேடிவ் ரெஜிஸ்ட்ரார், பால்சாலைகளுக்கு கவர்ன்மெண்டாராவது முனிஸிபாலிடிகளாவது உதவி செய்யாவிட்டால், அங்குள்ள பால்சாலைகள் வ்ருத்தியடைவது கஷ்டமென்கிறார். ஐக்ய மாகாணங்களில் உள்ள பால்சாலைகளில் மெம்பர்களின் பாலேயன்றி இதரர்களிடமிருந்தும் பால் வாங்கி விற்கிறார்களாம். அப்படி இதரர்களிடமிருந்து பால் வாங்காமல் மெம்பர்களின் பாலையே விற்று ஸங்கத்தை நடத்த எண்ணியிருந்தார்கள். ஆனால் அது முடியாமல் போயிற்று.

மத்ய மாகாணங்களிலுள்ள இரண்டு பால் சாலைகளும் நாக்பூரிலிருக்கின்றன. அவை இரண்டும் நன்றாய் நடந்து வருகின்றனவாம். அவைகள் நாக்பூர்வாஸிகளுக்கு நேர்த்தியான பாலும் வெண்ணெயும் ஸப்ளை செய்து வருகின்றன. அவைகளுடைய பண நிலைமையும் த்ருப்திகரமாக இருக்கிறது.

கவர்ன்மெண்ட் கோவாபரேடிவ் அதிகாரிகள் பால்சாலைகள் விஷயமாகக் கொண்டிருக்கும் அபிப்ராய மென்னவென்றால், பட்டணங்களிலுள்ள இடையர்களைக் கொண்டு பால் ஸங்கம் ஏற்படுத்தி அதன் மூலமாக பாலின் தன்மையையும், அளவையும் வ்ருத்தி செய்வதைவிட, பட்டணங்களுக்குப் பக்கத்திலுள்ள சுற்றுப் புறத்து க்ராமங்களிலிருந்து பாலை வாங்கி பட்டணங்களுக்குக் கொண்டுபோய் விற்க ஏற்பாடு செய்வது ச்லாக்யமென்பதே. பம்பாய் ராஜதானியில் இவ்விதமுயற்சி முதல் முதலில் ஆரம்பமாகுமென்று சொல்லப்படுகிறது.

### க்ளாஸ், பீங்கான் முதலியவைகளை செப்பனிடுதல்.

சுத்தமான கண்ணாடித் துண்டுகளை நன்றாய்ப் பொடிசெய்து, பட்டில் வஸ்த்ரகாயம் செய்தால், நுண்மையான கண்ணாடிப்பொடி கிடைக்கும். அந்தப் பொடியை வேண்டிய பிசுக்குண்டாகிற வரையில் கொஞ்சம் கொஞ்சமாய் முட்டைக்கருவுடன் கலந்து, அரைத்து வைத்துக்கொண்டால், உடைந்த க்ளாஸ், பீங்கான் முதலியவைகளை ஒட்டுவதற்கு நல்ல பிசினாகும். வேறு இடத்தில் ஸாமான் உடைந்தாலும் உடையுமே யல்லாமல் ஒட்டின இடத்தில் உடையவே உடையாது.

### வேர்களை கபாத்து செய்தல்.

காய்ப்பில்லாமல், ஓங்கித்தழைத்து வளரும் மரங்களின் வேர்களை ஸாமர்த்யமாய் வெட்டிவிட்டால் அந்த மரங்கள் பிறகு நல்ல பலன் கொடுக்கும். வெட்டுவதற்கு அநுபவம் வேண்டும். மரத்தைச்சுற்றி ஆறு அடிக் கப்பால் மூன்றடி ஆழம் குழி வெட்டினால் வேர்கள் தென்படும். தென்படா விட்டால் தென்படுகிறவரையில், கொஞ்சம் கொஞ்சமாய், மரத்தையணுகி வெட்டிக்கொண்டு போனால், ஒரு இடத்தில் அகப்படும். வேரடர்ந்து வளர்ந்திருக்கு மிடத்தைப்பார்த்து கூர்மையான கத்தியால் வேர்களை வெட்டி விடவேண்டும். பிறகு மண்ணுடன் இருபது அல்லது முப்பது கூடை எருவையும் கலந்துபோட்டு குழியை மூடிவிடவேண்டும்.

### உள் நோக்கிவளரும் நகம்.

நகத்தைச்சுற்றி சதை வளர்ந்து நகம் பள்ளத்திலாழ்ந்து வலியும் உபத்ரவமும் உண்டானால், பொடி செய்த படிக்காரத்தை தினந்தோறும் தூவிக்கட்டவும். இப்படிச் செய்வதற்கு முதல் நாள் ஸோப்புக் கரைத்த ஜலத்தால் ஒற்றடம் கொடுக்கவும். பிறகு, நகத்துக்கும் சதைக்கும் நடுவில் படிக்காரப் பொடியை வைத்து, நழுவாமலிருக்கும்படி பஞ்சு வைத்துக்கட்டினால், நாலு அல்லது ஐந்து நாட்களில் வலிநீங்கும். சதைக்குள் நகம் போகாமல் சரியாய் வளரும். யாதொரு வலியும் துன்பமும் இல்லாமல் ஸுலபமாய் ச்வஸ்தமாகும். சீக் கொள்ளாது.

### ஆப்பிள் பழம் ஒரு மருந்து.

தினந்தோறும் இரவில் படுக்கப் போகும் பொழுது, நன்றாய் முதிர்ந்து ரஸமுள்ள ஆப்பிள் பழங்களைச் சாப்பிட்டுவந்தால், மலச்சிக்கல் கிட்ட அணுகாது. இதற்குப் புளிப்பு ஆப்பிள்களே ரொம்ப எடுத்தவை. பித்த சரீரமுள்ளவர்களுக்கு ஆப்பிள் சாப்பிடுவது மிகவும் ஏற்றது. சில பேர்களுக்கு புளிப்பு ஆப்பிள் ஒத்துக்கொள்ளுவதில்லை. அப்படிப் பட்டவர்கள் வேகவைத்த ஆப்பிளைச் சாப்பிட்டால் சரியாயிருக்கும்.



### குழந்தையின் ஆகாரம்.

தாய்ப்பாலில்லாத குழந்தைக்கு, கலப்பில்லாத பசுவின் பால் தான் சரியான ஆகாரம். குணத்தில் அநேகமாய்த் தாய்ப்பாலுக்குச் சமானம். பால் ‘புட்டி’ முதலியவை பசுவின் பாலுக்குச் சமானமாகமாட்டா. உடம்பிற்கும் கெடுதலை யுண்டுபண்ணலாம்.

### கொசு.

பெண் கொசுக்கள், கிணறு, நீர்த்தொட்டி முதலிய விடங்களில் முட்டை வைப்பதற்காக ஏராளமாக அடைகின்றன. அப்படிப்பட்ட இடங்களில், “நாப்தலின்” உருண்டைகளை ஒரு துணியில் முடிந்து, தொங்கவிட்டு மேலேயும் மூடிவிட்டால் பெண் கொசுக்கள் வரமாட்டா. இதனால் கிணற்றுநீர், “நாப்தலின்” நாற்றமடித்துக் கெட்டுப்போகாது.

### ஸுகாதார விஷயங்கள்.

1. பசி, காமக்ரோதாதிகள் இவைகளை அடக்கவேண்டும். மனம்போன போக்கெல்லாம் போகாமல் மனதை யடக்கவேண்டும்.

2. உடம்புக்கு ஸுகமானதும், புஷ்டிதரக்கூடியதுமான ஆகாரத்தைப் புஜிக்கவேண்டும். உடம்புக்கு வேண்டிய எல்லா விதமான ஆகார ஸத்துக்களும், சரியான அளவில் ஆகாரத்திலிருக்கவேண்டும்.

3. குடி, புகையிலை உபயோகித்தல், காபி, டீ, குடித்தல், மாம்ஸம் சேர்த்துக் கொள்ளுதல், ஸுலபமாய் ஜீர்ணிக்க முடியாத ஆகாரங்களைச் சாப்பிடுதல், காரமுள்ள வாஸனை த்ரவ்யங்கள், தொடு சுவைகள் முதலியவைகளை உபயோகித்தல் ஆகிய இவைகள் கூடாது.

4. சர்க்கரை, மாப்பண்டங்கள் இவைகளை மிதமாய்ச் சாப்பிடவேண்டும்.

5. ஆகார வகைகள் சுத்தமாகவும் ஸாதாரணமாகவும் இருக்கவேண்டும். ஆகாரங்கள் சாஸ்த்ரப்படி சரியாய்ப் பக்வம் செய்யப்பட்டனவா யிருக்கவேண்டும்.

6. சரீரத்திற்குப் போதுமான உஷ்ணத்தையும் பாதுகாப்பையும் கொடுக்கக் கூடியதாயும், பார்வைக்கு டம்பமா யில்லாமலும், சரீரத்தை இறுக்கிப் பிடிக்காமலும், கண்டபடி கனத்த வஸ்துக்களடங்கி யிருக்காமலுமிருக்கிற உடையை தரிக்கவேண்டும்.

7. போதுமானவளவு சரியான தேகப் பயிற்சி வேண்டும். உட்கார்ந்த விடத்திலிருந்து வேலை செய்கிறவர்களுக்கு இது ரொம்ப முக்யம்.

8. விஷத்தன்மையுள்ள மருந்துகள் சாப்பிடக் கூடாது. முக்யமாய், பேடண்ட் மருந்துகள் சாப்பிடுகிற வாடிக்கையை நிறுத்திவிடவேண்டும்.

9. இருக்கு மிடத்தையும், சரீரத்தையும் வெகு சுத்தமாய் வைத்திருக்க வேண்டும்.

10. போதுமான நல்ல நித்ரையும், ச்ரம பரிகாரமும் வேண்டும்.

11. கோவில்கள், பள்ளிக்கூடங்கள், வீடுகள், முக்யமாய் நித்ரை செய்யும் அறைகள் முதலியவைகள் காற்றோட்டமாய் இருக்க வேண்டும்.

12. ஈ, கொசு முதலிய வ்யாதி வ்ருத்தி பண்ணும் ஜந்துக்களைக் கிட்ட அணுக விடக் கூடாது.

### ஸுக ப்ரஸவம்.

ப்ரஸவ காலத்தில், முக்யமாய் டவுன்களில் வஸிக்கும் ஸ்த்ரீகள் படும் கஷ்டமும், அக்காலத்தி லுண்டாகிற த்ரவ்ய நஷ்டமும் உயிர்ச்சேதமும் இவ்வளவென்று சொல்ல முடியாது. அதற்குக் காரணம் என்னவென்று விசாரித்துப் பார்த்தால், தோஷம் அவ்வளவாக ப்ரஸவிக்கிற ஸ்த்ரீயிடத்திலில்லை யென்றும், பிறக்கிற சிசு பெருத்துப்போவதே முக்ய காரணமென்றும் தெரியவருகிறது.

ஆனால், சிசு பெரிதாவதற்குக் காரணம் தாய் உட்கொள்ளும் உணவிலிருக்கிறது. மஸ்து

கொடுக்கக்கூடிய, தான்யங்கள் பருப்பு, ரொட்டி, கடலைகள், இன்னும் சில மாம்ஸாதிகள் முதலியவைகளை சாப்பிடுவதால், சிசு பெருத்துப்போய், ப்ரஸவ காலத்தில் தொந்திரவு கொடுக்கிறது. ஆகவே ஒரு கர்ப்பிணி இத்தகைய ஆகாரங்களைக் குறைத்து, பழவர்க்கங்கள், காய்கறிகள் பச்சடி வகைகள் முதலியவைகளைத் தாராளமாக உபயோகப்படுத்தி வரவேண்டும். தவிரவும் கண்டபடி காபி, டீ, நீர், பால் முதலியவைகளை ஏராளமாய்ச் சாப்பிடுவதால், கர்ப்பாசயம் விரிந்து நாளாக ஆக, ச்ரமத்தினால் அதன் தசைநார்கள் தளர்ந்து போய் விடுகின்றன. கர்ப்பிணிகள் காய்கறிகளைச் சரியானபடி பக்வம் பண்ணாமல் சாப்பிடுவது மற்றொரு தப்பிதம். அவர்களுக்கு ஏற்ற ஆகாரம் கொடுக்கவேண்டிய தவச்யம். தான்யாதிகள் முதலியவைகளை ரொம்ப கொஞ்சமாயும், பழவர்க்கங்களை ஏராளமாயும், உபயோகிக்கவேண்டும். பானங்கள், ரொம்ப மிதமாயும், ரொம்ப தாகமாயிருக்கும் வேளைகளில் மட்டும் சாப்பிடுவதென்றும் வைத்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் கரு மெலிந்து, அதின் தலை சிறுத்திருக்கும். ப்ரஸவத்தில் குழந்தை ச்ரமமில்லாமல், வெளிவர ஹேதுவாகும்.

இந்த மாதிரி செய்வதற்கு ஸ்த்ரீகள் புத்திசாலிகளாகவும் படித்தவர்களாயும் இருக்க வேண்டும். படிப்பென்றால், பள்ளியில் படிக்கும் படிப்பும், கற்றுள்ள கலைகளுமல்ல. தன் மனதை யடக்கி ஆளும் சக்தியே படிப்பு. அந்தப் படிப்புள்ள ஸ்த்ரீ மேற்கூறியபடி சாப்பாடுகளை ஒழுங்குக்குக் கொண்டுவந்து, ப்ரஸவ காலத்தில் ச்ரமமில்லாமல் ப்ரஸவிப்பாள். குழந்தையும் தேக சௌக்யமுள்ளதாயிருக்கும்.

### முடக்கு ஜ்வரம்.

"கொச்சிதேசன்" என்ற டாக்டர் சுதேசமித்திரனில் முடக்கு ஜ்வரத்திற்கும் தற்காலம் பரவி வரும் தொத்து ஜ்வரத்திற்கும் மருந்தொன்றை தெரிவித்திருக்கிறார்.

"இவ்வித ஜ்வரங்களுக்கு கொயினாமருந்தை உபயோகிப்பது உசிதமல்ல. ஆனால் சீக்ரத்தில் குணமாகக் கூடியதும் விலை ஸரஸமுள்ளதும், ஏழைகளுக்கு ஸகாயமுள்ளதுமான சிறந்த ஔஷதமொன்றை அடியில் விவரிக்கின்றேன். அதாவது மேற்படி ஜ்வரம்கண்டவுடனே நிலவேம்பு என்னும் மூலிகையில் ஒரு அவுன்ஸ் எடுத்து பத்து அவுன்ஸு கொதி நீரில் போட்டு கஷாயம் வைத்து, அதில் ஒரு அவுன்ஸில் 10 க்ரெயின் நவச்சாரமும், 60 க்ரெயின் எப்ஸம் ஸால்ட்டும் கொஞ்சம் கரும்புச் சர்க்கரையும் கலந்து 3 மணிக்கொரு தடவை கொடுத்து வரவும். [க்ரெயின் என்றால் ஒரு நெல்லெடை]. இருமலுண்டானால், ஒரு அவுன்ஸ் அதிமதுரமும் கூட்டி கஷாயம் வைக்கவும். பேதி அதிகமானால், எப்ஸம் ஸால்ட்டை பாதியளவுக்கு குறைத்துவிடவும். 12 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு பாதிடோஸ் கொடுக்கவும். பால், சர்க்கரை சேர்த்து, கோதுமை ரவைக்கஞ்சி, அல்லது ஜவ்வரிசி, பொடி அரிசி முதலியவைகளாலான கஞ்சிகளைக் கொடுத்து வரவும். இவ்விதமாக ரோகம் பூரா குணமாகும் வரையில் வ்யாதிஸ்தன் மேற்படி முறையைக் கையாடி வரவும். மதுபானம் செய்யவே கூடாது. நித்ரை வராவிட்டால், வெங்காயத்தை நெய் அல்லது தேங்கா யெண்ணெயில் பொரித்து அதிகமாய் சாப்பிடவும். இரவில், ரோகி, இரண்டு கால்களையும் வெந்நீரில், அரைமணி நேரம் நன்றாய் வியர்வை வரும் வரையில், வைத்திருக்கவும். சயன அறையில், பளிங்கு ஸாம்ப்ராணியை அதிகமாய் தூபம் பிடித்து வரவும். குளிர்ந்த காற்றுள்ள ஸ்தலத்தில் ரோகியை படுக்க வைக்கக் கூடாது.


# ஜனாபிமானி.

| தபால் சார்ஜ் உள்பட | |
| --- | --- |
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர். G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி௵ புரட்டாசிமீ, SEPT.—OCT., 1918. { ஸஞ்சிகை 9. No. 9.


## CHILD EDUCATION IN INDIA

### இந்தியாவில் பாலர்களின் கல்வி

சென்ற பத்தொன்பதாவது நூற்றாண்டில், மெகாலே என்னும் ப்ரபுவும் இன்னும் சில கனவான்களும் இந்தியர்களுக்கு இங்கிலீஷ் படிப்புச் சொல்லித் தர வேண்டுமென்று எண்ணினார்கள். இங்கிலண்டிலிருந்த பள்ளிக்கூடங்களை மாதிரியாக வைத்துக்கொண்டு அந்தப் பள்ளிக்கூடங்களில் கற்பித்து வந்த பாடங்களை யெல்லாம் இந்தியாவில் ஸ்தாபித்த இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களில் கற்பித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் சீமையில், பண்டைய காலவிதிகளையும் உபயோகமற்ற முறைகளையும் மனப்பாடம் பண்ணுவதுதான் கல்வியென்று வழங்கிற்று. அதை மந்திரியாகக் கொண்ட இந்தியப் பள்ளிக்கூடங்களிலும், அதே பாடங்களை மனப்பாடம் பண்ணுவது வழக்கமாயிற்று. அன்று முதல் இன்றுவரையில், இந்தியாவுக்கு ஸம்பந்தமில்லாத பட[illegible]களை மனப்பாடம் பண்ணியே, பெரிய பரீக்ஷைகளில் தேறுகிறோம். மனப்பாடம் பண்ணுவதில் புத்தியை அதிகமாய் செலவிடுவதால், மனஸ் விசாலமாகாமல் குறுகியும், சரீரம் பலவீனமாகியும், குமாஸ்தா வேலைக்குமட்டுமே லாயக்குள்ளவர்களாகி இருக்கிறோம். ஆனால் சீமையிலும் இப்படித்தான் இருக்கிறதோ வென்றால், இல்லை. அவர்களும் இவ்வாறு இருக்கவேண்டியவர்கள் தான். ஆனால் அதிருஷ்டவசத்தால் தப்பினார்கள்.

அதாவது கொஞ்ச காலத்திற்குமுன் க்ரீஸ் தேசத்து அபூர்வமானவையும் அருமையானவையுமான கலைகள் ஐரோப்பாவெங்கும் பரவின. ஐரோப்பா முழுவதும் புதிய உயிர் பெற்றது. இயற்கையமைப்பின் வனப்பும், வஸ்துக்களின் அழகும், ஸங்கீதமும், சித்ரங்களும், மனிதர்களுடைய கவனத்தைக் கவரலாயின. மனஸ் விசாலமாயிற்று. புதுநாகரீகம் ஆரம்பமாயிற்று. இது இங்கிலண்டிலும் பரவிற்று, அங்கும் [illegible] உண்டாயின. பள்ளிக்கூடங்களில் முன்னிருந்த வழக்கங்கள் போய், புத்தி விசாலமும், மனோவலிமையும், தேக வலிமையும், [illegible] படிப்பைப் போதிக்க ஆரம்பித்தார்கள். சீமையில் படிப்பு விஷயங்கள் இந்தமாதிரி மாறியிருக்க,

இந்தியாவிலே அதிகமான மாறுதல் இல்லாமலேஇருந்துவருகிறது. நம்முடைய தாழ்ந்த ஸ்திதியை நாமே மாற்றிக்கொள்ளவேண்டியதுதான். நம்முடைய புராதனமான, கலைகளையும், ஸங்கீதத்தையும், சித்ர சில்பாதி சாஸ்த்ரங்களையும் கற்று அவைகளின் அருமை பெருமைகளை நாம் அறிவதுடன், உலகத்திற்கே எடுத்துக்காட்டவேண்டும். சொல்லிக்கொடுப்பதில், தற்காலம் பிறதேசங்களில் கையாடிவருகிற முறைகளில் நமக்கு எவை இசைந்தவைகளாக இருக்கின்றனவோ, அந்த முறைகளால் பாடம் கற்பித்து, நம்முடைய பழைமையான கலைகளுக்குப்புது உயிர் கொடுக்கவேண்டும். நம்முடைய தேசம் முன்னுக்கு வருவதற்காக நாம் செய்யவேண்டிய அநேக விஷயங்களுள் கல்விதான் மிகவும் ப்ரதானம். கல்விதான் ஒரு ஜனஸமூகத்தின் உயிர்நிலை. ஒரு ஜாதியாரின் பெருமையை அவர்களிடம் இருக்கும் கல்விதான் தெரிவிக்கிறது. கல்விச்சிறப்பே சிறப்பு. நம் இந்தியாவில் தற்காலம்வழங்கும் கல்வியைச் சீர்திருத்தி, ஜனங்களின் மனோநிலைமையை உயர்த்தவேண்டும்.

மனுஷ்யனுடைய பால்யப்பருவத்தில், அவனுடைய மனஸ், களங்கமில்லாமலும், சுறுசுறுப்பாயும், அதை யறிவோமா இதை யறிவோமாவென்ற ஊக்கத்துடனும், பலவிஷயங்களை யறிவதற்கு அவாவுடனும் இருக்கும். அந்தப்பருவத்தில் ஒருவனுடைய மனதில் என்ன விஷயங்கள் படிகின்றனவோ அவைகள் அவன் ஆயுள்பர்யந்தம் அவனிடமே குடிகொள்ளும். தொட்டில்பழக்கம் சுடுகாடுமட்டும் என்ற மூத்தோர்வார்த்தையுமிருக்கிறதல்லவா? ஆகவே, இந்த பால்யப்பருவத்திலேயே நிஜம்பேசுதல், கீழ்ப்படிதல், ஒழுங்காயிருத்தல் முதலிய முக்யமான நீதிகளை விளையாட்டோடு விளையாட்டாய் மனதில் ஊட்டிவிடவேண்டும். சீமையில், ஒருபாலன், ஏழு அல்லது எட்டு வயதிற்குள் மேற்கூறிய நல்ல வழிகளில் பழகினவனாக ஆகிவிடுகிறான். புத்திசாலியான தாயார், அல்லது, ஆயாள், குழந்தையை ப்ரதிதினம் காலை மாலைகளில் வெளியே அழைத்துக்கொண்டுபோய் பல பொருள்களைக் குழந்தைக்குக் காட்டுகிறாள். புதிதாய் இவ்வுலகத்திற்கு வந்திருக்கிற அந்தக் குழந்தைக்குக் கண்டதெல்லாம் விந்தையாகவே தோற்றும். ஒவ்வொன்றையும்பற்றி ஆயாள் சொல்வதெல்லாம் அதன்மனதில் வேரூன்றிப்பதியும். ஒழுங்காய் மாலை 5-மணி ஆனால் வெளியே 'போடா' போகும் வேளையென்று குழந்தைக்குக்கூடப் பழக்கத்தில் வரும். நம்முடைய முன்னோர், பெரியோர், மகான்கள், வீரர்கள் முதலியவர்களின் சரித்ரங்களை சிறுவர் மனதில் படும்படி சிறுகதைகள் ரூபமாக அடிக்கடிசொல்லி, அவர்களின் மனதை விசாலப்படுத்தவேண்டும். நம்முன்னோர்கள் செய்திருக்கும் அற்புதச்செயல்களையும், அவர்களின் மேன்மையான குணங்களையும் கேட்ட சிறுவன், தானும் அவர்கள்போல் மேன்மையான குணம் பொருந்தியவனாக இருக்கவேண்டுமென்று ஸதா மனதில் த்யானம் செய்வான். சிறுவயதில் ஜனிக்கிற இந்த எண்ணங்கள் அவன்மனதில் பிறகு எப்பொழுதும் குடிகொண்டிருக்கும். இப்படிச்செய்யாமல், பேய் பிசாசுகளின் கதைகளைச் சொல்லி, பாலர்களின் மனதை அதைரியப்படுத்துவது தப்பு. பையனுக்கு ஆறு அல்லது ஏழுவயஸ் ஆவதற்குள், இப்படிப்பட்ட விஷயங்கள் வீடுகளில் கற்பிக்கப்படவேண்டும். முக்யமாய் தாய்தான் இந்தக் காரியங்கள் செய்ய ஏற்றவள். அவள் செய்தால்தான் நல்லது. ஏனென்றால், தாயிடமிருந்து க்ரகிக்கக் குழந்தைக்கு ப்ரியமும், குழந்தைக்குப் புத்தி புகட்டத் தாய்க்கு ஊக்கமும் ஜாஸ்தியாயிருக்கும். அதற்கு நம் இந்தியஸ்த்ரீகள் படித்தவர்களாயும், புத்தி சாலிகளாகவும் இருக்கவேண்டும். ஸ்த்ரீகள் எப்பொழுது முன்னடைகிறார்களோ அப்பொழுதுதான் இந்தியாவுக்கு க்ஷேமம். ஆதிகாலத்தில் இந்தியாவில் இருந்த ஸ்த்ரீகள் மிகப்படித்தவர்களாகவும், குணசாலிகளாகவும் இருந்தார்கள். இப்பொழுதும் நமது ஸ்த்ரீகள் புத்தி விசாலமுள்ளவர்களாகவும், மேன்மையான குணமுள்ளவர்களாகவும், இருக்கவேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். கடைசியாக, புது உயிர் பெற்றெழுந்திருக்கப் போகிற இந்தியர்களும் அவர்களுடைய ஸ்த்ரீகளும், அவர்களுடைய நாகரீகமும், கலைகளும் கீர்த்தியும் உலகெங்கும் பரவி நலம் செய்யும்படி செய்யவேண்டியது நமது கடமையென்பதை நாம் உணரவேண்டும்.



## HOW INSECTS KNOW EACH OTHER?

## பூச்சிகள் ஒன்றை ஒன்று அறிந்து கொள்ளுவதெப்படி?

பூச்சிகள் ஒன்றை ஒன்று எப்படித் தெரிந்து கொள்ளுகின்றன; அவைகள் தங்களுடைய எண்ணங்களை எப்படி ஒன்றுக்கொன்று தெரிவிக்கின்றன என்பவைகளைப்பற்றி சாஸ்த்ரம் வல்லோர் வெகு காலமாக ஆராய்ச்சிசெய்து வருகிறார்கள். பூச்சிகளுள், முக்யமாய் தேனீக்களுக்கும் எறும்புகளுக்கும் இந்த இரண்டு வேலைகளுக்கும் ஏற்ற ஸாதனங்கள் ஏதோ இருக்கவேண்டுமென்று யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால் அவைகள் தேன்கூடு கட்டுவதிலும், எறும்பு வளைகள் அமைப்பதிலும் அதிக புத்தியை உபயோகித்திருக்கின்றனவென்று சொல்லவேண்டியிருக்கிறது. கேவலம் இயற்கையறிவால் அவ்வளவு சிக்கலான வேலைகளைச் செய்வது சிரமமானதே.

டாக்டர் மக்கிண்டோ என்னும் நிபுணர் தேனீக்கள் விஷயமாக சிலகாலம் பரீக்ஷைகள் செய்ததில், அவைகள் வாஸனையின் மூலமாக ஒன்றை ஒன்று அறிந்து கொள்ளுகின்றனவென்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார். ஒவ்வொரு வகைத் தேனீக்கும் ஒரு குறிப்பிட்ட வாஸனையிருக்கிறதாம். வாயில் காக்கும் தேனீ, விசிறும்தேனீ, மகரந்தப்பொடி கொண்டுவரும் தேனீ, தேன் மெழுகுசெய்யும் தேனீ, கூடுகட்டும் தேனீ முதலிய ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு குறிப்பிட்ட வாஸனை இருக்கிறதாம். இந்த வாஸனையை வகுப்பு வாஸனையென்று வைத்துக்கொள்ளலாம். இதோடு ஒவ்வொன்றுக்கும் அதுவஸிக்கும் கூட்டைக் குறிப்பிடும் தனி வாஸனையும் உண்டாம். அந்த வாஸனை இருந்தால்தான் அது கூட்டுக்குள் போகலாம்.

தாழ்ந்த ஜீவராசிகளில் கண்ணுள்ளவைகள் பார்ப்பதனால் ஒன்றை ஒன்று அறிந்துகொள்ளக் கூடுமென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் தாழ்ந்த ப்ராணிகளின் கண்கள், பெரிய ப்ராணிகளின் கண்களைப்போல, பொருள்களைப் பார்க்க நன்றாக அமையவில்லையென்று தெரிகிறது. மேலும் கண்களுள்ள ப்ராணிகளில் அநேகம் இருட்டான இடங்களில் வஸிக்கின்றன. அவைகளில் சிலவற்றிற்கு அவையே இல்லாமல் இருக்கின்றன. உதாரணமாக குகைகளில் வஸிக்கும் சில வண்டுகளிலும், சிலந்திகளிலும் கண்கள் செயலற்று இருக்கின்றன. அல்லது சிறிதளவுதான் பார்க்கமுடிகிறது. அப்படியிருந்தும் வெளிச்சமுள்ள இடங்களில் வஸிக்கும் கண்ணுள்ள

ஜந்துக்களைப்போலவே இருட்டில் ஒன்றை ஒன்று அறிந்துகொள்ளுகின்றன.

கண்ணில்லாத அல்லது கண் சரியாகத்தெரியாத ஜந்துக்கள் முக்யமாக ஸ்பர்சத்தினால் ஒன்றை ஒன்று அறிந்துகொள்ளுகின்றன. ஆனால் குகைகளில் உள்ள சிலந்திகளை கவனித்துப் பார்த்தபோது, ஆண் சிலந்திகள் கொஞ்சதூரத்திலிருக்கும் பெண் சிலந்திகளையும் கண்டு பிடித்துக்கொள்கின்றனவென்றும், பெண் சிலந்திகளின் வலைகளைத் தொடக்கூட வேண்டியதில்லையென்றும் தெரியவந்ததாம். ஆகவே ஸ்பர்ச இந்த்ரியமானது தாழ்ந்த ஜந்துக்கள் ஒன்றை ஒன்று அறிந்துகொள்வதற்கு முக்யமான ஸாதனமாகமாட்டாது.

தாழ்ந்த ப்ராணிகளின் ச்ரோத்ரேந்த்ரியத்தைப்பற்றியும் ரஸேந்த்ரியத்தைப்பற்றியும் தற்கால வித்பன்னர்களுக்கு அதிகம் தெரியாதாகையால், அவைகள் ஒன்றை ஒன்று அறிவதற்கேற்ற கருவிகளாக இருக்குமென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது. தாழ்ந்த ஜந்துக்கள் ஸ்பர்சக்கருவிகளை உபயோகியாமலே, ஒன்றை ஒன்று அறிந்துகொள்வதாலும், கண்கள் நன்றாய் வ்ருத்தி யடையாததனாலும், அவைகள் ஒன்றை ஒன்று அறிந்துகொள்ள நமக்கு வாஸனையறியும் சக்தி இருப்பதுபோல அவைகளுக்கும் ஒருவிதமான வாஸனாசக்தி இருக்கிறதென்று வைத்துக்கொள்ளலாம். ஒன்றை ஒன்று அறிந்துகொள்வதற்கு வாஸனையை க்ரகிக்கும் கருவிகளே முக்ய ஸாதனமென்றால், வாஸனைகளை ஜந்துக்களே வெளியிடவேண்டும். அப்படியானால், ஒரு ஜந்து வெளியிடும் வாஸனையானது இன்னொரு ஜந்து வெளியிடும் வாஸனையைவிட கொஞ்சமாவது வித்யாஸமாயிருக்கவேண்டும். ஆகவே ஒவ்வொரு ஜந்துவும் தனக்கென்ற ஒரு தனி வாஸனையை வெளியிடுவதோடு, இனம், வகுப்பு, ஜாதிமுதலிய பலவகைப்பட்ட பிரிவுகளுக்கும் தனித்தனி வாஸனைகளை வெளியிடவேண்டும். இந்தப் பலவகைப்பட்ட வாஸனைகளின் மூலமாகவே தாழ்ந்த ஜந்துக்கள் ஒன்றை ஒன்று அறிந்துகொள்ளுகின்றனவென்று சொல்லவேண்டும். தேனீக்கள் ஸம்பந்தமாகப் பரீக்ஷை செய்ததில் அவைகளுக்கு பின்வரும் மணங்கள் இருக்கின்றனவென்று தெரியவருகிறதாம். ஒவ்வொரு ராணீத்தேனீ அல்லது வேலைக்காரத் தேனீக்கும் குறிப்பிட்ட மணம் உண்டு. பலதேனீக்கள் ஒரு தாய்வயிற்றில் பிறந்திருந்தால், அவைகளுக்குப் பொதுவாக ஒருமணம் இருக்கும். இதற்குக் குடும்பமணம் என்று சொல்லலாம். இந்தக் குடும்ப மணம் மற்றவைகளுக்கு இராது. ஆண் தேனீக்களுக்கென்று ஒரு தனிமணம் உண்டு. தேன் மெழுகுசெய்யும் தேனீக்களுக்கும் தனியான மணம் இருக்கிறது. இவைகளின் மணம் தேன்கூட்டில் சேருகிறபடியால், ஒவ்வொரு கூட்டுக்கும் தனிமணம் உண்டு. தேனுக்குக்கூட அது உண்டாகிற கூட்டுக்குத் தகுந்தபடி வித்யாஸமான மணங்கள் இருக்கின்றனவாம். இதனால் ராணியில்லாத ஒரு கூட்டில் வேறு ராணித்தேனீயை விடவேண்டுமானால், அந்தக் கூட்டின்தேனை ராணித்தேனீமேல் தெளித்து, பிறகு கூட்டில்விட்டால், அங்குள்ள தேனீக்கள் ராணித்தேனியை தமதுகூட்டைச் சேர்ந்ததென்று எண்ணி அதை ஏற்றுக்கொள்ளுகின்றன.

சுருக்கமாகச் சொல்லுமிடத்து, ஒவ்வொரு தேனிக்கும் அதற்கு என்று ஏற்பட்ட மணத்தோடு, மேலே சொன்னபடி ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லாத்தேனீக்களுக்கும் பொதுவான குடும்ப மணமும், கூட்டுக்கென்று ஏற்பட்டுள்ள மணமும் இருக்கின்றன. இந்த இரண்டுமணமும் இல்லாதவைகளை அயலார் என்றும், உள்ளவைகளை ஸகோதர ஸகோ



தரிகள் அல்லது, கூட்டைச் சேர்ந்தவைகளென்றும் தேனீக்கள் அறிந்துகொள்ளுகின்றன.

இப்படி ஸித்தாந்தம் செய்வதற்குமுன் டாக்டர் மிக்காண்டு சில பரீக்ஷைகள் செய்தார். 30-வேலைக்காரத் தேனீக்களை நூற்றுக்கு 5-வீதம் அல்கஹால் சாராயம் கலந்துள்ள த்ரவத்தில் ஒரு நிமிஷநேரம் அமிழ்த்திப்பிறகு 14-நிமிஷநேரம் சுத்த ஜலத்தில் அமிழ்த்திவைத்து, அவைகள் எந்தக்கூட்டைச் சேர்ந்தனவோ அதிலேயேவிட்டதில், அந்தக் கூட்டிலிருந்த மற்ற வேலைக்காரத் தேனீக்கள் இந்த 30-தேனீக்களை உடனே தாக்கி ஹிம்ஸித்தன. ஏனெனில் இந்த 30-தேனீக்களுக்கும் கூட்டுக் கேற்பட்ட மணம் போய்விட்டது. அல்கஹால் கலந்த த்ரவத்தில் அமிழ்த்தினதால், கூட்டுக்கென்று ஏற்பட்ட மணம் போய்விட்டதா அல்லது மாறிவிட்டதா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. சில தேனீக்களை அவைகளிருந்த கூட்டிலிருந்து பிரித்து ஒருதனி இரும்புக் கூட்டில்விட்டு வைத்ததில், அவைகளுக்கு இருந்த கூட்டு மணம்போய், பிறகு அவைகள் ஒன்றுக்கொன்று சண்டையிடலாயின.

குடும்பமணம் ஒன்றைத்தவிர மற்ற மணங்களை எல்லாம் ஒழித்துவிட்டு, தேனீக்களை ஒன்றாகவிட்டதில், அவைகள் குடும்பமணத்தின் உதவியால், ஒன்றை ஒன்று அறிந்துகொண்டு சும்மாவிருந்தன. ராணித்தேனீக்களுக்கென்று ஏற்பட்ட மணத்தைத்தவிர இதர மணங்கள் எல்லாவற்றையும் போக்கடித்துவிட்டு, அந்த ராணித் தேனீக்களை அவைகளிருந்த கூட்டில் விட்டதில், அந்தந்தராணித் தேனீக்களை அதனைச்சேர்ந்த வேலைக்காரத் தேனீக்கள் அறிந்துகொண்டு, உபசாரம் செய்யலாயின. இதேமாதிரி இதரத்தேனீ வகைகளிலும் பரீக்ஷித்ததில், அவைகளுடைய மணத்தைப் போக்கடித்துவிட்டால், அவைகளுடைய ஸகவாஸிகள் அவைகளை இன்னதென்று அறிந்து கொள்ளமுடியாமல்போய், சத்ருவென்று நினைத்துத் தாக்குகின்றனவென்று தெரியவந்தது.

## CHOKING.

## விழுங்கக்கூடாமை.

கால்நடைகளின் தொண்டையிலும், வாயிலிருந்து இரைப்பைக்கு உணவு போகும் மார்க்கமாகிய குழாயிலும் ஏதாவது சிக்கிக்கொண்டுவிட்டால், அவைகள் தீனியை விழுங்கக் கூடாமல் தவிப்பதுண்டு. மாடுகள் தீனி விஷயத்தில் ரொம்ப ஆவலுள்ளவை. அவை சில ஸமயங்களில் கரும்பு, வேர்கள் முதலியவைகளை சரியானபடி மெல்லாமல் விழுங்கிவிடுகின்றன. எலும்புகள், கந்தைத்துணிகள், தோல் துண்டுகள், மரத்துண்டுகள் ஆகிய இவைகளையும் தெரியாமல் தின்றுவிடுவதுண்டு. சிற்சில வேளைகளில் மாடுகள் ஆணிகளையும் இரும்புத் துண்டுகளையுங்கூட விழுங்கி விடுவதுண்டு. அவைகள் தொண்டையின் உள்ளேயும் இரைப்பைக்குப்போகும் குழாயிலும் சிக்கிக்கொண்டால், அவை தீனிபோவதைத் தடைசெய்யும். இரும்புத்துண்டுகளில் கூர்மையான முனைகள் இருந்தால், உள்தோலைக் கிழிக்கும்.

### வ்யாதிக்குறிகள்.

மாடுகள் தீனி எடுப்பது நின்றுவிடும். அவை அமைதியாயிரா. வலி இருப்பதுபோல் அவஸ்தைப்படும். தொண்டையில் பொருள்கள்

அடைத்துக்கொண்டிருந்தால், மாடு இருமும். உமிழ்நீர் அதிகமாகக்கொட்டும். மாடு ஜலம் குடித்தால், ஜலம் மூக்கின் வழியாகத் திரும்பி விடும்.

இந்தக் கோளாற்றில் வாயு என்னும் வ்யாதி உண்டாவது ஸகஜம். (சென்ற மாஸத்தில் விவரித்திருக்கிறது) தொண்டையும் இரைப்பைக்குழாயும் பூராவும் அடைபட்டிருந்தால், வாயு வ்யாதி கடுமையாக இருக்கும். இரைப்பைக்குழாயின் ஆரம்பத்தில் பெரிய வஸ்து அடைத்துக்கொண்டிருந்தால், மாடு மூச்சு விட முடியாமல் தவிக்கும். அது சீக்ரம் இறந்துபோகும். தொண்டையில் ஏதாவது அடைத்துக்கொண்டிருக்கிறதா என்பதை வாயின் அடிப்புறத்தில் கைவிட்டுப்பார்த்து அறிந்துகொள்ளலாம்.

இரைப்பைக் குழாயில் ஏதாவது ஒரு பொருள் அடைத்துக்கொண்டிருந்தால், இருமல் அதிகமாயிராது. மாடு ஜலம் குடித்தால், உட்கொண்ட ஜலம் மறுபடியும் வாயின் வழியாகவும் மூக்கின் வழியாகவும் திரும்பிவிடும். குழாய் பூராவும் அடைபடாமலிருந்தால், சிறிதளவு ஜலம் இரைப்பைக்குள் போகலாம். இரைப்பைக் குழாயில் கழுத்தில் உள்ளபாகம் அடைபட்டிருந்தால், அடைபட்டிருப்பதால் ஏற்படும் வீக்கத்தைக் கையால் தடவிப்பார்ப்பதால் தெரியும். சில ஸமயங்களில் வீக்கம் கண்ணுக்குத் தெரியும்படி பெரியதாயிருப்பதுண்டு. மார்புக்குள் இருக்கிற இரைப்பைக் குழாயில் அடைப்பு ஏற்பட்டிருந்தால், அதை ஸுலபத்தில் கண்டு பிடிக்கமுடியாது. வாயு, உமிழ்நீர் அதிகமாய் கொட்டுதல், எடுத்துக்கொண்ட தீனியை உடனே கக்குதல் ஆகிய இந்தக் கோளாறுகள் இருந்தால், இரைப்பைக் குழாயில் ஏதோ அடைபட்டிருப்பதாக எண்ணலாம். உட்கொண்ட ஜலம் வாயாலும் மூக்காலும் வெளிவந்தால், அடைப்பு ஏற்பட்டிருக்கிறதென்று நிச்சயிக்கவேண்டும். இரைப்பைக்குழாய் அடைபட்டு இருந்தால் வ்யாதிக்குறிகள் கடுமையாயிருப்பதில்லை. முக்யமாய் இரைப்பைக் குழாயில் கொஞ்சம் ஜலம் முதலியவை போகும்படி இடமிருக்க அடைபட்டிருந்தால் வ்யாதிக்குறிகள் கடுமையாக இருக்கமாட்டா. மாடும் சிலகாலம் உயிரோடு இருக்கும்.

### சிகித்ஸை.

அடைத்துக்கொண்டிருக்கும் பொருளை கூடியசீக்ரத்தில் அப்புறப்படுத்த முயலவேண்டும். தொண்டையின் அடியில் சிக்கிக்கொண்டிருந்தால், கைவிட்டு வெளியிலெடுத்துவிடலாம். வாயைத் திறந்து வைத்துக்கொள்ள குதிரை ஏறும்போது கால் வைத்துக்கொள்ள உதவும் ஸ்டிர்ரப் என்னும் அங்கபடியை வாயில்கொடுத்து, ஒரு கையால் நாக்கை வெளியில்பிடித்து இழுத்து, மற்ற கையால் தொண்டையில் அடைத்துக்கொண்டிருக்கும் பொருளை எடுக்கவேண்டும். இரைப்பைக் குழாயில் ரொம்ப ஆழத்தில் ஏதாவதுபொருள் அகப்பட்டுக்கொண்டிருந்தால், வாய்க்கு வரும்படி செய்யமுடியாது. கையால் இரைப்பைக் குழாயைப் பிடித்து விடுவதாலும், சிக்கிக்கொண்டபொருள் ஸுலபமாக இரைப்பைக்குள் போவதற்காக சிறிதளவு எண்ணெயை உள்ளுக்குக் கொடுப்பதாலும், அடைத்துக்கொண்டிருக்கும் பொருளை இரைப்பைக்குள் தள்ளிவிடலாம். எண்ணெயை உள்ளுக்குக் கொடுப்பதில் ரொம்ப ஜாக்ரதையாக இருக்கவேண்டும். ஏனென்றால் எண்ணெய் ச்வாஸக்குழாயில் புகுந்துவிட்டால், ஆபத்து நேரிடும்.

இவைகளால் ஒன்றும் ப்ரயோஜனப்படாவிட்டால், அடைத்துக்கொண்டிருக்கும் பொருளை உள்ளே இரைப்பைக்குள் தள்ள ப்ரோபாங் (Probang) என்னும் கருவியை உபயோகிக்கவேண்டும். அது அகப்படாவிட்டால், நீளமானதும், வழவழப்புள்ளதும் விரல் பருமன் உள்ளதுமான ஒரு பிரம்பை எடுத்து ஒரு நுனியில் ம்ருதுவான துணியை திட்டை போல்கட்டி, எல்லாவற்றையும் எண்ணெயில் தோய்த்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

யாராவது ஒருவரைக்கொண்டு மாட்டின் வாயைத்திறந்து வைத்துக்கொண்டு, பிரம்பை மெதுவாகவும் ஜாக்ரதையாகவும் வாயில் விட்டு, இரைப்பைக்குழாயில் செலுத்தி அடைத்துக்கொண்டிருக்கும் பொருளை மெதுவாக அமுக்கினால், அந்தப்பொருள் கொஞ்சங்கொஞ்சமாக இரைப்பையை நோக்கிப் போய்விடும்.

இந்தமுறையால் பலன் ஏற்படாவிட்டால், கால்நடை வைத்யர்களைக்கொண்டு சிகித்ஸை செய்யவேண்டும். அவர்கள் இரைப்பைக் குழாயைக்கீறி உள்ளிருக்கும் பொருளை எடுத்து மறுபடியும் தைத்துவிடுவார்கள். சிகித்ஸைக்குப்பிறகு இரண்டொருநாளுக்கு மாடுகளுக்குக் கஞ்சியும் ம்ருதுவான உணவும் கொடுக்கவேண்டும். இரைப்பைக் குழாய்க்கு ஏதாவது காயம் முதலியவை ஏற்பட்டிருந்தால், சில நாள்கள்வரையில் தீனி விஷயத்தில் ஜாக்ரதையாயிருக்கவேண்டும். இல்லாவிட்டால், மறுபடியும் ஏதாவது அடைத்துக் கொண்டு தீனி தின்னமுடியாமல் போகலாம். இந்த வ்யாதியில் வாயு உபத்ரவம் ஏற்பட்டால் அதற்கு ஆபரேஷன் (அதாவது முதல் இரைப்பையைக்கிழித்து வாயுவைப்போக்குவது) செய்யவேண்டியிருப்பதுமுண்டு.



## GROUND - NUT OIL.
## வேர்க்கடலை எண்ணெய்.

ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் வேர்க்கடலை எண்ணெயை உணவுப் பொருள்கள் செய்வதற்கு உபயோகப் படுத்துகிறார்கள். அப்படி உபயோகப்படும் எண்ணெய் மிகவும் சுத்தமாக இருக்கும். நம்முடைய தேசத்தில் வேர்க்கடலைப் பருப்பைச் சுத்தம் செய்யாமல் ஆட்டி எண்ணெய் எடுத்து உபயோகிப்பதுபோல் அங்கிருப்பவர்கள் உபயோகிப்பதில்லை. முதல் தரமான கொட்டைகளிலுள்ள பருப்பின் மேலுள்ள சிவப்புத் தோலைப் போக்கிச் சுத்தஞ்செய்து எண்ணெய் எடுத்து அந்த எண்ணெயைத்தான் உணவுப் பொருள்களில் உபயோகப்படுத்துவார்கள். சுத்தஞ்செய்யாத எண்ணெய் தினுஸுகளை ஸோப் முதலிய வ்யாபாரப் பொருள்கள் செய்ய உபயோகிக்கிறார்கள்.

### ஐரோப்பாவில் வேர்க்கடலை எண்ணெய் எடுத்தல்.

ஐரோப்பாவில் கொட்டையாகவே இறக்குமதியாகும் வேர்க்கடலையிலிருந்து தான் அதிக எண்ணெய் எடுக்கிறார்கள். கொட்டையாகவே கப்பலில் ஏற்றினால் அதில் அதிக சேதாரம் உண்டாவதில்லை, பருப்பாக இறக்குமதியாகும் வேர்க்கடலையிலிருந்து எடுக்கும் எண்ணெய் குறைவாகவே இருக்கும். ஐரோப்பாவில் பத்துத் தினுஸு வேர்க்கடலை இறக்குமதியாகிறது. கொட்டையை ஜலத்தில் ஊற வைத்து பிறகு எடுக்கும் பருப்பிலிருந்து உண்டாகும் எண்ணெய் முதல் தரமானதாக இராது. அப்படிப்பட்ட எண்ணெய் ஸோப் செய்வதற்குத்தான் உபயோகமாகும். சென்னை ராஜதானியிலிருந்து ஐரோப்பாவுக்குப்

போகும் வேர்க்கடலைப்பருப்பு இவ்விதம் தயார் செய்யப்படுவதால், அது முழுவதும் ஸோப் செய்யத்தான் உபயோகமாகிறது.

ஐரோப்பாவில் எண்ணெய் எடுக்கும் யந்த்ரச் சாலைக்காரர்கள் வேர்க்கடலையைக் கொட்டையாகவே இறக்குமதி செய்தால், அந்தக் கொட்டைகளை யந்த்ரத்தில்போட்டு உரித்துப் பிறகு எண்ணெய் எடுப்பார்கள். உரித்தெடுத்த பருப்பை ஜல்லடைமாதிரி இருக்கும் இருப்புப் பலகையில் கொட்டி கல், சிறுகட்டை துண்டுகள், உரிபடாத கொட்டைகள் முதலியவைகளைப் பிரித்து எடுப்பார்கள். பிறகு பருப்பின் மேலுள்ள சிவப்புத் தோலைப் போக்குவார்கள். இந்தச் சிவப்புத் தோலில் 100-க்கு 14 வீதம் எண்ணெய் அடங்கி இருக்கிறது. ஆகவே தோலை அப்பால் எறிந்து விடாமல் பிண்ணாக்கோடு கலந்து ஆட்டிக் கீழ்த்தரமான எண்ணெயை எடுக்கிறார்கள்.

நன்றாகச் சுத்தஞ் செய்தான பருப்பை உருளைகளிற் கொடுத்து நசுக்குகிறார்கள். அம்மாதிரி நசுக்கிய பருப்பை மார்ஸேல் ப்ரெஸ் என்னும் யந்த்ரத்தில் கொட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். யந்த்ரம் நிரப்பப் பருப்பைக் கொட்டியவுடன் அதை நன்றாக அழுத்திச் சற்றுநேரம் அப்படியே வைத்திருந்து எண்ணெயைப் பிழிந்தெடுப்பார்கள். இதில் பாதி எண்ணெய் வந்துவிடும். இப்படி எடுக்கும் எண்ணெய் யாதொரு வர்ணமுமில்லாமல் சுத்தமாக இருக்கும். அது மிகவும் வாஸனையுள்ளது. மறுபடியும் சுத்தஞ் செய்யாமலே அதை உணவுப் பொருள்கள் செய்ய உபயோகிக்கலாம்.

எண்ணெய் எடுத்தானதும் பிண்ணாக்கை வெளியே எடுத்துக் கொஞ்சம் ஈரமாக்கி மறுபடியும் அரைத்து யந்த்ரத்தில் போடுகிறார்கள். சில நிமிஷ நேரம் தீயிட்டு எரித்து அதை மறுபடியும் பிழிந்து எண்ணெய் எடுப்பார்கள். இந்த இரண்டாவது எண்ணெய் கீழ்த்தரமானது. அது ஸோப் செய்வதற்கு உபயோகமாகிறது. சிலர் இம்மாதிரியே மூன்றாம் தடவையும் நான்காம் தடவையும் பிழிந்து எண்ணெய் எடுக்கிறார்கள். எவ்வளவு தான் பிழிந்து எடுத்தாலும் கடைசியாக நிற்கும் பிண்ணாக்கில் சற்றேறக்குறைய 100-க்கு 6 வீதம் எண்ணெய் தங்கிவிடுகிறது.

ஐரோப்பாவில் ஆட்டி எடுக்கப்படும் முதல் தர எண்ணெயைப் பெரும்பாலும் ஐரோப்பியரே உணவுக்காக உபயோகப்படுத்திக் கொள்ளுகிறார்கள். கீழ்த்தர எண்ணெய் தினுஸுகளைத்தான் அமெரிக்க ஐக்ய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள், இரண்டாந்தர எண்ணெயைத் தேங்கா யெண்ணெய், பால் முதலியவைகளோடு கலந்து மார்க்ரைன் என்னும் ஒருவித வெண்ணெய் (Margarine) செய்கிறார்கள். மீன் முதலியவைகளைப் பக்குவப்படுத்தவும் வேர்க்கடலை எண்ணெயை ஐரோப்பியர் உபயோகிக்கிறார்கள்.

### எண்ணெய் எடுப்பதற்காக வேர்க்கடலையைத் தயார் செய்தல்.

அமெரிக்காவில் வேர்க்கடலையை யந்த்ரத்தில் கொட்டி உடைக்கிறார்கள். பிறகு தூற்றும் யந்த்ரத்தில் அதைக் கொட்டித் தோலைப் பிரித்து எடுக்கிறார்கள். அப்படி எடுக்கும் பருப்பைச் சுத்தஞ்செய்வதற்காக அதை ஒரு பெரிய மேஜையின் மேல் கொட்டுகிறார்கள். அதிலுள்ள கல், சொத்தைப் பருப்பு, முதலியவைகளை எடுப்பதற்காக அநேக ஸ்த்ரீகளைச் சம்பளங்கொடுத்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் கையினாலேயே பருப்பைச் சுத்தப்படுத்துகிறார்கள். அதன் பிறகு பருப்பின் மேலுள்ள சிவப்புத்தோலை யந்த்ரத்தினால் எடுத்து விடுகிறார்கள்.

### வேர்க்கடலையிலிருந்து உண்டாகும் வேறு பொருள்கள்.

வேர்க்கடலைப் பிண்ணாக்கு மிகவும் உபயோகமானது. அதை மாடு முதலிய ப்ராணிகளுக்கு உணவாகக் கொடுக்கலாம். நிலங்களுக்கும் அது நல்ல எருவாகும். வேர்க்கடலைத் தோலைப் பிண்ணாக்கோடு கலந்தும் அறைக்கிறார்கள். ஆனால் அது எவ்விதத்திலும் உணவை மேலானதாகச் செய்வதில்லை. வேர்க்கடலைத்தோல் யந்த்ரங்களில் எரிப்பதற்காகவும் ஆடு மாடுகளுக்குப் படுக்கையாகவும் உபயோகமாகும்.



# FLOWER AND ITS PARTS.

## பூவும் அதன் பாகங்களும்.

பூவின் அமைப்பை யறிய நெருஞ்சில் பூவைப் பரீக்ஷிப்பது நல்லது. இந்தப் பூவில் ஐந்து மஞ்சளான இதழ்கள் இருக்கின்றன. இவைகளை தளங்கள் என்றும் சொல்லலாம். இந்த ஐந்தும் ஒன்றோடொன்று பட்டுக்கொண்டு, (ஆனால் ஒட்டியிராமல்) வட்டமாக இருக்கின்றன. இந்த ஐந்துக்கும் மொத்தத்தில் தளவட்டம் என்று பெயர். தளங்களுக்குக் கீழே, இரண்டு தளங்களுக்கு நடுவில் ஒன்றாக, ஐந்து பசுமையான சிறு இலை போன்ற இதழ்கள் இருக்கின்றன. இவைகள் பூவின் வெளிப்புறத்தில் இருப்பதால், இவைகளைப் புறவிதழ்கள் என்று சொல்வார்கள். பூப்பூப்பதற்கு முன் மொட்டாயிருக்கும் போது, இந்தப் புறவிதழ்கள் பூவின் உள்ளேயுள்ள இதழ் முதலியவைகளை மூடிக்கொண்டிருப்பதால், இந்தப் புறவிதழ்கள் எல்லாவற்றிற்கும் புஷ்பகோசம் என்று பெயர்.



நெருஞ்சில் பூ.

நெருஞ்சிலில் தளங்களுக்கு மத்தியில் 10 நீண்ட கம்பிபோன்ற உறுப்புகள் இருக்கின்றன. இவைகளின் நுனியில் சிறிய தடித்த பாகம் ஒன்று இருக்கும். அதற்கு இங்கிலீஷில் 'ஆன்தர்' என்றும், தமிழில் மகரந்தப்பை என்றும் பெயர். கம்பியும் தடித்தபாகமும் சேர்ந்து இங்கிலீஷில் ஸ்டேமன்ஸ் என்றும், தமிழில் கேசரம் என்று சொல்லப்படும். நீண்டபாகம் மாத்ரம் இங்கிலீஷில் 'பைலமென்ட்' அதாவது கேசரத்தாள் என்னப்படும். மகரந்தப்பை உண்மையில் ஒரு சிறு பெட்டியாகும். இதில் ஒருவித மஞ்சள் நிறமான தூள் இருக்கிறது. இதற்கு மகரந்தப் பொடி என்றுபெயர். இந்தக் கேசரங்களுக்கு நடுவிலுள்ள பாகம் பிஸ்டில் அல்லது அண்டகோசம் என்று சொல்லப்படும். இந்த அண்டகோசந்தான் பிஞ்சாகவும் காயாகவும் மாறுகிறது. அண்ட கோசத்தில் மூன்றுபாகம் உண்டு. அடியில் பருத்திருக்கும் பாகத்துக்கு ஒவரி அல்லது அண்டாசயம் என்றுபெயர். இதில்தான் விதைகள் உண்டாகின்றன. நுனிப் பாகத்துக்கு ஸ்டிக்மா அல்லது கிலாக்ரம் என்று பெயர். இரண்டுக்கும் நடுவில் இருப்பது ஸ்டைல் அல்லது கிலம் என்னப்படும்.

### புறவிதழ்கள்.

பொதுவாய்ச் சொல்லுமிடத்து புஷ்பகோசம் என்னும் புற இதழ்க்கூட்டத்தின் வேலை புஷ்பத்தின் உள் பாகத்தை, புஷ்பம் மலரும்வரையில், பாதுகாப்பதே. இந்தப் பாதுகாப்பு வேலையைச்செய்ய சில செடிகளில் வேறு உறுப்புகள் இருக்கலாம் அப்படி இருந்தால் புற இதழ்கள் இல்லாமலிருக்கலாம்.

பூமலர்ந்தவுடன் புறவிதழ்கள் விழுந்துவிடுவது இயல்பு. சில செடிகளில் தாமதித்து விழுவதுமுண்டு. கத்தரிச்செடியில் புறவிதழ் விழுவதற்கு பதிலாக, காயோடுவளர்ந்து

அதன் ஒருபாகத்தை மூடிக்கொள்கிறது. சிறுதக்காளியில் புறவிதழ்கள் நன்றாய் வளர்ந்து காயை மூடிக்கொள்கின்றன. புறவிதழ் சில செடிகளில் தனித்தனியாகவும், சில செடிகளில் சேர்ந்தும் இருக்கும். அவைகள் உருவத்தில் ஒரே மாதிரியாகவோ, அல்லது சிறியதும் பெரியதுமாகவோ இருக்கலாம். புறவிதழ்கள் பொதுவாய் பசுமை நிறமாக இருக்கின்றனவென்றாலும், சில செடிகளில் அழகிய வர்ணங்களுள்ளனவாக இருப்பதுமுண்டு.

### பூவின் தளங்கள்.

புஷ்பத்தில் அதிக சோபிதமாயும், அழகிய வர்ணங்கள் உள்ளதாயும் இருக்கும் பாகம் தளங்களே. தளங்கள் சில செடிகளில் தனித்தனியாகவும் சில செடிகளில் சேர்ந்துமிருக்கும்.

தளங்கள் உருவத்திலும் அளவிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. உதாரணமாக, நெருஞ்சில் பூவில் இதழ்கள் ஒரேமாதிரி இருக்கின்றன. அவரையில் அளவும் உருவமும் வித்யாஸப்படுகின்றன.

### கேசரங்கள்.

மகரந்தப்பைகளைத் தாங்கிநிற்கும் கேசரத்தாள்கள் நெருஞ்சில்பூவில் போல் சில புஷ்பங்களில் ஒன்றோடொன்று சேராமல் தனித்தனியாக இருக்கின்றன. வெண்டை, செம்பரத்தம்பூ, புளிச்சை முதலியவற்றின் புஷ்பங்களில் கேசரத்தாள்கள் சேர்ந்திருக்கின்றன. சில புஷ்பங்களில் தாள்கள் சேர்ந்திராமல் மகரந்தப்பைகள் மாத்ரம் சேர்ந்திருக்கும்.

எல்லாக் கேசரங்களிலும் தாள்கள் இருப்பதில்லை. சிலவற்றில் மகரந்தப்பை மாத்ரம் இருக்கும். ஆடு தீண்டாப்பாளையை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இந்தச் செடியின் புஷ்பத்தில் மகரந்தப்பைகள் பிஸ்டிலில் (அண்டகோசம்) சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சிலவகை புஷ்பங்களில் கேசரங்களின் நீளம் ஒரே அளவாக இருக்கிறது. வேறு சிலவற்றில் நீளம் வித்யாஸப்படுகிறது.

நெருஞ்சில், ப்ரமதண்டு முதலிய சிலவற்றின் புஷ்பங்களில் கேசரங்கள் பூக்காம்பின் நுனியிலிருந்து உண்டாகின்றன. கத்தரி, ஊமத்தை முதலிய சில புஷ்பங்களில் கேசரங்கள் (ஸ்டேமன்ஸ்) தளங்களோடு சேர்க்கப்பட்டிருக்கின்றன. அகத்தியில் கேசரங்கள் புறவிதழ்களில் இணைக்கப்பட்டிருக்கின்றன. கொய்யாப்பூவில் கேசரங்கள் அண்டாசயத்தின்மேலிருந்து உண்டாகின்றன. ரோஜாப்பூவிலும், மாதுளம்பூவிலும் கேசரங்கள் அண்டகோசத்தைச்சுற்றி பூக்காம்பின் ஓரத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

### புஷ்பங்களில் கருத்தரித்தல்.

புஷ்பங்களின் நடுபாகமாகிய பிஸ்டில் (அண்டகோசமே) பிஞ்சாக வளருகிறது. ஆனால் அது பிஞ்சாக வளருவதற்குமுன் ஒரு முக்யமான வேலை நடந்தாகவேண்டும். கேசரங்களின் நுனியிலுள்ள மகரந்தப்பொடியானது பிஸ்டிலின் நுனிபாகமாகிய ஸ்டிக்மாவில் விழவேண்டும். இப்படிவிழுந்த பிறகு தான் பிஸ்டில் பிஞ்சாகமாறும். எந்தக் காரணத்தினாலாவது மகரந்தப்பொடி ஸ்டிக்மாவில் விழாமல்போனால், பிஸ்டில் பிஞ்சாக வளருவதில்லை. ஸ்டிக்மாவின் நுனியில் ஒருவித தித்திப்பான த்ரவம் இருக்கிறது. மகரந்தப்பொடி அதில் விழுந்ததும் அது வளருகிறது. பிஸ்டிலில் ஸ்டைல் என்னும் இலைத்தின் நடுவிலுள்ள நுண்ணிய த்வாரத்தின் வழியாக மகரந்தப்பொடி வளர்ந்து கீழேபோய், ஓவரியில் (அண்டாசயத்தில்) சேருகிறது. ஓவரியில் சிறுவிதை மூலங்கள் உண்டு. அவை ஓவ்யூல் என்று சொல்லப்படும். ஒவ்வொரு ஓவ்யூலிலும் ஒரு சிறு த்வாரம் இருக்கும். மகரந்தப்பொடி அந்த த்வாரத்தின் வழியாக உள்ளே போய் ஓவ்யூலிலுள்ள ஜீவ அணுவுடன் கலந்துகொள்ளுகிறது. இப்படிச் சேருவதற்குத்தான் கருத்தரித்தல் என்று பெயர். இவ்விதம் கருத்தரித்த பிறகு ஓவரி வளர்ந்து பிஞ்சாகிறது. பார்ப்பதற்கு ஸாமான்யமாகத் தோன்றும் ஸ்டேமன்ஸும் பிஸ்டிலும் விதை விளைருவதற்கு ரொம்ப முக்யமாக இருக்கின்றன.



# KALAMEGAM.

By S. NARASIMHACHARIAR, B. A., B. L.,
*High Court Vakil, Madras.*

## காளமேகப் புலவர்.

(சென்ற மாஸத்திய பத்திரிகையில் 246-ம் பக்கத் தொடர்ச்சி.)

### சிவபெருமானுக்கும், விக்னேச்வரருக்கும், ஸுப்ரமண்யருக்கும் ச்லேஷை.

சென்னிமுக மாறுளதால்; சேர்தருமுன் னாலுகை [யால்;
இந்நிலத்தில் கோ(டு) ஒன்(று) இருக்கையால்;— [மன்னுகுளக்
கண்ணுறுதலானும் கணபதியும் செவ்வேளும்
எண் அரனும் நேராவரே.

இதன் பொருள்:—

கணபதியும், அழகிய ஸுப்ரமண்யரும், (முதற் கடவுளாக) எண்ணப்படுகிற பரமசிவனும், ஒருவரையொருவர் ஒத்திருப்பார். (எனென்றால்); 'சென்னிமுக மாறுளதால்...' முதல் மூன்றடிகளில் உள்ள ச்லேஷையை விளக்கிச் சொல்வோம்.

I 'சென்னிமுக மாறுளது':—

(1) கணபதிக்கு, 'சென்னி, முகம், மா(று) உளது'; அதாவது, விக்னேச்வரருடைய சிரஸும் முகமும் மற்றவர்களுக்கு இருப்பது போலிராமல் மாறுபட்டிருக்கிறது. எனென்றால், அவருடைய முகம், யானை முகம்.

(2) ஸுப்ரமண்யருக்கு, சென்னி, முகம், ஆ(று) உளது; அதாவது, அவருடைய சிரஸில் ஆறு முகங்கள் இருக்கின்றன. ஸுப்ரமண்யருக்கு ஆறு முகங்கள் இருக்கின்றன என்பது லோகப்ரஸித்தம்.

(3) சிவபெருமானுக்கு, 'சென்னிமுகம், ஆ(று) உளது'; அதாவது, அவருடைய சிரஸில் ஒரு ஆறு இருக்கிறது. சிவபெருமானுடைய ஜடையில் கங்காதேவி அமர்ந்திருக்கிறாள். சென்னிமுகம்=சிரஸினிடத்தில்.

II 'சேர்தருமுன்னாலுகையால்'

(1) கணபதிக்கு, 'சேர்தரும், முன், நாலு, கை' அதாவது, அவருடம்பில் சேர்ந்தது, முன்னே தொங்குகிற (துதிக்)கை. விநாயகக் கடவுளுக்குத் துதிக்கை இருப்பது, அனைவருக்கும் தெரிந்த விஷயம். நாலுதல்= தொங்குதல்.

(2) ஸுப்ரமண்யருக்கு, 'சேர்தரும், மூன்னாலுகை'; அதாவது, அவருக்குச் சேர்ந்துள்ளன, பன்னிரண்டுகைகள்; அதாவது, அவருக்குப் பன்னிரண்டு கைகள் உண்டு. மூந்நாலு= மூன்று நாலு=3×4=12. ச்லேஷை பாடுகிறவர்கள் ந,ண கரங்களை உபயோகிப்பதில் வித்யாஸம் பாராட்டுவதில்லை.

(3) பரமசிவனுக்கு, 'சேர்தரும், உன் நாலுகை'; அதாவது, பெருமையாக எண்ணக்கூடிய நான்கு கைகள் அவருக்கு இருக்கின்றன. உன்னுதல் = (பெருமையாக) எண்ணுதல்.

III 'இந்நிலத்தில் கோ(டு) ஒன்று இருக்கை' 'கோடு' என்னும் சொல்லுக்கு, 'கொம்பு' என்றும் 'மலை' யென்றும் இரண்டர்த்தம் உண்டு. இந்நிலத்தில்=இந்தப் பூமியில்.

(1) கணபதிக்குக் கோடு ஒன்று இருக்கிறது; அதாவது, அவருக்கு ஒற்றைக் கொம்பு உண்டு. (ஒற்றைக் கொம்பின் வரலாற்றை முன்னமே 181-ம் பக்கத்தில்) சொல்லியிருக்கிறோம்.

(2) ஸுப்ரமண்யர், கோடு ஒன்றில் இருக்கிறார்; அதாவது, திருச்செங்கோடு என்னும் ஸ்தலத்தில், ஸுப்ரமண்யர் கோயில் கொண்டிருக்கிறார்.

(3) சிவபெருமான் கோடு ஒன்றில் இருக்கிறார்; அதாவது, அவர் கைலாஸ மலையில் இருக்கிறார். கோடு=மலை.

IV. 'மன்னு குளக் கண்ணுறுதல்'

குளம் என்னும் சொல்லுக்கு வெல்லம், பொய்கை, நெற்றி என்று மூன்று அர்த்தம் உண்டு.

(1) கணபதி 'மன்னு குளம், கண் உறுதல்'; அதாவது, பொருந்திய வெல்லத்தில் வந்து சேர்தல். கல்யாணம் முதலிய வைதிகச் சடங்குகள் செய்கையில், கொஞ்சம் வெல்லத்தைப் பிடித்துவைத்து, அதில் விக்னேச்வரரை ஆவாகனம் செய்து, அந்த வெல்லத்திலுள்ள விக்னேச்வருக்குப் பூஜை நைவேத்யங்கள் செய்வது, ஹிந்துக்கள் வழக்கம். 'குளம்' என்னும் ஸம்ஸ்க்ருதச் சொல்லுக்கு, வெல்லம் என்று அர்த்தம். 'குளத்துக்கண்' என்னும் சொல், பாடல் நயம் நோக்கி 'குளக்கண்' என்று ஆயிற்று. அதாவது குளத்தில்=வெல்லத்தில்; உறுதல்=பொருந்துதல்.

(2) ஸுப்ரமண்யர் சரவணப் பொய்கையினிடத்தில் பிறந்தார். ஆகையால் 'மன்னு குளக்கண் உறுதல்' என்றார். குளம்=பொய்கை.

(3) பரமசிவனார், நெற்றியில் கண் உடையவராகையால், 'மன்னு குளக்கண் உறுதல்' என்றார். மன்னு=பொருந்திய, குளம்=நெற்றி, குளக்கண்=நெற்றிக் கண்.

சிவபெருமானுக்கும் சிட்டுக் குருவிக்கும் ச்லேஷை.

"பிறப்பிறப்பிலே."

இதன் அர்த்தம் :—

(1) சிட்டுக் குருவி, வீட்டின் கூரையில் முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தலால், 'பிறப்பு, இறப்பிலே', என்றார்.

(2) சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லாத காரணபடியால், 'பிறப்பு, இறப்பு, இல்(லை)' என்றார். ஏ-அசை.

பாலுக்கும் கத்திக்கும் ச்லேஷை.

"காய்த்துத் தோய்த்துக் கடை"

கடை=தாழியில் வைத்து மத்தால் கடைதல்; அல்லது, கடைச்சல் பிடித்தல்.

இதிலுள்ள ச்லேஷை வெளிப்படை.

இப்படி மற்றும் அநேக ச்லேஷைப் பாடல்களையும், வேறுவிதமான பாடல்களையும் பாடி, கண்டவர்களும் கேட்டவர்களும் ப்ரமிக்கும்படி செய்து, எந்தக் கேள்விக்கும் பின் வாங்காமல் பதில் சொல்லி, காளமேகம் உறியினின்றும் கீழே இறங்கினார். இந்த ஆச்சர்யத்தைப் பார்த்திருந்தும், நீச புத்தியையுடைய அந்தப் புலவர்களும் அவர்களுடைய சூழ்ச்சிக்கெல்லாம் உடந்தையாயிருந்த ராஜனும் பொறாமை கொண்டு, கவிச்ரேஷ்டருக்கு ஸன்மானம் செய்யாமலிருந்தார்கள். அதைக் கண்டு மனங் கொதித்த காளமேகம்,

செய்யாத செய்த திருமலைராயன் வரையில்,
ஐயா ! அரனே ! அரைநொடியில்—வெய்யதழல்
கண்மாரியால் மதனைக்கட் (டு) அழித்தாற்போல்,
மண்மாரியால் அழிய வாட்டு.* [தீயோர்

என்னும் வசைப்பாடல் † பாடினார்.

இதன் அர்த்தம்.—ஐயா, ஈச்வரனே, கொடுமையான நெருப்பாகிய (நெற்றிக்) கண்மாரியால் மன்மதனை முற்றிலும் அழித்தாற் போல, செய்யத் தகாதவைகளைச் செய்த திருமலைராயனுடைய பட்டணத்தில் உள்ள தீயோர்கள் அரைநொடியில் அழியும்படி மண்மாரி பெய்யச் செய்து வாட்டுவீராக.

பிறகு அவர் அவ்விடத்தில் ஒரு நிமிஷமும் தங்க இஷ்டமில்லாமல், அங்கிருந்து புறப்பட்டுப் போனார். அவர் பாடிய படியே, மண்

* வரை = மலை; இங்கு மலை பொருந்திய நாடு. அரன்=சிவன். வெய்யதழல்= வெம்மை பொருந்திய நெருப்பு. கண்மாரி=நெற்றிக் கண்ணின் நெருப்பு. மதன்=மன்மதன் கட்டழித்தல்=முற்றும் அழித்தல்.

† வசைப் பாடல்=சபிக்கும் பாடல்.



மழைபெய்து, அந்தப் பட்டணம் அழிந்தது என்று கர்ணபரம்பரையாகச் சொல்வதுண்டு.

ஸமைகப் பாடலும் மற்ற தனிப் பாடலும்.

நிந்தாஸ்துதி பாடுவதிலும், ச்லேஷை பாடுவதிலும், காளமேகம் நிகரற்றவர் என்று முன்னமே சொல்லி, அதற்குத் தக்க உதாரணங்களும் எடுத்துக் காட்டியிருக்கிறோம். சிரிப்பை உண்டாக்கக் கூடிய சில பாடல்களை காட்டுவோம்.

விகடராமன் என்னும் ப்ராம்மணன் ஒருவன், உடல் மெலிந்து சவம் போலிருந்த ஒரு குதிரைமேலேறி, ஸவாரி செய்யும் விநோதத்தைப் பார்த்தபோது பாடியது.

முன்னே கடிவாள(ம்) மூன்றுபேர் தொட்(டு) இழுக்க;
பின்னே இருந்(து) இரண்டு பேர் தள்ள—எந்நேரம்
வேதம் போம் வாயான், விகடராமன் குதிரை,
மாதம் போம் காதவழி.

இதன் அர்த்தம் வெளிப்படை.

மற்றொரு ஸமயத்தில், இவர் நாகப்பட்டணத்துக்குப் போயிருந்த பொழுது, அங்குள்ள கோயிலில், சாரீரம் கொஞ்சமும் இல்லாத தாஸி ஒருத்தி பாடுவதைக்கேட்டு, அவளைப் பரிஹஸித்துச் சொல்லிய பாடல்:—

வாழ்த்த திருநாகை வாகான தேவடியாள்,
பாழ்த்த குரல் எடுத்துப் பாடினள்—நேற்று,
கழுதை கெட்ட வண்ணான், 'கண்டேன் ! கண்டேன் !' என்று,
பழுதை எடுத்து, ஓடிவந்தான்; பார் ! *

இதன் பொருளும் வெளிப்படையே.

நாகப்பட்டணத்திலுள்ள காத்தான் ஸத்ரத்தில், அன்னம் கிடைக்குமென்று, இவர் வெகு நாழிகை காத்திருந்தும், உணவு கிடைக்காததைக் கண்டு பாடிய

வெண்பா.

கத்து கடல் சூழ்நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்,
அத்தமிக்கும் போதில் அரிசி வரும்,—குத்தி
உலையில்இட ஊர் அடங்கும்; ஓர் அகப்பை அன்னம்
இலையில் இட வெள்ளி எழும். *

இதன் அர்த்தமும் ஸ்பஷ்டமே.

இந்தப் பாடலுக்கே, ஸத்திரத்தைப் புகழ்ந்து பாடியதாக அர்த்தம் சொன்னார் என்றும் சொல்வார்கள். அப்போது, அத்தமிக்கும் போது=உலகத்தில் க்ஷாமம் வந்த ஸமயத்திலும், ஊர் அடங்கும்=ஊரார் சாப்பிட்டு சந்தோஷம் அடைவார்கள். வெள்ளிவரும்= 'அரிசியின் வெண்ணிறம் தனக்கில்லையே' என்று எண்ணி வெள்ளியும் வெட்கம் அடைந்து போவான். (வெள்ளி=சுக்ரன்.)

பின் ஒரு ஸமயத்தில் இவர் திருவாரூருக்குப் போயிருந்தபோது, அங்கு, கோயில் மண்டபத்தின் சுவரில்;

'நாண்என்றால், நஞ்சிருக்கும் நற் சாபம் கற்சாபம்' என்ற ஒரு வரி எழுதியிருக்கக் கண்டு, அந்த வெண்பாவின் மற்ற மூன்றடிகளையும் எழுதிப் பாடலை முடித்தார். முதல் வரிக்குமேல் எழுத முடியாமல் அதை அம்மட்டோடு நிறுத்தி விட்டுப்போன வித்வான், மறுதினம் கோயிலுக்குவந்து, அந்தப் பாடலைப் பூர்த்திபண்ணினவர் காளமேகமே என்று தெரிந்து, அவரை மிகவும் புகழ்ந்தார்.

அந்தப் பாடல் வருமாறு.

நாண் என்றால் நஞ்(சு) இருக்கும்; நற்சாபம் கற்சாபம்;
பாணம்தான் மண்தின்ற பாணமே—தாணுவே! [பம்.
சீ(ர்) ஆரூர் மேவும் சிவனே ! நீ எப்படியோ !
நேர் ஆர் புரம் எரித்த நேர்.†

* கத்துகடல் = சப்தம் மிகுந்தகடல். அத்தமிக்கும்=அஸ்தமிக்கும். ஊர் அடங்கும்=ஊர் ஜனம் தூங்கிவிடுவார்கள். வெள்ளி=சுக்ரன். வெள்ளி எழும்=பொழுது விடியும்.

† நஞ்சு=வைந்து. சாபம்=வில்; இங்கு மகாமேரு பர்வதம். சிவபெருமான் த்ரிபுரத்தை எரித்தபோது, மேருமலை வில்லாக இருந்ததென்றும், வாஸுகி என்னும் பாம்பு நாணாக இருந்ததென்றும், உலக முழுவதையும் விழுங்கி வயிற்றில் கொண்ட விஷ்ணு, பாணமாக இருந்தார் என்றும் புராணங்கள் சொல்லும். தாணு=சிவன். ஆரூர்= திருவாரூர். புரம்= த்ரிபுரம்.

* நாகை=நாகப்பட்டணம். வாகு=அழகு,

இதன் பொருள்: திருவாரூரில் எழுந்தருளிய சிவபெருமானே! நீ த்ரிபுரத்தை எரித்த போது, உன்கையில் இருந்த வில்லோ, வளைக்க முடியாத கல்! அந்த வில்லின் கயிறோ, ஊர்ந்து போயிருந்தது! (ஸர்ப்பத்தின் வாயில் விஷம் இருப்பதால் 'நஞ்சு இருக்கும்' என்ற சொற்கள் ச்லேஷை); உன் அம்போ, மண்ணைத்தின்ற பாணம்! இவற்றைக் கொண்டு நீ த்ரிபுரத்தை எப்படித்தான் எரித்தாயோ?

இப்படிப் பல பாடல்கள் பாடி, தமிழ் நாடு முழுவதும் 'ஆசுகவிப் புலவர்' என்னும் பெருங்கீர்த்தி பெற்றிருந்தார். (ஆசுகவி=எதைப் பற்றிப் பாடச்சொன்னாலும், எப்படிப்பாடச் சொன்னாலும், அப்படியே பாடி முடிக்கும் கவி). இவர், 'ஸரஸ்வதிமாலை', 'திருவானைக்காஉலா,' முதலிய சில ப்ரபந்தங்கள் பாடியுள்ளார் என்று சொல்லுகிறார்கள். இந்த ப்ரபந்தங்கள் இப்போது கிடைப்பதில்லை. தனிப் பாடல்கள் மட்டுமே அகப்பட்டுள்ளன. அவைகளிலும் சில, இவர் பாடியவை தாமோ, பிறர் பாடியவையோ, என்று ஸந்தேகப்படத்தக்கனவாயிருக்கின்றன. அவை எப்படியிருந்தாலும், அந்தப் பாடல்கள் மிகச் சிறந்தவை என்பதற்குத் தடையில்லை. ஆசுகவி பாடும் புலவரில் இவருக்கு நிகரானவர் ஒருவரும் இல்லை என்றே சொல்லவேண்டும். வாயில் வந்தபடியெல்லாம் கேள்வி கேட்டு எப்படிப்பாடச் சொன்னாலும், கொஞ்சமும் தவறில்லாமல் பாடும் ஸாமர்த்யம் இவரிடத்தில் இருந்ததைப் போல் வேறொருவரிடத்திலும் இருந்ததில்லை. இவர் பாடிய ச்லேஷைப் பாடல்களில் சிலவற்றிற்கு, ஸுலபமாகப் பொருள் வராமல் ச்ரமப்பட்டே அர்த்தம் பண்ண வேண்டியிருந்தாலும், அந்தப் பாடலின் விஷயங்களையும், அந்த விஷயங்கள் ஒன்றோடொன்று கொஞ்சமும் ஸம்பந்தப்படாதவையென்பதையும், கவனிக்கும்போது, அப்படிப்பட்ட ச்லேஷைக் கவிகள் பாடுவது அரிதிலும் அரிதே, என்று யாவரும் ஒரேமனதாய் ஒத்துக் கொள்வார்கள். தமிழ் பாஷையில் நகைச்சுவை (அதாவது ஹாஸ்யரஸம்) உள்ள பாடல்கள் அதிகமாக இல்லாதிருக்கும் குறையை நீக்குவன, இவருடைய தனிப்பாடல்களே.

இவருடைய காலம் இப்பொழுதைக்கு நானூறு வர்ஷங்களுக்கு முன் என்று பலர் சொல்லுவார்கள்.

'நாணென்றால் நஞ்சிருக்கும்' என்ற வரியை எழுதின வித்வான், காளமேகம் இறந்ததைக் கேள்விப்பட்டு, ஸ்மசானத்துக்குப் போய், அங்கே அவருடைய தேகம் எரிந்து கிடைப்பதைக் கண்டு பின்வருமாறு மனமுருகிப் பாடினார்.

ஆசுகவி மாரி, அகில உல(கு) எங்கும்
வீசுபுகழ்க்-காளமேகமே! —பூசுரா!
விண்கொண்ட செந்தழல்வாய், வேகின்றதே! ஐயோ!
'மண்தின்ற பாணம்' என்றவாய்! *

முடிவுரை.

இவருக்கு ஸரஸ்வதி ப்ரத்யக்ஷம் ஆனள் என்பதையும், இவர் வாயில், அந்த தேவி தம்பலத்தை உமிழ்ந்தாள் என்பதையும், அதனாலே இவருக்குப் புலமை உண்டாயிற்று என்பதையும், 'வெள்ளைக்கலை உடுத்து' என்னும் பாடலைப் பாடிய மாத்ரத்தில், ஸிம்மாஸனம் விரிந்து இடங்கொடுத்தது என்பதையும், 'மண்மாரியால் அழியவாட்டு,' என்று வசைபாடினவுடன், மதுராபுரி அழிந்து போயிற்று என்பதையும், நாகரீகம் முதிர்ந்து, சாஸ்த்ர ஆராய்ச்சி மிகுந்த இந்த இருபதாம் நூற்றாண்டில் வாழ்பவர், நம்பாதிருக்கலாம். ஆயினும்,

* கவிமாரி-பாடலாகிய மழை. பூஸுரன்-ப்ராம்மணன். விண்கொண்ட செந்தழல்-ஆகாயம் மூட்டிய நெருப்பு. தழல் வாய்-நெருப்பில்.



மேலே எடுத்துக் காட்டிய பாடல்களின் ஆசுகவித் தன்மையையும், அவைகளின் பொருள் சுவையையும், சொல் நயத்தையும், நிந்தாஸ்துதி விசேஷத்தையும், ஹாஸ்யரஸத்தையும், வார்த்தைகளை வெவ்வேறாகப் பிரித்துக்கூட்டி, வேறு வேறு பொருள் படும்படி அமைக்கும் விநோத ஸாமர்த்யத்தையும், யோசித்துப் பார்க்கும்போது கடவுள் கடாக்ஷமில்லாவிட்டால் இப்படிப்பட்ட கவித்திறம் கிடைக்காது என்று எல்லாரும் ஒத்துக்கொள்வது, அவச்யமாகும். ஆகவே, தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர், கம்பர் முதலியோருடன் ஸமானமான அருள்கவியே ஆவார், காளமேகம். இவர் செய்தருளிய ப்ரபந்தங்கள் கிடைக்காமலிருப்பது, தமிழ் நாட்டாருடைய துரத்ருஷ்டமேயாகும்.

இவர் நிந்தாஸ்துதி பாடும் திறமையை மெச்சி, பிற்காலத்தார் பாடிய பாடல்:—

வெண்பாவில் புகழேந்தி; பரணிக்கோ ஜெயங்
விருத்த(ம்) என்னும், [கொண்டான்;
ஒண் பாவில் உயர் கம்பன்; கோவை, உலா,
ஒட்டக்கூத்தன்; [அந்தாதிக்கு,
கண்பாய கலம் பகத்திற்(கு) இரட்டையர்கள்;
வசைப்பாடக் காளமேகம்;
பண்(பு) ஆகப் பகர் சந்தம் படிக்கா(சு) அலா(து),
பகர் ஒணாதே. [ஒருவர்

எஸ். நரஸிம்மாச்சாரி.

## FEEDING OF INFANTS.

### சிசுக்களுக்கு உணவூட்டுதல்.

வ்யாதி வந்தபின் ச்வஸ்தம் செய்வதைவிட வ்யாதியே வாராமல் தடுப்பதுதான் ஸுலபமானது. செலவும் குறைவானது. இந்த உண்மையை கவனித்து சிசுக்களை ஸம்ரக்ஷணம் செய்துவரும் பக்ஷத்தில், சிசுமரணம் அதிகமாயிராது.

முதலாவது, கர்ப்பமாயிருக்கும் ஸ்த்ரீ எவ்வளவுக்கெவ்வளவு ஸௌக்யமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறாளோ, அவ்வளவுக்கவ்வளவு அவளுக்குப்பிறக்கும் குழந்தையின் தேகம் சரியாக இருப்பதோடு, தேகஸௌக்யம் வ்ருத்தியடையவும் இடமுண்டு. குழந்தை பிறந்தபிறகு, அது சரியாய் இருக்கவும், நன்றாய் வளரவும் வேண்டுமானால், அதன் உணவும், அது இருக்கும் வீடும், சுற்றுப்புறமும் நன்றாயிருக்க வேண்டும். இங்கு உணவு விஷயத்தைப்பற்றி மட்டும் பேசுவோம்.

மற்றெல்லா வகைப் பால்களையும்விட தாய்ப்பால்தான் குழந்தைகளுக்கு ஏற்றது. புட்டிப் பால்களையும் இதரபால் ஸம்பந்தமான புட்டி உணவுகளையும் உபயோகிப்பதால், குழந்தைகளுக்கு நோய்வராமல் தடுத்துக்கொள்ளும் சக்தி குறைந்துபோகிறது. புட்டிப்பால் குடித்துவளரும் குழந்தைகள் வெயில்காலத்தில் ரொம்ப கஷ்டப்படும். தாய்ப்பால் குடித்து வளர்ந்த குழந்தைகளுக்கு அவ்வளவு கஷ்டமிராது.

ஆகவே, ஒருதாயார் தன் குழந்தைக்குச் செய்யக்கூடிய அன்பான வேலை என்னவென்றால், புட்டிப் பால் கொடுக்காமலும், பிறர் பால் கொடுத்து வளர்க்கவிடாமலும் தானே குழந்தைக்குப் பால்கொடுத்து வளர்ப்பதே. பொதுவாய்ச் சொல்லுமிடத்து, தாய்ப்பால் குடித்து வளரும் சிசுக்களில் மரணவிகிதம் ரொம்ப குறைவு. ஸராஸரியில் தாய்ப்பால் குடித்து வளரும் ஒருவர்ஷத்துக் குழந்தைகளுள் சிசு

மரணம் 100-க்கு 7-வீதமாக இருக்கிறது. ஆனால் புட்டிப்பால் குடித்துவளரும் குழந்தைகளுள் 100-க்கு 30-வீதம் ஒரு வயதுக்குள்ளேயே இறந்துபோய் விடுகின்றனவென்று தெரிகிறது. இதனால் பெற்ற தாயாரே குழந்தைக்குப் பால்கொடுப்பது எவ்வளவோ நல்லதென்பது தெளிவாய்த் தெரிகிறது.

ஸாதாரணமாக ஒவ்வொரு ஸ்த்ரீயும் குழந்தைபிறந்த மூன்று அல்லது நான்கு மாஸம் வரையில் தானே பால் கொடுக்கவேண்டும். பத்துமாஸம்வரையில் பால்கொடுத்துவரக்கூடுமானால், ரொம்ப நல்லது. குழந்தை வாயை வைத்து சப்புவதால், பால் சுரக்கும் குணம் அதிகரிக்கும். ஆகையால் க்ரமமாகக் குழந்தைகளுக்குப் பால்கொடுப்பதில் கவனமாக இருக்கவேண்டும்.

குழந்தைகளுக்கு தாய்ப்பால் போதாமலிருந்தால், வேண்டியவளவு பசும்பாலை தக்கபடி தயாரித்துக் கொடுக்கவேண்டும். தாய்ப்பால் குறைந்துபோனால் தக்க சிகித்ஸை செய்து பாலை அதிகப்படுத்தவேண்டும். பால் சரியாகச் சுரக்கவேண்டுமானால், தாயானவள் மன அமைதியுடன் இருக்கவேணடும். வீணாக மனதுக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது. அதிக வேலைசெய்து களைப்பு உண்டாக்கிக் கொள்ளவும் கூடாது. வழக்கமாகச் சாப்பிடும் ஆகாரத்தை வேண்டியவளவு சாப்பிடவேண்டும்.

தாய்க்கு க்ஷயரோகம் இருந்தால்தான், அவள் தன் குழந்தைக்குப் பால்கொடுப்பது பிசகென்னலாம். மற்றபடி வேறு கோளாறுகள் எது இருந்தாலும், பால்கொடுக்கத் தடையில்லை. அதனால் குழந்தைக்கு அதிக கெடுதி ஏற்பட்டுவிடாது. இருந்தாலும், தாய்க்கு ஏதாவது வ்யாதி இருந்தால், உடனே வைத்யம்செய்யவேண்டியது அவச்யம்.

குழந்தைக்கு எந்தெந்த ஸமயங்களில் பால் கொடுக்கவேண்டுமென்பது தாயின் தேகஸ்திதியையும் குழந்தையின் நிலைமையையும் பொறுத்தது. ஒருநாளின் 24-மணி நேரத்தில், 5 முதல் 7 தடவைவரையில் குழந்தைக்கு முலைப்பால் கொடுக்கவேண்டியது அவச்யம். பால் கொடுக்கும் ஸமயங்களுக்கு இடையில் குழந்தைக்கு கொதிக்கவைத்து ஆறின ஜலத்தைக் குடிக்கக் கொடுக்கவேண்டும். ஸாதாரணமாக ஒரு குழந்தை ஒருதடவையில் 15-நிமிஷத்துக்குமேல் பால் குடிப்பதில்லை. குழந்தைக்கு த்ருப்தியாகும்வரையில் பால் கொடுக்கவேண்டியது அவச்யம். ஆகையால் அது எவ்வளவு நேரம் பால்குடிக்க இஷ்டப்படுகிறதோ அவ்வளவு நேரம் கொடுத்துக்கொண்டிருக்கவேண்டும்.

ஸாதாரணமாய் ஒரு தடவைக்கு ஒரு ஸ்தனமும், மறுதடவைக்கு மறுஸ்தனமுமாகக் கொடுப்பது வழக்கமென்று சொல்லலாம். முலைக்காம்பு சுத்தமாய் இருக்கவேண்டியது அவச்யம். ஒவ்வொரு தடவையும் பால் கொடுப்பதற்குமுன் முலைக்காம்புகளை சுத்தம் செய்யவேண்டும்.

## பம்பாய் ஜ்வரத்திற்கு கைகண்ட மருந்து.

மாயவரம் ஸ்கூல் ஸப் அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் வி. விஜயராகவ ஆசாரியார் பின்வருமாறு எழுதுகிறார்:—

| | | |
|---|---|---|
| சித்தரத்தை | 1 | துண்டு. |
| ஓமம் | 1 | சரண்டி (டீஸ்பூன்). |
| வெற்றிலை | 4 | |
| வேப்பிலை | 1 | ஆர்க்கு. |

இவைகளை கால்சேர் பொங்கும் வெந்நீர் விட்டு அரைத்து ஸ்வரஸமாக பிழிந்து வடிகட்டி மறுபடி சுடவைக்காமல் அரைக்கால் சேர் வீதம் மூன்று வேளை சாப்பிட கட்டாயம் ஜ்வரம் நின்றுவிடும். ஜ்வரம் வந்தாலும் வரும்போதிருந்தாலும் சாப்பிடலாம். பத்யம் புழுங்கலரிசி கஞ்சி.



# A MULTIPLICATION METHOD.
## ஒரு பெருக்கல் முறை.

பின்வரும் பெருக்கல் முறை ரஷ்யக் குடியானவர்களிடம் வழங்கிவருகிறது. 39-ஐ 37-ல் பெருக்கவேண்டுமானால், இரண்டு எண்ணையும் இரண்டு பத்தியாகப்போட்டு, ஒன்றை இரண்டால் பெருக்கிக் கொண்டுபோக, மற்றதை இரண்டால் வகுத்துக்கொண்டுபோய், வகுத்தலில் ஈவு 1-வரும்வரையில் இப்படியே செய்யவேண்டும்.

| | |
|---|---|
| **39** | **37** |
| 78 | 18 |
| **156** | **9** |
| 322 | 4 |
| 624 | 2 |
| **1248** | **1** |
| 1443 | |

பிறகு இரட்டைப்படை எண் உள்ள வரிகளை அடித்துவிடவும். (அடித்த எண்களை சிறு எழுத்திலும் அடிக்காதவைகளைத் தடித்த எழுத்திலும் எழுதியிருக்கிறோம்.) பிறகு இடதுபுறத்தில் அடிபடாத எண்களைக் கூட்டவும். இந்தக் கணக்கில் 39+156+1248=1443.

இந்தப் பெருக்கல் முறை ஸர்வஸாதாரணம். இதைக்கொண்டு பெரிய பெருக்கல் கணக்குகளையும் போடலாம். இரண்டும் பெரிய எண்களாக இருந்தால், வழி பெரியதாக இருக்கும். கணக்குப்போடுவது சற்று ச்ரமம். ஒன்று பெரியதாகவும் மற்றது சிறியதாகவும் இருந்தால், சிறிய எண்ணை இரண்டால் வகுத்துக்கொண்டு போவதுதான் ஸுலபமான வழி. பெரிய எண்ணை இரண்டால் பெருக்கிக்கொண்டு போகவேண்டும். உதாரணம். 1759-ஐ 47-ஆல் பெருக்கவும்.

| | |
|---|---|
| **1759** | **47** |
| **3518** | **23** |
| **7036** | **11** |
| **14072** | **5** |
| 28144 | 2 |
| **56288** | **1** |
| 82673 | |

பெருக்கல் பத்தியில் அடிபடாத எண்களை அதாவது தடித்த எழுத்திலுள்ள எண்களைக் கூட்ட 82673 விடை வரும்.

இந்த முறை தசாம்ச பின்னங்கள் உள்ள எண்களைப் பெருக்கவும் உபயோகமாகும். பெருக்கும் எண்ணிலாவது, பெருக்கப்படும் எண்ணிலாவது, இரண்டிலுமாவது தசாம்ச பின்னமிருக்கலாம். முறை ஒரேவிதந்தான். பெருக்கினபிறகு எத்தனை பின்ன ஸ்தானங்கள் மொத்தம் உண்டோ அத்தனை இடங்கள் தள்ளி தசாம்சப் புள்ளி போடவேண்டும். உதாரணம்: 37-ஐ ·125-ஆல் பெருக்கவும்.

| | |
|---|---|
| **125** | **37** |
| 250 | 18 |
| **500** | **9** |
| 1000 | 4 |
| 2000 | 2 |
| **4000** | **1** |
| 4625 | |

பெருக்கும் எண்ணில் பின்னம் மூன்று ஸ்தானம் தள்ளியிருப்பதால், இங்கும் 3-ஸ்தானம் தள்ளிப்போட பெருக்குத் தொகை 4·625.

## PLANTING TREES ON PORAMBOKE LANDS.
## புறம்போக்கு நிலங்களில் மரம் வைத்து வளர்த்தல்.

புறம்போக்கு நிலங்களில் ரயத்துகள் மரம் வைத்து வளர்ப்பது ஸம்பந்தமாக கவர்மெண்டார் பின்வரும் ரூல்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

(1) கவர்ன்மெண்டுக்கு சொந்தமான விலையுயர்ந்த மரங்களுள்ள புறம்போக்கு நிலங்களில் மரம் வைத்து வளர்க்க ரயத்துகளுக்கு அனுமதி கொடுக்கப்படமாட்டாது. ஏனென்றால், சில காலத்துக்குப் பிறகு கவர்மெண்டாருக்கு சொந்தமான மரம் எது, ரயத்துகள் வைத்து வளர்த்த மரம் எது, என்று கண்டுபிடிப்பது கஷ்டமாகிவிடும்.

மரம் வைத்து வளர்ப்பதற்கு முன்னால், தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தாரிடமிருந்து அனுமதி பெற்றுக்கொள்ளவேண்டியது அவச்யம். மராமத்திலாகாவைச் சேர்ந்த புறம்போக்கு நிலமாயிருந்தால், அந்த இலாகாவின் ஸம்மதம் கிடைத்த பிறகுதான் தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தார் மரம் வைத்து வளர்க்க அனுமதி கொடுக்கவேண்டும். மராமத்திலாகா அதிகாரிகள், அவர்களுக்கு அவச்யமென்று தோன்றுகிறபடி மரம் வளர்ப்பது விஷயமாக வேண்டிய நிபந்தனைகளை ஏற்படுத்தலாம்.

(3) மரம் வைப்பதற்குக் கொடுக்கும் லைசென்ஸில் புறம்போக்கு நிலத்தின் எல்லைகளும், எத்தனை மரம், என்னவகை மரம் பயிரிடலாமென்பதும் குறிப்பிடப்படவேண்டும்.

(4) பயிரிட அனுமதி கொடுத்தால், நிலத்தின்மேல் பயிரிட்டவருக்கு யாதொரு பாத்யதையும் ஏற்படாது.

(5) மரம் வளர்க்க லைசென்ஸு பெற்ற ரயத்து புறம்போக்கு நிலத்தில் யாதொரு வேலியும் போடக்கூடாது. ஆனால் சிறு கன்றுகளுக்குப் பாதுகாப்பாக ஒவ்வொரு கன்றைச் சுற்றிலும் வேலிபோடலாம்.

(6) கவர்ன்மெண்டாருக்கு அவச்யமென்று தோன்றினால், மரங்களை அப்புறப்படுத்திவிட அவர்களுக்கு பாத்யதை உண்டு. அப்படி அப்புறப்படுத்தினதற்காக அவர்கள் பயிரிட்ட ரயத்துக்கு ஈடு ஒன்றும் கொடுக்க பாத்யப்படமாட்டார்கள். ஆனால் மரங்களை அவர்கள் ஏலத்தில் விற்று வந்த பணத்தை மரம் வைத்து வளர்த்த ரயத்துக்குக் கொடுத்து விடுவார்கள். அல்லது ரயத்து மரம் தனக்கே வேண்டுமென்றால், மரத்தை அவரிடம் கொடுத்து விடுவார்கள்.

(7) ந்யாயமான காலத்துக்குள் மரம்வைத்துப் பயிர்செய்யாவிட்டாலும், மரங்களை சரிவரப் பாதுகாக்காவிட்டாலும் லைஸன்ஸ் ரத்து செய்யப்படும்.

(8) மரத்திலிருந்து கிடைக்கும் பலன்களையும், விறகு, மரம், ஆகிய இவைகளையும் லைசென்ஸ் பெற்றவர் அனுபவிப்பார். ஆனால் பழமரங்கள் காய்க்கத் தொடங்கினதும், மரத்துக்குப் பட்டா வாங்கிக்கொள்ளவேண்டியது அவச்யம்.

(9) பயிரிட்ட மரங்களில் ஏதாவது ஒன்றை வெட்டவேண்டுமானால், அதற்கு தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தாருடைய அனுமதியை முன்னடியே பெறவேண்டியது அவச்யம். ஆனால் ஸாதாரணமாக இந்த அனுமதி கொடுப்பதில் தடை ஒன்றும்இராது.

(10) க்ராமப் பஞ்சாயத்துகளில் ஏதாவது விறகுக்காகவோ, நிழலுக்காகவோ புறம்போக்கு நிலங்களில் மரம்வைத்து வளர்க்க உத்தரவு கேட்டால், அந்தந்த பஞ்சாயத்துகளுக்குத் தகுந்தபடி மேற்படி ரூல்களில் சில மாற்றப்படும்.

உதாரணமாக 3, 9-வது ரூல்களையும் 8-வது ரூலையும் தள்ளிவிடலாம்,



2-DEC 1918 MADRAS

## SOME CURIOUS SHOWERS.
## சில விநோத மாரிகள்.

ரத்தமழை பெய்ததென்றும், மீன்மழை பெய்ததென்றும், கந்தகமழை பெய்ததென்றும் புழுமழை பெய்ததென்றும் சிற்சில ஸமயங்களில் வதந்திகள் உண்டாவதுண்டு. இவைகளைக் கேட்பவர்களில் பலர், மீன் மழையாவது பெய்யவாவது, ஆகாயத்திலிருந்து எப்படி ரத்தம் மழையாகப்பெய்யும் என்று ஸந்தேகிப்பது வழக்கம். இந்த அபூர்வமழைகளில் ஒரு விசேஷமென்னவென்றால், அவை அடிக்கடி ஸம்பவிப்பதில்லை யென்பதே.

காற்றானது இலைகளையும் சருகுகளையும் கடுதாசித் துண்டுகளையும் வெகுதூரம் அடித்துக்கொண்டுபோய் கண்ட இடங்களில் போடுகிறதென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். பலமாக வீசும் டார்னேடோ, ஹரிகேன் என்னும் புயல்காற்றுகள் கனமான பொருள்களையும் வெகு உயரம் தூக்கிக்கொண்டு போகின்றனவென்று நாம் கேட்டிருக்கிறோம். உதாரணமாக அமெரிக்காவில் மிஸ்ஸிஸ்ஸிபி நாட்டில் போரிகார்ட் என்னுமிடத்தில் 1883-ம் வர்ஷம் 22-தேதி யன்று ஒரு பெரிய புயல்காற்று பருத்தி ஆலையின் இரும்பு ஸ்க்ரூவை 900 அடிதூரம் தூக்கிக்கொண்டு போயிற்று. அந்த இரும்பு ஸ்க்ரூவின் நிறை 675 ராத்தலாகும். இன்னொரு ஸமயத்தில் 75 ராத்தல் நிறையுள்ள ஒரு கோழிக்கூடு காற்றால் 4-மைல் தூரம் கொண்டு போகப் பட்டது. அமெரிக்காவில் இல்லினாய் நாட்டில் ஒரு தகரக்கூரை காற்றில் 15-மைல் தூரம் போயிற்றும். ஒரு கோவிலின் சிகரம் 17-மைல் தூரம் கொண்டுபோகப்பட்டதாம்.

### புழுமழை.

புழுமழை உண்மையில் ஸம்பவிப்பது இல்லையாதலால், பலத்தமழைபெய்து, மண்ணைக் கரைத்து, உள்ளே தங்கியிருக்கும் வண்டுகள் முதலிய பூச்சிகளின் புழுக்களை வெளிப்படுத்த, நிலமெல்லாம் புழுவாகத் தெரிகிறதாம். இதைப்பார்த்து ஜனங்கள் புழு ஆகாயத்திலிருந்து விழுந்ததாக எண்ணிவிடுகிறார்களாம். கந்தகமழை என்பது உண்மையில் மகரந்தத்தூள் மழையே.

### ரக்தமழை.

ரக்த மழை உண்டாவதற்குப் பல காரணங்கள் உண்டு. சில தட்டாரப் பூச்சிகள் புழுப்பருவத்தில் ஒருவகைக் கூட்டில் புகுந்து கொண்டு தூங்கும்: மழை பெய்யும் காலத்தில் புழுக்கள் கூட்டிலிருந்து வெளிவந்தால், அவை சில ஸமயம் ஒருவகை த்ரவத்தைப் பீச்சுவதுண்டு. அந்த த்ரவம் மழையோடு கலந்து மழை ஜலத்தை சிவந்த நிறமாக்கிவிடும். அப்போது ஜனங்கள் ரக்த மழை பெய்ததாகச் சொல்லுவது வழக்கம். சில இடங்களில் குளங்களிலுள்ள சில தாழ்ந்த வகை தாவரங்கள், மழைக்காலத்தில் வெகு வேகமாக அபிவ்ருத்தியடையும். அந்த தாவரங்கள் சிவப்பு நிறமாயிருக்கும் மாதலால், ஜலமும் சிவப்பு நிறமாகிவிடும். சிற்சில ஸமயங்களில் செடிகளின் நுண்ணிய விதை மூலங்களும், முட்டைகளும் காற்றில் உயரக்கொண்டு போகப்பட்டு, மழையோடு விழுவதுண்டு. அவை சிவப்பாயிருக்குமாதலால், மழை ஜலமும் சிவப்பாக இருக்கும். சில ஸமயங்களில் செந்தூசி ஆகாயத்தில் உயர்ந்த இடங்களில் பறந்து கொண்டிருந்து மழையோடு கலந்து வர, ரக்தமழை பெய்ததாக ஜனங்கள் எண்ணுவதுமுண்டு.

### கந்தகப்பொடி மழை.

சில மரங்களின் மகரந்தப்பொடி காற்றில்

அடித்துக்கொண்டு போகப்பட்டு, மழையுடன் வருவதுண்டு. சில ஜாதி மரங்களின் மகரந்தத் தூள் ஸுலபத்தில் தீப்பற்றக்கூடியது. இந்த குணத்தால், ஜனங்கள் இந்த மகரந்தத்தூளை கந்தகப்பொடி யென்று சொல்லுவது வழக்கம்.

மீன்மழை.

ஆதிகாலம் முதல்கொண்டு மீன், தவளை, தேரை ஆகிய இவைகள் மழையோடு விழுந்ததாகச் சொல்லப்படுகிறது. அவைகள் விழுந்ததை நேரில் பார்த்தவர்களே அதைப்பற்றி எழுதி வைத்திருக்கிறார்கள். 1822-ம் வர்ஷத்தில் பெரும் மழையோடு சிறு தேரைகள் ஆகாயத்திலிருந்து விழுந்ததைப்பார்த்ததாக மாடி என்னும் ப்ரெஞ்ச் ப்ராணி சாஸ்த்ரி தெரிவிக்கிறார். இது நேர்ந்தவிடம் ஆறு, குளம், சதுப்பு நிலம் ஆகிய இவைகளுக்கு குறைந்தது மூன்று மைல் தூரத்திலிருந்ததாம்.

## ANNATTO.

### ரங்கமாலி: ஆர்னெட்டோ சாயம்.

தற்காலம் சாயக்குறைவால் ஜனங்களுக்கு அஸௌகர்யம் ஏற்பட்டிருப்பதால், அநேகர் முன்பு வழக்கத்திலிருந்த சாயங்களைப்பற்றிப் பரிசீலனைசெய்து வருகிறார்கள். இங்கே ஆர்னெட்டோ என்னும் மஞ்சள் சாயத்தின் வரலாற்றை விவரிக்கிறோம்.

இந்தச்சாயம் ரங்கமாலி என்று சொல்லப்படும் ஒருவகை மரத்தில் விதையை மூடிக்கொண்டிருக்கும் தோலியிலிருந்து எடுக்கப்படுகிறது.

ரங்கமாலி (Bixa orellana) மரம் ஆதியில் அமெரிக்காவில் வளர்ந்த ஒருமரம். டச்சு வ்யாபாரிகள் அதை இந்தியாவிலும் கிழக்கு இந்திய தீவுகளிலும் கொண்டுவந்து பயிரிட்டார்கள். இப்போது அந்தமரம் இந்தியாவில் எங்கும் காணப்படுகிறது.

ரங்கமாலி மரம் ஸாதாரணமாக 12 அடி உயரத்துக்குமேல் வளருகிறதில்லை. அது கிச்சிலி பயிராகக்கூடிய நிலங்களிலெல்லாம வளரக்கூடும். ஆனால், பனிதாங்காது. கொஞ்சம் உறைபனிவிழக்கூடியதாக இருந்தாலும் மரத்தைக் கெடுத்துவிடும். ரங்கமாலிமரம் காட்டுத்தனமாய் சாகுபடியில்லாமல் வளர்ந்து பலனைக்கொடுக்கக் கூடுமென்றாலும், நன்றாய் சாகுபடி செய்யப்பட்டால் பலன் அதிகமாகக் கிடைக்கும். இதை விதைபோட்டும் பயிரிடலாம். ஆனால் விதையிலிருந்து கிடைக்கும் மரங்கள் நன்றாய்ப் பூத்துக் காய்ப்பதில்லை. மேலும் இவைகள் பலன் கொடுப்பதற்கும் காலம் செல்லுகிறது. கிளைகளைவெட்டி நட்டால் இந்தக்குறைகள் ஏற்படுவதில்லை. மேலும் தாய்ச்செடிக்கு உள்ள குணங்களே கிளைச்செடிக்கும் ஏற்படுகின்றன. ஆகையால் ஒரு குறிப்பிட்ட ராசிச் செடியைப் பயிர்செய்ய விரும்புவோர் இப்படிச்செய்வதே யுக்தமானது. போதுமான அளவு ஈரமுள்ள எந்த வகை நிலத்திலும் ஸாதாரணமாக அது வளருமானாலும், உயர்ந்த வண்டல் நிலத்தில் அதிக நேர்த்தியாக வளரும். செடிகளை 12 முதல் 16 அடி தூரத்துக்கொன்றாக நடவேண்டும். மரங்களின் கிளைகள் நெருக்கமாக இருந்தால், கிளைகளை கபாத்து செய்யவேண்டும். இல்லாவிட்டால், மாஸூல் குறைந்துபோகும். நிலத்தில் களைகளில்லாமல் பார்த்துக்கொள்ள



வேண்டும். நட்ட மூன்று வர்ஷத்துக்குப் பிறகு மரம் பலன்கொடுக்க ஆரம்பிக்கிறது. பூராவளர்ச்சியில் ஒரு மரத்திலிருந்து 16-முதல் 48 ராத்தல் காய் கிடைக்குமென்று அமெரிக்கர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள். இதில் 2 முதல் 6 ராத்தல்வரை விதை கிடைக்குமாம். நமது தேசத்தில் ஒரு ஏக்கருக்கு 6½-மணங்குமுதல் 7½-மணங்குவரை விதை கிடைக்குமாம். (மணங்கு என்பது சேர் ஒன்றுக்கு 80 தோலாவுள்ள 40 சேர்கொண்டது.) இதிலிருந்து 20 அல்லது முப்பதுசேர் சாயம் கிடைக்குமாம்.

இதன் காய்கள் மேலே முள்ளுடையவை. ஒவ்வொரு காய்க்குள்ளும் பலவிதைகள் இருக்கும். விதைகள் த்ராக்ஷை விதையைப்போல் சிறியனவாயிருக்கும். விதையைச்சுற்றிலும் ஒரு சிவந்த தோல் மூடியிருக்கும். இந்தத் தோலிலிருந்துதான் ஆர்னெட்டோ என்னும் மஞ்சள் சாயம் எடுக்கிறார்கள்.

காய்கள் முற்றினபிறகு, அவைகளை சேகரித்து வெய்யிலில் காயப்போடுவார்கள். காய்ந்த பிறகு காய்கள் வெடிக்கும். பிறகு தடியால் அடித்து விதைகளைப் பிரிப்பார்கள். சல்லடையால் சலித்து காய்களின் மேல்தோலையும், மஞ்சள் தோலோடுகூடிய விதையையும் வேறாகப் பிரிப்பார்கள். விதையை அப்படியே விற்பதும் உண்டு. அல்லது விதையை மூடிக்கொண்டிருக்கும் சிவந்த தோலைமாத்ரம் பிரித்து அடையாகச்செய்து அதைமாத்ரம் விற்பனைக்கு அனுப்புவதும் உண்டு. விதையிலிருந்து சாயம் எடுக்க, அவைகளை ஜலத்தில் ஊறவைப்பார்கள். விதை மேலுள்ள தோலி நெகிழ்ந்துபோகும். பிறகு அவைகளை நசுக்கி தோலியைப் பிரித்துவிடலாம். தோலியையும், அது ஊறியிருந்த ஜலத்தையும் அப்படியே தெளியவிட்டு, மேலே தெளிந்திருக்கும் ஜலத்தை வடித்துவிட்டு, அடியிலுள்ள தோலி முதலிய வண்டல்களை அடையாகத்தட்டி உலர்த்தி விற்பார்கள்.

ஆர்னெட்டோசாயம் மேற்கு இந்தியத்தீவுகளில் விசேஷம். செயற்கைச்சாயம் வந்தது முதல் ஆர்னெட்டோசாயத்தின் ப்ராபல்யம் குறைந்துவிட்டதென்றாலும், இப்பொழுதும் அது கொஞ்சம் உபயோகப்பட்டுவருகிறது. ஐரோப்பாவில் வெண்ணெய், பாலடைக்கட்டி முதலியவைகளுக்கு சாயங்கொடுக்க அது உபயோகப்படுகிறது. ஆர்னெட்டோசாயம் சுத்தமாய்க் கலப்பில்லாமலிருந்தால் வெண்ணெய், பாலடைக் கட்டி ஆகிய இவைகளில் உபயோகிப்பதால் கெடுதலேற்படுவதில்லையாம். வேறு சில சில்லரைத் தொழில்களிலும் இது உபயோகப்பட்டு வருகிறது. முன்பு நமது நாட்டில் இந்தச் சாயம் பட்டுக்கும் சீட்டிகளுக்கும் உபயோகப்பட்டுவந்தது.

ஜெர்மன் சாயம் வந்ததன்மேல் அதன் உபயோகம் குறைந்துவிட்டது. ரங்கமாலியை ஒரு வ்யாபாரப்பயிராக சாகுபடிசெய்ய ஸௌகர்யமிராதென்றாலும், அது வேலிக்கும், நாற்றடைப்பாகவும் உதவக்கூடுமாகையால், அதை நம்மவர்கள் வேலிக்கேற்ற மரமாகப் பயிர்செய்து சாயத்திலும் கொஞ்சம் லாபமடையலாம்.

967. இந்தியன் சாட்சி ஆக்ட் ... 1 0 0
1872-வது வர்ஷத்து ஆக்ட், நாளது தேதி வரையில் திருத்தப்பட்டது. வினு விடை ரூபமாக அமைந்துள்ளது.
968. 1908-ம் வர்ஷத்திய கால நிர்ணய சட்டம் ... 0 12 0
இந்த லிமிடேஷன் ஆக்ட் தமிழில் கவர்ன்மெண்டால் மொழி பெயர்க்கப்பட்டது.
1058. ஹிந்து லா ... 2 0 0
ஆர். வெங்கடஸுப்பராவ் இயற்றியது. ஹிந்துலா ஸம்பந்தமான பல விஷயங்களும் அடங்கியது.
ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.

# CREDULITY AND SUPERSTITION.

By K. N. SUBRAMANIA AIYAR.

## எளிதில் நம்புதலும் மூடபக்தியும்.

ஸத்யம்போல் தோன்றுகிற ஒரு வஸ்துவைக் காணும்பொழுது அதை ஸத்யமாகவே நம்புவது மனிதன் இயல்பு. இந்த இயல்பால் அவனுக்குப் பெருத்த ஸாதகமுண்டு. இந்த குணமில்லாவிட்டால் உண்மைகளை அறிவதனால் மனிதனுக்கு யாதொரு அனுகூலமுமில்லை. இதற்காகவே மனிதனிடத்தில் இந்த ஸ்வபாவம் ஏற்பட்டிருக்கிறது.

இந்த ஸ்வபாவத்தால் சில ஸமயங்களில் மனிதன் எதையும் அற்ப அத்தாக்ஷியின் பேரில் நம்ப இடமுண்டாகிறது. அதற்கு எளிதில் நம்புந்தன்மை என்று சொல்லலாம். எதையாவது தெய்வீக ஸம்பந்தமானதென்று எண்ணி நம்பினால், அதை மூடபக்தி என்று சொல்லலாம்.

மானிடவாழ்க்கைக்கு ஸத்யம் எப்படி அனுகூலமோ அப்படியே அஸத்யம் ப்ரதிகூலமாயிருக்கிறது. ஆகையால் மனிதன் உஷாராய் இருந்து ஸத்யத்தை நம்பவும் அஸத்யத்தை நம்பாதிருக்கவும்வேண்டும். எதையும் அல்பகாரணங்களின்பேரில் நம்புவதும், போதுமான ருஜு ஏற்பட்டபோது நம்பாதிருப்பதும் கூடாது. இரண்டும் கெடுதலையே விளைவிக்கும்.

மனிதனுடைய நம்பிக்கையானது ப்ரமாணத்தின்பேரில் ஏற்படுகிறது. அது ப்ரத்யக்ஷப்ரமாணம், ஆப்தவாக்ய ப்ரமாணம் என இருவகைப்படும். தனக்கு விச்வாஸம் யார் பேரிலிருக்கிறதோ அவர் சொல்வது ஆப்தவாக்யம். தானாகவே பார்த்தறிவது ப்ரத்யக்ஷம். நேரில் பார்த்தே ஒவ்வொரு விஷயத்தையும் தீர்மானிப்பது ஸாத்யமல்ல. மனிதன் ஸர்வக்ஞனல்ல. ஆகையால் ஒவ்வொன்றையும் தானே நேரில் அறியமுடியாது. அவன் மற்றவர்களின் ஸாக்ஷ்யத்தை ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. இது அவனுடைய லோகவாழ்க்கைக்கும் அபிவ்ருத்திக்கும் இன்றியமையாதது. குழந்தைகள், பெற்றோரும் உபாத்யாயர்களும் சொல்வதை நம்புகிறார்கள்; மதபோதகர்கள் போதிப்பதை ஜனங்கள் நம்புகிறார்கள்; நோயாளிகள் டாக்டர் செய்யும் வைத்யத்தை நம்புகிறார்கள். சாஸ்த்ர நிபுணர்கள் கண்டு பிடித்திருக்கும் விஷயங்களை நம்புவதினால் நமக்கு அனுகூலம் ஏற்படுகிறது. பிறரை நம்பாவிட்டால் நம்முடைய சரீரவிஷயத்திற்கும் புத்திக்கும் ஆசாரத்திற்கும் ஞானத்திற்கும் அபிவ்ருத்தியே கிடையாது.

தன் தேசத்து ஞானிகளின் அனுபவங்களையும் தன் தேசத்தாரின் ஸம்ப்ரதாயங்களையும் நம்புவது மனிதனுக்கு இயற்கை. இதுவும் மனிதனின் அபிவ்ருத்திக்குக் காரணமாயுள்ள ஒரு ப்ரக்ருதி தர்மமே.

நோயாளி மருந்தின் குணங்கள் தனக்குத் தெரியாததால் அதை உட்கொள்ள மாட்டேனென்று சொல்லக்கூடாது. அவன் உட்கொள்ளாவிட்டால் வ்யாதி ச்வஸ்தமாகாது. ந்யாயாதிபதி நம்பக்கூடிய ஸாக்ஷியை நம்பி அந்த ஸாக்ஷ்யத்தின்பேரில் தீர்ப்புச்செய்கிறார். மனிதன் தன் ஜாதியைச்சேர்ந்த ஞானிகள் சொல்லியிருப்பதையும் தன்நாட்டின் ஸம்ப்ரதாயங்களையும் நம்பாமலிருக்க முடியாது. அவைகள் வாஸ்தவத்தில் தப்பிதமென்று தான் கண்டறிந்தால் மாத்ரம் மறுக்கலாம்.

இப்படிப்பட்ட நம்பிக்கை மூடபக்தியுமல்ல. எதையும் எளிதில் நம்பிவிடும் தன்மையு



ன்று சொல்லுவதுங்கூடாது. இதுவே தேசபக்தி. இந்த தேசபக்தி நமக்குண்டானால், நமது ஞானிகளின் வார்த்தைகளிலும் நமது நாட்டு வழக்கங்களிலும் ஏதாவது தப்பிதமிருந்தாலும் அதை நமக்குத்தெளிவாக ரூபித்தாலொழிய நாம் ஒருபொழுதும் ஒப்புக்கொள்ளமாட்டோம். யாவராலும் அங்கீகரிக்கப்பட்ட தத்வங்களில் நமக்கு பக்தி ரொம்ப விசேஷம். இந்த பக்தி தேச அபிவ்ருத்திக்குத் தடங்கலாயிருக்கிறது என்னும் தப்பெண்ணத்தின்பேரில் அதற்கு மூடபக்தியென்னும் பெயர்கொடுத்துத் தள்ளுதல் கூடாது.

லோகத்திலுள்ள இதர நாட்டு ஐதிகங்களைக்காட்டிலும் நம்முடைய ஐதிகம் மிகச்சிறந்தது. நாமும் நமது முன்னோர்களும் தொன்றுதொட்டு அனுஸரித்துவரும் வழக்கத்துக்கு ஐதிகம் என்று பெயர். இதை நாம் பரிசோதிக்க முயலாமல் மேல்நாட்டாரின் விரோதமான கொள்கைகளை அனுஸரித்து நம்முடைய கடமையை மறந்து நிற்கிறோம்.

நம்முடைய ஐதிகங்களைப்பற்றிப் பரிசீலனை செய்தவர்கள் அவைகளின் திடத்தைக்கண்டு ஆச்சர்யப்படுகிறார்கள். ஆகையால் அவைகளில் ஏதாவது சில திடமற்றவையாயிருந்தால் மாத்ரம் போதாது; அத்துடன் அவைகள் நம்முடைய தேச நன்மைக்கு விரோதமானவையென்று நாம் ஆராய்ந்தறிந்தாலொழிய மனம்போனபோக்கில் அவைகளைக் கைவிடக்கூடாது. அப்படிச்செய்தால் நம்முடைய தேசீய உணர்ச்சிக்கு கெடுதலேற்படும்.

நம்முடைய தேசாசார, மதாசார, வழக்கங்கள் திடமான நல்ல காரணங்களின்மேல் ஏற்பட்டிருக்கின்றன. மேல்நாட்டாருக்கு அவைகளின் மகிமை தெரியாததால் அவைகளை மூடபக்தி என்று சொல்லுகிறார்கள். நாம் அவர்களுடைய கொள்கையை அனுஸரித்து அவ்வழக்கங்களைக் கைவிட்டதே நம்முடைய நாட்டின் க்ஷீணதசைக்குக் காரணமாயிருக்கிறது.

நம் ஜனங்களுக்கு மூடபக்தியே இல்லை என்று சொல்லமுடியாது. கொஞ்சங்கொஞ்சமிருக்கிறது. அந்தக் கொஞ்சத்திற்காக ஸகலத்தையும் ஒழித்துவிடுகிறதா? நம்முடைய தேசக்கட்டுக்கு நம்முடைய ஐதிகங்களே ஆதாரமாயிருக்கின்றன. நம்முடைய தேச வழக்கங்களில் ஏதாவது சில நமது தேசாபிவ்ருத்தியைத் தடை செய்யுமென்று நாம் எண்ண இடமிருந்தால், அவைகளை நம்முடைய சாஸ்த்ரங்களைக்கொண்டு நன்றாய் ஆராய்ச்சி செய்யவேண்டும். அப்படிச் செய்தபிறகு அவைகள் உண்மையாகவே தேசாபிவ்ருத்திக்கு விரோதமென்று ஸந்தேகமற விளங்கினால், அவ்வழக்கங்களை நாம் கட்டாயமாய் விட்டுவிடவேண்டும். அப்படிக்கில்லாமல் யாதொரு வழக்கம் மேல்நாட்டாருக்கு ருசிக்கவில்லையென்றதாலேயே அதை மூடபக்தியென்றுசொல்லி உடனே கைவிடக்கூடாது. அப்படிச் செய்தால், நம்முடைய தேசாபிமானம் ஒழிந்து, தேசக்கட்டு குலைந்து போக வழியாகும்.

தற்காலத்து ஜனங்கள் கண்ணைத்திறந்து தங்களால் தேசக்கட்டுக்கு நேர்ந்திருக்கும் பெருந்தீமையைக்கண்டு கொள்வார்களாக.

1047 சச்சிதானந்த சிவம் ... 0 14 0
சுப்ரமண்யசிவா இயற்றியது. மோக்ஷ ஸாதனத்தை அறிவிப்பது.
1050 தாயுமானவர் பாடல் ... 3 8 0
(மெய்கண்ட விருத்தி உரை.)
உரை பூவை கலியாண ஸுந்தர முதலியார் இயற்றியது.
1051 பட்டினத்தார் பிரபந்த விருத்தியுரை ... 2 8 0
விருத்தி உரை பண்டித ஆ. சிங்கார வேலு முதலியார் இயற்றியது.
ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.

# PIGEONS IN WAR.

## யுத்தத்தில் புறாக்கள் செய்யும் வேலை.

விஷப்புகை, துப்பாக்கி வெடிகள், பீரங்கி குண்டுகள் முதலியவைகளை உபயோகித்து, அகோரமாய் சண்டை நடக்கிற இடத்தில்கூட பயமில்லாமல், ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தபாலை எடுத்துக்கொண்டு செல்லப் புறாக்களைப் பழக்கிவைத்திருக்கிறார்கள்.

யுத்தம் நடக்கிற இடத்திற்குப் பின்புறத்தில், தூரத்தில் ஒரு மாடம் கட்டி அங்கு புறாக்களைப் பழக்குகிறார்கள். மாடத்திலிருந்து, புறாக்களைக் கூடைகளில் வைத்துக்கொண்டு, சண்டை நடக்கும் கிடங்குகளுக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள். அங்கிருந்து ஸமாசாரத்தை மெல்லிய கடுதாசியில் எழுதி புறாவின் கால்களில் க்ளிப் என்னும் சிறிய இடுக்கிகளால் சேர்த்துக்கட்டி இரண்டு ஆண் அல்லது இரண்டு பெண் புறாக்களாக ஜோடியாய் பறக்கவிட்டால், அவைகள் சீக்ரமாய் மாடத்தை நோக்கிப்பறந்து, மாடத்தின் கூரையின் மேலிருக்கிற ஒருவித கதவு வழியாய் உள்ளே இறங்குகின்றன. மாடத்திலிருப்பவர்கள் அவைகளினுடைய கால்களிலிருந்து க்ளிப்பைக் கழற்றி அதற்குள்ளிருக்கும் சமாசாரக்கடுதாசிகளை எடுத்து வேறு மார்க்கங்களால் எங்கு அனுப்பவேண்டுமோ அந்த இடத்திற்கு அனுப்புகிறார்கள். இதனால் போர் நடக்கும் கிடங்குகளிலிருந்து க்ரமமாக ஸமசாரம் வந்து கொண்டிருக்கும். இதற்காக கிடங்குகளி லிருக்கிறவர்களுக்குத் தவறாமல் புறாக்களை அனுப்பிக்கொண்டிருக்க வேண்டும். இதற்காகவென்று மனிதர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அனுபவத்தாலும் இயற்கையறிவாலும், இந்தப்பறவைகள், குண்டுகளுக்கு அகப்படாமலும், அபாயகரமான இடத்தை விட்டுவிலகியும், வேகமாய்ப்பறந்து செல்லுகின்றன. போர்முனை மாறுவதற் கேற்ப மேற்கூறிய மாடங்களையும் சில ஸமயங்களில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு போகவேண்டி, அவைகளுக்கு சக்கரங்கள் போடப்பட்டிருக்கும். மாடம் இடம் மாறினால், புறாக்களை புதிய இடத்திற்குப் போகும்படி மறுபடியும் பழக்கவேண்டும். ப்ரிட்டிஷ்க்காரர்கள் சண்டைசெய்யுமிடத்தில், இந்தப் பறவைகளை ஜாக்ரதையாய் உபயோகப் படுத்துகிறார்கள். மாடத்தை விட்டு வெளியே போகும்பொழுது, மாடத்திற்குள் செல்லும் பொழுதும் பறவைகளை சரி பார்க்கிறார்கள். ஸமாசாரம் எழுதவும், அதை புறாக்களின் காலில் கட்டவும், கிடங்குகளில் புறாக்களை ஸம்ரக்ஷிக்கவும், பறக்கவிடுவதற்கு ஏற்ற காலமறியவும் போர் வீரர்களைப் பழக்குகிறார்கள். ஆகாயம் நிர்மலமாய் இருக்கிறகாலத்தில் பறவைகளை தாகமாயில்லாமல் நல்ல பசியாயிருக்கும்பொழுதுவிட்டால் வெகு சீக்ரமாய் மாடம் போய்ச்சேரும். விஷக்காற்றினால் உபத்ரவம் உண்டாகாமலிருக்கும்படி, பறவைகளுக்கு ரக்ஷணம் ஏற்படுத்துகிறார்கள். ஆகவே விஷக்காற்று, குண்டு இவைகளுக்குப் பயப்படாமல் புறாக்கள் தவறாமல் மாடங்களுக்குப்போய்ச் சேருகின்றன. தவிரவும் பறக்கும்போது புறாவைச் சுடுவது கடினம். அநேகமாய் முடியாத கார்யம். தப்பித்தவறி எப்பொழுதாவது அடிபட்டாலும், கீழேவிழாமல், பறவை எப்படியாவது மாடம் போய்ச் சேரத்தான் முயலும். காற்றுமழை அடித்துக் களைத்தாலும் மாடம் போய் விழுமேயல்லாமல், வழியில் எங்கும் நிற்காது. புறாக்கள் திடமுள்ளவைகள். களைத்தாலும் விஷக்காற்றுப் பட்டாலும், ரவையினால் அடிக்கப்பட்டாலும் சீக்ரம் களை தெளிந்து பறந்து செல்லும்.



2 DEC 1918 MADRAS.

# BOOKS OF THE MONTH.

## நூதன புஸ்தகங்கள்.

### புராதன இந்தியா.

புராதன இந்தியா அல்லது ஐம்பத்தாறு தேசங்கள் என்னும் புஸ்தகத்தின் ப்ரதி ஒன்று வரப்பெற்றோம். இது சென்னை ஆர்க்கயலாஜிகல் இலாகா மானேஜர் பி. வி. ஜகதீசய்யர் இயற்றியது. புராணங்களிலும், இதர புராதன ஹிந்து நூல்களிலும் கூறப்பட்டுள்ள குரு, குந்தி, விராட, மத்ஸ்ய, கோஸல, அங்க, வங்க, பாஞ்சாலாதி ஐம்பத்தாறு தேசங்களின் விவரங்களை இந்த நூல் விரிவாகக் கூறுகிறது. இதில் ஒவ்வொரு தேசமும் புராதன இந்திய நூல்களில் கண்டுள்ளபடி விவரிக்கப்பட்டிருப்பதோடு, அவைகளின் இருப்பிடமும் நதிகள், மலைகள், புராண வ்ருத்தாந்தங்கள் முதலிய விஷயங்களும், ஜனங்களின் நடையுடை பாவனைகளும், அந்தந்த தேசங்களைப் பற்றிய இதர அபூர்வ விஷயங்களும் அடங்கியுள்ளன. மேலும், ஸூர்ய வம்சம், சந்த்ர வம்சம் மகதவம்சம் முதலிய ராஜ வம்சங்களைப் பற்றிய குறிப்புகளும், அறுபத்து நான்கு கலைக்ஞானங்களுடைய விவரங்களும், நவரத்னங்களுடைய வரலாறும் அடங்கியிருக்கின்றன. தேசங்களின் இருப்பிடங்களையும் மலை நதிகளின் இருப்பிடங்களையும் விளக்க இதில் இரண்டு படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் இரண்டு பாகம் கொண்டது. முதல் பாகத்தில் 17 தேசங்களும், இரண்டாவது பாகத்தில் பாக்கி 39 தேசங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இந்தப் புஸ்தகம் யாவருக்கும் பயன்படும். இதன் விலை பாகம் 1-க்கு 12 அணா. வேண்டுவோர் சென்னை பி. ஆர். ராமய்யர் அண்ட் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### ஹரிராம நாம சங்கீர்த்தனை.

இது ராமநாதபுரம் ஜில்லா பாம்பூர் க்ராமத்து பி. ஏ. ராமஸாமி பிள்ளையால் பாடப்பட்டது. பகவத் குணங்களைப் பற்றிச் சொல்லும் பலவகை பாட்டுகள் இதில் அடங்கியிருக்கின்றன. பஜனை நடத்துகிறவர்களுக்கும் இதரர்களுக்கும் இது பயன்படும். இதன் விலை அணா 1. வேண்டுவோர் ராமநாதபுரம் ஜில்லா, பரம்பக்குடி போஸ்ட், பாம்பூர் க்ராமத்திலிருக்கும் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### தேன்மலைப் பட்டி.

இது டி. ஆர். ஆராவமுது ஐயங்கார் இயற்றிய ஒரு இனிய தமிழ் நாவல். கதைப்போக்கு நேர்த்தியாய் அமைந்திருக்கிறது. வேணு கோபால முதலியார் ஜமீன் ஸொத்துவிஷயத்தில் நடந்துகொண்ட நேர்மையும், முத்தாம்பாளுடைய உறுதியான காதலும், பாராட்டத் தக்கவை. இந்தப் பதிப்பில் காணப்படும் சொற்பிழைகள் அடுத்த பதிப்பில் நீங்கிவிடுமென்று எண்ணுகிறோம். இதன் விலை அணா 10. வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி, 3, 4, கொண்டி செட்டித் தெரு, மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### நாகரிகம்?

இது சே. மு. ராஜூ செட்டி இயற்றிய ஒரு இனிய தமிழ் நாவல். இதன் கதைப்போக்கு நேர்த்தியாய் அமைந்திருப்பதோடு, இடையிடையே நீதிகள் கொண்டிருக்கிறது. தற்கால நாகரீகத்தின் விநோதங்கள் இதில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை ரூ. 2. வேண்டுவோர் ஸி. எம். ராஜூ செட்டியார், ராஜன்டேல் வால்டாக்ஸ்ரோட் சென்னை என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

## GENERAL NOTES.

## பொதுக் குறிப்புகள்.

### ட்யூபர்க்குலாஸிஸ் என்னும் க்ஷயரோகம்.

ஒரு பேர்பெற்ற மேல்நாட்டு வைத்யர் ட்யூபர்க்குலாஸிஸ் என்னும் கொடிய ரோகமானது அது பிடித்துள்ள வ்யாதிஸ்தர்களின் மலமூத்ராதிகள் வழியாயும், அந்த வ்யாதி பிடித்த ப்ராணிகளின் பால் மூலமாயும் சிறுவர்களை தொத்துகிறது என்றும், ஆகவே மேற்கூறிய இரண்டும் சிறுவர்களை அணுகவொட்டாமல் தடுத்தலே, வ்யாதியைப் பரவவிடாமல் தடுக்கவழி என்றும் சொல்லுகிறார். அவர் இது விஷயமாகத் தெரிவித்திருக்கும் விஷயங்கள் வருமாறு.

1. நாம் ச்வாஸம் விடும் மூக்கு வாய்களின் வழியாய்த்தான் முக்யமாக இந்த வ்யாதி தொத்துகிறது என்று சொல்லப் போதுமான அத்தாக்ஷி யிருக்கிறது.

2. ஆகாரம் செல்லும் மார்க்கமாய்க்கூட அடிக்கடி ரோக க்ருமிகள் தேகத்தினுள் செல்லுகின்றன.

3. இரைப்பைக்கு உணவுபோவதற்கு ஏற்பட்ட குழாய் வழியாக க்ருமிகள் போகும் பொழுது, நுழைந்த இடத்தில் கொஞ்சமேனும் புண் படுத்தாமல் உட்செல்லுகின்றன.

4. இந்த க்ருமிகள், அன்னரஸம் செல்லும் குழாயின் வழியாயும், மார்பிற்கடுத்த ரத்தக்குழாய் வழியாயும் சென்று, ரத்தத்துடன் கலந்து ச்வாஸாசயத்திற்குள் கொண்டுபோகப்படுகின்றன.

அங்கே ச்வாஸாசயக் கருவிகளால் ரத்தத்திலிருந்து வடிகட்டப்பட்டு அங்கேயே தங்கி விடுகின்றன.

5. இரைப்பைக் குழாய் மூலமாக க்ஷயரோகம் ஏற்படுவது குழந்தைப் பருவத்தில் தான் விசேஷம்.

6. சிசுப் பருவமும், பால்யப் பருவமுந்தான் க்ஷயரோகம் பற்றுவதற்கேற்ற பருவங்களாகும். க்ஷயரோகக் கேஸுகளில் பெரும்பான்மை இந்த இளமைப் பருவங்களில்தான் உண்டாகின்றன.

7. குழந்தைகளை க்ஷயரோகிகளிடம் செல்லவொட்டாமலும், அந்த வ்யாதி வேறு வழிகளில் அவர்களை அணுகவொட்டாமலும் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளாதவரையில், க்ஷயரோகத்தைத் தடுக்க எடுத்துக் கொள்ளும் வேறு எந்த முயற்சியும் பயன்படாது.

8. வயதானவர்களுக்கும் இந்த வ்யாதி வருகிறது. ஆனால், குழந்தைகளுக்குப்போல, அவ்வளவு அடிக்கடியும், அவ்வளவு ஸுலபமாயும் வருகிறதில்லை.

9. எந்த வயதிலும் க்ஷயரோகம் வரக் கூடும்.

### வார்னிஷினால் இரும்பு துருப்பிடித்தலைத் தடுத்தல்.

வர்ணம் சேர்த்த வார்னிஷைப் பூசுவதால் இரும்பு துருப்பிடிக்காமலிருக்கிறதாவென்று இரண்டு ஜர்மன் தேசத்து சாஸ்த்ரிகள் பரிக்ஷைபார்த்தார்கள். முக்யமாய் மூன்று அல்லது நான்கு பூச்சுப் பூசுவதனால் ஏற்படும் குணாகுணத்தைப் பரிக்ஷித்தார்கள். நான்கு இரும்புத் தகடுகளை யெடுத்து அவைகளை சுத்தமாய் பளபளவென்று ஆக்கி, ஒரு தகட்டிற்கு ஒரு பூச்சு, மற்றொன்றிற்கு இரண்டு, மூன்றாவதுக்கு மூன்று, நான்காவதுக்கு நான்கு பூச்சுக்களாகப் பூசினார்கள். பிறகு ஒருநாள் முழுவதும், தகடுகளில் ஆவிபடும்படி வைத்திருந்தார்கள். மறுநாள் பார்த்தபொழுது ஒரு பூச்சுப் பூசப்பட்ட தகடுமுழுவதும் ப்ர



காசமாயும், இரண்டு பூச்சுப் பூசப்பட்ட தகடு, சில இடங்களில் துருப்பிடித்தும், மூன்று பூச்சுக்கொண்ட தகடு இன்னும் ஜாஸ்தியாகத் துருப்பிடித்தும், நாலு பூச்சுப் பூசப்பட்டது பூராவும் துரு அடைந்ததாயும் இருந்தன. இதிலிருந்து பலதடவை வார்னிஷ் பூசுவதால் ப்ரயோஜனம் இல்லை யென்றும் ஒருதரம் பூசுவதே மேலானதென்றும் தெரிகிறது. அநேகம் பூச்சுகள் பூசினால் மேலாக இருக்கிற பூச்சானது, அதற்கு உள்புறமுள்ளதைக் கொஞ்சம் கரைக்கிறது. அதனால், உள்புறமுள்ள பூச்சு இளகி, த்வாரங்களுள்ளதாக ஆகிவிடுகிறது. பூச்சு அதிகமாக ஆக, த்வாரங்கள் அதிகப்படும். இந்த த்வாரங்களில் காற்றும் நீராவியும் போய் அடைந்து உள்ளிருக்கும் இரும்பில் படிந்து துருப்பிடிக்கச் செய்கின்றன. துருப்பிடிக்காமலிருக்க வேண்டுமானால் தடியாகவாவது, இரண்டு மூன்று பூச்சுகளாவது பூசுவதனால் ப்ரயோஜனமில்லை. இரும்பிலிருக்கும் பழைய வர்ணம் முதலியவற்றை, உப்புக்கடுதாசி, கரைக்கும் த்ராவகம் முதலிய வற்றை உபயோகப்படுத்தி நன்றாய்ப் போக்கிவிட்டுச், சுத்தமாயிருக்கும் இரும்பில் ஒரே தடவை வர்ணம் பூசினால் போதும்.

### சில கற்பிக்கும் முறைகள்.

கற்பிப்பதற்கு வேண்டிய முக்ய ஸாதனங்களைப்பற்றி டி. ஜெ. பர்னெட் என்பவர் ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறார். அந்தப் புஸ்தகத்திலிருந்து பின் வருபவற்றை எடுத்தெழுதுகிறோம்.

1. கற்றுக்கொடுத்த பாடத்தைப் பல தடவை, திருப்பித்திருப்பி மனஸில் படும்படி சொல்லவேண்டும்.

2. பேசுவது தெளிவாய் இருக்கவேண்டும். பேசும்போது சுத்தமாயும் ஸாவதானமாயும் இனிமையாயும் பேசவேண்டும். எப்போதும் முகம் ப்ரஸன்னமாயும், சுறுசுறுப்பாயுமிருக்கவேண்டும். பிள்ளைகளை மூலைக்கொருவராக இருக்கவிடாமல், கூடியமட்டில் சேர்ந்து இருக்கும்படி செய்யவேண்டும். பாடத்தில், இதற்கடுத்தபடி இன்ன சொல்லுகிறதென்று முன்னாலேயே தீர்மானித்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்போதைக்கப்போது, பிள்ளைகளுக்குத் தெரியும்படி த்ருஷ்டாந்தத்தினாலும், சித்ரங்களினாலும் செவ்வையாய்க் காண்பிக்கவேண்டும். கறுப்புப் பலகையை அதிகமாக உபயோகிக்க வேண்டும். சித்திரம், ப்ளான்கள் முதலியவைகளை வரைந்து காட்டவேண்டும். ஏற்றபடி கதைகளையோ உபமானங்களையோ சொல்லியும் விஷயத்தை விளக்கிக் காட்டலாம்.

3. பாடம் முடிந்தவுடன், முக்யமான விஷயங்களைத் திரும்பவும் எடுத்துச்சொல்ல வேண்டும்.

4. பாடத்தை முன்னமே நன்றாய்த் தயார்செய்து வைத்துக்கொண்டு புதிதைப் பழையது மாதிரியும், பழைய பாடத்தை புதியது மாதிரியும் காட்டி. பாடத்தை ஸ்வாரஸ்யமாய் இருக்கும்படி செய்யவேண்டும்.

### ச்வாஸகாஸமும் ஓமத்தின் சாம்பலும்.

ஓமத்துக்கு ச்வாஸகாஸத்தைப் போக்கும் குணமிருக்கிறதென்று ஸாய்லா ஸமஸ்தானத்து வைத்யர் ஒருவர் தெரிவிக்கிறார். அதைப் பின்வருமாறு பக்வம்செய்து உபயோகிக்கவேண்டுமாம்.

ஓமம், லவங்கம், உப்பு இவைகளை ஸம அளவாக எடுத்து, நன்றாகப் பொடிசெய்து கலக்கவேண்டும். நல்ல மாதுளம் பழத்தை பாதியாக நறுக்கி, ஒரு பாதியிலிருந்து விதைகளை எடுத்துவிட்டு, மேற்சொன்ன பொடியை அதில் அடைத்து மற்ற மூடியையும் அதில் பொருத்தி மூடி மேலே களிமண் தடவி 50 விரட்டிகளை அடுக்கி அவைகளின் நடுவில் மாதுளம் பழத்தைவைத்து எரியவிட

வேண்டும். மறுநாள், எரிக்க ஆரம்பித்து 24 மணிநேரம் ஆன பிறகு, எரிந்துபோன மாதுளம்பழத்தை எடுத்து மெதுவாய்த் தட்டி உடைத்துப்பார்த்தால் உள்ளே வைத்திருந்த மருந்துப் பொடிகள் சேர்ந்து உருண்டையாய் சாம்பலாக இருக்கும். சாம்பலைப் பொடியாக்கி வஸ்த்ரகாயம் செய்து, ஸீஸாவில் போட்டு வைத்துக்கொள்ளவும். இதில் 10 முதல் 15-க்ரெய்ன் நிறை எடுத்து ஒரு வெற்றிலையில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்க வேண்டும். (ரூபாய் எடை 180 க்ரெய்ன் ஆகும்). இந்த அளவில் காலையிலும் ஸாயந்திரமும் சாப்பிடவேண்டும். விசேஷ பத்ய நிர்ப்பந்தங்கள் இல்லை. இரண்டு வாரம் சாப்பிட்டால், வ்யாதி குணமடைந்திருப்பது நன்றாய்த் தெரியும்.

## எலுமிச்சையைக் கபாத்து செய்தல்.

எலுமிச்சங் கன்றுகளை நட்ட சில காலத்துக்கெல்லாம் அவைகளின் கிளைகளை நறுக்கிவிடவேண்டும். நறுக்கிவிடுவதால் கன்றுகள் திடமடையும்.

எலுமிச்சையை எப்போது கபாத்து செய்யவேண்டுமென்பது எதற்காகக் கபாத்து செய்கிறோமென்பதைப் பொறுத்தது. சிறு மரங்களில் வளர்ச்சியே முக்யம். ஆகையால் அவைகளை வஸந்தகாலத்தின் முதலில் கபாத்து செய்யவேண்டும். பெரிய மரங்களிலோ காய்க்கச் செய்வது தான் நமது நோக்கம். வளர்ச்சியைத் தடைசெய்ய வேண்டும். இதற்கு கோடைகாலத்தின் மத்தியில் கபாத்து செய்யவேண்டும்.

கன்றுநட்ட சில வர்ஷங்கள் வரையில் மரத்தை நல்ல வளர்ச்சி உள்ளதாகச் செய்வதே நமது நோக்கமாக இருக்கவேண்டும். இதற்கு, சரியாக வளராத கிளைகளை நறுக்கிவிட்டு, கிளைகள் நெருக்கமாயிராதபடி செய்யவேண்டும். கிளைகளை நறுக்கி விடுவதால், அவைகள் உறுதியாகி, ஏராளமான பழங்களைத்தாங்க சக்தியுள்ளனவாயிருக்கும்.

சரியாய் கபாத் செய்யப்பட்ட மரத்தில் பழங்கள் மரத்தின் நடுவே காய்க்கின்றன. ஓரங்களில் காய்த்தால், கிளைகள் முறியலாம், பழங்களும் காற்றிலடிபட்டுச் சிதறலாம். தவிரவும், மரத்தின் நடுவிலும், அடிபாகத்திலும் காய்க்கிற கனிகள் மிகச் சிறந்தவையாயிருக்கும். காலிபோர்னியா தேசத்தில் மரத்தை உயரவிடாமல், அகலமாய்ப் படரச் செய்கிறார்கள். அப்படிச் செய்வதினால், பழங்கள், மரத்தில் காற்றின் கடுமை தெரியாத பாகங்களில் காய்க்கின்றனவாம். பழங்களின் தொகையும் அதிகமாக இருக்கிறதாம்.

## வர்ணக்கடுதாசிகளும், வெளிச்சமும்.

சுவரில் ஒட்டப்படும் வர்ணக்கடுதாசிகள், திரைச்சீலைகள், இவைகள் எந்த வர்ணமாயிருப்பது நல்லதென்று பலர் அறிய விரும்பலாம். கீழ்வரும் அட்டவணையிலிருந்து எந்த வர்ணம் எவ்வளவு வெளிச்சத்தை யடக்கிக் கொள்ளுகிறதென்று தெரியவரும்.

| | | |
|---|---|---|
| வெள்ளை நிறம் | நூற்றுக்கு 30 | பாகம் வெளிச்சத்தை அடக்குகிறது. |
| க்ரோம் மஞ்சள் | 38 | ,, |
| ஆரஞ்ஜ் | 50 | ,, |
| மஞ்சள் | 60 | ,, |
| இளம் சிவப்பு | 64 | ,, |
| மரகதப் பச்சை | 82 | ,, |
| ஆழ்ந்தபழுப்பு | 87 | ,, |
| செங்கல் | 88 | ,, |
| நீலப்பசுமை | 88 | ,, |
| கோபால்ட் நீலம் | 88 | ,, |
| ஆழ்ந்தசாக்கலெட் நிறம் | 96 | ,, |

இந்த அட்டவணையில் கண்ட விஷயங்கள் ரஸாயனப் பரீக்ஷண சாலையில் சுவரில் ஒட்டும் வர்ணக் கடுதாசிகளின் மேல், வெளிச்சம் விழச்செய்து, பரிக்ஷிக்கப்பட்டவை.



இதிலிருந்து, ஆழ்ந்த பசுமை நிறமான வர்ணக்கடுதாசி ஒட்டப்பட்ட ஒரு அறையில் க்ரோம் மஞ்சள் கடுதாசியை ஒட்டினால், ஒரே விளக்கு முன் கொடுத்ததைவிட நான்கு மடங்கு அதிகமான வெளிச்சம் கொடுக்கும். அநேக வீடுகளில், விளக்குப்போடும் செலவு ஜாஸ்தியாவதற்குக் காரணம், அதிக வெளிச்சத்தை யுட்கொள்ளக்கூடிய வர்ணக்கடுதாசிகளால் சுவரை அலங்கரிப்பது தான்.

## எலும்பு எரு.

எலும்பு நல்ல எரு. அதைப் பொடிபண்ணி உபயோகப்படுத்தவேண்டும். பெரிய பொடிபண்ணும் யந்த்ரங்களை உபயோகிக்காமல் எலும்பை ஸுலபமாய்ப் பொடி பண்ண ஒரு வழி இருக்கிறது. நான்கு அங்குல உயரத்திற்குப் பசளை மண்ணைப்பரப்பி, அதன்மேல், ஆறு அங்குல கனம் எலும்புகளையும் அதன் மேல் மூன்று அங்குல கனத்திற்கு சுண்ணாம்புக்கல்லையும் பரப்பவேண்டும். திரும்பவும், பசளைமண், எலும்பு, சுண்ணாம்புக்கல், இந்த க்ரமத்தில் மாற்றி மாற்றித் தேவையான உயரம் வரும் வரையில் பரப்பி மண்ணால் முழுவதும் தடிப்பாய் மூடிவிடவேண்டும். பிறகு மேல் பக்கத்தில் த்வாரங்கள் செய்து அவைகளின் வழியாய்த் தண்ணீர் ஊற்றினால், சுண்ணாம்பு நீற்றுப்போய் எல்லாம் சுட்டுப்போகும். அப்படியே இரண்டு மூன்று மாஸங்கள் விட்டுவைத்தால், எல்லாம் நொறுங்கித் தூளாயிருக்கும். பிறகு எல்லாவற்றையும் சேர்த்துக் கலந்து, அப்படியே எருவாக உபயோகப்படுத்தலாம்.

## எருவைப்பற்றிய ஒரு புதுக்கொள்கை.

அசுத்தமான எருவை உபயோகித்து விளையும் கோதுமை, ரொம்ப மட்டமானதென்று ஒரு தேர்ந்த வ்யவஸாயி தெரிவித்திருக்கிறார். அழுகின இலையையும், கருங்கல் தூளையும் எருவாக உபயோகித்தால்தான், அதிக ஸத்துள்ள கெட்டியான கோதுமை கிடைக்குமாம். ப்ராணிகளின் மலமூத்ராதிகளையும் குப்பையையும் எருவாக உபயோகப்படுத்த வேண்டுமானால், அவைகளைச் சுட்டுச் சாம்பலாக்கி அந்த சாம்பலைத்தான் உபயோகிக்க வேண்டும். இம்மாதிரி தீயினால் சுத்தம் செய்யப்பட்ட எரு மிகவும் உயர்ந்தது. இந்த எருவை உபயோகித்தால், துர்நாற்றத்தால் நிலம் கெட்டுப்போகாது. ஸூர்ய வெளிச்சமும் காற்றும் நிலத்தில் நன்றாய்ப் படும்படிசெய்து சாம்பலையும் கருங்கல் தூளையும் சேர்த்து உபயோகப்படுத்திவந்தால், நிலத்திற்கு வேண்டிய தாது ஸம்பந்தமான உணவு ஏற்பட்டு முன் விளைந்ததைக் காட்டிலும் அநேக மடங்கு அதிகமான விளைச்சலைக்கொடுக்கும்.

## மலேரியா க்ருமியும் மழைகாலமும்.

"மலேரியா" என்னும் வ்யாதி சில குறிப்பிட்ட காலங்களில்தான் காணப்படுகிறது. மழைகாலங்களில் காணப்படுகிறதில்லை. இந்த மழைகாலங்களில் இந்த க்ருமிகள் எவ்வாறு காலந்தள்ளுகின்றன? மனுஷ்ய தேகத்திலிருக்கின்றனவா. அல்லது கொசுக்களின் தேகத்திலிருக்கின்றனவா?

அமெரிக்காவில் இதுவிஷயமாக ஆராய்ச்சி செய்ததில், மாரிகாலத்தில் பெண்கொசுக்களே உயிரோடிருக்கின்றனவென்று தெரியவந்தது. இவைகளின் புழுக்களாவது, முட்டைகளாவது மாரிகாலத்தில் காணப்படுவதில்லை. 2000 பெண் கொசுக்களை அறுத்து சோதித்ததில் அவைகளுள் ஒன்றிலாவது மலேரியா க்ருமிகள் காணப்படவில்லையாம். 1184-மனிதர்களின் தேகத்தை சோதித்ததில் 492 பேர்கள், மலேரியா க்ருமிகளையுடையவர்களாயிருந்தார்கள். ஆகவே மலேரியாவைப் பற்றிப் படித்துவந்த பலர் முன்பு

நினைத்திருந்தபடி, மலேரியா ஒருகாலத்திலிருந்து மற்றொருகாலத்திற்கு அழியாமல் தொடருவதற்குக் காரணம் மனிதன்தான், கொசுவல்ல என்று தெரிகிறது.

### சிறந்த கடியாரங்கூடத் தப்புவதேன்?

நன்றாய் ஒழுங்கு பார்க்கப்பட்ட கடியாரங்கூட சரியான காலம் ஏன் காட்டுகிறதில்லையென்று சில வித்பன்னர்கள் ரொம்ப விசாரணை செய்திருக்கிறார்கள். அனிமல் மாக்னடிஸம் என்கிற, மனுஷ்ய தேகத்திலிருக்கிற ஒருவித காந்த சக்தியும், சரீர உஷ்ணமுந்தான், கடியாரம் தப்பாய்ப் போவதற்குக் காரணம் என்று நகைவிற்பவர்களும் மற்றுமுள்ள வ்யாபாரிகளும் சொல்லுவது தப்பென்று இந்த வித்பன்னர்கள் சொல்லுகிறார்கள். அசைவினுடைய லயப்ரமாணமும், கடியாரம் கோணலாகத் தொங்கவிடப்படுதலுந்தான் காரணம் என்று இவர்கள் சொல்லுகிறார்கள். உதாரணமாக நன்றாய் சீர்திருத்தப்பட்ட ஒரு கடியாரம், ஸொந்தக்காரர் அணிந்திருக்கும்பொழுது ஒருநாளில் ஒரு ஸெக்கண்டு வித்யாஸம் காட்டுகிறதென்றால் அதே கடியாரம் படுக்கைக் கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்தால், ஒரு நாளில், 15 ஸெக்கண்டுகள் வித்யாஸம் காட்டுமாம்.

### இரைச்சலில் வேலை செய்தல்.

சுற்றிலும் சத்தமிருந்து, பலபேர்கள் பல கார்யங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுதும், மத்தியில் உட்கார்ந்து, கருத்தை சத்தம் முதலியவற்றில், செல்லவொட்டாமல், கார்யத்தில் செலுத்தி வேலை பார்ப்பதினால், ஒரு மனிதன், அல்லது பெண்பிள்ளையினுடைய சக்தி குறைகிறது என்று மனோதத்வமறிந்த சாஸ்த்ரிகள் ஏகோபித்துக் கூறியிருக்கிறார்கள். "சந்தையிரைச்ச"லானது வேலை செய்வதற்கு அவச்யமாயுள்ள, மனிதனுடைய கவனம் பலம் ஆகிய இரண்டையும் கெடுத்துவிடுகிறது. சத்தத்தில் வேலைசெய்வதால் சீக்ரம் களைப்புண்டாகிறது. ஒரு கார்யத்தில் மனதைச் செலுத்தி வேலைசெய்யும் தன்மைபோய் விடுகிறது. வேலைசெய்யத் திறமில்லாமல் போவதும், பணச்செலவும்தான் மிச்சம்.

### வாழைமரத்தின் சாம்பல்.

வாழைமரத்தின் தண்டு, பட்டை முதலியவைகளைச் சுட்ட சாம்பலில், ஸுமார் நூற்றுக்கு ஐம்பது வீதம் "பொட்டாஷ்" என்கிற ஒருவகை உப்பு இருக்கிறது, இதில் "ஸோடா" என்னும் உப்பு இல்லவே இல்லையென்று சொல்லலாம். பொட்டாஷுக்கு இப்பொழுது இருக்கிற க்ராக்கியை உத்தேசித்து, முனிஸிபாலிடிகளில், மார்கட்டுகளிலிருந்து வெளியே போடப்படும் வாழை முதலிய தாவர ஸம்பந்தமான குப்பைகளைச் சேகரித்து வைத்தால், "பொட்டாஷ்" உப்பு எடுக்க உபயோகப்படும்.

### பூனை-வ்யாதிக்குக் காரணம்.

பூனையை வீட்டில்வைத்து வளர்ப்பது முக்யமாய் மகம்மதியர்களுக்குள் வெகு ஸகஜம். குழந்தைகள் பூனையை மடியில் வைத்துக்கொண்டும் தோளின்மீது தூக்கிப்போட்டுக்கொண்டும் விளையாடுகின்றன. வயஸானவர்களும் பூனையைக் கொஞ்சுவதுண்டு. இப்படி இவர்கள் செய்வது தப்பு. ஏனென்றால் 'டிப்ரியா' என்னும் தொண்டையைப் பற்றின வ்யாதி பூனையின் மூலமாய்ப் பரவுகிறதாம். இது ஊர்முழுவதும் பரவக்கூடும். கண்நோய்களும் பூனையின் மூலமாகப் பரவக்கூடும். ஒரு பூனையின் கண்ணிலிருந்து உண்டான வடிதலின் மூலமாய் ஒரு மூன்றுவயது பையனுக்கு, ரொம்ப கொடுமையான கண்நோய் பரவிற்றென்று சொல்லப்படுகிறது. குழந்தைக்கு ரொம்ப ப்ரயாஸையின்மேல் வ்யாதி ஸ்வஸ்தமாயிற்றாம்.



### தோல் கன்றிப்போதல்.

கீழே விழுந்து அடிபட்ட இடம் கன்றிப்போவது எல்லாருக்கும் தெரியும். பிரம்பினால் அடிபட்ட இடமும் கன்றிப் போவதுண்டு. கொஞ்சம் மாவை குளிர்ந்த ஜலத்துடன் கலந்து அடிபட்ட இடத்தில் பூசினால் அது கன்றிப்போகாமல் தடுக்கும்.

### பாம்புக்கடி.

கை கால்களில் பாம்பு கடித்துவிட்டால் உடனே கடித்த இடத்திற்குமேல், ரத்த ஓட்டமில்லாமல் இறுகக் கட்டிவிட்டு, ஒரு சுத்தமான கத்தியை, மெழுகுவர்த்தி தீபத்தில் காட்டி, இன்னும் நன்றாய் க்ருமி முதலானவைபோக சுத்தப்படுத்தி அந்தக்கத்தியினால், கடித்த இடத்தைச்சுற்றிலும் சீக்ரமாய் அறுத்து, சதையை ஆழமாக எடுத்துவிடவேண்டும். பிறகு பொட்டாஸியம் பர்மாங்கனேட் கரைத்த நீரால் புண்ணை அலம்பி, பொட்டாஸியம் பர்மாங்கனேட் பொடியையும் புண்ணில் போட்டுத் தேய்க்கவேண்டும். பிறகு அரைமணிக்கொருதரம் ஒத்தடம் கொடுத்து உள்ளுக்கு சில டோஸ்கள் ப்ராந்தியும் கொடுக்கவேண்டும்.

பொட்டாஸியம் பர்மாங்கனேட்டை கடித்தவுடன் உபயோகப்படுத்தவேண்டும். மூன்று நிமிஷம்சென்று கொடுத்தபோதுகூட சாவை நிறுத்த முடியவில்லை.

### கோடை காலத்திற்கேற்ற சில குறிப்புகள்.

குளிர்காலத்தில் எவ்வளவு தேகச்சூடு இருக்கிறதோ, அவ்வளவு வெயில் காலத்தில் வேண்டியதில்லை. வெயில் காலங்களில் தேகச்சூடு குறைவாயிருந்தால் ஸௌக்யமாயிருக்கும். நாம் உண்ணும் உணவினாலும் உடுத்தும் உடையினாலும் தேகச்சூட்டைக் குறைத்து விடலாம். சில ஆகாரங்கள் உடம்பிற்கு அதிக உஷ்ணத்தைக் கொடுக்கின்றன. அப்படிப்பட்ட ஆகாரங்களைக் குறைக்கவேண்டும். கோடை காலத்திற்கென்று ஈச்வரனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டது போலிருக்கிற, பழங்கள், காய்கறிகள் முதலியவற்றைத் தாராளமாய் உட்கொள்ளலாம். இவைகளையும், இவற்றுடன் கொஞ்சம் மிதமாய், அரிசி, கோதுமை போன்ற தான்யங்களையும் உபயோகித்துவந்தால் அவை கோடைகாலத்திற்கேற்ற நல்ல உணவாகும். இவ்வித உணவையும், ஏராளமாய், தீர்த்தத்தையும் சாப்பிட்டுவந்தால் சரீர உஷ்ணம் குறையும். வெளி உஷ்ணத்தினால் கொஞ்சம்தான் தொந்திரவு உண்டாகும். உடுக்கும் உடை தாராளமாயும், கழுத்தைச் சுற்றித் திறந்தும் இருக்கவேண்டும். ஒன்றின் மேலொன்றாய் அநேகம் உடுப்புகளைப்போட்டு சரீரத்திலிருந்து உஷ்ணக்காற்று வெளிப் போகாமல் தடை செய்யக்கூடாது.

### அன்னாசிமடலின் நார்.

அன்னாசி மடல்களிலிருந்து, நேர்த்தியானதும், மிகவும் கெட்டியானதுமான நார் எடுக்கப்படுகிறது. இந்த நாரால் துணிகள் நெய்யலாம். ஆனால் இந்த நாரை எடுப்பதற்குக் காலமும் செலவும் அதிகமாகின்றன. அதனால்தான் இந்த நார் சில இடங்களில் மட்டுமே எடுக்கப்பட்டும், முக்யமான வ்யாபாரப் பொருளாகாமலும் இருக்கிறது.

அன்னாசிக்கன்றுகளை நெருக்கமாக நட்டால், மடல்கள் நீண்டுவளரும். மரங்களினடியில் கொஞ்சம் நிழல்படும்படியான இடங்களில் நட்டாலும்மடல் நீண்டு வளரும். நன்றாய் முதிர்ந்த மடல்களிலிருந்து மிகச் சிறந்த நார் எடுக்கலாம். ஆனால் ரொம்ப முற்றிவிட்டால் நார் எடுக்க ரொம்ப ப்ரயாஸப்படும். மடல்களை வெட்டின உடனேயே, நாரை எடுத்துவிடவேண்டும். காய்ந்தால் எடுப்பது ரொம்ப கஷ்டம்.

### புன்னைமரம்.

புன்னைக்கொட்டைகள் ஐரோப்பிய யுத்தத்

திற்குமுன், அண்ட்வர்ப் என்னும் ஊரில் ஏராளமாய் விலையாயின. அந்தக்கொட்டைகளிலிருந்து ஒருவிதக்கொழுப்பு எடுக்கப்பட்டது. அந்தக்கொழுப்பினால் மெழுகுவர்த்தி, ஸோப், முதலியன செய்தார்கள். அப்படிச் செய்யப்பட்ட மெழுகுவர்த்திகள், குணத்தில் சிறந்த மாம்ஸக் கொழுப்பினால் செய்யப்பட்டவைகளுக்கு ஸமமாயிருந்தன. புன்னைக் கொழுப்பை சுத்தம்செய்து, பலகாரங்களிலும் உபயோகப் படுத்துவதுண்டாம். சுத்தமான புன்னைக்கொழுப்பு, டன் ஒன்றுக்கு 1500 ரூபாய் வீதம் ஐரோபாவில் விலைப்போயிருக்கிறது. புன்னைக்கொட்டையிலிருந்து பருப்பை எடுத்து உலர்த்தினபிறகு சாக்குப் பைகளில் கட்டி பம்பாயிலிருந்து அயல் நாட்டிற்கு அனுப்பினால் டன், ஸுமார் 9½-பவுன்கள் வீதம் விலையாகுமாம்.

### அறை ஈரமாயிருக்கிறதா ?

ஒரு அறை ஈரமாயிருக்கிறதா என்று அறிவதெப்படி? இரண்டு ராத்தல் சுண்ணும்பை அறையில்வைத்து ஜன்னல்கள், கதவுகள் இவைகளைக் காற்றுப்புகாமல் நன்றாய் மூடிவிடவேண்டும். இருபத்து நான்கு மணிநேரம் கழித்து, சுண்ணும்பை நிறுத்துப்பார்த்தால் நிறை ஜாஸ்தியாயிருக்கும். ஏனென்றால் காற்றிலிருக்கும் நீராவியை சுண்ணும்பு இழுத்துக் கொண்டுவிட்டது. அப்படி இழுத்தநீர் முக்காலேவீசம் தோலாவுக்குமேல் இருந்தால் அந்த அறை ஈரமென்றும், வாஸத்துக்கு யோக்யமில்லையென்றும் அறியவேண்டியது. இம்மாதிரி செய்தால் ஒரு அறை ஈரமா, வாஸத்துக்கு யோக்யமாவென்பது ஸந்தேகமில்லாமல் நிச்சயமாய்த் தெரியவரும்.

### ஆயுதங்களின் பிடிகள்.

ஆயுதங்களின் பிடிகளுக்கு அநேகமாய் ப்ரென்ச் பாலிஷ் என்னும் பாலிஷைப் போட்டு, பார்வைக்கு நன்றாயிருக்கும்படி செய்கிறார்கள். ஆனால் இப்படிச்செய்வதனால், பிடிகளின் உறுதியும் நாள்நிற்கும் தன்மையும் அதிகமாவதில்லை. இதைக்காட்டிலும் சிறந்தவழி ஒன்றிருக்கிறது. அதாவது பிடிகளை லின்ஸீட் ஆயில் என்னும் எண்ணெயில் ஒரு வாரம் ஊறவைத்துப் பிறகு எடுத்து, ஒன்று அல்லது இரண்டுவாரம், ப்ரதிதினமும் ஒரு-துணியால் சில நிமிஷநேரம் நன்றாய்த் தேய்த்துவந்தால், பிடிகள் பார்வைக்கு அழகாயும் உறுதியாயும் நாள் நிற்கக்கூடியனவாயும் ஆகின்றன.

### சூட்டுப்புண்ணுக்கு வைத்யம்.

சுடப்பட்டு புண் உண்டானவுடன், தாமஸம் செய்யாமல், நன்றாய்க் கரையக்கூடிய ஸோப்பை புண்பட்ட இடத்தில் அதிகமாய் உபயோகித்தால் எரிச்சலின்வேகம் தணிந்துவிடும். அதிகமாய்ப் பொசுங்கப்பட்ட புண்ணயிருந்தால், ஸோப்பு உபயோகப்படுத்தி வலி குறைந்தபிறகு, "லின்ஸீட் ஆயில்" என்னும் எண்ணெயைத் தடவி, கோதுமைமாவை அதன்மேல் தூவி எண்ணெயையும் மாவையும்மாறி உபயோகித்தால், ஒருவிதமான ப்ளாஸ்த்ரி போட்டால் போலாகும், அது தானுக்காய்ந்து உதிர்ந்துவிடும் வரையில் ஒன்றும் செய்யக்கூடாது. அது விழுந்தபிறகு தழும்பே இராது. புண் ஸ்வஸ்தமாகியிருக்கும்.

### கோம்பு, தந்த ஸாமான்களை சுத்தப்படுத்த வழி.

ஒரு கண்ணாடிப் பாத்ரத்தின் அடியில் ஸுமார் அரையங்குல கனமுள்ள சில துத்தநாகத்தகடுகளைப்போட்டு அவைகளின்மேல், சுத்தப்படுத்தவேண்டிய, கொம்பு அல்லது தந்த ஸாமான்களைவைத்து பாத்ரத்தில் டர்பண்டைன் எண்ணெயை, ஸாமான்கள் முழுகும்படி ஊற்றி வெயிலில் மூன்று அல்லது நான்குநாள் வைத்து வைக்கவேண்டும். நிழலில் வைக்கநேர்ந்தால், இன்னும் சிலகாலம் அதிகமாக வைத்திருக்கவேண்டும் இப்படிச் செய்தால், டர்பண்டைன், ஸாமான்களிலுள்ள அழுக்கு, கொழுப்பு, துர்நாற்றம் முதலியவற்றை நீக்கி, வெளுப்பாகச் செய்துவிடும்.


# ஜனாபிமானி.

| | |
|---|---|
| தபால் சார்ஜ் உள்பட | |
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE
JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
செரிண்டி செட்டித்தெரு,
மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A.,
EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி௵ ஐப்பசிமீ, OCT.—NOV., 1918. { ஸஞ்சிகை 10 No. 10.


1-MAR 1919

## BOMBAY FEVER.

### பம்பாய் ஜ்வரம்.

பம்பாய் ஜ்வரம் என்றும் ஸ்பானிஷ் இன்ப்ளுயன்ஸா என்றும் வழங்கும் காய்ச்சல் தற்போது நமது தேசமெங்கும் பரவித் தொந்தரவு கொடுத்துவருகிறது. இந்தக் காய்ச்சல் ஸுமார் 9 மாஸத்துக்கு முன்னால் இந்தியாவில் பலவிடங்களிலும் தோன்றிப் பலருக்கும் ஹிம்ஸைகொடுத்து வந்தது. தற்போது வந்திருப்பதில் ஒரு விசேஷம் என்னவென்றால், முன்பு வந்ததில் மரண விகிதம் அதிகமாயில்லை. தற்போதோ மரண விகிதம் ரொம்ப அதிகமாயிருக்கிறது. இதனால் ஜனங்கள் ரொம்ப பீதியடைந்திருக்கிறார்கள்.

இந்தக் காய்ச்சலில் தலைவலி, முதுகிலும் [illegible]களிலும் வலி, இருமல், [illegible] ஆகிய இவைகளும் சில ஸமயங்களில் வயிற்றுப்போக்கும், வாந்தியும் ஏற்படும். இந்தக் காய்ச்சல் கண்டவுடன் ஆஸ்பத்திரிக்குபோய் வைத்யம் பார்த்துக்கொள்ள வேண்டியது அவச்யம். வீட்டிலேயே வைத்யம் பார்த்துக் கொள்ளுவதானால், இரண்டொரு முக்யமான விஷயங்களை [illegible] கவனிக்கவேண்டியது அவச்யமாகும். படுத்துக்கொண்டிருக்கும் அறையின் ஜன்னல்களையும் கதவுகளையும் சாத்திவிடக்கூடாது. காய்ச்சல் வந்தவர் படுத்திருக்கும் அறையில் பந்துக்களும் இதரர்களும் வந்து கூட்டங்கூடக்கூடாது. கூட்டங்கூடினால், வந்தவர்களுக்கும் வ்யாதி பரக்கூடும். காய்ச்சல் கண்டவருக்கும் வ்யாதி கடுமையாகி விடலாம். ந்யூமோனியா என்னும் நுரையீரல் வீக்கமும் உண்டாகும். அறையில் காற்றோட்டமில்லாமலிருந்தால், வ்யாதிஸ்தன் தானும் மற்றவர்களும் வெளிவிடும் கெட்ட வாயுவை மறுபடியும் ச்வாஸிப்பதால் நுரையீரலைப் பற்றின வ்யாதிகள் உண்டாகலாம். அறையில் காற்றோட்டமிருந்தால், வ்யாதிஸ்தர் கெட்ட வாயுவை அதிகம் ச்வாஸிக்க நேர்ந்து [illegible] ஏற்படாது.

வ்யாதிஸ்தரைக் கூடியமட்டில் தனி அறையில் படுக்கவிட வேண்டும். கூடியமட்டும் வீட்டிலுள்ள இதரர்களுடன் அவர் சேராதிருக்கும்படி செய்வது நல்லது. கூடுமானால் வ்யாதிஸ்தரை மாடியில் உள்ள அறையில்

இருக்க விடுவது உத்தமம். அறையில் காற்றோட்டம் இருக்கவேண்டும். தாழ்வாரத்திலாவது, வீடு பங்களாவாக இருந்தால் காம்பவுண்டில் எந்த இடத்திலாவது வ்யாதிஸ்தன் இருக்கவும் செய்யலாம். ஆனால் வெயிலும் மழையும் அவர்மேல் படாத இடமாக இருக்கவேண்டும். அறையாயிருந்தால் மெதுவான காற்றோட்ட மிருக்கலாமே யொழிய, பலமான காற்று வீசக்கூடாது.

வ்யாதிஸ்தரை கவனிக்கும் மனுஷ்யரைத் தவிர வீட்டிலுள்ள மற்றவர்கள் யாவரும் வ்யாதிஸ்தரை அணுகக்கூடாது. அவர்கள் தினம் இரண்டு மூன்று தடவை பொடாஸியம் பெர்மாங்கனேட் என்னும் மருந்து கரைத்த ஜலத்தால் வாயைக் கொப்பளிக்க வேண்டும். ஒரு கோப்பை ஜலத்தில் ஜலம் சிவப்பு நிறமாவதற்கு வேண்டியபடி இரண்டொரு கட்டி மருந்தைப்போட்டுக் கரைத்துக்கொள்ளவும்.

பம்பாய் ஜ்வரம் வந்திருக்கும்போது நாடகசாலை, ஸினிமா நடக்கும் இடம், மீட்டிங்குகள், அதிக ஜனங்கள் சேரு மிடங்கள் ஆகிய இவைகளுக்குப் போவது கூடாது. கூடிய மட்டும் கூட்டமான ரெயில், ட்ராம் ஆகிய இவைகளில் ப்ரயாணம் செய்வதையும் நிறுத்த வேண்டும். ஏனென்றால் அநேகமாய் பம்பாய் காய்ச்சல் கண்ட வ்யாதிஸ்தர்கள் வெளிவிடும் ச்வாஸம்கலந்த காற்றை ச்வாஸிப்பதால்தான் இந்தக் காய்ச்சல் பரவுகிறதென்று சொல்லப்படுகிறது. கூட்டமான இடங்களில் பம்பாய் காச்சல் கண்டவர்கள் இருக்கக்கூடுமாதலால் அவ்விடங்களுக்குப் போவதும் உசிதமல்ல.

### பம்பாய் காய்ச்சலின் வரலாறு.

பம்பாய் காய்ச்சல் இன்ப்ளுபன்ஸா என்று சொல்லப்படும். இது வெகு காலத்துக்கு முன்னாலிருந்தே உலகத்திலிருந்து வருகிறதாகச் சொல்லப்படுகிறது. ஸுமார் 2000 வர்ஷத்துக்குமுன் இருந்த ஒரு க்ரீக் வைத்யர் காலத்தில் அது இருந்ததாக பண்டைக் கால நூல்களால் தெரியவருகிறது. இந்தக் காய்ச்சலின் காரணங்களைப் பற்றிப் பலர் பல விதமாகச் சொல்லிவந்திருக்கிறார்கள். 17-ம் நூற்றாண்டில் இட்டாலியர்கள் நக்ஷத்திரங்களின் சக்தியால் இந்த வ்யாதி ஏற்படுவதாக எண்ணியிருந்தார்கள். தற்போது பலர் சீதோஷ்ண ஸ்திதியின் வேறு பாட்டால் உண்டாகிறதென்று எண்ணி வருகிறார்கள். வேறு சிலர் மழைக்குறைவால் உண்டாகிறதென்று சொல்லுவார்கள். காரணம் மழைக்குறைவென்றால், ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியாவின் பெரும்பாகம், ஆப்ரிக்காவின் பெரும்பாகம் ஆகிய இவைகளில் காய்ச்சல் வருவதற்குக் காரணம் இல்லை.

### 1889-ம் வர்ஷத்துக் காய்ச்சல்.

இந்தக் காய்ச்சல் 1889-ம் வர்ஷத்தில் ரஷ்யாவில் தோன்றிற்று. தற்போது வைத்யர்கள் இந்த வ்யாதியைப்பற்றி அறிந்திருப்பதெல்லாம் அப்போது ஆராய்ச்சி செய்ததால் ஏற்பட்டவைகளே. 1889-ம் வர்ஷம் நவம்பர் மாஸத்தில் இந்தக் காய்ச்சல் ரஷ்யா முழுவதும் பரவிற்று. பாரிஸ், பெர்லின், வியன்னா, லண்டன் ஆகிய இவைகளிலும் சிலபேருக்கு இந்தக் காய்ச்சல் கண்டது. டிஸம்பர் மாஸத்துக்குள் இந்த வ்யாதி ஐரோப்பா முழுவதிலும் பரவிவிட்டது. ஈஜிப்டின் வட பாகத்திலும் தோன்றிற்று. அமெரிக்கா ஐக்ய நாடுகள் முழுவதும் காய்ச்சல் பரவிற்று. இங்லண்டில் பல பட்டணங்களில் இது தோன்றிற்றென்றாலும் அடுத்த வர்ஷந்தான் அது தொற்று வ்யாதியாக நாடெங்கும் பரவிற்று. 1890-ம் வர்ஷம் ஜனவரி மாஸத்தில் லண்டனில் இது பலமாயிருந்தது. அடுத்த மாஸம் இதரப் பட்டணங்களில் பரவிக் கடுமையடைந்தது. இதே மாஸத்தில் இந்த வ்யாதி



பம்பாய்க்கு வந்து பிறகு இந்தியா முழுவதும் பரவிற்று. அந்த ஸமயம் இங்லண்டிலிருந்து ஸைன்யங்கள் இந்தியாவுக்கு வந்ததால், அவைகளோடு காய்ச்சலும் வந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. ஏனென்றால் ஏக காலத்தில் டெல்லி, லக்னௌ, வட இந்தியாவிலுள்ள இதர பெரிய ராணுவ ஸ்தலங்கள் ஆகிய இவைகளில் இந்த வ்யாதி தோன்றிற்று. பிப்ரவரி, மார்ச்சு மாஸத்தில் இந்தக் காய்ச்சல் பம்பாயில் ரொம்ப கடுமையாகி விட்டது. இதனால் அங்கே தொழில்கள் தடைபட்டு விட்டன.

1889—1890-ம் வர்ஷங்களில் இங்லண்டில் உண்டான இந்த இன்ப்ளுயன்ஸா காய்ச்சல் விஷயமாக இங்லண்டில் பரிசீலனை செய்ததில் சில விஷயங்கள் தெரியவராயின.

அவையாவன: இந்த வ்யாதியானது தோன்றுவதற்கும், காலஸ்திதியின் மாறுபாடுகளுக்கும் யாதொரு ஸம்பந்தமும் இல்லை. காற்றால் இந்த வ்யாதி பரவுகிறதோ என்றால், பருவக் காற்றுக்கு எதிர் முகமாகவே இது சென்று பரவுகிறதாம். வ்யாதி கண்டவர்கள் போகும் மார்க்கமாகவே இந்த வ்யாதியும் சென்று பரவுகிறது. போக்கு வரத்து வஸதிகள் அதிகமாக இருந்தால் வ்யாதியும் சீக்ரம் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடம் போகிறது. இந்த வ்யாதி ராஜதானிப் பட்டணம், துறை முகங்கள், எல்லைப்புறத்திலுள்ள ஊர்கள் ஆகிய இவைகளில் முதலில் உண்டாகிப் பிறகு க்ராமாந்தரங்களுக்குப் போகிறது. இதற்குமுன் இந்தக் காய்ச்சல் வந்திராத ஊர்களில் ஆரம்பத்தில் பலபேர்களுக்கு வராமல் முதலில் சில பேருக்குத் தோன்றிப் பிறகு அநேகருக்கு உண்டாகிறது. வ்யாதிஸ்தர்களுடன் சேருபவர்களுக்கும் கூட்டமான இடங்களுக்குப் போகிறவர்களுக்குந்தான் இது முதலில் உண்டாகிறது.

இந்த விஷயங்களால் ஏற்படுவது என்னவென்றால், ஜனநெருக்கமுள்ள இடங்களில் வஸிப்பதும், ஜனக்கூட்டமுள்ள இடங்களுக்குப் போயிருப்பதுந் தவிர ஸுகாதாரக் காரணங்களால் இந்த வ்யாதி பரவுகிறதில்லையென்றும், மழை முதலிய காலஸ்திதி வேறுபாட்டுக்கும் இந்த வ்யாதி பரவுவதற்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லையென்றும் ஏற்படுகிறது.

வ்யாதியின் இந்தத் தன்மைகளை கவனிக்கும்போது, இதைத் தடுப்பது கூடுமென்று தோன்றும். ஆனால் அனுபவத்தில் இது ஸாத்யமாவதில்லை. இதற்கு சில காரணங்கள் இருக்கின்றன.

(1) இந்த வ்யாதியில் வ்யாதி க்ருமி தேகத்தில் சேர்ந்து வ்ருத்தி வெளிப்படையாகத் தோன்ற ஸ்வல்பகாலமே செல்லுகிறது. இதனால் அம்மை முதலிய வ்யாதிகளைவிட இது சீக்ரமாக வ்ருத்தி யடைகிறது.

(2) வ்யாதியின் தன்மையை அறிவதற்கு முந்தி ஆரம்பத்திலேயே அது தொற்று வ்யாதியாக இருக்கிறது.

(3) வ்யாதி சாந்தமான வகையாயிருந்தால் நோயாளிக்கு வேலை செய்ய சக்தியில்லாமற் போவதில்லை. ஆனால் இந்த கடுமையில்லாத காய்ச்சலும் கடுமையான வகையைப்போலவே பிறருக்குப் பரவக்கூடியதாயிருக்கிறது.

(4) ஒருவருக்கு இன்ப்ளுயன்ஸா வந்திருக்கிறதா என்று கண்டறிவது மிகவும் கஷ்டம். அதை தவறாக ஜலதோஷம், அஸ்தி ஜ்வரம் முதலிய மற்ற வ்யாதிகளென்று எண்ணி விடுகிறார்கள்.

இன்ப்ளுயன்ஸாவால் மரண மடைபவர்களின் தொகை மொத்தத்தில் அதிகமாயிருந்தாலும் அந்த வ்யாதி கண்டவர்களுள் மரண விகிதம் ஸ்வல்பமே. பலர் பிழைத்து விடுகிறார்கள். ப்ளேக், வாந்திபேதி ஆகிய இவை

களிலோ வ்யாதி கண்டவர்களுள் மரண விகிதம் ரொம்ப அதிகம். ஆகையால் ப்ளேக் வார்திபேதி இவைகளைப்போல இன்ப்ளுயன்ஸாவுக்கு அவ்வளவு பயப்படக் காரணமில்லை.

இந்த வ்யாதியில் நான்கு முக்யமான விஷயங்கள் கவனிக்கப்படவேண்டியவை:—

(1) விஷத்தின் செய்கையால் ரத்தாசயத்தின் தசை நரம்பு திடீரென்று சோர்வடைந்து சுருங்குவது.

(2) விஷத்தின் செய்கையால் நரம்புஸ்தானங்கள் நீடித்த பலஹீனத்தை யடைவது.

(3) விஷத்தின் செய்கையால் மூத்ர வ்யாதி ஏற்படுகிறது.

(4) இந்த நோயாளிகளுக்கு விசேஷமாய் ஸ்வாசாசய வீக்கம் உண்டாகிறது.

மேற்கூறிய நான்கு அபாயங்களையும் தடுக்கவேண்டுமானல் வ்யாதிஸ்தர் நடமாடாமல் சீக்ரம் படுக்கையில் படுத்துக்கொள்வது நல்லது. படுக்கையைவிட இன்ப்ளுயன்ஸாவுக்கு வேறு சிகித்ஸை கிடையாதென்று சொல்லலாம். இந்த வ்யாதியைத் தடுக்கவும் ஸ்வஸ்தப்படுத்தவும் கொய்னா அதிகமாய் ப்ரயோகிக்கப்படுகிறது. ஆனல் இதைத் தவறாத மருந்தாக எண்ண இடமில்லை.

இன்ப்ளுயன்ஸா வ்யாதிக்கு என்ன மருந்து கொடுப்பதென்பதைப்பற்றிப் பலர் பத்ரிகைகளுக்கு எழுதியிருக்கிறார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

(1) பவானிக்கு ஸமீபத்திலுள்ள குமரபாளையம் பண்டித் - தே. பே. அர்த்தநாரிசாமி செட்டியார் பின்வரும் ஔஷத முறையை வெளியிட்டிருக்கிறார்.

சித்தாதி - நிம்பாதி - கஷாயம்.

| | | |
|---|---|---|
| வேப்பம்பட்டை | ரூபாயெடை | 4 |
| வேப்பம் ஈர்க்கு | ,, | 2 |
| கடுகரோகணி | ,, | ½ |
| சீமை நிலவேம்பு | ,, | 2 |
| சுக்கு | ,, | ½ |
| பற்பாடகம் | ,, | 1 |
| சித்தரத்தை | ,, | 1 |
| பேய்ப்புடல் | ,, | 1 |
| அதிவிடயம் | ,, | ½ |
| வெப்பாலரிசி | ,, | ½ |

இவைகளை சிதைத்துப்போட்டு 3 படி ஜலம் விட்டு 1-படியாகக் காய்ச்சி வேளை ஒன்றுக்கு வீசம்படி வீதம் அதாவது 2½ அவுன்ஸ் ஸுமார் தினம் மூன்று தடவை கொடுக்க வேண்டியது. 2-3-நாள் கொடுத்தால் ஜ்வரம் தணிந்து விடுகிறது. சிறுவர்களுக்கு பாதி அளவு கொடுக்கவேண்டியது. மலக்கட்டு இருந்தால் கஷாயம் போடும்போது கடுகரோகணி ஒரு ரூபாயெடையாக போட்டு கஷாயம் செய்யவேண்டியது. மலப்போக்கு இருந்தால் மேற்படி கஷாயத்தில் கடுகுரோகணி போடாமல் வெப்பாலரிசி அதிவிடயம் இரண்டையும் ஒவ்வொரு ரூபாயெடையாகச் சேர்த்து கஷாயம் செய்யவேண்டியது. இருமல் அதிகமாயிருந்தால் சுக்கு, கடுக்காய்த்தோல், சின்னத் திப்பிலி, வாலுளுவையரிசி, சித்தரத்தை இவைகளை ஸமனிடையாக கொஞ்சம் வறுத்து சூர்ணித்து, அரைக்கால் ரூபாயெடை தேன் விட்டு குழைத்து தினம் 2-3 தடவை சாப்பிட இருமல் குணமாகிறது.

புழுங்கலரிசி சாதம் வடித்தபின் கொதிக்கும் வெந்நீரில் சாதத்தைப்போட்டு இத்துடன் அரை ரூபாயெடை இஞ்சியும் வீசம் ரூபாயெடை வெள்ளை எலும் தட்டிப்போட்டு உப்பும் சேர்த்து கஞ்சிபோல் நன்றாய் வேகவைத்து அதை பிசைந்து கொடுத்துக் கொண்டு வரவேண்டியது. புளி, நெய், மோர் இவை சேர்க்கலாகாது. பசுவின் பால் ஜ்வரம் தணிந்தபின் கொஞ்சமாய் சேர்த்துக்கொள்ளலாம்.



(2) லங்கை ஜனஸமூக ஸேவா ஸங்கத்தார் எழுதி வெளியிட்டிருக்கும் ஒரு துண்டுப் பத்ரிகையில் இந்தக் காய்ச்சலைப் போக்குவது விஷயமாகப் பின்வரும் குறிப்புகள் காணப்படுகின்றன.

தினம் இருமுறை சிறு பரிமாணம் "கொய்னா"த்தூள் உட்கொள்ளல் வேண்டும். அத்தோடு மருந்து உப்பையாவது கடுக்காய் கஷாயத்தையாவது குடித்து மலத்தைச் செவ்வையாய்ப் போக்கிக் கொள்ளவேண்டும்.

ஜ்வரம் கண்டவுடனே படுக்கையில் படுத்துக்கொண்டு நன்றாய் மூடிக்கொள்ள வேண்டும். இதுவே முக்ய பரிஹாரிப்பு.

ஜ்வரத்தோடு ஜலதோஷமும் இருமலும் இருக்குமாகில், ஒரு பிடி கருவாப்பட்டை கூட்டிப்போட்டு அவித்த கொத்தமல்லி வேது வைமுகத்திற்கும் உடம்பிற்கும் பிடித்தல் வேண்டும்.

வேதுபிடித்த பிறகு உடம்பை உலர்ந்த வஸ்த்ரத்தால் துடைத்து படுக்கையில் படுத்துக்கொண்டு நன்றாய் மூடிக்கொள்ளல் வேண்டும்.

தினம் இரண்டு அல்லது மூன்று முறை மேலே சொல்லப்பட்ட கொத்தமல்லிக் கஷாயத்தை ஒரு பெரிய பாத்ரம் கொண்டளவு குடிக்கவும்.

காய்ச்சல் முழுவதும் ஸ்வஸ்தமாகும் வரையில் உப்புக்கஞ்சி அல்லது மூன்றில் ஒரு பங்கு சுத்தமான தண்ணீர் அல்லது பார்லிக் கஞ்சி கலந்த பாலைக் குடித்து வரவும்.

ஜ்வரம் அதிக உக்ரமாய் இருந்தால் "ஒடிக்கொலோன்" தண்ணீரில்கலந்து நெற்றியிற் போட்டுக்கொண்டு அதிகம் வெந்நீர் குடிக்க வேண்டும்.

அரைத்தேக் கரண்டி "அம்மோனியா"வை (எந்த இங்க்லீஷ் மருந்து ஷாப்பிலும் அகப்படும்) ஒரு அவுன்ஸ் கொண்டளவு தண்ணீரில் கலந்து தினம் மூன்று முறை குடிக்கவும்.

ஜ்வரம் தொடங்கி இரண்டு நாளுக்குள் கடுமையடைந்தால் வைத்யரைக் கூப்பிட்டுக் காட்டவேண்டும்.

(3) மலையாளம் ஜில்லா பாலக்காடு தாலூகா புது நகரத்தில் பரம்பரையாக ஆயுர்வேத வைத்யம் செய்து கொண்டுவரும் எம். மூகம்மது மீரா ராவுத்தர் கீழ்கண்ட முறையை அநுஸரித்ததினல் அநேக இன்ப்ளுயன்ஸா ரோகிகளை 24 மணி நேரத்தில் சௌக்யப் படுத்தியதாக வெகு உறுதியோடு சொல்லுகிறார். அதாவது நீலிப்பட்டை (வேலின் பட்டை) 4 களஞ்சி எடை, மிளகு 4 களஞ்சி எடை பழய கொள்ளு அல்லது காணம் 4 களஞ்சி எடை, சிங்கோனப் பட்டை (கொய்னப்பட்டை) 2 களஞ்சி எடை, இவைகளை பட்டணம்படி 4½ கொண்ட ஜலத்தில் கஷாயமிட்டு காலே வீசம் படியாக வற்றிய கஷாயத்தை அரை வீசம்படி காலை மாலை மூன்று வேளை கொடுக்கவும். ஆனல் ஏற்கனவே மலங்கட்டு இருந்தால், சூரத்துமிலை ஆவரையை ஜலத்தில் ஊற வைத்து நன்றாய் சுத்திசெய்து, உலர்த்தி இடித்து பொடி செய்துகொண்டு ஒரு திரிகடிகை எடுத்து மேற்படி கஷாயத்தில் போட்டுக் கொடுக்கவும். காய்ச்சல் ஆரம்பம் செய்தவுடன், மேற்படி கஷாயத்தைக் கொடுத்தால் 24 மணி நேரத்தில் பூர்ண ஸுகமடைவார்கள் என்பது நிச்சயம்.

(4) ஆயுர்வேத முறையில் அநுபோகமுள்ள லால்குடி முகம்மத் ஸுலைமான் ஸாஹிப் பின்வருமாறு எழுதுகிறார்.

ஜ்வரக்குறிகள் கண்டிருப்பவர்களும் ஜ்வரத்தைத் தடுக்க விரும்பினோரும் கீழ்கண்ட ஸாமான்களும் மூலிகைகளும் சேர்ந்த கஷாயத்தைக் குறிப்பிட்டவாறு உட்கொண்டால் ஸௌக்யமடைவார்கள்.

தாளிச்சப் பத்திரி 2-பை, மஞ்சு 1-பை,

பற்பாடகம் 2-பை, நிலவேம்பு 2-பை, பேய்ப்புடல் 2-பை, நொச்சியிலை யொருபிடி, கண்டங்கத்திரி சமூலம் ஒரு பிடி, விஷ்ணுக்ராந்தி யொருபிடி, இவற்றை உரலிலிட்டு, நன்றாக இடித்து, முக்கால்படி தண்ணீரில் போட்டு, அதைக் கால்படியாகக் காய்ச்சி யிறக்கி, காலை மாலைகளில் 10 துளி தேன்விட்டுச் சாப்பிடவும் பம்பாய் ஜ்வரம் இறங்கிவிடும். மேற்சொன்னது ஒரு நாளைக்குப்போதும். தலைப்பாரமும் ஜ்வரமும் பித்தமும் அதிகமாக இருந்தால், மேற்கண்ட ஸாமான்களை மூன்று தரம் வாங்கி மூன்று நாள் கஷாயம் வைத்து ஆறு வேளை சாப்பிடலாம்.

பத்யம் ;—புளி, மோர் நீக்கவும்.

(5) திருச்சிராப்பள்ளி டி. எஸ். வைத்யநாதய்யர் சொல்லும் ஔஷதம் வருமாறு, சுத்தமான சீரகம் ஒருபலம், ஓமம் ஒருபலம், இவற்றை 6 ஔன்ஸ் சுத்த ஜலத்தில் போட்டு அரைமணி நேரம் கொதிக்கவிட்டு, ருசி கொடுப்பதற்கு வேண்டிய அளவு உப்பு சேர்த்து கஷாயத்தை வடிகட்டி சுத்தமான கண்ணாடிக் குப்பியில் ஊற்றி வைக்கவும்.

வயது வந்தவர்களுக்கு சாப்பாட்டுக்கு முன் 2 ஔன்ஸ் வீதம் தினம் மூன்று தடவை கொடுக்கவும். 5 வயஸு முதல் 20 வயஸு வரையிலுள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு, 1 ஔன்ஸ் வீதம் சாப்பாட்டுக்குமுன் 3 வேளை கொடுக்கவும். 5 வயஸுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு கால் ஔன்ஸ் வீதம் சாப்பாட்டுக்கு முன்னால் தினம் மூன்று தடவையாகக் கொடுக்கவும். ஆகாரம் கஞ்சி கொடுக்கவும்.

பம்பாய்க் காய்ச்சல் கண்ட வ்யாதிஸ்தர் உள்ள வீட்டில் மற்றவர்களுக்கும் வ்யாதி வாராதபடி வீட்டில் ஸாம்ப்ராணி, குங்கிலியம், காய்ந்த வேப்பம்பூ, வேப்பம்பட்டை இவற்றுள் ஏதாவது ஒன்றைப் புகைய விடவும். இந்தப் புகையால் காய்ச்சல் க்ருமி இறந்துவிடும். வ்யாதிஸ்தரைப் பார்க்க வருகிறவர்கள் அடிக்கடி கற்பூரத்தை முகர்ந்து பார்ப்பது நல்லதாம்.

(6) வேலூர் வைத்யர் மேல்சிபால் எழுதுகிறார்:—

சூரத்து நிலவேம்பு கால் பலம்; மிளகு அரைக்கால் பலம்; சுக்கு அரைக்கால் பலம்; தனியா (கொத்தமல்லி) அரைக்கால் பலம்; தண்ணீர் கால்படி.

ஒரு ஆழாக்கு கஷாயம் ஆகும் வரை கொதிக்கவைத்து, அதை ஒரு நாளைக்கு மூன்று வேளை கொடுக்கவேண்டும்.

ஜுரம் நின்றபிறகு முகம் உப்பியிருந்தால் அரை ஆழாக்கு தண்ணீரில் 1 சிறு தேக்கரண்டி ப்ராந்தி விட்டு சாப்பிடலாம். ப்ராந்தி சாப்பிடாதவர்கள் கால் பலம் ஓமத்தை ஒரு ஆழாக்குத் தண்ணீரில் போட்டு கஷாயம் செய்து ஒரு பெரிய கரண்டி ஆனதும் குளிர வைத்து சாப்பிடவேண்டும்.

(7) சங்கரி துர்க் வக்கீல் மிஸ்டர் வி. டி. ராமஸாமி, பி. ஏ., பி. எல். பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

கப ஜ்வரத்தினால் வருந்தும் வ்யாதியஸ்தனின் மார்பின்மேல் டர்பன்டைன் அல்லது கற்பூர தைலத்தை நன்றாகத் தடவவும். தவிட்டினால் ஒத்தடம் கொடுக்கவும். தினத்திற்கு 4, 5 தடவை ஒரு மணிநேரம் இப்படி சிகித்ஸை செய்தால் கபம் உடையும். ரத்தாசயத்திற்குக் கெடுதி நேரிடாது. நோயாளியும் நிச்சயம் பிழைப்பான்.

நல்ல புழுங்கலரிசியினால் இரண்டு தரம் வேகவைத்துத் தெளிவாய் தயாரிக்கப்பட்ட கஞ்சியை நன்றாய்க் காயவிட்டுக் கொடுக்கவும். வேறு எந்த ஆகாரமும் கொடுக்கக் கூடாது.

(8) விஷ்ணுக்கிராந்தி, நிலவேம்பு, செச்சக்காய்வேர், சுக்கு, அரிசித்திப்பிலி, வெள்ளை மிளகு இவற்றை வகைக்கு அரைக்கால் பலம் சேர்த்திடித்து, ஒருபடி நீரில் போட்டு, அரைக்கால்படி யிறக்கி அதை இரண்டு பங்காக்கி, அதில் ஒருச் சிட்டிக்கை இந்துப்புப் போட்டு, காலையிலும் மாலையிலுமாக மூன்று நாள் சாப்பிட்டு வந்தால், பம்பாய் ஜ்வரம் தணிந்து விடுமாம்.

—லோகோபகாரி.

(9) கொழும்பிலுள்ள ஸி. எஸ். ஏ. கனி, பின்வருமாறு எழுதுகிறார்:—

3 ஔன்ஸ் இஞ்சி, 1 ஔன்ஸ் முருங்கைப் பட்டை, ½ ஔன்ஸ் வெள்ளை வெங்காயம் இவற்றைத் தனித்தனியே நசுக்கி சாறு எடுத்து அந்த அளவு வேப்பெண்ணெயும் கூட்டிக் கலந்து கொஞ்சம் சுடவைத்து ஆற்றிக் கொடுக்கவும். இதை அநேகம் பேர்களுக்குக் கொடுத்து ஸுகம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விதம் காலை மாலை மூன்று நாள் கொடுக்கவும். ஆகாரம் உப்புக்கஞ்சித் தெளிவு.



10. இப்பொழுது பம்பாய் ஜ்வரமென்றும், இன்ப்ளுயின்ஸா (Influenza) என்றும் வழங்கப்பட்டு உலகமெங்கும் பரவி பல்லாயிரக்கணக்கான உயிர்களைச் சூறையாடும் கபஜ்வரத்திற்கு உடனே ஏற்ற சிகித்ஸை செய்தால் வ்யாதிஸ்வஸ்த்தமாகின்றது. இதற்கு சார்ங்கதர ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ள தாளிஸாதி சூர்ணத்தை அதே க்ரந்தத்திற் கூறப்பட்டுள்ள வாஸாதி க்வாதத்தை (முதலாவது) அநுபானமாகக்கொண்டு உபயோகிக்கவேண்டும். இவ்விதம் தினத்திற்கு மூன்று வேளை விதம் இரண்டு மூன்றுநாள் இவ்விரண்டு ஔஷதங்களையும் உபயோகிக்க ஜ்வரம் நிவ்ருத்தியாவதோடு, கபமும் இளகி வெளியாகும். இத்துடன் மார்பின்மீது வெந்நீரைக்கொண்டு சுடச்சுட ஒற்றடம் கொடுக்கவேண்டும். முற்கூறிய கஷாயத்தையும் சூர்ணத்தையும் விடாமல் ஒரு வ்ராமாவது உபயோகித்தால் கபஜ்வரம் பற்றறவே ஒழியும்; ச்வாஸாசயமும் பலப்படும்.—என்று "வைத்யகலாநிதி" கூறுகிறது.

தாளிஸாதி சூர்ணம்.

தாளிசப்பத்தி 1 பங்கு; மிளகு 2 பங்கு; சுக்கு 3 பங்கு; திப்பிலி 4 பங்கு; மூங்கிலுப்பு 5 பங்கு; ஏலக்காய், லவங்கப்பட்டை இவ்விரண்டும் தனித்தனியே ½ பங்கு சேர்த்துச் சூர்ணம் செய்து, முப்பத்திரண்டு பங்கு சர்க்கரையும் கலக்கவேண்டும். இது தாளிஸாதி சூர்ணம் என்னப்படும்.

வாஸாதி க்வாதம்.

(கஷாயம் என்னும் க்வாதத்துக்கு வேண்டிய சரக்குகளை இடித்து ஒரு பலம் அளவுள்ள வஸ்துக்களை 16 பங்கு ஜலத்தில் சேர்த்து மண்பாத்ரத்தில் காய்ச்சி எட்டில் ஒரு பங்காகச் சுண்டவைத்து வடிகட்டி எடுக்கவேண்டும். இக்கஷாயத்தைக் காய்ச்சுவதற்குக் கமலாக்னியிட்டு எரிக்கவேண்டும். இக்கஷாயத்தை சிறிது ஆறியபிறகு இளஞ்சூடாயிருக்கையிலேயே உட்கொள்ளலாம்

ஆடாதொடை, த்ராக்ஷை, கடுக்காய் இவற்றை ஸம அளவாக எடுத்துக் காய்ச்சி எடுக்கப்படும் கஷாயம் வாஸாதி க்வாதமாகும்.

(11) 'உதயதாரகை'யில் பின்வரும் சிகித்ஸை காணப்படுகிறது.

கஷாயம்: கொத்தமல்லி களஞ்சு 5, பெருஞ்சீரகம் கள. 5, இஞ்சி கள. 3, சிறுதேக்கு கள. 2, கண்டதிப்பிலி கள. 2, கோஷ்டம் கள. 1, மிளகு கள. 1, கறுவா கள. ½; ஒன்றரைப்படி தண்ணீரில் அவிய வைத்து ஒருபடியாக்கி புளியாதபடி உமிச்சூட்டில் வைத்திருக்கவும். நாள் மூன்று முறை பெரியவர்கள் 6 அவுன்ஸும், சிறியவர்கள் 2, 3 அவுன்ஸும் சீனி அல்லது கற்கண்டு சேர்த்துக் குடிக்கவும். காய்ச்சல் நன்றாக விடுமளவும் வெந்நீர் குடிக்கவும்.

பத்யம்: காய்ச்சல் விட்ட இரண்டாம் நாள் கஞ்சியும், அடுத்த இரண்டாம் நாள் பத்யமான மெல்லிய போஜனமும் சாப்பிடவேண்டும். குளிர்ந்த தண்ணீர் தொடப்படாது. ஜ்வரம்விடுபட்டும் ஆகாரம் ஒன்றும் கொள்ளக்கூடாது. தேகம், மனம் ஆறுதலாயிருந்து கைகால் முகங்களை வெந்நீரிற் காலை மாலை கழுவித் துடைக்கவும். நெஞ்சிலும் காதிலும் குளிர் பிடியாமல் மூடிக்கொள்ளவும். தாகமிருந்தால் மல்லி, அல்லது தேயிலைப் பானத்தைச் சீனிசேர்த்துக் குடிக்கவும்.

இப்பாகமுறை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு சேதுகாவலர் சற்குருநாதராற் கண்டுபிடிக்கப்பட்டு அதை அநுஸரித்தயாவருக்கும் ஸௌகர்யத்தைக் கொடுத்தது.

(12) கொழும்பு (செக்கடித் தெரு, 56.) ப. மு. க. சுப்பையா தேவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்.

கொண்டக சிந்து என்னும் வேர்ப்பட்டையால் குளிர் ஜ்வரம், பித்த ஜ்வரம், வாத ஜ்வரம் முதல் எல்லா விஷ ஜ்வரங்களும் குன்மம் வயிற்று வலியும் நிவ்ருத்தியாகும்.

கொண்டகசிந்து வேர் பட்டையை சூர்ணமாக்கியும் கஷாயமாக்கியும் த்ராவகமாக்கியும் சாப்பிடலாம். கஷாயம் 2 முதல் 6 அவுன்ஸ் வரையும் சாப்பிடலாம். த்ராவகம் 1 முதல் 4 ட்ராம் வரையும் கொடுக்கலாம். நாள் ஒன்றிற்கு மூன்று தடவை கொடுக்கலாம். மேற்படி மருந்திற்கு யாதொரு பத்யமும் கிடையாது. காதில் சீ வடிதல் காது குத்தல், கபால தலையிடி, ஒருத் தலையிடி, கை கால் வாத உளைச்சல், பிடரி இழுப்பு, உளைச்சல் முதலிய கண்டத்திற்கு மேற்பட்ட நோய்கள் கொண்டகசிந்து வேர்பட்டையால் செய்ததைலம் ஸௌகர்யமாக்கி இருக்கிறது. என் அநுபவத்தில் ஜ்வரத்திற்கு மேற்படி மருந்தும், கழுத்துக்கு மேல்பட்ட வ்யாதிகளுக்கு கொண்டகசிந்து வேர் தைலமும் உண்மையான மருந்துகளாகும்.

(13) ஆயுர்வேத பூஷண பண்டித கே. ஸுப்ரமண்ய சாஸ்த்ரி பின் வருமாறு தெரிவித்திருக்கிறார்.

வேப்பிலை ஒரு பிடி எடுத்து சிறியதாக அரிந்து சட்டியிலிட்டு சிவக்கவறுத்து அரைப்படி ஜலம் விட்டு காய்ச்சி அது பொங்கி வரும் பொழுது, மிளகு, சீரகம், தோலைச்சீவிய சுக்கு, வெட்பாலை யரிசி, பூனைக்காஞ்சிவேர், கண்டங்கத்திரி விதை, சிற்றரத்தை, பேரரத்தை, சிமை சாமந்திப்பூ, (கொட்டைக்கரந்தை) வெட்டிவேர், சந்தனத்தூள், பேய்ப்புடல், அதிமதுரம், உஸ்தகதூஸ் (தட்டாத்திப்பூண்டு) பனமுஷா (கடல்பாசி) கோரைக்கிழங்கு, அரிசித் திப்பிலி, ஆக இந்த 17 சரக்கையும் அரைக்கால் பலம் வீதம் உரலிலிட்டு ஒன்றிரண்டாய் இடித்துப்போட்டு மேற்படி ஜலத்தை நாலிலொன்றாக சுண்டக் காய்ச்சி இறக்கி பிசைந்து வடிகட்டி, அதை காலை, பகல், மாலை ஆகிய மூன்று வேளை உட்கொள்ளவும், கபத்துடன் ஜ்வரம் அதிகமாக இருந்தால், மேற்சொல்லிய சரக்குகளை கால்பலம் வீதம் 1 படி ஜலத்தில் போட்டு கால் படியாக சுண்டக்காய்ச்சி அதை 6 பங்காக்கி 4 மணி நேரத்துக்கு ஒரு தரம் கொஞ்சம் சுடவைத்து உட்கொள்ளவும். இப்படி மூன்று தினம் சாப்பிட வேண்டியது. ஜ்வரத்துடன் மலபந்தமிருந்தால், சிவதை வேர், வாய் விளங்கம், கடுகு ரோகிணி, இம்மூன்றும் வகைக்கு கால் ரூபாயெடையோ அரைக்கால் ரூ. எடையோ தேகவன்மைக்கு தக்கபடி அரைக்கால்படி ஜலத்தில் சேர்த்து தனியே காய்ச்சி, அதில் பாதி முன் சொல்லிய கஷாயத்துடன் ஒரு முறையோ அல்லது இரு முறையோ சேர்த்து சாப்பிட வேண்டியது. இந்த மாதிரி சாப்பிட்டால், மூன்று நாட்களில் மேற்படி ஜ்வரம் நிவர்த்தியாகும். ஜ்வரம் நீங்கி விட்டதே யென்று அலக்ஷ்யமாய் இராமல் பின்னிட்டும் வாரத்துக்கு 2 தரம் காலை மாலைகளில் மருந்து சாப்பிடவேண்டியது.



# COOPERATIVE PURCHASE AND SALE.

## ஐக்ய முறையில் பொருள் வாங்குதலும் விற்றலும்.

ஜனங்கள் தங்களுக்கு வேண்டிய ஸாமான்களைத் தனித்தனியாக வாங்குவதைவிட, ஒரு கோவாபரேடிவ் ஸங்கம் ஏற்படுத்தி அதில் சேர்ந்துகொண்டு, மொத்தமாக வரவழைத்து தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வதில் அநேக ஸௌகர்யங்கள் இருக்கின்றன.

(1) முதலாவது, ஸங்கத்து மெம்பர்களுக்கு வேண்டிய ஸாமான்களை மொத்தத்தில் பெரிய வ்யாபாரிகளிடம் வாங்குவதால், சில்லரை வ்யாபாரிகள் அடையும் லாபம் மெம்பர்களுக்கு அல்லது ஸங்கத்துக்குச் சேருகிறது.

(2) ஸங்கத்தார் வாங்கும் ஸாமான்களின் தொகை அதிகமாக இருப்பதால், வ்யாபாரிகள் ஸங்கத்தாரிடம் யோக்யமாக நடந்து கொள்ள முயலுவார்கள். ஏனென்றால், அவர்கள் அதிக ஸாமான் வாங்கும் பெரிய வாடிக்கைக் காரரை இழந்துவிடத் துணியமாட்டார்கள். ஸங்கத்தாரும், உயர்ந்த ஸாமான்களே வேண்டுமென்று கட்டாயப்படுத்தலாம்.

(3) ஸங்கத்தார் ஒரு குறிப்பிட்ட வ்யாபாரியிடம் வாங்குவதென்று வைத்துக்கொள்ளாமல், எங்கே மலிவாயும் நன்றாயும் கிடைக்குமென்று தோன்றுகிறதோ அங்கே வாங்குவதால், சரியான விலையைத் தெரிந்துகொண்டு அதன்படி வாங்க முடிகிறது. மெம்பர்கள் தனித்தனி வாங்கினால், இந்த ஸௌகர்யம் இருப்பது இல்லை. முக்யமாக நெசவுகாரர்களுக்கு இந்த அஸௌகர்யம் அதிகம். அவர்கள் ஸாவ்கார்களிடம், ஸாவ்கார் சொன்ன விலைக்கே நூல் வாங்கவேண்டி யிருக்கிறது. கடை விலைக்கும் ஸாவ்கார் சொல்லும் விலைக்கும் அதிக வித்யாஸம் இருந்தாலும் ஸாவ்கார் சொல்லும் அதிக விலையையே கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது.

(4) ஸங்கத்து மெம்பர்களுக்கு வேண்டிய ஸாமான்கள் மொத்தத்தில் வாங்கப்படுவதால், வண்டிக்கூலி முதலியவைகள் அதிகமாவதில்லை. மெம்பர்கள் தனித்தனியாக வாங்கினால் மொத்தத்தில் கூலி அதிகமாகிவிடும்.

(5) மெம்பர்கள் தங்களிடம் பணம் இருக்கும்போதுதான் ஸாமான் வாங்க முடியும். அவர்களுக்கு ஸாமான்கள் மலிவாக இருக்கும்போது அவர்களிடம் பணமில்லாமலிருக்கலாம். பணமிருக்கும்போது விலை அதிகமாக இருக்கலாம். ஸங்கமோ என்றால் அதனிடம் எப்போதும் பணம் இருக்கும். ஆகையால் அது ஸாமான் மலிவாயிருக்கும்போது வேண்டிய அளவு வாங்கி வைத்துக்கொள்ளலாம்.

இப்படி மெம்பர்களுக்கு வேண்டிய ஸாமான்களை ஸங்கம் மொத்தமாகத் தருவித்துக் கொடுப்பதில் ஸாதகமிருப்பது போலவே, மெம்பர்களுடைய ஸாமான்களை ஸங்கத்தின் மூலமாக விற்பதிலும் ஸௌகர்யங்கள் இருக்கின்றன. ஸங்கத்தார் மெம்பர்களுடைய ஸாமான்களை சேகரித்து, தரம் வாரியாகப் பிரித்து, விலை ஸௌகர்யமாக இருக்கும்போது பெரிய வ்யாபாரிகளிடம் விற்கவேண்டும். ரொம்ப அதிக [illegible]ஸாகப் பிரிக்க வேண்டியதில்லை. முக்யமான [illegible]கள் தனித்தனியாக இருக்கவேண்டும். உதாரணமாக நாடம் பருத்தியைக் கம்போடியாப் பருத்தியோடு கலக்கக்கூடாது. ஒன்றை வேறொன்று சொல்லி விற்பதும் கூடாது. நாடம் பருத்தியைப் புளிச்சைப் பருத்தியென்றாவது, கம்போடியாப் பருத்தி யென்றாவது சொல்லி விற்பது கூடாது. இப்படி ஸங்கத்தின் மூலமாக யோக்யமாய் விற்பதால் ஏற்படும் ஸௌகர்யங்கள் பின்வருமாறு.

(1) சரக்குகளுக்கு அதிக விலை கிடைக்கிறது. வ்யவஸாயிகளுக்கும் பெரிய வ்யாபாரிக்கும் நடுவிலிருக்கும் தரகர்களும் சில்லரை வ்யாபாரிகளும், அடையும் லாபம் ஸங்கத்துக்கும் மெம்பர்களுக்கும் போய்ச் சேரும். வ்யாபாரிகள் ஸங்கத்தின் மூலமாக வாங்குவதில் ப்ரியப்படுவார்கள். ஏனென்றால், ஸங்கத்தார் சரக்குகளில் கலப்படமில்லாமல் பார்த்துக்கொள்ளுவார்கள் என்ற நம்பிக்கை அவர்களிடம் ஏற்படும். கலப்படமில்லை என்ற நிச்சயம் இருந்தால் வ்யாபாரிகள் சரக்குகளுக்கு நல்ல விலை கொடுப்பார்கள். மேலும் சேர்ந்து விற்பதில் சரக்குகளின் அளவு அதிகமாயிருப்பதாலும், சரக்குகள் கலப்படமில்லாமலும், சுத்தமாயும் இருக்குமென்ற நம்பிக்கை இருப்பதாலும், அதிக சரக்குகள் வாங்குகிறவர்கள் நல்ல விலை கொடுப்பார்கள் என்று எண்ணலாம்.

(2) சரக்குகளை மொத்தத்தில் விற்பதால், அவைகளை அனுப்புவதற்கேற்படும் கூலியும் குறையும்.

(2) மெம்பர்கள் தனித்தனியாக விற்பதென்றால், காலமும் ச்ரமமும் அதிக மேற்படுகின்றன. ஸங்கத்தின் மூலமாக விற்றால் இந்த அஸௌகர்யங்கள் இல்லை. ஆனால், விலை ஏறி விற்கும் ஸமயத்தில் சரக்குகளை விற்பதற்கு ஸங்கத்து அதிகாரிகளுக்கு வ்யாபார அனுபோகமும், ஸாமர்த்யமும், இருக்கவேண்டியது அவச்யம். மேலும் மெம்பர்கள் சரக்குகளில் கலப்படம் செய்யாதபடி பார்த்து, ஸங்கத்துக்கு ஒரு நல்ல பெயர் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஸங்கத்தார் மெம்பர்களுடைய சரக்குகளை வாங்கி விற்கவேண்டுமென்பதுமில்லை. மெம்பர்களுக்கு ஏஜெண்டாக இருந்து, மெம்பர்களின் சரக்குகளை விற்றுக் கொடுத்து, விற்றதற்காக சிறிதளவு தொகை கமிஷனாக எடுத்துக்கொண்டு, பாக்கித் தொகையை மெம்பர்களிடம் கொடுத்து விடலாம்.

நமது ராஜதானியில் இப்படிப்பட்ட விற்பனை ஸங்கங்கள் ஏற்பட்டால், வ்யவஸாயிகளுக்கு அதிக ஸௌகர்யம் ஏற்படக்கூடுமென்று சொல்லலாம். இது வரையில் இப்படிப்பட்ட வ்யாபாரங்கள் அதிகம் ஏற்படவில்லை. ஸமீபத்தில் அனந்தப்பூரில் ஒரு ப்ரதேசத்தில் ரயத்துகள் தங்களுடைய நெல்லை விற்க முயன்றதில், நெல் வ்யாபாரிகள் தக்க விலைகொடுக்க முன் வரவில்லை. அதன்மேல் அவர்கள் கோவாபரேடிவ் ஸங்கத்தின் மூலமாக தங்களுடைய நெல் முழுவதையும் மொத்தமாக ஏலத்துக்கு விட்டார்கள். இப்படிச் செய்ததில் அவர்களுக்கு அதிக விலை கிடைத்தது. திருநெல்வேலியில், வ்யவஸாயிகள் அவர்கள் விளைவிக்கும் பருத்தியை ஸங்கங்களின் மூலமாக பெரிய வ்யாபாரிகளுக்கு விற்று அதிக லாபம் அடைந்திருக்கிறார்கள். ஸாமான்கள் விற்பதற்கும், வாங்குவதற்கும் நமது ஜனங்கள் ஸங்கங்கள் ஏற்படுத்திக்கொண்டால், அவர்களுக்கு மேலே விவரித்தபடி அதிக ஸௌகர்யமும் லாபமும் உண்டாகும்.

---



| | | | | |
|---|---|---|---|---|
| 1020. | பரிபாடல் மூலமும் பரிமேலழகருரையும். வெ. ஸ்வாமிநாதய்யர் பதிப்பு. | 2 | 8 | 0 |
| 1055. | வில்லிபாரதம் (மூலம்) | 3 | 0 | 0 |
| 1059 | முக்திசோபானம் ராம ப்ரும்மயோகி இயற்றியது. பக்தி, யோகம், ஞானம், ஸன்யாஸம் ஆகிய இவைகளின் லக்ஷணத்தைக் கூறுவது. | 0 | 12 | 0 |
| 1061. | நாலாயிர திவ்ய ப்ரபந்தம் சித்திரக்கூடம் கந்தாடை திருவேங்கடாச்சார்யார் பதிப்பு. கித்தான் பைண்ட். | 3 | 8 | 0 |
| 1062. | திருப்போரூர் சன்னிதி முறை சிதம்பரஸ்வாமிகள் இயற்றியது. | 1 | 0 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.




## CURIOUS TAXES.

### விநோத வரிகள்.

முற்காலத்தில் நமது தேசத்து அரசர்கள் பலவகைப்பட்ட வரிகளைப் போட்டார்கள் என்றும், அதனால் ஜனங்கள் ரொம்பவும் கஷ்டமடைந்து வந்தார்களென்றும் சரித்ர நூல்களில் வாசித்துள்ளோம். இப்படிப் பலவகைப்பட்ட வரிகள் அக்காலத்தில் நமது தேசத்தில் மாத்ரம் அபூர்வமாக இருக்கவில்லை. இங்கிலண்டின் சரித்ரத்தைக் கவனித்தால், அங்கேயும் முற்காலத்தில் பலவகைப்பட்ட வரிகள் இருந்ததாகத் தெரிகிறது. அவைகளில் பல கேட்பதற்கும் விநோதமாக இருக்கின்றன. அவைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

இங்கிலண்டில் ஒரு ஸமயம், பெரிய கடிகாரங்கள் வைத்துக்கொள்வதற்கு வரி செலுத்தவேண்டியிருந்ததாம். கைக்கடிகாரங்களை இடுப்புச் சட்டைப்பையிலிருந்து தொங்கவிட்டுக்கொண்டிருந்தால் வரி செலுத்தவேண்டும்.

ஒரு ஸமயம் தலை மயிரைப் பின்னலிட்டுப் பின்புறம் தொங்கவிடுவதற்கும், தலைமயிருக்கு வாஸனைப் பொடி தூவிக்கொள்வதற்கும் வரி இருந்தது. ஸோப்புக்கும் வரி போட்டிருந்தார்கள். நமது தேசத்தில் உப்புக்கு வரி போட்டிருப்பதுபோல, இங்கிலண்டில் ஒரு காலத்தில் உப்புவரி இருந்தது. இப்போது அது கிடையாது.

இங்கிலண்டிலும், இதர மேல்நாடுகளிலும் ஆண்களும் ஸ்த்ரீகளும் கைகளுக்கு க்ளௌஸ் என்னும் கை யுறைகள் போட்டுக்கொள்ளுவது வழக்கம். ஒரு காலத்தில் இந்த க்ளௌஸ் போட்டுக்கொண்டால் வரி செலுத்தவேண்டியிருந்ததாம். இவை போலவே இன்னும் பல ஸாமான்களுக்கும் வரிகள் இருந்தன. அந்த ஸாமான்கள் விற்கும் கடைகளுக்குங்கூட வரிகள் இருந்தன.

சுபா சுபங்களுக்கு வரிகள்.

வீட்டில் கல்யாணம், ஜனனம், மரணம் ஆகிய இவைகளில் எது ஸம்பவித்தாலும் அதற்கு வரி உண்டு. அதுவும் ஆளின் அந்தஸ்துக்குத் தகுந்தபடி அதிகமாகவோ குறைவாகவோ இருக்கும். ப்ரபுக்களில் உயர்ந்தபடியாயுள்ள ட்யூக் என்னும் பட்டம் பெற்றவர் இறந்தால், அவரை அடக்கம் செய்ய ஸர்க்காருக்கு 50 பவுனும் 4 ஷில்லிங்கும் கொடுக்கவேண்டும். முன்னைய கணக்குப்படி பவுனுக்கு 10 ரூபா யென்று வைத்துக்கொண்டால், இது 502 ரூபாயாகிறது. அவருடைய பிள்ளை செத்தாலோ 301 ரூபாய் கொடுக்கவேண்டும். ஒரு தோட்டி செத்தாலோ, அவனை அடக்கம் செய்ய 2 ரூபாய் வரி கொடுக்கவேண்டும். அந்தஸ்து தாழ்த்தாழ வரியின் தொகையும் குறைந்துபோகும்.

கல்யாணம் செய்வதற்கும் இப்படியே அதிக வரி கொடுக்கவேண்டியிருந்தது. ஒரு ட்யூக் கல்யாணம் செய்துகொண்டால் கிட்டதட்ட 300 ரூபாய் கொடுக்கவேண்டியிருந்தது. இப்படியே குழந்தை பிறந்தாலும் வரி கொடுத்தாகவேண்டும்.

கல்யாணம் செய்துகொள்ளாமலிருந்து வரி கொடுக்காமல் தப்பித்துக்கொள்ளலாமென்றால் அதுவும் முடியாது. ப்ரும்மசாரியாக இருந்தாலும் வரி கொடுத்தாக வேண்டும். ஒரு ட்யூக் ப்ரும்மசாரியாக இருந்தால் 125 ரூபாய் செலுத்தவேண்டும். ஒரு ட்யூக்கினுடைய மகன் ப்ரும்மசாரியாக இருக்க விரும்பினால் 75 ரூபாய் வரி செலுத்தவேண்டும். இப்படி அந்தஸ்து குறையக்குறைய வரியும் குறையும். ஸாதாரண கணவானுக்கு

ப்ரும்மசாரி வரி 3 ரூபாயாகும். இன்னும் ரொம்ப தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்கள் 2½ ரூபாய் வரி செலுத்தவேண்டும்.

### அடுப்பு வரி.

11-ம் நூற்றாண்டுக்கு முன்னாலிருந்தே இங்க்லண்டில் அடுப்பு வரி போடப்பட்டு வந்தது. அக்காலத்தில் அடுப்பு வரி வஸூலிக்க, வரி தீர்மானிப்பவர்களும் வஸூலிப்பவர்களும் வீடுதோறும் போய் விசாரிப்பார்கள். இவர்களைக் கண்டால் வீட்டிலுள்ளாருக்கு வெறுப்பாக இருக்கும்.

நார்மன் ஜாதியார் இங்க்லண்டை ஜெயித்து ஆண்டபோதும் இந்த வெறுப்பு அதிகமாக இருந்தது. நார்மன் வம்சத்தைச் சேர்ந்த 3-வது வில்லியம் அரசர், ஜனங்களுடைய மனக்கொதிப்பைப் போக்கவேண்டி இந்த வரியை ரத்து செய்தார்.

### ஜன்னல் வரி.

ஆனால் அதை ரத்துசெய்த எட்டு வர்ஷத்துக்கெல்லாம் ஜன்னல் வரியென்று ஒரு வரி போடப்பட்டது. இது அடுப்பு வரி போலவே ஜனங்களுக்கு அருவருப்பாக இருந்தது. அடுப்பு வரி கொடுக்காமலிருக்க ஜனங்கள் தந்த்ரங்கள் செய்து வந்தார்கள். புகைப் போக்கிகளை இடித்துவிட்டு, அடுப்பு வரியைக் குறைக்க முயன்றார்கள். அதுபோல இந்த ஜன்னல் வரி விஷயத்திலும் தந்த்ரங்கள் செய்யலானார்கள். வரி விதிப்போர் வீட்டைப் பார்க்கவரும்போது ஜன்னல்களை அடைத்துவிடுவதுண்டு. வரி விதிப்போர் போனதும் ஜன்னலைத் திறந்துவிடுவார்கள். இந்த உபாயம் கவர்ன்மெண்டாருக்குத் தெரியவந்ததும், அடைத்துவிட்ட ஜன்னலை வரி அதிகாரிகளுக்குத் தெரிவிக்காமல் திறந்தால் 10 ரூபாய் அபராதம் போடலானார்கள்.

சிலர் ஜன்னலை அடைத்துவிட்டு காற்று வருவதற்காக சுவரில் த்வாரங்கள் செய்யலானார்கள். ஆனால் இப்படிப்பட்ட உபாயங்களும் சில காலத்துக்கு மேல் பலிக்கவில்லை. ஜன்னலுக்கு இங்க்லீஷில் 'விண்டோ' என்று பெயர். அக்காலத்திய ஜட்ஜுகள் அது விண்ட்-டோர் (காற்று கதவு) என்னும் சொற்றொடரிலிருந்து வந்ததென்றும், காற்றும் வெளிச்சமும் வருவதற்காக ஏற்பட்டுள்ள எந்தத் திறப்பும் 'விண்டோ' வாகும் (ஜன்னலாகும்) என்றும் சொல்லி, ஸாதாரண ஜன்னல் அல்லாதவேறு எந்தத் திறப்புகளையும் ஜன்னல் என்று கொண்டு வரி வஸூலிக்கச் சொன்னார்கள். இந்த ஜன்னல் வரி 1851-ம் வர்ஷம் வரையில் வஸூலிக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு அதை நிறுத்தி விட்டார்கள்.

## THE SUN FLOWER.

### ஸூர்ய காந்திச் செடி.

ஸூர்ய காந்திச் செடி மத்ய அமெரிக்காவைச் சேர்ந்த பயிர். அமெரிக்காவை ஐரோப்பியர்கள் கண்டு பிடிப்பதற்கு முன்னாலேயே அந்தப் பயிர் மெக்ஸிகோ, பெரு முதலிய நாடுகளில் பயிராகிவந்தது. பதினாறும் நூற்றாண்டில் அது ஸ்பெய்னுக்குக் கொண்டுவரப்பட்டது. பிறகு அது ஐரோப்பா முழுவதிலும், ஆசியாவின் பெரும்பாகங்களிலும் பரவலாயிற்று.

ஸூர்ய காந்தியின் பூ ஸூர்யனைப் போன்ற உருவம் உடையதாகையாலும், அது ஸூர்யன் இருக்கும் திசையை நோக்கித் திரும்புவதாலும், அந்தப் பூவுக்கு ஸூர்ய காந்திப்பூ என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது.



161167

ஸூர்ய காந்திப்பயிர் மேற்கு ரஷ்யாவிலும் தெற்கு ரஷ்யாவிலும் ரொம்ப நன்றாக வளருகிறது. அங்கு வளரும் ஸூர்ய காந்தி கறுப்பு விதையுடையது. அதுவே ச்லாக்யமான ஜாதி யென்று சொல்லப்படுகிறது, ஏனென்றால் அதில் அதிக விதை கிடைக்கிறது. எண்ணெயும் அதிகம். மன்சூரியாவில் ஒரு நல்ல ஜாதி ஸூர்யகாந்தி பயிராகிறது. ஸ்பெய்னிலும் ஒரு உயர்ந்த ஜாதி இருக்கிறது.

ஸூர்ய காந்தி சாகுபடிக்கு அதிக களியில்லாத நிலம் ஏற்றது. நிலத்தை நன்றாய் உழுது பண்படுத்தவேண்டும். விதைப்பதைப் பற்றியும் செடிகளுக்குள் ஒன்றுக்கொன்று இருக்கவேண்டிய தூரத்தைப் பற்றியும் ஒவ்வொரு தேசத்திலும் அனுஷ்டானம் வித்யாஸப்படுகிறது. 2½-அடிக்கு ஒரு வரிசையாகவும், வரிசையில் 9 அங்குலத்துக்கு ஒன்றாகவும் விதைப்பது நல்லது. ட்ரில் என்னும் விதைக் கலப்பையால் இந்த முறைப்படி விதைப்பதானால், ஏக்கருக்கு 5 ராத்தல் விதை போதும்.

ஸூர்யகாந்திப் பயிர் பூமியிலிருந்து பொட்டாஷ் ஸத்தை அதிகமாக க்ரஹித்துக்கொள்வதால், ஒரு வர்ஷம் ஒரு நிலத்தில் ஸூர்யகாந்தி பயிரிட்டால் மறு வர்ஷம் அதே நிலத்தில் அந்தப் பயிரை சாகுபடி செய்யக்கூடாது. பயிர் செய்தால் மாஸூல் ரொம்பவும் குறைந்து போகும்.

ஸாதாரணமாக ஒரு ஏக்கருக்கு 1000 படி விதை கிடைக்கும். ஒரு படிக்கு $\frac{1}{8}$ படி ஸூர்யகாந்தி எண்ணெய் கிடைக்கும். அமெரிக்காவில் ஒரு ராத்தல் விதை தற்போது 3 அணாவாக விற்கிறது. யுத்தத்துக்கு முன்பு ஒரு ராத்தல் 1½ அணாவாக விற்றது.

பச்சையாக எடுக்கப்படும் ஸூர்யகாந்தி எண்ணெய் மஞ்சள் நிறமாகவும் ருசியாகவும் இருக்கும். அது வாதுமை எண்ணெய், ஒலிவை எண்ணெய் ஆகிய இவைகளுக்கு ஸமானமாக சாப்பாட்டில் உபயோகப்படும். முதல் தடவை எண்ணெய் எடுத்த பிறகு பிண்ணாக்கை சூடாக்கி மறுபடியும் எண்ணெயாட்டினால் இரண்டாந்தர எண்ணெய் கிடைக்கும். இது ஸோப் செய்வதற்கும், மெழுகுவர்த்தி செய்வதற்கும் உபயோகப்படும். வார்னிஷ் முதலியவை கூட்டுவதற்கு லின்ஸீட் (ஆளிவிதை) எண்ணெயைப் போல உபயோகப்படும். யந்த்ரங்களுக்கு எண்ணெய் போட உபயோகிப்பதில் இதைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. பிண்ணாக்கு, ஆடு, பன்றி, புறா, குழிமுயல், கோழி முதலியவைகளுக்கு ஏற்ற உணவாகும். பிண்ணாக்கோடு தவிட்டைக் கலந்து மாடுகளுக்குப் போட்டால், பால் அதிகம் கறக்குமாம். ஸூர்யகாந்தி விதையை நசுக்கி கோழிகளுக்கு உணவாகப்போட்டால், அவைகள் அதிகமாக முட்டையிடுமாம். ரஷ்யாவில் பெரிய ஜாதி விதைகளைப் பக்வம்செய்து ஏழைகள் தின்கிறார்கள். ஸூர்யகாந்தி விதையைக் காப்பிக்கொட்டை வறுப்பதுபோல் வறுத்து பொடிசெய்து, காப்பிக்குப் பதிலாக உபயோகப்படுத்தலாம் என்று சொல்லப்படுகிறது.

ஸூர்யகாந்திச் செடியின் ஒவ்வொரு பாகமும் உபயோகமுள்ளது. அதன் இலைகள் கால் நடைகளுக்கு தீவனமாகும். தண்டுகளில் உள்ள நார் கடுதாசி செய்ய உதவலாம்.

ஸூர்யகாந்தித் தண்டில் உள்ள சோட்டி போன்ற பொருள் ரொம்ப லேசானது. அதை ஜாக்ரதையாக எடுத்து, அநேக வேலைகளில் உபயோகப்படுத்துகிறார்கள். முக்யமாக லைப் போட் என்னும் உயிர்ப்படகு, லைப் பெல்ட் என்னும் உயிர்க்கச்சை முதலிய நீர் மிதப்பு ஸாதனங்கள் செய்ய உதவுகிறது.

m211, N09 3B
N09·1

## WASTE.

### வீண்சேதங்கள்.

அஜாக்ரதையாலும், அச்ரத்தையாலும், திறமைக் குறைவாலும் நாம் வீண் சேதங்களுக்கு இடங்கொடுக்கிறோம். சற்று அஜாக்ரதையாயிருந்து வீட்டில் தீப்பிடித்து விட்டால், எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகிறது. தீயை அவிக்க வேண்டிய ஜாக்ரதை எடுத்துக் கொள்ளாததால் எவ்வளவோ நஷ்டம் ஏற்படுகிறது.

ஸுகாதாரத்தை கவனிக்காமலிருந்தால், வைத்யச் செலவும், வேலை செய்ய முடியாமையும், மரணமும் இதர அசௌகர்யங்களும் ஏற்பட்டு பணச்செலவு உண்டாகிறது. முன் ஜாக்ரதையாயிருந்தால் இந்த வீண் சேதத்தை நிறுத்திவிடலாம். இதுபோலவே பற்பல விதங்களில் வீண் சேதம் ஏற்படுகிறது. எச்தெந்த விதத்தில் எவ்வளவு தொகைக்கு நமது தேசத்தில் தடுக்கக்கூடிய சேதம் ஏற்படுகிறதென்பதைப்பற்றி இது வரையில் எவரும் கணக்கிட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ஸமீபத்தில் வெளிவந்த ஒரு அமெரிக்கப் பத்ரிகையில் அமெரிக்கா ஐக்ய நாடுகளில் ஒரு வர்ஷத்தில் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்பதைப்பற்றி ஒரு கணக்கு வெளியாகியிருக்கிறது. நமது தேசத்தின் நிலைமையைப் பற்றிப் பரிசீலனை செய்ய அது ஸாதகமாயிருக்குமென்று, அதை இங்கு சுருக்கி எழுதுகிறோம்.

திறமையின்மை, அஜாக்ரதை, அச்ரத்தை முதலிய பல காரணங்களினால் அமெரிக்காவில், வர்ஷந்தோறும் சுமார் 30,000,000,000 ரூபாய் சேதமாகிறது. அமெரிக்கா பெரிய பணக்கார தேசமாயிருப்பதால்தான் இவ்வளவு பெருத்த சேதத்தை ஒருவாறு தாங்கிக் கொண்டு வருகிறது.

சேதமுண்டாகிற விதங்கள்.

1. தீ, துருப்பிடித்தல், த்ராவகங்களினால் கெட்டுப்போதல், அனுவச்யமாய் ஸாமான்களைப் போட்டுப் புரட்டுதல் முதலிய காரணங்களால் சேதம் உண்டாகிறது. யந்த்ரசாலைகளில் தீயினால் அநேக லக்ஷ ரூபாய் பெறுமானமுள்ள ஸாமான்கள் சேதமாகின்றன. ஸுமார் 300,000,000, ரூபாய் பெறுமானமுள்ள வ்யவஸாயக் கருவிகள், வர்ஷந்தோறும், துருப்பிடித்துக் கெட்டுப்போகின்றன.

2. ஸுமார் 450 கோடி ரூபாய்க்கு அமெரிக்கர்கள் குடித்து அழிக்கிறார்கள். இதைத் தவிர குடியினால் ஏற்படும் குற்றங்களை விசாரிக்கவும் தண்டனை செய்யவும் வேண்டிய கோர்ட்டுகள், போலீஸ், ஆகிய இவைகளின் நிர்வாகத்துக்கும் அனுவச்யமாகச் செலவு ஏற்படுகிறது. குடிகாரர்களின் வீட்டில் அநாதையாய்க் கிடக்கும் அவர்கள் பெண்சாதி மக்களைக் கவனிப்பதற்கும் அனுவச்யமாய் ஏராளமான பணம் செலவாகிறது. அமெரிக்கா தேசத்து ஜனங்கள் பிறருக்குப் பாரமாயில்லாமல் ஒத்தாசையாயிருக்கவேண்டுமென்கிற கொள்கையைக் கைக்கொண்டு இந்த வீண் செலவுகளையெல்லாம் நிறுத்தினால் வர்ஷத்தில் 750 கோடி ரூபாய் வரையில் மீதம் பிடிக்கலாம்.

3. ஹோட்டல்களில் சாப்பிடுகிறவர்கள் உணவு பதார்த்தங்களை வாங்கிச் சாப்பிடும் போது, அதிக பாகத்தை எறிந்து விடுகிறார்கள். இப்படிச் செய்வதனால் அமெரிக்காவில் வர்ஷந்தோறும் 30 கோடி ரூபாய்க்குமேலாக உணவுப்பொருள்களை யழித்து வருகிறார்கள்.

4. வர்ஷந்தோறும், வைத்யச் செலவில் ரூபாய் 100,00,00,000-க்குமேல் வீணாகிறது.



கொஞ்சம் ஜாக்ரதையாயும், ஸுகாதார விஷயங்களைக் கவனித்தும் நடந்து வந்தால் இவ்வளவு அனுவச்யமான செலவு ஏற்படாது. ப்ராணிகளுக்கு அஜாக்ரதையினால் உண்டாகும் வ்யாதிகளினால், வ்யவஸாயிகள் முதலியோர்கள் வர்ஷந்தோறும் ஸுமார் 60 கோடி ரூபாய் செலவிடுகிறார்கள்.

5. பயிர்களில் பூச்சி முதலியவை உண்டாவதால் ஸுமார் 300 கோடி ரூபாய் வரையில் சேதம் ஏற்படுகிறது. இந்த சேதமெல்லாம், மனிதனுடைய முயற்சியினால் தடுக்கக் கூடியவை.

6. ரோடுகள் நல்ல ஸ்திதியிலில்லாததால், வ்யவஸாயிகளுக்கு மாஸுல் காலங்களில் க்ராக்கி யிருக்கும்பொழுது, ஸுலபமாய்த் தங்கள் சரக்குகளை ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டுபோக முடியாமல் போகிறது. மழைபெய்து ரோட்டை வண்டி போவதற்கு முடியாமல் அடைத்து விடுகிறது. ரஸ்தாக்களை சீர்திருத்தி நன்றாய் வைத்திருந்தால், வ்யவஸாயிகளுக்கு ஏற்படும் பெருத்த நஷ்டத்தைத் தடுக்கலாம். க்ராமாந்தர ரஸ்தாக்களை, சீர்திருத்தி வைத்துக்கொண்டால், ஜனங்களுக்கு ஐந்து லக்ஷம் ரூபாய்க்குமேல் லாபம் வரும்.

## PRUNING FRUIT TREE ROOTS.

### பழமரங்களின் வேர்களை கபாத்து செய்தல்.

பழமரங்களின் வேர்களை வெட்டி விடுவது மரங்களுக்குக் கெடுதி செய்வதில்லை. ஒரு வேரை நாம் நறுக்கி விடுவோமானால், உடனே அது அநேகம் பலமற்ற சல்லி வேர்களாக வளருகிறது. இது மாத்ரமல்ல, சல்லி வேர்களின் தன்மையும் வேறுபாடு அடைகின்றன. வேரை நறுக்கி விடுமுன் சல்லி வேர்களில் சில பூமியைத் துளைத்துக்கொண்டு போக உதவுகின்றன. வேறு சில சல்லி வேர்கள் பாறைகளை பிளக்கக்கூடியவை. சில வேர்கள் மண்ணைப் பிடித்துக்கொள்ள உதவுகின்றன. இவைகள் பூமிக்குள் போகுமிடத்தில் ஜலத் தேக்கமும், செழிப்புக் குறைவுமான இடம் இருக்கலாம். இப்படி ஏற்படாமலிருக்கும்படி செய்வதற்கே வேர்களைக் கபாத்து செய்கிறோம். வேர்களைக் கபாத்து செய்வதால், அறுபட்ட வேர்களிலிருந்து உண்டாகும் மெல்லிய வேர்கள் கீழ்நோக்கிப் போகாமல், மேல் நோக்கிவந்து, பூமிமேல் இருக்கும் வளமையான மண்ணிலிருந்து உணவை க்ரகிக்கின்றன. ஒரு தடவை வேர்களை வெட்டுவதால் இந்த ஸௌகர்யம் ஏற்படாவிட்டால், மறுபடியும் கபாத்து செய்தால், நிச்சயமாக இந்த ஸௌகர்ய மேற்படும். வேர்கள் கீழ் நோக்கிச் செல்லாமல் பக்கவாட்டில் கிளைத்துப் பரவினால், மரத்தின் மேல் பாகங்களும் பழங்கொடுக்கத் தூண்டப்படும்.

வேர்கள் இடத்துக்குத் தகுந்தபடி மரத்தின் வளர்ச்சியை தடை செய்யவோ வ்ருத்தி செய்யவோ கூடும். புலமைக்கும் ஆண்களுக்கும் ஏற்றதாக மரம் வளர வேண்டுமானால், அதன் வேர்கள் ரொம்ப ஆழமாகப் போகவேண்டும். வேர்கள் எவ்வளவுக்கெவ்வளவு வேகமாய் தடையில்லாமல் கீழ் நோக்கி வளர்ந்துகொண்டு போகின்றனவோ, அதற்குத் தகுந்தபடி, மரமும், கிளை விடாமல் நேராக வளர்ந்து போகும். எந்தக் காரணத்தாலாவது, மரங்களின் ஆணி வேர்கள் நன்றாய் வளராமல் கிளைவிட்டு, சல்லி வேர்கள் அதிகமானால், மரத்தினுடைய மேல் பாகமும் வளர்ச்சி தடைபட்டு நிற்கும். மரம் உயர்ந்து வளராமல், காய் காய்க்க ஆரம்பித்துவிடும்.

மரத்தின் ஆணி வேரை நாமே சீக்ரமாக வெட்டி விட்டாலும் சரி, அல்லது கீழ் நோக்கிப் போகாதபடி பக்கவாட்டில் திருப்பி விட்டாலும், மரம் காய்க்க ஆரம்பித்துவிடும். பழமரங்கள் பயிர் செய்ய விரும்புவோர், பழம் கிடைப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பதால், மரத்தின் ஆணி வேரை கீழ் நோக்கிச் செல்ல விடாமல், பக்கவாட்டில் திருப்பிவிட்டு, வேர்கள் கூடியமட்டும் பூமி மேல் மட்டத்துக்குப் பக்கத்திலேயே இருக்கும்படி செய்கிறார்கள். இதனால் வேர்கள் வெறும் மர வளர்ச்சிக்கு ஸாதகமாயிராமல், காய்ப்பதற்கு ஸாதகம் செய்கின்றன.

மரம் நன்றாய்க் காய்த்துப் பலன் கொடுப்பது நிலத்தின் தன்மையையும் பொறுத்திருக்கிறது. சில நிலங்கள் காய்ப்புக்கு ஸாதகமாயிருப்பதில்லை. மரம் செழித்தோங்கி, வளருவதற்கு மாத்ரம் ஸாதகமாயிருக்கின்றன. பழங்கள் அதிகமாகக் கிடைப்பதில்லை. வேறு சில நிலங்கள் இதற்கு நேர் விரோதமான குணமுடையவை. எந்த நிலம் பழ சாகுபடிக்கு ஏற்றதென்று திட்டமாகச் சொல்ல முடியாதென்றாலும், அதிக ஜலம் நிற்கக்கூடியதும் ரொம்ப செழுமையானதும் ரொம்ப களியாயுள்ளதுமான நிலங்கள் பழமர சாகுபடிக்கு ஏற்றனவல்ல என்று சொல்லலாம். மணல் பாங்கான நிலத்தையும், சரளை நிலத்தையும் சாகுபடிக்கு எடுத்துக்கொள்வதுங் கூடாது. பொதுவாய்ச் சொல்லுமிடத்து முன்பு சாகுபடி யில்லாத வண்டல் படிந்த மண் ரொம்ப ச்லாக்யமானது. அந்த மண் ரொம்ப அடையாயும் இருக்கக்கூடாது. ரொம்ப புலபுலவென்றும் இருக்கக்கூடாது. மண் வெட்டியால் வெட்டி எடுத்தால் உதிர்ந்து போகாமலிருக்க வேண்டும். இப்படிப்பட்ட மண்ணில் குட்டையான செடி பூண்டு களை இருக்கும். மேய்ச்சல்தரையும், க்ராம நத்தமும் இப்படிப்பட்ட லக்ஷணமுள்ளவை.

இந்த நிலங்களுக்கு எரு ஒன்றும் போடவேண்டியதில்லை. நல்ல எரு அதிகமாகப் போட்டால், மரம் காய்க்காமல் வளர்ந்து கொண்டே போகும். மண் கொஞ்சம் களிப்பாயிருந்தால் மணலும், மணல் பாங்காயிருந்தால், களியும் மட்டும் போடவேண்டும். இந்த வகை மண்ணில் வேர்கள் நன்றாய்க் கிளைவிட்டு, மண் முழுவதும் வ்யாபித்துவிடும்.

## A NOVEL WAY OF DETECTING CRIME.

### நூதனமான துப்பறியும் வழி.

குற்றவாளி, தான் செய்த குற்றத்தைப் போலீஸார் கண்டு பிடிக்க முடியாமலிருக்க எவ்வளவோ புத்திசாலித்தனமாய் யாதொரு துப்பும் கொடுக்காமல், வேலை செய்கிறான். போலீஸாரும் அப்படிப்பட்ட குற்றங்களைக் கண்டு பிடிக்கத் தங்களாலியன்றமட்டும் நூதனமான துப்பறியும் முறைகளை யுபயோகப்படுத்தி வருகிறார்கள்.

ந்யாயாதிபதிகள் குற்றவாளிகளின் கைவிரல் ரேகை யடையாளத்தினால் அவர்கள் குற்றவாளிகள் என்று தெரிந்துகொண்டு அவர்களுக்கு ஏற்ற தண்டனை விதிப்பதை நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். ஆனால் விரல் நுனியில் நகத்திற்கு அடியில் பரீக்ஷிப்பதால் குற்றத்தைக் கண்டு பிடிக்கலாமென்பது நமக்குத் தெரியாது. எனினும் அந்த நகத்தினடியில் சோதிப்பதினால் அநேக குற்றங்கள் வெளியாகின்றனவென்று தெரிகிறது. சிறிதைப் பெரிதாக்க் காட்டும் மைக்ராஸ்கோப் என்னும் கருவியினால், ஒருவனுடைய நகங்களில் சேர்ந்திருக்கும் அழுக்குகளை சோதித்தால் அநேகம் விஷயங்கள் வெளியாகும். அவன் பருத்தி வஸ்த்ரத்தைத் தொட்டானா, அல்லது கம்பளியைத் தொட்டானா, சிவப்பு வஸ்த்ரமா, அல்லது பச்சை வஸ்த்ரமா, எத்தனை நாள்களுக்கு முன் தொட்டான், இந்த மாதிரியான பல விஷயங்களை நகத்தழுக்கை சோதிப்பதனால் அறியலாம். ஒருவன் எந்த ஸாமான்களைத் தொட்டாலுஞ்சரி, அவைகளினுடைய துளிகள் அவனை யறியாமலே நகத்துக்கிடுக்கில் ஸ்வல்பம் ஒட்டிக்கொள்ளும். எவ்வளவு தரம் அலம்பினாலுஞ் சரி, ப்ரஷ்ஷினால் தேய்த்துத் தேய்த்து அலம்பினாலுஞ் சரி, நகத்துக் கிடையில் அகப்பட்டுக்கொண்ட வஸ்து ஒருபோதும் முற்றிலும் போகிறதில்லை. கொஞ்சம் அங்கு மீதமிருக்கும். அதை மைக்ராஸ்கோப்பினால் பார்த்தால் அது இன்னதென்று தெரியும். இது துப்பறியும் விஷயத்தில் ரொம்ப உதவியாகும்.

கொஞ்ச காலத்துக்குமுன் டாக்டர் பிஷர் என்பவர் நகத்திடுக்கில் என்னென்ன சேரக்கூடு மென்பதை அறியப் பின்வருமாறு பரீக்ஷை செய்தார். அவர் தமது நகங்களை நன்றாய்ப் பலதரம் அலம்பிவிட்டு, உடை தரித்துக்கொண்டார். உடை தரித்துக்கொள்வதில் எப்போதும்போலவே ஸாதாரணமாக உடை தரித்துக்கொண்டாரே யல்லாமல், அதற்கென்று விசேஷ ஜாக்ரதை யெடுத்துக்கொள்ளவில்லை. உடை தரித்துக்கொண்ட பிறகு நகத்திடுக்கை சோதித்ததில், அதில் பருத்தி, கம்பளி, பட்டு நூலிழைகளும் அணிலின் ரோமமும் இருந்தன. இதற்குக் காரணமென்ன? அவர் உடைகளை கையால் எடுத்துப் போட்டுக்கொண்டதால், அந்த உடைகளின் இழைகள் கொஞ்சங் கொஞ்சம் நகத்திடுக்கில் சேர்ந்துகொண்டன. அவர் போட்டுக்கொண்ட உள்ளாடை பருத்தித்துணி. அதனால் பருத்தி நூலிழைகளில் கொஞ்சம் நகத்தில் சேர்ந்தன. அவருடைய ஸாக்ஸுகள் கறுப்பான கம்பளியினாலானவை. அதனால் கறுப்புக் கம்பளி ரோமம் சிறிது நகத்தில் சேர்ந்தது. அவர் போட்டுக்கொண்ட ஷர்ட்டிலிருந்தாவது காலரிலிருந்தாவது ஒரு நூலிழையும் சேரவில்லை. ஏனெனில் அவைகள் கஞ்சி போட்டு இஸ்த்ரி செய்யப்பட்டிருந்தன. என்றாலும் ஷர்ட்டின் கழுத்து பாகத்தையும் காலரையும் சரிப்படுத்துகையில், நகம் சதையில் படவே, தோலிலிருந்து சிறிது பாகம் சுரண்டி எடுபட்டு நகத்தில் சேர்ந்தது.

பச்சை நிறமான 'டை' போட்டுக்கொள்ளும்போது அதன் நூலிழைகள் நகத்திடுக்கில் சேர்ந்துகொண்டன. கம்பளிச் சட்டையிலிருந்து கம்பளி ரோம இழைகள் சேர்ந்தன. க்ளௌஸ் என்னும் கை யுறைகள் அணில் ரோமத்தால் செய்யப்பட்டிருந்தன. அவைகளைப் போட்டுக் கொண்டபோது, அணில் ரோமத்தின் இழையும் சேர்ந்து கொண்டது.

இதே கனவான் மறுபடியும் ஒரு தடவை ஆராய்ச்சி செய்தார். நகத்தில் சேர்ந்தவைகளெல்லாவற்றிற்கும் வரலாறு சொல்லியும் ஒரு சிவப்புப் பருத்தி நூலிழை வந்ததன் காரணம் தெரியவில்லை. கடைசியில் அது, அவர் ஒரு சிவப்பு மெத்தையை எடுத்தபோது நகத்தில் சேர்ந்ததாகத் தெரியவந்தது. அநேகமாய் எல்லாருடைய நகத்திலும் இப்படி அழுக்குகளும் தொட்ட ஸாமான்களின் சிறு துணுக்குகளும் சேருவது இயல்பு. நகத்தை ஒட்ட எடுத்து விட்டால் அழுக்குகள் சேரா. ஆனால் அப்படி எடுப்பவர்கள் மிக ஸ்வல்பம்.

நகத்தின் இடுக்குகளில் சேரும் பொருள்களைக் கொண்டு குற்றங்கள் பலவற்றைக் கண்டு பிடிக்கலாமென்று சொல்லப்படுகிறது.

இந்த முறை ராணுவத்தில் உளவாளிகளைக்

கண்டு பிடிக்கவும் உதவுமென்று சொல்லப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள டாக்டர் ஷ்னீடர் என்பவர் இது விஷயமாக ஆராய்ச்சி செய்து பார்த்தார். ப்ரயாணம் செய்தவர்களுடைய நகங்களை சோதித்து பார்த்தால் பின் வரும் விஷயங்கள் தெரியவரும் என்று கண்டு பிடித்தார்.

1. மூன்று முதல் எட்டு நாட்களுக்குள் ஒருவன் கையினால் செய்யக்கூடிய எவ்வித வேலையை எப்படிச் செய்தான் என்பது.

2. மூன்று நாளாக அவன் அணிந்திருந்த வஸ்த்ரத்தின் விவரங்கள்.

3. பத்ரங்கள், பாங்கி நோட்டுகள், மோட்டார் வண்டிகளிலிருக்கும் படுதா முதலியவைகளைக் கையாடி யிருக்கிறானா வென்பது.

4. ஒருவனுடைய தொழில், அல்லது வ்யாபாரம் இன்னதென்பது.

5. ஒருவனுடைய நடத்தைகள், குணங்கள் முதலான எல்லா விஷயங்களையும் அறியலாம். இதற்கு கற்பனையாக ஒரு உதாரணம் சொன்னால் விஷயம் நன்றாய் விளங்கும்.

ரஷ்யா தேசத்தில் கிழக்குப் பக்கத்துப் போர் முனையில் ஜர்மனியர்கள் கூடாரம் போட்டுத் தங்கியிருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுவோம். ஒரு நாள் அநேகம் போர்வீரர்கள் பேர்ம்மரேனியன் ரெஜிமண்டுக்கு உரியதும் சேற்றில் நனைந்திருந்ததுமான, உடுப்புடன் ஒரு ஜெர்மன் சேனையின் தலைமை ஸ்தானத்துக்கு வருகிறார்கள். அவர்கள் எல்லாரும் ஒருநாள் ராத்ரி யுத்தத்தில், சேனைகளை விட்டுப்பிரிந்து வந்ததாகச் சொல்லுகிறார்கள். எல்லாரும் ஜெர்மன் பாஷை பேசுகிறார்கள். இப்படி யிருக்க அவர்களில் ஒருவன் சத்ருவினிடத்திலிருந்து வந்த உளவாளியோ என்று ஸந்தேக முண்டாகிறது. அவனை சோதிக்கிறார்கள். ஒன்றும் ஸந்தேகத்துக்கிடமில்லாமலிருக்கிறது. உள்ளாடை கூட ஜெர்மனியர்கள் அணிவதுபோல் அணிந்திருக்கிறான். என்ன செய்வது? நுனி நகங்களை அறுத்து எடுத்துக்கொண்டும், அவனுடைய, நனைந்த உடுப்பு, ஸ்டாகிங்கஸ், பூட்ஸ் முதலியவற்றை எடுத்துக்கொண்டும் ஒரு சாஸ்த்ரியிடம் கொண்டுபோய்க் கொடுக்கிறான், அவர் இவைகளைச் சோதித்த பிறகு சில விஷயங்களை சேனாதிபதிக்குச் சொல்லுகிறார்கள். ஸேனாதிபதியும் ஸந்தேகிக்கப்பட்டவனை தன் முன் வரவழைத்து நிறுத்திக் கொண்டு பின்வருமாறு சொல்லுகிறார்:—

"நீ ரஷ்ய துருப்பைச் சேர்ந்த ஒரு உளவாளி. நீ ரஷ்ய ஸைன்யத்தின் இன்ன டிவிஷனில் ஒரு ஆபீஸர். நீ இன்ன இடத்தில் காவலாயிருந்த இன்னானை கொன்றாய். ருஷ்ய தேசத்துக் குடியானவர்களுக் கிடையில் நீ ஒளிந்திருந்திருக்கிறாய். அவர்கள் உனக்கு இன்னன்ன ஆகாரங்களைக் கொடுத்தார்கள். பாதிதூரம் ஒரு பால்யமான ஊதாக் குதிரை மீது ஏறி வந்தாய். மற்ற பாதிதூரம், ஒரு கிழட்டு ஊதாக் குதிரையின்மீது ஸவாரி செய்தாய், ஆர். என்னும் காட்டின் வழியாய் ராத்ரியில் வந்தாய். இன்ன வாய்க்காலை இன்ன இடத்தில் கடந்தாய். இன்று காலை எங்கள் எல்லையை அடைந்தாய். உன்னைப் பொழுது விடிந்ததும் சுட்டுக்கொல்வோம்." இவ்வளவும் எப்படிச் சொல்ல முடியும்? நகத்திடுக்கையும் உடைகளையும் பரீக்ஷை செய்ததில் பின்வரும் விஷயங்கள் வெளியாயிருக்கவேண்டும்.

1. ரஷ்ய ஸைன்யத்தின் ஒரு டிவிஷனிலுள்ள ஆபீஸர்கள் அணியும் உடுப்பின் நிறமும் நயமும் தெரிந்துகொண்டு இவன் அதைச் சேர்ந்தவனென்று சொல்லலாம். ஏனெனில் அந்த உடைகளின் துணுக்குகள் நகத்திடுக்குகளில் சேர்ந்திருக்கும்.

2. ரஷ்ய தேசத்துக் குடியானவர்கள்



ரொட்டி செய்கிற கோதுமை, காய்த் தானியத்தின் மா முதலியவைகளின் குறியை அவன் நகத்தில் கண்டிருக்கவேண்டும்.

3. ஆர். என்னும் காட்டிலுள்ள மரவகை, செடி கொடிகள் மண் இவைகளின் குணத்தை இவன் நகம் வெளியிட்டிருக்கவேண்டும்.

4. இன்ன வாய்க்காலில், இன்ன பாசி படருகிறது, இந்த இடத்தில் பூமி இம்மாதிரி யிருக்கிறது என்று தெரிவதால், அவன் எந்த வாய்க்காலை எங்கு கடந்தான் என்று அறியலாம்.

5. நான்கு வயஸுக்கு மேல்படாத ஊதாக் குதிரையின் மயிர்.

6. பன்னிரண்டு வயதுக்கு மேல்பட்ட ஊதாக் குதிரையின் ரோமம்.

இவைகளையும் இன்னும் அநேக விஷயங்களையும் நகத்தைச் சோதிப்பதால் அறியலாம். ஆனால் இம்மாதிரி கண்டு பிடிக்க ரொம்ப அனுபவமும், ஸாமர்த்யமும் வேண்டும். இவைகள் ஏற்படவேண்டுமானால் பத்து வர்ஷமாவது இவ்விதமான சோதனைகள் செய்யும் வேலையில் உழைக்கவேண்டும். இப்படித் தேர்ச்சி யடைந்தவர்கள், உளவாளிகளை மட்டுமல்ல, இன்னும் அநேக விதமான குற்றவாளிகளையும் கண்டு பிடிக்கக்கூடும்.

## SOAPS AND SOAP SUBSTITUTES.

### ஸோப்புகளும், சுத்தம் செய்வதற் கேற்ற இதர பொருள்களும்.

தேகம் வஸ்த்ரம் முதலியவைகளிலிருந்து அழுக்கைப் போக்க தற்காலம் ஸோப்பு என்னும் பொருள் வெகுவாய் உபயோகப்பட்டு வருகிறது. தற்காலம் இந்த உலகத்தில் 3000 தினுஸு ஸோப்புகள் இருக்கின்றன வென்று தெரிகிறது. ஸோப்பு அதிகமாக இல்லாத தேசங்களில் சுத்தம் செய்வதற்கு வேறு பற்பலவகைப் பொருள்களை உபயோகித்து வருகிறார்கள்.

நமது தேசத்தில் இன்னும் ஸோப் பூரா ப்ராபல்ய மடையவில்லை யென்று சொல்லலாம். மேலும் நமது தேசத்தில் எண்ணெய் தேய்த்துக்கொள்ளும் வழக்கம் இருப்பதால், அதற்கு வேண்டிய இலுப்பைப் பிண்ணாக்கு, சீயக்காய், கடலைமா முதலியவைகள் வெகுவாய் உபயோகப்பட்டு வருகின்றன. ஸாதாரண ஸ்த்ரீகள் தினப்படி ஸ்நானத்துக்கு இப்பொடிகளில் எதையாவது உபயோகிப்பதுண்டு. பலர் பல வாஸனைச் சரக்குகளைப் பொடிசெய்து, அந்தப் பொடியில் சீயக்காய்ப் பொடி, கடலைமா முதலியவைகளைச் சேர்த்து ஸோப்புக்குப் பதிலாக உபயோகித்து வருகிறார்கள். பணக்கார வீட்டு ஸ்த்ரீகளும், நாகரீகமும் ஸௌகர்யமும் கைக்கொண்டுள்ள இதர ஸ்த்ரீகளும் ஸோப்பை உபயோகித்து வருகிறார்கள்.

நமது தென் நாட்டில், மேல்நாட்டு ஸோப்புகள்தான் அதிகம். நாட்டு ஸோப்புகள் சில காலமாகத்தான் உபயோகத்திலிருந்து வருகின்றன. உடம்பு தேய்த்துக்கொள்ள உதவும் ஸோப்புகள் பற்பல வாஸனையிலும், நிறத்திலும் கிடைக்கின்றன.

வஸ்த்ரங்களை சுத்தம் செய்ய உதவும் ஸோப்புகளில் முக்யமானது ஸன்லைட் ஸோப்பாகும். நாட்டு ஸோப்பும், (இது சவர்க்காரம் என்னப்படும்,) உபயோகப்பட்டு வந்தாலும், இதன் ப்ராபல்யம் நாளுக்குநாள் குறைந்து வருகிறது. இதற்கு பதிலாக ஸோடா பஸ்

யம் உபயோகத்துக்கு வந்துகொண்டிருக்கிறது.

தென்னாட்டில் உடம்பு தேய்த்துக்கொள்ள உதவும் ஸோப்பு ப்ராபல்யமாயில்லையென்றாலும், வட இந்தியாவில் இது விசேஷமென்று தெரிகிறது.

வட இந்தியாவில் ராஜாக்கள், ப்ரபுக்கள் முதலியவர்கள் வீட்டு அந்தப்புரங்களில் உபயோகிக்கப்படும் ஸோப்புகள் ரொம்ப உயர்ந்தவை யென்று சொல்லப்படுகிறது. அவைகள் வாஸனையற்றவைகள். தேங்கா யெண்ணெயால் செய்யப்பட்டவை. ஆடம்பரங்கள் இல்லாமல் பார்வைக்கு ஸாமான்யமாக இருக்கும். உருண்டை வடிவத்தை சரிபாதி வெட்டினால்போல், (நறுக்கின எலுமிச்சம்பழ மூடியின் அளவைப்போல்) இருக்கும். பார்வைக்கு பனிக்கட்டி போன்ற வெண்மையாயிருக்கும்.

வட இந்திய அந்தப்புரத்து ஸோப்புகளைப் போலவே, துருக்கியைச் சேர்ந்த இடங்களில் ப்ரபுக்கள் வீட்டு ஸ்த்ரீகள் உபயோகிக்கும் ஸோப்புகளும் ரொம்ப உயர்ந்தவை. அவைகள் பார்வைக்கு அலங்காரமாகவும், இனிமையான வாஸனையுடனும் இருக்கும். அவைகள் ஸ்த்ரீகளின் கைக்கு அடங்கும் அளவில் செய்யப்படுகின்றன. அவைகள் நக்ஷத்ர வடிவமுள்ளவைகளாகவும், இளம்பிறைச் சந்த்ரனைப்போலவும், புஷ்பங்கள் சித்ரிக்கப்பட்டனவாயும், அரபிக் வார்த்தைகளும், நீதிகளும் அச்சடிக்கப்பட்டனவாயுமிருக்கும். இவைகளெல்லாம் சுத்தமான ஆலிவ் எண்ணெயால் செய்யப்படுகின்றன.

லெவாண்ட் ப்ரதேசத்தில் அதாவது ஆசியா துருக்கியின் மேற்கு பாகத்தில் மிதக்கும் ஸோப்புகள் செய்யப்படுகின்றன. ஸோப்புச் செய்யும்போது அச்சில் வார்ப்பதற்கு முன்னால் ஸோப்புப் பொருளில் காற்றைச் செலுத்துவதால், அது லேசாகி ஜலத்தில் மிதக்கிறது. மிதக்கும் ஸோப்புகள் பற்பல உருவத்தில் செய்யப்படுகின்றன.

### கடுதாசி ஸோப்.

சென்ற 50 வர்ஷகாலமாக கடுதாசி ஸோப் ப்ராபல்யமடைந்து வருகிறது. இது ஐரோப்பாக்கண்டத்தில் விசேஷம். அது நீண்ட கடுதாசிச் சுருளாகவாவது, சிறுசிறு துண்டுகளாகவாவது செய்து விற்கப்படுகிறது. சிறு துண்டுகள் நோட்டு புஸ்தகம்போல் தைத்து விற்கப்படும். ஒரு சிறு கடுதாசி முகம், கைகள் இவைகளை சுத்தம் செய்யப் போதுமானது. ஜலத்தில் கடுதாசியை நனைத்து உடம்பில் தேய்த்துக்கொண்டால், கடுதாசியிலுள்ள ஸோப் பாகம் தேகத்தில் சேர்ந்துகொள்ளும். கடுதாசி பாகம் மெல்லிய டிஷ்யூ என்னும் கடுதாசியாகும். ஸோப் கரைந்தபிறகு அந்தக் கடுதாசியைச் சுருட்டி எறிந்து விடலாம். அது ஒரு நெருப்புக் குச்சியின் தலைப்பாகத்தை விடப் பெரியதாக இராது.

### ப்ரெஞ்ச் ஸோப்புகளும் மெழுகுவர்த்திகளும்.

பாரிஸில் செய்யப்படும் ஸ்நான ஸோப்புகள் ரொம்ப விலையேறப்பெற்றவை. சிறிய அளவுள்ள ஸோப்புகள் ஆறேழு ரூபாய் வரை விலைபோகும். ப்ரான்ஸில் ஸோப் தொழில் சாலைகளில் மெழுகுவர்த்தியும் செய்கிறார்கள். ஆனால் அந்த மெழுகுவர்த்திகளில் ஒரு விசேஷம் உண்டு. மெழுகுவர்த்திகளின் உள்ளே குழாய்கள் இருக்கும். மெழுகுவர்த்தியை ஏற்றினால், அதிகப்படியாக உருகும் எண்ணெய் குழாய் வழியாகக் கீழே போகும். இதனால் மெழுகுவர்த்தி விளக்கை எடுக்கும்போது, கையிலும் துணிகளிலும் எண்ணெய் விழாது. த்வாரத்தில்போன எண்ணெய் கொஞ்சதூரம் போனதும் கெட்டியாகிவிடும். இப்படி எரிய எரிய எண்ணெய் சேதமாகாமல் பின்னால் எரிய உதவுகிறது. குழாய்களின் வழியாக காற்று தாராளமாகப் போகக்கூடுமாதலால் வெளிச்சம் ப்ரகாசமாக இருக்கிறது.



### ஸோப்புக்கு ப்ரதிகள்.

ஸோப்புக்குப் பதிலாக சிலவகைப் பட்டைகளும், வேர்களும், கொட்டைகளும் அநேக தேசங்களில் உபயோகப்படுகின்றன. இவைகளை ஜலத்தில் தேய்த்தால் நுரை உண்டாகும். இவைகள் விசேஷமாக சாயம் போடுகிறவர்களுக்கும் துணிகளை சுத்தம் செய்பவர்களுக்கும் உபயோகப்படுகின்றன. ஸாதாரண ஸோப்புகளை உபயோகித்தால், துணிகள் கெட்டுப்போகுமென்று இவைகளை உபயோகிக்கிறார்கள். பூந்திக் கொட்டைக்கு ஸோப்புக்குணம் உண்டென்பது நமது நாட்டிலுள்ளார் யாவருக்கும் தெரிந்தது. இது அமெரிக்காவிலும் பயிரிடப்படுகிறது. இது சுத்தம் செய்ய உதவுவதோடு, இதிலிருந்து ஒருவகை எண்ணெயும் எடுக்கப்படுகிறது.

மேற்சொன்ன ஸோப் ப்ரதிகள் அவைகள் உண்டாகும் ப்ரதேசங்களில் உள்ள ஸ்வதேசிகளால் வெகுவாய் உபயோகிக்கப்படுகிறது. ஆனால் அவை ஸோப்பைப்போல் அடக்கமாக இருப்பதில்லை. அதனால் நாகரீகம் வாய்ந்தவர்கள் அவைகளை உபயோகிப்பதில்லை. மேலும் அவைகள் எப்போதும் அதிகமான அளவில் கிடைப்பதில்லையாகையால், வ்யாபாரத்துக்கு அதிகமாக வருவதில்லை.

### தவிட்டு ஸோப்.

மங்கோலியாவிலும் மஞ்சூரியாவிலும் அரிசித்தவிடு ஸோப்பாக உபயோகிக்கப்படுகிறது. அங்கே அரிசித்தவிட்டை அடைபோல் தட்டி விற்கிறார்கள். இது அந்த தேசங்களில் ஒரு முக்ய வ்யாபாரப் பொருளாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சீனாவிலும் தவிட்டு ஸோப் ஏராளமாக உபயோகப்பட்டு வருகிறது. தவிட்டை ஆறங்குல குறுக்களவும் ½ அங்குல கனமும் உள்ள அடையாகத் தட்டிக் காயவைத்து விற்பனை செய்கிறார்கள். இந்த தவிட்டு ஸோப்பு சீனாவில் ஆதி காலந்தொட்டு உபயோகப்பட்டுவருகிறது. இந்தத் தவிட்டில் ஒரு சிறிது எடுத்து ஒரு பருத்தித் துணியில் போட்டு முடிந்து, வெதுவெதுப்பான ஜலத்தில் போட்டு எடுத்து, தேகத்தில் தேய்த்து, அழுக்கைப் போக்கிக் கொள்ளுவார்கள்.

### மனிதக்கொழுப்பு ஸோப்.

நதிமூலம், ரிஷிமூலம் விசாரிப்பது கூடாதது போலவே ஸோப் மூலம் விசாரிப்பதும் சில ஸமயங்களில் உசிதமல்ல. மனிதக் கொழுப்பிலிருந்தும் ஸோப் செய்யப்படுவதுண்டாம். மெழுகு வர்த்திகளும் மனிதக் கொழுப்பிலிருந்து செய்கிறார்களாம். இது மாத்ரமல்ல, குதிரை, நாய், காங்கரு என்னும் ஆஸ்ட்ரேலியா தேசத்து ம்ருகம், குரங்கு ஆகிய இவைகளின் கொழுப்பிலிருந்தும் ஸோப் செய்யப்படுகின்றன. சாக்கடைக் கொழுப்பு ஸோப்பும் உண்டாம். சாக்கடை ஜலத்திலுள்ள எண்ணெய்ப் பசையை க்ரஹித்து அதைக் கொண்டு ஸோப் செய்யப்படுகிறது போலும்.

### மண் ஸோப்.

மலையாளக் கரையிலும் சிங்கப்பூரிலும் களிமண் உருண்டை அழுக்கைப் போக்க உதவுகிறது. ஆனால் அது பார்வைக்கு அழுக்கடைந்த பழுப்பு நிறமாயும் கனமாயுமிருக்கிறது. கேயலின் என்னும் சீனா மண்ணுக்கும் சுத்தம் செய்யும் குணமுண்டு.

### குட்டித் தேங்காய்.

தென் அமெரிக்காவில் ஒரு வகைத் தேங்காய் இருக்கிறது. அது மிகச் சிறியது. ஸாதாரணத் தேங்காயைப்போல் அதற்கு மூன்று கண்கள் உண்டு. ஒன்றுதான் த்வாரமாகக் கூடியது. வாஸனையிலும் ருசியிலும் இந்தக் குட்டித் தேங்காய் பெரிய தேங்காயைப் போலுள்ளது. அதற்கு இளநீரும் உண்டு. இதிலிருந்து கிடைக்கும் கள்ளிலிருந்து சர்க்கரை எடுக்கப்படுகிறது. இந்த குட்டித் தேங்காயில் எண்ணெய் கிடைக்கிறது. இந்த எண்ணெய் ஸோப்பு செய்ய உதவுமாம்.

## SOME CURIOUS HABITS OF BIRDS.
### பக்ஷிகளின் சில விநோத வழக்கங்கள்.

பக்ஷிகள் பல விநோத வழக்கங்களை யுடையவை. அமெரிக்காவில் கௌபர்ட் என்று ஒரு பக்ஷி இருக்கிறது. கௌபர்ட் என்றால் பசு மாட்டுப் பறவை என்றர்த்தம். மாடுகளுடன்கூடத் திரிவதால் அதற்கு அப்பெயர் ஏற்பட்டது. அந்தப் பக்ஷியின் ஒரு விநோத வழக்கம் என்னவென்றால், அது கூடு கட்டுவது கிடையாது. அது இதர பக்ஷிகளின் கூடுகளில் அவைகளின் முட்டைகளோடு தன் முட்டைகளை யிடும். முட்டைகள் பெரியனவாயிருப்பதால், அந்த இதர பக்ஷிகள் தங்கள் முட்டைகளை அடைகாக்கும்போது, கௌபர்ட் முட்டைகளுக்கு அதிக சூடு தாக்கி, சீக்ரம் குஞ்சு பொரிக்க ஸாதகமேற்படுகிறது. கௌபர்ட் முட்டைகள் மற்ற பறவைகளின் முட்டைகளைவிட சீக்ரம் குஞ்சு பொரிக்கின்றன. அவைகள் ஸாதாரணமாக 10 அல்லது 11 நாள்களில் குஞ்சு பொரிக்கின்றன. குஞ்சு பொரித்தானதும் வளர்ப்புத் தாய்ப் பறவை கௌபர்டின் குஞ்சை நன்றாய் போஷித்துத் தன் குஞ்சுகளை அலக்ஷ்யம் செய்து விடுகிறது. இதனால் அதன் குஞ்சுகள் போஷணையற்று இறந்துபோவதுண்டு.

அக்கூபக்ஷிக்கும் இதர பக்ஷிகளின் கூட்டில் முட்டையிடும் குணம் உண்டு. சில அக்கூ பக்ஷிகள் தங்கள் வகுப்பைச்சேர்ந்த இதர ஜாதிப் பக்ஷிகளின் கூட்டிலும் முட்டையிடுமாம். உதாரணமாக மஞ்சள் அலகுள்ள அக்கூ பக்ஷிகள் கறுப்பு அழகுள்ள அக்கூ பக்ஷிகளின் கூடுகளில் முட்டையிட்டு விடுமாம்.

அக்கூ பக்ஷிகள் இதர பக்ஷிகளின் கூடுகளில் முட்டையிடுமுன், ஆண் அக்கூ பறவை, முட்டையிட எண்ணியிருக்கும் கூட்டின்மேல் பறக்கும். கூட்டிலுள்ள பறவைகள் பயமடைந்து ஆண் பறவையைத் துரத்த முயலும். அப்போது பெண் அக்கூ பறவை திருட்டுத்தனமாக அந்தக் கூட்டில் முட்டையிட்டுவிடும்.

அக்கூ பக்ஷியின் முட்டைகள் அது இட்ட கூட்டிலுள்ள இதர பறவையின் முட்டைகளைப்போலவே பார்வைக்குத் தோற்றும். அதனால் இதர பறவைகள் அக்கூ பக்ஷியின் முட்டைகளைத் தங்கள் முட்டைகளென்று எண்ணி அடைகாக்கும். அக்கூ பறவையின் குஞ்சுகள் கண் திறப்பதற்கும், சிறகு முளைப்பதற்கும் முன்னாலேயே கூட்டிலுள்ள இதரக் குஞ்சுகளை முதுகில் ஏற்றி கூட்டிலிருந்து கீழே தள்ளிவிடும். அந்த இதரக் குஞ்சுகள் இறந்து விடுகின்றன.

இன்னொரு வகை அக்கூ பறவை இதர பறவையின் கூட்டில் ஒரு முட்டை யிடுவதோடு நில்லாமல் 2 முதல் 4 முட்டை வரையில் இடுகிறது. முட்டைகள் குஞ்சு பொரித்தவுடன் குஞ்சுகள் இதரப் பறவைக் குஞ்சுகளோடு ஸ்நேகிதம் செய்துகொண்டு வளருகின்றன.

ஆஸ்ட்ரேலியா, ஸாமோவா, நிகோபார் முதலிய இடங்களில் உள்ள ப்ரஷ் டர்க்கி என்னும் பறவை வான்கோழியைப் போலிருக்கும். அவைகள் முட்டையிட்டால் அடைகாப்பதில்லை. பெண் பறவைகள் அழுகிப்போன தாவரப் பொருள்களால் பெரிய மேடுகள் தயார் செய்கின்றன. இவைகளில் ஒரு பள்ளந்தோண்டி அதில் இரண்டு நாளுக்கொருதரம் ஒரு முட்டையிடுகின்றன. பிறகு முட்டையை மூடி விடுகின்றன. முட்டைகள் மேட்டில் சேர்ந்துள்ள பொருள்களிலிருந்து உண்டாகும் சூட்டால் குஞ்சு பொரிக்கின்றன. குஞ்சுகள் வெளிவரும்போதே சிறகுள்ளவைகளாக இருக்கின்றன. வெளிவந்த அரைமணிக் கெல்லாம் அவை பறந்தோடிப் போகின்றன.

கிழக்கு இந்திய தீவுகளில் ஹார்ன்பில் என்று ஒரு பறவை இருக்கிறது. அது மரத்தின் பொந்துகளில் முட்டையிடும். ஆண் பறவை பெண் பறவையை மரத்தில் வைத்து பொந்தை, கொஞ்சம் வழி மாத்ரம் வைத்து, மூடிவிடும். பெண் பறவை முட்டையை இடைவிடாது அடைகாத்துக் குஞ்சு பொரிக்கச் செய்யும். குஞ்சுகள் பறக்கக்கூடிய நிலைமையை அடையும் வரையில் பெண் பறவை பொந்திலேயே இருக்கும். ஆண் பறவை அதற்கு ஆகாரம் கொண்டுவந்து கொடுக்கும். குஞ்சுகளுக்கு வெளியில் பறக்கக்கூடிய நிலைமை வந்ததும், பெண் பறவை மரப்பொந்தைவிட்டு வெளியில் வரும்.



## PADDY SOWING.
### நெல் விதைத்தல்.

ஸாதாரணமாக நெல் விதையைத் தெளிக்குமுன், விதை நெல்லை சிறிது முளைக்க விடுவது வழக்கம். முளைக்கவிடும் முறை இடத்துக்கிடம் வித்யாஸப்படும். ஆனால் பொதுவாய்ச் சொல்லுமிடத்து, விதை நெல்லை ஒரு பாத்ரத்தில்போட்டு ஊறவைத்து ஊறின பிறகு ஜலத்தை வடியவிட்டு, மூடி பாரம் போட்டால், விதைகள் முளைத்துவிடும். விதைக் கோட்டையை ஜலத்தில் அப்படியே ஊறவைத்தும் முளைக்கச் செய்வதுமுண்டு. 24 அல்லது 36 மணி நேரத்தில் விதைகள் நன்றாய் முளைத்துவிடும். இப்படி விதையை முளைக்கவிட்டு விதைப்பதன் காரணம் என்னவென்பது வ்யக்தமாகத் தெரியவில்லை. சிலர் தேசத்தின் சீதோஷ்ண ஸ்திதியை உத்தேசித்து இப்படிச் செய்யவேண்டியிருக்கிறதென்கிறார்கள். வேறு சிலர், இப்படிச் செய்வதால், லேசான விதைகளை உபயோகிக்காமல் விட்டுவிடலாமென்று சொல்லுகிறார்கள். வேறு சிலர், விதைகள் ஒரே சீராக முளைக்கின்றன என்கிறார்கள்.

விதையைத் தெளிக்கும் இடத்தின் நிலைமையைக் கவனிப்போம். சேராக உள்ள நாற்றங்காலில் தான் விதை நெல்லைத் தெளிக்கிறார்கள். நாற்றங்காலில் சேற்றுக்குமேல் ஸுமார் இரண்டங்குலம் உயரத்துக்கு ஜலம் இருக்கிறது. விதை தெளித்த பிறகு ஜலத்தை வடியவிடுகிறார்கள். முளைகள் நன்றாய் பூமியில் ஊன்றிக்கொள்ளுகிற வரையில் ஸ்வல்பமாகவே ஜலம் பாய்ச்சுகிறார்கள். முளைத்த விதையைத் தெளிப்பதால் ஸௌகர்யமென்னவென்றால், விதை ஜலத்தில் ஊறியிருப்பதால், அது கனமாகிவிடுகிறது. இதனால் அது போட்டவிடத்தில் அப்படியே இருக்கிறது. ஜலம் பாய்ச்சும்போதும், ஜலத்தை வடியவிடும்போதும் அது அசைவதில்லை. முளைக்காத விதையானால், அது அதிக கனமாயிராது, ஆகையால் அது ஓடும் ஜலத்தில் அங்கு மிங்கும் அசையும். அதனால் ஒரு இடத்தில் ஸ்திரப்பட்டு வேரூன்றுவது சிரமம். முளைகள் சீக்ரம் வேரூன்றுவது அவச்யம். முளைத்த விதைகள் சீக்ரம் வேர்களை மிருதுவான சேற்றில் செலுத்தக்கூடும். ஆகையால், ஜலம் வடிந்து, நிலம் சற்றுக் காய்ந்தாலும், அவை

களுக்கு பாதகம் ஏற்படாது. முளைக்காத விதையானால், நிலம் சற்றுக் காய்ச்சலெடுத்து விட்டால், விதையின் சிறு வேர்கள் பூமியில் ப்ரவேசிக்கக் கஷ்டப்படும்.

முளைத்த விதைகளில் சிறு வேர்கள் இருப்பதால், விதைகள் சேற்றில் அதிக ஆழத்தில் பதிந்துவிடாமலிருக்கின்றன. ஆனால் இந்த முறையில் சாவி விதையைப் பொறுக்கி எடுப்பது முடியாது.

முளைத்த விதைகளை விதைப்பதில் இன்னொரு ஸௌகர்யமும் உண்டு. விதைகளெல்லாம் ஏககாலத்தில் ஒரேவிதமானதும் ஸௌகர்யமானதுமான சீதோஷ்ண நிலைமையில் முளைக்கின்றன. இதனால் எல்லா விதைகளும் ஒரே மாதிரியான பயிரை உண்டாக்குகின்றன.

## MENDICANCY IN CALCUTTA.

### கல்கத்தாவில் பிச்சை எடுப்பவர்கள்.

நமது தேசத்திலுள்ள பிச்சைக்காரர்களின் பிரிவுகளைப்பற்றியாவது அவர்களுடைய பழக்கவழக்கங்களைப் பற்றியாவது எவரும் இது வரையில் ஒழுங்காக ஆராய்ச்சி செய்திருப்பதாகத் தெரியவில்லை. ஸமீபத்தில் ஒரு வங்காள கனவான், கல்கத்தாவில் பிச்சையெடுப்பவர்களைப்பற்றி ஒரு வ்யாஸம் தயாரித்து கல்கத்தாவிலுள்ள ஜனஸமூக ஆராய்ச்சி ஸபையில் வாசித்தார். அதில் கூறியுள்ள விஷயங்களில் பல, இந்தியாவின் இதர பாகங்களுக்கும் ஏற்குமாகையால், அவற்றை இங்கு குறிப்பிடுகிறோம்.

கல்கத்தாவில் உள்ள யாசகர்களை இரண்டு விதமாகப் பிரிக்கலாம். மத ஸம்பந்தமான யாசகர்கள்; மதஸம்பந்தமில்லாத யாசகர்கள். ஹிந்துக்களுள் மத ஸம்பந்தமான யாசகர்களை இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். சிலருக்கு யாசகம் ஜாதித்தொழிலாக இருக்கும். வேறு சிலர் ஒரு குறிப்பிட்ட மதக்கூட்டத்தைச் சேர்ந்தால் யாசகம் செய்யக் கடமைப்பட்டவர்களாக ஆகிறார்கள்.

மதக்கூட்டத்தைச்சேர்ந்த யாசகர்கள்.

மதக்கூட்டத்தைச் சேர்ந்த யாசகர்களை சைவர்கள் என்றும் வைஷ்ணவர்களென்றும் இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவர்கள் அந்தந்த மதத்தைச்சேர்ந்த க்ரந்தங்களை வாசித்து அவைகளின்படி நடப்பவர்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் விசேஷமாக ஹிந்தி பாஷையையே பேசுகிறவர்கள். அவர்களில் பலர் தேர்ந்த பயில்வான்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு கொஞ்சமாகக் காசு கொடுத்தால், அவர்கள் அதைக் கொண்டு த்ருப்தியடைவதில்லை. அதிகம் கேட்பார்கள். தங்கள் மதக்கோட்பாட்டின்படி அவர்கள் தங்கள் கையில் உலோகம் படக்கூடாதென்று, கையின்மேல் துணியை மூடிக்கொண்டு, துணியில் காசை வாங்கிக் கொள்வார்கள். அவர்கள் சாராயம் குடிப்பதில்லை. கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களை அதிகம் உபயோகிக்கிறார்கள். ஜனங்கள் மூடபக்தியுடனிருப்பது அவர்களுக்கு ஸௌகர்யமாயிருக்கிறது. அவர்கள் ஜனங்களை ஏமாற்றிப் பணம் பறிக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் சிறுவர்களையும் தங்கள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவதுண்டு. சிறுவர்களும் கஞ்சா தின்று கெட்டுப்போவதுண்டு. வங்காளத்துச் சிறுவர்கள் சிஷ்யர்களாகத் தகுந்தவர்கள் அல்லவென்று, அவர்களை மாத்



ரம் சேர்த்துக்கொள்ளுவதில்லை. இதர மதாசார்யர்களிலிருந்து தான் சிஷ்யர்களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

மகம்மதிய யாசகர்கள்.

மகம்மதியர்களுக்குள்ளும் மத ஸம்பந்தமான யாசகர்கள் உண்டு. ஆனால் ஹிந்துக்களைவிட இவர்களின் தொகை குறைவு. இவர்கள் ப்ரும்மசாரிகளாக இருப்பது கிடையாது. இவர்கள் வெள்ளிக்கிழமையன்று மசூதிகளில் கூடி அங்கு தொழுகைக்கு வருபவர்களிடம் பிச்சை கேட்பார்கள். இவர்கள் வழியில் உட்கார்ந்துகொண்டு தங்களுக்கு முன்னால் துணியை விரித்து அதில் காசு போடும்படி மசூதிக்கு வருபவர்களைக் கேட்பார்கள். அல்லது நின்று வலது கையை நீட்டிக்கொண்டு பிச்சை கேட்பார்கள். சில ஸமயங்களில் இவர்கள் மகம்மதியர் வீடுகளுக்குப்போய் யாசகம் கேட்பதுமுண்டு.

வேறு சில ஜனங்கள் மகம்மதியர்களானால், ஹாஜ் யாத்ரை செய்யப் பணவுதவி செய்ய வேண்டுமென்றும், ஹிந்துக்களானால், புண்ய க்ஷேத்ரங்களுக்குப்போகப் பண உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்பதுண்டு.

கோ ஹத்தி.

ஹிந்துக்களில் சிலர் விநோதமாகப் பிச்சை கேட்பதுண்டு. தற்செயலாகப் பசு மாட்டைக் கொன்றுவிட்டால், கொன்றவர் தம் வாயில் வைக்கோலைக் கவ்விக்கொண்டு, பேசாமல், மாடுபோல் சத்தமிட்டு, யாசகம் கேட்பார்கள். இப்படி யாசகம் செய்த பணத்தைக் கொண்டுதான், பசுவைக்கொன்ற பாவத்தைப் போக்க ப்ராயச்சித்தம் செய்யவேண்டுமாம்.

பெரியம்மை காலங்களில் மாரியம்மன் கோவில் பூசாரிகளும் இதரர்களும், மாரியம்மனுடைய விக்ரகத்தை எடுத்துக்கொண்டு, வீடுதோறும் போய் பிச்சை கேட்பார்கள். போகும்போது அம்மனைப்பற்றிப் பாடல் பாடுவார்கள். பிச்சை போட்டால், போட்டவர்கள் வீட்டில் அம்மை வராதென்றும், போடாவிட்டால் அம்மை உபத்ரவம் அதிகமாக ஏற்படுமென்றும் சொல்லுவார்கள்.

நமஸ்காரவ்ரதம்.

சூத்ர ஜாதி ஹிந்துக்கள், தங்களுக்கு ஏதாவது பெரிய கஷ்டங்கள் சேர்ந்துவிட்டால், முக்யமாய் கடுமையான வ்யாதியால் கஷ்டப்பட்டால், தாரகேச்வரத்திலிருக்கும் சிவபெருமானுக்கு நமஸ்கார வ்ரதம் செய்வதாக வேண்டிக்கொள்வதுண்டு. வ்யாதியோ, வேறு ஆபத்தோ நீங்கி விட்டால், வீட்டிலிருந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்துகொண்டு கோவிலுக்குப்போவார்கள். நமஸ்காரம் செய்பவர் முதல் நமஸ்காரத்தில் கைகளை தமக்கு அப்புறம் எவ்வளவு தூரம் நீட்ட முடியுமோ அவ்வளவு வரையில் நீட்டுவார். அவருடன் கூடப்போகும் ஆள், கையின் நுனியண்டை பூமியில் ஒரு கோடு கிழிப்பான். நமஸ்காரம் செய்தவர் எழுந்து கோடு கிழித்த இடத்துக்கு வந்து நின்று மறுபடியும் அங்கிருந்து நமஸ்காரம் செய்து கைகளை நீட்டுவார். கையின் நுனியண்டை ஒரு கோடு கிழிக்கப்படும். இப்படி கோடு கிழித்த இடத்திலிருந்து நமஸ்காரம் செய்துகொண்டே கோவிலுக்குப் போவார். கோட்டில் ஒரு மண்சட்டி வைப்பது வழக்கம். இதில் ஜனங்கள் ஏதாவது காசு போடுவார்கள். கோவிலுக்குப் போன பிறகு, சட்டியில் சேர்ந்த காசைக் கொண்டு பூஜை செய்வது வழக்கம்.

யாசகம் செய்யும் ஜாதிகள்.

வங்காளத்திலுள்ள யாசகம் செய்யும் ஜாதிகளுக்கு வைராகிகள் அல்லது வைஷ்ணவர்கள் என்று பெயர். ஆனால் அவர்கள் எல்லாருமே வைஷ்ணவ மதத்தைச்சேர்ந்தவர்களல்ல. வங்காளத்திலுள்ள வைஷ்ணவ மதஸ்தர்கள் க்ருஷ்ண பகவானின் புனரவதாரம்

என்று சொல்லப்படும் சைதன்யரை தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். இந்த வைஷ்ணவர்கள் சைதன்யருடைய தோழர்களின் வம்சஸ்தர்கள். வைஷ்ணவர் அல்லது பைராகி என்கிற ஜாதியிலோ எந்த ஜாதியாரும் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். அவர்களுக்கு யாசகம்தான் வம்ச பரம்பரையான ஜாதித் தொழில். ஆனால் அவர்களில் சிலர் இப்போது வ்யாபாரங்களிலும், ஸர்க்கார் உத்யோகங்களிலும் அமர்ந்திருக்கிறார்கள்.

வங்காளத்தில் ஏதாவது விசேஷ காலங்களில், முக்யமாக ச்ராத்தங்களில் ஏழைகளுக்கு அன்னமிடுவது வழக்கம். அந்த ஸமயங்களில் ஏழைகளில் பெரும்பாகம் பைராகிகளே யாவர். சாப்பாட்டுக்குப் பிறகு அவர்களுக்கு தக்ஷிணையும் கொடுப்பதுண்டு. இப்படி வெட்டிச்சோறு தின்று தக்ஷிணையும் அடைவதனால், இவர்களுள் பணக்காரர்களுமிருக்கிறார்களாம்.

பெண் கல்வி ஏற்பாடு பரவுவதற்கு முன்னால், வங்காளத்தில் குடும்ப ஸ்த்ரீகளுக்குக் கல்வி கற்பித்துவந்தது பைராகி ஜாதி ஸ்த்ரீகளே.

ஒரு வகை பைராகிகள் இரவில் மாத்ரம் பிச்சை யெடுக்கப்போவது வழக்கம். அவர்கள் இரண்டிரண்டு பேர்களாகப் போவார்கள். அவர்களுள் ஒருவன் பாடிக்கொண்டு போவான். போடும் பிச்சையை அவன் கை நீட்டி வாங்குவதில்லை. கூடப்போகிறவன் தான் அதை வாங்கிக்கொள்ளுவான். இவர்களுக்கு ராத்பிக்ஷாரிகள் என்று பெயர்.

### கிறிஸ்தவ யாசகர்கள்.

வங்காளத்தில் சில கிறிஸ்தவ யாசகர்களும் இருக்கிறார்கள். அவர்களுள் கிண்டால் என்னும் வகுப்பு ஒன்றாகும். இவர்களிடம் குடி வழக்கம் அதிகம்.

கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டவர்களில் சிலர், தாங்கள் மிஷனரிகளுடைய ஆசை வார்த்தைகளில் நம்பிக்கைகொண்டு, உயர்ந்த உத்யோகமும், செல்வமும் கிடைக்குமென்று எண்ணி, ஏமாந்துபோய் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்துகொண்டதாகவும், இப்போது மதத்தை விட்டதற்காக வருந்தப்படுவதாகவும் சொல்லி பிச்சை கேட்பதுண்டு.

இவர்களெல்லாம் மத ஸம்பந்தமான யாசகர்கள். மதஸம்பந்தமில்லாத யாசகர்களைப் பற்றிச் சொல்வோம்.

### மதஸம்பந்தமில்லாத யாசகர்கள்.

எல்லா ஜாதிகளிலும் கூன், குருடு, அங்கஹீனம் முதலியவை உடைய பிச்சைக்காரர்கள் உண்டு. ஆண்களையன்றி வயது சென்ற ஸ்த்ரீகளும் பிச்சை யெடுத்து ஜீவிக்கிறார்கள். இந்தஸ்த்ரீகளின் பூர்வோத்தரங்கள் விவரிக்கத் தகுந்தவையல்ல. இவர்களைத் தவிர திடசரீரிகளும் பிச்சை எடுத்து ஜீவிக்கிறார்கள்.

நல்ல வம்சத்தில் பிறந்தவர்களும் யாசகம் செய்கிறார்கள். புருஷர்களும் ஸ்த்ரீகளும், தங்கள் பெண்கள் கல்யாணத்துக்காகவும், பையனைப் படிக்கவைக்கவும், பெற்றோருக்கு ச்ராத்தம் செய்வதற்கும், ப்ரஸவத்துக்கும், கோர்ட்டில் வ்யவகாரம் நடத்துவதற்கும் யாசகம் கேட்பதுண்டு. இறந்தவர்களை தகனம் செய்வதற்கு யாசகம் கேட்பதும் அரிதல்ல. மகம்மதியர்களுள் பிரேதங்களை அடக்கம் செய்வதற்கு யாசகம் கேட்பார்கள். பள்ளிக்கூடத்துச் சிறுவர்கள் சம்பளத்துக்கும் புஸ்தகங்களுக்கும் பரீக்ஷைக்குப் படிகட்டவும் யாசகம் கேட்கிறார்கள். ரெயில்வே ஸ்டேஷன்களில் டிக்கட்டை இழந்துவிட்டதாகவும், பணத்தை இழந்துவிட்டதாகவும் சொல்லி யாசகம் செய்பவர்களும் உண்டு.



# LIVES OF THE ALWARS.

By K. T. SUNDARARAJA ACHARIAR, B. A., L. T.,
*Teacher, Muthialpet High School, Madras.*

## ஆழ்வார்கள் சரித்ரம்.

### I. அவதரித்ததின் காரணம்.

ஆழ்வார் என்ற வார்த்தைக்கு ஈச்வர பக்தியில் மிகவும் ஆழ்ந்திருப்பவர் என்று அர்த்தம். வைஷ்ணவ மதத்தை இன்னதென்று உலகத்திலுள்ளவர்கள் எல்லாருக்கும் நன்றாக விளக்கிக் காட்டுவதற்காக பத்து ஆழ்வார்கள் லோகத்தில் அவதரித்தார்கள். இவர்கள்:— (1) பொய்கையாழ்வார், (2) பூதத்தாழ்வார், (3) பேயாழ்வார் (4) திருமழிசையாழ்வார் (5) நம்மாழ்வார் (6) குலசேகர ஆழ்வார் (7) பெரிய ஆழ்வார் (8) தொண்டரடிப் பொடியாழ்வார் (9) திருப்பாணாழ்வார் (10) திருமங்கையாழ்வார். இவ்வாழ்வார்களின் அவதாரத்தை ஒரு புதிதான தசாவதாரமென்றே, வைஷ்ணவர்கள் சொல்லுவார்கள். பெரியாழ்வாருக்கு ஆண்டாள் யென்ற ஒரு பெண் உண்டு. நம்மாழ்வாருக்கு மதுரகவி யென்ற ஒரு முக்யமான சிஷ்யருண்டு. இவ்விருவர்களையும் சேர்த்து ஆழ்வார்கள் பன்னிருவரென்றே சொல்வது வழக்கம். இவர்களுள் சூத்ர ஜாதியில் பிறந்தவர்களும் இருக்கிறார்கள்.

விஷ்ணு மனிதர்களை நல்வழிக்குக்கொண்டுவர பலதடவைகளில் முயற்சியைச் செய்திருக்கிறார். கடைசியாய் ரொம்பகாலம் ஆலோசித்து தன்னுடைய ஆயுதங்களை யெல்லாம் பார்த்து "நீங்கள் பூலோகத்தில் என்னுடைய உத்தரவு ப்ரகாரம் ஜாதிபேதமில்லாமல் பலவித ஜாதிகளிலும், அவதரித்து வேதம் முதலியவற்றின் கருத்தை எல்லோரும் நன்றாய் அறியும்படி செய்துவாருங்கள்" என்று உத்தரவு கொடுத்தார். அந்த உத்தரவு ப்ரகாரம் ஆயுதங்கள் ஆழ்வார்களாக மனுஷ்ய அவதாரஞ் செய்தன. ஆழ்வார்களுக்கு, பிறந்தவுடனே ஞானம் ஈச்வரன் கருணையால் உண்டாயிற்று. இவர்கள் அப்படியே அவதரித்து தமிழ் பாஷையில் 4000 பாசுரங்களைப் பாடி லோகத்தை முன்னுக்கு கொண்டு வந்தார்கள். வரவர ஸம்ஸ்க்ருதத்தில் ஜனங்களுக்கு பாண்டித்யம் குறைந்து கொண்டே வந்தது. ஸ்திரீகளுக்கும் சூத்ரர்களுக்கும் அதைப் படிக்க முடியாமலிருந்தது. அதற்காக இந்த ஆழ்வார்கள் எல்லாரும் நன்றாய் அறியக்கூடிய தமிழ் பாஷையில் பாசுரங்களை இயற்றினார்கள்.

இவர்களில் அநேகர் தாம்ப்ரபரணி நதிக்கரையிலும் சிலர் காவேரி நதிக்கரையிலும் அவதரித்தார்கள்.

இவர்கள் வைபவம் அவரவர்கள் அவதரித்த ப்ரகாரம் இங்கே கூறப்படும்.

### II. பொய்கையாழ்வார்.

வைஷ்ணவர்களுக்கு முக்யமான இடங்கள் மூன்று. ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம். இவைகளை கோயில், திருமலை, பெருமாள் கோயில் என்று சொல்வது வைஷ்ணவ ஸம்ப்ரதாயம். பொய்கை ஆழ்வார் காஞ்சீபுரத்தில் அவதரித்தார். இந்த ஊருக்குள் ஒரு பக்கத்திற்கு திருவெஃகா வென்றுபெயர். அதின் வடபக்கத்தில் ஒரு பொன்தாமரையுடன் கூடின பொய்கை (குளம்) உண்டு. அந்த பொய்கையில் இந்த ஆழ்வார் த்வாபர யுகத்தில் 8,62,901-வதான ஸித்தார்த்தி வருஷம் ஐப்பசி௴ சுக்லபக்ஷம் அஷ்டமிதிதி செல்வாய்க்கிழமை திருவோண நக்ஷத்ரத்தில் அயோநிஜராய் (அதாவது ஸாதாரண மனுஷ்யர்களைப்போல் ஸ்திரீக்கும் புருஷனுக்கும் பிறக்காமல்) அவதரித்தார். இவர் விஷ்ணு

வின் திருச்சங்கின் அம்சம். இவர் தாமரைப் புஷ்பத்திலிருந்து உண்டானார். இவர் பொய்கையிலிருந்து உண்டானபடியினால் இவருக்கு பொய்கை ஆழ்வார் என்ற பெயர் உண்டாயிற்று. இவருக்குப் பொய்கைமுனி என்ற பெயருமுண்டு.

### மங்களாசாஸனம்.

இந்த ஆழ்வார் ஏழு ஊர்களிலுள்ள பெருமாள்கள் விஷயமாய் பாட்டுக்களைப்பாடியிருக்கிறார். அவைகளாவன:—

(1) திருவரங்கம் (2) திருவிண்ணகர் (3) திருக்கோவலூர் (4) திருவெஃகா (5) திருவேங்கடம் (6) திருப்பாற்கடல் (7) பரமபதம்.

### அருளிச்செயல்.

இந்த ஆழ்வார் செய்த பாசுரங்கள் நூறு. அவைகளுக்கு முதல் திருவந்தாதி யென்று பெயர்.

### * தனியன்

இந்த ஆழ்வாரைப்பற்றிய தனியன் முதலியாண்டானால் செய்யப்பட்டது.

"கைதைசேர் பூம்பொழில் சூழ் கச்சிநகர் வந்துதித்த
பொய்கைப்பிரான் கவிஞர் போரேறு வையத்
தடியவர்கள் வாழவருந் தமிழ்நூற் றந்தாதி
படிவிளங்கச் செய்தான் பரிந்து."

## III. பூதத்தாழ்வார்.

இந்த ஆழ்வார் செங்கற்பட்டு ஜில்லா, செங்கற்பட்டுக்கு பதினைந்து மைல் கிழக்கேயுள்ள மஹாபலிபுரத்தில் அவதரித்தார். இதை திருக்கடன் மல்லை யென்று சொல்வது வழக்கம். இந்த இடத்தில் அநேக வர்ஷங்களாக பல வித்வான்கள் வஸித்து வந்தார்கள். இந்த ஊர் ஸமுத்ரக் கரையோரத்திலிருக்கிறது. ஊருக்குக் கிழக்கே ஸமுத்ரக் கரை ஓரத்தில் புஷ்பங்கள் அடர்ந்த புதர் ஒன்று உண்டு. அதில் நீலோத்பல மலரில் (நீலமான புஷ்பங்களுடன் கூடின் ஒருவகைப் பூச்செடி) இந்த் ஆழ்வார் அவதரித்தார். இவர் த்வாபர யுகத்தில் 8,62,901-வதான ஸித்தார்த்தி வருஷம் ஐப்பசிமீ சுக்லபக்ஷம் நவமிதிதி புதன்கிழமை அவிட்ட நக்ஷத்திரத்தில் அவதரித்தார். முன் கூறப்பட்ட பொய்கையாழ்வார் அவதரித்ததற்கு மறுநாளே இவர் பூமியில் தோன்றினார். இவரும் அயோநிஜர். இவர் கௌமோதகீ யென்ற ஆயுதத்தின் அம்சம். இவர் தன்னுடைய பஞ்ச பூதங்களை (ப்ருதிவீ, அப்பு, தேசஸ், வாயு, ஆகாசம் இந்த ஐந்துக்கும் பஞ்ச பூதங்கள் யென்று பெயர்.) யும் ஸ்வாமி விஷயத்தில் மிகவும் ஈடுபடச் செய்ததினால் இவருக்கு பூதத்தாழ்வார் என்று பெயர். இவரை பூதமுனி என்றும் சொல்வதுண்டு.

### மங்களாசாஸனம்.

இந்த ஆழ்வார் பதிமூன்று ஊர் பெருமாள்கள் விஷயமாய் பாட்டுக்கள் பாடியிருக்கிறார். அவைகளாவன:—(1) திருவரங்கம். (2) தஞ்சை. (3) திருக்குடந்தை (கும்பகோணத்திற்கு வைஷ்ணவர்கள் சொல்லும் பெயர்) (4) திருமாலிருஞ்சோலை. (5) திருக்கோஷ்டியூர். (6) திருத்தண்கால் (7) திருக்கோவலூர் (8) திருக்கச்சி. (9) திருப்பாடகம். (10) திருநீர்மலை. (11) திருக்கடன்மல்லை. (12) திருவேங்கடம். (13) திருப்பாற்கடல்.

### அருளிச்செயல்.

இந்த ஆழ்வார் பாடின பாசுரங்கள் நூறு. அவைகளுக்கு இரண்டாம் திருவந்தாதி யென்று பெயர்.

### தனியன்.

இவர் தனியன் திருக்குருகைப்பிரான் பிள்ளானால் செய்யப்பட்டது.

"என்பிறவிதீர விறைஞ்சினே னின்னமுதா
அன்பேத கனியளித்தானை—நன்புகழ்சேர்
சீதத்தார் முத்துக்கள் சேரும் கடல்மல்லைப்
பூதத்தார் பொன்னங் கழல்."

* ஒருவருடைய குண விசேஷங்களைச் சொல்லி துதிக்கும் தனிப்பாடல்கள் தனியன் எனப்படும்.



## IV. பேயாழ்வார்.

இந்த ஆழ்வார் சென்னை பட்டணத்திற்கு 6 மைல் தெற்கேயுள்ள மைலாப்பூரில் அவதரித்தார். அந்த ஊருக்கு அந்தக் காலத்தில் திருமயிலை யென்று பெயர். மைலாப்பூரில் ஸ்வாமியின்பெயர் "ஆதிகேசவப்பெருமாள்". ஸ்வாமிக்கு வேண்டிய உபயோகத்திற்காக அங்கே ஒரு கிணறு இருக்கிறது. அந்தக் கிணற்றில் ஒரு ஸமயத்தில் ஒரு செவ்வல்லிப் பூப்பூத்தது. அந்தச் சிகப்பு அல்லிப் பூவிலிருந்து இவர் உண்டானார். இவர் நந்தகமென்ற ஆயுதத்தின் அம்சம். இவர் த்வாபர யுகத்தில் 8,62,901-வதான ஸித்தார்த்தி வருஷம் ஐப்பசிமீ சுக்லபக்ஷம் தசமிதிதி வியாழக்கிழமை சதய நக்ஷத்ரத்தில் அவதரித்தார். இவரும் அயோநிஜர். இவருக்கு எப்பொழுதும் ஸ்வாமியைக் குறித்து பாடுவதே வேலை. ஆகாரம், தூக்கம் முதலியவைகளில் ஆசையே கிடையாது. இவருக்கு ஒரு ஸமயத்திலிருந்த புத்தி அடுத்த ஸமயத்திலிராது. ஒரு ஸமயம் பாடுவர். அடுத்த ஸமயம் ஆடுவர். இப்படி செய்து வந்ததினால் இவரை அநேக ஜனங்கள் பைத்யம் பிடித்தவர் என்றே எண்ணினார்கள். பேயாழ்வார் என்ற பெயர் அதனாலேயே இவருக்கு உண்டாயிற்று.

### மங்களாசாஸனம்.

இவர் பதிநான்கு ஊர்களைப்பற்றி பாடியிருக்கிறார். அவைகளாவன:—(1) திருவரங்கம். (2) திருக்குடந்தை. (3) திருவிண்ணகர். (4) திருமாலிருஞ்சோலைமலை. (5) திருக்கோஷ்டியூர். (6) அஷ்டபுஜகரம். (7) திருவேளுக்கை (8) திருப்பாடகம். (9) திருவெஃகா. (10) திருவல்லிக்கேணி. (11) திருக்கடிகை. (12) திருவேங்கடம். (13) திருப்பாற்கடல். (14) பரமபதம்.

### அருளிச் செயல்.

இவர் செய்த பாசுரங்கள் நூறு. அவைகளுக்கு மூன்றாம் திருவந்தாதி என்று பெயர்.

### தனியன்.

இவர் தனியன் குருகை காவலப்பனால் செய்யப்பட்டது.

"சீராரும் மாடத் திருக்கோவலூ ரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு—ஓராத்
திருக் கண்டேனென் றுரைத்த சீரான் கழலே
உரைக் கண்டாய் நெஞ்சே யுகந்து."

### வேறு பெயர்.

இவருக்கு "மஹதாஹ்வயர்" என்ற ஒரு பெயருண்டு. ஏனென்றால் இவருக்கு ஸ்வாமியிடத்தில் பக்தி "மஹத்தாய்" (மிகவும் அதிகமாய்) இருந்தது. இரண்டாவது காரணம் என்னவென்றால் இவர் ஒரு பெரிய (மஹத்தான) கார்யத்தை செய்துவைத்தார். இவருக்குப் பின் திருமழிசை யாழ்வாரென்று ஒருவர் அவதரித்தார். அவர் சைவம், சார்வாகம், ஜைனம் முதலிய மதங்களைக் கைப்பற்றி வந்தார். அவர் முதலில் ஒரு மதத்தை கைப்பற்றுவர். அதிலுண்டான முக்யமான மனிதர்களைக்கண்டு அவர்களிடமிருந்து ஸகல ஸங்கதிகளையும் அறிந்து அந்த மதத்தை பரவச் செய்வர். பின்னிட்டு அதிலுள்ள கெடுதல்கள் தோன்றவே அதை விட்டு வேறே ஒரு மதத்தைக் கைப்பற்றுவர். இப்படி பல மதங்களைக் கைப்பற்றி இது நல்லதென்று தெரியாமல் தவித்துவந்தார். அவரை இந்த பேயாழ்வார் சீர்திருத்தி வைஷ்ணவ பக்தராக்கினார். அதைக் குறித்து இவருக்கு அந்தப்பெயர் உண்டாயிற்று.

(இன்னும் வரும்)

கே. டி. ஸுந்தரராஜாசாரியர்.

## BOOKS OF THE MONTH.

### நூதன புஸ்தகங்கள்.

#### சூளாமணி. *

சூளாமணி, சிறு காப்பியம் என்று வழங்கும் ஐந்து தமிழ் நூல்களுள் ஒன்று. அது சில காலத்துக்கு முன்பு தாமோதரம் பிள்ளையால் வெளியிடப்பட்டது. அந்த நூல் செய்யுள் நடையிலுள்ளதால், செய்யுளில் வாசிக்க முடியாதவர்களுக்கும் பயன்படும்படி மிஸ்டர் தாமோதரம் பிள்ளையே வசன சூளாமணி ஒன்று எழுதி வெளியிட்டார். அது கடின சொற்கள் அதிகம் உடையதாய் அதிகக் கல்வியறிவு உள்ளவர்களுக்கே பயன்படக் கூடியதாக இருக்கிறது. ஸாமான்ய தமிழ் அறிவுள்ளவர்களும் அந்நூலின் கதையை அறிந்து கொள்ளும்படி, கூடலூர் டௌன் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ந. பலராமஐயர் இப்போது வசன நடையில் அந்நூல் கதையை சென்னை கணேஷ் கம்பெனி மூலமாக வெளியிட்டிருக்கிறார். இது வாசிக்க ஸுலபமாகவும் கடினமான சொற்கள் குறைந்தும் இருக்கிறது. உள்ள ஸ்வல்ப கடின பதங்களுக்கும் பொருள் அறியக் கஷ்டப்படாதபடி, ஆசிரியர் புஸ்தகத்தின் கடைசியில் ஒரு அரும்பத அகராதி சேர்த்திருக்கிறார். இந்த நூலின் நடை நேர்த்தியாயும் ஸுலபத்தில் பொருள் விளங்கக் கூடியதாகவும் இருக்கிறது. இதன் விலை ரூ. 1.

#### மெல்லியலார் சுதந்திரம். *

இது காஞ்சிபுரம் வாஸுதேவய்யர் இயற்றியது. இது தற்காலம் ஆசார சீர்திருத்தக்காரர்கள் பெண் கல்வி விஷயமாகவும், ஸ்த்ரீகளின் ஸ்வதந்த்ர விஷயமாகவும் வாதித்து வரும் கொள்கைகளின் குண தோஷங்களை நன்கு விளக்கிக் காட்டுகிறது. பெண்கள் நம் முன்னோருடைய தர்மங்களை அநுஸரித்து வீட்டில் இருந்துகொண்டு குடும்பத்தை சரிவரப் பாதுகாக்க வேண்டுமென்றும், இதற்கும், நமது மதத்துக்கும் ஏற்றவாறு தாய்ப் பாஷையில் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும், இந்த நூல் வற்புறுத்துகிறது. ஆசார சீர்திருத்தக்காரர்கள் எடுத்து ஆளும் வாதங்களில் சிலவற்றின் ஆதாரங்களை ஆராய்ந்து, அந்த வாதங்கள் போலி வாதங்கள் என்றும், அவைகளை நம்பி நமது பூர்வீக ஆசாரங்களைக் கைவிடுவது கேட்டுக்குக் காரணமாகுமென்றும் ஆசிரியர் நன்கு விளக்கியிருக்கிறார். இந்த நூலை யாவரும் வாசிக்க வேண்டியது அவச்யம். இதன் விலை. அணா 6.

#### மிருச்சகடிகம்.

இந்த நாடகம் இப்பெயர்கொண்ட வடமொழி நாடக நூலின் தமிழ் அமைப்பு. இதை இயற்றியவர் எஸ். எ. பாலக்ருஷ்ணய்யர். இந்த நாடகம் புது முறையில் அமைந்துள்ளது. அதாவது வசன நடையும் செய்யுள் நடையும் கலந்து எழுதப்பட்டிருக்கிறது. செய்யுள் பாகம் கடினமாக இராமல் ஸுலபமாகப் பொருள் விளங்கக்கூடியதாக இருக்கிறது. வசன நடையும் ஸுலபமாகவும் செந்தமிழாகவும் அமைந்துள்ளது. இது யாவரும் வாசிக்கக் கூடியது. இதன் விலை ரூ. 1-8-0. வேண்டுவோர் சென்னை லா புக் டிபோ, 1-தம்பு செட்டித்தெரு மதராஸ். என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

#### ஹரிச்சந்திரன். *

ராவ் பகதூர்-பி. ஸம்பந்தமுதலியார் இயற்றிய ஹரிச்சந்திரன் என்னும் நாடகத்தின் பிரதி ஒன்று வரப்பெற்றோம். ஆசிரியர் வழக்கம்போல் இனிமையான நடையில் இந்த நாடகத்தை இயற்றியிருக்கிறார். இது வாசிக்க இனிமையாயிருக்கிறது. இதன் விலை ரூ. 1.

* இந்தக் குறிப்பிட்ட புஸ்தகங்கள் வேண்டுவோர் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி (3, 4, கொண்டிசெட்டித் தெரு, சென்னை)-க்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.



## GENERAL NOTES.

### பொதுக் குறிப்புகள்.

#### அமுக்கிராக் கிழங்கு.

அமுக்கிராக் கிழங்குச் செடி இரண்டு மூன்று முழம் உயரம் கப்பும் கிளைகளுமாய் வளரும். இதன் வேர் நீளமாயும் வழ வழப்பாயும் இருக்கும். இந்தக் கிழங்கின் மேற்பாகம் வெளுத்த மஞ்சள் நிறமாகவும், உள்புறம் நேர்த்தியான வெண்மையாகவும் இருக்கும்.

இதன் வைத்ய குணங்களைப்பற்றி ஸமீபத்தில் வெளிவந்த "வைத்திய கலாநிதி"ப் பத்திரிகையில் ஒரு வ்யாஸம் காணப்படுகிறது. அதிலிருந்து சில விஷயங்களை இங்கு குறிப்பிடுகிறோம்.

இந்தக் கிழங்கு வாத தோஷம், ச்லேஷ்மம் இவற்றின் கோளாறுகளைப் போக்கக் கூடியதென்றும், பல்யம், சமனம், சுக்ரலம் என்கிற குணங்களில் சிறந்ததென்றும் தெரியவருகிறது. அஸ்தியிலும், மற்ற தாதுக்களிலும் பலமில்லாமல் இளைத்திருக்கும்குழந்தைகளுக்கும், வயது முதிர்ந்து போனதால் பலஹீனப்பட்டவர்களுக்கும். இது ஏற்ற பலவ்ருத்தி மருந்தாகும். ஆணுகட்டும் பெண்ணுகட்டும் மலடாயிருந்தால் இது வெகு ஸாதாரணமாக அவர்களுக்குக் கொடுக்கப்படுவது வழக்கம்.

அமுக்கிராக் கிழங்குச் சூர்ணத்தையும் மிளகுப் பொடியையும் ஸம எடையாகக் கலந்து தேனிலாவது வெண்ணெயிலாவது கூட்டியோ, அல்லது இரண்டு சூர்ணத்தையும் கஷாயமிட்டு, அந்தக்கஷாயத்தில் தேன் கலந்தோ, ச்வாஸாசயக் கழலையில் உபயோகிக்கலாம்.

தூர்ப்பலமான குழந்தைகளுக்கு அமுக்கிராக் கிழங்கின் சூர்ணத்தை காலையில் தினந்தோறும், பால், வெண்ணெய், இளஞ்சூடான ஜலம் இவற்றில் ஏதேனும் ஒன்றோடு கொடுத்து வருவதால் நல்ல பலன் உண்டாகுமாம். இந்தக் கிழங்கை நன்கு எரித்து, அதன் கரியை எடுத்து தேனிலாவது வெண்ணெயிலாவது ச்வாஸ ரோகிக்கு உபயோகிக்கலாம்.

மலட்டு ஸ்த்ரீ மாதவிடாயான நான்காவது நாள் இதன் கஷாயத்தை வெண்ணெயோடு உட்கொண்டால் மலட்டுத்தனம் நிவாரணமாகும்.

நித்திரை உண்டாகாமல் கஷ்டப்படுகிறவர்கள் அமுக்கிராக் கிழங்கின் சூர்ணத்தோடு சர்க்கரை கலந்து வெண்ணெயோடு உட்கொண்டால் அது நல்ல நித்ரை உண்டுபண்ணும்.

இதன் இலைகளில் ஆமணக்கெண்ணெயைத் தடவி, சிறிது வாட்டி மேக ரணங்களுக்கு மேல் தடவலாம்.

#### சப்தம் எவ்வளவு உயரம் கேட்கும்.

ஒரு மேல்நாட்டு ஆகாய விமானி பூமியிலுள்ளோர் செய்யும் சப்தம் எவ்வளவு உயரம் கேட்கும் என்பதைப்பற்றித் தெரிவித்திருக்கிறார். பூமியிலுள்ள ஒருவன் கூச்சல் போட்டது 1600 அடி உயரத்தில் நன்றாய்க்கேட்டது. ரயில் வண்டியின் சப்தம் 2500 அடி உயரத்தில் கேட்டது. சதுப்பு நிலத்தில் தவளைகள் கத்தும் சப்தம் 3000 அடி உயரத்தில் கேட்டது. 3255 அடி உயரத்தில் மனிதனுடைய சப்தமும், வண்டி ஓடும் சப்தமும் தெரிந்தன.

4500 அடி உயரத்தில் ஆர்க்கெஸ்ட்ரா என்னும் வாத்யத்தினுடைய ஸங்கீதமும், 5000 அடி உயரத்தில் காக்கை போடும் சப்தமும், கோயில்மணி சப்தமும், சில சமயங்களில் மனிதர்கள் உரத்து சத்தமிடுவதும் கேட்டன. 5900 அடி உயரத்தில் துப்பாக்கி வெடியும்

நாய் குலைக்கும் சப்தமும் கேட்டன. ரெயில் வண்டி போகும் சப்தம் 8200 அடி உயரத்திலும், எஞ்ஜின் ஊதும் சப்தம் 10,000 அடி உயரத்திலும் கேட்டனவாம்.

பயிரை வ்ருத்திசெய்தல்.

எந்தப் பயிரையாவது நன்ருய் வளரச் செய்யவேண்டுமானுல் (1) விதைக்காகவோ, நாருக்காகவோ, சர்க்கரைக்காகவோ, அல்லது எதற்காகப் பயிர்செய்கிருேமோ அந்தப் பொருள் அதிகமாகக் கிடைக்கும்படி அந்தந்தப் பயிர்களின் குணத்தை யதிகப்படுத்த வழி தேடவேண்டும். (2) பயிர்விளையும் நிலத்தை சீர்திருத்துதல் அதாவது, பயிருக்கு எந்தமாதிரி ஆகாரம்வேண்டுமோ அந்தமாதிரி ஆகாரத்தை ஜாஸ்தியாகக் கொடுத்தலும், நிலத்தின் குணம், ஈரம் முதலியவற்றை ஏற்றவாறு வைத்துக் கொள்ளுதலும்வேண்டும். (3) சரியான விளைச்சலுக்குக் கெடுதி யுண்டு பண்ணுகிற, வ்யாதிகள், பூச்சிகள் முதலியவற்றை, கூடியமட்டில் உண்டாகாமல் தடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் பயிரில் அதிக மாஸூல் கிடைக்கும்.

அத்திப்பழத்தின் மருந்து குணம்.

அத்திப்பழத்தைக் காயவைத்த பிறகு சாப்பிட்டால், உடம்புக்கு புஷ்டிதரும், ஸூக பேதியாகும். மலச்சிக்கலுக்கு நல்ல மருந்து. அத்திப்பழம் உடம்புக்குக் குளிர்ச்சிதந்து, ரத்தத்தை சுத்தம்செய்து வ்ருத்தியாக்கும்.

இலவம்பஞ்சும் வெடிமருந்தும்.

தற்போது பருத்தியானது வெடிமருந்து செய்வதில் ஏராளமாக உபயோகப்படுகிறது. இலவம்பஞ்சையும் பருத்திப் பஞ்சைப்போலவே தயார்செய்து வெடிமருந்து செய்வதில் உபயோகிக்கலாமென்று ப்ரெஞ்ச் ரஸாயன சாஸ்த்ரி ஒருவர் கண்டு பிடித்திருக்கிருர். வெடிமருந்து ஸம்பந்தப்பட்டமட்டில் இலவம் பஞ்சு பருத்திப் பஞ்சுக்கு ஸமானமென்று அவர் சொல்லுகிருர்.

சளுக்குகளில் பனிக்கட்டி.

தேகத்தில் எங்கேயாவது சளுக்கு உண்டாயிருந்தால், அவ்விடத்தில் வெந்நீர் ஒற்றடம் கொடுத்து அடுத்தாற்போல் பனிக்கட்டியை 15-நிமிஷங்களுக்குக் குறையாமல் நாளொன்றுக்கு இரண்டு மூன்று வேளைவிதம் வைத்து வருவதனுல், சளுக்கு எளிதில் நிவ்ருத்தியாகுமென்று ஓர் ஆங்கில வைத்யர் கூறுகிருர்.—வைத்திய கலாநிதி.

இந்தியாவின் வறுமை.

இந்தியாவில் ஏழை பணக்காரர்களின் ஸங்க்யையைப்பற்றியும் அவர்களது செல்வ நிலைமையைப் பற்றியும் இந்தியா கவர்ன்மெண்டார் யாதொரு கணக்கு விவரங்கள் வெளியிடுவதில்லையென்ருலும், இதுவரை வெளியிடப்பட்டிருக்கும் சில கணக்குகளை கவனிக்கும்போது தக்கவரும்படி கிடைத்து வரும் ஜனங்களின் தொகை ரொம்ப குறைவென்று தெரிகிறது. ஒரு மாகாணத்தில் நிலத்தைத் தவிர இதர வகைகளிலிருந்து வர்ஷம் 1000 ரூபாய் வரும்படி உள்ளவர்களின் தொகை 30,000 பேர்கள்தான். இன்னொரு மாகாணத்தில் 20,000 பேர்தான் வர்ஷம் 1000 ரூபாய் வருமானம் உள்ளவர்கள். ரெவின்யூ கணக்குகளைப் பார்த்தால், ஒவ்வொருவருக்கும் ரொம்ப ஸ்வல்பநிலந்தான் இருக்கிறதென்றுதெரியவருகிறது. ஐக்யமாகாணங்களின் ஜனத்தொகை 4 கோடியே 80 லக்ஷம் ஜனங்கள். இவர்களுள் தங்கள் ஸொந்த நிலத்திலிருந்து வர்ஷந்தோறும் 1000ரூபாய்க்குமேல் வரும்படி யடையும் நிலஸ்வான்களின் தொகை லக்ஷத்து 26 ஆயிரந்தான். இதனுல் தெரிகிறதென்னவென்ருல், ஸ்வல்ப ஜனங்கள்தான் அதிக பணக்காரர்களாக இருக்கிருர்கள். மற்றவர்களுக்கு இருக்கும் செல்வமோ அவர்களுடைய வாழ்க்கைக்கு வேண்டியவளவுக்குமேல் அதிகமாக இல்லை.

ஜனாபிமானி.

1-MAR 1919 MADRAS

தபால் சார்ஜ் உள்பட

| வர்ஷ சந்தா | ரூபா |
|---|---|
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி௵ கார்த்திகைமீ, NOV.—DEC., 1918. { ஸஞ்சிகை 11 No. 11.

## TESTING OF SEEDS.
## விதைகளைப் பரிசோதித்தல்.

விதைகளை நல்லதாகப் பார்த்து வாங்கி விதைப்பது ரொம்ப முக்யமானது. நல்ல விதைகளை உபயோகிப்பதால், மாஸூலும் சரிவரக் கிடைக்கிறது. வ்யவஸாயிகள் தங்களுக்கு வேண்டிய விதைகளை தங்கள் வயலிலிருந்து தெரிந்தெடுத்து சேகரித்து வைத்துக்கொள்வதுதான் ரொம்ப நல்லது. ஆயினும் இது சரிப்படாவிட்டால், விதை வைத்திருப்பவர்களிடம் வாங்கித்தான் விதைக்க நேரிடும். ஸர்க்கார் வ்யவஸாயப் பண்ணைகளில் விற்கப்படும் விதைகள் த்ருப்திகரமாக இருக்குமென்று நம்பலாம். ஆனுல் இதர வ்யவஸாயிகளிடமிருந்தோ, விதை வ்யாபாரிகளிடமிருந்தோ நெல் முதலியவற்றின் விதைகளை வாங்குவதானுல் விதை, நல்லதாக இருக்குமென்பது நிச்சயமில்லை யாகையால், விதைகளைச் சோதித்து வாங்குவதே நல்லது.

விதை வாங்குவதில் நாம் கவனிக்கவேண்டிய ஒரு முக்யமான விஷயமென்னவென்ருல் அநேகமாய் மலிவான விதைகள் உண்மையில் மலிவானவையல்ல வென்பதே. மேலும் நல்ல விதை விதைத்தாலுஞ்சரி, தாழ்ந்தவிதை விதைத்தாலுஞ்சரி, நிலத்தைப் பண்படுத்துவதில் செலவு ஒன்றுதான். நல்ல விதை சற்று விலை அதிகமாக விற்ருலும், அதை வாங்கி விதைப்பதில் அதிக மாஸூல் கிடைப்பதால், விதைக்காக சற்று அதிக செலவானுலும் பாதகமில்லை. மாஸூலில் சரிக்கட்டி விடுகிறது.

சிலர் தாழ்ந்த நிலத்துக்கு உயர்ந்த விதை வேண்டியதில்லையென்று எண்ணுவதுண்டு. இதுவும் பிசகே. எந்த நிலத்துக்கும் விதை ரொம்ப உயர்ந்ததாக இருக்கவேண்டும்.

நல்ல விதையின் லக்ஷணங்கள்.

நல்ல விதையென்ருல், ஒரு குறிப்பிட்ட அளவில், எந்த விதையை நாம் வாங்க உத்தேசிக்கிருேமோ, அந்த விதையே அதிகமாக இருக்கவேண்டும். இதரப் பயிர்களின் விதைகளும், களைப்பூண்டுகளின் விதைகளும், கல், தூசி முதலிய வஸ்துக்களும் ரொம்ப குறைவாயிருக்கவேண்டும். இப்படி இருப்பதற்குத் தான் விதை சுத்தமாக அதாவது கலப்பட

மில்லாமல் இருப்பது என்று சொல்வது வழக்கம்.

விதை கலப்படமில்லாமல் சுத்தமாயிருந்தால் மாத்ரம் போதாது. போட்டவிதையில் பெரும்பாகம் முளைக்கக்கூடியதாக இருக்கவேண்டும். அப்படி முளைப்பதிலும் ஒரே சீராக முளைப்பது எத்தனை என்பதையும் கவனிக்கவேண்டும். ஒரு குறிப்பிட்ட அளவு விதையில் எல்லாமே சரியாகவும் ஒரே சீராகவும் முளைக்குமானால் அது 100-க்கு 100-முளைக்கும் குணமுள்ளது என்று சொல்லலாம். 100-க்கு எவ்வளவு விதை முளைப்பதென்பதைப்பார்த்து விதையின் தாரதம்யத்தை நிர்ணயிக்கலாம்.

இந்த இரண்டு குணங்களோடு, அதாவது கலப்பில்லாமை, அதிக விதைகள் முளைத்தல் ஆகிய இரண்டு குணங்களோடு, விதை பருமனாயிருத்தல், நல்ல நிறம், நிறை, ப்ரகாசம், வாஸனை ஆகிய இவைகளையும் கவனிப்பது நல்லது. ஆனால் இவைகள் முன்சொன்ன இரண்டு பரீக்ஷைகளைப்போல் அவ்வளவு அவச்யமானவையல்ல.

### ஏற்ற விதைகளைத் தெரிந்தெடுப்பது.

இரண்டு மூன்றுவகை விதை நெல்லில் உயர்ந்தது எது என்று கண்டுபிடித்த பிறகு வாங்குவதுதான் நல்லது. அதைக் கண்டுபிடிக்க, ஒவ்வொருவகை விதையிலும் நூற்றுக்கு எவ்வளவு நல்லவிதை இருக்கிறதென்று கண்டுகொள்ளவேண்டும். பிறகு அதற்குக் கொடுக்கும் விலை எவ்வளவு என்று பார்க்கவேண்டும். இப்படியே இரண்டு மூன்றுவகை விதை நெல்லின்விலையை ஒப்பிட்டுப்பார்த்தால் எந்த விதை நெல் ச்லாக்யமானதென்று தெரிய வரும். இதற்கு உதாரணமாக இரண்டு கடைகளில் விதை நெல் வாங்குவதாக வைத்துக்கொள்ளுவோம். முதல் கடையில் நெல்லில் 100-க்கு 96-பங்கு சுத்தமாய், அதாவது இதர வஸ்துக்கள் கலப்படமில்லாமல் இருக்கிறதென்றும், சுத்தம் செய்தபிறகு 100-க்கு 98-முளைக்கக்கூடுமென்றும் விலை கலம் 1-க்கு ரூ. 4-6. என்றும் வைத்துக்கொள்ளுவோம்.

இரண்டாவது கடையில் உள்ள விதைநெல் 100-க்கு 90 பங்கு சுத்தமாயும், 88-பங்கு முளைக்கக்கூடியதாகவும் விலை ரூ. 4—2—0. ஆகவும் இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுவோம். இந்த இரண்டுவிதையில் எது மலிவு? இதைக் கண்டுபிடிக்க ஒரு சிறு கணக்குப் போடவேண்டும்.

முதல் விதையில்:—ஒரு கலம் நெல் 100-க்கு 96-பங்கு சுத்தமாதலால், அதிலுள்ள சுத்தமான நெல் $\frac{96}{100} \times 12$ மர=$11\frac{1}{2}$-மரக்கால். அதிலுள்ள சுத்தமான நெல்லில் 100-க்கு 98 பாகமே முளைப்பதால் $11\frac{1}{2}$-மரக்காலில் முளைக்கக்கூடிய நெல் 11·27. மரக்கால் ஆகிறது. அதாவது $11\frac{1}{4}$ மரக்கால் சுத்தமான முளைக்கக்கூடிய நெல்லுக்கு 4 ரூ. 6 அணா கொடுக்கிறோம். இது ஒரு கலம் சுத்தமானதும் முளைக்கக்கூடியதுமான நெல்லுக்கு ரூ. 4—10—8 வீதமாகிறது.

இரண்டாவது விதையில் ஒருகலம் நெல் 100-க்கு 90-பங்கு சுத்தமாதலால், அதிலுள்ள சுத்தமான நெல் $\frac{90}{10} \times 12=10·8$ மரக்கால் அதாவது $10\frac{3}{4}$-மரக்காலுக்குமேல் சற்று அதிகம்.

அதில் முளைக்கக்கூடிய விதைகள் சுத்தமான விதையில் 100-க்கு 88-பங்காதலால் 10·8 மரக்காலில் முளைக்கக்கூடிய விதை $\frac{88}{100} \times 10·8=9·5$ அதாவது 9-மரக்கால் 4 ஆழாக்குக்கு சற்று மேலாகிறது. இந்த $9\frac{1}{2}$ மரக்கால் சுத்தமானதும் முளைக்கக்கூடியதுமான நெல்லுக்கு ரூ. 4-2. கொடுக்கிறோம். இது ஒருகலம் நல்ல நெல்லுக்கு 5 ரூ 3 4 கொடுப்பதாகிறது. ஆகவே முதல் கடை நெல்லே மலிவாக இருக்கிறதென்று



ஏற்படுகிறது. இரண்டாவது நெல் இன்னும் சற்று விலை மலிவாக இருந்து அதனால், அதிலிருந்து எடுக்கப்படும் சுத்தமானதும் கலப்படமானதுமான நெல்லின் விலை முதல் கடை நெல்லின் விலைக்கு சரியாயிருந்தாலுங்கூட, களைப்பூண்டுகளும் இதரப் பயிர்களும் இருக்கக் கூடுமாதலால், சாகுபடியில் கஷ்டமேற்படும். ஆகையால் உயர்ந்தவிதை நெல் அதிக விலைக்கு விற்கிறதே என்று எண்ணித் தாழ்ந்த விதையை வாங்குவது சரியல்ல.

## SAND DUNES.

## மணல் குன்றுகள்.

உலகிலுள்ள கடற்கரைகளில் பத்திலொன்பது மணல் நிறைந்தவை. இவ்வளவு ஏராளமான மணல் எங்கிருந்து வந்தது? கரையோரத்திலிருக்கும் பாறைகளை கடல்நீர் அரிப்பதாலும், சில சீதோஷ்ணபேதங்களால் பாறைகள் பொடியாவதாலும் வெகு காலத்திற்குமுன் "ஐஸ் ஏஜ்" என்று சொல்லப்படும் பனிக்கட்டிக் காலத்தில் நதிகளும், பனிப்பாறைகளும் வழியிலிருந்த கற்பாறைத் துண்டுகளையும் குப்பைகளையும் அடித்துக் கொண்டுவந்து ஸமுத்ரத்தில் விழுந்ததாலும், ஸமுத்ரக்கரைகளில் ஏராளமான மணல் ஏற்பட்டதென்று, பலவிதமாய்ச் சொல்லுகிறார்கள். காற்றைத் தடைசெய்யக்கூடிய செங்குத்தான மலைகள் இல்லாமல் தரை ஸமமாயிருக்கிற கடற்கரைகளில் இருக்கும் மணலை, காற்று ஊரைநோக்கித் தூற்றுகிறது. வழியில் ஒரு கல், அல்லது செடி இருந்து தடுத்தால், அங்கு மணல் தடைபட்டு, இன்னும் மணல்வந்து சேரச்சேர ஒரு சிறு மணல் மேடாகவளரும். ஒரு கடற்கரையில், அலைகள் அதிகமான மணலை ஒதுக்கர்மலிருந்து காற்றும் விட்டு விட்டு அடித்தால், முற்கூறியபடி-உண்டாகிற சிறுமணல் மேடுகளில் புல்பூண்டுகள் வேரூன்றி, மணல்களை ஒன்றுசேர்த்து ஒரு சிறு மணற்குன்றாக ஆக்கிவிடுகின்றன. இம்மாதிரிக்குன்றுகள், மணல் ஊருக்குள் வராமலிருக்கவேண்டிக் கரைபோட்டது போலாகின்றன. இதனால் நல்லதுதான். ஆனால் இன்னொருவிதமான மணல்மேடு இருக்கிறது. இது பரவி, வ்ருத்தியாகும். இந்தமேடும் முன்சொன்ன மாதிரிதான் உண்டாகிறது. ஆனால், அலைகள் ஏராளமான மணலை கரையில் கொண்டுவந்து சேர்ப்பதாலும், காற்று பலமாய் அடிப்பதாலும், மணல்மேடு ஊர்ஜிதமாய் நிற்காமல், காற்றில் சிதறிப் பெருக நேரிடுகிறது. அதனால், புல்பூண்டுகள் வேரூன்ற சக்தியற்றனவாகின்றன. ஆகவே மணல்மேடு ஊரை நோக்கி வ்ருத்தியாகி வருவதுண்டு. அருகிலிருக்கும் பயிர் செய்யப்பட்டுவரும் பூமியையெல்லாம் மணல் மூடுவதுண்டு. 'பிஸ்கே' என்னும் விரிகுடாவில் மணல்மேடு வர்ஷத்திற்குப் பதினறு அடி வளருகிறதாம். ஸ்காட்லன்ட் தேசத்தில் 'குல்பின்' 'மாவிஸ்டன்' என்னும் இடங்களில், மணல் மேடுகளினால் அதிகமான சேதம் உண்டாகிறதென்று தெரிகிறது. 40 அடி உயரம் மணல்மேடு வளர்ந்துபெருகி, மரங்களையெல்லாம் மூடிவிட்டனவாம். புல் கொஞ்சம் வேரூன்றி மணல்குன்று உண்டாகிற ஸமயத்தில், காற்று பலமாயடித்து குன்றைச் சிதறவடித்து மணல்மேட்டை ஊரைநோக்கி அடித்துக்கொண்டு வருகிறதாம். இப்படிப்பட்ட கேடுகள் விளையாதிருக்க, ப்ரமாண்டியர் என்பவர் ஒருவழி கண்டு

பிடித்திருக்கிறார். மணல், தூசிமாதிரி உயரப் பறக்காமல், தண்ணீர்போல, திரண்டுருண்டு போகும். ஆகவே, ஜலக்கரையிலிருந்து சுமார் நூறு கஜத்திற்கப்பால், நாலடி உயரத்திற்கு மரச்சட்டங்களைக் கிட்டக்கிட்ட, இடையிடையே ஒரு அங்குலம் சந்துவிட்டு, ஊன்றினால், மணல்வந்து, சட்டங்களில் தாக்கி மேடாகக்குவியும், சந்து வழியாய்ப்போகும் மணல், சட்டங்களுக்குப் பின்புறத்தில், குவிந்துகிடக்கும். கொஞ்சநாட்களில் மணற்பெருக்கினால், இந்தச் சட்டங்களெல்லாம் மூடிப்போகும். பிறகு சட்டங்களை ஒவ்வொன்றாய் மேலே கிளப்பி நிறுத்தவேண்டும். மறுபடியும் மணல்குவியும் இம்மாதிரி பலதரம் செய்தால், மணல் மேடு இருபுறமும் சரியாய் வேண்டியபடி உண்டாகும். சமுத்திரத்தை நோக்கியிருக்கும் சரிவின்வாட்டம், ஊரை நோக்கி யிருப்பதின் வாட்டத்தைவிட ஜாஸ்தியாயிருக்கும்படிசெய்து கொள்ளவேண்டும். ஆரம்பத்தில், சட்டங்களுக்குப் பின்புறத்தில், மணலில் நன்றாய் விளையக்கூடிய ஒருவகைப் புல்லை, அவ்வைந்தாக நட்டால் காற்றின் உபத்ரவம் அதிகமாய் இருக்காததலால், அவை வேரூன்றிப் பிடித்துக்கொண்டு மணலைச் சேர்த்துக் கொஞ்சம் கெட்டியாக்கும். இன்னும் விதைகளை விதைக்கவே, அவைகளும் பிடித்துக்கொள்ளும். இந்தமாதிரி மணல்குவியலை உண்டாக்கினபிறகு, அதன்மேல், மணலில் நன்றாய் விளையக்கூடிய சில புல்பூண்டு செடிகளின் விதைகளை விதைக்கவேண்டும். அவைகள் வேரூன்றி மணல்களை ஒன்றுசேர்த்துக் கெட்டியாக்கி, மணற்குன்றாகச் செய்துவிடுகின்றன. பிறகு மணற்குன்றாகிய இந்த அணைக்குப் பின்புறத்தில், 'பர்' என்னும் மரங்களைப் பயிர்செய்தால் அவைகளும் நன்றாய் வளர்ந்து, மணல் ஊரைநோக்கி வராமல் இருப்பதற்கு நல்ல தடையாகின்றன. சாகுபடி முதலியன செய்துகொண்டு ஜனங்கள் பயமில்லாமல் வஸிக்கலாம். அமெரிக்கா, ஐக்யமாகாணங்கள், ப்ரான்ஸ், ஹாலண்டு, முதலிய விடங்களில், மணல் தீங்கைத்தவிர்க்க இவ்விதம் செய்துவருகிறார்கள்.

## AVIAN ARCHITECTS.

### பக்ஷிச் சிற்பிகள்.

ஸாதாரணமாய் ஒரு பக்ஷிக்கூட்டை முட்டைகளுக்கும் ரக்கை முளையாத குஞ்சுகளுக்கும் உறைவிடமென்று சொல்லலாம். ஆகையால் அதைப் பல வர்ஷங்களுக்கு நீடித்திருக்கும்படி கட்டவேண்டிய அவச்யமில்லை. அடைகாத்த பிறகு சில வாரங்கள் வரையில் தான் அவைகள் உபயோகப்படும். நைட்ஜார்ஸ், ஸாண்ட் க்ரௌன்ஸ் என்னும் பக்ஷிகளுக்கு கூடுகட்டவே தெரியாது. அவைகள் யாதொன்றும் தயார் செய்யாமலே வெறுந் தரையின்பேரில் முட்டை யிடுகின்றன.

சில இந்தியப்பக்ஷிகள் பெரும் கூட்டமாகக் கூடுகட்டி வாழ்ந்துகொண்டு நதிகளில் முட்டை யிடுகின்றன.

இம்மாதிரி பகிரங்கமான இடங்களில் சில வகைப் பக்ஷிகள் முட்டை யிடுகிறதினால், இவைகள் மனிதனாலும் மற்ற ஏராளமான சத்ருக்களாலும் ஏன் அபகரிக்கப் படுகிறதில்லை யென்று கேட்கலாம். இயற்கை யமைப்பால் அந்தப் பக்ஷிகளின் முட்டைகள் பெரும்பான்மையும் மணல் போலவும், பருக்கை கற்கள் போலவும் பாறைபோலவும் காணப்படு



கின்றன. அப்படியிருப்பதால் அவைகளை ரொம்ப அனுபோகஸ்தர்கள் தவிர மற்றவர்கள் கண்டுபிடிக்க முடியாது.

சில பக்ஷிகள் தரையில் பொந்து செய்து அதில் முட்டையிடுகின்றன. சில பக்ஷிகள் மரங்களைக் குடைந்து பொந்துகளுண்டாக்குகின்றன. இப்படிச் செய்வது பட்டுப்போன அல்லது பழைய மரத்திலேதான். ஹார்ன்பில்ஸ் என்னும் பக்ஷிகளுக்கு இந்தத் தச்சுவேலை தெரியாது. அவைகள் இத்துப்போன மரங்களில் இயற்கையாயுள்ள பொந்தைத் தேடிப் பிடித்து அதில் முட்டையிடுகின்றன. முட்டையிட்ட பிறகு பெண்பக்ஷி அடைகாக்கும் தொழிலை ஏற்றுக்கொண்டு அதிலேயே வெகுகால மிருந்துவிடுகிறது. ஆண் பக்ஷி மண்ணாலும் சாணத்தாலும் பொந்தை அடைத்துவிட்டுப் பெண்பக்ஷியின் முகம் கொள்ளும்படி ஒரு த்வாரம் விடுகிறது. பெண்பறவை முட்டைகளைக் குஞ்சு பொரித்துக்கொண்டிருக்கையில், ஆண் பக்ஷி தன் பேடைக்கு ஆகாரத்தைச் சிறு உருண்டைகளாகச்செய்து கொடுக்கிறது.

தூக்கணாங் குருவி தொங்கிக்கொண்டிருக்கும் பாறையின் அடியிலும், கூரையிலும் மெதுவான மண்ணைச் சிறு உருண்டைகளாக உருட்டி அவைகளால் கூடுகட்டுவது வெகு விநோதமாயிருக்கும்.

தையல் பக்ஷி (Tailor bird) பாயாக் குருவி (Baya sparrow) என்னும் பறவைகள் உண்மையான பக்ஷிச் சிற்பிகள்.

தையல் பக்ஷியின் கூண்டைவிட அதிசயமானது வேறொன்றுமில்லை. தகுதியான தழைகளைப் பொறுக்கி அவைகளின் ஓரங்களில் ஓட்டைவிட்டு நார்களை அல்லது பக்கத்து வீடுகளிலிருந்து திருடிக்கொண்டு வந்த நூல்களை அந்த த்வாரங்களில் கோத்து தைத்து கூண்டாக அமைத்து விடுகிறது. கூண்டுக்கு வழி ஒரு சிறு த்வாரம். உட்புறத்தில் பஞ்சு, சிறு இறகுகள் மற்றும் இவை போன்ற மெல்லிய வஸ்துக்களை அடைத்து விடுகிறது. கூண்டைத் தரைக்குமேல் சில அடி உயரத்தில் தொங்க விடுகிறது.

பாயாக் குருவிகளைச் சற்று கவனிப்போம். இந்தக் குருவிகள் முட்டையிடும் காலத்தில் கூட்டங் கூட்டமாய் வேலை செய்வதைப் பார்த்திராத எவருக்கும் இவைகளின் யுக்தி, வழிகள் இப்படிப்பட்டவை யென்று ஊஹிக்க ஸாத்யப்படாது. மற்ற பக்ஷிகளைப்போலல்லாமல் பாயாக் குருவிகள் தங்கள் கால்களையும் மூக்குகளையும் ப்ரயோகித்து ஒரு அழகிய பெருத்த வஸதியைச் செய்து முடிக்கின்றன பாயாக் குருவிகள் கூட்டுறவில் விருப்பமுள்ளவைகளாதலால் முப்பது நாற்பது கூண்டுகள் ஒரே மரத்தில் தொங்குவதைக் காணலாம். ஆனது பற்றியே இந்தப் பறவைகள் தங்கள் கூடுகளை மறைத்துவைப்பதில்லை. இக்குருவியின் கூடு மழைகாலத்தில்தான் காணக்கிடைக்கும். இது மலைகளில் கிடையாது. ஆனால் ஸமவெளிகளில் ஸாதாரணமாய் இவைகளின் கூட்டங்கள் கூடுகட்டி வாழ்வதைப் பார்க்கலாம். ஸாதாரணமாக இவைகள் ஒரு குட்டையின்பேரில் தொங்கிக்கொண்டிருக்கும் மரக்கிளைகளில் கூடுகளைக் கட்டித் தொங்கவிடுகின்றன.

கூடு கட்டுவதற்கு வேண்டிய மரக்கிளையைத் தேடிப் பிடித்த பிறகு, இந்தப் பறவைகள் ஸாமான்களை சேகரிக்க ஆரம்பிக்கின்றன. பூர்த்தியான ஒவ்வொரு கூட்டிலும் அனேக கஜ நீளமுள்ள நார் இருக்கும். இப்படிப்பட்ட நார் இயற்கையில் இவ்வளவு அதிகமாகக் கிடைக்காது. பாயாக் குருவிகள் அதைத் தயாரிக்க வேண்டியிருக்கிறது. நார்களை ஒருவகைப் புற்களிலிருந்து தயாரித்து கூடு தொங்கவேண்டிய கிளையில் சுற்றிவைக்

கின்றன. வேண்டிய அளவு சேர்ந்தவுடனே அவைகளை ஒரு குடை அல்லது மணி உருவமாகச் செய்கின்றன. பிறகு அம்மணியின் வாய்க்குக்குறுக்கே புற்களைக் கட்டுகிறது. இந்த ஸ்திதியில் கூடு முடிவு பெறாமலே நின்றுவிடுவதுண்டு. இது ஆண் குருவி உட்கார்ந்து பெட்டைக்குப் பாட ஒரு ஊஞ்சலாக ஏற்படுகிறது. இவ்வளவு தூரம் கட்டினது அந்தப் பறவைகளுக்கு த்ருப்தியாயிருந்தால், முட்டைகளுக்கு வஸதியாக இருக்கும்படி கூட்டைக் கட்டி முடித்துவிடுகின்றன. ஒவ்வொரு பாயாக் குருவிக் கூண்டிலும் சில களிமண்ணுண்டைகள் ஒட்டப்பட்டிருக்கும். கூண்டின் இருபுறப்பளுவும் ஸமமாயிருப்பதற்காக இப்படிச் செய்யப்படுகிறது. ராத்ரியில் வெளிச்சம் கொடுப்பதற்காக இந்தக் களிமண்ணுண்டைகளில் மினுமினுப் பூச்சிகளை இந்தப் பறவைகள் ஒட்டி வைக்கின்றனவென்று சொல்லுகிறார்கள். ஆனால் இது உண்மையல்ல.

ப்ரிட்டிஷ் சாபிஞ்ச் பக்ஷியின் கூடு விநோதமானது. அது வேலிகளிலும், புதர்களிலும், மரங்களிலும் கட்டப்படுகிறது. உருவத்தில் கிண்ணத்தைப் போன்றது. அனேகமாய் மயிராலும் இறகுகளாலும் செய்யப்பட்டது. வெளிப்புறம் பாசிகளாலும் சிலந்தி வலைகளாலும் பின்னப்பட்டிருக்கிறது. இவ்வளவு நேர்த்தியாய் ஏற்பாடு செய்திருப்பதால், இந்தக் கூண்டைக் கண்டுபிடிக்க முடியாது. ஏனென்றால் இந்தக் கூண்டுக்கும் பக்கத்திலிருக்கும் தழை தாம்புகளுக்கும் வித்யாஸமே தெரியாது.

ஆசியா ஆப்ரிக்கா - கண்டங்களிலுள்ள ப்ளேமிங்கோ (Flamingo) என்னும் பக்ஷி, தென் அமெரிக்காவிலுள்ள ஒவன் பக்ஷி (Oven bird) இவைகளின் மண் கூடுகளைப் பற்றிச் சிறிது கூறுவோம்.

ப்ளேமிங்கோ என்பது நீண்டகால்களும் கழுத்தும் மூக்கும் உடையது. கொக்கைப் போன்ற ஒரு பறவை என்று சொல்லலாம். பலவிதக் கொக்குகள் மரங்களில் குச்சிக் கூண்டுகளைக் கட்டுகின்றன. அல்லது சதுப்பு நிலங்களில் கூடு கட்டுகின்றன. ஆனால் ப்ளேமிங்கோவோ மண்ணைத்திரட்டி மேடுபோட்டு அந்த மேட்டின்மேல் முட்டையிடுகிறது.

ஒவன் பக்ஷியும் மண் கூடுகட்டும். உருவத்தில் இது சிறிதாயினும், இதின் கூண்டின் உருவத்தையும் அதைக் கட்டும் ப்ரயாஸத்தையும் பார்த்தால் ஒரு பெரிய பக்ஷியோ என்று எண்ண இடமுண்டு. கூண்டு பகிரங்கமான இடத்தில் கட்டப்படும். குச்சிகளையும் உலர்ந்த புல்லையும் சேர்த்து மண்ணாலமைக்கப்படும். கூடுகள் 7 முதல் 9 பவுன் நிறையுள்ளதாயிருக்கும். பார்வைக்கு அடுப்பைப்போலிருக்கும். கூட்டின் உள்புறம் ஒரு மண்சுவரால் பெரிதும் சிறிதுமாக இரண்டு அறையாகத் தடுக்கப்பட்டிருக்கும். பெரியபாகம் முட்டைகளை வைக்க உபயோகப்படுகிறது.


## உபயோகமுள்ள புஸ்தகங்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 342. | பிராணி சாஸ்த்ரம் முதல்பாகம் (Zoology) | ... 0 | 11 | 0 |
| 569. | தமிழ் சரீர சாஸ்த்ரம் (Physiology) | ... 0 | 10 | 0 |
| 723. | பூதத்வபோதினி — எம். ஆர். ஸுப்ரமண்ய ஐயர் இயற்றியது. ஜியாலஜி என்னும் பூதத்வ சாஸ்திரம் அடங்கியது. | ... 0 | 6 | 0 |
| 33. | சரீரசாஸ்த்ரம் — இது பாலக்காடு விக்டோரியா காலேஜ் போதகராகிய மா, ஏகாம்பரநாதன் எம். ஏ., எல். டி., இயற்றியது. | ... 1 | 4 | 0 |

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித்தெரு, மதராஸ்.




## GREEN MANURE FOR PADDY.
### நெற்பயிருக்கு பசுந்தாள் எரு.

பசுந்தழைகளை சேகரித்து அவைகளை, வயல்களில் சேறு செய்யும்பொழுது, போடுதலும், ஒரு பசுந்தாள் எருப்பயிரை வயல்களில் பயிர் செய்து, சேறு செய்யும்பொழுது அதை உழுது மடித்தலும், ஆகிய இவ்விரண்டும் "பசுந்தாள் எருவிடுதல்" என்றதில் அடங்கும்.

இந்த இரண்டு முறைகளும் நமது தேசத்தில் வெவ்வேறு இடங்களில் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் முதல் முறைதான் ஸாதாரணமாய் உபயோகப்பட்டு வருகிறது. அநேக க்ருஷிகர்களுக்கு தழை எரு ச்ரேஷ்டமானதென்று தெரியும். எந்த விதத்தில் இது ச்ரேஷ்டமென்று தெளிவாய் தெரியாது. ஆனால் வ்யவஸாய டிபார்ட்மெண்டாரின் அனுபோகத்தில், அநேகமாய் பூமியின் மண் வயணத்தை மேன்மைபடுத்துவதில் இது சிறந்ததென்று தெரியவந்திருக்கிறது. வயலின் மண் சுற்றுப்புறத்திலிருக்கிற புஞ்சை நிலங்களைவிட எப்போதும் ம்ருதுவாயிருக்கும். இது இம்மாதிரியாவதற்கு காரணம் என்னவென்றால் வயலை சேறாக்கும்போது கனமாயும் பெரிதாயும் உள்ள மண் அணுக்கள் முதலில் சேற்றில் பதிகிறது. ம்ருதுவாயுள்ள மண் துளிகள் அம்மாதிரி பதிவதற்கு அதிக காலமாகிறது. மேலும் பூமியில் பாயும் ஜலத்துடன் வருகிற வெகு சிறிதாயும் ம்ருதுவாயுமுள்ள மண் துளிகள் பூமியில் தங்கும்படி விடப்படுகிறது. இதனால் வயல்களெல்லாம் களிப்பு மிச்ரமாகிறதுடன்; நாளுக்குநாள் இன்னும் அதிக களிப்பாகிறது. இந்த மாதிரியாவதை பசுந்தழையிடுவதாலும் அதிக பரிமாணமுள்ள இந்த்ரியவஸ்து எருவிடுவதாலும் தடுக்கலாம். மேலும் இந்த எருக்கள் நிலத்தை புலபுலப்பாக்குகின்றன. நெல் பயிரின் வேர்களுக்கும் பூமியிலிருக்கும் ஜலத்திற்கும் உள்ளேபோக வழி ஏற்படுகிறது. இவைதான் பசுந்தாள் எருவின் முக்ய உபயோகங்களென்று தெரிகிறது. மணல் பூமிகளைவிட களிப்பு பூமிகளுக்கு இந்த எருவின் வீரம் அதிகமாய் காணப்படுவதற்கு இதுதான் காரணம். மணல் நிலங்களில் வடிகால் நன்றாயிருந்தால் பூமியை திறக்க வேறே யாதொரு இந்த்ரியவஸ்துள்ள எருவுமில்லாமல் பூமியின் ஜலமும் நெற்பயிரின் வேரும் தாராளமாய் உள்ளே செல்லும். ஆகையால் பசுந்தாள் எருவின் உபயோகம் அநேகமாய் பூமியின் மண்வயணத்தை திருத்தலும் நெற்பயிரின் வேர்களுக்கு அதிகமான விஸ்தீரணத்திலிருந்து ஆகாரம் கிடைக்கும்படி செய்வதுந்தான். பசுந்தாள் எருப்பயிர்கள் நெல் பயிருக்கு ஸுலபமாய் உட்கொள்ளும் ஆகாரம் சிறிதளவு கொடுக்கின்றன. நிலத்தில் பயிரிடப்பட்டு மடக்கி உழப்படும் பசுந்தாள் பயிர்களால் நிலத்தில் சேரும் ஸத்தைவிட, வெளியிலிருந்து வரும் பசுந்தாள் எருவால் அதிக ஸத்து நிலத்தில் சேருகிறது. இரண்டு முறைகளிலும் வேறு சில நற்குணமும் துர்க்குணமும் உண்டு.

பசுந்தழைகளை வெளியிலிருந்து கொண்டுவருவதில் அதிக கஷ்டங்களுண்டு. இவைகளை கொண்டுவரும் தூரம் அதிகமானால் அதற்கு தகுந்தபடி செலவும் அதிகம் ஆகும். க்ருஷிகர் 20 முதல் 30 மைல் தூரத்திலிருந்தும் இன்னும் அதிக தூரத்திலிருந்தும் தழைகளை வண்டியில் கொண்டுவர நேருகிறது. இதனால் அதிக ச்ரமமும் கால தாமஸமும் ஏற்படுவதுடன், வண்டிகளையும் எருதுகளையும் காப்பாற்றுவதற்கு செலவும் ஏற்படுகிறது. இது தவிர நடவு வேலைகளில்

தாமஸம் ஆகிறது. ஏனென்றால் அதிக காலம் தழை சேகரம் செய்வதில் வீணாகிறது. நடவு முடிவ்தற்குள் நடும் பருவம் கடந்துவிடுகிறது. ஒவ்வொரு க்ருஷிகனுக்கும், சரியான பருவத்தில் நட்ட பயிரின் மாஸுல் போல், தாமஸித்து நட்டபயிரில் எவ்வளவு அதிகமாய் எருவிட்டாலும் கிடைப்பதில்லையென்று தெரியும். நஞ்சை நிலத்திலே பயிர் செய்த ஒரு பசுந்தாள் பயிர், அந்த இடத்திலே உழுவதற்கு தயாராயிருக்கிறது. ஆகையால் நெல்பயிரை சரியான காலத்தில் நட தாமஸமேற்படுவதில்லை. வண்டி வாடகைச் செலவும் கிடையாது. இது தவிர பூமியில் உற்பத்திசெய்த ஒரு பசுந்தாள் எருப்பயிர் தன்னுடைய வேரை ஆழத்தில் செலுத்துவதினால் பூமியைப்பிளந்து வடிகாலை வ்ருத்தி செய்கிறது. களர் நிலங்களையும் அதிக களிப்பு பூமிகளையும் சரிப்படுத்துவதற்கு இது ச்லாக்யமான முறையாகும். இப்படிப்பட்ட பூமிகளில் பசுந்தழை எருவிடுவதைவிட பசுந்தாள் எருப்பயிர்கள் சாகுபடி செய்வதினால் அதிக பலனை கொடுக்கும்.

பசுந்தாள் எரு செய்வதற்காக அநேக பயிர்கள் உண்டு. எந்தப் பயிரை உபயோகிக்கவேண்டுமென்பது அந்தந்த இடத்துக்குரிய பூமியின் ஸ்திதியையும் பருவத்தையும் சீதோஷ்ண நிலைமையையும் பொறுத்திருக்கிறது. கொள், பச்சைப்பயறு, நகரிப்பயறு, தட்டைப்பயிறு போன்ற கோதுப்பயிர்கள் அநேகம் இதற்காக உபயோகப்படுகின்றன. அவுரி இவ்விஷயமாக அதிகமாய் உபயோகப்பட்டு வருகிறது. சணப்பும் சில ஸமயங்களில் அதிக ஸௌகரியங்களிருக்கும்போது சாகுபடி செய்யப்படுகிறது. ஸாதாரணமாய் ரொம்ப த்ருப்திகரமுள்ள இரண்டு பசுந்தாள் பயிர்கள் காட்டவுரியென்ற கொளிஞ்சியும், வங்காள தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட டைன்சா என்ற பயிருமாகும். இந்த ராஜதானியில் டைன்சாவின் காட்டு தினுஸு ஒன்று இருக்கிறது. இதற்கு தமிழில் தக்கை பூண்டு என்று பெயர்.

சணப்பை.

சணப்பை என்ற பயிரும் பசுந்தாள் உரத்துக்கு ஏற்றதுதான். ஆனால் அதை வளரும்படி செய்வது கஷ்டம். அது வெகு துரிதமாயும் வர்ஷத்தில் எல்லா காலங்களிலும் வளரக்கூடிய குணம் உண்டு. ஆனால் காய்ச்சல் நன்றாய் பொறுக்காது. அதிக காய்ச்சல் இருந்தால் பூச்சியும் புழுவும் அநேகமாய் இதை தின்றுவிடும். அதிக ஜலத்தையும் பொறுக்காது. ஆகையால் தேவையான போது ஜலம் பாய்ச்சிக்கொள்ள ஸாத்யமான வடிகாலுள்ள பூமியில் மாத்ரம்தான் இதைப் பயிர் செய்யலாம். சரியான இடங்களில் 6-7 வாரங்களில் அதிக பசுந்தழையை கொடுக்கும். இதன் கிளைகளும் தண்டுகளும் நார் ஸம்பந்தமாயிருப்பதினால், பூமியில் நிதானமாய் அழுகி பூமியை திறந்து வைக்கிறது.

அவுரி.

அவுரி களிப்பு பூமிக்கு ஏற்ற பசுந்தாள் எருப்பயிர். டிஸம்பர் மாஸம் முதல் பிப்ரவரி மாஸம் வரையில் சம்பா பயிர் அறுவடை காலத்தில் விதைக்கக்கூடியது. பசுந்தழைக்காக ஸாகுபடி செய்தால் விதையை நெல் அறுவடைக்கு ஜலம் வடிக்கிற காலத்தில் நெற்பயிருக்குள் விதைக்கிறார்கள். ம்ருதுவான மண்ணில் விதை பதிகிறது. இது பூமி காயக்காய முளைக்கிறது. சிறு இளஞ்செடி தன் வேரை கீழே செலுத்தி தானே ஜீவிக்க சக்தி அடையும் வரையில், பூமியில் நிற்கிற நெல்பயிர் அவைகளை காப்பாற்றுகிறது. இது அதிக காய்ச்சல் தாங்கக்கூடிய பயிர். ஆழப் போகக்கூடிய வேர் ஸம்பந்தமுள்ளது. இது கோடைகாலத்து மழையினால் வெகு செழிப்பாய் வளருகிறது. அப்படி கோடை மழை வராவிட்டால் பயிர் உயிருடன் இருந்து நெல் பருவத்துக்கு முன் காலமழை பெய்கிற போது வளர ஆரம்பிக்கும். கோடை மழை அநுகூலமாயிருந்து வளர்ச்சி செழுமையாயிருந்தால் பயிரை அறுத்து திரும்பவும் வளரவிடலாம். அநேக இடங்களில் இந்த மர்திரிசெய்து அறுத்த பயிரை நாற்றங்கால்களுக்கு உபயோகிப்பதுண்டு.

காட்டவரி அல்லது கொளிஞ்சி.

வயலில் சாகுபடி செய்யப்பட்டாலும் தரிசு புஞ்சை பூமிகளிலிருந்து கொண்டுவரப்பட்டாலும் இது வெகு ச்லாக்யமானதாக எண்ணப்படுகிறது. சில ஜில்லாக்களில் க்ருஷிகர் 50 மைலும் அதற்கு மேலும் வண்டிகளுடன் போய் இந்தத் தழைகளை சேகரித்து வருவார்கள். இது அதிக வலிவுள்ளதாயும் காய்ச்சல் நன்றாய் தாங்கக்கூடியதாயுமிருக்கிறதால் வயல்களில் பயிரிடலாம். ஆனால் கொஞ்சம் கரடு முரடாயுள்ள மண் அணுக்கள் கூடிய நல்ல வடிகால் உள்ள பூமியில்மாத்ரம் நன்றாய் வளரும். அதிகமாய் வெடிக்கிற அதிக களிப்புள்ள ஆற்றுப்பாய்ச்சல் பூமிகளில் இது வளராது. இது வேனில்காலத்து காய்ச்சலை தாங்கக்கூடியது. ஆனால் தண்ணீர் பாய்ச்சலையும் தண்ணீர் தங்குதலையும் தாங்காது. பயிர் சிறியதாயிருக்கும்போது பூமியில் இரண்டொருநாள் ஜலம் நிற்கக்கூடிய ஒரு பெரு மழை செடிகளை அழித்துவிடும். பூமியில் தண்ணீர் நிற்காமல் வடிகால் நன்றாயிருந்தால் பயிர் பிழைக்கும். சம்பாப்பயிர் அறுவடைக்குப்பின் பயிராகக்கூடிய சில பயிர்களில் இது ஒன்று. தவிர, மழையில்லாமலும் தண்ணீர் பாய்ச்சப்படாமலும் பிழைத்து வளரக்கூடியது. ஆகையால் இது வெகு ச்லாக்கியம். ஒருபோக நஞ்சை பூமிகளில் இது அதிக ச்லாக்யமானது. ஏனென்றால் பயிர் பூமியில் மடிக்கப்படுவதற்கு முன் விதைகள் செடிகளில் உண்டாகி முற்றும். அந்த விதைகள் பூமியில் நெற்பயிர் வளரும் காலத்தில் கிடந்து நெற்பயிர் அறுவடைக்குமுன் ஜலம் வடிந்த பிறகு முளைக்க ஆரம்பிக்கும். ஆகையால் நன்றாய் ஒருதரம் இந்த பசுந்தாள் எரு ஏற்பட்டபின், அபூர்மாய் கோடைகாலத்து பெரு மழையால் நாசமடைந்தாலொழிய, வர்ஷா வர்ஷம் தானே வளரும். இதற்கு ஒரு விசேஷ குணமுண்டு. மாடுகள் தீவனமில்லாமல் பட்டினி கிடந்தாலொழிய அவைகள் இதை தின்னமாட்டா.

கொளிஞ்சியின் விதை ஸுலபமாய் முளைப்பதில்லை. ஏனென்றால் • விதையின்தோல் அதிக கெட்டியாயிருப்பதால் ஜலம் உள்ளே ப்ரவேசிப்பதில்லை. அதை முளைக்கும்படி செய்ய விதையின் மேல்புறத்தை காயப்படுத்தவேண்டும். இப்படி செய்வதற்கு கூர்மையான மணலுடன் அதை உறைக்கலாம். இதனால் விதையின் மேல்தோல் உரிந்து ஜலத்தை உள்புகும்படி செய்யும். விதை கொஞ்சமாயிருந்தால் நெல்குத்தும் உரலில் மணலுடன் கலந்து குத்தலாம். விதை ஏராளமாயிருந்தால் கூர்மையான மணலை களத்தில் பரப்பி அதின்மேல் கொளிஞ்சி விதையை பரப்பி, வைக்கோலினால் மூடி, கொஞ்சகாலம் மாடுகளை மிதிக்க செய்யவேண்டியது.

டைன்சா.

டைன்சா : களிப்புள்ள பூமிகளுக்கும் முக்கியமாய் களர் ஸம்பந்தமுள்ள பூமிகளுக்கும் இது வெகு ச்லாக்யமான பயிர். இது காய்ச்சல் தாங்கக்கூடிய பயிர். மேலும் நஞ்சை நில ஸ்திதிகளை பொறுக்கக்கூடியது. இந்த பயிரினால் விசேஷ நன்மைகளை அடையும் இடங்கள், கிணறு, குளம் ஆகிய இவைகளிலிருந்து ஜலம் பாய்ச்சப்படும் பூமிகளாகும். இங்கே ஸாதாரணமாய் மே, ஜூன் மாஸங்

களில் விதைக்கப்படுகிறது. மூன்று மாஸம் வளர்ந்தபிறகு சம்பா நெற்பயிருக்காக உழுது மடிக்கப்படுகிறது. இதை தனியாகவாவது அல்லது கம்பைப்போல் உயர வளரக்கூடிய தானியப்பயிருடன் கலந்தாவது விதைக்கலாம். ஸாதாரணமாய் ஒரு புதிய இடத்தில் இதை சாகுபடி செய்யும்போது, ஒரு தானியப்பயிருடன் கலந்து விதைப்பது நலம். ஏனென்றால் தனியாய் பயிரிட்டால் அங்குமிங்கும் திரியும் கால் நடைகளால் நாசமடையும். கம்புடன் கலந்தால், அதை மாடுகள் ஸாதாரண பயிராக எண்ணி நாசம் செய்வதில்லை.

தக்கைப்பூண்டு கால் நடைகளுக்கு ஏற்ற பயிர். சில இடங்களில் வெயில் காலத்தில் பச்சைத் தக்கை பூண்டை கால்நடைகளுக்கு தீவனமாக உபயோகிப்பதுண்டு. இதை மாடுகளுக்குப் போடுவதால் கால் நடைகள் நல்ல ஸ்திதியில் இருக்கும். தக்கைபூண்டுச் செடிகளின் நுனியை கிள்ளிவிட்டால் பக்கக் கிளைகள் அநேகம் உண்டாய் ஒரு அடர்ந்த புதர் போல் வளரும்.

அதிக களிப்புள்ள பூமிகளில் தக்கை பூண்டு பூமியிலுள்ள ஈரத்தைக்கொண்டு 3-4 மாஸம் வளரும். அப்போது அதை வெட்டி சேகரம் செய்து சேறுசெய்ய ஜலம் வரும்போது பூமியில் போடலாம். விவஸாய டிபார்ட்மெண்டாரால் இதை சேகரம்செய்து வைக்க அநேக முறைகள் பரிசோதனை செய்யப்பட்டு வருகின்றன. தழைகளை ஒரு குழியில் போட்டு மண் கட்டிகளால் பாரம் வைக்கலாம். அல்லது இதைவிட அதிக செலவில்லாமல் செய்யக்கூடிய முறை இந்த தழைகளை ஒரு போராய் ஈரமண்ணுடன் மாறிமாறி வைப்பது.

கொளிஞ்சிவிதை ஏக்ராவுக்கு 3, 4 பட்டணம்படி விதம் விதைக்கலாம். ஆனால், எவ்விடத்தில் மண்களிப்பாயிருக்கிறதோ அவ்விடத்தில் விதை அதிகமாயும் எவ்விடங்களில் பூமி மணலாயிருக்கின்றதோ அவ்விடங்களில் விதை குறைவாயும் உபயோகப்படுத்தவேண்டும். தக்கைப்பூண்டு விதை ஏக்ராவுக்கு 2½, 3 பட்டணம்படி போதும். விதை கறுப்பாயிருந்தால் 3, 4 பட்டணம்படி உபயோகப்படுத்தலாம். (வ்யவஸாய இலாகா துண்டுப் பத்ரிகையிலிருந்து சுருக்கி எழுதப்பட்டது.)

## PADMINI.
## பத்மினி.

ஸுமார் நானூறு வர்ஷங்களுக்கு முன்னே ரஜபுதனத்தில் ப்ரதாப ஸிங் என்னும் பெயருள்ள சிற்றரசனொருவன் இருந்தான். அவன் யௌவன வயஸுடையவனாகவும் மிகுந்த அழகுள்ளவனாகவும் இருந்தான். ஒருநாள் காலையில் அவன் வேட்டையாடுவதற்காக அரவல்லி மலை ப்ரதேசத்திலுள்ள காட்டில் குதிரைமேல் போய்க்கொண்டிருந்தான். அவன் வெகுநேரம் அலைந்து திரிந்தும் யாதொரு வேட்டை ம்ருகமும் அவன் கண்ணுக்கு அகப்படவில்லை. கடைசியாக ஒரு பெரிய காட்டுப்பன்றி அவன் கண்முன் எதிர்ப்பட்டது. அவன் கையில் கூர்மையான ஈட்டியை ஏந்திய வண்ணம் வெகு தூரம் அதைத் துரத்திக்கொண்டு போய்க் கடைசியாக அதை ஈட்டியால் குத்தினான். அந்த



ஸமயத்தில் அவனுடைய குதிரை ஒரு பள்ளத்தில் காலை வைத்து இடறவே, அவன் கீழேவிழுந்து விட்டான். விழுந்த வேகத்தில் அவன் ஈட்டியைப் பிடித்திருந்த பிடி தவறி விட்டது. ஈட்டியால் குத்தப்பட்ட காட்டுப் பன்றி மிகவும் கோபங்கொண்டு அவனை எதிர்க்க ஆரம்பித்தது. ப்ரதாபஸிங் மெதுவாக எழுந்து கையில் கத்தியை எடுத்துக்கொண்டு தன்னைத் துரத்திவரும் பன்றியை எதிர்த்தான். காட்டுப்பன்றி ஸாதாரணத்திலேயே மிகவும் மூர்க்கமானது. இப்பொழுது ஈட்டி குத்துண்டிருந்ததனால், அளவில்லாத கோபங்கொண்டிருக்கவே, கத்தியால் அதை வெட்டி கொல்லுவது அஸாத்யமாயிற்று. அதனிடமிருந்து தப்பித்துக்கொள்வதே ப்ரதாபஸிங்குக்குப் பெருங் கஷ்டமாக இருந்தது. இப்படி யிருக்கும் ஸமயத்தில் திடீரென்று காட்டுப்பன்றி கீழே விழுந்து இறந்தது.

காட்டுப் பன்றி எப்படி இறந்ததென்று ப்ரதாபஸிங் அதன் ஸமீபம் போய் அதன் தேகத்தை உற்றுப் பார்த்தான். அதில் ஒரு கூறிய அம்பு பாய்ந்திருந்தது. அந்த அம்பு எவ்விடத்திலிருந்து வந்ததென்பதை அறிய அவன் நாலா பக்கங்களிலும் பார்த்தான். தழையடர்ந்த வ்ருக்ஷங்களுக்கு இடையில் யௌவன பருவமுள்ள ஒரு அழகிய பெண் வில்லுங் கையுமாய்க் குதிரைமேல் உட்கார்ந்திருந்ததைக் கண்டான். அவள் தேகம் ரொம்ப பலமுள்ளதாகவும், முகம் அதிக ப்ரகாசமுள்ளதாகவும் இருந்தது. அவளுடைய அழகைக் கண்டவுடன் ப்ரதாபஸிங் மிகுந்த ஆச்சர்யமடைந்து மனங்கலங்கினான். அவன் சற்றுநேரம் நின்ற விடத்திலேயே ப்ரமித்து நின்று விட்டுப் பிறகு அந்தப் பெண்ணைப் பார்க்கவேண்டுமென்று அவளிருந்த இடத்தை நோக்கிப் போனான். ஆனால் அவன் அங்கே போவதற்கு முன்னேயே அந்தப் பெண் காட்டுக்குள் நுழைந்து மறைந்து விட்டாள். அந்த மாதிரி பெண்ணைக் கண்டது வாஸ்தவமா வென்று ப்ரதாபஸிங் சற்று சந்தேகித்தான். ஆனால் காட்டுப் பன்றியின் மேலிருந்த அம்பு அவன் ஸந்தேகத்தை நீக்கிற்று.

அப்பொழுது நடுப்பகலாகும் ஸமயமாயிருந்தது. அதிகாலையில் எழுந்து வந்த ப்ரதாப ஸிங்குக்குப் பசியும் தாகமும் அதிகரித்தபடியால், ஸமீபத்தில் வீடிருந்தால் போய் இளைப்பாறலாமென்று எண்ணி ஒரு காட்டு வழியில் சென்றான். காட்டின் ஒரு தனியிடத்தில் அநேகம் குடிசைகள் தென்பட்டன. அவைகளுக்கு மத்தியிலிருந்த பெரிய குடிசையை நோக்கி ப்ரதாபஸிங் போனான். அதிலிருந்த அஜித் ஸிங் என்னும் ரஜபுத்ரத் தலைவன் அவனை வரவேற்று உபசரித்தான். தாவுத் என்னும் மஹம்மதியன் அஜித் ஸிங்கை அவனுடைய நகரமாகிய ராஜக்ரஹத்திலிருந்து துரத்திவிடவே, அவன் தன்னைச் சேர்ந்தவர்களோடு காட்டில் வஸிக்க நேர்ந்தது.

ப்ரதாப ஸிங் பசிதாகங்களைத் தீர்த்துக் கொண்ட பிறகு தான் வேட்டையாடிய வரலாற்றையும், தன்னைக் காட்டுப்பன்றியினின்றும் ஓர் அழகிய பெண் காப்பாற்றியதையும், அவள் திடீரென்று மறைந்து போனதையும் அஜித் ஸிங்கினிடம் தெரிவித்தான். அஜித் ஸிங் அவனைக் காப்பாற்றியவள் தன் மகள் பத்மினியா யிருக்கவேண்டுமென்றும், காட்டில் வஸிக்கவந்தது முதல் அவள் எப்பொழுதும் வில்லையும் அம்பையும் எடுத்துக்கொண்டு இங்குமங்கும் திரிந்து கொண்டிருக்கிறாளென்றும், அரண்மனைக்குள் இருக்கும் அந்தப்புரத்தில் வாழ்வது அவளுக்குச் சற்றும் ஸம்மத மில்லையென்றும் தெரிவித்தான். அதைக் கேட்ட ப்ரதாப ஸிங் அதிக ஸந்தோஷ

மடைந்து "அவளுக்கு என்மேல் விச்வாஸமிருக்குமானால் நான் அவளுக்காக என் உயிரையும் கொடுத்து விடுவேன்" என்றான். அஜித் ஸிங் அவனைப் பார்த்து "வீரனே! உன்னைப்பார்த்து எந்தப் பெண்ணும் வெறுப்படைய மாட்டாள். பத்மினி உன்னை விரும்புவாளென்பதில் ஸந்தேகமில்லை. ஆயினும் அவள் ராஜக்ரஹத்தை மஹம்மதியரிடமிருந்து மீட்டுக் கொடுப்பவனையே விவாஹம் செய்து கொள்வதென்று ப்ரதிக்யை செய்துகொண்டிருக்கிறாள். நீ அப்படிச் செய்தால் தான் அவளை அடையலாம்" என்றான். ப்ரதாப ஸிங் "மிகவும் ஸந்தோஷம்! எந்த விதத்திலாவது ராஜக்ரஹத்தை மீட்டுக் கொடுக்கிறேன். அதற்காக என் உயிரை வேண்டுமானாலும் விட்டுவிடுகிறேன்" என்றான்

ராஜக்ரஹத்தைப் பிடித்துகொண்டு அஜித் ஸிங்கைக் காட்டுக்குத் துரத்திய தாவுத் என்னும் மஹம்மதிய அரசன் பத்மினியின் பேரழகைப் பற்றிக் கேள்விப்பட்டு அவள்மேல் அடங்காத மோஹங் கொண்டிருந்தான். ஆகவே அவன் ஒரு கடிதத்தில் அவளுடைய அழகை மனம்போன போக்காக வர்ணித்து அவளைத் தனக்கு விவாஹம் செய்து கொடுக்க வேண்டுமென்று அஜித் ஸிங்குக்கு எழுதி இருந்தான். அப்படிக் கொடுக்க ஸம்மதியாவிட்டால் அவர்கள் வசித்த காட்டுக்குத் தானே நேராக வந்து அவளை பலவந்தமாக எடுத்துப்போய் விடுவதாகவும் பயமுறுத்தினான். தாவுத் இரண்டு மஹம்மதிய ஸ்திரீகளை மணம் புரிந்திருந்தும் பத்மினியின் அழகுக்காக அவளையும் மணம்புரிய எண்ணங் கொண்டான். ப்ரதாப ஸிங் பத்மினியைக் காட்டில் கண்டு அவள் இருந்த இடத்திற்குப் போன அன்றைய தினம் தான் தாவுத் எழுதிய கடிதத்தை ஒரு ஸேவகன் அங்கே கொண்டுவந்து அஜித் ஸிங்கினிடம் கொடுத்தான்.

அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்ததும் அஜித் ஸிங்குக்கு அளவில்லாத கோபம் உண்டாயிற்று. தன்னை வென்ற சத்ரு தன் பெண்ணைக் கேட்பதே கோப மூட்டும்படியான விஷயம். அந்தச் சத்ரு மஹம்மதியனாக இருந்தபடியால் அடக்கமுடியாத கோபம் உண்டாகி விட்டது. என்ன செய்வதென்று அஜீத் ஸிங்குக்கு ஏற்படவில்லை. கடிதம் கொண்டுவந்த சேவகனை வெட்டிவிடலாமா வென்று எண்ணினான். ஆயினும், அவஸரப்பட்டுச் செய்யும் கார்யம் துன்பத்துக்கு இடமாகுமென்று பயந்து, கடிதத்தை எடுத்துக்கொண்டு தன் மகளிடம் சென்றான். பத்மினி பொறுமையுடன் கடிதத்தில் எழுதியிருந்த ஸங்கதியைத் தெரிந்துகொண்டாள். பிறகு அவள் தன் தகப்பனோடும் ப்ரதாப ஸிங்கோடும் கலந்து ஆலோசனைசெய்து ஒரு முடிவு செய்தாள். பத்மினி தாவுத்தை மணம்புரிய ஸம்மதிக்கிறாளென்றும், அவள் ஒரு மாஸ காலத்திற்குள் தன் அந்தஸ்திற் கேற்றபடி பரிவாரங்களுடன் தாவுத்தினிடம் வருவாளென்றும் அவனுக்குக் கடித மெழுதியனுப்பினார்கள். அவன் ஸந்தேகப்படாமலிருக்கும் பொருட்டு, அஜித் ஸிங்கினிடமிருந்து பிடித்துக்கொண்ட ராஜ்யத்தில் சில பாகங்களை விட்டால் தான் விவாஹத்திற்கு உடன்பட முடியுமென்றும் அதில் எழுதி இருந்தார்கள். அந்தக் கடிதத்தைக் கண்டவுடன் தாவுத் மிகுந்த ஸந்தோஷப்பட்டு பத்மினியின் அழகுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாமென்று எண்ணினான்.

ஒரு மாஸம் ஆனபிறகு பத்மினி கல்யாணப் பெண்ணைப்போல் அலங்கரித்துக் கொண்டு தாவுத் தங்கியிருந்த ராஜக்ரஹத்துக்குப் புறப்பட்டாள். அவள் தன் அம்பையும் வில்லையும் வைத்துக்கொண்டு ஒரு பல்லக்கில் உட்கார்ந்துகொண்டாள். அந்தப் பல்லக்கைச்



சுற்றிலும் பட்டுத்திரைச் சீலைகட்டியிருந்தது. அவள் ஏறியிருந்த பல்லக்குக்கு இரண்டு பக்கங்களிலும் திரையிட்ட மூன்று பல்லக்குகளை எடுத்துப் போனார்கள். ஒவ்வொரு பல்லக்கிலும் பத்மினியின் தோழியைப்போல் வேஷம் பூண்ட ஒரு ரஜபுத்ர வீரன் உட்கார்ந்திருந்தான் அந்தப் பல்லக்குகளில் கத்தி கட்டாரி முதலியவைகளை மறைத்து வைத்திருந்தார்கள். ப்ரதாப ஸிங் குதிரைக்காரன்போல் வேஷம் தரித்து, பத்மினியின் குதிரையை அவள் பல்லக்கின் பின்னே நடத்திப்போனான். ஒவ்வொரு பல்லக்கையும் ஆறு ரஜபுத்ர வீரர்கள் எடுத்துப் போனார்கள். ஆகவே மொத்தத்தில் பத்மினி நீங்கலாக 49 போர்வீரர்கள் வேஷம் பூண்டு இருந்தார்கள். இவர்களைத் தவிர வேஷம் தரியாத முப்பது போர் வீரர்கள் இரண்டு கைகளிலும் கத்தியை ஏந்திக்கொண்டு பல்லக்குகளோடு போனார்கள். ரஜபுத்ரத் தலைவர்களின் பெண்களுக்கு விவாஹமாகும்போது போர்வீரர்கள் அப்படிப் போவது வழக்கமாகையால், அவர்களைப் பார்த்து ஒருவரும் ஸந்தேஹிக்க இடமில்லாமல் இருந்தது.

கல்யாணப் பெண்ணை வரவேற்பதற்காக தாவுத் விலையுயர்ந்த ஆடையாபரணங்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு சில ஸ்நேஹிதர்களோடு குதிரைமேல் ஏறியவனாய் ராஜக்ரஹத்துக்கு இரண்டு மைல் தூரத்தில் வந்து காத்திருந்தான். ஸ்த்ரீகளைப் போலவும் போகிகளைப் போலவும் வேஷம் பூண்டிருந்த ரஜபுத்ர வீரர்கள் அவனைக்கண்டு மனம் திடுக்கிடாமல் தைர்யத்தோடு போனார்கள்.

கோட்டைக் கதவைத் திறக்கும்படி தாவுத் உத்தரவு செய்தவுடன், உள்ளே இருந்த மஹம்மதியர்கள் திறந்துவிட்டார்கள். பல்லக்குகள் கோட்டைவாசலைத் தாண்டியதும் அவைகளைக் கீழே இறக்கி வைத்தார்கள். நடுப் பல்லக்கிலிருந்த பத்மினி சட்டென்று எழுந்து அம்பையும் வில்லையும் எடுத்துக் கொண்டு ப்ரதாப ஸிங் பிடித்திருந்த குதிரையின்மேல் ஏறிக்கொண்டாள். வேஷத்தோடிருந்த மற்ற ரஜபுத்ரர்கள் பல்லக்குகளில் மறைத்து வைத்திருந்த கத்தி கட்டாரிகளை எடுத்துக்கொண்டு சண்டைக்குத் தயாராக நின்றார்கள். இன்னும் சிலர் சிப்பாய்கள் வைத்திருந்த இரண்டு கத்திகளில் ஒவ்வொன்றை வாங்கிக்கொண்டு நின்றார்கள். இவர்கள் கல்யாணத்திற்கு வந்தவர்களென்று மயங்கியிருந்த தாவுத்தும் அவனைச் சேர்ந்தவர்களும் ப்ரமித்துப் போனார்கள். தாவுத் சற்று நேரத்திற்குள் மனந்தெளிந்து தன்னோ டிருந்தவர்களைக் குதிரைகளின்மேல் ஏறிக்கொண்டு யுத்தம் செய்யத் தயாராக இருக்கும்படி கட்டளையிட்டுவிட்டு, அபாயப் பறையை அடிக்கும்படி உத்தரவு கொடுத்தான். சற்று நேரத்திற்குள் மஹம்மதியர்கள் அவன் பக்கத்தில் வந்து சேர்ந்தார்கள். ராஜக்ரஹத்திலிருந்த ஹிந்துக்கள் பத்மினியின் பக்கத்தில் வந்து சேர்ந்தார்கள்.

குதிரைமேல் ஏறிக்கொண்டவுடன் பத்மினி வில்லில் அம்பைத் தொடுத்து தாவுத்தின்மேல் எய்ய நினைத்தாள். ஆனால் அவனை அனாவச்யமாகக் கொல்லக் கூடாதென்று பச்சாதாபங்கொண்டு அவன் குதிரையின்மேல் எய்தாள். குதிரையோடு தாவுத்தும் கீழே விழுந்தான். அவன் உடனே எழுந்து மறுபடியும் யுத்தம்செய்ய நின்றான். அப்பொழுது ரஜபுத்ரர்கள் ஆப்கானியரைத் துரத்திக் கொண்டு பட்டணத்தின் உள் பக்கம் போய்க் கொண்டிருந்தார்கள். அவர்களைத் தோற்கடிக்க அதுதான் ஸமயமென்று எண்ணி தாவுத் கோட்டைக் கதவை மூடும்படி உத்தரவுகொடுக்கப் போனான். கதவை மூடும் ஸமயத்தில், உள்ளே சென்ற ரஜபுத்ரர்களுக்கு

அபாயம் நேரும்போது உதவி செய்யத் தயாராக வெளியே காத்திருந்த வேறு ரஜபுத்ர வீரர்கள் கதவை பலவந்தமாய்த் திறந்துகொண்டு உள்ளே நுழைந்துவிட்டார்கள். அவர்கள் வந்திராவிட்டால் உள்ளே இருந்த ரஜபுத்ரர்கள் பொறியில் அகப்பட்ட எலிகளைப்போல் மாண்டுபோயிருப்பார்கள்; பத்மினியும் தாவுத்துக்கு அடிமையாயிருப்பாள்.

பிறகு தாவுத் சில போர் வீரர்களோடு போய் ப்ரதாப ஸிங்கையும் அவனோடிருந்தவர்களையும் சூழ்ந்துகொண்டான். ப்ரதாப ஸிங் தைர்யத்துடன் சண்டை செய்தான் அவனுக்குக் காயம்பட்டது. அவனோடிருந்த வீரர்களில் சிலர் மாண்டுபோனார்கள். அந்த ஸமயத்தில் பத்மினி குதிரைமேல் இருந்தபடியே அம்புகளைத் தொடுத்து விட்டுக்கொண்டிருந்தாள். வெளியிலிருந்து வந்த ரஜபுத்ர வீரர்களும் வந்து சேரவே மஹம்மதியர்களைவிட ரஜபுத்ரர்கள் அதிகமாக இருந்தார்கள். இனி எவ்விதத்திலும் தான் தோல்வியடைவது நிச்சயமென்று எண்ணி தாவுத் ப்ரதாப ஸிங்கை எதிர்த்தான். ப்ரதாப ஸிங் அவன் கையில் அகப்படாமல் சுற்றிவந்து குதிரைமேல் இருந்த தாவுத்தைக் கீழே தள்ளி அவனை கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். தங்களுக்குத் தங்க இடம் கொடுத்தால் சண்டை செய்யாமல் இருப்பதாக தாவுத வேண்டிக்கொண்டான்.

ப்ரதாப ஸிங் ராஜக்ரஹத்தைக் கைப்பற்றி அஜித் ஸிங்கின் வசம் ஒப்பித்துவிட்டான். உடன்படிக்கைப்படி பத்மினி அவனை விவாஹம் செய்துகொண்டாள். தாவுத் மஹம்மதியனாக இருந்தாலும் தன்னை உயிருக்குயிராகக் காதலித்தவனானபடியால் அவனைக் கொல்வது தர்மமல்லவென்று பத்மினி ப்ரதாபஸிங்கினிடம் தெரிவிக்கவே, அவனை உயிரோடு விட்டுவிட்டான். அழகிய பத்மினியைக் கண்ணாரக் கண்டதாவது போதுமென்று ஸந்தோஷித்த தாவுத் தான் ஜயித்த ராஜ்யத்தை இழந்ததற்காக வ்யஸனிக்கவில்லை. பத்மினியும் ப்ரதாப ஸிங்கும் வெகுகாலம் ஸந்தோஷமாக வாழ்ந்து வந்து தங்களுக்குப் பின் மஹம்மதியர்களை எதிர்த்துப் போர் செய்யும் வல்லமையுள்ள பிள்ளைகளை விட்டுக் காலஞ்சென்றார்கள்.

## TREE SURGERY.

### மரங்களுக்கு ரணவைத்யம்.

மரம் பட்டுப்போகாமல் நன்றாய் வளர வேண்டுமானால் நாம் அதன் பட்டைக்கு யாதொரு கெடுதியும் உண்டாகாமல் பாதுகாக்கவேண்டும். அந்தப்பட்டையின் அடியிலிருக்கும் (கேம்பியம்லேயர்) என்னும் ஒரு மெல்லிய படைதான் மரத்தின் வளர்ச்சிக்குக் காரணம். அந்தப்பட்டை, மரத்திற்கும் பட்டைக்கும் மத்தியில் இருந்துகொண்டு, வேர்களிலிருந்துவரும் நீர்முதலிய ஆகாரங்களை மரத்தின் உச்சிக்கிளை வரையிலுள்ள எல்லாப் பாகங்களுக்கும் அனுப்புகிறது. பட்டை பெயர்ந்துவிட்டால் அத்துடன் இந்த முக்யமான காம்பியம் என்னும் படையும்போய், மரத்திற்கு வ்யாதி முதலியவைகள் ஏற்படும். பட்டை பெயர்ந்த இடத்தில் உள்மரமும் வெளியே தெரியும். தெரிகிற இடம் காற்று மழையினால் அடிபட்டுக் கெட்டுப்போகும். அந்த மார்க்கமாய் பூச்சிகள் மரத்திற்குள்



சென்று உள்மரத்தைப் பல வினைப்படுத்திக் கெடுதியை உண்டாக்கும். ஆகவே மரத்தில் காயம்படாமல் பத்ரமாய் காப்பாற்றினால்தான் மரம் நன்றாய் வளரும். மாடுமுட்டியோ, வண்டிகள் மோதியோ, பையன்கள் விளையாட்டிற்காகக் கொத்தியோ, மரத்தின்பட்டை நசுங்குகிறதையும் பெயர்ந்துபோகிறதையும் ஸாதாரணமாய் மரம் வளர்ப்போர்கள் காணலாம். அவர்கள் உடனே மரத்திற்கு ஏற்பட்ட காயங்களுக்கு சிகித்ஸை செய்யவேண்டும். செய்தால்தான் மரத்தின்புண் ஆறி அது நன்றாய் வளரும். மரத்தில் காயம் படாமலிருக்க, வேண்டிய முன் ஜாக்ரதை எடுத்துக்கொள்வது நலம். மரத்தைச்சுற்றி வேலி கட்டலாம். இரும்புக்கம்பி வலையினால் வேலி கட்டுவது உத்தமம். ஆனால் எவ்வளவு ஜாக்ரதையாயிருந்தாலும், சில ஸமயங்களில் பட்டை நசுங்கி அல்லது பெயர்ந்துபோய் விடுகிறது. அப்பொழுது நசுங்கியிருக்கும் பட்டையில் சிதறியிருக்கும் ஓரங்களை மட்டமாய் வெட்டிவிட்டு, வெளியேதெரியும் உள்மரம், அதைச் சுற்றியுமுள்ள பட்டை இவைகளின்மேல், தார் என்னும் கீல் எண்ணெயைப் பூசவேண்டும். இந்த எண்ணெய்க்கு, மரத்தில் பூச்சி வைக்காமலும், மரம் கெட்டுப்போகாமலும் பாதுகாக்கிற சக்தி உண்டு. ஆகவே வர்ணம் கலந்த வார்னீஷ் முதலியன போடுவதைக்காட்டிலும் இம்மாதிரி சிகித்ஸைசெய்வது மேலானது. சிலர் காயம்பட்ட இடத்தைச்சுற்றி துணியைக் கட்டிவைக்கிறார்கள். அதனால் கெடுதியைத்தவிர குணம் ஏற்படாது. துணிக்கடியில் க்ருமிகள் தங்கி, மரத்துக்குக் கெடுதியை உண்டுபண்ணும். தகரத்தால் காயத்தைமூடுவதும் அனுசிதம். அதன்கீழும் க்ருமிகள் வாஸம்செய்யும். ஆகவே தார் போடுவதுதான் ஸுலபமான சிறந்த சிகித்ஸை.

## SEEHU GRASS.

By T. P. SUBBARAYA AIYAR.

### சீகுபுல்.

இந்தப்புல் மனிதருக்கு ஆடைகளைப்போல் அத்யாவச்யமானது. இதில்லாமல் எந்த மனிதனும் ஸுகஜீவியாக இருக்கமுடியாது. இது இல்லாவிட்டால் கண்ணுக்கு அலங்காரமில்லை. ஸுகமில்லை.

இதைதான் துடைப்பமென்றும், விளக்குமாறென்றும், சொல்லுவது. இந்தப்புல்லை எவரும் பயிர் செய்வதில்லை.. வானம்பார்த்த விடங்களில் சாகுபடியற்று தரிசாகக்கிடக்கும் புஞ்சைகளில் சிற்சில விடங்களில் இது தானாகவே முளைக்கும். இந்தப்புல் ஆனி ஆடி மாஸங்களில் மழை பெய்தவுடன் முளைத்துவிடும். இவைகளில் மாடுகள் தின்றது போக பாக்கியாகும் புற்கள்முற்றி சீகென்ற பெயரையடையும். இது ஜனவரி பிப்ரவரி மாஸங்களில் முற்றிப் பூத்துவிடும். அவைகளை ஏழை ஜனங்கள் அறுத்து பிடிபிடியாகக்கட்டி நகரங்களில் கொண்டுபோய் விற்பார்கள். இப்போது இதன்விலையும் அதிகமாகிவிட்டது. ஏனென்றால், மழையில்லை. அதனால் ஒரு பிடி 1. தம்படி ஆக இருந்தது $1\frac{1}{2}$ தம்பிடி ஆகிவிட்டது. (சென்னையில் 4-தம்பிடியாக விற்கிறது.) இதற்கு க்ராக்கியோ அதிகம். ரயில்வேக் கம்பனியார் வர்ஷந்தோறும் இந்தச் சீகுபுல்லை (துடைப்பம்) ஏராளமாய் விலைகொடுத்து வாங்குகிறார்கள். தென்னைமரமுள்ள விடங்

களைத்தவிர மற்ற எந்த விடங்களிலும் இந்தத் துடைப்பமே உபயோகப்படுகிறது பின்னும், ஆஸ்பத்திரிகளிலும் இந்தச் சீகு பல விஷயங்களுக்கு உபயோகப்படுகிறது. காது வளர்ப்பதற்குப் பெண்களுக்கு உதவுகிறது. கொல்லத்துக்காரர் வீடுகளுக்கு வெள்ளையடிக்க இந்தத்துடப்பத்தை உபயோகிக்கிறார்கள். வாழையற்ற விடத்திலுள்ளவர்கள், பலா, ஆல், புரசு, மந்தாரை முதலிய இலைகளைத் தைக்க இந்தச் சீகை கிழித்து உபயோகிக்கிறார்கள். புகையிலைச் சுருட்டு சுற்றுவோர் அதனால் இந்தச் சீகு குச்சியை வைத்துச் சுற்றுகிறார்கள்.

இவ்வளவு பயனையும், விலையையும் தரும் இந்தப்புல்லை நம்மவர்கள் அலக்ஷ்யம்செய்து பயிர்செய்யாமல் விட்டிருக்கிறார்கள். ஒன்றுக்கு முதவாதென்று தரிசு போட்டிருக்கும் எந்த பூமியிலும் இந்தப்புல்லைப் பயிர் செய்து ஆடுமாடு தின்னாமல் மட்டில் காபந்து செய்தால் அதிசீக்ரத்தில் பெரும் பணக்காரர்களாகி விடலாம். கப்பலில் ஏற்றி வெளியிடங்களுக்கு மனுப்பிவரலாம்.

டி. பி. ஸுப்பராய ஐயர்.

## WHY PRETTY WOMEN HAVE PLAIN DAUGHTERS.

### அழகுள்ள ஸ்த்ரீகளுக்கு லக்ஷண மில்லாத பெண்கள் பிறப்பதேன்?

மனிதர்களுடைய குணாதிசயங்களில் ரொம்பவும் விரும்பத்தக்கது அழகு. அதைப் பற்றி சாஸ்த்ரம் வல்லோர் ஆராய்ச்சி செய்ததில் சில ஆச்சர்யமான விஷயங்கள் தெரிய வந்திருக்கின்றன.

அழகென்பது வழக்கமாய் ஆண் ஸந்ததி மூலமாய் வருகிறது. பெண் ஸந்ததி மூலமாயல்ல. தாயார் தன்னழகைப் பெண்களுக்குத் தாட்டுகிறதில்லை.

அழகுள்ள ஸ்த்ரீகளின் பெண்கள் ஸாதாரணப் பெண்களைவிட அழகில் உயர்ந்தவர்களல்லவென்பதை ஒவ்வொருவரும் கவனித்திருக்கலாம்.

விசேஷ அழகுவாய்ந்த புருஷர்களின் பெண்கள் தகப்பனழகைப் பெறுவார்களென்பதும் தெரிந்தவிஷயம்.

மனிதர்களுள் அழகு என்னும் குணம் இப்படி ஸந்ததிகளில் ஏற்படுவது, கோழிகளின் குணங்கள் அவைகளின் ஸந்ததிகளுக்கு எந்த முறைப்படி வருகின்றனவோ அந்த முறையையே அனுஸரித்திருக்கிறது. உதாரணமாக அதிகமாக முட்டை யிடுகிறகோழி முட்டையிடும் சக்தியை தன் பெண் குஞ்சுகளுக்கு தாட்டுவதில்லையென்று முடிவாய் கண்டறிந்திருக்கிறார்கள். அதிக முட்டைகளை உற்பத்தி செய்யும் சக்தியை ஆண் குஞ்சுகளுக்கே தாட்டுகிறது; சேவல்கள் அடைகாப்பதில்லையாதலால் தங்களுடைய சக்தியை பெட்டைக் குஞ்சுகளுக்கு தாட்டுகின்றன.

கோழிகளைவளர்த்து வ்ருத்தி செய்வதில் கவனிக்கவேண்டிய முக்யமானவிஷயம் என்னவென்றால், முதல்தரமாய் முட்டையிடும் தாய் வழியாய்வந்த சேவல்களையே வாங்கிவிடவேண்டும். இதை எப்போதும் தவறக்கூடாது. விசேஷமான முட்டையிடும் குணம் பெண் ஸந்ததியில் நிலைக்கிறதில்லை. திரும்பத் திரும்ப ஆண் ஸந்ததிக்கேபோய் அதின்மூலமாய் நிலைபெறுகிறது.

இதேவிதி மனிதரழகுக்கும் பொருந்தும். அது திரும்பத்திரும்ப ஆண் ஸந்ததிக்கே போவதல்லாமல் நேரிட்டுத் தாயிடமிருந்து பெண்ணுக்குப் போவதில்லை. ஆனால் இதில்



சில சிக்கல்களுண்டு. அவைகள் பின்னால் விவரிக்கப்படும்.

அழகுவாய்ந்த ஸ்த்ரீகளின் பெண்கள் அதேமாதிரி அழகுள்ளவர்களா யிராமலிருப்பது விந்தையா யிருக்கிறதென்று ஸந்ததி ஆராய்ச்சி நிபுணர்கள் சொல்லுகிறார்கள். நமக்குத்தெரிந்த எல்லா மனிதரையும்பற்றி யோசித்து இந்தவிதி எப்படிப் பொருந்துகிறதென்று பார்ப்போம். தாயார் பெண்ணுக்குத் தன்னழகை ஒருபோதும் தாட்டுவதில்லையென்று சொல்லுவது தகாது. ஆனால் அது மிகவும் அரிது. கோழிகளுக்கெப்படியோ அப்படியே மனிதருக்கும். விசேஷமாய் முட்டையிடும் கோழியின் பெண் குஞ்சு பர்வத்தில் முட்டையிடத் தவறுவதில்லை. ஆனால் ஸாதாரணக் கோழிகளைவிட விசேஷமாயிடுகிறதில்லை.

மேலும், அழகுள்ள தாய்க்கு அரிதாக அழகுள்ள பெண்களிருந்தாலும், அவர்களுடைய அழகு தகப்பனிடத்திலிருந்து வந்ததென்றும், அவர்கள் உருவ அமைப்பில் தாயாரைப் போலிருப்பதில்லையென்றும் ஸந்ததிலக்ஷணம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். சிலர், தமக்கென்று சில குணங்களில்லாவிட்டாலும், அந்த குணங்களை ஏற்றுக்கொண்டு, பிறருக்கு தாட்டிவிடும் குணம் பெற்றிருக்கிறார்கள். பொதுவாய்ச் சொல்லுமிடத்து, ஸ்த்ரீகள் அழகு என்னும் குணத்தை பிறருக்குத் தாட்டும் இயல்புடையவர்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய புத்ரர்கள் மூலமாகவே அந்த அழகு என்னும் குணத்தைத் தாட்டுகிறார்கள்.

உதாரணமாக ஒரு அழகுள்ள தகப்பனுக்கு ஒரு அழகுள்ள பெண் பிறந்ததாக வைத்துக் கொள்வோம். அவள் ஒரு அழகில்லாத புருஷனை மணந்தால், அவளுடைய பெண்கள் அழகாயிருக்க மாட்டார்கள். ஆனால் அவளுடைய பிள்ளைகளின் பெண்கள் பெரும்பாலும் அழகாயிருப்பார்கள். அந்த அழகு அந்தப் பெண்களின் பாட்டியாகிய மேற்கூறிய ஸ்த்ரீயிடத்திலிருந்தும் அவளுக்கு முன் அவளுடைய பாட்டனிடத்திலிருந்தும் வந்ததாகும்.

ஒரு குடும்பத்தில் அழகு இரட்டைப்பங்கு என்பதொன்றுண்டு. இது கிடைத்தால் எந்தப் பெண்ணுக்கும் ஸந்தோஷமாயிருக்கும். அதன் தாத்பர்யம் என்ன?

உதாரணமாக, தன் தகப்பனிடத்திலிருந்து அழகு வரப்பெற்ற ஒரு ஸ்த்ரீயை கவனிப்போம். யாருடைய தாயார் அதேமாதிரி அழகு வரப்பெற்றாளோ அந்த புருஷனை அவள் மணந்து கொள்ளுகிறாள். இதில் இரட்டைப்பங்கு அழகு ஏற்படுகிறது. இந்த தம்பதிகளுக்குப் பிறக்கும் பெண்களும் பிள்ளைகளும் அழகாகவே யிருப்பார்கள்.

மனிதரில் அழகு இரண்டு வழியாக வருகிறதாம். அது நேராக ஆண்ஸந்ததி மூலமாய் தகப்பனிடத்திலிருந்து மகனுக்கும் பேரனுக்குமாக இப்படியே ஆண்வழி மூலமாக வரலாம்; அல்லது குறுக்கே பாயலாம். குறுக்கே பாய்வதற்கு த்ருஷ்டாந்தம் அழகுள்ள தகப்பனிடத்திலிருந்து பெண்ணுக்கு வரும் அழகு. அவள் தன்னழகைப் பெண்களுக்கு தாட்டுவதற்கு எவ்வளவுதான் ப்ரியப்பட்டாலும் அப்படிச் செய்யமுடியாது. அதைத் தன் பிள்ளைகளுக்குத் தாட்டுகிறாள்: அவர்களுடைய பெண்கள் தகப்பன் வழிப் பாட்டியினழகைக் கொண்டிருப்பார்கள்.

இத்தகைய விஷயத்தில் அழகு ஆணிலிருந்து பெண்ணுக்கும், திரும்பிப் பெண்ணிலிருந்து ஆணுக்கும் பாய்ந்து அதேமாதிரி அடுத்த பெண் தலைமுறைக்குப்போகிறது. ஆனால் எப்படியும் ஸ்த்ரீ ஸௌந்தர்யத்தைக் காப்பாற்றி அவர்களுக்குத் தாட்டுவது ஆண்தான்.

இதைவிட விநோதமான விஷயம் வேறென்னவேண்டும். ஆனால் லோகம் இப்படிப்பட்ட பொருந்தாதனவாகக் காணப்படும் இயல்புகளால் நிறைந்திருக்கிறது. இங்கு கவனிக்கவேண்டியது என்னவென்றால், தாய் தன்னழகை தன் சொந்தத் தகப்பனிடத்திலிருந்து வரப்பெற்றிருந்தாலொழிய அவ்வழகு மகளுக்குக் கிடைக்காது.

விவாஹ விஷயத்தி லுபயோகப்படும்படி இதனால் நாம் தெரிந்து கொள்ளக்கூடிய தென்னவென்றால், ஒரு ஸ்த்ரீ தனக்குப் பிறக்கப் போகும் பெண்கள் அழகுடன் பிறப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்பினால், யாருடைய இருவழிப் பாட்டன்மாரும் அழகு வாய்ந்தவர்களோ அந்தப் புருஷனைத்தேடிக் கல்யாணம் செய்து கொள்ளவேண்டும்.

## THE POSITION OF WOMEN IN BURMA.

### பர்மாவில் ஸ்த்ரீகளின் நிலைமை.

இந்தியாவில்போல பர்மாவில் ஜாதி, அடிமைவாய்ந்த ஸ்த்ரீகள், சிறுவரின் விவாகங்கள், கட்டாயவைதவ்யம் ஆகிய இவைகளும் இவைபோன்ற இந்தியாவிற்குரித்தான அநேக தீங்குகளும் கிடையா. இந்தத்தீங்குகளைப்பற்றி இந்தியாவில் சீர்திருத்தத் தலைவர்கள் இடைவிடாது கவனம் செலுத்திவருகிறார்கள். யோசித்துப் பார்த்தால் ஒரு இந்தியனுக்கு பெண்கள் ஸ்வயேச்சையாயிருக்கக் காண்பதைவிட ஆச்சர்யம் வேறொன்றுமில்லை. அப்படிப்பட்ட நிலைமை இந்தியாவிலிப்போது ஒருகனவாயிருக்கிறது. பர்மாவிலோ எத்தனையோ காலத்திற்கு முந்தியே அனுஷ்டானத்துக்கு வந்த விஷயமாயிருக்கிறது. பர்மாவில் ஸ்த்ரீ ஸ்வதந்தரத்தைப்பற்றியும், அவர்களுடைய வாழ்க்கை விசேஷங்களைப் பற்றியும், ஒரு நிருபர் ஸமீபத்தில் ஒரு வ்யாஸம் எழுதி வெளியிட்டிருக்கிறார். அதிலிருந்து சில விஷயங்களை இங்கு எடுத்து எழுதுகிறோம்.

ஹிந்துஸ்த்ரீ தன் குடும்பத்தி லனுபவிக்கும் ஸ்வதந்த்ரத்தைப்பற்றி ஹிந்துக்களில் பலர் புகழ்ந்து பேசுகிறார்கள். தன் நகைகளையும் புடவைகளையும் பொறுக்கி எடுத்துக்கொள்ள அவளுக்கு ஸ்வதந்த்ரமில்லையா? தன்னுடைய பத்து வயஸுப் பெண்ணுக்கு கல்யாணம் செய்யவேண்டுமென்று கட்டாயப்படுத்த அவளால் முடியாதா? இந்த விஷயங்களில் அவளுடைய விருப்பத்திற்கு விரோதம் செய்ய அவள் புருஷனுக்கு தைர்யமுண்டா? இதெல்லாவற்றிலும் மேலாக, அடுக்களையின் ஸ்வதந்த்ரம் அவளுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா? இதைவிட அவளுக்குவேறென்ன கௌரவம் வேண்டும்? இவ்விதமாய் வைதிகர்கள் வாதிக்கிறார்கள். ஆனால் பர்மியனோ வேறுமாதிரி எண்ணுகிறான். லோகம் புருஷருக்கெப்படியோ அப்படியே ஸ்த்ரீகளுக்கும் ஸ்வதந்த்ரம் என்பது அவன் கக்ஷி.

#### ஸ்த்ரீ ஸ்வாதந்த்ர்யம்.

ஸ்த்ரீக்கு ஸ்வதந்த்ரமென்பது அவள் பிறப்பால் ஏற்பட்டதேயொழிய, ஓயாமல் வாதாடிச் சண்டையிட்டபின் புருஷனால் கொஞ்சங்கொஞ்சமாய் கொடுக்கப்படுவதல்ல; அவள் புருஷனைப்போலவே கடவுளால் ஸ்வதந்த்ரத்துடன் ச்ருஷ்டிக்கப்பட்டிருக்கிறாள்; புருஷனுக்கு கட்டுப்பட்டு உழைக்க ச்ருஷ்டிக்கப்படவில்லை; ஆகவே, ஸ்த்ரீ தர்மங்களன்றி வேறெதுவும் அவளைக் கட்டுப்படுத்தமாட்டா என்பது பர்மியரின் அபிப்ராயம்.



இந்தியாவிலுள்ள கட்டுப்பாடுகள் போல, பர்மாவில் பர்மிய ஸ்த்ரீயைக் கட்டுப்படுத்தும் ஆசார வழக்கங்கள் ஒன்றுமில்லை. பௌத்தமதத்தில் ஸ்த்ரீக்கு தாழ்ந்த நிலைமையே ஏற்பட்டுள்ளதென்று நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம். ஆனால் நாம் ஒரு பௌத்த தேசத்தைப் போய் பார்த்தால் அப்படியல்லவென்று விளங்கும். நிர்வாணம் என்னும் மோக்ஷம் அடைவதற்கு ஸ்த்ரீ தடங்கலாயிருக்கிறாள் என்று பௌத்தர்களில் ஆண்கள் சொல்லக்கூடும். இது உண்மையாயிருக்கலாம். இயற்கையாக, மனிதனுக்கு மோக்ஷத்தைவிட ஸ்த்ரீயின்பேரில் பற்று அதிகம். ஆனால் பௌத்த ஸமூகம் இவ்வாதாரத்தின் பேரில் ஏற்பட்டதல்ல. புத்தரிடத்தில் ஸ்த்ரீகள் சிஷ்யைகளாயிருந்தார்கள். அவரும் அவர்களை ஆண் சிஷ்யர்களைப்போலவே கௌரவித்து வந்தார். தற்போது ஸ்த்ரீகள் ஸந்யாஸினிகளாகி பரிசுத்த மார்க்கத்தை யனுஸரிக்கிறார்கள். எல்லாமதச் சடங்குகளிலும் பூஜைகளிலும் ஸ்த்ரீ ப்ரதானமாயிருக்கிறாள். கூட்டங்கூடி நடத்தும் கார்யங்களில் மனிதனுடன் ஸமத்வம் பாராட்டுகிறாள். தனக்கு ஒரு புருஷனைத் தேடிக்கொள்ளும் விஷயத்திலோ அவளுடைய ஸ்வயேச்சையை ஆக்ஷேபிப்பவரில்லை. சட்டப்படி அவளுக்கு கல்யாணமான பிறகுங்கூட அவளுடைய சொந்த சொத்தின்பேரில் பாத்யமுண்டு. இயற்கையில் அவளுக்கு தேகக் கூற்றாலும் மனோபாவத்தாலும் ஏற்பட்ட குறைகளுண்டு. இவைகளால்தான் அவள் மனிதனைப்போல் லோகவ்யவகாரங்களில் முன்வந்து நிற்க முடிகிறதில்லை. ஆனால் இவைகளால் ஸ்த்ரீ மனிதனுக்குத் தாழ்ந்து போவதில்லை. ஆண்களும் ஸ்த்ரீகளைத் தாழ்ந்தவர்களாக நினைக்கும்படி நீதியாவது வழக்கமாவது எதுவும் பர்மாவில் கிடையாது.

#### இந்தியாவுக்கும் பர்மாவுக்குமுள்ள வித்யாஸம்.

இந்தியாவில் பெண்பிறந்தால் பெற்றோர்கள் விசாரப்படுகிறார்கள். அடிக்கடி பெண் குழந்தைகளைப் பெறுவது பெருத்த துக்கமென்றும், தங்கள் பூர்வகர்மத்தின் பலனென்றும் எண்ணுகிறார்கள். பெண் பிறந்ததென்று கேட்டவுடனே தகப்பன்முகம் சிறுத்துவிடுகிறது. அடிக்கடி பெண் குழந்தைகளைப்பெறுகிற பெண்சாதியின் பேரில் அவனுக்கு வெறுப்புண்டாகிறது. தாயழுகிறாள். அயலார்கள் அதைக் கெட்ட சகுனமாக நினைக்கிறார்கள். யாதொரு பாவமுமறியாத குழந்தை பிறக்கும்போதே இந்த துர்ப்பாக்யத்துடன் பிறக்கிறது. இயற்கை விரோதமாயும் காரணமாயும் ஏற்பட்ட இந்த துர்ப்பாக்யம் அந்தப் பெண் புதைக்கவோ அல்லது எரிக்கவோ படும்வரையில் அவளைவிட்டு நீங்குவதில்லை. பர்மாவிலோ அப்படியல்ல. பர்மனுக்கு ஆண்பிறப்பதில் எவ்வளவு ஸந்தோஷமோ அதே ஸந்தோஷந்தான் பெண் பிறப்பதிலும். பெற்றோர்களுடைய அன்பிற்கு இருவரும் உரியவர்களே. அடிக்கடி பெண்பிறப்பது கெட்ட சகுனமென்னும் எண்ணம் பர்மியர்களுக்கு கிடையாது. பர்மியர்கள் அப்படிப்பட்ட எண்ணத்தை இகழ்வார்கள். பெண் பிறப்பதைவிட ஆண் பிறப்பது ரொம்ப ஸந்தோஷமென்னு மெண்ணமே பர்மாவில் கிடையாது.

இந்தியாவில் ஒரு பத்துவயஸுப் பெண் மனைவியென்னும் பெயரடைந்து விடுகிறாள். 13 அல்லது 14 வயஸில் அவள் ஒரு குழந்தைக்கு தாயாகவோ அல்லது ஒரு ஸமயம் கைம்பெண்ணாகவோ ஆகிறாள். சில வர்ஷங்களுக்குப்பின் அவள் பெண்களுக்கு கல்யாணம் பண்ணவேண்டி வருகிறது. இன்னும் சில வர்ஷங்களுக்குப்பின் பாட்டியாய் விடுகிறாள். இவ்விதமாய் இந்தியாவில் ஸ்த்ரீயின்

வாழ்க்கை நடந்து வருகிறது. பர்மாவிலோ பெண்ணுக்கு பத்துவயதானாலும் இன்னும் அவள் ஸந்தோஷமும் விளையாட்டும் நிறைந்த ஒரு குழந்தையாகவே யிருக்கிறாள். கன்யா மடத்தில் அல்லது தன் தாயிடத்தில் அரிச்சுவடி கற்றுக்கொண்டோ, வயலில் மாடு மேய்த்துக்கொண்டோ, கடையில் தொழில் கற்றுக்கொண்டோ இருப்பாள். அவள் நெய்யவும் பின்னவும் கற்றுக்கொள்கிறாள். வயஸு முதிரமுதிர ஒரு பர்மியஸ்த்ரீயின் தினசரி வேலைகளில் பழகுகிறாள். பர்மிய ஸ்த்ரீகள் நாகரீக நாஸூக்குகளை அதிகமாய் கவனிக்கிறதில்லை. லோகவ்யவகாரங்களை சீக்ரத்தில் தெரிந்துகொள்கிறாள். பெரியவளான பிறகு அவள் அந்த ஜனஸமூகத்துக்கு ஒரு முக்ய உதவியாகிறாள். அவள் ஜீவனத்துக்குவேண்டிய பொருள்களை உண்டாக்குவதில் மிகவும் உதவியாக இருக்கிறாள். வயல் அல்லது நெசவுத் தறியில் மனிதன் பக்கத்திலிருந்து தன்னாலியன்றமட்டும் ஸகாயம் செய்கிறாள். பட்டணங்களில் சில்லரை வ்யாபாரம் முழுவதும் அவளாலேயே நடந்துவருகிறது. இப்படி வெளியில் வேலை செய்வதோடு பல ஸ்த்ரீகள் வீட்டுக்குள்ளிருந்தே வேலை செய்து லாபம் அடைகிறார்கள். பலர் வீட்டு வேலையில்லாதபோது சுருட்டுகள் செய்கிறார்கள். அல்லது தையல்வேலை செய்கிறார்கள்.

பர்மிய ஸ்த்ரீ கல்யாண விஷயத்தில் தன்னிஷ்டம்போல் நடப்பவள். அவள் இஷ்டத்திற்கு விரோதமாகக் கல்யாணம் செய்துகொள்ளும்படி அவளைக் கட்டுப்படுத்த யாரும் துணியார்கள். அவள் கல்யாண மில்லாமலே யிருக்கவிரும்பினால், தன் பெற்றோருக்காவது உறவினருக்காவது பாரமாயிராமலே அப்படி யிருக்கமுடியும். எவரும் தன்மகளின் கல்யாணத்தைப்பற்றி விசாரப்பட வேண்டியதில்லை. ஸ்த்ரீதனங்களும் வரதக்ஷிணையும் பர்மாவில் கிடையா. எந்தப் பெண்ணும் பெரியவளாகும் வரையில் கல்யாணம் செய்துகொள்ள விரும்புவதில்லை. அப்படி வயஸு வந்து கல்யாணத்தில் விருப்பமும் ஏற்பட்டால் தானே புருஷனைத் தெரிந்தெடுத்து பெற்றோர்களின் ஸம்மதியைக் கேட்கிறாள். பெற்றோர்களும் அநேகமாய் ஸம்மதப்பட்டுவிடுகிறார்கள். அப்படி ஸம்மதிக்காவிட்டால் தன் விருப்பத்தை நிறைவேற்றவும் தன் ஸ்வதந்த்ரத்தை ஸ்தாபிக்கவும் அவளுக்குத்தெரியும். அவள் திடீரென்று ஒருவருக்கும் தெரியாமல் அருகிலுள்ள காட்டுக்குப்போய் தன் காதலனுடன் வஸித்துவருவாள். பெற்றோர்கள் வீணாகத் தேடுவதுதான் மிச்சம். ஆனால் ஓடிப்போய் கல்யாணம் செய்துகொண்ட விஷயம் ஊரெல்லாம் பரவிவிடும். பிறகு பெற்றோர்கள் ஸம்மதிக்க வேண்டியதுதான்.

பர்மியருள் கல்யாணம்.

பர்மியருள் கல்யாணம் என்பது மதத்திற்கு ஸம்பந்தப்பட்டதல்ல. அங்கு அது இருவரில் ஒருவருடைய இஷ்டப்படி பிறியக்கூடிய ஒரு ஒப்பந்தம்தான். பௌத்தமதத்தில் ஜனஸமூகத்துக்கு ஸம்பந்தப்பட்ட கடினமான நிர்ப்பந்தங்கள் ஒன்றும் கிடையாது. அது ரொம்ப மதிப்பதெல்லாம் அந்தக் கரண சுத்தியே. இதெங்கில்லையோ அங்கு வெளி நிர்ப்பந்தங்களெத்தனை யிருந்தபோதிலும் ப்ரயோசனமில்லை. இதனால் பர்மாவில் விவாகம் செய்து கொண்டவர்கள் இஷ்டப்படி அடிக்கடி பிரிகிறார்கள் என்று சொல்லக்கூடாது. இருவரும் இஷ்டப்பட்டு விவாகம் செய்துகொள்ளப் படுகிறபடியாலும், வர்ஷங்கள் செல்லச்செல்ல அன்பு அதிகரிப்பதாலும் தாம்பத்யம் பலமடைந்து இருவரும் பிரிவதென்பது அரிதாகிவிடுகிறது.



## LIVES OF THE ALWARS.

BY K. T. SUNDARARAJA ACHARIAR, B. A., L. T.,
*Teacher, Muthialpet High School, Madras.*

## ஆழ்வார்கள் சரித்ரம்.

(சென்ற மாஸத்திய ஸஞ்சிகையின் 317-ம் பக்கத் தொடர்ச்சி.)

### V. முதலாழ்வார்கள்.

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் இவர்கள் மூவரும் ஒரே காலத்தில் உலகத்தில் எல்லா ஆழ்வார்களுக்கும் முதலாவதாய்த் தோன்றியபடியால், இவர்களுக்கு மொத்தமாய் முதலாழ்வார்கள் என்று பெயர். ஒவ்வொருவரையும் பற்றி முன்னாலேயே சொல்லியிருக்கிறது. இங்கே இவர்கள் மூவருக்கும் பொதுவான விஷயங்கள் விவரிக்கப்படும். விஷ்ணுவின் சேனைத் தலைவருக்கு விஷ்வக்ஸேனர் என்று ஸம்ஸ்க்ருதத்திலும், சேனை முதலியார் என்று தமிழிலும் பெயர். விஷ்ணுவின் உத்தரவு ப்ரகாரம் அந்தச் சேனை முதலியாரே பூலோகத்துக்கு வந்து இந்த முதலாழ்வார்கள் மூவருக்கும் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்தார். இதுவுமல்லாமல் இவர்களுக்கு பலவித மந்த்ரங்களையும், நூல்களையும் நன்றாய்க் கற்பித்துவிட்டு தன்னுடைய இருப்பிடம் போய்ச் சேர்ந்தார். இவர்கள் ஈச்வர அம்சமாகையினால் எல்லா விஷயங்களையும் அதிக சீக்ரமாகவே கற்றுக்கொண்டார்கள். ஸாதாரண ஜனங்களைப் போல் காலத்தைக் கழிக்காமல் ஈச்வர பக்தியை எப்பொழுதும் செய்து வந்தார்கள்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்திற்குப் போய் அங்கங்கே வைஷ்ணவ மதத்தைப் பரவச்செய்தார்கள். அப்படி யிருக்கும் பொழுது ஒருநாள் முதலாழ்வார்கள் மூவரும் ஒன்று சேரும்படி நேர்ந்தது. விழுப்புரத்திற்கு ஸுமார் பத்துமைலுக்கு அப்பால் பெண்ணை யாற்றங்கரைமீதுள்ள திருக்கோவலூரில் ம்ருகண்டுமஹரிஷி பல வர்ஷங்களாக ஈச்வரனைக் குறித்துத் தவஞ்செய்து வந்தார். அந்த ஆச்ரமத்திற்கு ஒருநாள் ஸூர்யன் அஸ்தமனமான பின் பொய்கையாழ்வார் போனார். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் பூதத்தாழ்வாரும் அதே இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார் "வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத் புவி" என்கிறபடி ஒருவரை யொருவர் நமஸ்காரம் செய்துகொண்டார்கள். பூதத்தாழ்வார் இரவில் அங்கே தங்குவதற்கு இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்க, பொய்கை ஆழ்வார் "இங்கே ஒருவர் படுக்கலாம். இருவர் இருக்கலாம்" என்றார். இருவரும் பேசிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் பேயாழ்வாரும் அங்கேயே வந்து இடம் கேட்க, அவ்விருவர்களும் "இங்கே ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம். மூவர் நிற்கலாம்" என்றார்கள். ஆகிய மூவருமாய் இரவு முழுவதையும் பகவானைக் குறித்துப் பேசிக்கழிக்கத் தீர்மானித்தார்கள் நடு ராத்ரி ஆனதும் மழையும், இடியும், மின்னலும் அதிகமாய் உண்டாயிற்று திருக்கோவலூர் பெருமாளான "த்ரிவிக்ரம மூர்த்தி" அங்கே அந்த ஸமயம் அவர்களை கருணையுடன் பார்க்கவந்தார். நெருக்கம் மிகவும் அதிகமாயிருந்தது. இன்ன காரணமென்று இவர்களுக்குத் தெரியவில்லை. மழையின் கொடுமையினால் வெளியில் போகவும் முடியவில்லை. [illegible] நெருக்கம் அதிகப்பட்டது. மூவரும் [illegible] தங்களை நெருக்குவது [illegible]

பகவான் என்று அறிந்து அவரைஸ்தோத்ரம் செய்தார்கள். முதல், இரண்டு, மூன்றும் திருவந்தாதிகள் இந்த ஸமயத்தில் தான் பாடப்பட்டன. இவர்களுடைய பக்தியை நன்றாய் விளக்கக்கூடிய சில பாசுரங்களை இங்கு எழுதுகிறோம்.

பொய்கை ஆழ்வார் அருளிச்செய்த முதல் திருவந்தாதியின் முதல் பாட்டு.

"வையம் தகளியாவார் கடலே நெய்யாக-
வெய்ய கதிரோன் விளக்காகச்-செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டினன் சொன் மாலை-
இடராழி நீங்குவே யென்று."

(இதன் பொருள்) வையம்-பூமி, தகளியா - அகலாகவும், வார்கடலே-நீண்டகடலே, நெய்யாக-நெய்யாகவும், வெய்ய கதிரோன்-மிகவும் வெப்பம் பொருந்திய ஸூர்யனே, விளக்காக-விளக்காகவும், செய்ய-சிவந்த, சுடர்ஆழியான்-மிகவும் ப்ரகாசத்துடன்கூடின சக்ராயுதத்தை உடையவனாகிய, திருமாலினது - விஷ்ணுவினது, அடிக்கு (ஏ) திருவடிகளுக்கே-இடர் ஆழி-துன்பமாகியகடலிலிருந்து, நீங்க என்று-நீங்குதற்கென்று, சொல்மாலை - சொல்லாலாகிய இந்த முதல் திருவந்தாதி மாலையை, சூட்டினேன்-செய்தேன்.

இப்பாட்டை ஆதியாய்க் கொண்டு நூறு பாட்டுக்களைப்பாடி கடைசியாய் திருவிக்ரமமூர்த்தியின் பெருமையை பின் வரும் கடைசிப்பாட்டால் பாடி திருவந்தாதியை முடிவு செய்தார்.

"ஓரடியுஞ் சாடுதைத்த வொண்மலர்ச் சேவடியும்-
ஈரடியுங் காணலாமென்னெஞ்சே!—ஓரடியின்
தாயவனைக் கேசவனைத் தண்டுழாய் மாலைசேர்-
மாயவனையேமனத்து வை."

(இதன் பொருள்) ஓரடியும்-விஷ்ணுவின் ஒரு திருவடியும், சாடுதைத்த-தூக்கிவைத்த, ஒண்-ஒளியுடன் விளங்குகிற, மலர்ச்சேவடியும் தாமரைப் பூப்போல விளங்கும், சிவப்பு நிறமுள்ள திருவடியும், ஈரடியும் - ஆகிய இந்த இரண்டு திருவடிகளையும், என்னெஞ்சே-என்னுடைய மனமே, காணலாம் - பார்க்கலாம். ஓரடியின் - ஓர் திருவடியினால், தாயவனை-உலகமெல்லாவற்றையும் அளந்தவனை, கேசவனை -விஷ்ணுவை, தண்டுழாய் மாலை-குளிர்ச்சியுடன் கூடின துளஸி மாலையை - சேர். அணிந்துகொண்டிருக்கிற, மாயவனையே - மாயையில் வல்லவனான விஷ்ணுவையே, மனத்துவை-நீ உன் மனத்தில்வை. (அந்த திருவடிகளைக் குறித்தே எப்பொழுதும் த்யானம் செய்.)

பூதத்தாழ்வார் அருளிச்செய்த இரண்டாந் திருவந்தாதியின் முதல் பாட்டு.

"அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக-
இன்புருகு சிந்தையிடுதிரியா—நன்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணற்கு-
ஞானத் தமிழ்புரிந்த நான்."

(இதன் பொருள்) ஞானத்தமிழ்-ஞானமாகிய தமிழை, புரிந்த-விரும்பிய, நான் - அடியேன், அன்பே - அன்புதானே, தகளியாக-அகலாகவும், ஆர்வமே-ஆசையே, நெய்யாக-நெய்யாகவும், இன்பு உருகு - ஸுகத்தினால் உருகுகின்ற, சிந்தை - மனமே, யிடுதிரியா - போடப்பட்ட திரியாகவும், நன்பு - விசேஷ லக்ஷணத்துடன்கூடின ஆத்ம வஸ்துவானது, உருகி - உருகி, ஞானம் - ஞானமாகிய, சுடர் விளக்கு - சுடருடன் கூடினவிளக்கை, நாரணற்கு - நாராயணன் பொருட்டு ஏற்றினேன். ஏற்றி வைத்தேன்.

இப்படி ஆரம்பித்து நூறு பாட்டுக்களைப் பாடி கடைசியாய் ஈச்வர பக்தி மிகவும் அதிகமாய்ப் போனதினால் கடைசிப் பாட்டில் பகவான் பெயர்களையே சொல்லி முடித்தார்.

"மாலே! நெடியோனே! கண்ணனே!—விண்ணவர்க்கு
மேலா! வியன் துழாய்க் கண்ணியனே!—மேலாய்
விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே!—என்றன்
னளவன்றால் யானுடைய அன்பு."



(இதன் பொருள்.) மாலே!-எல்லாருக்கும் பெரியவனானவிஷ்ணுவே! நெடியோனே!-உலகத்தையெல்லாம் ஒரு அடியாய் அளந்த மேன்மை பொருந்திய திருவடிகளுடன் கூடினவனே! கண்ணே! -நீலமேக ச்யாமள நிறத்துடன் கூடின க்ருஷ்ணபகவானே!, விண்ணவர்க்கு மேலா! - ஆகாசவாஸிகளான தேவர்களுக்கெல்லாம் மேலானவனே! வியன் -பெரிய, துழாய்க் கண்ணியனே!-துளஸி மாலையை திருமேனியில் அணிந்தவனே!, மேலாய் - மிகவும் சிறப்புடனே, விளவின்காய்-விளாங் காய்களை, கன்றினால் - ஒரு கன்றுக் குட்டியினால், வீழ்த்தவனே - கீழே விழும்படி செய்தவனே. யானுடைய அன்பு - என்னுடைய அன்பானது, என்றனளவன்று (ஆல்) - என்னுடைய அளவிலே அடங்கியதில்லை.

பேயாழ்வார் பாடின மூன்றாந் திருவந்தாதியின் முதல் பாட்டு அவர் எப்பேர்ப்பட்டவரென்பதையும், அவருடைய ஈச்வர பக்தியையும் நன்கு விளக்கிக்காட்டும்.

"திருக்கண்டேன் பொன்மேனி
கண்டேன்—திகழும்
அருக்கனணி நிறமுங்கண்டேன்-
செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங்கைக்
கண்டேன்-
என்னாழி வண்ணன்பா லின்று."

(இதன்பொருள்.) இன்று-இன்றையதினம், என் ஆழி வண்ணன் பால்-கடல் நிறம் அமைந்த என் பரமாத்வான விஷ்ணுவிடத்தில், திருக்கண்டேன் - மேன்மை பொருந்திய லக்ஷ்மிதேவியைக்கண்டேன், பொன் மேனி கண்டேன்-தங்கம்போன்ற அழகிய மேனியை கண்டேன்-தர்சனம் செய்தேன், திகழும் - ப்ரகாசிக்கின்ற, அருக்கன் - ஸூர்யனுடைய, அணி நிறமுங் கண்டேன் - அழகிய நிறத்தையும் கண்டேன்; செரு - யுத்தத்தில், கிளரும் - கிளர்ச்சியுடன் விளங்குகிற, பொன்னாழி-அழகிய சக்ராயுதத்தையும், புரிசங்கங்கை கண்டேன் - வலம்புரி சங்கத்தையும் தர்சித்தேன்.

முதலாழ்வார்கள் மூவரும் அந்த ஊரில் சில காலமிருந்து அங்கே உள்ளவர்களை ஈச்வரபக்தி பண்ணும்படி செய்துவிட்டு அவரவர்கள் வேவ்வேறாகப் போனார்கள். வெகு இடங்களுக்குச் சென்று வைஷ்ணவ மதத்தைப் பரவச்செய்தார்கள். கடைசியாய் மறுபடியும் அந்த திருக்கோவிலூருக்கே வந்தார்கள். மூவரும் மறுபடியும் ஒன்று கூடினார்கள். இவர்கள் பின்னால் சொல்லப்போகும் திருமழிசை ஆழ்வாரையும் கண்டு அவருடன் சில காலத்தைக் கழித்துவந்தார்கள். கடைசியாய் இவர் மூவருமாய் அங்கிருந்து வேறு லோகம் போனார்கள்.

இவர்கள் ஒவ்வொருவரும் அவரவர்கள் தவத்தின் பலத்தால் 3325 வருஷகாலம் இந்த பூமியில் வஸித்தார்கள். பின்கூறியிருக்கும் பாசுரத்தால் முதலாழ்வார்கள் கீர்த்தி நன்றாய் விளங்கும்.

"மற்றுமுள்ள வாழ்வார்களுக்கு
முன்னே வந்துதித்து
நற்றமிழால் நூல் செய்து நாட்டையுய்த்த—
பெற்றிமையோ
ரென்று முதலாழ்வார்களென்றும்
பெயரிவர்க்கு
நின்றதுலகத்தே நிகழ்ந்து."

(இதன்பொருள்.) மற்றுமுள்ள-இதரமான, ஆழ்வார்களுக்கு-ஆழ்வார் முதலியவைஷ்ணவ பக்தர்களுக்கு, முன்னே- முன்பாக, வந்துதித்து-இப்பூலோகத்தில் அவதாரஞ்செய்து, நற்றமிழால்-நலம்பொருந்திய தமிழ் பாட்டுக்களினால், நூல் செய்து முதல் திருவந்தாதி, இரண்டாம் திருவந்தாதி, மூன்றாம் திருவந்தாதி என்கிற மூன்று திவ்ய நூல்களை செய்து, நாட்டை - இந்தப் புண்ய பூமியை உய்த்த-

உஜ்ஜீவிக்கும்படி செய்வித்த, இவர்க்கு இந்த மூன்று ஆழ்வார்களுக்கும், பெயர் - பெயரானது, பெற்றிமையோரென்றும் - பெருமை பொருந்திய தேவர்களென்றும், முதலாழ்வார்களென்றும் - முதலாழ்வார்களென்றும், உலகத்தே - இந்த உலகத்தில், நிகழ்ந்து நின்றது - எக்காலமும் நிலைபெற்று நின்றது.

முதலாழ்வார்களின் காலம்.

பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், ஆகிய மூவரும் ஒரு ஸமயத்தில் வஸித்தவர்கள். பூதத்தாழ்வார் மஹாபலிபுறத்தின் பெருமையைக் குறித்துப்பாடியிருக்கிறார். பல்லவ அரசனான மஹாமல்லன் என்ற முதலாவது நரஸிம்மவர்மன் காலத்தில் தான் மஹாபலிபுரம் ஏற்படுத்தபட்டதென்றும், அதற்கு முன் இந்த ஊரே யிருந்ததில்லையென்றும் சரித்ரம் எழுதுகிறவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த அரசன் கி. பி. (கிருஸ்து பிறந்து) ஏழாவது நூற்றாண்டின் மத்தியில் வஸித்தான். ஆனதினால் முதலாழ்வார்கள் கி. பி. ஏழாவது நூற்றாண்டின் மத்தியில் வஸித்ததாகக் கொள்ளவேண்டும்.

## VI. நம்மாழ்வார்.

இந்த ஆழ்வார் திருநெல்வேலிக்கு ஸுமார் 18 மைல் கிழக்கேயுள்ள ஆழ்வார் திருநகரி என்னுமிடத்தில் அவதரித்தார். அந்தக் காலத்தில் அந்த ஊருக்கு 'திருக்குருகூர்' என்று பெயர். ஆழ்வார் பிறந்தபடியினால் அந்த ஊருக்கு ஆழ்வார் திருநகரி என்ற பெயர் உண்டாயிற்று. (அதற்கு ஆழ்வார் பிறந்த மேன்மையுடன் கூடின ஊர் என்று பொருள்.) அந்த ஊர் தாம்ப்ரபர்ணி நதிக்கரையில் இருக்கிறது. இவர் தகப்பனார் பெயர் காரியார். இவர் தாயார் பெயர் உடைய நங்கையார். இவர்கள் இருவரும் ஜாதியில் வேளாளர்கள். வெகு காலம் வரையில் அவர்களுக்கு பிள்ளையொன்றும் பிறக்கவேயில்லை. அதற்கு வேண்டிய வைத்யங்களை செய்வதற்காக காரியாரை அவர் மாமனார் திருவாங்கூருக்கு ஸமீபத்திலுள்ள திருவண்பரிசாரத்துக்கு அழைத்துப் போனார். திருவண்பரிசாரம் என்னும் ஊர் உடைய நங்கையாருக்கு பிறந்தவிடம். அது அநேக வைத்யர்களுக்கும் மந்த்ரவாதிகளுக்கும் வெகு காலமாய் பேர் போனது. மாமனார் இஷ்டப்படி அவர் ஊருக்குப் போயும், அங்கு ஒரு ப்ரயோஜனமும் ஏற்படாமல் போகவே, காரியார் மறுபடியும் ஆழ்வார் திருநகரிக்குத் திரும்பிப்போனார். போகும்பொழுது திருக்குருங்குடி (ஆழ்வார் திருநகரிக்கு ஸுமார் 25 மைல் தூரத்திலுள்ள ஒரு விஷ்ணு ஸ்தலம்) யில் சிலகாலம் அவர்கள் இருவரும் தங்கினார்கள். அந்த ஸ்வாமியை நமஸ்காரம் செய்து தங்களுக்கு புத்ரபாக்யம் அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். ஸ்வாமியும் கோவில் பட்டர் மூலமாய் "தாமே பிள்ளையாய் வந்து பிறப்பதாய்" வாக்களித்தார். கொஞ்ச காலம் அங்கே இருந்து அந்த சுவாமிக்கு வேண்டியபணிவிடைகளை செய்துவிட்டு தங்கள் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அது முதல் உடைய நங்கையார் கர்ப்பவதியானாள்.

அவதாரத்தின் விசேஷம்.

பவிஷ்யத் புராணம் (வரப் போவதைச் சொல்லும் புராணம்), "பார்க்கவ புராணம்; பத்ம புராணம் ப்ரும்மாண்ட புராணம், மார்க்கண்டேய புராணம் முதலிய புராணங்களில் நாராயணனான விஷ்ணுவானவர் தாமே கலியுக ஆரம்பத்தில் சூத்ரவம்சத்தில் விஷ்வக்ஸேனருடையவும், தான் எப்பொழுதும் மார்பில் அணிந்து கொண்டிருக்கும் கௌஸ்துபத்தினுடையவும் அம்சமாக பூலோகத்தில் அவதாரம் செய்யப் போவதாய், சொல்லியிருக்கிறது. ஆகையினால் இந்த ஆழ்வார், விஷ்ணு,



விஷ்வக்ஸேனர், கௌஸ்துபம் ஆகிய மூன்றினுடைய அம்சம். இவர் கலியுகம் ஆரம்பித்து 43 - வது நாள், ப்ரமாதி வர்ஷம் வைகாசி மாதம் 12-ந் தேதி, சுக்லபக்ஷம், வெள்ளிக்கிழமை, பௌர்ணமிதிதி, விசாக நக்ஷத்ரம், கடக லக்னத்தில் பூலோகத்தில் முன் சொன்ன விஷ்ணுபக்தர்களான காரியாருக்கும் உடைய நங்கையாருக்கும் குழந்தையாய் அவதரித்தார்.

பால்ய வயஸின் விசேஷம்.

பிறந்ததும் மற்ற குழந்தைகளைப் போல் இந்தக் குழந்தை அழவேயில்லை. பால் குடிக்கவுமில்லை வாயைத் திறக்கவுமில்லை. அப்படிக்கிருந்தும் அக்குழந்தையின் உடம்பு கொஞ்சங்கூட வாடாமல் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்தது. தாய் தந்தையர்கள் ஈச்வரன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு, பிறந்த பன்னிரண்டாம் நாள் குழந்தையை எடுத்துக்கொண்டு அந்த ஊர்க் கோயிலுக்குப் போய் அங்கே குழந்தைக்கு ஸ்வாமி தர்சனம் செய்து வைத்தார்கள். உலக நடவடிக்கைகளுக்கு மாறான பிறவியுடன் கூடின அந்தக்குழந்தைக்கு 'மாறன்" என்று பெற்றோர்கள் பெயரிட்டார்கள். அந்தக் கோயிலில் ஒரு பெரிய புளிய மரம் ஒன்று இருந்தது. (ஆதிசேஷனே இப்படி புளியமரமாக உண்டாகி இந்தக் குழந்தைக்கு குடைக்கு ஸமமான நிழலைக் கொடுத்தார் என்பது ஐதீகம்.) அந்த மரத்தினடியில் ஒரு தொட்டியில் இக்குழந்தையை விட்டு விட்டார்கள்.

சடகோபன் என்னும் பெயர்.

கர்ப்பத்திலிருக்கும்பொழுது குழந்தைகள் மிகவும் புத்திசாலிகளாயிருக்கின்றனவாம். பிறந்ததும் பேச ஆரம்பிக்கும்பொழுது 'சடம்' என்னும் ஒரு காற்று அவர்களை பேச முடியாமல் செய்கிறது. இந்தக் குழந்தை அப்படிப்பட்ட சடமென்னும் காற்றை "ஹும்" என்ற சப்தத்தினால் ஜயித்துத் தன் கிட்ட வராமல் தடுத்தபடியினால் இதற்கு "சடகோபர்" என்ற பெயர் உண்டாயிற்று.

தாய் தந்தையர்கள் தமக்குப் பிறந்த குழந்தை ஸாதாரணக் குழந்தையல்ல வென்றும், தெய்வீகப் பிறவி யென்றும், அதற்காக தாங்கள் வருத்தப்படக் கூடாதென்றும் எண்ணி அந்த ஊர் ஸ்வாமியான ஆதிநாதன் மேல் பாரத்தைப் போட்டு விட்டு குழந்தையையும் புளிய மரத்தடியில் ஒரு தொட்டியில் விட்டுவிட்டு வீடு போய்ச் சேர்ந்தார்கள். இவர் பதினாறு வர்ஷ காலம் பேசாமலும், கண்களைத் திறவாமலும், ஒன்றிலும் ஆசைப்படாமலும் ஈச்வர த்யானம் செய்து வந்தார். கடைசியாய் ஈச்வரன் உத்தரவுப்படி விஷ்வக்ஸேனர் தேவலோகத்திலிருந்து வந்து இவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களை செய்வித்து, வேண்டியபடி உபதேசமும் செய்துவிட்டு தமது இருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

நம்மாழ்வாரும் மதுர கவியும்.

மதுரகவி என்னும் பதத்திற்கு இனிமையாய் பாடுபவர் என்று அர்த்தம். இப்பெயர் கொண்ட ஒரு பக்தர் ஒரு ஸமயம் ஸ்வாமி தர்சனத்திற்காக ஒவ்வொரு ஊராய்ப் போய் கடைசியாய் அயோத்தியை அடைந்தார். அங்கே ஒருநாள் இரவு தென்திக்கில் ஒரு ப்ரகாசமான தேசஸ் அவர் கண்ணுக்குத்தோன்றிற்று. காட்டுத் தீ யென்று அதை எண்ணி மதுரகவி சும்மா இருந்துவிட்டார். மறுநாளும் அப்படியே தோன்ற, அதை இன்னதென்று கண்டு பிடிப்பதற்காக பகல் முழுவதும் தூங்கிவிட்டு, இரவில் அதை அடையாளமாய் வைத்துக்கொண்டு தெற்கே போனார். கடைசியாய் ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்தார். அங்கே ஏதாவது விசேஷமிருக்கும் என்று தீர்மானமாய் யெண்ணினார். அங்கே ஒன்றையும் காணாததனால் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டு மறு

படியும் தெற்கே போய் திருநகரிக்கு வந்து சேர்ந்தார். அவ்விடத்தில் நம்மாழ்வாரைப்பற்றிய ஆச்சர்யத்தைக் கேட்டு கோயிலுக்குப் போய், ஆழ்வார் முன்னிலையில் வந்து ஒரு சிறு கல்லை யெடுத்து இவர் பக்கத்தில் எறிந்தார். ஆழ்வாரும் திடுக்கிட்டாப்போல் விழித்துக்கொண்டார். உடனே மதுரகவி இவருடைய ஞானம் எப்படிப்பட்டது என்று அறிவதற்காக "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே வளரும்" என்று கேட்டார். (சரீரமானது ஞானமில்லாதது. ஆத்மாவானது ஞானத்துடன் கூடினது. ஆத்மாவானது சரீரத்துடன் சேர்ந்தால், அது எதை அனுபவிக்கும். எங்கே வஸிக்கும், என்பது பொருள்.) ஆழ்வாரும் இதன் கருத்தை நன்றாய் அறிந்து உடனே "அத்தைத் தின்று அங்கேயே வளரும்" என்றார். (சரீரத்தைச் சேர்ந்த ஸுக துக்கங்களை அனுபவித்துக்கொண்டு அங்கேயேயிருக்கும். என்பது பொருள்.) இதற்கு பலவிதமாய் தாத்பர்யம் சொல்வது வழக்கம்.

இந்த வார்த்தைகள் அவருக்கு அதிக ஸந்தோஷத்தைக் கொடுத்தபடியால் அவர் அன்று முதல் இந்த ஆழ்வாருக்கு முக்யமான சிஷ்யரானார். தனக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்யும்படி மதுரகவி மிகவும் வணக்கத்துடன் வேண்டிக்கொண்டார். அப்படியே ஆழ்வாரும் அவருக்கு க்ருபை செய்தார்.

மங்களா சாஸனம்.

ஈச்வரனே இவ்வாழ்வார் மூலமாய் பூலோகத்தின் நன்மைக்காக அவதாரஞ் செய்தாரென்று முன் சொல்லப்பட்டது. இவருக்கு தன் தர்சனத்தைக் கொடுப்பதற்காக தன்னுடைய மனைவிகளான ஸ்ரீதேவியுடனும், பூதேவியுடனும், கருட வாஹனத்தின்மீது ஏறிக்கொண்டு, இந்த ஆழ்வார் முன் தோன்றினார். இதுவுமல்லாமல் தன்னுடைய கருணையைக் காட்டுவதற்காக "நம்மாழ்வார்" என்ற ஒரு பெயரையும் இவருக்குக் கொடுத்தார்.

(இன்னும் வரும்.)

## DISTRIBUTION OF SEEDS.
## விதைகள் பரவுதல்.

மரஞ்செடிகள் தங்கள் வம்சத்தை வ்ருத்தி செய்வதற்காகவே விதைகளை உண்டாக்குகின்றன. அந்த விதைகள் மரஞ்செடிகளினடியிலேயே விழுந்தால், விதைகளெல்லாம் நெருக்கமாய்ப்போய் ஒன்றும் சரியாக முளைக்காது. மேலும் மரஞ்செடிகளின் நிழல் இளஞ்செடிகள் வளருவதற்கு பாதகமாக இருக்கும். இந்த அஸௌகர்யம் ஏற்படாமலிருக்கவேண்டி அநேக மரஞ்செடிகளில் விதைகளை சிதறும்படி செய்ய தக்க ஸாதனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. விதைகளும் தக்க இடங்களுக்குப் போகும்படி சில ஸாதனங்களை அடைந்திருக்கின்றன. சில கனிகள் முற்றிக் காய்ந்த பிறகு அவைகளின்மேல் தோல் அல்லது ஓடு திறக்கின்றன. இப்படி திறப்பதில் வேகமாய் திறப்பதாலும், தோலிகள் திறந்தவுடன் பின்பக்கமாக முறுக்கிக்கொள்வதாலும், இவைகளின் விதைகள் நாலாபக்கமும் சிதறுகின்றன. ஆமணக்கின் விதையும் தம்பட்டங்காயின் விதையும் இப்படி சிதறி விழுகின்றன. டபாஸ்காயின் நுனியில் ஜலம் பட்டவுடன் அது ஒரு சத்தத்துடன் வெடித்து விதைகளை சிதறிவிழச் செய்கிறது. சில செடிகளில் கனிகளின் மேல்பாகம் விரிந்து விதைகள் தெரியும்படி இருக்கும். காற்றடிக்கும் போது செடிகளின் கிளைகள் ஆடும். அப்



போது கனிகளிலுள்ள விதைகள் சிதறி விழுகின்றன. ப்ரம்மதண்டுச் செடியில் விதைகள் இப்படிச் சிதறுவதைப் பார்க்கலாம். சில மரங்களின் கனிகளில் இரண்டு இரக்கைகள் இருக்கின்றன. இந்த இரக்கைகள் இரண்டங்குலம் முதல் மூன்றங்குலம் வரையில் நீளமுள்ளன. காற்றடித்தால் இந்தக் கனிகள் மரத்திலிருந்து விடுபட்டு காற்றிலேயே பறந்து வெகுதூரம் போகின்றன. உயரப்படரும் கொடிகளிலும் இரக்கையுள்ள விதைகள் உண்டாகின்றன. காற்றின் உதவியால் விதை பரவுவதற்காகவே இப்படி விதைகளுக்கும் கனிகளுக்கும் இரக்கைகள் ஏற்பட்டிருக்கின்றன. இரக்கையுள்ள விதைகளும் கனிகளும் உயரமான மரங்களிலும் உயரம் ஏறிப்படரும் கொடிகளிலுந்தான் இருக்கின்றன. தாழ்ந்து வளரும் செடிகளிலும், அதிக உயரம் ஏறிப்படராத கொடிகளிலும் இப்படிப்பட்ட ஸாதனம் இருப்பதில்லை. உயரத்தில்தான் ஸாதாரணமாக காற்றுக்கு வேகம் அதிகமாகையால், தாழ்ந்துவளரும் செடிகளில் இரக்கையுள்ள விதைகளும் கனிகளும் உண்டானால் அவைகள் பரவுவது நிச்சயமாகாது. பெருமரம், ஆச்சாமரம், முதலிய மரங்களின் கனிகள் இரக்கைகள் உள்ளவைகள்.

குட்டையாய்வளரும் செடிகளில்கூட காற்றிலடித்துக்கொண்டு போகக்கூடிய விதைகளும் கனிகளும் உண்டாகின்றன. இந்த விதைகளிலும் கனிகளிலும் இரக்கை யிருப்பதற்கு பதிலாக மெல்லிய ரோமங்கள் அடர்ந்து இருக்கின்றன. ரோமங்கள் உள்ள விதைகளை எருக்கு, வேலிப்பருத்தி ஆகிய இவைகளில் காணலாம். இந்த விதைகளும் கனிகளும் காற்றில் பறந்து நாலா பக்கங்களுக்கும் போய் தங்கி முளைத்து வம்சத்தை வ்ருத்தி செய்கின்றன.

சில கனிகளில் முட்களும் கொக்கிகளும் இருக்கின்றன. இவைகளும் கனிகளைச் சிதறச்செய்வதற்கு ஏற்ற உபாயங்களே. இவ்விதக் கனிகளுள்ள செடிகளின்மேல் ஆடுமாடுகள் உராய்ந்தால், கனிகள் ம்ருகங்களின் தோலிலும், மயிர்களிலும் சிக்கிக்கொள்ளும். இந்த ம்ருகங்கள் பலவிடங்களில் திரிவதால் கனிகளும் பலவிடங்களில் சிதறுகின்றன. நாயுருவி, துடைப்பப்புல் ஆகிய இவைகளிருக்குமிடங்களில் நாம் நடந்தால், அவைகளின் கனிகள் நமது உடைகளில் ஒட்டிக்கொள்ளுகின்றன. நாம் அவைகளை அலக்ஷ்யமாக எடுத்து எறிகிறோம். நாம் செய்வது அவைகளுக்கு ஸாதகமே. நாம் அவைகளை எறியுமிடம் அவைகள் முளைப்பதற்கேற்றதாக இருக்கலாம். நெருஞ்சில் செடியோரமாக நாம் நடக்கும்போது நமது காலில் முள் தைத்து விடுகிறது. அதை எடுத்து தூர எறிகிறோம். அப்படிச்செய்தது விதைக்கு ஸாதகமே. பலவிதைகள் நெருக்கமாயுள்ள இடத்தில் செடிகள் அதிகமாகவும், நன்றாயும் வளரமாட்டா. எடுத்து எறிந்ததோ ஸௌகர்யமான இடத்தில்போய் விழலாம். அப்போது அது நன்றாய் வளர்ந்து அதன் வம்சத்தை வ்ருத்தி செய்கிறது.

சில செடிகளின் விதைகள் பூச்சிகளைப் போல் இருக்கின்றன. பூச்சி தின்னும் பறவைகள் அவைகளை உண்மையான பூச்சிகளென்று எண்ணி அந்த விதைகளை கொத்திக்கொண்டுபோகும். பிறகு உண்மையையறிந்து விதைகளைக் கீழே போட்டுவிடும். இதனால் விதைகள் பரவுகின்றன. ஆமணக்கு, காட்டாமணக்கு ஆகிய இவைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

சில கனிகள் சதைப்பற்றுள்ளனவாக இருக்கின்றன. பறவைகளும் ம்ருகங்களும் அவைகளை எடுத்து சதைப்பற்றுள்ள பாகத்தைத் தின்றுவிட்டு விதையை எறிந்துவிடுகின்றன. இதனால் விதைகள் பலவிடங்களிலும் பரவுகின்றன. விதையோடு தின்றுவிட்டாலும் விதை ஜீர்ணமாகாமல் மலத்தோடு வெளிவந்துவிடும்.

## SUBDIVISION OF HOLDINGS.

### நிலங்களை சிறு துண்டு நிலங்களாகப் பிரித்தல்.

ஸாகுபடியாகும் நிலங்களைச் சிறு சிறு துண்டு நிலங்களாகப் பிரிப்பதால் பலவித கெடுதிகள் ஏற்படுகின்றன வென்று மார்கழிமாஸத்திய ஸஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளோம். இது விஷயமாகப் பலர் கவனம் செலுத்தி வருகிறார்கள். ஸமீபத்தில் பம்பாய் சட்டஸபையில் ஆனரபிள் மிஸ்டர் காட்போலே இது விஷயமாக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதாவது பம்பாய் ராஜதானியில் வ்யவஸாய நிலங்கள் ரொம்ப சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு வருவதைப்பற்றியும், அப்படி சிறு துண்டுகளாக்கப்பட்ட நிலங்களை ஒன்று சேர்ப்பதைப்பற்றியும் ஆலோசிக்க ஒரு கமிட்டி நியமிக்க வேண்டுமென்பது. இதை கவர்ன்மெண்டார் அங்கீகரிக்கவில்லை. அந்த மாகாணத்து வ்யவஸாய டிரெக்டரே இது ஸம்பந்தமாக ஒரு மசோதா தயாரித்திருக்கிறாராம். தற்போதைய குறைகளை நீக்க அந்த மசோதாவின் அம்சங்கள் போதுமானவை யல்லவென்றும், கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் அனுதாபம் காட்டவில்லை யென்றும் ஜனப்ரதிநிதிகள் சொன்னார்கள். ஆனால் கவர்னரோ, வ்யவஸாய டிரெக்டர் தயாரித்த மசோதாவே ரொம்ப ஜாஸ்தியான மாறுபாடுகளுக்கு இடங்கொடுக்கிறதென்று இந்தியா கவர்ன்மெண்டார் ஆக்ஷேபிப்பதாக சொன்னார்.

இவ்விஷயம் 1917-ம் வருஷம் மே மாஸத்தில் சென்னை சட்ட ஸபையிலும் ஆலோசனைக்கு வந்தது. அப்போது மிஸ்டர் ஏ. எஸ். க்ருஷ்ணராவ், நிலங்களை சிறு துண்டுகளாகப் பிரிக்காமல் தடுக்க வேண்டியதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். கவர்ன்மெண்டார் அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, அதுவிஷயமாக ஆலோசித்து ஏதாவது செய்ய முடியுமா என்று பார்ப்பதாக ஒப்புக்கொண்டார்கள்.

அவர்கள் இது விஷயமாக சில தெரிந்தெடுக்கப்பட்ட கலெக்டர்கள், ரெவின்யூபோர்ட், லாண்ட் ரிகார்ட்ஸ், வ்யவஸாயம் இவைகளின் டிரெக்டர் ஆகிய இவர்களின் அபிப்ராயத்தையும், பம்பாயில் இது விஷயமாகச் செய்ய உத்தேசித்திருக்கிற சட்டத்துக்கு ஸம்பந்தமான கடிதங்களையும் பார்த்து யோசித்ததில், நிலங்களை பிரிப்பதை தடுக்க யாதொரு சட்டமும் செய்யத் தயாராக இல்லையென்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் தர்க்காஸ்துகள் கொடுக்கும்போது ஒரு குறிப்பிட்ட விஸ்தீரணத்துக்குக் குறைந்து பாகம் செய்யாதபடி நிபந்தனை ஏற்படுத்தி தர்க்காஸ்து கொடுப்பதைப்பற்றி ஆலோசிக்கும்படி தெரிவித்திருக்கிறார்கள். மேலும், பரீக்ஷார்த்தமாக ஒரு குறிப்பிட்ட ஜில்லாவில் சில தெரிந்தெடுக்கப்பட்ட க்ராமங்களில் ஜனங்களே ஸம்மதப்பட்டு துண்டு நிலங்களை மாற்றி ஒன்று சேர்த்துப் பெரிய நிலங்களாகச் செய்துகொள்ள விடுவதைப் பற்றி ஆலோசிக்கும்படி ரெவின்யூ போர்டாரை கவர்ன்மெண்டார் கேட்டு விட்டிருக்கிறார்கள்.

---


1017. நன்னூல்-மயிலைநாத நுரை ... 3 2 0
பண்டித வே. ஸ்வாமிநாதய்யர் பதிப்பித்தது.

1091. சூளாமணி ... 1 0 0
தோலாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி காவியத்தை வசன நடையில் எழுதியுள்ளது.

1092. மெல்லியலார் சுதந்திரம் ... 0 6 0
வாசுதேவய்யர் எழுதியது.

ஜீ. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3 & 4, கொண்டி செட்டித்தெரு, மதராஸ்.




## GENERAL NOTES.

### பொதுக் குறிப்புகள்.

பாற்சாலைச் சால்நடைகளின் சீர்திருத்தம்.

கோயம்புத்தூரில் ஸமீபத்தில் நடந்தேறிய வ்யவஸாய ஸங்கத்தில் கால்நடை டெபுடி டிரெக்டர் மிஸ்டர் காருத் என்பவர் 'பால் வ்யாபாரமும் அதின் சீர்திருத்தமும்' என்னும் விஷயத்தைப்பற்றி ஒரு வ்யாஸத்தைப் படித்தார். அதில் சென்னை நகரத்திலும் பொதுவாய் சென்னை ராஜதானியிலும் பால் ஸப்ளை செய்வதைப்பற்றி விவரித்துக்கூறினார்.

பசு மாடு ஆறுவர்ஷம் கரக்கும். அதற்குள்ளாக 166-ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. எருமையிலோ லாபமும் நஷ்டமும் சரிக்கட்டிக் கொள்கிறது. இதனால் பால் வ்யாபாரம் கடன் பாயத்திலேயே இருப்பதாக விளங்குகிறது. வ்யாப்ார ஊக்கமுள்ளவர்கள் இந்தத் தொழிலில் ப்ரவேசிப்பதில்லை. இடையர்கள், தங்களுடைய பசுக்களிலிருந்து கிடைக்கும் பால் கொஞ்சமாயிருப்பதாலும் செலவை உத்தேசித்து பாலுக்குக் கிடைக்கும் விலை குறைவாயிருப்பதாலும், இதை சரிப்படுத்த வேண்டி பாலில் தண்ணீரைக் கலந்துவிடுகிறார்கள்.

இப்படிக் கலப்பதைப்பற்றி சட்ட மேற்படுத்துவதைவிட இந்த நிலைமைக்கு மூலகாரணத்தைக் கண்டுபிடித்து அதை நீக்குவதில் அதிகாரிகள் கவனத்தைச் செலுத்தவேண்டும். ஒரு ஸாதாரணப்பசு அல்லது எருமை கொடுக்கும் பால் ரொம்ப குறைவாயிருக்கிறது. ஒரு நடுத்தரப்பசு கொடுக்கும் பாலின் விலை அதற்காகும் செலவைவிடக் குறைவாயிருக்கிறது. எருமை விஷயத்திலோ, செலவும் வரவும் ஸமமாயிருக்கிறது. ஆகவே, இந்த ப்ராணிகளின் பால் கறக்கும் தன்மையை அதிகப்படுத்த அதிகாரிகள் முயற்சி செய்யவேண்டும்.

சீமைக் காளைகளைக்கொண்டு திடமான மாடுகளை உற்பத்தி செய்யலாமென்றால், சீமைக் காளைகள் இந்தியாவில் வந்தால் பிழைக்கிறதில்லை. அவைகளுக்குப் பிறக்கும் பசுக்களுக்கு எளிதில் வ்யாதி பிடிக்கிறது.

இந்தியாவிலிருக்கும் காளைகளில் ச்ரேஷ்டமானவைகளைப் பொறுக்கி அவைகளைக் கொண்டு நல்ல பசுக்களை உற்பத்தி செய்யவேண்டும். அப்படிப் பொறுக்குவதில் நல்ல பால் தாரையுள்ள ஜாதியாகப் பார்க்கவேண்டும்.

மாடுகளுக்கு நன்றாய் தீனிகொடுத்து வளர்ப்பதால் அவைகள் நன்றாய் கறக்கும். தலையீற்று கூடியமட்டில் இளம் ப்ராயத்தில் கிடைக்கும்படி செய்யவேண்டும். கறவை நீடித்திருக்கும்படி செய்யவேண்டும்.

பாற்சாலைக்கு யோக்யமான பசுக்களை உற்பத்திசெய்ய தகுதியான காளைகளைப் பொறுக்கவேண்டும். அவைகளை வளர்க்க இடம் திட்டப்படுத்த வேண்டியது. இத்துடன்கூட திடனற்ற காளைகளை கட்டாயமாய் விதையடித்து விடவேண்டியது.

எருமைகளை ப்ரபலப்படுத்த விசாகப்பட்டணம் ஜில்லாவிலும் மற்ற வட ஜில்லாக்களிலுமுள்ள முதல்தரமான இனத்தைக்கொண்டு ஆரம்பிக்கவேண்டியது. தாராதமதிந்து நன்றாய் பொறுக்கி வளர்ப்பது யழக்கத்துக்கு வந்துவிட்டால், இந்த இனம் வ்ருத்தியடையும். பசுவை வளர்ப்பதுபோல எருமையை வளர்ப்பதில் அவ்வளவு கஷ்டமில்லை.

இங்க்லண்டில் கல்வி.

ஸமீபத்தில் இங்க்லண்டில் கல்வியை அபிவ்ருத்தி செய்வதற்காக ஒரு சட்டம் செய்யப்

பட்டது. அதன் முக்ய நோக்கம் சிறுவர்களைக் கட்டாயப்படுத்தி பள்ளிக்கூடங்களில் வாசிக்கச்செய்வதில் அதிகக் கண்டிப்பு இருக்கும்படி செய்வதும், அவர்கள் அதிககாலம் பள்ளிக்கூடத்திலேயே இருந்து வாசிக்கும்படி செய்வதும், எவரும் பள்ளிக்கூடம் போகாமல் தப்பித்துக்கொள்ள முடியாதபடி செய்வதுமே. 5 முதல் 14 வயஸு வரையில் படிப்பை நிறுத்த எந்தக்குழந்தை விஷயத்திலும் உத்தரவு கொடுக்கப்படமாட்டாது. ஸ்தலாதிகாரிகள் 15-வயஸு வரையில் பள்ளிக்கூடம் வரும்படி கட்டாயப்படுத்தலாம். மேல் படிப்புள்ள பள்ளிக்கூடங்களில் 16-வயஸு வரையிலும் கூடசேர்ந்து வாசிக்க வேண்டும். குழந்தைகளை வேலைசெய்யவிட்டு கெடுக்காதபடி 12 முதல் 14 வயஸுக்குள்ளிருக்கும் யாதொரு குழந்தையும் எந்த ஞாயிற்றுக்கிழமையிலாவது இரண்டுமணிக்கதிகமும், எந்த ஸ்கூல் நாளிலாவது ஸ்கூல் மூடுவதற்கு முன்னும், எந்த நாளிலும் காலை 6-முதல் எட்டுமணி வரையிலும் வேலைசெய்யக் கூடாதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமென்றால் இந்தவிதிக்கு விலக்குகள் ஏற்படுத்தலாம், ஆனால் எந்தக் குழந்தையும் பள்ளிக்கூடம் தொடங்க ஒருமணி முன்னால் வேலை செய்யக்கூடாது. அப்படிக் காலையில் வேலை செய்தால் மாலையில் ஒரு மணிக்கதிகம் வேலை செய்யக்கூடாது. ஸ்கூல் நாட்களிலும் விடுமுறை நாட்களிலும் வெளி ப்ரதேசங்களில் சுற்றித் தங்க இடங்களும், தேக அப்யாஸத்திற்காகப் பொதுவிடங்களும், நீந்திக்குளிக்க இடங்களும் இன்னும் மற்ற ஸௌகர்யங்களும் ஏற்படுத்த இந்த சட்டம் இடங்கொடுக்கிறது. ஸெகண்டெரி ஸ்கூல்களிலும் எலிமெண்டரி ஸ்கூல்களின் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்பட்டுள்ள கண்டின்யூவேஷன் பள்ளிக்கூடங்களிலுமுள்ள மாணாக்கர்களை டாக்டர்கள் பார்வையிட்டு சிகித்ஸை செய்வார்கள். ஸ்தல அதிகாரிகளால் இரண்டு முதல் 5 - வயஸு வரையுள்ள குழந்தைகளை வளர்க்கும் பாடசாலைகளும், அங்கஹீனமுள்ள குழந்தைகளுக்கு ப்ரத்யேகப் பாடசாலைகளும் புதிதாய் ஏற்படுத்தப்படும். ஸர்க்கார் பாலபோதப் பாடசாலைகளில் சம்பளமே கிடையாது. எந்நாளுமில்லாத பெருத்த சண்டையில் ஜயம் பெற ஸர்க்கார் எவ்வளவோ கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, கல்வி விஷயமான இந்த ஏற்பாடுகளையும் செய்து முடித்தது ரொம்பவும் மெச்சத்தக்கது.

### யுத்தத்தில் கடிதம் கொண்டுபோகும் நாய்.

சண்டை நடந்து கொண்டிருக்கும்பொழுது யுத்த முனையிலிருந்து ஸமாசாரம் கொண்டு வர நாய்களைப் பழக்கி வைத்திருக்கிறார்கள். நாய்களை இந்த வேலையில் பழக்குவதற்காகவென்று இங்க்லண்டில் ஒரு நாய்ப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒவ்வொரு நாய்க்கும் தனித்தனி கூடு ஒன்று உண்டு. ஒவ்வொரு நாயும் தன் கூட்டைத் தனக்கு ஸொந்தமான வீடு என்று நினைக்கும்படி பழக்கப்படுகிறது. இந்தக் கூட்டோடு தான் நாயை சண்டை நடக்கிற இடத்திற்குக் கொண்டு போகிறார்கள்.

தவிரவும், நாயை வளர்க்கிறவனை ஒருபோதும் மாற்றுகிறதில்லை. ஆகவே நாய்க்கு ஒரே யஜமானனும் ஒரே வீடும் நன்றாய்ப் பழகி விடுகின்றன.

போர்முனையில் கிடங்குகளுக்கு அப்பால் தூரத்தில் நாயின் யஜமான் இருப்பான். கூடும் அங்கு தான் இருக்கும். ராணுவவீரர்கள் நாயைக் கிடங்குகளுக்குக் கொண்டுபோய் ஒரு தோல் பையில் ஸமாசாரத்தை வைத்து அதை அதன் கழுத்தில் கட்டி அவிழ்த்து விடுவார்கள். உடனே யஜமானையும் வீட்டையும், அங்கு சென்றவுடன் யஜமான் கொடுக்கப்



போகிற தீனியையும் நினைத்துக்கொண்டு ஒரே ஓட்டமாய் ஓடி தன் கூடுவந்து சேரும். யஜமானைத் தவிர வேறு யாரும் அதற்குத் தீனி போடவாவது, தடவிக்கொடுத்து அதைக் கொஞ்சவாவது கூடாது. கிடங்கிலிருக்கும் யுத்தவீரர்கள் இதைப்பற்றி நன்றாய் எச்சரிக்கப்படுகிறார்கள். அப்படிக் கட்டுப்பாடு இருந்தால்தான், நாய் தன் வீடு, யஜமான், உணவு ஆகிய இவை மூன்றையும் நினைத்துக்கொண்டு ஓடிவரும். தவிரவும், அன்றைய வேலை முடியும் வரையில் நாய்களுக்குத் தீனி போடுவதில்லை. வேலை முடிந்ததும் யஜமான் வெகு அருமையுடன் அதை போஷிப்பான். ஆகவே பசியினால் ஆகாரத்தை நினைத்துக்கொண்டு விரைவாய் ஓடிவரும். நாய்களுடைய சரீர ஸௌக்யத்தைப்பற்றி ரொம்ப ஜாக்ரதையாயிருக்கிறார்கள்.

### நெல் பயிருக்கு எரு.

நெல் விலை ஏறியிருக்கும் இந்த ஸமயத்தில் நெல்லுக்குத்தக்க எருவிட்டு அதிக மாஸூல் அடையும் வழியை கவனிப்பது நல்லது. எரு விடுவதற்குமுன் கவனிக்கவேண்டியது ஒற்றை நாற்று நடுவது அல்லது இரண்டு மூன்று நாற்றுகளாக நடும் வழக்கமாகும். இப்படி நடுவதால் விதை மிச்சம் ஏற்படுவதோடு, அதிக மாஸூலும் கிடைக்கும். நல்ல விதையாக பொறுக்கி விதைப்பதாலும் மாஸூல் அதிகமாகும். எரு விஷயத்தில் முக்யமாக கவனிக்க வேண்டியது தழை எருவாகும். இதனால் நிலம் வள்மையடைந்து மாஸூலை அதிகமாக்குகிறது. ஆனால் மாஸூலின் அளவு அதிகமாகிக்கொண்டே வரவேண்டுமானால் இந்த மூன்று அம்சங்களை மாத்ரம் கவனிப்பது போதாது. நிலத்தில் வேண்டிய அளவு நைட்ரொஜினும் பாஸ்பேட்டும் சேர்க்கவேண்டும். தற்காலம் வேண்டியவளவு தொழுவத் தெரு கிடைப்பதில்லை. ஆகையால் செயற்கை எரு போடுவது அவச்யமாகிறது. பாஸ்பேட்டு ஸத்தை நிலத்தில் சேர்ப்பதற்கு உபயோகமான எரு எலும்புத்தூளும், தாது ஸம்பந்தமான பாஸ்பேட்டுகளுமாகும். பசுந்தாள் எருப்போட்ட நெல்வயலில் இவைகளைப் போட்டால், இவைகள் சீக்ரம் கரையக்கூடிய தன்மையை அடைந்து எருவாக உபயோகப்படுகின்றன. இந்த எருக்கள் விலைஸரஸமாகக் கிடைக்கக்கூடியவை. ஸூபர் பாஸ்பேட் போன்ற கரையக்கூடிய பாஸ்பேட் எருக்களை போடலாமென்றாலும், அவை விலையேறி விற்கின்றன.

விவஸாய டிபார்ட்மெண்டார் தற்போது நெல் பயிருக்கேற்ற எரு தயார்செய்து வ்யவஸாயிகளுக்குக் கொடுத்து வருகிறார்கள். இதன் விவரம் வேண்டுவோர் திருச்சினாப்பள்ளியிலுள்ள வ்யவஸாய டெபுடி டிரெக்டருக்கு எழுதிக்கொள்ளலாம்.

### விதை நெல்.

சிலகாலமாக வ்யவஸாய டிபார்ட்மெண்டார் தங்கள் வியவஸாயப் பண்ணைகளில் பயிரிட்டு விற்கும் விதை நெல்லை வ்யவஸாயிகள் அதிகம் உபயோகித்து வருவதாகத் தெரிகிறது. சென்ற 1917-18-ம் வர்ஷத்தில் லக்ஷத்து அறுபதினாயிரம் ராத்தல் விதை விற்கப்பட்டது. தஞ்சாவூர்ஜில்லா மங்கலனூர் பண்ணையின் விதை நெல்லுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டதால், அந்த பண்ணையில் விளைந்த விதை நெல் முழுவதையும் டிபார்ட்டுமெண்டார் ஜனங்களுக்கு விற்றுவிட்டார்களாம். ஜனங்கள் டிபார்ட்மெண்ட் விதை நெல்லை முன்னைவிட அதிகமாக உபயோகிக்கத் தொடங்கியிருப்பதால், அவர்களுக்கு வேண்டியிருக்கும் விதையை ஸப்ளைசெய்வதற்காக சில விதைப்பண்ணைகளை ஏற்படுத்தப் போகிறார்கள். டிபார்ட்மெண்ட் வித்தகளை உபயோகித்த ரயத்துகள், மாஸூல் அதிகமாக இருந்ததென்றும், பயிர் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் முற்றினவென்

றும், மாஸூலுக்கு அதிகவிலை கிடைத்ததென்றும் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது டிபார்ட்மெண்டார் விற்கும் விதை ஜனங்கள் உபயோகிக்கும் சம்பா நெல்லைப் பயிரிட்டுக் கிடைத்ததாகும். ஸர்க்கார் எகனமிக் தாவர சாஸ்த்ரி வ்ருத்தி செய்துவரும் நல்ல ஜாதி சம்பா நெல்லைப் பயிரிட்டால் இன்னும் அதிக மாஸூல் கிடைக்கும் என்று டிபார்ட்மெண்டார் எண்ணுகிறார்கள். இது விஷயமாக இன்னும் ஆராய்ச்சி நடந்து வருகிறது.

வாய்நாற்றம் நீங்க பழத்தைச் சாப்பிடுவது.

கோதுமைத்தவிடும் பழமும், அதிலும் ஆப்பிள் பழமும் ஆரஞ்சிப்பழமும், மாத்ரம் ஆகாரமாக 3 அல்லது 4 நாள் சாப்பிட்டு வந்தால், ஸாதாரணமாய் நாக்கு சுத்தப்பட்டு வாய்நாற்றம் நீங்கும். தினமும் அரைப்பவுன் வறுத்த தவிடு சாப்பிடவேண்டும். ஆப்பிள் அதிகமாய் சாப்பிடுவதால் தொந்தரவு ஏற்படாதிருந்தால் எவ்வளவு இஷ்டமோ அவ்வளவு சாப்பிடலாம். நான்கு வேளைக்கு 12-அல்லது 16 ஆப்பிள்கள் சாப்பிட்டால் போதுமானது. அவைகளைப் பச்சையாய் நன்றாய்மென்று தின்னவேண்டும். ஆப்பிள்களைப் பசிக்கும்போதெல்லாம் தின்னலாம். பழத்தால் ஜீர்ணக்கருவிகளுக்கு யாதொரு தொந்தரவுமில்லை யாதலால், வேண்டுமானால் ஆகாரத்துடன் த்ராக்ஷைப்பழங்கள், ஆரஞ்சிப் பழங்கள் முதலியவைகளையும் புசிக்கலாம்.

புகையிலையும் தெள்ளுப்பூச்சியும் ப்ளேக் வ்யாதியும்.

ப்ளேக்கைப் பரவச்செய்யும் தெள்ளுப்பூச்சியை புகையிலை ஒரு நொடியில் கொன்றுவிடுகிறது. ஜனங்கள் தூங்குகிற வீட்டுத்தரைகளின்பேரில் புகையிலையைப் பரப்பிவைத்தால், தெள்ளுப்பூச்சிகள் உள்ளே நுழைந்தவுடனே சாகின்றன. ப்ளேக் பரவாமல் தடுக்கப்படுகிறது. ப்ளேக் ஏராளமாய் பரவியிருந்த ஒரு ஊரில் 52-வீடுகளில் புகையிலை பரப்பிவைத்துப் பரீக்ஷை பார்த்தார்கள். புகையிலையை ஒரு பாயின்பேரில் தைத்து தரையில் விரித்தார்கள். அருகிலிருந்த அதே மாதிரியான வேறு 52-வீடுகளில் புகையிலை பரப்பாமல் விட்டிருந்தார்கள். புகையிலை பரப்பிய 52-வீடுகளில் ஒன்றில் மாத்ரம் ப்ளேக் வந்தது. புகையிலை பரப்பாத வீடுகளில் 7-வீடுகளில் ப்ளேக் வந்தது. மேற்கூறிய உபாயத்தால் இந்தக்கொடிய ப்ளேக் வ்யாதியால் கஷ்டப்படும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காப்பாற்றப் படலாமென்று சொல்லப்படுகிறது.

உருளைக்கிழங்கு வெண்ணெய்.

உருளைக் கிழங்கைக்கொண்டு ஒரு வகை போலி வெண்ணெய் செய்யலாமென்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

உருளைக்கிழங்கைத் தோலுறித்து வேக வைக்கவும் அல்லது ஆவியில் வைக்கவும். அது உதிர்ந்துபோகக் கூடியபடி பக்வமான பிறகு நுண்ணிய சல்லடைமூலமாய் சூடான ஒரு பெரிய கிண்ணத்தில் தேய்க்கவும். இவ்விதம் செய்த கிழங்குப்பொடிக்கு 1½ அவுன்ஸுக்கு ½ அவுன்ஸ் வீதம் வெண்ணெயும் ஒரு தேயிலைக்கரண்டி உப்பும் சேர்க்கவும். முழுமையும் நயமாயாகும்படி அகப்பையால் நன்றாய் மசிக்கவும். பிற்பாடு இந்த வெண்ணெயை பவுன் அல்லது அரைப்பவுன் பில்லைகளாகச்செய்து குளிர்ந்த இடத்தில் வைக்கவும். ஆனால் இதைக்காய்ச்சி நெய் எடுக்க முடியாது.

வயதில் மூத்த மரம்.

மெக்ஸிகோவி லுள்ள ஒரு க்ராமத்தில் ஒரு புங்கமரம் இருக்கிறதாம். அதின் வயது 4000 வர்ஷம் இருக்குமாம். 5000 அல்லது 6000 வர்ஷங்கூட இருக்குமென்று சொல்லலாமாம். அதன் சுற்றளவு 126 அடியாம். அது இன்னும் கொஞ்சமேனும் பட்டுப்போகாமலிருக்கிறதாம். ஆகிலும் சிறு மரங்களைப் போல் அதில் அதிக தழைகளில்லையாம். அவ்வூரார் அதின் ஒரு கொம்பைக்கூட வெட்டவிட மாட்டார்களாம்.


# ஜனாபிமானி.

| | |
|---|---|
| தபால் சார்ஜ் உள்பட | |
| வர்ஷ சந்தா | ரூபா |
| உள்நாடு | 4. |
| வெளிநாடு | 6. |

THE JANABHIMANI.

ஜி. ஏ. வைத்யராமன் கம்பெனி, [illegible]டி செட்டித்தெரு, மதராஸ்.

ஜி. ஏ. வைத்யராமன், பி. ஏ., பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B. A., EDITOR.

புஸ்தகம் 10. Vol. 10. } காளயுக்தி ௵ மார்கழி ௴, DEC.—JAN., 1918-19. { ஸஞ்சிகை 12 No. 12.


1-MAR 1919 MADRAS

## CONTROL OF NERVOUS IMPULSES.

### இந்த்ரிய உணர்ச்சிகளை அடக்குதல்.

கூச்சல் அதிகமாகவும் ஸகிக்கக்கூடாததுமான இடத்திலிருக்க நேரிடும்போது நாம் காதை மூடிக்கொள்ளுகிறோம். பார்க்கத்தகாத வஸ்துக்களைக் காண நேரிட்டாலும், நேரிடும்போலிருந்தாலும் உடனே கண்களை மூடிக்கொள்ளுகிறோம். துர்நாற்றமுள்ள இடத்தில் ச்வாஸிக்காமலிருக்க முயலுகிறோம். கசப்பான மருந்துகளை நாக்கில் படாமல் தொண்டையில் போட்டுக்கொள்ளுகிறோம். இவ்விதம் நாம் அனுபவிக்க இஷ்டப்படாத உணர்ச்சிகள் ஏற்படாதபடி பலவாறு முயலுகிறோம். இது எப்போதுமே ஸாத்யப்படுவதில்லை. காதை எவ்வளவு மூடினாலும் சிறிதளவு சப்தமாவது கேட்காமலிருக்கிறதில்லை. ஸ்வல்பநேரம் அருவருப்பான விஷயங்களைக் கேட்டுவிட்டு பிறகு காதை அடைத்துக் கொண்டாலும், கேட்ட விஷயங்கள் மனதிற்கு வேலையைக் கொடுக்கின்றன. ஸ்பர்ச உணர்ச்சி விஷயத்தில் அருவருப்பான அல்லது [illegible] இஷ்டப்படாத பொருளின்மேல் படாமலிருந்தால், அந்த உணர்ச்சியை ஏற்படாமலே செய்துவிடலாம். ஆனால் ஒரு தடவை பட்டுவிட்டால் அப்படி மேலே பட்டது அறிவுக்குத் தெரியாமல் போகாது. ரணவைத்யம் செய்யும்போது கத்தியால் கீறுகையில் வலி ஏற்படுவது கண்டிப்பாய் புத்திக்கு எட்டுகிறது. இதை தடுக்கவேண்டுமென்றால், புத்தியை ஸ்தம்பிக்கச் செய்கிற மருந்துகளை ப்ரயோகித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. இது எப்போதுமே ஸாத்யப்படுவதில்லை. மேலும் நம்மை அறியாமலே, நாம் முன் ஜாக்ரதை எடுத்துக்கொள்ளுவதற்கு முன்னேயே, தற்செயலாய் இடித்துக் கொள்வது முதலிய துன்பங்கள் நேர்ந்து ஸ்பர்ச உணர்ச்சியால் மனதிற்கு துன்பம் நேரிடுகிறது. தற்செயலாய் பேரிடியைக் கேட்டு நடுங்குகிறோம். எப்போதும் காதைப் பொத்திக்கொண்டிருப்பதும், காதில் எதாவது அடைத்துக்கொண்டிருப்பதும் ஸாத்யப்படாத விஷயம். இவை போலவே தான் மற்ற இந்த்ரியங்கள் விஷயத்திலும் நமக்குத் தெரியாமலே உணர்ச்சி ஏற்படுகின்றன.

அவைகள் மனதிற்குப் பிடித்திருந்தால் போயிற்று. இல்லாவிட்டால் மனஸுக்குத் துன்பமும் கவலையும் உண்டாகின்றன.

மேலும் நமது இந்த்ரியக் கருவிகள் நுட்பமான உணர்ச்சிகளை க்ரகித்து மனஸுக்குத் தெரிவிக்க முடியாதவைகளாக இருக்கின்றன.

நமது இந்த்ரியங்கள் நமது இஷ்டப்படி வெளி விஷயங்களை அதிகமாக்கியோ குறைவாக்கியோ காட்டக்கூடுமானால் நமக்கு எவ்வளவோ ஸாதகமுண்டு. அப்படி நமது இந்த்ரியங்களை ஒழுங்குபடுத்துவது ஸாத்யமா என்பதை டாக்டர் ஜே. ஸி. போஸ் ஆராய்ச்சி செய்து சில விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்.

நமது இந்த்ரியக் கருவிகள் நமது தேகத்தில் நாலா பக்கங்களிலும் இருந்துகொண்டு வெளியில் நடக்கும் விஷயங்களையெல்லாம் க்ரகித்து நமக்குத் தெரிவிக்கின்றன. அவைகளை ஆராய்ந்தால், வெவ்வேறு வகை நரம்புகளில் படும் அதிர்ச்சியின் பலன்களே நமக்கு உணர்ச்சியாகத் தெரிகின்றன. அதிர்ச்சி ரொம்பக் குறைவாக இருந்தால் உணர்ச்சியே ஏற்படாமலிருக்கலாம். ஏனென்றால் நரம்புகளுக்கு ரொம்ப பலஹீனமான அதிர்ச்சிகளை க்ரகிக்க சக்தி இருந்திருக்காது. ஸாமான்ய அதிர்ச்சிகளை உண்டாக்கும் விஷயங்களை நமது மனம் இந்த்ரியங்கள் மூலமாக க்ரகிக்கும்போது நமக்குக் கஷ்டம் ஒன்றும் ஏற்படுவதில்லை. ரொம்ப பலமான அதிர்ச்சியாயிருந்தால், அது நமக்கு அருவருப்பும் கஷ்டமும் கொடுக்கிறது. ஆகவே நமது உணர்ச்சியெல்லாம், நரம்பு நார்களுக்கு ஏற்படும் அதிர்ச்சியின் தன்மைக்குத் தக்கபடி பலமாகவோ, ஸாமான்யமாகவோ அல்லது ரொம்ப தாழ்வாகவோ தெரிகின்றன. நமது இந்த்ரியங்கள் நுட்பமான விஷயங்களை க்ரகிக்க முடியாமல் போவதால் பல விஷயங்களை நாம் அறிய முடிவதில்லை. ஆனால் அதிர்ச்சிகள் ரொம்ப பலமாக இருந்தால், அதனால் நமக்கு உபத்ரவம் நேரிடலாம்.

வெளியிலுள்ள விஷயங்களின் தன்மையை மாற்ற நமக்கு சக்தியில்லையாகையால், நமது நரம்பு ஏற்பாடுகளில் வேண்டிய மாறுபாடுகள் செய்து, தெரியவேண்டிய நுட்பமான விஷயங்களை தெளிவாய்த் தெரிவிக்கும்படியும் தெரியவேண்டியிராத விஷயங்களை சமனப்படுத்தியோ அல்லது தடுத்தோ நமக்கு கஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளும்படியும் செய்ய முடியுமா என்று பார்க்கவேண்டும். இதைப்பற்றிப் பேசுமுன் நரம்புகளின் தன்மைகளைப் பற்றி இரண்டொரு விஷயங்கள் சொல்லவேண்டியிருக்கிறது. நரம்புகளின் மூலமாக உணர்ச்சி தேகத்தில் பரவுவதை மின்ஸாரக் கம்பியில் மின்ஸாரம் ஓடுவதற்கு ஒப்பிடலாம். வெளியில் ஏற்படும் தூண்டுதலுக்குத் தக்கபடி மின்ஸாரமானது பலமாகவோ மெதுவாகவோ அல்லது ஸாதாரணமாகவோ தன் சக்தியைக்காட்டுகிறது. அதேமாதிரி நமது நரம்புகளுக்கு உணர்ச்சிகளைக் கொண்டுபோகும் சக்தி ஒரேவிதமாக இருந்தால், வெளியில் ஏற்படும் தூண்டுதலின் தன்மைக்குத் தக்கபடி விஷயங்களைத் தெளிவாகவோ தெளிவில்லாமலோ மூளைக்குத் தெரிவிக்கிறது. அப்படி நரம்புகளின் தன்மை எப்போதும் ஒரே மாதிரியாக இருந்து மாற்றக்கூடியதாக இராவிட்டால், நாம் வெளிப்பொருள்களைப்பற்றிய உணர்ச்சியை குறைக்கவோ நிறுத்தவோ முடியாது. ஆனால் நரம்புகளின் தன்மையை இஷ்டப்படி மாற்ற முடியுமென்று தோன்றுகிறதென டாக்டர் போஸ் சொல்லுகிறார். அவர் சில செடிகளின்மேல் பரீக்ஷைசெய்து பார்த்தார். செடிகளுக்கும் மனிதருக்குள்ள நரம்புகளைப்போல், இயல்



புடைய நரம்புகள் உண்டென்று அவர் கண்டுபிடித்திருக்கிறார். அந்தச் செடி நரம்புகளின் தன்மையில் சில மாறுபாடுகள் உண்டாக்கினதில், அவ்வகள் வேண்டிய உணர்ச்சிகளை க்ரகித்துக்கொண்டும், வேண்டாதவைகளை தள்ளிக்கொண்டும், வேண்டியபோது ரொம்ப பலஹீனமான உணர்ச்சிகளை பெரியனவாக்கிக் கொண்டும் வந்தனவாம். இதேமாதிரி தவளையில் பரீக்ஷைசெய்து பார்த்ததிலும் அதே பலன் தெரியவந்ததாம். ஆகவே மனிதனும் தனது நரம்பு சக்திகளை கட்டுப்படுத்தக்கூடுமென்று தெரிகிறது. அது முற்றிலும் ஸாத்யமானால், மனிதனுக்கு ரொம்ப ஸாதக மேற்படும் என்பதில் ஸந்தேகமில்லை.

## INDIAN SUGAR CANE INDUSTRY.

## இந்தியாவில் சர்க்கரை செய்யும் தொழில்.

உலகத்தில் எங்கே பார்த்தாலும் சர்க்கரைக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. இதற்கு இரண்டு முக்ய காரணங்கள் உண்டு. முதலாவது, எல்லா தேசங்களிலும் சராசரி ஒவ்வொருவரும் சாப்பிடும் சர்க்கரையின் விகிதம் அதிகமாகிக்கொண்டே வருகிறது. இரண்டாவது, இதுவரையிலும் ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, ப்ரான்ஸ் ஆகிய இந்த தேசங்களிலிருந்து ஏராளமாய் வந்துகொண்டிருந்த பீட் (கிழங்கு) சர்க்கரை சண்டையினால் முழுவதும் நின்றுவிட்டது. யுத்தத்திற்கு முன் ப்ரதி வர்ஷம் உலகத்தில் செலவாய்க் கொண்டிருந்த சர்க்கரை 18,000000 டன். இதில் பீட் சர்க்கரையும் கரும்புச் சர்க்கரையும் ஒவ்வொன்றும் 9,000,000 டன். தற்போது சர்க்கரையின் விலை ரொம்பவும் உயர்ந்திருக்கிறது.

சில வர்ஷங்களாக இந்தியாவில் ஏராளமான சர்க்கரை இறக்குமதியாகிக் கொண்டிருந்தது. வர்ஷத்துக்கு பத்துலட்சம் டன்னுக்குக் குறையாது. இது அநேகமாய் ஆஸ்ட்ரியாவிலிருந்து வந்துகொண்டிருந்தது. ஸமீபத்தில் மொரிஷஸ் தீவிலிருந்தும் வந்துகொண்டிருந்தது. இப்போது அநேகமாய் முழுமையும் ஜாவாவிலிருந்தே வருகிறது. உலகத்தில் சர்க்கரை உற்பத்தி குறைந்திருப்பதால் இந்தியாவில் சில்லரையில் விற்கும் விலை இரட்டித்திருக்கிறது. இந்த காரணத்தைக் கொண்டு இந்தியா தானாகவே இந்த சர்க்கரையை உற்பத்தி செய்யக்கூடுமோ? முன்னொரு காலத்தில் செய்தமாதிரி சர்க்கரையை மற்ற தேசங்களுக்கு அது ஏற்றுமதி செய்யும்படியான ஸ்திதிக்கு வரமுடியுமா? என்று இங்கு கவனிப்போம்.

சர்க்கரையின் விலை இப்போது ரொம்ப ஏறியிருப்பது நிலைக்குமா அல்லது சண்டைக்குப்பின் குறைந்துவிடுமா என்பது நமக்குத் தெரியாது. சர்க்கரைத் தொழில்சாலையை ஏற்படுத்துவது சுளுவல்ல. ஏற்படுத்தினாலும், அதை நிலைபெறச்செய்ய அநேக வர்ஷங்கள் பிடிக்கும்.

இந்தியாவில் ஜனங்கள் ஸாதாரணமாய் சர்க்கரையைவிட வெல்லத்தை அதிகமாய் உபயோகிக்கிறார்கள். ஆகையால் இந்தியாவில் விளைகிற கரும்பில் பெரும்பாகம் வெல்லம்செய்வதற்கே உபயோகப்பட்டு வருகிறது. கரும்புச்சாற்றை சர்க்கரையாகச் செய்வதால் ஜாஸ்திலாபம் உண்டாகுமென்று தெரிந்தால் மாத்ரம் தொழிற்சாலையை ஏற்படுத்த முடியும்.

கரும்பு பயிர் செய்கிற எவனும் வெல்லம் செய்யலாம். கரும்பின் முதிர்ச்சியைப்பற்றி ரொம்ப பரிசோதிக்க வேண்டியதில்லை. கை முதல் வேண்டியதில்லை. எப்போது வேண்டுமானாலும் நிறுத்திவிடலாம். அதனால் நஷ்டமிராது. சர்க்கரை செய்வதோ இந்தியாவுக்குப் புதிது. அதிக கைமுதல் வேண்டும். பயிர் செய்பவர் அனேகம் பேர் ஒன்று சேரவேண்டும். இந்தத் தொழிலை நினைத்தபோது நிறுத்தமுடியாது. நிறுத்தினால் ப்ரமாதமான பண நஷ்டம் ஏற்பட்டுவிடும்.

கரும்பு பயிர் செய்வதற்காக வேறு பூமி கிடையாததால், அது மற்ற பயிர்களோடு போட்டி போடவேண்டி வருகிறது. தெற்கே நெல்பயிரும், வங்காளத்தில் ஜூட் என்னும் சணலும், பஞ்சாபில் பருத்தியும் விசேஷம் அந்த இடங்களில் அந்தப் பயிர்களை சாகுபடி செய்யாமல், கரும்பு ஏராளமாய் பயிர் செய்யப்படுவது ஸந்தேகம்.

சுருக்கிச் சொல்லப்போனால், இந்தியாவில் சர்க்கரை செய்யும் தொழில் ஸ்தாபிக்க அநேக தடைகள் இருக்கின்றன. முதலாவது நல்ல ஜாதிக் கருப்புகள் இல்லை. வெல்லம் செய்யும் தொழில் ஒரு பெரிய போட்டியாக இருக்கிறது. நிலங்கள் சிறுசிறு துண்டுகளாக இருப்பதால்; ஒரு சர்க்கரைத் தொழில் சாலைக்கு வேண்டியவளவு கரும்பு பயிர் செய்ய முடியாமலிருக்கிறது. மேலும் ஏற்கனவே உள்ள பயிர்களைத் தள்ளிவிட்டு கரும்பைப் பயிர்செய்வது கஷ்டம்.

எங்கே வெல்லத்தின் விலை ரொம்ப குறைவோ, அங்கே சர்க்கரைச்சாலை ஸ்தாபித்தால், வெல்லத்தை வாங்கி சுத்திசெய்து சர்க்கரை செய்யலாம். இன்னும், நல்ல ஜாதிக் கரும்புகளைப் பயிரிடக்கூடிய ப்ரதேசங்களிலும், ஸெட்டில் மெண்ட் ஆகாத ப்ரதேசங்களிலும் சர்க்கரைத் தொழில்சாலை ஸ்தாபிக்கலாம்.

## MORTALITY IN PRESIDENCY TOWNS.

## ராஜாதானிப் பட்டணங்களில் மரணங்கள்.

கல்கத்தா, பம்பாய் என்னும் ராஜாதனிப் பட்டணங்களுடன் நம்முடைய ராஜதானிப் பட்டணமாகிய மதராஸை ஒத்துப்பார்த்தால், மதராஸில் மரண விகிதம் அதிகமென்றும், அதற்குக் காரணம் இந்த பட்டணத்தின் ஸுகாதாரக் குறைவும் அதிகாரிகள் தங்கள் கடமையை சரிவர செய்யாததுமே யென்றும் ஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். கல்கத்தாவிலும் பம்பாயிலும் ஜலமலாதி அழுக்குகளை ஜலமடித்துக்கொண்டு போகிற ஏற்பாடும், குழந்தைகளை ஸவரக்ஷணைசெய்யும் வேலை முதலியவைகளும் ஏற்பட்டிருக்கின்றன. சென்னையிலோ அப்படி ஏற்படவில்லை. ஆகிலும், சந்துகளும் ஜன நெருக்கமுள்ள இடங்களும், அதினாலுண்டாகும் தீங்குகளும் மூன்று பட்டணங்களிலும் ஸமமாகவே இருக்கின்றன.

ஒரு பட்டணம் ஸுகாதாரத்தில் வ்ருத்தியடைந்து வருகிறதா இல்லையாவென்று பார்க்க அந்தப் பட்டணத்தின் ஜனன மரணக் கணக்குகளை கவனித்தால்போதும். ஆனால் ஜனனமரணக் கணக்குகளைக் கொண்டு, வெவ்வேறு பட்டணங்களின் நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்கமுடியாது. இரண்டு மூன்று பட்டணங்களின் நிலைமையை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமானால் ஜனங்களுக்குள் ஆண், பெண்,



பாலர், வ்ருத்தர் இவர்களுடையவகுப்புவாரித் தொகையும், சிசுமரணமும், ஜன நெருக்கம் ஜாஸ்தி கம்மியாயிருப்பதும், ஜனங்களின் நிலைமை, சிதோஷ்ண ஸ்திதி, ஸுகாதார நிலைமை, வீடு ஸௌகர்யங்கள், ஜீவனோபாயம், உணவுப் பொருள்களின் விலை ஆகிய இவைகளும் எவ்வளவு மட்டில் மரண விகிதத்தை ஏற்றவோ குறைக்கவோ செய்கின்றன வென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

சென்னை நகரின் ஜனத்தொகை 1901 முதல் 1911-ம் வர்ஷம் வரையில் நூற்றுக்கு 1·8 வ்ருத்தியாயிருக்கிறது. கல்கத்தாவிலோ 5·7 விதமும் பம்பாயிலோ 26·2 விதமும் ஜனத்தொகை வ்ருத்தியாகியிருக்கிறது. பம்பாயும் கல்கத்தாவும் கைத்தொழிலுக்கு வஸதியான இடங்களாதலால், அந்த பட்டணங்களில் ஏராளமான தொழிலாளிகள் வெளியிலிருந்து போய் குடியேறுகிறார்கள். அதிலும் ஸ்த்ரீகளைவிட புருஷர்கள்தான் அதிகமாகத் தொழில்சாலைகளுக்குப் போகிறார்கள்.

அடியிற்கண்ட கணக்குப்படி பம்பாயிலும் கல்கத்தாவிலும் மனிதர்களின் தொகையை விட ஸ்த்ரீகளின் தொகை ரொம்ப கம்மியாயிருக்கிறது. முக்யமாய் 15 முதல் 40 வயது வரையில்தான் கம்மி. அந்த ப்ராயத்தில்தான் ஸ்த்ரீகள் ப்ரஸவத்தில் உண்டாகும் அபாயத்திற்குட்பட்டிருக்கிறார்கள் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. சென்னையிலோ இவர்களின் தொகை ரொம்ப ஜாஸ்தி. மனிதர்கள் பலசாலிகளாயிருக்கும் வயது 20 முதல் 45 வரை. இந்த வயதிலுள்ளவர்கள் பம்பாயின் ஜனத்தொகையில் நூற்றுக்கு 40·4 விதமும், கல்கத்தாவில் 40·3 விதமும், சென்னையில் 20·4 விதமுமாக இருக்கிறார்கள்.

வயஸுக்ரமமாக 1000 மனிதர்களுக்கு எத்தனை ஸ்த்ரீகளிருக்கிறார்களென்பதைக் காட்டும் கணக்கு.

| வயஸு. | கல்கத்தா. | பம்பாய். | சென்னை. |
|---|---|---|---|
| 0-5 வர்ஷம். | 937 | 990 | 1019 |
| 15-20 ,, | 467 | 553 | 1040 |
| 20-25 ,, | 364 | 531 | 957 |
| 25-30 ,, | 323 | 416 | 939 |
| 30-35 ,, | 342 | 388 | 937 |
| 35-40 ,, | 330 | 346 | 806 |
| 40-45 ,, | 415 | 450 | 885 |
| 15-40 ,, | 360 | 449 | 943 |
| 60 அதற்கு மேற்பட்டு. | 828 | 835 | 971 |
| எல்லாவயஸிலும் | 474 | 530 | 946 |

1 முதல் 5 வயதுள்ள குழந்தைகள் கல்கத்தாவில் ஜனத்தொகையில் 1000-க்கு 70, பம்பாயில் 65, சென்னையிலோ 110. 60-வயதுக்கு மேற்பட்டவர்கள் பம்பாயில் 1000-க்கு 26, கல்கத்தாவில் 46, மதராஸில் 50.

ஆகவே சென்னையில் 5 வயஸுக்குள்பட்ட சிறுவர்களின் தொகையும் 60 வயஸுக்கு மேற்பட்ட கிழவர்களின் தொகையும் ரொம்ப அதிகம். இப்படி சென்னை நகரத்தில் சிறு குழந்தைகளும் வயது முதிர்ந்தவர்களும் ஜாஸ்தியாயிருப்பதும், நடுத்தர வயதிலுள்ளவர்கள் கம்மியாயிருப்பதும், ஸ்த்ரீகளின் தொகை புருஷர்களின் தொகைக்கு கிட்டத்தட்ட ஸமமாயிருப்பதும் சேர்ந்து மரண விகிதத்தை உயர்த்திவிடுகிறதாக ஏற்படுகிறது. ஜனன விகிதம் ஜாஸ்தியாயிருந்தால் மரண விகிதமும் ஜாஸ்தியாயிருக்கும். எப்படி யென்றால், ஒரு வயஸுக்குள்பட்ட குழந்தைகள் அதிகமாய் இறப்பதால், மொத்த மரண விகிதம் அதிகரிக்கிறது. மற்றவிடங்களில்விட சென்

னையில் ஸ்த்ரீகளின்தொகை விகிதம் அதிமாயிருப்பதால் ஏராளமான குழந்தைகள் புஷ்டியற்று மெலிந்த ஸ்திதியில் பிறப்பதும், அவைகள் சுற்றியுள்ள அஸௌகர்யங்களைத் தாங்க முடியாமல், ஒருவாரத்திலோ இரண்டுவாரத்திலோ இறப்பதும் இயல்பாயிருக்கின்றன.

சீதோஷ்ண ஸ்திதியைப் பார்க்குமளவில், சென்னையில் வர்ஷம் முழுவதும் சீதமும் உஷ்ணமும் சற்றேறக்குறைய ஸமமாயிருக்கின்றன. ஆகவே, சென்னையில் வஸிப்பவர்கள் மாறுபாடில்லாத காலஸ்திதிக்கு வழக்கப்பட்டிருப்பதால், காலஸ்திதி அஸாதாரணமாய் திடீரென்று மாறுபடும் ஸமயத்தில் சுளுவாக அதற்கிரையாகிறார்கள்.

சென்னை முனிஸிபாலிடியில் மற்ற இரண்டு முனிஸிபாலிடிகளையும்விட வரும்படி ரொம்ப குறைவு. இந்த முனிஸிபாலிடியின் வரும்படி பம்பாயின் வரும்படியில் $\frac{1}{3}$-ம், கல்கத்தாவின் வரும்படியில் $\frac{1}{11}$-ம் ஆக இருக்கிறது. ஆனால் நிர்வகிக்கவேண்டிய விஸ்தீரணமோ மற்ற இரண்டையும் விட அதிகம். பட்டணத்தின் நாலு திக்குகளுக்கும் குழாய்கள் வைக்கவும் சாக்கடைகள் கட்டவும் ரொம்பசெலவு பிடிக்கிறது. வரிபோட்டு வஸூல் செய்கிறபணம் இதற்கு போதாது. ஆகவே, இப்படி ஸௌகர்யத்திற்கு அஸௌகர்யங்கள் இருக்கிறவரையில் சென்னையில் மரண விகிதம் அதிகமாகவே இருக்கும்.

சென்னையில் வஸிக்கும் ஸாதாரண ஜனங்களின் கதி தரித்ரமே இங்கே ஒரு கூலிக்காரனுடைய சராசரி வரும்படி மாஸத்திற்கு 8 ரூபா என்று சொல்லலாம். அவனுக்குக் குடும்பமோ பெரிதாகிவிடுகிறது. அதை அவன் ஸம்ரக்ஷணை செய்யவேண்டும். ஆகவே, அவனும் அவனுடைய குடும்பமும் உபயோகமற்ற உணவை அரைவயிறு சாப்பிட்டும் கந்தல் துணி உடுத்தும் மண்குடிசையில் இருந்தும் காலந் தள்ளவேண்டியிருக்கிறது.

ஜீவனோபாயத்திற்கும் மரண விகிதத்திற்கும் ஸம்பந்தமில்லையென்று சொல்பவருக்கு அதினுண்மை ஸமீபத்தில் நடந்த ஸம்பவங்களால் சொல்லாமலே விளங்கும். வேலையின்மை, அதிகவேலை, குறைந்தகூலி இவைகளால் ஏழைகள் பிழைப்பது அரிதாயிருக்கிறது. கொஞ்சகாலமாக, முதலாளி அதிக பணக்காரனும் ஏழை அதிக ஏழையாயும் ஆயிருக்கிறார்கள். உணவுப் பொருள்களின் விலை சிலமாஸங்களுக்குள்ளாக கணக்கு வழக்கில்லாமல் ஏறிவிட்டது. ஸம்பாதிக்கும் திறமை அதிகரிக்கவில்லை. ஜீவனச் செலவு அதிகரித்திருக்க, சம்பளம் மாத்ரம் உயரவில்லை. ஸமீபத்தில் நடந்த கடைக்கொள்ளைகளில் சில ஜனங்கள் தங்களுக்கு ஒருநாள் ஒன்றறை நாளாக யாதொரு ஆகாரமும் கிடையாது என்றார்களாம். சூறையில் கிடைக்கக்கூடிய கொஞ்சம் அரிசிக்காக ஒருவர்க்கொருவர் மேல்விழுவதைப்பார்க்க பரிதாபமாயிருந்தது. ஆகாரப்பொருள்களின் தன்மையோ சொல்லவேண்டியதில்லை.

மேலே விவரித்த காரணங்கள் ஸாதாரண வர்ஷங்களிலேயே ரொம்ப கடுமையாயிருந்தன. இந்த வர்ஷத்தில் இவை இன்னும் கடுமையாகி நம்மை ரொம்பவும் பாதித்துவருகின்றன. 1917-ம் வர்ஷம் நடுவில் மரணவிகிதம் ஏற ஆரம்பித்து அது முதல் ஏறிக்கொண்டேபோகிறது. இந்த நிலைமைக்கு முக்யகாரணம் யுத்தமாகும். கையில் இருந்த ஆகாராதி சரக்குகள் சீக்ரம் தீர்ந்துவிட்டன. புதிய ஸாமான்கள் துரிதமாய்வரமுடியவில்லை. வந்தும், ஏழைக்குடிகள் வாங்கக்கூடியவிலைக்கு விற்க முடியவில்லை.



ஆகிலும் 1916-ம் வர்ஷம் முதல் பெருவாரி வ்யாதி ஒன்றும் வராமலிருந்தது நமது அதிர்ஷ்டமே. சென்ற இரண்டு வர்ஷங்களாக வாந்திபேதி வருமோ என்ற பயமிருந்தது. தற்போது அது இங்குமங்கும் கொஞ்சம் கிளம்பி யிருக்கிறது. ஆனால் இன்னமும் பெருவாரி வ்யாதி யாவதற்கிடமுண்டென்று தோன்றவில்லை.

---

## RANA HAMIR.
### ஹமீர் ராணா.

சித்தூர் என்னும் பட்டணம் வட இந்தியாவில் உள்ள ரஜபுதனத்தில் இருக்கிறது. அது குஜராத்துக்கு வட கிழக்கிலும், யமுனை ஆற்றின் உபநதியாகிய சம்பல் நதியின் உற்பத்தி ஸ்தானத்திற்கு மேற்கிலும் உள்ளது. அந்தப்பட்டணத்தை ரஜபுத்ர அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அங்குள்ள கோட்டை அதிக பந்தோபஸ்துடையதாகவும் பலமுள்ளதாகவும் இருந்தபடியால் சத்ருக்கள் அதைப் பிடித்துக் கொள்வது மிகவும் அஸாத்யமாக இருந்தது.

இப்படிப்பட்ட பலமுள்ள கோட்டையை கி. பி. 1303 ௵த்தில் கில்ஜி வம்சத்து அரசனாகிய அல்லாவுடீன் என்பவன் கைப்பற்றிக் கொண்டான். அவன் ஆப்கானிய ஜாதியைச் சேர்ந்தவன். முதல் முதல் அப்பொழுது தான் சித்தூர் ரஜபுத்ரர்களின் வசமிருந்து நீங்கியது. அப்பொழுது சித்தூரை ஆண்டு கொண்டிருந்த ரத்ன ஸிங்க், தன் முன்னோர்களுக்கு ஸொந்தமான சித்தூரை ஆப்கானியர் கைப்பற்றக் கூடாதென்று அவர்களோடு யுத்தம் செய்து இறந்துபோனான். அவனுக்குப் பிறகு அவன் ஸந்ததியைச் சேர்ந்தவர் ஒருவரும் இல்லாதபடியால் ஜீலட் என்னும் வகுப்பினருள் ஒரு பிரிவினராகிய ராணா என்னும் கூட்டத்தாருக்குத் தலைவனாகிய லக்ஷ்மண ஸிங் என்பவன் சித்தூருக்கு அரசனானான். அவனும் ரஜபுத்ர வம்சத்தைச் சேர்ந்தவனே. லக்ஷ்மணஸிங்க் தன் மூத்த குமாரனாகிய அரிஸிங்கைச் சேர்த்துக் கொண்டு சித்தூரைக் காப்பாற்றும் பொருட்டு ஆப்கானியரோடு போர் புரிந்தான். நடந்த யுத்தத்தில் தகப்பனும் மகனும் மாண்டு போனார்கள். அதன் பிறகு லக்ஷ்மணஸிங்கின் இளைய குமாரனாகிய அஜாய் ஸிங் என்பவன் ஆப்கானியரை எதிர்த்துச் சண்டை செய்தான். போரில் அவனுக்கு அதிக காயம் உண்டாகவே அவனைக் கெயில்வாரா என்னும் மலை ப்ரதேசத்துக்கு எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அங்கே அவன் சீக்ரம் ஸ்வஸ்தமடைந்தான்.

அஜாய்ஸிங்க் பேருக்கு மாத்ரம் மீவாரின் ராணாவாக இருந்தான். கெயில்வாரா மலை ப்ரதேசத்தைச் சார்ந்த சிலபாகங்களைத் தவிர மற்றவை எல்லாம் ஆப்கானியர் வசத்தில் இருந்தன. அஜாய்ஸிங்க் தன்னைச் சேர்ந்த பரிவாரங்களின் உதவியைக்கொண்டு ரஜபுத்ரர்களுக்கு உரிமையான எல்லா பாகங்களையும் திரும்பவும் கைக்கொள்ள வேண்டுமென்று ஆவலோடு எதிர் பார்த்திருந்தான். அவன் சில ஸமயங்களில் தன்னைச் சேர்ந்தவர்களோடு மலையினின்றும் வெளிக் கிளம்பி வந்து சித்தூருக்கு அருகாமையில் உள்ள ஊர்களைக் கொள்ளை யடித்து, சித்தூர் கோட்டையில் இருக்கும் ஆப்கானிய சிப்பாய்களையும் எதிர்த்துப் போர்செய்து வருவான்.

சித்தூரை ஜயித்த பிறகு ஸுல்தான் அல்லாவுடீன் தன் மகன் கிஸிர்கானை அதற்கு அரசனாக்கினான். ஆனால் சித்தூர் தன் வசத்தில் வெகுகாலம் இருக்கமுடியாதென்று கண்டு கொண்டு, ஸுல்தான் ரஜபுத்ர வம்சத்தைச் சேர்ந்தவனாகிய ஸோநிக்ரஹ மால்தேவன் என்பவனிடம் சித்தூரின் அரசாட்சியை ஒப்புவித்தான்.

அஜாய்ஸிங்குக்கு ஸஜ்ஜன் ஸிங்க், கிஷன் ஸிங்க் என்று இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் தகப்பனைப் போல் வீரமும் பராக்ரமமும் உடையவர்களல்ல. அஜாய்ஸிங்க் ஆப்கானியர் கைப்பற்றிய பாகங்களை மறுபடியும் எப்படி அடைவதென்று யோசித்துக் கொண்டிருக்கையில், மஞ்ஜாபலிசா என்பவன் அஜாய் ஸிங்கின் வசத்திலிருந்த ஊர்களைக் கொள்ளையடித்து வந்தான். அந்த ஸமயம் மஹாராணா அஸௌக்யமாக இருந்தபடியால் மஞ்ஜாவைத் துரத்தும்படி தன் இரண்டு பிள்ளைகளுக்கும் கட்டளையிட்டான். அவர்கள் ஒன்றும் செய்யமுடியாமற்போயிற்று. மஞ்ஜா கொள்ளையடிப்பதை நிறுத்தவில்லை. தன் பிள்ளைகள் திறமையில்லாதவர்களாயிருக்கிறார்களே என்று மஹாராணா அதிக வ்யஸனமடைந்தான். அஜாய்ஸிங்கின் தமையனான அரிஸிங்குக்கு ஒரு மகன் இருந்தான். அவன் தன் தகப்பனைப் போலவே அதிக பராக்ரமம் உள்ளவன். அவன் அப்பொழுது அன்வா என்னும் க்ராமத்தில் வஸித்துக் கொண்டிருந்தான். மஹாராணா தன் பிள்ளைகளைப்பற்றி வ்யஸனப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, அரிஸிங்கோடு நெருங்கிப் பழகிய ஒருவன் அவன் பிள்ளையின் ஸாமர்த்யத்தைப்பற்றி மஹாராணாவிடம் சொன்னான்.

மஹாராணா தன் அண்ணன் மகனாகிய ஹமீரைக் கூப்பிட்டு மஞ்ஜாவை தண்டிக்க வேண்டுமென்று அவனுக்குக் கட்டளையிட்டான். ஹமீருக்கு அப்பொழுது 13 அல்லது 14 வயஸு தான் ஆயிற்றென்றாலும், மிகவும் தைர்யத்தோடு தன் சிற்றப்பனுடைய கட்டளையை நிறைவேற்றப் புறப்பட்டான். அவனைப் பார்த்தபோதே மஹாராணாவுக்கு அளவில்லாத ஸந்தோஷம் உண்டாயிற்று. ஹமீர் சில போர்வீரர்களோடு காட்வார் என்னும் க்ராமத்துக்குப் போய் அங்கிருந்த மஞ்ஜாவோடு சண்டை செய்து அவன் தலையை வெட்டிக்கொண்டு வந்து தன் சிற்றப்பனுடைய பாதங்களில் வைத்தான். அஜாய்ஸிங்க் அதிக ஸந்தோஷமடைந்து ஹமீரை முத்தமிட்டுக் கொண்டான். தனக்குப் பிறகு சித்தூரை ஹமீர் தான் ஜயிக்கக்கூடுமென்றும், ஒரு ராஜ்யத்தை ஆள்வதற்கு வேண்டிய குணங்கள் அவனிடமே இருக்கின்றனவென்றும் கண்டு கொண்டு, அஜாய்ஸிங்க் தன் கத்தியை ஹமீரிடம் கொடுத்து, அவன் கொண்டு வந்து வைத்த தலையிலுள்ள ரத்தத்தை எடுத்து அவன் முகத்தில் ராஜதிலகமிட்டான்.

ஸஜ்ஜன்ஸிங்கும் கிஷன்ஸிங்கும் தங்கள் தகப்பனுக்குப் பிறகு தாங்கள் மஹாராணா பட்டத்தை வஹிக்க வழியற்றவர்களாகி, கெயில்வாரா மலை ப்ரதேசத்தை விட்டு நீங்கி தக்ஷிணத்திற்குப் போய்ச் சேர்ந்தார்கள். அவர்களுடைய ஸந்ததியார் ஸடாரா, கோலாபூர். ஸவந்த்பாடி. தஞ்சாவூர், நாகபூர் முதலிய இடங்களில் அரசாட்சி செய்து தங்கள் முன்னோர்களுக்குக் கெடுதி செய்த ஜாதியாரை தண்டித்தார்கள். அவர்கள் ஸந்ததியில் பிறந்தவர் தான் மஹாராஷ்ட்ர அரசனாகிய ஸிவாஜி.

ஹமீரின் தாயாரும் நற்குணமும் தைர்யமும் உடையவள். அவள் ஹமீரின் தகப்பனை அரிஸிங்கை விவாஹம் செய்துகொண்ட வரலாறு மிகவும் விசித்ரமானது. அரிஸிங்



இளவரசனாக இருந்த காலத்தில், ஒரு ஸமயம் அரண்மனையிலுள்ள சிலரோடு கூடிக் கொண்டு கெயில்வாரா மலைக்கு மேற்கில் வேட்டையாடப் போனான். வேட்டையில் காயமடைந்த ஒரு காட்டுப்பன்றி சோளக் கொல்லை யொன்றில் போய்ப் பதுங்கிக் கொண்டது. அரிஸிங் குதிரைமேல் ஏறிக் கொண்டே அந்தப் பன்றியைப் பின் தொடர்ந்து போனான். அவன் சோளக் கொல்லைக்குள் ப்ரவேசிக்கும் தருணத்தில் அதைக் காத்திருந்த ஒரு பெண் தானே அந்தப் பன்றியை வெளியே துரத்துவதாகச் சொல்லி, சோளப் பயிர்களை நாசப்படுத்தாமலிருக்கும்படி அவனை வேண்டிக் கொண்டாள். அவள் பத்துப் பன்னிரண்டு அடி உயரம் வளர்ந்துள்ள ஒரு பருத்த சோளத்தட்டைப் பிடுங்கி அதைக் கூர்மையாக்கி, அங்குள்ள பரணின்மேல் ஏறிக்கொண்டு, கீழே ஒளித்துக் கொண்டிருந்த பன்றியை அந்தச் சோளத்தட்டால் குத்தி, கீழே இறங்கி பன்றியை இழுத்துக் கொண்டுபோய் வேட்டையாள்களின் முன்னே போட்டுவிட்டு அப்பால் போனாள்.

வேட்டையாட வந்தவர்கள் மாமரத்தின் நிழலின் கீழுள்ள ஒரு நீரோடைக்குப் போய்க் களைப்புத் தீரும்படி சமையல் செய்து சாப்பிட்டார்கள். அவர்கள் காட்டுப் பன்றியைக் குத்திக் கொன்ற பெண்ணின் வீரத்தைப் பற்றி அதிசயித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். அத்தருணத்தில் அரிஸிங்கின் குதிரையின் காலில் ஒரு களிமண் உருண்டை வந்து விழுந்தது. அது எங்கிருந்து வந்ததென்று அவர்கள் பார்த்தபொழுது காட்டுப் பன்றியைக் கொன்ற பெண் பரணின்மேல் நின்று கொண்டு சோளத்தை எடுக்க வரும் பக்ஷிகளைத் துரத்திக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். அவள் உடனே இறங்கி அவர்களிடம் வந்து தான் தெரியாமல் செய்த தப்பிதத்தை மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அவ்விடம் விட்டுப் போனாள். அரிஸிங்கும் அவனோடு வந்தவர்களும் வீட்டுக்குத் திரும்பிப் போகும்பொழுது அந்தப் பெண் இரண்டு கைகளிலும் இரண்டு எருமைகளைப் பிடித்துக் கொண்டும், தலையில் ஒரு பாத்ரத்தில் பாலை வைத்துக் கொண்டும் அந்த வழியே போனாள். அவள் எடுத்துப்போன பாலை விளையாட்டாகக் கவிழ்த்துவிட வேண்டுமென்று வேட்டைக்காரர்கள் யோசனை பண்ணினார்கள். குதிரைமேல் ஏறிக்கொண்டிருந்த ஒருவன் அவள்மேல் உராய்ந்து கொண்டேபோனான். அந்தப் பெண் அதற்கு அஞ்சாமல், தான் ஓட்டிப்போன எருமைகளில் ஒன்றைக் குதிரையின் கால்களுக்கு இடையில் ஓட்டினாள். குதிரையின் கால் இடறவே அதன்மேல் ஏறி இருந்தவன் கீழேவிழுந்தான். அரிஸிங் அந்தப் பெண் யாரென்று விசாரித்து, அவள் ரஜபுத்ரரில் சாண்டானே என்னும் வகுப்பினரைச் சேர்ந்த ஒரு எளியவனுடைய மகளென்று அறிந்துகொண்டான். அரிஸிங் மறுநாள் அதே இடத்திற்கு வந்து அந்தப் பெண்ணின் தகப்பனை வரவழைத்தான். அவன் தன்னை அழைத்தது ராணாவின் பிள்ளையென்று கொஞ்சங்கூட மரியாதை வைக்காமல், அவனுக்கு ஸமமாக உட்கார்ந்து கொண்டான். அரிஸிங்க் அவன் பெண்ணைத் தனக்குக் கொடுக்கும்படி கேட்டதற்கு, அவன் உடனே மறுத்துவிட்டான். ஆயினும் அவன் வீட்டுக்குப் போய் நடந்த ஸங்கதியைத் தன் மனைவியிடம் தெரிவித்தான். அவள் அரிஸிங்கைத் தேடிப் பிடித்து, தங்கள் மகளை அவனுக்குக் கொடுப்பதாகச் சொல்ல வேண்டுமென்று தன் புருஷனிடம் தெரிவித்தாள். அப்படியே அரிஸிங்க் அந்தப் பெண்ணை விவாஹம் செய்துகொண்டான். அவர்களுடைய மகன் தான் ஹமீர்.

லக்ஷ்மணஸிங்கும் அரிஸிங்கும் யுத்தத்தில் இறந்தவுடன் ஹமீரின் தாயார் அவனை அழைத்துக்கொண்டு ஒரு க்ராமத்துக்குப் போய்விட்டாள். ஹமீர் ராஜ வம்சத்தில் பிறந்தவன் என்று காட்டிக்கொள்ளாமலே அவள் அந்த க்ராமத்தில் வஸித்துவந்தாள். அவனுக்குப் பதின்மூன்றாவது வயஸு நடக்கும்போது, அவனுடைய சிறிய தகப்பனை அஜாய்ஸிங் அவனை வரவழைத்து ராஜ்யத்தை அவனிடம் ஒப்பித்தான்.

ஹமீர் ராஜ்யத்தை ஏற்றுக்கொண்டவுடன் மஞ்ஜா பலிசாவுக்கு ஸொந்தமான பஸ்ஸாலியோ என்னும் கோட்டையைப் பிடித்துக்கொண்டான். தன் தமையன் மகன் ராஜ்யத்தை நன்றாக அரசாட்சி செய்வான் என்னும் நம்பிக்கையுடன் அஜாய்ஸிங் காலஞ்சென்றான்.

சத்ருக்கள் ஸேனா பலத்திலும் த்ரவ்ய பலத்திலும் தன்னைவிட மேலான நிலைமையில் இருந்தபடியால், அவர்களை எதிர்த்து யுத்தம் செய்வது அஸாத்யமென்று ஹமீர் அறிந்துகொண்டான். அவன் சத்ருக்களின் வசத்திலிருந்த ஊர்களையெல்லாம் அழித்துப் பாலைவனம்போல் செய்துவிட்டான். அவர்கள் மலைக்கோட்டைகளிலேயே வஸிக்கும்படி நேரிட்டது. ஸம பூமிகளில் ஒன்றும் பயிர் செய்ய முடியாமல் போயிற்று. மீவார் ராஜ்யத்தின் க்ஷேமத்தைக் கோருகிறவர்களெல்லாரும் தன்னோடு வரவேண்டுமென்று ஹமீர் உத்தரவு செய்தான். அவன் அவர்களோடு மலைகளில் வஸித்து வந்தான். டில்லி ஸுல்தான் அல்லாவுடன் மீவாரை மால்தேவனுக்கு ஜாகிராகக் கொடுத்திருந்தான் என்றாலும், சித்தூர் ஒன்று தான் அவன் வசத்தில் இருந்தது. ஆகவே மால்தேவன் சித்தூரில் தன் உத்யோகஸ்தர் சிலரை வைத்துவிட்டுத் தன் பழைய இருப்பிடமாகிய ஜாலூருக்குப் போய்விட்டான்.

ஹமீர் பல தடவைகளில் சித்தூரைத் தாக்கியும் அதைப் பிடித்துக்கொள்ள முடியாமல் போய் மனவருத்தமடைந்தான். அவன் பயிர் பச்சைகளை அழித்துவிடவே ஜீவனத்துக்கு மார்க்கமில்லாமல் கஷ்டப்பட்டு அவனோடு இருந்தவர்கள் அவனைவிட்டுப் போய்விட்டார்கள். பிறகு ஹமீர் தன்னோடு இருந்த சிலரை அழைத்துக்கொண்டு த்வாரகைக்கு யாத்ரை போனான். குஜராத்திலுள்ள காட் என்னும் க்ராமத்தில் ஜோஸ்யத்தில் தேர்ந்த ஒரு ஸ்த்ரீ இருந்தாள் அவளுக்கு பாருதி என்று பெயர். அவள் ஹமீரைப் பார்த்து "நீ மீவாருக்குத் திரும்பிப்போனால் சித்தூரைப் பிடித்துக் கொள்ளலாம். உனக்குக் கிடைக்கும் பெண்ணை வேண்டாமென்று மறுக்காதே. அவளை விவாஹம் செய்து கொள்வதினால் சித்தூரை ஜயிக்கப்போகிறாய்" என்று சொன்னாள். போர்வீரர்களாவது குதிரைகளாவது தன்னிடம் இல்லாமலிருக்கத் தான் சித்தூரை எப்படி ஜயிக்க முடியுமென்று ஹமீர் அதிசயித்தான். பாருதி அவனைப் பார்த்து "அப்பா! என் மகன் பாரு என்பவன் அநேக குதிரைகளோடு கெயில்வாராவுக்கு வருவான். அந்தக் குதிரைகளை உபயோகித்துக் கொள். அவைகளுக்காகப் பணங் கொடுக்க வேண்டுமே என்று யோசியாதே. பணம் கிடைக்கும்போது கொடுக்கலாம்" என்றாள்.

அந்த ஜோஸ்ய ஸ்த்ரீ சொல்லியதைக் கேட்டு ஹமீர் கெயில்வாராவுக்குத் திரும்பிப் போனான். அவளுடைய மகன் குதிரை வ்யாபாரம் செய்கிறவன். அவன் தாயின் கட்டளைப்படியே 500 குதிரைகளோடு கெயில்வாராவுக்குப் போனான். ஹமீர் அவனை மர்யாதையுடன் வரவேற்று உபசரித்து குதிரைகளைப் பெற்றுக்கொண்டான். ஹமீர் பாருவைத் தனக்கு உதவியாக வைத்திருந்து, பிறகு, சில க்ராமங்களை அவனுக்கு ஜாகிராகக் கொடுத்தான்.



இப்படி இருக்கும் ஸமயத்தில் மால்தேவனின் பெண்ணின் விவாஹ விஷயத்தைக் குறித்து அவனுடைய மந்த்ரிகள் ஆலோசனை பண்ணினார்கள். அவர்கள் மால்தேவனை நோக்கி "ஐயா, ஸுல்தான் மால்வா முழுவதையும் தங்களுக்கு ஜாகிராகக் கொடுத்திருந்தும் நமக்கு அதிலிருந்து ஒரு பைஸாவும் வரும்படி கிடைக்கவில்லை. ஹமீரும் அவன் ஸந்ததியாரும் இருக்கிறவரையில் ராஜ்யம் இப்படித்தான் இருக்கும். இதனால் நமக்கு கௌரமும் உண்டாகாது. தங்கள் பெண்ணை ஹமீருக்கு விவாஹம்செய்து கொடுத்து வளப்பமில்லாத சில பாகங்களை அவனுக்கு ஸ்ரீதனமாகக் கொடுத்துவிட்டால், நாம் வளப்பமுள்ள பாகங்களை வைத்துக்கொண்டு லாபமடையலாம்" என்று சொன்னார்கள். மால்தேவனும் அதற்கு ஸம்மதித்துச் சிலரை ஹமீரிடம் அனுப்பினான். சித்தூரை ஜயிக்க இதுவே மார்க்கமென்று அறிந்திருந்த ஹமீர் அதற்கு ஸம்மதித்தான். விவாஹம் ஜாலூரில் நடந்தது. வாக்களித்தபடியே மால்தேவன் ப்ரயோஜனமில்லாத சில ஜில்லாக்களை ஹமீருக்குக் கொடுத்தான்.

விவாஹம் முடிந்தவுடன் ஹமீர் மனைவியை அழைத்துக் கொண்டு தன் இருப்பிடம் போய்ச் சேர்ந்தான். அவள் தன் புருஷனைப்பார்த்து "இப்பொழுது நான் உங்களுக்கு ஸொந்தமாய்விட்டபடியால் உங்கள் நன்மையே நாடவேண்டியவளாக இருக்கிறேன். சித்தூரைச் கைப்பற்ற உங்களுக்கு எண்ணமிருக்கும் பக்ஷத்தில், என் தகப்பனாரின் மந்த்ரியாகிய மேடா மோஜிராம் என்பவரை உங்களிடம் அனுப்பும்படி தந்த்ரமாய் என் தகப்பனாரைக் கேட்டுக் கொள்ளுங்கள்" என்றாள். அவன் அப்படியே மால்தேவனை அணுகி "நீங்கள் எனக்கு அநேக ஊர்களைக் கொடுத்திருக்கிறீர்கள். எனக்கு ஒரு குறையும் இல்லை; ஆனால் நன்றாக ஆளும் திறமையுள்ளவன் என்னிடம் ஒருவனுமில்லை. ஆகையால் தங்களிடத்தில் இருக்கும் மேடா மோஜிராமை என்னிடம் அனுப்பினால் நன்மையடைவேன்" என்றான். மோஜிராம் தன் மருமகனிடம் இருந்தால் கெடுதல் ஒன்றும் உண்டாகாமல் இருக்குமென்று எண்ணி, மால்தேவன் அவனைத் தன் மருமகனிடம் அனுப்பினான்.

ஹமீரின் அந்தரங்க எண்ணத்தை அறிந்த மோஜிராம் சித்தூரைப் பிடிக்க அதுவே தருணமென்று அவனிடம் தெரிவித்தான். ஹமீர் இன்னும் அநேக ரஜபுத்ரர்களைக் கூட்டிக்கொண்டு குதிரைகளின்மேலேறி வேட்டைக்குச் செல்வதுபோல் போக்குக்காட்டி சித்தூரை நோக்கிப் போனான். அன்றிரவு எல்லோரும் சித்தூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். மோஜிராம் கோட்டைக் கதவைத் திறக்கும்படி உள்ளே இருந்த சிப்பாய்களுக்கு உத்தரவு செய்தான். இதற்கு முன் திறப்பது போலவே இப்பொழுதும் அவர்கள் திறந்தார்கள். மோஜிராமின் பின்னால் ஹமீரும் அவனைச் சேர்ந்தவர்களும் கோட்டைக்குள்போய் தங்கள் கொடியை நாட்டிவிட்டார்கள். அங்கே எதிர்த்த போர்வீரர்களைக் கொன்றுவிட்டார்கள்; சிலரை வெளியே துரத்திவிட்டார்கள். இந்த ஸங்கதியைக் கேள்விப்பட்ட மால்தேவன் தன் ஐந்து பிள்ளைகளோடும் சேனைகளோடும் சித்தூருக்குப் போய்ச் சண்டைசெய்து இரண்டு மூன்று தடவைகளில் தோல்வியடைந்தான். தன்னால் சித்தூரைப் பிடிக்க முடியாதென்று எண்ணி அவன் டில்லி ஸுல்தானாகிய மஹ்மத் டோக்ளக்கினிடம் முறையிட்டுக்கொண்டான். ஸுல்தான் ஸேனைகளோடு கிழக்குப் பக்கமாக மீவாருக்குவந்து ஹமீரோடு யுத்தம் செய்தான். ஹமீர் ஸுல்தானைத் தோற்கடித்துச் சிறைப்படுத்திக் கொண்டான். ஸுல்தான்

மூன்று மாஸம் சித்தூரில் கைதியாக இருந்து, அதன்பிறகு ஆஜ்மீர் நாகூர் முதலிய சில ஊர்களும் ஐம்பது லக்ஷம் ரூபாயும் நூறு யானைகளும் ஹமீருக்குக் கொடுத்துவிட்டு மீண்டு போனான்.

சித்தூரை ஹமீர் பிடித்துக்கொண்டான் என்று கேள்விப்பட்டதும், ரஜபுத்ரர்கள் அநேகர் அங்கே வந்தார்கள். ரஜபுத்ர சிற்றரசர்களெல்லாம் ஸந்தோஷத்துடன் ஹமீருக்குக் கப்பங்கட்டினார்கள்.

ஜோஸ்யம் சொன்ன பாருதியை ராணா மறக்கவில்லை. அவளைச் சித்தூருக்கு வரவழைத்து உபசரித்து வந்தான். அவள் இறந்த பிறகு அவளுடைய ஞாபகார்த்தமாக ஹமீர் அன்ன பூர்ண ஆலயம் என்பதைக் கட்டினான். கொஞ்ச காலத்திற்கெல்லாம் மால்தேவன் இறந்துவிட்டான். அதன் பிறகு ஹமீர் தன் மனைவியைச் சித்தூருக்கு வரவழைத்துக்கொண்டான். அவள் தன் தகப்பனுக்கு ஒரு யோகினி கொடுத்திருந்த மண்டையோட்டையும் பூமாலையையும் கத்தியையும் தன்னோடு எடுத்து வந்தாள். அந்தக் கத்தியை உதய புரத்தில் இப்பொழுதும் நவராத்ரி காலத்தில் பூஜித்து வருகிறார்கள்.

ஹமீரின் கீர்த்தி ராஜ்யமெங்கும் பரவியது. மார்வார், க்வாலியர், ஸிக்ரி முதலிய இடங்களிலுள்ள அரசர்கள் ராணாவுக்கு வேண்டிய வேலைகளைச் செய்யக் காத்திருந்தார்கள். ஹமீர் சித்தூரைக் கைப்பற்றியது முதல் மீவார் ராஜ்யம் மிகவும் பலப்பட்டுவிட்டது. மீவாரை ஹமீருக்குப் பின் ஆண்டவர்கள் சத்ருக்களை வரவொட்டாமல் தடுத்ததுமல்லாமல் டில்லி வரையிலும்போய் யுத்தம் செய்தும் ஜயமடைந்தார்கள்.

ஹமீர் மிக்க கீர்த்தியோடு வெகு காலம் ஆண்டுகொண்டிருந்து ராஜ்யத்தை பலப்படுத்தி தன் மகன் கெயிட் ஸிங்கின் வசம் ஒப்பித்து இவ்வுலகைவிட்டு நீங்கினான்.

## WHY WE SEE GHOSTS.

### பிசாசுகள் ஏன் தென்படுகின்றன.

நமது நாட்டில் பிசாசு பயம் அதிகமாக இருந்துவருகிறது. பால்யம் முதல்கொண்டே சிறுவர்களுக்கு இந்த விஷயங்கள் தெரியவருகின்றன. இருட்டில் போக அவர்கள் பயப்படுகிறார்கள். சிற்சில குறிப்பிட்ட இடங்களில் துர்த்தேவதைகளும், இறந்தவர்களின் பிசாசு ரூபங்களும் உலவுகின்றனவென்று பெரியவர்களும் நம்புகிறார்கள். இதைக் கேட்கும் சிறுவர்களும் அந்த விடங்களுக்கு இருட்டில்போக பயப்படுகிறார்கள். பகலில்கூட அந்த இடங்களுக்கு தனியாகப்போக பயப்படுவதுண்டு. தைர்யமாக உள்ள சிறுவர்களையும் சில பெற்றோர்கள் அதைர்யப்படுத்துவதுண்டு. உண்மையில் பிசாசுகளும் துர்த்தேவதைகளும் உலகத்தில் உண்டா? துர்மரண மடைந்தவர்கள் உண்மையில் பிசாசுகளாகத் திரிகிறார்களா? இவ்விஷயம் மேல்நாட்டாரால் நிச்சயமாகத் தீர்மானிக்கப்படவில்லை. ஆயினும் சிற்சில ஸந்தர்ப்பங்களில் மனிதர்கள் பார்க்கும் பிசாசுகளும் பூதங்களும், உண்மையில் பார்ப்பவர் கண்ணில் ஏற்படும் ஒருவகைத் தோற்றமே என்று ஒரு சாஸ்த்ர வித்பன்னருடைய ஆராய்ச்சியால் தெரியவருகிறது. அவர் சொல்லுவது என்னவென்றால், கண்ணின் உள்பாகத்தில் உருவங்கள் படும்பாகமாகிய ரெடினா என்னும் இடத்தில் விழும் காட்சிகள் முற்றிலும் அழிந்துபோகாமல் இருந்து பின்னால் நமக்குத் தெரிவதால்தான், பிசாசுகளின் தோற்றம் ஏற்படுகிறது என்பதே. கண்ணில் விழும் ஒரு உருவம், அதைப் பார்த்த பிறகு சிறிது காலம் அழியாமலிருக்கிறது. அதைப் பார்த்த பிறகு உடனே இருட்டில் போய்விட்டால், கண்ணில் ஏற்பட்ட உருவம் வெகு நேரம் அழியாமலிருந்துவருகிறது. பிறகு சிறிது வெளிச்சத்துக்கு வந்தால், மறுபடியும் அந்த உருவம் நன்றாய்த் தெரிகிறது. நாம் பார்க்கும் பிசாசு ரூபங்களில் பல இந்த மாதிரி கண்ணில் ஏற்படும் உருவந்தான் என்று சொல்லப்படுகிறது. பகலில் ஒரு அறையிலிருந்துகொண்டு ஜன்னல் வழியாக வானத்திலுள்ள மேகங்களைப் பார்த்துவிட்டுப் பிறகு உள் பக்கம் திரும்பி சுவரைப் பார்த்தால், மேகங்களின் உருவம் தெரியும். இந்த உருவம் இயற்கையான நிறத்தோடு இருக்கலாம். அல்லது, வேறு வர்ணங்களாகத் தோற்றலாம். இந்த மாதிரி உருவங்கள் பிற்பாடு நமக்குத் தெரிவதைத்தான் நாம் சில ஸமயங்களில் பூதங்கள் என்றும், பிசாசுகளென்றும் சொல்லுகிறோம்.



உதாரணமாக எ, பி., என்னும் இருவர் ஸாயந்திரம் இருட்டுகிறவரையில் ஒரு அறையில் விளக்கு வெளிச்சத்தில் பேசிக்கொண்டிருந்துவிட்டு, பிறகு வெளிச்சத்தை நிறுத்திவிட்டு, வெளியில் இருட்டில் போகிறார்களென்று வைத்துக்கொள்வோம். பிறகு உடனே பி. என்பவன் ஏதோ வைத்து மறந்துவிட்டதாகச் சொல்ல, இருவரும் மறுபடியும் அறைக்குள் போகிறார்கள். எ. என்பவன் விளக்கை ஏற்றுகிறான். ஏற்றி பி. என்பவனைப் பார்க்கிறான். பிறகு இருவரும் வெளியில் வந்து பிரிகிறார்கள். எ. ஒரு காட்டின் வழியாக தன் இருப்பிடம் போகவேண்டும். அப்படிப் போகையில் ஒரு திறந்த வெளி குறுக்கிடுகிறது. அங்கே சிறிது வெளிச்சமிருக்குமாதலால் அவனுடைய கண்ணில் வெளிச்சம்பட்டு பி. யினுடைய உருவம் தெரிகிறது. அந்த உருவம் தூரத்தில் தெரிவதுபோலிருக்கும். அப்போது அவ்வுருவம் தெளிவாயிருந்தால், அதை அவன் கண்டுகொள்ளலாம். ஆனால் இந்த உருவங்கள் தெளிவாய்த் தெரிவதில்லை. அதனால் எ. என்பவன் பி. யினுடைய உருவந்தான் என்று நிச்சயிக்கமுடியாமல் தவிக்கிறான். அவன் பேய் பிசாசுகளில் நம்பிக்கை உள்ளவனாக இருந்தால் யாரோ இறந்துபோனவருடைய பிசாசு உருவத்தைக் கண்டதாக எண்ணி பயப்படுவான். அந்த உருவம் தன் முன்னால் காட்டில் வந்ததைப்பற்றியும், அங்குமிங்கும் சுற்றி யலைந்ததைப்பற்றியும், பிறகு மெதுவாகவோ, திடீரென்றோ மறைந்து போனதைப் பற்றியும் ஒரு கதையாகப் பலரிடமும் சொல்லுவான். ஆனால் காட்டில் சற்று வெளிச்சமுள்ள இடத்தில்தான், தான் பிசாசு உருவத்தைக் கண்டதாகச் சொல்ல அவனுக்குத் தோன்றுது.

இப்படிப்பட்ட ஸம்பவங்கள் நேரிடுவது ஸகஜமென்று மேற்சொன்ன மேல்நாட்டு சாஸ்த்ரி தெரிவிக்கிறார். மேலும் அவர் தம்மையே பரீக்ஷித்துப் பார்த்ததில், அவ்விதத் தோற்றங்கள் உண்டாயினவென்று சொல்லுகிறார். உதாரணமாக, அவர் ஒரு ஸமயம் 5 அல்லது 10 நிமிஷம் இருட்டறையிலிருந்துவிட்டு, பிறகு அந்த அறையிலுள்ள ஒரு விளக்கை, தன் கையின்மேல் மாத்ரம் படும்படி ஏற்றி வைத்தார். அதைப் பார்த்த பிறகு விளக்கை அணைத்துவிட்டு, எட்டுமணி நேரம் இருட்டறையில் தூங்கினார். விழித்துக்கொண்டதும், கண்ணில் வெளிச்சம்படும்படியாக ஏற்பாடு செய்திருந்தார். கண்ணிமைகள் திறப்பதற்கு முன், கையின் உருவம்

தெரிய வந்ததாம். இப்படி தினந்தோறும் தோற்றம் உண்டாகாவிட்டாலும், அடிக்கடி நேரிடுவதுண்டாம். சில ஸமயம் கையின் உருவம் தெளிவாக இருந்ததாம். சில ஸமயங்களில் தெளிவாய்த் தெரியவில்லையாம். கையானது பின்புறத்தில் மறைந்து இருந்த போதும் அதனுடைய உருவம் அவர் முன் தோன்றிற்று.

இரண்டு தலையுள்ள பூதங்கள் இரவில் தோன்றுவதும் இந்த முறையை அனுஸரித்தே நடக்கிறதென்று அவர் சொல்லுகிறார். ஒரு ஸமயம் ஒரு மாளிகையில் தூங்கிக்கொண்டிருந்த ஒரு ப்ரஞ்ச் ப்ரபு கதவிடிக்கும் சத்தம்கேட்டு விழித்துக்கொண்டார். உடனே இரண்டுதலையுள்ள ஒரு மனித உருவம் மூடியிருந்த கதவின் வழியாக உள்ளே வந்து, சிறிதுநேரம் அறையில் உலவிவிட்டு, ஒரு சுவரின் வழியாக மறைந்து விட்டதாம். இதற்குக் காரணம் என்னவென்றால், இரவில் படுத்துக்கொள்ளப் போவதற்கு முன்னால், ஒருவர் பின் ஒருவராக நின்றுகொண்டிருந்த இருவரை அந்த ப்ரபு உற்றுப் பார்த்திருப்பார். அப்போது அவருக்குத் தோன்றின காட்சி ஒரு உடலும் இரண்டு தலையுமாகும். இது ஸாதாரண ஸம்பவமாதலால், இதைப்பற்றி அவர் கவனம் செலுத்தி யிருக்கமாட்டார். ஆயினும் கண்ணில் இந்த உருவம் அமைந்துவிடும். இரவில் தூங்கி விழித்த பிறகு அவ்வுருவம் சற்று மங்கலாகத் தோன்றவே பூதம் என்று நினைத்துவிட்டார். முதல்நாள் இரவில் பார்த்த காட்சி அவருக்கு இப்போது நினைவுக்கு வராது. கதவிடித்த சத்தமோ என்றால், தற்செயலாய் எங்கேயோ உண்டான சத்தமாகும். அந்தச் சத்தத்தினால், அவர் மனம் கிளர்ச்சியடைந்து, கண்ணில் முன்பு தோன்றிய உருவத்தை வெளிக்குக் கொண்டு வந்துவிட்டது.

செத்தவர்களுடைய உருவம் தோன்றுவதும் இதே மாதிரிதான் என்று அவர் சொல்லுகிறார். ஜனங்கள் பிணத்தைப் பார்க்கும் போது, அவர்கள் வேறு எந்த வேலையையும் செய்வதில்லை. பிணத்தைக் கண்டு அழாதவர்களும் அதன் முன் நின்றுகொண்டு அதை உற்றுப் பார்க்கிறார்கள். அப்போது பக்கத்திலுள்ள இதரப் பொருள்கள் அவர்களுக்குத் தோன்றுவதில்லை. சிறிது சில நேரம் அழுது கண்ணீர் விடுகிறார்கள். அப்போது பிணத்தின் உருவம் கண்ணில் படுவதில்லை. பிறகு கண்ணைத் துடைத்துக்கொண்டு, பிணத்தைப் பார்த்துவிட்டு மறுபடியும் அழுகிறார்கள். இதனால் பிணத்தின் உருவம் கண்ணில் நன்றாய்ப் படிந்துவிடுகிறது. பிறகு சில ஸமயங்களில் அவர்களுடைய மனக்கண்ணில் தெரிகிறது.

ஸாதாரணமான ரூபத்துடன்கூடிய ஒருவனைப் பார்த்திருந்தும், பின்னால் உருவம் மாறி பூதமாகவோ பிசாசாகவோ தோன்றுவதற்குக் காரண மென்னவென்றால், கண்களில் வர்ணத்தை க்ரகிக்கும் நரம்புகள் கோளாறு அடைந்திருப்பதே.

மேல்சொன்ன நிபுணர் அபிப்ராயத்தின் படி அநேக வித பிசாசு ரூபங்களின் வரலாற்றை விவரிக்கலாமென்றாலும், எல்லாவித பிசாசுகளுக்கும் இது சரியான காரணமாகாது. பிசாசுகள் ஜலமிறைத்தனவென்றும், காய்கனிகள் பறித்துக் கொடுத்தன வென்றும் சொல்லும் கதைகளிலும், கதவுகளெல்லாம் சாத்தப்பட்டிருந்தும் வெளியிலிருந்து ஸாமான்கள் வந்ததாகச் சொல்லும் கதைகளிலும் இந்த ஸமாதானம் பொருந்தாது. அவைகளின் காரணங்களை நிர்ணயிக்க வேறு ஆராய்ச்சி செய்தாகவேண்டும்.



## THE DEADLY HAND?

## கையின் விஷத்தன்மை.

கொசு, பூனை முதலிய ஜந்துக்கள் வ்யாதிகளைப் பரவச்செய்கின்றன. அவைகள் விஷயத்தில் ஜாக்ரதையா யிருங்கள்-என்று டாக்டர்கள் எச்சரிக்கிறார்களே யொழிய, வ்யாதியைப் பரவச்செய்வதில் மனிதனே ரொம்ப ஸாமர்த்யசாலி, அவன் விஷயத்தில் ஜாக்ரதையாயிருங்கள் என்று சொல்லுவது அபூர்வம். என்றாலும் அநேகம் வ்யாதிகள் பரவுவதற்கு மனிதன்தான் காரணமாயிருக்கிறான்.

மேல்நாட்டு நாகரீகத்தின் பலன் ஒன்றை நமது சிறுவரிடத்தில் காணலாம். நகத்தை எப்போதும் வாயில்வைத்துக் கடித்துக்கொண்டிருப்பதும் புஸ்தகத்தின் ஏட்டைப் புரட்ட, ஈரத்திற்காக, வாயின் எச்சிலைத் தொட்டுக்கொள்வதும் சிலரின் வாடிக்கை. ஸ்டாம்பு ஒட்ட எச்சில்தான் அநேகமாய் உதவுகிறது. மூக்கு, காது இவைகளிலிருந்து வரும் அழுக்கு முதலியவைகள் பையன்களின் விரல்களில்தான் ஏறுகின்றன. எச்சில், அழுக்கு முதலியவைகளில் இருக்கும் க்ருமிகள் நமக்கு ரொம்பகெடுதி விளைவிக்கக் கூடியன என்று தெரிந்துகொண்டால் அவர்கள் அப்படியெல்லாம் செய்யமாட்டார்கள். "வாய், மூக்கு, காது, கண் முதலியவைகளிலிருந்து வெளிவரும் மலாதிகள் ஆழ்ந்த பச்சை வர்ணம் பொருந்தியவைகளாக இருந்தால், அப்பொழுது நமது துர்வாடிக்கைகளால் நமது விரல்களில் அவைகள் ஒட்டிக்கொண்டிருப்பது நமக்கு நன்றாய்த் தெரியும்! நாமும் ஆச்சர்யப்பட்டு திடுக்கிடுவோம்" என்று ஒரு சாஸ்த்ரி எழுதியிருக்கிறார். நமது எச்சில் முதலியவைகள் நமது விரல்களில் சேர்ந்து, அவைகளிலிருந்து நாம் தொடும் அநேகம் ஸாமான்களுக்கு பரவுகின்றன. ஆகவே க்ருமிகளும் பரவுகின்றன. அழுக்குக்கைகளால் எடுத்துக்கொடுக்கிற தின்பண்டங்களைச் சிறுவர்களும் பெரியோர்களும் கூடவாங்கித் தின்பதனால் கேடுவிளைகிறதே யொழிய வேறில்லை. ஆகவே தின்பண்டம் விற்பவர்கள் பரிசுத்தமாய் இருப்பதுடன், அவைகளைக் கைகளால் எடுக்காமல் இருக்க வேண்டும்.

சிலர், தற்கால நாகரீகத்திற்கு அனுஸரணையாக, ப்ரஷ் போட்டுப் பல் தேய்க்கிறார்கள். அவர்கள் கடைகளுக்குப்போய் ப்ரஷ் நன்றாயிருக்கிறதாவென்று பார்க்க ஒருதரம் பல்லில் வைத்துப் பார்ப்பதுண்டு. இது சீமையில் ரொம்ப ஸாதாரணம் என்று தெரிகிறது. பிறகு பிடிக்காவிட்டால் கடையிலேயே விட்டுப் போவதுண்டு. பிறகு மற்றொருவர் அந்த ப்ரஷ்ஷை வாங்கி உபயோகிப்பதால், க்ருமிகள் வாயில் சேரும். இன்னும் அநேக விதங்களில், மனிதன் க்ருமிகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குப் பரவச்செய்கிறான்.

டெலிபோனில் பேசும்பொழுது இருமல் வ்யாதியுள்ளவர்கள் இருமுவதால், வ்யாதி அதே டெலிபோனில் பேசுகிற மற்றவர்களுக்கும் பரவும். இருமுவதால் ஜுரம், தொண்டைக்கட்டு, அம்மை, டிப்தீரியா முதலிய அநேக வ்யாதிகள் பரவுகின்றன. நாலு பேருடன் பேசும்பொழுதாவது அல்லது ஒரு ஸதஸில் இருக்கும்பொழுதாவது இருமல் வந்தால் அடக்கிக்கொண்டு வெளியில்போய் இருமிவிட்டு வருவது உத்தம குணத்தைக் காட்டுகிறது. க்ராமங்களில் ஸ்நானம்செய்ய ஒரு குளமும் குடிஜலம் எடுக்க ஒரு குளமும் இருக்கவேண்டும். குளிக்கும் குளத்தில் குடிக்க நீர் எடுக்கக்கூடாது. குடிக்க நீர் எடுக்கும் குளத்தில் ஒருவரும் குளிக்கக் கூடாது.

## RICE STRAW FOR PAPER MAKING.
## வைக்கோல் கடுதாசி செய்ய உதவும்.

நெல்லின் வைக்கோல் கடுதாசி செய்வதற்கு உதவுமென்று சோதனைகளால் தெரிய வருகிறது. சென்ற வர்ஷம் ஏப்ரல் மாஸத்தில் ஈஜிப்ட் தேசத்திலிருந்து சிறிதளவு வைக்கோலை இங்கிலண்டுக்கு அனுப்பி காகிதம் செய்ய முடியுமா என்று பரிசோதிக்கச் செய்தார்கள்.

அந்த வைக்கோல் ஸாதாரணமான காய்ச்சல்பாடுள்ளதாகவும் சுத்தமாகவும், பழுப்பும் மஞ்சளும் கலந்த நிறமுள்ளதாகவும் இருந்தது. அதை சோதித்துப் பார்த்ததில் அதில்

| | | | |
|---|---|---|---|
| ஈரம் | 100-க்கு | 11·8 | பாகமும் |
| சாம்பல் | ,, | 17·6 | ,, |
| நார்ப்பொருள் | ,, | 50·0 | ,, |

இருந்தன. அதிலுள்ள இழைகள் ஒரு அங்குலத்தில் 100-ல் 2½ முதல் 12 பாகம் வரையில் நீளமுள்ளவைகளாக இருந்தன. அவைகள் பெரும்பாகம் ஒரு அங்குலத்தில் நூற்றுக்கு 4 பாகம் நீளமுள்ளவை.

இந்த வைக்கோலுடன் காஸ்டிக் ஸோடா என்னும் மருந்தைப் பற்பல அளவில் கலந்து இதர காகித மூலப்பொருள்களை கூழாக்குவதுபோல் செய்து பார்த்தார்கள். உபயோகித்த வைக்கோலின் அளவில் 100-க்கு 44 பாகம் முதல் 53 பாகம் வரையில் கூழ் கிடைத்தது. இதைக் கூழாக்குவதற்கு 4 மணி நேரம் பிடித்ததாம்: எவ்வளவுக் கெவ்வளவு காஸ்டிக் ஸோடாமருந்தைக் குறைக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு கூழும் அதிகமாகக் கிடைத்தது.

100 பங்கு வைக்கோலுக்கு 14 பங்கு மருந்து சேர்த்ததில் 44 பங்கு கூழும், 10 பங்கு மருந்து சேர்த்ததில் 50 பாகம் கூழும், 8 பங்கு மருந்து சேர்த்ததில் 52 பங்கு கூழும், 6 பங்கு மருந்து சேர்த்ததில் 53 பங்கு கூழும் கிடைத்தன. கூழானது வெளுத்த நிறமாயிருந்தது. கடுதாசி உறுதியாயும், நன்றாயும் ஒளி ஊடுருவிச் செல்லக்கூடாததாயும் இருந்தது. காய்ந்த பிறகு அதிகம் சுருங்கவில்லை.

கூழை வெண்மையாக்க முயன்றதில் நூற்றுக்கு 6 பங்கு காஸ்டிக் ஸோடாமருந்து கலந்து செய்யப்பட்ட கூழைத் தவிர இதரக் கூழ்களெல்லாம் கிட்டத்தட்ட பூராவெண்மை நிறமடைந்தன.

காஸ்டிக் ஸோடாமருந்து போடாமல் சுண்ணாம்பு நீறு கரைத்த ஜலம் கலந்து கூழ் செய்தும் பார்த்தார்கள். அதனால் கிடைத்த கூழ் நல்ல பழுப்பு மஞ்சளாகக் கிடைத்தது. அதிலிருந்து உறுதியான கடுதாசி செய்ய முடிந்ததென்றாலும், அதை வெளுத்து வெள்ளைக் கடுதாசி செய்ய முடியவில்லை. ஆகவே சுண்ணாம்பு கரைத்த ஜலம் கலந்து செய்யப்படும் கூழ் பழுப்புக் கடுதாசியும் அட்டையும் செய்யவே உபயோகப்படும்.

இதனால் நெல்தாளிலிருந்து நல்ல காகிதக் கூழ் கிடைக்கிறதென்றும், இதற்கு காஸ்டிக் ஸோடா மருந்து அதிகம் செலவாகவில்லையென்றும், இந்த மருந்து கலந்து செய்த கூழை ஸுலபத்தில் வெண்மையாக்கிவிடலாமென்றும் ஏற்படுகிறது. அமெரிக்காவில் செய்த பரீக்ஷைகளாலும் இந்த விஷயங்கள் ஊர்ஜிதப்பட்டிருக்கின்றன. ஆகவே நெல் வைக்கோலிலிருந்து வெள்ளைக் கடிதமாவது பழுப்புக் கடிதமாவது அட்டையாவது செய்யத் தடையில்லை. இது நமது தேசத்தில் ஸாத்யமா என்பது வைக்கோலின் விலையைப் பொறுத்தது.



## THE ANT AND HER WAYS.
## எறும்பும் அதன் வழிகளும்.

"சோம்பேறியே! எறும்பினிடத்திற்குப் போ, அதன்வழிகளை கவனித்து புத்தியாயிரு" என்று ஒரு ஞானி சொல்லியிருக்கிறார். இது ஒரு நல்ல புத்திமதிதான். ஏனென்றால் அதன் வழிகளை கவனித்தால்தான் அதைக் கொல்லமுடியும். லோகத்தில் பலவிடங்களிலும் நாகரீகத்தால் வந்த உபாதிகளில் எறும்பு ஒன்று. நம்முடைய நாட்டில் அதனாலுண்டாகும் தீங்கு அபரிமிதம். இதன் உபத்ரவம் காய்கறித் தோட்டக்காரனுக்கு நன்றாய்த் தெரியும். வேறிடங்களில் இவை பயிர்களைத் தொடுவதில்லை. ஆனால் ஜனங்களை உபத்ரவிக்கின்றன. ப்ராணாவஸ்தை யுண்டாகிறது. இளைப்பாற முடியாது. சில தேசங்களில் மனிதர் வாஸலைன் தடவிய கண்ணாடிமேல் கால்களை வைத்துக்கொண்டு தூங்குகிறார்களாம். இல்லாவிட்டால் ராத்ரியில் எறும்புகள் மனிதரின்பேரில் கூட்டங் கூட்டமாக ஏறி தோல் மெதுவாயிருக்குமிடங்களில் கடிக்கின்றன. எறும்புகள் வராமலிருக்க வீட்டு ஸ்த்ரீகள் ரொம்ப ச்ரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். எறும்பு வரக்கூடிய இடங்களில் ஆகாரத்தின் ஒரு துணுக்கையுங் கூடப் போடாமல் ஜாக்ரதை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

எறும்பு வளை இருக்குமிடந் தெரிந்தால் அதன்பேரில் கொதிக்கிறநீரையாவது கெரோஸினையாவது விட்டு நாசப்படுத்தலாம். கெரோஸின் தெளிக்கும் கருவியை வீட்டில் வைத்திருப்பது நல்லது. ஸ்பஞ்ஜ் என்னும் கடல் பஞ்சை வெல்லங் கலந்த தண்ணீரில் நனைத்துவைத்திருந்தால் அதில் எறும்புகள் வந்து மொய்த்துக்கொள்ளும். பிறகு அதை கொதிக்கும் நீரில் போட்டுவிடவேண்டியது. எறும்புகள் வந்துகொண்டிருக்கும் வரையில் இப்படியே மறுபடியும் மறுபடியும் செய்துகொண்டிருக்கவேண்டியது. இப்படிச் செய்தால் உணவு தேடுகிற எறும்புகள் முழுவதும் சாகும். அதன்பின் பெண்ணெறும்புகள் பட்டினியால் இறந்துபோய், மறுபடி எறும்புகள் அந்த வளையில் உண்டாகா. ஒரு காலித் தகரத்திலோ கிண்ணத்திலோ ஆலிவ் எண்ணெயைத் தடவி வைக்கலாம். எறும்புகளுக்கு இந்த எண்ணெ யென்றால் வெகு பைத்யம். அவைகள் கூட்டங் கூட்டமாய் வந்து அதில் சிக்குண்டு மடியும்.

'எறும்பு டேப்' என்பது எறும்பு வரவொட்டாமல் நன்றாய்த் தடுக்க ஒரு ஸாதனமாகும். இது ஸாதாரணநூல் டேப் அல்லது நாடாவை கரோஸிவ் ஸப்ளிமேட் என்னும் மருந்து கலந்த ஜலத்தில் நனைத்து உலர்த்திச் செய்யப்படுகிறது. எறும்பு இதை தாண்டிப் போகாது. இதை மேஜைக்கால்களில் சுற்றி வைக்கலாம். அலமாரிகளின் ஓரங்களிலிணைத்து வைக்கலாம். இப்படிச் செய்வதால் சாப்பாட்டு மேஜையிலும் சமையலறை அலமாரியிலும் எறும்பு உபத்ரவம் நீங்கிவிடும். ஆனால் இதுகொடிய விஷமாகையால் இதை வீட்டுக்குள் வைப்பதால் கெடுதியுண்டு. இந்த விஷத்தால் எறும்புகள் வெகு சீக்கிரத்தில் கொல்லப்பட்டு தரையில் கிடக்கின்றன. இதைப்பார்த்து மற்ற எறும்புகள் தப்பித்துக்கொள்கின்றன. இதைவிட ச்லாக்யமானது வேறொரு விஷம். அது மெதுவாகக் கொல்லுகிறது. ஆகவே, அதை உட்கொள்ளும் எறும்பு அதனிருப்பிடத்திற்குத் திரும்பிப்போனபிறகு தான் சாகிறது. மேலும் குட்டி யெறும்புகளையும் சாகச்செய்கிறது.

இந்த விஷத்தைத் தயாரிப்பதில் ரகஸ்யம் ஒன்றுமில்லை. ஆகிலும் இதை ஒரு மருந்துக் கடைக்காரர் தயாரித்தால் நன்றாயிருக்கும். அதில் சேரும் சரக்குகள் அஷ்டக்ராம் சக்கரை 2 பங்கு, ஒரு பங்கு தண்ணீர், வடிகட்டியதேன் நூற்றுக்கு எட்டு, கொஞ்சம் டார் டாரிக் ஆஸிட், ஆர்ஸனிக் நூற்றுக்கு அரைக்கால் பாகம். இப்படிச் செய்த கஷாயத்தில் ஒரு கடல் பஞ்சை நனைத்து ஒரு தகர போகணியில் வைக்கவேண்டியது. அந்த போகணியின் மூடியில் சிறிய த்வாரங்கள் செய்திருக்கவேண்டும். இந்தத் த்வாரங்கள் வழியாய் எறும்புகள் உள்ளே நுழைந்துவிடும்.

இந்த போகணியை வெளியில் வைப்பது ரொம்ப அபாயம். எறும்புகளைப் போலவே தேனீக்களுக்கும் தித்திப்பில் ப்ரீதி. போகணிகளை வெளியில் மாட்டியிருந்தால் தேனீக்கள் விஷத்தைத் தங்கள் கூடுகளுக்குக் கொண்டு போகும். அங்கே பெண் ஈக்களையும் குட்டிகளையும் கொன்று தாங்களும் மடியும். மேலும் தேனிலும் விஷம் கலக்கும். அதினால் அதைச் சாப்பிடுகிறவர்களுக்கு ரொம்ப அபாயம் உண்டாகலாம்.

தோட்டத்தில் விதைகளை ஊன்றினால், அவைகள் முளை கிளம்புவதற்கு முந்தி எறும்புகள் அவ்விதைகளைக் கொண்டுபோய் விடுகின்றன. சில தோட்டக்காரர்கள் கீரை விதைகளை விதைத்து அந்த வரிசைகளின் மேல் சோள மாவைப் போடுகிறார்கள். இது எறும்புகளுக்கு இஷ்டம். எறும்புகள் இந்த மாத்துணுக்கைகளைக் கொஞ்சம் கொஞ்சமாய் கொண்டுபோவதற்குள்ளாக கீரை முளை கிளம்பி வந்துவிடும்.

எறும்புகள் செய்யும் தீங்குகளெல்லாவற்றிலும் பெரிய தீங்கொன்றுண்டு எறும்புகள் செடிகளில் உண்டாகும் அசுகணி என்னும் செடிப் பூச்சிகளைப் பாதுகாப்பதில் ரொம்ப ப்ரியமுள்ளவை. அவைகளுக்கு வேண்டிய மதுரமான பதார்த்தம் அந்தப் பூச்சிகளிலிருந்து கிடைக்கிறது. செடிகளின் ரஸத்தை உறுஞ்சுகிற இந்தப் பூச்சிகளை இளமையிலேயே எறும்பு கொண்டுபோய் செடிகளில் வைத்துவிடுகிறது. இந்த பூச்சிகள் மனதார ரஸத்தை உறுஞ்சுகின்றன. இதனால் தோட்டப்பயிர்கள் ரொம்பவும் நாசமடைகின்றன.

எறும்புகளை அழிக்க ஒரு நல்ல வழி பின்வருமாறு. காகித அட்டைகளால் செய்யப்பட்ட ஒரு பெட்டியில் மழை காலத்திற்கு முந்தி புல்லையும் பழைய விதைகளையும் நிரப்பி வைக்கவேண்டியது. மேலே மூடி இருக்கக்கூடாது. புல்லும் விதைகளும் மழையில் நனைந்து அழுகிப்போகும். இந்த ஏற்பாடு எறும்புகளுக்கு ரொம்ப நேர்த்தியானது. அது அவைகளுக்குப் பதுங்க இடமாகிறது. அதிலுள்ள வஸ்துக்கள் அழுகிப்போயிருப்பதால் அதில் சூடுண்டாகும். குளிர்காலம் வரவே பக்கத்திலுள்ள எல்லா எறும்புக் கூட்டங்களும் ஆயிரக்கணக்கான ஆணும் பெண்ணுமாக அதற்குள் அடைந்துவிடுகின்றன. இப்படியானவுடனே ஒரு மூடியை பெட்டியின்பேரில் மூடி கார்பன் பைஸல்பேட் அல்லது புகையால் எறும்புகளெல்லாவற்றையும் கொன்றுவிடலாம்.

---


1093. ஸங்கீத ரஸார்ணவம் ... 2 8 0
வித்வான் கே. வி. ஸ்ரீநிவாஸ அய்யங்கார் இயற்றியது. இதில் பல வித்வான்களுடைய கீர்த்தனங்கள், ஜாவளிகள், பதங்கள், தேவார திருவாசக, அருள்பாக்கள், காவடிச்சிந்து முதலிய 120 உருபடிகளுக்கு ஸ்வர தானங்கள் கொடுக்கப்பட்டிருப்பதோடு, ராகங்களின் லக்ஷணங்களும் விவரிக்கப்பட்டிருக்கின்றன.

1094. தசரதன் தவறு 0 8 0
நா. பலராமய்யர் இயற்றிய ஒரு நாடகம்.

1095. வள்ளி பரிணயம் ... 0 12 0
நா. பலராமய்யர் இயற்றிய ஒரு நாடகம்.

ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.




## MEDICAL INSPECTION OF SCHOOLS.

### பள்ளிக்கூடங்களை வைத்யர்கள் சோதனை செய்வது.

பள்ளிக்கூடங்களில் உள்ள சிறுவர்களின் தேக ஸ்திதி சரியான நிலைமையில் இருப்பதில்லை யென்றும் அநேக பள்ளிக்கூடங்களில் கட்டிட ஸுகாதாரம் த்ருப்திகரமாக இல்லை யென்றும் யாவரும் ஒத்துக்கொள்ளுவார்கள். கவர்ன்மெண்டார் இதுவிஷயமாக யோசனை செய்து இப்போது தங்களுடைய தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 1916-17-ம் வர்ஷத்தோடு முடிகிற 5-வர்ஷத்திய கல்வியிலாகா ரிப்போர்ட்டில், கல்வியிலாகாத் தலைவர் ஸ்கூல்களின் ஸுகாதார நிலைமையைப்பற்றி எழுதியிருக்கிறார். இந்தியப் பள்ளிக்கூடங்களை வைத்யர்களைக்கொண்டு நன்றாய் சோதித்தால், மாணாக்கர்களுடைய தேகாரோக்ய நிலைமை ரொம்ப கேவலமாக இருப்பதாகவும், பள்ளிக்கூடங்களில் ஸுகாதாரம் ரொம்ப சீர்கேடடைந்து இருப்பதாகவும் தெரியவருமென்று அவர் தெரிவித்திருந்தார். அந்த உத்யோகஸ்தர் இவை விஷயமாக சில ப்ரேரணைகள் செய்திருந்தார். அதன்மேல் கவர்ன்மெண்டார் பின்வருமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு வரும் வ்யாதிகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகித்ஸை செய்வது அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ரொம்ப முக்யமான விஷயமாகும். சில ஸந்தர்ப்பங்களில் அண்டை அயல் வீட்டார்களுக்கும் சிறுவர்களுடன் வாசிப்பவர்களுக்கும் ஸௌகர்யமேற்படுகிறது. முதுகு வளைவு, பார்வைக் கோளாறு, காது மந்தம் முதலியவைகளை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து சிகித்ஸை செய்வதால், சிறுவர்கள் வாழ் நாள் முழுவதும் கஷ்டப்படும்படி நேரிடாமல் தடுக்கலாம். தொற்று வ்யாதியுள்ளவர்களை தனியாயிருக்கச் செய்வதால், இதர சிறுவர்களுக்கு அந்த வ்யாதி ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம். இது விஷயமாக பள்ளிக்கூடத்து மானேஜர்கள் கவனிக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் தெரிவிக்கிறார்கள்.

ஒவ்வொரு பெரிய பள்ளிக்கூடத்திலும் அதற்கென்று ஒரு வைத்யரை நியமித்து பள்ளிக்கூடத்துச் சிறுவர்களின் தேகத்தைப் பரீக்ஷிக்கச் செய்வது நல்லது. அந்த வைத்யர் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட வைத்யராக இருக்கவேண்டும். அவர் ஒவ்வொரு பாரத்திலும் புதிதாகச் சேரும் பிள்ளைகளின் தேக ஸ்திதியை பரிசோதிக்கவேண்டும். அவர்களுள் யாருக்காவது ஸ்வஸ்தம் செய்யக்கூடியதும், பிறரிடம் பரவாததுமான வ்யாதிகள் இருந்தால், உதாரணமாக, பார்வைக்குறைவு, மூக்கில் வீக்கம், குடல் பிதுக்கம் முதலிய வ்யாதிகள் இருந்தால், சிறுவனின் பெற்றோருக்கோ, கார்டியனுக்கோ தகவல் தெரிவிக்கவேண்டும்.

சொரி, சிறங்கு, படை முதலிய ஒட்டுவாரொட்டி வ்யாதிகள் இருப்பதாகத் தெரிந்தால், அந்த நோய்கள் இதர மாணவர்களிடம் பரவாதபடி பார்த்துக்கொள்ள, வ்யாதியுள்ளவர்களை, வ்யாதி ஸ்வஸ்தமாகும் வரையில் பள்ளிக்கூடத்துக்கு வராமலிருக்கும்படி செய்ய வேண்டியது ஸ்கூல் அதிகாரிகளின் கடமை. குஷ்டம், கடுமையான க்ஷயம் முதலிய கடுமையான தொற்று வ்யாதி இருப்பதாகத் தெரிய வந்தால், ஸ்கூல் தலைவர், அந்தப் பையனைப் பள்ளிக்கூடத்தில் வைத்துக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் இதர பையன்களுக்கும் அந்த வ்யாதிகள் பரவக்கூடும். எந்த வகை வ்யாதியிலும் சிகித்ஸை செய்யும் பொறுப்பு பெற்றோர் அல்லது கார்டியனுடையதாக இருக்கவேண்டும்.

வைத்ய அதிகாரி ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை பள்ளிக்கூடக் கட்டிடங்களை சோதனைசெய்து, ஏதாவது ஸுகாதாரக் குறைபாடுகள் இருந்தால் அவைகளை நீக்கும்படி ஸ்கூல் அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும். ஸ்கூல் அதிகாரிகள், வைத்யருடைய யோசனையின்பேரில், ஸர்ஜன் ஜென்ரல், வித்யா டிரெக்டர் இவர்களது பொது மேற்பார்வைக்குள்பட்டு இன்ன சீர்திருத்தங்கள் செய்யவேண்டு மென்பதை நிர்ணயிக்கவேண்டும்.

இந்த ப்ரேரணைகள் முக்யமாக பள்ளிக்கூடங்களைப் பற்றியவையாகும். காலேஜுகளில் உள்ள மாணவர்கள் வயதானவர்கள். அநேக ஸந்தர்ப்பங்களில் அவ்வளவு வயதானவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஸுகக்கோளாறுகளை த்ருப்திகரமாக சரிப்படுத்த முடிவதில்லை. ஆனால் ட்யூடோரியல் ஏற்பாடு, அதாவது மாணவர்களின் படிப்பு வாழ்க்கை முதலியவைகளை பள்ளிக்கூடமில்லாத நேரங்களில் கவனித்து வர உபாத்யாயர்களை நியமிக்கும் ஏற்பாடுள்ள காலேஜுகளில், உபாத்யாயர்கள் தங்கள் பார்வையிலுள்ள மாணவர்களுக்கு ஏதாவது நோய் நொடிகளிருக்கின்றனவா என்று பார்த்து ஆலோசனை சொல்லிவரலாம்.

கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும் ஸ்தல ஸ்தாபனங்களின்கீழ் உள்ள பள்ளிக்கூடங்களிலும் எந்த உத்யோகஸ்தரை வைத்யராக நியமிப்பதென்பதையும், அவருக்கு என்ன சம்பளம் கொடுக்கவேண்டு மென்பதையும், அந்தந்த ப்ரதேசத்து ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஆலோசித்து கவர்ன்மெண்டுக்குத் தெரிவிக்கவேண்டும். ஸர்க்கார் உதவிபெற்ற பள்ளிக்கூடங்களில் எந்த வைத்யரை நியமிக்கவேண்டு மென்பதும், அவருக்கு என்ன ப்ரதிப்ரயோஜனம் கொடுக்கவேண்டு மென்பதையும் அந்தப் பள்ளிக்கூடங்களின் தலைவர்களே நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். ஆனால் கவர்ன்மெண்டார், வைத்யசோதனை நடக்கும் பள்ளிக்கூடங்களுக்கு சிறிதளவு பொருள் உதவி செய்வார்கள். அந்தப் பள்ளிக்கூடங்களில் வைத்யர்களை நியமிப்பதை வித்யா டிரெக்டரும் ஸர்ஜன் ஜெனரலும் அங்கீகாரம் செய்யவேண்டும். அதோடு வைத்ய சோதனையைப் பற்றியும் ஒரு ரிபோர்ட் எழுதி வர்ஷந்தோறும் டிரெக்டருக்கு அனுப்பவேண்டும். உதவி பெற்ற பள்ளிக்கூடங்களின் அதிகாரிகள் இஷ்டப்பட்டால் வைத்ய சோதனைக்கு ஏற்படும் செலவுக்காக ஒவ்வொரு பையனிடமிருந்தும் ஒரு ஸ்வல்ப தொகை வஸூலிக்கலாம்.

## DUST.

## தூசி.

லோகத்தில் முற்றிலும் சுத்தமானது ஒன்றுமே கிடையாது. தூசி அணுக்கள் ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கின்றன. அவைகளிலனேகம் வெறுங்கண்ணுக்குப் புலப்படா. பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்தால்தான் தெரியும். ஸாதாரணமாய், சந்தடியற்ற சுத்தமான ஒரு அறையிலுள்ள ஆகாயத்தில் ஒன்றும் காணப்படுகிறதில்லை. அதனால் ஆகாயத்தில் தூசியே கிடையாது என்றெண்ண இடமுண்டு. ஆனால் அதே அறையில் ஸூர்ய வெளிச்சம் படும்படி ஜன்னலைச் சிறிதளவு திறந்துவைத்தால், வெளிச்சத்தில் தூசிகள் பறப்பதைக் காணலாம். வெளியிலிருந்து தூசிவராதபடி ஜன்னல்கண்ணாடிகளைச்சாத்தி,



வெளிச்சம் மாத்ரம் வரும்படி செய்தாலும், உள்ளே வெளிச்சத்தில் தூசியைப் பார்க்கலாம் ஒரு இருட்டறையில் ஒரு பளபளப்பான கறுப்பு நிறமுள்ள எண்ணெய்த் துணியைவைத்தால், அதில் தூசிகள் நொடிப்பொழுதில் படிவதைப் பார்க்கலாம் இதனால் நம்முடைய இந்த்ரியங்களின் சக்திக்குறைவால் மாத்ரம் ஆகாயம் சுத்தமாய் காணப்படுகிறதேயொழிய, உண்மையில் சுத்தமில்லை என்று தெரிந்துகொள்ளலாம். நம்முடைய கண்கள் தக்கபடி கூர்மையாயிருந்தால், நாம் ச்வாஸிக்கும் ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான வெறுக்கத்தக்க வஸ்துக்களைப் பார்ப்பது நமக்கு ஹிதமாயிராதென்பது நிச்சயம். ஆனதுபற்றியே, எல்லாம் வல்ல கடவுள் நம்மைச் சூழ்ந்திருக்கும் வஸ்து நிலைமைக்குத் தக்கபடி இந்த்ரிய சக்தியைக் கொடுத்திருக்கிறார் போலும்.

தூசியும் வெப்பமும் ரொம்ப ஸ்நேகிதம். இரண்டும் சேர்ந்து நம்மைப் பிழைக்கவொட்டாமல் செய்கின்றன. நடுப்பகலில் வெயிலெறிக்கும்போது உஷ்ணமான காற்று கருணையின்றி நம்மேல் தூசியை வண்டி வண்டியாய்யடிக்கிறது. இவ்விரண்டும் சேராமலிருக்க வழி ஏற்பட்டிருப்பதே மலை நாடுகளின் மகிமை யென்னலாம்.

மழை நன்றாயடித்தால் ஆகாயம் சுத்தமாக்கப்படுகிறது. இப்படிச் சுத்தமாகிக் கொஞ்ச நேரத்திற்கு ஆகாயத்தில் முன்னிருந்த அளவு தூசிகள் இருப்பதில்லை.

பலத்த மழையடித்த பிறகு வானம் முன்னிருந்ததைவிட அதிக நீலமாய் காணப்படுகிறது. ஏனென்றால், வானத்தை மறைத்துக்கொண்டிருந்த பெருந் தூசிகள் மழையோடு வந்து கீழேபடிந்துவிடுகின்றன.

## THE POSITION OF WOMEN IN BURMA.

## பர்மாவில் ஸ்த்ரீகளின் நிலைமை.

சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் பர்மாவில் ஸ்த்ரீகளுக்கு இருக்கும் ஸ்வதந்த்ரத்தைப் பற்றியும், அவர்களுடைய வாழ்க்கை நிலைமையைப் பற்றியும் எழுதினோம். இங்கே அவர்களுடைய கல்யாணம், மதம் முதலியவைகளைப் பற்றித் தெரிவிக்கிறோம்.

பர்மியருக்குள் கல்யாணம்.

பர்மியர்களுடைய கல்யாணத்தில் விஸ்தாரமான செலவுபிடித்த சடங்குகள் ஒன்றுமில்லை. பணக்காரர்களுக்குள்தான் கொஞ்சம் செலவுண்டு. அவர்களுக்குள்ளும் கல்யாணச் சடங்கு ஸ்நேகிதர்களின் கூட்டத்தின் முன்பாக நடத்தப்படுகிறது. தம்பதிகளைச்சுற்றி ஒரு நாடாவைப் போடுகிறார்கள். தம்பதிகள் பாணிக்ரகணம் செய்துகொண்டு பிறகு ஓரே பாத்ரத்தில் சாப்பிடுவார்கள். இதோடு கல்யாணம் முடிவு பெறுகிறது.

கல்யாணத்தினால் பர்மிய ஸ்த்ரீகளுக்கு ஸ்வதந்த்ரம் கொஞ்சமும் குறைகிறதில்லை. அவளுக்குப் புருஷனே கதியென்பதில்லை. கல்யாணத்திற்குப் பிறகு அவர்களுடைய ஸம்பாத்யம் அவர்களுடைய குடும்ப ஸொத்தாகிறது. ஆனால் அவள் தகப்பன் வீட்டிலிருந்து கொண்டு வந்தது சட்டப்படி அவளுக்கே ஸொந்தம்

கலப்பு விவாகங்கள்.

பர்மிய ஸ்த்ரீக்கு தன் ஜாதியிலும் மதத்திலுமே புருஷனைத் தேடவேண்டுமென்ற நிர்ப்

பந்தம் கிடையாது. அவள் ஒரு இந்தியனையோ, ஐரோப்பியனையோ, சீனக்காரனையோ, அல்லது ஜப்பானியனையோ, எந்த ஜாதியானாலும், எந்த தேசமானாலும், எந்த மதமானாலும் நேசித்து கல்யாணம் செய்து கொள்ளலாம். இந்தியாவில் ஒரு ஜாதியின் உட்பிரிவுகளுக்குள் கல்யாணம் செய்யலாமா, கூடாதா என்று தர்க்கம் நடந்துகொண்டிருக்க, பர்மாவில் அன்ய ஜாதிகளுடனும் விவாகம் நடந்து வருகிறது. கலப்பு விவாகங்கள் ஸர்வஸாதாரணம். ஒருவீட்டில் ஒரு ஸ்த்ரீயின் புருஷன் சீனக்காரனும், அவள் ஸகோதரியின் புருஷன் மலையாளியாயுமிருக்கிறார்களாம். ஒரு இந்தியனுடைய ஷட்டகன் (சகலன்) சீனக்காரனாயிருப்பதையும், மகம்மதியன், ஹிந்து, கிறிஸ்தவன், பார்ஸி இவர்கள் ஒரே குடும்பத்தில் கல்யாணம் செய்துக் கொண்டிருப்பதையும் கேட்டால் வைதீகர் திடுக்கிடுவார்கள்.

இப்படிப்பட்ட கலப்பு விவாகங்களால் மத ஸம்பந்தமான ஸாதக பாதகங்கள் என்ன ஏற்படுகின்றனவென்று சற்று ஆராய்வோம். ஒரு பர்மிய ஸ்த்ரீ மகம்மதியனை மணந்தால், அவளும் மகம்மதியனாய் விடுகிறாள். அவளுடைய குழந்தைகளும் மகம்மதியர்களே. அவளுடைய புருஷன் கிறிஸ்தவனாயிருந்தால், அவளுடைய மதப்பற்றின் வலிமைக்குத் தக்கபடி அவளுடைய முன்னோர் மதத்திலேயே நின்றாலும் நிற்கலாம், அல்லது அதை விட்டாலும் விடலாம். ஆனால் அவளுடைய குழந்தை தகப்பன் மதத்தையே அனுஸரிக்கும். சில ஸமயங்களில் இதற்கு எதிரிடையாய் புருஷன் பௌத்தனாய் விடுகிறான். ஆனால் இது அபூர்வம். அவள் ஹிந்துவை மணந்தால் அவளுக்கு அவளுடைய ஸொந்தமதமே நிலைக்கிறது. குழந்தைகள் தாயின் மதத்தை அனுஸரிக்கின்றன. ஆனால் புருஷன் ஆர்ய ஸமாஜத்தானாகவாவது, ஸீக் ஜாதியானாகவாவது இருந்தால், குடும்பம் முழுவதும் அவனுடைய மதத்தைப்பற்றுகிறது. சீனக்காரர்கள், ஜப்பானியர்கள், பர்மியர்கள் இவர்களுக்குள் ஜாதி மதப்பொருத்தங்கள் அதிகமாயிருப்பதால், அவர்களுக்குள் நடக்கும் விவாகங்களால் அதிக பேதங்களேற்படுகிறதில்லை.

பர்மாவிலிருக்கும் ஹிந்துக்கள்.

இந்தக்கலப்பு விவாகங்கள் ஒருவருக்கொருவர் ஸம்மதித்துச் செய்துகொள்ளப்படுவதால், அவைகளை ஜனஸமூகம் ஏற்றுக்கொண்டதாகவாவது சட்டத்தின் அனுமதி பெற்றதாகவாவது மதிக்க இடமில்லை. அனேகமாய் அவைகளின் முடிவு துக்கமாயிருக்கிறது. பல தடவை ஸ்த்ரீயைவிட்டுப் புருஷன் நீங்கிவிடுகிறான். மகம்மதியனாவது கிறிஸ்தவனாவது பர்மிய ஸ்த்ரீயைக் கல்யாணம் செய்துகொண்டால், மதத்திலும் ஜனஸமூகத்திலும் ஆக்ஷேபணை ஏற்படுவதில்லை ஹிந்து அப்படிச்செய்தால் ஆக்ஷேபமுண்டு. இந்த மாதிரிக் கலப்புக் கல்யாணங்களால் மகம்மதிய மதத்திற்கும் கிறிஸ்தவமதத்திற்கும் ஜனஸங்க்யையில் லாபமும், ஹிந்து மதத்திற்கு நஷ்டமும் ஏற்படுகிறது. ஹிந்துக்கள் மற்றவர்களைவிட பர்மிய மனைவிகளை கைவிடச் ஸித்தமாயிருக்கிறார்கள். அவர்கள் ஏற்கனவே கல்யாணம் செய்துகொண்டிருக்கலாம். அல்லது, உயர்ந்த வரதக்ஷிணையுடன் மாப்பிள்ளையாகக்கூடிய நிலைமையிலிருக்கலாம். அவர்களுடைய பந்துஜனங்கள் அவர்களை ஜாதி கெட்டவர்களென்று ரகஸ்யமாய் தள்ளி வைத்திருக்கலாம். ஸ்வய நலத்தாலும் பந்துஜனங்களின் கட்டாயத்தாலும், சில ஸமயங்களில் தம்பதிகளுக்குள் ஒத்துக்கொள்ளாததாலும், ஹிந்துக்களில் பலர் தம் பர்மிய மனைவிகளை விட்டுவிடுகிறார்கள். அவளையும் அவளுடைய குழந்தைகளையும் நிர்த்தாக்ஷண்யமாயும் மனிதத் தன்மைக்கடுக்காத விதத்திலும் கை விடுகிறார்கள்.



ஹிந்து ஜனஸமூகம் இந்தக்குற்றத்திற்குளவாயிருக்கிறது இந்த துன்மார்க்கர்களுடைய குற்றத்தால் பிறதேசத்தில் ஹிந்துக்களுக்கு கௌரவக் குறைவு ஏற்படுகிறது. பர்மாவில் ஹிந்துக்களுக்கிருந்த மர்யாதை வேகமாய் தாழ்வடைந்து வருகிறது.

இந்தக் கலப்பு விவாகங்களில் கவனிக்கத் தக்கது ஒன்றுண்டு. தங்கள் ஸொந்த ஜாதியில் கல்யாணம் செய்துகொண்டால், தங்கள் மனைவிகளுக்கு ஸ்வதந்த்ரம் கொடுக்கக் கூடாதென்கிறவர்கள் தங்கள் பர்மிய பத்னிகளை ஸ்வயேச்சையாய் விட்டுவிடுகிறார்கள்.

இப்படி பர்மாவில் பல ஜாதிகளுள்ளும் கல்யாணம் நடக்கின்றனவே, இந்த அழகிய நாடு ஒரே வீட்டில் ஜாதிகளை ஒன்று சேர்க்க ஏற்பட்டுள்ளதோ? சிறித்த முகம் வாய்க்கப்பெற்ற இந்த ஜாதியார் பிழைக்க வந்திருக்கும் பிறதேசத்தாருடன் விவாக ஸம்பந்தம் செய்வதால் ஒருமிக்க அழிந்து விடுவார்களோ? பார்க்கப்போனால் அப்படித் தானாகுமென்று தோன்றும். ஆயினும் அது அப்படியல்லவென்று தெரிகிறது. பிழைக்க வருபவர்கள் பெரும்பாலும் இந்தியாவிலிருந்தே வருகிறார்கள். அவர்கள் வருவதும் போவதுமாயிருக்கிறார்கள். பர்மாவில் ஸ்திரமாய் வாஸம்பண்ண அவர்களுக்கு ப்ரியமில்லை. விவாக ஸம்பந்தங்களோ சில பட்டணக்கரைகளில் மாத்ரம் நடந்து வருகின்றன. இந்த ஜாதியாரின் ஸ்திரமான வாஸஸ்தலமாகிய க்ராமங்களுக்கு இன்னும் எட்டவில்லை.

பர்மிய ஸ்த்ரீகளின் மத வாழ்க்கை.

பௌத்த மதத்தில் ஆண்களும் பெண்களும் ஸமமே. ஆண்களைப் போலவே பெண்களும் மத நூல்களை வாசிக்கலாம். "இரக்கம், தர்மம், ஸத்யம், பரிசுத்தம், அன்பு, ஸாத்வீகம்" என்னும்கொள்கைகளையுடைய பௌத்த மதத்தை இருவரும் பரவச் செய்யலாம். பௌத்த மதம் இந்தியாவில் ப்ரகாசித்துவந்த முன் காலத்தில் ஆண்களைப் போலவே ஸ்த்ரீகளும் சிஷ்யத்வம் வகித்து பரிசுத்தர்களாயும், பண்டிதைகளாயும், வைராக்ய முள்ளவர்களாயுமிருந்தார்கள். பௌத்த மதம் தனக்களித்திருக்கும் ஸமத்வத்தையும் ஸ்வதந்த்ரத்தையும் பர்மிய ஸ்த்ரீ நன்றாய் அறிந்திருக்கிறாள். குழந்தைப் பர்வத்திலிருந்தே அவளுக்கு மத போதனையுண்டு. தன் வீட்டிலுள்ள சிறிய பூஜை யறையில் ஈச்வரனுடைய பிம்பத்தின் முன்பாக தானும் தன் குடும்பத்தாரும் தினமும் நமஸ்கரித்து நிர்வாணத்தின் மூல மந்த்ரத்தை உச்சரிப்பதுண்டு. குழந்தையாயிருக்கும் போதே அவளுக்குத் தாய் பஞ்ச சீலத்தை போதிக்கிறாள். பஞ்ச சீலமென்பது பௌத்த மதத்தின் ஐந்து கட்டளைகள். அவையாவன:-கொல்லாதே, பிறர் பொருளை இச்சியாதே, தூராதே, பொய் பேசாதே, அஸத் கர்மத்தைச் செய்யாதே, லாகிரி வஸ்துக்களை உட்கொள்ளாதே. அவள் மங்கைப் பர்வமடையும் போது அவளுக்கு மத வைராக்யம் பலமாயிருந்தாலும், லோக வ்யவகாரங்களில் புத்தி செல்லாமலிருந்தாலும், தன்னை மதத்திற்கு அர்ப்பணம் செய்து கன்யாமடத்தைச் சேருகிறாள். அவள் அப்படிச் செய்வதை எவரும் தடுப்பதற்கில்லை. ஆனால் கன்யா ஸ்த்ரீயாகிறவர்கள் ஸ்வல்பந் தான். அவளுடைய குணம், குடும்ப வாழ்க்கையில் ப்ரீதி, ஆசாபாசங்கள், அவளுடைய வாழ்க்கையில் ஸம்பவிக்கும் நானாவித ஸந்தோஷங்கள் இவைகளெல்லாம் அவளை மத விஷயத்தில் முன்னேறிச் செல்ல விடுவதில்லை. ஆனால் அவள் கன்யா ஸ்திரீயாகாவிட்டாலும் (கன்யா ஸ்த்ரீ-தவப் பெண்) மதாபிமானத்தில் சளைத்தவளல்ல. சில விதங்களில் ஒரு நடுத்தர பர்மனை விட அவளுக்கு மதாபிமானம் அதிகமாக இருக்கிறது.

கல்வி கற்பதற்குள்ள ஸாதகங்கள்.

பர்மீய ஸ்த்ரீ கல்வியின் பயனை ரொம்பவும் மதிப்பவள். எழுதப் படிக்கவாவது தெரிய வேண்டுமென்பது அவளுடைய கொள்கை. உலக வாழ்க்கைக்கு கல்வி அத்யாவச்யமென்று அவளுக்குத் தெரியும். அவளுடைய மதமும் அவள் கல்விக்கு அனுஸரணையாக இருக்கிறது. அவளுடைய தாய் பாஷையைக் கற்றுக்கொள்ள ஸாதகங்களுக்குக் குறைவில்லை. அந்த தேசத்திலுள்ள மடங்கள் கல்விக்கு ஸாதகமாயிருக்கின்றன. பர்மியர்கள் பாடசாலைகளை ஸ்தாபிப்பது தர்மமென்று எண்ணுகிறார்கள். ஆகவே, இந்தியாவின் மற்ற பாகங்களைவிட பர்மாவில் ஆண் பெண் இருபாலாருக்குள்ளும் கல்வி ரொம்பவும் பரவியிருக்கிறது.

பர்மிய ஸ்த்ரீக்கு ஸ்வதந்த்ரமிருந்த போதிலும், அந்த ஸ்வதந்த்ரத்திற்கு கட்டுப்பாடுகளே கிடையாவென்றெண்ணக் கூடாது. அவளுக்கும் கட்டுப்பாடுகளுண்டு கட்டுப்பாடில்லாத ஸ்வதந்த்ரம் காட்டு முராண்டியுடையவும் ம்ருகத்தினுடையவும் ஸ்வேச்சையேயாகும். ஆனால் அவளுக்கேற்பட்ட கட்டுப்பாடுகள் தானாகக் கற்பித்துக் கொண்டவைகளே. அதுவே அழகு. அதுவே மேன்மை. அவ்விதக் கட்டுப்பாடுகள் அவச்யந் தானென்று அவளுக்குத் தோன்றினால் அவைகளை ஸந்தோஷமாக அங்கீகரிப்பாள். அவைகளின் ஆவச்யகம் தீர்ந்து விட்டதென்று கண்டால் அவைகளை நீக்கி விடுவாள். அனுபோகத்தில் வேறு கட்டுப்பாடுகள் தேவையாயிருந்தால் தடையின்றி அவைகளை ஏற்றுக் கொள்ளுவாள்.

---

## POINTS ABOUT PRECIOUS STONES.

## ரத்னங்களைப்பற்றிய சில குறிப்புகள்.

ஜனங்கள் இப்பொழுது ரத்னங்கள் வாங்குவதில் பணம் செலவழித்து வருகிறார்கள். நாம் அதை ஆக்ஷேபிக்க வேண்டுவதில்லை. அந்த வழக்கம் கெடுதலோ நல்லதோ, நடந்து வருகிறபடியால், நல்ல ரத்னங்களாக வாங்குவதெப்படி என்பதைப்பற்றி நிபுணர்களின் அபிப்ராயத்தைத் தெரிந்துகொள்வது நல்லது. இங்கு ஒரு மேல்நாட்டு நிபுணர் இது விஷயமாக என்ன சொல்லுகிறார் என்பதை விவரிக்கிறோம்.

நிறை, செதுக்கு, காந்தி, இன்னும் மற்ற எல்லா குணங்களிலும் ஒரே மாதிரி இருக்கிற கெம்புக் கற்கள் எல்லாம் உண்மையில் ஸ்வயமான கெம்புகள் ஆகமாட்டா. ஸ்வயமான கற்கள் எவை, போலிக் கற்கள் எவை என்பதை பூதக்கண்ணாடியால் பார்த்தால் நன்றாய்த் தெரியும். எல்லாவகையிலும் நுட்பமான காற்றுக் குமிழிகள் இருக்கும். ஆனால் சில கற்களில் இந்தக் குமிழிகள் ரூபம் குலைந்தும் வரிவரியாய் அமைந்தும் காணப்படும்; இது செயற்கைக் கெம்பாகும். மற்ற வகையில் உருண்டையாயும் அனேகமாய் மத்ய பாகத்தைச் சுற்றிக்கொண்டுமிருக்கும். இது இயற்கைக் கெம்பு. கனிகளிலிருந்து வெட்டி எடுக்கப்படுவது.

செயற்கைக் கெம்பு உண்மையில் கெம்புதான். இரண்டிலும் ஒரே வகையான பொருள்கள்தான் இருக்கின்றன. ஸ்வயக் கெம்பு பூமியில் இயற்கைச் சூட்டால் உண்டாவது. செயற்கைக் கெம்பு ரஸாயனிகளால் அதி உஷ்ணமான நெருப்பில் செய்யப்படுவது. இந்த விதமான உற்பத்தி காரணமே



விலையில் வித்யாஸத்தை உண்டுபண்ணுகிறது. ஒளி, செதுக்கு, கனம், திடம் இவைகளைக் கொண்டுதான் ஒரு ரத்னத்தின் விலையை நிர்ணயிக்கவேண்டும். இந்த குணங்களில் இரண்டும் ஸமம். அனேகமாய், கலவைக் கெம்பையே மேல்பட்டதாகச் சொல்லலாம். ஆனால் பூமியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட காரணத்திற்காகவே ஸ்வய கல்லுக்கு பத்துப்பங்கு விலை கொடுக்கிறோம்.

ரத்னக் கற்களை விலை மதிப்பது ச்ரமமானது. வரப்போகிற காலஸ்திதியை நிர்ணயிப்பதைப் போன்றது. இரண்டிலும் உத்தேசம் தான் ஸாத்யம்.

ஒரு ரத்னத்தின் மதிப்பில் முக்யமான அம்சம் அதின் அழகு. ஜ்வலிப்பு இல்லாத ஒரு ரத்னத்தை யாரும் வாங்கமாட்டார்கள். அது எவ்வளவு நேர்த்தியாய் செதுக்கப்பட்டிருந்தாலும் சரி, அதன் கட்டு எவ்வளவு குற்றமற்றதாயிருந்தாலும் சரி, அதை வெட்டியெடுத்துத் தயார் செய்ய எவ்வளவு செலவழிந்திருந்தாலும் சரி, ஒரு வைரத்தில் முக்யமாய் பார்க்கவேண்டியது அது ஜ்வலிக்கிறதா, தேகத்தில் வைத்தால் தேகமெங்கும் ப்ரகாசிக்கிறதா? அப்படியில்லாவிட்டால் அது உதவாது. அதே மாதிரிதான் மற்றகற்களும்; முத்துகளுக்கும் ஒளி இருக்கவேண்டியது; பால் நிறமுள்ள ஒபால் (opal) என்னும் கல்லுக்கு மினுமினுப்பும், கெம்பு, நீலம், மரகதம் இவைகளுக்கு முறையே சிவப்பு, நீல, பச்சை நீரோட்டங்களு நன்றாயிருக்க வேண்டும்.

### திடம்.

அடுத்த முக்யமான அம்சம் கற்களின் திடம். ரத்னங்களின் பேரிலிருக்கும் மோகத்திற்குக் காரணம் ஒபால் முத்து இரண்டையும் தவிர மற்ற எல்லா ரத்னங்களும் எந்த காலத்துக்கும் அழிவில்லாதிருக்கும். தகப்பனிடத்திலிருந்து மகனுக்கும் தாயிடத்திலிருந்து பெண்ணுக்குமாகத் தலைமுறை தலைமுறையாக வந்துகொண்டேயிருக்கும். இதைப்போல சில பொருள்களைச் சேர்த்துச் செய்யப்படும் போலிரத்னங்கள் ஸ்வயரத்னங்களைப்போல் திடமுள்ளவைகளல்ல. மேலே தரித்துக்கொண்டிருக்கும் போது உடுப்புகளின்பேரில் உரைவதாலேயே தேய்ந்து மயங்கும். மேலே போட்டுக்கொள்ளாமல் நகைச் சிமிழில் வைத்திருக்கையில் கூட மங்கிப்போகும்.

### கிடைக்கும் திடம்.

ரத்னங்களைப்பற்றிக் கவனிக்கவேண்டிய இன்னொரு விஷயம் அது கிடைக்கும் மார்க்கம். ஒருகல் எவ்வளவு நேர்த்தியாயிருந்த போதிலும் அக்கரையில்லை. அதை பூமியிலிருந்து வெட்டியெடுத்து செதுக்கி, மெருகு வைத்துக் கட்டியிருக்கவேண்டியது; அப்படியில்லாவிட்டால் அதின் மதிப்பு ரொம்பவும் குறைகிறது.

மேற்கூறிய மூன்று குறிப்புகளும் நகைகளை விலைமதிக்க முக்யமானவை. அவைகளிலும் முதன்மையானது அழகு. ஏனென்றால் மற்ற குணங்கள் ஒரு ஜாதிக் கற்களெல்லாவற்றிற்கும் பொது. கல் களிமுள்ளதா இல்லையா என்பதையும் கவனிக்க வேண்டியதுதான். அதொன்றே போதுமென்று அனேகர் எண்ணுகிறார்கள். அது பிசகு. ஆகிலும், ஒரே தரமுள்ள இரண்டு கற்களில் சிறியதைவிட பெரிதுக்கு அழகு ஜாஸ்திதான். அதனால்தான் அதற்கு விலை ஜாஸ்தி. ரொம்ப பெரிய கற்கள் அகப்படுவது அருமை. அவைகளுக்கு விலையும் அதிகம். அவைகளைப்பற்றி நாம் கவனிக்கவேண்டியதில்லை. இந்த ந்யாயங்களை ஒட்டி விலை நிர்ணயிப்பது ரொம்ப ச்ரமமானது. எப்பேர்ப்பட்ட நிபுணனும்

இந்தக் கல்லுக்கு இதுதான் விலையென்று சொல்வதற்கு தக்க காரணம் சொல்ல முடியாது.

வைரம்.

வைரத்தை எடுத்துக்கொள்வோம். இந்த ரத்னங்களில் மஞ்சள் வெள்ளையென்றும் நீல வெள்ளை யென்றும் இரண்டுவித முண்டு. முதல் வகுப்பைச் சேர்ந்தது ப்ரேஸில் (Brazilian) வைரம். தென் ஆப்ரிகா கற்களில் அனேகம் மஞ்சள் வெள்ளையாயிருக்கின்றன. தென் ஆப்ரிகாவிலுள்ள வெஸல்டன் சுரங்கங்களில் உற்பத்தியாகும் கற்களில் நீல வெள்ளைக் கற்கள் உண்டு. தற்போது மதிப்பில் நீல வெள்ளைக் கற்களைவிட மஞ்சள் வெள்ளைக் கற்கள் மட்டம்.

நீடித்த அனுபோகத்தாலும் புத்தி நுட்பத்தாலும் ரத்னவ்யாபாரி ஒரு கல்லின் ஒளியானது அந்தந்த வகுப்பிலும் கனத்திலுமுள்ள சராசரிக் கற்களுக்கு மட்டமா, ஸமமா, உயர்ந்ததா என்று நிர்ணயிக்கக்கூடும். அனேகமாயிரம் பேர்களுடைய அபிப்ராயங்களுக்கு சராசரி எடுத்து ரத்னங்களுக்கு விலை ஏற்படுத்தப்படுகிறது. அனேக வ்யாபாரிகள் கற்களின் விலை அடிக்கடி மாறுவது தெரியாமல் நஷ்டமடைகிறார்கள்.

போலிக் கற்கள்.

போலிக் கற்களை வாஸ்தவக் கற்களிலிருந்து எளிதில் கண்டு பிடிக்கலாம். இந்த மாதிரி போலிக் கற்கள் எல்லாம் மெதுவாயிருக்கும். அவைகளை ஒரு கல்லில் உறைத்தால் அவைகளின்மேல் கீறல் விழும். பளிங்குபோன்ற வாஸ்தவமான ரத்னங்களில் கீறல் விழாது. இப்படி மெதுவாயிருப்பதால் அவைகள் சீக்ரம் கெட்டுப்போகின்றன. அவைகளை நாடக உடுப்புகள், தற்காலத்துக்கென்று செய்யப்படும் ஸாமான்கள், அலங்காரங்கள் போன்ற இவைகளில்தான் அதிகமாக உபயோகப்படுத்தலாம்.

வைரங்கூடத் தேயுமென்பது உண்மை. வேலைசெய்யும் கையில் பல வர்ஷங்களுக்கு ஒரு வைர மோதிரத்தைப் போட்டுகொண்டிருந்தால், அதின் முகப்புகள் செதுக்கின பொழுது இருந்தபடி கூர்மையாயிராது. தலைமுறை தலைமுறையாக ரத்னங்களை அணிந்து கொண்டிருந்தால் அவைகளை மறுபடியும் செதுக்க நேரிடுகிறது. ஓரங்கள் மழுங்குவதால் ஒளி வீசமுடியாது. ஆகிலும், இப்படித் தேய்வது ரொம்ப நிதானந்தான். புதிதாக வாங்குகிறவனுடைய ஆயுள்காலத்திற்குள்ளாக விசேஷமாய்த் தேய்ந்துவிடாது.

நீலம், கெம்பு இவைகளில் செயற்கைக் கற்களிலிருந்து வாஸ்தவ கற்களைக் கண்டு பிடிப்பது கஷ்டம். முன் சொன்னபடி குமிழிகளில்தான் வித்யாஸம். ஸ்வயக் கற்களிலிருந்து செதுக்கின பொடிகளையும் ஸ்வயமான மட்டக் கற்களையும் அல்லது அல்யூமினியம் ஆக்ஸைட் என்பதையும் உலையில் வைத்து உருக்கி செயற்கைக் கற்கள் செய்கிறார்கள்.

உருக்கின் பொடி சிறு உருண்டைகளாகி கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்ந்து பெரியதாகிறது. பொடியுடன் க்ரோம் ஆலம் என்னும் படிக்காரத்தைச் சேர்த்து உருக்கினால் சிவப்பாகும், இதுதான் செயற்கைக் கெம்பு. டைடானியம் ஆக்ஸைட் என்பதைச்சேர்த்து உருக்கினால் நீலமாகும். இதுதான் செயற்கை நீலக்கல். இயற்கையிலும் இவ்விதமாகவே கற்கள் உற்பத்தியாகின்றன. ஆனால் இயற்கை வழியில் டைடானியம் ஆக்ஸைட் என்பது நிறம் கொடுக்கும் வஸ்துவாக உபயோகப் படுவதில்லை.

வைரங்களையும் மரகதங்களையும் மாத்ரம் செயற்கை வழியில் செய்யமுடியாது. சுத்



தக்கரி நிலத்திலுள்ள சூட்டாலும் நெருக்கத்தாலும் வைரமாகிறது. இவ்விரண்டையும் உபயோகித்துத்தான் செயற்கை வழியில் வைரத்தைச் செய்யவேண்டும். மாய்ஸான் என்பவர் இந்த வழியைப்பற்றி வேலை செய்தார். கரிகலந்துள்ள இரும்பைப் பழுக்கக் காய்ச்சி நீரில் அமுக்க, இரும்பின் சூட்டாலும் நெருக்கத்தாலும் கரித்துண்டுகள் பளிங்காகி வாஸ்தவ வைரங்களாகி விட்டனவாம். ஆனால் இவைகளில் பெரிய கற்கள்கூட வெறும் கண்ணுக்கு புலப்படுவது ச்ரமமாயிருக்கிறது. இதுவரையிலும் பெரிய கரித்துண்டுகளை இந்த மாதிரி வைரமாக்க யாரும் வழி கண்டுபிடிக்கவில்லை. ஏனென்றால் அதிக சூட்டில் கரி ஆக்ஸிஜன் என்னும் ப்ரணவ்ரயுவுடன் சேரும் குணமுள்ளது. இந்த குணம் அல்யூமினியம் ஆக்ஸைட் என்னும் குருந்தக் கல்லுக்குக் கிடையாது. இந்தக் கல்தான் நீலத்திற்கும் கெம்பிற்கும் ஆதாரப்பொருள்.

மரகதங்களை செயற்கை வழியில் செய்ய முடியாது. ஆகிலும் மரகதங்களில் ஒரு சூதுண்டு. அதை கவனித்துப் பார்க்கவேண்டியது. அதை ப்ரெஞ்சு மரகதம் என்பார்கள், அதாவது, கோமேதகத்தின் ஒரு லேசான துண்டை கண்ணாடியின்பேரில் பதிப்பது. மரகதமும் ஒருவித கோமேதகந்தான். ஸாமர்த்யமாய்ப் பதித்தால் சந்து காணாது. இந்தச் சூதைக் கண்டுபிடிப்பதும் முடியாது.

## LIVES OF THE ALWARS.

By K. T. SUNDARARAJA ACHARIAR, B. A., L. T.,
*Teacher, Muthialpet High School, Madras.*

## ஆழ்வார்கள் சரித்ரம்.

(சென்ற மாஸத்திய ஸஞ்சிகையில் 346-ம் பக்கத் தொடர்ச்சி.)

### VI. நம்மாழ்வார்.

நம்மாழ்வாரின் தாய் தந்தையார், தாங்கள் குழந்தையைப் பெற்றும் ஒன்றும் ப்ரயோஜனப்படவில்லையே யென்று எண்ணி மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார்கள். அந்த ஸமயத்தில் நம்மாழ்வார் கோயில் பட்டர் மூலமாய், அவர்களுக்கு வர்ஷத்திற்கு ஒருதரம் குழந்தை மாதிரியாய் தர்சனம் கொடுப்பதாக வாக்களித்தார். அவர்களும் ஸந்தோஷத்துடன் கூடினவர்களாய் அப்பன் கோயிலுக்கு (ஆழ்வார் திருநகரிக்கு அக்கரையில் இரண்டு மைல் தூரத்திலுள்ள ஒரு சிறு வைஷ்ணவ ஸ்தலம்) போய் காலத்தை கழித்து வந்தார்கள். அது முதல் நம்மாழ்வார் வர்ஷந்தோறும் குழந்தை வடிவத்துடன் தமது பெற்றோர் வஸித்து வந்த இடத்துக்கு போய் காட்சி கொடுத்துவந்தார். இன்றைக்கும் நம்மாழ்வாரின் உத்ஸவத்தில் எட்டாவது திருநாளன்று ஆழ்வார் காலையில் அப்பன் கோயிலுக்கு எழுந்தருளுவது வழக்கம். அங்கே அந்த ஸமயத்தில் அவருக்கு பாலும், வெண்ணெயுமே நிவேதனம் செய்வது வழக்கம். பிறகு ஸாயங்காலம் ஆழ்வார் அங்கிருந்து புறப்பட்டு ஆழ்வார் திருநகரிக்கு வருவது வழக்கம்.

### 108 வைஷ்ணவ ஸ்தலத்து ஸ்வாமிகளும். நம்மாழ்வாரும்.

"ஈரிருபதாஞ் சோழ மீரொன்பதாம் பாண்டி
ஓர் பதின் மூன்றுமலை நாடோ ரிரண்டாம்-சீர் நடு நா
டாறோ டிரெட்டுத் தொண்டை யவ்வட நாடாறிரண்டு
கூறு திரு நாடொன்றாக் கொள்"

இதன்பொருள்:-ஈருபதாஞ் சோழம்-சோழ

நாட்டிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் இரண்டு இருபது (அதாவது நாற்பது), ஈரொன்பதாம் பாண்டி-பாண்டிய நாட்டிள்ள ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் இரண்டு ஒன்பது (அதாவது பதினெட்டு), ஓர் பதின்மூன்ரும் மலை நாடு-மலை நாட்டிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் பதிமூன்று, சீர்-மேன்மை பொருந்திய, நடு நாடு-மத்ய தேசத்திலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள், ஓரிரண்டாம் - இரண்டு, தொண்டை-தொண்டைமான் சக்ர வர்த்தியால் அரசாளப்பட்ட நாட்டிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள், ஆறே டிரெட்டு - இருபத்தி இரண்டு; வட நாடு - வட நாட்டிலுள்ள ஸ்ரீ வைஷ்ணவக்ஷேத்ரங்கள், ஆறிரண்டு - பன்னிரண்டு, கூறு-பகவத் பக்தியில் மிகவும் ஈடுபட்ட வித்வான்களால் மிகவும் உயர்ந்ததாய் கூறப்படும், திருநாடு - மேன்மை பொருந்திய நாடாகிய பரமபதம் (ஸ்ரீ வைகுண்டம்), ஒன்று ஆக - ஒன்று என்று, கொள் - அறிந்து கொள். (இப்படி மொத்தம் ஸ்ரீ வைஷ்ணவ க்ஷேத்ரங்கள் 108.)

—என்றபடி 108 வைஷ்ணவ ஸ்தலத்து பெருமாள்களும் இவருக்கு முன் தோன்றி காட்சி கொடுத்தருளினர்கள். இவர் தம்முடைய இடத்தை விட்டு வெளியில் போகவே இல்லை. இருந்தவிடத்திலிருந்தே அவர்களைக் குறித்து பாடி அருளினர்.

இவர் 35 திருப்பதிகளைப்பற்றி பாடியிருக்கிறர். அவையாவன:—

1. திருவரங்கம்.
2. திருப்பேர் நகர்
3. திருக்குடந்தை.
4. திருவிண்ணகர்
5. திருக்கண்ணபுரம்.
6. திருமாலிருஞ்சோலை மலை.
7. திருமோகூர்.
8. திருக்குருகூர்.
9. திருநகிரி.
10. ஸ்ரீவரமங்கை.
11. திருப்புளிங்குடி
12. திருப்பேரை.
13. ஸ்ரீவைகுந்தம்.
14. வரகுணமங்கை
15. பெருங்குளம்.
16. திருக்குறுங்குடி
17. திருக்கோவிலூர்.
18. திருவநந்தபுரம்.
19. திருவண்பரிசாரம்.
20. திருக்காட் கரை
21. திருமூழிக்களம்
22. திருப்புலியூர்.
23. திருச்செங்குன்னூர்
24. திருநாவாய்
25. திருவல்ல வாழ்.
26. திருவண் வண்டூர்
27. திருவாட்டாறு.
28. திருக்கடித்தானம்
29. திருவாறன்விளை.
30. திருவேங்கடம்
31. திரு அயோத்தி.
32. திருத்துவாரகை
33. வட மதுரை.
34. திருப்பாற் கடல்,
35. பரமபதம்.

அருளிச் செயல்.

இவர் செய்த பாசுரங்கள் 1296. இவற்றுள் திருவிருத்தம் 100 பாசுரங்களுடன் கூடினது. இது ருக் வேதத்தின் ஸாரத்தை தமிழில் விளக்குகிறது. திருவாசிரியம் ஏழு பாசுரங்களுடன் கூடினது. இது யஜுர் வேதத்தின் ஸாரத்தை சொல்லுகிறது. ஸாம வேதத்தின் கருத்தை 1102 பாசுரங்களாக பாடி அருளியிருக்கிறர். அதற்கு திருவாய்மொழி யென்று பெயர். (திருவாய் மலர்ந்து அருளினது திருவாய் மொழி.) பெரிய திருவந்தாதி என்பது 87 பாசுரங்களுடன் கூடினது. அது அதர்வண வேதத்தின் கருத்தை சொல்லுகிறது. இவைகளை முதலில் நம்மாழ்வார் தம் சிஷ்யனை மதுரகவிக்கு உபதேசித்தார். பிறகு மற்றவர்கள் அவர் மூலமாய் அறிந்து கொண்டார்கள்.

நம்மாழ்வாரின் கொள்கை.

(1) ஈச்வரன் ஒருவர். அவரை எந்தவிதம் வேண்டுமானலும் பூஜிக்கலாம்.

(2) அவர் இன்னரென்று சொல்வது மிகவும் கஷ்டம்.

(3) அவருக்கு ரூபமுண்டு. ரூபமில்லை. அவர் எங்குமிருக்கிறர். ஓரிடத்திலுமில்லை நல்லதுமவரே; கெட்டது மவரே.

(4) அவர் புருஷனுமில்லை. ஸ்த்ரீயுமில்லை. பணக்காரருமில்லை. எளியவருமில்லை. நகரமுமில்லை. ஸ்வர்க்கமுமில்லை.



(5) தாயுமவரே. தந்தையுமவரே. பிள்ளையுமவரே. எல்லாம் அவரே.

(6) அவரை அடைய அநேக வழிகளிருக்கின்றன. எல்லா வழிகளிலும் ப்ரபத்தி வழியே (ஈச்வரனைத் தவிர வேறு எவரும் கதியில்லை யென்று சரணகதி யடைவது) முக்யமானது. தன்னலே ஒன்றுமில்லை: ஈச்வரன் கருணையால் தான் மோக்ஷம் கிடைக்க வேண்டும். அதற்கு எவ்வளவு ஏற்பாடு செய்தாலும் மனுஷ்யனல் முடியாது. மேலும் அநேக ஜன்மங்கள் எடுத்துத் தான் கரை ஏற முடியும். இந்த ஜன்மாவிலேயே அவரை அடைய வேண்டுமானல் அவருடைய திவ்ய பாதங்களையே கதியாய் அடையவேண்டும். வேறே ஒரு வழியுமில்லை. இது தான் வைஷ்ணவர்களின் கொள்கை.

தனியன்கள்.

இவ்வாழ்வாருக்கு அநேக தனியங்களிருக்கின்றன.

திருவிருத்தத்தின் தனியன் கிடாம்பியாச்சானல் செய்யப்பட்டது. இந்தத் தனியன் ஸ்ரீராமப் பிள்ளையால் செய்யப்பட்டதென்றும், ஆளவந்தாரால் செய்யப்பட்டதென்றும் சிலர் சொல்லுகிறர்கள். திருவாசிரியத்தின் தனியன் அருளாளப் பெருமாளெம்பெருமானர் செய்தது. பெரிய திருவந்தாதியின் தனியன் எம்பெருமானரால் செய்யப்பட்டது.

திருவாய்மொழிக்கு நாதமுனிகள், ஈச்வர முனிகள், சொட்டை நம்பி, அனந்தாழ்வான், பட்டர் ஆகிய ஐந்து பேர்கள் தனியன்களை செய்திருக்கிறர்கள்.

அவைகளில் ஒன்றை மட்டிலும் இங்கு கூறுவோம்.

"பக்தாம்ருதம் விச்வஜனனு மோதனம்.
ஸர்வார்த்ததம் ஸ்ரீ சடகோப வாங்மயம்
ஸஹஸ்ரசாகோப நிஷத் ஸமாகமம்
நமாம்யஹம் த்ராவிட வேதஸாகரம்

(இது நாதமுனிகள் செய்தது.)

பக்தாம்ருதம் - விஷ்ணுவின் பக்தர்களுக்கு அம்ருதமாயும், விச்வஜனனு மோதனம் - ப்ரபஞ்சத்திலுள்ள ஸகலமான ஜனங்களையும், ஆனந்திக்கும்படி. செய்வதாயும், ஸர்வார்த்ததம் - ஸம்ஸ்தமான புருஷார்த்தங்களையும் (தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இந்த நான்குக்கும் நாலுவித புருஷார்த்தம் என்று பெயர்) கொடுக்கக் கூடியதாயும், ஸ்ரீ சடகோப வாங்மயம் - ஸ்ரீ மாமனகிய சடகோபன் என்று கீர்த்திபெற்ற நம்மாழ்வாரின் வாக்கினல் நிறைந்துள்ளதாயும், ஸஹஸ்ர சாகோபநிஷத் ஸமாகமம் அநேகவேத சாகைகளென்ன, உபநிஷத்துக்களென்ன, இவைகளுடன் சேர்ந்ததாயும் (அதாவது உபநிஷத்தைத் தவிர வேறே ஒன்றும் இதில் அடங்கவில்லை யென்பது பொருள்), த்ராவிட வேத ஸாகரம்- தமிழ் வேதமாகிய ஸமுத்ரத்தை, நமாம்யஹம். நான் மிகவும் ப்ரீதியுடன் நமஸ்காரம் செய்கிறேன்.

வேறே சில விசேஷங்கள்.

இந்த ஆழ்வாரை தேவலோகத்திலுள்ள விஷ்ணு பக்தர்களெல்லாரும் வந்து தர்சனம் செய்து போனர்கள்.

யானைக்கு ஸமமான மற்ற மதங்களை அங்குசமென்றது ஈட்டியினல் இவர் ஜயித்ததினல் இவருக்கு "பராங்குசர் என்ற பெயர் உண்டாயிற்று.

ஸ்வாமி தம்முடைய வகுள புஷ்பத்தினல் தொடுக்கப்பட்ட மாலையை இவருக்கு கொடுத்ததினல் இவருக்கு வகுளாபரணர் என்ற பெயருமுண்டு.

மற்றப் பெயர்கள்.

(1) காரிமாறன் (காரியாருக்கு உலக நடவடிக்கைகளுக்கு விரோதமாய்ப் பிறந்த பிள்ளை என்று பொருள்.) (2) காரிஸூநு (ஸூநு என்றால் பிள்ளையென்று அர்த்தம்) (3) மாறன் (4) சடகோபன் (5) பராங்குசன் (6)

திருவாய்மொழிப் பெருமாள் (திருவாய்மொழியை உலகத்தாருக்கு கருணையுடன் சொன்ன ஸ்வாமி) (7) உதய பாஸ்கரர் (உதயமான ஸூர்யன்.) (8) திருநாவீறுடைய பிரான். திரு - அழகிய, (நா - நாக்கினுடைய; வீறு - சிறப்பினை; உடைய பிரான்-இயற்கையிலே அமையப்பெற்றவர்; பகவானுடைய கல்யாண குணங்களை பேசும் திறமையுடையவர் நம்மாழ்வார்.) (9) குருகைப் பிரான் (10) திருக்குருகூர் நம்பி (நம்பி என்றால் பெருமாள்) (11) தென்னரங்கன் பொன்னடி (ஸ்வாமியான விஷ்ணுவின் பாதம். இவர் தென் தேசத்தில் பிறந்தபடியால் இந்தப் பெயர் உண்டாயிற்று) (12) வகுளாபரணன் (13) அருள்மாறன்.

அருள்மாறன் - ஸகலமான ஜீவன்களுக்கும் க்ருபை செய்யக்கூடிய சடகோபன்.

இந்த ஆழ்வாரின் ஏற்றம்.

இதற்கு முன் உண்டான ஆழ்வார்கள் ஈச்வரன் கருணையால் அவதரித்தார்கள். ஆனால் அடிக்கடி அவர்களை ஈச்வரன் அவர்களுடைய வேலையைச் செய்யத் தூண்ட வேண்டியிருந்தது. இவருக்கு அடிப்படி யொன்று மில்லாமலே, எப்பொழுதும் ஈச்வர ஞானம் மேலிட்டிருந்தபடியால் இவரே எல்லாரினும் முக்யமானவர். இவருக்கு எல்லாரையும் காட்டிலும் ஏற்றம் அதிகம். இவருக்கு மற்ற எல்லா ஆழ்வார்களையும் அவயவங்களாகச் சொல்வது வழக்கம். பூதத்தாழ்வார் இவருக்கு தலை. பொய்கை ஆழ்வாரும், பேயாழ்வாரும் இரண்டு கண்கள். பெரிய ஆழ்வார் முகம். திருமழிசை ஆழ்வார் கழுத்து. குலசேகர ஆழ்வாரும் திருப்பாண ஆழ்வாரும் இவருக்கு கைகள். தொண்டரடிப்பொடி ஆழ்வார் மார்பு. திருமங்கை ஆழ்வார் தொப்புள். மதுரகவி ஆழ்வார் பாதம். இப்படி இவர் எல்லா ஆழ்வார்களையும் தமக்குள்ளே அவயவங்களாக அடக்கிக்கொண்டிருப்பதினால், இவரே எல்லாரினும் மிகவும் முக்யமானவர். இவர் இந்த பூலோகத்தில் 35 வர்ஷகாலம் இருந்துவிட்டு கடைசியாய் தேவலோகம் அடைந்தார். அந்த ஸமயத்தில் ஆகாசத்தில் கருட பகவான் வட்டமிட்டார். தேவர்கள் பாடினார்கள். புஷ்பம் ஆகாசத்திலிருந்து வர்ஷித்தது. இவர் விஷ்ணுவின் விசேஷ அவதாரமானதினால் விஷ்ணுவின் பாதத்தை ஸ்ரீசடகோபம் என்று இவருடைய பேரை வைத்து இன்றைக்கும் அழைக்கிறார்கள்.

நம்மாழ்வாரின் காலம்.

இவர் தகப்பனாரான காரி என்பவர் பாண்டிய நாட்டு அரசனின் கீழ் ஒரு உயர்ந்த உத்யோகத்திலிருந்ததாக பட்டயங்களால் தெரிகிறது. 770 கி. பி யில் பராந்தக பாண்டியன் வஸித்தான். அவனுடைய மந்த்ரியின் பெயர் மாறன் காரி. ஆதலால் நம்மாழ்வார் ஸுமார் கி. பி 770 வர்ஷம் வாக்கில் பிறந்திருக்கவேண்டும். ஆனால் மாறன் காரிக்கு ஜன்மபூமி திருக்குருங்குடிக்கு பத்து மைல் தூரத்திலுள்ள களக்காடு என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவர் மட்டிலும் மேற்கு மலைகளிலுள்ள 13 விஷ்ணு ஸ்தலங்களைப் பற்றி பாடியிருக்கிறார். வேறே ஒரு ஆழ்வாரும் அவைகளைப்பற்றி பாடினதில்லை. இந்தக் காலத்தில் கூட அந்த இடங்களுக்கு போவது மிகவும் கஷ்டம். ஒவ்வொரு இடத்திற்கும் அநேக காடுகள் மூலமாயும், மலைக் கணவாய்கள் மூலமாயும் போகவேண்டும். இந்தக் காலத்திலேயே இவ்வளவு கஷ்டமானால் முன்பு அதிக கஷ்டமாகவே இருந்திருக்கவேண்டும். ஆனால் இவர் அந்தக் காலத்து அரசர்களின் உதவியினால் இந்த மலை நாட்டு விஷ்ணு ஸ்தலங்களுக்குப் போய் பெருமாள்களை தர்சித்திருக்கலாம். இந்தக் காரணங்களைக் கொண்டு இவர் ஸுமார் கி. பி எட்டாவது நூற்றாண்டின் கடைசியிலும் ஒன்பதாவது நூற்றாண்டின் முதலிலும் வஸித்திருக்கவேண்டும் என்று சொல்லலாம்.

கே. டி. ஸுந்தரராஜ ஆச்சாரியார்.



## GENERAL NOTES.

## பொதுக் குறிப்புகள்.

### புகையிலையும் தெள்ளுப்பூச்சியும் ப்ளேக் வ்யாதியும்.

ப்ளேக்கைப் பரவச்செய்யும் தெள்ளுப்பூச்சியை புகையிலை ஒரு நொடியில் கொன்றுவிடுகிறது. ஜனங்கள் தூங்குகிற வீட்டுத் தரைகளின்பேரில் புகையிலையைப் பரப்பி வைத்தால், தெள்ளுப்பூச்சிகள் உள்ளே நுழைந்தவுடனே சாகின்றன. ப்ளேக் பரவாமல் தடுக்கப்படுகிறது. ப்ளேக் ஏராளமாய் பரவியிருந்த ஒரு ஊரில் 52-வீடுகளில் புகையிலையை பரப்பி வைத்துப் பரீக்ஷை பார்த்தார்கள். புகையிலையை ஒரு பாயின்பேரில் தைத்து தரையில் விரித்தார்கள். அருகிலிருந்த அதே மாதிரியான வேறு 52 - வீடுகளில் புகையிலையை பரப்பாமல் விட்டிருந்தார்கள். புகையிலை பரப்பிய 52 வீடுகளில் ஒன்றில் மாத்ரம் ப்ளேக் வந்தது. புகையிலை பரப்பாத வீடுகளில் 7-வீடுகளில் ப்ளேக் வந்தது. மேற்கூறிய உபாயத்தால் இக்கொடிய ப்ளேக் வ்யாதியால் கஷ்டப்படும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காப்பாற்றப் படலாமென்று சொல்லப்படுகிறது.

### வெற்றிலை போட்டுக் கொள்ளுவது.

வெற்றிலை போட்டுக் கொள்வது நல்ல வழக்கமென்று 'வைத்திய கலாநிதி'யில் ஒரு வைத்யர் எழுதுகிறார். புஜித்த உணவு நன்கு ஜீர்ணமாவதற்கு ஏற்ற சுறுசுறுப்பை ஜீர்ண கோசங்களுக்கு உண்டாக்கும் சக்தி வெற்றிலை போட்டுக் கொள்வதால் வ்ருத்தியடையும். உணவுக்குப் பிறகு பற்களைச் சுத்தம் செய்யவும் இது ஒத்தாசை செய்கிறது. புஜிக்கும் போது பற்களின் இடுக்குகளில் புகுந்து நிற்கும் உணவின் துணுக்கைகள் அவ்விடங்களிலேயே சில காலம் தங்கிவிட்டால், அவ்விடங்களில் பற்களில் சிதைவு நேரிட்டுவிடும்; அவ்விதம் வழக்கமாகச் சேரும் உணவுத் துண்டுகளை அவ்விடங்களிலிருந்து விலக்குவதற்கு வெற்றிலையைப்போட்டு மெல்லுதல் உதவியாயிருக்கும். வெற்றிலை போட்டுக்கொள்வதால் உமிழ்நீர் அதிகமாக சுரக்க ஆரம்பிக்கும்; இது வெற்றிலையுடன் இரைப்பையிற் சேரும்; இதனால் ஜீர்ண சக்தி அதிகரிக்கும். நமது பள்ளிக்கூடச் சிறுவர்களும், வேலைக்குப் போகும் பிள்ளைகளும், உத்யோகஸ்தர்களும் போஜனம் செய்யும்போது மிக வேகமாக உணவுகளை நன்கு மெல்லுவதற்கும் ஸாவகாசமில்லாமல் விழுங்கி வேலைக்குப் போக அவஸரப்படுகிறார்கள் என்பது நமக்கு அனுபவத்தில் தெரிந்த விஷயம். அவ்விதம் விழுங்கும்போதெல்லாம் உமிழ்நீர் போதுமானவளவு உணவில் கலப்பதற்கு வழியில்லை. ஆகவே குடலில் அதற்குப் பிறகு நடந்தேற வேண்டிய ஜீர்ணசக்தி அவர்களுக்குக் குறைவுபட்டுவிடும். அவஸரப்படாமல் புஜிப்பவர்களுக்குக்கூட உமிழ்நீர் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக உட்கொள்ளும் உணவில் கலக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு ஜீர்ண வேலையும் குடலில் ஸுலபமாக நடந்தேறும். மேலும் இரைப்பையில் புளிப்பு அதிகரிக்காமல் அவ்விடத்திய ஜீர்ண த்ரவங்களை ஸமநிலைமையில் வைத்து, குடலில் புளிப்பு அதிகமாவதால் அழற்சி நேரிடாமல் தடுப்பதற்கும் உதவுகிறது.

ஆகையினால் வெற்றிலைப் போடும் வழக்கம் ஒரு துராப்யாஸம் என்று கூறுவதும், அவ்வாசார முன்னவர்களைப் பழிப்பதும் சரியல்ல.

### இந்தியர்களின் தொழில்.

இந்தியாவில் வ்யவஸாயத்தான் ஜனங்களின்

முக்ய தொழிலாக இருக்கிறது. ஸாதாரண காலங்களில் இங்க்லண்டைப்போன்ற கைத்தொழிலில் சிறந்த தேசத்தில் நூற்றில் 58 பேர் கைத்தொழிலிலும் 8 பேர் மாத்ரம் வ்யவஸாயத்திலும் உழைக்கிறார்கள். ஆனால் இந்தியாவிலோ நூற்றில் 71 பேர் வ்யவஸாயத்திலும், 12 பேர் கைத்தொழிலிலும், 5 பேர் வ்யாபாரத்திலும், 2 பேர் வீட்டு வேலையிலும், ½ பாகம் உத்யோகங்களிலும் ½ பாகம் ஸர்க்கார் உத்யோகம் அல்லது ராணுவத்திலும் அமருகிறார்கள். இந்தியா முழுவதிலும் 31½ கோடி ஜனங்களில் 22½ கோடி ஜனங்களை வ்யவஸாயமே காப்பாற்றுகிறது. அதிலும் 20·8 கோடி ஜனங்களுக்கு தங்களுடையவோ பிறருடையவோ பூமிகளைப் பயிரிடுவதே ஜீவனமாகும்.

### கைத்தொழில் ஸமாசார ஆபீஸ்.

சென்னைக் கைத்தொழில் இலாகாவில் தொழில் ஆலோசனை ஸமாசார ஆபீஸ் ஏற்படுத்தப் போகிறார்கள் என்று தெரிகிறது. தற்போது அந்த இலாகாவில் சென்னை ராஜதானியிலுள்ள பற்பல கைத்தொழில்களைப் பற்றி கேட்பவர்களுக்கு ஸமாஸாரங்கள் தெரிவிக்க வேண்டிய ஸௌகர்யங்கள் இருக்கின்றனவாம். வ்யாபார விஷயங்களைப் பற்றிய புஸ்தகமொன்று ஸமீபத்தில் இந்த இலாகாவில் தயாரிக்கப்பட்டு வெளியாயிற்று. இப்போது அதில் நாளது வரை சேர்க்க வேண்டிய விஷயங்களையெல்லாம் சேர்த்து மறுபடியும் வெளியிடப்போகிறார்கள். சென்னை ராஜதானியிலுள்ள கைத்தொழில்களைப் பற்றிய காடலாக் ஒன்று தயாரிக்க உத்தேசித்திருக்கிறார்கள். மேற்சொன்ன ஸமாசார ஆபீஸின் லைப்ரரியைப் பெரியதாக்கி, அதற்கு காடலாக் தயார் செய்யப்போகிறார்கள். தொழிலாளிகளுக்கு தக்க நிபந்தனைகளின் பேரில் லைப்ரரி புஸ்தகங்களை இரவல் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்போகிறார்கள்.

### நல்ல தொழில்.

ஐரோப்பா கண்டத்தில் குபேர ஸம்பத்திலும் கொழுத்த ஸம்பத்துள்ள ராத்ஸ்சைல்ட் வம்சத்தார் அடியிற்கண்ட கோட்பாடுகளைக் கைக்கொண்டு நடந்து மேம்பாடடைந்தார்கள். நம்முடைய தொழிலாளர்களும் அந்தக் கோட்பாடுகளை கவனித்து அவைகளின்படி நடப்பார்களாக.

1. உன்னுடைய தொழிலில் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் கவனமாய் பரிசோதித்துப்பார்.

2. ஒவ்வொரு விஷயத்திலும் துடியாயிரு.

3. எதையும் ஸாவகாசமாய் ஆலோசிக்க வேண்டும். ஆனால் உறுதியான தீர்மானம் வேண்டும்.

4. முன்னுக்குப் போகத் துணி.

5. கஷ்டங்களை பொறுமையுடன் ஸகிக்க வேண்டும்.

6. ஸத்யத்தைக் காப்பாற்று.

7. தொழிலுக்காகப் பொய் சொல்ல வேண்டாம்.

8. உன் கடன்களை சீக்ரம் செலுத்திவிடு.

9. உபயோகமற்றவர்களுடன் ஸ்நேகம் செய்யாதே.

இந்த விதிகளை ஒருவன் அனுஸரித்தால் அவன் ஒரு நல்ல தொழிலாளியாவதோடு யோக்யனென்றும் பெயரெடுப்பான்.

### ஸ்த்ரீகளுக்கு வைத்யக் கல்வி.

சென்னை கவர்ன்மெண்டார் ஸமீபத்தில் நெல்லூரில் ஸ்த்ரீகள் வைத்யம் கற்றுக்கொள்வதற்காக ஒரு வைத்ய ஸ்கூல் ஸ்தாபித்தார்கள். இப்போது சென்னையில் ஒரு ஸ்த்ரீ வைத்ய காலேஜ் ஸ்தாபிக்கப் போகிறார்கள் என்று தெரிகிறது. இதில் ஸ்த்ரீ உபாத்யாயர் [illegible] நியமிக்கப்படுவார்களாம்.

### பருத்தித் துணியை வெளுப்பது.

ஒரு வெள்ளை பருத்தித் துணி மங்கிப் போனால், அதை [illegible] வெள்ளையாக்க, ஜலத்தில் சிறிது [illegible] க்ரீம் அப் டார்டார் என்னும் மருந்தை [illegible] அதில் துணியை வேக வைக்கவேண்டும்.

161167
600 004